# INDEX TO TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

FIFTY-FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA

*17th, and 19th to 24th March* 1979.

VOLUME CLIX (Nos. 1 to 7.)

©
GOVERNMENT OF TAMIL NADU
1980

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600009.*

PRICE *Rupee :* 1]

V211,32 N79
N80.159
12.1981

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

## FIFTY-FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLIX (Nos. 1 TO 7.)

*17th and 19th to 24th March* 1979.

TABLE OF CONTENTS.

*Saturday, 17th March* 1979.


| | Pages. |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... ... | i—iv |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council. | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... ... ... | ix—xii |
| 1. Dispensation with Question Hour .... ... ... | 1 |
| 2. Postponement of Call-attention Notices ... ... | 1 |
| 3. Government Motion— | |
| Transaction of Government business on a Private Members day ... ... ... ... ... | 1—2 |
| 4. Presentation of XXXII Report of the Committee on Government Assurances ... ... ... ... | 2 |
| 5. Government Bills— | |
| (1) The Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1979 (L.A. Bill No 13 of 1979) ... | 2—92 |
| (2) The Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1979 (L.A. Bill No. 11 of 1979) ... ... ... ... ... | 94—108 |
| (3) The Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 14 of 1979) ... ... ... ... ... | 109—124 |

| | PAGES. |
|---|---|
| 5. Government Bills—*cont.* | |
| (4) The Tamil Nadu Municipal Council (Appointment of Special Officers) Amendment Bill, 1979 (L.A. Bill No. 4 of 1979) ... ... | 124—162 |
| (5) The Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Amendment Bill, 1979 (L.A. Bill No. 5 of 1979) ... ... | 163—164 |
| (6) The Madras City Municipal Corporation (Amendment), Bill 1979 (L.A. Bill No. 6 of 1979) ... ... ... ... ... | 164—165 |
| 6. Announcement *re*— | |
| Decision of the Business Advisory Committee ... | 92—94 |
| 7. Papers laid on the table of the House ... ... | 165 |
| *Monday, 19th March* 1979. | |
| 1. Questions and Answers ... ... ... ... | 181—215 |
| 2. Announcement *re* Message from the Assembly ... | 216 |
| 3. Adjournment Motion *re* Agitation by Lawyers ... | 216—241 |
| 4. Call Attention Notices— | |
| (1) Non-posting of a Lady Doctor to the Government Hospital at Sendamangalam, Namakkal taluk ... ... ... ... ... | 242 |
| (2) Non-supply of text-books and note-books to students of XI Standard in the Higher Secondary Schools under the Harijan Welfare Departmnet ... ... ... ... | 242—244 |
| 5. Government Bill— | |
| The Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 34 of 1978) ... | 244—283 |
| 6. Papers laid on the table of the House ... ... | 283 |
| *Tuesday, 20th March* 1979. | |
| 1. Questions and Answers ... ... ... ... | 291—311 |
| 2. Adjournment Motions— | |
| (1) Strike by employees of Tamil Nadu Civil Supplies Corporation ... ... ... | 311—31[illegible] |



| | PAGES. |
|---|---|
| *Tuesday, 20th March* 1979—cont. | |
| 2. Adjournment Motions—*cont.* | |
| (2) Retrenchment of workers in Wimco Match Factory ... ... ... ... ... | 318—320 |
| 3. Call Attention Notices— | |
| (1) Non-payment of Government grant and non-payment of University Grants Commission Scale of pay in Oriental Colleges ... ... | 321—322 |
| (2) Reversion of Teachers of Higher Secondary Schools under the Harijan Welfare Department and appointment of fresh teachers from outside ... ... ... ... ... | 322—324 |
| 4. Presentation of the Final Supplementary Statement of Expenditure for 1978-79 ... ... ... | 325—327 |
| 5. Presentation of the Statement of Demands for Grants for Excess Expenditure for 1971-72 ... | 327—328 |
| 6. Approval of the Report of the Privileges Committee. | 328 |
| 7. General discussion on the Budget for 1979-80 ... | 328—389 |
| 8. Announcement *re* decision of the Business Advisory Committee ... ... ... ... ... | 360 |
| *Wednesday, 21st March* 1979. | |
| 1. Prayer for good health of Thiru Jayaprakash Narayan ... ... ... ... ... ... | 395 |
| 2. Questions and Answers ... ... ... ... | 395—424 |
| 3. Adjournment Motions— | |
| (1) Assault on the Students of the Law College, Madurai ... ... ... ... ... | 424—427 |
| (2) Arrest of agriculturists in Salem, Coimbatore and Pudukkottai districts and fasting by Thiru Balasubramaniam, General Secretary of the Agriculturists' Association ... ... | 427—429 |
| (3) Fasting by teachers of the Panchayat Union Middle Schools in front of the Thanjavur Collectorate ... ... ... ... | 429—433 |

PAGES.

*Wednesday, 21st March* 1979—*cont.*

4. Call Attention Notices—
   (1) Collapse of the building belonging to the Madras City Corporation School at Kumaramangalam Colony causing injury to two girl students ... ... ... ... ... 433—434
   (2) Death of 20 persons due to outbreak of a new kind of fever in Rameswaram Island ... 435
5. Statement under rule 82 of the Council Rules *re* procedure followed for procurement of raw silk and zari ... ... ... ... ... 436—440
6. Discussion on the Supplementary Statement of Expenditure for 1978-79 (Final) and the Statement of Demands for Grants for Excess Expenditure for 1971-72 ... ... ... ... ... 440—466
7. Papers laid on the table of the House ... ... 466

*Thursday, 22nd March* 1979.

1. Questions and Answers ... ... ... ... 469—490
2. Announcements—
   (1) Message from the Governor ... ... ... 491
   (2) Message from the Assembly ... ... ... 491
   (3) General discussion on the Budget for 1979-80. 500—501
3. Privilege issue *re* denial of seats in the Pallavan Transport Express Bus to certain M.L.Cs. at Tindivanam ... ... ... ... ... ... 491—496
4. Call Attention Notices—
   (1) Payment of fixed pay and grant of maternity leave to Balasevikas ... ... ... 496—497
   (2) Accumulation of handloom stocks due to sudden rise in the price of yarn of 40, 60 and 80 counts ... ... ... ... ... 497—499
5. Government Resolution—
   Declaration of areas comprising Tiruverkadu, Veeraraghavapuram etc., Panchayats as a Township ... ... ... ... ... ... 500
6. Government Bills—
   (1) The Tamil Nadu Preservation of Private Forests (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 25 of 1978) ... ... ... ... ... 501—525



PAGES.

6. Government Bills—*cont.*
   (2) The Tamil Nadu Preservation of Private Forests (Extension to Kanyakumari District) Bill, 1979 (L.A. Bill No. 15 of 1979) ... ... 525
   (3) The Tamil Nadu Dramatic Performances (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 26 of 1978) ... ... ... ... ... 526—554
   (4) The Tamil Nadu Catering Establishments (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 40 of 1978) ... ... ... ... ... 554—568
7. Papers laid on the table of the House ... ... 568

*Friday, 23rd March* 1979.

1. Questions and Answers ... ... ... ... 577—608
2. Adjournment Motion *re* agitation by Non-Gazetted Government Officers ... ... ... ... 609—613
3. Government Motion—
   Suspension of Rule 42 (5) of the Council Rules *re* Call Attention Notices ... ... ... 614
4. Call Attention Notices—
   (1) Mysterious death of a Harijan girl in Nadupatti village in Salem district ... ... ... 614—615
   (2) Delay in regularisation of services and sanctioning of annual increments to teachers appointed from 1st April 1970 in 'B' Wing Schools. 615—619
   (3) Non-payment of salary to the staff of Local Library Authority in South Arcot district. 619—620
   (4) Non-payment of Hill Allowance to Teachers in Parali Power Station ... ... ... 620—621
   (5) Strike by workers of the Hindustan Teleprinters from 13th March 1979 ... ... 622—624
5. Papers laid on the table of the House ... ... 625

*Saturday, 24th March* 1979.

1. Questions and Answers ... ... ... ... 627—651
2. Announcements—
   (1) Message from the Governor ... ... ... 652
   (2) Message from the Assembly ... ... ... 652
   (3) Nomination of Members to the Business Advisory Committee ... ... ... ... 652—653

PAGES.

2. Announcements—*cont.*
   (4) Nomination of Members to the Rules Committee ... ... ... ... ... 653
   (5) Nomination of Members to the Committee on Government Assurances ... ... 654
3. Adjournment Motions—
   (1) Arrest of General Secretary and volunteers of Dravidar Kazhagam ... ... ... 654—656
   (2) Fast by teachers in Madras on behalf of Graduate Teachers Association and by Elementary School teachers in District Headquarters ... ... ... ... ... 657—671
   (3) Non-functioning of Courts in Tamil Nadu ... 672—675
4. Call Attention Notices—
   (1) Hunger strike by the staff of the Madurai District Central Co-operative Bank, protesting against the retrenchment of employees ... 676—677
   (2) Harassment of farmers cultivating surplus lands belonging to Narendra Dairy Farm, Pappanpatti, Madurai district, by Officials demanding rent ... ... ... ... ... 677—678
   (3) Non-availability of Kerosene and cooking-gas in and around Madras ... ... ... 678—682
   (4) Dharna staged by the workers of T.V.S. Units, Madras in front of the Office of the Commissioner of Labour, Madras from 7th to 9th March 1979 ... ... ... ... ... 682—683
   (5) Delay in sanction of loan applications sent by the Cuddalore Co-operative Housing Society, South Arcot district, to the Tamil Nadu Co-operative Housing Society, Madras ... 683—685
5. General discussion on the Budget for 1979-80 ... 685—708
6. Government Bills—
   (1) The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1979 (L.A. Bill No. 16 of 1979) ... ... ... ... ... 709—720
   (2) The Tamil Nadu Appropriation Bill, 1979 (L.A. Bill No. 17 of 1979) ... ... 720—721
   (3) The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1979 (L.A. Bill No. 18 of 1979) ... ... 721—722
7. Papers laid on the table of the House ... ... 723
Index ... ... ... ... ... ...

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU

### THIRU PRABHUDAS PATWARI

*Members of the Council of Ministers.*

1. The HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister in-charge of Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large Scale Industries, Mines and Minerals.

2. The HONOURABLE THIRU K. MANOHARAN, Minister in-charge of Finance, Planning and Legislature, Public Works [Buildings], Establishment Works relating to Public Works Department.

3. The HONOURABLE THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Electricity, Iron and Steel Control.

4. The HONOURABLE THIRU K. A. KRISHNASWAMY, Minister in-charge of Co-operation and Registration.

5. The HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minister in-charge of Revenue, Commercial Taxes and Excise.

6. The HONOURABLE THIRU G. R. EDMUND, Minister in-charge of Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections and Ex-Servicemen, Price Control.

7. The HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona.

8. The HONOURABLE THIRU K. NARAYANASWAMY, Minister in-charge of Law Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money lending, Legislation on Chits and Registration of Companies.

9. The HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, Minister in-charge of Education including Technical Education, Official Language and Employment and Training.

10. The HONOURABLE THIRU K. KALIMUTHU, Minister in-charg of Municipal Administration, Community Development, Panchayat and Panchayat Unions, Rural Indebtedness and Bhoodan and Gramdhar

11. The HONOURABLE THIRU S. RAGHAVANANDAM, Ministe in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tami Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommo dation Control.

12. The HONOURABLE THIRU P. SOUNDARAPANDIAN, Ministe in-charge of Harijan Welfare, Stationery and Printing, Government Press, Newspaper Control, Hill Tribes and Bonded Labour.

13. The HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

14. The HONOURABLE THIRU P. KOLANDAIVELU, Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service Co-operative Societies and Irrigation including Minor Irrigation, Agro-Engineering.

15. The HONOURABLE THIRU K. RAJA MOHAMMED, Ministe in-charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk and Dairy Development and Wakfs.

16. The HONOURABLE THIRU P. SOUNDARARAJAN, Minister in-charge of Health.

17. The HONOURABLE SELVI P. T. SARASWATHI, Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars' Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

18. The HONOURABLE THIRUMATHI SUBBULAKSHMI JEGADEESAN, Minister in-charge of Handlooms, Khadi, Textiles and Yarn.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, இலஞ்ச ஒழிப்பு, தொழில் நிறுவனங்கள், சுரங்கம்-கனிவளம்.

2. மாண்புமிகு திரு. கி. மனோகரன் (நிதித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, திட்டம், சட்டமன்றம், பொதுப்பணி (கட்டிடங்கள்).

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்சாரத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (கூட்டுறவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கூட்டுறவு, ஆவணப் பதிவுத்துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை.

6. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் (உணவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைக் கட்டுப்பாடு.

7. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, சின்கோனா உட்பட வனங்கள்.

8. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி (சட்டத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள், சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

9. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிற்நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

10. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சிகள், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், பூமிதானம்-கிராமதானம்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

அரிசன நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக்காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பணிக்கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், ஆக்ரோ பொறியியல் பிரிவு.



15. மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (கிராமத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள், பால், பால்வள நிறுவனம், வக்ப்.

16. மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் (நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—நல்வாழ்வு.

17. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூகநலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக லம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் (கைத்தறித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—கைத்தறி, கதர், நெசவு, நூல்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மாண்புமிகு மேலவைத் தலைவர்

திரு. ம.பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

திரு. ஜி. சுவாமிநாதன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்.
2. திரு. வி. ஆர். பெரியண்ணன்.
3. திரு. க. இராமமூர்த்தி.
4. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்

திரு. த.பி. டெல்லிதுரை, பி.எஸ்.சி., பி.எல்.

விவாதப் பதிவாளர்

திரு. தா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல், பி.எல்.

தலைமை நிருபர்.

திரு. ச. சுவாமிநாதன்.

**தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.**

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அப்துல் வகாப், திரு. கே. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 2 அறிவழகன், திரு. க., எம்.ஏ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 3 ஆறுமுகம், திரு. சி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 ஆற்காடு வீராசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 இரத்தின பாலகுருசாமி, திரு. | நியமனம். |
| 6 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 இராமகிருஷ்ணத் தேவர், திரு. எஸ். | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 8 இராசா முகமது, திரு. கா. (கிராமத் தொழில்துறை அமைச்சர்.) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 இராமமூர்த்தி, திரு. க. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 இளம்பரிதி, திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11 எலமந்தா, திரு. பி., எம்.ஏ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 12 கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ., எம்.ஏ., பி.எல். (கூட்டுறவுத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 13 சங்கரலிங்கம், திரு. ம. எம்.ஏ. | திருநெல்வேலி—கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 14 சந்தோஷம், திரு. டி., எம்.ஏ.,பி.எல். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 15 சிவஞானம், திரு. ம. பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| 16 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |
| 17 சுந்தரேசத் தேவர், திரு. என். | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 18 சுவாமிநாதன், திரு. ஜி., பி. பார்ம். (மாண்புமிகு துணைத் தலைவர்.) | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 19 டிமாண்டி, திரு. டி. வி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 20 தங்கப்பாண்டியன், திரு. வே., பி.ஏ., பி.டி. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 21 தங்கவேலு, திரு. ஏ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 22 தமிழரசி, திருமதி சி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 தாமஸ், திரு. பி. ஆர். .. | மதுரை-இராமநாதபுரம் பட்டதாரிகள் தொகுதி. |
| 24 தாமோதரன், திரு. ஏ. ஆர்., பி.எஸ்ஸி. (ஹானர்ஸ்). | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 25 வெற்றிடம் .. .. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 26 திராவிடமணி, திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27 நல்லசிவன், திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 28 நாராயணசுவாமி, திரு. கே. (சட்டத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 29 நீலநாராயணன், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 30 பாலசுப்பிரமணியம், திரு. கு. மா. | நியமனம். |
| 31 பாலசுப்ரமணியம், திரு. ஆ. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 32 புலவர் புலமைப்பித்தன் | நியமனம். |
| 33 பெரியண்ணன், திரு. வீ. ஆர். | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 34 மணி, திரு. கோ. சி. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 35 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 36 மாணிக்கம், திரு. ப. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 37 மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 38 மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள். |
| 39 முத்துசாமி, திரு. செ. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள். |
| 40 முருகேசன், திரு. எச். எல். | நியமனம். |
| 41 ராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 42 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள். |
| 43 வசந்த பை, திரு. ஜி. .. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 44 வில்வம், திரு. ஏ. கே. .. | நியமனம். |
| 45 வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலைய அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 46 வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம். |
| 47 ஹண்டே, டாக்டர் எச். வி. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 48 வெற்றிடம் .. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 49 வெற்றிடம் .. .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 வெற்றிடம் .. .. | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 வெற்றிடம் .. .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52 வெற்றிடம் .. .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53 வெற்றிடம் .. .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 வெற்றிடம் .. .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 55 வெற்றிடம் .. .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 வெற்றிடம் .. .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57 வெற்றிடம் .. .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 வெற்றிடம் .. .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெற்றிடம் .. .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 வெற்றிடம் .. .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 வெற்றிடம் .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 வெற்றிடம் .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63 வெற்றிடம் .. .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

---

**சனிக்கிழமை, 1979 மார்ச் 17.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. கேள்வி நேரம் கைவிடப்படல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவை விதி 22-ன் கீழ், இன்றைய கேள்வி நேரம் கைவிடப்படலாம்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்ற மேலவை விதி 22-ன் கீழ், இன்றைய கேள்வி நேரம் கைவிடப்படலாம்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### 2. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் ஒத்தி வைக்கப்படுகின்றன.

### 3. அரசின் தீர்மானம்.

**தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை நடத்துதல் குறித்து.**

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 23(1)-வது விதி தளர்த்தப்பட்டு, இம்மன்றம், 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 23(1)-வது விதி தளர்த்தப்பட்டு, இம்மன்றம் 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 4. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்திரண்டாவது அறிக்கையை அளித்தல்.

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்): தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் 32-வது அறிக்கையை மேலவையின் முன் வைக்கிறேன்.

## 5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

### (1) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/1979)—தொடர்ச்சி.

திரு. சி. இராமலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, புரட்சித் தலைவர் அவர்களின் கீழ் அமைந்த இந்த அரசு, மதுவிலக்குத் திருத்தச் சட்டம் கொண்டு வந்திருப்பதை தமிழகத்திலுள்ள எல்லா ஏழை எளிய மக்களும் பாராட்டுகிறார்கள். நான் சார்ந்துள்ள கைத்தறி நெசவாளர்கள் சமுதாயம் இந்தச் சட்டத் திருத்தத்தை மிகவும் வரவேற்றுப் பாராட்டுகிறது. தாய்மார்களெல்லாம் இதிலுள்ள பல நல்ல அம்சங்களை நல்ல முறையில் அமுல்படுத்த வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். ஆனால் சாராயம் காய்ச்சுவதையோ, அல்லது கள்ளச் சாராயம் குடிப்பவர்களையோ பிடிப்பதற்காகச் செல்லுகிற அதிகாரிகளில் ஒரு சிலர் தவறான முறையில் நடந்து கொள்ளுகிறார்கள் என்பதையும் நாம் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல நேரங்களில் கள்ளச் சாராய ஊறலைப் பிடிப்பதற்காகக் காவல் துறையைச் சார்ந்தவர்கள் போகிறபோது, உண்மையில் அப்பாவிகளாக இருப்பவர்கள்தான் சிக்கிக் கொள்கிறார்கள். உண்மையில் கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுகிறவர்கள் தப்பி ஓடிவிடுகிறார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுகிற இடத்திற்கு அருகில் மாடு மேய்ப்பவனும், கழனியில் களை எடுப்பவனும், அண்டை வெட்டுபவனும்தான் மாட்டிக்கொண்டு விடுகிறார்கள். அவர்களைக்



கொண்டு வந்து அவர்கள்மீது போலீஸ்காரர்கள் வழக்குப் போடுகிறார்கள். அப்பாவி, "நான் காய்ச்சவில்லை, காய்ச்சியவன் ஓடிவிட்டான்" என்றால், அதைப்பற்றிப் போலீஸ்காரர்கள் கவலைப்படுவதில்லை. ஒருவன் கொலை செய்தான் என்று காவல் துறையினரால் கைது செய்யப்பட்டால், அவன் அவனுடைய வாக்குமூலத்தில் நான் கொலை செய்யவில்லை, இன்னார்தான் என்னோடு இருந்து செய்தார் என்று சொன்னாலோ அல்லது திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்ட ஒருவர் தான் திருடவில்லை, இன்னார்தான் திருடினார் என்று சொன்னாலோ, காவல் துறையினர் அவர்களையெல்லாம் தேடிக் கண்டு பிடித்து அவர்களையும் சேர்த்து வழக்குப் பதிவுசெய்வது போல, இந்த அப்பாவிகள் இன்னார்தான் சாராயம் காய்ச்சினார் என்று சொன்னால், அவர்களையும் தேடிக் கண்டுபிடித்து அவர்கள்மீதும் வழக்குப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவர்தான் கள்ளச்சாராயம் காய்ச்சும் முதலாளி, இவர்தான் விற்கிற முதலாளி என்ற விவரத்தை அப்பாவி மக்கள் கொடுக்கும்போது, அப்படிப்பட்டவர்களையும் தேடிப்பிடித்து வழக்கில் இணைத்து தண்டனையளிக்க வேண்டும். அப்போதுதான் 10 இடங்களில் ஆட்களை வைத்து கள்ளச் சாராயம் காய்ச்ச யாரும் முன்வரமாட்டார்கள் என்பது என் கருத்து. இதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாராய வழக்கில் ஜாமீன் கோருகிறவர்களுக்கு நிலப்பட்டா இருந்தால்தான், மணியக்காரர் ஜாமீன் மனுவுக்குத் தேவையான சான்றிதழ் கொடுக்கிறார். சொந்தமாக நிலம் அல்லது வீடு இருந்தால், அதற்கான வீட்டு வரி ரசீதைக் காட்டினால்தான், உரிய சான்றிதழ் கொடுக்கிற முறை இப்போது இருக்கிறது. இந்த முறையில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படி ஜாமீன் மனுவுக்காக, சொத்து சர்ட்டிபிகேட் கேட்டு வரும்போது, இந்த ஆண்டுக்குரிய, இந்தப் பசலிக்குரிய, வாய்தாவைக் காட்டியிருப்பவர்களுக்கு மட்டுமே கொடுக்க வேண்டும் அல்லது இந்த ஆண்டு வீட்டு வரியைக் கட்டியிருப்பவர்களுக்கு மட்டுமே ஜாமீன் மனுவுக்கான சர்ட்டிபிகேட் கொடுக்க வேண்டும் என்ற முறையைக் கொண்டு வர வேண்டும். அதைப்போலவே ஜாமீன் கொடுப்பவர்களும் தங்களுடைய சொத்துக்கான மூலப்பத்திரத்தைக் கொண்டு வந்தால்தான், ஜாமீன் வழங்கப்படும் என்ற முறையையும் கொண்டுவர வேண்டும். ஏனென்றால் தற்போது பணத்திற்காக நிறைய பேர் ஜாமீன் கொடுக்கும் முறை இருந்து வருகிறது. ஒருமுறை ஜாமீன்கோரி ஒருவர் வந்தால், அவருடைய பத்திரத்தில் அது

பதிவு செய்யப்பட்டால், அடிக்கடி அவர்களால் ஜாமீனுக்கு வர இயலாது.
அதனால் ஊரிலேகூட ஒரு நிம்மதி ஏற்படும். நான் ஒரு பஞ்சாயத்துத் தலைவ
ராக இருந்த அனுபவத்திலிருந்து சொல்லுகிறேன். ஒருவரே 10 முறை
சர்ட்டிபிகேட் கேட்டு வருகிற நிலைமை இருக்கிறது. கொடுக்கமாட்டேன்
என்றால், தகராறு வருகிறது. இதைத் தவிர்க்க வேண்டுமென்றால், மாஜிஸ்ட்
டிரேட் அலுவலகத்தில் ஒருமுறை ஜாமீனுக்குப் பத்திரத்தைக் கொண்டு
போகும்போதே, அதில் ஒரு முத்திரையிட்டுவிட்டால், பிறகு தொடர்ந்து
ஒருவர் ஜாமீன் கொடுக்க வரும்போது 'நீ பொய்யாக ஜாமீன் கொடுக்கிறாய்'
என்று சொல்ல வாய்ப்பு இருக்கும். சாராயம் காய்ச்சுகிறவர்களில் வல்லளார்
கள் பலர் இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையிலும், தன்மானம்
கீழே போனால் என்ன, மேலே போனால் என்ன என்று அவர்கள் இருக்கிறார்
கள். அவர்களுக்கு ஜாமீன் கொடுக்க, பக்கத்து வீட்டுக்காரர்கள் வரவில்லை
என்றால், 'நாளைக்கு உன்னை உதைப்பேன்' என்று மிரட்டுகிறார்கள்.
அதற்குப் பயந்து பலர் ஜாமீன் கொடுக்க முன்வருகிறார்கள். எனவே இந்த
ஜாமீன் கொடுக்கிற முறையில் மாற்றம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, காவல் துறையில் மதுவிலக்குச் சட்டத்தை சரியாக அமுல்
படுத்துகிற நல்லவர்களும் இருக்கிறார்கள். அதைப் போலவே கள்ளச்
சாராயம் காய்ச்சுகிறவர்களிடத்தில் லஞ்சம் வாங்கிக்கொண்டிருப்பவர்களும்
இருக்கிறார்கள். இந்த நிலைமையைப் பார்த்து தங்கள் வேலையையே
ராஜினாமா செய்துவிட்டுப் போன காவல் துறை அதிகாரிகளும் இருக்
கிறார்கள். எனவே மதுவிலக்குச் சட்டத்தை அமுல்படுத்தி, அதனடிப்
படையில் வழக்குத் தொடுப்பதையே காவல் துறையினிடமிருந்து பிரித்து
வேறு ஒரு இலாக்காவிடம் கொடுப்பதைக்கூட அரசு பரிசீலிக்க வேண்டு
மென்று சொல்லிக் கொள்கிறேன். அப்படிச் செய்வது நல்லது என்றுதான்
நினைக்கிறேன். அப்படிச் செய்வது சாத்தியமில்லையென்றால், அந்த
அதிகாரிகளின் சம்பளத்தையாவது ஒரு நூறு ரூபாய் அளவுக்கு மாதம்
உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், அதாவது
சாதாரண சம்பளத்திற்கும் மேலே ஒரு நூறு ரூபாய் இந்தத் துறையில்
ஈடுபட்டவர்களுக்குக் கொடுக்கலாம். அப்படிச், செய்தால், அவர்கள் கள்ளச்
சாராயம் காய்ச்சுகிறவர்களோடு தங்களை இணைத்துக்கொள்ளாமல் பணி
யாற்ற உதவியாக இருக்குமென்று கருதுகிறேன்.





யல் போக்குவரத்துத் தொழிலாளர்கள் டியூட்டிக்குப் போகும்போது,
தங்களிடம் இருக்கும் பணத்தைப்பற்றிய தகவலைக் கொடுத்துவிட்டுப்
போக வேண்டுமென்று இருக்கிறது. ஒரு கண்டக்டரிடம் ரூ. 3 இருக்கிறது
என்றால், அதை அந்தப் புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டும். அதைப்
போலவே டிரைவரும் பதிவு செய்ய வேண்டும். அதற்குப் பிறகுதான்
கண்டக்டருக்குப் பையும் டிக்கட் புத்தகமும் கொடுக்கப்படுகின்றன. வழியில்
செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் வந்து செக் செய்யும்போது, கண்டக்டர்களிடம்
இருக்க வேண்டிய பணத்திற்கு மேலிருந்தால், அவர்களின்மீது வழக்குப் போடு
கிறார்கள். அந்த முறையைக்கூட காவல் துறையிலும், வருமான வரித்
துறையிலும், ரெவின்யூ துறையிலும் கொண்டு வரலாமென்று கூறிக்கொள்ள
விரும்புகிறேன். அவர்களுடைய பணிக்காலத்தில் இவ்வளவுதான் அவர்கள்
பணம் வைத்துக் கொண்டிருக்கலாம் என்ற உத்திரவாதம் இருந்தால், லஞ்சத்
திற்கே இடமிருக்காது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் சாராயம் காய்ச்சுகிறவர்கள் இருக்கிறார்கள். அதைப்
பற்றி வெளியேயிருந்து போலீஸ்காரர்களுக்குப் போன் செய்தால், அவர்கள்
வந்து, அவர்களைப் பிடிக்கிறார்கள். பிடித்து அவர்களைக் கொண்டுபோய்
ஸ்டேஷனில் விட்டுவிடுகிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் சொல்வதிலிருந்து
அவருடைய பகுதியில் கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்கள் யாரென்று
அவருக்கே தெரியும்போலிருக்கிறதே!

**திரு. சி. இராமலிங்கம் :** கண்டிப்பாகத் தெரியும். என்னுடைய ஏரியா
என்று சொல்லுவதிலே தவறே இல்லை. நான் இருக்கும் பகுதி 'பெல்ட்
ஏரியா', சைதாப்பேட்டைத் தாலுக்காவைச் சேர்ந்தது. அந்தப் பகுதி
முழுவதும் இந்த முறையில்தான் கள்ளச்சாராயம் காய்ச்சப்படுகிறது.
இப்படிக் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களைப் பிடித்துக் கொண்டு போய்
ஸ்டேஷனில் விட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். பிறகு ஸ்டேஷனில்
உள்ளவர்கள் வைத்ததுதான் சட்டம். அவர்கள் பார்த்து வழக்குப்
போட்டாலும் சரி, வழக்குப் போடாமல் விட்டாலும் சரி. இந்த
முறையிலும் அரசாங்கம் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும்.
பிடிப்பவர்களே வழக்கைப் பதிவு செய்ய வேண்டும் என்கிற முறையைக்
கொண்டுவர வேண்டும். அது மட்டுமல்ல. ஒரு இன்ஸ்பெக்டர் இருக்கிறார்
என்றால், அவருடைய கண்காணிப்பில் சுமார் 50 கிராமங்களுக்கு மேல்

இருக்கின்றன. வெளியிலிருந்து 'விஜிலென்ஸ்' பார்ட்டி வந்து, கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களைப் பிடித்து, ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்தால், அந்தப் பகுதியைச் சார்ந்த ஸ்டேஷன் அதிகாரிகளுக்கு 'பனிஷ்மெண்ட்' கொடுக்க வேண்டும். 'வெளியிலிருந்து உங்கள் எல்லையில் வந்து கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களைப் பிடிக்கிறார்கள், உங்களால் ஏன் பிடிக்க முடியவில்லை?' என்று அவர்களுக்கு ஒரு தண்டனை, ஒரு பிளாக் மார்க் கொடுத்தால்தான், அவர்களும் பயந்து கள்ளச் சாராயத்தை ஒழிப்பதில் தீவிரமாக ஈடுபட முடியும்.

அடுத்து, கள்ளச் சாராயம் காய்ச்சுவதைப் பிடித்தவுடன் அந்த சாராய ஊறலைக் கொண்டுவந்து, பானையோடு ஸ்டேஷனில் வைத்து விடுகிறார்கள். அதனால் என்ன ஆகிறது என்றால், சும்மா போகிறவனிடமெல்லாம் பாட்டிலைக் கொடுத்து, போலீஸ்காரர்கள் வழக்குப் போட முடிகிறது. எந்த ஸ்டேஷனில் பார்த்தாலும் 100, 200 பாட்டில்களும், பெருமளவுக்கு சாராயப் பானைகளும், ஊறலும் இருக்கின்றன. தெருவில் லைட் இல்லாமல் சைக்கிளில் போனவனைக்கூட பிடித்து வந்து, அவன் சாராயம் வைத்துக் கொண்டிருந்தான் என்று பொய் வழக்குப் போட முடிகிறது. எனவே ஸ்டேஷனில் எந்தக் காரணத்தைக் கொண்டும் கள்ளச் சாராயப் பானைகளையோ, ஊறலையோ, பாட்டில்களையோ வைக்கக் கூடாது என்ற முறையைக் கொண்டுவர வேண்டும். அத்தனையும் மாஜிஸ்ட்டிரேட் கோர்ட்டில்தான் இருக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்ய வேண்டும்.

(முற்பகல் 10-10)

இந்தச் சாராய ஒழிப்புச் சட்டத்தை எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஆதரிக்கின்றன. எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வரவேற்கிறார்கள். ஆனால் அரசு இதை நடைமுறைப்படுத்துகின்றபோது, ஏதாவது தவறு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தைத்தான் அவர்கள் சொல்கிறார்கள். நமது அமைச்சரவை அதற்குத் தக்க வகையில் உறுதி அளிக்க வேண்டும். தவறான நடைமுறைக்கு இந்த அரசு செல்லாது என்றும், அதற்கு வழிவகுக்காது என்றும் வாக்குறுதி கொடுக்க வேண்டும். அதைத்தான் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.



இப்போது குற்றவாளிகள் பிடிபடுகிறார்கள் என்று சொன்னால் நான் இருக்கிறேன், என்னுடைய செல்வாக்கிலே இரண்டு பேரை விட்டுவிடலாம் என்ற நிலை இருக்கிறது. பெரிய பெரிய அதிகாரிகளும் இப்போது பிடிபடுகிறார்கள். அவர்கள் தங்களுக்கு இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி, மேலே இருக்கும் சில முதலாளிகளையோ, அதிகாரிகளையோ பிடிக்கிறார்கள். 'என்னை இந்தக் கேஸிலே இருந்து விடுதலை செய்ய வேண்டும்' என்று அவன் கேட்டு, அவர்களும் அவன் தவறாகச் செய்து விட்டான் என்று சொல்லி, பிறகு விட்டுவிடுகிறார்கள். இந்த மாதிரியான முறைகள் இருக்கக்கூடாது. தயவுதாட்சண்யம் இல்லாமல் நீதியின் அடிப்படையில் நிர்வாகத்தை நாம் நடத்துகிறோம். ஆகவே சாராய கேஸ்களில், யாராக இருந்தாலும், எந்தவிதமான தயவு தாட்சண்யமும் காட்டக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சாராயம் காய்ச்சுவதற்கென்று இப்போது வெல்லம் விற்கிறார்கள். அதை 'மொலாசஸ்' என்று சொல்கிறார்கள். அது கரும்பாலையிலேயிருந்து வர வேண்டும். அந்த 'மொலாசஸை' விற்பனை செய்யும் கடைக்காரன் மீது கூட கேஸ் போட வேண்டும். அந்த வெல்லப்பாகு விற்கிறானே, அவனிடம் கேட்டாலே கூட தெரியும். இந்த ஊரிலே யார் யார் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள், யார் யார் விற்கிறார்கள் என்று அவனிடம் கேட்டால் சொல்லுவான்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே, போகின்ற போக்கைப் பார்த்தால், கரும்புச் சாகுபடி செய்கின்றவர்களையும் கைது செய்ய வேண்டும் என்று உறுப்பினர் பரிந்துரை செய்வார்களோ என்ற அச்சம் இருக்கிறது.

திரு. சி. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, நான் அன்றாடம் நடைபெறுகின்ற நிகழ்ச்சியைச் சொல்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அய்ந்து நிமிடங்கள் வேண்டும் என்று சொன்னார். இப்போது 15 நிமிடங்கள் ஆகின்றன.

திரு. சி. இராமலிங்கம் : என்னுடைய சமுதாயம் நெசவாளர் சமுதாயம். அவர்கள் காலையிலே இருந்து மாலை வரையிலும் கஷ்டப்பட்டு உழைக்கிறார்கள். அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ கொஞ்சம் உடம்பு வலி போக வேண்டும் என்பதற்காக கொஞ்சம் தண்ணி

போடுகிறார்கள். உடனே போலீசார் பிடிக்கிறார்கள். ஆனால் இன்னும் பல இடங்களிலே குடிக்காதவர்களையும் பிடிக்கிறார்கள். நமக்குக்கூட தெரியும். இரண்டு பூவன் பழத்தைச் சாப்பிட்டுவிட்டு, அதற்கு மேல் கப் 'டீ' சாப்பிட்டுவிட்டு, பின்பு என்ன வாசனை வருகிறது என்று பார்த்தால், சாராய வாசனைதான் வரும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே இதைப் பற்றி நான் மேடையிலே பேசியிருக்கிறேன். இதை நடைமுறைப்படுத்திப் பார்த்தும் இருக்கிறார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், வாயை ஊதி, பிடிக்கும் பழக்கம் இப்போது இருப்பதை நீக்க வேண்டும் என்பதற்காகத்தான். என்னுடைய நெசவாளர் சமுதாயத்தின் சார்பிலே இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். இது கடுமையான சட்டம் என்று சொல்பவர்களுக்கு ஒரு ஆறுதலான வார்த்தையைச் சொல்ல வேண்டும். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய 50 ஆயிரம் நெசவாளர்கள் சார்பிலே இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று, நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்குச் சட்டத் திருத்த முன்வடிவு மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவினுடைய நோக்கத்தைப் பற்றி யாரும் இரண்டுவிதமான கருத்துக்களைக் கொள்ள முடியாது. காரணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நோக்கம் இந்தக் குடிப் பழக்கத்தை அறவே ஒழிக்க வேண்டும் என்பதுதான். குடிப் பழக்கத்தின் காரணமாக அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிற மக்கள் எல்லாம் அந்தக் குடிப் பழக்கத்திலிருந்து விடுபட வேண்டும் என்று அவர்கள் விரும்புவது நியாயமான ஒரு கொள்கை. ஆகவே தான் இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தைப் பற்றி எந்தத் தரப்பிலும் இரண்டுவிதமான கருத்துக்கள் இல்லை என்று நான் சொல்ல முடியும். ஆனால், இந்தச் சட்டத்தில் இருக்கும் ஒரு சில அம்சங்களைப் பற்றிச் சில சந்தேகங்கள் இருக்கின்றன. அதன் காரணமாகத்தான் இப்படி அதிகமான உறுப்பினர்கள் இந்தச் சட்ட முன்வடிவையொட்டிப் பேச வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. மிகப் பெரிய தத்துவ ஞானியாகிய Aristotle "Man is a social animal" என்று சொல்கிறார். 'சமுதாயத்திலே வாழ்கின்ற ஒரு மிருகம்' என்று மனிதன் வருணிக்கப்படுகிறான். அப்படி சமுதாயத்திலே வாழ்கின்ற மிருகம் என்று வர்ணிக்கப்படுகின்ற இந்த சமுதாயக் கட்டுக்கோப்பைப் பார்த்தால், பரிணாம தத்துவத்தின் அடிப்படையிலே பார்த்தால், அன்றைய

1979 மார்ச் 17] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

காட்டுமிராண்டித்தனத்தின் சில அடிச்சுவடுகள் இன்னும் மனிதனை விட்டு விடுபடவில்லை. இப்படிப்பட்ட சட்டங்களின் மூலமாக, சட்டத்திலே இருக்கின்ற பலவிதமான அம்சங்களின் மூலமாக, இந்தப் பழக்கத்தை விட்டொழிக்க முடியுமா? கடந்த காலமானாலும் சரி, நிகழ் காலமானாலும் சரி சரியான பலன் கிடைத்ததா என்பதை நாம் பார்க்க வேண்டும். ஓட்டைகள், குறைபாடுகள் நிறைந்த ஒரு சட்டத்தைக் கூட நேர்மையான, திறமையான அதிகாரி ஒருவர் மிகச் செம்மையாக, நல்ல முறையில் நடைமுறைப் படுத்திக்கொள்ள முடியும், ஆனால் மாறாக எவ்வளவு தான் நல்ல முறையில் கொண்டுவரப்பட்ட சட்டமாக இருந்தாலும், எவ்வளவுதான் வரவேற்கத் தக்க சட்டமாக இருந்தாலும், திறமை குறைவான அதிகாரியாக இருந்தால், அச் சட்டம் தோல்வியடையுமே தவிர வெற்றியடையாது. அதிகாரிகளுடைய நேர்மை, மனப்பான்மை, திறமை என்பவைகளைப் பொறுத்துத்தான் வெற்றி இருக்கிறதே தவிர, சட்டத்தின் அம்சங்களைப் பொறுத்து அதன் வெற்றி அமைவதில்லை என்பதையும் நாம் பார்க்க வேண்டும். இந்தச் சட்டத்தைக் குறித்து பல நியாயமான சந்தேகங்களையும், அச்சங்களையும் உறுப்பினர்கள் எழுப்பினார்கள்; அவற்றை நானும் எழுப்புகிறேன். இன்றைய காவல் துறையினரால் இந்தச் சட்டத்தை மிகச் சிறப்பாக, செம்மையாக, நாணயமாக, நேர்மையாக, முழுமையாகச் செயல்படுத்த முடியுமா, இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்திற்கு வெற்றி தேடித்தர முடியுமா என்ற சந்தேகம் இன்றைய தினம் பலருடைய மனத்திலே இருக்கிறது. ஆளுங் கட்சியிலே இருக்கும் உறுப்பினர்கள்கூட இதை வெளியே பகிரங்கமாகச் சொல்ல முடியாவிட்டாலும், தனிப்பட்ட முறையிலே வெளிப்படையாகச் சொல்கிறார்கள். அந்தச் சங்கடங்களைப் போக்க வேண்டியது அரசின் தலையாய கடமை. அண்மையில் வட ஆற்காடு மாவட்டத்திலே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை இங்கே கூறுகிறேன். அங்கு ஒரு காவல் நிலையத்தில் இருந்த போலீசார் சாராயம் காய்ச்சுபவர்களுக்கு உடந்தையாக இருந்ததாக அத்தனை போலீசாரும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலே இந்தப் பிரச்சினையை எழுப்பியபோது, அங்குள்ள காவல் துறை மூத்த அதிகாரி இந்தத் தகவலைச் சொன்னார். அந்த அளவுக்கு, பல அதிகாரிகள் இந்த மதுவிலக்குக் குற்றங்களுக்குப் பல வகைகளிலும் உடந்தையாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இதிலே, மிகவும் வேதனைப்படத்தக்க செயல் என்னவென்றால், சிறுவர்களையும், மாணவர்களையும் இந்தச் செயலில் ஈடுபடுத்துகிறார்கள் என்பதே. ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை இங்கே சொல்கிறேன். வட ஆற்காடு

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1979 மார்ச் 17

மாவட்டத்திலே வேலூரிலே நடந்த நிகழ்ச்சி இது. நகரத்திலே ஒரு ஓரத்திலே அதிகமாக எல்லோருடைய கண் பார்வையும் படும் இடத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள். அங்கே எப்படிச் செய்கிறார்கள்? வரிசையாக, ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு ஒரு பையன் என்ற முறையிலே சில சிறுவர்களை நிறுத்தி வைக்கிறார்கள். அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்ட பையன்களிடத்தில் ஆளுக்கு ஒரு விசில் கொடுக்கிறார்கள். யாராவது போலீசார் வந்துவிட்டால் முதல் பையன் விசில் அடிப்பான். அப்படி ஒவ்வொரு பையனும் விசில் அடிப்பான். ரகசியமாக மாற்று உடையில் போலீசார் வந்தால்கூட, இந்தப் பையன்கள் அடையாளம் கண்டுகொண்டு விசில் ஊதுகிறார்கள். இந்த விசில் ஊதும் சத்தம் கேட்டதும், அங்கே ரகசியமான இடத்திலே சாராயம் காய்ச்சுகிறானே, அவனுக்கு அந்தச் செய்தி தெரிவிக்கப்படுகிறது. அவன் ஓடி தப்பித்துக்கொள்கிறான். நான் அங்கு இருக்கிற மக்களிடமும், நண்பர்களிடமும் இதைப்பற்றி மேலும் விசாரித்த போது, இவ்வாறு வருகின்ற போலீசார் அத்தனை பேரும் அந்தத் தொழிலுக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்று அவர்கள் கூறினார்கள். மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலே கூட இதைச் சொன்னோம். பல இடங்களிலே மிகச் சிறிய பிள்ளைகளைக் கூட இந்த வேலையில் ஈடுபடுத்துகிறார்கள். இது மிகவும் கொடுமையான நிகழ்ச்சி. இந்தக் கொடுமைகளை எல்லாம் மிகக் கடுமையாகத் தடுத்து ஒழிக்க வேண்டியது அரசின் கடமை. அரசின் கடமை என்பதோடு மட்டுமல்ல. அனைத்துத் தரப்பினருக்கும் இதில் பொறுப்பு இருக்கிறது. ஊரிலே உள்ள பெரியவர்கள், கட்சிச் சார்பற்றவர்கள், மிக்க நல்ல அனுபவம் உள்ளவர்கள் ஆகியவர்களைக் கொண்ட ஒரு கண்காணிப்புக் குழுவை அமைத்து, அவர்கள் மூலமாக நடவடிக்கை எடுத்தால், இந்தச் சட்டத்தின் மூலமாகச் செய்வதைவிட அதிகம் செய்யலாம். இதில் ஒரு மனமாற்றம் ஏற்படுத்த வேண்டும். தீண்டாமை ஒழிப்பை எடுத்துக்கொண்டால், காந்தியடிகள், அம்பேத்கார், பேறிஞர் அண்ணா, பெரியவர் காமராசர் தீண்டாமை ஒழிப்புக்காக எவ்வளவு பாடுபட்டு சாதித்தார்களோ அந்தச் சாதனைகளைவிட சட்டம் சாதித்தது அதிகம் இல்லை. அவர்களுடைய பிரச்சாரங்கள் மூலமாக, நடவடிக்கைகள் மூலமாக, பல சாதனைகள் செய்திருக்கிறார்கள். இப்போது பல சட்டங்கள் இருக்கின்றன. கொலைக் குற்றங்கள் செய்பவர்களுக்கு தூக்குத் தண்டனை, ஆயுள் தண்டனை என்றெல்லாம் இருக்கிறது. சட்டங்களிலே கடுமையான மரண தண்டனை இருந்தபோதிலும், கொலைக் குற்றங்கள் செய்வது தடுத்து நிறுத்தப்படவில்லை. ஆகவே, இந்தச் சட்டத்தின்

1979 மார்ச் 17] [திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்]

மூலமாக, இந்தச் சட்டத்தில் இருக்கும் அம்சங்கள் மூலமாக இந்தக் குற்றங்கள் தடுத்து நிறுத்தப்படுமா என்ற சந்தேகம் இருக்கிறது. காலப்போக்கிலே இந்தச் சட்டம் தோல்வியடைந்த பின்னாலே தான், நாங்கள் மறுபரிசீலனை செய்வோம் என்றாலும் சரி, அது அரசின் பொறுப்பு. ஆனால் இந்தச் சட்டத்தை அமுல்படுத்தும்போது, இந்தக் குற்றங்களைச் செய்வதற்குத் தூண்டும் பல நிகழ்ச்சிகளை நாம் தடுத்து நிறுத்த வேண்டும். உதாரண

(முற்பகல் 10-20)

மாக, கதைகளில் குடித்துவிட்டு ஆட்டம் போடுகிற, ஆர்ப்பாட்டம் செய்கிற நிகழ்ச்சிகள் எல்லாம் திணிக்கப்படுகின்றன. இதைப் படிக்கும் இளைஞர்கள் கெட்டுப் போய்விடுகிறார்கள். திரைப்படங்களில் குடிப்பது கெடுதல் என்பதைச் சித்தரிக்கக் காட்சி வருகிறது. ஆனால் என்ன நடக்கிறது? அந்தக் காட்சியைப் பார்ப்பவர்களுடைய மனதிலே "நாமும் குடித்துப் பார்ப்போமே" என்ற எண்ணம் வருகிறது. குமரப் பருவத்தில் உள்ள இளைஞர்கள் கெட்டுப் போய்விடுகிறார்கள். "குமரப் பருவம்" என்பது மிகவும் முக்கியமான பருவம். Adolescent பருவத்தில்தான் அதிகமான குற்றங்கள் நடைபெறுகின்றன என்பது படித்தவர்களுக்குத் தெரியும். திரைப் படக் காட்சியைப் பார்த்துவிட்டுத் திருந்துவதற்குப் பதிலாக, நாமும் குடித்துத்தான் பார்ப்போமே என்று நினைக்கிறார்கள். திரைப்படக் காட்சியிலே அப்படிப்பட்ட சம்பவங்கள், நிகழ்ச்சிகள் இடம் பெறக் கூடாது என்று, மத்திய அரசுடன் கலந்து பேசி, ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்தால் நல்லது. அப்படிப்பட்ட திரைப்படக் காட்சிகளைப் பார்த்துவிட்டு காப்பி அடிக்கிற இளைஞர்கள், மாணவர்கள் ஆகியவர்களின் எண்ணிக்கை அதிக மாகிக்கொண்டு வருகிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, லாரி டிரைவர்களைப்பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். லாரி டிரைவர்கள் குடித்துவிட்டு, சாலைகள் ஓரத்திலே நிறுத்திவைக்கப்பட் டிருக்கிற வாகனங்களின்மீது கூட மோதிவிடுகிறார்கள் என்ற செய்தி தினந் தோறும் வருகிறது. லாரி டிரைவர்கள் அவ்வாறு குற்றங்கள் செய்யக் காரணம் என்ன? பல லாரி டிரைவர்கள் குடித்துவிட்டுத்தான் லாரியை ஓட்டுகிறார்கள். இந்த மேலவையிலே கூட ஒரு அறிஞர் பேசியதாக எனக்கு நினைவு இருக்கிறது. "குடித்துவிட்டுச் செல்லுகிற லாரி டிரைவர் களை நடுத்தெருவில் நிற்கவைத்து சவுக்கால் அடிக்க வேண்டும்" என்று

பேசியதாகப் படித்தேன். அப்படிப்பட்ட லாரி டிரைவர்களுக்கு என்ன கடும் தண்டனையை விதித்திருக்கிறார்கள்? தீங்கு விளைவிக்கக் கூடிய லாரி டிரைவர்களை இந்தச் சட்டத்திலே எந்த அளவிலே கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவர இருக்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த சமயத்திலே கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, on a point of information. May I like to get some more light from the hon. Member on whether he desires to have some rigorous punishment, especially for the lorry drivers or drunken drivers ?

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பொது மக்களுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய, தீங்கு விளைவிக்கக் கூடிய லாரி டிரைவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று பரவலான குற்றச்சாட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட லாரி டிரைவர்களுக்குக் கடுமையான தண்டனையை விதிக்கலாம். அவர்களுடைய உரிமச் சீட்டைப் பறிமுதல் செய்யலாம். அல்லது அவர்கள் லாரிகளை ஓட்டும்போது, 20 மைல்களுக்கு, 30 மைல்களுக்கு இடையே உள்ள காவல் நிலையத்தில் கையெழுத்திட்டுச் செல்ல வேண்டும் என்ற நியதியை ஏற்படுத்தலாம். அவர்கள் தாமதமாகச் செல்வதால், ஒன்றும் குடி மூழ்கிவிடாது. கையெழுத்திட்டுவிட்டுச் செல்வது என்ற முறையை வைக்கலாம். அப்படியொரு நல்ல முடிவை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தக் குடிப் பழக்கத்தை அறவே போக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய குறிக்கோள். நம்முடைய மாநிலத்தைபோட்டியுள்ள அண்டைப் பகுதிகளான பங்களூர், கோளம், பாண்டிச்சேரி, சித்தூர் போன்ற இடங்களுக்கெல்லாம் நம் நாட்டிலேயிருந்து மக்கள் போய்கொண்டிருக்கிறார்கள். இப்படிப் போகிறவர்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. பல சோதனைச் சாவடிகள் இருந்தாலும், இன்றைக்கும் இந்தக் குறைபாடு நீங்கியதாகத் தெரியவில்லை. இல்லையென்றால், அங்கே சென்று குடித்துவிட்டு, ஓய்வு எடுத்துவிட்டு, பிறகு மறுநாள் திரும்ப வருகிறார்கள். இதையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு, இப்படிப் பட்ட நிகழ்ச்சிகளையும் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1979 மார்ச் 17] [திரு. சி. சா. லெட்சுமிகாந்தன்]

கலைக்களஞ்சியத்திலே மிக அழகாக போதையூட்டக் கூடிய 'வெறி நீர்' என்று மது வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இது அருமையான தமிழ்ச் சொல், வெறியுண்டாக்கக் கூடிய இந்தப் பழக்கத்தை இளைஞர்களிடமிருந்து, மாணவர்களிடமிருந்து, பொது மக்களிடமிருந்து, அவர்களுடைய மனதிலே யிருந்தது அறவே ஒழிக்க வேண்டும். அதற்கு வேண்டிய நல்ல, தீவிரமான, திறமையான பொதுக் கருத்தை ஏற்படுத்தக்கூடிய வலிமையான பிரச்சாரம் செய்ய வேண்டும். இந்தப் பிரச்சாரம் எந்த வகையிலே இருக்க வேண்டும் என்பது பற்றி அரசு ஆய்ந்து முடிவு செய்யலாம். அப்படிச் செய்வதன் மூலமாகத்தான் இந்தப் பிரச்சினையில் நாம் வெற்றி காண முடியும். வெறும் கடுமையான சரத்துக்கள் மட்டும் முழு வெற்றியைத் தர முடியாது என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத்திலே கடுமையான தண்டனைகள் அதிகமாக ஆக்கப்பட்டிருப்பதால், காவல் துறையினுடைய 'மாமூல் ரேட்' அதிகப்படுமோ என்ற அச்சம், சந்தேகம் எங்களுக்கு இருக் கிறது. அப்படி அதிகப்படுத்தப்பட்டும் வருகிறது. ஆகவே, அதையும் கண்காணித்து அந்தக் குறைபாடுகளையும் அறவே நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அமைகிறேன்.

புலவர் புலமைப்பித்தன்: மேலவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு பற்றிய சட்டத்தைப்பற்றிக் குறிப்பிடப்படுகிற கருத்துக்களில் என்னுடைய கருத்தையும் இணைத்துக் கொள்வதில் நான் மெய்யாகவே ஒரு சமுதாயத் தொண்டினை நிறைவேற்றி வைக்கிறேன் என்ற மகிழ்ச்சியோடு நான் இந்த விவாதத்திலே கலந்துகொள்ளுகிறேன்.

ஒரு அரசு என்பது ஏதோ ஒரு இயந்திரம் என்ற கருத்தைக் கொண்டிருக் கிற மனோபாவம் நம்மிடையே பல பேரிடத்திலே இருக்கிறது. அரசு என்பது வெறும் இயந்திரம் அல்ல. அது மனிதாபிமானத்தோடு செயல் படுகிற ஒரு அமைப்பு. சரியாகச் சொல்லப் போனால், பிள்ளைகளைக் காப்பாற்றுவதில் ஒரு தாயைப் போலவும், செல்வத்தைத் தேடித் தருவதிலே ஒரு தந்தையைப் போலவும், அறநெறிப்படுத்துவதிலே ஒரு ஆசிரியரைப் போலவும் இருந்து செயல்பட வேண்டியது அரசு என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

(புலவர் புலமைப்பித்தன்) [1979 மார்ச் 17

அரசுக்கு வள்ளுவர் இலக்கணம் சொல்ல வருகிறபோது,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என்றார். இதற்கு முன்னாலே ஒன்றைச் சொன்னார்.

"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு."

என்று சொல்லிச் சென்றிருக்கிறார். அதனாலே அறனிழுக்கம் அல்லாதவற்றை நீக்குகிற அரசு எதுவோ அதுதான் அரசாக இருக்க முடியும். குடிப்பது நல்லது என்று யாருமே சொல்லவில்லை. அதை எப்படித் தடுப்பது என்பதிலேதான் வேறுபடுகிறார்களே தவிர, குடிப்பது மிகவும் தர்மமானது, நியாயமானது என்று யாரும் சொல்லவில்லை. கலைக்களஞ்சியத்திலே அதற்கு நல்ல பெயர் சூட்டப்பட்டிருப்பதாக அந்தச் சொல்லைப் பாராட்டினார்கள். 'வெறி நீர்' என்று சொல்லப்படுகிறது. வெறி நீரை உண்ட பின்னாலே, வெறியர்களாக மாறி விடுகிறார்கள் என்பதனாலே 'வெறி நீர்' என்பது இதற்குப் பெயராக வந்திருக்கிறது. அரசு உபதேசத்தால் மட்டும் இந்தப் பழக்கத்தை மாற்ற முடியும் என்று சொன்னால், எனக்கு அதிலே முழுக்க முழுக்க நம்பிக்கையில்லை. காரணம், உபதேசத்தால், அறிவுரையால், அறவுரையால் ஒரு நாடு திருந்த வேண்டுமென்று சொன்னால், உலகத்திலே இருக்கிற எந்த நாட்டைக் காட்டிலும் தமிழகம்தான் திருந்தியிருக்க வேண்டும். காரணம், சங்க இலக்கியத்திலிருந்து இன்றைய இலக்கியங்கள் வரை தமிழில், மனித வாழ்க்கையை நெறிப்படுத்துவதாகச் சொல்லுகிற அறிவுரைகள், அறவுரைகள் போல் அந்த அளவுக்கு ஆழமாக அகலமாக வேறு எந்த இலக்கியத்திலும் சொல்லியிருக்கிறார்களா என்பது சந்தேகத்திற்குரியது. திருக்குறள், வாழ்க்கை நெறியினுடைய தத்துவத்தை விளக்குகிற ஒரு இலக்கணம். இப்படி வள்ளுவர் காலத்திலிருந்து வள்ளலார் காலம் வரை சொல்லிய பின்னாலும்கூட, நம்முடைய அண்ணா மொழியில் சொன்னால், பாசுரம் பாடிப் பார்த்தாகிவிட்டது, நம் நாடு திருந்தியிருக்கிறதா என்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆகவே, சட்டங்கள்தான் மனிதனைக் கட்டுப்படுத்தவோ, நெறிப்படுத்தவோ செய்யுமே தவிர, வெறும் அறிவுரைகளை, அறவுரைகளை கேவலத்திற்கு வேண்டுமானால் பயன்படுத்த முடியுமே தவிர, பல நேரங்களில் எள்ளி நகையாடுவதற்குப் பயன்படுத்த முடியுமே தவிர, அதனால் இலாபம்



1979 மார்ச் 17] (புலவர் புலமைப்பித்தன்)

இருப்பதாக ஒப்புக்கொள்ள முடியாது. மனித சமுதாயத்தை நெறிப்படுத்துவது அரசினுடைய கடமை. நேற்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் பேசுகிறபோது, இந்தச் சட்டத்திற்குத் துணையாக நல்ல கருத்தைச் சொன்னார்கள். அவர் வரவேற்காமல் வரவேற்றார்கள். when wealth is lost nothing is lost when health is lost something is lost; when Character is lost, everything is lost. என்றார் நான் சொல்லுகிறேன், குடியினாலே Health is lost, wealth is lost and character is lost. எனவே, இத்தனையும் போவதற்குக் காரணமாக இருக்கிற குடி தேவைதானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இதை நடைமுறைப் படுத்துவதிலே சிக்கல்கள் இருப்பதாகச் சொன்னார்கள். நான் நடைமுறைப் படுத்துவதிலே சிக்கல்கள் இருப்பதாகச் சொன்னார்கள். நான் அதை ஒப்புக்கொள்கிறேன். இந்தச் சிக்கல்கள் கூட 1974 ஆம் ஆண்டிலேதான் உருவாக்கப்பட்டிருக்கின்றன. சதாசிவம் குழு தன்னுடைய சாட்சியங்களை விசாரித்து, தீர்ப்பு அளித்திருக்கிறது. "மதுவிலக்கு இரத்து செய்யப்பட்ட 1971 ஆம் ஆண்டிலிருந்து 1974 ஆம் ஆண்டு முடிய மூன்றாண்டுகளில் முன்பு குடிப் பழக்கத்தைக் கைவிட்டவர்கள் மாத்திரமல்லாமல், மது என்றாலே என்னவென்று தெரியாதவர்கள், மதுவைப் பார்த்துக்கூட இல்லாதவர்கள் எல்லாம் கூட இக்கொடிய பழக்கத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். இப்பழக்கத்திலிருந்து இந்த சமுதாயத்தை மாற்றுவதற்கு வேண்டிய முயற்சிகளை ஏற்படுத்த முடியாமல் அப்படிச் சிக்கல்களை உருவாக்கியிருக்கிறார்கள்" என்று சொல்லி தன்னுடைய அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது இவ்வளவு கடுமையான சட்டத்தை உருவாக்கத் தேவை இருக்கவில்லை. காரணம், அந்த அளவுக்கு, 10 வயதிலிருந்து எல்லோரும் குடிக்கிற அளவுக்கு, நெறி கெட்டு, தறி கெட்டுப் போயிருக்கவில்லை இந்தச் சமுதாயம். ஆனால் ஒரு 3 ஆண்டுக் காலத்தில் எந்த அளவுக்கு நம்மாலே கெடுக்க முடியுமோ அந்த அளவுக்கு மக்களைக் கெடுத்திருக்கிறோம் என்பதை ஒத்துக்கொள்வதிலே வெட்கப்படத் தேவையில்லை. அந்த 3 ஆண்டுக் காலத்தில் யார் யார் குடிக்காமல் இருந்தார்கள் என்று கணக்குப்பார்த்தால், அத்தனை பேர்களையும் குடிக்க வைத்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அந்தக் காலத்திலே பள்ளிப் பிராயத்திலே இருந்தவர்கள்கூட குடிக்கப் பழகியிருந்தார்கள். குடிப்பவர்களைப் பார்த்து, அவர்கள் அப்படிப்பட்ட பழக்கத்திற்கு அடிமைப் பட்டவர்களாக ஆகிவிட்டார்கள்.

(புலவர் புலமைப்பித்தன்) [1979 மார்ச் 17

(முற்பகல் 10-30)

மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமலிங்கம் அவர்கள் கூட வாய் ஊதச் சொல்கிற நிகழ்ச்சியை எல்லாம் ஒரு நகைச்சுவைக்காகச் சொன்னார்கள். திரைப்படத் துறையில் ஈடுபட்டிருக்கின்ற ஒருவர், புல்லாங்குழல் ஊதுகின்ற ஒருவர், வழியிலே வந்துகொண்டிருந்தார்கள். அவரை காவல் துறையைச் சேர்ந்த ஒருவர் வாயை ஊதச் சொன்னார்கள். அப்படிச் சொன்னவுடனே, நான் ஊதினால் எனக்கு ரூ. 75 தர வேண்டும் என்று சொன்னாராம். காரணம் அங்கே படப்பிடிப்பு அரங்கிலே புல்லாங்குழல் ஊதுவதற்கு ரூ. 75 ஒரு கால் ஷீட்டுக்கு வாங்குவார்கள். அதனாலே ஊதினால் ரூபாய் 75 தர வேண்டும் என்று கேட்டாராம். அதனாலே நகைச்சுவை என்று அதையெல்லாம் எடுத்துக்கொண்டு போவதைக் காட்டிலும், மதுவிலக்குச் சட்டத்தை எப்படி அமுல்படுத்துவது, அதை அமுல்படுத்தி எப்படி சமுதாயத்தைப் பாதுகாப்பது என்பதிலே வேண்டிய யோசனைகளைச் சொல்வது, அறிவுரைகளைச் சொல்வது என்பவைதான் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கவையே தவிர, வேறல்ல. ஒரு கண்ணிலே பீளை இருக்கிறது, அதனாலே அந்தக் கண்ணையே அழித்துவிடவேண்டும் என்று சொல்லலாமா? கண்ணிலே பீளை இருந்தால், நோய் இருந்தால், அதை எப்படி நீக்குவது என்று பார்த்து அந்த நோயைப் போக்குவதற்கு வழிவகைகளைச் சொல்ல வேண்டுமே தவிர, நோய் இருக்கிறது, எனவே கண்ணையே எடுத்துவிடலாம் என்று சொல்வது நல்ல அறிவுரையாகாது. சமுதாயத்தை நெறிப்படுத்துவதற்கு நமக்கு மதுவிலக்குச் சட்டம் நிச்சயமாகத் தேவை. இன்னும் சொல்லப்போனால், பொதுவுடைமை சித்தாந்தத்திலே ஊறித்திளைத்திருக்கின்ற நண்பர்கள் எல்லாம் ஏழை எளியவர்களுக்கு இதனால் பெரிய பாதகம் என்றார்கள். நான் கேட்க விரும்புகிறேன். நானும் சாதாரணமான, ஒரு படிக்காத, பாமரக் குடும்பத்தை, ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன் தான். அருமை நண்பர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் கூட சொன்னார். எனக்குத் தெரிய என்னுடைய சுற்றத்தார், ஒரு நாளைக்கு ரூ. 5 சம்பாதிக்கின்றவர்கள், சம்பாதித்ததை சாராயக் கடையிலே கொடுத்து விட்டு, கள்ளுக் கடையிலே கொடுத்துவிட்டு, வீட்டிலே அரிசிக்குக் காசு கேட்கிறபோது, அடியோ உதையோதான் கிடைக்குமே தவிர, வேறில்லை. எத்தனை பிள்ளைகள் இதனால் பிச்சை எடுக்க நேர்ந்திருக்கிறது என்பதைக் கருணையோடு எண்ணிப் பார்க்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால், என்னுடைய சித்தாந்தப்படி பணக்காரர்கள் குடித்துப் பாழாகிப் போவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் சம்பாதிக்கின்ற 5 ரூபாயை,



1979 மார்ச் 17] (புலவர் புலமைப்பித்தன்)

சம்பாதிக்கின்ற 6 ரூபாயை, வண்டி இழுத்துக்கொண்டிருக்கிறார்களே அவர்கள், மூட்டை சுமந்து கொண்டிருக்கிறார்களே அவர்கள், சைக்கிள் ரிக்ஷா இழுத்துக்கொண்டிருக்கிறார்களே அவர்கள், அத்தனை பேரும் சம்பாதித்த அந்த 5, 6 ரூபாயை சாராயக்கடையிலே கொடுத்துவிட்டு வந்த பின்னாலே, இந்த நாட்டிலே பிள்ளைகள் கை ஏந்தி பிச்சை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். அப்படி நினைத்து பார்த்தார்களானால், இந்தச் சட்டத்தை எப்படியும் வெற்றி பெறச் செய்ய வேண்டும். நடத்தித் தர வேண்டும் என்பதற்கு வேண்டிய யோசனைகளைச் சொல்வதுதான் நியாயமானதாக இருக்கலாமே தவிர, அறமாக இருக்கலாமே தவிர, இதை விட்டுவிடுங்கள் என்று சொல்வதை ஏழைகளை மனதிலே வைத்துக்கொண்டுதான் சொல்கிறார்களா என்பதை நாம் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நான் ஏழைகளைப்பற்றிக் கவலைப்படுவதனாலேதான் இந்தச் சட்டம் இன்னும் கடுமையாக்கப்பட வேண்டும் என்று சொல்கிறேன். நமது அருமை, அறிவு சான்ற உறுப்பினர் ஒருவர் 20, 30 வயதிலேயே சிறைச்சாலைக்குப் போய்விட்டு வந்தால், அவர்களுடைய வாழ்க்கை என்ன ஆவது என்று கேட்டார். நானும் அதையே கேட்கிறேன். 20, 30 வயதிலே இருப்பவர்கள் குடித்துக் கெட்டுப் பாழாகிவிட்டால் அவர்களை எப்போது நாம் திருத்தப் போகிறோம்? அதையும் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமக்கு இருக்கின்ற சிக்கல் எல்லாம் அதை எப்படி நிறைவேற்றுவது என்பதுதான். அதிலே நம் கவனம் இருக்க வேண்டும். காவல் துறையிலே குறை இருப்பதைச் சொல்கிறோம். நானேகூடப் பேசினேன். இதிலே ஒளிவு மறைவு தேவையில்லை. ஒரு அரசு ஒரு நல்ல கொள்கையை உருவாக்கும்போது, நாம் எல்லாவற்றையும் சொல்லித் தீர வேண்டும். நானே பல இடங்களில் நடக்கின்ற கொடுமைகளைச் சொன்னேன். அதை எப்படித் தவிர்ப்பது? எப்படி நிறைவேற்றுவது? அதற்கு என்னென்ன வழி வகைகளைச் செய்வது? அதை வெற்றிகரமாகச் செயல்படுத்துவது எப்படி? காவல் துறையினைக் கண்காணிப்பது எப்படி? அதை வெற்றிகரமாக நடத்த வேறு என்ன குழுக்களை அமைப்பது? இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அத்தனை பேரையும் சேர்த்து ஆங்காங்கு குழுக்களாக அமைத்து அதைக் கண்காணிப்பதற்குரிய யோசனைகளைச் சொல்வார்கள் என்றால், அது பயன்படும். ஆக, எப்படியும் இந்த மதுவிலக்குச் சட்டத்தைக் கடுமையாக ஆக்கித்தான் தீர வேண்டும். நான்

கடுமை என்று சொல்கின்றபோது, அதில் உள்ள கடுமையைப் பார்க்கிறபோது, கடுமையைக் கேட்கிறபோது, அது கடுமையாகத் தெரிந்தாலும், அது அருமையான பயனை உருவாக்கும் என்பதிலே நாம் நம்பிக்கை வைக்க வேண்டும்.

நாம் பெரும்பாலும் அச்சத்திற்குத்தான் கட்டுப்பட்டுப் பழக்கப்பட்டிருக்கிறோமே தவிர, ஒரு சுதந்திரமான நிலையிலே ஒரு கட்டுப்பாட்டிற்குப் பழக்கப்படவில்லை என்பதை நாம் ஒரு ஒன்றேமுக்கால் ஆண்டுக்காலமாக ஒரு பரிசோதனை போலப் பார்த்திருக்கிறோம். ஆக நாம் அதையே தத்துவமாக எடுத்துக்கொள்ள வேண்டிய தேவையில்லை. பல நேரங்களிலே ஒரு குறிப்பிட்ட பெயரைச் சொல்லக்கூட அச்சப்பட்டிருக்கிறார்கள். குழந்தைக்குக்கூட அந்தப் பெயராக இருக்குமானால், அந்தப் பெயரைச் சொல்லி அழைப்பதற்கே கூட அச்சப்பட்டிருக்கிறார்கள். பிரச்சினைகள் இல்லாத நிலைமைகள் ஏற்பட்டன. அடைக்கப்பட்ட கதவுகள் தானாகவே திறந்தன, எல்லாத் தொழிற்சாலைகளும் திறக்கப்பட்டன. தொழிற்சாலையின் கதவுகள் மூடப்பட்டனவா? இல்லை. மாணவர்கள், தேர்வு நடத்துபவர்களிடையே எந்தவிதமான கைகலப்பும், கலவரமும் இல்லை. இப்படிப்பட்ட சீரான நிலைமைகள் அந்த ஒன்றே முக்கால் ஆண்டுக்காலத்திலே ஏற்பட்டன. அப்போது வேதனையாக இருந்தாலும், நல்ல நிலைமைகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. இப்படி சமுதாயம் மாறவேண்டும் என்று தான் சொல்கிறோம். ஆண்டவனை வழிபடுவதாகச் சொல்லிக்கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன? அச்சம் தான். அச்சம் மட்டும் மனிதனுடைய மனதில் இல்லை என்றால், கடவுளைக் கூட தொழ மாட்டான். அதனாலே அச்சப்படுத்தித்தான் மனிதனை நல்வழிப்படுத்த முடியும், அறவழிப்படுத்த முடியும்.

**திரு. க. அறிவழகன்** :- கடவுளைக் கும்பிடுவதிலே தங்களுக்கு நம்பிக்கை இல்லையா?

**புலவர் புலமைப்பித்தன்** : அச்சப்படுத்தி நல்வழிப்படுத்துகிறோம். அச்சம் இல்லாமலேயே நல்ல வழியிலே செல்கின்றவர்கள் கடவுளை வழிபடத் தேவையில்லை என்பது என் கருத்து. அச்சப்படுத்தித்தான் கட்டுப்படுத்த வேண்டும், நல்வழிப்படுத்த வேண்டும் என்று சொல்லும்போது, அப்படிச் சொல்கிறார்கள்.



அதனாலேதான் கட்டாயமாகத் திருத்தித் தீரவேண்டும் என்ற நிலைமைக்கு நாம் வந்தாக வேண்டும். 6 மாதம் சிறைச்சாலை என்று சொன்னவுடனே, ஒன்று என் நினைவுக்கு வருகிறது. நான் திரைப்படத் துறையிலே ஈடுபட்டிருப்பவன். அங்கே பல பேர்கள் சொன்னார்கள். 'நான் விட்டுவிட்டேன் நேற்றிலிருந்து' என்று சொன்னார்கள். இந்தக் குடிப் பழக்கத்தை விலக்கிவிடுவோமானால், எல்லோரும் நல்ல குடிமக்களாக மாறி விடுவார்கள். அதை ஒன்றும் மாற்ற முடியாமல் போய்விடாது. இந்தச் சட்டத்தின் மூலமாகப் பழி வாங்கக்கூடும் என்ற சந்தேகத்தைச் சொன்னார்கள். எதற்கெடுத்தாலும் சந்தேகப்படுவதா? இன்னும் சொல்லப் போனால், இந்தச் சட்டம் இல்லாமல், அரசு நினைத்தால், பழி வாங்குவதற்கு வேறு வழியே கிடையாதா? இந்தச் சட்டம் மட்டும்தான் இருக்கிறதா? இதை வைத்துக்கொண்டுதான் பழி வாங்கித் தீரவேண்டுமா? எண்ணிப் பாருங்கள். மதுவிலக்குச் சட்டம் தளர்த்தப்பட்ட நேரத்திலே எந்த வழக்குகள் கணக்கு எத்தனை? மதுவிலக்குச் சட்டம் தளர்த்தப்பட்ட நேரத்திலே வந்த பழிகள் எத்தனை? இந்தச் சட்டத்தை நடைமுறையிலே தவறாகப் பயன்படுத்தி, பிறழ்ந்துபோய், பழிவாங்குகின்ற அளவுக்கு இந்தச் சட்டம் மட்டும்தான் ஊன்றுகோலாக இருக்கிறது என்று யாரும் கருதத் தேவையில்லை.

அதனாலே ஒரு நல்ல சட்டம் வருகிறபோது, ஐயப்பாடுகள் ஏற்படுமானால், தவறுகள் நிகழ்ந்துள்ளன என்றால், தடுப்பதற்கு, அதைக் கண்டிப்பதற்கு எல்லா உறுப்பினர்களுக்கும் உரிமை இருக்கிறது. தவறாகச் செயல்பட்டால் அதைத் தட்டிக் கேட்பதற்கு உரிமை எல்லோருக்கும் இருக்கிறது.

அங்கத்தினர் அவர்கள் ஒரே ஒரு நபருடைய நிகழ்ச்சியை மனதிலே வைத்துக்கொண்டு பேசியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். நான் கேட்க விரும்புகிறேன். வெறும் பழி வாங்கும் எண்ணத்திலே செய்யப்பட்டது என்றதற்காகச் சொல்கிறேன். இவர் குடிக்கவே இல்லை என்று சாட்சி சொல்கிறார்களா, இவர்கள் அவர் பக்கத்திலே இருந்து பார்த்தார்களா என்றுகூட நாம் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. யாராக இருந்தாலும், நான் சொல்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, அன்றைய தினம் இந்தத் தலை நகரான சென்னையிலே அவர் ஒருவர்தான் குடித்து இருந்தாரா என்று கேட்கிறேன். அப்படி ஈடுபட்டு இருந்தவர்கள்

ஆயிரக்கணக்கான பேர்கள் இருந்திருக்கலாம் என்று தான் சொன்னேன்.
குறிப்பிட்ட ஒருவர் மீது மட்டும் அந்தச் சட்டம் பாய்கிறதே என்று
சொன்னேன். அப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகாமல் இருக்க வேண்டும்
என்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன்.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்
களே, அன்றைக்கு ஆயிரக் கணக்கானவர்கள் சென்னையிலே குடித்துக்
கொண்டிருந்தார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒப்புக்
கொண்டு, அந்த ஆயிரக் கணக்கானவர்களை விட்டுவிட்டு, ஒருவரை ஏன்
பிடித்தீர்கள் என்று கேட்கிறார்கள். எனவே தவறு செய்தவர்கள் எல்
லோரையும் பிடிக்க வேண்டும், இல்லையென்றால் ஒருவரையும் பிடிக்கக்கூடா
தென்பது மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய வாதமா ?

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** வேண்டியவர்களை விட்டுவிட்டு, வேண்டா
தவர்களைப் பிடிக்கச் சட்டம் பயன்படுகிறது என்பதுதான் என் கருத்து.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** யார் வேண்டியவர்கள், யார்
வேண்டாதவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் எந்த அளவு
கோலை வைத்துத் தீர்மானித்தார் என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** அரசாலே உருவாக்கப்பட்ட * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** விருப்பு, வெறுப்பில் சொல்வதாகக்
கருத வேண்டாம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது குற்றம்.
யதில் சொல்ல முடியாத அளவிற்குக் குற்றம் சொன்னால், அது தவறு.
எனவே அவைக் குறிப்பிலிருந்து உறுப்பினர் கூறிய தனிநபர் பெயர் நீக்கப்
படுகிறது.

**திரு. க. அறிவழகன் :** இதிலே வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற
பிரச்சினை வந்திருக்கிறது. மதுவிற்கு வேண்டியவர்கள், மதுவிற்கு
வேண்டாதவர்கள் என்று அதைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நகைச்சுவை இடையில் வந்தால்கூட
தல்லது. கள் நாற்றம் அடிக்கிறது.

**புலவர் புலமைப்பித்தன் :** தலைவரவர்களே, நான் வேண்டியவர்கள்,
வேண்டாதவர்கள் என்று பார்க்கும் அரசை ஆதரிக்க மாட்டேன். இந்த
அரசு அப்படியில்லை என்று நம்புகிறேன். எதிர்காலத்தில் அப்படிப்
போவதாகப் பட்டால், நானே கூட எதிர்ப்பேன். வருகிற சட்டம் நன்மை
பயக்கிறது என்ற எண்ணம் வரும்போது, அதை எப்படிச் செயல்படுத்த
வேண்டுமென்பதில் நாட்டம் இருக்க வேண்டும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** இந்தச் சட்டம் வேண்டுமென்றுதான்
நானும் விரும்புகிறேன். கோவையிலே நடந்த பொதுக் குழுக் கூட்டத்திலே
மது விலக்கை நீக்க வேண்டுமென்ற பிரச்சினை வந்தபோது, எனக்குப் பேச
வாய்ப்பில்லை. இன்றைய முதலமைச்சரவர்கள் அதை ஒத்துக்கொண்
டார்கள். அதைத் தொடர்ந்து, இளைஞர்களாகிய நாங்கள் மதுவிலக்கு
இருக்க வேண்டுமென்று, கையெழுத்து வாங்கி, எங்கள் உணர்வுகளைக்
காட்டினோம். இன்றைக்கு மதுவிலக்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்து
கிற அமைப்பு இயந்திரம் பழுதுபட்டிருக்கிறது, அதை வைத்துக்கொண்டு
இப்படிப்பட்ட புனிதமான சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**புலவர் புலமைப்பித்தன் :** பழுதுபட்ட இயந்திரமாக இருந்தாலும்,
அந்தப் பழுதை நீக்குவதற்கு உரிய வழியைச் சொல்ல வேண்டும். அந்தப்
பழுதால், சட்டமே வேண்டாமென்று சொல்வது சரியானதல்ல என்று கருது
கிறேன். இதனால் வருமானம் குறைகிறது என்கிறார்கள். சமுதாயத்
தினுடைய மானம் போகும்போது, 'வருமா மானம்' என்பதை எண்ணிப்
பார்க்க வேண்டும். 186 கோடி ரூபாய் அளவிற்குப் போகிறது என்று சொன்
னார்கள். 186 கோடி ரூபாய் இருந்தால், இந்த நாட்டை எந்த
அளவிற்குச் சீர்திருத்த முடியுமென்று எண்ணிப் பார்க்கிறேன். 186 கோடி
ரூபாயில் பாலங்கள் கட்டலாம், பாதைகள் போடலாம், அதிலே கார்கள்
பவனி வரும். ஆனால் அந்தப் பணம் ஏழை மக்களைச் சீர்திருத்தப்
பயன்படுமா என்றால், இல்லை. ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும்.
புதிதாக மது விலக்குச் சட்டத்தை அமுல் படுத்தும் மாநிலங்களில், அதை
ஊக்குவிக்கும் அடிப்படையிலே நஷ்ட ஈட்டுத் தொகை தருவதை மைய
அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. அப்படியென்றால் ஏற்கெனவே யோக்கிய

மாக இருப்பது தவறு என்ற மனப்பான்மையை உருவாக்குவதா? யோக்கிய மாக நடந்தால், 10 ரூபாய் தருகிறேன் என்று கூறினால், ஏற்கெனவே யோக்கியமாக இருப்பதைப் புறக்கணிப்பது என்று பொருளாகாதா? ஏற்கெனவே நமது மாநிலம் எத்தனை ஆண்டுக்காலம் இந்த நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறதோ, அதைத் தருகிற பொறுப்பை மைய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது என்னுடைய எண்ணம். குஜராத் மாநிலம் இந்தப் பிரச்சினையில் நம்மோடு இணைந்திருக்கிறது. காந்தி பிறந்த மாநிலம்தான் அப்படி இருக்க வேண்டுமென்று கருதுகிற மனோபாவம் உடையவர்கள். அந்த வகையிலும் அவர்களுக்குக் குறைந்தவர்கள் என்று சொல்ல முடியாத அளவிற்குப் பேரறிஞர் அண்ணா பிறந்த மாநிலத்தில் அப்படிப்பட்ட தூய்மை ஏன் இருக்கக்கூடாது என்று நினைக்க வேண்டுமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதே நேரத்திலே, மைய அரசு, பிகார் மாநிலமாக இருப்பதால்—தன்னுடைய எல்லைக்குள் வந்து விடுகிற மாநிலமென்று கருதுகிறார்களோ என்னவோ—அதற்கு ஆதரவாக நஷ்ட ஈட்டுத் தொகை தருவதும், ஏற்கெனவே இந்த மது விலக்குச் சட்டத்தைக் கடுமையாக அமுல்படுத்த வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கும் அரசுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை கொடுக்கக்கூடாதென்று சொல்லுவதும் தொடர்ந்து இருக்கக்கூடாதென்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள் கிறேன்.

ஏற்கெனவே தொடர்ச்சியாக தென்புலம் புறக்கணிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இது அதற்கு அச்சாரம் தருவதாக இருக்கிறதென்பதை மறந்துவிடக் கூடாது. நாட்டிலே கன்னியாகுமரி முதல் காஷ்மீர்வரை ஒன்று என்று பேசுவது வாய்ப்பேச்சாக நின்று விடக்கூடாது. எல்லா மாநிலங்களையும் ஒன்றாகக் கருதும் மனோபாவம் ஏற்பட்டு, மெய்யான ஒருமைப்பாடு ஏற்பட, இந்தப் பிரச்சினையைக் கொஞ்சம் கவனித்து, மத்திய அரசு நம்மைப் பாராட்டும் அளவிலே, நம்மை ஊக்குவிக்கின்ற வகையிலே நஷ்ட ஈட்டுத் தொகையைத் தர வேண்டுமென்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டங்களைக் கடுமைப்படுத்துவது, ஒரு சமுதாய நலன் கருதித்தான் என்பதை மறந்துவிடக் கூடாது. சின்ன மாத்திரையைக் கொடுத்து, நோய் குணமாகவில்லை என்றால், டாக்டர் ஊசி போடுகிறார். ஊசி போடும்போது, 'பாவி, நீ நாசமாகப் போக' என்று யாரும் சொல்வதில்லை. குத்துகிற ஊசியால் கொஞ்ச நேரத்திற்கு வலி இருந்தாலும், நோயை தீரத்



தாமாக மாற்றுகிறது என்பதால் அப்படிச் சொல்வதில்லை. தேவைப் பட்டால், அறுவை சிகிச்சைகூடச் செய்கிறோம். லாரி டிரைவர்கள்பற்றிச் சொன்னார்கள். அதனாலே எவ்வளவு சேதங்கள், எவ்வளவு விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

(மாண்புமிகு தலைவர் மணியடித்தார்)

விழுப்புரம் வழியாகப் போனாலும் சரி அல்லது எந்த வழியாகப் போனாலும் சரி, எத்தனையோ லாரிகள் குடை கவிழ்ந்து விழுந்திருப்பதைக் காண் கிறோம். தினந்தோறும் பல பேர்கள் செத்துக்கொண்டிருக்கிறார்கள். விலை மதிக்க முடியாத உயிர்களை இழக்கிறோம். இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்குகிறது-குடி என்பதை மறந்து விடக் கூடாது. எனவே, இந்தக் குடி கெடுக்கிற குடியை எப்படியாவது தடுத்து நிறுத்துவதற்கு, இல்லாமல் ஆக்குவதற்கு, முயற்சி எதுவாக இருந்தாலும், இந்த அரசு அதை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த முயற்சியிலே அரசு வெற்றி பெற வேண்டும். கல்லூரிப் பிள்ளைகள், சின்னஞ் சிறார்கள் எல்லாம், 10 வயதுப் பிள்ளைகள் எல்லாம் குடிக்கிறார்கள். கணவன் எப்போது குடித்துவிட்டு வருவான் என்று எதிர்பார்க்கும் சங்கடம் மாறி, எந்தப் பிள்ளை எப்போது குடித்துவிட்டு வருவானோ என்று எதிர் பார்க்கும் நிலைமை இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. எனவே இளம் தளிர்களை நாசமாக்குகிற அந்தக் குடியை முழுக்க முழுக்க ஒழிக்க வேண்டுமென்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிற இந்த அரசின் முயற்சி களை சமுதாயம் ஒத்துக்கொண்டு, அனைவரும் பாராட்ட வேண்டும். குறிப்பாகச் சொல்லப் போனால், அடி மட்டத்தில் இருக்கிற ஏழைகளுக்கு, அவர்களின் வாழ்க்கைக்குப் பாதுகாப்பு தருகிறது என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். "அறனிழுக்கா தல்லவை நீக்கி" என்று திருக்குறள் சொல் வதை மனத்திலே கொண்டு, இந்தச் சட்டம் நிறைவேற ஒத்துழைக்க வேண்டு மென்று சொல்லி, வாய்ப்பளித்த தலைவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு தலைவர்களே, சட்ட அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற 1979 ஆம் ஆண்டு மது விலக்குத் திருத்தச் சட்ட முன்வடிவின்மீது எனது கருத்துக்களைத் தெரி விக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முழு மனதோடு நான் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே இருக்கிற பிரச்சினைகளை எடுத்துச் சொல்லும்போது, ஏதோ

அரசியல் நோக்கத்தோடு சொல்வதாகக் கருதாமல், எனக்கு முன்னே பேசிய மாண்புமிகு உறுப்பினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் இங்கே சொன்ன அறிவுரைகளை எண்ணிப் பார்த்து, அதைப் போலவே நாங்கள் சொல்கிற இந்தக் கருத்துக்களையும் அரசு கேட்டு, அதிலுள்ள நியாய உணர்வுகளை உணர்வார்கள் என்று நம்புகிறேன். இன்னமும், என்னைக் கேட்டால், இந்தச் சட்டத்தைவிட இன்னும் புரட்சிகரமான சட்டம் கொண்டு வந்தால் கூட, அதை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நாட்டிலே தீய பழக்கங்கள் கூடாது என்று சொல்லும்போது, மது மட்டும்தான் தீய பழக்கமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். வள்ளுவர் எத்தனையோ குறள்களைச் சொன்னார்கள். அதிலே பொய் சொல்லக் கூடாது, புறம் கூறக் கூடாது, கள் உண்ணக்கூடாது, புலால் உண்ணக்கூடாது என்று இப்படியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். 'உண்ணற்க கள்ளை' என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். 2 ஆயிரம் ஆண்டுகளாக வள்ளுவர் போன்ற பெருந்தகையாளர்கள் சொன்ன கருத்து இது. இருந்தாலும் ஒரு சமுதாயம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னாலும் முழுமையாக அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லும் போது, உள்ளபடியே இந்த அரசாங்கமும், அனைத்துக் கட்சிகளும் சமு தாயத்தை எப்படிச் சீர்திருத்துவது என்பதைத்தான் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் ஒரு சட்டத்தாலேயே சமுதாயத்தை இந்த அரசாங்கம் சீர்திருத்திவிடுமென்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் விவாதத்தில் கலந்துகொள்ள வில்லை. திருக்குறளைச் சொன்னதால் சொல்கிறேன். பொய்யாமை, கல்லாமை போன்றவற்றை அறத்துப் பாலில் வள்ளுவர் சொல்லியிருக்கிறார். ஆனால் இதை மட்டும் பொருட்பாலில் வைத்தார், அரசாங்கத்தின் கடமையாக.

(முற்பகல் 10-50)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவரவர்களே, திருக்குறளை தாங்கள் நன்கு ஆய்ந்தவர்கள். தாங்கள் என்ன சொன்னாலும், நான் ஏற்றுக்கொள் கிறேன். இவ்வளவு கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். திருவள்ளுவர் சொன்ன எல்லாவற்றையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஒரு அரசாங்கம், சமுதாயம் திருந்த வேண்டுமென்று நினைக்கின்ற நோக்கில் இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வருவது தவிர்க்க முடியாதது. அது தவறு என்று நான் சொல்லவும் வரவில்லை. முன்பு இதுமாதிரி சட்டம் இருந்ததா, இல்லையா என்பதையும் அதே நோக்கில் பார்க்க வேண்டும். முன்பு கூட





மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருந்துகொண்டு தான் இருந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் 3 ஆண்டுகள் மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்த்திய காரணத்தால்தான், 10 வயதுக் குழந்தை கூட மதுவைக் குடித்து இந்த நாட்டிலே பெரிய குடிகாரர்களை உருவாக்குவதற்கு வழிவகுத்து விட்டார்கள் என்கிற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் புலவர் புலமைப் பித்தன் சொன்னார். நான் இந்த மதுவிலக்குத் திருத்தச் சட்டமுன் வடிவை ஆதரிக்கின்றேன் என்று சொல்கின்ற நோக்கில், அதிகமாக விவகாரங்களுக்குள் செல்ல விரும்பவில்லை. மாண்புமிகு உறுப்பினர் புலவர் புலமைப்பித்தன் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் சொல்லுகின்றேன். ஏதோ குடிக்காதவர்கள் எல்லாம் சட்டம் தளர்த்தப் பட்ட உடனே குடிக்கக் கற்றுக்கொண்டார்கள் என்று மாண்புமிகு உறுப் பினர் சொல்கின்ற கருத்தினை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. புலவர் புலமைப்பித்தன் அவர்கள் குடிக்கப் பழகியிருக்கவேண்டும். அவர் ஏன் குடித்துப் பழகவில்லையென்றால், அவருக்கு குடிப்பதிலே விருப்ப மில்லை, பிடிக்கவில்லை, நம்பிக்கையில்லை.

**புலவர் புலமைப்பித்தன் :** வாய்ப்பு இருந்தும் குடிக்காதவர்கள் சில பேர். வாய்ப்பு இருந்தால், குடிக்கிறவர்கள் பல பேர். நான் சில பேரிலே ஒருவன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** வாய்ப்பு என்பது அவரவர்களுடைய, தனி நபர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. சட்டத்தைத் தளர்த்திய போது, 4½ கோடி மக்களும் குடித்தார்களா என்றால், இல்லை. அதுபோல் யாருமே குடிக்காமலிருந்தார்களா என்றால் இல்லை. ஆக சட்டம் இருந்த போதும் குடித்தார்கள். சட்டம் அமுலில் இல்லாத போதும் குடித் தார்கள். 1970-71ஆம் ஆண்டிலே இதைத் தளர்த்தியதற்கு முன்பு 3 இலட்சத்து 25 ஆயிரம் பேர் மதுவிலக்குக் குற்றவாளிகள் இருந்தார்கள். ஆகவே உறுப்பினர் அவர்கள், மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்த்தியதால் தான், மக்கள் குடிக்கக் கற்றுக்கொண்டார்கள் என்று சொல்கிற கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இப்போதும் குடிக்கிறார்கள். அப்போதும் குடித்துக்கொண்டிருந்தார்கள். சமுதாயத்தினுடைய வளர்ச்சியின் விளைவாய் பொருளாதாரத் துறையும் மற்ற துறைகளும் வளர்ந்து கொண்டிருப்பதைப்போல்தான் இதுவும். அதுமாதிரி 1975 ஆம் ஆண்டில் இருந்த திருட்டுக் குற்றங்களை விட 1976ஆம் ஆண்டில் திருட்டுக் குற்றங்கள்

அதிகம். சமுதாயத்தின் போக்கு அப்படி இருக்கிறது. சமுதாயத்தைத் தான் நாம் திருத்த வேண்டும். கள் உண்ணுதல், கழகம் சேர்தல், பிறன் மனை நயத்தல் இதெல்லாம் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் இன்னும் ஏதேதோ சொன்னார்கள். ஆனால் சமுதாயத்தில் பெரியோர்களால் சொல்லப்பட்டவையெல்லாம் கடைப்பிடிக்கப்படுகிறதா ? பெரிய மனிதர்கள், உயர்ந்தவர்கள் எந்த அளவுக்கு இவற்றைக் கடைப் பிடிக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்தால், உள்ளபடியே நானே கூட வெட்கிக் குனியக் கூடிய அளவுக்கு காரியங்கள் இன்றையதினம் நாட்டிலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அரசாங்கம் சமுதாயத்தைச் சீர்திருத்த இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டுவரும்போது, சமுதாயத்தை அச்சுறுத்தாத சட்டமாகக் கொண்டு வர வேண்டும். சமுதாயத்தை அச்சுறுத்தக்கூடிய சட்டங்களா, மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய சட்டங்களா என்று எண்ணிப் பார்த்துக் கொண்டுவர வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 3 ஆண்டுக்காலம் மதுவிலக்கை ஒத்திவைத்த நேரத்தில், அன்றைய தமிழக முதல்வர் மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். "ஒத்தி வைத்தேனே தவிர நிரந்தரமாக இதை நான் எடுத்து விடவில்லை" என்று அவர்கள் அன்றையதினம் விளக்கம் தந்தார்கள். அன்றையதினம் "என் நெஞ்சில் ஒரு முள் தைத்து விட்டது" என்று மிகவும் வேதனையோடு சொன்னார்கள். தற்காலிகமாகத் தான் ஒத்தி வைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். இன்றைக்கு ஆளும்கட்சியில் இருக்கின்ற பலர் இப்படிப்பட்ட ஒரு நிலை ஏன் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு அன்றையதினம் ஏற்பட்டது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கோவையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுவிலே இதைப் பற்றிய முடிவெடுத்த நேரத்தில் இன்றைய முதல்வர் மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள்கூட தி.மு.க. பொதுக் குழுவிலே "இது ரத்து செய்யப்பட வேண்டியதுதான், ஒத்திவைக்கப்பட வேண்டியதுதான்" என்கின்ற கருத்தினை வலியுறுத்தி என்னென்ன பேசினார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அது அன்றைய சூழ்நிலை. அப்படிச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இன்று நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். நாங்கள் ஆதரிக்கின்றோம். இன்றைக்கு ஆளும் கட்சியில் இருந்தாலும், பலர் அது ஒத்திவைக்கப்பட்ட நேரத்தில் பேசிய வாதங்களை யாராவது மறுத்து விட முடியுமா ? இன்றைக்கு முதலமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. எம்.ஜி.ஆர். அவர்களேகூட அதை ஏற்றுக்கொண்டிருந்தார்கள்.



அப்படிப்பட்ட சட்டம் வந்த நேரத்தில் மதுவிலக்குத் தீவிரமாக அமுல்படுத்த எண்ணித் தான் திரு. எம். ஜி. ஆர். அவர்களுடைய தலைமையில் ஒரு பிரச்சாரக் குழு நியமிக்கப்பட்டது. அப்படித் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து மது குடிப்பதை நிறுத்தினார்களா என்றால், அதுதான் இல்லை. இவ்வளவுக்குப் பின்னரும்கூட திரு. எம். ஜி. ஆர். சொன்னால் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள், பின்பற்றுவார்கள், அவர் கட்டளையை நிறைவேற்றுவார்கள் என்றெல்லாம் நீங்கள் நம்புகின்ற நிலையிலே அவர் சொல்லியும் கூட, யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய தலைமையில் அந்தப் பிரச்சாரக் குழுவினர் அண்ணா சமாதிக்குப் போய், "நாங்கள் இன்று முதல் குடிப்பதில்லை" என்று வாக்குறுதி கூறுவதற்குப் போன நேரத்தில் கூட, சிலபேர் குடித்து விட்டுப் போனார்கள். சமுதாயம் அப்படி இருக்கிறது. இந்தப் பிரச்சினைபற்றி மாண்புமிகு முதலமைச்சருக்குச் சின்ன பிராயத்தில் ஏற்பட்ட ஒரு அனுபவம்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அவர் எழுதிய "நான் ஏன் பிறந்தேன்" என்ற கட்டுரையை நான் படித்தேன். நாடகத்திற்காக அவர் போனபோது, குறிப்பாக பாண்டிச்சேரிக்குப் போகின்றபோது, அவருக்கு வயிற்று வலி வந்த நேரத்தில் அவருடைய தாயார், வயிற்று வலிக்கு உடனடியாக வலியைப் போக்கும் நல்ல மருந்து கள்தான் என்று சொல்லி கள்ளைக் கொடுத்ததாக எழுதியிருக்கிறார். பிறகு வயிற்று வலி நின்று விட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். ஒருவன் தொடர்ந்து தவறைச் செய்யக் கூடாது. கள் சில நேரங்களில் மருந்தாக இருக்கிறது என்பதற்காக அதை உண்ண வேண்டியிருக்கிறது. நம்முடைய நாட்டிலே சில இடங்களில், குறிப்பாக கிராமப் புறங்களில், யாருக்காவது வயிற்று வலி வந்தால், கள் குடிக்கலாம் என்று சொல்லுகிறார்கள். மருந்துக்காகக் குடிப்பதில் தவறு இல்லை. ஆனால் தொடர்ந்து கள்ளைக் குடிப்பதுதான் தவறு. தொடர்ந்து குடிப்பது தவறு என்று சொல்கிறேன். குடிக்கின்ற சூழ்நிலைகள் கிராமங்களில் இருக்கின்றன. அதனால்தான் அவர்கள் குடிக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையைப் போக்க இன்றையதினம் இந்த அரசாங்கம் சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. இதைப் பார்க்கின்ற நேரத்தில், குடிப்பவர்களுக்கு குறைந்தபட்சம் 3 மாதம் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது. காய்ச்சுபவன் அதனைக் காய்ச்சி, அதை விற்று அதைக் குடித்தவன் இறந்துவிடுவானானால், அதிலே ஏதாவது நஞ்சு இருந்தால், அல்லது இருப்பதாக அறிந்தால், ஆயுள் தண்டனை வழங்கப்படும். இன்னும் அவர்கள் மாவட்டத்தை விட்டு இன்னொரு மாவட்டத்துக்கு நாடு கடத்தப்படலாம் என்கிற அளவுக்குச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி) [1979 மார்ச் 17

உள்ளபடியே எதிர்காலத்திலே இந்தச் சட்டத்தின் மூலம் மக்கள் **இந்த**
**அரசாங்கத்திற்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்கப் போகிறார்களோ என்று நான**
சந்தேகப்படுகின்றேன். உங்கள் நன்மைக்காகத்தான் இதை நான் சொல்
கிறேன். திருமதி இந்திரா காந்தி அவர்கள் அவசரச் சட்டம் கொண்டு
வந்தபோது, "நாட்டின் தன்மையைக் கருதித்தான் மிசா சட்டத்தைக்
கொண்டு வருகிறேன்" என்று சொன்னார்கள். நல்லவர்களை, அரசியல்
வாதிகளை நிச்சயமாக இந்தச் சட்டம் தொடாது என்று சொன்னார்கள்.
அது மட்டுமல்ல. பாராளுமன்றத்திலே வாக்குறுதி கூட தந்தார்கள்.
ஆனால் நடைமுறையில் என்ன நடந்தது என்பதை யாரும் மறந்திருக்க
மாட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள்
பேசும்போது, "நீங்கள் ஏன் அச்சப்படுகிறீர்கள், உங்களைப் பழி வாங்க
இந்தச் சட்டம் தானா இருக்கிறது?" என்று கேட்டார்கள். அவர் சொல்லிய
மாதிரி, பழி வாங்க வேண்டுமென்றால் அரசாங்கத்திற்கு எத்தனையோ
வழிகள் இருக்கின்றன. ஆனால் இது எளிய முறையிலே பழி வாங்கக்
கூடிய வழி. என்னுடைய காரை வெளியிலே விட்டு வந்திருக்கிறேன்.
அவசரமாகக் கதவை மூடாமல் அவைக்கு வந்து விடுகிறேன். அரசாங்கத்
திலிருந்து என்னைப் பழி வாங்க வேண்டுமென்று நினைத்தால், போலீஸ்
அதிகாரிகள் ஒரு பாட்டிலை என்னுடைய காரின் சீட்டுக்குக் கீழே வைத்து
விடுவார்கள். நான் இந்த அவையை விட்டு வீட்டிற்குச் செல்கிற நேரத்
தில், பச்சையப்பா கல்லூரிக்கு எதிரில் சோதனையிட்டு பாட்டிலை எடுப்
பார்கள். என்னைக் குற்றவாளியாக ஆக்கி சிறைச்சாலைக்கு அனுப்பு
வார்கள். சட்டத்தில் இருக்கிற ஓட்டைகளை நீங்கள் உணர்ந்து கொள்வதற்
காகத்தான் இதை நான் சொல்கிறேன். எதிர்க் கட்சியை பயம்
காட்ட, அச்சுறுத்த நீங்கள் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தலாம். அதற்
கான வாய்ப்புகள் இந்தச் சட்டத்தில் இருக்கின்றன. எனவேதான் இந்தச்
சட்டம் கொஞ்சம் சிந்திக்கப்பட வேண்டியது, பரிசீலனை செய்யப்பட
வேண்டியது என்பதை நான் சொல்கிறேன். எங்கே நம்மைப் பழி வாங்கி
விடுவார்களோ என்ற அச்சத்தால் நான் சொல்லவில்லை. நாட்டிலே நடை
பெறுகின்ற சம்பவங்களை யாரும் மறந்திருக்கமாட்டார்கள். மாண்புமிகு
உறுப்பினர்கள் கூட சொன்னார்கள். நாடாளுமன்ற உறுப்பினராக திரு.
மாறன் அவர்கள் இருக்கிறார்கள். அவருடைய வீட்டுக்கு இரவு 3
மணிக்குப் போலீஸ் அதிகாரிகள் சென்று வீட்டைத் தட்ட முடிகிறது என்
றால், என்ன காரணம்? அவசரச் சட்டம் கொண்டு வந்ததனால், வீட்டைச்
சோதனையிட முடிகிறது. இரவில் கதவைத் தட்ட முடிகிறது. தவிரவும்
திரு. சீதாபதி அவர்களுடைய வீட்டை இரவு 3 மணிக்குத் தட்டத்தான்



1979 மார்ச் 17] (திரு. ஆற்காடு நா. வீராசாமி)

இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது. இவர்கள் எல்லாம் தி.மு.க.க்
காரர்கள், அதனால்தான் தட்டுகிறார்கள் என்று வைத்துக் கொண்டாலும்
கூட, அதிகாரிகளுக்கு மட்டும் என்னவாம்? மத்திய அரசாங்க அதிகாரிகள்
தங்களுடைய கடமைகளை நிறைவேற்ற தமிழ் நாட்டிற்கு வருகிறார்கள்.
அதிகாரிகளுக்குள்ளே ஏதோ குழப்பம், தகராறு. மத்திய அரசாங்கத்
தினுடைய அதிகாரிகள் வந்துகொண்டிருந்த காரையே மடக்கி சோதனை
செய்வது என்ற முறையில் காத்திருந்து சோதனை செய்து அவர்களை
எக்மோர் கோர்ட்டில் ஆஜர் படுத்தினார்கள். இப்படிப்பட்ட மத்திய அரசாங்
கத்தினுடைய பெரிய அதிகாரிகளை எல்லாம் கூட இந்தச் சட்டத்தின் மூலம்
சாதாரண போலீஸ் அதிகாரிகளால் தண்டிக்க முடிகிறது என்றால், அதற்கு
என்ன காரணம்? அதற்குப் பின்னால் அந்த அதிகாரிகள் டில்லிக்குச்
சென்று பிரதமரையும், குடியரசுத் தலைவரையும் மற்றும் அமைச்சர்களையும்
சந்தித்து, "நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் புலால் உணவையே உண்ட
தில்லை, இப்படி நாங்கள் குடித்திருக்கிறோம் என்று சொல்லி அவமானப்
படுத்தி விட்டார்களே" என்று புகார் செய்த பிறகு, போலீஸ் துறையினரால்
பதிவு செய்யப்பட்ட வழக்கு அவர்களாலேயே திரும்ப வாபஸ் பெறப்படு
கிறது என்று சொன்னால், இதைவிட வெட்கப்பட வேண்டிய காரியம் என்ன
இருக்க முடியும்? பெரிய பெரிய ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையே இந்த மது
விலக்குத் திருத்தச் சட்டத்தின் மூலம் பழி வாங்க முடியும் என்றால்,
அரசியல் வாதிகள் பழி வாங்கப்பட மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தர
வாதம் இருக்கிறது? அதுமட்டுமல்ல. இந்தச் சட்டம் கொண்டு வரப்

(முற்பகல் 11-00)

படுவதன் நோக்கத்தையேகூட நான் சந்தேகிக்கிறேன். ஏதோ எதிர்க்
கட்சியில் இருப்பவர்களை மிரட்டுவதற்காக மட்டுமல்ல, ஆளும் கட்சியில்
இருப்பவர்களிலேயே சிலரை மிரட்டவும், அதிகாரிகளாக இருக்கிறவர்களை
மிரட்டவும் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று நான் சந்தேகிக்
கிறேன். இந்த அரசாங்கம் சொல்வதை எந்த அதிகாரியாவது கேட்க
வில்லையென்றால், அல்லது செய்ய மறுத்தால், நிச்சயமாக அப்படிப்பட்ட
அதிகாரிமீது இந்தச் சட்டம் பாயும் என்று மறைமுகமாகச் சொல்லுவதைப்
போல் இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது. ஏனென்றால் இந்தச்
சட்டத்தின் அடிப்படையில் விதிக்கப்படும் குறைந்தபட்ச தண்டனை 3 மாத
சிறைவாசம். அதிகபட்சமாக விதிக்கப்பட இருக்கின்ற தண்டனை ஆயுள்
தண்டனை அல்லது நாடு கடத்தல் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தவரையில், ஒருமுறை இந்தச் சட்டத்தின்கீழ் குற்றம் செய்துவிட்டால், அவருக்கு முதல் குற்றவாளியாக இருந்தால், 6 மாதம் சிறைத்தண்டனை அதோடு 2,000 ரூபாய் வரை அபராதம் என்று சொல்லிவிட்ட பிறகு, அத்தகைய அரசு ஊழியர் சிறைச்சாலைக்குப் போய் தண்டனை அனுபவித்துவிட்டு வந்தால், மறுபடியும் அவருக்கு எவ்வாறு உத்தியோகம் கொடுக்கப்படும் என்பது எனக்குத் தெரியவில்லை. ஒரு அரசு ஊழியர், கிரிமினல் குற்றம் செய்துவிட்டு, அதற்காகச் சிறைத் தண்டனை பெற்ற பிறகு, மீண்டும் அவர் சர்வீசுக்கு வர முடியாது. இந்த நிலையில் அவர் இரண்டாவது முறையாக இந்தக் குற்றம் செய்ய எங்கே வாய்ப்பிருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, on a point of order. At the appropriate time I will elaborately explain this.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அதை விளக்குவார்கள் என்பது எனக்குத் தெரியும். காரணம் அவர் சட்ட மன்றப் பேரவையில் விளக்கியிருக்கிறார். சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பேசிய பேச்சை முழுவதுமாகப் பார்த்தேன். சட்ட அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், அவர் மீது எங்களுக்கு முழுமையான நம்பிக்கை இருக்கிறது. அது வேறு விவகாரம். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில், இந்தச் சட்டத்தின் மீது நம்பிக்கையில்லை என்பதைத்தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டத்தை வேறு யாராவது கொண்டு வந்திருந்தாலும், பரவா யில்லை. தமிழ் நாட்டில் உயர் நீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்த மாண்புமிகு அமைச்சர் திரு. நாராயணசுவாமி முதலியார் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்களென்பதைப் பார்க்கும்போதுதான், எங்களால் வேதனைப் படாமல் இருக்க முடியவில்லை.

(மாற்றுத் தலைவர் திரு. ஈ. எஸ். வெங்கடேசன் தலைமை)

இந்தச் சமுதாயத்தில் மது அருந்துவது மட்டும்தான் குற்றமா? எத்தனை பேர் விபசார வழக்கில் சம்பந்தப்படுகிறார்கள், எத்தனை பேர் இதைவிடக் கொடுமையான பல்வேறு வழக்குகளில் சம்பந்தப்படுகிறார்கள்? அவர்கள் மீதெல்லாம் இந்த அளவுக்குக் கடுமையான தண்டனைகள்தான் விதிக்கப்படுகின்றனவா? அந்தக் குற்றங்களுக்கெல்லாம் ஏன் சட்டத்திருத்



தங்கள் கொண்டுவரவில்லை? இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த நாட்டில் கொலை செய்தவன்கூட ஜாமீனில் வந்துவிட முடியும். ஆனால் மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டால், அவன் ஜாமீனில் வர முடியாது, சிறைச்சாலையில்தான் இருக்க வேண்டுமென்று சட்டம் கொண்டுவந்திருக்கிறீர்கள். இது நியாயம்தானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நாட்டில் மது இருக்கக்கூடாது என்று இந்த அரசாங்கம் விரும்புமானால், கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுகிறவர்களுக்கும், விற்பவர் களுக்கும் தூக்குத் தண்டனை கொண்டுவந்தாலும், வேண்டாம் என்று சொல்லவில்லை. சமுதாயத்தில் இந்தத் தவறு எங்கே ஆரம்பமாகிறதோ அவர்களுக்குச் சலுகை காட்டுகிறீர்கள். அவர்களுக்கு இந்தச் சட்டத்திலே அதிகபட்ச தண்டனை கொடுக்கவில்லை. கள்ளச் சாராயம் காய்ச்சுகிற வர்கள் யார் என்பது நம் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். நானும் பல ஆண்டுகள் ஆளும் கட்சியில் இருந்திருக்கிறேன் என்ற அடிப்படையில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்கள் அல்லது விற்பவர்கள் என்பவர்கள் எந்த அரசியல் கட்சிக்காரர்களுமல்ல. ஒரு ஆட்சி என்று அமைந்துவிட்டால், அப்படிப்பட்டவர்கள் அந்தக் கட்சிக்குச் சொந்தக்காரர்கள் ஆகிவிடுகிறார்கள். இதைப் பல ஆண்டு களாகப் பார்த்து வருகிறோம். மிகச் சிறந்த தியாகம் செய்தவன் வீட்டில் கூட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடி பறக்காது, ஆனால் கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவன் வீட்டில் புத்தம் புதிய கொடி எப்போதும் பறந்து கொண்டிருக்கும். அப்போதுதான் அங்கே இருக்கிற அதிகாரிகள் 'ஓகோ இவர் ஆளுங்கட்சிக்குச் சொந்தக்காரர், இவர் பக்கம் போகக் கூடாது' என்று பயப்படுவார்கள். தியாகம் செய்த கட்சித் தொண்டன்கூட அமைச்சர் அவர்களோடு சேர்ந்து படம் எடுத்துக் கொண்டிருக்க மாட்டான். இவன் எப்படியோ கூட்டத்தில் ஒரு மாலையைப் போட்டுவிட்டு காமிரா மேனை முன்னாலேயே வரவழைத்து, சரியான போஸ் கொடுத்து நல்ல முறையில் படம் எடுத்து வீட்டின் முன்னாலே மாட்டி வைத்திருப்பான். நான் இதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் மட்டுமிருப்பதாகச் சொல்லவில்லை. காமராஜர் காலத்திலும் இருந்தது. திரு. பக்தவத்சலம் அவர்களோடு நல்ல போஸ் கொடுத்து படம் எடுத்துக் கொண்ட கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களைப்பற்றிக்கூட எனக்குத் தெரியும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதும் இருந்தார்கள். அதுதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் இருக்கிறது. ஆனால் இதில் வேதனைக்குரிய விஷயம் என்னவென்றால், காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில்

(திரு. ஆற்காடு நா. வீராசாமி) [1979 மார்ச் 17

இருந்ததைவிட, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது இருந்ததை விட, அண்ணா தி.மு.க. ஆட்சியில் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களுக்கும், விற்பவர்களுக்கும் அதிகமாக இடம் கொடுக்கப்படுகிறதோ என்ற சந்தேகம் நாட்டு மக்கள் மத்தியில் அதிகமாக இருக்கிறது. இதை நான் சொல்லும் போது ஆதாரத்தோடு சொல்ல விரும்புகிறேன்.

ஆதாரத்திற்கு உங்களை வேறு எங்கேயும் அழைத்துச் செல்ல விரும்ப வில்லை. மாலை 6 மணிக்கு மேல், இப்போது நான் அணிந்து கொண்டிருக் கிற துண்டைப் போட்டுக்கொள்ளாமல் போனால் அந்தக் காட்சியைக் காண முடியும். சாதாரணமாக இருட்டிய பிறகு, ஐ.ஜி. அலுவலகத்திற்குப் பின்னாலே, இந்த நாட்டில் குற்றம் நடக்கக் கூடாது என்று சட்டம் கொண்டுவந்து அதைப் பராமரிக்கிற பொறுப்பை எந்த இலாக்காவிடம் கொடுத்திருக்கிறோமோ, அந்த இலாக்காவின் தலைவரான ஐ.ஜி. அவர் களுடைய அலுவலகத்திற்குப் பின்பக்கத்திலிருக்கிற சிறிய ரோட்டில் நடந்து போனால் '100 மில்லி 2 ரூபாய் இங்கே இருக்கிறது. இப்போதே வாருங்கள், வாய்ப்பை நழுவ விட்டுவிடாதீர்கள்' என்று கள்ளச் சாராய வியாபாரிகள் கையைப் பிடித்து இழுக்கிற நிலையை அங்கே பார்க்கலாம்.

இவ்வளவு பெரிய மிகக் கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்த பிறகும், நீங்கள் இவ்வளவு வீரம் பேசிக் கொண்டிருக்கிற நிலையிலும், பெரிய புரட்சியைக் கொண்டு வந்துவிட்டதாகச் சொல்லிக்கொண்டிருக்கிற நிலை யிலும், நாட்டின் நிலைமை என்ன என்பதை தயவு செய்து எண்ணிப் பாருங்கள். கடந்தவாரம் 'தினமணி' பத்திரிகையில் வந்த செய்தியை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தினமணி பத்திரிகையில் எவ்வளவோ செய்திகள் வருகின்றன. அதில் ஒரு செய்தி ரூ. 1½ லட்சம் பெறுமான முள்ள சாராயம் பிடிபட்டது என்று வந்தது. போலீஸ் படை அதைப் பிடித்திருக்கிறது. திருவொற்றியூர் பக்கத்திலே ஒரு பெரிய டாங்கியில் கொண்டுபோகப்பட்ட இந்தச் சாராயம் பிடிபட்டது என்று செய்தி போடு கிறார்கள். இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற மதுவிலக்குச் சட்டத் தின்மீது மக்களுக்கு பயம் இருக்குமானால், எவ்வாறு டாங்கிலே சாராயத் தைக் கொண்டு செல்ல தைரியம் வரும்? சாராயம் கொண்டு போகக்கூடிய டாங்க் தயாரிக்கக்கூடிய அளவுக்கு நாட்டிலே முன்னேற்றம் ஏற்பட்டிருக் கிறது என்றுதானே இதற்குப் பொருள்? இந்த நிலைமை நாட்டிலே ஏற்பட்ட தற்கு என்ன காரணம்? ஆட்சியாளர்கள் இதன் அடிப்படையை உணர வேண்டும். அதைப் போலவே தினமணியில் வேறு ஒரு செய்தியும் காவல் துறையாலே அளிக்கப்படுகிறது. வாராவாரம் காட்டன் பெட்டிங் நிலவரம்



1979 மார்ச் 17] (திரு. ஆற்காடு நா. வீராசாமி)

வருவதைப்போல், 'இந்த வாரத்தில் மதுவிலக்குக் குற்றங்கள்' என்ற தலைப்பிட்டு இந்த வாரத்தில் இத்தனை மதுவிலக்குச் சோதனைகள் செய்யப்பட்டன என்ற செய்தியை வெளியிடுகிறார்கள். அதாவது கடந்த ஒரு வாரத்தில் 848 பேர் கைது செய்யப்பட்டார்கள், 852 லிட்டர் சாராயம் பிடிக்கப்பட்டிருக்கிறது. 199 பாட்டில் ஜின்ஜெர் பெரில் பிடிபட்டிருக்கிறது. 15 லிட்டர் கலர் சாராயம் பிடிபட்டது. இது வாரத்திற்கான புரோகிராம். நாட்டிலே சட்டத்தை இந்த அளவுக்குக் கடுமையாக ஆக்கிய பிறகு, ஒரு வார காலத்தில் மட்டும் 848 பேர் கைது செய்யப்பட்டு, 852 லிட்டர் சாராயம் பிடிபடுகிறது என்று பத்திரிகையில் செய்தி வருகிறது என்றால், ஜனங்கள் எந்த அளவுக்கு இந்தச் சட்டத்தை மதிக்கிறார்கள் என்பதை நம்மாலே புரிந்துகொள்ள முடிகிறது. இந்தச் சட்டத்தைக் கண்டு மக்கள் அச்சப்படுகிறார்கள் என்று சொல்ல முடியுமா? இதற்கு என்ன அடிப் படைக் காரணம் என்றால், கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுகிறவர்களும் விற்பவர்களும் ஆளுங் கட்சிக்குப் பின்னாலே இருக்கிறார்கள் என்பது மட்டு மல்ல, ஆளுங் கட்சியில் முன்னணியில் இருப்பவர்களே இந்தத் தொழிலுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறார்கள். வீராசாமி இப்படிப் பேசிவிட்டானே என்று எதிர்க்க வேண்டுமென்று ஆளும் தரப்பிலிருந்து இதை எதிர்த்தால், நான் வரவேற்கிறேன். ஆனால் ஆளுங் கட்சியைச் சார்ந்தவர்கள் தயவு செய்து தங்கள் மனச்சாட்சியைத் தொட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது டிஸ்மிஸ் செய்யப்பட்ட ஒரு கான்ஸ்டபிள் இன்றைய தினம் இரண்டு சினிமா படங்கள் இந்த அண்ணா தி.மு.க. ஆட்சியில் எடுக்க முடிகிறது, அதுவும் இரண்டு கலர் படங்களாக எடுக்க முடிகிறது என்றால் அவர் என்ன கள்ள நோட்டு அடிக்கிறாரா அல்லது அவர் என்ன பெரிய தொழில் அதிபரா? எந்தத் தொழிலைச் செய்து அவராலே இரண்டு கலர் சினிமாப்படங்கள் எடுக்க முடிகிறது? அதற்கு அடிப்படை கள்ளச் சாராயம். ஆளுங்கட்சியில் அவர் ஒரு மாவீரனாக இருந்தால், எதையும் செய்ய முடியும் என்கிற நிலை, 'எந்த அதிகாரியும் தன்னைக் கேட்க மாட்டார், அப்படிக் கேட்டாலும் கேட்கிற அதிகாரிக்குத் தண்டனை கிடைக்குமே தவிர, நமக்கு எந்த ஆபத்தும் வராது' என்ற மனப்பான்மை நாட்டிலே வளர்ந்துவிட்டதன் காரணமாகத்தான் நாட்டிலே மதுவிலக்குக் குற்றங்கள் பெருமளவில் அதிகரிக்க ஆரம்பித்துவிட்டன. அதை விட்டுவிட்டு, இப்படி ஒரு சட்டம் கொண்டு வந்து, 'சமுதாயமே திருந்திவிடு' என்று போதித்தால், அந்தப் போதனையை யார் ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள்? அதைத்தான் நான் திரும்பத் திரும்ப இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி) [1979 மார்ச் 17

அது மட்டுமல்ல. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்கூட சட்டமன்றப் பேரவையிலே ஒரு கருத்தைச் சொன்னார். சதாசிவம் கமிஷன் அறிக்கையின்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டார். அந்தச் சதாசிவம் குழு என்ன அறிக்கையைக் கொடுத்தது என்பதுபற்றி முழுமையாக நான் இங்கே சொல்ல முன்வரவில்லை என்றாலும், அதில் சொல்லப்பட்ட ஒரு கருத்தை மட்டும் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

1975-76ஆம் ஆண்டில் மொத்தம் 4,46,546 பேர் மதுவிலக்குக் குற்றங்களில் ஈடுபட்டிருந்தார்கள். இது சதாசிவம் கமிஷன் அறிக்கையிலே சொல்லப்பட்ட புள்ளிவிவரம். அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்ட அறிக்கையிலே இது இருக்கிறது. இவர்களில் அபராதம் விதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர், தண்டிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் என்ற தகவலையும் கொடுத்திருக்கிறார்கள். தண்டிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3,79,844. அபராதம் விதிக்கப்பட்டவர்கள் 2,25,641 பேர். சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டவர்கள் எத்தனை பேர் என்றால் 50,703 பேர்தான். இதைத்தான் நாம் பார்க்க வேண்டுமென்று சொல்லுகிறேன். சட்ட அமைச்சர் அவர்களே சிறைச்சாலைக்கும் அமைச்சராக இருக்கிற காரணத்தால், ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், 4,46,000 பேர்களுக்கும் அதிகமாக மதுவிலக்குக் குற்றம் செய்திருந்தாலும், சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை 50,703 தான். இந்தச் சட்டத்தினை மேலும் கடுமையாக்கி, எல்லோருக்கும் ஜெயில் தண்டனை என்று சொன்னால், இனி ஏற்படக்கூடிய விளைவுகளை தயவு செய்து

(முற்பகல் 11-10)

எண்ணிப் பார்க்க வேண்டும். அரசு கொண்டு வந்திருக்கின்ற இந்தப் புதிய சட்டப்படி இந்த 4,46,546 பேரும் சிறைச்சாலைக்குப் போவார்கள். வேண்டுமானால் ஒன்று சொல்லுங்கள். நாங்கள் வருகின்ற வருமானம் முழுவதையும் வைத்து இனி திட்டங்கள் போடுவதே இல்லை, தாலுக்காவுக்கு ஒரு சிறைச் சாலை வைக்கப்போகிறோம் என்று சொல்லிவிடுவார்களேயானால், பரவாயில்லை, ஏதோ அங்கேயாவது போய் மூன்று வேளை சாப்பிட்டுக் கொண்டிருக்கட்டும் என்று விட்டுவிடலாம். ஆனால் திரும்பத் திரும்ப, நல்ல திட்டங்களைப் போடாமல், இருக்கின்ற சிறைகளிலே மாடுகளை அடைப்பதைப் போல ஒரு அறைக்கு 8 பேர்கள், 10 பேர்கள் என்று வைத்துக்கொள்கிறார்கள். ஏற்கெனவே சிறைச்சாலைக்குப் போகும் கைதிகளுக்கு நம்மாலே சோறு கொடுக்க முடியாமல் இருக்கும் சூழ்நிலையிலே சட்டத்தை மட்டும் திருத்துவதால் எந்தவிதமான பலனும் இல்லை. இவ்வளவு கடுமையான சட்டத்தை அரசு கொண்டுவந்த பிறகுதான், தமிழ்நாட்டினுடைய தலைநகரமாக இருக்கக் கூடிய சென்னை நகரத்தில், ஆளுங்கட்சித் தரப்பினராலே, அல்லது ஆளுங்கட்சிக்காரர்கள் மறுப்பார்களானால் சமுதாயத்தின் ஒரு பகுதியினராலே, எப்படிப்பட்ட மதுவிலக்குக் குற்றங்கள், தவறுகள் நடக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டிச் சொல்கிறேன்.



1979 மார்ச் 17] (திரு. ஆற்காடு நா. வீராசாமி)

ஓட்டேரியில் கலவரம் நடந்தது. மகாபாரதத்தைப்பற்றிக்கூட நாம் படித்துத் தெரிவித்திருக்கிறோம். பார்க்கவில்லை ஆனால் அதையும் மிஞ்சும் வகையில் சென்னை நகரிலே லட்சக்கணக்கானவர்கள் வாழும் பகுதியிலே, ஓட்டேரியிலே, ஆலைகளுக்குச் செல்லக்கூடிய தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள் போன்றவர்கள் வாழக்கூடிய பகுதியிலே, நடுத்தர மக்கள் வாழக்கூடிய பகுதியிலே, ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒருவர் 100 மில்லி சாராயம் 90 காசுக்கு விற்பேன் என்றும், இன்னொருவர் ' இல்லை, இல்லை 1 ரூபாய்க்குத் தான் விற்க வேண்டும் ' என்றும், இவர் ' இல்லை 90 காசுக்குத்தான் விற்பேன் ' என்றும் இருவருக்கும் போட்டி வந்து கலவரம் நடந்து, படையெடுப்பு போல கலவரம் ஏற்பட்டு, அந்தப் பகுதியிலே நான்கு நாட்களாக மக்கள் வெளியே வர முடியாத நிலையை போலீஸ் வேடிக்கை பார்த்தது. ஆனால் அதற்குப் பின்னால் எங்கிருந்து உத்தரவு வந்ததோ, எனக்குத் தெரியாது. ஒரு 10 வேன் போலீஸ் போகிறது. அவர்கள் போய் அடக்குகிறார்கள். அதற்குப் பிறகு போலீஸ் அந்த இடத்தைக் கைப்பற்றுகிறது, அமைதி ஏற்படுகிறது. இந்த மாதிரி நிகழ்ச்சிகள் நிகழ்ந்திருக்கின்றன. இந்தச் சட்டம் இருக்கிறபோதே மக்களுக்கு இவ்வளவு துணிச்சல் வருகிறது என்றால், அதற்குக் காரணமாக இருக்கிற ஆளுங் கட்சிக்காரர்கள் தங்களுடைய ஆட்களை முதல் முதல் திருத்த வேண்டும். அதைப் போலவே தியாகராய நகர் பகுதியிலே கலவரம் நடந்து, இங்கேயும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தோம், முன்னவர் அவர்களும் அறிக்கை கொடுத்தார்கள். அதில் சம்பந்தப்பட்ட ஒருவர் அ.தி.மு.க. விலே இருந்தார். இப்போது தி.மு.க. வுக்கு வந்து விட்டார். அவர் அ.தி.மு.க.வா அல்லது தி.மு.க. வா என்பதல்ல பிரச்சினை. இன்றையதினம் சென்னை மாநகரிலே இப்படிப்பட்ட செயல்களைச் செய்யும்போது, செயல்கள் நடக்கும்போது, அதற்குக் காரணமாக இருக்கிற குற்றங்களைச் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்றால், இல்லை. அரசு இந்த அவசரச் சட்டம் கொண்டு வந்த மறுநாளே, இந்தக் குற்றத்தைத் தடுக்க வேண்டும்

என்று போலீஸ் நடவடிக்கை எடுத்தபோது, வில்லிவாக்கம் போலீஸ் ஸ்டேஷன் தாக்கப்பட்டது. போலீஸ் அதிகாரிகள் தாக்கப்பட்டார்கள், ஆனால், தாக்கியவர்கள் யார் யார் என்று கண்டுபிடித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால், இல்லை. அதுபோல வட ஆற்காடு மாவட்டத்திலே ஆம்பூர் போலீஸ் ஸ்டேஷனில் இதே நிகழ்ச்சி நடைபெறு கிறது. ஆளுங்கட்சியினரின் உதவியோடு குண்டர்கள் தாக்கினார்கள். என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? மதுவிலக்கைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று சட்டம் கொண்டு வருகிறார்கள், 5 அல்லது 10 ஆண்டுகள் தண்டனை என்று சொல்கிறார்கள், ஆயுள் தண்டனை என்று கூட சொல்கிறார்கள். சட்டத்திலே இப்படியெல்லாம் சொல்லிவிட்டு, இப்படிக் கலவரங்கள் செய் பவர்கள் கைது கூட செய்யப்பட வில்லை என்றால், இந்தச் சட்டத்தை இந்த சமுதாயம் மதிக்குமா என்று எண்ணிப் பாருங்கள். இன்றையதினம், மதுவிலக்குத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எவ்வளவு செயல் முறைகள் வைத்திருக்கிறோம், பெர்மிட்கள் வழங்குவதிலே நாங்கள் எவ் வளவு கண்டிப்பாக இருக்கிறோம் தெரியுமா' என்றெல்லாம் கேட்கிறார்கள். அதிலே குறிப்பாக ஒரு டாக்டர்கள் பேனல் போட்டு, டாக்டர்கள் சர்ட்டிஃபை செய்தால் தான், அவர்களுக்கு உண்மையிலேயே என்ன நோய் என்று கண்டு பிடித்தால்தான், இந்த மது பெர்மிட் வழங்குவோம் என்றெல்லாம் சொல் கிறார்கள். மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ—மது பெர்மிட் வேண்டும் என்று விண்ணப்பித்தவர்கள், 10 நாட்கள் அல்லது 15 நாட்களுக்கு ஒரு நாள் என்று 'மெடிக்கல்-போர்ட்'க்குப் போக வேண்டும். அங்கிருக்கும் டாக்டர்கள் அவர்களுடைய உடலைப் பரிசோதித்து சிபாரிசு செய்வார்கள். இது அரசு சொல்வது. ஆனால் நடைமுறையில் பார்த்தால், ஒரு நாளைக்கு 100, 150 பேர்கள் வருகிறார்கள். அங்கு மூன்று டாக்டர்கள் இருக்கிறார்கள். அந்த மூன்று டாக்டர்களும் என்ன செய்வார்கள்? அவர்கள் காலையிலே 11 மணி வரை யிலே பார்க்க வேண்டிய நோயாளிகளைப் பார்த்துவிட்டு, அதற்கும் பிறகு பெர்மிட் வேண்டும் என்று விண்ணப்பம் போடுபவர்களுடைய உடலைப் பரிசோதனை செய்யவேண்டுமென்றால், 100, 150 பேர்களைப் பார்க்கின்ற அந்த டாக்டர்கள் 'பெயர் என்ன, உங்களுக்கு என்ன நோய், எவ்வளவு நாட்களாக என்ன செய்கிறது?' என்று கேட்க மட்டுந்தான் முடிகிறது. ஏதாவது சோதனைகள் செய்து, எக்ஸ்ரே எடுத்து ஸ்கிரீன் பண்ணிப் பார்த்து நோயைக் கண்டுபிடித்தோம். மது பெர்மிட் தேவை என்று கண்டு தான் சான்றிதழ்கள் கொடுக்கிறார்களா? டாக்டர்களுக்குத் தெரியும்



இதெல்லாம் வெற்றி பெறப்போவதில்லை என்பது. 'எதற்கு இந்த வீண் வம்பு, அரசாங்கம் ஏதோ ஒரு சட்டம் போட்டிருக்கிறது, முடிந்ததைச் செய்வோம்' என்று செய்கிறார்கள். டாக்டர்களை நான் பாராட்டுகிறேன். அவர்கள் தக்க வாறு கடமையைச் செய்ய வேண்டும் என்றால், ஒரு நாளைக்கு 5 பேர்களைத் தான் பார்க்க வேண்டும் என்று வைக்க வேண்டும். 'ப்ளட் டெஸ்ட்', கொலஸ்ட்ரால், போன்று பல்வேறு விஷயங்களை அவர்கள் கண்டறிய வேண்டும். இவைகளையெல்லாம் காணவேண்டும் என்றால், ஒரு மெடிக்கல் போர்ட் ஒரு நாளில் 5 பேர்களுக்கு மேல் பரிசோதிக்கக் கூடாது என்ற நிலை வர வேண்டும். எனக்கு வேண்டிய ஒரு நண்பர் இந்த மெடிக்கல் போர்டுக்கு போனார். அவருடன் சென்றால் என்ன நடக்கின்றது என்றாவது தெரிந்து கொள்ளலாம் என்பதற்காக நானும் போனேன். அங்கே இப்படித்தான் நடக்கிறது. அப்படியானால் எதற்காக இந்த மெடிக்கல் போர்ட் வைத்திருக் கிறார்கள்? ஒன்று செய்யட்டும். இந்த அரசாங்கம் யாரையும் நம்ப மறுக் கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்ற அமைச்சர்களை நம்புவதில்லை; அமைச்சர்கள் எம். எல். ஏ. க்களை நம்புவதில்லை; எம். எல். ஏ. க்கள் அமைப்பாளர்களை நம்புவதில்லை. ஆனால் அதிகாரிகளை நம்புகிறார்கள். அமைச்சர் நினைத்தால் நடக்காது. ஆனால் இந்த மெடிக்கல் போர்டில் டாக்டர்கள் நினைத்தால், அவர்களுக்கு வேண்டியவர்களுக்குச் சிபார்சு செய்ய வேண்டும் என்று நினைத்தால், சம்பந்தப்பட்ட டாக்டர் களிடம் சொல்லி சிபார்சு செய்ய வைக்கிறார்கள். ஆக இப்படிப்பட்ட ஒரு தவறான கொள்கையை அரசு பின்பற்றுகிறது. அப்படிப்பட்ட தவறான கொள்கையைப் பின்பற்றக்கூடாது என்பது என்னுடைய ஆசை. அதிகாரிகள் எல்லாம் யோக்கியமானவர்கள் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருப்பதால் தான், இத்தகைய தவறுகளைச் செய்வதற்கு இந்த அரசாங்கம் உடந்தையாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் சுமத்துகிறேன். இந்த அரசாங்கத் திற்கு ஒரு ஆளுநர் வந்திருக்கிறார்—மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இதிலே ரொம்ப அக்கறையோடு இருக்கிறார். "மதுவிலக்குக் குற்றங்கள் செய்கின்ற வர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்குப் பெர்மிட்கள் கொடுக்கக்கூடாது, பெர்மிட் வைத்திருந்தால் அவர்களுக்கு அரசாங்கப் பதவி கொடுக்கக் கூடாது", என்று கண்டிப்பாகச் சொல்வதை இந்த அரசாங்கம் நடை

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை.)

முறையிலே பின்பற்றி வருகிறதா என்று பார்க்க வேண்டும். அதிகாரிகளிலே, அமைச்சர்களிலே யார் மது பெர்மிட் வைத்திருந்தாலும், அவர்கள் அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. நான்

பாராட்டுகிறேன். சரண்டர் செய்யுங்கள் என்று அறிவிக்கிறார்கள், நான் அதை வரவேற்கிறேன். ஆனால் அதே சமயத்தில் புதிதாக அரசு மது பெர்மிட் கொடுக்கிறது. அது என்ன நியாயம் என்று கேட்கிறேன். தனிப்பட்ட நபர் என்ற முறையில் அல்ல. தனிப்பட்ட நபர் என்று நீங்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது. அரசாங்கம் நியமிக்கின்ற யாராக இருந்தாலும், அவர்கள் மது பெர்மிட் வைத்துக்கொள்ளக் கூடாது என்று இருக்கிறது. ஆனால் நமது ஆஸ்தான கவிஞராக இருக்கிறாரே அவர் மது பெர்மிட் புதுப்பித்துக் கேட்டார். வழிகாட்டும் வகையிலே 'permission is rejected' என்றல்லவா அவருக்குச் சொல்லியிருக்க வேண்டும்? அதற்குப் பதிலாக renew செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு ஆதாரம். இப்படிப்பட்ட முறை இருக்கக்கூடாது. ஏதாவது ஒரு கொள்கையின் அடிப்படையிலே இந்த அரசாங்கம் நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இவைகளையெல்லாம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, மதுவிலக்குச் சட்டத்தை மீறுபவர்களைச் சிறைச் சாலைக்கு அனுப்புவதற்காக, இன்றையதினம் நாம் சட்டம் கொண்டு வருகிறோம். எனக்கு ஏற்பட்ட அனுபவம் எல்லாம் சிறைச்சாலைக்குப் போகிறவர்கள் எல்லாம் சிறைச்சாலையிலே குடிக்கிறார்கள். அதை யாரும் மறுக்க முடியாது. நான் மிசாவிலே இருந்தபோது, நாங்கள் இருந்த பகுதியின் மற்றொரு பகுதியில் 'காஃபிபோசா' வில் கைது செய்யப்பட்டவர்கள் இருந்தார்கள். அவர்கள் இன்னொரு பகுதிக்கு மாற்றப்பட்டு, எங்களை அந்தப் பகுதிக்கு அனுப்பினார்கள். அந்தப் பகுதிக்கு நாங்கள் போன அன்றே, சிறை சூப்பிரண்டெண்ட் எல்லாவற்றையும் சுற்றிப்பார்த்துக் கொண்டே வந்தார். அந்தக் கட்டிடத்திற்கு மேலே வெளிநாட்டு மது அருந்திய காலி பாட்டில்கள் குவிக்கப்பட்டிருந்தன. நாம் சட்டத்தைக்

(முற்பகல் 11-20)

கடுமையாக்குகிறோம். சட்டத்தின் கண்ணில் மிளகாயைத் தூவிவிட்டு சமுதாய விரோதிகள், சிறைக்குள்ளேயிருந்தாலும், தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இவ்வளவு கடுமையான சட்டத்தைக் கொண்டுவருகிற நேரத்தில், சமுதாயத்திலே குற்றவாளிகள் குற்றம் செய்வதைத் தடுக்கவேண்டும் என்பதற்கு மாறாக, பழி வாங்க வேண்டுமென்ற உணர்வோடு கொண்டு வந்திருக்கிற இச்சட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



மது குடிப்பவர்களின் மீது கை வைப்பதைவிட மது காய்ச்சுபவர்களை, மதுவை விற்பவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு வேண்டுமானால் ஆயுள் தண்டனை கொடுங்கள். அதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே ஆதரிக்கிறோம். காய்ச்சுபவனையும், விற்பவனையும் விட்டுவிட்டு, "ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி" என்பதைப் போல, வேலை கிடைக்கவில்லையே என்றும், வறுமையைத் தாங்க முடியவில்லை என்றும் வேறு வழியில்லாமல், ஏதாவது மருந்து கிடைக்குமா என்று பார்த்து, இந்த மருந்துதான் கிடைத்தது என்று அதை வாங்கிக் குடித்து விட்டுப் போகிறானே, அவனுக்கு 3 மாதம், 6 மாதம், ஓராண்டுக் காலம் சிறை என்று தண்டனை விதித்தால், சமுதாயத்தைத் திருத்துவதற்குப் பதிலாக மேலும் குற்றவாளிகளை அதிகப்படுத்துவதற்குத்தான் இந்தச் சட்டம் உதவும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இந்தச் சட்டத்தை மனப்பூர்வமாக ஆதரித்தாலும், இது போன்ற குறைபாடுகளையெல்லாம் நீக்கி சமுதாயத்தைத் திருத்தக் கூடிய ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டு வாருங்கள், அதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே ஆதரிக்கிறோம் என்று கூறி, பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. ஆ. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தை மேலும் திருத்துவதற்காக இங்கு கொண்டு வரப்பட்டுள்ள சட்டமுன்வடிவைப்பற்றி ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க முன் வருகிறேன். சமுதாயத்தில் இருக்கும் கொடிய பழக்கம் என்று சொல்லக்கூடிய மதுப் பழக்கத்தை எப்படியாவது களைந்தெறிய வேண்டும் என்ற கட்டாயத்தின் அடிப்படையிலே அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். இந்த மசோதாவினுடைய நோக்கத்தைப்பற்றி அளித்திருக்கிற விளக்கத்திலே கடைசியில், "கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், போதையூட்டும் சாராயம் விற்பவர்கள் ஆகியவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு பெருகி வருகிறது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வந்தாலும், அதை ஒழித்துவிட முடியாது என்று நம்பினாலும், அதை எப்படியாவது ஒழித்தாக வேண்டும் என்று அரசு மீண்டும் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதைக் குறித்துப் பாராட்டுகிறேன். இருந்தாலும் அரசுக்குப் பெரும் இலாபம் என்று சொல்ல முடியாது. ஆண்டு ஒன்றுக்கு 120 கோடி ரூபாய் இதனால் அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அதிலே 80 கோடி ரூபாய் வருவாயில் இழப்பாக இருந்தாலும், 40 கோடி ரூபாய் இதை அமுல்படுத்து

வதற்காகச் செலவு செய்ய வேண்டிய அளவுக்குத்தான் இன்றைக்கு அரசு நஷ்டத்திலே இயங்கிக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன். இருந்தாலும் சமுதாயத்தில் உள்ள இந்தத் தீமையை அறவே ஒழிக்க வேண்டும் என்று கருதி, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதற காக, நான் பாராட்டுகிறேன். ஆனாலும் இந்தச் சட்டத்தைத் துருவித் துருவிப் பார்க்கிறபோது, நீதிமன்றத்திற்கு இருக்கிற ஒரு சில அதிகாரங் களைக் கூட அரசு எடுத்துக்கொண்டுள்ளது என்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. குறைந்த தண்டனையைப்பற்றிக் கூட அரசு இந்தச் சட்டத்திலே குறிப்பிட்டிருக்கிறது. இந்தியன் பீனல் கோட். சட்டத்திலே கூட அதிகபட்சமான தண்டனை என்னவென்றுதான் குறிப் பிட்டிருக்கிறார்கள்; குறைந்தபட்ச தண்டனையைப்பற்றி குறிப் பிடவில்லை. ஆனால் இந்தச் சட்டத்திலே குறைந்தபட்ச தண்டனை 3 மாதம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அதிகாரத்தை அதன் தொடர்புடைய நீதிமன்றங்களுக்கே கொடுத்திருக்க வேண்டும். அப்போது தான் இது முறையான சட்டமாக இருக்கும். அப்படிச் செய்யாமல், குறைந்தபட்ச தண்டனையை வழங்கும் நீதிமன்றத்தின் அதிகாரத்தை அரசு எடுத்துக்கொண்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது என்னுடைய கருத்து மட்டுமல்ல. 1960ஆம் ஆண்டில், கிரிமினல் லா ஜர்னலில், "கான்சாடேசிங்ல் கேஸ்" என்ற வழக்கில் நீதிபதி தீர்ப்புக் கூறி யிருக்கிறார். அதிலே "what should be an adequate punishment within the maximum provided for an offence is primarily for the convicting Court to decide. The determination of the right measury of punishment is often a point of great difficulty. A hard and fast rule cannot be laid down. The decision must be left to the discretion and the discretion has to be got by a variety of considerations" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த 'கன்சிடரேஷன்' அய் நீதித் துறைக்கு விட்டுவிட வேண்டும். அப்பொழுதுதான் சட்டம் முறையாக அமுல்படுத்தப்படும். ஐ.பி.சி.இலே 309-வது பிரிவு இருக்கிறது. அதிலே தற்கொலை செய்துகொள்ள முயற்சிப்பதற்கு தண்டனை அளிப்பதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு அபலைப் பெண் கிணற்றிலே குதித்துவிடுகிறாள் என்றால், அவர் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தார் என்று அவர் மீது வழக்குத் தொடுக்கிறார்கள். அதே நேரத்தில், அவர் கொடிய மிருகத்தால், கொடிய மனிதனால் துரத்தப் படுகிறபோது கிணற்றில் விழுந்துவிட்டால், அப்போது எப்படி அவர் தற்



கொலை செய்து கொண்டார் என்று வழக்குப் போடுவது? ஆகவே நிகழ்ச்சி களின் தரத்திற்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு நீதிமன்றங்களுக்கு இருக்கிறதே தவிர, அரசுக்குக் கிடையாது. ஆனால் இந்தச் சட்டத்தில் நீதிமன்றத்திற்குள்ள அதிகாரத்தை அரசு எடுத்துக் கொண்டுள்ளது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சட்டமன்றப் பேரவையிலே கூட பேசுகிறபோது, 'பப்ளிக் சர்வண்டு களுக்கு அதிகமான தண்டனையைக் கொடுத்திருக்கிறார்கள், பொது மக்களைவிட இரண்டு மடங்கு தண்டனையைக் கொடுத்திருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். 'பப்ளிக் சர்வண்ட்' என்று குறிப்பிடக்கூடியவர் களில் இதை அமுல்படுத்தக் கூடிய அதிகாரிகளும், காவல் துறை அதிகாரி களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இது அரசியலமைப்புச் சட்டத்தின் ஆர்ட்டிகிள் 14-ல் உள்ள சமத்துவ அடிப்படை உரிமைகளைப் பாதிக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் கூறுவது ஆர்ட்டிகிள் 14-லே கூட (equality among equals) சம அந்தஸ்து உள்ளவர்களில் சமத்துவம் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. This article permits the classification. That classification must be a reasonable one. எப்படியாவது மக்களிடத்திலுள்ள இந்தத் தீய பழக்கத்தைக் களைந்தெறிய வேண்டுமென்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். சட்டத்தை அமுல்படுத்தக்கூடிய அதிகாரிகள் குடித்து விட்டுப் போகிறார்கள் என்றால், இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிற இலட்சியம் தோற்றுப் போய்விடுகிறது, இதன் அடிப்படை நோக்கம் தோற்று போய்விடுகிறது. ஆகவே, அவர்களை அச்சுறுத்துகிற வகையிலே, அப்போதுதான் object, destiny ஐ அடைய முடியும் என்பதற்காக இப்படிக் கொண்டு வந்திருக்கிறார்கள், அதை நான் வரவேற்கிறேன்.

கடுமையான முறையில் தண்டனை வழங்கக்கூடிய அளவுக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 3 மாதத்திலிருந்து 5 வருடங்கள் வரையில் சிறை தண்டனை கொடுக்கலாம் என்று சட்டத்தைக் கொண்டு வருவதால் மட்டுமே இந்த நோயைத் தீர்க்க முடியாது. இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வருகிற நேரத்தில், மக்களிடத்திலே இதற்கு எப்படி வரவேற்பு இருக்கிறது என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். சாதாரண மான குற்றமாக இருந்தாலும்கூட, ஏழாண்டு, ஐந்தாண்டு சிறை என்று தண்டனை வழங்குகிற உரிமை சட்டமன்றத்திற்கு இருக்கிறது. சட்டத்தின்

[திரு. ஆ. பாலசுப்பிரமணியம்] 1979 மார்ச் 17]

மூலமாகக் குற்றத்தைத் தடுக்க வேண்டும் என்பதற்காக அரசு சட்டத்தை நிறைவேற்றுகிறபோது தண்டனை வழங்குகிற அதிகாரம் அரசுக்கு இருக்கிறது. ஆனாலும் கூட சமுதாயம் இதை எப்படி வரவேற்கிறது என்பதைப் பார்த்தாக வேண்டும்.

நானூறு ஆண்டுகளுக்கு முன்னாலே இங்கிலாந்து நாட்டில் ஸ்டார் சேம்பர் என்று இருந்தது. அங்கு வழக்குகள் வந்தால், அங்கேயே கூடிப் பேசி அப்போதே தண்டனையைக் கொடுப்பார்கள். அது போன்ற தண்டனை இங்கே வரக்கூடாது. சொத்துக்களை எடுக்கும் போது மகசர்களைத் தயாரிப்பார்கள். அப்போது கூட சுதந்திரமான இரண்டு சாட்சியங்களைப் (Independent witness) போட்டு விசாரணை செய்ய வேண்டுமென்று சொல்லுவார்கள். ஆனால் இங்கே அப்படியில்லை. இன்வெஸ்டிகேஷன் ஆபீசரை விசாரித்த உடனேயே தண்டனையைக் கொடுக்கிறார்கள். குற்றவாளிக்கு தான் நிரபராதி என்று நிரூபிக்கிற வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. இன்டிபென்டன்ட் விட்னெஸ் விசாரணையில் சேர்க்கப்படவில்லை. இந்தியன் எவிடென்ஸ் ஆக்டின்படி, rden of proof, prosecution சைடிலே இருக்க வேண்டும். ஆனால் இந்தச் சட்டத்தில் நிரபராதி என்று நிரூபிக்கிற நிலை குற்றவாளியின் (accused) கையில் இருக்கிறது. இது வருத்தத்திற்குரியதாகும். ஆகவேதான் ஸ்டார் சேம்பரைக் குறிப்பிட்டேன். இங்கிலாந்து நாட்டிலே அன்றைக்குச் சொன்னார்கள். "functioning of Star Chamber during the dark days of the British Judicial history". என்று. ஆகவே இன்றைக்கு மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய சட்டமாக இருந்தாலும், இதை எப்படி அமுலுக்குக் கொண்டு வரப்போகிறார்கள் என்பதில் தான் இதன் வெற்றியே அடங்கியிருக்கிறது. முன்பிருந்த சட்டத்தை மிக வலிவுள்ளதாக ஆக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு கத்தியைத் தீட்டி அதிகாரிகள் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கட்டியை அறுப்பதற்குப் பதிலாக கழுத்தையே அறுக்கக் கூடாது, உஷாராக இருக்க வேண்டும். ஆகவே இந்தக் கொடிய பழக்கத்தை ஒழிக்க வேண்டும் என்று சொல்லி, அதே நேரத்தில் நிரபராதிகளைத் தண்டிக்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறி முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-30)

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மது விலக்குச் சட்டத்தைக் கடுமையாக அமுல்படுத்துவதற்கு,



[1979 மார்ச் 17 [திரு. செ. முத்துசாமி]

இந்த அரசு தூய்மையான நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டத்தினுள் அமைந்துள்ள அவர்களுடைய உணர்வை நான் வரவேற்கிறேன். ஆனால் இந்த சமுதாய அமைப்பு முறையிலே, இந்த அரசாங்கத்தினுடைய சமுதாயக் கண்ணோட்டத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கக்கூடிய நிர்வாக இயந்திரத்தை வைத்து, இந்தச் சட்டத்தினைச் சரியாக அமுல்படுத்த முடியாமல் இருக்கிறது என்பதிலே இங்கே பேசிய உறுப்பினர்களுக்கு வேறுபாடான கருத்து இருக்கிறது. மண் தோன்றி கல் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மூத்த குடி இருந்த காலத்திலிருந்து இந்திர லோகத்திலும் சோம பானம் இருந்ததாகக்கூட சொல்கிறார்கள். இது நீண்ட கால வரலாறு.

THE HON. THIRU K. NARAYANASWAMY : May I interrupt the hon. Member? All these things have been described in puranas. Was he an eye-witness to these? Is there any shade of authority in such Puranic stories?

திரு. செ. முத்துசாமி : நான் புராணத்தைப்பற்றி அதிகம் தெரியாதவன் தான். நான் கேள்விப்பட்டதைச் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : புராணம் பற்றி அதிகம் தெரியாது என்று சொன்னார்களே தவிர, அதிலே நம்பிக்கை இல்லை என்று சொல்லவில்லை.

திரு. செ. முத்துசாமி : புராணத்திலே நம்பிக்கை இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். வள்ளுவர் கள்ளுண்ணாமை பற்றி ஒரு அதிகாரத்திலே சொல்லியிருக்கிறார். இது குறித்து ஒரு அதிகாரத்தையே எழுதியிருக்கிறார்.

THE HON THIRU K. NARAYANASWAMY : There is a common ground between me and the hon. Member Thiru Muthuswamy in our total disbelief in the Puranas.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்கள் கூட சொன்னார்கள். அறத்துப் பாலிலே மட்டுமல்ல, பொருட்பாலிலே கூட அதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். எவ்வளவு கொடுமையானது என்று வள்ளுவர் அறத்துப்பாலிலே சொல்லி சமுதாயச் சட்டத்தை வகுத்திருக்கிறார். இதனை அறத்துப்பாலிலே சொல்லியிருந்தும் கூட, பொருட்பாலிலும் எழுதி வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது இன்னொரு இடத்திலும் இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இரண்டு தாம் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அரசாங்கத்தின் மூலம் கூட அதைச் செய்ய முடியும் என்று நம்பியிருக்கிறார்கள் என்றுதான் சொன்னேன்.

**திரு. க. அறிவழகன் :** நான் தலைவருடைய கருத்தை ஏற்றுக் கொண்டிருந்தாலும், அறத்துப் பாலிலே சொல்லியிருப்பதை, நம் அரசு கள்ளுண்ணாமை பற்றிய சட்டமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். பொருட் பாலிலே சொல்லியிருப்பதுபோல, கொஞ்சம் அதிகமாகவே, கடுமையாகவே சட்டம் கொண்டுவந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் சொன்னதைத்தான் உறுப்பினர் அவர்களும் சொல்கிறார்கள்.

**திரு. செ. முத்துசாமி :** இந்த மது விலக்குச் சட்டத்தைப் பொறுத்த வரையில், நான் ஒன்று சொல்கிறேன். கிராமப்புறங்களில் கருப்பண்ண சாமியைக் கும்பிடுகிறார்கள். அந்தக் கருப்பண்ண சாமிக்கு விருப்ப மானது என்று சொல்லி சாராயம் படைக்கிறார்கள். நீண்டகாலமாக இது இருக்கிறது. அந்தப் பகுதியில் அப்போது போலீஸ்காரர்கள் நுழைய முடியாது. அங்கு சாராயம், கள்ளு எல்லாம் அதிகமாக வரும். இது நீண்டகாலமாகவே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது போலவே மாரி அம்மன் விழாக்களும் கிராமப்புறங்களில் நடக்கும். அங்கும் கள் எல்லாம் வரும். போலீசார் அங்கு போக முடியாது. இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. ராஜாஜி அவர்கள் தமிழ்நாட்டில் முதலமைச்சராக இருந்தபோது, மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அது தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டு வந்தது. எவ்வளவுதான் இந்தச் சட்டத்தின் மூலமாக அதை நாம் அமுல்படுத்த முடியும்? காய்ச்சுகின்றவர்களை ஒன்றும் செய்யாமல் பார்த்துக்கொண்டிருக்கக்கூடிய இயந்திரத்தை வைத்துக்கொண்டு நாம் இந்தச் சட்டத்தை அமுல்படுத்த முயற்சிக்கிறோம். அந்த அளவில்தான் காவல் துறை இருக்கிறது என்பதைப்பற்றி நாம் சிந்தித்தாக வேண்டும். D.D.C. யில் கூட இந்தப் பிரச்சினை எழும் போது, மதுவிலக்குச் சட்டத்தை அமுல்படுத்த ஆட்கள் போதாது என்று சொல்கிறார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் 10 ஆயிரம் போலீசார் தேர்ந்தெடுக்கப்படுவதுபற்றி அறிவித்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தைக் கடுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் தான் அது



இருக்கும் என்று நான் நம்புகிறேன். சாராயம் காய்ச்சுகிற தொழிலுக்கு கிராமப்புறங்களிலே நிறைய முதல் போடவேண்டியதில்லை. ஆகவே அது ஒரு தொழிலாகவே அவர்களுக்கு ஆகிவிடுகிறது. அவர்களுக்கு வேறு தொழில் செய்வதற்கும் வழியில்லை. இதிலே அதிக லாபமும் கிடைக்கிறது. அதனாலேதான் அவர்கள் இதைத் தொடர்ந்து செய்கிறார்கள்.

சேலம் மாவட்டத்தில் ஒரு இடத்திலே, தன்னுடைய தோட்டத்திற்குப் பக்கத்திலே சாராயம் காய்ச்சப்படுகிறது என்று தெரிந்து, அந்தக் காரணத் தினால் அந்தப் பக்கத்திலே உள்ள பெண்களுக்கு அவமானமாக இருக்கிறது என்று ஒருவர் போலீசில் ரிப்போர்ட் செய்தார். அதைத் தொடர்ந்து போலீசார் என்ன செய்தார்கள்? இன்னவர்தான் தகவல் கொடுத்தார் என்று சொல்லிவிட்டார்கள். அடுத்த நாள் அவருடைய தோட்டத்தில் இருந்த தென்னை மரங்கள், வாழைத் தோட்டங்கள் எல்லாவற்றையும் கத்தியால் வீசி வெட்டி வீழ்த்திவிட்டார்கள். இந்த மாதிரி நிலைமைகள் இருந்தால், யார் புகார் சொல்வார்கள்?

நான் எம்.எல்.சி. யாக இரண்டாவது முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சட்ட மன்ற விடுதியிலே இரண்டாவது மாடியிலே 214 எண்ணுள்ள அறையிலே இருக்கிறேன். * * *

THIRU A. R. DAMODARAN : Sir, the hon. Member Thiru Muthuswamy has mentioned about his room and when he says about he room adjoining that * * *

So, I would request you kindly to ask him to restrict his remarks o general things, instead of accusing Members and Legislators of aking part in an illegal practice.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அந்தப் பகுதியை நீக்கவேண்டும் ன்று சொல்கிறார்கள்.

**திரு. செ. முத்துசாமி :** நான் பெயரைச் சொல்லிக் குறிப்பிட்டுச் சால்லவில்லை.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Chairman, ir, according to my understanding, the hon. Member Thiru Muthu- vamy has only made a statement about the illicit seller or vendor. his really may not have any truth in relation * * *

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

THIRU A. R. DAMODARAN : May I point out that if this appears in the newspapers, it will give an impression to the general public that * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * * * பகுதி நீக்கப்படுகிறது, அது பத்திரிகையிலே வரக் கூடாது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். குறிப்பாக ருசுப்படுத்தமுடியாத விஷயமாக இருப்பதாலே, அதை நீக்கி விடலாம்.

**திரு. செ. முத்துசாமி :** அதை நீக்குவதைப் பற்றி நான் ஆட்சேபணை செய்யவில்லை. * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * * * என்று சொன்னதும் நீக்கிவிடலாம். ஏற்கெனவே சொன்னதையும் சேர்த்து நீக்கிவிடலாம். உறுப்பினர் மேலே பேசலாம்.

**திரு. செ. முத்துசாமி :** * * * தலைவரவர்களே, இன்றைக்கு இருக்கக்கூடிய சட்ட அமுலைப் பொறுத்த அளவில், எப்படி இந்த சமுதாயத்திலே முடியும் என்று பலரும் சந்தேகப்படுகிறார்கள். ஆனால் இதை நல்ல முறையிலே அமுலாக்க முடிய வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசையும் வேண்டுதலும். இது எப்படி இந்த சமுதாய அமைப்பு முறையிலே செயல்படும் என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் சொல்கிறேன். இங்கே சொல்லும்போது, மேலவை உறுப்பினர் ஆகட்டும், பேரவை உறுப்பினராகட்டும், அமைச்சர்களிடம் விஷயத்தைச் சொல்லும்போது, அதை நம்ப மறுக்கக்கூடிய நிலை கடந்த காலத்திலே இருந்துவருவதை நாம் பார்க்கிறோம். இதை நான் உங்கள் கவனத்திற்குப் பணிவோடு வைக்கிறேன். அதிகாரிகளை நம்புங்கள், நம்பக் கூடிய அளவுக்கு நம்புங்கள். அதிகாரிகளை நம்பக்கூடிய அளவுக்கு சட்டமன்ற உறுப்பினர்களையும் நம்புங்கள். நாங்கள் எந்த அரசாங்கத்திற்கு எந்த ஒரு பிரச்சினையை எடுத்துச் சொன்னாலும், அதற்குப் பொறுப்பு ஏற்கவேண்டியவர்கள். நாங்கள் கொடுக்கக்கூடிய விஷயங்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க நீங்கள் முன்வாருங்கள். நாங்கள் சில பிரச்சினைகளைச் சொல்கின்றபோது, அதிகாரிகள் இங்கே இல்லை என்று defensive ஆக இருந்து வருகிறீர்கள் அந்த உணர்வைப் பாராட்டுகிறேன், ஆனால் செய்யப்பட்ட புகார்களை, சொல்லப்பட்ட விஷயங்களை மறுத்துவிட்டு, நீங்கள் உடனடியாக அதன் மீது

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை நீங்கள் செய்வதில்லை. முன்னாளில் திரு பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இங்கே பேசுகின்றவர்களைக் கூட நேராக நிமிர்ந்து பார்க்கமாட்டார், பதில் சொல்லும் போதும் நிமிர்ந்து பார்க்கமாட்டார், ஆனால் சொல்லப்பட்ட விஷயங்களை உடனடியாக மாவட்டங்களுக்கு அனுப்பி அந்த அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கைகளை எடுப்பார் என்ற அனுபவம் உள்ள பழைய உறுப்பினர் ஒருவர் கூட நேற்று மாலை என்னிடத்திலே குறிப்பிட்டுப் பேசினார். ஆதலால் இந்த

(முற்பகல் 11-40)

விஷயங்களைச் சொல்லி, ஒன்றை மட்டும் கடைசியாகச் சொல்கிறேன். "திட்டம் போட்டு திருடற கூட்டம் திருடிக்கொண்டேயிருக்குது, அதைச் சட்டம்போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது, திருடனாகப் பார்த்து திருந்தாவிட்டால் திருடனை ஒழிக்க முடியாது" இது மறைந்த கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள் இயற்றிய பாட்டு. . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நீங்களும் கவி புனைய ஆரம்பித்து விட்டீர்களோ என்று நினைத்தேன்!

**திரு. செ. முத்துசாமி :** இப்போதைய முதலமைச்சரவர்கள் ஒரு திரைப் படத்தில் பாடியது என் நினைவிற்கு வருகிறது. நாட்டு மக்களுக்கு நீதியைச் சொல்கிறார். ஆனால் இன்றைக்கு நிலைமைகள் என்ன? 'திட்டம் போட்டுக் காய்ச்சற கூட்டம் காய்ச்சிக்கொண்டே இருக்குது, அதைக் குடிக்கிற கூட்டம் குடித்துக்கொண்டேயிருக்குது; சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் அதைத் தடுத்துக்கொண்டேயிருக்குது; குடிக்கிறவனை பார்த்து திருந்தாவிட்டால், குடியை ஒழிக்க முடியாது' என்ற நிலைதான் இருக்கிறது. சட்டத்தைப் போட்டு, இதை ஒழிக்க முடியுமென்ற நம்பிக்கைக்கு வந்திருக்கிறார்கள். அது வாழட்டும் வெற்றியும் பெறட்டும். அந்த நம்பிக்கையில் சட்டத்தைப் பயன்படுத்தும்போது, சாதாரண மக்களுக்கு ஏற்படும் சங்கடத்தைச் சொல்கிறேன். ஏழைகள் குடித்து வீணாகக்கூடாது என்பதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். ஆனால் அவர்களால் குடிக்காமல் இருக்க முடியவில்லை. ஏழை குடிக்கத் தொடங்குகிறான். அவனை 6 மாதங்களுக்கு உள்ளே தள்ளி, ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் அபராதமும் போட முடியும். ஆனால் அவனால் 5 அல்லது 6 ரூபாய்கூட சம்பாதிக்க முடியவில்லை. வருமானத்தில் பாதிக்குக் குடிக்கிறான், முக்கால்

[திரு. செ. முத்துசாமி] [1979 மார்ச் 17

வாசிக்குக் குடிக்கிறான் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவனை உள்ளே தள்ளினால், அந்த 4, 5 ரூபாய் வருமானம்கூட இல்லாமல், அந்தக் குடும்பம் இருக்கும். இப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிறவனை உள்ளே தள்ளும் போது, அந்தக் குடும்பத்தைப்பற்றி கருணையோடு பரிசீலிக்கும் நிலையைக் கொண்டுவர வேண்டும். அதே நேரத்தில், அரசாங்கத்தின் பொருளாதார நிலைமைகள் என்னவாகுமென்பதை உணருகிறேன். இருந்தாலும், அதற்கு வேண்டிய திட்டங்களைத் தீட்டுங்கள்.

மேலும் 10,000 காவலர்களை நியமிக்கும் திட்டத்தை உடனடியாக முதல்மைச்சரவர்கள் கொண்டுவர வேண்டும்: இளைஞர்கள் வந்தால் வேக மாகச் செயல்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும். இதை எல்லாத் துறை களிலும் பார்க்கிறோம். இளமைத் துடிப்போடு, சமுதாயக் கண்ணோட்டத் தோடு, இவர்கள் குற்றவாளிகளைப் பிடிப்பார்கள். எனவே இப்படிப்பட்ட இளைஞர்களை இண்டர்வியூ மூலம் தேர்ந்தெடுத்து, 10,000 காவலர்களை அதிகப்படுத்தி, ஆவன செய்ய வேண்டும். இந்தச் சட்டத்தை நல்ல மன தோடு கொண்டு வருகிறார்கள். அதில் தவறுகள் நடந்துவிடக் கூடாதென்று எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள். அதையும் உணர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஒன்றைச் சொல்கிறேன். என்னைப் பொறுத்த அளவில், எந்தச் சட்டமும் என்னைப் பாதிக்காது. நான் ஒழுக்கக் கட்டுப்பாட்டில் இருக்கிறவன்.

**திரு. க. அறிவழகன்:** மேல் சபை உறுப்பினர்கள் யாரையும் பாதிக்காது.

**திரு. செ. முத்துசாமி:** நான் மற்றவர்களுக்கு வக்காலத்து வாங்க விரும்ப வில்லை. நான் வக்கீல் அல்ல. என்னைப் பொறுத்த அளவில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அளவிற்கு அனுமதித்த தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து, எல்லா உறுப்பினர்களும் ஒழுக்கத்தோடு இருக்கிறார்கள் என்று கூறிய சபையின் கொறடா மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர் களுக்கு நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** * * * , பற்றி அவர் சொன்ன பகுதி அனைத்தும் நீக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1979 மார்ச் 17]

**திரு. பி. ஆர். தாமஸ்:** தலைவரவர்களே, மது விலக்குச் சட்டத்திலே கொண்டு வரப்பட்டுள்ள திருத்தங்களை நான் மகிழ்ச்சியுடன் ஆதரித்து, வரவேற்றுப் பேசுகிறேன். 1937 ஆம் ஆண்டிலே முதன் முதலாக அமு லாக்கப்பட்ட சட்டத்தின் மூலம், இந்த மாநிலத்திலே மது விலக்கு நல்ல முறையிலே அமுலாக்கப்பட்டது. ஏழை எளிய மக்கள் எல்லாம் மறு வாழ்வு காண வேண்டும், பொருளாதாரத் துறையிலும், சமுதாய நிலை யிலும் வளர வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தைப் பாராட்டி, இந்தத் திருத்தத்தை வரவேற்கிறேன். ஆனால் நம்முடைய நாட்டிலே உள்ள நிலைமையைச் சற்று சீர் தூக்கிப் பார்க்கும்போது, நம்முடைய அண்டை மாநிலங்களில் மது விலக்கு அமுலாக்கப்படாத நிலை இருப்பதைக் காண லாம். நமது மாநிலத்தின் 4 எல்லைகளிலும் மதுவிலக்கு அமுலாகாத நிலையிலே, அங்கே மக்கள் சென்று, மதுவை அருந்தக்கூடிய நிலை இருக் கிறது. அங்கே அருந்துவதோடு, இங்கேயும் அதைக் கொண்டுவரும் நிலை உருவாகியிருக்கிறது. இதையெல்லாம் அகில இந்திய அடிப்படையிலே சரி செய்ய வேண்டுமென்று சொன்னாலும், இது குறித்து ஒரு தகவலை அளிக்க விரும்புகிறேன். மஹாராஷ்டிர மாநிலத்தைப் பொறுத்த மட்டில், சில பகுதி களிலே மது விலக்கை ரத்து செய்து, சில பகுதிகளிலே தீவிரமாக அமுலாக்கிய காலத்திலே அவர்கள் ஒரு உண்மையைக் கண்டுபிடித்ததாகக் கேள்விப்படுகிறேன். மது விலக்கு அமுலாகிய பகுதியிலே, மக்கள் கள்ளச் சாராயத்தைத் தயாரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஏராளமாகக் கள்ளச் சாராயத்தை உற்பத்தி செய்து, வாடிக்கையாளர்களைப் பெற்றுக்கொண்டார் கள். ஆனால் அதே பகுதியில் மீண்டும் மது விலக்கு ரத்தாகி, தாராளமாக மது வழங்கப்பட்ட காலத்திலேயும், மக்கள் கள்ளச் சாராயத்தைத்தான் விரும்பினார்கள். அங்கே விற்பதற்கு உரிமை பெற்ற கடைகளிலுள்ள சாராயத்தை அருந்த அவர்கள் விரும்பவில்லை என்று அங்குள்ள மக்கள் கூறுகிறார்கள். காரணம் என்னவென்றால், கள்ளச் சாராயத்திலே அதிகமான போதை தரக்கூடிய சத்து இருக்கிறது என்பதுதான். எனவே சட்டத்தைச் சரியான முறையில் அமுல்படுத்தாவிட்டால், கள்ளச் சாராயம் அதிகமான அளவிற்கு விற்கும் நிலை உருவாகும். பின்னால் மதுவிலக்கு எடுக்கப்படுகிற நிலை வந்தால்கூட, இந்த மாநிலத்திற்கு அதன்மூலம் வருவாயை ஈட்டும் நிலை மாறிவிடுமென்று கருதுகிறேன். காரணம் என்னவென்றால், கள்ளச் சாராயத்தை மக்கள் விரும்புகிறபோது மற்ற சாராயத்தை அருந்த மாட்டார் கள். சட்டத்தைப் பொறுத்த அளவில், இதனால் தனிப்பட்ட மனிதனுக்கு நல்ல முன்னேற்றம், குடும்ப வாழ்க்கையிலே அமைதி, சமுதாயத்திலே

முன்னேற்றம் கிடைக்கிறது. தனிப்பட்ட வாழ்க்கையிலே, குடிப்பவர்களுக்கு இருதய நோய், ரத்தக் கொதிப்பு, கல்லீரல் நோய் போன்றவை ஏற்படுமென்று சொல்லுகிறார்கள். கிராமப் பகுதிகளிலுள்ள ஏராளமான இளைஞர்களின் தலையில் வழுக்கை விழ கள்ளச் சாராயம் காரணமென்று சொல்கிறார்கள். நான் இதைச் சொல்லும்போது, வழுக்கை விழுவதற்கு கள்ளச் சாராயம் தான் காரணமென்று முடிவு கட்டக் கூடாது.'

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கொஞ்சம் வழுக்கை இருப்பதாகத் தெரிகிறது.

திரு. பி. ஆர். தாமஸ் : It is not a general rule. We cannot induct such a rule. சிறந்த அறிவு உடையவர்களுக்கும் வழுக்கை விழுகிறதென்று சொல்கிறார்கள்.

திரு. க. அறிவழகன் : அப்படியென்றால் தொழில் சட்டங்களை அதிகமாகப் படிக்கிறவர்களுக்கும் வழுக்கை விழுமா ?

திரு. பி. ஆர். தாமஸ் : All bald-headed people are very wise and intelligent people என்று சொல்கிறார்கள். அந்த அடிப்படையிலே பார்த்தால், அந்த முடிவிற்கு வந்துவிட முடியாது. கள்ளச் சாராயத்தில் உள்ள நச்சுப் பொருள், இளைஞர்களின் தலையில் வழுக்கை விழும் நிலையை உருவாக்குகிறது. 20, 25 வயதுள்ள இளைஞர்களுக்கு அப்படி இருக்கிறது. கிராம மக்கள்கூட அப்படிப்பட்ட கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். கள்ளச் சாராயத்தால் தலையில் ரோமம் இல்லாத நிலை உருவாகிறதென்று கூறுகிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் பார்த்து, போலீஸ்காரர்கள் வழுக்கை விழுந்தவர்கள் பின்னால் போகப் போகிறார்கள். (சிரிப்பு)

திரு. பி. ஆர். தாமஸ் : அப்படியென்றால், என்னைப் போன்றவர்களைக் கூட பிடிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

திரு. க. அறிவழகன் : இனிமேல் இளைஞர்களுக்கு வழுக்கை விழுந்தால் ஆபத்துதான்.

திரு. பி. ஆர். தாமஸ் : கிராமப்புறங்களில் கள்ளச் சாராயம் அருந்துவதை நாகரீகமாக வைத்திருக்கிறார்கள். எனவே உள் பகுதியில் சென்று எந்த அளவிற்கு இதைத் தடுக்க முடியுமென்பதில் அய்யப்பாடு இருக்கிறது. கிராமங்களில் தொழிற்சாலைபோல இது நடந்துகொண்டிருக்கிறது. நான்



சட்டத்தை வரவேற்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமி காந்தன் அவர்கள், எச்சரிக்கை மூலமாக காவல் துறையினர் வருவதை எடுத்துக் கூறக்கூடிய வகையிலே சிறுவர்கள் பயன்படுத்தப்பட்டார்கள் என்று சொன்னார்கள். ஒரு ஒலியின் மூலமாக காவல் துறையினர் வருவதைத் தெரிவிக்கிறார்கள் என்று கூறினார்கள். நான் என்ன பார்க்கிறேன் என்றால், சிறுவர்கள் கள்ளச் சாராயத்தைக் கடத்தல் செய்ய பயன்படுத்தப் படுகிறார்கள். பள்ளியில் உள்ள மாணவர்களை அதற்குப் பயன்படுத்தி, அந்த மாணவன் போலீசாரால் பிடிக்கப்பட்டு, அவனை சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பும் நிலைமை உருவாகக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெண்களும் இதில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். கணவன் தொல்லையால் வாழ்விற்கு வழி இல்லாத நிலையில் பெண்களும், பள்ளியில் தொடர்ந்து படிக்க முடியாத நிலையில் சிறுவர்களும் பயன்படுத்தப்படுகிறார்கள். இவர்களைப் பொறுத்த வரையில், சட்டத்தைக் கொஞ்சம் தளர்த்த வேண்டும். சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்படுவார்கள் என்பதை உணராமல் அல்லது சட்டம் எவ்வளவு கடுமையானது என்பதை உணராத நிலைமையில் அவர்கள் தவறு செய்கிறார்கள். எனவே அவர்களுக்கு 3 முறை மன்னிப்புக் கொடுக்க வேண்டும். சிறுவர்கள், பெண்கள் இவர்கள் இருவருக்கும் மூன்று முறை மன்னிப்பு அளித்து, எச்சரிக்கை செய்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக கள்ளச் சாராயம் இவ்வளவு வேகமாக, துரிதமாகப் பரவுகிற போது, அதைச் சட்டத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை என்றால், அதற்குக் காரணம் மக்களுக்கு வேறு வேலை இல்லாததுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேலை வாய்ப்பற்ற நிலையோடு ஏழ்மையும் இருக்கிறது. இதன் மூலம் ஏராளமாகப் பணம் சம்பாதிக்கிறார்கள். வருவாய்க்கு இது மூல காரணமாக இருப்பதால், இதில் அதிகமாக ஈடுபடுகிறார்கள். சில இடங்களில் போலீசாரே மதுபானம் வாங்கிக் கொடுக்கும் கட்டாயம் இருக்கிறது. ஒரு மருத்துவ மனைக்குச் சென்றிருந்தேன். அப்போது ஒரு தகவல் அறிந்தேன். ஒரு மாணவன் 3 தினங்களுக்கு முன்பு கிணற்றில் விழுந்து இறந்து போனான். அவனுடைய பிணத்தை எடுக்க வேண்டும். யார் எடுப்பது ? 100 கெஜ தூரத்திற்கு துர்நாற்றம் அடிக்கிறது. அந்த நிலையிலே போலீசார் சில ஊழியர்களுக்கு மதுபானம் வாங்கிக் கொடுத்து, அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியிருக்கிறது. இந்த நிலையிலே, அதை எப்படி தவிர்க்க முடியுமென்று விளங்கவில்லை. இப்படி நடைமுறையிலே அதை தவிர்க்க முடியாத நிலையில், அதற்கெல்லாம் விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்

(முற்பகல் 11-50)

கொள்கிறேன். சட்டம் இருந்தால்கூட மனிதனுடைய இயற்கையான உணர்வுகளுக்கு மிஞ்சி அதைக் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பது முறையல்ல, அப்படிச் செய்தால், பிணத்தை எடுப்பதோ பிரேத பரிசோதனைக்கு அனுப்பவோ முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடினமான உழைப்புள்ளவர்கள் மது உண்கிறார்கள். பழக்கத்திற்கு அடிமையாகி மது குடிக்கிறார்கள். சிறையில் அவர்களை அடைத்து விடுவதால் மட்டும் அவர்களை மாற்றிவிட முடியுமா என்ற அய்யப்பாடு எனக்கு இருக்கிறது. சிறைத் தண்டனை, அபராதம் எல்லாம் வழங்கி அவர்களை சிறைக்கு அனுப்புகிறோம். அவர்கள் சீர்திருத்தப்பட்டு திரும்ப வருகிறார்களா என்றால், அது தான் இல்லை. அவர்களுக்கு அதற்குரிய பயிற்சி அளிக்கப்படுகிறதா என்றால், அதுவும் இல்லை. எப்படி அவர்கள் இந்தப் பழக்கத்திற்கு அடிமைப்படுத்தப்பட்டார்கள் என்று மனோதத்துவ முறையில் கண்டு, சிறைத் தண்டனை முடிந்த பிறகு, அவர்களுக்கு மனோதத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும். அதன் பிறகு தான் அவர்களை வெளியில் அனுப்ப வேண்டும். அது மட்டுமல்ல, சிறையில் அவர்கள் இருக்கும்போது, ஏதாவது தொழில் செய்வதற்குரிய பயிற்சியினை, வாய்ப்பினை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகு தான் அவர்களை வெளியிலே விட வேண்டும். உலக சுகாதார நிறுவனம், ஐ.நா.வின் சார்பில் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறது. பொதுவாக குடிப் பழக்கம் நாட்டு மக்களுடைய நலனைப் பாதிப்பது மட்டுமல்ல, உடற் கூறைப் பாதிப்பது மட்டுமல்ல, வேறு சில பயங்கரக் குற்றங்களுக்குக் கூட குடிப் பழக்கம் தான் காரணம் என்கிற புள்ளிவிவரத்தைக் கொடுத்திருக்கிறது. அதைப்பற்றிக் கூற விரும்புகிறேன். 26 முதல் 28 விழுக்காடு குற்றங்கள் நடப்பதற்குக் காரணம் குடி என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது. 24 முதல் 72 விழுக்காடு தாக்குவது, கலகம் செய்வது, துப்பாக்கிச் சூடு இது மாதிரி சம்பவங்களுக்கெல்லாம் காரணம் குடிப் பழக்கம் என்று கூறுகிறது. 13 முதல் 15 விழுக்காடு கற்பழிப்பு சம்பவங்களுக்குக் காரணம் குடிப் பழக்கம் என்று அது மேலும் கூறுகிறது. இந்த மதுவிலக்குத் திருத்தச் சட்டம் கடுமையாக்கப்பட்டு நல்ல முறையில் செயல்படுத்தப்பட வேண்டுமென்கிற முறையில்தான் இதை நான் ஆதரிக்கிறேன். ஆனால் இந்தச் சட்டத்தினால் ஏற்படக்கூடிய முழு வெற்றியைப் பற்றி காலம்தான் பதில் சொல்ல முடியும். பல நாடுகளில் சட்டங்கள் அமுலாக்கப்பட்டு காலப் போக்கிலே அத்தகைய சட்டங்கள் நீக்கப்பட்ட நிலையையெல்லாம் உலக சரித்திரத்திலே நாம் பார்க்கிறோம். உண்மையில்



நல்ல முறையில் இது செயல்படுத்தப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவலையும் அது தான். இது வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டால், நிச்சயமாக இந்த நாடு ஒரு சொர்க்கமாக மாறக்கூடிய உயர்ந்த நிலை உருவாகும் என்கிற கருத்தில் ஆதரித்துப் பேசுகிறேன்.

இன்னும் 3 குறிப்புகளை மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரசு அவற்றை நல்ல முறையில் ஆய்ந்து செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். முதலாவதாக குழந்தைகள், தாய்மார்கள், பெண்கள் போன்றவர்கள் குற்றம் செய்தால், 3 தடவை மன்னிப்பு வழங்க வேண்டும். சிறுவர்களைச் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பிவிட்டால் போதாது. அப்படி அனுப்புவதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கையே பாழாகி விடும். ஆகவே கட்டாயம் அவர்களுக்கும் 3 தடவை மன்னிப்பு அளிக்க வேண்டும். இரண்டாவதாக தண்டனை பெற்றவர்கள் சிறையிலிருக்கும்போது, அவர்களுக்கு ஏதாவது தொழில் பயிற்சி அளிக்க வேண்டும். மூன்றாவதாக அவர்கள் சிறைச்சாலையை விட்டு வெளியே வரும்போது அவர்களை மனோதத்துவ நிபுணர்களிடம் காட்டி, மனோதத்துவ முறையில் அவர்கள் குடிப்பழக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவர்களுக்கு சிகிச்சை அளித்த பிறகே, அவர்களை வெளியில் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்லிய கோரிக்கைகளை எல்லாம் மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ப. மாணிக்கம்:** தலைவரவர்களே, இந்த மதுவிலக்குத் திருத்தச் சட்ட முன்வடிவு வந்ததற்கான காரண நோக்கங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. கள்ளச் சாராயத்தை அகற்றுவதற்கு சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, தொடர்ச்சியாகக் குற்றங்கள் செய்பவர்களை குறிப்பிட்ட பிரதேசங்களிலிருந்து அகற்றுவதற்கு அதிகாரத்தை வழங்குகிற முறையில் இதில் சொல்லப்பட்டிருக்கிறது.

சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை ஆகிய இரு அவைகளின் சென்ற கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்பட்டது. செப்டம்பர் 13 அன்று என்பதாக நினைவு. இன்றைக்கு மதுவிலக்கு திருத்தச் சட்ட முன்வடிவாக அவையின் முன் வந்திருக்கிற இந்தச் சட்டம் செப்டம்பர் 30 ஆம் தேதி மதுவிலக்கு அவசரச் சட்டமாக வெளியிடப்பட்டது. 17 நாட்களில் அப்படிப்பட்ட ஒரு அவசரச் சட்டம் வெளியிடப்படுகிற நிலை, கள்ளச் சாராயத்தை

ஒழிக்கும் ஒரு அவசர நிலை என் ஏற்பட்டது என்பதை இன்னமும் என்
னால் புரிந்துகொள்ள முடியவில்லை. செப்டம்பர் 30-க்குப் பிறகு இன்று
வரை ஏற்பட்டிருக்கிற அனுபவங்களை கணக்கில் எடுத்துப் பார்க்க வேண்டும்.
அப்படிப் பார்க்கும்போது இந்தத் திருத்தத்தினால் ஏற்படக்கூடிய பின்
விளைவுகள் என்ன என்பதையும் எண்ணிப் பார்ப்பது அவசியமாகிறது.
இதிலே, சமுதாயத்தை நெறிப்படுத்துவதற்கு, மக்களுடைய வாழ்க்கையை
மேம்படுத்துவதற்கு என்ற முறையில் கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது.
சமுதாயத்தினுடைய உடல் நலம், பொருளாதார மேம்பாடு, வாழ்க்கை நெறி
ஆகிய அம்சங்களை சட்டத்தின் மூலம் சாதிக்கலாம் என்று இந்தச் சட்டம்
நினைக்கிறது. அதற்கு ஒரு குறைந்த வாய்ப்புதான் உண்டு என்பது
என்னுடைய கருத்து. வரலாற்றை எடுத்துக்கொண்டால், நம்முடைய
தமிழக வரலாற்றிலே கூட இந்தச் சட்டம் 1937 ஆம் ஆண்டிலே வந்தது.
அதற்கு முன்னாலேயிருந்த சமுதாயச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு கோட்பாடு
களைக்கொண்ட ஒரு சட்டம் அப்போது இருந்தது. அதன் மூலம் சிறு
தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்பிருந்தது. கிராமப் புற மக்களைக் காப்பாற்று
வதற்கும் வாய்ப்பிருக்கிற முறையில் இணக்கமாக அது வகுக்கப்பட்டு
அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. அதைக் கொண்டு வருவதற்கு மூல
காரணமாக இருந்த காலஞ்சென்ற மூதறிஞர் இராஜாஜி அவர்கள் அந்தச்
சட்டத்தைக் கொண்டு வந்து, விற்பனை வரியையும் கொண்டு வந்தார்கள்.
மக்களை நல்வழிப்படுத்துவது, உடல் நலத்தைக் காப்பாற்றுவது, சிறுதொழில்
வளர்ச்சிக்கு ஆக்கம் தருவது, அரசுக்கு வருமானம் கிடைப்பது என்கிற முறை
யில் அந்தக் கொள்கை ஓரளவுக்கு வெற்றி பெற்றது. இப்பொழுது கொண்டு
வரப்பட்டுள்ள மதுவிலக்குத் திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரை, நடை
முறையில் இந்தச் சட்டத்தினுடைய வெற்றி தோல்விகள் சட்டத்தை எப்படி
அமுல்நடத்துகிறோம் என்பதைப் பொறுத்தவையல்ல. தமிழகத்திலுள்ள
சமுதாய சக்திகள் இந்தச் சட்டத்தை எப்படி அமுல்படுத்த விடுகின்றன
என்ற விஷயத்தைப் பொறுத்தே இதன் வெற்றி தோல்வி அமைந்திருக்கிறது.
எனவேதான் இதைச் செயல்படுத்தும்போது, கடுமையான தண்டனை வழங்க
வேண்டுமென்ற வழிவகை வகுக்கப்பட்டிருக்கிறது. மனித இனம் கடுமை
யான தண்டனைகளிலிருந்து, அடக்குமுறைகளிலிருந்து தப்ப, பல்வேறு
காலங்களில் தங்களுடைய உரிமைகளைக் காத்துக்கொள்ள நேரடி முறை
களையும் மறைமுக வழி முறைகளையும் கையாண்டிருக்கிறது. அந்த வகை
யிலே இதிலும் வகுக்கப்பட்டிருக்கக்கூடிய கடுமையான விதிகள் சமுதாய
சக்திகளால் மீறப்படும். செப்டம்பர் 30-க்குப் பிறகு, மார்ச்சில் இன்றைய





நாள் இந்த அவை நடக்கும்போது வரை, "இந்தச் சட்டத்தை எப்படி
உடைப்பது, இந்தச் சட்டத்தை எப்படி நிறைவேற்றாமல் தடுப்பது" என்
பதற்கான முயற்சிகள் வெகு தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன
என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.
மதுவிலக்கு வேண்டுமா, வேண்டாமா என்றால், நிச்சயம் சொல்கிறேன்;
வேண்டும். நோக்கங்கள் நன்றாக இருக்கலாம். ஆனால் விளைவுகளைப்
பார்க்க வேண்டும். அரசாங்கத்தினுடைய நோக்கங்கள் நல்லவை. ஆனால்
விளைவுகள் விபரீதமானவைகள். இந்தச் சட்டத்தைக் கொண்டுவரும்போது,
விளைவுகளை எண்ணிப் பார்த்து அதற்கேற்றவாறு சட்டங்களை அமைத்
திருக்க வேண்டும். நோக்கம் மட்டும் நன்றாக இருந்தால், போதாது. அந்த
முறையில் பார்த்தால், இந்த மதுவிலக்குக் கொள்கையில் கடுமையான நிபந்
தனை, தண்டனை போடுவதைவிட, ஒரு கருத்தை நான் சொல்ல ஆசைப்படு
கிறேன். மதுவை ஒழிக்கும்போது, மதுவிலக்குக் கொள்கையைத் தீவிரமாக
அமுல்படுத்தும்போது, கள்ளச் சாராயத்தை அறவே அகற்றும்போது
"regulated prohibition and eradication of illicit arrack" என்ற
வகையில் கொள்கையை அரசு வகுத்துக் கொண்டு, அதன் அடிப்படையில்
விதிகளை வகுத்து, நடைமுறைப்படுத்துமானால், நாம் பாராட்டியிருக்கலாம்.
அதற்கு மாறாக இந்தச் சட்டத்தில், நல்ல நோக்கத்தை வைத்துக்கொண்டு
இதிலே கொண்டுவரக்கூடிய புதிய திருத்தங்களில் கடும் தண்டனை என்பதன்
பேரால், அச்சுறுத்துவதன் மூலம் காரியங்களைச் சாதிக்க விரும்புகிறது
என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(நண்பகல் 12-00)

இன்னொரு அம்சத்தையும் நாம் பார்க்க வேண்டும். மாநில அரசுகளுக்கு
அதிக அதிகாரம் வேண்டும். மக்களுக்கு இன்னும் அதிகமான வசதிகளைச்
செய்ய அல்லது தேவையான நன்மைகளைச் செய்ய தற்போதைய நிதி வசதி
போதவில்லை என்பது நாடெங்குமுள்ள மாநிலங்களின் கோரிக்கையாக இருக்
கிறது. இன்றையதினம் நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும்
இந்தக் கோரிக்கையை வைத்து மத்திய அரசை வற்புறுத்தி வருகின்றன.
அது ஒரு பெரிய நாடு தழுவிய இயக்கமாக வடிவெடுத்திருக்கிறது. இந்த
நிலையில் இந்தச் சட்டத்தினால் ஏற்படக்கூடிய விளைவைப் பார்க்க வேண்டும்.
அதிக அதிகாரம் வேண்டும். அதிக நிதி வேண்டும் என்று மாநில அரசுகள்
கோரிக்கை வைக்கும்போது, அவர்கள் பக்கத்திலே நாட்டு மக்கள் நிற்க
வேண்டும். அதற்கு இந்தச் சட்டம் துணை புரியும் வகையில் அமைந்திருக்
கிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

[திரு. ப. மாணிக்கம்] [1979 மார்ச் 17

மக்களை அச்சுறுத்துவதன் மூலம், மக்களுடைய உரிமைகளைப் பறிப்
பதன் மூலம்—இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற காரணத்தால்,
இன்றையதினம் இந்த அரசுக்கு எது தேவையோ அதற்கு நேர் எதிரான
நிலைமையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் அரசாங்கத்தோடு
நின்று மாதிலத்தை வாழ வைப்பதற்குப் பதிலாக மக்கள் அரசை விட்டு
விலகிச் செல்லுகிற வகையில் இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது. எனவே
இந்தச் சட்டம் எந்த நோக்கத்திற்காக கொண்டு வரப்பட்டதோ அந்த
நோக்கம், கடுமையான அச்சுறுத்தலான தண்டனையை அளிப்பதாகச் சொல்
லப்படுவதன் மூலம், மூறியடிக்கப்படுகிறது.

நாட்டின் விடுதலைப் போராட்டத்தின்போது, நாம் பல்வேறு உரிமைகளுக்
காகப் போராடினோம். இன்னமும் பல்வேறு கட்டங்களில் தொடர்ந்து
போராடி வருகிறோம். ஜனங்களின் ஜனநாயக உரிமைகளைக் காப்பாற்ற
தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கும்போது, இந்தச் சட்டத்தின் மூலம்
மக்களுடைய உரிமையை இந்த அரசு பறிக்கிறது என்பது மட்டுமல்ல, காவல்
துறைக்கு அதிகமான அதிகாரத்தைக் கொடுக்க முன்வந்திருக்கிறது என்
பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைய காவல் துறை சாதாரண
குடிமகனுடைய உரிமைகளை மறுக்கக்கூடிய முறையில்தான் செயல்பட்டுக்
கொண்டிருக்கிறது. தற்போதைய சட்டம் அதை இன்னும் அதிகமாக்கும்.
சட்டத்தில் அப்படிப்பட்ட விதிமுறைகள் இல்லையே என்று சொல்லலாம்.
கடந்த காலத்திலே மதுவிலக்குச் சட்டம் சாதாரண ஏழை எளிய மக்களை
மிரட்டத்தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. வரக்கூடிய காலத்தில் இது
அதிகமாகும் என்பதில் சந்தேகமில்லை. எனவே மக்களுக்கு அதிக அளவில்
துன்பம் தரும் வகையில் காவல் துறையின் கையில் அதிகாரத்தை அளிப்பது
என்பது நல்லதல்ல. நிர்வாகத்தின் கையில் அதிகமான அதிகாரம் இருக்கு
வேண்டும் என்று சொல்வது சரியானதல்ல. காவல் துறை தன்னிடமுள்ள
அதிகாரத்தைச் சீர்பட செயல்படுத்துமா என்பதுதான் கேள்வி. Absolute
power corrupts absolutely என்று சொல்லுவார்கள். அதைப் போல
அதிகாரத்திற்கு மேல் அதிக அதிகாரம் சேர்ந்தால் மேலும் மேலும் ஊழல்
ஏற்பட வழி உண்டாகும் என்பதை உணர வேண்டும்.

இதன் காரணமாக காவல் துறை சீர் குலையும் என்பது மாத்திரமல்ல,
நிர்வாகமும் ஊழலுக்கு ஆளாகும். இதன் காரணமாக தமிழ் நாட்டில்
ஜனநாயகத்திற்காகப் பாடுபட வேண்டிய அரசியல் கட்சிகளில் இம்மாதிரி



1979 மார்ச் 17] [திரு. ப. மாணிக்கம்]

யான சக்திகள் ஊடுருவவும் வாய்ப்பை ஏற்படுத்திவிடும். அரசியல் கட்சி
களைப் பொறுத்த வரையில், இதில் மிக முக்கியமான பங்கு இருக்கிறது.
பாதிக்கப்பட்ட குடிமக்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, அரசின்
அடக்குமுறையிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள, அல்லது காவல்
துறையின் தொல்லைகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள அரசியல்
கட்சிகளின் உதவியை நாடி வருவார்கள். அதை நல்லெண்ணத்தின் அடிப்
படையில் செய்தாலும் அதன் விளைவாக ஊழலும் சீர்குலைவும் உண்டாகும்
என்பதை உணர வேண்டும். எனவேதான் இந்தச் சட்டத் திருத்தத்தின்
மூலம் வகுக்கப்பட்டிருக்கிற தண்டனை சரியல்ல என்று சொல்லுகிறேன்.
இப்படிப்பட்ட கடுமையான தண்டனையின் மூலம் மது தீமையை அகற்றி
விடலாம், மதுவிலக்குச் சட்டத்தை நிறைவேற்றி விடலாம் என்று கருதுவது
சரியான அணுகுமுறையல்ல, 20 ஆம் நூற்றாண்டிற்குரிய அணுகுமுறையல்ல.
பல நாடுகளின் அனுபவம் நமக்கு இதைத்தான் தெரிவிக்கிறது. மது
அருந்தும் பழக்கத்தைப் போக்க எந்த வழிகளைப் பின்பற்ற வேண்டும்
என்பதை நாம் நன்றாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதைப்பற்றி
சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையின்மீது பேசும்போதே என்னுடைய
கருத்தைச் சொல்லியிருக்கிறேன்.

கள்ளச் சாராயத்தை ஒழிக்க கடும் தண்டனை அளிப்பதற்குப் பதில்
மாற்று வழிகளை நாம் ஆராய வேண்டும். மாற்றம் என்று சொல்கிறபோது,
மக்களை அந்தத் தீமையிலிருந்து மீட்பதற்கான வழிமுறைகளை நாம் காண
முன்வர வேண்டும். ஐரோப்பிய நாடுகளில் பல்வேறு அனுபவம் ஏற்பட்
டிருக்கிறது. அதைப் போலவே நம் நாட்டிலும் வரலாற்று அனுபவம்
ஏராளமாக இருக்கிறது. அவைகளை நாம் செயல்படுத்த முன்வரவேண்டும்.
கள்ளச் சாராயத்தை அகற்றி அதற்குப் பதில் "liquor Content" குறைந்த
வேறு பானங்களை விற்பனை செய்யலாம், அல்லது குறிப்பிட்ட நேரங்
களில் மட்டும் விற்பனை செய்யலாம் என்பன போன்றவற்றை நாம் ஆராய்ந்து
பார்க்க வேண்டும். மது அருந்துவதற்குப் பதிலாக மக்களை வேறு பழக்கத்
திற்குக் கொண்டு வந்து "Soft drinks" போல உடலுக்கு நன்மை
பயக்கக்கூடிய பானங்களைச் சாப்பிடுவது அதிகரிப்பதன் மூலமாக ஏழை
எளிய மக்களை இந்தத் தீய பழக்கத்திலிருந்து விடுதலை பெறச் செய்யலாம்.
சுகாதார வழிகள் பலவற்றை மக்களுக்குச் சொல்வதன் மூலம் இந்தப்
பழக்கத்திலிருந்து மக்களை விடுவிக்கலாம். அப்படிப்பட்ட வழிகள்தான்
பலன் அளிக்க முடியும். ஏனென்றால் வளர்ந்து வரும் ஏழ்மையும் அந்த

[திரு. ப. மாணிக்கம்] [1979 மார்ச் 17

ஏழ்மையைப் பயன்படுத்திடும் தீய சக்திகளும் இப்படிப்பட்ட தீய காரியங்களைச் செய்து கொண்டே இருப்பதால், நடைமுறையில் உண்மையில், பாதிக்கப்படுகிறவர்கள் ஏழை எளிய மக்களாகவே அமைந்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட கருத்துக்களை நாங்கள் எவ்வளவுதான் எடுத்துச்சொன்ன போதிலும் அரசு தான் கொண்டு வந்திருக்கிற சட்ட முன்வடிவை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டுவது என்பது இயல்பு. ஆனாலும் பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள், இங்கே பல்வேறு அனுபவங்களை எடுத்து வைத்திருக்கிறார்கள் அரசு இதை கவனத்தில் கொண்டு குறைந்தபட்சம் அனைத்துக் கட்சிக்காரர்களும் கேட்கிறார்கள் என்பதை உணர்ந்து, எல்லோரும். இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கத்தை ஆதரிக்கிறார்கள் என்றாலும், இதனால் ஏற்படும் விளைவுகளைக் கண்டு அச்சப்படுகிறார்கள் என்பதை கவனத்தில் கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தில் இணக்கம் காட்டி, இந்தச் சட்ட முன்வடிவை சட்டமாக்குவதற்கு முன்னாலே இதை ஒரு பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப இணங்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்** : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மதுவிலக்குச் சட்டம் கடுமையாக்கப்பட்டு, அதைப் பற்றி இந்த அவையில் விவாதம் நடைபெறுகிற போது, பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் கூறப்பட்டுள்ளன. பலரும் ஒரு கருத்தைத்தான் குறையாகச் சொன்னார்கள்.

மது விலக்குச் சட்டம் இந்த நாட்டிலுள்ள மக்கள் மதுவை அருந்தாமலிருக்க அதிக தண்டனை அளிக்கிறது என்றால், நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இந்தச் சட்டம் அரசாங்கம் எதிர்க் கட்சிக்காரர்களையும், தங்களுக்கு வேண்டாதவர்களையும் பழி வாங்குவதற்கான சாதனமாக அமைந்துவிடக்கூடாது என்ற கருத்தைத்தான் இந்த அவையில் பேசிய பலரும் சுட்டிக்காட்டினார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நான் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவன் என்ற முறையில் காந்தியடிகள் காலம்தொட்டு இன்று வரை நாட்டிலுள்ள மக்கள் குடிப் பழக்கத்திற்கு ஆட்பட்டு பாழாகிவிடுகிறார்கள், பெரும்பாலும் ஏழை எளிய மக்கள் இதனால் மிகவும் அல்லலுக்கு ஆளாகிறார்கள் என்ற காரணத்திற்காக மது விலக்கை இந்த நாட்டில் அமுல்படுத்த வேண்டும் என்பதில் நல்ல தீவிரமான நம்பிக்கை உள்ளவன். எனவே இந்தச் சட்டத்தின் மூலம் மதுவிலக்குத் திட்டம் இன்னும் தீவிரமாக்கப்படும் என்று பார்க்கிறபோது, இந்த மசோதவை ஆதரிக்க வேண்டியவனாக இருக்கிறேன். அதே நேரத்தில் எதிர்க் கட்சிக்



1979 மார்ச் 17] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

காரர்களைப் பழி வாங்க வேண்டுமென்று நடவடிக்கை எடுக்குமானால், அதை மிகவும் வன்மையாகக் கண்டிக்கக்கூடியவர்களாக இந்த நாட்டு மக்கள் இருப்பார்கள் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நண்பர் திரு. வீராசாமி அவர்கள் பேசும்போது, ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்தத் திருத்தச் சட்டத்தில் குடிப்பவர்களுக்கு தண்டனை அதிகமாக்கப்பட்டிருக்கிறது, ஆனால் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களுக்கு அந்த அளவுக்குத் தண்டனை இல்லை என்று குறிப்பிட்டார்கள். அந்த மாதிரி இந்தத் திருத்தச் சட்டத்தில் இருக்காது என்றுதான் நான் நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல், சாராயம் காய்ச்சுகிறவர்கள் விஷயத்தில் இந்தச் சட்டம் பலஹீனமாக இருந்தால், அதற்காக உண்மையிலேயே என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். குடிப்பவர்களுக்கு அதிக தண்டனை அளிப்பது என்பதற்குப் பதிலாக காய்ச்சுகிறவர்களுக்குத்தான் கடுமையான தண்டனை அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமுதாயத்தில் பல குடும்பங்கள் குடிப்பழக்கத்திற்கு ஆட்பட்டதன் காரணமாக, சீரழிந்து போயிருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது, இந்தச் சட்டத்தைத் தீவிரமாக அமுல்படுத்த வேண்டிய அவசியம் நமக்குப் புரிகிறது. முன்னாலே இருந்த மக்களுடைய வாழ்க்கை நிலையையும் இன்றைக்கு இருக்கிற மக்களுடைய வாழ்க்கை நிலையையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். தற்போது எங்கே எந்தக் கலவரம் நடந்தாலும் சரி, அதற்கு அடிப்படையான காரணம் சாராயம்தான். சாராயம் காய்ச்சுகிறவர்களாலும், குடிப்பவர்களாலும்தான் பெரும்பாலான கலவரங்கள் நடைபெறுகின்றன. எனவே இந்தக் கலவரங்களை ஒடுக்குவதிலும், அவைகள் ஏற்படாமல் தடுப்

(பிற்பகல் 12-10)

பதிலும் அரசாங்கத்தோடு நாம் ஒத்துழைக்க வேண்டியிருக்கிறது. இந்தச் சட்டத்தை வைத்துக்கொண்டு போலீஸ் அதிகாரிகள் தங்களுக்கு வேண்டாதவர்களைத் தொந்தரவு செய்வார்கள் என்று நினைக்கிறார்கள். ஏழை மக்கள் வாழும் மாவட்டங்களிலே, இடங்களிலே இந்தச் சட்டத்தை அமுல்படுத்துபவர்களாகச் சென்று, குடிப் பழக்கம் இல்லாதவர்களைக் கூட மிரட்டுவதற்கு, பயமுறுத்துவதற்கு, துன்புறுத்துவதற்கு இதைப் பயன்படுத்திக்கொள்வார்கள். இந்த மாதிரி நிலைமைகள் எல்லாம் இல்லாமல் ஏழையெளிய மக்கள் காப்பாற்றப்பட வேண்டும். சட்டத்தைப் பொறுத்தவரையில், சட்டத்தின் நோக்கம் நல்ல வகையில் நிறைவேற வாய்ப்பு இருக்கிறது. அதற்குக்

தக்கவாறு நாம் மதுவிலக்குக் கமிட்டிகள் அமைக்க வேண்டும். அன்றைய தினம் காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்தபோது, இந்த மதுவிலக்குக் கமிட்டிகளில் அப்போது காங்கிரஸ்காரர்கள் மட்டும்தான் இருந்தார்கள். பின்பு வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும்கூட, திராவிட முன்னேற்றக் கழகத் தவர்கள் தான் இருந்தார்கள். இன்றைக்குக்கூட பார்த்தால், ஆளுங்கட்சிக் காரர்கள்தான் இருக்க வேண்டும், மற்றவர்களுக்கு இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. சமுதாயத்திலே எல்லா அரசியல் கட்சிகளும் அதில் பங்கு கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒவ்வொரு இடத்திலும் இவ்வாறு கமிட்டிகள் அமைப்பதன் மூலம், சமுதாயத்தில் இருக்கும் எல்லா அரசியல் கட்சிகளும் இதில் பங்குகொள்வதன் மூலம், இந்த மதுவிலக்குச் சட்டத்தை அமுல்படுத்துவதில் நாம் அங்கம் வகிப்பதன் மூலம், ஆங்காங்கே போலீஸ் அதிகாரிகள் வேண்டாதவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுத்தால், அதைத் தடுப்பதற்கு வாய்ப்பாக அமையும். என்னுடைய கிராமத்திலே மதுவிலக்குக் கமிட்டி இருக்கிறது. அதிலே காங்கிரஸ்காரர்கள் அங்கம் வகிக்கிறார்கள், திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்தவர்கள் அங்கம் வகிக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தவரும் இருக்கிறார்கள். அந்த கிராமம் முன்பு சாராயம் காய்ச்சக்கூடிய இடமாக இருந்தது. இன்றைய தினம் பார்த்தால், ஒரு 10 மைல் சுற்றளவுக்கு அங்கே சாராயம் இல்லை. போலீஸ் அதிகாரிகளும் அங்கு தவறாக நடக்கும் வாய்ப்பில்லை. தவறான முறையில் போலீஸ் அதிகாரிகள் யார் மீதாவது கேஸ் போட்டால், நாங்கள் கண்டிக்கிறோம். பணம் வாங்கினாலோ, அதற்கு உடந்தையாக இருந்தாலோ அவர்கள் கண்டிக்கப்படுகிறார்கள். இந்த நிலையை சமுதாயத்தில் நாம் செயல்படுத்திப் பார்க்கும்போது, மதுவிலக்கின் மூலம் ஏற்படும் குற்றங்களை, தவறான போக்குகளைத் தடுக்க முடியும் என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். அதை ஒழிக்க வேண்டும் என்று பேசுகின்ற நாம், அதனால் என்னென்ன தீமைகள் இந்த மாநிலத்தில் ஏற்படுகின்றன என்பதை உணர்ந்து அதை ஒழிக்க எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். அரசாங்கம் மட்டும் தான் இதற்குப் பொறுப்பு என்ற நிலை இல்லாமல், எல்லோரும் சேர்ந்து இந்தச் சட்டம் நல்ல முறையில் செயல்படுவதற்கு ஒத்துழைத்தால், இந்தச் சட்டத்தை வைத்துக் கொண்டு சமுதாயத்திலே ஒரு நல்ல நிலையை ஏற்படுத்த முடியும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. மாணிக்கம் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். சமுதாயத்தில் இப்படிப்பட்ட குற்றங்களைச் செய்பவர்களை சிறையில் அடைப்பதன் மூலம்



அவர்களுக்கு மாற்றலான ஒரு நல்ல நிலை ஏற்பட்டு விடுமேயானால் நல்லது தான். மது அருந்தியவர்கள் தங்களுடைய நிலை கெட்ட நிலையிலேதான் இப்படிப்பட்ட குற்றங்களைச் செய்கிறார்கள். சமுதாயத்தில் மற்ற குற்றங்களைச் செய்பவர்கள் நல்ல உணர்வோடு, தவறு செய்கிறோம் என்பதைத் தெரிந்துதான் தவறுகளைச் செய்கிறார்கள். ஆனால், மது அருந்தியவர்கள் மட்டும் தங்களுடைய நிலையை இழந்து தவறுகளைச் செய்கிறார்கள். அதைப் பார்க்கும்போது, சிறைச்சாலையிலே, அவர்களுக்கென ஒரு தனியான முறையிலே, மீண்டும் ஒரு நல்ல குடிமகனாக அவன் வரும் அளவுக்கு, அவன் மீண்டும் குடிக்க முடியாத அளவுக்கு பழக்கவழக்கங்களை அமைத்துக் கொள்ளும் அளவுக்கு, ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். அந்த வகையிலே சிறையில் நடவடிக்கைகள் அமைய வேண்டும். ஆகையால் சமுதாயத்திலே கள்ளச் சாராயம் அருந்துகின்ற நிகழ்ச்சிக்கு கடுமையான தண்டனை அளிப்பது நியாயம் என்று நாம் ஒத்துக்கொண்டு, எவ்வளவுதான் தண்டனை இருந்தாலும், அதை ஒத்துக்கொண்டு இந்தச் சட்ட முன்வடிவை நாம் ஆதரிக்கிறோம் என்றால், அவர்களைத் திருத்தி ஒரு நல்ல குடிமக்களாக்க வேண்டும் என்பதற்காகத்தானே தவிர வேறல்ல. குற்றம் செய்பவர்கள் சிறைச்சாலைக்குச் சென்று, அங்கிருந்து மீண்டும் வரும்போது திருந்தியவர்களாக வரவேண்டும். அதற்குரிய வகையில் இந்தச் சட்டத்தை நல்லவிதமாக அமுல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசும்போது, பார்த்தேன். அவர்கள் பேசும்போது, இந்தச் சட்ட முன்வடிவை முழுக்க முழுக்க ஆதரித்தார்கள். ஆனால் இந்தச் சட்டத்தை வைத்துக்கொண்டு பழிவாங்குகிறார்கள், தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்ற கருத்துக்கள்தான் மேலோங்கி இருந்தன. திரு. மாணிக்கம் அவர்கள் பேசும்போது கூட, அந்தக் கருத்துக்கள்தான் தொனிக்கின்றன. ஏழையெளிய மக்கள் மிரட்டப்படுவதற்கு, துன்புறுத்தப்படுவதற்கு இந்த அதிகாரங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்ற கருத்துக்கள் பரவலாக இருக்கின்றன. ஆகவே, இந்தச் சட்டம் அமுல்படுத்தும்போது, அரசாங்கம் தக்கவாறு கண்காணிக்க வேண்டும். மஹாத்மா காந்தி அவர்கள் இந்த நாட்டிலே தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் என்று விரும்பினார்கள். அது ஒழிக்கப்பட்டுவிட்ட, புரட்சிகரமான நிலையை நாம் இன்றைக்கு சமுதாயத்தில் பார்க்கலாம். அதுபோல, தீண்டாமையை ஒழிக்கப்பாடுபட்ட இந்த சமுதாயத்திலே மதுவிலக்கை அமுலாக்க ஒரு சட்டம் கொண்டுவந்து,

மது அருந்தாத ஒரு நல்ல சமுதாயத்தைப் படைக்க இருக்கிறோம் என்பதைப் பார்க்கும்போது, மஹாத்மா காந்தி அவர்களின் எண்ணம் நிறைவேறும் என்ற நிலை இருப்பதால், இதை ஆதரித்து அமைகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, நமது அவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்ற மதுவிலக்குச் சட்ட முன் வடிவைப் பற்றி எனது கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு முன்னால், திராவிட முன்னேற்றக் கழகம் மதுவிலக்கை முழுக்க முழுக்க . . . . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன். திரு. அப்துல் வகாப் அவர்கள் பேச வேண்டும் என்று இருந்தார், கொஞ்சம் தாமதமாக வந்துவிட்டார். அவர் பேசட்டும்.

(திரு. ம. சங்கரலிங்கம் இருக்கையில் அமர்ந்தார்).

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவர் அவர்களே, நான் கொஞ்சம் தாமதித்து வந்தாலும், எனக்கு விசேஷமான முறையிலே பேச அனுமதி கொடுத்தமைக்காக முதற்கண் ஆழ்ந்த நன்றியைத் தங்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன். மதுவிலக்கு சம்பந்தமாக விவாதத்திற்கு வந்திருக்கக் கூடிய மசோதா ஒரு நல்ல நோக்கத்தைக் கொண்ட மசோதா. நான் அதை வரவேற்கிறேன். ஆனால் அந்த மசோதாவிலே காணப்படக்கூடிய ஷரத்துக்களைப் பார்த்தால், அது அமுல்படுத்தப்பட வேண்டிய முறையிலே நல்ல முறையில் அமுல்படுத்த முடியாத ஒரு சட்டம் என்று நான் குறிப்பிடுவேன். நோக்கம் நல்ல நோக்கம். அந்த நோக்கத்தை நிறைவேற்ற முடியுமா என்று பார்த்தால், இந்த மசோதாவின் மூலம் அந்த நோக்கத்திற்குக் கிடைக்கக் கூடிய பலன் பூஜ்யம் என்றுதான் நான் குறிப்பிடுவேன். எங்களைப் நோக்கம் நல்ல நோக்கம். அந்த நோக்கத்தை நிறைவேற்ற முடியுமா என்று மது குடிக்கக்கூடாது என்றும் தடை போட்டிருக்கிறோம். இந்திய தேசத்திலே 40 வருடங்களுக்கு முன்பாகவே முதல் முதல் சேலம் ஜில்லாவிலே மதுவிலக்கைக் கொண்டு வந்த பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. ஆனால் இஸ்லாமிய மதம் 1,400 ஆண்டுகளுக்கு முன்பு மதுவிலக்கை அமுல் படுத்தியிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். முஸ்லீம் லீக்கைப் பொறுத்தமட்டில், எப்போதும் நாங்கள் மதுவிலக்கை ஆதரித்து வந்தவர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் மதுவிலக்கை ரத்து செய்த சமயத்திலே, அதனுடைய தோழமைக் கட்சியாக இருந்தும் கூட, நாங்கள் வன்மையாக அந்தக் கொள்கையை எதிர்த்தோம். எங்கள் எதிர்ப்பு தோழமை முறிந்து





விடுமோ என்று சந்தேகப்படக்கூடிய அளவுக்கு மேலோங்கியது. அதைக் குறித்து கலைஞர் அவர்களிடம் பத்திரிகையாளர்கள் 'முஸ்லிம் லீக்கோடு கருத்து வேற்றுமையாக இருக்கிறதே' என்று கேட்டபோது, "தங்கப் பாத்திரத்தில் விழுந்த கோடு" என்று அவர்கள் சொன்னார்கள். கோடு என்றால், அதைச் சரிசெய்து கொள்ளலாம். கீறல் என்று சொன்னதாகத் தான் எனக்கு நினைவு. அதற்கு முஸ்லிம் லீக் சார்பிலே சொன்ன பதில் 'அது தங்கப் பாத்திரத்தில் விழுந்த கீறல் அல்ல, உடைந்து விட்ட மண் பானையில் விழுந்த கீறல்' என்ற அளவிலே பதில் சொன்னோம்.

(பிற்பகல் 12-20)

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு, அவரைத் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவர் நம்முடைய மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற சில மாதங்களில் ஒரு கேள்வியை நான் இதே சபையிலே கேட்டேன். 'மதுவிலக்கைப் பொறுத்து புதிய அரசினுடைய கொள்கை என்ன?' என்று கேட்டபோது, 'இப்போதைக்கு அதிலே ஒரு மாற்றமும் இல்லை' என்று பதில் சொன்னார்கள். நான் குறுக்கிட்டுக் கேட்டேன், "இப்போதைக்கு மாற்றம் இல்லையென்றால், சமீப காலத்திலே மாற்றம் வரும் என்ற அர்த்தம் தொக்கி நிற்கிறது; இது முறையான பேச்சாகத் தெரியவில்லையே; இந்த அரசு இருக்கும் வரைக்கும் மதுவிலக்கு ரத்து செய்யப்படாது என்ற வாக்குறுதியைத் தர வேண்டும்" என்று கேட்டேன். எனக்கு அவர் நேரிடையாகப் பதில் சொல்லாமல் தந்த பதில் வெறும் புன்னகைதான். நான் சந்தேகப்பட்டதைப் போலவே, சில மாதங்களுக்கு அல்லது சில வருடங்களுக்குப் பிறகு மதுவிலக்கை ரத்து செய்தார்கள்.

முன்பு ஒரு தடவை பேசுகிறபோது, இந்தச் சபையிலேயே சொன்னேன், "திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இன்றைக்கு இல்லையென்றால், அதற்குள்ள பல காரணங்களில் அடிப்படைக் காரணம் மதுவிலக்கை ரத்து செய்ததுதான்" என்று. மதுவிலக்கை ரத்து செய்ததுதான் அவர்களுடைய ஆட்சி வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. அந்தக் கொள்கையால், blessing in disguise என்ற மாதிரி அவர்கள் செய்த தவறினால், இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இலாபம் அடைந்திருக்கிறார்கள் என்ற கருத்தை நான் சொன்னால், அதை யாரும் மறுக்க முடியாது.

[1979 மார்ச் 17 [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

இந்தச் சட்டமுன்வடிவிலே காணப்படும் தண்டனைகள் அளவுக்கு மீறிய தண்டனைகளாகத் தென்படுகின்றன. குற்றம் செய்தால் தண்டனை உண்டு. சிறிய குற்றத்திற்குச் சிறிய தண்டனையும், பெரிய குற்றத்திற்குப் பெரிய தண்டனையும் கொடுக்கலாம். சைக்கிளில் லைட் இல்லாமல் போன குற்றத்திற்காக அதற்குரிய தண்டனையைக் கொடுக்கலாம், ஆனால் அதற்குத் தூக்குத் தண்டனை கொடுப்பதென்றால் பொருத்தமாக இருக்குமா? (சிரிப்பு) இட்டத்தட்ட அந்த முறையிலேதான் இதுவும் அமைந்திருக்கிறது. எவ்வளவுக்கெவ்வளவு தண்டனைகள் கடுமையாக ஆக்கப்படுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு போலீசுக்கு மாமூல் கூடுதல் ஆகிறது; ஆதனால் சீர் திருத்தம் ஏற்படுகிறது என்பதைக் காண முடியவில்லை. நாம் கண்ட பலன் அதுதான். ஏனென்றால் இதைப் பெரிய குற்றம் என்று நான் சொல்லுவதற் இல்லை. கோவையிலே ஒருவன் குடித்தால் குற்றம், அதற்குப் பக்கத்திலே இருக்கிற பாலக்காட்டிலே குடித்தால் குற்றம் இல்லை. விழுப்புரத்திலே குடித்தால் குற்றம், அதற்குப் பக்கத்தில் உள்ள பாண்டிச்சேரியில் குடித்தால் குற்றம் இல்லை. இந்தியா பூராவும் உள்ள மாநிலங்களில் குஜராத், தமிழ் நாடு ஆகிய மாநிலங்களில் குடித்தால்தான் குற்றம். டில்லியிலே, கல்கத்தாவிலே, பம்பாயிலே, அய்தராபாத்திலே குடித்தால் குற்றம் இல்லை. அங்கேயெல்லாம் குற்றம் இல்லை என்று சொல்லக்கூடிய ஒரு சாதாரண விஷயத்திற்கு நாடு கடத்தல் என்ற அளவுக்கு தண்டனை கொடுப்பது, ஏகப்பட்ட காலம் உள்ளே இருக்க வேண்டும் என்று தண்டனை கொடுப்பது என்பது வரம்பு மீறிய, அளவுக்கு மீறிய தண்டனை. இதை நடைமுறைப்படுத்தியதிலே நாம் கண்ட பலன் என்ன? இந்த தண்டனையை அமுல்படுத்துகிற அதிகாரிகள், போலீஸ்காரர்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தவறு செய்தால் அவர்களைப் பிடிக்கவே பயப்படுகிறார்கள். அவர்களைப் பிடித்தால், மேலே உள்ளவர்கள் தம் மீது என்னென்ன நடவடிக்கை எடுப்பார்களோ என்று பயப்படுகிறார்கள்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'நாடு கடத்தல்' என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒரு வார்த்தை இருக்கிறதா என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**சில மாண்புமிகு உறுப்பினர்கள்:** ஊரைவிட்டு அனுப்புவது என்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.



1979 மார்ச் 17]

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** ஆகவே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தவறு செய்தால், அவர்களைத் தண்டிக்கக் கூடிய வாய்ப்பு இல்லை. ஆனால் எதிர்க் கட்சிக்காரர்கள் தப்பு செய்தால், அவர்கள் கடுமையான தண்டனைக்கு உள்ளாகக் கூடிய அளவுக்கு, பாரபட்சம் காட்டக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே இதை அமுல்படுத்தினால், எதிர்பார்த்த பலன் கொடுக்காத நிலை இருக்கிறது.

என்னுடைய சிறு அனுபவத்தை இந்தச் சமயத்திலே சொல்ல விரும்புகிறேன். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் நான் ஆட்டோ ரிக்ஷாவிலே வந்து கொண்டிருந்தேன். எம்.எல்.ஏ., ஹாஸ்டலுக்குப் போக வேண்டும் என்று டிரைவரிடம் சொன்னேன். எம்.எல்.ஏ. ஹாஸ்டல் என்று சொன்னதால், நான் எம்.எல்.ஏ. வா என்று கேட்டார் அவர். இல்லை, நான் எம்.எல்.சி. என்று சொன்னேன். உடனே அவர் "இப்போது குடித்தால் 6 மாதத் தண்டனை என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா?" என்று கேட்டார். நான், ஆமாம் என்றேன். "நாங்கள் பகல் எலல்ாம் உழைத்துவிட்டு அசதியாக இருக்கும்போது, ஒரு கிளாஸ் குடித்தால் எங்களுக்கு நிம்மதியாக இருக்கும். ஆனால் குடித்தால் 6 மாதம் தண்டனை என்றால், எங்களுடைய பிள்ளைகுட்டிகளெல்லாம் தெருவிலே நிற்கிற நிலை வரும். இது என்ன அநியாயம்?" என்றார். 'அப்படியானால் குடிக்காமலே விட்டுவிடு', என்றேன். 'அது எப்படி முடியும்?' என்றார். முடியாது என்றால், உன்னைப் பிடிக்கிற போலீஸ்காரனைக் கவனித்துவிடு, உள்ளே போகாமல் தப்பித்துக்கொள்ளலாம் என்றேன். அப்போது அந்த டிரைவர் சொன்னார், "நான் அண்ணா தி.மு.க. சார். எலெக்ஷனிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 3 தடவை ஓட்டுப் போட்டேன். இப்போது எலெக்ஷன் வந்தால் அவர்களை எதிர்த்து ஓட்டுப் போடுவேன்" என்றார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிற செல்வாக்கை இந்தச் சட்டத்தால் பெருவாரியாக இழக்கப் போகிறார்கள் என்ற மக்களுடைய கருத்தைத்தான் அவர் சொன்னார். இதை என்னுடைய சொந்த அனுபவத்தில் பார்த்தேன். நீண்ட நேரம் பேச வாய்ப்பு இல்லையாதலால் கடுமையான தண்டனை அளித்திருப்பதைத் தளர்த்த வேண்டுமென்ற கோரிக்கையோடு நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே. நமது அவையில் விவாதிக்கப்படுகிற மதுவிலக்குச் சட்ட முன்வடிவின்மீது எனது கருத்தை எடுத்துச் சொல்வதற்குமுன் நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக்

கழகம் மதுவிலக்குக் கொள்கையில் ஆழமான நம்பிக்கையுடையது என்பதையும், மதுவிலக்கை மிகச் சிறப்பாக நடத்தி நாட்டு மக்களிடையே மது இல்லாத நல்லொழுக்கத்தை வளர்த்துக் கொள்வதிலே எல்லோரையும்விட அதிக அக்கறை கொண்டு அந்த எண்ணத்திலே தன் சிந்தனையைச் செலுத்திக் கொண்டு பணியாற்றுகிற இயக்கம் என்று சொல்லி, அதன் கருத்தை நான் எடுத்து வைக்க முற்படுகிறேன்.

இந்த அவையிலே பேசிய எல்லா நண்பர்களும் மதுவின் கொடுமையை எடுத்துச் சொன்னார்கள். மதுவிலக்கினுடைய தேவையையும் எடுத்துச் சொன்னார்கள். இதில் இரண்டு கருத்து இருக்கவே முடியாது. மது உண்பதால் கேடுகள் ஏற்படுகின்றன. ஆகவே மதுவை உண்ணுகிற பழக்கத்தை மாற்றி, மதுவிலக்கினைச் சிறப்பாக அமுல்படுத்த வேண்டியது இன்றியமையாதது என்பதில் மாறுபட்ட கருத்து எதிர்த் தரப்பிலே உள்ளவர்களிடத்திலும் இல்லை, அங்கே ஆளும் கட்சியில் உள்ளவர்களிடத்திலும் இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்வதில் தவறில்லை.

இங்கே பேசியவர்களுடைய பேச்சுக்களையெல்லாம் கவனிக்கும் போது, ஆளும் கட்சியில் இருந்தாலும், எதிர்க் கட்சியில் இருந்தாலும், எல்லா தரப்பிலிருந்தும் இந்தச் சட்ட முன்வடிவு முழுமையாகப் பாராட்டப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதைச் சுட்டிக்காட்ட இங்கே தேவை ஏற்படுகிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் நிதிநிலை அறிக்கையின் மீது பேசும்போது கூட மதுவினால் ஏற்படுகிற கேடுகளை எடுத்துச் சொல்லி, மதுவிலக்கை அமுல்படுத்துவதிலே ஏற்படுகிற தவறுகளையும் சொல்லி, அதில் காவல் துறையினர் எவ்வாறு தவறுகிறார்கள் என்று சொல்லி, காவல் துறையினரே சாராயம் காய்ச்சுபவர்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்றும், சாராயம் காய்ச்சுவதை நிறுத்தியவனை அழைத்து அவனுக்கு நிதி கொடுத்து காய்ச்சச் சொல்கிறார்கள் என்றும் சொன்னார்கள்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. ஈ. எஸ். வெங்கடேசன் அவர்கள், மதுவிலக்கினால் ஏற்பட்ட பல வழக்குகளை நீதிபதி என்ற முறையிலே ஆராய்ந்த பார்க்கிற அனுபவத்தைப் பெற்றவர் என்ற வகையில், மதுவிலக்குச் சட்டத்தை அமுல்படுத்துகிற அதிகாரிகள் நீதிபதியின் காரையே நிறுத்துவதற்குக்கூட தங்களுடைய அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார்கள் என்று சொன்னார்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் இன்று பேசுகிறபோது, மதுவிலக்கை மிகத் தீவிரமாக அமுல்படுத்த வேண்டும் என்றும், காவல் துறையில் நல்லவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் தங்களுடைய நல்லெண்ணத்துடன் செயல்பட முடியாமல் ராஜினாமா செய்கிறார்கள் என்றும் சொன்னார்கள். இவைகளெல்லாம் ஆளும் கட்சியிலே இருந்து வருகிற வாக்குமூலங்கள். திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் நேற்று இங்கே பேசுகிறபோது ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டி, நேற்று மாத்திரம் அல்ல, அதற்கு முன்னாலும் நிதிநிலை அறிக்கையிலே பேசுகிறபோதும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்—ஒரு குறிப்பிட்ட காவல் துறை அதிகாரியைப்பற்றிச் சொல்லி அவர் அயல்நாட்டு மதுவும், கோழியும் கேட்கிறார் என்று சொல்லி, இதைப் பல முறை கூறியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று இங்கே பகிரங்கமாகவே குற்றம் சாட்டியிருக்கிறார்கள். இன்னும் இதைப்போல் ஒவ்வொருவர் பேசுகிறபோதும் அவரவர்களுடைய அனுபவத்தைச் சொன்னார்கள். எடுத்துக்காட்டாக நானும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

மதுரை மாவட்டம், வேடசந்தூர் ஒன்றியத்தில், எரியோடு பஸ் நிலையத்தில் ஒரு போர்டு எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. அதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த போர்டினுடைய போட்டோஸ்டெட் காப்பியை வைத்திருக்கிறேன். தேவையானால் தருகிறேன். விளம்பரத் தட்டிக்குச் சாயம் பூசி, பலவித வண்ணங்களில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-30)

அதிலே என்ன எழுதியிருக்கிறார்கள் என்றால்,

"எரியோடு காவல் துறையினரின் அரசு விரோத
செயல் காணீர் !

(1) மது விலக்கு சட்டத்தை அமுல் நடத்தவில்லை,

(2) குற்றமற்றவர்களைத் தண்டிக்கிறார்கள்,

(3) லஞ்ச ஊழலை வளர்க்கிறார்கள்,

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 மார்ச் 17

(4) காவலர்களே காலித்தனம் செய்கிறார்கள்.

(5) இது அனைத்திற்கும் ஆய்வாளர் அவர்களே துணை புரிகிறார், அரசு மேலதிகாரிகள் எரியோடு காவல் துறையினர் மீது தக்க நடவடிக்கை எடுத்து நீதி வழங்க வேண்டுகிறோம்.

நடவடிக்கை எடுக்காவிட்டால், 20-3-1979-ம் தேதி முதல் தொடர் உண்ணா விரதம் மேற்கொள்ளப்படும்.

இவண்
அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கிளை, எரியோடு."

இந்த நோட்டீஸ் பிரிண்ட் செய்தது ஜி.கே. ஆர்ட்ஸ் என்பவர்கள். நான் இது போன்ற சம்பவங்களை எல்லாம் மேலும் அடுக்கிக்கொண்டே போக முடியும். விரிவு அஞ்சி விடுகிறேன். இவைகளே உண்மையான நிலைமைகளைப் படம் பிடித்துக் காட்டும் என்று நம்புகிறேன். மதுவிலக்குச் சட்டம் என்பது மதுவை ஒழிக்க வேண்டும் என்று கருதித்தான் வருகிறது. இது மனித சமுதாயம் தோன்றிய நாள் முதல் இருப்பது. இங்கே உறுப்பினர்கள் வள்ளுவருடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அதற்கென ஒரு அதிகாரத்தையே வைத்திருப்பதைச் சொல்லி நம் மாண்புமிகு தலைவர் அவர்களும் விளக்கினார்கள். அவர்கள் அறத்துப் பாலிலே பல குறள்களைச் சேர்த்திருக்கிறார்கள். அதைப்பற்றி உபதேசம் செய்தும்கூட இதைத் திருத்திக்கொள்ளாத நிலையிருக்கிறது.

அத்துடன் பொருட்பாலில் அரசினுடைய கடமையாகவும் அதைச் சேர்த்தார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையே வள்ளுவர் அரசுக்குக் கடமையாகவும் எடுத்து வைத்து, மனிதருக்கு கள்ளுண்ணாமை, வெஃகாமை, கொல்லாமை எல்லாம் ஆன்றோர்களால் எண்ணப்பட்டு வந்தவை என்றார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நான் வாதத்திற்காகச் சொன்னேன். சட்டத்திலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ளலாம் சான்றோர்கள் சாபத்திலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது என்று சொன்னேன். இரண்டு காரணங்களைக் கொடுத்திருக்கிறார் என்று சொன்னேன்.



1979 மார்ச் 17]

**திரு. ம. சங்கரலிங்கம்:** சட்டத்திலிருந்து தப்ப முடிகிறது, ஆனால் சான்றோர்கள் சாபத்திலிருந்து தப்ப முடியாது என்பது வள்ளுவர் கருத்து. இந்த அரசு சான்றோர்களைக் காக்கின்ற அரசு. அப்படிப்பட்டவர்களுக்குப் பதவி கிடைக்கவில்லை. ஆனால் மது உண்பவர்களுக்குப் பதவி கிடைக்கிறது. பொருட்பாலிலே இருக்கின்ற அதிகாரத்தை அமுல் படுத்தவேண்டிய அரசு இப்படிப்பட்டவர்களுக்கு உயர்ந்த பதவியைக் கொடுக்கிறது. அந்தப் பதவியிலே இவர்களை வைத்திருக்கிறார்களே என்று சொல்கிறார்கள். ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு என்றுகூட அவருடைய பாட்டு இருக்கிறது. அது போல பகிரங்கமாகத் தெரிந்தே அவருக்கு ஆராயாது கொடுத்திருக்கிறார்கள். அரசு தன்னுடைய கடமையில் தவறுகிறது என்று சொல்லிக் கொள்கிறேன். மது விலக்குச் சட்டத்தை சட்ட ரீதியாக, சம்பிரதாய ரீதியாகத்தான் அரசு கொண்டு வருகிறதே தவிர, இந்த அரசுக்கு உண்மையிலேயே அதில் நம்பிக்கை இல்லை. சட்டம் தான் கொண்டு வருகிறார்கள். நாங்கள் சட்டத்தை எதிர்க்கவில்லை. ஆனால் மது விலக்குக் கொள்கையை அரசு உறுதியாக, உண்மையாக அமுல்படுத்தவில்லையே என்றுதான் சொல்கிறோம். அரசு மதுவிலக்கை நம்புவதாக இருந்தால், என்ன செய்திருக்க வேண்டும்? கள் குடிப்பவர் தங்கள் கட்சியிலே இருக்கக்கூடாது என்று சொல்ல வேண்டும். மது உண்பவன் கட்சியிலே இருக்கக் கூடாது. மது உண்பவனுக்குப் பதவி கொடுக்கக் கூடாது. பதவியிலே இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். அப்படி இருக்கிறதா? அதற்குள்ளே நான் மேலும் போக விரும்பவில்லை. அவரை Working Committee-யில் போடவில்லை என்று தான் எல்லோரும் சொன்னார்கள். ஆனால் என்ன செய்கிறார்கள் என்பதை ஒவ்வொருவரும் அவருடைய மனதைத் தொட்டுப் பார்த்து, அதற்குப் பிறகு சொல்ல வேண்டும். இதையெல்லாம் நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இது வெறும் சட்டத்தால் அமுல்படுத்திவிடுகின்ற ஒன்று அல்ல.

எல்லா மாநிலங்களும் எமர்ஜென்சியைத் தூற்றுகிறார்கள். சட்டத்தால் தான் மதுவிலக்கை நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னால், முதலில் உயர்ந்த பதவியிலே இருப்பவர்கள் அதை நிறைவேற்றுகிறார்களா, உண்மையாக இருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். இந்தத் தீய பழக்கத்திற்கு ஆட்பட்டவர்கள், உயர் பதவிகளுக்குத் தகுதியற்றவர்கள் என்று சொல்ல வேண்டும். இதைச் சுட்டிக்காட்டி அவர்களைத் தடை செய்கிறார்களா? அரசு அதைச் செய்கிறதா என்பதை இந்த சந்தர்ப்பத்திலே எண்ணிப் பார்க்க

வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் உள்ளம் தொட்டுச் சொல்ல வேண்டும். எதிர்க்கட்சி என்ற நிலையிலே இருந்துகொண்டு நான் கேட்பதாக நினைக்க வேண்டாம்.

மனிதாபிமானத்தோடு இந்தக் கொள்கையிலே நம்பிக்கையுண்டா என்று உள்ளம் தொட்டுச் சொல்ல வேண்டும். சுதந்திரம் பெற்ற 30 ஆண்டுக்காலத்திற்குப் பிறகு, பல சமுதாயச் சீர்திருத்தங்கள் தோல்வியடைந்திருக்கின்றன. நாம் பட்ட தோல்விக்குக் காரணம் யார்? இந்தியாவில் அன்று முதல் இன்று வரை இருக்கின்ற பிரதமர்கள் தான். சுதந்திரம் கிடைத்த நாள் முதல் இது வரை அவர்கள்தான் பொறுப்பு ஏற்க வேண்டும். சாதாரண மக்கள் இதற்கு பொறுப்பு அல்ல. எல்லாச் சீர்திருத்தங்களையும் மேலேயிருந்துதான் கீழே கொண்டுவர வேண்டும். போலீஸ்காரர்கள் மேல் பதவியில், உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடிவதில்லை. அவர்கள் பக்கத்திலே அவர்கள் வரமுடியுமா? கிட்டே போக முடியுமா? * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஏற்கெனவே நான் கொடுத்திருக்கின்ற தீர்ப்பை இப்போதும் காப்பாற்ற வேண்டியதாக இருக்கிறது. திரும்பத் திரும்ப வருகின்ற அந்தப் பகுதியை நீக்கிவிட வேண்டும்.

**திரு. ம. சங்காலிங்கம்:** சரி. நானும் அதை எடுத்து விடுவதற்கு ஒப்புக் கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Anyway I admire the enthusiasm of Thiru Sankaralingam, the hon. the Leader of the Opposition and the hon. Member Thiru Muthuswamy in coming forward to expose certain things.

**திரு. ம. சங்காலிங்கம்:** தலைவர் அவர்களே, சில நன்மைகளை நாம் செய்வதோடு, முதலில் நம்மையும் திருத்திக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

'தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என் குற்றமாகும் இறைக்கு' என்று குறள் சொல்கிறது.

---

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



நாமும், நம்மைச் சேர்ந்தவர்களும், நம்மோடு சேர்ந்தவர்களும் நாம் இருக்கும் இடங்களிலே செயல்படுத்தி நடத்திவிட்டு, பிறகு நாம் அதை அடுத்த பகுதிக்குக் கொண்டு சென்றால் நல்லது. இன்று நடப்பதை எல்லாம் நாட்டு மக்கள் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருப்பதை நாமும் பார்க்கிறோம். இந்தச் சட்டம் இல்லாததனால், இந்த மதுக் குற்றம் பெருகியிருக்கிறது என்று யாரும் சொல்லவில்லை. இந்த அவையிலே, பேரவையிலே நிகழ்ந்திருக்கின்ற பல விவாதங்களில் கள்ளச் சாராயம் பற்றி மிகுதியாகப் பேசப்பட்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் மது இருக்கிறது, கிடைக்கிறது என்று நாங்களும் சொல்லிகொண்டிருக்கிறோம். சாராய சாம்ராஜ்யமாக இருந்துகொண்டிருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதை எல்லாம் சட்டம் கொண்டு வந்துதான் தடுக்க வேண்டும் என்று அரசு சொல்லியிருக்கிறது. அதற்காகத்தான் சட்டம் கொண்டுவந்திருக்கிறோம் என்று அரசு சொல்கிறது. இந்தச் சட்டத்தை முழு அளவுக்கு ஆதரிக்க வேண்டும் என்று சட்ட அமைச்சர் அவர்கள் கேட்க இருக்கிறார்கள். நாங்கள் இதை ஆதரிக்கிறோம், ஆனால் இந்தச் சட்டத்தால் இவைகளையெல்லாம் நிறைவேற்ற முடியுமா, இந்தச் சட்டம் அதற்குரிய முறையில் அமைக்கப்பட்டிருக்கிறதா என்பதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய சீரிய கருத்துக்கு எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதனுடைய தோல்விக்குக் காரணம் என்ன? இதை அமுல்படுத்துகின்ற இயந்திரம் பழுது பட்டுவிட்டது என்பதுதான் காரணம். இயந்திரம் நன்கு செயலாற்றுவதற்கு முன், அது பழுதுபட்டிருக்கின்றதா என்பதையும் பார்க்க வேண்டும். பழுதுபட்ட இயந்திரத்தைச் சரியாக்குவதற்கு முன்பே அந்த பழுதுபட்ட இயந்திரத்திற்குள் சக்தி வாய்ந்த மருந்துகளைப் போட்டுப் பிரயோஜனம் என்ன? துப்பாக்கிக்குள் வேட்டு மருந்து போட்டு என்ன பயன்? முதலில் துப்பாக்கியைச் சரிப்படுத்த வேண்டும். இப்படி அமல்படுத்துகின்ற போது, இயந்திரத்திலே இருக்கக்கூடிய கோளாறுகளை நீக்க வேண்டும். இந்தச் சட்டத்தில் இந்த இந்த விஷயங்களை எப்படித் திருத்துவது என்று சொல்லப்பட்டிருக்கிறதா? இந்த ஏற்பாடுகள் செய்திருக்கிறோம் என்று ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா? இல்லையே. இது கடுமையான சட்டம் என்று எல்லோரும் சொல்கிறார்கள். மதுவிலக்குச் சட்டத்தை மிகத் தீவிரமாக ஆதரித்துப் பேசிய முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் அவர்கள்கூடச் சொன்னார்கள் இது ஏழைகளைத் துன்புறுத்தும் என்று தான் அஞ்சுவதாகச் சொன்னார்கள். அப்படியானால் இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால் எத்தனை மதுவிலக்கு வழக்குகள் போடப்பட்டன? சட்டம் இல்லாததனால்,

நீதிமன்றத்திலே குற்றவாளிகள் விடப்பட்டார்களா? உங்கள் சட்டம் சரியாக இயங்கவில்லையா? அடிக்கடி சட்டத்திருத்தங்களைக் கொண்டு வருவதைப் பார்க்கும்போது, இந்தச் சட்டத்தைத் செயல்படுத்துகின்ற நீதிபதிகள் குற்றவாளிகளை விட்டுவிடுகின்றார்களா, அல்லது இப்போது இருக்கின்ற சட்டம் போதுமானதாக இல்லையா, அல்லது இருக்கின்ற சட்டம் சக்தி குறைந்ததாக இருக்கிறதா என்றுதான் கேட்கிறேன். "அப்படி இருப்பதால்தான் நாங்கள் சட்டத்தை வலுவுள்ளதாக ஆக்குகிறோம்" என்று சொன்னால், அதை நாங்கள் புரிந்துகொள்வோம். இதற்கான சட்டம் இப்போதும் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

(பிற்பகல் 12-40)

அதுவே போதும். அதைச் செயல்படுத்துகிற துறை, செயல்படுத்துகிற முறை, செயல்படுத்துகிற அதிகாரிகள் சரியாக இல்லை. போலீஸ் இலாகா பாவம் செய்த இலாகாவா? அந்த இலாகாவால் மதுவிலக்கை அமுல்படுத்த இயலாதா? போலீஸ்காரர்கள் நல்லவர்கள் இல்லையா? உண்மையாக சட்டத்தை அமுல்படுத்து என்றால், 2 மாதங்களுக்குள் போலீஸ் இலாகாவினர் அமுல் படுத்துவார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் போலீஸ் இலாகாவைச் செயல்பட விடவில்லை. இந்தச் சட்டத்தைக் கொண்டு, தவறு செய்தவர்களை அவர்களால் கைது செய்ய முடியாது. அப்படிச் செய்தால், எங்கேயிருந்தோ ஃபோன் வரும். அதை வெளியிலேயும் சொல்ல முடியாமல்—சொன்னால் ஆபத்து வரும்—அவர்கள் ராஜினாமா செய்து வருவதை அழகாக ஒத்துக்கொண்டார்கள். ஒரு சட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்றால், எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும்—ஆட்சிக் கட்சியைக் குறை சொலவதாக நினைத்துக்கொள்ளாதீர்கள், எங்கள் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் நான சொல்லுவது பொருந்தும்—ஆட்சியில் உள்ளவர்கள் சபதம் எடுத்துக்கொண்டு, இந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதில் நாங்கள் தலையிடுவதில்லை; எங்களைச் சேர்ந்தவர்களானாலும் சரி, வேண்டியவர்களானாலும் சரி, எங்களுடைய வழியில் நடக்கிறவர்களானாலும் சரி, அவர்கள்மீது வழக்குப் போடும்போது தலையிட மாட்டோம் என்ற நிலையில் அரசு இருக்க வேண்டும். யாராவது போலீஸ் ஸ்டேஷனுக்கு ஃபோன் செய்தால், அவர்கள்மீது கடுமையான முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு சட்டங்களைக் கொண்டுவரும்போது, நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சென்னையிலே யார் சாராயம் காய்ச்சுகிறார்கள் என்று காவல் துறையினருக்குத் தெரியாதா? எங்கே கடை நடக்கிறது என்று தெரியாதா? யார்



யார் அதற்கு ஆதாரவாக இருக்கிறார்கள் என்பது தெரியாதா? அவர்களைத் தொட்டால், காவல் துறையினருக்கு வேலை போய்விடும். போலீஸ்காரர்கள் முட்டாள்களா, புத்தி இல்லாதவர்களா? அவர்கள், தாங்கள் கண்ணியமாக வாழ வேண்டுமென்றுதான் வேலைக்கு வந்திருக்கிறாகள். அவர்களுக்கு புத்தி இருக்கிறது, அறிவு இருக்கிறது. இந்த ஆளைத் தொட்டால், வேலைக்கு ஆபத்து என்று அவரைத் தொடுவதில்லை; இவரைத் தொட்டால் பதவி உயர்வு கிடைக்கும், அவர்களுக்கு வேண்டாதவர் இவர், இவரைப் பிடி, மது குடிக்காவிட்டாலும், பாட்டில் வைத்துப் பிடி என்று நடந்து கொண்டிருக்கிறார்கள். அந்த இயந்திரம் சரியாகச் செயல்படவில்லை என்றால், அந்த இழுக்கு, பழி காவல் துறையைச் சேர்ந்ததில்லை; அந்தத் துறையை இயக்குகிற ஆளும் கட்சியைச் சேர்ந்தது, அரசைச் சேர்ந்தது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் மீதுதான் பழி வரும், அவர்கள் அதை ஏற்காவிட்டாலும், இந்த நாடு அரசின்மீது பழி சுமத்துகிறது. ஆளும்கட்சி அந்தப் பழியைச் சுமந்துதான் ஆக வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே பேசிய நண்பர்கள், சட்டத்தை வைத்துக் கொண்டு பழி வாங்குகிறார்கள் என்று சொன்னார்கள். பழி வாங்கப்படுகிறது என்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் ஒரு சம்பவத்தைச் சொன்னார்கள். அப்போது, அறநிலையத் துறை அமைச்சரவர்கள் எல்லோரையும் பிடித்தால்தான், ஒருவரைப் பிடிக்க வேண்டுமா என்று கேட்டார்கள். எம்.எல்.ஏ.-க்களை எல்லாம் ஒரு நாள் பிடிப்பது என்று வையுங்கள். அப்படிச் சொல்ல விரும்பவில்லை. வேண்டுமானால் வாபஸ் வாங்கிக்கொள்கிறேன். பெரிய பதவியில் உள்ளவர்களை ஒரு நாள் பிடிக்க வேண்டுமென்று முடிவு செய்யுங்கள். பெரிய cadre -ல் இருக்கிறவர்களில் அல்லது அரசியல் வாழ்வில் இருக்கிறவர்களில் மது அருந்தும் தீய பழக்கத்திற்கு ஆட்பட்டவர்களைப் பிடிக்க வேண்டியது என்று முடிவெடுத்து, அத்தனை பேர்களையும் பிடித்தால், யாரும் பழி சொல்ல மாட்டார்கள். ஒருவரைப் பிடித்துவிட்டு, மற்றவர்களை விட்டுவிட்டால், எப்படி? கூட இருந்து, டேபிளில் சாப்பிட்டவர்களை விட்டுவிட்டு, ஒருவரைப் பிடித்தால், அதைச் சொல்லத்தான் செய்வார்கள். எனவே இந்தச் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப் பயன்படுகிறது என்றுதான் சொல்லுவார்கள்.

இந்த நேரத்தில் ஒன்றைச் சொலல விரும்புகிறேன். நம்முடைய அவை உறுப்பினர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களுடைய தாயார், தந்தையார் இருவரும் மதுவிலக்கை அமுல்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டவர்கள். சேலம்

பகுதியில் ராஜாஜி அவர்கள் மதுவிலக்குப் பிரச்சாரத்தில் ஈடுபட்டபோதும், பெரியார் அவர்கள் ஈடுபட்டபோதும், அவர்கள் நேரடியாக அதில் கலந்து கொண்டவர்கள். மது எங்கே இருக்கிறது என்பது தாய்க்குலத்தைச் சேர்ந்த அந்த அம்மையாருக்குத் தெரியும். எனவே அந்தப் பகுதிக்கு நேரடியாகப் போய், அந்த வீட்டிற்குள்ளே போய், சாராய ஊறல் வைத்த பானைகளை உடைத்துத் தள்ளினார்கள். மது விலக்குச் சட்டம் வராமலேயே, மதுவை ஒழிக்க வேண்டுமென்று பிரச்சாரம் இருந்தபோது, அப்படிச் செய்தார்கள். தந்தை பெரியார் அவர்கள், கள்ளை இறக்கும் தென்னை மரங்களை—தன்னுடைய தென்னை மரங்களை வெட்டினார்கள். எத்தனையோ பேர்கள் பனை மரத்தை இன்றும் குத்தகைக்குவிட்டு சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். மரத்தையும் குத்தகைவிட்டு, அதிலிருந்து கள்ளையும் எடுத்து, அதை நவ்யுக பானமாக மாற்றி, வியாபாரமும் செய்துகொண்டு, மற்றொரு புறத்தில் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்துகொண்டு, உயர்ந்த பதவிகளில் இருக்கிறவர்களும் இருக்கிறார்கள். வீரபாண்டி ஆறுமுகம் அவர்களின் தாயார் அந்தப் பணியில் ஈடுபட்டு, எல்லோராலும் பாராட்டப்பட்டார்கள். 1976-ல் நெருக்கடிக் காலம் பிரகடனப்படுத்தப்பட்டபோது, அவரைப் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, 80 வயதாகிய தாயாரை—அவர் பெயர் சின்னம்மாள் என்று நினைக்கிறேன். வீட்டிற்குள் நுழைந்து, 15 லிட்டர் மதுபானத்தை தலையில் தூக்கிச் சென்று போய் விற்றார்கள் என்று சொல்லி, பொய் வழக்குப் போட்டார்கள். 1976-லே காவல் துறையினர் அவர்மீது பொய் வழக்குப் போட்டார்கள். நீதிமன்றத்திற்குப் போய், அந்த வழக்கை ரத்து செய்து, தன்மீது சுமத்தப்பட்ட பழியை, இழுக்கைத் துடைத்துக்கொண்டார்கள். எத்தனையோ சம்பவங்களைச் சொல்ல முடியும். திரு. வீராசாமி அவர்கள் ஒரு சம்பவத்தைச் சொன்னார்கள், திரு. தங்கப் பாண்டியன் அவர்கள் ஒரு சம்பவத்தைச் சொன்னார்கள். நானும் ஒரு சம்பவத்தைச் சொன்னேன். மாவட்ட ரீதியாக பல சம்பவங்களைத் தெரியும். ஆனால் சொல்ல முடியாத நிலையில் பலர் இருக்கிறார்கள். இந்த நிலைமை இருப்பதால், உண்மையிலேயே மது விலக்கை சிறப்பாக அமுல் நடத்த வேண்டுமென்று சொல்லும்போது, முதலில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் யாரும் மது குடிக்கக்கூடாது என்று சட்டம் கொண்டுவர வேண்டும். அப்படி மது அருந்துபவர்களை முதலில் அகற்ற வேண்டும். அரசு, சில பதவிகளுக்கு நியமிக்கின்றவர்கள் மது அருந்தினால் மது அருந்தக் கூடாதென்று சொல்லி, அவர்களை வெளியேற்ற வேண்டும். அதற்குப் பிறகு, அரசை நம்புவார்கள். அதிகாரிகள் பயப்படு



வார்கள். அதிகாரிகளுக்குத் தெரியும். யாரை எப்படி மதிக்கிறார்கள் என்பது அவரவர்களுடைய ஒழுங்கிற்கு ஏற்றாற்போல் இருக்கும்.

அடுத்து, பழி வாங்க இது பயன்படுமென்ற நிலை எல்லாப் பக்கத்திலும் இருக்கிறது. ஆளும் கட்சிக்கு முக்கிய எதிர்க் கட்சியான எங்கள்மீது பழி வாங்குவார்கள் என்று நாங்கள் பயப்படவில்லை. எங்களைப் பழி வாங்க முடியாது. எங்களில் ஒருவர் மீது பொய் வழக்குப் போடுவதாக இருந்தாலும், உங்கள் கட்சிக்காரர்கள் இன்னின்னார்மீது கேஸ் போடுங்கள் என்று சொல்லுமளவிற்கு சக்தி பெற்ற கட்சி எங்களுடையது. பொதுக் கூட்டம் போட்டு, நீங்கள் செய்யும் அநியாயத்தை அம்பலப்படுத்தும் ஆற்றல் மிக்க கட்சி எங்களுடையது. எனவே நாங்கள் பயந்து கொண்டு சொல்லவில்லை. ஆங்காங்குள்ள அதிகாரிகள், 80 வயதுத் தாயாரை அவமானப்படுத்தும் அளவிற்கு நிலைமைகள் இருக்கக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். எங்களைப் பாதுகாத்துக்கொள்ள எங்களுடைய சக்தி வாய்ந்த தொண்டர்கள் இருக்கிறார்கள். பிரச்சார அமைப்பு முறை இருக்கிறது. எனவே இந்தச் சட்டத்தைக்கொண்டு பழி வாங்க முனைந்தால் அது உங்களுக்கே பழியாக அமைந்து விடுகிற நிலையில், பழி வாங்கப்படுகிற நிலை உங்களுக்கு ஏற்படுகிற நிலையில், அதை மாற்றுகிற அமைப்புத்தான் எங்களுடையது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல், இந்தப் பிரச்சினையை இன்னொரு கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டும். மதுப் பழக்கத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள் ஒரு வகை நோயாளிகள்தான். நான் பலரைப் பார்த்திருக்கிறேன். உயர்ந்த பதவியில் இருந்தாலும், அந்தப் பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டால், அவர் ஆயிரம் சத்தியம் பண்ணினாலும், அந்த நேரத்தில் 'லெவலில்' இல்லை. அது ஒரு நோய். நாகர்கோவிலிலுள்ள டாக்டர் மத்தியாஸ் மருத்துவ மனைக்கு, என்னுடைய நண்பர் ஒருவரை, அம்பாசமுத்திரத்திலிருந்து கொண்டு வந்து, சேர்த்திருக்கிறார்கள். நினைவு திரும்பாத நிலையில், சாக இருக்கிறார் என்று சொன்னார்கள். அவருக்கு நினைவே இல்லை. நான் போயிருந்தபோது, பெரிய டாக்டர் வந்திருந்தார். ரொம்ப குடித்ததால் ஈரல் கெட்டுவிட்டது, அதிக நாட்கள் இருக்க மாட்டார் என்று சொன்னார். "இவரைக் காப்பாற்ற முடியாது, இப்போது உயிர் கொடுத்து, பேச வைக்கிறேன்" என்று சொல்லி கொஞ்சம் பிராந்தி எடுத்துக்கொண்டு வா என்று சொன்னார். பில்லரில் 4, 5 சொட்டுகள் எடுத்து வாயில் விடு என்று சொன்னார். 2, 3 சொட்டு விழுந்த உடனே அவர் இப்படி அப்படி நாக்கை நொணச்சார். பிறகு ஒன்று இரண்டு அவுன்ஸ் விட்டார். அதன் பிறகு அவர் எழுந்தார். எழுந்த உடன், எங்கே

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 மார்ச் 17

பாட்டில்?' என்று கேட்டார். பிறகு நோய் குணமாயிற்று. பழக்கத்திற்கு ஆளானவர்கள் இந்த நோய்க்கு ஆளாகிறார்கள் குடிப் பழக்கத்திற்கு ஆளானவர்கள் பிறகு குடிப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டு விடுகிறார்கள். குடிப் பழக்கத்திற்கு ஆளானவர்களை அப்பழக்கத்திலிருந்து நிறுத்துவதற்காக அமெரிக்காவில் ஒரு சமுதாய சீர்திருத்த அமைப்பை வைத்திருக்கிறார்கள். அந்த அமைப்பு . . . .

(பிற்பகல் 12-50)

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இந்த நோய்க்கு சிகிச்சை என்றால் பாண்டிச்சேரி, கேரளா போன்ற இடங்களுக்குப் போயிருக்கலாமே. (சிரிப்பு).

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருக்குத் தெரிந்த சிகிச்சை முறையைச் சொன்னார். என்னுடைய சிகிச்சை முறையைக் கேட்டால், "பிராந்தியிலே விஷத்தைக் கலந்து கொடுத்து கொன்று விடலாம்" என்று சொல்வேன். ஆனால் அதை யாரும் ஒத்துக்கொள்வதில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் ஒரு கருத்தைச் சொன்னார்கள். உண்மையிலேயே மதுவிலக்குச் சட்டம் செயல்பட்டுக்கொண்டிருக்கும்போது மது கிடைக்காததால் அரிஷ்டம் குடித்தார்கள். அதை கடையில் விற்கலாம். தடை விதிக்க முடியாது. மத்திய அரசு தான்\அதற்குத் தடை விதிக்க வேண்டும். அதுபோல் தசமூலாரிஷ்டம் என்ற ஒன்று இருக்கிறது. அதில் குளோரோபார்ம் எல்லாம் விட்டுத் தயாரிக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவரவர்கள் தயவு செய்து அந்த விவரங்களையெல்லாம் விளக்கமாக எல்லோருக்கும் தெரியும்படி சொல்லட்டும். (சிரிப்பு) விவாதத்தில் தான் கலந்துகொள்ள வரவில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலையில் தசமூலாரிஷ்டம் தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலை இருக்கிறது. யாரோ ஒருவர் அங்கு வந்து அந்தத் தொழிற்சாலையை வைத்து இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் வியாபாரம் செய்கிறார். திருவனந்தபுரத்திலும் அவருடைய வியாபாரிகள் இருக்கிறார்கள். சென்னையிலே கூட அவருடைய தசமூலாரிஷ்டம் கிடைக்கிறது. அதற்குப் பெயர் அதிருஷ்டம் அல்ல. தசமூலாரிஷ்டம் என்பது அதன் பெயர். மற்றவர்கள் அதைத் தயாரித்து முடித்த பிறகு, இந்த நபர் வந்து கொஞ்சம் கொஞ்சமாக குளோரோபார்ம் விடுவார். வேறு யாரையும் அந்த குளோரோபார்ம் விடுவதற்கு அனுமதிப்பதில்லை. எப்போதும் அவர் தான் விடுவார். ஒருநாள் திடீரென்று அவர் ஆஸ்பத்திரிக்குப் போக



1979 மார்ச் 17] [திரு. ம. சங்கரலிங்கம்]

வேண்டியிருந்ததால், அவசரமாக அந்த குளோரோபார்மை விட்டு விட்டுப் போய்விட்டார். அதன் பிறகு அவருடைய மகனும் கொண்டு வந்து விட்டார். அதைக் குடித்தவர்கள் நாகர்கோவிலில் 5 பேரும், தக்கலையில் 10 பேரும், குளச்சலில் 8 பேரும், பளுவலில் 5 பேரும் மரணமடைந்தார்கள். அது சப்ளை செய்யப்பட்ட இடங்களுக்கெல்லாம் போலீசார் போய் சீல் பண்ணி விட்டு வந்தார்கள். மதுவைத் தீவிரமாக அமுல்படுத்துகிறபோது, இப்படிப் பட்ட ஆபத்துகளும் வந்து விடுகின்றன. இவற்றையும் புரிந்துகொள்ள வேண்டும். மது குடித்துப் பழக்கப்பட்டவர்களுக்கு அந்த மது குடிக்கின்ற பழகத்திலிருந்து விடுதலை அளிப்பதற்காக அமெரிக்காவில் ஒரு சிகிச்சை அளிக்கப்படுகிறது. அமெரிக்காவிலுள்ள அந்தச் சமுதாயச் சீர்திருத்த அமைப்பு அந்த வேலையைச் செய்கிறது. அந்த அமைப்பிலே குடிப் பழக்கத்திற்கு ஆளானவர்கள் போய்ச் சேர்கிறார்கள். அவர்களுக்கு அங்கே சிகிச்சை கொடுக்கிறார்கள். தினசரி மாத்திரை கொடுக்கிறார்கள். அப்படியே மெதுவாகத் தடுத்துக்கொண்டே போகிறார்கள். 3 அல்லது 4 மாதங்கள் கழித்த பிறகு, அவர்கள் மதுவை அருந்தினால், மதுப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்களுக்கே அதன் மீது வெறுப்பு வருகிறது, அதைக் குடித்தால் வாந்தி வருகிறது. அப்படியே மது குடிக்கின்ற பழக்கத்தை விட்டு விடுகிறார்கள். திருந்தி விடுகிறார்கள். நம்முடைய இந்த மதுவிலக்குத் திருத்தச் சட்டத்திலே மது குடிக்கிறார்களே அவர்களை அந்தப் பழக்கத்திலிருந்து மாற்றுவதற்கு என்ன வழிவகை பின்பற்றப்பட வேண்டுமென்று விதிகள் வகுக்கப்பட்டிருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் சொன்னார்கள். மிகவும் நயம்படச் சொன்னார்கள். "நண்டை சுட்டு நரியை காவல் வைத்த மாதிரி" என்று சொன்னார்கள். கிராமப்புறங்களில் நரி நண்டைச் சாப்பிடத்தான் வரும். அதற்கு நண்டு என்றால் மிகவும் பிடிக்கும். சைவர்களுக்குப் பாயசம் பிடிப்பது மாதிரி, அசைவர்களுக்குப் பிரியாணி பிடிப்பதுபோல், இந்த நரிக்கும் நண்டு என்றால் மிகவும் பிடிக்கும் தவளைகூட போகும். இருந்தாலும் நண்டுக்காகத்தான் நரி காத்திருக்கும். தன்னுடைய வாலை நண்டு இருக்கின்ற துவாரத்தில் போடும். பாம்பு வருகிறது என்று கருதி நண்டு நரியின் வாலைக் கவ்வும். அது கவ்வியதற்குப் பலன் வெளியே வந்த பிறகு தான் தெரியும். நரிக்கு அது விருந்தாகும். பச்சை நண்டுக்கே நரிக்கு ருசி என்றால், அதையே சுட்டு பக்கத்தில் வைத்தால், இன்னும் அதற்கு ருசி அதிகமாக இருக்கும். அப்படித்தான் இந்தச் சட்டமும் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவர் சொன்னதைத்தான் சொல்கிறேன். இருந்தாலும் அவர் இப்பொழுது அவையில் இல்லாதது தான் வருத்தமாக இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவர் அவையில் இல்லாவிட்டாலும் எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொல்லலாம். நான் அனுமதித்து விட்டேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: பல தவறுகள் இதில் இருக்கின்றன. இந்தச் சட்ட முன்வடிவின் மூலம் சாராயம் காய்ச்சுபவர்களுக்கு ஆதரவாக ஒரு அமைப்பை அவர்களுக்குக் கொண்டு வந்து கொடுக்கிறோம் என்பது தான் மாண்புமிகு உறுப்பினருடைய குற்றச்சாட்டு. இதை இன்னொரு கோணத்தி லிருந்து பார்க்க வேண்டும். கிராமப்புறங்களை எடுத்துக் கொண்டாலும் சரி அல்லது நகர்ப்புறங்களை எடுத்துக் கொண்டாலும் சரி, சாராயத்தை வடிப்ப வர்களும் விற்பவர்களும் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள ஏழைகள். அவர்களுக்கு மேல் பெரிய இடத்தில் அவற்றைப் பராமரித்துக் கொண்டிருப்ப வர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதை இந்த ஏழைகள் செய்கிறார்கள். அவர்களிடம் கார் இருக்கிறது. கடைகளில் ஆயிரம் இரண்டாயிரம் மூவாயிரம் என்று வரவு இருக்கிறது. போலீஸ் ஸ்டேஷன் போவது ஒன்றுதான் அவர்கள் கடமை. யூனிவர்சிட்டிகளில், கார்ப்பரேஷன்களில் எல்லாம் சிறந்த வழக் கறிஞர்களை 'லீகல் அட்வைசர்ஸ்' என்ற முறையில் வைத்திருப்பார்கள். அவர்களுக்கு இரண்டாயிரம், மூவாயிரம் என்று கொடுத்து, அவர்களை வைத் திருப்பார்கள். அதுபோல் இதிலும் அரசியலில் சக்தியாக, செல்வாக்காக இருப்பவர்கள் 2 ஆயிரம், 3 ஆயிரம் 'ரீடெயினர் பீஸ்' வாங்கிக்கொண்டு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். லீகல் அட்வைசர்களாக, சிறந்த வழக்கறி ஞர்களாக இருப்பது மாதிரி இவர்கள் மதுவிலக்குக் காவலர்களாக இருக்கி றார்கள். போலீஸ்காரர்களிடம் போய் கேட்பது தவறு. ரீடெயினர் பீஸ் வாங்கிக்கொண்டு இந்தக் காரியங்கள் நடைபெறுவதற்குக் காவலர்களாக, பாது காப்பாளர்களாக இருக்கிறார்கள். இவர்களிடமிருந்து சம்பளம் வாங்கிக் கொண்டு சாராயம் காய்ச்சுபவர்களையும் விற்பவர்களையும் பிடித்து தூக்கிக் கொண்டு போய் ஜெயிலில் போட்டு, கடுமையான தண்டனை கொடுத்தால், அவர்களுடைய குடும்பம் என்ன ஆகும்? அப்படிப்பட்டவர்களுடைய குடும் பத்திற்கு என்ன பாதுகாப்பு கொடுத்திருக்கிறார்கள்? அப்படிப்பட்ட ஒரு நிலைக்கு ஒரு பரிகாரம் இந்தச் சட்டத்திலே இல்லை. தினசரி வேலையில்லாமல், வாழ்வதற்கு வழியில்லாமல் இருப்பவர்கள் அந்தப் பாதுகாவலர்களிடம் போய் அவர்கள் சொல்கிற வேலையைச் செய்து 3 ரூபாயை வைத்து வாழலாம் என்று அவர்களிடம் போய் குடிக்கிறார்கள். அவர்களை உடனே பிடித்துக்கொண்டு போய் விடுகிறார்கள். அப்படிப்பட்ட வர்களை விட வேண்டுமென்று நான் வாதாட வரவில்லை. அவர்களைப் பிடித்து 3 மாதம், 6 மாதம், 1 வருடம் என்று கடும் தண்டனை கொடுக்கும்





போது, அவர்களுடைய பொருளாதார நிலை என்ன, வீட்டின் நிலை என்ன, மனைவி மக்கள் நிலை என்ன, வீடு உண்டா என்பதையெல்லாம் பார்க்க வேண்டும். அவர்களை சிறைக்கு அனுப்பினால், மனைவி மக்கள் நிலை என்ன ஆகும், சிறையிலிருந்து வருகிறவரை அவர்கள் எப்படி வாழ்வார்கள் என்பதை யெல்லாம் பார்க்க வேண்டும். அதற்கெல்லாம் மாற்று வழி வகுக்கப்படவில்லை. அடுத்தபடியாக, ஒருவன் குடிக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவனைப் போலீசார் பிடித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். அவன் மனைவி எப்படியாவது அவளுடைய கணவனை விடுவித்து வரவேண்டுமென்று நம்மிடம் வந்து கேட்கிறாள். காப்பாற்றுங்கள் என்று சொன்ன அவளிடம் இன்னாரிடம் போனால் உடனே காரியம் நடக்கும் என்று சொல்லி அனுப்பி விடுகிறோம். அதிலும் வெற்றி கிடைக்காவிட்டால், வக்கீலிடம் போகச் சொல் கிறோம். அப்படியே போனாலும் லேசாக ஜாமீனில் விட மாட்டார்கள். 500 ரூபாய் கொடுங்கள் என்று கேட்பார்கள். அவள இருப்பதோ அரசாங்க நிலத்தில் ஓலை வீட்டில், அவள் உடனே வந்து அவளுடைய தாலியையும், பிள்ளைகளின் பாடப் புத்தகங்களையும், சட்டியையும் விற்று பணத்தைக் கொண்டு போகிறாள். அப்படிப் பணம் கொடுத்தும், ஜாமீன் கிட்டாது. கடைசியில் வாழ்வதற்கு வழியில்லாமல் பிச்சை எடுக்கிறாள். பிறகு தீய பழக்க வழக்கங்களுக்கு ஆளாகி, தவறான வழியில் வளர்கிறாள். அப்படி இருக்கும்போது, சிறையிலிருந்து அவளுடைய கணவன் திரும்பி வருகிறான். ஒன்றில் இத்தகைய தீய பழக்கத்திற்கு அவன் தலைமை தாங்கி நடத்த வேண்டும். இல்லாவிட்டால் பழைய பழக்கத்திற்குப் போக வேண்டும். வாய்ப்பு இன்றி, வாழ வழியின்றி இருப்பவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுத்து, அவர்களை சிறையில் தள்ளி தண்டனை முடிந்து வெளியே வரும் போது, அவர்களை உரிய முறையில் திருத்தி, குடிப் பழக்கத்தை மாற்றி நல்ல மக்களாக வாழவைக்கக்கூடிய முறையில் சட்டம் இல்லை. சிறையிலிருந்து திரும்ப வந்த பிறகு, அவர்களுடைய பழைய வழியிலிருந்து மாறி அவர்கள் நல்ல வழியில் போகச் செய்வதற்கு என்ன வழி சட்டத்தில் இருக்கிறது? இந்த வழிவகைகள் இல்லாத ஒரு சட்டத்தை எப்படி மதுவிலக்குச் சட்டம் என்று சொல்வது? ஜெயிலுக்கு அனுப்புகிறோமே அவர்கள் சிறையிலிருந்து வெளியே வரும்போது, எப்படி வருகிறார்கள்? நாம் எல்லோரும் சிறைக்குப் போனவர்கள்தான். ஜெயிலில் கான்சி என்றால் பீடியைக் குறிக்கும். ஜெயிலில் வீட்டிலுள்ளவர் களோ அல்லது மற்றவர்களோ பார்க்க வந்தால், ஏதாவது கொண்டு வரட்டுமா என்று கேட்டால், பீடி கொண்டு வாருங்கள் என்று சொல்லுவார்கள். மனைவி என்ன நினைப்பாள்? என் கணவர் காபி கூட குடிக்க மாட்டார்,

சிறைக்கு வந்து பீடி குடிக்கக் கூட கற்றுக்கொண்டு விட்டாரே என்று தானே நினைப்பாள். இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. பீடி கொடுத்தால், என்ன பொருளும் அங்கே கிடைக்கும். 10 பீடி கொடுத்தால், காபி வரும். 50 பீடி கொடுத்தால், இட்டிலி வரும். ஆயிரம் பீடி கொடுத்தால் சாராயம் வரும் 2 ஆயிரம் பீடி கொடுத்தால் பிராந்தி வரும். ஜெயிலில் கிடைக்காதது

(பிற்பகல் 1-00)

என்று ஒன்றுமேயில்லை. இப்படி சிறைச் சாலைகளை வைத்துக்கொண்டு, சிறைச்சாலைகளுக்குள் இருக்கிற நிலைமைகளை இந்த அளவுக்கு வைத்துக்கொண்டு, அந்த சிறைச்சாலைக்குள் மது விலக்குச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்களை அடைத்து, கெடுமைப்படுத்தி, இன்னும் அதிகமான கயவர்களாக, கிரிமினல்களாக அவர்களை மாற்றி, மீண்டும் இந்தச் சமுதாயத்திற்குக் கொண்டு வருகிற சட்டம் நமக்குத் தேவையா என்பதை இந்த அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். 30 ஆண்டு விடுதலைக்குப் பிறகு, சமுதாயத்தில் இருக்கிற ஏழை எளியவர்களின் இழுக்கைக் களைய விரும்புகிற ஒரு அரசு, இந்தக் கருத்துக்களையெல்லாம் ஆலோசிக்க வேண்டாமா என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் கட்சியைப் பொறுத்தவரை, இந்தச் சட்டத்தின் அடிப்படை நோக்கத்தை எதிர்க்கவில்லை. இந்தப் பிரச்சினையில் என்னைவிட தரத்தில் சிறந்த கருத்துக்களைச் சொல்லக் கூடியவர்கள் வெளியே இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அழைத்து அவர்களின் கருத்தையும் இந்த அரசு கேட்க வேண்டுமென்றுதான் இதைச் சொல்லுகிறேன் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இங்கேயும் இருக்கிறார்கள் என்றாலும் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

திரு. எம். சங்காலிங்கம் : ஆய்வுக் குழு போட்டால், அதில் தலைவர் அவர்கள் வந்து கருத்துக்களைச் சொல்லலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: விவாதம் முடிவடையும்வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ம. சங்காலிங்கம் : சமுதாயத்தினுடைய நிலையைச் சீர்திருத்த இந்தச் சட்டத்தில் முழு அளவில் பல பிரச்சினைகள் ஆராயப்பட வேண்டும். இந்தச் சட்டத்தில் பல குறைபாடுகள் இருக்கின்றன.



அடுத்து, இந்தக் குற்றங்களையெல்லாம் முதல் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட் தான் விசாரிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. காரணம் அந்த அளவுக்கு தண்டனை உயர்த்தப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. எஸ். வெங்கடேசன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். எனவே தற்போது இருக்கிற அனைத்து செகண்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட்களையும் முதல் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட்களாக மாற்ற வேண்டும். அப்போது தான் அவர்கள் இந்த வழக்குகளை விசாரிக்க முடியும். தற்போதுள்ள முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளில் ஏற்கெனவே அதிகமான அளவில் வழக்குகள் நிலுவையில் இருந்துகொண்டிருக்கின்றன. எனவே இந்த வகையிலும் அரசு உரிய வழிவகைகளைக் கண்டாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்தத் திருத்தச் சட்டத்தின்படி குற்றம்சாட்டப்பட்டவர் தான் குற்றம் செய்யவில்லை என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பில் விடப்பட்டிருக்கிறார். குற்றத்தை நிரூபிக்க வேண்டியது எப்போதும் போலீஸ்காரரின் கடமை. அதற்கு நேர்மாறாக இந்தச் சட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் தான் குடிக்கவில்லை என்றும் தான் நிரபராதி என்றும் நிரூபிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அய்யம் திரிபு அற குற்றத்தை நிரூபிக்க வேண்டியது குற்றம் சாட்டுகிறவர்கள் பொறுப்பு என்பதை நான் மீண்டும் இங்கே வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

அடுத்து போலீஸ்காரர்கள், அனுமதியில்லாமல், இந்தச் சட்டத்தின்கீழ் யார் வீட்டுக் கதவையும் தட்டலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 30 ஆண்டு சுதந்திரத்திற்குப் பிறகு இந்த உரிமை மக்களிடமிருந்து பறிக்கப்பட வேண்டுமா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். நீதிமன்றத்தின் அனுமதி வாங்கித்தான் ஒரு வீட்டைச் சோதனை செய்ய வேண்டும் என்பதுதான் முறை. அதற்கு மாறாக போலீஸ்காரர் யாருடைய வீட்டு கதவையும் தட்டலாம் என்று வைத்துவிட்டால், அவர்கள் யார் யார் வீட்டுக் கதவையெல்லாம் போய் தட்டுவார்கள் என்பது நமக்குத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசும்போது, ஒரு அய்.ஏ.எஸ். அதிகாரி அனுபவித்த நிலைமையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்த நிலைதான் பலருக்கும் வரும். எனவே யார் வீட்டிலாவது போலீஸ் சோதனை செய்ய வேண்டுமென்றால், நீதிமன்றத்தின் அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும் என்பதை உறுதி செய்ய வேண்டும்.

அடுத்து, மிகுதியாகக் குடித்தவர்களுக்குக் குறைந்த தண்டனையும் குறைவாகக் குடித்தவர்களுக்குக் கூடுதல் தண்டனையும் இந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிகமாகக் குடித்து மயக்கம் போட்டு, நினைவிழந்து கிடக்கிறவர்களுக்குக் குறைவான தண்டனை. குறைவாகக் குடித்து விட்டு, சத்தம் போடுகிறவர்களுக்கு அதிக தண்டனை. நல்லவேளையாக இதை மாற்றிவிட்டதாகக் குறிப்பிடுகிறார்கள். நான் அதை வரவேற்கிறேன்.

திரு. க. அறிவழகன்: அதிகமாகக் குடித்தால் அது நோய். குறைவாகக் குடித்தால் அது பழக்கம். எனவே நோய்க்குக் குறைந்த தண்டனையும், பழக்கத்திற்கு அதிக தண்டனையும் கொடுப்பது சரி என்று கொடுத்திருப்பார்கள்.

மாண்புமிகு திரு. கே. நாராயணசுவாமி: சட்டத்தில் பழக்கத்திற்கும் நோய்க்கும் பாகுபாடு இல்லை.

திரு. எம். சங்கரலிங்கம்: ஒரு பழக்கத்தைத் தொடரும்போதே அதிகமான தண்டனை கொடுப்பது சரிதான் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எல்லோரும் அனுபவம் உள்ளவர்களைப்போல் தெரிகிறது. (சிரிப்பு)

திரு. ம. சங்கரலிங்கம்: மருத்துவத் துறையில் முன்பெல்லாம் மருந்து கொடுக்கும்போது, கொஞ்சம் கொஞ்சமாக மருந்தின் 'டோசேஜை' அதிகப்படுத்துவார்கள். இப்போது அதிகமாக டோசேஜ் கொடுத்து கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்கிறார்கள் 'டேப்பரிங் சிஸ்டம்' என்று இதைச் சொல்கிறார்கள். அந்த வகையில் முதலில் தண்டனை கடுமையாக இருக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்து. செல்வாக்கு உடையவர்கள் பக்கத்தில் இந்தச் சட்டம் போகாது. ஏழை எளியவர்கள் பக்கத்தில்தான் இது போகும். அப்படி ஏழை எளியவர்கள் பக்கத்தில் இந்தச் சட்டம் போகும்போது, அதைக் கொஞ்சம் மனிதாபிமான அடிப்படையில் அணுக வேண்டும். அதற்கான வகையில் பலவிதமான சீர்திருத்தங்களை இந்தச் சட்டத்திற்குச் செய்தாக வேண்டும். இந்தச் சட்டத்தை விரைவாகக் கொண்டுவருவதை நாங்கள் ஏதோ தடுக்கிறோம் என்று அரசாங்கத்தில் இருப்பவர்கள் எண்ணக் கூடாது. இந்தச் சட்டத்தை முறையாக, நன்றாகக் கொண்டுவர வேண்டும் என்பது மட்டுமல்ல, எல்லோருடைய கருத்தையும் அறிந்து அவர்களுடைய அனுபவத்தைப் பயன்படுத்திக்கொண்டு, 30 ஆண்டுக் காலமாக நாமடைந்த தோல்வியை மாற்றக்கூடிய வகையில் இந்தச் சட்டமுன்வடிவை நல்ல முறையில் கொண்டு வரவேண்டுமென்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் இதைப் பற்றி criminology taste உள்ளவர்கள் ஆராய்ந்து ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களில்தான் இந்த முறை கையாளப்படுவதில்லை. மேலை நாடுகளைப் பொறுத்தவரையில், Criminology Reform செய்ய பல்கலைக் கழகத்தைத்தான் அவர்கள் கேட்கிறார்கள். பல்கலைக் கழகத்தில் இருப்பவர்கள் 'Test case' எடுத்து ஆராய்ச்சி செய்து தங்கள் முடிவைத் தெரிவிக்கிறார்கள். அந்த முறையில் ஆராய்ந்து நல்ல முறையில் இந்தச் சட்டத்தை ஒழுங்காகக் கொண்டுவர வேண்டும். ஏழை எளியவர்களைத் திருத்துகிற முறையில் இதைக் கொண்டுவர வேண்டும். போதைக்காகவும், மகிழ்ச்சிக்காகவும், கம்பெனிக்காகவும், ஆடம்பரத்திற்காகவும் வேண்டுமென்றே குடிப்பவர்களுக்கும், அதிகாரத்திற்காகவும் வேறுபல காரணங்களுக்காகவும் குடிப்பவர்களுக்கும் அதிக தண்டனை கொடுக்கும் வகையில் சட்டத்தில் பல மாறுதல்களைக் கொண்டுவர வேண்டும். சமுதாயத்தின் கீழ்த் தட்டில் இருப்பவர்கள் இந்தத் தீமையின் கொடுமையை உணரும்படி செய்ய உரிய மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்றும் கூறிக்கொள்கிறேன். இப்படி வேகப்படுத்த வேண்டிய இடத்தில் வேகப்படுத்த வேண்டும். நிதானப்படுத்த வேண்டிய இடத்தில் நிதானப் படுத்த வேண்டும். அதில் யாருக்கும் இரண்டு கருத்து இருக்க முடியாது. எனவே மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இதைப் பொறுக்குக் குழுவுக்கு ஆய்வுக்காக அனுப்பி, ஆய்வுக் குழுவில் நம்மைவிட தரத்திலும், அனுபவத்திலும் உயர்ந்தவர்களின் எண்ணத்தைக் கேட்டு மிக விரைவிலேயே—ஒரு மாத காலத்திற்குள் உரிய திருத்தங்களோடு கொண்டுவர முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது ஏப்ரல் 27 ஆம் தேதி வரை சட்டமன்ற நடவடிக்கைகள் நடப்பதாகத் தெரிகிறது. எனவே 25 ஆம் தேதிக்குள் இந்தச் சட்ட முன்வடிவை மீண்டும் கொண்டு வந்து சமுதாயத்திற்கு நல்ல பணியினைச் செய்யலாம் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய கருத்துக்களையும், மற்ற மாண்புமிகு உறுப்பினர்களது கருத்துக்களையும் மனதில் கொண்டு இந்தச் சட்டத் திருத்தத்தை ஆய்வுக்கு அனுப்ப முன்வரவேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.



THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Chairman, Sir, sixteen speakers have participated in this debate and I must acknowledge that the debate has been of a very high order. All the

hon. Members who participated in this debate have expressed their welcome to the Prohibition policy that has been in vogue from the year 1937 and also the measures adopted for implementing the Prohibition policy. Some of the hon. Members have urged, with a certain amount of vigour, for energising the machinery for propaganda to spotlight the evils of drink and for adoption of remedial measures for the same so that there may be more and more propaganda of good educative value. I was reminded of an anecdote. It may be recalled that this measure has been in vogue from the year 1937. I remember in those years when I was a student of the Law College or maybe when I was an apprentice, Thiru Rajaji was questioned about the loss of revenue as a result of this Prohibition policy which was forcefully implemented and then he mentioned "I will not touch the tainted money, which is got from out of the tax on liquor". In the same way, this Government do not shed tears at all over the loss of revenue and we feel just as Thiru Rajaji felt at that time, and we feel in the way my beloved brother Amarar Anna has always felt, with whom I have spent my life from 1930 right up to the last moment of his mudane existence in this world. As I said already, I was reminded of an anecdote.

(பிற்பகல் 1-10)

There was a preacher belonging to the Salvation Army and he used to lecture on the virtues of Christianity and on the attainment of salvation. There was one hearer who had been hearing his lecture from year to year, week after week, month after month for over 30 years. One day he asked the preacher : "For 30 years I have been hearing you. For the last 30 years you have been in the same Charing Cross and you have not attained salvation. Therefore, what is the use of your teaching ?" In the same pattern, if this Government are not going to implement seriously and severely this measure, it is open to the Members of this House to say that while it has been there for the last 30 years, there has been no improvement in the enforcement of Prohibition, and ask, "what is the use of enforcing the old Act, when it has not served any purpose". If we have not attained salvation through the existing legal measures, why should we not enforce the measure much more rigorously and strictly. Only in this connection, I was reminded of the anecdote. I submit to this House that there is no other opinion but to enforce it much more severely and strictly. I feel glad and heartened to hear the hon. Member Thiru Veerasamy





mentioning that he is in full agreement with the policy of this Government in imposing very very severe punishment on illicit distillers and on sellers of illicit arrack.

I have got to answer a few points but I am bound to be brief because it is already 1.10 p.m. I shall only touch the important points. My hon. Friend Thiru Damodaran mentioned a point and two or three other members had also repeated it, namely, " When an enforcement officer who is a public servant is punished under this Act, how can there be a second offence for the same officer ? " I will give an example to clarify this point. A Prohibition Officer commits this crime and he is arrested. He has to undergo his trial. The completion of trial will certainly take a month or two. In the meanwhile, it is open to him to commit another crime. In that case he will be charge-sheeted and he will get the punishment prescribed for the second offence. I have given you only one example and there may be such extraordinary cases. I will also give another example. X commits the crime and he is convicted and sentenced to six months' imprisonment. He goes up in appeal. There is sufficient time allowed for him to take the matter in appeal. It will be one full month of 30 days. The Government have to get a copy of the judgment. There are the Civil Service Regulations which are framed under Article 309 of the Constitution of India. We have to follow the regulations in taking action against him and we cannot simply dismiss the public servant on the mere production of a copy of a judgment passed by some Presidency Magistrate. He is sentenced to six months' imprisonment. We cannot say simply " You go home ". We are living in a land of freedom under law and we have got to observe the formalities of law. So, a notice has to be sent asking him to give his explanation within a reasonable time. In the meantime, he does not cease to be a public servant. Even assuming for the sake of argument that he is suspended, a suspended officer does not cease to be a public servant. If during that time, he commits a second crime, certainly he will be visited with an enhanced punishment. I have given you two examples where a public servant can be given an enhanced punishment for a second offence.

I think the hon. Member Thiru Nallasivan has been pleased to raise one doubt whether Article 14 of the Constitution is not violated when a separate punishment is prescribed for the Prohibition enforce-

ment officers who are public servants. I think the hon. Member Thiru A. Balasubramaniam has given the answer that they constitute a class. I am obliged to him. The object for which that has been constituted as a class is to achieve the objective of stricter enforcement of the Prohibition laws. The law only says that people who are similarly placed should not be dissimilarly treated. But in this case all three varieties of officers considered as public servants within the meaning of this Act are treated similarly in similar situations. Therefore, there is no violation of Article 14 of the Constitution.

THIRU A. R. DAMODARAN : Sir, may I ask a doubt in this connection? If such a differentiation is made regarding the person who commits the crime, what happens in regard to other crimes like rape, murder and other offences? This is a very important point. You are trying to link the punishment not to the offence committed but to the person who commits the offence. May I konw whether it would be equally permissible under other laws also? You are making a distinction here. If a Government officer commits a crime like theft, can he be given twice the punishment which a private offender can be given?

THE HON. THIRU K. NARAYANASWAMY: Law can be legislated even in respect of a single person for a single purpose. There is no difficulty about that. Just because an equal treatment is not made, it does not mean that the law is invalid or that the Legislatures are disabled from making laws for the purpose of obtaining certain objectives in regard to a single class. I will give you an example. Against Thiru Ramakrishna Dalmia, there was an Inquiry Commission headed by former Justice Viswanatha Sastri. That Inquiry Commission was an Income-tax Inquiry Commission headed by former Justice Viswanatha Sastri. Thiru Ramakrishna Dalmia went up and said, "There may be so many loopholes or evaders and so many people in the whole of India so far as income-tax purposes are concerned and why constitute a Commission only against me?" The Supreme Court held that even against one person the Legislature could make a law. That law was made and the necessary regulation was held to be valid and not violative of Article 14 of the Constitution. I hope I have resolved the doubt of my hon. Friend in respect of the penal offence that may be committed by any public servant.



THIRU A. R. DAMODARAN : Only the Courts can resolve this doubt and not the Hon. the Law Minister.

THE HON. THIRU K. NARAYANASWAMY: I have never said that. May I say this very respectfully? Ultimately, the voice of the Court alone can prevail and nobody else's. But let my hon. Friend remember that I am not disabled from contending what the law is according to my light. I have a right to expound the law as I conceive it to be right.

(பிற்பகல் 1-20)

The hon. Member Thiru Damodaran mentioned about section 4-A and now I want to make it clear that for offences under section 4-A and section 4 (1) (j), we have now provided the same amount of punishment and there is no distinction between the two provisions.

The hon. Member Thiru E. S. Venkatesan mentioned about section 8 regarding the punishment prescribed for vexatious searches and for certain other acts of excess committed by the Police Officer. I think Thiru Venkatesan wanted to have stricter and stringent provisions. The Government have adopted the *via media* policy, the middle road policy because, if the officers are threatened too much, human nature being what it is, it might disable them from discharging their duties efficiently. We have made it 'rigorous imprisonment' and it may not be possible for the Government to make it more severe or stringent.

I think the hon. Member Thiru Venkatesan also pleaded for making the Probation of Offenders Act applicable and referred to the amendment made to section 52-B. In making these amendments as a general rule, we have followed the recommendations of Justice Sadasivam. I will summarise those recommendations and I will only mention the head-lines in a very short time.

The learned Judge says the deterrent punishment should be there for possession and sale. Offences of import and export should be more severely punished. Terms of imprisonment and quantum of fine should be raised. Magistrates should be empowered to award

enhanced penalty. Enhancement of punishment for offences under sections 5 and 24. Confiscation of vehicles should be made mandatory. Power of confiscation of vehicles should be vested in the Collector. But we have now made it to vest in Judges and not in Collector. But we have now made it to vest in Judges it subject to judicial adjudication and not to executive direction. Drastic punishment of offenders involved in illicit liquor manufacture likely to cause deoth or grievous hurt. We have adopted that, Special legislation for the detention of bootleggers recommended. We have also made some provision in that regard. He has gone to the extent of commending a legislation like COFEPOSA or MISA. But we have diluted it and adopted a much more liberal attitude. Mahazar witnesses should not be necessary in certain cases. If in Javad hills, a trafficker invests some thousands of rupees and goes on indulging in illicit distillation, one cannot go and get mahazar witnesses in such a bill. Therefore, there are cases where there need be no mahazar. This has been adopted in the present Act. Provision for entry, search and seizure in the absence of witnesses in certain circumstances is recommended. Maintenance of History Sheet and Muster Roll is also recommended. Serious offences should be brought under the Identificatios of Prisoners Act. We have not adopted it, because it would cause more severe difficulties. Very severe punishment for subsequent offence is recommended. Provision for externment of prominent bootleggers recommended. Enlargement and greater use of section 52-A of the Prohibition Act recommended. Scope and extension of the provisions of the Probation of Offenders Act discussed. Assault or hurt by an accused in certain offences under the Prohibition Act discussed. Burden of proving the consumption of non-prohibited varieties of liquor should be on the accused. These have been commended by the learned Judge who is a great believer in Prohibition and who is a man of great erudition and knowledge, and I have had the good fortune or sitting with him as a Judge in a Bench for nearly one year and four months at one stretch and for another period of 6 months at another stretch, and I know his erudition and knowledge. The High Level Committee has stated that effective action is necessary to end official misconduct. We have done that. The High Level Committee has also stated that the success of enforcement depends on efficient and honest officers. So, we have adopted most of the provisions only on the basis of the recommendations contained in the Report of the High Level Committee headed by Thiru Justice Sadasivam for the stricter enforcement of Prohibition in Tamil Nadu.



A few hon. Members have also made comments about the confiscation of vehicles and the owner being deemed to be guilty. In the matter of criticism against the Prohibition law enforcement officers, the High Level Committee has stated that such criticism supplies the very basis for providing enhanced punishment. The hon. Members have mentioned the Police officers, the enforcement officials have been instruments of bribery and that they have been the recipients of bribe. Not merely that. Some hon. Members said that some of the officers were having a hand in some of these Prohibition offences. Some hon. Members have ascribed to such officers certain acts which are tantamount to abetment of certain Prohibition offences. Such criticism supplies a very good basis and a rationale for providing enhanced punishment.

There has been some criticism about onus of proof. I have already mentioned what Thiru Justice Sadasivam has recommended abou it. May I submit respectfully that the burden of proof has not been shifted? Under the Indian Evidence Act itself, if there is anything within the exclusive knowledge of the accused, it is for him to prove. There are Privy Council rulings which I do not want to cite. There are sections 105 and 106 which make provision for special rules of evidence. It is only on that basis and adopting that rationale that necessary law has been made in respect of the burden of proof. I will give two instances. There is section 4 (2) as early as in the 1937 Act. In the 1937 Act, there is section 4 (2) where there is a special rule of evidence shifting the burden of proof. This has been assailed in the Supreme Court Section 4 (2) of the old 1937 Act has been assailed in the Supreme Court in *A. S. Krishna Vs. The State,* which was the sequel to the present Governor of Kerala. Thirumathi Jothi Venkatachalam making a raid on certain premises in T. Nagar. That case went up to the Supreme Court and an attack was made on the validity of section 4 (2) which has made a special rule of evidence. The Supreme Court has held that section 4 (2) is valid and is not violative of Article 14 of the Constitution. It has been reported in 1957-Supreme Court-page 297. There is also another instance. Most of the hon. Members might recall that there is an Act of 1947, Act 2 of 1947, the Prevention

[Thiru K. Narayanaswamy] [1979 மார்ச் 17

of Corruption Act. There is one section in that Act. There are some clever officers who acquire wealth disproportionate to their income. Even assuming that that man has lived only on water and air from the date on which he enters into office, right up to the date of his arrest if the total amount is calculated, sometimes his wealth is three or four times more. Therefore the law has provided that in that case it is for him to prove how he acquired that wealth. So section 4 of the Prevention of Corruption Act which makes a special rule of evidence has been held to be good law and not violative of Article 14 in Vaidyanatha Iyer's case which had gone from our State. It has been reported in AIR-1958-Supreme Court-Page 61. Therefore, both section 4 of Act 2 of 1947 and section 4 (2) of the old Prohibition Act have been held to be valid. As I have already quoted, the departure from the normal rule has been there for nearly 100 years right from the days of Thiru Fitz James Stephen who was the draftsman of the Evidence Act. Sections 105 and 106 have been there for nearly a century.

(பிற்பகல் 1-30)

One more criticism has been made that the presumption has been shifted to the accused. All that I want to say is that the burden still lies on the prosecution to prove that X or Y has consumed liquor. It is only after the prosecution successfully proves that so and so has consumed liquor, the presumption alone is shifted that he has consumed illicit liquor. It is still open to him to say that he has consumed permissible liquor or illicit liquor or some medicinal or toilet preparations and there is no difficulty about it. The burden of proof is still on the prosecution to prove the offence. The hon. the Leader of the Opposition Thiru Sankaralingam was kind enough to mention this, particularly in respect of the burden of proof which still lies on the prosecution. The initial burden is still on the prosecution and it has got to be discharged by the prosecution and by no other body.

There was some criticism about this "Nadu Kadathal" and I am afraid that this word is too harsh a word.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஊர் கடத்தல் என்று சொல்லலாம்.



1979 மார்ச் 17]

THE HON. THIRU K. NARAYANASWAMY : It is not so. All that we have provided is—I would respectfully remind this House—the power to order removal of a person from one district to another is vested in a judicial authority and it can be exercised only after three offences. The safeguard is that a judicial discretion is to be exercised. There are sufficient safeguards and the power is vested in a judicial authority and every judicial order will be actuated by, in fairness to the judicial officers, judicial wisdom. It cannot be done arbitrarily or whimsically.

There was some criticism about the vehicle and the person being deemed to be guilty. Once again I would like respectfully to submit that the deeming provision creates a legal fiction and the legal fiction comes into being only when the owner of a vehicle fails to prove that he had taken due care in the prevention of the commission of crime. He need not even prove his case; if he is able to make out that he has a probable case or cause to show that due care has been taken in the prevention of the commission of the crime, the legal fiction will not come into play. There is a necessary safeguard and there is no arbitrariness in this. No man will be adjudged guilty without proper cause. No Court will do it. We have absolute confidence in the fairness and wisdom of the judiciary in such cases.

Sir, I will conclude my reply by reading only a few lines. After mentioning many things, the learned Judge says: "This is not to say that there is no need for modification. . . ." . We have modified the Act. He continues : " . . . . . change or improvement in the Prohibition laws and rules. We only wish to highlight and point out that the best of laws will have no effect if they are not used properly and adequately by a machinery which is devoted to the cause of Prohibition and is determined to make a success of it".

Sir, the hon. the Leader of the Opposition has made mention about the defective organisation. We will certainly try to repair it. Sir, our gun will be repaired. It is not merely that; we will use the bullet properly. As he said, the powerful bullet is powerless as long as the gun is defective. I quite agree. If you trigger it off, it does not discharge. Therefore, the gun will be repaired. The enforcement machinery will be brought into proper repair and the defects in en-

forcement will be rectified. Sir, may I respectfully make one submission, with a sense of judicial fairness, which I am bound to express as a citizen of this country and as one who believes in freedom? May I say that no part of this law will be made an instrument of political vengeance or political vindictiveness? I will be the last person to encourage it. I would rather stake anything in this world than be a party to any kind of a political revenge or vindictiveness or . . . .

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தந்தார்கள். கைது செய்வது சட்ட அமைச்சர் அல்ல. கைது செய்வது காவல் துறையினர். சட்ட அமைச்சருக்கு இருக்கின்ற அறிவாற்றல், பெருந்தன்மை எல்லாம் கைது செய்கின்ற அந்த அதிகாரிகளுக்கு இருக்குமா என்பதுதான் என்னுடைய கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: We will infuse the Police force with that. This is how I believe. A man must live for some principle. Otherwise, his life is merely an empty shell. I would go to the extent of saying that it is an empty shell. It is a phrase used by the Privy Council Law Lords in one case. I have myself quoted it so often.

Sir, the High Level Committee has stated: "for this purpose both the carrot and the stick may have to be used. A sense of social obligation and desire to help the Government achieve its goal of total Prohibition has to be created". I would make an appeal to every hon. Member of this House, making use of the phrase in the writing of the learned Judge. I appeal to every one of you to give me and this Government your help and your desire to help the Government achieve its goal of total Prohibition. I would specially request you for your best co-operation in implementing this measure.

Thank you. வணக்கம். நன்றி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தம் மேலவை விதி 130-ன் கீழ் ஆய்வுக்கு உகந்ததல்ல. எனவே, அதை அவையின் முடிவுக்கு விடப்போவ-



தில்லை. திருவாளர்கள் எம். சங்கரலிங்கம், ஆ. நல்லசிவன் ஆகியோரின் திருத்தங்கள் அவையின் முடிவுக்கு விடப்படுகின்றன. உறுப்பினர்கள் திருத்தத்தை வற்புறுத்துகிறார்களா ?

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தத்தை ஏற்று ஆய்வுக் குழுவுக்கு அனுப்புகிறோமா என்பது பற்றி கருத்து எதுவும் சொல்லவில்லை. நாங்கள் எல்லாம் ஏற்றுக் கொள்வார்கள் என்ற அபிப்பிராயத்திலேதான் இருக்கிறோம். இதில் அவருடைய கருத்து தெரிந்த பிறகு சொல்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : I regret to say that I made one omission in the emotion which entered into the last part of my speech, on upholding certain principles in life. I would normally have ended my speech by saying : I commend this to this Hon. House for passing the Bill and for accepting my motion in respect of this Bill as passed by the Legislative Assembly.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, நான் திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : ஆம் என்போரே அதிகம். அவையின் வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திருத்தம் அவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1979) ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும்'.

திருத்தத்தை மறுப்போரே அதிகம்.

திரு. எம். சங்கரலிங்கம் : ஆம் என்போரே அதிகம். அவையின் வாக்கெடுப்புக்கு விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வாக்கெடுப்பு விடும் வாய்ப்பு, இந்த அனுபவம் எனக்கும் இப்போதுதான் கிடைக்கிறது.

(பிற்பகல் 1-40)

அழைப்பு மணி ஒலிக்கப்பட்டது. வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

**ஏற்போர்**

1. திரு. கே. எஸ். அப்துல் வகாப்
2. திரு. ப. மாணிக்கம்
3. திரு. ஆ. நல்லசிவன்
4. திரு. வி. ஆர். பெரியண்ணன்
5. திரு. எல்லமந்தா
6. திரு. ம. சங்கரலிங்கம்
7. திரு. வே. தங்கப்பாண்டியன்
8. திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்
9. திரு. எல். ஆறுமுகம்
10. திரு. நீலநாராயணன்
11. திருமதி தமிழரசி
12. திரு. ஆற்காடு நா. வீராசாமி

**மறுப்போர்.**

1. மாண்புமிகு திரு. க். இராசா முகமது.
2. திரு. க. அறிவழகன்
3. திரு. மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி
4. திருமதி சீதாதேவி கிருஷ்ணசாமி
5. திரு. இரத்தின பாலகுருசாமி
6. மாண்புகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி
7. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்.
8. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்
9. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி
10. டாக்டர் எச். வி. ஹண்டே
11. திரு. எச். எல். முருகேசன்



12. புலவர் புலமைப் பித்தன்
13. திரு. இரா. சனார்த்தனன்
14. திரு. சி. இராமலிங்கம்
15. திரு. சு. எஸ். வெங்கடேசன்
16. திரு. ஏ. கே. வில்வம்
17. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்
18. திரு. ஜே. எம். மியாகான்
19. திரு. பி ஆர். தாமஸ்.
20. திரு. சி. சா. லெட்சுமிகாந்தன்
21. திரு. என். சுந்தரேசத் தேவர்
22. திரு. ஆ. பாலசுப்பிரமணியம்.

**நடுநிலையாளர்**

1. திரு. ஏ. ஆர். தாமோதரன்
2. திரு. செ. முத்துசாமி

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வாக்கெடுப்பு முடிவு: திருத்தத்தை ஆதரிப்போர் 12; எதிர்ப்போர் 22; நடுநிலையாளர்கள் 2. ஆகவே திருத்தம் தோல்வியுற்றது.

அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 13/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 24 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Sir, I beg to move—

"That the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 13 of 1979), as passed by the Assembly, be passed"

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் காலை நடவடிக்கைகள் இத்துடன் முடிவடைந்து, மீண்டும் மாலை 5 மணிக்குக் கூடும். நேற்று 4 மணிக்குக் கூடுமென்று சொன்னேன். அது திருத்தப்பட்டதை கவனித்துக் கொள்ளவும். மாலை 5 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-47)

அவை பிற்பகல் 5 மணி அளவில் மீண்டும் கூடியது.

## 6. அறிவிப்பு

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட அலுவல் விபரம் முடிவு செய்யப்பட்டது

| | |
|---|---|
| 19—3—1979 (திங்கட்கிழமை) | அரசின் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தல் |
| 20—3—1979 (செவ்வாய்க்கிழமை) | 1. 1978—79 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை விவர அறிக்கையை அளித்தல்.<br>2. 1971—72-ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையை அளித்தல்.<br>3. 1979—80-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம். |

(தொடர்ச்சி)





| | |
|---|---|
| 21—3—1979 (புதன்கிழமை) | 1978—79 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை விவர அறிக்கை, 1971—72 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவு குறித்த விவர அறிக்கை மீது விவாதம். |
| 22—3—1979 (வியாழக்கிழமை) | 1979—80 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதமும், பதிலுரையும். |
| 23—3—1979 (வெள்ளிக்கிழமை) | நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல் |
| 24—3—1979 (சனிக்கிழமை) முதல் 8—4—1979 (ஞாயிற்றுக்கிழமை) வரை) | கூட்டம் இல்லை |
| 9—4—1979 (திங்கட்கிழமை) | கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். |
| 10—4—1979 (செவ்வாய்க்கிழமை) | மகாவீரர் பிறந்த நாள்—விடுமுறை |
| 11—4—1979 (புதன்கிழமை) | கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது தொடர்ந்து விவாதம். |
| 12—4—1979 (வியாழக்கிழமை) முதல் 15—4—1979 (ஞாயிற்றுக்கிழமை வரை | கூட்டம் இல்லை. |
| 16—4—1979 (திங்கட்கிழமை) | வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். |
| 17—4—1979 (செவ்வாய்க்கிழமை) | மருத்துவம், பொது சுகாதாரம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம். |
| 18—4—1979 (புதன்கிழமை) | கூட்டுறவு, உணவு, நுகர் பொருள் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக்குறிப்புகள் மீது விவாதம். |
| 19—4—1979 (வியாழக்கிழமை) | தொழில் மற்றும் தொழிலாளர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம். |

| | | |
|---|---|---|
| 20—4—1979 (வெள்ளிக்கிழமை) | .. | சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சி வளர்ச்சி சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து குறித்த விளக்கக் குறிப்புகள் மீது விவாதம. |
| 21—4—1979 (சனிக்கிழமை) | . | சமூக நலன் மற்றும் இந்து அற நிலையம், அறக்கட்டளைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம். |
| 22—4—1979 (ஞாயிற்றுக்கிழமை) | .. | விடுமுறை |
| 23—4—1979 (திங்கட்கிழமை) | .. | நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு ஆய்வு செய்தல். |
| 24—4—1979 (செவ்வாய்க்கிழமை) 25—4—1979 (புதன்கிழமை) | .. | 1979—80-ஆம் ஆண்டிற்கான தமிழ் நாடு மின்வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீது விவாதம். |
| 26—4—1979 (வியாழக்கிழமை) 27—4—1979 (வெள்ளிக்கிழமை) | .. | அரசின் சட்டமுன்வடிவுகள் எவை யேனும் இருப்பின், அவை. |
| 28—4—1979 (சனிக்கிழமை) | . | தனி உறுப்பினர் அலுவல் |

5. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(2) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1979).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) சட்டமுன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகின்றேன்.

@ 160-167 ஆம் பக்கங்களில் இணைப்பு @ ஆக அச்சிடப்பட்டுள்ளது.





மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 11/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

*திரு. ஆ. தல்லசிவன் : தலைவரவர்களே, இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல், தற்காலிக அதிகாரங்கள் சட்ட முன்வடிவை நான் ஆதரிக்கின்ற நேரத்திலே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு மின்சார வாரியம் சம்பந்தப்பட்ட சில விஷயங் களைக் கொண்டு வர விரும்புகிறேன். முதலில் மின்சார வாரியம், மின்சார உற்பத்திக்காகவும் சரி, மின்சார வினியோகத்திற்காகவும் சரி, கோடிக்கணக் கான ரூபாய்களை நிர்மாணத் திட்டங்களில் செலவழிக்கிறது. மின்சார வாரியத்தின் எஸ்டிமேட்களை எல்லாம் மின்சார வாரியத்தைச் சேர்ந்த பொறியாளர்கள் தயாரிக்கிறார்கள். அப்படித் தயாரிக்கப்பட்ட எஸ்டிமேட் களை 'கிராஸ் செக்கப்' செய்வதற்கு ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா? அவர்களே திட்டங்களைப் போடுகிறார்கள். அவர்களே அவற்றை நிறை வேற்றுகிறார்கள். அவ்வளவு தொகை அவசியமா என்பதை 'கிராஸ் செக்கப்' செய்வதற்கு ஒரு ஏற்பாடு இன்றையதினம் இருக்கிறதா என்பதை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அத்தோடு இன்னொன்று. அந்த டிப்பார்ட்மெண்டுக்குள் ளேயே ஏதாவது 'கிராஸ் செக்கப்' செய்வதற்கான ஏற்பாடு இருக்கிறதா? தமிழக அரசினுடைய பல்வேறு இலாக்காக்களில், இந்தமாதிரி கன்ஸ்ட்ரக் ஷனில், வேறு பல விஷயங்களுக்காக, கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழிக்கும்போது, அந்த எஸ்டிமேட்டிலுள்ள கணக்கையும், இப்பொழு துள்ள காலக்கிரயங்களையும் விலைவாசி நிலைகளையும் லேபர் காஸ்டையும் கணக்கிலே எடுத்துக்கொண்டு நிதானமாக அலசி ஆராய்கிறார்களா? அது மாதிரி இந்த இலாகாவிலும் செய்வதற்காக இந்த இலாகாவில் சம்பந்தப் படாத எஞ்சினியர்களைக் கொண்ட ஒரு பேனல் நியமிக்கப்படுமா? அந்த பேனல் மூலமாக இவைகள் செக்கப் பண்ணப்படுமா? இதற்கான பதிலை மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நான் இதைக் கேட்பதற்குக் காரணம் இருக்கிறது சர்க்காரியா கமிஷன் ரிப்போர்ட் வந்தது. இங்கே கூட அது தரப்பட்டது. நான் அதைப்

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 மார்ச் 17

படித்த போது வீராணம் திட்டம், அது நிறைவேற்றப்பட்ட விதம் போன்றவற்றையும் படித்து பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். எவ்வளவு பணம் தேவைப்படுகிறது, யார் திட்டம் போடுகிறார்கள், யார் 'செக்கப்' பண்ணுகிறார்கள், டெண்டர்களை யார் எப்படி 'செக்கப்' பண்ணுகிறார்கள். போன்ற விவரங்களையெல்லாம் அந்த வீராணம் திட்டத்தைப்பற்றிப் படித்த போது தெரிந்து கொண்டேன். அதன் அடிப்படையில்தான் இந்த யோசனையை நான் அரசுக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. நம்முடைய கோடிக்கணக்கான ரூபாய்களை கன்ஸ்ட்ரக்ஷனுக்காகச் செலவழிக்கக்கூடிய இலாகாவாக இன்றையதினம் மின்சார வாரியம் இருக்கிறது. இந்தமாதிரி எஸ்டிமேட்கள் போட்டு, திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருப்பதால், இந்த எஸ்டிமேட்களை எல்லாம் செக்கப் பண்ணுவதற்கு நிச்சயமாக மின்சார இலாகா சம்பந்தமில்லாத எஞ்சினியர்களைக் கொண்ட ஒரு பேனல் அமைக்கப்படுமா? பல்வேறு இலாகாக்களிலும் இவ்விதம் கோடிக்கணக்கில் செலவழிக்கப்படுவதால், சுயேச்சையான எஞ்சினியர்களைக் கொண்டு, எந்த இலாகாவுடனும் சம்பந்தப்படாத எஞ்சினியர்களைக் . கொண்டு, இந்த பேனல் அமைக்கப்படுவது மிக மிக அவசியம் என்று நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட யோசனை அரசிடம் இருக்கிறதா? அப்படி இல்லாவிட்டால், அப்படிப்பட்ட யோசனையைப் பரிசீலிப்பார்களா என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக, இந்த அரசு மின்சாரக் கட்டணத்தில் ஒரு தவறான கொள்கையை வைத்திருக்கிறது. சரியான கொள்கையை உருவாக்க வேண்டுமென்று நான் அரசை இந்த நேரத்தில் வற்புறுத்துகிறேன். இப்போதுள்ள கொள்கை சரியான கொள்கை அல்ல. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் இந்த அவையிலே பல கேள்விகளுக்குப் பதில் சொல்லும் போது, மக்களுடைய நல்வாழ்வுக்கான பணியில் ஈடுபட்டிருக்கிற பல சமூக ஸ்தாபனங்கள், வெல்பேர் ஆக்டிவிட்டீஸ் போன்றவற்றுக்கெல்லாம் மின்சாரக் கட்டணத்தில் சலுகை தர முடியாது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் காஸ்ட் பிரைசைவிட குறைவாகத் தொழில் நடத்துகிற முதலாளிகளுக்கு மட்டும் சலுகை கொடுக்கிறோம் என்றார்கள். அதற்கான காரணத்தைக் கேட்டபோது, அதையும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி நாம் அதிகக் கட்டணம் வாங்கினால், இவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்கள் வேறு மாநிலங்களில் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் பெற்று உற்பத்தி செய்கின்ற பொருள்களுடன் போட்டியிட முடியாது என்று சொன்



D/N29 V21,32 N80-159

1979 மார்ச் 17] [திரு. ம. சங்காலிங்கம்]

னார்கள். மேலும் இங்கே அவர்களுக்குச் சலுகை கொடுக்காமல் போனால், அவர்கள் வேறு மாநிலங்களுக்குப் போய் தொழிலை ஆரம்பித்து விடுவார்கள் என்ற காரணத்தால், மின்சாரக் கட்டணச் சலுகை கொடுக்கிறோம் என்றும் சொன்னார்கள். நாம் அதிகக் கட்டணம் கேட்டால், அவர்கள் நம்முடைய மாநிலத்தில் பணத்தை 'இன்வெஸ்ட்' பண்ணி தொழிற்சாலைகளை நடத்த முன்வரமாட்டார்கள் என்கின்ற மாண்புமிகு அமைச்சரவர்களுடைய நியாயத்திற்குள் நான் போக விரும்பவில்லை. எனக்குப் பேசுவதற்கு ஒதுக்கப்பட்ட நேரமும் குறைவு. அதனால் அதற்குள் இப்போது போக விரும்பவில்லை. அவர்கள் தொழில் நடத்துவதற்காக ஒரு 'இன்சென்டிவ்' ஆக இதை நாம் கொடுக்கிறோம் என்று கூறப்படுகிறது. அப்படிக் கொடுக்கின்றபோது இன்றைக்கு நாட்டிலே குறிப்பிட்ட வருமானத்திற்குக் கீழ் எவ்வளவோ மக்கள் வாழ்க்கையை நடத்த முடியாமல் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தால், அவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற ஒரு திட்டத்தை அரசாங்கமே கொண்டு வந்திருக்கிறது. அப்படி நிவாரணம் அளிப்பது அவசியம் என்று கருதி, கிராமப்புறங்களிலே வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு ஒரு நாளைக்கு 1 ரூபாய் சம்பளம் தருவது என்று அரசு முடிவு செய்திருக்கிறது. இந்த நிலைமையில் கிராமப்புறங்களில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற மக்களுடைய வீட்டு மின்சாரக் கட்டணத்தை 38 காசிலிருந்து குறைக்கக் கூடாதா? முதலாளிகளுக்கு மட்டும் கன்செஷன் தருவது எந்த விதத்தில் நியாயம்? இன்றைக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் இதற்கு ஒரு ஏற்பாடு செய்யக் கூடாதா? நான் கேட்பது நியாயம் இல்லையா? அன்றாடம் சாப்பிடுவதற்குக் கூட வழியில்லாமல் இருப்பவர்களுக்கு அரிசி வாங்குவதற்காக அரசு ஒரு ரூபாய் தரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற பரிதாப நிலையிலுள்ள அந்த கிராமப்புறத்திலேயிருக்கிற மக்களிடமிருந்து 38 காசு கட்டணம் வசூலிக்க வேண்டுமா? முதலாளிகளுக்குத் தருகின்ற சலுகையை கிராமப்புறங்களிலுள்ள விவசாயிகளுக்குத் தரக் கூடாதா? கிராமப்புறங்களில் இருக்கும் மக்களுக்கு 1 ரூபாயாவது நிவாரணம் அளிப்பது அவசியம் என்ற நிலைக்கு அரசு இன்றைக்கு வந்திருக்கிறதே, இந்த நேரத்தில் அவர்கள் வீட்டு கரண்டுக்கு மட்டும் 38 காசு என்று விதித்திருக்கிறதே. அதைக் குறைப்பதற்கு வழி ஒன்றும் இல்லையா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

(2/1981)

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 மார்ச் 17

(பிற்பகல் 5-10)

மின்சாரத்திற்குக் கட்டணம் விதிக்கும்போது, பல்வேறு அம்சங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு முறையான வகையில் கட்டணத்தை நிர்ணயிக்க வேண்டும். தற்போது அந்த வகையில் செய்யாமல் யார் யார் அரசாங்கத்தின்மீது நிர்ப்பந்தம் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு மட்டும் சலுகை கொடுப்பது என்ற அடிப்படையில் சலுகை வழங்குவது சரியில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, மின் கட்டணத்தை உரிய நேரத்தில் கட்டாததன் காரணமாக, ஒரு தொழிற்சாலைக்கு ரூ. 7 கோடி அளவுக்கு அபராதம் விதிக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் என்ன நடந்தது என்றால், அந்தத் தொழிற்சாலையை நடத்துகிறவர்கள் அந்தத் தொகையைக் கட்டாதது மட்டுமல்ல, அதையும் சமாளித்து அரசாங்கத்திற்கு எதிராகக் கோர்ட்டுக்கும் போய் தடையுத்தரவையும் வாங்கியிருக்கிறார்கள். இது ஒரு பக்கம் என்றால், இன்னொரு பக்கத்திலே ஆயிரக்கணக்கான அப்பாவி விவசாயிகளைத் திரட்டி வைத்துக்கொண்டு, பாலத்தை உடைப்போம் என்று நிலப்பிரபுக்கள் ஆர்ப்பாட்டம் செய்தால், அவர்களுக்கும் மின் கட்டணத்தைக் குறைத்துக் கொடுக்கலாமா என்று அரசாங்கம் ஊசலாடுகிறது.

எனவே, சாதாரண அடிமட்டத்தில் இருக்கிற மக்களின் மின் தேவைகளைக் கணக்கில் கொண்டு, அதற்குரிய வகையில் மின்சாரக் கட்டணத்தைத் தீர்மானிப்பதில் அரசாங்கத்திற்கு ஒரு 'ரேஷனல் பாலிசி' 'இன்டகிரேட்டட் பாலிசி' இருக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். அவ்வப்போது ஏற்படுகிற நிர்ப்பந்தத்தைத் தவிர்ப்பதற்காக முடிவு எடுப்பது என்பதை விட்டுவிட்டு, அரசாங்கம் மின் கட்டணத்தைத் தீர்மானிப்பதில் ஒரு சரியான கொள்கையைப் பின்பற்ற முன்வர வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, அரசு, மின்சாரத் துறையில் வேலை செய்யக்கூடிய ஊழியர்களுக்கு, அவர்களுடைய பிராவிடெண்ட் பண்டுக்காகப் பிடிக்கப்பட்ட சுமார் 90 லட்சம் ரூபாயை, அந்த ஊழியர்களின் கணக்கில் இதுவரையிலும் வரவு வைக்காமல் இருக்கிறது. பல வருஷங்களாக இந்த நிலைமை இருந்து வருகிறது. தற்போது புதிதாய் கொண்டு வரப்பட்டுள்ள பிராவிடெண்ட் பண்டு ஆக்ட் படி உள்ள கணக்கு அல்லாமல், முன்பு அந்த ஊழியர்களிடம் பெறப்பட்ட அந்தத் தொகையை—இந்த மின்சார வாரியம் அமைவதற்கு



1979 மார்ச் 17] [திரு. ம. சங்காலிங்கம்]

முன்பாக பல்வேறு தனியான நிறுவனங்களாக இருந்தபோது பிடிக்கப்பட்ட அந்தத் தொகையை—இண்டிஜுவல் அக்கவுண்ட்டுக்கு கிரிடிட் செய்யாமல் இருக்கிறார்கள். அதன் காரணமாக எந்த ஒரு ஊழியர் ரிட்டையர் ஆகிப் போனாலும் சரி, அல்லது அவர் இறந்து போனாலும் சரி, அதற்குப் பிறகு அவர்களுடைய பிள்ளைகளுக்குக்கூட இந்த பிராவிடெண்ட் பண்டு பணம் போய்ச் சேரவில்லை. கேட்டால், இந்த 90 லட்சம் ரூபாயிலிருந்து ஒவ்வொருவருக்கும் சேர வேண்டிய தொகையை அவர்கள் கணக்கில் 'போஸ்ட்' செய்து முடிக்கவில்லை என்று சொல்கிறார்கள். போஸ்ட் செய்யத் தேவையான ஆட்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள். தொழிற் சங்கங்கள் கடந்த 4, 5 வருஷங்களாக மின்சார வாரியத்தின் முன்பாக இந்தக் கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கின்றன. தற்போது, கடைசியில் இந்த அரசு வந்த பிறகு இன்னும் 50, 60 லட்சம் ரூபாய் அளவுக்கு போஸ்டிங்ஸ் பாக்கியிருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இந்த அரசாங்கத்திற்கு அல்லது மின்சார வாரியத்திற்கு வரவேண்டிய தொகை என்றால், அந்த 'ரெவின்யூ'—வைக் 'கலெக்ட்' செய்ய வேண்டிய இடங்களில் அதிகமான கிளார்க்குகளை நியமிக்கிறார்கள். மின்சார வாரியத்திற்கு அதிகமான பணம் கிடைக்கிறது என்றால், அதற்கு உடனே சிப்பந்திகளை நியமிக்க முன்வருகிறபோது, மின்சார வாரியத்தைச் சேர்ந்த ஊழியர்களுடைய பிராவிடெண்ட் பண்டு கணக்கைப் பதிந்து கொடுக்க ஆட்கள் போதாமல் இருக்கிறார்கள், அதிகமான கிளார்க்குகளைப் போட்டு இந்த வேலையைச் சீக்கிரமாக முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டால், இதுவரையிலும் மின்சார வாரியம் அசைய மறுக்கிறது. இதை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தமிழ் நாட்டில் ஏற்கெனவே இருந்த மின்சாரக் கம்பெனிகள், தனியாரால் நடத்தப்பட்டு வந்த மின்வழங்கும் கழகங்கள் அனைத்தும் தற்போது அநேகமாக மின்சார வாரியத்தோடு இணைக்கப்பட்டுவிட்டன. அவைகளில் இருந்த சிப்பந்திகளையெல்லாம் மின்சார வாரியத்தின் ஊழியர்களாக ஏற்றுக் கொண்டாகிவிட்டது. அநேகமாக பழைய அமைப்புகளில் இருந்த சிப்பந்திகள் அனைவரையுமே மின்சார வாரியம் ஏற்றுக்கொண்டு விட்டது. அவர்களுக்கு இருக்கிற கஷ்டம் என்னவென்றால், ஏற்கெனவே மின்சார வாரியத்தில் இருக்கிற தொழிலாளர்களுக்கு, சிப்பந்திகளுக்கு இருக்கிற 'ஓர்க்

லோடு நார்ம்ஸ்' பழைய அமைப்புகளிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களுக்கு இன்னும் 'அப்ளை' செய்யப்படவில்லை. அதாவது ஏற்கெனவே மின்சார போர்டில் வேலை செய்து வருகிறவர்களுக்கு இருக்கிற 'ஓர்க் நார்ம்ஸ்' 'அண்டர்டேக்கிங்' களிலிருந்து வந்த சிப்பந்திகளுக்கு 'அப்ளை' பண்ண மாட்டோம் என்று சொல்லுகிறார்கள். இது சரியல்ல. இதையும் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். இன்னும் பல்வேறு விஷயங்களைச் சொல்ல வேண்டியிருந்தாலும், மின்சார பட்ஜெட் வரும்போது அவைகளைப்பற்றியெல்லாம் விரிவாகப் பேசிக்கொள்ளலாம் என்று நினைத்து, இவைகளை மட்டும் தற்போது கூறி முடித்துக்கொள்கிறேன்.

Thiru A. R. DAMODARAN : Sir, this is a very simple Bill and I just wanted to mention one point which I had forgotten to mention when I was speaking on the Budget. Sir, early in 1978, last year in the 1978 Budget, the Union Government had levied an excise duty of 2 paise per unit on Electricity power generated within the State. After a great deal of persuation, the Government of India has agreed that the entire Excise Duty proceeds from this tax were to be given to the States concerned. Even in the documents that placed on the table of the House, it was mentioned that the Finance Commission had recommended the transfer of this Excise Duty to the State. According to this and according to the estimate made by the Hon. Minister, in 1978-79, an income of approximately Rs. 14 crores would accrue to the Government of Tamil Nadu by way of transfer of this Excise Duty. Because we are arriving at the end of the year, I would renew the plea that I made last year that the entire proceeds of this Excise Duty, namely, Rs. 14 crores should not be credited to the general funds of the Government of Tamil Nadu but should be transferred as a subsidy to the State Electricity Board before the 31st of March so that the commercial accounts of the State Electricty Board could reflect these receipts which would go to decrease the losses of the State Electricity Board. I mention this because if this accrues to general revenues and the Electricity Board is left with whatever loss it is going to have during 1978-79, then it will be very difficult for the Electricity Board to maintain its generation programme. I would, therefore, like to know from the Hon. the Minister for Power whether this will be done in this year itself or whether the decision is still due from the Government of Tamil Nadu. Thank you.



திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, 1947 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) சட்டத்தை தேவைக்கு ஏற்ப நாம் அவ்வப்போது நீட்டித்து வருகிறோம். 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தோடு அது முடிவடைவதால், இந்த மசோதா தற்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை வரவேற்கிறேன். மின்சாரத் துறையினர் எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகிறார்களோ அதைத் பொறுத்துத்தான் நம்முடைய நாட்டின் எதிர்காலம், வளர்ச்சி, வளம் ஆகிய அனைத்தும் அமைந்திருக்கின்றன என்பதை யாரும் மறந்துவிடுவதற்கில்லை. அதற்குரிய ஆக்க பூர்வமான கருத்துக்களை மின்சாரத் துறை பட்ஜெட்டின்போது சொல்வதற்கு வாய்ப்பு இருப்பதால், நான் அதனுள்ளே தற்போது செல்லாமல் மற்ற விஷயங்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். நமது மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கேரளத்திலிருக்கும் திருவனந்தபுரம் சென்று, அங்குள்ளவர்களோடு பேரம் பேசி யூனிட் 25 பைசா என்ற விலையில் மின்சாரத்தை வாங்கிக்கொண்டு வர வேண்டிய நிலையில்தான் நாம் இருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது. நான் இந்த அவையில் முன்பே ஒரு கருத்தைத் தெரிவித்தேன். அதாவது தற்போது நாம் எங்கேயிருந்து பேரம் பேசி மின்சாரத்தை வாங்கி வருகிறோமோ, அந்த மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இடங்களெல்லாம் உண்மையிலேயே தமிழகத்திற்குச் சொந்தமானவைகள்தான். இந்த மின்சாரம் உற்பத்தியாகும் பகுதிகள் தேவிகுளம், பீர்மேடு பகுதியைச் சேர்ந்தவைகளாகும். 1946 ஆம் ஆண்டிலேயே தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் தமிழகத்தோடு இணைய வேண்டுமென்று கோரி, அதற்கென ஒரு மாபெரும் இயக்கம் தோன்றி, நமது மாண்புமிகு தலைவர் அவர்களே ஒரு முறை தேவிகுளம் பகுதியில் அந்தப் போராட்டத்தை நடத்தி வைத்தார்கள். அதைத் தொடர்ந்து 3 முறை தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், நெய்யாற்றின்கரா ஆகிய தொகுதிகளில் தேவிகுளம், பீர்மேடு பகுதியை தமிழகத்தோடு இணைக்க வேண்டுமென்ற அடிப்படையில் போட்டியிட்டு வெற்றியையும் பெற்ற பிறகும், அவைகளெல்லாம் தமிழ்ப் பிரதேசம் என்று நிரூபித்தும், அந்த வட்டார மக்களின் எழுச்சியையும், விழிப்புணர்ச்சியையும் எடுத்துக் காட்டிய பிறகும், அதை எடுத்துக்கொள்ளச் சக்தியில்லாமல்—வேறு கடுமையான வார்த்தையை நான் சொல்ல விரும்பவில்லை—அதை விட்டுவிட்டு குளமாவது மேடாவது என்று சொல்லியதால், இப்போது அந்தப் பகுதிகள் கேரளத்தோடு இருக்கின்றன. அன்று அவ்வாறு சொன்னவர்களுக்கு

இன்றைக்கு நிலைமை புரியும் என்று நினைக்கிறேன். முன்பு யூனிட் 18 பைசாவிலிருந்த நிலை மாறி இப்போது 24 பைசாவுக்கு நாம் வாங்க வேண்டியிருக்கிறோம். நம்மிடம் மின்சாரத்தை முதலில் வழங்கி, பிறகு நம்மிடமிருந்து கருநாடகத்திற்கு மின்சாரம் கொடுக்கப்பட்டு வந்த நிலைமையும் இன்றையதினம் மாறிவிட்டது. கோழிக்கோட்டிலிருந்து தனியான லைன் இழுத்து கருநாடகத்திற்கு மின் சப்ளை தற்போது நடக்கிறது. அந்தப் பகுதியில் இருந்தவர்களின் தமிழ் உணர்வை அப்போது பாராட்டாமல் விட்டவர்கள் இப்போது அந்தப் பகுதிகள் தமிழகத்தோடு இணையாததன் காரணமாக, தமிழகத்திற்கு வரவேண்டிய வளம் எவ்வளவு குறைந்துவிட்டது என்பதை உணர்வதில் பலனில்லை.

நாம் நமது பண்பாட்டை மிகுதியாக நினைக்கிறோம். ஆனால் பிற மாநிலங்களைப் பொறுத்தவரையில், அவர்கள் இப்படிப்பட்ட கிளர்ச்சிகளை இன்னும் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றளவும் கருநாடகத்திற்கும் மகாராட்டிரத்திற்குமிடையே இருக்கிற எல்லைப் பிரச்சினை ஓய்ந்துவிடவில்லை. நாம்தான் பரந்த நோக்கம் கொண்ட ஒரு பண்பாட்டை வளர்த்துக்கொண்டு, நமது மாநிலத்தின் வளத்திற்கும் வாழ்வுக்கும் மிக இன்றியமையாத பகுதிகளை மற்றவர்களுக்கு விட்டுவிட்டு அவர்களிடத்திலே இன்றையதினம் மின்சாரத்திற்குப் பேரம் பேசிக் கொண்டிருக்கிற நிலையிலிருக்கிறோம். எனவே, மின்சாரத் துறையினர் இந்தச் சட்டத்தின்

(பிற்பகல் 5-20)

மூலம் அதனுடைய கட்டணங்களை வசூல் செய்து பெற்று, நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள், எக்சைஸ் வரியிலிருந்து வருகிற பணம் 'ஜெனரல் ரெவின்யூ' க்குப் போகாமல் மின்சாரத் துறையினுடைய நிதியிலே வந்து சேர வேண்டும் என்று சொன்னது போல, மின்சாரத் துறையினருக்குப் பணத்தைச் சேர்த்துக்கொண்டு மின்சார உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுக்கலாம். நீர்வீழ்ச்சி மூலம், அல்லது நல்ல நிலக்கரி போன்றவைகள் மூலம் முடியுமா என்ற முறைகளை ஆய்ந்து அதைப் பெருக்கும் திட்டங்களை அரசு விரைவாக வகுக்க வேண்டும். எனக்கு ஒரு செய்தியை உரிமையாகச் சொல்ல முடியும். கன்னியாகுமரி மாவட்டத்தில் மணல்வாரிக்குறிச்சி என்ற பகுதியில் அணுசக்தி தயார் செய்யப்படுவதற்குத் தேவைப்படும் தோரியம் ஏராளமாகக் கிடைக்கின்றது.



அதை எடுத்து, அந்தப் பகுதியிலே 'ப்ராசஸ்' செய்து அங்கேயே அந்த உலோகத்தைப் பிரித்தெடுப்பதற்குரிய தொழிற்சாலையை அமைக்க வேண்டிய முயற்சிகளை நாம் எடுத்து, மத்திய அரசுக்குச் சொல்லி, அந்தத் தொழிலை நடத்துகின்ற மத்திய அரசினைச் சார்ந்தவர்கள் அங்கு தேவைப்படும் மின்சாரத்தை என்ன கட்டணத்துக்குத் தருவீர்கள் என்று கேட்டு, 10—12 பைசாவுக்குக் கொடுக்கலாம் என்று நாம் சொன்னோம். கேரளாவிலே அந்தத் தொழிற்சாலை இருக்குமானால், அவர்கள் அதற்கு வேண்டிய மின்சாரத்தை 6 பைசாவுக்கே தரலாம் என்று சொன்னார்கள் என்று அப்போது பதில் சொல்லி, இன்றைக்கு அது கேரளாவிலே அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படி பல நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. ஆகவே, சிறு சிறு தொழில்களுக்கும், தொழில் துறைகளுக்கும் நாம் மிகக் குறைந்த விலையில் மின்சாரம் அளிக்கும் ஒரு நிலை ஏற்பட்டால், அதனால் நமக்கு மிக நஷ்டம் ஏற்பட்டாலும், அதன் மூலம் இந்த நாட்டிலே வளமும், செல்வமும் சிறக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு இப்போது மின்சாரம் 12 பைசாவுக்குக் கொடுக்கிறார்கள். மற்றவர்களுக்கு விதிக்கும் கட்டணத்தை விட இது குறைவுதான். இன்னும் குறைத்துக் கொடுக்க வழிவகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மின்சாரத் துறையைப் பொறுத்தமட்டில், பொறியியல் வல்லுநராகப் பட்டம் பெற்று, அந்தத் துறையிலேயே பணிபுரிந்த—அதுவும் குறிப்பாக எங்கள் மாவட்டத்திலே அவர் பணி புரிவதை நான் கண்ணால் பார்த்திருக்கிறேன்—திறமை பெற்ற ஒருவர் அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டிருப்பதால், இந்த நாட்டு மக்களுக்கு மிகுந்த நன்மை கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. நாம் முயற்சி செய்தால், நாம் இழந்த மின்சாரத்தை மீண்டும் பெறுவதற்கு வழி உண்டு. அதற்கு முயற்சித்தால், மக்கள் உங்கள் பின் நிற்கிறார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைச் சொல்லப் போகிறீர்களா? மின்சாரத்தைப் பற்றிச் சொல்லப் போகிறீர்களா?

திரு. ம. சங்கரலிங்கம்: இழந்த மின்சாரத்தை மீண்டும் பெறுவதற்கான போராட்டத்தைத் தொடங்கினால், அந்தப் போராட்டத்திற்கு மக்கள் தயார். தலைமை தாங்க, நாங்கள் முன்பு பல தடவை பலரை அணுகி அவமானப்படும் நிலைதான் ஏற்பட்டது. அப்போது எங்களுக்குக் கை கொடுத்தவர்கள், தலைவர் அவர்களே, நீங்கள். உங்களுக்கும் அது

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 மார்ச் 17

நன்றாகத் தெரியும். எனவே, அந்தச் சூழ்நிலையை அவர்கள் உருவாக்க முடியாமல் இருந்தாலும் கூட, தமிழகம் உருவாக்க வேண்டும் என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சியினரும் இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்றிருப்பதற்கு நன்றி. இந்தச் சட்ட முன்வடிவு ஏற்கெனவே இருந்த சட்டம் காலாவதி ஆகிற காரணத்தினால் காலத்தை நீட்டுவதற்கும், அதன்மூலம் கட்டணங்களை மின் வாரியம் விதிப்பதற்கும் வகை செய்கிறது என்கின்ற வகையில் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இருப்பினும் இந்தச் சட்ட முன்வடிவின் மீது எழுகிற வாதத்தைப் பயன்படுத்தி, மின்சார வாரியத்தைப்பற்றிச் சில கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் ஆலோசனைகளாக வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசுகின்றபோது, மின்சாரம் உற்பத்தி செய்வதில் மத்திய அரசு வரி விதிப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மத்திய அரசு விதித்த வரி மத்திய அரசுக்குத்தான் சேரும். ஆனால் மாநிலங்களின் சார்பாக வற்புறுத்தியதன் காரணமாகவும், இன்னும் சொல்லப்போனால் தமிழக அரசு எல்லா மாநிலங்களையும் விட முனைந்து கொண்டு அந்தக் காரியத்தில் ஈடுபட்டதன் காரணமாகவும், ஓரளவுக்கு அந்தக் கருத்தை மத்திய அரசு இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஏழாவது நிதிக் குழு மத்திய அரசாங்கம் மின் உற்பத்தியின் மீது விதிக்கின்ற வரியின் மாநிலங்களுக்கே திரும்பத்தர வேண்டும் என்ற பரிந்துரையைச் செய்திருக்கிறது. அதை மத்திய அரசும் ஏற்றுக்கொண்டு இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலேயிருந்து சென்ட்ரல் லெவியை அந்தந்த மாநிலத்திற்குத் தருவதென ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டுக்கான லெவி, அதாவது இந்த மார்ச் மாதம் முடிய வசூலிக்கப்படுகின்ற அந்த வரி, மத்திய அரசுக்குப் போய்ச் சேரும். அது மாநிலங்களுக்குத் தரப்படமாட்டாது. ஆனால் மாநிலங்களின் சார்பில், இந்த ஆண்டு மத்திய அரசு வசூலித்த அந்த வரியையும் கூட மாநிலங்களுக்கே திரும்பத் தர வேண்டும் என்று ஏற்கெனவே வற்புறுத்தினோம். இப்போதும் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் இயலாது என்று தெரிவித்துவிட்டார்கள். ஆகவே, இந்த ஆண்டு மின் உற்பத்தியின் மீது மத்திய அரசு விதித்திருக்கின்ற வரி மாநில அரசுக்குக் கிடைக்காது என்ற நிலையிருப்பதால், அதை, மாநில அரசு மின்சார வாரியத்திற்கு இந்த மாத இறுதிக்குள் அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் நாங்கள் இருக்கிறோம். நம்முடைய



1979 மார்ச் 17]

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, கேரளத்திலிருந்து மின்சாரத்தைப் பெறுவதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்கள் மிகவும் உணர்ச்சி வயப்பட்டுக் கூட பேசினார்கள். அங்கே உள்ள அந்தப் பகுதி நம்மோடு இருந்திருந்தால், இயல்பாகவே நமக்கு மின்சாரம் கிடைத்திருக்குமே, அந்தப் பகுதியை அந்தக் காலத்திலே—தமிழ் உணர்வு அவ்வளவாக இல்லாத நேரத்திலே—அவர்களுக்கு விட்டுக்கொடுத்ததன் காரணமாக, இன்றைக்கு நாம் வேதனைக்கு ஆளாகியிருக்கிறோமே என்று சொன்னார்கள். இப்போது போராட்ட உணர்வு கூட இல்லை என்று வருத்தப்பட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காடம்பாறை நீரேற்றத் திட்ட துவக்க விழாவிலே குறிப்பிட்டதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். முதல்வர் அவர்கள் தாயும், சேயும் ஆனாலும் வாயும், வயிறும் வெவ்வேறு என்று குறிப்பிட்டார்கள். ஆகவே, அதைப் போராடிப் பெற முடியாமல் போய்விடுமோ என்பதால், அதை நாம் உறவாடித்தான் பெற வேண்டும். கேரள மாநிலத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாக இந்த ஆண்டு தமிழ் நாட்டுக்குக் கேரளம், மின்சாரம் வழங்க ஒப்புக்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே, யூனிட் ஒன்றுக்கு $12\frac{1}{2}$ பைசாவும், மத்திய அரசினுடைய லெவி $2\frac{1}{2}$ பைசாவும் சேர்த்து 15 பைசாவுக்கு நாம் மின்சாரத்தைப் பெற்றோம். ஆனால் இப்போது யூனிட் ஒன்றுக்கு 16 பைசாவும், 2 பைசா மத்திய அரசு லெவி என்கின்ற கணக்கிலேயும் சேர்த்து 18 பைசாவுக்கு நமக்கு மின்சாரம் தர அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் கர்நாடக அரசுக்கு 23 பைசாவுக்கு வழங்க அவர்கள் ஒப்பந்தம் ஏற்கெனவே செய்து கொண்டிருக்கிறார்கள். எந்த மாநிலமும் தன்னிடத்திலே இருக்கின்ற பொருளை யார் அதிக விலைக்கு வாங்குகிறார்களோ அவர்களுக்குத் தருகின்ற உணர்வைப் பெற்றிருப்பது இயற்கை. இந்த ஆண்டு கேரள அரசைப் பொறுத்தவரையில், அதிக விலை கொடுக்க கர்நாடக அரசு முன்வந்தாலும் கூட, தமிழகத்தை மறந்துவிடக்கூடாது என்ற அடிப்படையிலே தமிழகத்திற்கு மின்சாரம் தர இருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் 24 பைசா என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் நமக்குக் கொடுக்க இருப்பது $16 + 2 = 18$ காசுக்குத்தான் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசுகிறபோது, "திட்டங்கள் மதிப்பிடப்படுகின்றன, அந்த மதிப்பீடுகளை ஆராய்வதற்கு வழி உண்டா? அந்த மதிப்பீடுகள் வேலை நடக்கிறதா? இதையெல்லாம் எப்படிக்

கண்காணிப்பது? வீராணம் திட்டத்தைப்பற்றி நாமெல்லாம் இப்போது பார்க்கிறபோது, எவ்வளவு கஷ்டப்படவேண்டியிருக்கிறது?" என்று குறிப்பிட்டார்கள். சில மாதங்களுக்கு முன்னால் மின் வாரியத்திற்குக் கூட நாங்கள் ஆலோசனை சொன்னோம். திட்ட மதிப்பீடுகளை தயார் செய்வதற்கும், தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள்படி வேலை நடக்கிறதா என்று பார்ப்பதற்கும், அந்த வேலைகள் நடக்கிறபோது, டெண்டர்கள் 'கால் ஃபார்' பண்ணுகிறபோது, அவைகள் சரியாக ஆராயப்பட்டனவா என்று பார்ப்பதற்கும், இப்போது தொழில் நுட்ப ரீதியில் ஆராய்வதற்கு வழியில்லை. டெக்னிக்கல் கமிட்டி இல்லை. இந்தக் குறையைப் போக்க வேண்டும் என்று மின்சார வாரியத்திடம் நான் தெரிவித்தேன். ஆனால் மின்சார வாரியத்திலே இருக்கிற தலைமைப் பொறியாளர்கள், "இப்படிச் செய்தால், தங்களுக்கும் மேலாக அவர்கள் அதிகாரம் பெறுகிற நிலை இருக்கிறது" என்ற அச்சத்தையும் வருத்தத்தையும் தெரிவித்தார்கள். ஆனால் மத்திய அரசில், ஏற்கெனவே மத்திய பொதுப் பணித் துறையைப் பொறுத்தமட்டில், இதுபோன்ற ஒரு அமைப்பு இருக்கிறது. ஆகவே, தொழில் நுட்ப ரீதியாக ஆய்வதற்கும், ஆடிட் செய்வதற்கும் ஒரு அமைப்பு கட்டாயம் தேவை. அதை அரசே

(பிற்பகல் 5-30)

செய்வதா, அல்லது மின்சார வாரியத்திற்கு உத்தரவிடுவதா என்பதைப்பற்றி நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏனென்றால், அப்படிச் செய்வதன் மூலம்தான் தொழில் நுட்ப ரீதியாகத் தவறுகள் ஏற்பட்டால், அதைக் கண்டுபிடிக்கவும் அதற்குரியவர்களைத் தண்டிக்கவும், அதன் மூலம் அரசுக்கு ஏற்படுகிற இழப்பை இல்லாமல் செய்வதற்கும் வகை செய்ய முடியும். "யாரும் கோழியைக் கேட்டுக்கொண்டு மிளகாய் அரைப்பதில்லை". இந்த விஷயத்தில் அரசு தானாகவே முடிவு எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : புதிய பழமொழியாக இருக்கிறதே!

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : வேண்டுமானால் புதுமொழியாக வைத்துக்கொள்ளலாம், தலைவர் அவர்களே, 90 இலட்சம் ரூபாய் பிராவிடண்ட் ஃபண்டிலே இருக்கிறது என்றும், ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் கணக்குப் பார்த்துத் தரப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்கள். அவைகள் எல்லாம் நிர்வாகத்திலே இருக்கிற குறைபாடுகள் என்பதால் அவர்



எடுத்துக்காட்டியதற்கேற்ப அவர்களுடைய குறைபாடுகள் நீக்கப்படும், அவர்களுடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

லைசென்ஸி அண்டர்டேக்கிங் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றிச் சொல்லுகிற போது, அங்கே வேலை செய்த பணியாளர்கள் எல்லாம் மின் வாரியத்திற்கு வந்துவிட்டார்கள் என்றும், மின் வாரியத்திலே உள்ள ஊழியர்களுக்கு என்ன வேலைப் பளு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அதையே ஏன் அங்கேயிருந்து வந்தவர்களுக்கும் அமுல்படுத்தவில்லை என்று கேட்டார்கள். அங்கே உள்ள வேலைப் பளுவை மின் வாரியத்திலே அமுல்படுத்தலாமா அல்லது எந்த அளவுக்கு வேலைப் பளுவை நிர்ணயம் பண்ணலாம் என்பதைப் பற்றி மின்சார வாரியத்ினுடைய தொழிற் சங்கங்களோடு பேசவிருக்கிறோம். ஊதிய ஒப்பந்தம் போட வேண்டியிருக்கிறது. அவைகளையெல்லாம் ஒட்டுமொத்தமாகப் பரிசீலித்து, ஊதியத்தை உயர்த்தித் தருகிற அதே நேரத்தில் வேலைகள் ஒழுங்காக நடைபெறுகிற விதத்தில் அவைகளையெல்லாம் நன்றாக ஆராய்ந்து எல்லோருக்கும் ஏற்ற விதத்தில் நிர்மாணிக்கப்படும் என்பதை அவருக்குச் சொல்ல விரும்புகிறேன்.

மின்சாரக் கட்டணத்தை விதிப்பதிலே எங்களுக்கு என்ன கொள்கை இருக்கிறது என்று கேட்டார்கள். யார் பேசினாலும், 'மால்கோ' நிறுவனம் அவர்களுடைய வாயில் மாட்டிக்கொள்ளுகிறது. ஏதோ தமிழ் நாட்டிலே இருக்கிற ஒரே ஒரு தொழிற்சாலை அந்த மதராஸ் அலுமினியம் கம்பெனி எனப்படும் 'மால்கோ' மட்டும்தான் என்பதைப் போலவும் அதற்கு மட்டும் மின்சாரச் சலுகையைக் கொடுத்திருக்கிறோம் என்பதைப் போலவும் பேசுகிறார்கள். தமிழ்நாட்டிலே உள்ள பத்தாயிரம் தொழிற்சாலைகளில் அவர்களுக்கு அளித்துள்ள கட்டணத்தைக் கவனித்துப் பார்த்தால், தொழிற்சாலைகளுக்குச் சலுகை அளிக்கப்படுகிறது என்று கருதுவது சரியானதல்ல என்பது தெரியும். ஆனாலும் அவர்கள் பேசும்போது, ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டாமா? வரவு-செலவுத் திட்டத்தில், கிராமத்தில் உள்ளவர்களுக்கு மூன்று ரூபாயும், அரிசியும், கோதுமையும் அளிப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். அதுவும் இல்லையென்றால் ஒரு ரூபாயும், அரிசியும், கோதுமையும் அளிப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். அவர்கள் பலகீனமாக உள்ள பகுதியினர் என்ற நோக்கத்துடன்தானே அறிவித்திருக்கிறீர்கள். ஆகவே அப்படிப்பட்ட

வர்கள் பயன்படுத்துகிற வீட்டுக்கு மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 35 பைசாவா?" என்று கேட்டார்கள். அதே வரவு-செலவுத் திட்டத்தை இறுதி வரை தொடர்ந்து படித்திருந்தால், இன்னுமொரு தகவல் இருப்பது அவருக்குக் கிடைத்திருக்கும். அது என்ன தகவல் என்றால், "குடிசை வாழ்வோர், மண் குடிசையில் இருப்பவர்களுக்கு இதுபோன்ற அதிகக் கட்டணம் வேண்டியதில்லை, மீட்டர் கூட தேவையில்லை, மீட்டர் இல்லாமலே நிரந்தரக் கட்டணம்" என்ற அளவில் (ஃப்ளாட் ரேட்) ஒரு புதிய கட்டண விதத்தைக் கொண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கையிலேயே வழி வகுத்திருக்கிறோம். விரைவிலே எந்த அளவுக்குக் கட்டணம் இருக்க வேண்டும் என்று, ஃப்ளாட் ரேட் டாரிப் வகையிலே, வர இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சமுதாயத்திலே நலிவுற்ற பிரிவினருக்கு மின் வசதி கிடைக்கிற வகையில் இந்த அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, மின் வாரியத்தின் ஆண்டு நிதிநிலை அறிக்கைபற்றி இந்த மன்றம் விவாதிக்க இருக்கிறது. ஆகவே விரிவாகப் பேச வேண்டிய அவசியமில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன சில சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கிற வகையில் இவைகளை எடுத்துச் சொன்னேன். இந்தச் சட்ட முன்வடிவை எல்லோரும் ஆதரிக்கிற காரணத்தால், இதை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.





பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, கேட்டுப் பெறுதல் குறித்த (தற்காலிக அதிகாரங்கள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(3) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1979.)**

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

---

@ 168—169 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

THIRU A. R. DAMODARAN : Sir, I would first like to compliment the Hon. the Minister for Transport on having achieved what many of us considered to be impossible of achievement, namely, the earning of profits by at least six Corporations out of the seven Transport Corporations in Tamil Nadu. No doubt it is due to the increase in fares that was made in 1975-76. But considering that in 1976-77 and possibly in 1977-78, we have not been able to make profits, I am glad that at least in 1978-79, the Hon. Minister estimates considerable profit from these Corporations, to siphon which he has brought forth this new Bill, which is a very ingenious device of transferring revenues, which should perhaps go to the Central Government and which now come to the State Government. As one who firmly believes that this is the right procedure, I wish to say that I whole-heartedly welcome this Bill. Before doing so, I have a doubt as to the facts given here. They have mentioned here that this is a Money Bill and in moving a Bill for taxation, I was under the impression that it was normal for the Government to give us an estimate of the approximate taxes that would be derived from this measure as well as the expenditure that would be incurred in having such a measure. This procedure is usually followed in Money Bills and I wish that the Government would follow this procedure, because we do not have an idea whether it will be one crore, two, three or four crores. I think in fairness to the Members of this House, it would be proper to educate them from that point of view by giving some figures. I do not want the exact figure, although they can give the exact figures very easily, because the Bill applies only to parties having more than 250 permits; this then would apply only to the State Transport Corporations and no private operator is involved in this enactment. I would request him to consider whether in such measures this figure could not be given.

(பிற்பகல் 5-40)

Sir, te other thing I would like to say is that the Government have also adopted the corporate-philosophy, which is a private-sector philosophy, of never reducing prices or never reducing fares when a huge profit is anticipated. I do not mind if it is Rs. 20 lakhs or Rs. 30 lakhs. But evidently, the profits are of a very sizable nature and the people, the consumers, naturally expect why a certain amount of reduction in fares at least in certain routes could not be given If you are going to make, say, more than 10 to 15 per cent on your capital investment by way of profits.



Sir, a second question also arises. Out of these seven Transport Corporations—possibly this may be applicable to the two Engineering Corporations also if they have also made a sizable profit—it is significant that we are losing only in the Metropolitan service and in the Express bus service. That means that in all the rural services which the six other Transport Corporations cater to, our fare structure is such that there is a very comfortable cushion for these Corporations to make adequate profits. This Government, committed as they are to helping the rural areas, may well consider why the rural sector should really finance the metropolitan sector in so far as transport is concerned. In all our measures, whether it is the price that we pay to the farmer for his produce or things like that, there has always been an element of hidden discrimination against the rural classes. The urban classes are always able to get away with some concessions because they are more vocal in their demands. Sir, I am not asking the Hon. Minister to increase the cost of metropolitan transport. I only request him to see whether a way could not be found of amalgamating one at least of the rural corporations to the metropolitan service so that the profits of that sector could be merged with the losses of this sector, by which at least as a whole these Corporations could at least break-even, because metropolitan service is always going to be very expensive.

Sir, the other point which I wish to make is that I feel that adequate planning has not been made. One of the reasons for this element of profitability could be that these Transport Corporations are running extremely dilapidated and old vehicles. Regarding the age of these vehicles, a study which we made two years ago showed that many of these vehicles were 9 years, 10 years, and 11 years old and that some of them were even 12 years old. I am in the transport field myself. Though we are not owning passenger buses, we are operating some goods transport. Every three years, we plan to replace the chassis because by keeping down the depreciation cost the profitability will tend to increase. If the Hon. the Transport Minister had so framed a policy whereby he could have replaced the aging fleet in our Transport Corporations, the Depreciation Allowance of 30 per cent could perhaps have taken care of some of the profits that have been made by the Transport Corporations, rendering such a Bill unnecessary. Secondly, many of these vehicles are so old and dilapidated that the Corporations

are losing a lot of money. It has been estimated and studious reports have also been produced to show that any vehicle that is kept after eight years is a liability. I would, therefore, plead with the Hon. Minister to see that the aging fleet in all these Corporations—perhaps we have more than 4,000 or 5,000 such vehicles—are speedily replaced. In fact, he has mentioned this. But, perhaps the difficulty is that we are not able to get these new vehicles in time. In view of the fact that any programme that the Hon. Minister has even now would not enable him to replace the fleet from the local concerns which are manufacturing these chassis—which are mainly Tata-Mercedes-Benz and Ashok Leyland—I would like to know from the Hon. Minister whether, as a temporary measure for 1979-80, it would not be possible for him to make a special application to the Government of India to see that, with the comfortable foreign exchange position, at least 300 or 400 passenger-chassis are imported on behalf of the State Transport Corporations so that these old vehicles might be replaced.

Then, point number two is : If we have profits, then I think some efforts should be made to improve the amenities in our bus depots and in the Transport Depots owned by the Corporation. Facilities are lacking very much in those places. Ordinary amenities like toilets and wash-rooms and rest rooms which are provided in every bus depot abroad, should be provided in all the depots owned by the Corporation, because they could claim certain amount of expenditure incurred on this account. Particularly in District towns, there is heavy passenger traffic but the amenities are so poor that the passengers are put to great difficulty. In many places, I have seen the passengers lying on the floor of the Transport Bus shelters for hours together and they do not have the elementary facilities of drinking water or washing water or even toilet facilities. I would request him to see that in having these toilets and wash-rooms, even a 10 paise slot machine is provided so that we may charge some amount for using these facilities. We can even ensure that employment is provided to persons in charge of cleaning of these toilets and we need not require unnecessary subsidies. The levy of 5 or 10 paise as a charge for this purpose would help us to keep these toilets in a very clean condition, unlike other public conveniences which we throw open to the general public and which are kept in a very bad condition and cannot be used at all.



The next improvement that I would like to have in our Transport Corporations is this. In foreign countries, drivers of transport vehicles, and especially drivers of long distance buses, etc. have a special mechanical device, called Auto Driver, where all these drivers are asked to take a training/testing course in driving. This is a mechanical machine with a screen in front where road conditions are simulated and the driver is given an efficiency test to find out how he reacts to sudden circumstances that develop on the road. In fact, this morning mention was made about the accidents caused due to drunkenness of the drivers and the drivers were blamed for the accidents. This is not entirely so. We have a number of obstacles on the road like the bullocks suddenly crossing the road, when we go through a crowded road and the pedestrian traffic and the hazards of motor driving in this country are unimaginable. A friend of mine who came from the United States a few months ago, when I requested him to take the car in Madras, said that this was one of the places where he would not dare to drive at all because the traffic conditions were absolutely unimaginable. Although he had a licence in the U.S. and was driving his car amongst 40 million cars, he said that in India he dared not take the vehicle because conditions were absolutely bad. Conditions are bad in the sense that people will not follow traffic rules. In our roads, we have so many obstacles and other things and I think it is wrong for us to blame the driver for all the accidents. I am a motor car driver myself and I know the difficult conditions. Although I have not, fortunately, been involved in any major accident, it is only because of the very careful driving I do and we cannot expect that a public Transport driver, because he has to drive long distances and he has some strain also, would be so careful. I, therefore, request the Hon. Minister to find out from the experts in his own department—there are many who have gone to other countries—whether this mechanical contraption of testing the efficiency of the drivers in a particular situation that develop on the road can be installed. An Auto Driver can be installed in Madras or Madurai because that would help our Transport drivers. There are almost 8,000 to 9,000 of them employed by the Corporation and I would request him to introduce this facility also. Not only that. I would also request that our Engineering Corporation which was started under Half-a-Million Job Scheme and which had provided employment opportunities to over 1,000 skilled technicians in our State, should be expanded. Many diploma-holders and I.T.I. trainees

[Thiru A. R. Damodaran] [1979 மார்ச் 17

have been taken in this Corporation and since there is an element of profit in these Transport Co-operations, I would plead with him to see whether some additional machinery and equipment which are required by this Engineering Corporation could not be purchased and given to them. In that case, no only the existing people will have enough work but they will also be able to take on outside work, providing employment to more number of people in the Engineering Corporation. I have had an occasion to visit this Corporation and the factories that have been set up for tyre retreading and for calibration of pumps. They are doing excellent work but they must be given encouragement also. I would also request the Hon. Minister to send not only the top officials of the Corporation abroad to study conditions there but also send some skilled technicians, drivers and conductors so that they could find out for themselves the conditions that are prevailing in croweded metropolitan areas in nearby countries like Japan, Singapore, etc. and they may have an

(பிற்பகல் 5-50)

idea of the service that is given by public utility vehicles in those countries. Perhaps, that may help them to realise that public relations is an essential part of the duties of the staff that are em-employed in these Corporations. I would request him to find out, in view of the comfortable position of the Corporations, whether some such scheme—not too expensive but within the limits and capacity of the Corporations—could not be introduced in some of these Corporations.

As I said, Sir, I am very happy that a substantial portion of the revenues of these Corporations will be transferred to the State. All that I wish is that it should not be swallowed up in the general revenues of the State and spent on various measures which are of no lasting benefit to the Corporations themselves. I wish that a substantial portion of this money is spent on the Corporations themselves in replacing fleets, in building passenger amenities and in improving the welfare measures for the staff employed in these Corporations.

Thank you.



1979 மார்ச் 17]

* திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொல்ல விட்டுப்போன விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் எல்லோரையும் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆனால், தொழிலாளர்கள்பற்றிக் குறிப்பிடவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதைப் பற்றி உறுப்பினர் அவர்கள் சொல்வார்கள் என்று அவருக்குத் தெரியும். (சிரிப்பு.)

திரு. ஆ. நல்லசிவன் : நஷ்டத்திலே ஓடிக் கொண்டிருக்கும் போக்குவரத்துக் கழகங்களை லாபகரமாக்கியதற்குப் பிறகு, அந்தப் பணத்தை நம்முடைய மாநில நிதி வசதிகளோடு இணைத்துப் பயன்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன். இதிலே சர்சார்ஜ் லெவி 66 சதவிகிதம் வரை வசூலிக்கலாமென்று இருக்கிறது. எவ்வளவு வசூலிப்பது என்ற பிரச்சினை வரும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கூறியதுபோல், பழைய பஸ்களைப் புதுப்பிப்பதற்கும், பிரயாணிகளுக்கு வசதிகள் செய்யவும், அவர்கள் குறிப்பிட்ட வேறு பல அபிவிருத்திக்கும் பயன்படுத்துவதுபோல, லாபத்தை ஈட்டக் காரணமாக இருந்த தொழிலாளர்களுக்கு சம்பளம், போனஸ் போன்றவற்றை தொழிலாளர்கள் மனநிறைவு கொள்ளும் அளவிற்குத் தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு பணம் மீதப்படும்போது, அதை டெப்ரிசியேஷன் என்று ஒதுக்கி, பஸ்களைப் புதுப்பிக்க செலவு செய்யாததால், இவ்வளவு மீதப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். 20 சதவிகிதம் போனஸ் கொடுக்க சட்டம் இருந்தும், அதைக் கடைப்பிடிக்காததால், மீதப்படுத்தப்படுகிறது என்று சொல்லிக்கொள்கிறேன். 20 சதவிகிதம் போனஸ் கொடுக்க சட்டம் இடம் கொடுக்கும்போது, அங்கே கஞ்சத்தனம் செய்கிறார்கள். மேலும் சம்பளம், அகவிலைப்படி கொடுப்பதில் தகராறு பண்ணி, அதற்காகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து, பொது மக்களுக்கு அசவுகரியம் ஏற்பட்டதைப் பார்த்தோம். 66 சதவிகிதம் வரை சர்சார்ஜ் என்று கணக்கிடும்போது, வேறு பல அமெனிடீஸ் செய்வதைப்போல, ஹியூமன் எலிமென்ட்ஸ்க்கு எதுவும் செய்வதில்லை. மற்ற எலிமென்ட்ஸ் பற்றிக் குறிப்பிட்டார்கள், அதெல்லாம் காஸ்ட்லியாக இருக்கிறது. ஆனால் ஹியூமன் எலிமென்ட்ஸ் சீப்பாகியிருக்கிறது. இதைச் சொல்ல வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது என்பதால் சொல்கிறேன். 'லேபர் பிராப்ளம்' வரும்போது, சம்பளம், போனஸ், அகவிலைப்படி ஆகியவற்றை விலைவாசி

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 மார்ச் 17

மைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அவர்கள் மனநிறைவு கொள்ளும் அள விற்குக் கொடுக்க, பணத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் மகிழ்ச்சியோடு ஆதரிக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் கட்ட பொம்மன் போக்குவரத்துக் கழகம் என்று இருக்கிறது. இப்போது இருக்கும் போக்குவரத்துக் கழகத்தைக் கொண்டு வருவதற்கு முன்னால், அங்கே ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்தான் இருந்தது. மற்ற பகுதிகளிலே போக்குவரத்துக் கழகங்களைக் கொண்டு வந்த பிறகு, இறுதியாக அந்த மாவட்டத்திலிருந்த ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டை, கட்டபொம்மன் போக்கு வரத்துக் கழகம் என்று மாற்றினார்கள். கன்னியாகுமரி மாவட்டம் 1956 ஆம் ஆண்டு தமிழகத்தோடு இணைகிறபோது, அங்கே ஸ்டேட் டிரான்ஸ் போர்ட்தான் இருந்தது. கன்னியாகுமரியை தமிழகத்தோடு சேர்த்த

(மாற்றுத் தலைவர் திரு. ஈ. எஸ். வெங்கடேசன் தலைமை)

சட்டம், மத்திய பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒன்று. அந்தச் சட்டத்தில், அங்கே இருக்கக்கூடிய அரசு ஊழியர்களுக்கு அப்போது என் னென்ன சலுகைகள் இருந்தனவோ அந்தச் சலுகைகள் குறையாமலும், சேர்க்கப்படுகிற மாநிலத்தில் என்னென்ன சலுகைகள் வருகிறதோ அந்தச் சலுகைகளையும் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு விதிவிலக்காக ஏதாவது செய்ய வேண்டுமென்றால், மத்திய அரசின் அனுமதி யோடுதான் செய்ய வேண்டும். அங்கே ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் இருந்தது.

கன்னியாகுமரி மாவட்டம், திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் இருக்கும் போது, போக்குவரத்து ஊழியர்கள் இதர அரசு ஊழியர்களைப்போல நடத் தப்பட்டார்கள். அந்த நிலையிலேதான் அவர்கள் தமிழகத்தோடு சேர்ந் தார்கள். பிறகு தமிழகத்தில் ஒவ்வொரு கார்பரேஷனாகத் துவக்கி, இறுதி யில் கன்னியாகுமரியிலும் கார்ப்பரேஷன் கொண்டுவரும் முயற்சியில் அரசு ஈடுபட்டு, அதை கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் என்று மாற்றியது. அப்படிச் செய்கிறபோது, எக்ஸ்பிரஸ் சர்வீஸ் மாத்திரம் ஸ்டேட் சர்வீஸ் என்று வைத்தார்கள், கழகம் என்று புதிதாக ஆரம்பித்தால், இந்தச் சட்டங்கள் எல்லாம் புதிதாக நியமிக்கப்படுகிறவர்களுக்குத்தான், எங்களைக் கட்டுப்படுத்தாது, எங்களை ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் சர்வீசிலேயே இருப் பதைப்போல நடத்த வேண்டுமென்று, அங்குள்ள ஊழியர்கள் கேட்டுக்



1979 மார்ச் 17] [திரு. ம. சங்கரலிங்கம்]

கொண்டார்கள். அப்படியென்றால், எக்ஸ்பிரஸ் சர்வீசுக்கு வந்துவிடுங்கள் என்று அரசு சொல்லி, அவர்களை சென்னைக்கும், விழுப்புரத்திற்கும் மாற்றி னார்கள். அங்கே பணி புரிந்தவர்கள்—கன்னியாகுமரியில் ஒரு கண்டக்ட ராக, டிரைவராக வேலை பார்த்தவர்கள், அங்கே ஒரு சிறிய குடும்பத்தை நடத்திக்கொண்டிருந்தவர்கள், ஸ்டேட் சர்வீஸ் என்று சொல்லி அவர்களை சென்னை போன்ற இடங்களுக்கு மாற்றியவுடன் அவர்கள் மிகவும் கஷ்டப் பட்டார்கள். எனவே அவர்கள், ஸ்டேட் சர்வீஸ் வேண்டாம், கார்ப்பரேஷ னுக்கே போகிறோமென்று சொல்கிறார்கள். சட்டத்திற்கு விரோதமாக அவர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அங்குள்ள சுகாதாரத் துறை, கல்வித் துறை போன்ற துறையிலுள்ள ஊழியர்கள் வழக்கு மன்றத்திற்குப் போய், வெற்றி பெற்று, ஸ்டேட் சர்வீஸ் தொடர்ந்து இருக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆனால் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்களிடையே ஒற்றுமை இல்லாததால், அவர்கள் சிதறிவிட்டார்கள். தலைவரவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரவர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுக் கிறேன். இதை மனிதாபிமானப் பிரச்சினையாகக் கருதி, முன்னால் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் சர்வீசில் இருந்தவர்கள், கார்ப்பரேஷன் ஆன பிறகு, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் சர்வீசில் பல இடங்களில் பணி புரிகிறார்கள். எக்ஸ்பிரஸ் சர்வீஸ்கூட பல்லவன் போக்குவரத்துக் கழகமாகிவிட்டது. அரசுத் துறை என்று சொன்னாலும்கூட, தனித் தனிக் கார்ப்பரேஷன்களாகச் செயல்படுகின்றன. அது வரவேற்கத் தகுந்தது. அப்படிச் செய்த பிறகு தான், லாபகரமாக இருக்கிறது. முன்பு எல்லாக் கார்ப்பரேஷன்களிலும் லாபம் கிடையாது. இப்போது போட்டி ஏற்பட்டு, எல்லாக் கார்ப்பரேஷன் களிலும் லாபம் கிடைக்கிறது. அந்த அளவிற்கு வந்திருப்பது வரவேற்கத் தக்க சூழ்நிலை.

நான் ஒரு நோட்டீஸ் பார்த்தேன். 20, 21 ஆம் தேதியில் தீக் குளிக்கப் போகிறேன் என்று பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த ஒரு கண்டக்டர், கன்னியாகுமரி மாவட்டக்காரர் நோட்டீஸ் போட்டிருக்கிறார். கட்டபொம்மன் கார்ப்பரேஷனாக மாறியபோது, அவரை சென்னைக்கு மாற்றினார்கள். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர் அவர். வாங்கும் குறைந்த சம்பளத்தைக் கொண்டு, இங்கும் இருந்துகொண்டு, அங்கும் குடும் பத்தை நடத்த முடியவில்லை. என் அறையில் ஒரு நோட்டீஸ் இருந்தது, அது ஏதோ நோட்டீஸ் என்று நினைத்து போட்டுவிட்டேன். மாலை ஒருவர் வந்தார். யாரோ சாமியார் என்று நினைத்துவிட்டேன். அவர்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 மார்ச் 17

உள்ளே வந்து, சன்னல் வழியாக நோட்டீஸ் போட்டேன், பார்த்தீர்களா என்றார். அப்புறம் பார்த்தால், அவர் நாகர்கோவில் ஆள். அப்புறம் நோட்டீசைப் பார்த்தேன். அவர் சாமியார் மாதிரி இருக்கிறார். நான் தீக் குளிக்கப் போகிறேன் என்று சொன்னார். "அப்படிச் சொல்லிக் கொண்டே இரு. நாங்கள் சொல்கிறோம்" என்று உபதேசம் செய்திருக்கிறேன். டெக்னிகலாக, சட்ட ரீதியாகப் பாதுகாப்பு இல்லையென்றாலும், கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து இங்கு வந்திருக்கக்கூடிய பெரும்பாலான ஊழியர்கள் மிகத் தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள். எனவே அவர்களை நியாயமான முறையில் மாற்ற அரசு முன்வர வேண்டும். நான் அவரிடம் ஒன்று கேட்டேன். நீ இங்கே வேலை பார்த்தால், நம் மாவட்டக்காரன் ஒருவன் அங்கே வேலை பார்ப்பானே, நீ அங்கு போனால் புதிதாக ஒருவனுக்கு வேலை கிடைக்காதே என்று சொன்னேன். கட்டபொம்மன் கார்ப்பரேஷனுக்கு, இரண்டு டிஸ்டிரிக்டுகளிலிருந்துதான் சாதாரணமாக ஆள் எடுக்கிறார்கள் என்று சொன்னேன். இருந்தாலும் அவனுடைய கஷ்டம் அவனுக்குப் பெரிதாக இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட கோரிக்கைகளை மனிதாபிமானத்தோடு தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, கார்ப்பரேஷன்கள் எல்லாம் வெறும் லாப நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மாத்திரம் செயல்படக் கூடாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கட்டபொம்மன் கார்ப்பரேஷனுக்கு நிறைய லாபம் என்று சொல்கிறார்கள். மற்ற கார்ப்பரேஷன்களிலும் நிறைய லாபம் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் நல்ல முறையில் முடுக்கிவிட்டிருக்கிறார்கள். அவர்கள் திறமையாக வேலை செய்கிறார்கள். எனவே லாபத்தைச் சேர்க்கும் முறை இருக்கிறது. வெறும் லாப நோக்கோடு இருக்கக் கூடாது. மக்களுக்குப் பணி புரிய வேண்டும். ஊழியர்களை வளப்படுத்தி, அவர்களைப் பாதுகாக்க வேண்டும். அவர்களுடைய குழந்தைகளுக்குப் பல்வேறு நல்ல திட்டங்களை உருவாக்கி, செய்ய வேண்டியது இந்த கார்ப்பரேஷன்களின் வழி முறைகளில் ஒன்றாக அமைய வேண்டும். கார்ப்பரேஷன்களுக்கு நிரம்ப வருவாய் இருக்கிறது. அதற்காக சர்சார்ஜ் 60 சதவிகிதத்திற்குக் கூடாமல் போட்டு, தம்முடைய நிதியில் சேர்த்து, பல்வேறு நல்ல திட்டங்களுக்குப் பயன்படுத்துவது வரவேற்கத்தக்கது. ஆனால்



1979 மார்ச் 17] [திரு. ம. சங்கரலிங்கம்]

(பிற்பகல் 6-00)

போக்குவரத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் என்னென்ன செய்ய வேண்டுமென்று ஒன்றிரண்டு விஷயங்களைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். உண்மையில் பணி புரிகிற ஊழியர்களுக்கு நல்லவிதமான போனஸ் திட்டங்களை அமுல்படுத்த வேண்டுமென்றும் அவர்களுடைய குழந்தைகள் தொழில் துறையிலே குறிப்பாக மோட்டார் மெக்கானிக், பாலிடெக்னிக் போன்ற பயிற்சிகளைப் பெற முன் வரும்போது, அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் மற்றும் தேவைப்படுகின்ற உதவிகளைச் செய்வதற்காக இந்தக் கார்ப்பரேஷன் தன்னுடைய நிதியிலே ஒரு பகுதியை ஒதுக்கி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது வருகிற பஸ்கள் எல்லாம், குறிப்பாக துரிதப் பேருந்துகள் எல்லாம், நல்ல பேருந்துகளாக, ஓரளவு நல்லபடியாக ஓடிக்கொண்டிருக்கின்றன. இருந்தாலும், இதற்குப் போட்டியாக ஆம்னி பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. நமக்கே இப்பொழுது இவ்வளவு லாபம் வந்துகொண்டிருக்கிறது. பொதுத் துறை என்றாலே, லாபத்தைக் காண முடியாது, நஷ்டம் தான் வரும் என்று சொல்லுவார்கள். அது ஒயிட் எலிபெண்ட், நிர்வாகத்திற்குப் பெரும் தொகை செலவாகும் என்றும் சொல்லுவார்கள். ஆனால் இன்றைக்கு அதையெல்லாம் ஓரளவுக்குச் சிக்கனப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, நெறிப்படுத்தி லாப நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். இந்த நிலையிலே ஆம்னி பஸ்களை வைத்துக்கொண்டு நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு, திருவனந்தபுரத்திலிருந்து சென்னைக்கு, திருநெல்வேலியிலிருந்து சென்னைக்கு, மதுரையிலிருந்து சென்னைக்கு இப்படி பல வழித் தடங்களில் ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். அரசுப் பேருந்துகளுக்குப் போட்டியாகவே நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் எந்தவிதமான வரியையும் விதித்து, கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருக்கிறோம். நாட்டின் நலனுக்காக அவர்களுடைய வருவாயிலிருந்து ஒரு சதவிகிதம் கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் அவர்கள் சட்டப் பாதுகாப்புக்குள்ளே நுழைந்து அந்தத் தொழிலை அரசுக்குப் போட்டியாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசு கூட அதைத் தேசியமயமாக்குவதற்கு முடியுமா என்று ஆலோசனை செய்யும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் சொன்னதாகச் செய்தித் தாளில் பார்த்தேன். சட்ட நிபுணர்களை அரசு கலந்து ஆலோசித்து சட்டத்திலே கூட திருத்த வேண்டிய நிலை ஏற்படுமானால், அதைத் திருத்தம் செய்து, அவர்களையெல்லாம் பெரு வரி விதிப்புக்குள் கொண்டுவர வேண்டும். இல்லையானால் அவைகளையெல்லாம் தேசியமயமாக்க வேண்டும்.

இரண்டில் ஏதாவது ஒன்றை உடனடியாகச் செய்ய வேண்டும். தனியார் பெரும் பொருள் சம்பாதித்து, அரசுத் தொழிலுக்குப் போட்டியாக நடத்து வதற்கு நாம் அனுமதிக்கவே கூடாது.

அடுத்தபடியாக, இப்பொழுது குளிர்சாதனம் பொருத்தப்பட்ட எக்ஸ்பிரஸ் பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது. குளிர்சாதனம் பொருத்தப்பட்ட பஸ்களைப் பற்றி ஒரு புள்ளிவிவரம் எடுத்துப் பார்க்க வேண்டும். போக்குவரத்து டிமான்ட் வர இருக்கிறது. அதன் மீது விவாதிக்க இருக்கின்றோம். அதற்குள்ளாக அந்தப் புள்ளிவிவரத்தை எடுத்து அந்தச் சமயத்தில் தந்தால் கூட போது மானது. அந்த பஸ்களில் எத்தனை சீட்டுகள் இன்றையதினம் வேகன்டாக இருக்கையில் ஓடிக்கொண்டிருககின்றன என்ற விவரத்தை அறிய வேண்டும். எனக்குச் சரியாகத் தெரியாது. இருந்தாலும் என்னைப் பொறுத்தவரைக்கும், என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்கிறேன். 50 சதவிகித சீட்டுகள் வேகண்டாக இருக்கின்றன. மதுரை போன்ற இடங்களில் நான் பார்க்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள். அதில் ஏற முடியாது. அப்படி ஏற வேண்டுமென் றால், டிபரன்ஸ் கொடுத்துதான் ஏற வேண்டும். அதுவே ஒரு அவமானம். அரசு பொதுத் தொண்டில் ஈடுபட்டிருக்கிறவர்களை, அரசுப் பேருந்துகளில் இலவசமாக அழைத்துச் செல்லுகிறபோது, அதுபற்றி ஒரு முறையை ஏற்படுத்திக் கொண்டால், அதற்குப் பிறகு டிபரன்சைக் கொடுத்துத்தான் பேருந்தில் ஏற வேண்டுமென்கிறது எந்த வகையில் பொருந்தும்? அப்படி ஏற்படுத்தியதுபற்றிக் கவலையில்லை. ஏனென்றால் அநேக உறுப்பினர்கள் அதிலே பயணம் செய்யவும் முடியாது. ஒருவேளை வேனிற் காலத்தில் போக லாம். 40 வயதைத் தாண்டியவர்கள் எல்லாம் அதிலே போனால், மதுரையில் இறங்கி, வேறு பஸ்ஸில் போய் விடுகிறார்கள். காரணம் குளிர் தாங்க முடியா மல் அடுத்தநாள் ஜுரம் வந்து விடுமோ என்று பயப்படக்கூடிய அளவுக்குக் குளிராக இருக்கிறது. மூன்று மாதங்களைத் தவிர மற்ற மாதங்களில் எல்லாம் குளிர் சாதனத்தை இரவு நேரத்தில் நிறுத்த வேண்டி வரும். இரவு நேரத் தில் எக்ஸ்பிரஸ் பேருந்து ஓடிக்கொண்டிருக்கும்போது, அந்தக் குளிர் சாதனம் தேவையா? காலையில் 4 மணிக்குக் குளிர் சாதன வசதியுடன் அந்தப் பேருந்து புறப்பட்டு, இரவுக்குள் வருவது மாதிரி மாற்றினால், பயனுள்ளதாக இருக்கும். இப்போது அப்படி இல்லை. பகல் நேரத்தில் குளிர் சாதனம் பொருத்தப்பட்டு, அவை ஓடிக்கொண்டிருந்தால், பல பேர் பயணம் செய்யக் கூடிய சூழ்நிலை உருவாகும். நான் சொன்ன காரியங்களையெல்லாம் செய்வதற்கு அருள்கூர்ந்து ஆலோசித்துப் பார்க்க வேண்டும். இந்த நிதியை



அரசினுடைய நலத் திட்டங்களுக்கும், சமுதாயத்தினுடைய நலத் திட்டங் களுக்கும் மாற்றுகிற முறையில் இந்த வரி விதிப்பு அமைந்திருக்கிற காரணத் தினால், நான் இந்த மோட்டார் வண்டிகள் வரி விதிப்புத் திருத்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாற்றுத் தலைவரவர்களே, இந்த மோட்டார் வண்டிகள் வரி விதிப்புத் திருத்தச் சட்டமுன்வடிவினை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு மனதாக வரவேற்றிருப்பதைக் குறித்து நான் என்னுடைய நன்றியினை முதற்கண் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இதனை வரவேற்றுப் பேசுகின்றபொழுது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பல ஆலோசனைகளையும் கூறியிருக்கின் றார்கள். கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்ற ஒரு ஆலோசனையை அவர்கள் கூறியிருக்கின்றார்கள். நாட்டுடைமையாக்கப்பட்ட 7 போக்கு வரத்துக் கழகங்களிலும் பல்வேறு சீர்திருத்தச் செம்மைகளை நடைமுறைக்குக் கொண்டுவந்த பிறகு, உதாரணமாக எபிசியன்ட் மெட்டீரியல் மேனேஜ்மென்ட், அடுத்து பியூவெல் எக்கானமி, ரீ-கன்டிசனிங் ஆப் மோட்டார் வெகிக்கிள் பார்ட்ஸ், அத்தோடு டையர் ரீட்ரெட் செய்வதில் கூட தரமான ரீட்ரெட் பவுடரை பயன்படுத்துகின்ற காரணத்தால் ரீட்ரெட் செய்த டயர்கள் கூட நெடுநாட்கள் உழைக்கக் கூடிய வாய்ப்பு ஆகியவற்றை மிக விஞ்ஞான ரீதியிலே நடைமுறைக்குக் கொண்டு வந்ததன் பலனாகவும், குறிப் பாக இவைகளையெல்லாம் மேற்பார்வையிடுகின்ற பொறுப்பினைப் பொறி யியல் வல்லுநர்கள்தான் மேற்கொள்ள வேண்டுமென்ற ஒரு நடைமுறையைக் கொண்டு வந்ததன் காரணமாகவும்தான், படிப்படியாகப் போக்குவரத்துக் கழகம் நஷ்டப்பட்டுக் கொண்டிருந்த நிலையிலிருந்து மாறி இன்று ஏறத்தாழ பல்லவனுடைய புறநகர் பிரிவு, தொலைவுப் பிரிவு நீங்கலாக ஏனைய அனைத் துப் பிரிவுகளும் இலாப நிலைக்கு வந்திருக்கின்றன. மெட்ரோ சர்வீஸ் என்றாலே நஷ்டம் என்கிற நிலைதான் உலக ரீதியில் இருக்கக்கூடிய நிலை. வருகிற ஆண்டு சென்னையில் ஏற்படுகின்ற மெட்ரோ சர்வீசில்கூட நட்ட நிலை தாண்டி மெட்ரோ பகுதி நீங்கலாக புற நகர் பிரிவு, எக்ஸ்பிரஸ் பிரிவு இரண்டிலும், மன்னிக்க வேண்டுகிறேன் புறநகர் பிரிவு, தொலைவு பிரிவு ஆகிய இரண்டிலும் இலாப நிலையைக் கொண்டு வந்து ஒருவாறு நாங்கள் அங்கும் சரி செய்யக்கூடிய அளவுக்கு நிலைமை வந்திருக்கிறது. 7 போக்குவரத்துக் கழகங்களிலும் இது போன்ற அணுகுமுறைகளை மேற்கொண்டதன் விளை வாகவும், பல்வேறு இடங்களில் தொழிலாளர்களுக்கு ஊக்க போனஸ்

திட்டத்தை இன்னும் விரிவுபடுத்தியதன் காரணமாகவும் இன்றைக்கு போக்குவரத்துக் கழகங்களில் 7 கோடி ரூபாய் இலாபம் வந்திருக்கிறது. இந்த 7 கோடி ரூபாய் இலாபத்தில்தான் எழுநூறுக்குக் குறைவாகப் பேருந்துகளை உடைமையாகக் கொண்டு போக்குவரத்துப் பணிபுரிபவர்களுக்கு 40 சதவித படியும் 700-க்கு குறையாமல் பேருந்து வைத்துள்ளவர்களுக்கு 60 சதவித படியும் மேல் வரி விதிக்க அரசு தற்போது கருதியிருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரைக்கும், நடப்பு ஆண்டுக்கு மட்டும்தான் இந்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறது. காரணம் மத்திய அரசினுடைய ஒருசில நடவடிக்கைகள் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றன. அவர்கள் டீசலுக்கு வரியை உயர்த்தியிருக்கின்ற காரணமாகவும் போக்குவரத்தில் பயன்படுத்துகின்ற பிற பொருள்களுக்கு அவர்கள் வரி விதித்துள்ளதன் காரணமாகவும் அடுத்த ஆண்டு ஒருவேளை இலாபம் குறையுமானால், அவைகளையும் கணக்கில் எடுத்து, அடுத்த ஆண்டுக்கான நடைமுறைபற்றி மீண்டும் பரிசீலனை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கூறுகின்றபோது, இப்படி மேல் வரி விதிப்பின் மூலமாக வருகின்ற இலாபம் போக்குவரத்துத் துறைக்கும், பயணிகள் நலனுக்கும், தொழிலாளர் நலனுக்கும் பயன்படுத்தப்பட வேண்டுமென்று கூறினார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கூறுகின்றபோது, இந்த மேல் வரி விதிப்பினால வரக்கூடிய நிதி ஜெனரல் பட்ஜெட்டுக்கு, புரவிஷனுக்குச் சென்று விடாமல் குறிப்பாக இந்தத் துறைக்கே பயன்படுத்தப்பட வேண்டுமென்று கூறினார்கள். அரசு அதனையெல்லாம் கவனத்தில் கொண்டு இந்தத் துறையினுடைய தொகையின் பெரும் பங்கை சாலை மேம்பாட்டுக்கும், பயணிகளின் வசதிக்கும், ஒரு பகுதியை அரசுப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கும் மட்டுமே பயன்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற எந்த ஒரு துறைக்கும் இந்த நிதி பயன்படுத்தப்பட மாட்டாது. பெரும் தொகை சாலைகள் அமைப்பதற்கு மட்டும்தான் பயன்படுத்தப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, தொழிலாளர்களுடைய போனஸ் எந்த விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது என்று சொன்னார்கள். இப்படி மேல் வரி விதிக்கப்படும்போது, போக்குவரத்துக் கழகங்களினுடைய இலாப நிலை குறைந்து போனஸ் குறையக் கூடிய ஒரு சூழல் வரும் என்ற ஐயம் எழுவது இயற்கைதான். அதை அரசு கணக்கில் கொண்டுதான், தொழிலாளர்களைப் பொறுத்தவரைக்கும், இந்த மேல் வரியை விதிக்காமல்



இருந்திருந்தால், அவர்களுக்கு எவ்வளவு போனஸ் வந்திருக்குமோ, அந்தத் தொகையில் கண்டிப்பாக ஒரு சிறிதும் குறையாமல் போனஸ் என்று நேரடி உருவிலே அவர்களுக்குக் கொடுப்பதற்கு சட்டச் சிக்கல் இருந்தபோதிலும் எக்ஸ்-கிராஷியா பேமெண்ட் அல்லது வேறு எந்த உருவிலேயாவது கொடுத்து, தொழிலாளர் நலனும் பாதுகாக்கப்படும் என்பதை நான் கூறிக்கொள்ள விழைகின்றேன்.

(பிற்பகல் 6-10)

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது, போக்குவரத்துத் துறையிலுள்ள வாகனங்களெல்லாம் மிகப் பழைய வாகனங்களாக இருந்து அவைகளைப் பயன்படுத்துவதால், இந்த அளவுக்கு ஒருவேளை லாபம் மிகையாக வந்திருக்கலாமென்று குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே இந்தக் கருத்தை அவர் கூறியிருந்த காரணத்தால், அரசு இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து அதனடிப்படையில் 8 ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்படுத்தப்பட்ட போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பேருந்துகளை இனி பயன்படுத்தக்கூடாது என்ற முடிவை எடுத்து, அதற்கொப்ப இப்போது எல்லாப் பகுதிகளிலும் புதிய பேருந்துகளை அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். 1978-79 ஆம் ஆண்டில் மட்டும் 886 புதிய பேருந்துகளை அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக விட்டிருக்கிறோம் என்ற செய்தியை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தற்போது பேருந்துகளுக்கான 'சேசிஸ்' களைப் பொறுத்தவரையில், இந்தியாவிலேயே தயாரான சேசிஸ்களை இரண்டே இரண்டு நிறுவனங்கள்தான் உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றன என்பதனால், நமக்குத் தேவையான எண்ணிக்கையில் சேசிஸ்கள் கிட்டாத நிலை இருக்கின்றது. அதாவது நம்முடைய தேவையில் 20, 30 சதவிதத்தைக்கூட அவர்களிடமிருந்து பெற முடியாத நிலையில் நாம் இருக்கிறோம். இதைக் குறித்து மத்திய அரசிடம் கலந்து மாநிலத்தின் தேவையை எப்படிப் பெறுவது என்பது குறித்து ஆராய்ந்து வருகிறோம்.

மற்றொரு உறுதியையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். போக்குவரத்துக் கழகங்கள் லாப நிலையில் இருக்கிறபோது, தொழிலாளர் நலன், மற்றும் பயணியர் நலன் ஆகியவற்றைக் கண்காணிக்கின்ற முகத்தான் பேருந்து நிலையங்களில் குடிநீர் வசதி, கழிவறை வசதி, ஓய்வு அறை வசதி ஆகியவைகளைப் படிப்படியாக

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 மார்ச் 17

செய்துதர அரசு முடிவெடுத்திருக்கிறது. அதோடு தமிழகத்திலிருக்கிற பெரும்பான்மையான நகராட்சிப் பேருந்து நிலையங்களைப் பொறுத்த வரையில் அவை மற்ற பேருந்து நிலையங்களின் தரத்தைவிட தாழ்ந்திருக்கிற காரணத்தால், பெரும்பாலும் அவைகள் நல்ல நிலைமையில் இல்லாதிருக்கிற காரணத்தால் மக்கள் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகிறார்கள். பெரும் பாலான நகராட்சிப் பேருந்து நிலையங்களை வெளியாருக்கு லீசுக்கு விடுகிற காரணத்தால் மக்கள் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகிறார்கள். பெரும் முடியாது இருக்கிறது. எனவே போக்குவரத்துத் துறை உள்ளாட்சித் துறை யோடு கலந்து பேசி, போக்குவரத்துக் கழகங்களில் கிடைக்கும் லாபத்தைக் கொண்டு இப்படிப்பட்ட பேருந்து நிலையங்களைச் செம்மைப்படுத்தித் தருவது பற்றியும், பயணிகளுக்கு வசதிகளைச் செய்து தருவதைப்பற்றியும் ஆய்ந்து வருகிறது. இந்த வகையில் அரசு நல்ல நடவடிக்கைகளை மேற் கொள்ளும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களிலிருந்து கிடைக்கின்ற லாபத்திலிருந்து சாலை களைப் பராமரிப்பது குறித்தும் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழகத்தில், குறிப்பாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்த மான சுமார் 6000 கிலோ மீட்டர் சாலைகள் போக்குவரத்து வசதிக்காகப் பயன்படுகின்றன. ஆனால் பஞ்சாயத்துக்களிலும், பஞ்சாயத்து யூனியன் களிலும் நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தால், அந்தச் சாலைகள் பல ஆண்டுகளாகச் செப்பனிடப்படாமலேயே இருக்கின்றன. இதன் விளைவாக சில நேரங்களில் ஓடுகிற பேருந்துகளைக்கூட நிறுத்தும்படியாகிவிடுகிறது.

கடந்த பல ஆண்டுகளாக சாலைப் போக்குவரத்தைப் பொறுத்தவரையில், போக்குவரத்து வாகனங்கள் மிகுதியாக ஆன போதிலும், வாகனங்களின் எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்த போதிலும், சாலைப் பராமரிப்புக்காக ஒதுக்கப்படும் நிதி மிகக் குறைவாகவே இருந்ததால், இருக்கிற சாலைகள் மிகவும் பழுதடைந்துவிட்டன. மத்திய அரசைப் பொறுத்தவரையில் 'கோர் செக்டார்' என்ற அடிப்படையில் பிரத்தியேகப் பிரிவில் இதைச் சேர்த்திருக்கிறார்கள், காரணம் கிராமப்புறத்துச் சாலைகள் நல்லமுறையில் இருந்தால்தான், கிராமத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் அவர் களுடைய விளைபொருள்களை அருகிலிருக்கிற நகர்புறத்துக்குக் கொண்டு செல்ல முடியும். அதன் மூலம்தான் அவர்கள் வாழ்க்கையிலும் பொருளா தாரச் செம்மை ஏற்படும் என்ற அளவில் மத்திய அரசிடம் அதிக நிதி ஒதுக் கீடு செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்



1979 மார்ச் 17] (திரு. சி. பொன்னையன்)

தற்போது பேருந்துகள் ஓடுகிற சாலைகளை மட்டும் செப்பனிட குறைந்த பட்சமாக ரூபாய் 78 கோடி உடனடியாகத் தேவைப்படுகிறது. மத்திய அரசோ, மிகக் குறைந்த அளவில்தான் நிதி ஒதுக்கம் செய்கிறது. அதை அதிகப்படுத்த வேண்டுமென்று நாங்கள் வாதாடிக் கொண்டிருக்கிறோம். இப்போது போக்குவரத்துக் கழகங்களின் வருவாயிலிருந்து ஒரு பகுதியைக் கண்டிப்பாக போக்குவரத்துக்கு உபயோகப்படும் சாலைகளைச் செம்மைப் படுத்த பயன்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு ஒரு முறையை உரு வாக்கியிருக்கிறோம். இதில் கிராமப்புறத்துச் சாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோம் என்று கூறி, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்):** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1979) பரிந்துரை செய் வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1979).

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1979) ஆய விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

அடுத்து வரும் இரண்டு மசோதாக்களும் ஒரே பொருள் குறித்து இருப்ப தால், பேசும் உறுப்பினர்கள் மூன்று மசோதாக்களின் மீதும் ஒன்றாகவே சேர்த்துப் பேசிவிடலாம்.

THIRU P. YELLAMANDA : Hon. Vice-Chairman, Sir, I am very glad that I have been given an opportunity to participate in the discussion on these Bills regarding Municipalities and the Corporation. Sir, these Bills postpone the election to Municipalities and

@ 170 ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



the Corporation and provide for extension of terms of Special Officers under some pretext or other. The civic needs of the people are not looked after properly, because there are no elected representatives. The way in which the November session of the Legislature was not called has created a doubt in the minds of the people about the genuineness and faith of the A.I.A.D.M.K. in the norms and principles of democracy. Sir, each and every year, this has become a regular feature and every time there is postponement of elections. So, the Members of this House have become tired of the postponement. Our Hon. Minister gives some assurance or other in the interests of the people. It is hardly necessary to mention here the necessity for elected representatives, namely, the Councillors. Without them, the roads are not is proper condition, there are electric poles without light, water taps without water and these are the regular features seen when there are no Councillors. These are the fundamental and basic requirements of the people. Nobody is there now to look after the civic needs of the people. Sir, we have had bitter experience regarding this problem for the past four or five years. Whom could the people approach for these? Usually people go and approach the Councillors. In the absence of the Councillors, people have to go and see the Special Officers and the Special Officer, who is burdened with a large number of urgent files as well as routine files, is unable to deliver the goods. It is highly impossible for one individual to do the needful for provision of civic needs to the town or Corporation, as the case may be. In the absence of Councillors, sanitation and hygienic condition of the town is neglected and nobody can deny this. How many Special Officers are taking special interest in visiting the various parts of their town or City? I am still in doubt about it. How far they are able to redress the grievances of the people is also in doubt. The Councillor's bounden duty is to see whether the roads are in proper condition, whether the light is burning, whether water is properly supplied and whether sewage water is properly cleared. This is the foremost duty of the Councillor. Sir, early civic poll is the only solution for all the evils in the Municipalities as well as the Corporation.

Another bitter experience suffered by us is the abnormal delay in administration pertaining to the problems of the Corporation employees. I used to go to the Corporation office for some obligation or other. I find that each desk is taking its own time, one or two months, to move the file from one desk to another. It is the fate of the people of Madras City. How to check his dictatorial

attitude and red-tapism, there must be the Councillor and the need and necessity of the Councillor in this respect need hardly be mentioned here.

Another important reason mentioned for the postponement of election to the Madras City Corporation was the Muster Roll Case. Now it has been settled. Even the preparation of electoral rolls and enumeration work in all the 150 divisions, I think, have been finished. I hope the Hon. Minister will come out with an assurance that there will not be any more postponement of the civic elections. Today I am fortunate enough because our Local Administration Minister is here. When I put forth my demand about the Sanitary Workers during the Budget debate, he was not here. Today I am fortunate to put forth some of the fundamental basic real necessities of the Corporation workers to the Local Administration Minister. Sir, it is needless to point out that more than 12,000 sanitary workers are doing the most essential service to the City. I am surprise to note that these scavengers, the sanitary workers, have been deprived of the benefit of Rs. 10,000 from the Death-*cum*-Relief Fund. I do not know what logic prevented the Government from extending this monetary aid to these people who are in the lowest rung of the administrative staff of the Corporation. When this facility has been given to the clerks, the supervisors and other non-gazetted staff, I do not understand why a distinction has been made in the case of the sanitary workers. The same facility is today being enjoyed by the sanitary workers employed in the Health Department, P.W.D. and other Departments. So, I am urging, requesting and begging the Hon. Minister to come forward with an assurance to include these sanitary workers also for getting this benefit of Rs. 10,000.

Sir, there is another point which I would like to mention. The services of the sanitary workers have been acclaimed and appreciated even by Gandhiji, Anna and Periyar. But these sanitary workers are not entitled to pension, leave and other facilities enjoyed by the other staff of the Corporation like clerks, supervisors, etc. These facilities should be extended to the sanitary workers also because today we are living in a democracy. Gone are the days of Zamindars, gone are the days of dictators and gone are the days of big-shots. Today we are living in a democracy. The principle of democracy is government of the people, by the people, for the people. Therefore, if we are correctly following the democratic principle,



the man who removes nightsoil should be given more consideration than any other person in Government service. Therefore, somehow, the pension and leave facilities must be given to this category of staff. This is also a genuine demand and it is within the limits of the Corporation. I hope that the Hon. the Local Administration Minister who is good enough towards the staff will definitely consider the grant of these facilities to the staff.

(பிற்பகல் 6-20)

மாற்றுத் தலைவர் (திரு. க. எஸ். வெங்கடேசன்): இன்னும் 6 பேர்கள் பேசவிருப்பதால், சுருக்கமாக முடிக்க வேண்டும்.

THIRU P. YELLAMANDA: Sir, I will take only two more minutes. There is also another important point which I want to mention. After retirement, the sanitary workers are suffering without any source of income to their familities. At the time of retirement, the Corporation is giving them a very limited amount of Rs. 500 or Rs. 1,000; with that amount they are struggling even for their day-to-day existence. Therefore, I am requesting the Government and the Hon. the Local Administration Minister to reserve a certain quota of jobs for this category of people who want employment to their sons according to their qualifications.

Sir, I have only one more point to make. On 24th October 1978 the Hon. the Chief Minister issued house-site pattas to persons belonging to the Adi Andhra Community. Only a few of them have been issued pattas and a large number of house-site pattas have not yet been issued. I request the Hon. Minister to give strict orders to the authorities to issue pattas quickly the remaining as has been promised by the Hon. the Chief Minister.

With these words, I conclude my speech. Thank you.

திரு. என். சுந்தரேசத் தேவர்: மாற்றுத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித்துறை தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பது குறித்து சில அபிப்பிராயங்களை, மாற்றுத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். பொதுவாக இப்படிப்பட்ட ஸ்தல ஸ்தாபனங்களின் பதவிக் காலத்தை நீட்டிப்பதன் பலனாக கடந்த 1976-லிருந்து இன்றுவரையிலும் நல்ல வளர்ச்சி பணிகள் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டன என்ற உண்மையை நான் குறிப்பாகக் கூறிக்கொள்

கிறேன். பதவிக்காலத்தை நீட்டிப்பதால், தேர்தல் இல்லாமல் இருப்பதால், பல துறைகளிலும் இன்றையதினம் நகராட்சிகள் பின்தங்கிவிட்டன என்ற நிலைமை உணர்ந்தவர்களாக நாம் இருக்கிறோம். தனி அதிகாரிகள் இன்றையதினம் அவர்களுடைய மனம் போன போக்கில் ஆட்சி புரிகிறார்கள். இந்த அவலநிலை சுதந்திரமடைந்த ஒரு தேசத்திலே இருப்பது நியாயம் தானா என்று பார்த்தால், நியாயமே இல்லை. தனி அதிகாரிகளுடைய போக்குகளை, நகரங்களிலே பார்ப்போமேயானால், ஏதோ எதேச்சாதிகார மன்னர்களைப்போல் அவர்கள் நடக்கிறார்கள். வருமானம் வரக்கூடிய இடங்களிலே பார்த்தால், அதாவது காய்கறிகள் விற்பவர்கள், ஆடுமாடுகள் விற்பவர்கள், இன்னும் மற்ற பொருட்கள் மூலம் பெரும் வருவாய் வரக்கூடிய இடங்களிலே எல்லாம் இந்தத் தனி அதிகாரிகள் முன்கூட்டியே பேரம் பேசி நடத்தக்கூடிய அவல நிலையைப் பார்க்கும்போது மனதுக்கு மிகுந்த வேதனையாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, நகராட்சிகளுடைய மேம்பாடு குறித்து ஒரு சரியான கண்காணிப்பு செய்வதற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இல்லை. இவர்களுக்கு அந்த அதிகாரம் இல்லை என்று இருக்கிறார்களோ என்னவோ? இல்லை, தெரியாமல் இருக்கிறார்களோ தெரியவில்லை. பொதுவாக நடைபெற வேண்டிய ரோடு போடுதல், பழுது பார்த்தல், டிரெய்னேஜ் சிஸ்டத்தைச் சீர்படுத்துதல் போன்ற பலவிதமான முற்போக்குப் பணிகளைச் செய்வதற்கு அரசாங்கத்திடம் அணுக வேண்டிய நிலை இந்த அதிகாரிகளிடம் இல்லாது இருப்பதால், எல்லாத் துறைகளிலும், கடந்தகால கண்ணோட்டத்தோடு பார்க்கும்போது, தற்போது, மிகவும் பின்தங்கியிருக்கிறது.

(பிற்பகல் 6-30)

நம்முடைய அமைச்சர் அவர்கள் ஜூன் மாத இறுதிக்குள் 3 கட்டத்திலே தேர்தலை நடத்தி வைப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள். தேர்தலை நடத்தாததால் உள்ள நிலைகளையெல்லாம் சற்று கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நகராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவற்றை மேம்பாடு செய்வதற்கு மாவட்டக் கலெக்டர்களுக்கு அதிகாரம் இருக்கிறதா என்று பார்த்தால், அந்த அதிகாரம் அவர்களுக்குக் கிடையாது. இருந்தாலவது, கலெக்டர் அவர்கள் வரும்போது, அந்தப் பகுதியில் உள்ள குறைகளைச் சொல்லித் தீர்த்துக்கொள்ள வாய்ப்பிருக்கும். மேலதிகாரம் செலுத்தாத காரணத்தால், தனி அதிகாரிகள் தங்கள் இஷ்டம்போல் ஏகபோகத் தன்மையைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



தெரு விளக்குகளைப் பொறுத்த வரையிலே காண்ட்ராக்ட் சிஸ்டத்திலே, கமிஷன் பேசிஸில் காரியங்கள் நடந்து வருகின்றன. ஆகவே தெரு விளக்குகள் மிகவும் மோசமாக பழுதடைந்து இருண்ட கோலமாக காட்சியளிக்கின்றன. தெரு விளக்குகளை நல்ல முறையிலே 'மெயின்டெயின்' பண்ணுவதாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம் கேட்டால், இரண்டு கம்பெனிகளிடமிருந்தும், சூப்பர் மார்க்கெட்டிலும் டியூப் லைட்டுகளை வாங்குகிறார்கள், ஸ்டாக் இல்லையென்று சொல்லுகிறார்கள். ஆகவே லைட் போடவில்லை என்று சொல்லுகிறார்கள். குறைகளுக்குக் காரணம் எதுவாக இருந்தாலும், அவை பொதுமக்களைத்தான் பாதிக்கிறது என்ற நிலைமை உணரக்கூடிய சாத்தியம் இல்லாத காட்சியைப் பார்க்கிறோம்.

அது மட்டுமல்ல, கட்டிடங்களைக் கட்டுவது போன்றவைகளுக்கு எல்லாம் கூட, சாதாரண அன்றாட நிர்வாகங்களில் உள்ள வேலைகளுக்கெல்லாம்கூட இன்றைக்குப் பெருந்தொகையைக் கொண்டு போனால்தான், சாங்ஷன் ஆகிறது. தொகை இல்லாமல் நகராட்சிகளில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி அளிப்பதில்லை. நம்முடைய கார்ப்பரேஷனில்கூட பார்க்கவேண்டியவர்களைப் பார்த்து, செய்ய வேண்டியதைச் செய்தால்தான், சாங்ஷன் வருகிறது. அப்படிச் செய்யவில்லையென்றால், ஏதாவது காரணம் காட்டி, சாக்குப் போக்குச் சொல்லி, மனுக்கள் நிராகரிக்கப்படக் கூடிய அவல நிலை இருக்கிறது. இவைகளுக்கெல்லாம் காரணம் 'தேர்தல்' இல்லாததுதான் என்றாலும் மேலதிகாரிகளாக இருக்கக்கூடியவர்கள் இவற்றையெல்லாம் பார்த்து நடவடிக்கை எடுத்தால், இவற்றைத் தவிர்க்க முடியும்.

பொதுவாக முக்கியமான பெரிய பணிகளுக்காக 50 ஆயிரம், ஒரு இலட்சம் ரூபாய் என்ற அளவுக்கு உள்ள பணிகளை தனி அதிகாரிகளின் மூலமாக ஏலம் விடுவதைவிட, முக்கியமான பெரிய அதிகாரிகளை வைத்து, வேறுவிதமாக நடத்தியிருந்தால், நகராட்சிகளினுடைய வருமானம் பெரிதும் உயர்ந்திருக்கக்கூடும். எல்லா நகராட்சிகளிலும் எல்லாவிதமான ஊழல்களும் நடந்துவிட்டன. மொத்தத்தில் தனி அதிகாரிகளால் நகராட்சிகள் சிறப்புறச் செயல்பட முடியாத நிலையை இன்றைக்குக் காண்கிறோம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, மாற்றுத் தலைவர்கள் அவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தேர்தல் ஜூன் மாதத்தில் நடத்தப் போகிறோம் என்று இருந்தாலும், அதற்கு முன் உள்ள இந்த மூன்று, நான்கு மாதங்களில் தனி அதிகாரிகளுடைய நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனிக்கக்கூடிய அளவிலே ஆவன செய்ய

வேண்டும். இல்லாவிட்டால் பெருவாரியான சோரங்கள் போகின்ற நிலைமை ஏற்படும். பொதுமக்களுடைய வரிப் பணம் விரையம் ஆகின்ற நிலை ஏற்படும். பெரிய இலஞ்சம் தாண்டவமாடுகிற நிலை ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சில தனி அதிகாரிகளின் வீடுகளில் மாட்டுப் பண்ணைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. சிலர் நான்கு மாடுகள், மூன்று மாடுகள் என்று இன்றைக்கு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த மாடுகள் மூலம் பத்து லிட்டர், பதினைந்து லிட்டர் பால் கறக்கிறார்கள். ஆனால் ஓட்டலுக்கு 50 லிட்டர் பால் கொடுக்க வேண்டும் என்று, இந்த பத்துப் பதினைந்து லிட்டர் பாலில் தண்ணீரை ஊற்றிக் கொடுக்கிறார்கள். ஓட்டல்காரன் அதை எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், அவர்கள்மீது சில நடவடிக்கைகள் எடுப்பது போன்ற செயல்கள் நடைபெறுகின்றன. ஆகவே அந்த ஓட்டல்காரர்கள் இலஞ்சம் என்று இல்லாவிட்டாலும், பால் என்ற பெயரில் பணத்தை இந்தத் தனி அதிகாரிகளுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரியான அட்டூழியங்கள் எங்கே பார்த்தாலும் பரவிவிட்டன. ஒட்டுமொத்தமாக தனி அதிகாரிகள் ஆதிக்கம் செலுத்தக்கூடிய அத்தனை துறைகளிலும் புரையோடிப் போன ஊழல் மிக்க நிலையைத் தனி அதிகாரிகள் செய்துவிட்டார்கள். இதற்கு முக்கியமான காரணம் மேலதிகாரம் செலுத்தக்கூடியவர்கள் இல்லாததுதான். ஆகவே அவர்கள்மேல் மேலதிகாரம் செலுத்தக்கூடிய அதிகாரம் மாவட்டக் கலெக்டர்களுக்கு இருக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகிறேன். இதைப் பற்றிக் கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசும்போது, விரிவாகப் பேசலாம் என்று இருக்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இல்லாத காரணத்தால், பெருவாரியான குற்றங்கள் ஏற்பட வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, தேர்தல் வரும் வரையில் அவர்கள் இப்படிப்பட்ட குற்றங்களில் ஈடுபடாமல் இருக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நகரவைகள் பற்றிய சட்ட முன்வடிவையொட்டிச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3 கட்டங்களாகத் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்தார்கள். மூன்று கட்டங்கள் என்றால், ஒரே மாதத்திலேயே நடத்தி முடித்துவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் 3



கட்டங்களாக நடத்தி முடிக்க ஆறு மாதங்கள்கூட ஆகலாம். அதுபற்றித் தெளிவாக ஒரு வாக்குறுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கடந்த காலங்களிலே அப்படித் தான் நடந்திருக்கிறது.

முன்பொரு நாள் உள்ளாட்சி தொடர்பான சட்டமுன்வடிவை யொட்டிப் பேசுகிறபோது, "சட்டத்திற்கு இரு புறங்கள் உண்டு. ஒரு புறம் அதிகாரிகளுக்குத் தெரியும்; மறுபுறம் மக்களுடைய பிரதிநிதிகளுக்குத் தெரியும்" என்று சொன்னேன். அப்போது அமைச்சர் அவர்கள் "இரண்டு புறமும் ஒருங்கே சேர்ந்து ஒத்துழைத்தால்தான் மக்களுக்கு நன்மை கிட்டும்" என்று சொன்னார்கள். அதைத்தான் நான் வலியுறுத்த விரும்புகிறேன். இரண்டு புறங்களும் சேர்ந்து செயல்பட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்றால், ஒருபுறம் காலியாகக் கிடக்கிறதே, எப்படிச் செய்வது? ஆகவே மேலும் மேலும் தாமதப்படுத்தக்கூடாது என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

தேர்தல் நடைபெறுகிற வரையில், ஒவ்வொரு ஊராட்சியிலும் நகராட்சியிலும் மக்கள் ஆலோசனைக் குழு என்ற குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. எல்லா நகராட்சிகளிலும், மக்கள் ஆலோசனைக் குழுக்கள் கண் துடைப்புக்காகப் பெயர் அளவுக்குத்தான் நடந்துகொண்டிருக்கின்றன. உண்மையாக மக்கள் ஆலோசனைக் குழுவில் இருக்கிற உறுப்பினர்களை அழைத்துப் பேசி, உருப்படியான காரியங்களைச் செய்வோம் என்ற பொறுப்பேற்றிருக்கிற அதிகாரிகள் யாரும் கிடையாது. பெயரளவுக்குக் கூடிவிட்டு, ஏதோ கூடிப் பேசினோம் என்ற அளவுக்குக் கூடி கலைகிற நிலுவாகத்தான் இருக்கிறது. ஆகவே தேர்தல் முடிகிற வரையில், மக்கள் ஆலோசனைக் குழுவுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய வகையில் நல்ல ஆலோசனைகளைக் கேட்டு, மக்களுடைய அன்றாடக் குறைகளைக் களைய, நகராட்சிகளில் உள்ள தனி அதிகாரிகள் செயல்பட வேண்டும் என்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

மக்கள் ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றிருக்கக் கூடிய உறுப்பினர்களுக்குச் சரியான பிரதிநிதித்துவம் கொடுக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. என்னுடைய அனுபவத்தையே சொல்லுகிறேன். நான் சிதம்பரத்தைச் சேர்ந்தவன். என்னை 70 மைல்களுக்கு அப்பால் உள்ள ஊராட்சி மன்ற ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகப் போட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கூட்டத்திற்கும் உண்டான அழைப்பிதழ் அக்கூட்டம் முடிந்த பிறகுதான்

வருகிறது. அதனுடைய தேதியைக் கூடக் குறிப்பிட்டு வைத்திருக்கிறேன். கூட்டம் முடிந்த பிறகுதான் அழைப்பிதழ் வருகிறது. இப்படி ஒரு கண் துடைப்புக்காக அந்தக் குழுக்களில் எம்.எல்.சி., எம்.எல்.ஏ., ஆகியவர்களைப் போடுவதைவிட, போடாமலே இருப்பது நல்லது. போடுவதாக இருந்தால் திறம்படச் செயல்பட வேண்டும். தேர்தல் நடைபெற இன்னும் 3 மாதங்கள் இருக்கின்றன. மிஞ்சியுள்ள காலத்திலே ஆலோசனைக் குழுக்கள் திறம்படச் செயல்பட உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆணையிட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வெளிப்படையாகத் தெரியும்படி ஒரு உதாரணத்தை மன்றத்திலே மற்றொரு நிகழ்ச்சியைச் சொல்லுகிறேன். என்னுடைய சொந்த அனுபவம். சட்டமன்ற உறுப்பினருக்கே இந்த அனுபவம் என்றால், பாமர மக்களுக்கு எப்படிப்பட்ட அனுபவம் ஏற்படும் என்பதை ஒப்பிட்டுப் பார்க்கத்தான் இதைச் சொல்லுகிறேன். நான் இருக்கிற வீட்டைச் சுற்றி சாக்கடை நீர் தேங்கியிருக்கிறது. அதைப்பற்றி ஆணையாளரிடம் தொலைபேசியிலும் சொன்னேன், நேரிலும் சொன்னேன். எழுத்து மூலமாகவும் எழுதிக் கொடுத்திருக்கிறேன். சொல்லி ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

பக்கத்திலேயே மிக முக்கியமான ஆலயம் ஒன்று இருக்கிறது. இளம்பிள்ளையார் கோவில் என்ற ஆலயம் இருக்கிறது. இங்கே ஆறு மாதங்களாக விளக்குகள் எரியவில்லை. இரவு நேரங்களில், தூய்மையாக இருக்க வேண்டிய ஆலயத்தை, சமூகவிரோதிகள் தவறாகப் பயன்படுத்துகிறார்கள், அசிங்கப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இருட்டைப் பயன்படுத்தி முக்கியமான விக்கிரகம் களவாடப்பட்டிருக்கிறது. இது எப்படி களவாடப்பட்டது என்பது தெரியவில்லை. அப்படிப்பட்ட மிகவும் மோசமான நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தும், இன்று வரை காரியங்கள் நடைபெறவில்லை. கடந்த ஆறு மாதங்களாக இருட்டிலே அந்தப் பகுதி மூழ்கிக் கிடக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் இருக்கும் பகுதியிலேயே இந்த அனுபவம் என்றால், சாதாரண பாமர மக்கள், விவரம் தெரியாதவர்கள் எந்த அளவுக்குத் தொல்லையில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. பெரியவர் திரு. ராமகுருசாமி அவர்களுக்கும் இந்த அனுபவம் இருந்திருக்கும். அந்த வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கருத்திலே கொண்டு, மக்கள் பிரதிநிதிகள் இல்லாத சமயத்தில் இந்த அதிகாரிகளுக்கு அதிகப் பொறுப்புணர்ச்சி





இருக்க வேண்டும், எந்தவிதக் குறைபாடும் இருக்கக் கூடாது, அரசே நேரிடையாகக் கவனம் செலுத்த வேண்டும் என்ற வகையிலே அதற்குத் தக்க அறிவுரைகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த

(பிற்பகல் 6-40)

நகரத்தைத் தூய்மைப்படுத்துகின்ற பணியிலே நகரவை ஊழியர்களை மட்டும் பயன்படுத்துகிறார்கள். இது விஷயத்தில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அங்கு நியமிக்கப்படுகின்ற ஊழியர்களை மட்டும் பயன்படுத்திக்கொள்வது போதாது. ஒவ்வொரு ஊரிலும் மாணவர்கள் சக்தி அதிகமாக இருக்கிறது. நகரவைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள், மாணவர்களின் ஓய்வு நேரங்களிலே அவர்களுடைய சக்தியைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நகரத்தைத் தூய்மைப்படுத்துகின்ற பணியிலே நாம் அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் ஆக்கபூர்வமான பணிகளுக்கு அவர்களைப் பயன்படுத்திக்கொண்டதாகவும் இருக்கும், அவர்களுக்குப் பயிற்சி கொடுத்ததாகவும் இருக்கும். ஆகவே நகரவையிலே பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கும் அதிகாரிகள் எல்லாம் மாணவர்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சி, மாநகராட்சியின் நிர்வாகத்தின்கீழ் உள்ள பள்ளிகளையெல்லாம் அரசு நிர்வாகத்தின்கீழ் கொண்டுவர வேண்டும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். ஏதோ அதிகாரத்தை விட்டுக் கொடுப்பதாகக் கருதாமல் இந்தப் பள்ளிகளையெல்லாம் மாநகராட்சியின்கீழ் இல்லாமல் நகராட்சியின் நிர்வாகத்தின்கீழ் இல்லாமல் நேரடியாகக் கல்வி துறையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர வேண்டும். நகராட்சிகளால் பள்ளிகளைப் பொறுத்து ஒன்றுமே செய்ய முடியவில்லை. இதை நகராட்சி அதிகாரிகளே ஒப்புக்கொள்கிறார்கள். அவர்களால் வேறு நலத் திட்டங்களைச் சரிவர கவனிக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே நகராட்சிகளின், மாநகராட்சியின் நிர்வாகத்தில் இருக்கின்ற பள்ளிகளையெல்லாம் கல்வித் துறையிலே ஒப்படையுங்கள். அவைகளைக் கல்வித் துறையின் நேரடிக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டால், நகராட்சிகள் நல்ல

முறையிலே, ஆக்கபூர்வமான திட்டங்களிலே நிர்வாகத்தையும், சக்தியையும் செலவழிக்க முடியும். இந்த எண்ணம் ஆசிரியர்களிடையே மட்டுமல்ல, பொதுவாகவே இருக்கிறது. இதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல முறையிலே ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சியிலே, நகர சுத்தித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்லமந்தா அவர்கள் கூட நகரசுத்தித் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். அதை எந்த அளவுக்குச் செய்திருக்கிறார்கள், அவர்கள் வாழ்க்கைத் தரத்தை எந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள் என்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இதைப்பற்றிப் பல ஆண்டுக் காலமாகவே கேட்டுக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நகரசுத்தித் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்காவது அவர்களுடைய எதிர்காலத்திற்காக, அவர்கள் எதிர்காலத்திலே நல்ல முறையில் இருக்க வேண்டும் என்பதற்காக, அந்தக் குழந்தைகளுடைய கல்வி வளர்ச்சிக்கு ஆவன செய்ய வேண்டும். அந்தப் பொறுப்பை அரசே மேற்கொண்டு, அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிதம்பரத்திலே நகரசுத்தித் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்காக ஒரு பள்ளியை ஒரு சமூக நல நிறுவனம் நடத்துகிறது. இதில் 1 வயது முதல் 3 வயது வரையுள்ள குழந்தைகள் படிக்கிறார்கள். அந்தக் குழந்தைகளை ஆசிரியைகள் பார்த்துக் கொள்கிறார்கள். சில பயிற்சிகளைக் கொடுக்கிறார்கள். அரிஜன நல சங்கத்தின் உதவியுடன் அதை மிகச் சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதைவிட பெரிய சேவை வேறு இருக்க முடியாது. இது நிச்சயமாகப் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு அரசும் உதவ வேண்டும். நகரசுத்தித் தொழிலாளர்கள் இருக்கின்ற பகுதிகளில் அனைத்து இடங்களிலும் அரசு அது மாதிரி செய்ய வேண்டும். அது மட்டுமல்ல நகராட்சித் தலைவராகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருப்பவர்களுக்கு ஒரு ஊதியமும் இல்லை. அவர்களுக்கு ஊதியப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். பொதுவாழ்க்கையிலே இருப்பவர்கள் நேர்மையாக, தூய்மையாக தங்களுடைய கடமைகளைச் செய்ய, அவர்களுக்குச் சில பாதுகாப்புகள் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட பாதுகாப்புகளைத் தர வேண்டும். மாநகராட்சித் தலைவர்களுக்கும் ஊதியம் கொடுக்கப்போவதாக பேரவையிலே அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்று நாங்கள் அறிகிறோம். நகராட்சித்



தலைவர்களுக்கும் ஊதிய நிர்ணயம் செய்வது நல்லது. அவர்கள் சிறப்பாகக் கடமைகளை ஆற்றுவதற்கு அது ஊன்றுகோலாக, பக்கபலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

கோவை மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டதோடு அப்படியே இருக்கிறது. எப்போது அது மாநகராட்சியாக ஆகப் போகிறது? அந்தக் காரியத்தை மேலும் தாமதப்படுத்துகிறார்கள். 1962-லே சீன ஆக்கிரமிப்பு நடந்தபோது கூட இந்த நாட்டிலே நெருக்கடியான நிலைமை வந்தபோது—அப்போது இருந்த பிரதமர் அவர்கள், பொதுத் தேர்தல்களைத் தள்ளிப் போடாமல், அது வேறு இது வேறு என்று சொல்லி, ஜனநாயகத்தில்—அந்தப் பண்பாட்டில் வழுவாதவராக தேர்தல்களை நடத்தினார்கள். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் செய்து காட்டிய ஜனநாயக மரபை நாமும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பு அளித்த மாற்றுத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைக் கூறி, என் உரையை முடிக்கிறேன்.

**திரு. ஆ. திராவிடமணி:** அவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, நகராட்சித் தேர்தலுக்கு அவகாசம் கோரி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற குறிப்பின் மீது ஒரு சில விவரங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நகராட்சி மன்றங்கள், மற்ற அமைப்புகளைப்போல அல்ல. நகரத்திலே உள்ள பிரதிநிதிகள் கூடி முடித்து, நகர மன்றத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தால்தான், தம் பிரச்சினைகளை எடுத்துச் சொல்ல முடியும் என்பது அப்படியே பழக்கமாகவே இருந்து வருகிறது. கமிஷனரிடம் போய் ஒரு காரியத்தைச் சொன்னால், அவர் அதை கேட்பாரா, அதைச் செய்ய வேண்டும் என்ற அக்கறை அவர்களுக்கு ஏற்படுமா என்ற எண்ணமே மக்களிடத்திலே ஏற்பட்டுவிட்டது. வார்டுக்கு வார்டு கவுன்சிலர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் எல்லாம் சேர்ந்து ஒருவரை நகராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுத்து, அந்தத் தலைவரிடம் போய் பிரச்சினையைச் சொன்னால்தான், அந்த நகரம் பொலிவோடு இருக்கும் என்ற எண்ணம் மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே நகராட்சி மன்றத் தேர்தலைத் தள்ளி வைத்துக்கொண்டே போவது பல்வேறு பிரச்சினைகளுக்கு வழி வகுக்கிறது. நகர மன்றங்கள் இயங்கினால்தான், ஊரிலே ஒளி நன்றாக இருக்கும், சுகாதார வசதி இருக்கும். அந்த அடிப்படை வசதிக்குக் காரணமாக இருப்பது நகர மன்றம்தான். இப்போது நகரமன்றப் பொறுப்பிலே இருக்கக்கூடிய கல்வி வசதிகள், மற்றும் பல்வேறு குழந்தை

களுக்குக் கல்வி, மற்ற வாய்ப்பு வசதிகளைச் செய்துகொடுப்பது அந்த மன்றங்கள்தான். அவைகள் மூலமாகத்தான் இவைகளை நடத்துகிறோம். மகப்பேறு இல்லங்களையெல்லாம் பொறுப்பாக நகராட்சிகள் மூலமாகத்தான் நடத்துகிறோம்.

பாதை வசதிகளை உடனுக்குடன் கவனித்தால்தான் ஊருக்குள்ளே வண்டி வாகனங்கள், சைக்கிள்கள் போவதற்கு வசதியாக இருக்கும். அது மட்டுமல்ல, நகரத்திலுள்ள நகராட்சித் தொழிலாளர்கள் அவர்களுக்குரிய குறையைப் போக்கிக்கொள்ள வேண்டுமென்றால்கூட மக்களுடைய பிரதிநிதிகள் மன்றத்திலே இருந்தால்தான் அந்தப் பிரச்சினையெல்லாம் தீரும் என்ற எண்ணம் இருக்கிறது. இந்த நேரத்திலே, ஏதையோ ஒரு காரணமாகச் சரியல்ல. நகரங்களில் எந்த அபிவிருத்தியும் ஏற்பட முடியவில்லை. ஏதாவது காட்டிக்கொண்டு நகரமன்றத் தேர்தலைத் தள்ளி வைத்துக்கொண்டு போவது ஒரு பிரச்சினையை அரசியல்வாதிகளோ அல்லது சர்வ கட்சிக் குழு சார்பாகப் போய்ச் சொன்னால், நாங்கள் ஓரளவுக்குத்தானே சார் செய்ய முடியும். நாங்கள் கலெக்டருக்கு எழுதி இருக்கின்றோம். ஒன்றும் பண வசதி இல்லை, சார். அதற்கு என்ன சார் செய்வது? அதற்கு என்ன சார் செய்யச் சொல்கிறீர்கள்? என்று சொல்கிறார்கள். (சிரிப்பு) அதற்கு நான், 'என்ன சார், இப்படிச் சொல்கிறீர்கள்? சார், இந்த சக்கூல் வசதி செய்து கொடுக்கக் கூடாதா?' என்று கேட்டால், 'அது வந்து சார்' என்கிறார்கள். 'நீங்கள் சொல்வது ரைட் சார், சார்' என்று சொல்கிறார்கள். இது என்ன பதில் என்றே தெரியவில்லை. (சிரிப்பு)

மற்ற விஷயங்களுக்கு நாம் முடிவாக ஒரு இடம் வைத்திருக்கிறோம். உணவுப் பிரச்சினையாக இருந்தால் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் என்று ஒரு இலாகா இருக்கிறது. அங்கு போய் கேட்கிறோம். நில சம்பந்தமான விஷயம் என்றால் நாம் ரெவின்யூ இலாகாவிலே போய் கேட்கிறோம். தாசில்தார் அலுவலகத்திற்குச் சென்று தாராளமாக தைரியமாக தாசில்தார் அவர்களிடம் போய் பேசலாம். புதிய பம்புசெட் இணைப்பா? மின்சார அலுவலகத்திலே போய் தாராளமாக ஏ.ஈ. அல்லது ஏ.டி.ஈ. இவர்களைப் பார்க்கலாம், பேசலாம். இந்த மாதிரி மனப்பான்மை மக்கள் மத்தியிலே இருக்கிறது. அதுபோல நகர மன்றங்கள் இப்போது இல்லை. ஒரு இடத்திலே அமைதிக்குப் பங்கம் ஏற்படுகிறதா? காவல் துறையில் எஸ்.ஐ.யைப் பார்த்துச் சொல்லலாம். சார், அந்த இடத்திலே பதட்டமாக இருக்கிறது. போய்ப் பாருங்கள், சார்! என்று நேரடியாகவே போய் சொல்லலாம். அங்கே அவர்கள் அதற்குத் தயாராக இருந்துகொண்டிருக்கிறார்கள். அப்படித்தான்





அந்த இலாக்காக்களைப்பற்றி, அந்த அதிகாரிகளைப்பற்றி மக்கள் கருதுகிறார்கள். நகர மன்றம் என்றால், அதற்கு சேர்மென் என்று ஒருவர் இருந்தால்தான், அவர் சொன்னால்தான், ஆணையாளர்கள் அதைக் கவனிக்கிறார்கள் என்ற எண்ணம் மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு மூன்று மாதம், ஆறு மாதம் என்று காலக்கெடு கேட்டுக்கொண்டிருந்தவர்கள், மேலும் இரண்டு மாதத்தில் தேர்தல் வைத்துவிடுகிறோம் என்று கெடு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் பிரச்சினை முடியவில்லை.

பல்வேறு நேரங்களில் நான் அங்கு போகிறபோது, தெரிகிறது. சங்கரன் கோயில் நகர மன்றத்திலே பஸ் நிலையத்திலே 50 காசு என்று வசூலிக்கிறார்கள். ஏறத்தாழ 90 பஸ்கள் வந்து செல்கின்றன. அப்படிப்பட்ட ஒரு பெரிய பஸ் நிலையத்திலே பஸ் உள்ளே போகும்போது, இமயமலைப் பகுதியில் ராணுவ டாங்கிகள் போய் வந்தது போல இருக்கிறதே தவிர, பஸ் போய் வந்ததுபோல இல்லை. அதைக் கவனிப்பதைவிட வேறு காரியம் என்ன என்று தெரியவில்லை. அவர்கள் ஏன் அலட்சியமாக இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. மக்கள் பிரதிநிதிகள் இல்லை என்பது பளிச்சென தெரிகிறது. அதுபோலவே புளியங்குடியிலே ரோடிலேதான் பஸ் நிற்கிறது. இது நாள் வரை பஸ் ஸ்டாண்ட் கட்டவில்லை. ஏன் கட்டவில்லை என்று கேட்டால், இடமில்லை என்று சொல்கிறார்கள். பஸ் நிற்பதற்கே இடமில்லையே, பஸ்ஸில் ஏன் கட்டணம் வாங்குகிறீர்கள் என்று கேட்டால், பஸ் ஸ்டாண்டு இருப்பதாக நினைத்துக்கொண்டு கட்டணம் வாங்குகிறோம் என்று சொல்கிறார்கள். இதுவரையில் அங்கே பஸ் ஸ்டாண்ட் ஏற்படவில்லை என்பதைத்

(பிற்பகல் 6-50)

தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கமிஷனரிடம் கேட்டால், 'நாங்கள் என்ன செய்வது, பஸ் வரும், போகும்' என்று சொல்லுகிறார். கடையநல்லூரில் தினசரி மார்க்கெட் ஒன்று இருக்கிறது. 25,000 ரூபாய், 30,000 ரூபாய் அளவிற்குக் குத்தகைக்குப் போகிறது. நகர மன்றத்திற்கு மார்க்கெட் மூலம் வருவாய் வருகிறது. நகரசபை அதிகாரிகள், "இடம்தான் தருவோம், ஷெட்டை நீங்கள்தான் போட்டுக்கொள்ள வேண்டும்." என்று சொன்னார்கள். எனவே மூங்கில், ஓலை எல்லாம் வாங்கி, ஷெட் போட்டு, அங்கே காய்கறி வியாபாரம் செய்தார்கள். கடையில் அரிசி விற்கும் வியாபாரிகளும் ஷெட் போட்டுக்கொண்டார்கள். திடீரென்று ஒரு நாள் மார்க்கெட் தீ பிடித்துவிட்டது. 25,000, 30,000 ரூபாய் குத்தகை விடுகிறது நகரசபை. அது [illegible] எனவே சர்வ

கட்சித் தலைவர்களும் சேர்ந்து, ஒரு ஆள் குறைந்துவிடக் கூடாதென்று, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர், திரு. பெருமாள் அவர்களையும் சேர்த்துக்கொண்டு, எல்லோரும் சென்றோம். சென்று கமிஷனரிடம் சொன்னோம். அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும், எப்படி எரிந்தது, எதற்காக எரிந்தது, என்று பரிசீலனை செய்து சொல்கிறோமென்று சொன்னார்கள். மறுநாள் ஆணையாளர் மார்க்கெட்டைப் பார்வையிட்டார். ஒரு வருஷமாகிறது, ஷெட் போடவில்லை. "50 ஆயிரம் ரூபாய் அளவிற்குக் காய்கறிகள் எரிந்து, ஷெட்டுகளும் எரிந்து, நிர்க்கதியாக இருக்கும் சின்ன வியபாரிகளுக்குக் கொஞ்சம் நஷ்ட ஈடு கொடுங்கள், லாபம் எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள், நகரசபைக்கு 30,000 ரூபாய் கொடுக்கிறார்கள், ஏதோ பெயரளவிற்குக் கொடுங்கள், அவர்கள் அதை வைத்து, நஷ்டத்தைத் தாங்கிக் கொள்வார்கள்" என்று சொல்லியும்கூட, அந்தக் கமிஷனர் எதுவும் செய்யவில்லை. இதையெல்லாம் பார்க்கும்போது, மக்கள் பிரதிநிதிகள் இருந்தால், சேர்மென், வைஸ்-சேர்மென், கவுன்சிலர்கள் எல்லோரும் அந்த இடத்திற்கு வந்திருப்பார்கள், உடனே கவுன்சில் கூட்டப்பட்டிருக்கும், நகரசபை தீ விபத்தில் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு 10,000 ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்குமென்று சொல்லியிருப்பார்கள். எனவே ஜனநாயக முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், நகர மன்றத் தலைவர்கள் இல்லாததால்தான், பல்வேறு இழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. அதிகாரிகள் சரியாகப் பேச மறுக்கிறார்கள். எனவே இந்தக் குறைகள் தீர குறிப்பிட்ட காலத்திலே தேர்தலை வைத்து, உடனடியாக அங்கே நகரசபைத் தலைவர்களை உட்கார்த்தி வைக்க அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த மசோதாவின்மீது கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாற்றுத் தலைவரவர்களே, தனி அதிகாரிகள் பதவி நீட்டிப்பு சம்பந்தமாக வந்திருக்கிற சட்ட முன்வடிவின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன். ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும் தலைவர்கள், மற்ற தலைவர்கள் இல்லாத காரணத்தால், தனி அதிகாரிகளுடைய அட்டகாசங்கள் அதிகரித்துவிட்டன என்ற கருத்தை பல்வேறு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நானும்கூட அதை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக நகராட்சிகளிலே





இருக்கிற பணிகள் மற்ற நிலைமைகளிலேயெல்லாம், பள்ளிகள் சரிவர நடைபெறவில்லை என்பதையும், சில நகராட்சிகளிலே ஆசிரியர்களுக்கு முதல் தேதி ஊதியம் வழங்கப்படுவதில்லை என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன். அங்கிருக்கிற அனைத்து ஊழியர்களுக்கும் ஊதியத்தைப் பட்டுவாடா செய்த பிறகு பணம் இருந்தால், வழி இருந்தால், அதற்குப் பின்னாலேதான் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவதென்ற நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பதவி காலியாக இருக்கிற இடங்களிலே புதிய ஆசிரியர்களை நியமிப்பதுகூட நடைபெறுவதில்லை. விடுப்பு இடங்களில் வேறு நபர்களை நியமிப்பதில்லை. 10 ஆண்டுக்கால பணி அடிப்படையிலே, பணி தொடர்ச்சியாக இல்லாவிட்டாலும், பிரேக்-ஆஃப் சர்வீஸ் இருந்தாலும், தொடர்ந்து பணியாற்றிய காலத்தையெல்லாம் சேர்த்து தேர்வு நிலை வழங்க வேண்டுமென்று அரசாணை இருந்தும், அது அமுல்படுத்தப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் இங்கே கவன ஈர்ப்பு கொண்டு வந்தபோது, 10 தினங்களுக்கு முன்பாக அமைச்சரவர்கள் ஒரு அறிக்கை படித்தார்கள். அந்த அறிக்கையிலே நகராட்சி மன்றங்கள் உள்ள எல்லாப் பகுதிகளிலும் அமுல்படுத்திவிட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்போது ஒன்றைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். காஞ்சிபுரம் நகராட்சியிலே, இப்படி 10 ஆண்டுகள் பணி அடிப்படையிலே தேர்வு நிலை வழங்கப்படவில்லை. பிரேக்-ஆஃப் சர்வீஸ் இருந்தாலும், சட்டப்படி தேர்வு நிலை வழங்குவதற்காக எடுத்துக்கொள்ள வேண்டிய பணிக் காலத்தைச் சேர்த்துக்கொள்ளாததால், ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே நகராட்சி அலுவலர்கள் தவறான தகவல்களைத் தருகிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன்.

ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். நாகை நகர சபையிலே 2 ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள், விதி முறைக்குப் புறம்பாக. பல முறை நாங்கள் நேரடியாகச் சென்று தனி அலுவலரிடம் வாதிட்டும்கூட, கோரிக்கையை நிறைவேற்றாததால் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்தோம். பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் தலையிட்டு, இரண்டு ஆசிரியர்களுக்கும் பணி அளிக்கப்பட்டுவிட்டது. ஆனால் யார், யார் உண்ணாவிரதத்தில் பங்கேற்பதாகப் பெயர் தந்தார்களோ, அவர்களையெல்லாம் மாறுதல் செய்தார்கள். பள்ளி ஆண்டு நடுவிலே மாற்றம் செய்யக்கூடாதென்று அரசாணை இருக்கிறது. இருந்தாலும் அவர்கள் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை மாறுதல் செய்திருக்கிறார்கள். தனி அலுவலர்

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1979 மார்ச் 17

ஆலோசனையோடு, ஆணையாளர் மாறுதல் செய்திருக்கிறார். எனவே 19 ஆம் தேதி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்னால் உண்ணாவிரதம் இருக்கும் நிலைமை இருக்கிறது. எனவே இதைப்பற்றி அரசின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இப்படியெல்லாம் தனி அதிகாரிகள் கொட்டம் அடிக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவை மாநகராட்சி எப்போது வருகிறதென்று உறுப்பினர்கள் கேட்டதற்கு, ஜனாதிபதியின் கையெழுத்திற்குப் போயிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொல்வார்களென்று கருதுகிறேன். கோவை மாநகராட்சியிலே, கோவைக்குப் பக்கத்தில் இருக்கிற பேரூர் ஒன்றியத்தில் பாதிப் பகுதி சேர்க்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். மிகப் பெரும்பான்மையான பகுதி சேர்க்கப்பட்டிருக்கிறது. எனவே மீதமுள்ளது சிறுபான்மைப் பகுதிதான்— அது பேரூர் ஒன்றியமாக இருக்குமா? அல்லது பக்கத்திலுள்ள ஒன்றியத்தோடு சேர்த்துவிடுவார்களா என்ற ஐயம் இருக்கிறது. அதனால் ஊழியர்களுக்குச் சங்கடம் இருக்கிறது. எனவே தனியாக வைக்காமல், பக்கத்திலுள்ள ஒன்றியத்தோடு இணைக்க வேண்டும்; அல்லது மாநகராட்சியோடு எஞ்சிய பகுதிகளையும் சேர்த்துவிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். மின் விளக்குகள், பள்ளிக் கட்டிடங்கள் இவைகள் எல்லாம்கூட புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, பல்வேறு பகுதிகளில் பழுது பார்க்காத நிலையில் இருக்கின்றன. தனி அலுவலர்கள், அவர்களுக்கு வருவாய் வரும் நிலையிலே இருக்கும் காரியங்களைச் செய்கிறார்களே தவிர, மற்றவைகளைக் கவனிப்பதில்லை; அதனால் பள்ளிக்கூடக் கட்டிடங்கள் பழுது அடைந்திருக்கின்றன. சென்னைக்குப் பக்கத்தில் மேலூர் அகரம் என்ற ஊரில் பள்ளிக் கட்டிடம் இடிந்து விழுந்துவிட்டது. இதெல்லாம் தலைவர்கள் இல்லாததால் ஏற்படுகிறதென்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

நாகையைப்பற்றி ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாகப்பட்டினம் பக்கத்திலுள்ள வேளாங்கண்ணி கிருத்துவர்களுக்கு மிகப் பெரிய புனித ஸ்தலம். நாகைக்கு இந்தப் பக்கத்தில் இருக்கிற நாகூர் முஸ்லீம்களுக்குப் புனித ஸ்தலம். எனவே நாகை முக்கியமான இடமாக அமைந்திருக்கிறது. அங்கே பேருந்து நிலையம் இருக்கிறதா? பேருந்து நிலையம் என்று ஒன்று இருக்கிறது. ஆண்டாண்டுக் காலமாக, தலைமுறை தலைமுறையாக ஒன்று இருக்கிறது. சாலையிலேயே அமைத்திருக்கிறார்கள். நடுவிலே கொட்டகை இருக்கிறது. அது இன்றும் இருக்கிறது. நாகை



1979 மார்ச் 17] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

யிலே வசதி வாய்ப்போடு கூடிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டும், ஜனங்கள் திரள் திரளாக வந்து செல்லும் பகுதியாக இது அமைந்திருக்கிறது என்று பல்வேறு சந்தர்ப்பங்களிலே சுட்டிக் காட்டியபோதும், 'திட்டமிட்டிருந்தோம், கவுன்சில் இல்லை, என்ன செய்வது' என்று சொல்லுகிறார்கள். எனவே அந்த மிகப் பெரிய அலுவல் தடைபட்டிருக்கிறது.

ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் விளையாட்டு அரங்கம் இருக்கிறது. தஞ்சையில் விளையாட்டு அரங்கம் இல்லை. அங்கே இருக்கிறவர்கள், தேர்தல் முடியட்டும் என்று சொல்லும் நிலை இருக்கிறது. எனவே பல்வேறு முக்கிய அலுவல்கள் தடைபட்டிருப்பதற்குக் காரணம், தேர்தல்கள் நடக்காமல் இருப்பதுதான்.

**மாற்றுத் தலைவர் (திரு. ச. எஸ். வெங்கடேசன்) :** அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஆகவே உடனடியாகத் தேர்தல்களை நடத்த முயற்சிக்க வேண்டுமென்றும், குறிப்பிட்ட காலத்திலே ஜூன், ஜூலையில் மழை வரும், வேறு ஏதாவது வரும், அதனால் தள்ளிப் போடாமல், குறிப்பிட்ட காலத்திலேயே தேர்தல்களை நடத்த வேண்டும். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள், உள்ளதைச் சொல்வேன், சொன்னதைச் செய்வேன், வேறொன்றும் தெரியாது என்று சொன்னார்கள். அவர்கள் சொல்வதைச் செய்துகொண்டு வருகிறார்கள். அந்த வகையில், இதிலும் மெய்ப்பித்துக் காட்ட வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். அரசு ஆணைகளை

(பிற்பகல் 7-00)

எந்த நகராட்சியிலும் அமுல்படுத்துவதில்லை. அவர்கள் அரசு ஆணைகளை அமுல்படுத்தாததால், ஆசிரியர்களுக்கு பல்வேறு தொல்லைகள், சிரமங்கள் ஏற்படுகின்றன. ஏற்கெனவே அரசு ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அந்த ஆணைகளை செயல்படுத்துவதில்லை. 10 ஆயிரம் ரூபாய் இறந்துபோனவர்களுடைய குடும்பத்திற்குத் தருவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். இடையில் இறந்து போன அந்த ஊழியருடைய குடும்பத்திற்கு அந்தத் தருவதற்குக்கூட ஆணையர் ஆயிரம் ரூபாய் பேரம் பேசுகிறார். அப்படிப்பட்ட அதிகாரிகளும் இன்றையதினம் நாட்டிலே இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மிகவும் வேதனையுடன் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நான் சொன்ன எல்லாக் கோரிக்கைகளையும் கவனித்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு, தேர்தலும் விரைவில் வர வேண்டுமென்று கேட்டு, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

தெரிவித்து, எக்செம்ஷன் கேட்டு இத்தனை வழி முறைகளும் பின்பற்றப்பட்டு தீர்ந்த பிறகு, அந்த ஆசிரியர்களுக்கும் அதைத் தெரிவித்து விட்டுத்தான் சம்பளத்திலேயிருந்து பிடிக்க முயல வேண்டுமென்ற ஒரு உத்தரவை, நல்ல ஆணையை டி.ஆர்.டி. அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் நகராட்சி ஆணையர் அவர்கள் இத்தகைய ஒரு இன்ஸ்ட்ரக்ஷனைக் கொடுக்கவில்லையாதலால், அரசாணையைத் தவிர்ப்பதற்கு இப்படிப்பட்ட காரியங்களைச் செய்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். இந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு உள்ளாட்சித்துறை தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, நாமக்கல் நகராட்சியைப் பொறுத்தவரை, டியூப் லைட்டுகள் எரியாமல் இருக்கின்றன. இப்பொழுது அங்கு இருக்கக்கூடிய தனி அதிகாரி மிகவும் நேர்மையானவர். அவருக்கு நேர் மாறானவரையும் அந்த நிர்வாகத்திலே கொஞ்சம் நாட்களுக்கு முன்னர் பார்த்தோம். இப்பொழுது அங்கு ஒரு நேர்மையான அதிகாரியையும் பார்க்கிறோம். ஆனால் அந்த அதிகாரி கூட டியூப் லைட்டுகளை வாங்கும்போது, இரண்டு சூப்பர் மார்க்கெட்டுகளிலும் இன்னொரு பகுதியிலும்தான் வாங்க வேண்டியிருக்கிறது. அங்கே கேட்டால், ஸ்டாக் இல்லை என்று சொல்லுகிறார்களாம். இப்படிப்பட்ட நிலையில் நாங்கள் ஒன்றும் செய்ய முடியாமல் தடுமாறுகிறோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆதலால் அந்த நிலைமைகளை எல்லாம் மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற முறையில் மாற்றியமைத்து செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மறுபடியும் நான் கேட்கிறேன், நீங்கள் கட்டாயம் ஆசிரியர்களுடைய மாற்றத்திற்கான உத்தரவை வழங்க வேண்டும். இந்த மாதிரி ஆடிட் அப்ஜெக்ஷன் செய்து கொண்டிருக்கக் கூடிய நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டும். சேலம் நகராட்சியில் மக்கள் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. எங்களைப் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரிய பிரதிநிதிகள் இருக்கிறோம். பெரிய நிர்வாகம் ஆசிரியர்களுடைய பகுதி. ஏற்கெனவே அந்தக் குழுவிலே எங்களைப் போடவில்லை. அன்றைக்கு நான் அதைப்பற்றிக் கேட்ட நேரத்தில் நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவதற்கு முன்னால், அது போட்டு முடிக்கப்பட்டு விடும் என்று சொன்னார்கள். நாங்கள் அதைக் கேட்டுத் திருப்தி அடைந்தோம். அதற்குப் பின்னால் இரண்டொருவர் இராஜிநாமா செய்ததன் காரணமாக,



காலியிடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த இடத்தை நிரப்பும்போது, ஆசிரியர் தொகுதி உறுப்பினர்களை அந்த சேலம் முனிசிபாலிடி மக்கள் குழுவில் போடுவீர்களேயானால், ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை கவனிக்க தீர்வுக்கு வாய்ப்பாக இருக்கும். இதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அமைச்சர் அவர்கள் காலத்திலே நிறைவேற்ற வேண்டும். இந்த அமைச்சர் இளமையானவர், துடிப்பானவர் என்பதோடு மாத்திரமல்லாமல் கவிஞரும் கூட. அவர்கள் காலத்திலாவது சிறப்பான செயல்கள் சிலவற்றைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். நான் சொன்னவைகளையெல்லாம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

நகரசுத்தி ஊழியர்கள் இடையிலே இறந்து விட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்கிற நல்ல செய்தியை அமைச்சர் அவர்கள் காலத்திலேயே அறிவிக்க வேண்டும். முடியுமானால் இன்றைக்கே கூட இங்கேயே அறிவிப்பார்களேயானால், அந்தச சமுதாயம் என்றைக்கும் அவர்களை வாழ்த்தும். மாண்புமிகு உறுப்பினர் திரு எல்லமந்தா அவர்கள் கேட்டதுபோல் நானும் இதை உருக்கமாக அமைச்சர் அவர்களிடம் வேண்டுகிறேன். அந்தச் சமுதாயத்தில் பல பேர் இடையிலே இறந்து விடுகிறார்கள். அவர்களுடைய நோயைத் தீர்ப்பதற்கு முடியாமல் அவர்களுடைய வருமானம் குறைந்த அளவில் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களேகூட அறிவார்கள். மேல் நிலையிலிருப்பவர்களுக்கு, அதிகம் சம்பளம் பெறுபவர்களுக்கெல்லாம் அரசு பாதுகாப்பு வழங்கியிருக்கும்போது, வாழ்க்கையின் கடைத் தட்டிலே சம்பளம் பெற்றுக்கொண்டிருக்கக்கூடிய அந்த சானிட்டரி ஊழியர்களுக்கு, நகரசுத்தித் தொழிலாளர்களுக்குக் கூட இந்த 10 ஆயிரம் ரூபாய் இடையில் இறந்து போனால் கொடுக்கின்ற திட்டத்தைக் கொண்டு வந்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு மாற்றுத் தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்

Thiru. A. R. DAMODARAN : Sir, may I express my happiness that at long last, the Government have decided that they will have elections to the Municipalities, including Coimbatore and Madras Corporation? It is now 2 years and 3 months since the Municipalities were dissolved. It was done during the President's rule. The Coimbatore Municipality was dissolved more than 3 years ago on

the plea that we were going to convert it into a Corporation and it has still not been converted into a Corporation; and the Bill is still tion was concerned, it was dissolved over four years ago, because of the Muster Roll scandal. Therefore, for the past two and a half years and more, the Minister for Local Administration under preparation. As far as the Madras City Municipal Corpora- has not been able to administer any of these Municipalities indirectly and I think it would be more appropriate for the Minister to call himself the Minister for Centralised Administration rather than the Minister for Local Administration. My first point is that when the Government are administering all the local bodies directly, during the Budget presentation when the documents were placed, we should have received a financial statement of all the Municipalities in our State, receipts and expenditure of all these Municipalities and the Madras City Municipal Corporation right from the period 1976-77 and 1977-78 and perhaps even the budget for 1978-79. Since the Minister is directly in charge of administering these Municipalities through Special Officers, I think Members of the Legislature have every right to expect that the budgets of these municipalities and Municipal Corporation would be placed before the Legislature for its comments. We do not know now whether the administration of finances has improved since all these Municipalities were superseded. I realise that this is a new thing that has developed. We have never had in the past all the Municipalities being in the process of suspended animation. Since this is a new precedent that has taken place, my plea to the Hon. Minister will be that when we are considering the Note on Local Administration, I would request him to place statements before the House showing how the finances of these Municipalities and local bodies have been, at least during the years 1976-77 and 1977-78 when they have been superseded and brought under the direct control of Government. There is no point in our vaguely accusing that after these things have been done, the administration has improved or has not improved. Whether they have improved or not, I do realise that some Special Officers have done exceptionally good work in the Municipalities and in the Corporation of Madras. Nonetheless, there can be no denying the fact that having accepted that local administration will be by the elected representatives, I am afraid that it is difficult for any democratic Government to go back on this idea and to say that to continue this would be better for the people. Right from 1920, we have been



considering local administration as a training ground for administrators in the Tamil Nadu Cabinet as well as in the Central Government. Many distinguished leaders and national leaders had their training in local administration. Thiru Jawaharlal Nehru himself was Mayor of Allahabad Municipality, then leader of the Congress and he was later on elected as Prime Minister of India. There are many famous names of personalities who have come up from the field of local administration. Whatever mistakes may have occurred either in the Corporation or in the Municipalities, I will not gainsay the fact that some of our elected representatives have misbehaved in the past. They have misbehaved in the sense that they have not managed properly the finances of local bodies. But, at the same time, this can happen in higher posts also. I, therefore, welcome the announcement that at long last the elections to these local bodies will be held. My only plea is that we should have the statements of accounts of these Municipalities when we take up the Note on Local Administration.

Sir, there is one difficulty in so far as the Madras City Corporation is concerned and I want the Hon. Minister kindly to take note of this. A year ago, a proposal was mooted in the Madras Corporation to change the names of all the streets in Madras City. This has brought about a terrible confusion in the City limits and even today I do not know exactly in what street I am living because a particular number has been given as "6 Kilpauk Garden Road, Second Street" and, unfortunately, the name-board of the lane leading to my house is put as "Mandapam Lane" because this was the old address given. In many places, where the addresses have been changed, name-boards have not been provided. This is likely to create confusion during the Corporation elections because many of us, when we go to the polling booth and give our name and street address may give entirely different street addresses which may result in some difficulties when the polling officers will have to identify the voter who comes to the booth.

My firstt request, therefore, would be to ensure that all these addresses are correctly spelt out in the Electoral Roll with the names of all the streets which have been changed very suddenly without any reason in many places. I could understand if this has been done in Anna Nagar, because there was considerable confusion, where

plots were purchased and buildings were constructed at varying distances of time and where a house with No. 1021 will be next to the house with No. 1260. There was some rationale in re-numbering houses in Anna Nagar but, unfortunately, they have taken up the whole City of Madras, so much so the address given in the Telephone Directory, issued even in November 1978, does not agree with the street numbers the Corporation has given. That apart, I would only request that at least before the elections, we should clearly sort out the confusion about street numbers so that the voters may not be put to difficulty.

The other request is—I will no doubt have time to discuss this when we take up the Policy Note on Local Administration—about the difficulty we are experiencing in our locality from mosquito menace. I happen to come from the constituency where the leader of the D.M.K. has been elected as M.L.A. I do not know whether any special effort has been made to breed mosquitoes in my area to the discomfiture of the voters. My only request is that irrespective of whatever feelings the Minister may have for the M.L.A. of my Constituency, he may at least have the kindness to drive away the mosquitoes which are creating havoc for the people in the area. The medicines and the sprays that are used are not at all effective and in spite of various measures, they have become a terrible menace in that area. I would only plead with him that special steps should be taken to root out this menace. I think many areas in Madras are having the same difficulty. I would plead with him to take some special measures, before the election, so that we may be free from mosquito menace.

I would only end up with saying that as an old Municipal Councillor and a former Chairman of Cuddalore Municipality, I am very happy that the elections are to be held and irrespective of the representative who may be elected, we have got to face this. It is quite possible that in some places, there will be members belonging to another party and it does not matter at all. I would only wish that during these 2 years and 6 months, the Minister had brought a comprehensive Municipalities Amendment Act. I remember when I came here in 1966 and the hon. the Leader of the Opposition was also there and he will also remember, when Thirumathi Lourdhammal Simon was the Minister for Local Administration, a Committee



was appointed to consider a comprehensive amendment to the Municipalities Act and, the Corporation Act, and the entire Bill was prepared. But at that time, because the general elections were going to be held in 1967, the Ministry decided that it would not take up the amendments to the District Municipalities Act and it was shelved. If the Hon. Minister asks the officials concerned, I am sure, this report which was prepared in 1966 will be available. My only regret this timie is that we had 2½ years, 3 years and 4 years' time and we could have usefully employed this time for carrying out very many essential amendments to the Madras City Municipal Corporation Act and the District Municipalities Act. There are questions of licence fees, finding revenues for our Municipalities, property tax levies and all these are things of the distant past and we require new formula and methods to be undertaken to improve the resources of the local bodies. The Zakaria Committee Report published on an all-India level for augmentation of revenues for local bodies is there from 1964-65. I would request the Hon. Minister kindly to go through that report also and irrespective of whether we have elections before June or May, I would still request the Government to have a comprehensive report prepared on the amendments to be carried out and soon after elections in June, to invite representatives of Municipalities and Corporations so that this Act might be amended after consulting them. I remember the last Municipal Chairmen's Conference was held quite some time ago are and, therefore, the opportunity may be taken after June to see that it is done as quickly as possible. Thank you, Sir.

*திரு. இரத்தின பாலகுருசாமி :* மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நகராட்சிகள் பற்றிய சட்ட முன் வடிவுகள் எண் 4, 5, 6/1979 என்ற தலைப்பின் கீழ் திருத்தச் சட்டங்களை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் ஒன்று நகராட்சிகளுக்குத் தனி அதிகாரிகளை நியமித்தல் குறித்த சட்ட முன்வடிவாகும்.

நகராட்சிகளில் தனி அதிகாரிகளைப் பொறுத்தவரையில், என்னென்ன தவறுகள் கடந்த காலத்தில் நடந்திருக்கின்றன என்ற உண்மைகளை இங்கே பேசிய எல்லா அங்கத்தினர்களும் அனுபவ பூர்வமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இவ்வளவு நாட்கள் பொறுத்தவர்கள் இன்னும் ஒரு 2 மாதங்களுக்குப் பொறுத்துக்கொள்ள வேண்டிய நிலை இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட

முன்வடிவுகளை முறைப்படி நிறைவேற்றிவிட்டு, அதற்குப் பிறகு ஜூன் மாதத்திற்குப் பின்னால் தேர்தல்களை நடத்த இருப்பதாக உறுதியான எண்ணத்தை தம்மிடையே எடுத்துச் சொன்னார்கள்.

இங்கே பேசிய பல உறுப்பினர்கள் பல்வேறு குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினார்கள். எங்கள் பகுதியிலிருந்து வந்திருக்கிற ஆசிரியர் பிரதிநிதி திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சிதம்பரம் நகராட்சியைப் பொறுத்தட்டு சில பல குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினார்கள்.

(பிற்பகல் 7-20)

மாநிலம் முழுவதும் மின்சார விளக்குகளைப் பொறுத்தவரையில், நகராட்சிக்குத் தெரு விளக்குகளை அவர்கள் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள் என்றும், வீட்டு விளக்குகளை மின்சார வாரியமே ஏற்று நடத்துகிறது என்றும் அவர்களைக் கேட்டால் சொல்கிறார்கள். இரண்டையும் ஒன்றாக இணைத்துத் தந்தால் நாங்கள் கவனிப்போம் என்று சொல்கிற தனி அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆகையால் இப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்க அரசு, வீட்டு விளக்குகளையும், தெரு விளக்குகளையும் நகராட்சிகளுக்கே கொடுத்துவிடலாம் அல்லது அரசே எடுத்துக்கொண்டு சரிவர நடத்தினால், நெருக்கடி காலத்திலே அரசுக்கு ஏற்பட்டதுபோல் அவப்பெயர் ஏற்படாத அளவுக்கு பார்த்துக்கொள்ள வேண்டும். மின்சார வாரியத்தின் தலைவர் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஆகவே, ஊராட்சி மன்றமானாலும் சரி, ஊராட்சிகள் ஆனாலும் சரி, நகராட்சிகள் ஆனாலும் சரி, அவைகளில் இப்படிப்பட்ட குறைபாடுகள் நிரம்ப இருக்கின்றன: ஊராட்சிகளிலே தெரு விளக்குகளை அவர்களே போட்டுக்கொள்ளலாம் என்று சொல்லி, அரசு உத்தரவின் பேரில், நாங்கள் அந்த விளக்குகளைப் பொருத்திப் பார்த்தால் இன்றைக்கு மாலையிலே அந்த விளக்குகளைப் போட்டுவிட்டு வந்தால் மறுநாள் காலையில் அந்த விளக்குகள் எரிவதில்லை. அப்படிப்பட்ட விளக்குகளை நாம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாங்க வேண்டுமென்று குறிப்பிடுவதால் அப்படிப்பட்ட நிலைமைகளை நாம் அனுபவபூர்வமாகப் பார்க்கிறோம். ஆகவே, மின்சாரத் துறையே இதை ஏற்று நடத்துவது நல்லது என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி எடுத்து நடத்தும்போது, ஊராட்சியானாலும் சரி ஊராட்சி ஒன்றியமானாலும் சரி, அவர்கள் முறைப்படி வரி செலுத்துவார்கள் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். சிலபல நகராட்சிகளிலே அதைச்





சொந்தமாக ஆக்கியிருக்கிறார்கள். நீங்களும் மின்சார வாரியத்திலே அவர்களுக்குக் கொடுத்திருக்கிறீர்கள். தஞ்சை போன்ற நகராட்சிகளுக்கு அப்படிப்பட்ட சலுகைகள் இருக்கின்றன. ஒரு 5 நகராட்சிகளுக்கு அப்படி இருப்பதால், பல நகராட்சி ஆணையர்களும், தனி அதிகாரிகளும், அப்படி அங்கே கொடுக்கப்பட்டிருக்கிறதே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறதே, இன்னொரு இடத்திலே இருந்தால் ஒழுங்காகப் பராமரிக்க முடியுமா என்று சொல்வார்கள். தெரு விளக்குகளைப் பராமரிக்க முடியாதவர்கள், வீட்டு விளக்கை எப்படிப் பராமரிப்பார்கள் என்று பார்த்தால், அந்த வாரியம் தான் பொறுப்பாக இருக்கும். இந்த நேரத்திலே இந்தச் சட்ட முன்வடிவை இங்கே வைத்து இன்னும் இரண்டொரு மாதங்களுக்கு சட்ட முறைப்படி தீர்மானத்தை நிறைவேற்றி வைத்தால், பொருத்தமாக இருக்கும் என்ற காரணத்தினாலே இதை இங்கே வைத்திருக்கிறோம். இதை நிறைவேற்றித் தர கடமைப்பட்டிருக்கிறேன், பாராட்டுகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள முனிசிபாலிட்டிகளுக்கு 6 மாதத்திற்குள் தேர்தல் நடத்துவதற்கு இங்கே வந்திருக்கும் மசோதா வழிவகை செய்கிறது. இந்த நல்ல நோக்கத்தைக் கொண்ட மசோதாவை நான் வரவேற்கிறேன். ஆறு மாதத்திற்குள்ளே தேர்தல் நடக்கும், தற்போதைய ஆயுட் காலத்தை நீடித்துக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வருவது இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இது மூன்றாவது தடவை, அல்லது நான்காவது தடவை என்று நினைக்கிறேன். ஆனால் இதுவரை பின்பற்றி வந்தது போல மறுபடியும் ஒத்தி வைக்க மாட்டார்கள் என்று உறுதியாக நம்புவதன் காரணமாக நான் ஆதரிக்கிறேன், பாராட்டுகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்

நான் சொல்லக்கூடிய ஒரு அம்சம் முனிசிப்பாலிட்டிகளிலே முஸ்லீம்கள் கணிசமாக வாழக்கூடிய இடங்களிலே முஸ்லீம்கள் சேர்மென்களாக வரக் கூடிய வாய்ப்பில்லை. திருச்சியை எடுத்துக்கொண்டால், அங்கே 20 சதவீதம் முஸ்லீம்கள் இருக்கிறார்கள். அங்கே முஸ்லீம் ஒருவர் சேர்மேனாக வந்து 40 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இதற்கு ஏதாவது ஒரு வழி செய்து, ஏதாவது 'ரொட்டேஷன்' கன்வென்ஷன் என்ற முறையிலேயாவது, ஒரு வாய்ப்பளிக்க வேண்டும். 20 சதவீதம் மக்கள் இருந்தும், அவர்கள் 40, 50 வருடத்திற்கு ஒருமுறை கூட சேர்மனாக வரவில்லை என்றால், அது நியாயமில்லை. ஆகவே, அரசு கருணையுள்ளத்துடன் ஒரு கன்வென்ஷன் மூலம், முஸ்லீம்கள்,

மற்றும் இதுபோன்ற பல மதத்தவரும் வரக்கூடியவாறு, குறிப்பாக முஸ்லீம்கள் கணிசமாக வாழக்கூடிய அந்தப் பகுதியிலே முஸ்லீம் ஒருவர் சேர்மேனாக வரக்கூடிய வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முன்பு கவுன்சிலர்கள் தலைவரைத் தேர்ந்தெடுத்தார்கள். இப்போது நேரடித் தேர்வு. நேரடித் தேர்வு இருந்தால், ரிசர்வேஷன் செய்வதிலே தடை இருக்கிறது. இத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை முஸ்லீம்களுக்கு என்று வைப்பதிலே தடையில்லை. ஆகவே, அதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். திருச்சி நகரத்திலே உள்ள ரோடுகள் படு மோசமாக இருக்கின்றன. முன்பும் ஒரு முறை இதைப்பற்றிச் சொன்னேன். முனிசிபாலிட்டியிடத்தில் உள்ள பொருளாதாரத்தைக் கொண்டு அவர்கள் சாலைகளைச் செப்பனிடுவதற்கு 10 வருடங்கள் பிடிக்கும் என்ற நிலை இருப்பதால் விசேஷமாக திருச்சி முனிசிபாலிட்டிக்குத் தொகை கொடுத்து ரோடுகளைப் பழுது பார்க்க உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் வந்த இரண்டு சட்ட முன் வடிவுகளையும் மிக மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். ஆனால் இதை எங்களால் வரவேற்க முடியாது என்பதை அமைச்சரவர்கள் தெரிந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஜனநாயக உணர்வுடையவர்கள் யாருமே இந்தத் தேர்தல்களைத் தள்ளிப் போட்டுக் கொண்டு போவதை வரவேற்க மாட்டார்கள். இப்போது கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவு ஆளுநர் பிறப்பித்த சட்டத்தை சட்டரீதியாக ஆக்குவதற்கு இன்னும் ஒரு 6 மாதத்திற்கு உள்ளாக தேர்தல்கள் நடத்தப்படும் என்ற நிலையில் கொண்டு வந்திருப்பதாக அமைச்சர் சொல்லலாம். ஆனால் நகராட்சிகளுக்கும், சென்னை மாநகராட்சிக்கும், கோயம்புத்தூர் நகராட்சிக்கும், மாநகராட்சி என்ற பெயரில் இப்போது இருந்தாலும், நான்காண்டுகள் தேர்தல் இல்லாமல் ஜனநாயக நிலையில் நிர்வாகம் நடக்கவில்லை என்பதை இங்கே பேசியவர்கள் எல்லாம் பல்வேறு கோணங்களிலிருந்து அவரவர்களுடைய நகர மன்றங்களுடைய அனுபவத்தை வைத்துச் சொன்னார்கள். உண்மையிலேயே மாநிலத்தினுடைய ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, மத்திய அரசிலே மாநிலத்தினுடைய வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து, அதற்கென ஒரு நாள் ஒதுக்கி, இந்த மாநிலத்தோடு தொடர்பில்லாதவர்களாக இருந்தாலும் கூட அதிலுள்ள சில தவறுகளைத் தெரிந்து எடுத்துச் சொல்கிற வாய்ப்பு அளிக்கிற முறை இந்த நாட்டிலே ஜனநாயகம் அல்லது சர்வாதிகாரம் இவைகளில் எது இருந்தாலும் நடைபெற்றிருக்கிறது.



ஆனால், ஜனநாயகம் என்று சொல்லி ஜனநாயகப் போர்வையில் ஒளிந்து கொண்டிருக்கிற இந்த அரசு 3, 4, 5 ஆண்டுகளாக நகர் மன்றம், நகராட்சி இவைகளுக்கெல்லாம் தேர்தல் இல்லாமல், ஜனநாயக முறையில் தேர்தல் நடைபெற்று தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய ஆட்சி இல்லாத நேரத்தில், அவைகளுடைய வரவு-செலவுகளைக்கூட இந்த அவையிலே வைத்து விவாதிக்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் கூட எடுத்துச் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதனுடைய விவரங்கள் அறிவிக்கப்பட வேண்டும். கடையநல்லூரைப் பற்றிச் சொன்னார்கள். அங்குள்ள ஆணையாளர் அவரைச் சிரித்தே அனுப்பிவிட்டார் என்று சொன்னார். சில உறுப்பினர்கள் பாராட்டுகிறார்கள், சிலர் பாராட்டாமல் இருக்கிறார்கள். அந்த ஆணையாளர் சிரிக்கிறார் என்றால், அந்த நகராட்சியில் அவர் சிரிக்கும் அளவுக்கு நிதி நிலை இருக்கிறதா என்று பார்த்தால் அவைகள் தற்போது நரக ஆட்சியாகத்தான் இருக்கின்றன.

சென்னை மாநகரத்திலே, தலைநகரிலே, அத்தனை அமைச்சர்களும் உலா வந்துகொண்டிருக்கக்கூடிய இந்த நகரத்திலே எவ்வளவு சுகாதாரக் கேடுகள் இருக்கின்றன என்பதை நாம் பார்க்க வேண்டும். இவர்கள் எல்லாம் பிற நகரங்களுக்கு எப்போதாவது ஒரு நேரம் வருகிறார்கள். இவர்கள் வருகிறார்கள் என்று சொன்னவுடனேயே சுகாதார முறைப்படி தூத்து போட்டு, சுண்ணாம்பு அடித்து, பார்ப்பதற்கு நீட்டாக வைத்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 7-30)

நம்முடைய மாநகராட்சியிலேயே உள்ள சிந்தாதிரிப்பேட்டைக்குச் சில நாட்களுக்கு முன் சென்று பார்க்கும்போது, நரகத்திற்கு இலக்கணம் வேண்டும் என்றால் அங்கே பாருங்கள் என்று சொல்லலாம் என்ற அளவுக்கு அங்கே சாக்கடைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கூட கொசுத் தொல்லை இருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் வசிக்கக்கூடிய பகுதி ஓரளவுக்கு நல்ல வசதியான பகுதியாகத்தான் இருக்கும். கீழ்ப்பாக்கம் என்று சொல்லுகிறார்கள். கீழ்ப்பாக்கம் போன்ற அந்தப் பகுதியிலே இந்த நிலை படு மோசமாக இருக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது.

[1979 மார்ச் 17

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரோடு சிந்தாதிரிப்பேட்டைத் தொகுதிக்குச் சுற்றுப் பயணம் செய்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை என்பதுதான் நான் பார்த்ததில் அறிந்தது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் நகரம் முழுவதும் பாதாள சாக்கடையை அமைக்க முயற்சி எடுக்கிறார்கள் என்று அறிகிறேன். அவர் வெற்றி பெற வாழ்த்துகிறேன். நகரத்தையே பாதாளமாக ஆக்கிவிடக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். (சிரிப்பு) அதைப்போலவே நகரங்கள் புறக்கணிக்கப்பட்டு அலங்கோல நிலையில் இருக்கின்றன. இதற்கான அத்தனை தாக்குதல்களையும் தாங்கிக்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அமர்ந்திருப்பது எங்களுக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது. ஆகவே ஆங்காங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நகர மன்றங்களைத் தோற்றுவித்தால், அவர்கள் தங்களுடைய தேவையைத் தெரிந்து அவர்களுக்கு வேண்டிய நிதியை வேண்டுவதற்கு, பெரிய திட்டங்களை நடத்த அனுமதி வேண்டி அரசை நாடி வருவார்கள். பிறகு அதை அமுல்படுத்துகிற வேலை நடக்கும். ஜனநாயகம் தற்காலிகமாக இந்தியா முழுவதிலும் நிறுத்தி வைக்கப்பட்ட நெருக்கடி காலத்திலே எடுக்கப்பட்ட கொடிய செயலை, ஜனநாயக ஆட்சி வந்த இரண்டாண்டுகளுக்குப் பிறகும் நிறுத்தவில்லையென்று சொன்னால், அதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டும். தேர்தலுக்கு அஞ்சுகிறார்கள், தேர்தல் நடத்துவதால் ஏதாவது வருமோ என்று நடுங்குகிறார்கள். தேர்தலை நடத்துவதில் வேறு எதும் சிக்கல் இருக்கப் போவதில்லை. மாற்றுத் தலைவர் அவர்களே, உங்கள் வழியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் கேட்டுக்கொள்ளுவது, "இனிமேல் இந்த மன்றத்திலே இதற்குக் காலம் நீட்டிக்கிற ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வராத நிலையை ஏற்படுத்த வேண்டும்; இந்தக் காலக் கெடுவிற்குள்ளேயே தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை சமுதாயத்தின் அடித்தளத்திலே, ஆட்சியின் அடித்தளத்திலே கொண்டு வர முயற்சி எடுக்க வேண்டும்" என்று.



1979 மார்ச் 17] [திரு. ம. சங்கரலிங்கம்]

கோளாறிலேகூட தேர்தலை மாற்றுகிறார்கள். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத்தைக் கலைப்பதில்லை. உள்ளாட்சித் துறையானாலும், பஞ்சாயத்தானாலும், பஞ்சாயத்து யூனியனாலும், நகராட்சிகளானாலும், 3 ஆண்டுகள், 5 ஆண்டுகள் என்று பதவிக் காலம் இருந்தாலும், சில இடங்களில் சில சூழ்நிலை காரணமாக தேர்தலை நடத்த முடியவில்லையென்றால், அவர்களுடைய பதவிக் காலத்தை 2 ஆண்டுகள் 3 ஆண்டுகள் என்று நீட்டித்தாலும், அதற்கு முன்னாலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களேதான் தொடர்ந்து பதவியில் இருக்கிறார்கள். ஆகவே இங்கேயும் தேர்தலை நடத்துவதில் கஷ்டம் என்றால், 1976 ஆம் ஆண்டில் யார் யார் இருந்தார்களோ அவர்களையெல்லாம் மீண்டும் கொண்டு வந்து வைத்துவிட்டு கொஞ்ச நாளைக்கு நீட்டிக்கலாம். ஆட்சிக்கு வந்ததிலிருந்து 6 மாதத்திற்குள் தேர்தலை நடத்தியிருக்க வேண்டும், அல்லது முன்பு இருந்தவர்களைக் கொண்டு வந்து வைத்திருக்க வேண்டும். காலம் தாழ்த்தத் தாழ்த்த முன்பிருந்தவர்களே மீண்டும் வருவார்கள். ஆட்சிக்கு வந்த 6 மாதத்திற்குள் தேர்தலை நடத்தியிருந்தால், ஒருவேளை அந்த நிலைமை இல்லாமல் இருந்திருக்கும். ஆகவே காலம் தாழ்த்தித் தேர்தல் மூலம் வருவதைவிட அரசே நியமிக்கலாம். அப்படி நியமிக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. தேர்தலை நடத்த வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன்.

இப்போது இருக்கக்கூடிய குழுக்களுக்கு அதிகாரம் இல்லை. மாநகராட்சிக்கு இருக்கக்கூடிய அதிகாரம் கூட மிகக் குறைவு. அவரவர்கள் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கிற நிலையிலே இல்லை. ஆகவே வெகு சீக்கிரத்தில் அந்த அதிகாரத்தை வழங்க திருத்தப்பட்ட சட்டம் இங்கே கொண்டுவரப்பட வேண்டும். மாநகராட்சியினுடைய தலைவர் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் மீது நம்பிக்கையில்லை என்றால் எப்படித் தீர்மானம் கொண்டு வருவது என்ற வழிமுறை, பணத்தை எவ்வாறு செலவு செய்வது, அதிக நிதியை எவ்வாறு திரட்டுவது, மாநில அரசு வழங்குகிற நிதியை எவ்வாறு செயல்படுத்துவது என்பது போன்ற வழிமுறைகள் எல்லாம் இப்போதே அமைக்கப்பட வேண்டும். மத்திய அரசிலே வழங்கக்கூடிய நிதி முறையைத் திருத்தியமைக்க வேண்டும் என்று நிதியாணைக் குழுவின் வழியாக நாம் கேட்கிறோம். அதைப் போலவே மாநில அரசிலிருந்து நேர்மையான முறையில் நிலையான நிதியை மாநகராட்சிகளுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும், உள்ளாட்சிகளுக்கும் அளிக்கிற முறையை இந்த

அரசு மிக விரைவிலே அறிவிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு தாமோதரன் அவர்கள் சொன்னது போல, பல அறிக்கைகள் இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பல அறிக்கைகள் வெளியாக இருக்கின்றன. இருந்தாலும் அவைகளையெல்லாம் தேர்தல் காலத்திற்கு உள்ளாகவே இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அறிவிக்க வேண்டும் அப்படியானால்தான் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறவர்கள் யாராக இருந்தாலும், அந்த நெறிமுறைகளுக்கு உட்பட்டு மக்களுக்கு நன்மையைச் செய்ய வாய்ப்பு இருக்கும்.

நெருக்கடி காலத்திலே ஏன் இந்த நகராட்சிகள் கலைக்கப்பட்டன என்று பார்த்தால், அப்போதிருந்த கட்சியினுடைய செல்வாக்கைக் குறைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகத்தான் அவை கலைக்கப்பட்டன. நகர மன்றத் தலைவர் வழியாக, நகர் மன்ற உறுப்பினர்கள் வழியாக இவர்கள் அந்தந்தப் பகுதியிலே செல்வாக்கைப் பெற்றிருக்கிறார்கள்; அவர்களை அகற்ற வேண்டும்; அவர்களுக்கு இருந்த வசதிகளைப் போக்க வேண்டும் என்ற நிலையில்தான் அகற்றப்பட்டன. அப்படி அகற்றப்பட்டு இரண்டாண்டுகள் ஆகிவிட்டது. நகர் மன்றங்களில் வரி விதிப்பின் மூலம் வேண்டாதவர்கள் மீது பழி வாங்குகிற நிலையில் வரியை உயர்த்தியிருக்கிறார்கள். மாநகரத்திற்குள்ளே கூட இப்படி வரி உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பல இடங்களில் குடியிருப்பு வீடுகளுக்கும், வாடகை வீடுகளுக்கும் வரி விதிப்பிலே மாறுபட்ட முறையைக் கையாளுகிறோம். ஒரு மாத வாடகையை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வரியாக வாங்குகிறார்கள். குடியிருப்பு வீட்டிற்கு அந்த முறையில் விதிக்காமல் அந்த வீட்டிற்கு இருக்கக் கூடிய வசதியைக் கணக்கிட்டு வரியை விதிக்கிறார்கள். எங்களுடைய கட்சித் தலைவருடைய வீட்டிற்கு நெருக்கடி காலத்திலே 4 மடங்கு வரி கூட்டப்பட்டது. அதற்கு மேல் மேல் முறையீடு செய்து இரண்டரை ஆண்டு ஆகிறது. இதுவரை எந்தத் தீர்ப்பும் வழங்கப்படாமலிருக்கிறது என்பதை ஒரு உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன். இதைப்போல் பல இடங்களில் உள்ளதைச் சுட்டிக்காட்ட முடியும்.

அத்தகைய அநீதிகள் நிறைய நடந்திருக்கின்றன. கொடுக்கப்பட்டுள்ள மேல் முறையீடுகளின் மீது முறையான நடவடிக்கை எடுத்து அவற்றைத்



தீர்க்க வழி செய்ய வேண்டும். ஆகவே ஜனநாயக ரீதியிலே தேர்ந்தெடுக்கப் படக்கூடிய நகர் மன்றங்களை ஏற்படுத்திவிட்டால், அவர்கள் முறையாகச் செயல்பட முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையிலே, இதற்கு முன்னால் வழக்கு இருந்தது என்று சொல்லப்பட்டது. இப்போது தீர்ந்துவிட்டன. தண்டனை கொடுக்கப்பட்டுவிட்டது. இப்போது வார்டு பிரிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அதையும் அறிவித்தாகிவிட்டது. குறைகள் இருந்தால், 15 ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும் என்று சொல்லுகிறார்கள். குறைகள் உள்ளவர்கள் அதை எழுதியனுப்பியிருக்கிறார்கள். உதாரணமாக, 72, 73, 74 ஆகிய வார்டுகளில் 13,000, 11,000, 9,000 வாக்காளர்கள் என்று பிரிக்கப்பட்டிருக்கின்றன. எதிர்ப்பு இருந்தால் தெரிவிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது முறையாக எல்லாக் கட்சியின் சார்பிலும் குறைபாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தால், அந்தக் குறைபாடுகளை இப்போதிருக்கிற நிர்வாகம் நிவர்த்தி செய்ய முடியாவிட்டால், அந்தக் கட்சியைச் சார்ந்தவர்களை அழைத்து, அவர்களோடு விவாதம் செய்து, அவர்கள் சொல்வதிலே நியாயம் இருந்தால், அதை ஏற்று நடத்துவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும். ஆகவே வார்டுகளைப் பிரிப்பதிலே தவறுகள் வர இடம் கொடுக்கக்கூடாது என்பதைச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

நகரங்களில் உள்ள அவல நிலையை உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள், நானும் எடுத்துச் சொன்னேன். மேலும் நான் சொல்ல விரும்பவில்லை. அதைச் சொன்னால், இந்த அரசால் நிவர்த்தி செய்ய முடியாது. ஏனென்றால் பல நூறு நகரங்களைப் பொறுப்பில் ஏற்றுக் கொண்டிருக்கிற அரசு பல தொல்லைகள் இருக்கும்போது, இவற்றையும் பார்க்கலாம் என்று சொல்லுகிற நிலைக்குத்தான் ஆளாகும். ஆகவே விரைவிலேயே ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களில் தேர்தலை வைக்கலாம். சில பகுதிகளில் ஜூன் மாதம் மழை வரும் என்று சொல்லலாம். மாநிலம் முழுவதும் 3 கட்டமாக ஒரே நாளில் எல்லா இடத்திற்கும் ஊராட்சி, பஞ்சாயத்து யூனியன் ஆகிய எல்லா இடத்திற்கும், எந்தத் தவறும் வராத நிலையில் தேர்தலை நடத்த அரசு உறுதியெடுத்துக்கொள்ள வேண்டும். மீண்டும் நீட்டுவதாகச் சொல்லி மீண்டும் ஒரு சட்ட முன்வடிவு வராத நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லி, இந்த சட்ட முன்வடிவை நான் ஆதரிக்க முடியாத நிலைக்கு வருந்துகிறேன் என்று சொல்லி, அமைகிறேன்.

[1979 மார்ச் 17

(பிற்பகல் 7-40)

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த சட்டத் திருத்தங்களின் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய எண்ணங்களை அவையிலே எடுத்து வைத்திருக்கிறார்கள். இறுதியாக உரை நிகழ்த்திய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், தேர்தலை இன்னும் தள்ளிப்போடக் கூடாது, இது குறித்து நீங்கள் கொண்டு வரக்கூடிய இறுதிச் சட்டத் திருத்தமாக இதுதான் இருக்க வேண்டும், இதற்கு மேலேயும் தள்ளக் கூடாது என்பதனை மிகத் தெளிவாக, திட்டவட்டமாக எடுத்துவைத்து வலியுறுத்தியிருக்கிறார்கள். அவர்கள் இன்னொரு யோசனையைக்கூடத் தெரிவித்தார்கள். அப்படித் தேர்தல் நடத்த காலதாமதம் ஆகுமானால், 1976-ல் இருந்த தலைவர்களை ஆங்காங்கு இருந்தவர்களை மீண்டும் நியமிக்கலாம் என்றும் சொன்னார்கள். வண்டியை ரிவர்ஸ் கீரிலே ஓட்டுகின்ற யோசனை அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் கூட ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். எப்படி சட்டமன்றம் கலைக்கப்பட்டிருந்த நேரத்தில், மாநிலத்தினுடைய வரவு-செலவுத் திட்டங்கள் நாடாளுமன்றத்திலே வைக்கப்பட்டனவோ, அதுபோல அனைத்து நகராட்சிகளுடைய நிதிநிலை அறிக்கைகள் பேரவையிலும், மேலவையிலும் வைக்கப்பட்டு விவாதிக்கப்படலாம் என்று சொன்னார்கள். நூற்றுக்கு மேற்பட்ட நகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள்—374 இருக்கின்றன—ஆகியவற்றின் நிதிநிலை அறிக்கைகளை எல்லாம் நாம் அவையிலே வைத்து, அவைகளைப் பற்றி விவாதிப்பது என்பது எந்த அளவுக்குக் காரிய சாத்தியம் என்பதனை நாம் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். பல்வேறு உறுப்பினர்கள் அங்கங்கே இருக்கின்ற நிலைமைகளை, ஒன்றியங்களுடைய நிதிநிலை அறிக்கையைப்பற்றித் தெரிந்துகொள்வதற்கு அல்லது அவர்களுக்கு நிதிநிலை அறிக்கையை அனுப்பி வைப்பதற்கு அல்லது தெளிவுபடுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை வேண்டுமானால் செய்ய முயற்சிக்கலாம். அதை உறுப்பினர்கள் நேரடியாகப் பெற்றுக்கொண்டு, தெரிந்து கொண்டு அதுபற்றிய கருத்துக்களை இந்த அவையிலே சொல்லலாம். அப்படி எடுத்துரைக்க உகந்ததாக இருக்கும் என்ற வகையிலே ஒரு நல்ல ஏற்பாட்டை அரசு செய்யலாம் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1979 மார்ச் 17] [திரு. கா. காளிமுத்து]

திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் இன்னும் பல ஆக்கபூர்வமான யோசனைகளை வழங்கியிருப்பதற்காக என் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் தெரிவித்ததுபோல், பல நகராட்சிகளின் சட்ட திட்டங்கள், உள்ளாட்சி மன்றங்களுடைய சட்ட திட்டங்கள் எல்லாம் நீண்ட காலத்திற்கு முன்னாலே வகுக்கப்பட்டவை. காலத்தினுடைய நிலைமைகளுக்கு பதில் சொல்ல முடியாத அளவுக்கு அதில் பல்வேறு சட்டங்கள் இப்போது இருக்கலாம். அவைகளையும் பரிசீலித்து அதில் பல்வேறு திருத்தங்கள் செய்வதற்கு தேர்தலுக்கு முன்னால் இருக்கின்ற இந்தக் காலத்தைப் பயன்படுத்தி செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்கள். அதையும் அரசு பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. வகாப் அவர்கள் தெரிவிக்கின்ற போது, 6 மாதம் என்று அவகாசம் கேட்கிறீர்கள். இதுபோல் 2, 3 ஆறு மாதங்கள் காலகெடு கேட்டுவிட்டிருக்கிறீர்கள் என்றும் சொன்னார்கள். அதிலிருந்து என்ன தெரிகிறது? ஒருவேளை அரசு தேர்தலை நீண்ட காலத்திற்குத் தள்ளிப்போட வேண்டுமென்று மனதார விரும்பியிருந்தால், 2 வருடம் அல்லது 2½ வருடம் என்று மொத்தமாகவே கேட்டிருக்கலாம். இதய சுத்தியோடு ஆறு மாதத்திற்குள் நடத்த வேண்டுமென்ற முறையிலேதான் அரசு நினைக்கிறது. அதற்கேற்ற வகையிலே தேர்தல் ஆயத்த வேலைகள் முடியாத காரணத்திலேதான், இந்தக் கால நீட்டிப்பு தேவைப்பட்டது என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நாம் சில பல லட்ச ரூபாய்களைச் செலவழித்து, புதிய வாக்காளர் பட்டியல்களைத் தயாரிக்கிறோம் என்றால், இது எல்லாம்தான் தேர்தலை நீண்ட காலத்திற்கு ஒத்திவைத்திருப்பதற்குக் காரணம். அரசு வேண்டுமென்று ஒத்திவைக்க வேண்டும் என்று எண்ணவில்லை.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துத் தெரிவித்தது போல, சென்னை மாநகராட்சியை 150 வட்டங்களாகப் பிரிக்கின்ற வேலைகளை எவ்வளவு விரைவுபடுத்தி நாம் முடிக்கிறோம், அது குறித்து மறுப்புரைகளை எல்லாம் நாம் கேட்கிறோம் என்றால், இதெல்லாம் மாநகராட்சித் தேர்தலை நன்கு நடத்த வேண்டும் என்ற எங்கள் ஆர்வத்தைத்தான் காட்டுகிறது என்று நான் சொல்வேன். அதை நீண்ட காலத்திற்கு தள்ளிப் போடுகின்ற நிலையிலே அரசு இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. வகாப் அவர்கள் தெரிவித்தது போல, இஸ்லாம் மக்கள் பெரும்பான்மையினராக இருக்கின்ற இடத்தில், திண்டுக்கல் போன்ற இடங்களில், அந்த சமூகத்தினருக்கும் வாய்ப்பு அளிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். ஏற்கெனவே சில மரபுகள் அதற்காக இருந்தன என்றும் குறிப்பிட்டார்கள். அந்தமாதிரி இடங்களில் தலைவர் பதவி கிடைக்க ஏற்ற வாய்ப்புகளை அளிக்க அரசு பரிசிலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாற்றுத் தலைவர் அவர்களே, கணிசமான அளவுக்கு முஸ்லீம் சமூகத்தினர் இருக்கின்ற இடங்களில் அப்படிப்பட்ட வாய்ப்புகளை அளிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு அங்கத்தினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் மூன்று கட்டங்களாகத் தேர்தல் நடக்குமா என்று கேட்டார்கள். அது ஒரே மாதத்திற்குள் நடக்குமா என்றும் கேட்டிருக்கிறார்கள். மாநிலம் முழுவதும், நகராட்சியினுடைய தேர்தல், ஒன்றியத்தினுடைய தேர்தல், ஊராட்சியினுடைய தேர்தல் இவைகளையெல்லாம் மூன்று கட்டங்களாக முடிக்க வேண்டும் என்றும் மற்ற பொதுத் தேர்தல்கள் எப்படி நடத்தப்படுகின்றதோ அந்த அடிப்படையில் ஒரே மாதத்தில் முடிக்க வேண்டும் என்ற அளவில்தான் அரசும் திட்டமிட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது வெறும் கண்துடைப்பு என்று சொன்னார்கள். அந்த அளவுக்குத்தான் நிலைமைகள் இருக்கின்றன என்றுதான் குறிப்பிட்டார்கள். ஆனால் உண்மையிலேயே அந்த ஆலோசனைக் குழு நிச்சயமாக ஓரளவுக்காவது மக்களுடைய துயரைத் துடைக்கப் பயன்படவேண்டும் என்ற வகையிலேதான் நியமிக்கப்பட்டது. அது பல்வேறு இடங்களில் பல்வேறு திட்ட வேலைகளை நிறைவேற்றியிருக்கிறது. சில இடங்களில் திட்ட வேலை நிறைவேற்றப்பட வாய்ப்பு இல்லாமல் இருக்கலாம். அந்தக் குழுவை நியமித்ததன் நோக்கம், மக்கள் பிரதிநிதிகள் இல்லாத சூழ்நிலையில் இப்படிப்பட்ட ஆக்கப் பணிகள் நடைபெறவேண்டும் என்பதுதான். உறுப்பினர் அவர்கள் சிதம்பரம் நகராட்சியை ஒட்டி சில கருத்துக்களைச் சொன்னார்கள். தெரு விளக்குகள் சரியாக எரியவில்லை என்ற குறைபாடுகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அது பெரும்பாலும் உள்ள நகராட்சிகளுக்குப் பொருந்தும். அந்தக் குறைபாட்டை நீக்குவதற்கு



எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதனை இன்றைய தினம் மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள்கூட தெரிவித்ததாக எனக்கு நினைவு. அங்கே பல்புகளை வாங்கிக்கொடுக்கின்ற நிலைமைகள் இல்லாததனாலேயும், மின்சார ஊழியர்கள் வந்து பார்த்து அவைகளைப் பொருத்துவதற்கு வாய்ப்பு ஏற்படாத நிலைமைகளாலும் அங்கு விளக்குகள் எரியாமல் இருக்கின்றன. இந்தச் சூழ்நிலைகள்தான் அதற்குக் காரணம். அங்கத்தினர் அவர்கள் ஆலயத்திற்குப் பக்கத்திலே விளக்குகள் எரியவில்லை, சமூக விரோதிகள் அந்த இடத்தைப் பயன்படுத்துகின்றார்கள் என்று சொன்னார்கள். சென்னையிலேகூட அப்படிப்பட்ட இடங்கள் இருக்கின்றன. இப்படிப் பல இடங்கள் இருக்கின்றன. விளக்குகள் எரியாத காரணத்தினாலேயே, சமூக விரோதிகள் இந்த இடத்தைப் பயன்படுத்திக்கொள்கிறார்களா அல்லது சில இடங்களில் எரிகின்ற விளக்குகளைக்கூட உடைத்துவிட்டு தங்களுடைய சமூக விரோத காரியங்களுக்காக அந்த இடங்களைப் பயன்படுத்திக்கொள்கிறார்களா என்ற சூழ்நிலைகளும் இருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசுகிறபோது, கொசுத் தொல்லையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதை வேடிக்கையாகக் கூட சொன்னார்கள். கொசு என்பது ஒரு தேசியப் பறவையாக ஆகிவிட்டது என்றுகூட சொல்வதுண்டு என்று சொன்னார்கள். காரணம் இதுதான். கொசுத் தொல்லையை ஒழிக்க மருந்து தெளிக்கிறோம். சென்னையில் நானும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் பல பகுதிகளைப் போய்ப் பார்த்திருக்கிறோம். ஒரு மருந்தை அடிக்கிறோம் என்றால் அந்த மருந்து முதன்முறை பயன்படுகிறது. அந்த மருந்திலிருந்து தப்பித்துக்கொண்டு வாழ்கின்ற கலையை அந்தக் கொசுக்கள் எப்படியோ கற்றுக்கொள்கின்றன. அடுத்த முறை அடிக்கும்போது அவைகள் தப்பித்துக் கொள்கின்றன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்த மருந்தை மாற்றியாக வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. இது நகரம் முழுவதற்கும் பெரும் அளவுக்குச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. பெரும்பாலும் தொல்லையைக் குறைப்பதற்கு வழியில்லாத நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. இருந்தாலும், அந்த நிலையை மாற்றுவதற்குரிய முறைகளை, இன்னும் தீவிரப்படுத்தி நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் மேற்கொள்ள அரசு ஏற்பாடு செய்யும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் இங்கே ஒரு கருத்தை அழுத்தந்திருத்தமாகச்

சுட்டிக் காட்டினார்கள். நகராட்சி ஒன்றியங்களிலே, ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற பள்ளிகளை எல்லாம் கல்வித் துறையிடம் ஒப்படைத்து விடுங்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் என்று தெரிவித்தார்கள். ஒப்படைப்பதாக இருந்தால், ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. அதைக் கைவிடுவதாக இருந்தால், நேராகவே சிந்தித்துக் கொடுத்து விடலாம். அதை எப்படி நன்றாக நடத்துவது என்கின்ற சூழ்நிலைக்கு வருகின்றபோதுதான், அதைப்பற்றிக் கொஞ்சம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அந்த வகையிலே ஆழ்ந்து சிந்திக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. திராவிடமணி அவர்கள் ஒரு சின்ன கதாகாலட்சேபத்தையே நடத்தினார்கள். ஆணையாளர்பற்றியும் பேசினார்கள். அந்த விவரங்களையெல்லாம் கூட எடுத்துத் தெரிவித்தார்கள். அவர்கள் என்ன என்ன சொன்னார்கள் என்பதை அப்படியே சொன்னார்கள். சங்கரன்கோயில், புளியங்குடி, கடையநல்லூர் போன்ற அவருக்கு அனுபவமுள்ள நகராட்சிகளைப்பற்றியெல்லாம் சுட்டிக்காட்டினார்கள். அந்த நகராட்சிகளைப் பற்றி விளக்கமாகப் பேசினார்கள். அங்குள்ள குறைபாடுகளை நீக்க அரசு நிச்சயமாக முயற்சி மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கல்வித் துறையின் ஆணைகள் கூட அங்கே செயல்படுத்தப்படாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். திரு. முத்துசாமி அவர்களும், அதையே சொன்னார்கள். அதைப்பற்றி நான் இந்த அவையிலே கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பதில் சொல்லியிருக்கிறேன். கல்வித் துறை ஆணைகள் பற்றி விளக்கம் கேட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. இடையிலே இருக்கின்ற போக்குவரத்துக் காரணமாக காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. இரண்டு துறைகளும் இணைந்து வெகு சீக்கிரத்தில் அதைப்பற்றி முடிவு செய்து, இந்தமாதிரிக் காலதாமதம் ஏற்படாத அளவுக்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. முத்துசாமி அவர்கள் கோவை மாநகராட்சி பற்றிக் குறிப்பிட்டார்கள். கோவை மாநகராட்சி குறித்த சட்ட முன்வடிவு உருவாகிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் தெரிவித்ததுபோல், குடியரசுத் தலைவர் அவர்கள் ஒப்புதலுக்கு,



அதன் செயற்குறிப்பு செல்லவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது வந்தபிறகு, மாநகராட்சித் தேர்தல் நிச்சயமாக அங்கே நடைபெறும் என்பதையையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பல்வேறு யோசனைகள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இனிமேல் இந்த மாதிரிச் சட்ட முன்வடிவு வரக்கூடாது, இப்படி ஒரு கால நீட்டிப்பு எடுத்துக்கொள்ளக்கூடாது என்று தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை வராது என்கின்ற அளவுக்கு நான் உறுதியாக நம்புகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல்லமந்தா அவர்களும், திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும், திரு. முத்துசாமி அவர்களும் சுகாதார ஊழியர்களைப்பற்றிப் பல்வேறு கோரிக்கைகளை எடுத்துச் சொன்னார்கள். அதில் நல்வாழ்வுத் துறையும் தொடர்பு கொண்டிருக்கிறது. ஆக இந்த இரண்டு துறைகளும் கலந்து பேசி அவர்களுக்குரியவைகளைச் செய்ய அரசு முயற்சி மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜூன் மாதத்திலேயே தேர்தல் நடத்தப்படும், அதற்கான ஆயத்தங்களை அரசு செய்துகொண்டிருக்கின்றது என்ற காரணத்தினாலே, இந்தச் சட்டத் திருத்தங்களை அவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 7-50)

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாற்றுத் தலைவரவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள், சென்னை நகரில் உள்ள கொசுக்களை ஒழிப்பதற்காக அடிக்கிற மருந்து, ஒரு முறைக்குப் பிறகு சக்தியற்றதாக இருக்கிறதென்றும், இரண்டாவது முறை அடிக்கும்போது கொசுக்கள் அதிலிருந்து தப்பித்துக்கொள்ளும் நிலை இருக்கிறதென்றும் சொன்னார்கள். எனவே கொசுக்கள் உற்பத்தியாகிற சாக்கடைகளையும், நீர்த்தேக்கங்களையும் அகற்ற என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். கூவம் ஆற்றுக்குப் பக்கத்தில் எம்.எல்.ஏ. ஹாஸ்டல் இருக்கிறது எனவே கொசுக்கள் தொல்லை அங்கே மிக அதிகமாக இருக்கிறது. கூவத்திலேதான் கொசுக்கள் உற்பத்தியாகின்றன. எனவே கூவம் ஆற்று நீரைத் தேங்கவிடாமல் அந்த நீரை பம்ப் செய்து கடலுக்குள் செலுத்த ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தொழிலாளர் நல அமைச்சரவர்கள் பாதாள சாக்கடையைக் கொண்டுவரத் தீவிரமாக இருக்கிறார்கள். அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்போது, முழு நிவாரணம் ஏற்படும்.

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) :** அவை முன் உள்ள பிரச்சினை .

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ர் முன்வடிவு எண் 4/1979 ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** மாற்றுத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1979) நிறை வேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



**(5) 1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1979).**

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முவைடிவு எண் 5/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."
என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1979) நிறை வேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

---

@ 170 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப் பட்டுள்ளது.

1979 மார்ச் 17]

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்):** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(6) 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1979).**

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு @ (சட்ட மன்றப் முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்):** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

@ 172 ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1979 மார்ச் 17]

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1979) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்):** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) :** மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் 19—3—1979, திங்கட்கிழமை, மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-55)

## 7. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

**Nil.**

### *B. Reports, Notifications and Other Papers.*

* 64. The Tamil Nadu Dramatic Performances (Amendments) Bill, 1979 (L.A. Bill No. 26 of 1978), as passed by the Assembly.

* 65. The Tamil Nadu Catering Establishments (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 40 of 1978), as passed by the Assembly.

* Circulated to all M.L.Cs. on 16—3—1979.

## இணைப்பு I.

[94 ஆம் பக்கத்தில் இனம் 5 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 11 of 1979

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Act,* 1949.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Act, 1979.

2. *Amendment of the long title to Tamil Nadu Act XXIX of* 1949.—In the long title to the Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Act, 1949 (Tamil Nadu Act XXIX of 1949) (hereinafter referred to as the principal Act), the words " the continuance during a limited period of " shall be omitted.

3. *Amendment of the preamble to Tamil Nadu Act XXIX of* 1949.—In the preamble to the principal Act, the words " the continuance during a limited period of " shall be omitted.

4. *Amendment of section* 1, *Tamil Nadu Act XXIX of* 1949.—In section 1 of the principal Act,—

(i) in the marginal heading, for the words " Short title, extent, commencement and duration ", the words " Short title, extent and commencement " shall be substituted ;

(ii) in sub-section (1), the brackets and words " (Temporary Powers) " shall be omitted ;

(iii) in sub-section (3), the words, figures and letters " and shall remain in force up to and inclusive of the 25th January 1979 " shall be omitted ;

(iv) sub-section (4) shall be omitted.



5. *Construction of reference to " Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Act ".*—Any reference to " Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Act " in any Act or in any rule, notification, proceeding, order, regulation, by-law or other instrument made or issued under such Act shall be construed as reference to " Tamil Nadu Essential Articles Control and Requisitioning Act ".

6. *Repeal.*—The Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Ordinance, 1979 (Tamil Nadu Ordinance 4 of 1979), is hereby repealed.

## இணைப்பு II

[109 ஆம் பக்கத்தில் இனம் 5 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 14 of 1979

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu Motor Vehicles Taxation Act,* 1974.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Act, 1979.

(2) Sections 2 and 3 shall be deemed to have come into force on the 1st April 1978.

2. *Amendment of section* 2, *Tamil Nadu Act* 13 *of* 1974.—In section 2 of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974) (hereinafter referred to as the principal Act), clause (1) shall be re-numbered as clause (1-A) of that section and before clause (1-A) as so re-numbered, the following clause shall be inserted, namely:—

" (1) ' fleet operator ' means an operator holding on or after the 1st April 1978, not less than two hundred and fifty stage carriage permits in respect of services other than—

(i) Express Service or,

(ii) service exclusively within Madras Metropolitan Area;".

3. *Insertion of new section 10-B in Tamil Nadu Act 13 of 1974.*—After section 10-A of the principal Act, the following section shall be inserted, namely :—

" 10-B. *Levy of additional surcharge on tax on stage carriages kept or used by fleet operators.*—(1) In addition to the surcharge leviable under section 10-A, the Government may, by notification, from time to time, levy an additional surcharge on the tax mentioned in section 3, on all or any class of stage carriages kept or used by fleet operators, at such rates as may be specified in such notification and different rates may be specified in respect of stage carriages kept or used by fleet operators holding less than seven hundred stage carriage permits and fleet operators holding seven hundred and more stage carriage permits :

Provided that the rate of additional surcharge shall, in no case, exceed 66 per cent of such tax.

(2) A notification under sub-section (1) may also specify the period, not being less than seven days or more than thirty days from the date of publication of the said notification, within which the additional surcharge shall be paid.

(3) A notification under sub-section (1) may be issued so as to have retrospective effect from a date not earlier than the 1st April 1978.

(4) The provisions of this Act and the notifications issued and the rules made thereunder shall, so far as may be, apply in relation to the levy of additional surcharge under sub-section (1) as they apply in relation to the levy of the tax mentioned in section 3 subject to the modification that the additional surcharge levied under sub-section (1) shall be paid in one lump sum.".

4. *Special provision in regard to the collection of additional surcharge on tax on stage carriages kept or used by fleet operators for the year commencing on the 1st April 1978 and ending with the 31st March 1979.*—Notwithstanding anything contained in the principal Act or in this Act, the additional surcharge on tax on stage carriages kept or used by fleet operators, due under section 10-B of the principal Act as amended by this Act for the year commencing on the 1st April 1978 and ending with the 31st March 1979 shall be paid in four equal monthly instalments on or before the last day of each of the four months immediately following the date of publication of this Act in the *Tamil Nadu Government Gazette.*



5. *Certain contraventions, etc., not to be offences.*—Notwithstanding the retrospective operation of sections 2 and 3 of this Act, no contravention of, or no failure to comply with any of the provisions of the principal Act as amended by those sections or any rule made or notification issued thereunder shall render any person guilty of any offence if such contravention or failure—

(i) relates either to any provision inserted in the principal Act by any of the said sections, or to any existing provision thereof, as amended by any of the said sections, and

(ii) occurred on or after the 1st April 1978 and before the date of publication of this Act in the *Tamil Nadu Government Gazette.*

I certify that this is a Money Bill.

Fort St. George,
Madras-9.

Dated 14th March 1979.

MUNU ADHI,
*Speaker,*
*Tamil Nadu Legislative Assembly.*

இணைப்பு III

[124 ஆம் பக்கத்தில் இனம் 5 (4)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill 4 of 1979.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Act,* 1976.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Amendment Act, 1979.

(2) It shall be deemed to have come into force on the 30th day of September 1978.

2. *Amendment of section* 4, *President's Act* 28 *of* 1976.—In clause (*a*) of sub-section (3) of section 4 of the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Act, 1976 (President's Act 28 of 1976) (hereinafter referred to as the principal Act),—

(i) for the words "for a period of two years and three months", the words "for a period of three years and three months" shall be substituted ;

(ii) in the first proviso, for the words "the said period of two years and three months", the words "the said period of three years and three months" shall be substituted.

3. *Repeal.*—(1) The Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Second Amendment Ordinance, 1978 (Tamil Nadu Ordinance 11 of 1978), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.



இணைப்பு I

[163 ஆம் பக்கத்தில் இனம் 5 (5)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 5 of 1979.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Act,* 1975.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Amendment Act, 1979.

(2) It shall be deemed to have come into force on the 30th day of September 1978.

2. *Amendment of section* 3, *Tamil Nadu Act* 39 *of* 1975.—In clause (*a*) of sub-section (3) of section 3 of the Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Act, 1975 (Tamil Nadu Act 39 of 1975), for the words "for a period of three years and three months", the words "for a period of four years and three months" shall be substituted.

3. *Repeal.*—(1) The Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Second Amendment Ordinance, 1978 (Tamil Nadu Ordinance 12 of 1978). is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.

## இணைப்பு V

[164 ஆம் பக்கத்தில் இனம் 5 (6)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### L.A. Bill No. 6 of 1979.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Madras City Municipal Corporation Act,* 1949.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras City Municipal Corporation (Amendment) Act, 1979.

(2) It shall be deemed to have come into force on the 27th November 1978.

2. *Amendment of section 55-B, Tamil Nadu Act IV of* 1919.—In section 55-B of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919) hereinafter referred to as the principal Act), in sub-section (1),—

(i) for the words "within a period of four years", the words "within a period of four years and six months" shall be substituted;

(ii) in the second proviso, for the words "not exceeding six months", the words "not exceeding three months" shall be substituted.

3. *Repeal.*—(1) The Madras City Municipal Corporation (Second Amendment) Ordinance, 1978 (Tamil Nadu Ordinance 18 of 1978), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the pricipal Act as amended by the said Ordinance shall be deemed to have been done or taken under the principal Act as amended by this Act.

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

---

திங்கட் கிழமை, 1978 மார்ச் 19.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Christian Cemeteries*

* 210-A *Q.*—Thiru A. BALASUBRAMANIAM (on behalf of Thiru D. V. D' MONTE): Will the Hon. Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are aware of the descreation and vandalism committed in Christian cemeteries in the City ;

(*b*) if so, the steps taken to protect these privileged places from anti-social elements;

(*c*) whether any specific police station or officer has been made responsible for the protection of the said cemeteries ; and

(*d*) if so, whether any report has been submitted to the Government ?

கிருத்துவ இடுகாடுகள்

திரு. ஆ. பாலசுப்பிரமணியம் (திரு. டி. வி. டி மான்டி சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மாநகரில் உள்ள கிருத்துவ இடுகாடுகளில் அவற்றின் புனிதத் தன்மைக்குக் கேடு விளைவிக்கும் செயல்கள், அழிவு வேலைகள் செய்யப்பட்டது குறித்து அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், சமூக விரோதிகளிடமிருந்து இந்த புனிதப் பகுதிகளைக் காப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

(உ) மேற்சொன்ன இடுகாடுகளைக் காக்கும் பணி தனிப்பட்ட காவல் நிலையத்திடம் அல்லது அதிகாரி எவரிடம் மேலும் ஒப்படைக்கப்பட்டுள்ளதா?

(எ) ஆம் எனில், அரசுக்கு அறிக்கை ஏதும் அனுப்பப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்):** (அ), (இ), (உ) & (எ) 1977, ஏப்ரல் திங்களில், கீழ்பாக்கம் கிருத்துவ இடுகாட்டில் ஆடு மாடுகளின் தொல்லை, அவைகளை மேயவிடுதல் போன்ற புகார் ஒன்று கொடுக்கப்பட்டது. காவல் துறையினரின் ரோந்துப் பணிகளுக்கு உடனடியாக ஏற்பாடு செய்யப்பட்டது. தொல்லை விளைவித்த 14 பேர்களுக்கு எதிராக சிறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட ஒவ்வொருவருக்கும் 10 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அந்தப் பகுதியைத் தொடர்ந்து விழிப்புடன் கண்காணித்து, தொல்லைகள் ஏதும் நடைபெறாமல் தடுக்கும்படி கே-4 அண்ணாநகர் காவல்நிலைய இன்ஸ்பெக்டருக்கு காவல்துறை கமிஷனர் ஆணை பிறப்பித்துள்ளார். மாநகரில் உள்ள பிற கிருத்துவ இடுகாடுகளில் அவற்றின் புனிதத் தன்மைக்குக் கேடு விளைவித்ததாகக் காவல்துறைக்குப் புகார் ஏதும் வரவில்லை. சென்னை காவல்துறை கமிஷனர் இது குறித்து அரசுக்கு அறிக்கை எதையும் அனுப்பவில்லை.

### *Compulsory Retirement*

*210-B. *Q*.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether the Central Government have issued any guidelines to the State Government that the Officers, who were compulsorily retired during the Emergency should be reinstated in Service and enquiry should be conducted on the basis of new procedures against Officers on whom any charges were framed; and



(*b*) if so, whether these guidelines will be placed on the table of the House?

### கட்டாய ஓய்வு

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகின்றனா—

(அ) நெருக்கடி நிலை காலத்தில் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்ட அதிகாரிகளை திரும்பவும் வேலையில் சேர்த்துக் கொண்டு, அவர்கள் மீது குற்றம் ஏதேனும் சுமத்தப்பட்டு இருந்தால், புதிய விதிமுறைகளின் அடிப்படையில் விசாரணை நடத்தவேண்டும் என்று, மத்திய அரசு, மாநில அரசுக்கு வழிமுறைகள் எவையேனும் தெரிவித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அவ்வழிமுறைகள் அவையில் வைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்):** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டதாகச் செய்தித் தாளில் பார்த்தேன். நெருக்கடி காலத்தில் கட்டாய ஓய்வு வழங்கி, அதை ஏற்றுக்கொள்ளாமல் அப்பீல் செய்துள்ளவர்கள் மீதுள்ள வழக்குகளை விசாரிக்க ஒரு நல்ல நெறிமுறையை உருவாக்கி, மத்திய அரசு மாநில அரசுக்கு அனுப்பியிருக்கிறது. சில இடங்களில் கமிஷன் கூட வைக்கப்பட்டிருக்கிறது. அந்த நெறி முறைகளுக்கு உட்பட்டுத் தான் விசாரணை செய்ய வேண்டுமென்று சொன்னதாகப் பத்திரிகையில் நான் பார்த்தேன். அத்தகைய தகவல் ஏதாவது இந்த அரசுக்கு வந்துள்ளதா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** கட்டாய ஓய்வு பெற்றவர்களைப் பொறுத்தவரை, அவற்றை நடைமுறைப் படுத்துவதற்கான வழிமுறைகளை இப்பொழுது மத்திய அரசு நமக்குத் தெரிவித்துள்ளது. கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டவர்கள் அரசியல், தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி போன்ற

மிகக் கடுமையான காரணங்களால் கட்டாய ஓய்வு அளிக்கப் பட்டிருந்தால், உசிதமான ஒரு குழுவின் மூலம் அவர்களுடைய முறையீடுகளைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இத்தகைய அரசியல், தனிப்பட்ட காழ்ப்புணர்வின் காரணமாக ஏற்கெனவே செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டு அவர்கள் மீண்டும் மனுச் செய்திருந்தால், அவைகளை சம்பந்தப்பட்ட துறையே மறு ஆய்வு செய்து முதலமைச்சர் அவர்களுடைய பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்று 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4 ஆம் நாள் வெளியிட்ட அரசாணையில் தெளிவாக விளக்கியிருக்கிறோம். அந்த அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**திரு. ம. சங்கரலிங்கம்:** இந்த அடிப்படையில் மேல் முறையீடு செய்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை? எத்தகைய குழுவினரால் அவர்களுடைய விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப் பட்டன? எத்தனை முறையீடுகள் முதலமைச்சர் அவர் களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** அவசர நிலை காலத்தில் கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டிருந்தவர்களிடமிருந்து மேல் முறையீடு என்ற அளவிலே ஏற்கெனவே இருந்த ஹை லெவல் கமிடிக்கு 417 முறையீடுகள் வந்தன. அவற்றில் 398 முறையீடுகள் மீது முடிவுகள் எடுக்கப்பட்டன. மிச்சம் இருப்பது 19 தான். 1978 ஆம் ஆண்டு ஜூலை 7 ஆம் நாள் வெளியிட்ட அரசாணையின்படி, அவர்கள் திரும்பவும் முதலமைச்சர் அவர்களுடைய பரிசீலனைக்கு தங்களுடைய முறையீடுகளை அனுப்பியிருக்கிறார்கள். எந்தெந்தத் துறைகளில் அவர்கள் பணியாற்றினார்களோ அந்தந்தத் துறைக்கே அந்த முறையீடுகள் அனுப்பப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு, பிறகு ஒவ்வொரு மனுவின் மீதும் முதலமைச்சர் அவர்கள் இறுதி முடிவு எடுக்கிறார்கள். இது தான் இன்றைக்கு பின்பற்றப்படுகின்ற நடைமுறை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** நெருக்கடி காலத்தில் கட்டாய ஓய்வு அளிப்பதற்கு என்று சில விதிமுறைகள் இருந்தன, 25 வருடம் சர்வீஸ் அல்லது 50 வயது முடிந்திருக்க வேண்டுமென்ற விதி



முறையை வைத்திருந்தார்கள். நெருக்கடி காலத்தில் அரசியல் காழ்ப்புணர்வின் காரணமாக அரசு ஊழியர்கள் பழிவாங்கப் பட்டார்கள் என்று சொன்னதன் காரணமாகத்தான் அதற்கு தனியாக ஒரு குழுவை அமைத்து, விசாரணை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். யார் யார் அவர்களுக்குக் கட்டாய ஓய்வு கொடுத்தார்களோ, யார் யார் அவர்களைப் பழி வாங்கினார்களோ, அவர்களையே கொண்டு ஒரு குழுவை அரசு இப்பொழுது அமைத்திருக்கிறது. நீதிபதிகளைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து அதன்மூலம் விசாரணை செய்வதற்கு அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** கட்டாய ஓய்வு அளிப்பதற்கு ஏற்கெனவே ஒரு விதியைப் பின்பற்றி யிருக்கிறார்கள். அதன்படி 25 வருடம் பணியை முடித்திருந்தவர்கள் அல்லது 50 வயது பூர்த்தியடைந் திருந்தவர்கள் ஆகியோர்களுக்குத் தான் கட்டாய ஓய்வு கொடுப்பது என்பது பொதுவான விதி. அவசர நிலை காலத்தில் அந்தப் பொது விதியின்படி தான் அவர்களுக்குக் கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. இந்த விதிகளை மீறி யாரையும் கட்டாய ஓய்வில் அனுப்பக் கூடாது. அரசியல், தனிப்பட்ட காழ்ப்புணர்வின் காரணமாக மிகக் கடுமையான காரணங்களால் கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டிருந்தால், அவர்களுடைய முறையீடுகளைப் பரிசீலனை செய்யலாம். மத்திய அரசு தெரிவித்த கருத்து இப்படிப்பட்டவர்களுக்காகத் தான். அது சம்பந்தமாக அவர்கள் மேல் முறையீடு செய்ய வேண்டும், திரும்பவும் இறுதி முடிவுக்காக மாண்புமிகு முதலமைச்சருடைய பரிசீலனைக்கு அனுப்பப்பட வேண்டுமென்றுதான் அந்தக் குறிப்பிலே இருக்கிறது. அதன்படிதான் முறையீடுகளை அந்தந்தத் துறைக்கே நாங்கள் அனுப்பி அதன் மீது அந்த முறையீடுகளின் தன்மைக்கு ஏற்றபடி, இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பதில் சொல்லும்போது, 25 வருட சர்வீஸ் அல்லது 50 வயது பூர்த்தியடைந்தவர்கள் ஆகியோருக்குத் தான் அவசர காலத்திலே கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால் அவசர காலத்திலே 50 வயது பூர்த்தி

யடையாதவர்களுக்கும் 25 வருட சர்விஸ் ஆகாதவர்களுக்கும் கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு தண்டபாணி என்ற ஒரு எக்சிகியூட்டிவ் எஞ்சினியர் குடிநீர் வடிகால் வாரியத்தில் அரசியல், தனிப்பட்ட காழ்ப்புணர்வின் காரணமாக பழிவாங்கப்பட்டு இன்றையதினம் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார். அவர் அரசாங்கத்துக்கு முறையீடும் செய்திருக்கிறார். அந்த முறையீட்டின்மீது அரசாங்கத்தில் தற்போது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து 2, 2½ ஆண்டுகள் ஆகியும், இதுவரை எந்தவிதமான உத்தரவும் பிறப்பிக்காமல், அது நீட்டித்துக் கொண்டே போகப்படுகிறது. இப்படி நீட்டித்துக் கொண்டே போகின்ற காரணத்தால், இப்படிப்பட்ட விவகாரங்களிலே அவசரமாகப் பரிசீலனை செய்து அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டுமென்று இலாகாவை அரசு கேட்டுக்கொளுமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** பொதுவாக அரசியல் காழ்ப்புணர்வு, தனிப்பட்ட உணர்வுகளை வைத்து அந்தக் காரணத்தின் அடிப்படையில் கட்டாய ஓய்வு அளித்திருக்கக் கூடாது என்பதை நாம் இன்றையதினம் ஒத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் அதற்காக இந்தப் பாதுகாப்பின் கீழ் எல்லோரும் வர முயற்சிப்பது என்பது ஒரு ஆபத்தான விஷயம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். பொதுவாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியதுபோல், இந்த விதிகளையெல்லாம் தாண்டி 50 வயதும் ஆகாமல், 25 வருட பணிக் காலமும் முடியாமல் இருந்து, அப்படிப்பட்டவர்களைக் கட்டாய ஓய்வு கொடுத்து அனுப்பியிருப்பார்களேயானால், எந்தக் காரணத்திற்காக அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அனுப்பியிருக்கிறார்கள் என்பதை அரசு யோசித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே அரசியல் காரணங்களுக்காகத் தான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று நிரூபணம் ஆகும்போது நிச்சயமாக அரசு அந்த நடவடிக்கைகளை விரைவுபடுத்தி அவர்களுக்கு நீதி வழங்கும்.

**திரு. ப. மாணிக்கம்:** கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக கட்டாய ஓய்வு பெற்றவர்கள் குறிப்பாக கான்ஸ்டபிள்களும் பியூன்களும் முறையீடு செய்தும் எந்தவித நிவாரணம் இல்லாமல் அவர்களின் முறையீடுகள் உயர் மட்டக் குழுவின் பரிசீலனையில்

அவர்களின் முறையீடுகள் உயர் மட்டக் குழுவின் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். மனிதாபிமான அடிப்படையிலாவது அந்தக் காரியங்களை விரைவில் முடிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** நான் ஏற்கெனவே தெரிவித்தேன். உயர் மட்டக் குழுவுக்கு வந்த 417 முறையீடுகளில் 398 முறையீடுகளின் மீது அரசு முடிவு செய்து சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவித்துள்ளது. அதிலே அவர்கள் திருப்திப்படவில்லை என்றால், மீண்டும் முதலமைச்சருக்கு மனுச் செய்துகொள்ளலாம் என்கின்ற கருத்தை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அந்த வகையில் அவர்கள் மனுச் செய்திருப்பார்களேயானால், நிச்சயமாக அந்த மனுக்கள் மீது விரைவாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** நெருக்கடி காலத்தில் கட்டாய ஓய்வு பெற்றவர்களைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்பொழுது விளக்கிக்கொண்டிருக்கிறார்கள். நெருக்கடி நிலைக்குப் பிறகு, 1978ஆம் ஆண்டிலே கட்டாய ஓய்வு எத்தனை ஆசிரியர்களுக்கு, பிற ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது? அவர்கள் செய்திருக்கின்ற மேல் முறையீடுகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** தனிக் கேள்வி கேட்டால், விளக்கமான பதில் தர முடியும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** முதலமைச்சருக்கு மேல் முறையீடு செய்யும் மனுக்களை அதே இலாகாவுக்குத் திரும்ப அனுப்பினால், அது சரியா? அதே இலாகாவினர்தான் அவர்கள் மீது குற்றம் சாட்டி அந்தக் கட்டாய ஓய்வை அளித்திருப்பார்கள். ஆகவே அவர்களிடத்தில் திரும்பவும் அந்த முறையீடுகளை அனுப்பாமல், முதலமைச்சர் அவர்களே தன்னுடைய செயலாளர்களையும் மற்றவர்களையும் வைத்து விசாரணை செய்து மேல்முறையீடு செய்தவர்களையும் நேரில் அழைத்துக் கேட்டு, அதற்கு ஏற்ற முறையில் நீதி வழங்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மேல் முறையீடு களைச் செய்யும்போது, ஏற்கெனவே அந்த மேல்மட்டக் குழு எந்தெந்த இடங்களிலே, சில விஷயங்களைப் புரிந்துகொள்ளாமல் தவறாகச் செய்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிகாட்டிதான் முதலமைச்சருக்கு அனுப்புகிறார்கள். எனவே அதற்கு விளக்கம் கேட்க வேண்டிய பொறுப்பு அரசிடம் இருக்கிறது. ஒரு துறை ஏற்கெனவே முடிவு செய்திருக்கலாம். அந்த முடிவு சரியல்ல, இதெல்லாம் தனிப்பட்ட காரணங்களுக்காகத்தான் செய்யப்பட்டது என்று திரும்பவும் பாதிக்கப்பட்டவர்களே தவறுகளைக் குறிப்பிட்டுச் சொல்லுகின்றபோது, அவர்கள் சொல்லுகின்றவைகளுக்குத் துறை என்ன விளக்கம் தருகிறது என்பதைக் கேட்டு, அதற்குப் பிறகுதான் முதலமைச்சர் அவர்கள் இறுதி முடிவு செய்கிறார்கள்.

(பிற்பகல் 4-10.)

**திரு. ஆ. நல்லசிவன்:** நெருக்கடி நிலைக் காலத்திற்கு முன்பாக, 25 ஆண்டுக் காலப் பணி முடிந்தவர்கள் அல்லது 50 வயதை அடைந்த ஊழியர்கள் என்ற அடிப்படையில் அரசு ஊழியர்கள் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டிருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** அது பற்றிய தகவல் இங்கு இல்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மேல்மட்டக் குழுவிலும் உயர் அதிகாரிகள்தான் இடம் பெற்றிருந்தார்கள். அவர்கள் விசாரணை செய்யும்போதுகூட, இலாக்காவின் விளக்கத்தைக் கேட்டே முடிவெடுத்தார்கள். இதன் காரணமாக இலாக்காவின் முடிவே இறுதியான முடிவாக இருந்துவிட்டது. இனி இந்த நிலைமையில்லாமல் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் சார்பில் வழக்கறிஞர்களையும் வைத்து, தங்கள் குறைகளை மேல்மட்டக் குழுவின் முன் எடுத்துச் சொல்ல வாய்ப்பளிக்கப்படுமா? இது ஒரு நீதி விசாரணை இல்லையென்றாலும், அநீதி நடந்துவிட்டதென்பதை மத்திய அரசே உணர்ந்து இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் குறைகளைத் தீர்ப்பதில் மாநில அரசு எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பது பற்றிய நெறிமுறைகளையும் கூறியிருக்கிறது.





எனவே மேல் மட்டக் குழுவில் ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் முன்னிலையில் பாதிக்கப்பட்டவர்கள் விசாரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பொதுவாக, பாதிக்கப்பட்டவர்கள் இலாக்காவிற்கு மனு அனுப்பினால், அந்த மனுவை உயர் மட்டக் குழு பரிசிலித்து அந்த மனுவின் மீதான முடிவு சம்பந்தப்பட்டவருக்குத் தெரிவிக்கப்படுகிறது. இந்த முறையைத் தவிர்த்து, மேல்மட்டக் குழுவிலே, சம்பந்தப்பட்டவர்களை அழைத்து விசாரணை முறையில் இரண்டு பக்கமும் விளக்கம் கேட்டு முடிவு செய்தால்தான், உண்மையிலேயே நீதி வழங்கப்பட்டதாக ஏற்படும் என்பதால், அரசு இந்தக் கருத்தை ஏற்று, செயல்பட முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** நிருவாக ரீதியாக நடவடிக்கை எடுப்பது என்பதும், அந்த நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்கள் முறையிடும்போது, அவற்றின்மீது முடிவெடுப்பது என்பதும் அரசாங்கத்தின் உரிமைகளாகும். எனவே உயர் மட்டக் குழுவையே ஒரு வழக்கு மன்றத்தைப் போல் அமைப்பது என்பதும், அங்கே வாதப் பிரதிவாதங்களைக் கேட்டு முடிவெடுப்பது என்பதும் நடைமுறை சாத்தியமானதல்ல என்று அரசு கருதுகிறது.

ஏற்கெனவே பலமுறை குற்றஞ்சாட்டப்பட்டு, எச்சரிக்கை செய்யப்பட்டு, அல்லது தங்கள் தவறுகளுக்காகப் பலமுறை மன்னிக்கப்பட்டு, அதன் காரணமாகக் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டவர்களாக இல்லாமல், அரசியல் காரணங்களுக்காக மட்டும் யாராவது பழிவாங்கப்பட்டிருந்தால், அவைகளைக் குறித்து அரசு முறையாக விசாரித்து முடிவெடுக்கும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** நான் கட்டாய ஓய்வுபெற்ற அனைத்து ஊழியர்களைப் பற்றியும் இந்த வினாவைக் கேட்கவில்லை. நான் கேட்டதெல்லாம் நெருக்கடி காலத்தில் இவ்வாறு கட்டாய ஓய்வு அளிக்கப்பட்ட ஊழியர்களைப் பொறுத்தே அமைந்திருக்கிறது. நெருக்கடி காலத்தின்போதுதான் இந்த விதிமுறைகளெல்லாம் தளர்த்தப்பட்டு, கட்டாய ஓய்வு அளிப்பது என்ற முறையில் பல தவறுகள் நடைபெற்றன. எனவே அந்தக் காலத்தில் கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டவர்களைப் பொறுத்த

மட்டும், தனி விதிமுறை ஏற்படுத்தி, அவர்கள் முறையீடுகள் மீது முடிவு எடுக்கப்பட வேண்டும். கட்டாய ஓய்வளிப்பது என்பது அரசின் உரிமை என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். அதாவது ஒரு ஊழியர் 25 ஆண்டுக் காலம் பணி முடித்திருந்தால் அல்லது 50 வயதாகி இருந்தால் அவரைக் கட்டாய ஓய்வில் அனுப்புவதற்கு சில விதிமுறைகள் இருந்தன. அவைகளைப் பின்பற்றி அனுப்பப்பட்டிருக்கலாம். ஆனால் இந்த வழிமுறைகளை யெல்லாம் நெருக்கடி காலத்தில் பின்பற்றாமல் பலர் கட்டாய ஓய்வளிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அவர்களைப் பொறுத்த வரையிலும், தனியான விதிமுறைகளை ஏற்படுத்தி அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல், உயர்மட்டக் குழுவுக்கு வந்த மொத்தம் 417 மேல் முறையீடுகளில் 398 மேல் முறையீடுகள் உரிய வகையில் பரிசீலனை செய்யப்பட்டு, முடிவும் எடுக்கப்பட்டு, சம்பந்தப் பட்டவர்களுக்கு அந்த முடிவும் தெரிவிக்கப்பட்டுவிட்டன. அந்த முடிவுகளின் மீதும் திருப்தியுறாமல் தமிழக முதல்வர் அவர்களுக்கு மனுச் செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தாலும், உயர்மட்டக் குழுவின் முடிவிற்குப் பிறகு அதை எதிர்த்து, அல்லது அதை அரசு கருணை அடிப்படையில் திரும்பப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கோரியிருப்போர் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தாலும், இப்படிப்பட்ட முறையீடுகளைப் பொறுத்தவரையில், இந்த அரசு மிகுந்த மனிதாபிமானத்தோடுதான் முடிவுகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### *Mutt Temples.*

* 211. *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state—

(*a*) whether Executive Officers have been appointed for 32 Mutt Temples as per G.O. Ms. No. 698, Commercial Taxes and Religious Endowments Department, dated 24th May 1976; and

(*b*) if not, the reason therefor?



### மடத்துக் கோயில்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வணிகவரி மற்றும் அறநிலையத்துறையின் 24—5—1976 ஆம் நாளிட்ட அரசு ஆணை எம். எஸ். எண் 698-ன்படி, 32 மடத்துக் கோயில்களுக்கும் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டு விட்டனரா?

(இ) இல்லையெனில், அதற்குரிய காரணம் யாது?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** (அ) இல்லை.

(இ) மடத்துக் கோவில்களுக்கு செயல் அலுவலர்களை நியமனம் செய்வதற்காக, விதிமுறைகள் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** 1959 ஆம் ஆண்டே மடத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களுக்கு அரசு நிர்வாக அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படிப்படையில் Ad hoc' rules தயாரிக்கப்பட வேண்டு மென்று அரசு எண்ணி அந்தப் பணியை அரசு இலாக்காவிடம் ஒப்படைத்து, உரிய விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்ட நேரத்தில், நெருக்கடி கால நிலை வந்தது. நெருக்கடி காலத்தில் தமிழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த ஆளுநரின் ஆலோசகர்கள் மடாதிபதிகளால் பூஜிக்கப்பட்டார்கள். இவ்வாறு மடாதிபதிகள் தலையிட்டதன் காரணமாக, அரசு நிர்வாக அதிகாரிகள் மடத்துக் கோயில்களுக்கு நியமிக்கப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டது. தற்போது நெருக்கடி நிலை நீங்கிவிட்டதன் காரணமாக மடத்தைச் சார்ந்த கோயில்களுக்கு உடனடியாக நிர்வாக அதிகாரிகளை நியமிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மடத்தைச் சார்ந்த திருக்கோயில்களுக்கு அரசு நிருவாக அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று 1976 ஆம் ஆண்டு ஒரு அரசாணை பிறப்பிக்கப் பட்டது. அரசாங்கம் நிறைவேற்றிருந்த சட்டத்தின்படி, விதிகள் தெளிவாக நிர்ணயிக்கப்பட்ட பிறகுதான், அரசு

நிருவாக அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். எனவே அப்படிப்பட்ட தெளிவான விதிகள் நிர்ணயிக்கப்படாத காரணத்தால் சட்டத் துறை அதற்குத் தேவையான விதிகளை வரையறுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது. விதிகள் நிர்ணயிக்கப்பட்டவுடன், உடனடியாக அமுல்படுத்தப் படும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** நான் குறிப்பிடுகிற சட்டம் 1959 ஆம் ஆண்டிலேயே, திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைவதற்கு முன்பே, நிறைவேற்றப்பட்டது. அதனடிப்படையில் *Ad hoc* rules இலாக்காவால் தயாரிக்கப்பட்டு, சட்டத் துறையும் அதைப் பார்வையிட்டு, திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொண்டபோதுதான் நெருக்கடி நிலை அமுலுக்கு வந்தது. அதன் காரணமாக மடத்தின் கோயில்களுக்கு அரசு நிருவாக அலுவலர்கள் நியமிக்கப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டது. அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அரசாணை எண் 698, 1979 ஆம் ஆண்டில் இந்தச் சட்டத்தின் அடிப்படையில்தான் பிறப்பிக்கப்பட்டது. எனவே இனியும் காலதாமதம் இல்லாமல் உடனடியாக விதிகளை நிர்ணயித்து மடத்துக் கோயில்களுக்கு நிருவாக அதிகாரிகளை நியமிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** சட்டத்தின்படி அமைக்கப்பட வேண்டிய விதிகள், எவ்விதமான காலதாமதமுமின்றி விரைவில் தயாரிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அறநிலையத் துறை ஆணையர் அவர்கள் அனுப்பிய சில விதிகள் ஆலோசனைகளாக இருக்கின்றன, அவைகள் சட்ட விதிகளின்படி நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று சட்டத் துறை கூறியிருக்கிறது. அது தாமதப்படுகிறது என்பது இக்கேள்வியின் மூலம் இப்போதுதான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதால், உடனடியாக இது கவனிக்கப்பட்டு நிறைவேற்றப்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.



## *Centenary Celebrations of Thanthai Periyar.*

* 212 *Q.*—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state:

(*a*) the amount spent for the functions arranged on behalf of the Government for the Centenary Celebrations of Thanthai Periyar at Erode and Madurai respectively; and

(*b*) the amount spent up to 20th November 1978 in all the Districts on account of such Government Functions on the Centenary Celebrations of Thanthai Periyar?

## *தந்தை பெரியார் நூற்றாண்டு விழா.*

**திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்):** மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தந்தை பெரியார் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியை ஒட்டி, ஈரோடு மற்றும் மதுரையில் அரசின் சார்பாக நடத்தப்பட்ட விழாக்களுக்கு எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டுள்ளது?

(இ) எல்லா மாவட்டங்களிலும் அரசின் சார்பாக நடத்தப்பட்ட பெரியார் நூற்றாண்டு விழாக்களுக்கு அரசாங்கம் 20—11—1978 வரை எவ்வளவு தொகை செலவு செய்துள்ளது?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** (அ) செப்டம்பர் 17, 18 ஆகிய நாள்களில் ஈரோட்டில் நடைபெற்ற தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவிற்கு ரூ. 4.46 இலட்சம் செலவு செய்யப்பட்டது.

மதுரையில் 1978 அக்டோபர் 21, 22 ஆகிய நாள்களில் நடைபெற்ற விழாவிற்கு ரூ. 1 இலட்சம் செலவு செய்யப்பட்டது.

(இ) 20—11—1978 வரையிலும் கோவை மாவட்டத்தில் ஈரோட்டிலும் மதுரை மாவட்டத்தில் மதுரையிலும் தான் இவ்விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாக்களுக்கு மொத்தம் அரசு ரூ. 5.46 இலட்சம் செலவு செய்தது.

[1979 மார்ச் 19

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தந்தை பெரியாரவர்களுக்கு இந்த அரசு ஈரோட்டிலும், மதுரையிலும் மிகச் சிறப்பாக விழா எடுத்ததற்காக நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தந்தை பெரியாருக்கு விழா எடுக்கிற இந்த நேரத்தில் இந்த அரசின் ஆஸ்தான கவிஞர் என்பவர் தந்தை பெரியார் அவர்களைப் பற்றிக் கூறியுள்ள சில கருத்துக்கள். . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மூலக் கேள்விக்கும் உறுப்பினர் கருத்துக்கும் சம்பந்தமில்லை. இதைத்தான் வேண்டாமென்று ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். . .

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் ஒன்றும் தவறாகச் சொல்ல வரவில்லை. இந்த அரசாங்கத்தையும் தொடர்பு படுத்துகிற விஷயமாக அவருடைய கருத்துக்கள் இருப்பதால். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சுற்றிச்சுற்றி உறுப்பினர் ஒரே விஷயத்திற்குத்தான் வருகிறார்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இதைச் சொல்வதற்குக் காரணம் தந்தை பெரியார் அவர்களுடைய கட்சியைச் சார்ந்தவர்களே இதை ஒரு பிரச்சினையாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினருக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த வினாவில் கேட்கப்பட்டது தந்தை பெரியார் விழாவிற்காக எவ்வளவு செலவு ஏற்பட்டது என்பது தான். அதைப்பற்றி மற்றவர்கள் என்ன அபிப்பிராயம் சொல்லுகிறார்கள் என்று கேட்பது எப்படித் துணைக் கேள்வியாக முடியும்?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அரசாங்கத்திலிருந்து சில விவரங்களைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். ஒரு போராட்டத்தையே சட்டமன்றத்தின் முன்னாலே நடத்தப் போகிறோம் என்று அறிக்கை விட்டிருக்கிறார். பேசி இருக்கிறார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் இன்னும் தாவிக் கொண்டே போகிறார்.



1979 மார்ச் 19]

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்றால், தந்தை பெரியார் அவர்களைப் பற்றியோ அவருடைய குடும்பத்தைப் பற்றியோ, இப்படி அரசாங்கத்தில் சம்பளம் வாங்கக்கூடியவர்களே ஒரு தவறான பிரச்சாரத்தை, அல்லது தரக்குறைவான பிரச்சாரத்தைச் செய்யாமலிருக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இங்கே கேட்கப்பட்டிருக்கிற துணைக் கேள்விக்கும் தொடர்பில்லை என்று தாங்களே சொல்லியிருக்கிறீர்கள். எனினும் ஏதோ அரசாங்கமே இதை அனுமதிப்பதைப்போல் பொருள்படுகிற ஒரு கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் இங்கே எழுப்பியிருக்கிறார். அரசாங்கம் எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும் தந்தை பெரியார் அவர்களைப் பற்றியோ, அவர்களுடைய குடும்பத்தைப் பற்றியோ எந்த விதமான அவதூறு கருத்துக்களையும், தவறான கருத்துக்களையும் சொல்வதை அனுமதிக்காது. என்றாலும், தனிப்பட்ட ஒருவர் பல்வேறு நேரங்களில், பல்வேறு இடங்களில் ஏதாவது தவறான கருத்தைத் தெரிவிக்கிறார் என்றால், அதில் அரசாங்கம் எந்த அளவுக்குத் தலையிட முடியுமோ அதனையொட்டித்தான் தலையிடும். அப்படிப்பட்ட சூழ்நிலை வருகிறபோது, அரசாங்கம் அந்தக் கருத்துக்களை எந்த அளவுக்கு மறுக்க வேண்டுமோ அல்லது எதிர்க்க வேண்டுமோ அல்லது தடுக்க வேண்டுமோ அதைச் செய்யும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தந்தை பெரியார் அவர்கள் தம் வாழ்நாளில் பகுத்தறிவுப் பிரச்சாரத்தை, உலகத்தின் வேறு எந்தப் பகுதியிலுமில்லாத அளவுக்குச் செய்து வந்தார்கள். தமிழகத்திலே மூன்று பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. எனவே பகுத்தறிவு ஆராய்ச்சித் துறைக்கு என்று ஒவ்வொரு பல்கலைக் கழகத்திற்கும் ரூ. 5 லட்சம் ஒதுக்கீடு செய்து, பகுத்தறிவு ஆராய்ச்சித் துறையில் ஈடுபடுகிற மாணவர்களுக்கு உதவித் தொகை கொடுத்து, பகுத்தறிவு நாட்டில் வளருவதற்குரிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** தலைவர் அவர்களே, இக்கேள்வியும் என்னுடைய துறைக்குத் தொடர்பில்லாத கேள்வி என்றாலும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிற யோசனை மிகச் சிறந்த யோசனையாக இருப்பதால், நிச்சயமாக நானே அவர்கள் சார்பில் உரிய துறைக்குத் தெரிவித்தும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தும் மற்றவர்களிடத்தும் தெரிவித்தும் தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழா நிறைவு பெறுவதற்கு முன்னால் இந்த யோசனையைச் செயல்படுத்த என்னாலான முயற்சிகளைச் செய்வேன் என்று உறுதி கூறுகிறேன்.

(பிற்பகல் 4.20)

**திரு. க. இராமமூர்த்தி:** தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழா கொண்டாடிய வகையில் இந்த இரண்டு-மூன்று மாவட்டங்களில் மட்டும் ரூ. 5.46 லட்சம் செலவாகியிருக்கிறது என்று அமைச்சர் தெரிவித்தார். தமிழகம் முழுவதிலும் இதற்காகவென்று எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது, அதில் எவ்வளவு செலவாகும் என்று அரசு எதிர்பார்க்கிறது? அப்படிச் செலவிடுகின்ற நிதியின் வாயிலாக எத்தனை மாவட்டங்களிலே தந்தை பெரியார் அவர்களுடைய கருத்துக்களை இலவச வெளியீடுகளாகக் கொண்டு வருவதற்கும், அவருடைய கருத்துக்களை—தொடர்ந்து ஆராய்ச்சிக் கூடங்கள் அமைத்து ஆராய்ச்சி செய்வதற்கான வழிவகைகள் செய்வதற்கும், அவருடைய நினைவாலயம் அமைவதற்கும் எந்த அளவுக்குச் செலவிடப்பட்டிருக்கிறது, அப்படி ஏதாவது அமையுமா?

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:** இந்தக் கேள்வி இரண்டு மாவட்டங்களைப் பற்றிய கேள்வியாக இருக்கிறது. மேலும் சில மாவட்டங்களிலும் இவ்விழா நடைபெறுகின்றது. திருநெல்வேலி, வட ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களிலும் நடைபெறுகின்றது. அதற்கான விவரங்கள் என்னிடத்திலே இப்போது இல்லை என்றாலும், தெரிந்திருக்கிற காரணத்தினாலே சொல்கிறேன். திருநெல்வேலியில் சுமார் 60 ஆயிரமும், வடஆற்காடல் வேலூரில் 60 ஆயிரமும், செங்கற்பட்டிலே சுமார் 30 ஆயிரம் முறையே செலவழித்து கொண்டாடப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் யாரிடத்திலிருந்தும் நன்கொடை வசூலிக்கக்கூடாது என்று கருதிய காரணத்தினாலே,



அரசு அந்தப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டது. அதற்குப் பிறகு முறைகளைக் கொஞ்சம் மாற்றி, செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டிய ஆலோசனை வழங்கப்பட்டதையொட்டி செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன. இப்போது மாவட்டங்களில் 25 ஆயிரம் அல்லது 30 ஆயிரம் ரூபாய் என்ற அளவிலே செலவு செய்யலாம் என்று அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் செலவுகள் அரசின் பொது நிதியிலிருந்து ஏற்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமமூர்த்தி தெரிவித்த ஆலோசனைகளையொட்டி, புத்தகம் வெளியிடுதல், நினைவுச் சின்னம் அமைத்தல், நம்முடைய தலைநகரிலே தந்தை பெரியார் அவர்களுக்கு மிகப் பெரிய ஒரு அறிவாலயம் அமைத்து அதிலே பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களை அமைத்தல் போன்ற காரியங்களுக்காக சுமார் ஒரு கோடி ரூபாய் அளவிலே ஒரு திட்டம் போட்டு, அது அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பல திட்டங்கள் பரிசிலனையில் இருக்கின்றன. அவைகள் குறித்து, தனியாக முடிவுகள் எடுக்கப்படும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செங்கற்பட்டு மாவட்டத்திலே தந்தை பெரியார் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்ட வகையில் 30 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்கள். இவ்விழா காஞ்சிபுரத்தில் முதலிலே 3, 4 தேதிகளில் கொண்டாடப்படுவதாக எங்களுக்கு அழைப்பிதழ் தந்து, அதற்குப் பிறகு 10 ஆம் தேதி என்று ஒத்திவைக்கப்பட்டு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்வார்கள் என்று அந்த அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் 10 ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளவில்லை. இப்படிப்பட்ட விழாக்களில் அரசாங்கம் பணம் செலவு செய்து முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்வார்கள் என்று அறிவித்து, அவர் வரவை மக்கள் எதிர்பார்க்கின்றபோது, அவர்கள் கலந்துகொள்ள வரவில்லை என்றால், மக்கள் மத்தியில் ஒரு தவறான எண்ணம் உருவாகும். ஆகவே, ஏன் முதலமைச்சர் அவர்கள் அதில் கலந்துகொள்ளவில்லை, என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** 10-ஆம் தேதி காஞ்சிபுரத்தில் நடைபெற்ற விழாவில் முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளாததற்குக் காரணம் அவரது வாழ்விலே ஏற்பட்ட மிகப் பெரிய துக்க நிகழ்ச்சி தான். அவரோடு கடந்த 30 ஆண்டுகளாக தோழனாக, துணைவனாக இருந்த ஒரு தொண்டன் இயற்கை எய்தியதையொட்டி அவர்கள் நான்கு அய்ந்து நாட்களாக மிகுந்த சோதனைக்கு உள்ளாகி, என்றைக்குமே எத்தகைய இன்னல்கள், இடுக்கண்கள் ஏற்பட்ட பின்பும் வாழ்க்கையில் கண்ணீரே சிந்தாத அளவுக்கு மன வலிமை படைத்தவர், அந்த இரண்டு மூன்று நாட்கள் கண்ணீரைச் சிந்தி அழுது கொண்டே இருந்ததனால்—அன்றைக்கு $8\frac{1}{2}$ மணி வரை போகலாம் என்று இருந்தவர்—தொண்டை அடைத்து சத்தம் வராமல் இருந்ததனால், வந்தாலும் என்னால் பேச முடியாது என்று, இயலாததால் தான் அவர் வரவில்லை. அவர் வந்தாலும், வரவில்லையானாலும், தமிழக அரசின் சார்பிலே லட்சக்கணக்கான மக்களைத் திரட்டி வைத்து அந்த நிகழ்ச்சி சிறப்பாக நடத்தி வைக்கப்பட்டது.

### *Higher Secondary School Scheme.*

* 213 *Q.*—THRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether any decision was taken to abandon ten plus two Higher Secondary School Scheme, at the Education Ministers' Conference held in New Delhi in July, 1978; and

(*b*) if so, the stand taken by the Government thereon?

### உயர் இடைநிலைப் பள்ளி கல்வித் திட்டம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1978-ஆம் ஆண்டு ஜூலை மாதம், புது டில்லியில் நடைபெற்ற கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் 10 + 2 உயர் இடைநிலைப்பள்ளி கல்வித் திட்டத்தை கைவிடுவதென, முடிவு ஏதும் செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசின் நிலை யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவர் அவர்களே, 10 ப்ளஸ் 2 என்ற திட்டத்தை மாற்றி 8 ப்ளஸ் 4 என்ற வகையில் மத்திய அரசு கல்வித் திட்டத்தை மாற்றியமைப்பதாக முன்னாலே அறிவித்து, இன்றையதினம் வானொலியில் கூட வரும பாராளு மன்றத் தொடரிலே புதிய சட்டம் ஒன்று வருவதாகக் கூடத் தெரிவிக்கப்பட்டது. அதுபற்றி இந்த அரசுக்கு ஏதாவது தகவல் உண்டா? இதன் மீது இந்த அரசின் கருத்து என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** 1978 ஜூலை மாதம் 13, 15 ஆகிய நாட்களில் அனைத்து மாநில கல்வி அமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது. நான் கலந்துகொள்ளவில்லை என்றாலும், நமது கல்வித் துறைச் செயலாளர் அவர்களும், கல்வித் துறை இயக்குநர் அவர்களும் அதில் கலந்துகொண்டார் கள். அதிலே புதிய தேசியக் கொள்கை என்ற அடிப்படையிலே இந்தப் பிரச்சினைபற்றி விவாதிக்கப்பட்டது. நாட்டில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் 14 வயது முடிய கட்டாயக், கல்வி அளிக்க வேண்டும் என்ற அடிப்படையிலே தான், இந்த 8 என்ற எண் வருகிறது. 8 என்று சொல்வதற்குக் காரணம் அரசியல் சட்டத்திலே 14 வயதுக்கு உட்பட்டவர்கள் அனைவருக்கும் கட்டாயக் கல்வி அளிக்க வேண்டும் என்று வைத்திருக்கிறார்கள். மீதியிருப்பது 4 என்று சொல்லி, அதை எல்லா மாநிலங்களிலும் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தித்தான் இன்றைய தினம் பத்திரிகையிலும் கருத்துக்கள் வந்திருக்கின்றன.

**திரு. ம. சங்கரலிங்கம்:** 8 வரை உள்ள வகுப்புகள் கட்டாயக் கல்வியின் கீழ் வருகிறபோது—இப்போது நாம் ஆரம்ப வகுப்புகள் வரை தான் கட்டாயக் கல்வியாக வைத்திருக்கிறோம்— அதற்கு மேல் இடம் இருந்தால் படிக்கலாம். படிக்க வந்தால், அவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கிறோம். இத்திட்டத்தை நாம் ஏற்றுக்கொள்வதன் மூலம் கட்டாயக் கல்வி முறையைக் கொண்டுவர வசதியாக இருக்கும், ஆகவே, அரசு இதை ஏற்றுக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்போது இலவசம் என்று நாம் பார்க்கிறபோது, 12 ஆண்டுக் கல்வியையும் நாம் இலவசமாகத்தான் தருகிறோம். ஆகவே, கட்டாயக் கல்வி 8 வரை தருவதைப் பற்றி எந்தவிதமான கருத்து மாற்றமும் இல்லை. அது வருகின்றபோது, அரசு அதை ஏற்று நடத்தும்.

**திரு. க. இராமமூர்த்தி:** 10 ப்ளஸ் 2 கல்வி முறை நாம் விரும்புகின்ற பலனை அளிக்காத காரணத்தினாலே, விரைவிலே அந்தப் பாடத் திட்டத்தினைத் திருத்தியமைக்க வேண்டிய, மாற்றியமைக்க வேண்டிய ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று நம்முடைய திட்டக் குழுவினுடைய துணைத் தலைவர் சமீபத்திலே கருத்து தெரிவித்திருந்தார். அது அரசுக்கு ஏற்புடையதா? ஆமெனில், அதுபற்றி எந்த அளவிலே அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அது அவருடைய கருத்தாக இருக்கலாம். அதுபற்றிய விவரம் இல்லை. ஆனால் அரசைப் பொறுத்தமட்டில், இந்த மேல்நிலைக் கல்வி உயர்நிலைப் பள்ளியில் தான் இருக்க வேண்டும் என்று துணிந்து முடிவெடுத்த மாநிலம் தமிழ் நாடு ஒன்றுதான். அப்படியானால், அது அரசு எடுத்த முடிவு என்பதைவிட கல்வி நிபுணர்கள் எடுத்த முடிவை அரசு முழுமையாகச் செயல்படுத்துகிறது என்று தான் அர்த்தம். சில மாநிலங்களில் இருப்பது போல ஜுனியர் காலேஜ் என்று கொஞ்சம், உயர்நிலைப் பள்ளிகளில் கொஞ்சம் இப்படி பிரிவு பிரிவாக நடத்தாமல், அறிஞர்கள் சொன்னமாதிரி, ஒரேமாதிரியாக நடத்துகின்ற மாநிலம் தமிழ் நாடு ஒன்று தான். தேசியக் கொள்கையும் அதுவாகத்தான் இருக்கிறது. பிரிவு பிரிவாக நடத்தும் மற்ற மாநிலங்களில் கூட இதை இன்னும் இரண்டு ஆண்டு காலத்திற்குள்ளாக உயர்நிலைப் பள்ளியில் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்று பல்கலைக் கழக மானியக் குழு ஆலோசனை வழங்கியிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் அனைவருமே இந்த ப்ளஸ் 2-க்கு ஆதரவு தந்திருக்கிறார்கள். பல்கலைக் கழக மானியக் குழு ஆதரவு தந்திருக்கிறது. இந்த நிலையில், மாண்புமிகு உறுப்பினர்

திரு. இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதுபோல, ஒரு பொது விழாவிலே நம்முடைய திட்டக் குழு துணைத் தலைவர் அவர்கள், ப்ளஸ் 2-க்குத் தனியாக ஜூனியர் காலேஜ் ஏற்படுத்த வேண்டும் என்று அரசுக்குப் பரிந்துரைக்கப் போனதாக மிகத் தெளிவாகப் பேசியிருக்கிறார்கள். அந்த விழாவிலே மாநில அமைச்சர் ஒருவரும் இருந்திருக்கிறார். இது ஒரு பெரிய குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே, திட்டவட்டமாக அரசின் கல்விக் கொள்கை இதுதானென்'இந்த ப்ளஸ்-2 கல்லூரிக்குப் போகாது' என்று அரசு அறிவிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசினுடைய கொள்கை அது உயர்நிலைப் பள்ளியில்தான் இருக்க வேண்டும் என்பது. இனி அதில் ஏதாவது மாற்றம் ஏற்படுத்த வேண்டுமென்றால், பொது மக்களே கூட விடமாட்டார்கள்.

*Admission of students in Government Colleges.*

* 214 *Q.*—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that, in the Queen Mary's College, Presidency College and some other Government Colleges in the City of Madras, admission had been completed for some Courses, several days prior to the date notified as the last date for the receipt of the applications for those courses; and

(*b*) whether the Government are aware that consequently students with better marks and qualification could not secure seats, even though they applied within the notified date?

*அரசுக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்த்தல்.*

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னை மாநகரிலுள்ள இராணிமேரிக் கல்லூரி, மாநிலக் கல்லூரி, வேறு சில அரசினர் கல்லூரிகள் ஆகியவற்றில், சில வகுப்புகளுக்கு விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அறிவிக்கப்பட்டிருந்த கடைசி தேதிக்குப் பல நாட்களுக்கு முன்னரேயே, அந்த வகுப்புகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது முடிந்துவிட்டது உண்மையா?

(இ) அதனால், அதிக மதிப்பெண்களும் தகுதியும் பெற்றிருந்த மாணவர்கள், குறிப்பிட்ட தேதிக்குள் விண்ணப்பம் செய்து கொண்டிருந்தும் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(பிற்பகல் 4-30)

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** இது போன்ற முறைகேடுகளைச் சுட்டிக்காட்டி புகார் வந்தால் உடனடியாக அரசு விசாரணை செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இந்தப் பிரச்சினையில் முறைகேடு இல்லை. புகார் வந்தால், உடனடியாக விசாரிக்கப் படும்.

### *Assistant Professors*

*215 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU P. R. THOMAS): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that increments are not sanctioned to the Assistant Professors who are recruited direct by the Tamil Nadu Public Service Commission, taking into consideration the services rendered by them in Government High Schools; and

(*b*) if so, the reasons therefor?

### உதவிப் பேராசிரியர்கள்

**திரு. சி. ரா. இலட்சுமிகாந்தன் (திரு. பி. ஆர். தாமஸ் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவினால் நேரடியாக நியமனம் செய்யப்படுகிற உதவிப் பேராசிரியர்கள், அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் எத்தனை ஆண்டுகள் பணியாற்றினர் என்பதைக் கணக்கில் கொண்டு, அவர்களுக்கு ஆண்டு ஊதிய உயர்வு அளிக்கப்படுவதில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) அரசு அலுவலர்கள் மற்றொரு பதவிக்கு நேரடியாக நியமிக்கப் பெற்றால் அடிப்படை விதி 22 (பி) ன் கீழ் உள்ள விதி 6-ன் படி அவர்களின் பழைய பதவிக் காலத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு அடிப்படை விதி 22 அல்லது 22 (பி) ன் கீழ் ஊதிய நிர்ணயம் செய்ய இயலாது.

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்:** தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் விதிகளில் ஒரு முக்கியமான விதி இருக்கிறது. " A candidate in service of Government other than Government of Tamil Nadu, if selected and appointed, will not be entitled on the basis of his previous service " என்று விதி இருக்கிறது. வேறு ஒரு அரசுத் துறையிலே பணியாற்றி இங்கு வந்தால், அவர்களுடைய பழைய பணியைக் கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது. இந்த அரசிலேயே வேறு துறைகளில் பணியாற்றினால் உண்டு என்பதுதானே அதனுடைய பொருள். தேர்வாணைக் குழுவின் விதிமுறைகளில் இப்படிக் குறிப்பிடப்பட்டிருந்தும், அரசுப் பணியில் பணியாற்றி அவர்கள் கல்லூரியில் நியமனம் செய்யப்படும்போது, புதிய ஊதியத்தை நிர்ணயிக்கும்போது, நூற்றுக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. இது குறித்து அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பரிசீலிக்கலாம்.

*Students admitted in Engineering Colleges.*

* 216 *Q.*—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of applications received from the students belonging to (i) Forward Communities, (ii) Backward Classes and (iii) Scheduled Castes and Scheduled Tribes, for admission into Engineering Colleges in the State during the academic year 1978-79; and

(*b*) the number among them, selected, category-wise ?

[1979 மார்ச் 19

## பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்துள்ள மாணவர்கள்

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1978-79 ஆம் கல்வி ஆண்டில் மாநிலத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் அனுமதிக்கப்படுவதற்கென, (i) முன்னேற்றமடைந்த வகுப்பினர், (ii) பின்தங்கிய வகுப்பினர், (iii). அரிசன வகுப்பினர் பழங்குடியினர் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களிடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பங்கள் எத்தனை?

(இ) இவர்களில், தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் வகுப்பு வாரியாக எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) 1978-79-ஆம் ஆண்டு முதலாமாண்டு பொறியியல் பட்டப்படிப்புக்குச் சேர பெறப்பட்ட தகுதி வாய்ந்த மனுக்களின் விபரம் இனத்தின் வாரியாக :—

| | |
|---|---|
| (1) முற்பட்ட இனத்தவர் | 3,014 |
| (2) பிற்பட்ட இனத்தவர் | 3,588 |
| (3) தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் இனத்தவர். | 357 |
| | 6,959 |

(இ) பெறப்பட்ட மொத்த மனுக்களில் தேர்தெடுக்கப்பட்ட மாணவர்களின் விபரங்கள் இன வாரியாக :—

| | |
|---|---|
| (1) முற்பட்ட இனத்தினர் | 375 |
| (2) பிற்பட்ட இனத்தினர் | 812 |
| (3) தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் இனத்தினர் | 257 |
| | 1,444 |



1979 மார்ச் 19]

**திரு. க. இராமமூர்த்தி:** பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதில், அந்தந்த மாவட்டங்களில் உள்ள பிற்பட்ட இனத்தவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ற அளவிலே, அவர்களுடைய எண்ணிக்கையின் சதவீதத்திற்கேற்ப தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களா ? அப்படித் தேர்ந்தெடுக்கப்படவில்லையென்றால், சில மாவட்டங்களிலே இருக்கிற பின்தங்கியவர்கள் முன்னேறுகிற நிலையும், பெருவாரியான மாவட்டங்களில் உள்ள பின்தங்கியவர்கள் முன்னேறாமல் இருக்கிற நிலைமையும் ஏற்படுகிறது. இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாவட்ட வாரியாக விகிதாச்சார அடிப்படையில் தேர்ந்தெடுக்கக் கூடிய கொள்கை நீதிமன்றத்திலே இப்போது அடிபட்டுவிட்டது. அந்தக் காரணத்தாலே அந்த அடிப்படையில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** வெளிநாட்டு மாணவர்களில் குறிப்பாக தமிழ் மாணவர்களை தமிழ்நாடு பொறியியல் கல்லூரியில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ளுவதன் மூலம், அவர்களிடையே பண்பாடு ஊர வசதியாக இருக்கும். ஆகவே அப்படிப்பட்டவர்களை அதிகமாகச் சேர்த்துக்கொள்ளும் எண்ணம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மத்திய அரசு செய்கிற சிபார்சின் அடிப்படையில் அந்த மாணவர்களுக்கு என்று 33 இடங்களைத் தருகிறோம். அதிலே வருகின்ற விண்ணப்பங்களை வைத்துக்கொண்டு அவர்கள் மாணவர்களை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசின் கருத்து, வெளி நாட்டிலே இருக்கிற தமிழ் இனத்தைச் சேர்ந்த மாணவர்களை தமிழ் நாட்டிற்கு அனுப்ப வேண்டும் என்பது. இது ஏற்றுக்கொள்ளப்படாத நிலையிலே இருக்கிறது. அதை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாவட்ட வாரியாக பிற்பட்ட இனத்தவர்களுக்கு அவர்களுடைய சதவிகிதத்தின்படி தேர்வில் இடம் கொடுப்பது செல்லாது என்று தீர்ப்பளிக்கப் பட்டுவிட்ட பிறகும் கூட, தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த

[1979 மார்ச் 19

அறிஞர் அண்ணா அவர்கள் அதற்கு ஒரு மாற்று ஏற்பாட்டைக் கண்டாக வேண்டியது அவசியம் என்ற ஒரு கருத்தை சட்டமன்றப் பேரவையிலே தெரிவித்தார்கள். அண்ணாவின் வழி நின்று நடக்கிற இந்த அரசு அதைக் கருத்திலே கொண்டு ஏதாவது செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் குறிப்பாக பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமல்லாமல், கிராமப்புறங்களில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப அதிகப்படியான இடம் கிடைப்பதற்கான நிலைமை இல்லை என்ற உணர்வு அரசுக்கு இருக்கிறது. இப்பிரச்சினையை எப்படித் தீர்ப்பது, எப்படி அதிகப்படியான மாணவர்களுக்கு இடம் கிடைக்கச் செய்வது என்பது பரிசீலனையில் இருக்கிறது. என்றாலும் இந்த ஆண்டு 12 வது வகுப்பைத் துவக்குகிறோம். 12 வது வகுப்பிலே தமிழ் பயிற்சி மொழி நிறையப் பள்ளிகளில் வருகிறது. 12 வது வகுப்புத் தேர்வு எழுதுகிற மாணவர்கள் இது போன்ற கல்லூரிக்கு வர இருக்கிறார்கள். நம்முடைய நம்பிக்கை, தாய்மொழி தமிழில் படிக்கிற மாணவர்கள் நிறைய மதிப்பெண்கள் பெற்று அதிகமான அளவுக்குச் சேர்வார்கள் என்பது.

THIRU J. M. MIAKHAN : Will the Hon. Minister be able to give the information as to how many Muslims applied for admission in the Engineering Colleges and how many of them have been selected ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இங்கே அந்த அடிப்படையிலே புள்ளிவிவரம் தரப்படவில்லை. முற்பட்ட இனத்தவர், பிற்பட்ட இனத்தவர், தாழ்த்தப்பட்ட இனத்தவர் என்ற புள்ளிவிவரம்தான் இருக்கின்றது.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** இந்தப் பொறியியல் கல்லூரியை நிர்வகிக்கிற தனியார்களுக்கு அரசு ஒரு குறிப்பிட்ட இடம் 'காலேஜ் கோட்டா' என்று ஒதுக்குவதாகச் சொல்லுகிறார்கள். தனியார்களுக்குத் தற்போது பொறியியல் கல்லூரிகளில் எத்தனை இடங்கள் ஒதுக்கப்படுகின்றன?



1979 மார்ச் 19]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** எல்லாக் கல்லூரிகளுக்கும் சேர்த்து 34 இடங்கள்.

**திரு. சி. நா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த பட்டியலில் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறியியல் கல்லூரியில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை உண்டா? இல்லையென்றால், அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறியியல் கல்லூரியிலும் வகுப்புவாரி விகிதாச்சாரப்படி மாணவர்களைச் சேர்ப்பதற்குரிய விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசினுடைய தலைமையின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையைப்பற்றிச் சொன்னேன். பல்கலைக் கழகம் என்பது தனியாக இயங்குகிற ஸ்தாபனம். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இதிலே வராது. அங்கு தேர்ந்தெடுக்கிற முறைகளை முறைப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது அரசின் அடிப்படைக் கொள்கையாக ஆகிவிட்ட நிலையில் அதைப் பின்பற்றாத அல்லது இதுவரை அதைக் கடைப்பிடிக்காத பல்கலைக் கழகமானாலும், கல்லூரியானாலும், அவர்களுக்கு வழங்கும் மானியத்தை நிறுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது பற்றிய விவரம் இல்லை. அவர்களும் பின்பற்றுவதாகத்தான் கருதுகிறேன். அப்படி விகிதாச்சாரத்தைப் பின்பற்றினாலும், அதிலும் ஒரு முறை இருக்க வேண்டும் என்பதைத்தான் நாம் வலியுறுத்த வேண்டும் என்று விரும்புகிறேன்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** வகுப்பு வாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், தகுதியின் அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா? அல்லது வேறு காரணத்தின் அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா?

[1979 மார்ச் 19

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பிற்பட்ட இனத்தவர்கள், தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் என்று வருகிறபோது, அவர்களுக்குள் சிறந்தவர்கள் என்ற முறையில் அந்தத் தேர்வு நடைபெற்று வருகிறது.

**திரு. வி. ஆர். பெரியண்ணன்:** தனியார் கல்லூரிகளில் அதனுடைய நிர்வாகத்தினருக்கென்று 34 இடங்கள் ஒதுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இடங்களுக்காக அவர்கள் தங்கள் இஷ்டத்திற்குத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்களா? அல்லது மெரிட் படி தேர்ந்தெடுக்கிறார்களா? அதில் பிற்பட்ட வகுப்பினரையும், வகுப்புவாரியாகத் தேர்ந்தெடுக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அடிப்படையில் அவர்கள் தேர்ந்தெடுப்பதில்லை. குறைந்தபட்சம் 60 மார்க் என்று இருந்ததை 70 மார்க் என்று நாம் ஆக்கிய காரணத்தால், அதற்கு மேல் உள்ளவர்களைத்தான் அவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** விருக்கள் 217, 218 ஒத்திவைக்கப்படுகின்றன.

*Unani College.*

*219 *Q.*—THIRU ARCOT N. VEERASAMY (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether there is any proposal with the Government to open a College separately for Unani Medicine in Tamil Nadu; and

(*b*) if so, when and where the College will be opened?

**யுனானி கல்லூரி**

**திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்):** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—



1979 மார்ச் 19]

(அ) தமிழ்நாட்டில் யுனானி மருத்துவ முறைக்கென்று தனியாக கல்லூரி (Unani College) துவங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(இ) ஆம் எனில், எந்த ஆண்டு எந்த இடத்தில் இந்தக் கல்லூரி ஏற்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** (அ) ஆம்.

(இ) சென்னையில் அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவமனை அமைந்துள்ள இடத்தையொட்டி 1979-80-ம் ஆண்டிலேயே இக்கல்லூரி துவங்கலாம் என்ற அளவில் செயற்குறிப்பினை அரசு பரிசீலனை செய்து வருகின்றது.

**திரு. சி. இராமலிங்கம்:** யுனானி மருத்துவத் துறையை வளர்க்க அரசு என்ன தன்மை செய்திருக்கிறது? 'யுனானி மருத்துவ மாணவர்களுக்குச் சலுகை அளிக்கப்படுகிறதா? அந்தப் பாடத்தைப் படித்தால், இந்த நாட்டிலே வேலைவாய்ப்பு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** நம்முடைய பழைய மருத்துவ முறைகளில், சித்த மருத்துவ முறை, ஆயுர்வேத மருத்துவ முறை, யுனானி மருத்துவ முறை என்று மூன்று மருத்துவ முறைகள் இருக்கின்றன. அதிலே யுனானி மருத்துவ முறையைப் பொறுத்த வரையிலே கூட, நம்முடைய பேரறிஞர் அண்ணா பெயரால் இயங்குகின்ற இந்திய மருத்துவ மனையில் அதற்கென்று மருத்துவர்கள் இருந்து மருத்துவ வசதிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அது மறைந்துவிடாமல் இருப்பதற்கு அந்த மருத்துவ முறையையும் பயிற்றுவிக்க வழிவகை செய்யும் கருத்தாக அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று எடுத்துக் கூறினேன்.

(பிற்பகல் 4-40)

**புலவர் புலமைபித்தன்:** பேரறிஞர் தமிழ்க் கல்லூரியோடு இணைக்கப் பெற்று ஒரு சித்த மருத்துவக் கல்லூரியும் இயங்கி வந்ததாகத் தெரிகிறது. கொஞ்சக்காலத்திற்கு முன்னால், கிடைத்த சித்த மருத்துவம் பற்றிய நூல்கள் செய்யுட்களாகவும், கவிதைக் குறிப்புகள் போலவும் இருந்த காரணத்தினாலே, இந்த

மருத்துவத்தைப் பற்றித் தெரிந்தவர்கள், தமிழ் புலவர்களைப் பெரும்பாலும் அங்கே பயன்படுத்துகிறார்கள். அந்த வகையிலே தமிழ்க் கல்லூரி பக்கத்திலேயே சித்த மருத்துவக் கல்லூரியை உருவாக்கி, அந்த முறை அறிவைப் பெருக்க அரசு முயற்சி எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** இன்றைக்கும் சித்த மருத்துவத்தைப் பொறுத்த வரையில், இருக்கின்ற ஓலைச் சுவடிகள் ஆனாலும், நூல்கள் ஆனாலும் அவைகள் எல்லாம் செய்யுள் வடிவிலேதான் நிறைய இருக்கின்றன. அத்தகைய செய்யுள் வடிவிலே இருக்கின்றவைகளை ஆராய்ந்து நடைமுறையிலே கொள்வர, தமிழிலே இருபொருள்படக் கூறியிருப்பனவைகளை எல்லாம் ஆராய்ந்து, அவைகளையும் நடைமுறைப்படுத்த முயற்சிக்க வேண்டும். அவைகளை மேலும் ஆய்வு செய்து தருவதற்கு வேண்டிய வழிவகைகளை அரசு செய்து கொண்டிருக்கிறது. இதிலே தமிழ்ப் புலவர்களை ஈடுபடுத்த வேண்டும். ஞானவெட்டியான், பதார்த்த குண சிந்தாமணி போன்ற மருத்துவ நூல்கள் செய்யுள் வடிவில்தான் இருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU J. M. MIAKHAN: May I know from the Government whether it is going to be a Degree Course or a Diploma Course, and if so, what the duration of the course is ?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** யுனானி மருத்துவக் கல்லூரியைத் தொடங்கிய பிறகு, எப்படி சித்த மருத்துவத் துறையிலே மருத்துவக் கல்லூரியைத் தொடங்கி பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படுகிறதோ அது போன்று கற்றுக் கொடுப்பதற்கான ஆய்வுகள்தான் பரிசீலனையில் இருக்கின்றன.

**திரு. க. இராமமூர்த்தி:** இந்த யுனானி மருத்துவம் அராபிய மருத்துவ முறை என்று அறிகிறேன். இதிலே நிபுணத்துவம் பெறுவதற்கு தனியாக அராபிய வல்லுநர்கள் தேவை என்கிறார்கள். அதற்காக இந்த மருத்துவக் கல்லூரியில் அராபிய மொழி சொல்லிக்கொடுக்கின்ற வகுப்புகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** யூனானி மருத்துவம் சம்பந்தப்பட்ட பெரும்பான்மையான நூல்கள் உருது மொழியிலேதான் இருக்கின்றன. சென்னையிலேயும், சென்னையைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளிலும் உருது மொழி பேசுகின்றவர்கள் அதிகமாக இருப்பதால், அந்தப் படிப்பை சென்னை நகரில் தொடங்குவது வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்று சொல்கிறேன். உருது மொழி அதிகமாக இல்லாத இடத்தில் யூனானி படிப்பதற்கு ஏற்ப அவைகளைத் தமிழிலேயே மொழி பெயர்த்தால், தமிழக மாணவர்களும் பயன்படுத்தலாம். யூனானி படிப்பவர்கள் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டிருந்தால், அதைப் படிக்கலாம். அந்த அளவில் அதற்கான செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இந்த யூனானி கல்லூரி 1964-ல் பாளையங்கோட்டையில் தொடங்கப்பட்டதாகவும், பிறகு நிறுத்தப்பட்டதாகவும் அறிகிறேன். அது தொடங்கப்பட்டு நிறுத்தப்பட்டதற்குக் காரணம் என்ன? இந்த மருத்துவ முறை விடப்பட்டதா அல்லது கரை காண முடியாது என்று நிறுத்தப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** 1960 ஆம் ஆண்டு வரையில், அதாவது, சென்னையில் இயங்கி வந்த ஒருங்கிணைந்த மருத்துவக் கல்லூரி மூடப்படும் வரையில், யூனானி மருத்துவத்தில் L.I.M. பட்டயப் படிப்பும், G.C.I.M. பட்டப் படிப்பும் பெறுவதற்கான வாய்ப்புகள் இருந்து வந்துள்ளன. 1960 ஆம் ஆண்டில், இக்கல்லூரி நவீன முறை மருத்துவக் கல்லூரியாக மாற்றப்பட்டது. 1964 ஆம் ஆண்டு பாளையங்கோட்டையில் தொடங்கப்பட்ட இந்திய முறை மருத்துவக் கல்லூரியில், சித்தா, ஆயுர்வேதா, யூனானி மருத்துவப் பட்டப் படிப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆயுர்வேதம் சமஸ்கிருதத்திலும் யூனானி உருதுவிலும் இருந்ததால், இப்பிரிவுகளில் மாணவர் எவரும் சேர்ந்து படிப்பதற்கு முன்வரவில்லை. எனவே பட்டப் படிப்பு பெறுவதற்கு வாய்ப்பு இருந்தும், மாணவர்கள் சேராத காரணத்தினால், பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரியில்

ஆயுர்வேதம், யூனானி மருத்துவப் பட்டப் படிப்புகள் கைவிடப்பட்டு, சித்த மருத்துவப் பட்டப் படிப்பிற்கு மட்டும் ஆண்டுதோறும் மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

**திரு. செ. முத்துசாமி:** அரசினுடைய நேரடிக் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய மிகத் தேவையான விஷயம் என்று நான் கருதுவதால் இதைக் கொண்டு வருகிறேன். கோவையிலே வேட்டைக்காரன் புதூருக்குப் பக்கத்திலே சில கிராமங்களில், ஒரு ஆற்றிலே வரக்கூடிய நீரைக் குடிப்பதால், கை கால்கள் மூட்டுக்கள் விக்கம் ஏற்படுவதாகவும், இந்த நீரை எடுத்து ஹைதராபாத்தில் உள்ள சோதனைக்கூடத்திற்கு அனுப்பி யிருப்பதாகவும் சொன்னார்கள். அங்கு சோதனை செய்த டாக்டர் கிருஷ்ணமாச்சாரி அவர்கள் அந்த நீரில் கொஞ்சம் கெமிகல்ஸ் சேர்ந்திருப்பதால், இந்தமாதிரி சங்கடம் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த File கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே இருக்கிறது. மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமலிருப்பதால், அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப் படுகிறார்கள். இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க நல்வாழ்வுத் துறை முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** மூலக் கேள்வி யூனானி மருத்துவப் படிப்புப் பற்றியது. தண்ணீரில் கெமிக்கல்ஸ் கலந்து வருகிறது என்று சொல்கிறார்கள். இதற்கான குறிப்புகள் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விரிவாகப் பதில் சொல்லலாம்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** யூனானி மருத்துவ முறைகள் உருது மொழியிலே இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எதிர்காலத்திலே அதைத் தமிழிலே மொழி பெயர்த்து, தமிழ் நாட்டிலே தமிழிலேயே கற்பதற்கு வழிவகை செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். தற்போது மருத்துவக் கல்லூரி நகர்ப்புறத்திலே வருகிறது. எதிர்காலத்திலே கிராமப்புறத்திலேயும் இதுபோன்ற கல்லூரிகள் ஏற்படுத்த அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** தமிழிலே மொழி பெயர்த்து, ஒரு கல்லூரியைத் தொடங்கி, அதிலே இந்தப் பட்டப் படிப்பை நடத்தி, நம்முடைய மக்களைக் கவர்கின்ற அளவுக்குச் செய்யலாம். எந்த அளவுக்கு நம்முடைய மக்கள் அதைப் பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பார்த்து, பிறகு மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் யோசனையைப் பற்றிப் பரிசிலிக்கலாம்.

*Health Officers.*

*Transferred from Travancore-Cochin State*

* 220 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government from the Health Inspectors, Sanitary Inspectors, Health Assistants and Field Assistants, who were transferred from Travancore-Cochin State to Tamil Nadu, that neither promotion nor Selection Grade was given to them till 12th September 1978, even though it was announced that 'seniority' had been given to them in G.O. Ms. No. 1312, Health and Family Welfare Department, dated 28th May 1976;

(*b*) if so, the action taken thereon;

(*c*) the number of persons affected; and

(*d*) the reason for not giving the Selection Grade and for not-fixing their pay, in time?

திருவாங்கூர்-கொச்சி ராச்சியத்திலிருந்து மாற்றப்பட்ட நல்வாழ்வுத் துறை அதிகாரிகள்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருவாங்கூர்-கொச்சி ராச்சியத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு மாற்றப்பட்ட மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சேர்ந்த உடல்நல ஆய்வாளர்கள் ( Health Inspectors ) துப்புரவு ஆய்வாளர்கள் ( Sanitary Inspectors ) உடல்நல உதவியாளர்கள் ( Health Assistants ) களப்பணி உதவியாளர்கள் ( Field Assistants ) ஆகியவர்களுக்கு

[1979 மார்ச் 19

28—5—1976 ஆம் நாளிட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பக் கட்டுப்பாட்டுத் துறையின் அரசாணை எம்.எஸ். என் 1312-ல் 'சீனியாரிட்டி' வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தும், 12—9—1978 வரை அந்த அதிகாரிகளுக்கு எந்தவிதமான பதவி உயர்வுகளோ, தேர்வுத் தரமோ வழங்கப்படவில்லை என்று அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

(உ) பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை எத்தனை ?

(எ) உரிய காலத்தில் இவர்களுக்கு தேர்வு தரம் வழங்கப்படாததற்கும், சம்பளம் நிர்ணயம் செய்யப்படாததற்கும் காரணம் யாது ?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** (அ), (இ), (உ) & (எ) சட்டமன்ற மேலவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, இந்த எண்ணுள்ள அரசு ஆணையை உடனடியாக அமுல்படுத் தாததானால்தான், 29 பேர்கள் பாதிக்கப்பட்டு அவர்களில் 11 பேர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க அக்கவுண்டண்ட் ஜெனரல் ஆபீசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 18 பேர்களுடைய பிரச்சினை இந்த அரசின் பரிசீலனையில் இருப்பதாக விவர அறிக்கையிலேயிருந்து தெரிய வருகிறது. இவர்கள் திருவாங்கூர்-கொச்சியிலிருந்து வந்தவர்கள், 1956-லே சர்வீசிலே வந்தவர்கள். அவர்களுடைய ஊதிய நிர்ணயம் 1960, 1970, அதற்குப் பின் வந்த ஊதியக் கமிஷன் ஆக 3 ஊதியக் கமிஷன்கள் வந்தும் அவர்களுக்கு எந்தவிதமான பலனும் கிடைக்காமல், அவர்கள் அனுபவிக்க முடியாமல் இருந்து வருகிறார்கள். சிலர் ஓய்வுகூடப் பெற்றாகிவிட்டது. இவர்களுடைய பிரச்சினையில் காலதாமதம் இல்லாமல் உடனடியாக நடவடிக்கை எடுத்து ஒரு மாதத்திற்குள்ளாக இந்த அரசு நிர்ணயம் செய்யுமா ?

---

@ 284-285 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.



1979 மார்ச் 19]

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** இவர்களுக்கு 1—11—1956-ல் ஊதிய நிர்ணயம் செய்து, 1960 ஆம் வருடச் சம்பளக் குழு, 1970 ஆம் வருடச் சம்பளக் குழு, ஒரு நபர் குழு (கமிஷன்) இவற்றின் பரிந்துரைப் படியும் ஊதிய நிர்ணயம் செய்யும்படி மாவட்ட சுகாதார அலுவலர்களுக்குத் தெரிவிக்கப் பட்டது. அதன்படி 11 பேர்களுக்குச் சம்பளம் நிர்ணயம் செய்து, சென்னை மாநில கணக்காய்வுத் தலைவர் அலுவலகத்திற்கு தணிக்கைக்காகவும், ஒப்புதலுக்காகவும் அனுப்பப்பட்டுள்ளது. மீதி உள்ள 18 பேர்களுடைய ஊதிய நிர்ணயம் செய்ய மாவட்ட அலுவலர்களிடமிருந்து பணிப் பதிவேடு கேட்கப்பட்டுள்ளது. அது வெகு விரைவில் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். சிலர் ஓய்வு பெறும் தருவாயில் இருப்பதால், அவர்களின் பணிப் பதிவேடுகள், அவர்களின் ஓய்வூதியம் தொடர்பாக மாநில தலைமைக் கணக்காயருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது குறித்து மிக விரைவில் ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** சிலர் ஓய்வு பெற்றிருக்க வேண்டும். இது இந்த வருடத்திற்கு முன்னால் கொடுத்த விவரம். இதற்கு முன்னாலேயே தயார் செய்யப்பட்டதாக இருக்கும் என்று கருதுகிறேன். அதிலே 5, 6 பேர்கள் ஓய்வு பெற்றிருக்கிறார்கள். அவர்கள் பென்ஷன் பேப்பர் கொடுக்க மாட்டார்கள். அவர்கள் 3 சம்பளக் கமிஷன் மூலமாகவும் பயன் பெறவில்லை. இப்போது அவர்கள் ஓய்வு ஊதியம் பெற முயற்சி செய்தால், அவர்கள் மிகக் குறைந்த ஓய்வூதியத்தைத்தான் பெற முடியும். பென்ஷன் விதிகள் அப்படி இருக்கின்றன. தகவல் தவறாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** அங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்தைப் பரிசீலனையில் வைத்து இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

[பிற்பகல் 4-50]

## 2. அறிவிப்பு

### பேரவையிலிருந்து செய்தி

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்ட மன்றப் பேரவையினால் நிறைவேற்றப்பட்டு, சட்ட மன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/1979) பிரதியினை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

## 3 ஒத்திவைப்புத் தீர்மானம்

### வழக்கறிஞர்கள் நடத்தும் போராட்டம் குறித்து

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ம. சங்கரலிங்கம், வே. தங்கப்பாண்டியன், சி. ரா. லெட்சுமிகாந்தன், ஆ. நல்லசிவன், க. இராமமூர்த்தி, க. மீனாட்சி சுந்தரம், ஆ. பாலசுப்ரமணியம், ப. மாணிக்கம், ஜி. வசந்த பை, செ. முத்துசாமி ஆகியோர் வழக்கறிஞர்கள் போராட்டம் காரணமாக எழுந்துள்ள நிலைமை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு அந்த விதியின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாகச் சொல்லக் கோருகிறேன். 12 பேர்கள் பேச இருப்பதால், கட்சிக்கு ஒருவர் அனுமதிக்கப்படுவார். ஒருவர் விவரம் சொன்னால், மற்றவர்கள் உணர்வுகளை எடுத்துச் சொன்னால் போதும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு தலைவரவர்களே, இதே வகையில் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை இந்த அவையிலே—ஒரு வாரத்திற்கு முன்னால் என்று நினைக்கிறேன்—நான் கொண்டு வந்து பேசுகிறபோதுகூட, ஒவ்வொரு நாளாக பின்னால் நோக்கி, எத்தனை நாட்கள் நீதி மன்றங்கள் நடைபெறவில்லை, எந்தெந்தத் தேதிகளில் நடைபெறவில்லை



என்று அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில், தொடர்ந்து பல நாட்கள் நீதிமன்றங்கள் நடைபெறாததை எடுத்துச் சொன்னோம். அதற்கான காரணத்திற்குள் செல்லவில்லை. அது எல்லோரும் அறிந்த ஒன்று. அதற்குப் பிறகு இதுவரை நீதிமன்றங்கள் நடக்கவில்லை. நான் முந்தைய ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்னாலேயே, ஒரு வாரம் நீதிமன்றங்கள் நடைபெறவில்லை. அதற்குப் பிறகு, இன்றையவரை நீதி மன்றங்கள் நடைபெறவில்லை. தொடர்ந்து நீதிமன்றங்களை பகிஷ்கரிப்பது என்று சென்னை பார் கவுன்சிலும், மாவட்டங்களிலுள்ள வழக்கறிஞர்கள் சங்கங்களும் முடிவு செய்து, அறிவித்திருக்கின்றன. எனவே இன்றையதினம் தமிழகத்திலே நீதி தேடி, பல்வேறு நிலைகளிலே ஈடுபட்டிருக்கக்கூடிய பொது மக்கள் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை இந்த அரசு உணர்ந்திருக்குமென்று நான் அறிகிறேன். நீதிமன்றங்கள் செயல்படவில்லை என்றால், அதனால் எத்தனை லட்சம் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். மாவட்ட நிலையில் உள்ள நீதிமன்றங்களிருந்து துணை நீதிமன்றங்கள் வரை அத்தனை நீதிமன்றங்களும் செயல்படவில்லை. எனவே இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவம் என்ன என்பதை உணர்ந்து, அதில் தீர்வு காண வழிவகைகளைச் செய்ய வேண்டும். ஆனால் அரசால் தீர்வு காண முடியவில்லை. அரசு இந்தப் பிரச்சினையில் தோல்வி கண்டிருக்கிறதென்று ஒப்புக் கொண்டாக வேண்டிய நிலையில் இருக்கிறோம். எனவே அதைப் பற்றி இந்த அவையிலே விவாதிப்பதன் மூலம் அந்தப் பிரச்சினையில் தீர்வு காண முடியும். வழக்கறிஞர்கள் என்ன சொல்கிறார்கள், பொது மக்கள் என்ன கருதுகிறார்கள், அரசுத் தரப்பிலே என்ன சொல்லப்படுகிறது என்பதையெல்லாம் அப்போது அறிய முடியும். அமைச்சர்களின் விளக்கத்தைக் கேட்டுவிட்டு, இந்தத் தீர்மானத்தை அனுமதிக்காமல் தள்ளும்போது, அரசுத் துறைச் செயலாளர்கள் அல்லது அதிகாரிகள் கொண்டிருக்கிற காரணங்களைத்தான் அமைச்சர்கள் சொல்கிறார்கள், என்ற அளவிற்குப் பிரச்சினை முடிந்து விடுகிறது. நாங்கள் சொல்வதைக் கேட்க வாய்ப்பில்லை. நான் பிரச்சினையின் உள்ளே போகாமல் சொல்கிறேன்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 மார்ச் 19

ஒரு வழக்கறிஞர் தாக்கப்பட்டிருக்கிறார். அவர் அநீதிக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார் என்று வழக்கறிஞர்கள் சங்கம் உணர்கிறது. அதை அகற்றுவது அரசின் கடமை. எந்த ஒரு தனி மனிதனும் தன்னுடைய கடமையைச் செய்யும் அளவிற்கு, அவனுக்கு ஆபத்து வராமல் தடுக்க வேண்டியது அரசின் கடமை. வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டு, அரசு அனுமதிக்கின்ற சன்னது பெற்று, அரசு அனுமதியோடு ஒருவர் தொழிலைச் செய்யும்போது, அவர் அரசின் காவல் துறையால் அவமதிக்கப்பட்டிருக்கிறார். அவருடைய உரிமையை, அரசு அங்கமாக இருக்கிற அதிகாரிகளால் இழந்திருக்கிறார் என்ற பெரிய குறை ஏற்பட்டிருக்கிறது. இந்த மன்றத்திலே இருக்கக் கூடிய ஒரு உறுப்பினர், திரு. தர்மராஜ் சந்தோஷம் அவர்கள், எதிர்க் கட்சியைச் சேர்ந்தவரல்ல. எதிர்க் கட்சி என்று இருந்தாலும், அரசை ஒட்டிச் செல்கிற அளவிற்கு, நியாயமான கருத்துக்களைச் சொல்பவர். எதிர்க் கட்சியிலிருந்து சொல்வதாக இருந்தாலும், ஆளும் கட்சியை ஆதரிக்கும் இடத்தில் ஆதரிப்பார். எதிர்க் கட்சிகளை ஆதரிக்கும் இடத்தில் ஆதரிப்பார். அரசியல் நோக்கத்தை அவர்களிடத்திலே சுட்டிக் காட்டிச் சொல்ல முடியாது. அவர்கள்தான் முதன் முதலில் மதுரையிலே நடந்த சம்பவத்திற்கு ஊர்வலமாகச் சென்று, மகஜர் கொடுத்திருக்கிறார். பிறகு நாடு முழுவதும் அது பரவியிருக்கிறது. 15, 20 நாட்கள் ஆகிவிட்டன. சட்டக் கல்லூரி மாணவர்கள் இப்போது ஈடுபட்டிருக்கிறார்கள். கல்லூரி நிரந்தரமாக மூடப்பட்டிருக்கிறது. அவர்கள் காலையிலே ஊர்வலமாக வந்து, கோட்டைக்குள் வந்து, கோரிக்கைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே இந்தப் பிரச்சினையில் முதலமைச்சரவர்கள் தலையிட்டு, கடிதம் கொடுத்திருந்தும், அந்தக் கடிதத்தை நேற்றைய முன்தினம் வழக்கறிஞர்கள் சங்கம் ஏற்றுக்கொள்ளாமல், கடிதத்தால் பிரயோசனமில்லை. அரசின் கருத்து எங்களைப் பாதிப்பதாக இருக்கிறது என்று சொல்லி, அது செய்தித்தாள்களிலும் வந்திருக்கிறது. எனவே பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக, ஒருவர் அடங்கிய ஒரு விசாரணைக் குழு அமைத்திருக்கிறோமென்று அரசு சொல்கிறது. அவர்கள்



1979 மார்ச் 19] [திரு. ம. சங்கரலிங்கம்]

மாவட்ட நீதிபதி அளவில் நீதி விசாரணை இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். உயர்நீதி மன்ற நீதிபதி கூட கேட்கவில்லை. மாவட்ட நீதிபதி அளவில் நீதி விசாரணை வேண்டுமென்று கேட்ட கடிதத்தைப் புறக்கணித்து, அதிகாரிகளுடைய கருத்து, வழிக்கேற்ப செய்திருக்கிறார்கள். போலீஸ் அதிகாரியினுடைய பிரதிநிதி, வழக்கறிஞர்களின் பிரதிநிதி, மாவட்ட நீதிபதி அல்லது உயர்நீதி மன்ற நீதிபதி என்று மூவரைப் போட்டு, நீதி விசாரணைக்குண்டான முறையையே மாற்றி, இதுவரை வரலாற்றிலே இல்லாத அளவிற்கு நீதி விசாரணையைக் கேலிக் கூத்தாக்கி, ஒரு புதிய அமைப்பு முறையைக் கொண்டு வந்திருப்பதால், சட்டம் தெரிந்த, சட்டத்தின்படி நடக்க விரும்புகிற, சட்டத்தின் மூலம் நீதியை வெளிக் கொணர இடையறாது பாடுபடும் சட்டம் படித்த வழக்கறிஞர்கள், இந்த நாட்டிலே சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய மாணவர்கள் இன்று உணர்ச்சி வயப்பட்டு, இதிலே தீவிரமாக ஈடுபட்டிருப்பதால், அரசின் அணுகுமுறை இதிலே மாற வேண்டும். அவர்களுடைய பிரதிநிதிகளை அழைத்துப் பேசி, பிரச்சினையைத் தீர்த்திருக்க வேண்டும். சின்னப் பிரச்சினை நடைபெற்றிருக்கிறது. மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எத்தனையோ தடவை போயிருக்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்களை அழைத்து, **T.B.** -ல் வைத்துப் பேசி, உண்மை என்ன என்று காவல் துறை அதிகாரிகளை அழைத்துப் பேசி, விசாரணை செய்து, தக்க நடவடிக்கை எடுத்திருந்தால், இந்த அளவிற்கு நிலைமைகள் வந்திருக்காது. புண் முற்றி, பவுத்திரமாகி, பின்னால் காலை எடுக்கிற, கையை எடுக்கிற சூழ்நிலை வந்திருக்காது. அரசின் அணுகுமுறை படுதோல்வி அடைந்து, சரியான முறையில் பிரச்சினை தீரவில்லை என்று கருதுவதால், இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து, இதைப்பற்றி விவாதிப்பதன் மூலம். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இந்த அவை உதவி செய்வதாக அமையுமென்று கூறி, இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து, இதைப்பற்றி விவாதிக்க தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1979 மார்ச் 19

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் நடந்த நிகழ்ச்சி காரணமாக, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டதுபோல, சட்டத் துறையிலே படிக்கின்ற மாணவர்கள் பயில்கின்ற கல்லூரிகள் மூடப்பட்டிருக்கும் நிலையும், வழக்கறிஞர்கள் நீதி மன்றத்தைப் புறக்கணித்துவிட்டதால், நீதி மன்றங்கள் இயங்காத நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையைக் குறித்து விரிவாக, மாண்புமிகு உறுப்பினரும், எங்கள் அமைப்பின் தலைவருமான திரு. தர்மராஜ் சந்தோஷம் அவர்கள் மாண்புமிகு முதல்வரவர்களிடம் நேரிலே சொல்லியிருக்கிறார்கள். அங்கே உள்ள நிலையைத் தெளிவாக எடுத்துச் சொல்லி, நீதி விசாரணையின் அவசியத்தை வற்புறுத்திச் சென்றிருக்கிறார்கள். ஆனால் இந்தப் பிரச்சினை தொடர்ந்து, அவர்கள் கோரிக்கை ஏற்கப்படாததன் காரணமாக, இன்று நீதி மன்றங்கள் நடக்காததால், பல இன்னல்கள் ஏற்பட்டிருக்கின்றன. விடுமுறைக் காலத்தில் நீதி மன்றங்கள் மூடப்பட்டு விடும். இப்பொழுதும் நீதி மன்றங்கள் நடக்காததாலும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டதுபோல், வழக்குகள் தேங்கிக் கிடக்கும் நிலை ஏற்பட்டு, அதனால் மக்கள் பாதிக்கப்படுவார்கள். நீதியை, நியாயத்தைப் பெற வேண்டுமென்று எண்ணுகிற ஏழை மக்கள் புறக்கணிக்கப் படுகிறார்கள். நீதித் துறையில் அமைதிக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் இந்தப் பிரச்சினையில் அரசு விரைவாகத் தீர்வு காண வேண்டும். இதை மிக அவசிய, அவசர, முக்கிய பிரச்சினையாகக் கருதி, வழக்கறிஞர்கள் சங்கம் கோரும் கோரிக்கையை ஏற்று, அரசு ஆணையிட வேண்டுமென்று, மாண்புமிகு திரு. தர்மராஜ் சந்தோஷம் அவர்களுடைய சார்பிலே, முதலமைச்சரவர்களிடம் அவர் அன்று நேரிலே சொன்னதுபோல், மீண்டும் சொல்லி, மேலவையின் மூலமாக வற்புறுத்துகிறேன். இந்தப் பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்படாத நிலை தோன்றியிருப்பதால், இன்று அவையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து, இதை குறித்துப் பேச மேலவைத் தலைவரவர்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1979 மார்ச் 19]

(பிற்பகல் 5-00)

***திரு. ஆ. நல்லசிவன் :** தலைவரவர்களே, இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்கு ஒன்றிரண்டு மிக முக்கிய விஷயங்களைக் கொண்டு வருகிறேன். மந்திரி சபை, சட்டமன்றம், நீதி மன்றம் இவை மூன்றும் தான் நாட்டின் நடவடிக்கைகளுக்கு முக்கிய இணைப்பாக இருப்பவை. இப்பொழுது இதில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. நீதி மன்றங்கள் செயல்பட முடியாமல் இருக்கின்றன. நீதி மன்றங்களில் அரசாங்கத்தினுடைய, மக்களுடைய வழக்குகளைக் கொண்டுபோக முடியவில்லை. நீதி மன்றங்கள் செயல்பட முடியவில்லை. அரசினுடைய (ஒரு wing ஆக) அங்கமாக இருக்கின்ற நீதி மன்றங்கள், சட்டத் துறை சரிவர இன்றையதினம் இயங்கவில்லை. அரசு சாதாரண விஷயமாக இதைக் கருதுகிறதா? மேலும் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை, விசாரணையில் இதுவரை இல்லாத ஒரு புது முறையை அரசாங்கம் புகுத்தியுள்ளது. போலீஸ் அதிகாரியையும் கமிட்டியில் போட்டிருக்கிறார்கள். அப்படி இல்லாமல் சாதாரணமாக நீதி விசாரணைகள் நடைபெறும்போது பின்பற்றப்படக் கூடிய முறைகளை இங்கேயும் பின்பற்றியிருக்கலாம். அதில் அரசுக்கு என்ன சிரமம் இருக்கிறது? செஷன்ஸ் நீதிபதியை மட்டும் வைத்து ஏன் விசாரணையை நடத்தக் கூடாது என்று வக்கீல்கள் கேட்கிறார்கள். இரண்டு பேரை அவருடன் கூட ஏன் போட வேண்டும்? போலீஸ் அதிகாரி ஒருவரைப் போடுவதன் மூலம், குற்றம் செய்த போலீஸ் அதிகாரியைப் பாதுகாப்பதற்காகச் செய்யப்படும் முயற்சியோ இது என்று சந்தேகப்பட முடிகிறது. எனக்கே கூட அப்படிப்பட்ட சந்தேகம் தான் எழுகிறது. மதுவிலக்கைப் பொறுத்தவரை கூட நீங்கள் அப்படிப்பட்டதொரு அணுகு முறையைப் பின்பற்றவில்லையா? உங்களுடைய பிடிவாதமான போக்கு அப்படிப்பட்ட ஒரு எண்ணத்தைத்தான் அவர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது. முதலிலே ஒரு விசாரணை வாரியத்தைப் போட்டிருக்கிறீர்கள். அவர்களுக்கு அதில் திருப்தியில்லை. அவர்களில் ஒருவர் பாதிக்கப் பட்டிருப்பதால், விசாரணை மூலம் சகல விஷயங்களையும் வெளியே கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்தில் நீதிபதியை மட்டும் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். எல்லோருக்கும்

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 மார்ச் 19

திருப்தி ஏற்படும் வகையில் இதை அரசு செய்தால் என்ன? கௌரவப் பிரச்சினையாக இதை அணுகக் கூடாது. இதன் மூலம், வக்கில்களுடன், நீதி மன்றங்களுடன் confrontation உண்டாக்குகிறார்கள் என்ற எண்ணம் நாட்டு மக்களிடம் ஏற்படவில்லையா? இன்றையதினம் தமிழ் நாட்டிலே இருக்கின்ற அறிவாளிகளிடையே கூட அப்படிப்பட்டதொரு எண்ணம் ஏற்படவில்லையா? இப்படிப்பட்ட எண்ணங்கள் ஏற்படுவது இந்த அரசுக்கு நல்லது தானா? கவுரவப் பிரச்சினையாக அரசு இதைப் பார்க்காமல், இதற்கு முன்னால் நீதி விசாரணைகளில் கையாளப்பட்ட முறைகளை இதிலும் கையாள வேண்டும். அதைத்தான் வழக்கறிஞர்கள் கேட்கிறார்கள். இந்த நிலையில் நீதி மன்றங்கள் சரியாக இயங்கவில்லையாதலாலும், வழக்கறிஞர்கள் நீதி மன்றங்களை பகிஷ்கரித்திருப்பதாலும், அவர்கள் செஷன்ஸ் நீதிபதி ஒருவரை மட்டும் நியமித்து, இதை விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்கின்ற கோரிக்கையை அரசு நிறைவேற்றாமல் இருப்பதாலும், பிரச்சினை தீராமல் வளர்ந்து கொண்டே போவதால், இந்த அவசர பதட்ட நிலையினைப்பற்றி விவாதிக்க அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** பேரவைத் தலைவரவர்களே, மன்னிக்க வேண்டும். பேரவைத் தலைவர் என்று வருகிறது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** எல்லோரும் பொதுவாக "தலைவரவர்களே" என்று சொன்னால் போதும். நடந்த ஒரு சம்பவத்தை—நான் வேடிக்கையாகச் சொல்வதாகக் கருத வேண்டாம்—உண்மையாகவே சொல்கிறேன். சில பகுதிகளிலிருந்து வருபவர்களுக்கு "ற்று" என்ற வார்த்தை வராது. "ட்டு" என்று தான் வருகிறது. அவை நடவடிக்கைகளைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் திரும்பிப் போகும்போது, என்ன "மாட்டுத் தலைவரவர்களே" என்று சொல்லுகிறார்களே என்று கேட்டுவிட்டுப் போனார். தலைவருடைய இருக்கையில் இருக்கிறவர்கள் எல்லோரும் தலைவர்கள் தான். ஆகவே பொதுவாக "தலைவரவர்களே" என்று சொன்னால் போதுமானது.



1979 மார்ச் 19]

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். அப்படி "மாட்டுத் தலைவர்" என்று சொன்னவர் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்தவராகத் தான் இருப்பார். (சிரிப்பு). அவர்களுக்குத்தான் "ற்றன", "ட்டன்ன" உச்சரிப்பு வித்தியாசம் தெரியாது. "கமிட்டி" என்பதை "கமிற்றி" என்று தான் அவர்கள் சொல்வார்கள்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** பொறுப்பிலே இருப்பவர்களை அவர் "மாட்டிக் கொண்டார்" என்று சொல்லுவார்களே, அந்த அர்த்தத்தில் கூடச் சொல்லியிருக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** "தலைவர்" என்று குறிப்பிட்டால் போதும். அவையைக் குறிப்பிட வேண்டியதில்லை. குழப்பம் தேவையில்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவரவர்களே, கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முன்னதாகத் தீர்மானத்தைப் படிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நேரம் போதாது என்பதால், தீர்மானத்தைப் படிக்கத் தேவையில்லை. நானே கூட தீர்மானத்தைப் படித்திருக்கிறேன். உறுப்பினர் அவர்கள் பேசலாம்.

***திரு. க. இராமமூர்த்தி:** தலைவரவர்களே, ஒரு பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய முறையில் தீர்க்காமல் இருப்பதால், தீர்க்க வேண்டிய நேரத்தில் தீர்க்காமல் இருப்பதால், எவ்வளவு பூதாகாரமான விளைவுகளை அது உண்டாக்குகிறது என்பதை நாம் இன்றையதினம் பார்க்கிறோம். பிரச்சினை தோன்றியபோதே,* அரசு தலையிட்டு பிரச்சினையைத் தீர்த்திருந்தால், வழக்கறிஞர்கள் எல்லோரும் போலீசாருக்கு விரோதிகள் போலவும் போலீசார் எல்லோரும் வழக்கறிஞர்களுக்கு விரோதிகள் போலவும் கருதக்கூடிய நிலை இன்று ஏற்பட்டிருக்காது. இந்தப் பிரச்சினை தவிர்த்திருக்கக் கூடிய பிரச்சினை என்று சொல்ல மாட்டேன். ஆனால் இது

[திரு. க. இராமமூர்த்தி] [1979 மார்ச் 19

எவ்வளவு வேதனைக்குரிய பிரச்சினையாக அமைந்துவிட்டது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். பிரச்சினை தோன்றியவுடனே அரசு தலையிட்டு முடிவு எடுத்திருக்க வேண்டும். அரசுக்குத் தகவல்கள் வர வேண்டியிருந்தால், ஒன்றிரண்டு நாட்கள் அதற்குக் காலதாமதமாவது தவிர்க்க முடியாதது. ஆனால் இடையிலே நடைபெற்ற காரியங்கள் எந்த அளவுக்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு போய் விட்டிருக்கின்றன என்பதை நாம் இன்று காண முடிகிறது. இன்றையதினம் நாட்டிலே நீதி மன்றங்கள் எங்கேயும் இயங்கவில்லை. வழக்கறிஞர்கள் கோர்ட்டுகளுக்குப் போகவில்லை. சட்டக் கல்லூரிகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை. இது தொடர்பாக இன்னும் ஏதேது நேருமோ என்ற நிலைமைகள் இருக்கின்றன. அரசைப் பொறுத்தவரை, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற ஆர்வத்தோடு தான் நான் இதைத் தெரிவிக்கின்றேன். பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி ஆட்சியினர் உடனடியாக விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதே நேரத்தில், இதுவரை மாநிலம் காணாத வகையில் "Board of enquiry" என்ற முறையில் 3 பேரை நியமித்திருப்பது எந்தச் சூழ்நிலையில் என்பது எனக்குப் புரியவில்லை. ஒருவர் தான் நீதி விசாரணை நடத்துபவர். 2 பேர் விசாரணைக்குத் துணை செய்வதற்கு என்கிற நிலையை அரசு எடுத்திருக்குமானால், அது எந்த நோக்கத்தில் செய்யப்பட்டது? நாட்டில் இதற்கு முன்பு நடைபெற்ற நீதி விசாரணைகளில் எல்லாம் சம்பந்தப்பட்டவர்கள் சார்பாக வழக்கறிஞர்கள் வாதாடியிருக்கிறார்கள். இன்று புதிதாக சம்பந்தப்பட்டவர்கள் சார்பாக காவல் துறையைச் சார்ந்த ஒரு அதிகாரியும் வழக்கறிஞர் பிரதிநிதி ஒருவரும் அதில் இடம் பெற்றிருக்கக் கூடிய நிலை தேவையில்லை. இதனால் இன்னொரு விளைவும் ஏற்பட்டிருக்கிறது. அரசு அதிகாரிகள் இதில் இடம் பெறுவது அரசு தலையிட்டது என்கிற பிரச்சினையை உருவாக்கும் என்பதோடு வேறு பல சங்கடங்களையும் ஏற்படுத்தும். அரசோடு பேச்சுவார்த்தை நடத்தினால் யார் சொல்வதை நம்புவது என்கிற சச்சரவுகள் எல்லாம் உண்டாகின்றன. முதலமைச்சர் அவர்களுடைய கையெழுத்து இல்லாமல் வழக்கறிஞர் சங்கத்திற்குக் கடிதம்



1979 மார்ச் 19] [திரு. க. இராமமூர்த்தி]

சென்றது என்கின்ற செய்தி இன்றைக்கு வந்திருக்கிறது. மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த, அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கின்ற, இந்தியா முழுவதும் இருக்கின்ற அத்தனை பேரும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கின்ற, வழக்கறிஞர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இன்றையதினம் இது இருந்து கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டிலே, நீதித் துறையிலே இருக்கின்ற வழக்கறிஞர்கள் பற்றி ஏற்கெனவே அகில இந்தியாவுக்கும் மதிப்பும் மரியாதையும் உண்டு. இவ்வளவு பெரிய மரியாதைக்குரிய வழக்கறிஞர்களுடைய பிரச்சினையில் வழக்கறிஞர்கள் சங்கத்துக்கு அனுப்பப்பட்ட முதல்வரின் கடிதம் கையெழுத்து இல்லாமல் போயிருக்கிறது என்பதைக் கேட்க எவ்வளவு வேதனையாக இருக்கிறது. முதலமைச்சருக்கு தலைமைச் செயலகத்தில் தனியாக ஒரு அலுவலகம் உண்டு. அலுவலகக் கடிதம் உள்ளிட்ட காரியங்களைக் கவனிக்க ஒரு பெரிய சீனியர் ஐ. ஏ. எஸ். அதிகாரி இருக்கிறார். ஜில்லா கலெக்டராக இருந்தவர். போர்ட் மெம்பராகக்கூடிய அனுபவம் பெற்றவர் இவர். வேறு பல பேர் அவருக்குக் கீழே இருக்கிறார்கள். 4, 5 பிரைவேட் செக்ரட்டரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கீழே பல P.A. -க்கள் இருக்கிறார்கள். இவ்வளவையும் வைத்துக் கொண்டு தான் இத்தனை விஷயங்கள் நடந்திருக்கின்றன. அரசு நிர்வாகத்தைப் பற்றியும் நிர்வாகம் கையாளப்படுகின்ற நிலையைப் பற்றியும் நினைக்கும்போது, எவ்வளவு கேவலமாக கீழே போய்க் கொண்டிருக்கின்றோம் என்பதைப் பார்க்க முடிகிறது. இன்றைய தினம் நிர்வாகத் திறமை மிக்க தமிழ்நாடு எவ்வளவு வேகமாகக் கீழே போய்க் கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்த நிலையிலே முக்கியமான பிரச்சினை. ஒரு வேளை முதலமைச்சருக்கு அவசரமாக பம்பாய் அல்லது வேறு ஊர்களுக்குப் போக வேண்டியிருந்திருக்கலாம். Office Copy-லே அவர் கையெழுத்துப் போட்டால் கூட போதுமானது. மற்ற விஷயங்களைக் கவனிக்க நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் இருக்கிறார்கள். அய்யா கூட அதைச் செய்திருக்கலாம். அவர் நீதிபதியாக இருந்தவர். வழக்கறிஞர்கள் மத்தியில் செல்வாக்கு படைத்தவர். கிரிமினல் வழக்குகளில் வாதாடியவர். அப்படிப்பட்ட செல்வாக்கு

படைத்த நீதிபதி அவர்கள் நம்முடைய அமைச்சரவையிலே இடம் பெற்றிருப்பது கண்டு நாம் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்

(பிற்பகல் 5-10)

அவர்கள் இந்தப் பிரச்சினையை மிகச் சுலபமாகக் கையாண்டிருக்க முடியும். இன்றையதினம் அவையிலே அவர் இருப்பார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் நம் எதிர்பார்ப்புகளை மீறி வேதனைக்குரிய இந்தச் சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. இதையேகூட நான் கண்டிக்க வேண்டுமென்ற அடிப்படையில் இங்கே குறிப்பிட விரும்பவில்லை. நாட்டில் இப்பிரச்சினையையொட்டி ஏற்பட்டிருக்கிற விளைவுகள் தமிழகம் முழுவதற்குமே வேதனை யளிப்பதாக இருக்கின்றன. இன்னும் ஓரிரண்டு நாட்களில் ஏற்பட்டுவிட்டிருக்கிற நிலைமைகள் வளர்ந்து கொண்டே போகுமானால், இந்தச் சண்டை போலீஸ்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் என்ற வகையிலே போய் முடியுமோ என்றுகூட நான் அச்சப்படுகிறேன். இந்தப் பிரச்சினை பற்றிப் பல்வேறு விஷயங்களை விவாதிக்க வேண்டிய சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. பல அதிகாரிகள்—தலைமைச் செயலாளர், I.G. போன்ற பெரிய பதவிகளில் இருப்பவர்கள் ஆண்டாண்டுகளாக அந்தப் பதவியிலேயே இருப்பதால் ஒரு வகையான 'Lethargy' வந்துவிட்டதோ என்றுகூட நாம் அய்யப்பட வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதித்திருந்தால், என்னென்ன பேசியிருக்க முடியுமோ அவ்வளவையும் உறுப்பினர் இப்போதே பேசி விட்டார். எனவே அவையை ஒத்திவைக்கவில்லை என்று பின்னாலே குறை சொல்ல முடியாது! (சிரிப்பு)

**திரு. க. இராமமூர்த்தி:** எதற்குச் சொல்லுகிறேன் என்றால், அவர்கள் பல ஆண்டுகளாக அந்தப் பதவிகளிலே இருப்பதன் காரணமாக அந்தப் பெரிய அதிகாரிகள் இன்றையதினம்





முறையாகச் செயல்படாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். எனக்கிருக்கிற அச்சமெல்லாம், வழக்கறிஞர்கள் மேற்கொண்டிருக்கிற நிலையின் காரணமாக புதிய விளைவுகள், நிர்வாகச் சங்கடங்கள் முதலியவை ஏற்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தில் கடிதப்போக்குவரத்துக்கூட எந்த அளவுக்கு முறையற்ற வகையில் நடைபெறுகின்றது என்று நமக்குப் புலப்படுகிறது. எனவே இந்தப் பிரச்சினையின் காரணமாக ஏற்பட்டிருக்கிற நிலைமைகளைப் பற்றி விரிவாக விவாதிக்க, அதோடு ஒரு நல்ல முடிவைக் காண, அவையின் இன்றைய அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டின் வழக்கறிஞர்கள் இன்றைக்கு வழக்கு மன்றங்களுக்குச் செல்லவில்லை. தொடர்ந்து அவர்கள் வழக்கு மன்றங்களைப் பகிஷ்கரிக்கிறார்கள். சட்டக் கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன. சட்டக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** பேரவையில் அமைச்சர் குறிப்பிட்டவைகளை இந்த மன்றத்திலே குறிப்பிட வேண்டாம் என்று உறுப்பினருக்குச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** பேரவை பற்றிய குறிப்பு இந்த அவையின் நடவடிக்கைக் குறிப்பில் இல்லாமல் இருப்பது நல்லதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** பேரவையைப் பற்றி உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் இங்கே குறிப்பிட்ட பகுதி அவையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட ஆணையிடுகிறேன். செய்திப் பத்திரிகைகளும் இந்தத் தகவலைப் பிரசுரிக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம்:** சட்டக் கல்லூரி ஆசிரியர்கள், பேராசிரியர்கள் ஆகியோர் வாக்களித்து இந்த அவைக்கு நாங்கள் உறுப்பினர்களாக வந்திருக்கிறோம். சட்டத்தை எடுத்துச் சொல்லி மற்றவர்களுக்காக வாதாட வேண்டியவர்கள் வழக்குரைஞர்கள். ஆனால் இன்றையதினம் அவர்களுக்காக நாங்கள் இங்கே வாதாடக்கூடிய நிலையில் ஒரு பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது என்பதற்காக நான் உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். அவர்கள் இரண்டு கோரிக்கைகளைத் தான் வைத்திருக்கிறார்கள். ஒன்று தவறு செய்த காவல் துறை அதிகாரியைத் தாற்காலிகமாகப் பணி நீக்கம் செய்ய வேண்டும். மற்றொன்று மாவட்ட நீதிபதி நிலையில் உள்ள ஒருவரைக் கொண்டு இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரியை இப்போது மாற்றியிருக்கிறார்கள். அப்படி அவரை மாறுதல் செய்ததே அவருக்கு ஒரு 'பனிஷ்மென்ட்' (தண்டனை) போலிருந்தாலும் பரவாயில்லை. எங்கே அவருடைய மனைவி தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறாரோ, எந்தப் பகுதிக்கு தனக்கு மாறுதல் தர வேண்டுமென்று அந்தக் காவல் துறை அதிகாரி ஏற்கெனவே கோரி வந்தாரோ அந்த இடத்திற்கு 'பனிஷ்மென்ட்' (தண்டனை) தருவதைப் போல் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறார். இப்படிப்பட்ட நிலைமைகள் வளருவது நாட்டில் சட்டம் அமைதி ஒழுங்கு இவைகளையெல்லாம் குலைப்பதற்கு வாய்ப்பாக அமையும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே இந்த அவசர அவசிய உணர்வுகளை மனதில் கொண்டு காவல் துறையைச் சார்ந்தவர்கள் தவறு செய்யும்போது, அரசாங்கம் அவர்களை ஓரளவுக்காவது கண்டித்து முறைப்படி அவர்கள்மீது நடவடிக்கை எடுத்தால்தான், இனி இப்படிப்பட்ட சம்பவங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடவாமல் இருக்கும். அதைச் செய்யாமல், காவல் துறையைச் சார்ந்தவர்கள் தவறு செய்யும் போது, அவர்களைக் காப்பாற்றுவதுபோல் அரசின் நடவடிக்கை அமையுமானால், அதுவே அரசுக்கு ஒரு அவப்பெயரைக் கொண்டு வரும் என்று சுட்டிக்காட்டி, மிக முக்கியமான இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.





* **திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் ஒரு முக்கியமான, ஜீவாதாரமான கோட்பாடு அடங்கியிருக்கிறது. அதாவது நீதித் துறையின் சுயேச்சையான தன்மையும், அதனுடைய நேர்மையும் "Independence of the judiciary and its integrity" முக்கியமான கோட்பாடுகளாக இந்தப் பிரச்சினையில் அடங்கியிருக்கின்றன. ஒரு வழக்கறிஞர் தாக்கப்பட்டதையொட்டி அவர்களிடையே ஒரு பதட்ட நிலை உருவானதன் காரணமாக அவர்கள் இன்றைய தினம் ஒரு வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள். இந்தச் சம்பவம் குறித்து ஒரு நீதி விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பதுதான் அது. விசாரணை செய்ய நீதிபதியை நியமிக்கும் பொறுப்பு அரசாங்கத்திடம் இருக்கிறது. அரசு தான் விரும்புகிற யாரை வேண்டுமானாலும் நியமிக்கட்டும். ஆனால் அந்த விசாரணை ஒரு நீதி விசாரணையாக இருக்க வேண்டுமென்றுதான் அவர்கள் கோரி வருகிறார்கள். இதை அவர்கள் கேட்பதற்குக் காரணம் நடைபெற்றுவிட்ட நிகழ்ச்சியைப் பற்றிப் பல்வேறு தாவாக்கள், விவரங்களைப்பற்றி பல்வேறு தாவாக்கள் எழுந்திருப்பதால் "Dispute over facts" அவைகளைத் தீர்மானிக்க ஒரு "Board of enquiry" போடுவது என்பது போதுமானதல்ல என்பது மட்டுமல்ல, அதன் காரணமாக உண்மையைத் தீர்மானிக்க முடியாத நிலையும் ஏற்படலாம். இந்தச் சம்பவத்தால் தாக்கப்பட்டிருப்பவர் ஒரு வழக்கறிஞர். நமது குடியரசுச் சட்ட அமைப்பின் அடிப்படையானாலும் சரி, ஜனநாயக வாழ்வின் அஸ்திவாரமானாலும் சரி, நீதித் துறைக்கு நாம் தர வேண்டிய உரிய இடத்தைத் தந்தாக வேண்டும் என்பதைத்தான் வலியுறுத்துகின்றன. நீதித் துறையின் தரத்தையும், அந்தஸ்தையும், அதன் உரிமைகளையும் நாம் தாழ்த்தினால், அதனால் ஏற்படுகிற விளைவுகள் மிகவும் விபரீதமாக இருக்கும். தற்போது ஏற்பட்டிருக்கிற மோதல் நீதித் துறைக்கும், காவல் துறைக்கும் ஏற்பட்டிருக்கிற மோதலாக இருக்கிறது. இது ஒரு விரும்பத்தக்க சூழ்நிலையல்ல. அதன் காரணமாகத்தான் நீதிமன்றங்களில் பங்கு பெற வேண்டிய வழக்கறிஞர்கள் அது உயர்நீதி மன்றமானாலும் சரி, மாவட்ட நீதிமன்றங்களானாலும் சரி—அனைத்து நீதிமன்றங்களையும் இன்றைக்கு பகிஷ்கரிக்கிறார்கள். இதன் காரணமாக நம் நாட்டு ஜனநாயகத்திற்கு ஏற்பட இருக்கும் பாதகத்தை நாம் எண்ணிப்

[திரு. ப. மாணிக்கம்] [1979 மார்ச் 19

பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல, இந்தப் பிரச்சினை குறித்து முறையிட வந்த மாணவர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள், அவர்களுடைய கல்லூரி மூடப்பட்ட காரணத்தால், இங்கே முறையிட வந்தபோது கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். என்னுடைய அச்சமெல்லாம் இப்படி ஒரு நிர்வாக அமைப்பில் ஏற்படுகிற மோதலில் நாம் காவல் துறையின் பக்கத்தில் இருக்கிற நியாயத்தை மட்டும் பார்க்க வேண்டும் என்று அரசு எண்ணினால், அது நமது ஜனநாயகத்திற்கே பாதுகாப்பாக அமையாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இது ஒரு தவறான விளைவைத்தான் ஏற்படுத்தும் என்று எடுத்துக் காட்டி, இந்தப் பிரச்சினையைப் பற்றி விரிவாக விவாதிக்க அவையின் இன்றைய மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* THIRU G. VASANTHA PAI : Hon. Chairman, Sir, I join in the sentiments expressed by the hon. the Leader of the Opposition and the hon. Members belonging to different political parties. On behalf of the Members of the Bar and the Constituency which I represent, I join in the sentiments expressed about this matter being discussed in this House in full because it involves a question not only of the prestige of the Judiciary but also of orderly administration in this State.

Sir, I want to submit to you that when on the last occasion I brought an Adjournment Motion on this matter in this House, I merely said that such a situation had arisen where a Police Officer had not given co-operation to enfore an order of Court and I stated that this Government should take notice of it, enquire into it squarely and place the matter before the House. Today, a situation has arisen when all over this State, several of our Courts have closed because of a resentment on remarks that have been made at random without probably the necessary depth with which the matter should have been gone into, and that too only by a Judicial Tribunal. Stray remarks are being made that the Police have no confidence because the lawyers are involved, that the Judiciary may take sides and things like that which do not redound to the credit of either the Police or the persons who gave vent to the feelings of the Police to the public. Sir, it casts a reflection on the Judiciary and it brings it down in the eyes of the public. There may be other forums where the matter may have to be taken up in respect of such random remarks and this is not the forum. We are only bringing to the notice of the Government that, after all this is not an arbitration in which one party who is aggrieved



1979 மார்ச் 19] [Thiru G. Vasantha Pai]

appoints his own arbitrator. It is not like the Police appointing a policeman on the committee, the lawyers appointing their representative on the committee and the Judge being an arbiter. We do not want such a thing at all. We want that the ordinary courts of law should be resorted to and a judicial officer of the status of a District Judge or, if the Government feel that a High Court Judge is required, of the status of a High Court Judge should enquire into this to see that justice is meted out not only to the policeman but also to the lawyer. If the lawyer is wrong, justice should be meted out to the policeman and if the policeman is wrong, justice should be meted out to the lawyer. That is the position which the lawyers take in this matter and which I. Sir, belonging to that noble profession, would urge the Government to take because this is not a matter of an arbitration where two persons are there to represent their rtspective intesests and the Judge is an arbiter. I want that Government should take up this matter from a judicial angle and ask the Chief Justice to appoint a District Judge to look into this matter or appoint one of his own colleagues to look into this matter. I reiterate that if the lawyer is at fault, the legal profession will not support him. I reiterate that if the Police is at fault, the legal profession will also not support the policeman but will ask proper punishment to be meted out to him. We are not taking sides in this matter. We only ask the Government to have an independent judicial enquiry in this matter. We are not saying in advance that so and so is a culprit. We are not saying in advance that so and so is condemned. In those circumstances. this is a matter which the Government should agree to be discussed in the House at the earliest possible opportunity. All feelings on either side should be brushed aside for the present and the question must be looked into purely from an objective angle in a matter like this which involves a law and order officer like a Sub-Inspector of Police, who was in charge of that Police Station. If the Advocate had exceeded his limits and either used the threat of his influence or some such thing before the Police Officer and tried to humiliate him, that aspect should also be considered by the Judge and the matter should be squarely dealt with. Therefore, I request that the Hon. Minister, in the interests of the larger issue which is involved in this matter, should agree to a discussion. I also request the Hon. Chairman to see that this discussion is made fully and that one day is allotted for discussion.

(பிற்பகல் 5-20)

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஒரு காவல் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி நாடு பூராவும் இன்றைக்கு ஒரு பெரும் பிரச்சினையாக வளர்ந்து இந்த வேளையில்

அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய பிரச்சினையாக இங்கே வந்திருக்கிறது. அந்த நிகழ்ச்சியிலே உண்மை என்ன என்பதைப்பற்றி ஆராய்வதற்கு நீதிபதி விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதிலே ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. நான் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்; இரண்டு தரப்பிலே இருப்பவர்களில் ஒருவர் போலீஸ் அதிகாரி, இன்னொருவர் வழக்கறிஞர். வழக்கறிஞர்கள் தங்களுடைய வலிமையான சங்கத்தினுடைய சார்பாக தங்கள் உரிமைக்காகப் போராடுகிறார்கள். அவர்களுடைய நியாயமான உரிமையை நான் வரவேற்கிறேன். அதேநேரத்தில் அவர்கள் இரண்டு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். ஒரு கோரிக்கை இந்த போலீஸ் அதிகாரியை சஸ்பெண்ட் செய்துவிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது இன்னொரு கோரிக்கை நீதிபதி மூலமாக இந்த விசாரணையை நடத்த வேண்டும் என்பது. இரண்டாவது கோரிக்கையில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. இந்த அரசு அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று நானும் அரசுக்குச் சிபாரிசு செய்கிறேன். வழக்கறிஞர்கள் சட்டம் அறிந்தவர்கள். காவல் துறை அதிகாரிகளைப் பொறுத்தமட்டில், இந்த நாடு சுதந்திரம் பெற்ற பிறகு அவர்களுக்கு என்று சங்கம் இருந்தாலும், மாண்புமிகு ராஜாஜி அவர்கள் காலத்திலே, அந்தச் சங்கம் நீக்கப்பட்டது. அவர்களுக்கு சங்கம் வைத்துக் கொள்ள சட்டத்திலே இடம் இருக்கிறதா இல்லையா என்று பிரச்சினை எழுமானால், நான் சொல்லிக்கொள்வேன், சமீபத்திலே மேற்கு வங்கத்திலே திரு. ஜோதிபாசு முதலமைச்சராக இருக்கும் இடத்தில் சங்கம் வைத்துக்கொள்ள உரிமை தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த உரிமை கொடுக்க வேண்டும் என்று சொல்லும் போது, போராட உரிமையும், தொழிற் சங்க உரிமையும் கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் இந்த மாதிரி நேரங்களிலே, மற்றவர்களுக்கு இருப்பதுபோல், சங்க ரீதியாக கருத்துக்களை வெளியிடக்கூடிய எந்தவிதமான வசதியும் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆகவே, அவர்களுக்கும் அந்த வசதியைக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். வழங்கறிஞர் சங்கத்தைக் கேட்கிறேன். "நீங்கள் சட்டம் தெரிந்தவர்கள், ஒருவர் மீது நடவடிக்கை நீதி



மன்றத்திலே இருக்கும்போது, அவரைத் தற்காலிக வேலை நீக்கம் செய்தால், அவர் அந்தக் குற்றத்தைச் செய்தார் என்று ஒத்துக்கொள்வதாகாதா?" இந்த நேரத்திலே நான் வழக்கறிஞர்களுக்கு எதிராகச் சொல்வதாக கற்றறிந்த வழக்கறிஞர்கள் நிச்சயமாக நினைக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். அப்படி அந்த அதிகாரியைத் தற்காலிக வேலை நீக்கம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கை நியாயம் என்று கருதினால், இந்த வழக்கறிஞர் சங்கத்திற்கு நான் பணிவன்போடு சொல்லிக் கொள்கிறேன், "அந்த வழக்கறிஞரைத் தற்காலிகமாக இந்த வழக்கு முடியும் வரை அவருடைய தொழிலை அவர் செய்யாமல் இருப்பதற்கு நீங்கள் உங்களுடைய சங்கத்திலிருந்து நடவடிக்கை எடுங்கள்". என்னைப் பொறுத்தவரையில், போலீஸ் அதிகாரிகளுக்குச் சங்கம் இல்லாததால் அவர்களுக்கும் ஒரு சங்கம் அமைப்பது பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும் என்று சிபாரிசு செய்கிறேன். ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல இந்த நாட்டிலே இருக்கும் அத்தனை பேருக்கும் அந்த உரிமை வேண்டும் என்ற உணர்வின் அடிப்படையில் சமநீதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விஷயம் இவ்வளவு கடுமையாக எழுந்திருக்கக்கூடிய இந்த நேரத்தில் மேலும் காலம் தாழ்த்தாமல் இன்றைக்கு அதைப்பற்றி விவாதித்து முடிவெடுப்பதன் மூலம் சரியான ஏற்பாட்டைச் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்து, இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*** மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்ற கட்சிகளுடைய தலைவர்களும், இதர மாண்புமிகு உறுப்பினர்களும் ஒரு சிக்கலான பிரச்சினை குறித்து அரசினுடைய அணுகுமுறை எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து நல்லெண்ணத்தின் அடிப்படையிலே தங்களுடைய கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் மாறுபட்ட நிலையில் ஒரு கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைப்பாடு, என்னைப் பொறுத்தவரையிலே, கவனிக்கப்பட வேண்டியது என்பதை நாம் மறந்துவிட முடியாது. நான் அதற்காக அந்த வழக்கறிஞர்களுக்கு உதவி செய்யக்கூடாது என்று

அவர்கள் சொன்ன கருத்தினை ஆதரிக்கிறேன் என்று தயவு செய்து யாரும் கருதக் கூடாது. அவர்களும் அந்த அர்த்தத்தில் செல்லவில்லை, பாதிப்புக்கு உள்ளானவர்கள் என்று வருகின்ற போது, அனைத்துத் தரப்பிலே உள்ளவர்களுடைய பிரச்சினையையும் நாம் ஒரேமாதிரியாக, நியாயமான முறையில் எடை போட வேண்டும். சம நீதி என்ற, சமன் செய்து சீர்தூக்கும் கோல் போன்ற அடிப்படையில் செய்ய வேண்டும். இந்தப் பிரச்சினை சிக்கலானது என்பதை எப்படி மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்கிறார்களோ, கருதுகிறார்களோ அதைப் போலத்தான் அரசும் கருதுகிறது என்பதை முதலிலே விளக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, இந்தப் பிரச்சினையில் தீர்வு காண்பதிலே அரசு தோல்வி கண்டுவிட்டது என்ற கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்தையொட்டி நான் தெரிவிக்க விரும்புவதெல்லாம், ஏதோ இந்த அரசு காட்டிய அலட்சியத்தின் காரணமாகத்தான் இந்த பிரச்சினை இவ்வளவு வளர்ந்துவிட்டது அல்லது இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட முடியாமல் நீடித்திருக்கிறது என்பதை விட இந்த அரசு கடைப்பிடிக்கின்ற நல்ல எண்ணம் தான் இத்தகைய நிகழ்ச்சிகளைக் கொண்டு வருகிறதோ என்று அய்யப்படும் வகையில் தான் நிலைமைகள் இருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், இதைப்பற்றிப் பேரவையிலும் மேலவையிலும் பேசியிருக்கிறோம். இந்தச் சம்பவம் நடந்த பிறகு முதலமைச்சர் அவர்கள் மதுரைக்குச் சென்ற போது வழக்கறிஞர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்திருக்கிறார்கள். காவல்துறை அதிகாரியை அங்கிருந்து மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை தெரிவிக்கப்பட்டதாக முதலமைச்சர் அவர்கள் கருத்து சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தான் முதலிலே நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு கோட்டாட்சித் தலைவர் விசாரணை நடைபெற வேண்டும் என்ற நிலையை அரசு எடுத்தது. ஆனால் ஒரு நீதிபதியினுடைய விசாரணை வேண்டும் என்று ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவை வைத்து, அந்த விசாரணை குறிப்பிட்ட காலகட்டத்திலே வைக்காமலிருந்தால், நாங்கள் வேலை நிறுத்தம் செய்வோம் என்று அறிவித்தார்கள். மிகுந்த நல்லெண்ணத்தோடுதான் இந்த விசாரணையை அமைத்திருக்-





கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்து தெரிவித்ததைப்போல, வெறும் நீதிபதியாக இருந்தால் மட்டும் போதுமானது. வழக்கறிஞர்கள் சார்பிலோ காவல் துறையின் சார்பிலோ யாரும் இருக்க வேண்டியதில்லை என்ற கருத்தையும் இங்கே சொன்னார்கள். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது கூட புண் முற்றி பவுத்திரம் ஆகும் நிலை ஏற்பட்டுவிட்டது என்று சொன்னார்கள் நான் குறிப்பிடுவது எல்லாம் தலைவலி போய் திருகுவலி வரக்கூடாது என்பதுதான். எனவே, நாம் இதில் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும். காரணம் ஒருபுறம் வழக்கறிஞர்களும், அவர்களை ஆதரித்து மாணவர்களும், இன்னொருபுறம் காவல் துறையைச் சார்ந்தவர்களும் இருக்கிறார்கள். இந்த நிலைமைகளை மையமாக வைத்து நீதிபதி விசாரணை செய்ய வேண்டும்.

(பிற்பகல் 5-30)

அரசு இதிலே தெளிவான நிலையை எடுத்திருக்கிறது. இந்த வழக்கிலே நீதிபதிக்கு உதவி செய்வதற்காகத்தான் வழக்கறிஞர் பிரதிநிதி ஒருவரும், காவல் துறையின் சார்பிலே பிரதிநிதி ஒருவரும் இருப்பார்களே தவிர, முடிவு எடுக்கக் கூடிய பொறுப்பும் அதிகாரமும் அந்த நீதிபதிக்குத்தான் இருக்கிறது என்பதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தன்னுடைய கடிதத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசினுடைய கருத்து தெளிவாக்கப் பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன்.

சூழ்நிலையின் காரணமாக, அவசர நிமித்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்று பம்பாய் சென்ற போது, கடிதங்களை நாம் கொடுக்கிறபோது அவருடைய கையெழுத்தைப் பெற முடியவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். குறிப்பாக அந்தக் கடிதத்திலே உள்ள ஒரு பகுதியைப் படிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். நான் ஏற்கெனவே சொன்ன நிலையிலே இருந்து தமிழிலேதான்

கருத்துக்களைச் சொல்லுகிறேன், சொல்லிக் கொண்டும் இருப்பேன். இருந்தாலும் மொழிபெயர்ப்பு தவறாக வந்துவிடக் கூடாது என்பதற்காக அந்தப் பகுதியை ஆங்கிலத்திலேயே சொல்ல விரும்புகிறேன். அக்கடிதத்திலே அரசின் நிலை மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

A District or High Court Judge whoever is appointed alone will be the sole arbiter. The representatives of the interests concerned, namely, the lawyers and the police will merely assist the Judge to elicit facts and present the respective point of view ;

அதற்கு அடுத்து . . . .

I would like to make it quite clear that the two representatives will not have any say in arriving at a finding on the issues which would be the sole responsibility and prerogative of the Judge.

ஆக ஒரு முடிவிற்கு வருவதற்கு, இந்தப் பிரச்சினையில் தீர்ப்பு வழங்குகிற பொறுப்பும், அதிகாரமும் நீதிபதியிடம்தான் இருக்கின்றன என்பது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும் கூட இன்றைக்கு அதை ஏற்றுக் கொள்ளாத நிலையிலே மாணவர்கள் வேலை நிறுத்தம், கல்லூரி, விடுதி எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன என்றும் சொல்லியிருக்கிறார்கள். கல்லூரியின் விடுதி மூடப்பட்டிருப்பது மாணவர்களின் நன்மையைக் கருதித்தான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் சட்டம் ஒழுங்கு என்று பார்க்கிறபோது, சில நேரங்களில் எந்த மாதிரியான நடவடிக்கை எடுத்தாலும், அதை சம்பிரதாயப்படி கடைப்பிடிப்பதாக யாரும் கருதக் கூடாது. வேறு மாற்றம் இல்லை என்பதை அனுபவத்தில் பார்த்திருக்கிறோம். சட்டம், ஒழுங்கை உடனடியாகக் காப்பாற்றியாக வேண்டும். பிரச்சினைகள் பரவிக்கொண்டே போவதைத் தடுக்க வேண்டும் என்றால், சில மையங்களைக் கண்காணிக்க வேண்டும் என்பது தவிர்க்க முடியாமல் இருக்கிறது. ஆகவே மாணவர்களின் நன்மையைக் கருதித்தான் கல்லூரி விடுதி மூடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் "காவல் துறையை நம்பியே அரசு பிரச்சினையைச் சமாளிக்க முடிவு செய்திருக்கிறதோ" என்ற அடிப்படையிலே சில சந்தேகங்களைக்





கிளப்பினார்கள். காவல் துறையை நம்புவது என்பது ஒரு புறம் இருந்தாலும், ஒரு அரசு அதன் கீழ் பணியாற்றுகிற பல்வேறு இலாக்காக்களையும் நம்பித்தான் ஆட்சி செய்யக் கடமைப்பட்டிருக்கிறது. சட்டம், ஒழுங்கு என்று வருகிற போது, காவல் துறையை நம்பித்தான் அதைச் செய்ய முடியுமே தவிர, வருவாய்த் துறையிடமோ, மற்ற துறையிடமோ அதை விட்டுவிட முடியாது. அதைப் போலவே வருவாய்த் துறை சம்பந்தப்பட்டவை, நிதித் துறை சம்பந்தப்பட்டவை, தொழில் துறை சம்பந்தப்பட்டவை ஆகியவைகளுக்காக அதற்குள்ள துறையைத்தான் நம்பியிருக்க வேண்டும். செயற்கை என்றாலும், இயற்கை என்றாலும், நம்பிக்கைதான் ஆதாரம். மூன்று வகைகளில் நம்பிக்கைதான் முக்கியம். நம்புகிறோம் என்றால் அவர்கள் சொல்லுவதையெல்லாம் கேட்கிறோம் என்று பொருள் அல்ல. சூழ்நிலைக்கேற்ப, பிரச்சினைகளுக்கேற்ப அரசு ஆய்வு செய்கிறது. கோட்டாட்சி அலுவலரின் விசாரணை நடக்கும் என்று அறிவித்திருந்தும், வழக்கறிஞர்களைச் சந்தித்த போது, அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்ட வகையில் விசாரணைக் குழுவே வேண்டும் என்று அரசு கருதியது. இதிலே அரசு கௌரவம் பார்க்கிறது என்று யாரும் கருத வேண்டாம். இப்பொழுதுள்ள சூழ்நிலையில் அரசு மீண்டும் பேச்சு வார்த்தையை நடத்திக்கொண்டிருக்கிறது. நிச்சயமாக நல்ல சுமுகமான நிலை ஏற்படும். கொந்தளிப்பும், பதட்டமும் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கக் கூடிய கருத்தினைப் பொறுத்த வரை, நிர்வாக ரீதியிலே பார்க்கும்போது, அரசு அப்படிக் கருதவில்லை, ஆனாலும் கூட அதை அலட்சியப் படுத்தவில்லை. தொடர்ந்து இதைப்பற்றி அரசு பேசி விரைவிலே நல்ல சுமுகமான நிலைக்கு வருவதற்கும், நல்ல முடிவுகளை எடுப்பதற்கும் அரசு நடவடிக்கையில் இறங்கியிருப்பதால், இந்தப் பிரச்சினையைக் குறித்து மேலும் விவாதிக்க இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, உங்களுடைய தீர்ப்பைச் சொல்லுவதற்கு முன்னால் விளக்கம் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள்.

யாரோடு பேசுகிறார்கள்? பேச்சுவார்த்தை எப்போது நடக்கிறது? யார் யார் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்? அரசு சார்பிலே யார் பேசுகிறார்கள்? இன்று நடக்கிறதா? எத்தனை மணிக்கு நடக்கிறது? இவற்றுக்கெல்லாம் விளக்கம் அளித்தால், எங்களுக்கு அதிலே நம்பிக்கை ஏற்பட்டால், வலியுறுத்தாமல் இருக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** தலைவர் அவர்களே, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்துப் பேசியதற்குப் பிறகு என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள். வழக்கறிஞர்களுடைய சங்கத்தின் பிரதிநிதிகள் வந்தார்கள். அவர்களோடுதான் பேசினார்கள். இந்த விஷயத்தில் ரொம்ப ஆழமாக நான் போக விரும்பவில்லை. வழக்கறிஞர் சங்கத்திலேயும் அரசியல் நிலைமை இருக்கிறது. நாங்கள் இதிலே ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறோம். முறையாக சங்கப் பிரதிநிதி என்று ஒருவர் வந்து, அவர் சொல்லுவதைக் கேட்டு, அதன்படிதான் அறிவித்தோம். பிறகு இவரோடு மட்டும் பேசி அறிவித்தார்கள், அதனால் ஏற்கவில்லை என்று வரக்கூடாது என்ற தன்மையில் யார் யாரோடு பேசினால் சரியாக இருக்குமோ அவர்களிடமே தொடர்ந்து பேசுகிற நல்ல நிலைமை வர வாய்ப்பு இருப்பதால், மேற்கொண்டு இதைப்பற்றிப் பேசத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருப்பதால், அதுபற்றி ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. சட்டக் கல்லூரி இன்றைக்கு மூடப்பட்டிருக்கிறது. வேறு காரணத்திற்காக மூடப்பட்டிருந்தால், அது வேறு விஷயம். ஆனால் அவர்கள் வழக்கறிஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து வந்த நேரத்திலே, மூடப்பட்டிருக்கிறது. இப்படி கல்லூரியையும், விடுதியையும் மூடுவதால் ஆயிரக்கணக்கானவர்கள் படிக்கக்கூடிய இடத்தில் 200, 300 மாணவர்கள் தங்கள் ஊர்களுக்குச் சென்று திரும்ப வருவது என்பது அவர்களைச் சங்கடத்திற்கு ஆளாக்குகிறது. அந்தச் சங்கடத்தைத் தடுக்க உடனடியாக கல்லூரியையும், விடுதியையும் திறக்க அரசு முன்வர வேண்டும். 'இந்தப்





பிரச்சினையில் அவர்கள் ஆதரவு தெரிவித்ததைத் தவிர, வேறு சம்பவங்களில், வன்முறைகளில் ஈடுபடவில்லை. அனுகு முறையைப் பொறுத்தவரையில், இரண்டு சாராரையும் எப்படி வேலையை விட்டு நீக்குவது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அமைச்சர் அவர்கள் அதற்கு ஆதரவான கருத்தைச் சொல்லாவிட்டாலும், அது பரிசீலிக்கப்பட வேண்டிய கருத்து என்று சொன்னார்கள். ஆகவே இதோடு நின்றுவிடாமல் எல்லாத் தரப்பிலும் பேச்சு வார்த்தை நடக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு திரு. கா. இராசா முகமது அவர்கள் எழுந்தார்கள்)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை ஏதோ சொல்ல வருகிறார். அவரும் சொல்லட்டும். பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரேயடியாகப் பதில் சொல்லலாம்.

THIRU G. VASANTHA PAI: The Hon. Minister said that the suggestion came from the Hon. the Chief Minister of having the District Judge to preside and the two representatives of the Bar and the Police to assist him. This sort of thing will happen only in arbitration and this has never been adopted before. Even the late Thiru Annadurai appointed a Commission of Inquiry to go into the dispute between the students and busmen. Thiru B. S. Somasundaram, who was then a District Judge was appointed.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் விளக்கம்தான் கேட்க வேண்டும்.

THIRU G. VASANTHA PAI: Sir, I am only referring to a previous instance relevant to the present case. Then there were three parties involved, namely, students, busmen and the policemen. All the three parties were there. The late Thiru Annadurai, who was the Chief Minister then appointed Thiru B. S. Somasundaram who was then a District Judge. I remember that even Thiru Rajagopalachari objected to that and wanted a High Court Judge. At that time Thiru Annadurai was in America.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மீண்டும் ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினால் என்ன அர்த்தம்?

[1979 மார்ச் 19

THIRU G. VASANTHA PAI: Sir, I am only submitting that this is the first time that this sort of thing like an arbitration is sought to be resorted to, instead of a Commission of Inquiry. The Commission of Inquiry should be presided over by a Judge. If the parties concerned want to put forth their case, they may directly of through their advocates put forth their viewpoints and they will be considered by the Commission or Tribunal. This is what I am submitting.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள் பிரச்சினை என்பது நாம் இப்போதுதான் சந்திக்கிற ஒன்று என்று கருதுகிறேன். வழக்கு மன்றத்திலே வாதாடுகிறபோது, வாதி, பிரதிவாதி ஆகிய இரண்டு பேருக்கும் வாதாடும் உரிமைகள் இருக்கின்றன. வாதிக்காகவும், பிரதிவாதிக்காகவும் வழக்கறிஞர்கள் வாதாடுகின்ற நிலைமையை உணர்ந்திருக்கிறோம். இதை அவ்வளவு பெரிதாக, ஏதோ வழக்கறிஞர்களுடைய கோரிக்கைகளை அல்லது அவர்களுடைய உணர்வுகளை மதிக்காமல் இருக்கிறோம் என்று தயவு செய்து யாரும் கருத வேண்டாம். அடுத்த பக்கம் பாதிப்புக்கு உள்ளாகி யிருக்கிறோம் என்று காவல் துறையைச் சேர்ந்தவர்கள் வந்திருப்பதால், பிரதிநிதிகள் என்று சொல்லக்கூடிய வகையில் வழக்கறிஞர் சங்கத்தைச் சேர்ந்த ஒருவரும், காவல் துறையைச் சேர்ந்த ஒருவரும் ஆகவும் அந்த நீதிபதிக்கு உதவி செய்யக் கூடிய வகையில் நியமித்திருக்கிறோம். அவர்கள் நீதிபதிக்கு உதவி செய்ய முடியுமே தவிர, இறுதி முடிவு எடுக்க வேண்டிய பொறுப்பு, அதிகாரம் எல்லாம் நீதிபதியிடம்தான் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன்.

இங்கே விளக்கமாக ஒன்றைக் கேட்டார்கள். திரு. முத்துசாமி அவர்களுடைய கருத்தை அமைச்சர் அவர்கள் ஆதரிக்கிறாரா என்று. சில உணர்வுகளைச் சொல்லுகிறபோது யதார்த்தங்களைப் புறக்கணிக்கக் கூடாது என்று சொல்லுகிறேன்.

(பிற்பகல் 5-40)

காவல் துறையிலே இருக்கின்றவர்களிலே ஒரு சிலர் தவறு செய்யக்கூடியவர்களாகவும் இருக்கலாம் என்று முதலமைச்சர் அவர்கள் சில நேரங்களில் சொல்லியிருக்கிறார்கள்.



1979 மார்ச் 19] [திரு. க. இராமமூர்த்தி]

எல்லாவற்றிலுமே தவறு இல்லை என்று சொல்ல முடியாது. நாம் அதைத் திருத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் பாதிப்பு என்று வருகிறபோது, உண்மையிலேயே, அவர்கள் சொன்னது சரிதானா, இல்லையா என்பதை எண்ணிப் பார்க்கக்கூட அரசு தயங்குகிறது என்று சொன்னால், நீதியை நாம் கொண்டு வந்தோம் என்று சொல்ல முடியாது. ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையிலேதான் இந்தக் குழு போடப் பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, இன்று மாலை முதல்வர் அவர்கள் திரும்பி வருகிறார்கள். அவர்களும் கலந்து பேசி நாம் விரைவாக முடிவு எடுக்க இருக்கின்ற காரணத்தினாலே, இதைப் பற்றிப் பேச அவையை ஒத்தி வைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு தலைவர் அவர்கள் தீர்ப்புக்கு முன்னால் நான் ஒன்று சொல்லிக் கொள்கிறேன். இந்த நீதி விசாரணையில் குழப்பமான ஒரு கமிட்டியைப் போட்டு வைத்திருப்பதை எதிர்க்கின்ற வகையில் நாங்கள் ஒரு அடையாள வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அமைச்சர் அவர்களின் அறிவிப்பு எனக்கும் திருப்தி அளிக்காததனால், நானும் வெளிநடப்பு செய்கிறேன்.

(திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் வெளிநடப்பு செய்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கருதி என் அனுமதியை மறுக்கிறேன்

## 4. கவன ஈர்ப்பு.

**(1) சேலம் மாவட்டத்தில் சேந்தமங்கலத்தில் அரசு மருத்துவ மனையில் பெண் மருத்துவர் இல்லாதது குறித்து**

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு ஹரிசன நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டம் சேந்தமங்கலத்தில் உள்ள அரசு மருத்துவ மனையில் கடந்த ஓராண்டு காலமாக பெண் மருத்துவர் இல்லாத காரணத்தால் அப்பகுதியிலுள்ள தாய்மார்கள் மருத்துவம் செய்து கொள்ள முடியாத நிலை குறித்து."

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அவையின் முன் விவர அறிக்கை ஒன்று @ வைக்கப்பட்டிருக்கிறது.

**(2) ஹரிஜன நலத் துறையின் கீழ் இயங்கும் மேல் நிலைப் பள்ளி பதினோராம் வகுப்பு மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் வழங்காதது குறித்து.**

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு ஹரிசன நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"ஹரிசன நலத் துறையின் கீழ் இயங்கும் மேல் நிலைப் பள்ளி பதினோராம் வகுப்பு மாணவர்களுக்கு விதி முறைப்படி இந்த ஆண்டுக்கான பாடப் புத்தகங்கள், நோட்டுப்

@ 105 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பட்டுள்ளது.



புத்தகங்கள் முதலியன இதுவரை வழங்கப்படாததால் மாணவர்களும் அவர்களுடைய கல்வியும் பாதிக்கப் பட்டுள்ளது குறித்தும், இதற்கான உடனடி நடவடிக்கை குறித்தும்".

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அவையின் முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கையில் இரண்டாவது பக்கத்தில் 3-வது பத்தியில் இலவசப் பாடப் புத்தகம் வழங்கும் திட்டம் பள்ளி இறுதி வகுப்பு வரை, அதாவது எஸ்.எஸ்.எல்.சி. வரை தான் செயல்படுத்தப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டு 11 வகுப்பு முடிய எஸ்.எஸ்.எல்.சி., இந்த ஆண்டு இரண்டு வகையான எஸ்.எஸ்.எல்.சி. ஒன்று 10-வது வகுப்பு, அடுத்த ஆண்டு 12-வது வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி. என்று வருகிறது. இப்படி மாற்றம் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது 12-வது வகுப்பு வரையில் இந்த இலவசப் பாடப் புத்தகம் வழங்கும் திட்டத்தைப் போட்டிருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, கல்வித் திட்டத்தில் மாற்றம் ஏற்பட்ட காரணத்தால் எந்த வகுப்பு இப்போது எங்கே இருக்கிறது என்று விளக்கம் வேண்டும். அதைக் கேட்டுப் பெறுவதற்கு கல்வித் துறைக்கு எழுதியிருக்கிறார்கள். அந்த விளக்கம் வந்த பிறகு, இதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைமை)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்வித் திட்டத்தில் மாற்றம் ஏற்பட்டதால், விளக்கம் கேட்டிருப்பதாக அமைச்சர் சொல்கிறார். அது ஒரு சிறிய மாற்றம் தான் கல்லூரியிலே இருக்கின்ற புகுமுக வகுப்பை எடுத்து பள்ளிக்கூடங்களுக்கு மாற்றுகிறார்கள்.

@ 286-287 ஆர் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1979 மார்ச் 19

ஏற்கெனவே 11-வது வகுப்பு வரை என்று இருப்பது சில பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு என்று வரப் போகிறது. அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகியிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு 11-வது வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி. இருந்திருந்தால் என்ன செலவாகுமோ அதே செலவுதான் இதற்கும் ஆகும். கூடுதலான நிதி செலவழிக்கப் போவதில்லை. அடுத்த ஆண்டு 12-வது வகுப்பு என்று வந்தாலும், சுமார் 500 மாணவர்கள்தான் இருப்பார்கள். அவர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 50 என்று கூடுதலாகச் செலவானாலும் ரூ. 25,000 தான் செலவாகும். ஹரிஜன மக்களின் பொருளாதார நிலைபற்றி நான் விளக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். கல்வித் துறையைக் கலக்காமலே இந்தச் சிறு தொகையை அளிக்க ஆணையிடுவாரா ?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்த அரசுக்கு நல்ல மனம் இருக்கிறது. வழங்கப் பணமும் இருக்கிறது. இருந்தாலும் விதி முறைக்குட்பட்டுத்தான் செயல்படுத்த முடியும். ஆகவே விதியை நிர்ணயிக்கின்ற பொறுப்பு கல்வித் துறைக்கும் இருக்கிறது. அவர்களிடமிருந்து பதில் வந்த பிறகு இதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

## 5. அரசின் சட்ட முன்வடிவுகள்

**தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1978).**

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு

@ 287-289 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1979 மார்ச் 19] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

எண் 34/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்". என்று முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

***திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத் திருத்தத்தை, திருத்த மசோதாவை, அதனுடைய நோக்கங்களை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். மாண்புமிகு அமைச்சரும் கூட்டுறவுத் துறையும் புதிதாக கூட்டுறவுச் சட்டத்தை முறைப்படுத்தி புதிதாகவே ஒரு முன்னேற்றம் கொண்டுவர வேண்டும் என்ற ஆர்வத்தோடு, கூட்டுறவு இயக்கத்திலே ஏற்பட்டிருக்கின்ற பல சங்கடங்களை, பல சிக்கல்களை அல்லது நடைமுறைக்குச் சாத்தியமில்லாத சிலவற்றையெல்லாம் தடுக்கின்ற வகையிலே, புதிய ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னோடியாக இந்தச் சட்டம் வந்திருக்கிறது என்று கருதுகிறேன். ஆனால் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டத்திலும் நடைமுறையிலே ஒரு சில சங்கடங்கள் ஏற்பட வழியிருக்கின்றது. அதைப்பற்றி இந்த நேரத்தில் குறிப்பிடுவது என்னுடைய கடமையாகும். ஒரு கூட்டுறவுச் சங்கத்திலே அங்கத்தினராகச் சேர்வதற்கு மனு கொடுக்கின்றவரை, அந்த மனு கொடுத்த பிறகு, சீக்கிரத்தில் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய முழுமையான அங்கத்தினராக ஏற்கப்படுகின்ற அளவுக்கு வழி செய்ய இந்தச் சட்டம் வந்திருக்கிறது. இந்தச் சட்டத்தினை விமர்சனம் செய்ய நோக்குகின்றபோது, இதிலே உள்ள உணர்வுகளை நம்மாலும் உணர முடிகிறது. கூட்டுறவுச் சங்கங்களை ஒரு ஆதிக்கமாகக் கருதிக் கொண்டு, அதில் புதிய அங்கத்தினர்களைச் சேர்க்காமல் தடுப்பது அல்லது அவர்கள்

[திரு. க. இராமமூர்த்தி] [1979 மார்ச் 19

அங்கத்தினர்களாகவிடாமல் செய்வது என்பதை, குறிப்பிட்ட ஒரு சிலர்தான் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகப் பொறுப்பில் இருக்க வேண்டும் என்பதற்காகச் செய்து கொண்டிருப்பார்கள் சிலர். இதையே ஒரு தொழிலாக வைத்துக் கொண்டு லாப நோக்கத்தோடு நடத்துவார்கள். கூட்டுறவுச் சங்கத்தில் கடன் வாங்கி, அங்கத்தினராக இல்லாதவர்களுக்குத் தனியாகக் கடன் கொடுப்பதும் உண்டு. வங்கிப் பணத்தையே தனியாகக் கடன் கொடுத்து ஏமாற்றுகின்றவர்களும் உண்டு. இந்த நிலைமைகளை மாற்றத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தில் ஒருவர் அங்கத்தினராகச் சேர்க்கப் படுவதானால், அவருக்குப் பல சிரமங்கள் இருந்தன. மனுப் போட வேண்டும். 15 நாட்கள் கழித்து ரெஜிஸ்ட்ரேஷன். இப்படி 2, 3 வரைமுறைகள் எல்லாம் இருந்தன. இவைகளைத் தவிர்க்கத்தான் இந்தச் சட்டம் வருகிறது என்று கருதுகிறேன்.

சில இடங்களில் ஒரே எல்லைப் பகுதிக்குள் இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கும். என்னுடைய பகுதியிலே, திண்டிவனம் அர்பன் கோஆப்பரேடிவ் வங்கி இருக்கிறது. அதை ஒட்டி கோவாப்பரேட்டிவ் கிரெடிட் சொஸைட்டி—கிராம வங்கிகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஒரே எல்லையில் இரண்டு வங்கிகள் அல்லது இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. ஒரே பகுதியில் இரண்டுமே செயல்படுகின்றன. அந்த மாதிரிப் பகுதிகளில் ஒரு சிலர் தெரிந்தே கூட இரண்டு சங்கங்களிலும் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அவர் அர்பன் வங்கியிலே அங்கத்தினராக இருப்பார்; கிராமக் கூட்டுறவு கிரெடிட் சொசைட்டியிலேயும் அங்கத்தினராக இருப்பார். அப்படிப்பட்ட நிலையில் அவர்கள் அவசரத்திற்கு ஒரு வங்கியிலே கடன் வாங்கிவிடுவார்கள். அவர்களே பிறகு இன்னொரு வங்கியிலும் கடன் வாங்கிவிடுவார்கள். இரண்டு இடத்தில் கடன் வாங்குவதற்கு அவர்கள் இப்படிச் செய்வதுண்டு. சில சொசைட்டிகளிலே தேர்தல் காரணமாகவே சிலர் மெம்பர்கள் ஆவதுண்டு. ஒரு சிலர் தேர்தலில் நிற்பதற்காகவே சேர்வதுண்டு. இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் தடுக்க இச்சட்டத்தில் வழியில்லாமல் இருக்கிறது.



1979 மார்ச் 19] [திரு.க.இராமமூர்த்தி]

(பிற்பகல் 5-50)

அப்படிப்பட்டவர்கள் தவறாக வாக்குகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க முடியாததாகிவிடும். உடனடியாக நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னாலும், தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்பு அங்கத்தினராகச் சேர்ந்து, வாக்களித்த பிறகு, அவர்களுக்கு அங்கத்தினர் பதவி இருந்தால் என்ன, போனால் என்ன என்று நினைப்பவர்கள் மிக அதிகமாகச் சேர்ந்து, அதன் மூலம் இந்தச் சட்டத்தின் நோக்கத்தைத் தோற்கடிக்கும் நிலை இருக்கிறது. எனவே இதை மனத்திலே கொண்டு, மேலும் ஒரு திருத்தத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியம் இருக்கிறதென்று கருதுகிறேன். இப்போது திருத்தம் கொண்டுவரவில்லையென்றாலும், இதை அமைச்சரவர்கள் கருத்திலே கொள்வார்களென்று எதிர்பார்க்கிறேன்.

இன்னொன்று, வங்கிகள் ரிசர்வ் வங்கியிலிருந்து வாங்கும் கடன் எல்லைக்குத் திருத்தம் வந்திருக்கிறது. நான் உரிமையோடு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு பல கிராமக் கூட்டுறவு வங்கிகளில் நகைக் கடன்கள் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஒரு வரையறை இருந்துகொண்டிருக்கிறது. சில வங்கிகள் சுலபமாக வரையறையைத் தாண்ட, எல்லைக் குறியை தாண்ட அனுமதி கிடைத்திருக்கிறதென்றாலும், இந்த வங்கிகள் நகைகள் மீது, வேறு பொருள்கள் மீது கடன் கொடுக்கும் சுலபமான முறையை இந்தத் திருத்தத்தின் மூலம் மேலும் சுலபமாக்கியே, கிராமப்புறங்களில் உள்ள மக்களை, வட்டிக்கடைக்காரர்களிடமிருந்தும், நகை மீது கடன் கொடுக்கும் முதலாளிகள், மார்வாடிகளிடமிருந்தும் காக்கும் நிலைமை ஏற்படும். ஆகவே இந்தத் திருத்தத்தை விரைவிலே கொண்டுவர வேண்டும். அங்கத்தினர் சேரும் முறையிலேயும் சங்கடம் இருக்கிறது. அந்தச் சங்கடத்தையும் கூட்டுறவுத் துறை மனதிலே கொண்டு, அமைச்சரவர்கள் உடனடியாக ஆவன செய்ய வேண்டும். இது நேர்தலை மனதிலே கொண்டு, வருகின்ற திருத்தமாகும். இவர்களுக்காக, அவர்களுக்காக என்று அல்ல. தனித்த முறையில் அமைச்சரவர்

களோடு பேசும்போது, இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவதுபற்றி அவர்கள் பெருமையோடு சொன்னார்கள். வேண்டாத சக்திகள் ஆதிக்கம் செய்வதைத் தவிர்க்க, எல்லோரையும் முடியாவிட்டாலும், சிலரையாவது தடை செய்ய வேண்டுமென்று ஈடுபட்டிருக்கிறோமென்று சொன்னார்கள். அதைப் பாராட்டுகிறேன். இதிலே நான் சொன்ன ஒரு சங்கடம் இருக்கிறது. அதைத் தீர்க்க வழிவகை காணுங்கள் என்று சொல்லி, அமைகிறேன்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம்: துணைத் தலைவரவர்களே, கூட்டுறவு நாணய சங்கத்தினுடைய சட்ட முன்வடிவிலே நான் சில கருத்துக்களைச் சொல்வதற்கு விழைகிறேன். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சேர்ந்து நடத்துகிற க்ரெடிட் சொசைட்டீஸ் எல்லாம் இதிலே இருக்கின்றன. அந்தக் கிரெடிட் சொசைட்டீசுக்கு ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கக் கூடிய ஆணையர், எக்ஸ்-அபிஷியோ பிரசிடென்ட்டாக இருக்கிறார். அப்படி அவர் இருப்பதற்கு சட்டத்திலே வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. காரணம், கடன் தொகையினைச் சம்பளத்திலிருந்து திருப்பிப் பிடிக்க, வாய்ப்பாக இருக்குமென்று தான், எக்ஸ்-அபிஷியோ பிரெசிடென்ட்டாக அவர் இருந்து, செயல்பட வாய்ப்பு இருக்கிறது. பல்வேறு இடங்களில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் எக்ஸ்-அபிஷியோ பிரெசிடென்டாக இருக்கும்போது, அரசிடமிருந்து பெறும் தாக்கீதுகளைச் செயல்படுத்த, அவர்கள் சொசைட்டிகளைப் பயன்படுத்துகிறர்கள். ஒருவர் ஆயிரம் ரூபாய் கடன் வேண்டுமென்று விண்ணப்பித்தால், அறுவை சிகிச்சைக்கு ஆள் பிடித்து வந்தால்தான், கடன் கொடுக்க முடியும்; சிறு சேமிப்பில் முதலீடு செய்தால்தான் கடன் கொடுக்க முடியும் என்று சொல்லி, ஆட்டம் போடுகிறார்கள். அது மட்டுமல்ல. அவர்கள் வருகின்ற விண்ணப்பத்தை சீனியாரிட்டி பிரகாரம் வழங்காமல், தங்களுக்குத் தேவையானவர் யார், தேவையில்லாதவர் யார் என்று பார்த்து, அதற்கேற்ப கடன் அளிக்கிறார்கள். அதற்கேற்ப, அந்த சொசைட்டியின் செயலாளராக இருக்கிறவர், அவருக்குக் கீழே பணி புரியும் ஆசிரியர் அல்லது அலுவலராக இருப்பதால், இவர்



இஷ்டத்திற்குக் கடன் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. மேலும் கடன் சேங்ஷன் ஆன பின்னாலும், செக் வழங்குவதற்கு நீண்ட கால அவகாசம் எடுத்துக்கொள்கிறார்கள். அவகாசம் எடுத்துக் கொள்வதிலேகூட, பேரம் பேசப்படுகிறது. ஆயிரம் ரூபாய் கடன் தற்கால, நூறு ரூபாய் கிடைக்குமா என்ற அளவிற்குப் பேரம் பேசப்படுகிறது. எனவே ஆணையாளர் எக்ஸ்-அபிஷியோ பிரெசிடென்டாக இருக்கக் கூடாதா என்றால், இருப்பதுதான் நல்லதென்று கருத வேண்டியிருக்கிறது. அப்போதுதான் சம்பளத்திலே பிடிக்க வாய்ப்பு இருக்கும் எனவே தவறுகள் அதிலே நடைபெறுவதற்கான வாய்ப்பு இல்லாத வகையிலே அமைச்சரவர்கள் ஆய்ந்து, அதிலே எப்படிப்பட்ட மாற்றங்கள் மென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆணையாளர்கள் இதிலே எக்ஸ்-அபிஷியோ பிரெசிடென்டாக இல்லாமல், ஆசிரியரோ, அலுவலர்களோ தாங்களாகவே தலைவராக இருந்துகொண்டு நடத்தும் இடங்களில், ஆணையாளர்கள் தங்களைப் போடவில்லை என்பதற்காக கடன் தொகையை வசூலிக்க வாய்ப்பு இல்லாத முறையிலே சிலபல செயல்களைச் செய்கிறார்கள். எப்படிப் பார்த்தாலும், அலுவலர் கூட்டுறவு நாணயச் சங்கத்திலே ஆணையர்களுடைய ஆதிக்கம் மேலோங்கி இருக்கிறது. கூட்டுறவு என்ற முறையிலே நடக்க வில்லை, ஜனநாயக அடிப்படையிலே அந்தச் சங்கங்கள் இல்லை.

இப்படிப்பட்ட சங்கடங்களை நிவர்த்தி செய்து, இந்தச் சட்டத்திலே என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் அமைச்சரவர்கள் செய்ய வேண்டுமென்று வேண்டி, அமைகிறேன்.

* திரு. சி. இராமலிங்கம்: தலைவரவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற கூட்டுறவுச் சங்கங்கள் திருத்த சட்ட முன்வடிவை நான் மெத்த மகிழ்ச்சியோடு ஆதரிக்கிறேன். ஏனென்றால், இப்படிப்பட்ட கூட்டுறவு வங்கிகளிலே நாங்கள் உறுப்பினர்களாகச் சேர வேண்டுமென்று

[திரு. சி. இராமலிங்கம்] [1979 மார்ச் 19

பல முறை முயற்சி செய்தோம். ஆனால் அப்படி ஆக முடியாத சூழ்நிலை இருந்து வந்தது. இப்போது அந்த விதி தளர்த்தப் பட்டு, எல்லோருக்கும் சம வாய்ப்பு அளிக்கும் வகையிலே இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த நேரத்திலே சில வேண்டுகோள்களையும் அமைச்சர வர்களிடம் வைக்க விரும்புகிறேன். கூட்டுறவு வங்கிகளிலே தனியார் பணம் போடுகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப் படுகிற வட்டி 4 சதவிகிதம்தான். ஆனால், அரசுடைமையாக்கப் பட்ட வங்கிகளிலே பணத்தைச் சேமிப்பாக போட்டால், அவர்கள் கொடுக்கிற வட்டி 11 சதவிகிதம். இந்த நிலையில், கூட்டுறவு வங்கிகளிலே 4 சதவிகிதம் வட்டி கொடுப்பதால், யாருமே தங்கள் பணத்தை அதிலே சேமிப்பு நிதியில் போடுவதில்லை. அடுத்து, அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் தாராள மனதோடு, யார் பணம் கேட்டாலும் பரிசீலனை செய்து விரைவிலே, 15 நாட்களுக்குள்ளே, பணம் கொடுக்கிறார்கள். ஆனால் கூட்டுறவு வங்கிகளிலே பணம் கொடுக்கும்போது, எந்த ஆதாரம் கொடுத்தாலும், அவர்கள் /அவ்வளவு சீக்கிரமாகப் பணத்தைக் கொடுப்பதில்லை. அந்த நிலையையும் மாற்ற வேண்டும். மனுச் செய்து, 30 நாட்கள் ஆகிவிட்டால், உறுப் பினராகக் கருதுகிறார்கள். அதுபோல பணம் கேட்டு மனுச் செய்து கொண்ட 15 நாட்களுக்குள் ஏழை, எளியவர்களுக்குப் பணத்தைக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய பணத்தை எல்லாம் சலான் மூலம், ஸ்டேட் பாங்கில் கட்ட வேண்டியிருக்கிறது. வரி கட்ட வேண்டுமானாலும் அல்லது காண்ட்ராக்ட்டுக்கு முன் பணம் கட்ட வேண்டுமானாலும், சலான் மூலம்தான் கட்ட வேண்டும். மாவட்டக் கருவூலத்திற்குச் சென்று, சலானில் முத்திரை போட்டுக் கொண்ட பிறகு, ஸ்டேட் பாங்கிலோ ரிசர்வ் பாங்கிலோ கட்டுகிறோம். அந்த முறையை மாற்றி, கூட்டுறவு வங்கிகளிலே அந்தப் பணத்தைக் கட்ட ஏற்பாடு செய்தால், நலமாக இருக்கும். எல்லா ஊர்களிலும் ஸ்டேட்



1979 மார்ச் 19] [திரு. சி. இராமலிங்கம்]

பாங்க், ரிசர்வ் பாங்க் இருப்பதில்லை. எனவே அங்கே கூட்டுறவு வங்கி இருந்தால், சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய பணத்தை அதில் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். அதாவது, கருவூலங்களில் முத்திரை போட்டுக் கொண்டு, கூட்டுறவு வங்கியிலே பணத்தைக் கட்டலாமென்ற நல்ல ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பல துறைகளிலிருந்து சர்க்கார் கடன் வாங்குகிறது. ஆயுள் காப்பு நிதியிலிருந்து கோடிக் கணக்கான பணத்தை வாங்குகிறது. வாங்குகிற பணம் வீட்டு வசதிகளைப் பெருக்க அல்லது குடிநீர் வசதிகளைப் பெருக்க என்றாலும், எந்த வாரியம் அந்தப் பணத்தை வாங்கினாலும், அந்தப் பணத்தை அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில்தான் போடுகிறார்கள். கூட்டுறவு வங்கியில் அந்தப் பணத்தைப் போடுவதில்லை. காரணம் கேட்டபோது, அவர்களே சொன் னார்கள், கூட்டுறவு வங்கியில் 4 சதவிகிதம் வட்டிதான் கிடைக்கிறது, அரசுடைமையாக்கப்பட்ட வங்கியில் 11 சதவிகிதம் கிடைக்கிறது என்று. அதோடு கமிஷன் வருகிறதென்றும் சொல்கிறார்கள் 6 கோடி ரூபாயை, எல்.ஐ.சி. ஒரு இலாகாவிற்குக் கொடுக்கிறது என்றால், அந்தப் பணத்தை வங்கியிலே போட்டால் அதற்கு கமிஷனாக 1½ சதவிகிதத்தி லிருந்து 2½ சதவிகிதம்வரை கொடுக்கப் படுகிறதென்று சொல் கிறார்கள். அது சர்க்காருக்கு வருகிறதா அல்லது அங்கே முதன்மையாக இருக்கக்கூடிய அதிகாரிகளுக்குப் போகிறதா என்பது தெரியவில்லை. எனவே இந்த முறையையும் மாற்றி, கூட்டுறவு வங்கியில் அந்தப் பணத்தைப் போடும் முறையைக் கொண்டு வந்தால், நலமாக இருக்கும்.

(பிற்பகல் 6-00)

அடுத்து, நெசவாளர்களாகிய நாங்கள் எங்களுடைய கூட்டுறவுத் துறையிலே கிட்டத்தட்ட 13 சங்கங்களை வைத்துக்கொண்டு கூட்டுறவு நூற்பாலைகள் மூலம் 36 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனை வரவு செலவு, டர்ன்ஓவர் செய் கிறோம். அதேபோல் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்களில்

[திரு. பி. இராமலிங்கம்] [1979 மார்ச் 19

50 கோடி ரூபாய்க்கு மேல் நாங்கள் வரவு செலவு செய்கிறோம். அப்படி வரவு செலவு செய்கிற எங்களுடைய சங்கத்துக்கு நிதி தேவை என்று கடனாகக் கேட்கின்றோம். அந்த நிதியை நாங்கள் எழுதிக் கேட்டால், இன்றைக்கு ஒரு சங்கத்தைப் பதிவு செய்து அனுப்பினால், அது வருவதற்கு 3 அல்லது 4 மாதங்கள் ஆகின்றன. இவர்கள் கேட்கின்ற பணத்திற்கு நாங்கள் வரவு செலவுக் கணக்கு வைத்துக் கொண்டாலும்கூட, இன்றைக்கு நாங்கள் வங்கியிலேயிருந்து பணம் எடுக்க வேண்டியிருக்கிறது. கூட்டுறவு வங்கிகளிலேயிருந்து மற்ற வரவு செலவு மற்றும் விற்பனை எல்லாவற்றையும் செய்ய வேண்டியிருக்கிறது. வர்த்தக ரீதியாக இருக்கக்கூடிய ஸ்தாபனங்கள் அன்றாடம் வரவு செலவைச் செய்கிறபோது, கையிலே ஸ்டாக் இருக்கலாம். இன்னும் பல காரணங்கள் இருக்கலாம். அல்லது மாநிலக் கூட்டுறவுச் சங்கத்தில் சரக்கு போட்ட பணம் வராமல் இருக்கலாம். இந்த ஏற்பாடுகளையெல்லாம் நிறைவேற்றுவதைப் பொறுத்த வரை அங்கே Balance sheet correct -ஆக இருந்தால்தான் கொடுப்போம் என்று சொல்லுகிறார்கள். எங்களுக்கு ஒதுக்கப் பட்ட பணம் ஒரு சங்கத்திற்கு 3 இலட்சம் ரூபாய்தான். அப்படி 3 இலட்சம் ரூபாய் மத்திய வங்கி கொடுக்கிறது என்றால், நாங்கள் உபயோகப்படுத்துவதோ 1 இலட்சம் ரூபாய் தான். அதுவும் ஆண்டு ஒன்றுக்குதான். மீதி 2 இலட்சம் ரூபாய் அந்த மத்திய வங்கியில்தான் இருக்கிறது. அதற்கு அவர்கள் வட்டி கொடுப்பதில்லை. ஆனால் ரூபாய் 3 இலட்சத்திற்கும் அவர்கள் வட்டியாக எங்களிடமிருந்து வாங்குகிறார்கள். இந்த முறையையும் அருள்கூர்ந்து மாற்றி யமைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நான் பல தரப்பாரைப் பார்த்துப் பேசினேன். அப்படிப் பேசியபோது. "கிட்டத்தட்ட நாங்கள் 100 கோடி ரூபாய்க்கு மேல் வரவு செலவு, டர்ன் ஓவர் செய்கிறோம். நாம் ஏன் மத்திய வங்கியிலிருந்து பிரிந்து கூட்டுறவு நெசவாளர் வங்கி என்ற ஒரு வங்கியை வைத்துக் கொள்ளக் கூடாது?" என்கின்ற எண்ணம் கூட இருக்கிறது.



1979 மார்ச் 19] [திரு. பி. இராமலிங்கம்]

இதை சர்க்காரும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் பரிசீலனை செய்து நெசவாளர்களுக்கு என்று தனியாக ஒரு கூட்டுறவு வங்கியை வைத்து விட்டால், நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து, இங்கே சர்க்கார் அதிகாரிகளுக்கும் ஐ.ஏ.எஸ். ஆபிசர்களுக்கும், சட்டமன்ற மேலவை உறுப்பினர்களுக்கும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைவருக்கும் செக்குகள் வழங்கப்படுகின்றன. இந்த செக்குகளை நாங்கள் அரசுடைமையாக்கப்பட்ட வங்கியில்தான் மாற்றுகிறோம். அதை ஏன் கூட்டுறவு வங்கியில் மாற்றுகிற ஒரு ஏற்பாட்டினைச் செய்யக் கூடாது என்கின்ற ஒரு வினாவைக் கேட்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரை, அப்படி ஒரு முறையைக் கொண்டு வந்தால், நமக்கு ஒரு பலமான ஆக்கம் இருக்கும். மத்திய வங்கி சிறந்த முறையில் இருக்கும். அந்த மத்திய வங்கியிலிருந்து பிரித்துப் பிரிந்து விவசாய வங்கி, கூட்டுறவு வங்கி, கைத்தறி நெசவாளர் வங்கி, மில் வங்கி என்று பரவலாக வைத்தால், நலமாக இருக்கும் என்று பொது மக்கள் கருதுகிறார்கள். இன்றைக்கு பால் வழங்கும் சொசைட்டி என்று ஒரு சொசைட்டியை ஆரம்பித்திருக்கிறோம். பால் உற்பத்தி செய்கின்ற சொசைட்டிக்கு பணத்துக்கு எழுதிப் போட்டு, 4 மாதங்களுக்கு மேல் ஆகிறது. எழுதிப் போட்ட உடனே நல்ல மழை காலத்திலே அவர்கள் அதைத் தந்திருக்க வேண்டும். கார்த்திகை மாதத்திலே ஆரம்பித்திருந்தோம். உடனே பணம் கிடைத்திருந்தால், கார்த்திகை அல்லது மார்கழியில் மாடு பிடித்தால் விலை குறைவாக இருக்கும். பொருளாதாரத்தில் எப்படி நெருக்கடி வருகிறது என்பதை இது காட்டுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் எப்படி நட்டத்தில் ஓடுகின்றன என்பதற்கும் ஒரு உதாரணம். விவசாயி ஆனாலும் சரி அல்லது மாடுகளை வைத்துப் பால் உற்பத்தி செய்கின்றவன் ஆனாலும் சரி, நஷ்டத்திற்கு காரணத்தைச் சொல்கிறேன். இப்படி கார்த்திகை மாதத்திலே எழுதிப்போட்ட உடனே பணம் பால் உற்பத்தி செய்கின்ற சங்கத்திற்கு 15 நாட்களுக்குள்ளே அல்லது 1 மாதத்திற்குள்ளே வழங்கப்பட்டிருந்தால், அனுமதிக்கப்

[திரு. சி. இராமலிங்கம்] [1979 மார்ச் 19

பட்டிருந்தால், கார்த்திகை அல்லது மார்கழியில் மாடு வாங்கியிருக்க முடியும் நல்ல கறக்கிற மாடுகள் நமக்குக் கிடைத்திருக்கும். பாலும் நல்லபடியாகக் கிடைக்கும். தை அல்லது மாசிக்குள் மாடு கறக்கும். அதில் வரக்கூடிய இலாபத்தை, ஆதாயத்தை வைத்து மாடு வாங்கிய விவசாயிக்கு அல்லது மாடு வைத்துப் பிழைக்கிறவனுக்கு நல்ல இலாபம் கிடைக்கும். பங்குனி மாதம் அல்லது சித்திரை மாதம் அந்த வங்கியிலிருந்து பணம் வந்தால், அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு மாடு வாங்கப் போனால், கறக்கிற மாடா கிடைக்கும்? வறட்சியான மாடுதான் கிடைக்கும். இத்தகைய சூழ்நிலைகளையெல்லாம் மனதிலே வைத்துத்தான் அதிகாரிகள் பிரச்சினைகளை அணுக வேண்டும். இதையெல்லாம் அவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். யாருடைய பணமும் அல்ல இது. சர்க்காருடைய பணம், கூட்டுறவுப் பணம். அந்தப் பணத்தைப் பெற்று மக்களுக்கு உடனடியாக நன்மை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு சட்ட வாய்ப்புகளை மாற்றியமைக்க வேண்டும்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

வர்த்தக ரீதியாக உள்ள ஒரு கூட்டுறவு ஸ்தாபனமாக இருந்தால் அல்லது வர்த்தக ஸ்தாபனமாக இருந்தால், அதை வர்த்தக ஸ்தாபனமாகத்தான் நடத்த வேண்டும். இன்றைக்கு ஒரு சரக்கை நாம் கொடுத்தால், அது அங்கே போய், இங்கே போய் கடையில் பம்பாய் போய் விற்று வர 6 மாதம் ஆகிறது. அப்படி தனியார் ஒரு சரக்கைக் கேட்கிறார் என்றால், உடனே அடுத்த நாளே வருகிறது. கூட்டுறவுத் துறையிலே உடனுக்குடன் பில்களை மாற்றுவதற்கும், கடன்களைக் கொடுப்பதற்கும் பைசல் செய்வதற்கும் ஏற்ற முறையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இங்கே இன்னொன்றையும் உறுப்பினர்கள் சொன்னார்கள், கூட்டுறவு வங்கியில் பணம் பெறவேண்டுமானால், 100 ரூபாய், 200 ரூபாய், செலவாகிறது என்று சொன்னார்கள். இது மாநிலத்தில் பரவலாக எங்கும் இருக்கிறது. நம்முடைய ஆட்சி வந்த பிறகுதான் இது இருக்கிறது என்று நான் சொல்ல



1979 மார்ச் 19] [திரு. சி. இராமலிங்கம்]

வரவில்லை. இன்றைக்கு வீடு கட்டுகின்ற திட்டத்தின் கீழ் அங்கே பணம் கொடுக்கப்படுகிறது. கிட்டத்தட்ட 3 வருடம், 6 வருடம் அவர்கள் லோனுக்காக எழுதிப் போட்டுக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அருப்புக்கோட்டையிலிருந்து வருகிறார்கள். கோயம்புத்தூரிலிருந்து வருகிறார்கள். அந்தச் சங்கங்களில் அது பரிசீலனைக்கு வருகிறபோது தனக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பார்க்கிற நிலையிலே பணியாற்றுவதால்தான், இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன என்று சொல்லுகிறார்கள். இதைப் பற்றி அவர்கள் புகார் சொல்கிறார்கள். அந்த முறைகளைக் கட்டாயம் மாற்ற வேண்டும். வரிசைக் கிரமப்படி 1 ஆம் தேதி வந்தவர்களுக்கு முதலில் பைசல் செய்ய வேண்டும். அதே போல் 10 ஆம் தேதி விண்ணப்பித்தவர்களுடைய விண்ணப்பத்தைப் பிறகு பைசல் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நடைமுறையை இந்தச் சட்டத்தில் அவசியம் கொண்டுவர வேண்டும்.

அடுத்தபடியாக, கூட்டுறவுத் துறையிலே பல தவறுகள் நடைபெறுகின்றன. இன்றைக்கு விற்பனை அங்காடிகள், நெசவாளர் கூட்டுறவு அங்காடிகள் என்று எல்லாம் வரும்போது, ஆங்காங்கே நிறையத் தவறுகள் நடைபெறுகின்றன. அதிலே வருகின்ற நஷ்டங்களை அந்த பீரியடிலே, அந்த வருடத்திலேயே கணக்குப் பார்த்து எவ்வளவு நஷ்டம் வந்ததோ அந்தத் தொகை பூராவையும் அந்த நிர்வாகத்திலே சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து உடனடியாகத் திரும்பப் பெறுகின்ற வகையிலே நஷ்ட ஈட்டை வாங்குகின்ற வகையிலே சட்டத்தை நாம் திருத்த வேண்டும். இன்றைக்கு எத்தனையோ கூட்டுறவு வங்கிகளிலே வழக்குகள் 10 வருடம், 15 வருடம், 20 வருடம் என்று இருக்கின்றன. அதைத் தவிர்ப்பதற்கு எந்த அளவுக்கு கூட்டுறவுத் துறையிலே நல்ல திட்டங்களைக் கொண்டு வர முடியுமோ அந்த அளவுக்கு நல்ல திட்டங்களை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வல்லாளர்கள் மட்டுமல்லாமல் ஏழைகள் எல்லாம் இந்தக் கூட்டுறவிலே பங்குதாரர்களாகச் சேர்வதற்கும்,

[திரு. பி. இராமலிங்கம்] [1979 மார்ச் 19

தொழிலாளர்கள் எல்லாம் இந்தக் கூட்டுறவிலே பங்குதாரர்களாகச் சேர்வதற்கும் வாய்ப்பளித்திருப்பதற்காக இந்த அரசுக்கு நான் நன்றி கூறி இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவை வரவேற்று, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** 5 சட்ட முன்வடிவுகள் இருக்கின்றன. பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் 5 நிமிடங்களுக்கு மேலாகப் போகாமல் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. ப. மாணிக்கம்:** துணைத் தலைவரவர்களே, இந்த கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டமுன்வடிவு வரவேற்கத் கூடிய ஒன்று தான். ஏற்கனவே நடைமுறையில் கூட்டுறவு ஸ்தாபனங்களில் நிரந்தரமாகச் சேர்வதற்கு பல்வேறு தடங்கல்கள் இருந்தது. இன்னும் சொல்லப் போனால் கூட்டுறவு ஸ்தாபனங்கள் பல இடங்களில் குளோஸ்ட் சொசைட்டிகளாகச் செயல்பட்டு வந்தன. அதிலே மாறுதல் கொண்டு வருவது வரவேற்கத் தக்கது, இதிலே காரணமாக எல்லோரும் சேர்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தியிருக்கிறோம். தாராளம், அதிக தாராளமாகி விடலாம். அப்படி அதிக தாராளமாகின்றபோது, உறுப்பினர்கள் சேர்வதைப் பொறுத்தவரை, எல்லை முடிந்து விட்டது, கூடுதல் 100 பேர் தான் என்று சொல்லி, கூடுதல் பேர் சேர முடியாத நிலை உண்டாகலாம். அதைப்பற்றி நான் விளக்கமாகப் பேச விரும்பவில்லை. கிராமங்களிலே உள்ளவர்களில் செல்வாக்கு உள்ளவர்கள் பலர் தாங்கள் ஏழைகள் என்று சொல்லி, ஏழைகளின் பேரால் சேர்ந்து விடலாம். ஒரு பகுதியிலே ஏழைகள் மட்டும் சேரலாம். மற்றொரு பகுதியிலே ஏழைகள் சேராமல் இருக்கலாம். அப்படிப்பட்டதொரு நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். வறட்சி நிலைமைகள் ஏற்படும்போது, கடன் வழங்குகின்ற தொகையை உயர்த்துவது சம்பந்தமாக சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவையை எல்லாம் கலந்து தான் செய்ய வேண்டுமென்ற



1979 மார்ச் 19] [திரு. ப. மாணிக்கம்]

நிலையை மாற்றி, அரசு அவசரமான தேவையை உத்தேசித்து உடனடியாக வழங்குவதற்குரிய வாய்ப்பு ஏற்படுத்துவதற்கு இந்தத் திருத்தம் வகை செய்கிறது. அது நல்ல திருத்தம் என்றாலும் கூட, அதில் தவறுகள் வந்துவிடக் கூடாது. ஏனென்று சொன்னால், சில இடங்களில் வறட்சி ஏற்படலாம். அப்படியே தவறுகளும் கூட நடக்கலாம். அந்த இடத்திலே கூடுதல் தொகை வழங்குவது என்னும்போது, அதை உபயோகிப்பதிலே மிகவும் எச்சரிக்கையாக அணுகுமுறைகள் கையாளப்பட வேண்டும். Caution and discretion என்று சொல்வார்களே அது போல அது மிகவும் எச்சரிக்கையாகக் கையாளப்பட வேண்டும். இதற்கு அப்பாலும் கூட்டுறவுத் துறையைப்பற்றி விரிவான மசோதா பின்னால் வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே உள்ள பல ஆண்டு அநுபவங்களைக் கணக்கெடுத்துக் கொண்டு பார்த்தால், இந்தச் சட்டங்கள் பழைய சட்டங்கள். ஏற்கெனவே விரிவான முறையிலே என்று சொல்லும்போது, பழைய அநுபவங்களையெல்லாம் கணக்கெடுத்துக் கொண்டு அதிலே ஜனநாயகமும், ஜீவித்திருப்பதற்கான முறையிலே பல ஏற்பாடுகளை இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டமுன்வடிவில் செய்வார்கள் என்று நம்பி இந்த திருத்தங்கள் வரவேற்கத்தக்கவை தான் என்று சொல்லி அமைகிறேன்.

(பிற்பகல் 6-10.)

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கச் சட்டத்திருத்த மசோதாவில் அடங்கியுள்ள முக்கியமான 3 அம்சங்களையும் நான் வரவேற்கிறேன்.

இந்தத் திருத்தங்களை நிறைவேற்றுவதன் மூலமாகவே கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையிலும், உறுப்பினராவதற்குரிய தகுதி படைத்த அனைவரும் 'ஆட்டோமேட்டிக்காகச்' சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று நினைத்துவிட முடியாது. ஏனென்றால் கிராமப்புறங்களைப் பொறுத்த

வரையில் இன்னும் 'ரூரல் வெஸ்டட் இன்ட்டரஸ்ட்' அதாவது ஆதிக்கம் செலுத்துகிறவர்களின் செல்வாக்கு குறைந்துவிடவில்லை. திருத்தம் கொண்டு வந்தாலேயே அவர்களின் செல்வாக்கு குறைந்துவிடாது. நானே அனுபவத்தில் பல சங்கடங்களைக் கடந்த காலத்தில் அனுபவித்திருக்கிறேன். கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேருவதற்காகத் தெளிவான விதிமுறைகள் (பை-லா) இருந்தாலும். அங்கே நிர்வாகப் பொறுப்பில் இருக்கிறவர்கள் புதிதாக உறுப்பினர்கள் சேர்ந்தால், அவர்கள் தங்களுக்கு எதிராகப் போய்விடலாம், தங்களுடைய மெஜாரிட்டியைக் குலைத்து விடலாம் என்று எண்ணி, மிகுந்த காலதாமதம் செய்து வந்தார்கள். அவர்களையெல்லாம் எதிர்த்துக் கடுமையாகப் போராடித்தான் மெம்பர்ஷிப் வாங்க வேண்டிய நிலை கடந்த காலத்தில் ஏற்பட்டது. இந்த நிலையில் ஒருவர் உறுப்பினர் ஆவதற்காக விண்ணப்பம் போட்ட நாளிலிருந்து உறுப்பினராகிறார் என்ற முறையில் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன். இதை அமுல் நடத்தும் போது, புகார்கள் வரும். அது குறித்தும் உடனுக்குடன் விசாரணை நடத்தி அதற்குப் பரிகாரம் காண்பதையும் விரைவில் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன், அரசாங்கம் அதற்கு உத்தரவாதம் செய்ய வேண்டுமென்று வேண்டுகிறேன்.

அடுத்து, வறட்சி நிலை காரணமாக சென்ட்ரல் பேங்குகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன் தொகைகளை அவ்வப்போது அதிகரிக்க ரிசர்வ் பேங்குக்குச் சிபாரிசு செய்கிற உரிமையை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பல இடங்களில் குறுகிய காலக் கடன்களையெல்லாம் நீண்ட காலக் கடன்களாக மாற்றுவது பற்றி அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாவட்ட கூட்டுறவு மத்திய மாவட்ட வங்கிகளில் உள்ள மிக முக்கியமான, பிரதான கோரிக்கை ஒன்றையும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு



கிறேன். 10, 12 ஆண்டுகளுக்கு முன்புவரை தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், மாவட்ட மத்திய வங்கிகள் என்பவையெல்லாம் சிலருடைய பாரம்பரைப் பெட்டகங்களாக இருந்து வந்தன. பாரம்பரிய பாத்தியதைபோல சில ஜில்லாக்களில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களே வங்கியின் தலைவராக வருகிற நிலைமை இருந்து வந்தது. அந்த முறை சில வருடங்களுக்கு முன்னாலேதான் மாற்றப்பட்டது. ரிசர்வ் பேங்கிலிருந்து இந்த மாவட்ட மத்திய பேங்குகளுக்குக் கிடைக்கும் கடன் தொகை அதிகமான பிறகு, கிராமங்கள்தோறும் விவசாயக் கடன் வழங்கு சங்கங்கள் ஏற்பட்டன. அந்தச் சங்கங்களை நிர்வகிக்க பயிற்சி பெற்ற ஊழியர்கள் தேவைப்பட்ட காரணத்தால், ஆயிரக்கணக்கான ஊழியர்கள் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுவதற்காகப் பயிற்றுவிக்கப்பட்டார்கள். இவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்ட இந்த ஊழியர்கள் சில ஜில்லாக்களில் உள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளால் தங்களுடைய சிப்பந்திகளாக நியமிக்கப்பட்டு, பிறகு அவர்களுடைய பணியை கிராமங்களில் உள்ள விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனாகத் தந்தார்கள். அவர்களுடைய சர்வீசை சொசைடிகளுக்கு 'லெண்ட்' செய்திருக்கிறார்கள்; மற்றும் சில ஜில்லாக்களில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் நிர்வாகஸ்தர்கள் சட்டத்திற்குப் புறம்பாக 'அட்ஹாக் கமிட்டி' போட்டு, இந்த ஊழியர்களை நியமனம் செய்து, அவர்களையெல்லாம் கிராமங்களில் உள்ள விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளித்து, அவர்களுடைய சம்பள உயர்வு, மாறுதல் ஆகிய அனைத்தையும் மத்திய கூட்டுறவு வங்கிக்கே உரிமை உள்ளதாக ஆக்கிக் கொண்டு, மாவட்ட மத்திய வங்கிகளில் சொல்லப்படுவதைக் கேட்டால்தான், கிராமங்களிலுள்ள கூட்டுறவு விவசாய சங்கங்களுக்குக் கடன் வசதி அளிப்பது என்ற முறையையும் கையாண்டு கொண்டிருந்தார்கள்.

தற்போது இவ்வாறு கூட்டுறவுத் துறையில் பயிற்சி பெற்ற ஊழியர்கள் ஆயிரக்கணக்கில் மத்திய கூட்டுறவு வங்கிகளால் நியமிக்கப்பட்டு கிராமங்களில் உள்ள கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களில் நியமிக்கப்பட்டு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பதவிக்கு இப்போது ஆபத்து

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 மார்ச் 19

வந்திருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஒருவிதமான ஆபத்தும், தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வேறு ஒருவிதமான ஆபத்தும் அவர்களுக்கு வந்திருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இவ்வாறு கூட்டுறவுப் பயிற்சி பெற்ற சுமார் 215 பணியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 115 பேர்தான் மத்திய மாவட்டக் கூட்டுறவு வங்கிக்குத் தேவைப் படுகிறார்கள். மற்றவர்களை கிராமங்களில் உள்ள கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களுக்கு தங்கள் மூலமாக நியமித்திருக் கிறார்கள். இப்போது மாநிலக் கூட்டுறவுப் பதிவாளர் அவர் களிடமிருந்து ஒரு அறிவிப்பு சென்றிருக்கிறது என்னவென்றால் அவர்களுக்கெல்லாம் ரூ. 250 அல்லது ரூ. 200-க்கு மேல் சம்பளம் கொடுக்கக்கூடாது என்ற அறிவிப்பு கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சொசைடிகளின் தலைவர்களுக்குப் போயிருக்கிறது. இதன் காரணமாக அந்தக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் தலைவர்கள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலமாக வந்திருக்கிற சிப்பந்திகள் எங்களுக்குத் தேவையில்லை, அவர்கசளல்லாம் மத்திய கூட்டுறவு வங்கிக்கே போய்விட வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். அல்லது அவர்களுடைய சர்வீசை 'ரிட்ரென்ச்' செய்திருக்கிறார்கள். இவ்வாறு ஏற்கெனவே 25 பேர்களை ஆட்குறைப்பு செய்திருக்கிறார்கள். மீதி இருப்பவர்களான 90 சிப்பந்திகளின் நிலைமையும் இன்றைக்கு இந்த ஆபத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறது. அவர்களை மத்திய மாவட்டக் கூட்டுறவு வங்கி எடுத்துக் கொள்ளவில்லையென்றால், அவர்கள் அத்தனை பேரும் கிராம விவசாயக் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்களால் ஆட்குறைப்பு செய்யப்படும் நிலையில் இருக்கிறார்கள். இதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும். நான் அரசாங்கத்திடம் என்ன வேண்டிக்கொள்கிறேன் என்றால், ஏற்கெனவே இருக்கிற 115 பேர்களைப் பொறுத்தவரையில், அவர்களுடைய பணிக்குப் பாதுகாப்புக் காப்பட வேண்டும். இனிமேல் வருகிறவர்களைப் பொறுத்து, கிராமங்களில் உள்ள கூட்டுறவு கடன் வசதிச் சங்கங்கள் தங்கள் இஷ்டப்படி நியமனம் செய்து கொள்ளட்டும். அதை அவர்களுடைய சக்திக்கேற்ப செய்து கொள்வதற்கு விட்டுவிடலாம். அதைச்



1979 மார்ச் 19] [திரு. ஆ. நல்லசிவன்]

செய்யாமல் அவர்களையெல்லாம் 'ரிட்ரென்ச்' செய்வது என்பது எந்த வகையிலும் நியாயமில்லை. இது ரெஜிஸ்டிரார் ஆப் கோவாப்ரேட்டிவ் சொசைடிஸ் போட்டிருக்கிற 1975 ஆம் ஆண்டு 'கைடுலைன்ஸ்க்கே' முரணாக இருக்கிறது.

20—5—1975 அன்று மாநில கூட்டுறவுப் பதிவாளர் அனுப்பிய அறிவுரை என்னவென்றால்

"The deputation of employees in future should be consistent with the prescribed limits"

அதாவது எதிர்காலத்தில் 'டெபுடேஷன்' செய்கிறபோது, இந்த அறிவுரைகளுக்கு உட்பட்டுச் செய்யுங்கள் என்று சொல்லியிருக் கிறார். அப்படியென்றால், தற்போது இருக்கிறவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் இருக்கிற ஊதிய விகிதத்திலேயே தான் தொடர்ந்து பணியில் அமர்த்தப்பட வேண்டுமென்பது தான் அர்த்தம். இந்த நிலையில் அவர்களையெல்லாம் ஆட்குறைப்பு செய்வது என்பது எப்படி நியாயமாக இருக்க முடியும்? பலருக்கும் வேலை வாய்ப்பைத் தேடித் தர வேண்டும் என்ற கொள்கையை அரசாங்கம் வைத்துக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் ஏற்கெனவே ரூ. 300, ரூ. 400 என்று சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிற ஊழியர்களை, பயிற்சி பெற்ற ஊழியர்களை ஆட்குறைப்புச் செய்வது என்பது சரியல்ல. அந்த வகையில் கூட்டுறவுப் பதிவாளர் கிராம விவசாயக் கூட்டுறவு கடன் வழங்கு சங்கங்களுக்கு அறிவுரை கொடுப் பதும், கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் வழங்கு சங்கங்கள் அவர்களுடைய சிப்பந்திகளை ஆட்குறைப்பு செய்வதும் சரியல்ல. தற்போது இருப்பவர்களை அப்படியே வைத்துக் கொண்டு, இனிமேல் வேலைக்கு எடுக்கிறபோது, வேண்டுமானால் மாநிலக் கூட்டுறவுப் பதிவாளர் சொல்லுகிற முறையில் அவர்கள் ரெக்ரூட்மெண்ட் செய்தால் பரவாயில்லை.

தென்னாற்காடு மாவட்டத்தில் இருக்கிற நிலை என்னவென்றால், அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிற ஊழியர்கள் மாவட்ட மத்திய மாவட்டக் கூட்டுறவு வங்கியால் நியமிக்கப்படவில்லை. அதற்கு மாறாக ஒரு 'அட்ஹாக்

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 மார்ச் 19

கமிட்டி' மூலமாக நியமிக்கப்பட்டவர்கள். சுமார் 200 கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் வழங்கு சங்கங்களுக்குப் போடப்பட்ட ஊழியர்களைப் பொறுத்தவரையில், ஏற்கனவே அவர்கள் வாங்கிக் கொண்டிருக்கிற சம்பளத்தைவிட குறைவான சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு பணியாற்ற வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. மாநிலக் கூட்டுறவுப் பதிவாளர் அவ்விதம் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்.

அவையிலே மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். ஏற்கனவே கொடுக்கிற சம்பளத்தை எங்கேயும் எந்தக் காரணத்தைக் கொண்டும் குறைக்கக் கூடாது என்பதுதான் நியாயம். அதிகமாகத் தொழிலாளர்கள் கேட்கிறபோது, நிருவாகத்தைச் சேர்ந்தவர்கள் மறுத்து, அது கிடைக்கவில்லையென்றால், டிரிபூனலுக்குப் போவதுதான் வழக்கம். ஆனால் அதற்கு நேர் மாறாக மாநிலக் கூட்டுறவுப் பதிவாளர் ஒரு சர்க்குலர் போடுகிறார். அதில் என்ன சொல்லுகிறார் என்றால்:

The present strength of staff, pay and allowances wherever they are in excess, shall be brought down to the prescribed level before 31st October 1979.

இவ்வளவு பகிரங்கமாக மாநிலக் கூட்டுறவுப் பதிவாளர் ஒரு சர்க்குலர் போட்டால் இதன் காரணமாகத்தான் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்கனவே பணியிலிருந்த 25 ஊழியர்கள் ஆட்குறைப்புச் செய்யப்பட்டு வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இன்னும் 95 பேர் எந்த நேரத்திலும் ஆபத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தலையில் வாள் தொங்கிக்கொண்டிருக்கிறது. எனவே இதில் நான் அரசாங்கத்தைப் பார்த்து என்ன கேட்டுக்கொள்கிறேன் என்றால், ஏற்கனவே பயிற்சி பெற்று பணியாற்றும் சிப்பந்திகள் எங்கெங்கே தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறார்களோ அவர்களெல்லாம் அங்கேயே தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு அந்தந்த கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன்



1979 மார்ச் 19] [திரு. ஆ. நல்லசிவன்]

வசதிச் சங்கங்கள் முழுமையாகச் சம்பளம் கொடுக்க முடியவில்லை என்றால், சென்ட்ரல் பேங்கிலிருந்து சப்சிடி கொடுக்க வேண்டும். சென்ட்ரல் பேங்குகளுக்கு ஆட்கள் தேவைப்படுகிறபோது, இவர்களையெல்லாம் கிராமச் சங்கங்களிலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டும். தென்னாற்காடு மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான சிப்பந்திகள்—கிளார்க்குகள் "குறைந்த சம்பளத்தில் வேலை செய்வதானால் செய்யுங்கள், இல்லையென்றால் வேலையை விட்டுப் போங்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறார்கள். இது சரியல்ல. இது எந்த வகையிலும் ஒரு சோஷியல் ஜஸ்டிஸ் ஆகாது. மாநிலக் கூட்டுறவுப் பதிவாளர் போட்ட உத்தரவு இந்த வகையில் சரியல்ல என்பதையும் சொல்ல ஆசைப்படுகிறேன். எனவே அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு தற்போது வேலையில் இருப்பவர்களுக்கு வேலைப் பாதுகாப்பளிப்பதோடு அவர்களுடைய சம்பளத்திலும் எந்தவிதமான குறைவும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மாநிலக் கூட்டுறவுப் பதிவாளரின் உத்தரவை வாபஸ் பெற வேண்டும் என்று சொல்லி, இந்தத் திருத்தங்களை ஆதரித்து அமர்கிறேன்.

(பிற்பகல் 6-20)

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்ட முன்வடிவையொட்டி சில கருத்துக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இன்று அரசினுடைய நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்ற நிதியுதவி செய்யக்கூடிய அமைப்புகள் கூட்டுறவுச் சங்கங்களும், வங்கிகளும் தான். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக அரசு எதிர்பார்க்கின்ற அளவுக்கு விரைவாக மக்களுக்கு நன்மை செய்ய முடியவில்லை. காரணம் வங்கிகள் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லை. கூட்டுறவுச் சங்கங்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதால், பாமர மக்களுக்கு, மாணவர்களுக்கு எளியெளிய மக்களுக்கு எல்லாம் அரசு விரும்புகின்ற வகையில் நன்மைகள் செய்ய முடியும். கூட்டுறவு வங்கிகளில் ஒரு திட்டம் இப்போது

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1979 மார்ச் 19

நடைமுறையில் இருக்கிறது. வங்கிகள் அடைகின்ற லாபத்தில் ஒரு தொகை கல்வி நலனுக்கு என்று ஒதுக்கப்படுகிறது. அந்தத் தொகையை மாணவ மாணவியர்களுக்குப் போட்டிகள் வைப்பதன் மூலமாகச் செலவழிக்கிறார்கள். அதற்கு மாறாக, அப்படிப்பட்ட தொகையை ஏழையெளிய மாணவர்கள் படிப்பிற்கு—அரசினுடைய வேறு எந்த உதவியும் பெற முடியாத பல ஏழையெளிய மாணவ—மாணவியர்கள் இருக்கிறார்கள்—அளிக்கலாம். அப்படிப்பட்டவர்களுக்கு இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகள் மூலமாக உதவியளித்து அவர்கள் கல்வி பெற வாய்ப்பளிக்க வேண்டும். எனவே, அந்த வகையில் அமைச்சரவர்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரிகள், பள்ளிகள் உட்பட அனைத்துக் கல்வி நிலையங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் கட்டாயமாகத் துவக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை அரசு வற்புறுத்தினால் நல்லது. இன்றையதினம் மாணவர்கள் வெளியிலே புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் மற்றும் கல்விக்குரிய சாதனங்களும் வாங்கும்போது, வெளியில் விற்பவர்கள் அநியாய விலைக்கு அவைகளை விற்று கொள்ளை லாபம் அடிப்பதாகப் புகார்கள் வருகின்றன. ஆகவே, அனைத்துக் கல்விக் கூடங்களிலும் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க வேண்டும் என்று முடிவெடுத்து, அவைகளின் மூலமாகத் தான் மாணவ மாணவியர்களுக்கு வேண்டிய கல்விச் சாதனங்கள் வழங்கப்பட வேண்டும் என்று தக்க திருத்தங்களை ஆணையிலே ஏற்படுத்தினால் மாணவர்களிடமிருந்தும், பெற்றோர்களிடமிருந்தும் வருகின்ற புகார்களைத் தவிர்க்கலாம். ஆகவே, அரசு இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முன்பெல்லாம் பள்ளிகளில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பித்தால், மத்திய கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கணிசமான அளவுக்கு நிதியுதவி கிடைக்கும். இப்போது நிலைமை அவ்வாறு இல்லை. மிக மிகக் குறைவாக அந்த நிலைமை இருக்கிறது. ஏதோ 100 பள்ளிகளிலிருந்து மனுக்கள் வந்தால், ஒன்று அல்லது இரண்டு பள்ளிகளுக்குத்தான் உதவி



1979 மார்ச் 19] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

கிடைக்கிறது என்ற நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையை மாற்றி, பள்ளிகளிலோ, கல்லூரிகளிலோ கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிக்கும்போது, மத்தியக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து தக்க நிதியுதவியை அளிக்க ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டு இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலில் அரசாங்கம் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் திருத்தத்தை முழு மனதுடன் ஆதரிக்கிறேன். ஒரு காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் ஏதோ தனிப்பட்டவர்களிடத்திலே தான் இருக்கும் என்று இருந்த நிலைமைகள் எல்லாம் மாறி, ஏழையெளியவர்கள் மத்தியில் அந்தச் சங்கங்கள் உருவாக வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைத்ததைப்போல, இன்றையதினம் சட்டங்கள் இயற்றி இப்படி விரிவுபடுத்துவதன் மூலம் உண்மையிலேயே இன்னும் சில பகுதியினர் பலனடைவர் என்று அரசாங்கம் நம்புமானால், நான் உள்ளபடியே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் எனக்கு இருக்கிற ஒரு சங்கடத்தை அமைச்சர் அவர்கள் போக்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவர்கள் கொடுத்திருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவிலே, காரண—நோக்க விளக்கம் என்ற பகுதியில்—"தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 17(2) (எ) பிரிவின் கீழ், அந்த வகையைச் சேர்ந்த பதிவு பெற்ற சங்கத்தின் உறுப்பினராக வக்காலத்தால் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். மேற்படி சட்டத்தின் கீழ் இயற்றிய விதிகளைச் சேர்ந்த 18 ஆவது விதியில், கடன் வழங்கு சங்கங்கள், விநியோகர் சங்கங்கள், விற்பனைச் சங்கங்கள் யாவும் சங்கங்களாக அறிவிக்கப் பட்டுள்ளன. அவைகளில் உறுப்பினராகச் சேருவதற்கு தகுதி

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 மார்ச் 19

பெற்ற ஒவ்வொருவரும் அவற்றில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கிற விதியிலே—ஒரு கிராமத்திலே இருக்கக் கூடியவர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே சேர வேண்டும் என்று நினைத்தால் அவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற விதி 17(2) (ஏ) பிரிவிலே இருக்கிறது என்று சொல்லிவிட்டு, இப்போது ஒரு புதிய சட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வருவதன் மூலமாக சங்கத்தில் விண்ணப்பம் பெறப்படுகிற நாளிலிருந்து அவர்களை சம்பந்தப் பட்ட சங்கத்தின் உறுப்பினராகக் கருத வேண்டும் என்று இப்படி ஒரு பிரிவு தவிர, புதிதாக எந்தவிதமான மாற்றமும் இல்லை என்று நான் சொல்லிக் கொள்வேன். ஒரு வகையிலே, அரசாங்கம், இன்றையதினம் ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்கள் சிலர் அப்படிப்பட்ட சங்கங்களிலே சேர முயற்சிக்கின்ற நேரத்தில் ஏதாவது ஒருசில இடங்களிலே பிரச்சினைகள் உருவாக்கப்பட்டு அதன் காரணமாக இப்படிப்பட்ட ஒரு சட்டம் வருகிறதோ என்ற எண்ணம் இருந்தாலும் கூட, எப்படியோ தமிழ் நாட்டிலே கிராமங்களிலே இருக்கும் அத்தனை பேரும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதைப் பாராட்டுகிறேன். ஆனால், அதே நேரத்தில் சில பிரச்சினைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். இப்போது ஒவ்வொரு மத்திய வங்கியும் கிராமத்திலே இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போதிய உறுப்பினர்கள் சேர்க்க வேண்டும் என்று உத்தரவுகள் ஆண்டுதோறும் பிறப்பிக்கின்றன. அதல்லாமல், கூட்டுறவுச் சங்கங்களே கூட கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமத்திலே இருக்கின்ற பெரும்பாலானவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டு செயல்பட்டும் வருகின்றன. ஆனால் அப்படி உறுப்பினர்களாகச் சேர்ந்து விடுகின்ற காரணத்தினால் அத்தனை பேர்களும் கடன் வாங்குகிறார்களா என்று பார்த்தால், இல்லை. பொதுவாக, தமிழ் நாட்டிலே 10 லட்சம், 20 லட்சம் பேர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்றால், 1 லட்சம் பேர்கள் தான் கடன் வாங்கும் நிலை இருக்கிறது. மீதிப் பேர்கள் எல்லாம் ஏதோ



1979 மார்ச் 19] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

உறுப்பினர்களாக இருக்கிறோம் என்ற அளவிலே தான் இருந்து கொண்டிருக்கிறார்களே தவிர, அவர்கள் அத்தனை பேரும் கடன் வாங்குவதில்லை. அது மட்டுமல்ல, இன்றையதினம் கடன் கொடுக்கும்போது, எப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். ஒன்று, சொத்து அடிப்படையிலேதான் கடன் கொடுக்கிறோம். அப்படி என்றால், சொத்து இல்லாதவர்கள் ஏதாவது ஒரு சொந்தத் தேவைக்கு அல்லது ஒரு தொழில் செய்வதற்குக் கடன் வாங்க வேண்டும் என்றால்,— நான் தொழிற் சாலைகளை, சிறு தொழில்களைப் பொறுத்தவரையில், சொல்லவில்லை— அவர்கள் விவசாயத் தொழில் செய்ய வேண்டும் என்றால், சொத்து இல்லாவிட்டால் அவர்களுக்குக் கடன் கொடுக்கமாட்டார்கள். அவர்களும் அங்கிருந்து கடன் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பில்லை. நம்முடைய அமைச்சர் அவர்களை உள்ளபடியே எதற்காகப் பாராட்ட வேண்டுமென்றால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கூட்டுறவுச் சங்கங்கள் என்றாலே என்ன என்று தெரியாத சூழ்நிலை இருந்தபோது, அந்தச் சட்டத்தை விரிவுபடுத்தி அதிலே பரவலாக மக்களைப் பங்கேற்கச் செய்ய வேண்டும் என்று அப்போது அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. ஆதித்தனார் அவர்கள் ஒரு சில சீர்திருத்தங்களைச் செய்தார்கள்; அவரையும் மிஞ்சக்கூடிய அளவிலே நமது அமைச்சரவர்கள் இன்னும் சீர்திருத்தங்கள் செய்கிறார்கள். இந்த மாதிரிச் செய்யும்போது, அத்தனையும் மக்களுக்காகவே செய்யப்படுகிறது என்றுதான் நான் நம்புகிறேன். ஆனால் மாண்புமிகு அமைச்சர் திரு. ஆதித்தனார் அவர்கள் இதிலே சீர்திருத்தங்கள் செய்தபோது அன்றைய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், "இப்படி 'லிஃப்ட் இரிகேஷன்' என்றெல்லாம் புதிதாகப் போடுகிறீர்களே, உங்களுடைய கட்சிக்காரர்களை சென்ட்ரல் வங்கியிலே டைரக்டர்களாகப் போடுவதற்காகத்தான், அப்படிச் செய்கிறீர்கள்" என்று சொன்னார்கள். அதைப்போல, உங்களது கட்சியைச் சேர்ந்தவர்களை இயக்குநர்களாக நியமிப்பதற்காகவே இப்படிப்பட்ட வகையில் சட்டங்கள் திருத்தப்படுகின்றன என்று அன்றையதினம் மாண்புமிகு

உறுப்பினர் டாக்டர் ஹண்டே அவர்கள் தாக்கிப் பேசினார்கள். நான் அந்த அளவுக்குத் தாக்க விரும்பவில்லை. இன்றையதினம் தேர்தல் வைக்காமல் இன்றும் நாம் உறுப்பினர்களைச் சேர்ப்பதிலேயே இருந்து கொண்டிருக்கிறோம். இதன் விளைவு என்ன என்பதை நாம் சிந்திக்க வேண்டும். தேர்தல் இல்லை. அதிகாரிகள் இட்டதுதான் சட்டம். ஸ்பெஷல் அலுவலர்கள் அங்கு இருப்பதால். இன்றையதினம் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களை முறையாக அணுக முடியவில்லை. ஏதோ ஒரு டிக்டேட்டர்ஷிப் நாட்டிலே இருப்பதைப்போலத்தான் விவசாயிகளைப் பொறுத்தவரையில், இந்த கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இந்த அரசாங்கம் இதற்கு முன்பு இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இருந்த இயக்குநர்களையெல்லாம் கலைத்துவிட்டு, நிர்வாகிகளைக் கலைத்துவிட்டு, ஸ்பெஷல் அலுவலர்களைப் போட்டிருக்கிறார்கள். நாம் இன்றைக்கு 1976-ல் இல்லை, 1979-லே இருக்கிறோம். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு உள்ளாக தேர்தல் நடந்திருந்தால், அவர்கள் பதவிகள். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் சட்ட முன்வடிவு பற்றிப் பேச வேண்டும். அதற்கான கொள்கை விளக்கக் குறிப்பிலே. . . .

திரு. ஆற்காடு நா. வீராசாமி: ஒன்று தான், இந்த உறுப்பினர்களைச் சேர்ப்பதிலே. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கூட்டுறவுத் துறை என்பது மிகப் பெரிய துறை. பேசிக் கொண்டே இருக்கலாம். உறுப்பினர் அவர்கள் விரைவாக முடிக்க வேண்டும்.

(பிற்பகல் 6-30)

திரு. ஆற்காடு நா. வீராசாமி: கூட்டுறவுச் சங்கங்களில் கடன்களைக் கொடுத்து விவசாய உற்பத்தியைச் செய்கிறோம். இப்போது புதிய உறுப்பினர்களைச் சேர்க்கும்போது, அவர்கள் என்ன செய்யத் தவறியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்





காட்டுவதன் மூலம், விரைவிலே இந்த அரசாங்கம் அது குறித்து நடவடிக்கை எடுக்கும் என்ற காரணத்திற்காகத்தான் நான் இவைகளையெல்லாம் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே சீர்திருத்தங்கள் செய்ததைப் போல, இன்றையதினம் அப்படிச் செய்யவில்லை என்று சொல்லுகிற நேரத்தில், அதற்குக் காரணம், நிர்வாகத்திலே இருக்கக் கூடிய தனி அதிகாரிகள்தான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டு, அதன் பின் கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்டபோது, என்ன குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்களோ அந்தக் குற்றங்கள் இன்றைக்கு நீக்கப்பட்டிருக்கின்றனவா என்றால், இல்லை. ஒவ்வொரு ஸ்பெஷல் ஆபீசரும் எப்படிப் போகிறார்கள்? நடந்து போகிறார்களா? பஸ்ஸிலே போகிறார்களா? இல்லை, காரில்தான் போகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் காரில் போகிறார்கள் என்று சொல்லி, அதற்கான பெட்ரோல் கட்டணத்தை அவர்கள் செலுத்த வேண்டும், அவர்கள் டெலிபோன்களை உபயோகிக்கிறார்கள் என்பதற்காக டெலிபோன் கட்டணத்தை வாங்க வேண்டும் என்று சொன்னார்கள், சொல்லியதோடு மட்டுமல்லாமல் அதற்கென்று ஒரு கமிஷன் போட்டு, அந்த கமிஷனின் அறிக்கையையும் பெற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தின்போது, முன்னால் இருந்தவர்கள் என்னென்ன தவறுகளையெல்லாம் செய்தார்கள் என்று சொன்னார்கள். ஆனால் இன்று அந்தக் குறைபாடுகள் நீக்கப்பட்டிருக்கின்றனவா என்றால், இல்லை. இன்று தனி அதிகாரிகள் அந்தக் காரியங்களையெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். சேலத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கத்திலிருந்து சம்பந்தா சம்பந்தம் இல்லாமல், சென்னைக்கு டெலிபோன் செய்கிறார்கள். யாருக்குச் செய்கிறார்கள்? எதற்காகச் செய்கிறார்கள்? இதற்குரிய கட்டணத்தை யாரிடத்திலே வசூலிக்கப் போகிறார்கள்?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** கூட்டுறவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம் நடைபெறவிருக்கிறது. அப்போது உறுப்பினர் அவர்கள் எல்லாக் கருத்துக்களையும் விரிவாக எடுத்துச் சொல்லுவதற்குக் கால அவகாசம் இருக்கிறது. ஆகவே சீக்கிரத்தில் முடித்துக் கொள்ள வேண்டும். இன்னும் 5 சட்ட முன்வடிவுகளை நிறைவேற்ற வேண்டும். இப்போதே 6.35 மணி ஆகிறது. ஏற்கெனவே உறுப்பினர் அவர்கள் 15 நிமிடத்திற்குப் பேசியிருக்கிறார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் பேச ஆரம்பித்து சில நிமிடங்கள்தான் ஆகியிருக்கின்றன. எதிர்க் கட்சியின் சார்பிலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசவில்லை. நான்தான் எங்கள் கட்சியின் சார்பாகப் பேசும் ஒரே ஒரு நபர்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** சட்ட முன்வடிவைப் பொறுத்துப் பேசுவதென்றால் ஆட்சேபணையில்லை. கூட்டுறவு என்று எடுத்துக் கொண்டால், இன்றைக்கெல்லாம் பேசிக் கொண்டே இருக்கலாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** சுருக்கமாகவே சொல்லி முடித்துவிடுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது இவர்களுக்கு ஒரு தீய நோக்கம் இருந்தது. ஆனால் இவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகும், அதைத் திருத்தவில்லை. அரசாங்க விளம்பரம், கூட்டுறவுத் துறை விளம்பரம் என்றெல்லாம் பத்திரிகைகளுக்குக் கொடுத்தார்கள் என்று முன்பு குற்றம் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு அப்படிப்பட்ட விளம்பரங்கள்தான் வந்து கொண்டிருக்கின்றன. அன்றைக்குக் குற்றச்சாட்டாகச் சொன்னார்களே இன்றைக்கு அதைப் போக்கியிருக்கிறார்களா என்றால் இல்லை. இதையெல்லாம் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். உறுப்பினர்களைச் சேர்ப்பதற்காக புதிய சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதிலே வேடிக்கை என்னவென்றால், திராவிட முன்னேற்றக் கழக



ஆட்சியின்போது, உறுப்பினர் ஆவதற்கு ரூ. 1.06 கொடுத்தாலே உறுப்பினர் ஆகலாம். அவருக்கு எல்லா உரிமையும் உண்டு. கடன் வாங்குகிற உரிமையும் உண்டு, வாக்குப் போடுகிற உரிமையும் உண்டு. ஆனால் உறுப்பினர் ஆவதற்கு ஒரு ரூபாய் 6 காசு என்றும், அவர் வாக்களிக்க வேண்டும் என்றால் 10 ரூபாய் கட்ட வேண்டும் என்றும் புதிய சட்டம் சொல்லுகிறது. இவர்கள் ஏழைகளுக்காக அதிகாரம் எடுத்து ஆட்சி நடத்துகிற நேரத்திலே ஒரு ரூபாய் கட்டணத்தை பத்து ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறார்கள். வாக்குப் போட வேண்டுமென்றால், 10 ரூபாயைக் கட்ட வேண்டும் என்று சொன்னால், ஏழைகள் வாக்குப் போடுவதை இவர்கள் அனுமதிக்கவில்லை, வசதி படைத்தவர்கள்தான் வாக்குப் போடலாம். வசதியற்றவர்கள் வாக்குப் போடக்கூடாது என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது என்ற மனப்பான்மை விவசாயிகள் மத்தியிலே ஏற்பட்டுவிடாதா என்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சங்கங்களுடைய பெயர்களைக் கூட மாற்றப் போவதாகக் கேள்விப்படுகிறேன். கிராமப் பகுதிகளில் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் என்று இருப்பதை மாற்றி, இப்போது விவசாய சேவா சங்கம் என்று பெயர் வைக்க வேண்டும் என்று தீர்மானம் கூட போடப்பட்டிருப்பதாக அறிகிறேன். நாணயச் சங்கங்கள், சேவா சங்கங்களாக ஏன் மாறுகின்றன என்று புரியவில்லை. ஒரு சமயம் அதிகமாகத் தமிழைப் பேசிப் பேசி ஆட்சிக்கு ஆபத்தை ஏற்படுத்தி விடுவார்கள் என்று கருதுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. ஆகவே பெயர் மாற்றங்கள் தேவையில்லை. இருக்கிற நாணயச் சங்கங்களை இவர்கள் நாணயமாக நடத்தினாலே நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சங்கங்களைப் பொறுத்தவரையில், விவசாயிகளுக்குப் பரவலாக கடன்களைக் கொடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் உருவாக்கப்பட்டன. இன்றைய தினம் விவசாயிகளுக்குத் தேவையான பம்புசெட்டுக்களைப் போடு

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 மார்ச் 19

வதற்கும், கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் கடன்களைக் கொடுப்பதில்லை. பயிர் செய்வதிலுள்ள சிறிய பிரச்சினைகளில் கூட கவனம் செலுத்தும்போது, பயிர் செய்வதற்குத் தேவையான பம்புசெட் போடுவதற்கு கிணற்றை ஆழப்படுத்துவதற்கும் கடன்களை மறுப்பது நியாயம் இல்லை. ஆகவே புதிய உறுப்பினர்களைச் சேர்க்க முன்வருகிற அரசாங்கம், இந்தப் பிரச்சினையிலே கவனம் செலுத்தி, நாட்டிலே உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயிகளுடைய கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடிய வழியைச் செய்யவும், விவசாயிகளுக்குத் தேவைப்படுகிற கடன்களைக் கொடுக்கவும் தாராளமாக முன்வர வேண்டுமென்று கேட்டு, உறுப்பினர்களைச் சேர்ப்பதிலே ஆர்வம் காட்டுகிற அமைச்சர் அவர்கள் விரைவிலே தேர்தலை வைத்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கூட்டுறவுச் சங்கங்களில் செயல்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு இந்தச் சட்ட முன்வடிவை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது வரையில் இந்தக் கூட்டுறவுச் சங்கத் திருத்த மசோதாவின் மீது 7 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது நல்ல கருத்துக்களையெல்லாம் தமிழக அரசினுடைய மேலான பார்வைக்கு, பரிசீலனைக்கு, நடைமுறைக்கு வைத்திருக்கிறார்கள். குறிப்பாக முதல் முதல் தன்னுடைய கருத்தை நல்கிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் நல்ல பல ஆலோசனைகளை யெல்லாம் கூட்டுறவு இயக்கத்தினுடைய வளர்ச்சிக்காக நல்கியிருக்கிறார்கள். குறிப்பாக இந்தத் திருத்தங்களை வரவேற்று, மேலும் இந்தத் திருத்தங்களைச் செயல்படுத்துகிற நேரத்தில் மிக விழிப்பாக இருக்க வேண்டும் என்று அவர்கள் நல்ல ஆலோசனைகளை நல்கியதற்காக அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் தங்களது மேலான கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிற நேரத்தில், ஒரு நியாயமான அய்யத்தை, பலருடைய மனதிலே இன்றைக்கு நெருடிக் கொண்டிருக்கிற அய்யத்தை இந்த மாமன்றத்தின் முன்னாலே வைத்திருக்கிறார்கள். இந்தக்



1979 மார்ச் 19] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

கூட்டுறவுச் சங்கத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பது வருகின்ற தேர்தலில் ஏதாவது அரசியலில் பயன் பெறுவதற்குப் பயன்பட்டுவிடுமோ என்ற ஒரு அய்யத்தில் அவர்கள் சில உணர்வுகளை இங்கே வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு மெத்தப் பணிவாக இந்தத் திருத்தச் சட்டத்தினுடைய விழுமிய நோக்கத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு ஏற்கெனவே இருக்கிற கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின்படி, யார் வேண்டுமானாலும் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக ஆகக் கூடிய நிலைமை இருக்கிறது. சட்டம் என்பது வேறு, ஆனால் சட்டத்தை அமுல்படுத்துகிற நேரத்தில் ஏற்படுகிற சிக்கல்கள், சிரமங்கள் எவ்வளவு என்பதை வாழ்க்கையில் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். அப்படி சில இடங்களில் ஏற்பட்டிருக்கின்றன. அண்மைக் காலத்திலே, சேலத்திலே ஒரு மாதத்திற்கு முன்பு கூட ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் சிலர் சேர வேண்டும் என்று விரும்பிக் கேட்டபோது, அங்கே இருக்கிற நிர்வாகம் அதற்கு இணங்காத காரணத்தாலே, தமிழக அரசு தலையிட வேண்டிய நிர்ப்பந்தம் கூட ஏற்பட்டது. அப்படியும் சில நிலைமைகள் இருக்கின்றன. இன்றைக்கு

(பிற்பகல் 6-40)

தமிழகத்தினுடைய கூட்டுறவுச் சங்கங்களை எடுத்துக் கொண்டால், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி போன்றவர்கள், மற்ற உறுப்பினர்கள் எல்லாம் சொன்னதுபோல, இன்றையதினம் பெருவாரியான உறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்கத்திலே சேர்க்கப்படுகிறார்கள் என்றாலும் இன்றைக்கு இந்தப் புதிய திருத்தத்தை ஏன் கொண்டு வருகிறோம் என்று அவர்கள் கேட்கின்ற நேரத்தில், அவர்களுக்கு மெத்தப் பணிவன்போடு நான் சொல்லிக்கொள்வதெல்லாம், மீதியாக இருக்கின்ற அத்தனை பேர்களையுமே இந்தச் சங்கத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் நான் இதைக் கொண்டு வருகிறோம். இதை விரிவுபடுத்த வேண்டும் என்று சொல்லும் போது, அந்த முறைகளை எளிமையாக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன்தான் இந்தச் சட்டத்திருத்தத்தை அவையின் மேலான பரிசீலனைக்குக் கொண்டுவந்திருக்கிறோம்.

அடுத்து, ஒரு கருத்தைச் சொன்னார்கள். தேர்தல் நேரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்பு ஒரு கூட்டுறவுச் சங்கத்திலே, அந்தச் சங்கத்தைப் பிடிக்க வேண்டும் என்பதற்காக, பலரை உறுப்பினர்களாக ஆக்கி, அதை அவர்கள் கையடக்கம் செய்யக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி ஒரு சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில், ஒரு விளக்கத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தல் நடக்கப்போகிறது என்று அறிவிக்கிறார்கள். அப்படி நாள் குறிப்பிட்ட பிறகு, வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. வாக்காளர் பட்டியல் எப்படித் தயாரிக்கப்படுகிறது? ஒரு திங்களுக்கு முன்புவரை யார் யார் அந்தச் சங்கத்திலே உறுப்பினர்களாக இருந்தார்களோ அவர்களுக்குத்தான் தேர்தலிலே வாக்கு அளிக்கக் கூடிய வாக்குரிமை இருக்கிறது. வாக்காளர் பட்டியலில் முறையற்றவர்கள் பெயர்கள் இருந்தால், பதிவாளர் அவர்கள் அப்படிக் கருதுவார்களேயானால், அந்தப் பெயர்களை நீக்கி விடலாம். ஒரு நியாயமான தேர்தலை நடத்துவதற்கு இந்த மசோதாவிலே இடமிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாக்காளர் பட்டியலில், 10 15 நாட்களுக்கு முன்பு ஒருவர் அங்கத்தினராக வந்துவிடுகின்ற காரணத்தினாலேயே அவருக்கு வாக்களிக்க உரிமை வந்துவிடுவதில்லை என்ற அந்த விதியையும் இந்த மசோதாவிலே இடம் பெறச் செய்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

* **திரு. சோ. ஆறுமுகம்:** ஏற்கெனவே அந்த விதி இருக்கிறது. இன்னொன்றை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உறுப்பினராகச் சேர்க்காவிட்டால், அதைக் கட்டுப்படுத்த முடியாது என்று விதியிலே இருக்கிறது. ஒரு சங்கத்தில் ஒருவரை அங்கத்தினராகச் சேர்க்க மறுத்தால், அதைப்பற்றித் துணைப் பதிவாளருக்கு எழுதி அனுப்பினால், அவரை உறுப்பினராகச் சேர்க்கவேண்டும் என்று அவர் உத்தரவு அனுப்புவார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** ஏற்கெனவே அங்கு இருக்கின்ற நிர்வாகம் தீர்மானித்தால்தான், அவர்கள் உறுப்பினர் ஆகின்ற உரிமையிருக்கின்றது, இந்தப் புதிய முறைப்படி 15 நாட்களுக்கு முன்னதாக ஆட்சேபணை மனுவைப் பதிவாளருக்கு அனுப்புவார்கள். அந்த மனுவிற்கு 30 நாட்களுக்குள் பதில் வராவிட்டால், அவருடைய பதிலை எதிர்பார்க்காமலேயே அவரை உறுப்பினர் ஆக்கக்கூடிய உறுதியை இந்தத் திருத்தம் தருகிறது என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

30 நாட்கள் கடந்த பிறகு, பதிவாளரின் பதில் தேவையில்லை. அவருடைய பதில் இல்லாமலேயே அவர் ஆட்டோமேடிக்காக, இயற்கையாகவே உறுப்பினராக ஆக்கப்பட்டுவிடுகிறார். அந்தத் தகுதியை அவர் பெற்றுவிடுகிறார். ஏற்கெனவே அப்படி இல்லை. நிர்வாகக் குழுவிலே அங்கீகாரம் அளிக்கப்பட்டு, அதிலேயும் குறை இருந்தால், மேல் முறையீடு செய்ய வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட சிறு குறைபாடுகளை நீக்க நாம் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆறுமுகம் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து நம்முடைய கன்னியத்திற்குரிய உறுப்பினர் அவர்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலர் கூட்டுறவுச் சங்கத்திலே நிகழ்ந்து வருகின்ற சில முறைகேடுகளைப்பற்றியும் அங்கேயிருக்கின்ற ஆணையாளர், அங்கே இருக்கின்ற ஆசிரியப் பெருமக்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து சில சலுகைகளைப் பெறுகின்ற நேரத்திலே, அவர்கள் சந்தித்து வருகின்ற இடைஞ்சல்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவைகளுக்குத் தக்க வகையிலே பரிகாரம் காண நிச்சயமாக கூட்டுறவுத் துறை உறுதி எடுத்துக்கொள்ளும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். கடன் சலுகைகள் அளிப்

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1979 மார்ச் 19

பதிலே மிக விழிப்பாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். குறிப்பாக திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை போன்ற பகுதிகளிலே எதிர்பாராத இயற்கை உற்பாதங்கள் காரணமாக, பெருத்த நஷ்டங்கள் ஏற்பட்டுவிட்ட காரணத்தினாலே, ஏற்கெனவே அங்கீகரிந்ததற்கு, வரையறுக்கப்பட்டதற்கு மேலும் கடன் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி எதிர் காலத்திலே தக்க இடங்கள் பார்த்து கடன்களைக் கொடுக்க வேண்டும், மிக விழிப்பாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கடன் சலுகைகளை ஏழை-எளிய மக்களுக்கு, நலிந்தவர்களுக்கு, உரியவர்களுக்கு, தேவையானவர்களுக்கு விழிப்பாக இருந்து கொடுக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், பேச்சினூடே ஒரு நல்ல கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அவர்களிடத்திலே நான் நேரிலேயே விளக்கியிருக்கிறேன். அவர்கள் இன்றைக்கும் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட்டுறவு கிராம சங்கத்திலே இருக்கின்ற செயலாளர்களுக்கு இருக்கின்ற சில இடர்ப்பாடுகளைப்பற்றியெல்லாம் அவர்கள் இங்கே மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். கடந்த 10 ஆண்டுகளில் சட்ட விதி முறைகளுக்கு மாறாக, சட்டம் அனுமதிக்காத வகையில், அட் ஹாக் கமிட்டி என்ற பெயரில் நிர்வாகத்தில் இருந்தவர்கள், மத்திய வங்கி ஊழியர்களாக அவர்களை அனுப்பிவைத்த காரணத்தினாலே, இந்தச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சிக்கல்களை எப்படித் தீர்க்க வேண்டும்? அவர்கள் சொன்னதுபோல், இன்றைக்குப் பணியிலே இருக்கின்ற நபர்களுடைய பணிப்பாதுகாப்புக்கு ஊறு ஏற்படாத வகையில் அவைகளைத் தீர்க்க அரசு முயற்சி எடுக்கிறது. குறிப்பாக அந்த கிராமக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய செயலாளரை நியமிக்கின்ற அதிகாரம் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய நிர்வாகத்திற்குத்தான் இருக்கிறது. 10 ஆண்டுக் காலமாக சட்டத்திற்கு மாறுபட்ட நடைமுறையிலே நியமிக்கப்பட்டு வந்த காரணத்தினாலே, அந்தப் பிரச்சினை



1979 மார்ச் 19] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

பெரியதாக ஆகியிருக்கிறது. என்றாலும், இந்தப் பிரச்சினையை மிக அமைதியாக ஆராய்ந்து, அதற்கான காரணங்களை அறிந்து, விரைவிலே குறைகளைப் போக்குவதற்குத் தக்க முயற்சி அரசு எடுக்கும் என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, இந்தப் புதிய சட்டத்தினுடைய அவசியத்தைப் பற்றி அவர்கள் கேட்டார்கள். ஏற்கெனவே உறுப்பினராக ஆகின்ற வாய்ப்பு உள்ளபோது, இந்தப் புதிய சட்டம் ஏன் என்ற ஐயத்தைக் கேட்டார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே ஒரு கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினராக ஆக வேண்டுமென்றால், அந்த கூட்டுறவுச் சங்கத்தினுடைய நிர்வாகம் அனுமதித்தாலன்றி, உறுப்பினர் ஆக முடியாது. அந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியிருக்கிறோம். இன்றைக்கு கூட்டுறவுச் சங்கத்தினுடைய 17-வது விதி, 18 விதி ஆகிய இரண்டு விதிகளிலே யார் யார் உறுப்பினராக இருக்கலாம் என்று இருக்கிறது. ஒன்று குவாலிபிகேஷன். இன்னொன்று டிஸ்குவாலிபிகேஷன். யார் யார் இருக்கக்கூடாது என்றும் போட்டிருக்கிறார்கள். செட்யூல்ட் என்ற வரையறுக்கப்பட்ட அந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினராக ஆவதற்கு இது வரையிலே நிர்வாகப் பொறுப்பிலே இருக்கின்ற மெம்பர்கள் விரும்பினால் ஆகலாம் என்ற சிறு சங்கடம் இருந்தது. அந்தச் சங்கடத்தைப் போக்க வேண்டும். நியமிக்கப்பட்ட இந்தக் குழுவிற்குத் தனி நபர்களை உறுப்பினர் ஆக்கும் உரிமை கிடையாது. அதற்கு முன்னாலே அந்த உரிமை இந்தக் குழுவிற்கு இருந்தது. இந்த மசோதா வந்த பிறகு அந்தக் குழுவிற்கு உரிமை கிடையாது.

(பிற்பகல் 6-50)

அப்படி ஒருவர் உறுப்பினராகும் தகுதியை இழந்துவிட்டால், அந்தக் குழுவோ அல்லது தனி நபரோ ஆட்சேபணை மனுவை அனுப்பலாம். இன்ன காரணத்தால் அவருக்குத் தகுதியில்லை

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1979 மார்ச் 19

என்று ஆட்சேபணை அனுப்பலாம், அது பதிவாளருக்குச் செல்லும், 30 நாட்களுக்குள்ளாக மனுவை தீர்க்கமாக ஆலோசனை செய்து, அவர் தகுதியானவரா; சேர்த்துக் கொள்ளலாமா; 17-வது விதிப்படி அல்லது 18-வது விதிப்படி வருகிறாரா என்று பார்த்து, முடிவைச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லாவிட்டால், அவருக்குத் தகுதியிருக்கிறது என்று பொருள். அந்த உறுதியை இந்தச் சட்டம் கொடுத்திருக்கிறது. ஏற்கெனவே இருந்த சட்டத்திலே அந்த பலகீனம் இருந்தது. எனவே அந்த பலகீனத்தைப் போக்கி, பலத்தை உருவாக்க, இந்தத் திருத்த மசோதாவிலே அந்த ஷரத்தைப் புகுத்தியிருக்கிறோமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. பா. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, பள்ளிகளில் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க வேண்டுமென்று சொன்னார்கள். என்னைப் போன்றவர்களும் அதே கருத்தில்தான் இருக்கிறோம். Common Kitchen Centers என்று பல பள்ளிகளிலும், பல கல்லூரிகளிலும் இருக்கிறது. திருச்சி தேசியக் கல்லூரி போன்ற பல கல்லூரிகளிலே நல்ல வகையிலே அவை செயல்படுகின்றன. அப்படிப்பட்ட முயற்சிகளை எடுத்து, கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கினால், அங்கெல்லாம் கூட்டுறவு உணர்ச்சிகளை கூட்டுறவு தத்துவங்களை கூட்டுறவு சித்தாந்தங்களை இளம் உள்ளங்கள் பெற வாய்ப்பாக இருக்கும். அதே நேரத்திலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, அவர்களுக்குள்ள இடர்ப்பாடுகளைப் போக்கவும் பயனுள்ளதாக இருக்கும். அந்த முயற்சியிலே அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதனைப் போலவே, Common Good Fund பற்றிச் சொன்னார்கள். கூட்டுறவுச் சங்கங்களிலே ஒரு விழுக்காட்டை Common Good Fund என்பதற்காக எடுத்துக் கொள்கிறார்கள். அந்தத் தொகையை கல்வி வளர்ச்சி போன்ற



1979 மார்ச் 19] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

வற்றுக்குப் பயன்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். பல நிறுவனங்கள் அப்படிப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், திருச்சியிலே இருக்கிற 'பெல்' நிறுவனத்தினர் ஒரு ஆண்டுக் காலத்திற்கு முன்னால்தான் கூட்டுறவுச் சங்கத்தை அங்கே ஏற்படுத்தினார்கள். ஏறத்தாழ 8 லட்சம் ரூபாய் லாபம் பெற்று, அதில் 10 விழுக்காடு என்பதால், 80,000 ரூபாயைக் கொண்டு அனாதை இல்லங்கள், அனாதைப் பள்ளிகள் வைத்து, நல்ல காரியங்களை அந்த நிறுவனம் செய்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட முன் உதாரணங்களை வைத்து மற்ற நிறுவனங்களிலும் அதை தார்மிகக் கடமையாக்க, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலுள்ள அரசு விரும்புகிறது. இதோடு, பல நல்ல யோசனைகளை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைத்ததற்காக நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அவைத் தலைவர் அவர்களே, விளக்கம் கேட்க விரும்புகிறேன். ஓர் உறுப்பினர் தகுதியற்றவர் என்று புகார் எழுதி, அந்தப் புகார் அனுப்பப்பட்டால், அது ரெஜிஸ்டிராருக்குச் செல்லும்; 30 நாட்களுக்குள்ளாக பதில் தர வேண்டும்; இல்லாவிட்டால் அவர் தகுதி பெற்றவராகி விடுவார் என்று சொன்னார்கள். இதிலே ஒரு சின்ன ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். இந்த அவையிலே கொண்டு வந்துள்ள சட்டமுன்வடிவு நிறைவேறினாலுங்கூட, அந்த அதிகாரத்தைப் பதிவாளரிடம் கொடுத்து. . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** ஆலோசனை சொல்கிறீர்களா அல்லது விளக்கம் கேட்கிறீர்களா?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** விளக்கம்தான் கேட்கிறேன், அந்த அதிகாரத்தைப் பதிவாளரிடம் கொடுத்துவிட்டால், அதற்குப் பின்னால் அப்பீல் செய்யும்போது, யாருக்குச் செய்வது என்ற பிரச்சினை வந்துவிடும். இப்போது அந்த அதிகாரம் துணைப் பதிவாளர் அல்லது அடிஷனல் ரெஜிஸ்டிராருக்கு இருக்கிறது. அதை அவருக்குக் கொடுக்கலாம். எனவே அப்பீல் செய்வதற்கு உரிமை இருக்க வேண்டும். அந்த

[ஆற்காடு நா. வீராசாமி] [1979 மார்ச் 19

உரிமை இல்லாமல் போகிறது. எனவே இதைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்க வேண்டும். இரண்டாவதாக, தகுதியற்றவர் என்று அனுப்புகிற புகார் குறித்து, ரெஜிஸ்ட்ராரிடமிருந்து 30 நாட்களுக்குள் ரிப்ளை வராவிட்டால், அவருக்குத் தகுதி வந்துவிடக் கூடாது. அவர் தகுதியற்றவர் என்று ஆக்க வேண்டும். அப்போதுதான் அந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வார்கள். இல்லாவிட்டால், போகின்ற விண்ணப்பங்கள் எல்லாம் அப்படியே இருக்கும். இப்போது எப்படிச் செயல் படுகிறார்கள் என்பது தெரியும். எப்படியோ ஒரு மாதம் கவனிக்காவிட்டால், அவர்கள் ஆட்டமேடிக்காகத் தகுதி பெற்றவர்களாகி விடுவார்கள். யாராவது ஒருவரைக் குற்றவாளி அல்லது தகுதியற்றவர் என்று 18 வது விதியின் கீழ் சொல்லியிருந்தாலும், இதன்படி அவர் உறுப்பினராக வருவதற்கு அனுமதி தந்துவிடுவதாகிவிடும். எனவே இதையும் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பதிவாளரிடத்திலே இந்த அதிகாரங்களைக் கொடுத்துவிட்டால், அதனால் ஏதாவது குந்தகம் ஏற்பட்டுவிடுமோ என்ற அய்யத்தைச் சொன்னார்கள். ஆனால் பதிவாளரோடு அந்தப் பிரச்சினை தீர்ந்துவிடுவதில்லை. 1961 ஆம் ஆண்டு தீட்டிய சட்டப்படியே 96-வது விதியின்படி, அவருடைய பரிந்துரையில் ஏதாவது தவறுகள் இருந்தால்கூட, மேல் அமைப்பிற்கு—அரசுக்கு மேல் முறையீடு செய்யலாம். அவருடைய பரிந்துரையில் ஏதாவது குறைபாடுகள் முறைகேடுகள் அல்லது கவனிக்காத அம்சங்கள் இருந்தால், அவைகளைப்பற்றி மேல் முறையீடு செய்வதற்கு இன்றைய சட்டத்தின் 96-வது விதியின்படி, 'அப்பீல்' என்ற பிரிவு இருக்கிறது. அதன்படி நியாயத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இன்றைக்கு நாங்கள் நம்பிக்கையின் அடிப்படையிலேதான் காரியங்களைச் செய்கிறோம். நாளையதினம் அப்படியும் குறைகள் இருந்தால், மாமன்றத்தில் நீங்கள் இருக்கிறீர்கள், நாங்களும் இருக்கிறோம். அப்படிப்பட்ட அனுபவம் ஏற்படும் போது, அவற்றைச் சுட்டிக் காட்டினால், அப்படிப்பட்ட குறைபாட்டைத் தீர்க்க, விரிந்த மனதோடு மாண்புமிகு புரட்சித்



1979 மார்ச் 19] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

தலைவரின் தலைமையில் அமைந்த அரசு இருக்கிறதென்று சொல்லி, கூட்டுறவுச் சட்டத்தினுடைய திருத்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து, நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. சோ. ஆறுமுகம்:** துணைத் தலைவரவர்களே, இதிலே ஒன்றும் குறையாகச் சொல்லவில்லை. அமைச்சரவர்கள் நல்ல நோக்கத்தோடு பரிசீலனை செய்ய வேண்டுமென்றும், அதைப் பற்றி விளக்கம் பெறவும் விரும்புகிறேன். கவனக் குறைவாக, தவறுதலாகத்தான், துணைப் பதிவாளர், இணைப் பதிவாளர் என்பதைச் சேர்க்காமல் இருந்திருக்க வேண்டும். அப்படித்தான் போட வேண்டுமென்று கருதியிருப்பார்கள். தவறுதலாகப் பதிவாளர் என்று இடம் பெற்றிருக்குமென்று கருதுகிறேன். பதிவாளர் என்றால், ரெஜிஸ்டிராரைக் குறிக்கும், துணைப் பதிவாளர், இணைப் பதிவாளர் என்ற அளவில் இருந்தால், மேல் முறையீட்டிற்குச் சரியாக இருக்கும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவையின் நடவடிக்கைகள் நீட்டிக்கப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சொன்ன யோசனையைப் பரிசீலனை செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** துணைத் தலைவரவர்களே, கூட்டுறவுத் திருத்த மசோதாவிலே உள்ள நிலை இன்னும் விளக்கப்படவில்லை. இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகிற ஒரே ஏரியாவில் ஒருவர், ஒரு கூட்டுறவுச் சங்கத்திலேதான் உறுப்பினராக இருக்க முடியும் விதியின்படி, ஆனால் இந்தச் சட்டத்தின்படி இரண்டிலுமே மனு கொடுத்துவிட்டு, இரண்டிலுமே உறுப்பினராக இருக்கும் நிலைமை இருக்கிறது. அதைத் தவிர்க்க நடவடிக்கை உண்டா? ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகப் பொறுப்பிலே உள்ளவர்கள், குறிப்பிட்ட ஒருவர் இன்னொரு சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறார் என்று தெரிந்திருந்தும், அந்தச் சங்கத்தில் உறுப்பினராக மனு

[திரு. க. இராமமூர்த்தி] [1979 மார்ச் 19

கொடுக்கும்போது, அதை ஏற்றுத்தான் ஆக வேண்டும். அதற்குப் பின்னால்தான், ரெஜிஸ்டிராருக்கு மனுச் செய்வது. அப்பீல் செய்வது என்று இருக்கிறது. இதைத் தவிர்க்க அமைச்சர் அவர்கள் உறுதி அளிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்ன கருத்திலே ஏதாவது அடிப்படை இருக்கிறதா என்று சம்பந்தப்பட்டவர்களிடம் கலந்தாலோசித்து, ஆவன செய்கிறேன் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு, ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு 34/1978) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகின்றேன்.



1979 மார்ச் 19]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை;

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1978) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-00.

## 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

116. Notification issued in G.O. Ms. No. 3112, Home (Transport-I), dated the 19th December 1978 in regard to the concessional rate of tax levied on jeep stage carriages on village roads in rural areas under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

117. Notification issued in G.O. Ms. No. 1957, Rural Development and Local Administration, dated the 20th December 1978 in regard to amendments to the Tamil Nadu Municipal Councils (Conduct of Election of Chairmen and Councillors) Rules, 1978. [Laid on the table of the House under section 304(*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

### B. Report, Notifications and other papers.

*67. The Tamil Nadu Preservation of Private Forests (Extension to Kanyakumari District) Bill, 1979 (L.A. Bill No. 15 of 1979), as passed by the Assembly.

* Circulated to all M.L.Cs. on 17th March 1979.

## இணைப்பு I

[214-ம் பக்கத்தில் வினா எண் 220-ன் கீழ் அடிக்குறிப்பைக் காண்க)

(அ) ஆம்.

(இ) திருவாங்கூர் கொச்சி ராஜ்யத்திலிருந்து தமிழ்நாடு அரசுக்கு மாற்றப்பட்ட 29 சுகாதார ஆய்வாளர்களை அரசுப் பணியில் முன் தேதியிலிருந்து (Retrospective effect) சேர்ப்பதற்காக அரசாணை எண் 1312, நாள் 28—5—1976-ல் 29 உபரி (Supernumerary) சுகாதார ஆய்வாளர்கள் பதவிக்கான அனுமதி வழங்கப்பட்டது. இதன்பேரில் 25 பேர்கள் 1—11—1956 முதலும், மற்றவர்கள் முறையே 16—5—1957 1—6—57, 1—8—58 மற்றும் 16—8—58 முதலும் சுகாதார ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்களில் 11 பேருக்கு 1—11—1956-ல் ஊதியம் நிர்ணயம் செய்து மற்றும் 1960—சம்பளக் குழு. 1970—சம்பளக்குழு, ஒரு நபர் குழு இவற்றின் படியும் ஊதியம் நிர்ணயம் செய்து சென்னை மாநிலக் கணக்காய்வுத் தலைவர் (Accountant-General, Madras-18) அலுவலகத்திற்கு தணிக்கைக்காகவும், ஒப்புதலுக்காகவும் அனுப்பப்பட்டுள்ளது. மீதி உள்ள 18 பேர்களுடைய ஊதிய நிர்ணயம் செய்ய மாவட்ட அலுவலகங்களிடமிருந்து பணிப்பதிவேடு கேட்கப்பட்டுள்ளது. சிலர் ஓய்வுபெறும் தருவாயில் இருப்பதால் அவர்களின் பணிப் பதிவேடுகள், அவர்களின் ஓய்வூதியம் தொடர்பாக மாநிலக் கணக்காயருக்கு அனுப்பப்பட்டுள்ளன. 1—11—1956 முதல் "சீனியாரிட்டி" அளித்து தேர்வுநிலை பதவி அளிக்கல் குறித்து இவர்களின் பணி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இது குறித்து நடவடிக்கைகள் வெகு விரைவில் எடுக்கப்படும்.

(உ) பாதிக்கப்பட்டவர்கள் 29 பேர்கள்.

(எ) எல்லோரையும் பதவியில் அமர்த்தி 1—11—1956-ல் ஊதிய நிர்ணயம் செய்து, 1960 ஆம் ஆண்டின் முதல் ஊதியக்குழு 1976-ம் ஆண்டின் இரண்டாம் ஊதியக்குழு, ஒருவர் குழு ஆகிய குழுக்கள் மீதான ஆணைகளின்படி ஊதியம் நிர்ணயம் செய்து மாநிலக் கணக்காய்வுத்தலைவர் ஒப்புதல் பெற்று, ஊதியம் பற்றிய கணக்குகள் முடித்து அவ்வலுவலர்களின் பணி விவரங்களைச் சேகரித்து, சீனியாரிட்டி, தேர்வு நிலை அளிக்க வேண்டியிருப்ப



தால் காலதாமதம் ஏற்படுகிறது, எனினும் இவ்வேலையை அரசு துரிதப்படுத்தி வருகிறது.

## இணைப்பு II

[242-ம் பக்கத்தில் இனம் 4(1) க்கான அடிக் குறிப்பைக் காண்க]

சேலம் மாவட்டத்திலுள்ள சேந்தமங்கலம் அரசினர் மருத்துவ மனைக்கு மொத்தம் அனுமதிக்கப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை மூன்று. இந்த மூன்று பதவிகளிலும் மருத்துவர்கள் பணிபுரிந்து வந்தார்கள். இதில் ஒரு பதவியில் நியமிக்கப்பட்ட பெண் மருத்துவர் 18—7—1978 அன்று, 15 நாள் மருத்துவ விடுப்புக்கோரி மனுச் செய்தார். பின்னர் சொந்தக் கரியங்களைக் கவனிக்கும் பொருட்டு விடுப்பினை இரண்டு மாத காலம் நீட்டிக் தரும்படி விண்ணப்பித்தார். அவரின் விடுப்பு மனு மறுக்கப்பட்டு, அவர் உடனடியாக பணியில் சேருமாறு தந்தி மூலம் கோரப்பட்டார். 16—9—1978 அன்று அவரின் மேல் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கு நியாயம் காட்டுமாறும் கோரப்பட்டார். அந்தப் பெண் மருத்துவர் 18—9—1978 அன்று காலை சேந்தமங்கலம் அரசினர் மருத்துவ மனையில் சேர்ந்தார். 21—9—1978 அன்று உடல் நலம் சரியில்லை என்ற காரணத்தினால் இரண்டு நாட்களுக்கு சிறுவிடுப்பு கோரினார். அவரின் உடல்நிலையைப் பற்றிச் சான்றிதழ் கொடுக்க அவர் மருத்துவக் குழுவிற்கு 28—9—1978 அன்று அனுப்பப்பட்டார். ஆனால் அவர் மருத்துவக் குழுவின் பரிசோதனைக்குச் செல்லாததால், அவரின் மேல் நடவடிக்கை தனியாக எடுக்கப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்ட மருத்துவ அலுவலரால் சேந்தமங்கலத்திலுள்ள அரசினர் மருத்துவமனைக்கு ஒருபெண் மருத்துவர் ஒதுக்குப் பணியிடத்திலிருந்து தற்காலிகமாக பணியாற்ற அனுப்பி வைக்கப்பட்டு தற்போது பணியாற்றி வருகிறார். தமிழ்நாடு மருத்துவப்பணியில் நியமனம் பெறுவதற்காக, தமிழ்நாடு தேர்வாணைக்குழுவால் 1978 ஆம் ஆண்டு தேர்ந்து எடுக்கப்பட்ட மருத்துவப் பட்டதாரிகளின் பட்டியலை அரசு அங்கீகரித்துள்ளது. அப்பட்டியலிலிருந்து நிரந்தரமான ஒரு பெண் மருத்துவரை மேற்கூறிய மருத்துவமனைக்கு கூடிய விரைவில் அரசு நியமிக்கும்.

## இணைப்பு III

[243-ம் பக்கத்தில் இனம் 4(2) க்கான அடிக்குறிப்பைக் காண்க]

1976-77-ஆம் ஆண்டு இறுதி வரையில் மெட்ரிக் படிப்புக்கு முந்திய படிப்பு பயிலும் பழங்குடியினர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் கிறித்துவ மதத்துக்கு மதம் மாறிய வகுப்பைச்சார்ந்த மாணவர்களுக்கு புத்தகச் செலவுக்கும் சிறப்புக் கட்டணங்களுக்கும் படிப்புதவிக் தொகை பணமாக வழங்கப்பட்டது. தேவையான போது படிப்புதவித் தொகையுடன் தேர்வுக் கட்டணமும் பணமாகவே வழங்கப்பட்டது. மேற்கூறிய படிப்புதவிக் தொகையை வழங்குவதற்கு பெற்றோர் அல்லது பாதுகாவலரின் உயரளவு வருமான / வரம்பு ரூ. 3,000 ஆகும். 1977-78-ஆம் ஆண்டிலிருந்து 4 முதல் 11-ஆம் வகுப்பு வரையில் பயிலும் பழங்குடியினர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் கிறித்துவ மதத்துக்கு மதம் மாறிய வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானத்தைப் பாராமல் எல்லாப் பாடப் புத்தகங்களையும் வழங்க அரசு ஆணையிட்டது. ஏனெனில் 1 முதல் 3-ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்குக் கல்வித்துறை இலவசமாகப் புத்தகங்களையும் எழுது பலகைகளையும் வழங்குகிறது. சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்கள் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணத்தைச் செலுத்துவது தேர்வுக் கட்டணங்களைச் செலுத்துவதும் குறித்த சலுகை, மாணவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானத்தைப் பாராமலே பழங்குடியினர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் கிறித்துவ மதத்துக்கு மதம் மாறிய வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு நீட்டிக்கப்பட்டது.

2. இம்மாநிலத்தின் பழங்குடியிருனருக்காகவும், தாழ்த்தப்பட்டோருக்காகவும் 1028 பள்ளிகளை தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நடத்தி வருகிறது. கல்வியாண்டில் தாழ்த்தப் பட்டோர் பழங்குடியினர் நலப்பள்ளிகள் திறக்கப் பட்ட பிறகு மாணவர்களுக்கு அவர்கள் எந்த சாதியைச் சேர்ந்தவர்களானாலும் அவர்களுக்கு பாடப்புத்தகங்கள் நோட்டுப் புத்தகங்கள், எழுது பலகைகள் ஆகியவை இலவசமாக



வழங்கப்பட்டு வருகின்றன. இத் திட்டத்தின் கீழ் 1977-78 ஆம் ஆண்டில் 1,48,125 மாணவர்கள் பயனடைந்தனர். இதற்காக, 1978 ஆம் ஆண்டிற்கு 17.68 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

3. மேலே கூறப்பட்டுள்ள பாடப்புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் ஆகியவை இலவசமாக வழங்கும் திட்டம் பள்ளி இறுதி வகுப்புவரை அதாவது எஸ்.எஸ்.எல்.சி. வரைதான் செயல்படுத்தப்படுகிறது.

4. இவ்வாண்டு முதல் புதிதாகத் துவக்கப்பட்டுள்ள மேல் நிலைக்கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்கள், நோட்டுபுத்தகங்கள் முதலியன வழங்கும் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை.

## இணைப்பு IV

[244-ஆம் பக்கத்தில் இனம் 5-க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

### L. A. BILL No. 34 OF 1978.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Co-operative Societies Act,* 1961.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Co-operative Societies (Amendment) Act, 1979.

2. *Amendment of section 17, Tamil Nadu Act 53 of 1961.*—In section 17 of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961) (hereinafter referred to as the principal Act), in sub-section (2), for clause (*a*), the following clause, shall be substituted, namely :—

"(*a*) (i) In the case of credit societies, distributive societies and marketing societies and such other class of registered societies, as the Government may, by notification, specify, every person eligible for admission as a member of any such society under the provisions

of this Act, the rules and the by-laws of the society shall, on application made in the form prescribed for the purpose, be deemed to have been admitted as a member of such society, with effect on and from the date of receipt of such application in the office of such society.

(ii) Notwithstanding anything contained in sub-clause (i), or in any other provision of this Act, the Registrar may, either *suo motu* at any time or on application, by order and after recording the reasons in writing, remove a person deemed to have been admitted is a member of the society under sub-clause (i) from such membership if such person is not eligible to be a member of such society.

(iii) An application under sub-clause (ii) may be made by the committee or by any person aggrieved within fifteen days from the date on which the person sought to be removed is deemed to have been admitted as a member of the society under sub-clause (i).

(iv) No order under sub-clause (ii) shall be passed without giving a reasonable opportunity of being heard to the parties concerned.

(v) Every order under sub-clause (ii) passed in pursuance of an application made by the committee or by any person aggrieved shall be passed within thirty days from the date of receipt of the application by the Registrar :

Provided that if no order under sub-clause (ii) is passed on an application made by the committee or by any person aggrieved within thirty days from the date of receipt of the application by the Registrar, it shall be deemed that the Registrar has passed an order under sub-clause (ii) rejecting the application.

*Explanation.*—For the purposes of this clause,—

(i) 'credit society' means a registered society which has as its principal object the raising of funds to be lent to its members primarily for production or for any useful purpose ;

(ii) 'distributive society' means a registered society which has as its principal object the supply of the domestic and other requirements of its members for the consumption of such members ;



(iii) 'marketing society' means a registered society which has as its principal object the arranging for the marketing of the agricultural and other produce or products of its members or the undertaking of the distribution of commodities and includes any registered society which has as its principal object the provision of facilities for the operation of a marketing society. ".

3. *Omission of section 73-D, Tamil Nadu Act 53 of 1961.*—Section 73-D of the principal Act, shall be omitted.

4. *Amendment of section 96, Tamil Nadu Act 53 of 1961.*—In clause (*a*) of sub-section (2) of section 96 of the principal Act, for the expression " approval of or refusal to approve the removal of a member under the proviso to clause (*a*) of sub-section (2) of section 17 ", the expression " order under clause (*a*) (ii) of sub-section (2) of section 17 or approval of or refusal to approve the removal of a member under " shall be substituted.

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

**செவ்வாய்க்கிழமை, 1979 மார்ச் 20.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், பிற்பகல் 4 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Naxalites*

* 220A. *Q.*—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of THIRU M. SANKARALINGAM): Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the names of places in Tamil Nadu wherein Naxalites' attack took place during 1978; and

(*b*) the number of persons who lost their lives therein?

### நக்சல்பாரிகள்

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில் நக்ஸல்பாரிகளால் தாக்குதல் நடைபெற்றது?

(இ) அதில் உயிரிழந்தவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்): தலைவரவர்களே, மேலவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

@ 390 ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## Police Shooting

* 220-B Q.—Thiru C. R. LAKSHMIKANDHAN (on behalf of Thiru K. RAMAMOORTHI): Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any compensatory amount was given to the families of the victims, who died in the Police shooting during the Farmers' Agitation in April, 1978;

(b) if so, the details thereof ?

(c) the extent of the agricultural land owned by the victims ;

(d) the amount of their loan arrears to (i) the Government and (ii) the Co-operative Societies; and

(e) the amount of their arrears to the Electricity Department ?

### காவலர் துப்பாக்கிச் சூடு.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. க. இராமமூர்த்தி சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978 ஏப்ரலில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தின் போது காவலர் துப்பாக்கிச் சூட்டில் பலியானோரின் குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகை எதுவும் வழங்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) அவ்வாறு துப்பாக்கிச் சூட்டில் பலியானோருக்குச் சொந்தமாக இருந்த விவசாய நிலம் எவ்வளவு ?

(எ) அவர்கள், (i) அரசுக்கும், (ii) கூட்டுறவுச் சங்கங்களுக்கும் செலுத்த வேண்டிய கடன் பாக்கிகள் எவ்வளவு ?

(ஐ) மின்சார வாரியத்திற்கு அவர்கள் செலுத்த வேண்டிய பாக்கிகள் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்): தலைவரவர்களே, அவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

@ 9[illegible] ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள் 221, 222 ஆகிய இரண்டும் ஒத்திவைக்கப்படுகின்றன.

## Government Arts College, Salem.

* 223 Q.—Thiru ARCOT N. VEERASAMI (on behalf of Thiru M. SANKARALINGAM) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it has been brought to the notice of the Government that the students of Government Arts College, Salem resorted to strike, because of non-appointment of teachers till the end of July, 1978; and

(b) if so, the action taken thereon?

### சேலம் அரசினர் கலைக் கல்லூரி.

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம், அரசினர் கலைக் கல்லூரி மாணவர்கள், 1978 ஜூலை மாதம் இறுதிவரை ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை எனக் காரணம் காட்டி, வேலை நிறுத்தம் செய்தது அரசின் கவனத்திற்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, (அ) மற்றும் (இ) சேலம், அரசினர் கலைக் கல்லூரியில் ஆசிரியர்கள் நியமனம் பற்றி அரசின் பரிசீலனையில் இருந்தது. இதற்கிடையில், அக்கல்லூரி மாணவர்கள் பாடவகுப்புகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை எனக் காரணம் காட்டி 24—7—1978 அன்று வேலை நிறுத்தம் செய்தனர். அக்கல்லூரிக்கு பி.எ., கூட்டுறவு பாடத்திற்கு இரு உதவிப் பேராசிரியர்களும், தமிழ்த் துறைக்கு ஒரு பேராசிரியரும் 24—7—1978 அன்று அரசு அனுமதித்துள்ளது. மேலும், ஆங்கிலத் துறையிலும், தமிழ்த் துறையிலும் மேம்படுத்தப்படும் பயிற்றுநர்கள் பட்டியலிலிருந்து உதவிப் பேராசிரியர்களை நியமனம் செய்யவும், அரசு ஆணையிட்டுள்ளது.

[1979 மார்ச் 20

## Trained Teachers

* 224 Q.—THIRU P. R. THOMAS and THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that many trained teachers under various categories, remain unemployed for a number of years, even though they have registered their names in the Employment Exchange for more than ten years; and

(b) if so, the number of such teachers category-wise?

பயிற்சிபெற்ற ஆசிரியர்கள்.

**திரு. பி. ஆர். தாமஸ் மற்றும் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறோம்—

(அ) பல்வேறு துறைகளில் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் பலர், தங்களுடைய பெயர்களை வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து பத்தாண்டுகள் ஆகியும், இன்னும் வேலை கிடைக்காமல் பல ஆண்டுகளாக இருப்பது உண்மையா ?

(இ) ஆமெனில், வகை வாரியாக அத்தகைய ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) ஆம். 23—8—1978 அன்றைய நிலவரப்படி, வேலை வாய்ப்பகங்களின் செல்இருபடிப் பதிவேட்டில் பதிவு செய்து கொண்டிருந்த பயிற்சிபெற்ற வேலை வாய்ப்பற்ற ஆசிரியர்களில் 309 பேர்கள் 10 ஆண்டுகளுக்குமேல் வேலை வாய்ப்பின்றி இருந்தவர்களாவார்கள். அந்த 309 பேர்களுள் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் 10, செகண்டரி கிரேடு 225, தமிழ் ஆசிரியர் 7, பிறமொழி ஆசிரியர் 3, உடற் பயிற்சி ஆசிரியர் 33, தைத் தொழிலாசிரியர் 31 ஆகும்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் வேலையில்லாமல் இருக்கிறபோது, வருகிற கல்வியாண்டிலிருந்தாவது, 10 ஆண்டுகளுக்கு அதிகமாகவே வேலை வாய்ப்புத் தேடித் தரும் நிலையங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டும், இன்னும் வேலை கிட்டாத நிலையிலுள்ள ஆசிரியர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களுக்குப் பணி வழங்க அரசு முன்வருமா ?



1979 மார்ச் 20]-

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** வேலைகளுக்காக ஆட்களை அனுப்பும்போது, தற்போதே அவர்கள் பதிவு செய்து கொண்டிருக்கிற வரிசைப்படிதான் அனுப்பி வருகிறோம். அதன் காரணமாகத் தகுதி பெற்றவர்கள் வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இன்றைய தேதிவரை பல்வேறு நிலைகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் எத்தனை பேர் இன்னும் வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள் என்ற விவரம் இருக்கிறதா ? விவரமிருந்தால், அவைக்குத் தரப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** 23—8—1978 அன்றைய நிலவரப்படி மொத்தம் 41,820 பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலையின்றி இருக்கிறார்கள்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** இந்த எண்ணிக்கையோடு வரும் கல்வியாண்டில் பயிற்சி முடித்து வர இருக்கிற ஆசிரியர்களும் சேர இருக்கிறார்கள். ஏற்கெனவே அரசு 1974 ஆம் ஆண்டுக்கு முன்னால் ஆசிரியப் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறது. இருப்பினும் அநேக நிறுவனங்களில் 1974 ஆம் ஆண்டுக்குப் பிறகு, குறிப்பாக சமீப ஆண்டுகளில் ஆசிரியப் பயிற்சி பெற்றுள்ளவர்களையே பணியில் அமர்த்திக் கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. எனவே இதைத் தடுக்கும் வகையில் ஒரு திட்டவட்டமான ஆணையை வழங்கி, 1974 ஆம் ஆண்டுக்கு முன்னால் 10 ஆண்டுகளுக்கு மேலாக வேலை வாய்ப்புத் தேடித்தரும் நிறுவனங்களில் பதிவு செய்து வேலையில்லாமல் இருக்கிறவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து தேர்ந்தெடுத்தால் தான், பதவிகள் அனுமதிக்கப்படும் என்று வலியுறுத்த முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** 1974 ஆம் ஆண்டுக்குப் பின்னால் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை வேலைக்கு எடுக்கக் கூடாது என்ற உத்தரவு ஏற்கெனவே அமுலில் இருக்கிறதென்றாலும், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்களின் விகிதாச்சாரத்தைப் பின்பற்ற வேண்டிய இடங்களில், இந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டியதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தற்போது 41,000-க்கும் மேற்பட்ட பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பது உண்மையிலேயே கவலையளிக்கிற பிரச்சினையாகும். பல ஆண்டுகளாகக் கோரி வருவதைப்போல், இந்தப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை, 'நர்சரி'

பள்ளிகளைத் துவக்கி அவற்றில் நியமிப்பதன் மூலமும், முதியோர் கல்வித் திட்டத்தில் ஈடுபடுத்துவதன் மூலமும் வேலைவாய்ப்பை உருவாக்க அரசிடம் திட்டமேதேனும் இருக்கிறதா? பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை மிக அதிகமாகப் பெருகிக் கொண்டிருப்பதன் காரணமாக 'பி.டி.' வகுப்புகளை மூடுவதுபற்றி அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** 1971-72 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆசிரியர் பயிற்சி நிலையங்களில் ஒரு ஆண்டுவிட்டு மறு ஆண்டுதான் மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். அதுவும் குறைந்த எண்ணிக்கையில் தான் சேர்க்கப்படுகின்றனர். ஆக, பி.டி. கல்லூரிகளைப் பொறுத்தவரையில், இந்த அடிப்படையில் பயிற்சி பெறுவோர் எண்ணிக்கையைக் குறைத்துக் கொண்டிருக்கிறோம். எனினும் அவைகளை மூடுவதுபற்றி எண்ணமில்லை. முதியோர் கல்வித் திட்டத்தைத் தீவிரமாக அமுல்படுத்துவதன் மூலமாக மிக அதிகமான ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய வாய்ப்புகள் ஏற்படலாம்.

**திரு. கி. ரா. லெட்சுமிகாந்தன் :** பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடையே வேலையில்லாத் தன்மையை நீக்க வேண்டுமென்று அரசு முயற்சிக்கிற இந்த நேரத்தில், 1964 ஆம் ஆண்டில் அரசாணை எண் 250-ல் குறிப்பிட்டிருக்கிறபடி ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரத்தை அமுல்படுத்தாத நிலையில் பல்வேறு ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளும், அரசு உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? அந்த ஆணையைச் சரிவர நிறைவேற்றினால், இன்னும் பலருக்கு வேலை கிடைக்கும். இதை நிறைவேற்ற அரசு முன்வருமா? அதைப் போலவே ஆசிரியர்கள் விடுப்பில் போகும்போது ஏற்படுகிற காலியிடங்களுக்கு அவ்வப்போதே மாற்று ஆசிரியர்களை நியமித்து அதன் மூலமாகவும் சிலருக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்த ஆண்டு கூடுதலான ஆசிரியர் பதவி இடங்களை ஏற்படுத்த இருக்கிறோம். அந்த அடிப்படையில், நிதி நிலைமைக்கேற்றவாறு அதிக இடங்களை உண்டாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். அந்த வகையில் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 1,000, உடற்பயிற்சி ஆசிரியர்கள் 100, தமிழ் ஆசிரியர்கள் உயர்தொடக்கப் பள்ளிகளுக்கு (பி.டி.) தலைமையாசிரியர்களாக 200, பகுதிநேரக் கைத்தொழிலாசிரியர்களை முழுநேர கைத் தொழிலாசிரியர்களாக ஆக்குவது 200, உயர்நிலைப் பள்ளிகளில் பி.டி. ஆசிரியர்கள் 200, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் 1,740 என்று பதவியிடங்களை ஏற்படுத்த இருக்கிறோம். ஆக, இப்பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருந்தாலும், அரசு தீவிரமாக இதில் கவனத்தைச் செலுத்திவருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. கி. ரா. லெட்சுமிகாந்தன் :** பி.டி. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் மாணவர்கள் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி.டி. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்று இருக்கிறது. அதன் மூலம் ஆண்டுதோறும் 500-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிற்சியளிக்கப்படுகிறார்கள். எனவே அந்தக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதில் ஒரு உச்ச வரம்பை நிர்ணயித்து, இத்தனை மாணவர்களுக்கு மேல் அந்தப் பயிற்சிக் கல்லூரியில் சேர்க்கக் கூடாது என்று பல்கலைக் கழகத்திற்கு குறிப்பு அனுப்ப அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒரு சுயேச்சாதிக்கம் பெற்ற ஒரு ஸ்தாபனமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாக பல்வேறு துறைகளில் அவர்கள் தங்கள் விருப்பம் போல் மாணவர்களைச் சேர்க்கிறார்கள். அரசு எடுத்துக் கொண்டிருக்கிற கொள்கைகளின் அடிப்படையில் அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் அரசுக்கு இருக்கிறது. அதைச் செயல்படுத்த அரசு முயற்சி செய்யும்.

(பிற்பகல் 4-10)

## *Gandhi Memorial Museum, Madurai.*

*225 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether there is any proposal to make an annual grant of Rs. 75,000 to the Gandhi Memorial Museum, Madurai ;

(*b*) whether complaints have been received about the misuse of funds, ill-treatment of Harijans and harassment of the staff, etc., by the present administration of the said institution ; and

(*c*) if so, whether the allegations will be enquired into, before any grant is given ?

### மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகம்

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரையிலுள்ள காந்தி நினைவு அருங்காட்சியகத்திற்கு, ஆண்டுக்கு ரூ. 75,000 மானியம் வழங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) மேற்சொன்ன நிறுவனத்தின் தற்போதுள்ள நிர்வாகத்தினர் மேல், நிதிகளைத் தவறாகப் பயன்படுத்துவது, அரிசனங்களை மோசமாக நடத்துவது, மற்றும் பணியாளர்களுக்குத் தொல்லை கொடுப்பது, முதலியவை பற்றிய புகார்கள் வந்துள்ளனவா ?

(உ) ஆம் எனில், மானியம் வழங்கப்படுவதற்கு முன்பு, அப்புகார்கள் குறித்து விசாரணை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகச் செயலரின் கோரிக்கையை ஏற்று 1977-78 மற்றும் 1978-79 ஆண்டுகளுக்கான மான்யமாகவும், முந்தைய ஆண்டுகள் இந்த அருங்காட்சியகத்துக்கு ஏற்பட்ட நிதிப் பற்றாக்குறையை சரி செய்யும் பொருட்டும் இவ்வரசு ஆணை எண் (நிலை) 1981, தேதி 6—11—1978-ல் ரூ. 75,000 வழங்கப்பட்டுள்ளது.

(இ) ஆம்.

(உ) இம்முறையீடுகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. இம்முறையீடுகளில் குறிப்பிட்டுள்ள எந்தக் குற்றச் சாட்டுகளின் மீதும் உரிய அலுவலர்களிடமிருந்து விரிவான அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை. அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்பு அரசு ஆய்ந்து அக்குற்றச்சாட்டுகள் ஏதேனும் நிரூபிக்கப்பட்டால் அக்குற்றச்சாட்டுகளின் தன்மையைப் பொறுத்து அரசின் மேல் நடவடிக்கை அமையும்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** தலைவர் அவர்களே, காந்தி நினைவு அருங்காட்சியகத்திற்கு ஏராளமான மாணவர்கள் ஆண்டுதோறும் சென்று, பயிற்சி பெற்று, சான்றிதழ்கள் பெறுகிறார்கள். ஆகவே, இதைவிடச் சிறந்த முறையிலே அதைப் பயன்படுத்தக்கூடிய திட்டம் அரசிடம் இருக்கிறதா ? இந்தக் காட்சியகத்திற்கு மத்திய அரசிடமிருந்து உதவித்தொகை வருகிறதா ? நம்முடைய மாநில அரசு அதற்கு எவ்வளவு வழங்குகிறது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதனுடைய நிர்வாகத்தை டாக்டர் ஜி. ராமச்சந்திரன் அவர்களைத் தலைவராகக் கொண்ட மேலாண்மைக் குழு கவனித்து வருகிறது. இந்த அருங்காட்சியகம், நூலகம், ஆராய்ச்சிப் பிரிவு, விடுதி, அருங்காட்சியகம், கதர் மற்றும் கிராமத் தொழில் அருங்காட்சியகம் முதலிய பிரிவுகளைக் கொண்டுள்ளது. இந்நிலையத்திற்கு 1964 ஆம் ஆண்டிலிருந்து அரசு மான்யம் அளித்து உதவி வருகிறது. நம் மாநில அரசு இந்நிலையத்திற்கு 1964 மற்றும் 1965-ம் ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு 25,000 ரூபாயும், 1966-67 முதல் 1974-75-ம் ஆண்டுவரை வருடம் 5,000 ரூபாயும், 1975-76 ஆம் ஆண்டிற்கு 10,000 ரூபாயும், 1976-77-ம் ஆண்டிற்கு 5,000 ரூபாயும் மான்யமாக வழங்கியுள்ளது.



**திரு. பி. ஆர். தாமஸ் :** காந்தியடிகள், அவர்களது நிலை உயர வேண்டுமென்று பாடுபட்டார்கள். ஆனால் இன்றையதினம், கொடுமைப்படுத்தப் படுகிறார்கள், தொல்லைப்படுத்தப்படுகிறார்கள் என்றால், எந்த வகையில் அவர்கள் மோசமாக நடத்தப்பட்டார்கள் என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** புகார்களின் விவரம் என்னிடத்திலே இல்லை. அந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து அந்த அலுவலகத்திலிருந்து பதில்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. வந்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப் படும்.

*Staff of Polytechnics.*

* 226 *Q.*—PULAVAR PULAMAIPITHAN (on behalf of THIRU K. ARIVAZHAGAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether time scale of pay is implemented for teachers and instructors in Polytechnics ; and

(*b*) if not, the reasons therefor ?

பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளின் பணியாளர்கள்

**புலவர் புலமைப்பித்தன் (திரு. க. அறிவழகன் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள், பயிற்றுநர்கள் ஆகியோருக்கென கால ஏற்றமுறை சம்பள விகிதம் (Time-Scale of Pay) செயற்படுத்தப்படுகிறதா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Veeranam Scheme.*

* 227 *Q.*—THIRU C. R. LAKSHMIKANTHAN : Will the Hon. the Minister for Labour be pleased to state with reference to the answer given to Question No. 13 on the floor of the Council on 23rd August 1977 :—

(*a*) whether the Government have taken any decision in regard to continuing the execution of the Veernam Scheme;

(*b*) if so, the details thereof ; and

(*c*) if the scheme is to be abandoned, whether the Government will utilise the benefits of the scheme executed so far, for providing drinking-water to the people living in those areas?

**வீராணம் திட்டம்.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள், 23—8—1977 ஆம் நாளன்று சட்டமன்ற பேரவையில் வினா எண் 13-க்கு அளிக்கப்பட்ட விடையினையொட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வீராணம் திட்டத்தை, தொடர்ந்து நிறைவேற்றுவது குறித்து அரசு முடிவு எடுத்துவிட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

(இ) திட்டத்தைக்கைவிட நேரிட்டால், இதுவரை நிறைவேற்றியுள்ள திட்டத்தின் பலனை, அந்தந்தப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு குடிநீர் வழங்க வழிசெய்யும் வகையில் அரசு பயன்படுத்துமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, (அ) இன்னும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்கள் எழ இடமில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நீண்ட காலமாகவே, இந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்வது வழக்கமாகிவிட்டது. தென்னார்க்காடு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அங்கு பல்வேறு இடங்களில் குழாய்கள் புதைக்கப்பட்டு, வேலை பல இடங்களிலே ஓரளவு பூர்த்தியாகியிருக்கிறது. இந்தக் குழாய்கள் போட்டு நிறைவேற்றப் பட்டிருக்கின்ற பகுதிகளிலேகூட குடிநீர் கிடைக்காத இடங்கள் ஏராளமாக இருக்கின்றன. இப்படி குழாய்கள் புதைக்கப்பட்டு, திட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கின்ற இடங்களிலே உள்ள கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்வதற்கு அதிகச் செலவு ஏற்படாது. ஆகவே, அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** வீராணம் திட்டம் வீராணத்திலிருந்து, வடலூருக்குக் கொண்டு வந்து 'treatment' செய்து, அங்கிருந்து காட்டாம்புலியூருக்குக் கொண்டுபோய், அங்கிருந்து சென்னைக்குக் கொண்டு வருவதற்குரிய திட்டம். இப்பொழுது திட்டத்தின் மொத்த மதிப்பு 199 கோடி ரூபாய். சென்னைக்கு உள்ளே குழாய்கள் போட்டு விநியோகம்

செய்ய ரூபாய்-55 கோடி செலவு. அதாவது Internal distribution -க்கு ரூ. 55 கோடி செலவு. 144.55 கோடி ரூபாய் தண்ணீர் கொண்டு வருவதற்கு. மொத்தம் ரூபாய் 199 கோடி. இவ்வளவு செலவு செய்தும் 2¼ டி.எம்.சி. நீர்தான் கொண்டு வர வாய்ப்பு உள்ளது என்றும், ஆனால் இதைவிட இரு மடங்கு அதிக நீரை—5 டி.எம்.சி.—வீராணம் திட்டத்திற்காகும் செலவை விட, குறைந்த செலவில் கிருஷ்ணா-பெண்ணாறு பகுதியிலிருந்து கொண்டு வர வாய்ப்பு உள்ளதாக அறிகிறோம். அதை ஆழ்ந்து ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

திரு. சி. ரா. வெங்கடகிருஷ்ணன் (?): இதைவிடக் குறைவான செலவில் கிருஷ்ணா நதி திட்டத்தின் மூலம் கொண்டு வர முடியும் என்பதால், வீராணம் திட்டத்தைக் கைவிடப்போகிறோம் என்பது உள்ளர்த்தமாகிறது. இந்தத் திட்டம் வரும்போதே இடையிலே உள்ள கிராமங்களுக்குத் தண்ணீர் வழங்கப் படும் என்று அறிவிப்பு செய்து, அது அன்றையதினம் செய்தித் தாள்களிலே கூட வெளியாகியிருந்தது. சேத்தியாத் தோப்பிலிருந்து-வடலூர் வரை குழாய்கள் புதைக்கப்பட்டிருக்கின்றன. வடலூரிலிருந்து பண்ருட்டி வரையும், பண்ருட்டியிலிருந்து விழுப்புரம் வரையும் குழாய்கள் புதைக்கப்படுவதற்குக் குழிகள் தோண்டப்பட்டு, குழாய்களையும் உற்பத்தி செய்திருக்கிறார்கள். அரசு இந்த வீராணம் திட்டத்தைக் கைவிடப் போகிறோமென்று சூசகமாக அறிவித்திருப்பதால், மேற்சொன்ன இடங்களிலேயாவது குழாய்கள் புதைக்கப்பட்டிருக்கும் இடங்களிலேயாவது, குடிதண்ணீர் வசதி செய்வதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கேள்வி, 'வீராணம் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றுவது குறித்து அரசு முடிவு எடுத்து விட்டதா?' என்பது. இல்லை. பதில் முடிந்துவிட்டது. அப்புறம், ஆமெனில் அதன் விவரம் என்ன என்று கேட்கப்பட்டிருக்கிறது. விவரம் என்ன? இதுவரை சுமார் 22 கோடியே 66 லட்சம் ரூபாய் போய்விட்டது. அதைப்பற்றி அதிகமாக நான் இப்போது பேசுவதற்கில்லை. பின்னால் பேசிக்கொள்ளலாம்.

THIRU G. VASANTHA PAI: Sir, will the Hon. Minister be pleased to clarify whether the further work which is to be done is going to be entrusted to the same contractor or to a different one?

THE HON. THIRU S. RAGHAVANANDAM : Mr. Chairman, Sir, the hon. Member is requested to put a separate question.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, ஏதோ அமைச்சர் என்று நினைத்துக்கொண்டுதான் பதில் சொல்கிறாரா? இல்லையா? தெரியவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அந்த மாதிரி எல்லாம் சொல்லக் கூடாது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : 22 கோடி ரூபாய் போய்விட்டது என்று சொல்கிறார், எங்கே போய்விட்டது? உறுப்பினர்களைவிட அமைச்சருக்கு அல்லவா பொறுப்பு இருக்கிறது. போய்விட்டது என்று சொன்னால், தமிழ் நாட்டிலே ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டு, இல்லையதினம் இந்த அரசாங்கம் வேண்டுமென்றே காலதாமதம் செய்கிறது. அதை நாட்டு மக்கள் மத்தியிலே மறைப்பதற்காக இப்படி ஒரு நியாயமா? அந்த 22 கோடி ரூபாய் எங்கே போனது என்று அமைச்சர் அவர்கள் சொல்ல முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. என். இராகவானந்தம் : 22 கோடியே 66 லட்சம் எங்கே போனது என்று தனிக் கேள்வி போடக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அமைச்சர் அவர்கள் மூலக் கேள்விக்கு பதில் சொல்கிறார். கேள்வியிலேயே தெளிவாக இருக்கிறது. 22 கோடி ரூபாய் போய்விட்டது என்கிறார். இதிலே தனிக் கேள்வி எதற்கு?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்விக்கு பதில் சொல்ல வேண்டுமென்று நான் சொல்லக் கூடாது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தொடர்பு இருக்கிறதா, இல்லையா என்று பார்க்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தொடர்பில்லை என்று சொல்லவில்லை. தனிக் கேள்வி போட வேண்டுமென்று சொல்கிறார்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அமைச்சர் இந்த அவையிலே தவறாகத் தகவல் . . .

திரு. பி. ஆர். தாமஸ் : தலைவர் அவர்களே, உலக வங்கியிடமிருந்து உதவி பெற்று இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு யோசனை இருக்கிறது என்று கூறப்படுகிறதே, அதுபற்றிக் கருத்து என்ன என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு என். இராகவானந்தம் : நான் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன், வீராணத்திலிருந்து இப்போது தண்ணீர் கொண்டு வருவதற்கு 144 கோடி ரூபாய் செலவாகும், Internal distribution -க்கு 55 கோடி. ஆக மொத்தம் ரூ. 199 கோடி செலவாகும். இவ்வளவு செலவழித்தாலும், போதுமான அளவுக்குத் தண்ணீர் கிடைக்காது. 22.66 கோடி ரூபாய் செலவு





செய்தும் பிரயோசனமில்லை. இதுதான் எனக்குக் கிடைத்த தகவல். 199 கோடி ரூபாய் செலவு செய்து 2½ டி.எம்.சி. தண்ணீர் கொண்டுவருவது நல்லதா அல்லது இந்த அளவுக்குச் செலவு செய்து; இதைவிட அதிக அளவு, 5 டி.எம்.சி. தண்ணீர் கொண்டு வருவது நல்லதா என்பது பரிசீலனையில் இருக்கிறது. அதைத்தான் மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டேன்.

டாக்டர் எச். வி. ஹண்டே : ஏறத்தாழ 23 கோடி ரூபாய் விரயமாக்கப் பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதைப்பற்றி ஏற்கனவே சர்க்காரியா கமிஷன் நியமிக்கப்பட்டு இதிலே பல ஊழல்கள் இருக்கின்றன, முறைகேடுகள் இருக்கின்றன, நடந்து முடிந்த அந்த ஆட்சியிலே பல தவறுகள் ஏற்பட்டு, பலபேர் அந்த லஞ்சக் குற்றச்சாட்டிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது அதிகாரபூர்வமாக சட்டமன்றத்திலே வைக்கப்பட்டு, அரசு நடவடிக்கை எடுக்குமா?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : Point of Order. . . . .

(டாக்டர் ஹண்டே நின்றுகொண்டிருந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : டாக்டர் ஹண்டே, கொஞ்சம் உட்காருங்கள், அவர் சொல்வதைச் சொல்லட்டும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இந்த அவையிலே, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுக்களைச் சொல்லக் கூடாது என்று நீங்களே சொல்லியிருக் கிறீர்கள், சர்க்காரியா கமிஷன் அறிக்கை என்ன என்று நாங்கள் விவாதிக்கத் தயார், மாண்புமிகு உறுப்பினர்கள் தயாரா?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சர்க்காரியா அறிக்கையிலே சொல்லப் பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள், சொல்லாவிட்டால் நீக்கிவிடலாம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : ஊழல், லஞ்சம் என்கிறாரே, விவரம் எங்கே இருக்கிறது?

டாக்டர் எச். வி. ஹண்டே : மன்றத்திலே, இந்த அவையிலே வைக்கப் பட்டிருக்கின்ற குறிப்பைப் பற்றித்தான் பேசுகிறேனே தவிர, வேறு ஒன்று மில்லை. இப்படி நடந்து முடிந்த ஆட்சியிலே முறைகேடுகள் நடந்திருக் கின்றன என்று திட்டவட்டமாகச் சொல்லப்படுகிறதே, அதன் மீது அரசாங்கம் துரிதமாக, நடவடிக்கை எடுப்பதற்கு முன்வருமா? 23 கோடி ரூபாய் விரயம் ஆக்கப்பட்டதற்கு, பொது மக்களுடைய, பணம் விரயம் ஆக்கப்பட்டதற்கு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது இந்த அரசு?

உடனடியாக இதன் மீது ஒரு நடவடிக்கை எடுத்து யார் இதற்குக் காரணம் என்று கண்டுபிடித்து, அதற்குரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

(பிற்பகல் 4-20)

**திரு. சி. இராமலிங்கம் :** பாலாற்றிலிருந்து தண்ணீரைக் கொண்டு வந்து, ஆலந்தூர் நகராட்சி, பல்லாவரம், அனகாபுத்தூர் ஆகிய பகுதிகளுக்குக் கொடுப்பதாக ஒரு திட்டம் இருந்தது. அத்திட்டம் என்னவாயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இதற்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தமில்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** அமைச்சர் அவர்கள் கூறும்போது, 109 கோடி ரூபாய் இன்னும் செலவாகும் என்று கூறினார்கள். பூராவும் இரும்புக் குழாய்களைப் போட்டால்தான், அவ்வளவு செலவாகும். இதுதான் அந்தப் புதிய திட்டத்தின் அடிப்படை. ஏற்கெனவே 23 கோடி ரூபாய் செலவழித்துப் பைப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்காக சில தொழிற்சாலைகளை அமைத்து கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் ஒரு முடிவுக்குக் கொண்டு வராமல், அப்படியே தொடர்ந்து நீட்டித்துக்கொண்டு போவதால், சர்க்காருக்கும் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் கூறுவது போல், சென்னைக்குத் தண்ணீரைக் கொண்டு வராவிட்டாலும், ஏற்கெனவே பைப் லைன் போட்டுள்ள கிராமங்களுக்குத் தண்ணீரைக் கொடுப்பதில் எது குறுக்கே நிற்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அந்தக் குழாய்களைக் கூட உபயோகப்படுத்த முடியாது என்பது எங்களுக்குக் கிடைத்திருக்கிற தகவல். ஆங்காங்குள்ள கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்றால், அதற்கு தனித் திட்டம் இருக்கிறது. கிராமங்களை ஆறு வகையாகப் பிரித்திருக்கிறோம். முதல் இரண்டு வகைகளில் அநேகமாக எல்லா வேலைகளும் முடிந்துவிட்டன. இப்போது மூன்றாவது வகைப்பைத்தான் எடுத்துக் கொள்ளப் போகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். எந்தெந்த கிராமங்களுக்குத் தண்ணீர் இல்லை, எந்தெந்த கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்ற பட்டியலைக் கொடுத்தால் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யும்.





**டாக்டர் இரா. சனார்த்தனம் :** வீராணம் திட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்ட அந்த சிமெண்ட் குழாய்கள் உபயோகமில்லாமல் போகாமல், இருப்பதைப் பயன்படுத்தும் வகையில் அவற்றை நினைவுச் சின்னமாக, பஞ்சாயத்துக்களிடம் கொடுத்து, தானியங்களைச் சேகரிக்கிற ஏற்பாட்டைச் செய்ய இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் :** மூலக் கேள்வி எங்கெங்கோ திசை திரும்பிச் சென்றாலும், சுவையாக இருந்தது. என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்ததற்காக முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில், பண்ருட்டி, கடலூர், காடாம்புலியூர், விழுப்புரம் ஆகிய பகுதிகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. பரிசீலனை செய்யும்போது, அந்தப் பகுதிகளையும் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேட்டுக்கொள்ளுவது என்பது வேறு, கேள்வியைக் கேட்பது வேறு.

**திரு. ப. மாணிக்கம் :** 22 கோடி ரூபாயைச் செலவழித்தாலும், பலன் இல்லாத நிலை இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தக் காரணத்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது குறித்து ஒரு அறிக்கையை இந்த அவையில் வைத்து விவாதிக்கிற சந்தர்ப்பம் வேண்டும் என்ற முறையிலே, அரசு ஓர் அறிக்கையை வைத்து விவாதிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தனிக் கேள்வி போடும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## *Osankulam Scheme*

*228 *Q.*—Thiru P. YELLAMANDA: Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the Government are aware of he fact that the enumerated slum dwellers of Pullareddypuram have not been given tenements under Osankulam Scheme at Chetput, Madras ; and

(*b*) if so, the action taken thereon?

### ஓசான்குளம் திட்டம்

திரு. பி. எலமந்தா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புல்லாரெட்டிபுரத்தில் கணக்கெடுக்கப்பட்ட குடிசை வாழ்வோருக்கு, ஓசான்குளம் திட்டத்தின்கீழ், சென்னை, சேத்துப்பட்டில் குடியிருப்புகள் வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) மற்றும் (இ) புல்லா ரெட்டிபுரம் குடிசைவாழ் குடும்பங்களில் குடியிருப்புகள் பெறத்தகுதி வாய்ந்தவர்கள் என கணக்கெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 340. அவற்றில், 103 குடும்பங்களுக்கு சேத்துப்பட்டு ஓசான்குளம் திட்டப்பகுதியில் குடியிருப்புகள் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டு விட்டன. எஞ்சிய குடும்பங் களுக்கு, ஓசான்குளம் திட்டப்பகுதியில் இரண்டாம் கட்டமாக கட்டப்பட விருக்கும் கூடுதல் குடியிருப்புகளில் கட்டுமானப்பணி முடிவடைந்தபின் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

THIRU P. YELLAMANDA: Hon. Chairman, Sir, complaints have been received that the allotment has been made on the basis of Party affiliation and that some genuine people have been affected. If it is brought to the notice of the Hon. Minister that two people who are patta-owners have been allotted houses, will the Hon. Minister come forward to check those things and allot them to proper persons?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** எந்தவிதமான முறைகேடு நடந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அதில் யாராவது அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருந்தால், அவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப் படும். என்ன நடவடிக்கை எடுத்தோம் என்பதும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

### *Private Practice by Government Doctors.*

*229 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether it is a fact that some categories of Doctors in Government Service are allowed to do private practice, while certain other categories are prohibited from doing private practice;



(*b*) if so, the basis on which this division has been made; and

(*c*) whether there is any proposal to effect a change in the rules to secure uniformity in the matter?

### அரசு மருத்துவர்கள் தனியே தொழில் நடத்தல்

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுப் பணியிலுள்ள சிலவகை மருத்துவர்கள் தனியே தொழில் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளதும், வேறு சில வகை மருத்துவர்கள் தனியே தொழில் நடத்த தடை விதிக்கப்பட்டிருப்பதும் உண்மையா ?

(இ) ஆமெனில், எந்த அடிப்படையில் இவ்வாறு வேறுபடுத்தப் படுகிறது ?

(உ) இதுகுறித்து ஒரே மாதிரியாக இருக்கும் வகையில் விதிகளில் மாற்றம் செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** (அ) ஆம்.

(இ) மருத்துவ மனைகளில் சிகிச்சை பணியற்ற, (Non-Clinical duties) அடிப்படை மருத்துவ அறிவியலை மருத்துவ மாணவர்களுக்குக் கற்பிப்பதே தமது முழுநேர பணியாகக் கொண்ட மருத்துவ ஆசிரியர்கள் மற்றும் முழுநேரமும் நிர்வாகப்பணிக்கே ஈடுபடுத்தவேண்டுமென எதிர் பார்க்கப்படுகின்ற உயர்நிர்வாகப் பதவிகளில் இருக்கின்ற மருத்துவ அதிகாரிகள் ஆகிய இவர்கள் தனியாக மருத்துவத்தொழில் புரிய முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தவிர மற்றவர்கள் 'கலந்தறிந்து அளிக்கும் சிகிச்சை' (Consulting Practice) செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(உ) இல்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : இரு சாராரில் உயர்ந்த மட்டத்திலே உள்ளவர் களுக்கு, அதிகமான திறமையுள்ளவர்களுக்கு இந்த அனுமதி மறுக்கப் படுவதன் காரணம் என்ன ? அவர்களுடைய பணி பொது மக்களுக்கும், கிராமப் பகுதியில் உள்ள கோடிக்கணக்கான மக்களுக்கும் பயன்படும் வகையில் அவர்களும் தனியாக மருத்துவப் பணி செய்ய அனுமதி வழங்கலாம் அல்லவா ? அத்தகைய திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** அந்தகைய திட்டம் எதுவுமில்லை.

**திரு. ஈ. எஸ் வெங்கடேசன் :** அரசாங்க அலுவலர்களாகப் பணிபுரியும் டாக்டர்களுக்குத் தனியாக Consulting Room வைத்து, பிரைவேட் பிராக்டிஸ் செய்ய அனுமதி வழங்க வழிவகை செய்யப்படுகிறது. அது போலவே நீதிபதிகளும், தாங்கள் சம்பந்தப்படாத வழக்குகளிலும், வேறு சட்டப் பிரச்சினைகளிலும் லீகல் அட்வைஸ் கொடுத்து, 'பிரைவேட் பிராக்டிஸ்' செய்ய அனுமதி கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: On a point of clarification. I would like to bring to the notice of the House with great respect to my learned friend—I use the words learned friend because he is a lawyer—and Hon. Member Thiru Venkatesan that there was a Judge of the Supreme Court in America who seems to have indulged in this type of, what may be called, side-business of tendering advice in one or two cases when he was a sitting Judge. It was found about a decade back and he was sent home.

**புலவர் புலமைப்பித்தன் :** மருத்துவக் கல்வியைப் போதிக்கிற மருத்துவப் பேராசிரியர்களாக இருக்கிறவர்கள் இப்படித் தனியாக மருத்துவம் செய்கிற வாய்ப்பில்லையென்றாலும், அவர்கள் 58 வயதுவரை பணியாற்றலாம் என்று அரசு அனுமதித்திருக்கிறது. ஆனால் ஒரு சில மருத்துவர்கள் மருத்துவ ஆசிரியர்களாக இல்லாமல், மருத்துவப் பணிகளைத் தனிப்பட்ட முறையிலே செய்வதற்கும் வழி இல்லாமல் இருப்பவர்களுக்கு, மருத்துவப் பேராசிரியர் களுக்குத் தருவதைப் போலவே அவர்களும் 55 வயதிலிருந்து 58 வயதுவரை பணியாற்ற, காலத்தை நீட்டித்துத்தரும் முயற்சியிலே அரசு ஈடுபடுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** தற்போது அப்படி எதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மருத்துவக் கல்லூரியில் இருக்கின்ற பேராசிரியர்களில், எந்தெந்தப் பிரிவினர்கள் வெளியே தங்கள் தொழிலை நடத்த அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறார்கள் ? யார் யாருக்கு மறுக்கப் பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** கற்பிக்கும் பிரிவில்,

சட்டஞ்சார்ந்த மருத்துவம், (Forensic medicine)

நோய்க்குறியியல் (Pathology),





உயிர் வேதியல் (Bio-Chemistry),

மருந்தாக்கியல் (Pharmacology),

உடற் கூறுயியல் (Anatomy),

உடலமைப்பியல் (Physiology),

போன்ற சிகிச்சைப் பணியற்ற சிறப்பியலில் (non-clinical specialists) உள்ள மருத்துவ அலுவலர்கள் தனியாகத் தொழில் செய்ய முழுத் தடை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தங்களது முழு நேரத்தையும் மருத்துவ மாணவர்களுக்கு அடிப்படை மருத்துவ அறிவியலைக் கற்பிக்க ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்பதுவே, சிகிச்சைப் பணியற்ற மருத்துவர்கள் சிகிச்சை செய்தல் கூடாது என்பதன் நோக்கமாகும். எனவே தனியாகத் தொழில் புரியாததன் விளைவாக ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்ட இவர்களுக்குத் தனியே ஈட்டுப்படி (non-practising allowance) கொடுக்கப்படுகிறது.

சிகிச்சைப் பணியுள்ள சிறப்பியலில்,

மருந்தியல் (Clinical medicine),

அறுவை மருத்துவம் (Surgery),

மகப்பேறு மகளிர் நோய் இயல் (Obstetrics and gynaecology),

கண்நோய் மருத்துவம் (Opthalmology),

மனநோய் மருத்துவம் (Psychiatry),

சிசுநோய் இயல் (Paediatrics),

கதிர் வீச்சு மருத்துவம் (Radiology),

பால்வினை நோய் இயல் (Venereal disease),

முடவியல் (Orthopaedics),

தோல்நோய் இயல் (Dermatology),

நரம்பு அறுவை மருத்துவம் (Neuro-Surgery),

நரம்பியல் (Neurology),

மயக்க மருந்தியல் (Anaesthesia),

காது, மூக்கு, தொண்டை நோய் இயல் (E.N.T. dieases),

மார்புப் பகுதி அறுவை மருத்துவம் (Thoracic surgery)

கற்பிக்கும் மருத்துவர்கள் கலந்தறிந்து அளிக்கும் சிகிச்சை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : Private practice செய்யும் டாக்டர்களுக்கு மாதம் எவ்வளவு வருமானம் வருகிறது என்று அவர்கள் அரசுக்குத் தெரிவிக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : அது போல் ஒன்றுமில்லை.

(பிற்பகல் 4-30)

*Thanjavur Medical College.*

* 230 *Q.*—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of THIRU M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) the number of students affected in the riot which occurred due to ragging of new students in Thanjavur Medical College ; and

(*b*) whether suitable action was taken after the students represented to the Principal in this regard?

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி.

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் புதிய மாணவர்கள், இழிவான முறையில் கேலிகள் செய்யப்பட்டு தொல்லைக்குட்படுத்தப்பட்டதால் (Ragging) ஏற்பட்ட கலவரத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் எத்தனை பேர் ?

(இ) அந்த மாணவர்கள் கல்லூரி முதல்வரிடம் முறையிட்ட பின்னர் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : (அ) புதிய மாணவர்கள் தொல்லைக்கு உட்படுத்தப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. நல்லசிவன் : தஞ்சை மருத்துவக் கல்லூரியிலே புதிய மாணவர்கள் இப்படித் தொல்லைக்குட்படுத்தப்பட்டதன் காரணமாக, தகராறு ஏற்பட்டது. அந்தத் தகராறிலே 10 மாணவர்கள் வேறு கல்லூரிக்கு அனுப்பப்பட்டனர். இந்த ராக்கிங்-ல் உட்பட்டு அதைத் தாக்குப் பிடிக்க முடியாமல், சில மாணவர்கள் சொல்லாமல் கொள்ளாமல்—



தென்னாற்காட்டைச் சேர்ந்த மாணவர்கள்—அவர்கள் ஊருக்கே ஓடிவிட்டதாகவும், அதைப்பற்றி ரிப்போர்ட் அரசுக்கு வந்ததாகவும் தெரிகிறது. அந்த விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : தஞ்சை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் அவர்கள் தந்திருக்கின்ற அறிக்கையில், தஞ்சாவூர் ராகிங் குறித்து ஓரே ஒரு குற்றச்சாட்டு வந்ததாகவும், குற்றச்சாட்டினை பொறுப்பில் இருக்கும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி முதல்வர், விசாரணை செய்தபோது, சாட்சி யாரும் வரவில்லை என்றும், ராகிங் குறித்த குற்றச்சாட்டிற்குப் போதிய ஆதாரம் இல்லை என்றும், எனவே மாணவர்மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், இது தொடர்பாக எந்தவிதமான கலவரமும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(1) தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஊழியர்கள் போராட்டம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆ. நல்லசிவன், திரு. க. மீனாட்சிசுந்தரம், திரு. ஆற்காடு நா, வீராசாமி ஆகியவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஊழியர்கள் போராட்டம் பற்றி கொடுத்திருக்கிறார்கள். இந்த ஒத்தி வைப்புத் திர்மானம் இந்த விதியின் கீழ் எப்படி வருகிறது என்பதை சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஒரு அரசு சார்பு நிறுவனம். இந்த நிறுவனத்தில் 6 ஆயிரம் ஊழியர்கள் வேலை செய்கின்றார்கள். இவர்கள் மூன்றாவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென்று போராடுகிறார்கள். அரசினுடைய சார்பில் உள்ள பல கார்ப்பரேஷன்களில் சுமார் 2 லட்சம் ஊழியர்கள் வேலை செய்கின்றார்கள். அந்தக் கார்ப்பரேஷன்களில் மட்டும் 3-வது சம்பளக் கமிஷன் பரிந்துரைகளை அமுல் செய்து, இவர்களுக்கு மட்டும் அதை அமுல் நடத்தவில்லை. இது சம்பந்தமாக அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அரசு நிதித் துறைச் செயலாளர் அதற்குப் பரிந்துரை கூறியிருக்கி

றார்கள். ஆனாலும் இந்தக் கார்ப்பரேஷன் அதை அமுல்படுத்தவில்லை. Industrial Dispute Act -ல் 9-ஏ என்ற ஒரு செக்ஷன் இருக்கிறது. அதிலே சர்விஸ் கன்டிஷனை மாற்றியமைக்க வழிவகை இருக்கிறது. அதன்படி வேலை நிலைமைகளை, 21 நாட்கள் நோட்டீஸ் கொடுத்து மாற்றலாம். இந்த விதியைப் பயன்படுத்தி அவர்களுக்கு எதிராகச் செயல்படுகிறார்கள். நிர்ப்பந்தம் செய்து சிலர் டிஸ்மிஸ் கூட செய்யப்பட்டிருக்கிறார்கள். புதிய ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இங்கே சென்னையிலும் தமிழ் நாட்டிலே பல மாவட்டத் தலைநகரங்களிலும் அந்த ஊழியர்கள் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மேலும் 350 பேர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களும் சிறைச்சாலையிலேயே உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதனாலே அந்த ஊழியர்கள் மத்தியிலும், அவர்கள் குடும்பத்தினர்கள் மத்தியிலும், இது சம்பந்தமாக பொது மக்கள் மத்தியிலும் ஒரு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதைப்பற்றி விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே பணியாற்றுகின்ற ஊழியர்கள் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். மூன்றாவது ஊதியக் குழுவினுடைய பரிந்துரையை மற்ற எல்லா ஊழியர்களுக்கும் அமுல்படுத்துகின்ற அரசு, அந்தக் கழகத்திலே மட்டும் ரூ. 19 கோடி நஷ்டம் ஏற்படுகிறதாகவும், அதனாலே அவர்களுக்கு வழங்க முடியவில்லை என்றும் சொல்லியிருக்கிறது. அவர்கள் வேண்டுமென்றே போராட்டம் செய்யவில்லை. முதலிலே முதல்வர் அவர்களைப் பார்த்திருக்கிறார்கள். பிறகு உணவு அமைச்சர் அவர்களையும் பார்த்திருக்கிறார்கள். அதற்குப் பின்னர் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்திருக்கிறார்கள். இவர்களையெல்லாம் பார்த்த பின்னாலே உணவு அமைச்சர் அவர்கள் நிறுவனம் நஷ்டம் இல்லாமல் நடத்துவதற்கு ஆலோசனை சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். வள்ளுவர்

‘இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு’

என்று கூறியிருக்கிறார். அதைப்போல அரசுத் துறையிலே இருப்பவர்கள் தான் அதைச் செய்ய வேண்டும். அதைப்பற்றி ஊழியர்களிடம் கேட்டுப் பயன் இல்லை. அந்த உயர்வை அரசு ஊழியர்களுக்கும், மற்ற துறைகளில் இருப்பவர்களுக்கும் இந்த மூன்றாவது சம்பளக் கமிஷன் பரிந்துரை செய்து, இவர்களுக்குச் செய்யாமல் இருப்பது சாலச் சிறந்தது அல்ல. இதற்காக 25 பேர்கள் உண்ணாவிரதம் இருந்து, அவர்கள் மருத்துவ மனைக்கு அழைத்துச்





செல்லப்பட்டு அங்கு குளுகோஸ் கொடுக்கின்ற நிலைமையில் இருக்கின்றார்கள். அவர்கள் அங்கேயும் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்கிறார்கள். அவர்கள் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. 19 பேர்களை வன்முறையில் ஈடுபட்டதாகக் கைது செய்திருக்கிறார்கள். மறியல் செய்ததாக 55 பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள். பத்திரிகைகளிலே ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக வந்திருக்கிறது. இது மிக முக்கியமான பிரச்சினையாக இருப்பதால், அந்த ஊழியர்களுக்கு அநீதி இழைப்பதாக இருப்பதால், மூன்றாவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்றப் போராடுகின்றவர்களை, அதற்கு முன்னோடியாக இருக்கக்கூடியவர்களை வேலை நீக்கம் செய்வது, அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது என்ற நிலைமைகள் இருப்பதால், இதைப்பற்றி விவாதிக்க, இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து, இது சம்பந்தமாக விவாதித்து விரிவாக உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொன்ன பிறகு, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பரிவோடு அதைக் கவனித்து உரியவைகளைச் செய்ய வேண்டும். ஆகவே இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கூறி அமைகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஊழியர்கள் தமிழக அரசினுடைய மூன்றாவது சம்பளக் குழுவினுடைய பரிந்துரைகளைத் தங்களுக்கு நியாயமாக அமுல்படுத்தவில்லை, ஊதியங்களை வழங்கவில்லை என்பதை வலியுறுத்தியும், தங்களுடைய சங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தும் இன்றையதினம், 16 ஆம் தேதியிலிருந்து உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். உண்ணாவிரதம் இருந்த தொழிலாளர்களில் 18 பேர்களுடைய உயிர் ஊசலாடிக்கொண்டிருப்பதாகவும், கவலைக்கு இடமாக இருப்பதாகவும் தகவல் வந்துகொண்டிருக்கிறது. இதற்கிடையிலே பல அரசு ஊழியர்கள், சிவில் சப்ளைஸ் ஊழியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்குக் கூட கோட்டைக்கு வந்த 100 ஊழியர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. இதைத் தொடர்ந்து பல்வேறு சங்கங்கள் அரசாங்க ஊழியர்கள், பல்வேறு தொழிற் சங்கங்கள் அவர்களுடைய வேலை நிறுத்தத்திற்கு, உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றன. தமிழ்நாடு முழுவதும் இந்தப் போராட்டம் உருவாகிவிடுமென்ற அச்ச நிலை இருப்பதன் காரணமாக, இந்த அவையினுடைய அலுவல்களை ஒத்தி வைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 6,315 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

[திரு. க. இராசா முகமது] [1979 மார்ச் 20

இந்த வாணிபக் கழகம் சென்ற ஆண்டு வரை இலாபத்தில் இயங்கி வந்தது. வெளிச் சந்தையில் அரிசி தாராளமாகக் கிடைப்பதால், பொது விநியோக முறையின்கீழ் அரிசியின் விற்பனை பெரிதும் குறைந்துவிட்டது. கோதுமை, கோதுமைப் பொருட்கள் மீதுள்ள கட்டுப்பாடுகள் அனைத்தையும் மத்திய அரசு நீக்கிவிட்டதாலும், கோதுமையின் விற்பனை குறைந்து விட்டதாலும், இந்த வகையில் கழகத்திற்கு நடந்துவந்த வியாபாரமும் குறைந்துவிட்டது. சர்க்கரைக் கட்டுப்பாடு நீக்கக் கொள்கையின் காரணமாக லெவி சர்க்கரை விற்பனையும் நின்றுவிட்டது. இவ்வாறு வாணிபக் கழகத்தின் வர்த்தக நடவடிக்கைகளும், அவற்றிலிருந்து கிடைத்து வந்த வருவாய்களும் பெரிதும் சுருங்கிவிட்ட காரணத்தினால், சென்ற ஓராண்டுக் காலமாகவே இக்கழகம் மிக நெருக்கடியான நிதி நிலைமையைச் சமாளிக்கவேண்டிய கட்டத்தில் உள்ளது.

ஏறக்குறைய 329 பட்டியல் எழுத்தர்களும், 107 பேக்கர்களும், 354 காவல் பணியாளர்களும், இக்கழகத்தின் தேவைக்கு அதிகமாக இருந்த நிலை சென்ற ஓராண்டு காலமாக இருந்தபோதிலும், மனிதாபிமான அடிப்படையில் நெருக்கடியான நிதி நிலைமையையும் பொருட்படுத்தாமல், இவர்களை இக் கழகம் தொடர்ந்து வேலையில் வைத்துக் கொண்டிருக்கிறது. அரசின் விதிகளுக்கு இணங்க வேலை வாய்ப்பு நிறுவனத்தின் வாயிலாக நியமனம் செய்யப் படாமல் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வேலைக்கு அமர்த்தப்பட்ட ஏறக்குறைய 1,700 ஊழியர்களின் பணி முறைப்படுத்தப்பட்டு, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஒரு தொகையை மொத்த ஊதியமாகப் பெற்றுவந்த ஏறக்குறைய 3,000 ஊழியர்களுக்கு, 1—4—1977 முதல் ஆண்டுதோறும் ஊதிய உயர்வுகொண்ட சம்பள விகிதம் அளிக்கப்பட்டுள்ளது. இது தவிர, 1,000 ஊழியர்களுக்கு பதவி உயர்வு பெறுவதற்கு விதிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச பணிக்கால நிபந்தனையையும் தளர்த்தி, பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. ஊழியர்களின் நலனைக் கருதி எடுக்கப் பட்டுள்ள இந்த நடவடிக்கைகளின் பயனாக, கழகம் ஆண்டுக்கு கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் செலவை ஏற்கவேண்டியதாயிற்று.

மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்த வேண்டும் என்பது இந்த ஊழியர்களின் கோரிக்கை. ஊதியக் குழுவின் பரிந்துரைகள் அரசாங்கப் பணியாளர்களுக்குப் பொருந்துபவை. இக்கழகத்தின் பணியாளர்கள் அரசாங்கப் பணி விதிமுறைகளுக்கு உட்பட்டவர்கள் அல்ல. இவர்கள் ஆலை ஊழியர்கள் விதிகளுக்கும், கடை சிப்பந்திகள் சட்டத்திற்கும் உட்பட்டவர்கள். அரசாங்கப் பணியாளர்களுக்கு போனஸ் வழங்கப்படுவதில்லை. இந்தக் கழகத்தின் பணியாளர்களுக்கு போனஸ் வழங்கப்படுகிறது. இந்த கழகம் இலாபகரமாக இயங்கிவந்த ஆண்டுகளில் 15 விழுக்காடு போனஸ் வழங்கப்பட்டு வந்தது. சென்ற இரண்டு ஆண்டுகளில் குறைந்தபட்ச



1979 மார்ச் 20] [திரு. கா. இராசா முகமது]

போனசான 8.33 விழுக்காடு போனஸ் வழங்கப்பட்டது. கழக ஊழியர்களுக்கு ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதியாக 8.33 விழுக்காடு வழங்கப்படுகிறது. மேலும் தேர்வு ஆணைக்குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்க ஊழியர்களுக்கும், வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலமாகக் கூட நியமிக்கப்படாத பல ஊழியர்கள் பணியாற்றும் இந்தக் கழகத்தின் விதிமுறைகளுக்கும் இடையே பெருத்த வேறுபாடு உள்ளது. அரசாங்கப் பணியில் ஒரு பதவியிலிருந்து அடுத்த பதவிக்கு பதவி உயர்வு பெறுவதற்கு 8 முதல் 10 ஆண்டு காலங்கள் ஆகின்றன. இக்கழகம் இயங்கி வந்துள்ள சென்ற 7 ஆண்டுகளில், இரண்டு மூன்று பதவி உயர்வுகள் பெற்ற பல பணியாளர்கள் உள்ளனர். ஆகவே, அரசாங்கப் பணியாளர்களுக்கு ஒத்த சலுகைகளை இக்கழக ஊழியர்களுக்கும் பொருத்தவேண்டுமென்ற கோரிக்கையை ஏற்பதற்கில்லை.

(பிற்பகல் 4-40)

இக் கழகத்தின் பெரும்பாலான பணியாளர்கள் கடைச் சிப்பந்திகள். ஒத்த பொறுப்பிலுள்ள மற்ற பொது நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும், தனியார் கடைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் அளிக்கப்படும் சம்பளத்தைவிட இந்தக் கழகத்தில் சம்பளம் அதிகமாகவே வழங்கப்படுகிறது. இங்கு, பேக்கரின் சராசரி ஊதியம் ரூபாய் 265. கடையில் விற்பனையைக் கவனித்துக்கொள்ளும் எழுத்தர்களின் சராசரி ஊதியம் ரூ. 333. நடப்பு ஆண்டில் 12 கோடி ரூபாய் அரசாங்கத்திலிருந்து கோரிப் பெற வேண்டிய நெருக்கடியான நிதி நிலைமையில் இக் கழகம் இருக்கின்றது. இந்த நெருக்கடியான நிதி நிலைமையைச் சமாளிக்க சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகிறது. மேலும் கடைகளின் வேலை நேரத்தைச் சற்று நீட்டி, வியாபாரத்தைப் பெருக்குவதற்கு வழி உண்டா என்பதையும் பரிசீலிப்பது அவசியமாகிறது. இந்த நோக்கத்தில்தான் தற்பொழுது அலுவலகங்களில் 6 மணி நேரமும், நியாய விலை விற்பனைக் கடைகளில் 7 மணி நேரமும், அமுதம் போன்ற சிறப்பு அங்காடிகளில் $7\frac{1}{2}$ மணி நேரமும், கிட்டங்களில் மட்டுமே 8 மணி நேரமும் வேலை செய்யும் முறையை மாற்றி, எல்லா இடங்களிலும் நாள் ஒன்றுக்கு 8 மணி நேரம் வேலை செய்வதற்கு வசதி செய்ய வேண்டுமென்று கழகத்தின் நிர்வாகம் கருதியது. மேலும் இங்கு நியாயவிலைக் கடைகள், அமுதம் சிறப்பு அங்காடிகள், கிட்டங்கிகள் ஆகியவைகள், கடைகள் சிப்பந்திகள் சட்டத்தின்கீழ் வருவதால், இவற்றில் பணி புரிவோருக்கும் அலுவலகத்தில் பணி புரிவோருக்கும் ஒரே சீரான விடுமுறை போன்ற வசதிகளைச் சீரமைக்கவும் கழகத்தின் நிர்வாகம் கருதியது. நட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கும் இக் கழகத்தில் வியாபாரத்தைப் பெருக்கும் நோக்கத்துடன், இந்த நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இத திருத்

தங்களை ஏற்றுக்கொண்டால், அதன் மூலம் வியாபாரம் பெருகும் என்ற எதிர்பார்ப்பில், அந்த எதிர்பார்ப்பு உடனடியாக நிறைவேறாவிட்டால் கூட, நாளடைவில் அது நிறைவேறும் என்ற நம்பிக்கையில் கழகப் பணியாளர்களின் ஊதிய விகிதங்களை மேலும் உயர்த்த கழக நிர்வாகம் விரும்பியது. ஆனால் கழகத்தின் வியாபாரத்தைப் பெருக்குவதற்காகச் செய்யப்பட்ட இந்த மாற்றங்களைக்கூட ஊழியர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்ததோடு உடனடியாக மூன்றாவது ஊதியக் குழுவின் விகிதங்களைச் செயல்படுத்த வேண்டுமென்றும், அதன் பின்புதான் மாற்றங்கள் பற்றி பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டுமென்ற நிலையை ஊழியர் சங்கங்கள் மேற்கொண்டன. இந்த மாற்றங்கள் செய்வதற்கான அறிவிப்பை நிர்வாகம் முறைப்படி தொழில் தகராறு சட்டத்தின் விதி, பிரிவு 9 (ஏ)-ன் கீழ் தொழிலாளர் நல அதிகாரிகள் முன்பு தாக்கல் செய்தது. சங்கங்கள் எழுப்பியுள்ள ஆட்சேபணைகளின்பேரில், தொழிலாளர் துணை ஆணையாளர் இந்த ஆண்டு சனவரி மாதத்தில் பேச்சு வார்த்தைகள் தொடங்கியுள்ளார். இந்தப் பேச்சு வார்த்தைகள் மார்ச்சு மாதம் 26 ஆம் தேதி தொடர இருக்கின்றன. பேச்சு வார்த்தைகள் நடந்துகொண்டிருக்கும் இந்த நிலையிலே, தொழிலாளர் இலாகா துணை ஆணையாளர் விசாரணையை முடித்து, அறிக்கை வருவதற்கு முன்பே, கழக ஊழியர்களின் சங்கங்கள் சில தொடர் உண்ணாவிரதமிருக்கப் போவதாகவும், தர்ணா செய்யப் போவதாகவும் அறிவித்து, 16—3—1979 முதற்கொண்டு, இக் கிளர்ச்சி முடிவுகளை மேற்கொண்டுள்ளன. இக் கிளர்ச்சியையொட்டி விரும்பத்தகாத பல சம்பவங்கள் நேரிட்டுள்ளது வருந்தத்தக்கது. அலுவலகத்திற்குச் செல்ல விரும்பிய ஊழியர்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். அலுவலகத்திற்குள் நுழையக்கூடாதென்று நிர்ப்பந்தப்படுத்தப்பட்டுள்ளனர். குறிப்பாகப் பெண் ஊழியர்களும், பொதுவாக மற்றவர்களும் கேலிக்கும், நையாண்டிக்கும், வசைக்கும் நிர்ப்பந்தத்திற்கும் ஆளாக்கப்பட்டு, சென்ற 4 நாட்களாக கழகத்தின் வேலை ஸ்தம்பித்துள்ளது. 16—3—1979 அன்று அலுவலகத்திற்குச் சென்ற உயர் அதிகாரிகளின் கார்மீது செங்கற்கள் வீசப்பட்டுள்ளன. 17—3—1979 அன்று அலுவலகத்திலிருந்து வெளியே வந்த ஓர் உயர் அதிகாரி, பஸ் ஸ்டாப் அருகே சிலரால் செருப்பால் அடிக்கப்பட்டுள்ளார். இன்னும் மூன்று நான்கு பணியாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். சென்னை நகர மேலாண்மை அலுவலகத்தில் தொலைபேசிகள் எல்லாம் இரு முறை துண்டிக்கப்பட்டுள்ளன. கார் ஓட்டுநர்கள் கார்களை எடுக்கக்கூடாதென்று அச்சுறுத்தப்பட்டுள்ளனர். அலுவலகத்திலிருந்து அதிகாரிகளுக்கு போலீஸ் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்ட நண்பகல் உணவும் அவர்கள் உண்பதற்கு முன்பே பறித்துச் செல்லப்பட்டுள்ளது. அலுவலகத்திலிருக்கும் பணியாளர்களை அச்சுறுத்தும் வகையில், சென்ற நான்கு நாட்களாகவே ஊழியர்கள் கூட்டம் வெளியிலே நின்றுகொண்டு, வாய் கூசும் வார்த்தைகளால் வசை





பாடிக் கொண்டிருக்கிறது. பொது நலனுக்கு இன்றியமையாத உணவுப் பொருட்களை விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள இக் கழகம், தன் பொறுப்புக்களைச் செயல்படுத்துவதில் இவ்வாறு வன்முறையில் தடை செய்யப்பட்டால் அதை அரசு அனுமதித்துக் கொண்டிருக்க முடியுமா என்பதை இம் மாமன்ற உறுப்பினர்கள் சற்று சிந்திக்க வேண்டும். சென்ற சில நாட்களாகச் சென்னை நகரில் ஏற்பட்டுள்ள மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு சில அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலையில் இக் கழகம் உள்ளது. இப் பணியைக்கூட நிறைவேற்ற முடியாமல் ஒரு நிர்ப்பந்த சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

பொது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டிய இக் கழகம் இலாபகரமாக இயங்கச் செய்வதற்கு ஊழியர்களின் ஒத்துழைப்பு தேவை. பல கோடி ரூபாய் நட்டத்தைச் சந்திக்க வேண்டிய நிலையிலுள்ள இக் கழகம், 1000க்கும் மேற்பட்ட உபரி ஊழியர்களை மனிதாபிமான அடிப்படையில் தொடர்ந்து பணியில் வைத்துக்கொண்டிருக்கிறது. இந் நிலையில், ஏதாவது ஒரு வகையில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதும், வியாபாரத்தைப் பெருக்குவதற்காகக் கடைகள் வேலை செய்யும் நேரத்தை நீட்டிப்பதும் இன்றியமையாதனவாகின்றன. இந்த மாற்றங்கள் கழகத்தின் நலனுக்கு மட்டுமல்ல, தங்கள் பணி பாதுகாப்பாக இருப்பதற்கும் இன்றியமையாதது என்பதை ஊழியர்கள் உணர்ந்து, இந்த மாற்றங்களை ஏற்றுக்கொண்டு, கழகம் சுமுகமாக இயங்க வழி செய்து ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க விரும்பும் இக் கழகத்திற்கு அதைச் செய்வதற்கு ஒரு வாய்ப்பை அளிக்க வேண்டுமென்று நான் இம்மாமன்றத்தின் மூலம் ஊழியர்களை மனமாரக் கேட்டுக்கொள்கிறேன். இந்த வாணிபக் கழகம் பல கோடி ரூபாய் நட்டத்தில் தொடர்ந்து செயலாற்ற வேண்டுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டிய கட்டத்திற்கும், கட்டாயத்திற்கும் ஊழியர்கள் அரசைத் தள்ளிவிடக் கூடாது. ஆகவே, இந்த நிலைமைகளை உணர்ந்து, நிர்வாகத்துடன் ஒத்துழைத்து, பொது மக்களுக்குத் தொடர்ந்து சேவை செய்ய இக் கழக ஊழியர்கள் முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் இரண்டு நாட்களில் பணிக்குத் திரும்பி சுமுகமாக வேலை செய்யாத ஊழியர்களைப் பதவியிலிருந்து உடனடியாக நீக்கிவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். கசப்பான இந்த நிலைமை உருவாகாத வண்ணம் எல்லாப் பணியாளர்களும் தங்கள் கிளர்ச்சிகளை உடனே நிறுத்திக்கொண்டு, பொறுப்புணர்வுடன் வேலைக்குத் திரும்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு வேலைக்குத் திரும்பியபின், தொழிலாளர் நல இலாகா அதிகாரிகள் முன்பு நடந்துவரும் பேச்சு வார்த்தைகளின் பலனாக இணக்கமான ஒரு முடிவைக் காண முடியும் என்ற நம்பிக்கை உண்டு. கிளர்ச்சியை நிறுத்திவிட்டு, சங்கப் பிரதிநிதிகள் நிர்வாகத்துடன் சுமுகமான

முறையில் பேச்சு வார்த்தைகள் நடத்தி, இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது நல்லது. நல்லுணர்வுடனும், ஊழியர்கள்பால் கொண்டுள்ள அனுதாபத்துடனும் செய்யப்படும் இந்த வேண்டுகோளுக்கு ஊழியர்கள் செவிசாய்க்க வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் இதை ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் இன்றைக்கு அரசு தொடர்ந்து செயல்படுகிறதென்று கூறி, இதற்காக இந்த அவையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து, இதைக் குறித்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பொருள் குறித்து விவாதிக்க, அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கூறி, அனுமதி மறுக்கிறேன்.

### (2) விம்கோ தொழிற்சாலையில் 500 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நல்லசிவன் அவர்கள் விம்கோ தீப்பெட்டித் தொழிற்சாலையில் 500 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டது குறித்து ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு அந்த விதியின்கீழ் வருகிறதென்பதை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. ஆ. நல்லசிவன் :** தலைவரவர்களே, மத்திய அரசினுடைய சுங்க வரி விதிப்பின் காரணமாக விம்கோ தீப்பெட்டியின் விலை 20 காசுகளாக உயர்ந்துவிட்டதென்றும், கைத் தொழில் மூலமாகச் செய்யப்படுகிற தீப்பெட்டியின் விலை 15 காசு என்றும், குடிசைத் தொழில் மூலமாகச் செய்யப்படுகிற தீப்பெட்டியின் விலை 10 காசு என்றும் இருப்பதால், மார்க்கெட்டில் போட்டி போட முடியாமல் இருப்பதாகவும் விம்கோ தொழிற்சாலை நிர்வாகம் சுட்டிக்காட்டுகிறது. ஒரு மாதத்திற்கு 12 ஆயிரம் கேஸ்கள் உற்பத்தியாகும் இடத்தில், இப்போது 7,500 கேஸ்கள்தான் உற்பத்தி செய்கிறார்கள். 2,000 பேர்கள் வேலை செய்யும் இடத்தில் 500 பேர்களுக்கு வேலையில்லாமல், அவர்கள் வேலையிலிருந்து வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையிலே, வேலையின்மையின் காரணமாக, அந்த 500 பேர்களின் குடும்பங்களுக்கும் மிகுந்த கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மேலும், தீக்குச்சி செய்வதற்கான மரங்கள் தட்டுப்பாடு காரணமாக இத்தொழிலுக்கு இடையூறு ஏற்பட்டிருப்பதாகவும், தொழிலையே நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்படலாமென்றும் தமிழக அரசுக்கு விம்கோ பேக்டரி நிர்வாகம் தெரிவித்திருக்கும்



நிலையில், மீதமுள்ள 1,500 பேர்களின் வேலைக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ள சூழ்நிலையில், தொழிலாளர்களிடையே உருவாகியுள்ள பதட்ட நிலை குறித்தும், இது குறித்து பொது மக்களுக்குள்ள மன உணர்வைக் குறித்தும் விவாதிப்பதற்கு, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினை குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் ஓர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளதால், அவர்களும் இதுபற்றியதாக விளக்கம் சொல்வதாக இருந்தால், சொல்லலாம்.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, மத்திய அரசு விதித்துள்ள வரி உயர்வின் காரணமாக விம்கோ தீப்பெட்டித் தொழிற்சாலை இப்போது மூடப்படும் நிலைக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. அதனால் 10,000 பேர்களுக்கு வேலை இழப்பு நேரிடும். மேலும் 2,000 குடும்பங்கள் பாதிக்கப்படுமென்று அறிய முடிகிறது. 50 ஆண்டுகளாக நடைபெறுகிற, மிகப் பழமையான அந்தத் தொழிற்சாலை மூடப்படுவதால், பல்வேறு குடும்பங்கள் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை இருப்பதால், அந்தத் தொழிற்சாலையை மூடாமல், அரசே அதை ஏற்று நடத்துவதற்கோ அல்லது தொழிலாளர்களிடம் அந்த நிர்வாகத்தை ஒப்படைத்து, அவர்களே அதை நடத்துவதற்கோ அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலே உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலே, 50 சதவிகிதத்திற்கு மேலே குடிசைத் தொழில் என்ற பெயராலே, ஒரேயொரு குடும்பம் ஏற்று, சர்வாதிகாரமாக நடத்துவதாகப் பழி சுமத்தப்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளை ஆய்ந்து, அந்தத் தொழிற்சாலை மூடப்படாத நிலையை உருவாக்கி, அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்லப்பு அளிக்க நம்முடைய அரசு எந்த அளவிற்கு முயற்சி செய்ய முடியுமோ, அந்த அளவிற்கு செய்ய வேண்டுமென்று சொல்லி, இந்தப் பிரச்சினை பற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-50)

* **மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவரவர்களே, இந்தியாவிலேயே இயந்திரம் மூலம் தீப்பெட்டி செய்யப்படுவது விம்கோ கம்பெனியாரின் ஐந்து தொழிற்சாலைகளில்தான். மஹாராஷ்டிரம், மேற்கு வங்காளம், உத்தரப்பிரதேசம், அஸ்ஸாம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் இந்தத் தொழிற்சாலைகள் இயங்குகின்றன. இவைகளில் சென்னையில் உள்ள திருவொற்றியூர்

தொழிற்சாலையில் சுமார் 1,700 தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். மத்திய அரசு சென்ற நிதிநிலை அறிக்கையில், இத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் தீப்பெட்டிகளுக்கு உண்டான வரியை (எக்சைஸ் டியூட்டி) குரோஸ் ஒன்றுக்கு ரூபாய் 4.63-லிருந்து ரூபாய் 9.20 ஆக ஏற்றிவிட்டார்கள் என்றும் அதே நேரத்தில் குடிசைத் தொழிலில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிகளின் சுங்கவரி ரூபாய் 3.36 லிருந்து ரூபாய் 1.60 ஆக, கணிசமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்றும், இதனால் ஏற்படும் விலை வித்தியாசத்தினால் தீப்பெட்டிகளை வெளிச்சந்தையில் விற்க முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டிருப்பதாகவும் கூறி நிர்வாகம், தொடர்ந்து தொழிற்சாலையை நடத்த இயலாத நிலைமை வந்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். வெளிச்சந்தையில் இந்தக் கம்பெனியின் தீப்பெட்டிக்கு கிராக்கி (டிமான்ட்) குறைந்ததால் 3—3—1979 முதல் 250 தற்காலிக வேலையாட்களும் 50 பயிற்சி பெறுவோர்களும் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். 14—3—1979 முதல் ஒப்பந்தப்படி வேலை செய்யும் 200 பெண் தொழிலாளர்களுக்கும் வேலை கொடுக்கப்படவில்லை. இதைக் குறித்து தொழிலாளர் நலத் துறை செயலர் நிர்வாகத்தினருடன் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். சுங்க வரியைக் குறைப்பதற்கு மத்திய அரசை வேண்டிக் கொள்ளவும், இங்குள்ள இயந்திரத் தொழிற்சாலையை படிப்படியாகக் குடிசைத் தொழிலாக மாற்றியமைக்கவும் முயற்சியெடுக்கும்படி யோசனை தெரிவித்தார். அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசை அணுகியிருப்பதாகவும் அதன் பயனாக சுங்கவரி ரூபாய் 9.20-ல் இருந்து ரூபாய் 7.20 ஆகக் குறைக்கப்பட்டதாகவும் தெரிகிறது. இருந்தும் இந்த சுங்கவரிகூட மிகவும் அதிகமாக இருப்பதினால் இதை மீண்டும் குறைக்கும்படி நிர்வாகம் மத்திய அரசைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. நிர்வாகம் இன்னமும் தனது இறுதி முடிவைத் தெரிவிக்கவில்லை. ஆகவே, இதை விவாதிக்க அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு, இதுபற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுவதால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அனுமதியை மறுக்கிறேன்.





## (3) கவன ஈர்ப்பு.

**(1) கீழ்த்திசை மொழிக் கல்லூரிகளை அரசு அங்கீகரிக்காதது குறித்தும் அங்கு பணியாற்றும் ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழக மானியக் குழு சம்பள வீதங்கள் வழங்கப்படாதது குறித்தும்.**

**புலவர் புலமைப்பித்தன் (திரு. ஏ. ஆர். தாமோதரன் சார்பில்):** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

" பி.லிட். பட்டத் தேர்வு வகுப்புகள் நடத்தி வருகின்ற, பல்கலைக் கழகத்துடன் தற்போது இணைக்கப்பட்டுள்ள கீழ்த்திசை மொழிக் கல்லூரிகளை அரசு அங்கீகரிக்காததும் அதனால் அரசிடமிருந்து அக்கல்லூரிகளுக்கு மானியம் கிடைக்காது, அக்கல்லூரிகளுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டதாலும் அவை பாதிக்கப்பட்டு அவற்றின் ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழக மானியக்குழு சம்பள வீதங்களில் சம்பளம் வழங்கப்படாதது குறித்து "

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் அரசு மானியம் பெற்று 9 தமிழ்க் கல்லூரிகள், ஒரு சமஸ்கிருதக் கல்லூரி மற்றும் ஒரு அராபியக் கல்லூரி, ஆக 11 ஓரியண்டல் கல்லூரிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்க் கல்லூரிகளில் 1974-75 ஆம் கல்வியாண்டு இறுதிவரை புலவர் படிப்புக்கான வகுப்புக்கள் நடைபெற்று வந்தன. 1975-76 ஆம் கல்வி ஆண்டு முதல், புலவர் படிப்புக்கு மாணவர்களைச் சேர்ப்பதை நிறுத்த வேண்டும் என்றும் அதற்கு பதிலாக பி.லிட். என்ற பட்டப் படிப்பு தொடங்க வேண்டுமென்றும் சென்னைப் பல்கலைக் கழகம் கூறியது. இதனைத் தொடர்ந்து எல்லாத் தமிழ்க் கல்லூரிகளிலும், சில கூடுதல் ஆசிரியர்களை நியமிக்கவும், கல்லூரி முதல்வருக்கு கலைக் கல்லூரி முதல்வர் ஊதியம் வழங்கவும் பல்கலைக் கழகம் அறிவுரை கூறியது. இதனை ஏற்கலாம் என்றும், இதற்கு அரசுக்கு கூடுதல் செலவு ஆகும் என்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். இது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. கூடிய விரைவிலேயே தேவையான ஆணைகள் வெளியிடப்படும். இக்கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழக மானியக்குழு ஊதிய விகிதங்களை அளிக்கும் கருத்தும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**புலவர் புலமைப்பித்தன் :** இரண்டு ஆண்டுக் காலமாக தமிழ் பயிற்றுவிக்கின்ற கல்லூரிகளுக்கு முதன்மையிடம் அளிக்க வேண்டிய அரசு, இரண்டு ஆண்டுகளாகப் பரிசீலனையில் வைத்துக்கொண்டிருப்பது அவ்வளவு நல்லதல்ல. எவ்வளவு மிக விரைவிலே முடியுமோ, அவ்வளவு மிக விரைவிலே,

[புலவர் புலமைப்பித்தன்] [1979 மார்ச் 20

இன்னும் சொல்லப் போனால் ஒரு நாளைக் குறித்து அதற்குள்ளாக அரசாணை வழங்கப்படும் என்கின்ற உறுதிப்பாட்டினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த அவையில் தருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஆணை வெளியிடுவதற்கான நிலைமை வந்து விட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(2) கல்வித் துறை ஆணையை மீறி அரிசன நலத்துறையின் கீழ் இயங்கும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் பதவி இறக்கம் செய்யப்பட்டு வெளியிலிருந்து புதிதாக ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டிருப்பது குறித்து.**

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"கல்வித் துறை ஆணையை மீறி அரிசன நலத்துறையின் கீழ் இயங்கும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் பதவி இறக்கம் செய்யப்பட்டு வெளியிலிருந்து புதிதாக ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டிருப்பதால் அவ்வாசிரியர்கள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து".

***மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, விவர அறிக்கை(ஒ)ன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அரிசன நலத் துறையில் உள்ள நான்கு மேல்நிலைப் பள்ளிகளுக்கு 40 மேல்நிலை ஆசிரியர்கள் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டன என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 15—6—1978 ஆம் தேதியிட்ட கல்வித் துறை நிலை ஆணை என். 1091-ன்படி இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட பணியிடங்களுக்கு ஏற்கெனவே பணியிலுள்ள ஆசிரியர்களை Induction செய்திருக்கவேண்டும். அவ்வாறு செய்யப்பட்டதா? அவ்வாறு செய்யப்பட்ட ஆசிரியர்களை இவ்வாண்டு கோடை விடுமுறைக்கு முன் பணி இறக்கம் செய்யக்கூடாது என்று ஆணையிட்டிருக்கிறார்கள். இருந்தும் ஏன் பணி இறக்கம் செய்யப்பட்டார்கள் என்பதை மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

---

*393—394 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1979 மார்ச் 20]

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** கல்வித் துறை வெளியிட்ட அரசாணை அரிசன நலத் துறைக்கு வந்து சேர்வதில் ஏற்பட்ட காலதாமதத்தின் காரணமாக, அவர்கள் பதவி இறக்கம் செய்யப்பட்டார்கள். சம்பந்தப்பட்ட விஷயமாக நெறியாளரிடம் விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது. விளக்கம் வந்த உடன், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** கல்வித் துறை வெளியிட்ட அரசாணை அரிசன நலத் துறைக்கு வந்து சேர்வதில் ஏற்பட்ட காலதாமதத்தின் காரணமாகத்தான் பதவி இறக்கம் செய்யப்பட்டார்கள் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். கல்வித் துறை ஆணை வந்து சேராதது உண்மையிலேயே வருத்தத்தை அளிக்கக்கூடிய செய்தி. இவ்வாறு பணி இறக்கம் செய்யப் போகிறார்கள் என்று யூகித்துத்தான், பணி இறக்கம் செய்யப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்களும் அரிசன நலத்துறை இயக்குநரையும், துணை இயக்குநரையும் நேரில் சென்று பார்த்து, கல்வித் துறையிலிருந்து ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது என்கிற விஷயத்தைச் சொன்னோம். அதற்கு அவர்கள் 'ஆணை எங்களுக்கு வந்து சேரவில்லை' என்று சொன்னார்கள். அதன் பிறகு கல்வித் துறையிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளுமாறு நாங்கள் சொல்லியும்கூட, அவர்கள் கேட்கவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வேண்டுமென்றே அந்த அதிகாரிகள் இப்படிச் செய்திருக்கிறார்கள். அந்த அதிகாரிகள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்? அந்த அதிகாரிகளுடைய தவறு காரணமாக ஆசிரியர்கள் பணியிலிருந்து இறக்கம் செய்யப்பட்டிருப்பதால், மீண்டும் அவர்கள் உடனடியாகப் பணியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** நாம் இயற்றுகிற சட்டமாக இருந்தாலும் சரி அல்லது அரசாணையாக இருந்தாலும் சரி, அதிகாரிகளுக்கு அவை வந்து சேர்ந்த பிறகுதான், அவர்கள் நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, ஆணை கிடைக்கக் காலதாமதம் ஏற்பட்டதால், அப்படிப்பட்ட தவறு நடந்திருக்கிறது. என்னைப் பொறுத்தவரை, அது சம்பந்தமான கோப்பு வந்த உடனேயே நான் விளக்கம் கேட்டிருக்கிறேன். கல்வித் துறை ஆணையில், மாற்றம் கூடாது என்று சொல்லப்பட்டிருந்தும்,

## கல்வித் துறை ஆணையை மீறி அரிசன நலத் துறையின் கீழ் இயங்கும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் பதவி இறக்கம் செய்யப்பட்டு வெளியிலிருந்து புதிதாக ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டிருப்பது குறித்து



என் மாற்றினீர்கள் என்று கேட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினருக்கு மனச்சாந்தி ஏற்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** விளக்கம் கேட்ட உறுப்பினர்களுக்கு மனச்சாந்தி வேண்டாம். பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு அதை வழங்கி மனச்சாந்தியை உண்டு பண்ணினால் போதும். இதனால் எத்தனை பேர் பாதிக்கப்பட்டார்கள் ? அவர்களுக்குச் சிறப்பு ஊதியமாக வழங்குகின்ற 25 ரூபாயைத் தொடர்ந்து இந்தக் கல்வி ஆண்டும் வழங்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, ஆசிரியர்களுக்கும் மனச்சாந்தி ஏற்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். எத்தனை பேர் பாதிக்கப்பட்டார்கள் என்கிற விவரம் இந்த அறிக்கையிலும் இல்லை, கோப்பிலும் இல்லை. யார் பாதிக்கப்பட்டார்களோ அவர்களுக்குத் தகுந்த பரிகாரம் தர அரசு முயற்சி எடுக்கும்.

(பிற்பகல் 5-00)

**திரு. பி. ஆர். தாமஸ் :** அடுத்த ஆண்டு 12 ஆம் வகுப்பு வரக்கூடிய காரணத்தால், வேலைப்பளு அதிகமாக இருக்கிற சூழ்நிலை இருக்கிறது., எனவே இந்த ஆண்டும், வரும் ஆண்டும் முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்களோடு பட்டப் படிப்புப் பெற்றுள்ள ஆசிரியர்களும் தொடர்ந்து பணியாற்றக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, இந்த ஆசிரியர்கள் எந்த நாளிலிருந்து பதவி இறக்கம் செய்யப்பட்டார்களோ அந்த நாளிலிருந்தே சிறப்பு ஊதியத்தைப் பெறச் செய்யவும், அடுத்த ஆண்டும் தொடர்ந்து அவர்கள் பணியாற்றவும் அரசு உரிய வாய்ப்பை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** கல்வித் துறையின் ஆணை இடைப்பட்ட நாளில் மாறுதல் செய்யக்கூடாது என்பதுதான். அந்த ஆணையை நிறைவேற்ற மட்டும்தான் அரிசன நலத்துறை கட்டுப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டுக்கு இப்போது உறுதி அளிக்க முடியாது என்றாலும் உரிய பரிகாரம் காண இந்த அரசு முயற்சி எடுக்குமென்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.





## 4. 1978-79 ஆம் ஆண்டு இறுதி துணை விவர அறிக்கை.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

1978-79 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகளை அவையில் வைக்க முன்வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

2. இந்தத் துணை மதிப்பீடுகளில், வருவாய்க் கணக்கில் 60.20 கோடி ரூபாய்க்கும், மூலதன, கடன் கணக்குகளில் 131.88 கோடி ரூபாய்க்கும் ஆக மொத்தமாக 192.08 கோடி ரூபாய்க்கு அவையின் அனுமதி கோரப்படுகிறது. சென்ற ஆண்டு பெய்த பெரு மழையினால், நீலகிரி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் ஏற்பட்ட சேதங்களைச் சீர் செய்யும் பணிகளுக்காகச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கமும் இதில் அடங்கும். சாலைச் சீரமைப்புப் பணிகளுக்காக 3.86 கோடி ரூபாயும், பாசன வசதிகளைச் சீரமைக்க 2.75 கோடி ரூபாயும், இவற்றில் குறிப்பிடத்தக்க ஒதுக்கீடுகளாகும். வெள்ள நிவாரணப் பணிகளுக்காக நகராட்சிகளுக்கும் மானியமாக 1.12 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

3. மூன்றாவது சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளின்படி சம்பள விகிதங்கள் மாற்றி அமைக்கப்பட்டதால் ஒவ்வொரு மானியத்தின் கீழும் கூடுதல் ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. இதற்காக, 1978-79 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில், "மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை" என்ற தலைப்பின்கீழ் மொத்தமாக 30 கோடி ரூபாய் ஒதுக்கி இருந்தபோதிலும், மானியக் கோரிக்கைகள் இடையே மறு நிதி ஒதுக்கம் செய்ய இயலாத காரணத்தால், ஒவ்வொரு மானியத்தின் கீழும் கூடுதல் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. "மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை" என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள 30 கோடி ரூபாய் தொகையையும் தற்போது கூடுதலாகக் கோரப்படும் தொகைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சம்பள விகிதங்களுக்காகக் கோரப்பட்டுள்ள தொகை குறைந்த அளவே கூடுதல் ஆகும்.

4. இந்தத் துணை மானியக் கோரிக்கையில் கூடுதலாகத் தொகை தேவைப்படுகின்ற வேறு சில இனங்களுக்கும், சில புதிய திட்டங்களுக்கும் அவையின் அனுமதி கோரப்படுகிறது. மத்திய அரசு உதவியுடன் 140 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தும் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டமும், இராமநாதபுரம், தஞ்சாவூர் மாவட்டங்களில் 45 இலட்சம் ரூபாய் செலவில் மீன் பிடி கிராமங்களில் வசதிகளைப் பெருக்குவதற்கான திட்டமும், சென்னையில்

மீனைப் பதப்படுத்தவும், விற்பனை செய்வதற்காகவும், சின்னமுட்டம் கிராமத்தில் மீனள வளர்ச்சிக்காகவும் மத்திய அரசின் உதவியுடன் 110 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தும் திட்டமும் இவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

5. சேலம், வட ஆர்க்காடு, கோயம்புத்தூர், தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் சில தொழில் துறைகளில் பணியாற்றி வரும் சுமார் 31,000 தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி அளிக்க, 19.55 இலட்சம் ரூபாய் செலவில் தொழிலாளர் நலன் காப்புறுதித் திட்டத்தை அரசு விரிவுபடுத்தியுள்ளது. நாகூரிலும், ஸ்ரீரங்கத்திலும் புதிய மருத்துவ மனைக் கட்டிடங்கள் கட்டவும் மருத்துவ மனைக் கட்டிடங்களைச் சீரமைக்கவும் 12.25 இலட்சம் ரூபாய் செலவிட துணை மதிப்பீடுகளில் அனுமதி கோரப்பட்டுள்ளது. பத்து கிராமப்புற குடும்ப நல நிலையங்களுக்கும், இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்காக அரசு 27.3 இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் தீட்டி இவ்வாண்டு செயல்படுத்த வகை செய்துள்ளது.

6. தொழில் வளர்ச்சியில் தொடர்ந்து பணிகளை மேற்கொள்வதற்காக கூடுதலாக, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு 1 கோடி ரூபாயும், தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகத்திற்காக 90 இலட்சம் ரூபாயும் மூலதனமாக அரசு அனுமதித்து உள்ளது. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கடன் பெறும் வசதிகளைப் பெருக்குவதற்காக, இவ்வாண்டு அரசு மூலதனமாக 3 கோடி ரூபாய் முதலீடு செய்ய, இந்தத் துணை மதிப்பீடுகளில் அவையின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

7. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு புதிதாகக் கப்பல்கள் வாங்குவதற்காக 3 கோடி ரூபாயும், அரசின் போக்குவரத்து நிறுவனங்கள் பேருந்து வாங்க நிதியுதவி அளிப்பதற்காக, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகத்திற்கு மூலதனமாக 50 இலட்சம் ரூபாயும், கடனாக 50 இலட்சம் ரூபாயும் வழங்க அரசு வகை செய்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குக் கடனாக 10 இலட்சம் ரூபாயும், தமிழ்நாடு திரைப்பட அரங்கு நிறுவனத்திற்கு 10 இலட்சம் ரூபாயும் கடனாக வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் வீட்டு வசதியைப் பெருக்கும் திட்டத்தை முனைப்பாகச் செயல்படுத்த தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்திற்கு இவ்வாண்டு கூடுதலாக 1 கோடி ரூபாய் மூலதனமாகவும், 2 கோடி ரூபாய் கடனாகவும் அரசு வழங்கியுள்ளது.



8. அரசின் பல்வேறு நிறுவனங்கள், இவ்வாண்டு தொடர்ந்து பணிகளை மேற்கொள்ளவும், வரும் ஆண்டில் செயல்பட இருக்கும் திட்டப் பணிகளுக்கு முன் நடவடிக்கைகள் எடுக்கவும் உதவும் வண்ணம் வழிவகை முன்பணம் அளிக்க, இந்தத் துணை மதிப்பீடுகளில் அனுமதி கோரப்பட்டுள்ளது. குறிப்பாக, தமிழ்நாடு மின் வாரியத்திற்கு 25 கோடி ரூபாயும், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு 7 கோடி ரூபாயும், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு 10 கோடி ரூபாயும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு 11 கோடி ரூபாயும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிக்கு 20 கோடி ரூபாயும், சென்னை மாநகராட்சிக்கு 2 கோடி ரூபாயும் வழங்க துணை மதிப்பீடுகளில் அனுமதி கோரப்பட்டுள்ளது. இந்த வழி வகை முன் பணங்கள் வரும் ஆண்டில் இந்த நிறுவனங்களால் அரசுக்குத் திருப்பப்படுபாதலால் அரசுக்கு நிகரச் செலவு ஏதும் ஏற்படாது.

9. இந்தத் துணை மதிப்பீடுகளில் இடம் பெறும் சில முக்கியத் திட்டங்களைக் குறிப்பிட்டுள்ளேன். பிற திட்டங்களைப் பற்றிய குறிப்புகள் அவை முன் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தத் துணை மதிப்பீடுகளை ஏற்க வேண்டுமென்று அவையை வேண்டி அமருகிறேன்.

### 5. 1971-72 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான விவர அறிக்கை.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** தலைவர் அவர்களே,

1971-72 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியுள்ள சில இனங்கள் குறித்த மானியக் கோரிக்கையை இம் மன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன்.

2. 1975-76 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்கு ஆய்வுக் குழு, 1971-72 ஆம் ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து, சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தை விட மிகையாகச் செலவாகியிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. மிகைச் செலவுக்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் ஏற்பட்ட மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளை சட்டப் பேரவை முன் வைத்து அனுமதி பெறுமாறு, பொதுக் கணக்கு ஆய்வுக்குழு பரிந்துரை செய்தது. அவ்வண்ணமே, 1971-72 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளின் விரிவான அறிக்கை இப்போது இம் மன்றத்தின்

முன் வைக்கப்படுகிறது. மொத்தத்தில் மிகைச் செலவு 7.63 கோடி ரூபாயாக இருக்கிறது. ஆண்டு இறுதியில் தீ விபத்தினாலும், வெள்ளத்தினாலும் ஏற்பட்ட எதிர்பாராச் செலவும், பேருந்து வழித்தடச்சாலை பராமரிப்புச் செலவு உயர்ந்ததும், வேளாண்மை, மருத்துவம் என்ற தலைப்புகளின்கீழ் அதிக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டதும், "பண்டகசாலை முன்பணம்" என்ற தலைப்பின்கீழ் பொருட்களை வாங்குவதற்கு முன்பணங்கள் கொடுக்கப் பட்டதும் இவ்வகையில் பெரிய செலவினங்களாகும். ஒவ்வோர் இனத்திலும் செலவு மிகையானதற்குக் காரணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன.

3. 1971-72 ஆம் ஆண்டுக்குரிய மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

### (6) உரிமைக் குழுவின் அறிக்கை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையில் 7—3—1979 அன்று வைக்கப்பட்ட உரிமைக் குழுவின் அறிக்கை ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—
"சட்டமன்ற மேலவையில் 7—3—1979 அன்று வைக்கப்பட்ட உரிமைக் குழுவின் அறிக்கை ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 5-10)

### (7) 1979-80 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

(மாற்றுத் தலைவர் திரு. ஈ. எஸ். வெங்கடேசன் தலைமை)

* **திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட்டின் மீது என்னுடைய கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை இங்கே கூறலாம் என்று இருக்கிறேன். முதலில் இந்த பட்ஜெட் தயாரிக்கும் முறை, பட்ஜெட்டின் மீது விவாதிக்கும் முறை, ஆகியவை பற்றி என்னுடைய கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன்.



நாம் இந்த பட்ஜெட் உரையிலே பேசும்போது, சாதாரண தெரு (விளக்கு) லைட்—பல்ப் போடுவது என்ற விஷயத்திலே இருந்து மாநிலத்தினுடைய சராசரி வருமானம் per capita income வரை பல்வேறு பிரச்சினை களைப்பற்றி ஒரு 'வைட் ஸ்கோப்பிலே' இன்றையதினம் பேசிக் கொண்டிருக்கிறோம். நிதியமைச்சர் அவர்கள் விமர்சனங்களைப் பயனுள்ள வகையில் எடுத்துக் கூற வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார்கள். ஆனால் இந்த நிதி நிலை அறிக்கையிலே பேசுகிறபோது, நான் ஒரு வரையறைகளுக்கு உட்பட்டுதான் பேசப்போகிறேன். வரையறைகளுக்கு உட்பட்டுப் பேசினால் தான், சொல்லப்படுகின்ற யோசனைகளை எடுத்து வைத்துக்கொண்டு, அவற்றையெல்லாம் பரிசீலித்து பின்பு விவாதத்திற்கு பதில் சொல்ல முடியும். எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், அரசினுடைய பொருளாதாரக் கொள்கைகள், திட்டங்கள், அணுகுமுறைகள்பற்றி இப்போது எதிர்க் கட்சி களுக்கு இருக்கக்கூடிய அதிருப்தியையும், அதன்மூலம் அவர்கள் எழுப்பக் கூடிய விமர்சனங்களையும் Steam out பண்ணுவதற்கான ஒரு ஏற்பாடாகத்தான் இருக்கிறதே தவிர, யதார்த்தத்தில் அந்த எண்ணங்களுக்கு ஒரு போக்கு விடுகிற மாதிரியான ஏற்பாடு இருக்கிறதே தவிர, உண்மை யிலேயே ஆக்கபூர்வமான எண்ணங்களை வெளியிடுவதற்கோ, திட்டங்களைத் தீட்டுவதற்கோ உரிய ஏற்பாடாக இந்த நிதிநிலை அறிக்கை மீதுள்ள, விவாத அமைப்பு இல்லை என்பதைத்தான் நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கொண்டுவர விரும்புகிறேன்.

ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கூறியது போல, நிதித் துறைக்கு என்று நாம் ஒரு 'கன்சல்டேட்டிவ் கமிட்டி' வைக்கலாம். இப்போது போக்குவரத்துத் துறைக்கு ஒரு கமிட்டி வைத்திருக் கிறோம். கல்வித் துறைக்கு நாம் ஒரு கமிட்டி வைத்திருக்கிறோம். இன்னும் மற்ற துறைகளுக்கும் இந்த மாதிரி கமிட்டிகள் இருக்கின்றன. ஆனால் எல்லாவற்றுக்கும் மூலாதாரமாக விளங்குவது நிதி. ஆகவே, நிதிக்கென்று நாம் தனியாக ஒரு 'கன்சல்டேட்டிவ் கமிட்டி' அமைத்தால், இந்த நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கும்போது மட்டுமென்று இல்லாமல் அந்தக் கமிட்டியிலே நாம் பல பயனுள்ள பொருள்கள்பற்றி விவாதிக்கலாம், பரிசீலனை நடத்தலாம். எதிர்க் கட்சியிலே பல்வேறு நல்ல அனுபவம் வாய்ந்தவர்கள் இருக்கிறார்கள். பொருளாதாரத் துறையில் நல்ல ஞானம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். இவர்களையும், ஆளுங்கட்சியில் உள்ளவர்களையும் வைத்து ஒரு கமிட்டி அமைத்தால், வருஷம் பூராவும் பிரச்சினைகள் எழும்போது நாம் விவாதிக்க வசதியாக இருக்கும். அப்படி அமைத்தால், தமிழ்நாட்டிலே இருக்கும் மக்களுக்கு அன்றாடம் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைப்பற்றி

முன்னதாகவே விவாதித்து, பரிகாரம் தேவைப்படுகின்றபோது, அந்தப் பிரச்சினைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். பின்பு, இந்த பட்ஜெட் தயாரிக்கும்போது, எதிர்க் கட்சிகள் சொல்லக்கூடிய கருத்துக்களையும் மனதில் வைத்துக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கவும், அதனால் நாட்டு மக்களுக்கு நல்ல பலனை ஏற்படுத்தவும் பயன்படும் என்ற முறையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோளாக விடுக்கிறேன். ஒரு 'கன்சல்டேட்டிவ் கமிட்டி' அமைத்தால், இதுசம்பந்தமாக எழுகின்ற பிரச்சினைகளுக்கு ஒரு சரியான நியாயம் கிடைக்க வழி ஏற்படும். ஆகவே, அத்தகைய கமிட்டி ஒன்றை அமைக்க வேண்டும் என்று இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்கிறேன். அந்த மாதிரி ஒரு அமைப்பு இருந்தால், இப்போது பள்ளிக்கூடத்துக்குப்போகும் 2-வது வகுப்பிலிருந்து 10-வது வகுப்பு வரை உள்ள பிள்ளைகள் சுமந்துகொண்டு போகிற சுமையைப் போல இருக்கும் பெரிய அறிக்கைகளை மொத்தமாகக் கொடுத்து படிக்க வேண்டியுள்ள ஏற்பாட்டை நாம் மாற்றியமைக்க முடியும். ஆகவே, இந்தக் கமிட்டி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிதியமைச்சர் அவர்கள் ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார்கள், தந்த மாளிகையிலே இருப்பவர்கள் தாழ்வாரத்திற்கு வர வேண்டும் என்று. தந்த மாளிகையிலே இருந்து தாழ்வாரத்திற்கு வரவேண்டும் என்று சொன்னால், ஒரு 'தியரட்டிகல்' அப்ரோச்சில் மட்டும் நிதிநிலை அறிக்கையைப் பரிசீலிக்காமல், நடைமுறையில் இந்த பட்ஜெட் மக்களுக்கு என்ன அனுகூலங்களை வழங்குகிறதென்று பாருங்கள் என்று கூறுகிறார்கள். அப்படித்தான் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. எங்களது கட்சியின் அபிப்பிராயம், இந்த பட்ஜெட், எப்போதும் போலவே, நிதியைத் திரட்டி, வழக்கமான திட்டங்களுக்கு வழங்கும் ஒரு 'ரொட்டீன்' பட்ஜெட்டே தவிர, வேறு புதுமையானது ஒன்றும் இதிலே இல்லை என்பதுதான். இப்போது ஒரு மாநிலத்தினுடைய பொருளாதார வளர்ச்சியைப்பற்றி நாம் பேசும்போது, அகில இந்திய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் தான் நாம் பேச முடியும். மாநில அரசைப் பொறுத்தவரையில், அதை மட்டும் வைத்துப் பார்க்கும் நிலையில் இன்றைக்கு இல்லை. இந்த மாநில அரசு Financial Restrictions-க்கு உள்ளாகியிருக்கிறது. ஆகவே, அகில இந்திய அடிப்படையில் நாம் பார்த்தால், 'எக்கனாமிக் சர்வே'-படி பார்த்தால், நம்முடைய நாட்டின் பொருளாதார நிலை எப்படி இருக்கிறது என்பதை அது படம்பிடித்துக் காட்டுகிறது. அந்த அறிக்கைப்படி பார்த்தால், நம்முடைய பொருளாதார நிலை மிகவும் மோசமடைந்து, தேக்கமடைந்து இருக்கிறது



என்று அந்த அறிக்கையின் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். வளர்ச்சியடையும் ஒரு நாட்டிலே பூரண நிலச் சீர்திருத்தம், விவசாய வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் இன்றியமையாதது. இவை எவ்வளவு இன்றியமையாதவை என்று பொருளாதார நிபுணர்களும், அரசியல் நிபுணர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த அறிக்கையிலே, அந்த எக்கனாமிக் சர்வேயிலே பார்த்தால், நம்முடைய நாட்டிலே இருக்கும் நிலச் சீர்திருத்தம்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மிகப் பெரிய புள்ளிவிவர நிபுணர் மஹலாநோபிஸ் குறிப்பிட்டிருக்கிறார், மத்தியிலே காங்கிரஸ் அரசு இருந்தபோது, நில உச்சவரம்புச் சட்டத்தை அவர்கள் கொண்டு வந்தபோது, ஆறு கோடி ஏக்கர் நிலங்கள் உபரியாகக் கிடைக்கும் என்று சொன்னார்கள். ஆனால் கடைசியாக ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட டிராஃப்ட் நகலில், அது 2 கோடியே 15 லட்சம் ஏக்கர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். பிறகு அதில் 'டிக்ளேர்' பண்ணிய உபரி அளவு 45 லட்சம் ஏக்கர் நிலம் என்றும், அதில் கைவசப்படுத்தியது 25 லட்சம் ஏக்கர் என்றும் சொல்லி கடைசியில் 'டிஸ்டிரிபூட்', விநியோகம் செய்த அளவு 13 லட்சம் ஏக்கர் நிலம் தான் என்று சொல்லப்பட்டுள்ளது. இது எது மாதிரி இருக்கின்றது என்று சொன்னால், முள்ளு முனையிலே மூன்று குளம் வெட்டினேன், அதிலே இரண்டு குளம் பாழ், மீதி இருக்கும் ஒன்றிலேயும் தண்ணீர் இல்லை என்று சொன்ன மாதிரி, கடைசியில் 13 லட்சம் ஏக்கர் நிலங்கள் தான் விநியோகம் செய்திருக்கிறார்கள். ஜூலை 31, 1977 வரை இவ்வளவு தான் விநியோகம் செய்திருக்கிறார்கள் என்று கூறப்பட்டுள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு போன்ற நாடுகளில் இருந்த Feudal system முழுமையாக ஒழிக்கப்பட்டு, அங்கெல்லாம் Capitalist Society உருவாகியிருக்கிறது. நம்முடைய நாட்டுப் பொருளாதாரம் ஒரு Freak மாதிரி உள்ளது. சில குழந்தைகள் ஒட்டிப் பிறப்பது போல, 4 கால் 5 கை இப்படியெல்லாம் இயற்கைக் கோளாறோடு பிறப்பதைப் போல்தான், நம் நாட்டுப் பொருளாதாரம் இன்றையதினம் இருக்கிறது. இப்போது நம் நாட்டுப் பொருளாதாரத்தைப் பார்த்தால், இந்த நிலப்பிரபுக்கள் மேலும் வலுவுடைய அதிகாரம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்ல முடியும். இது மட்டுமல்ல. விவசாயத்திலே 13 பெர்சென்ட் 'இன்கிரீஸ்' என்று சொல்கிறார்கள். ஆனால் உண்மை நிலவரத்தைப் பார்த்தால், ஒரு 3 பெர்சென்ட் கூட இன்கிரீஸ் இருப்பதாகத் தெரியவில்லை Industrial production 3.5 பர்செண்ட் தான் இன்கிரீசாகி இருந்தது, 1978-79-ல். 1978-79 ஆம் ஆண்டில் 1,400 கோடி ரூபாய் "deficit finance" ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் ஆரம்பத்தில் சொன்னது 1,110 கோடி ரூபாய் என்று. உண்மையில் 1,400 கோடி ரூபாய்க்கு இன்றைக்கு deficit ஏற்பட்டிருக்கிறது. இருபதாயிரம்

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 மார்ச் 20

(பிற்பகல் 5-20)

கோடி ரூபாய் கள்ளப்பணம் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை, சுப்ரீம் கோர்ட் நீதிபதி வாஞ்சு அவர்கள் சொல்லுகிறார்கள். சர்க்காருக்குப் போட்டியாகக் கள்ளப்பணம் இருக்கிறது என்று அவர் சொல்லுகிறார். இப்போதே 1,400 கோடி ரூபாய் அளவுக்கு மத்திய அரசின் பட்ஜெட்டிலே துண்டு விழுகிறது என்றால், இன்னும் வருகிற ஆண்டில் நிச்சயமாக 2,000 கோடி அளவுக்கு deficit ஏற்படும். இரண்டாயிரம் கோடி ரூபாய் அளவுக்குத் துண்டு விழுந்தால், Inflationary pressure தான் கொண்டு வரப்படுகிறது. இருபதாயிரம் கோடி ரூபாய் கள்ளப் பணம் புழங்குவதால்தான் inflation வருகிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, இந்தச் சூழ்நிலையில் விலைவாசி எப்படியிருக்கும்? 1978 ஏப்ரலில் இருந்து டிசம்பர் வரை cost of living index 4.5 கூடியிருக்கிறது என்று எகனாமிக் சர்வே சொல்லுகிறது. கவர்மெண்டின் cost of living index defect ஆக இருக்கிறதென்று நாங்கள் சொல்லுகிறோம். ஒர்க்கர்களுக்கு அதிக D.A. கொடுக்காமலிருப்பதற்காக இப்படி மோசடி செய்கிறார்கள் என்று நாங்கள் சொல்லுகிறோம். மார்க்கெட்டில் சாமான்களை வாங்கப்போனால், மூன்று விதமான விலைகள் இருந்தால், அதில் குறைந்த விலையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு cost of living index -ஐத் தயாரிக்க வேண்டுமென்று அரசாங்கம் சொல்லியிருக்கிறது. தொழிலாளர்களுக்கு ஏன் இந்த அநீதி செய்யப்படுகிறது. Average price என்னவென்று பார்த்தாவது கணக்கெடுக்க வேண்டும். ஆகவே அதை நாங்கள் பகிஷ்காரம் பண்ணினோம். குறைந்த விலையிலே தயாரிக்கப்பட்ட அந்த cost of living index கூட 4.5 கூடியிருக்கிறது ஆறு மாதங்களுக்குள். அரசாங்கப் புள்ளிவிவரமே இப்படியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் விலைவாசி உயர்வதைத் தடுக்க முடியாது.

கடந்த இரண்டே முக்கால் வருடங்களில் 30 இலட்சம் பேர் ரிஜிஸ்டர்ட் அன்எம்ப்ளாய்ட் எண்ணிக்கையில் கூடியிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில், நம் நாட்டிலே போதிய அளவுக்கு வாங்கும் சக்தி இல்லாத நிலையிலே தொழில் சாமான்களை இங்கே விற்பனை செய்ய முடியாமல், எக்ஸ்போர்ட் பண்ணினால்தான் விற்க முடியும், வேறு வழியில்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

கவர்ன்மெண்ட் அறிக்கையிலேயே கூறப்படுகிறது. 1978-79 ஆம் ஆண்டில் 850 லார்ஜ் ஸ்கேல் இன்டஸ்ட்ரியல் யூனிட்டுகள் சிக் யூனிட்டாக ஆகிவிட்டன என்றும், எட்டாயிரம் ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ரியல் யூனிட்டுகள் சிக்



1979 மார்ச் 20] [திரு. ஆ. நல்லசிவன்]

யூனிட்டாக ஆகிவிட்டன என்றும் எகானமிக் சர்வேயில் சொல்லப் பட்டிருக்கிறது. இருக்கிற தொழில்கள் எல்லாம் சிக் யூனிட்டாக ஆகுகிற போது, அதே நேரத்தில் எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்ஜில் லைவ் ரிஜிஸ்டரில் 30 இலட்சம் பேர் (வேலையற்றோர்) கடந்த இரண்டே முக்கால் வருடத்தில் உயருகிறபோது, Export or perish ஏற்றுமதி பண்ணு அல்லது நாசமாகப் போ என்று சொல்லும் அளவுக்கு நம்முடைய பொருளாதாரம் இருக்கிறது. நம்முடைய நாட்டுப் பொருளாதாரம், நாம் ஏற்றுமதி செய்வதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. இதற்காக எக்ஸ்போர்ட் சப்சிடி எவ்வளவு கொடுத்தார்கள் என்று பார்த்தால், 1978 டிசம்பர் வரையிலே எக்ஸ்ட்ரா சப்சிடி 126 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று எக்கனாமிக் சர்வேயில் சொல்லப்பட்டிருக்கிறது. எக்ஸ்போர்ட் சப்சிடி அதிகமாகக் கொடுத்துத்தான் நாட்டிலே உற்பத்தியாகிற பொருள்களையெல்லாம் வெளி நாடுகளிலே விற்க முடியுமென்று அரசு கருதுகிறது. இந்த அடிப்படையிலேதான் நம்முடைய நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமாக இருக்கிறது என்பதைக் கூறுகிறேன். இந்த Background- ல் Financial restraint -ஓடு மாநிலத்தில் உள்ள அரசு தன்னுடைய பொருளாதார நிலைமையைச் செயல்படுத்த வேண்டியிருக்கிறது. மாநில அரசை விமர்சனம் செய்கிறபோது, எல்லா அதிகாரமும் அதற்கு இருக்கிறது என்று கூறி நான் விமர்சனம் செய்யவில்லை. அதற்கு மேல் நான் கூறுவது, இப்படிப்பட்ட தேக்கம் உள்ள இந்தியப் பொருளாதாரத்தில், மத்திய அரசின் வசம் அதிகாரம் குவிந்திருக்கக் கூடிய நேரத்தில், மாநில அரசு அந்த Economic restraint -ஐ மாற்ற முடியாத தலைவிதி என்று ஏற்றுக் கொள்ளாமல் Economics restraint -ஐ உடைத்து மீறிச் செல்ல வேண்டுமென்பதுதான் மாநில அரசுக்குள்ள கடமையாகும். இப்படிச் சொல்லும்போது, "உனக்கு எப்போதும் இதுதான் வேலை. மீற வேண்டும் என்று சொல்லுவீர்கள். அரசை நடத்தும் நாங்கள் எப்படி அதை மீறுவது?" என்று கேட்பார்கள். "பப்ளிக் மீட்டிங்கில் பேசுவதைப் போல் பேசுவாய், நாங்கள் மீறுவது எப்படி?" என்று கேட்பார்கள். அந்த மாதிரிச் செய்ய வேண்டும் என்று நான் சொல்லவில்லை. எங்கள் கட்சியின் வசமும் இரண்டு மாநிலங்கள் இருக்கின்றன. எங்கே எப்படி அதை ஆப்பரேட் பண்ணுவது என்று நாங்கள் யோசிக்கிறோம். பொறுப்பு இல்லாமல், பொது மேடையில் பேசுவது போல் நான் பேசவில்லை. Economic and Financial Restraint இருக்கிறதே அவைகளைத் தவிர்க்க முடியாத தலைவிதி என்று ஏற்றுக் கொண்டுவிடாமல் அதிலிருந்து எப்படியாவது தப்பிக்க வேண்டுமென்று முயற்சி செய்ய வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் நான் கேட்பது. நான்கு சுவர்களுக்குள் மாட்டிக் கொண்ட பூனை கூட அதிலிருந்து தப்பிப் போக

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 மார்ச் 20

முடியாது என்ற நிலையிலும்கூட, சோர்ந்து போகிற வரையிலே எப்படியாவது தப்பிக்க வழி கிடைக்காதா என்றுதான் பார்க்கும். அதைப் போலவே பொருளாதாரத்தின் கையை, காலைக் கட்டிப் போட்டிருக்கிறபோது, அதிலிருந்து தப்பித்துக்கொள்ள இந்த மாநில அரசு எந்த வகையிலே முயற்சி செய்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டு 680 கோடி ரூபாய் என்று பட்ஜெட்டில் வரவுக் கணக்குப் போட்டார்கள். இந்த ஆண்டு 850 கோடி ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். 170 கோடி ரூபாய் எப்படி அதிகமாக வந்தது? மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கூட கூறினார்கள், "7-வது Finance Commission 100 கோடி ரூபாயைக் கொடுத்ததால்தான் சுலபமாக இருந்தது" என்று கூறினார்கள்.

ஏழாவது பைனான்ஸ் கமிஷன் என்ன Background- -ல் பணத்தைப் பகிர்ந்து கொடுத்தார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். மத்தியிலே இந்த ஆட்சி ஏற்பட்டபோது மாநில சுயாட்சி வேண்டும் என்றும், மாநிலங்களுக்கு அதிகப் பொருளாதார வசதிகள் வேண்டும் என்றும் கோரிக்கைகள் இந்த நாட்டு மக்கள் முன்னால் வைக்கப்பட்டன. பத்து வருடங்களுக்கு முன்பு மாதிரி மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே கட்சி ஆட்சி செய்கிற நிலை இப்போது இல்லை. மாநிலங்களில் பல்வேறு கட்சிகள் ஆட்சி புரிகிற நிலைமை ஏற்படுகிறபோது, பல மாநிலங்கள் சேர்ந்து கொண்டு மத்தியிலே உள்ள பொருளாதாரத்தைச் சரியான முறையில் பங்கீடு செய்து கொடுக்க வேண்டுமென்று கோரும் அரசியல் நிலைமை இந்தியாவில் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். Objective situation -ல் அரசியலில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசின் Domination -ல் உள்ள மாநில அரசுகள் மத்திய ஆட்சியை ஏதாவது கேட்டால், மத்தியில் உள்ள ஆட்சி மாநில ஆட்சிகளை மண்டையில் தட்ட முடியாத அளவுக்கு நிலைமையில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. பல மாநிலங்களின் நிர்ப்பந்தங்களின் காரணமாக அதன் பின்னணியில் அதிக நிதி வசதிகள் தரப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு சில மாநில அரசுகள் அதிக நிதி வேண்டும் என்று வற்புறுத்தும்போது, முக்கியமான ஒரு பின்னணி இருக்கிறது என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன். வெஸ்ட் பெங்கால் கவர்ன்மெண்ட், அதிக அளவு நிதியை மாநிலங்களுக்கு ஒதுக்க வேண்டுமா, வேண்டாமா என்ற கேள்வியை எழுப்பி, மத்திய அரசை அதற்குப் பதில் சொல்ல வைத்து, நாடு முழுவதும் ஒரு டைலாக்கை உண்டாக்கி, அந்தப் பின்னணியில்தான், ஏழாவது பைனான்ஸ் கமிஷன் வருகிறபோது, அதிகமான நிவாரணங்களைக் கொடுக்க



1979 மார்ச் 20] [திரு. ஆ. நல்லசிவன்]

வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாக்கியிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏழாவது பைனான்ஸ் கமிஷன் இன்னும் பல விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறது. கார்ப்பரேட் டேக்சில் மாநிலங்களுக்குச் சேர வேண்டிய ஷேர், எக்சைஸ் டியூட்டியில் மாநிலங்களுக்குச் சேரவேண்டிய ஷேர், இவற்றை அதிகப்படுத்த வேண்டுமென்றும், இரயில் பாசஞ்சர் டாக்சுக்குப் பதில், காம்பன்சேஷனை அதிகப்படுத்த வேண்டுமென்றும், இன்கம்டேக்ஸ் ஷேரை அதிகப்படுத்த வேண்டுமென்றும், இவைகள் எல்லாம் தீர்க்கப்பட வேண்டிய விஷயங்கள் என்றும் ஏழாவது பைனான்ஸ் கமிஷன் சொல்லியிருக்கிறது. ஆகவே மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்ற பிரச்சினை இன்னும் முடிவு பெறவில்லை. ஏழாவது பைனான்ஸ் கமிஷன் 1979-80 ஆம் ஆண்டுக்கு மட்டும்தான் என்பதில்லை. வருகிற ஆண்டுகளுக்கு, மாநில அரசுகளுடைய பினான்ஷியல் பொசிஷனை இம்ப்ரூவ் பண்ண ஒதுக்கப்பட வேண்டியவைகளுக்காக இன்னும் பொறுப்பு வகிக்க வேண்டியிருக்கிறது.

இன்னொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசிடம் குழைவாகப் பேசிப் பேசி வாங்க முடியாது என்பதைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். சென்ட்ரல் கவர்ன்மென்டைப் பொறுத்த வரையில், ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது எப்படி மின்சாரத் துறையிலே போட்டிருக்கக் கூடிய சர்ச்சார்ஜை 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து நம்முடைய மாநிலத்துக்கே கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். கொடுக்கின்ற பணம் எல்லாம் அவ்வளவு சுலபமாக

(பிற்பகல் 5-30)

மத்திய அரசு மாநில அரசுகளுக்குக் கொடுத்துவிடக்கூடியதாக இல்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதை நாம் கவனித்தாக வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். உண்மையில் மத்திய அரசு ஒரு மானோபலி அரசாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது. மத்தியிலே அதிகாரங்கள், நிதி ஆதாரங்கள் எல்லாம் பெருத்த அளவில் குவிந்துகிடக்கின்றன. அந்த அதிகமான அதிகாரங்களை மத்திய அரசு விட்டுக்கொடுக்கப் போவதாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். மாநில அரசுகளுக்கு இந்த மாதிரியான அதிகாரங்களை, நிதி ஆதாரங்களை அதிகப்படுத்த வேண்டும் என்று பேசுகின்றபோது, இந்தமாதிரி டைலாக்குகள் நாட்டிலே நடைபெறக் கூடாது என்பதைத்தான் மத்திய அரசு விரும்பிக்கொண்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், திரு. ஜோதி பாசு, திரு. அசோக் மித்ரா அவர்கள் எல்லாம் மாநில அரசுகளின் முதலமைச்சர்கள்

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 மார்ச் 20

மகாநாடு ஒன்றைக் கூட்ட முயற்சி எடுத்தபோது, மத்திய அரசு அதை விரும்பவில்லை. மாநிலங்கள் அதிக அதிகாரம், நிதி ஆதாரங்கள் வேண்டும் என்பதற்காக கூடிப் பேசுவதை மத்திய அரசு விரும்பவில்லை. மாநில முதலமைச்சர்கள் பின்வாங்கிப்போனால், இந்த விஷயத்தைப் பொறுத்த அளவில், மத்திய அரசு ஒன்றையும் சுலபமாக ஒத்துக் கொள்ளப்போவதில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டிலே ஏற்கெனவே மாநில சுயாட்சிபற்றிக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இந்தியினுடைய ஆதிக்கம் கூடாது என்ற கோரிக்கையும் இருக்கிறது. மாநில சுயாட்சிக் கோரிக்கையும் இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் அதனுடைய கடமைகளைப் பற்றி அதன் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். தமிழகத்தில் அந்த இயக்கம் இரண்டாகப் பிரிந்து, திராவிட முன்னேற்றக் கழகம், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று இருக்கின்றன. அப்படிப் பிரிந்திருந்தாலும், இரண்டு இயக்கங்களும் அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பதிலும், அதிக நிதி ஆதாரங்கள் வேண்டுமென்பதிலும் ஒத்த கருத்துக்கள் உடையவைகளாகத்தான் இருக்கிறார்கள். என்னைப் பொறுத்த அளவிலே, அந்த இரண்டு இயக்கங்களுக்கும் மிக முக்கியமான கடமைகளாக அவைகள் இருக்கின்றன. இன்றைக்கு மத்திய அரசுக்கு எதிராக மாநிலங்கள் தங்களுக்கு நிதியாதாரங்கள் அதிகம் வேண்டும் என்ற பிரச்சினையைக் கிளப்பியிருக்கின்றபோது, இந்தப் பிரச்சினைகளுக்கு தமிழகத்தில் முன்னோடியாக இருந்த கட்சி இன்றையதினம் இரண்டாகப் பிரிந்து, ஒருவரோடொருவர் சண்டையாக இருக்கின்றதே தவிர, இந்தக் கொள்கைகளின் அடிப்படையிலே சேர்ந்து போகவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம், நிதியாதாரம் வேண்டுமென்றால், மத்திய அரசு அது இந்திரா காங்கிரஸ் கட்சி ஆட்சியாக இருந்தாலும் சரி, ஜனதா கட்சி ஆட்சியாக இருந்தாலும் சரி, அந்தக் கருத்துக்களை எதிர்க்கும் என்பதைத்தான் நான் இங்கு அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறேன். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கூடாது, நிதி ஆதாரங்கள் கூடாது என்றுதான் மத்தியில் அவர்கள் சொல்வார்கள். இந்தப் பிரச்சினைகளை அவர்கள் சுலபமாக ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தேசிய ஒருமைப்பாடுபற்றி கருத்து என்ன என்று கேட்டுக்கொள்கிறேன். அவருடைய கட்சிக்கு உடன்பாடான கொள்கை என்ன? மாநிலக் கட்சி கூடவே சேர்ந்து எதிர்ப்பார்களா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.



1979 மார்ச் 20]

**திரு. ஆ. நல்லசிவன்:** தேசிய ஒருமைப்பாட்டிலே எனக்கும் நம்பிக்கையுண்டு. தேசிய ஒருமைப்பாடு என்பது மத்திய அரசின் இரும்புக் கட்டுப்பாட்டுடன் ஒத்துப் போவது என்றுதான் நம்புகிறேன். நான் கூற விரும்புவது, இன்று தமிழகத்தில் உள்ள இரண்டு கட்சிகளுக்கும் சொல்வது, இந்தக் கொள்கைகளை, மாநில சுயாட்சி, அதிக நிதி ஆதாரம் என்பவைகளை தேசிய அரசியல் அஜெண்டாவில் மக்கள் போட்டுப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இந்த மாதிரியான மூலாதாரமான பிரச்சினைகளை மறந்துவிட்டு, உங்களுக்குள்ளேயே' சண்டை போட்டுக்கொண்டிருக்கிறீர்கள். அதை விட்டுவிட்டு, முக்கியமான இந்தப் பிரச்சினையில், மத்திய அரசை எதிர்த்துப் போராடுகின்ற கட்சி என்ற முறையிலே, இரண்டு பேர்களுக்கும் அது ஒரு குறிக்கோளாக இருப்பதால், அந்த அடிப்படையிலாவது இன்றைக்கு நீங்கள் ஒன்றுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட நிலைமைகளிலே, இந்த நாடு பூராவுக்கும் இன்றைக்கு மத்தியிலிருந்து நிதி ஆதாரங்கள் எப்படி கிடைக்கும்? இந்த மாதிரி நடந்து கொண்டிருந்தால், என்ன பலன்? மாநிலங்களுக்கு ஏன் நிதி ஆதாரங்கள் வேண்டும் என்று நாடு பூராவும் வாதப் பிரதிவாதங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அது மட்டும் போதாது. மாநில அரசுகள் தங்கள் நடவடிக்கைகள், நடைமுறைகளின் மூலம் மக்களே மாநிலங்களுக்கு அதிக நிதி ஆதாரங்கள் தேவை என்பதை ஒத்துக்கொள்ளக்கூடிய அளவில் செய்ய வேண்டும். உங்களுடைய பட்ஜெட்டில் விசேஷமாக நீங்கள் ஒன்றும் செய்யவில்லை என்பதுதான் நான் கூற விரும்புவது. குறிப்பாக இரண்டு மூன்று விஷயங்களை மட்டும் எடுத்துக் கொண்டு அதுபற்றி என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வேலை வாய்ப்புப் பிரச்சினை பற்றிச் சொல்ல விரும்புகிறேன். 'ரூரல் எம்ப்ளாய்மெண்ட் கேரண்டி ஸ்கீம்' என்று போட்டிருக்கிறார்கள். இதை நான் வரவேற்கிறேன். நீங்கள் அவர்களுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப் போகிறீர்கள், எவ்வளவு தானியம் கொடுக்கப்போகிறீர்கள் என்பது மட்டுமல்ல பிரச்சினை. அதை நீங்கள் ஒரு கொள்கையாகச் சொல்லியிருக்கிறீர்கள். வேலையில்லாத ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாயோ அல்லது அதற்கு இணையான அரிசியோ கோதுமையோ வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இதுவரையில் வேலையில்லாதவர்களுக்கு அரிசி ஏன் அரசு கொடுக்க வேண்டும் என்ற கேள்வியைக்கூட கேட்டுக்கொண்டிருந்தனர். வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுப்பது என்பது அரசினுடைய கடமை. திறமையிருந்தால் விவேகம் இருந்தால், வேலை தேடிக்கொள்ளலாமென்பதை மக்களில் சிலர் தெரிந்துகொண்டிருக்கிறார்கள் Influence செய்து

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

வேலைபெற முயற்சிக்கலாம். அப்படி எல்லோருக்கும் வேலை கிடைக்காது. நான் சொல்வது அவர்களுடைய வல்லமையைப் பயன்படுத்திக்கொண்டு, அறிவையும் பயன்படுத்திக்கொண்டு, இந்த நாட்டினுடைய உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அதற்கு வேண்டிய கணிசமான ஏற்பாடுகளை அரசுதான் மேற்கொள்ள வேண்டும். இந்த நாட்டிலுள்ள வாலிபர்கள் எல்லாம் கேட்பது, வேலை செய்வது எங்கள் உரிமை, அடிப்படை உரிமை; அந்த வேலையைக் கொடுப்பது அரசினுடைய கடமை என்பது. எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட, தமிழ் நாட்டில் சில மாதங்களுக்கு முன்பு கன்னியாகுமரி, கோயம்புத்தூர் மாவட்டங்களிலிருந்து சைக்கிளில் யாத்திரையாக வந்தார்கள். வேலை கொடுங்கள் அல்லது ஏதாவது நிவாரணம் கொடுங்கள் என்று மனுவை தமிழக அரசிடம் கொடுத்துவிட்டுப் போனார்கள். நாடு முழுவதிலும் இந்தப் பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். இந்தத் திட்டத்தை நான் ஆதரிக்கிறேன். வேலையில்லாதவர்களுக்கு நிவாரணம் கொடுப்பது என்பது சோம்பேறித்தனத்தை வளர்ப்பதாக ஆகும் என்று இந்த நாட்டுப் பிரதமரே சொல்லியிருக்கிறார். நான் கேட்கிறேன். இந்தியன் கான்ஸ்டிடியூசனில் 'ரைட் டு ஒர்க்' என்பதை டைரக்டிவ் பிரின்சிபளில் குறிப்பிட்டுள்ளார்கள். நம் நாட்டினுடைய அடிப்படைக் கொள்கையாக அது இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். நம் நாட்டிலே எல்லோருக்கும் வேலை கொடுக்க வேண்டும். அப்படி எல்லோருக்கும் வேலை கொடுக்கின்ற, அவர்கள் வேலை பெறுகின்ற உரிமையை நம் நாட்டு மக்களின் அடிப்படை உரிமையாக மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 'ரைட் டு ஒர்க்' என்ற கொள்கை ஒரு பண்டமென்டல் ரைட்டாகவே வர வேண்டும் என்று நாடு பூராவும் மக்கள் கூக்குரல் கொடுக்கும் நிலைமையில்தான் இருக்கிறார்கள். அந்த மாதிரி நிலைமைகள் ஏற்பட்டதன் காரணமாகத்தான், இன்றையதினம் மேற்கு வங்க அரசு ஒரு ஏற்பாடு செய்திருக்கிறது. அதைப்பற்றிப் பிறகு சொல்கிறேன். நான் சொல்ல விரும்புவது என்ன? இந்த மாதிரியான சூழ்நிலையில் இந்தியா பூராவிற்கும் உள்ள வேலையற்றோர்க்கு வேலை கொடுப்பது அல்லது நிவாரணம் கொடுப்பது என்ற கருத்தில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்காது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதற்காக அரசியல் சாசனத்திலே, ஒரு முக்கியமான திருத்தத்தைக் கொண்டு வருவது பற்றி வற்புறுத்தும் நிலைகூட இந்த நாட்டிலே உருவாகியிருக்கிறது. அந்தச் சூழ்நிலைக்கு ஒப்ப நீங்களும் இந்தத் திட்டத்தைப் போட்டிருக்கிறீர்கள் என்பதை நானும் புரிந்துகொண்டிருக்கிறேன். நீங்கள் அதையே ஒரு





பரிசோதனையாக வைத்து ஆராய்ந்தால்தான், அதிலுள்ள சிக்கல்கள் எல்லாம் தெரிய முடியும். உங்களுடைய தீர்மானத்திலே பலன் இருக்கிறதா என்பதைப் பார்க்க முடியும். இதில் நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-40)

எத்தனை பேர்களுக்கு அப்படிப்பட்ட வேலை கொடுக்கப்போகிறோம் என்பது தெரியவில்லை. பதினைந்து வயதிற்கு மேற்பட்ட அனைவரும் ரிஜிஸ்டர் செய்யப்படுவார்களா ரிஜிஸ்டர் செய்ய ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா? பொதுவாக, திட்டத்தைச் சொல்லி இருக்கிறார்கள். இந்த நிலையில், எல்லோரும் வருவார்கள். ஏற்கனவே Partially employed என்ற முறையில் சிலர் இருக்கிறார்கள். அரசு சார்பில், 45 லட்சம் Agriculture Labourers இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்களுக்கு எட்டு மாதங்கள்தான் வேலை இருக்கிறது, 4 மாதங்களுக்கு வேலை இல்லை என்று அரசே கூறுகிறது. அவர்களெல்லாம் ரிஜிஸ்டர் செய்யப்படுவார்களா? அல்லது எந்தவிதமான வேலையும் இல்லாதவர்கள்தான் Fully unemployed ரிஜிஸ்டர் செய்யப்படுவார்களா? இது தெளிவாகச் சொல்லப்படவில்லை. எப்படி அவர்களை ரிஜிஸ்டர் செய்யப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வயோதிகர்களுக்குப் பென்ஷன் கொடுக்கும் திட்டம் வந்தது. ஏற்கெனவே யார் யாருக்குக் கொடுக்கிறார்களோ அவர்களைத் தவிர, வேறு யாருக்கும் கொடுப்பதில்லை. பென்ஷன் வேண்டுமென்று பலர் வருகிறார்கள். அவர்கள் தாசில்தாரிடம் எழுதிக் கேட்டோமென்று சொல்கிறார்கள். தாசில்தார், எங்களுக்குப் ப்ரொவிஷன் இல்லை என்று சொல்லுகிறார். அதனால் அது வெறும் பிரச்சார விஷயமாகிவிட்டது. வயது வந்தவர்களுக்குப் பென்ஷன் கொடுக்கிறோமென்பது பிரச்சாரத்திற்குப் பயன்படுவதாகத்தான் இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: பல உறுப்பினர்கள் பேச வேண்டியிருப்பதால், விரைவாக முடித்துக்கொள்ளுமாறு உறுப்பினரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே 30 நிமிட நேரம் பேசியாகிவிட்டது.

திரு. ஆ. நல்லசிவன்: ஜில்லாவுக்குள் வேலை தரப்படுமென்று சொல்லுகிறார்கள். ஜில்லாவிலே என்று சொல்லும்போது, ஒரு இடத்தில் ரெக்ரூட் செய்தால், மற்ற இடங்களுக்கு வேலைக்குப் போக போக்குவரத்துச் செலவு கொடுக்கப்படுமா? எங்கள் ஊரில் ஆள் இருக்கும்போது, நீ ஏன் வந்தாய் என்று அவர்கள் கேட்டால் என்ன செய்வது? எனவே 'டிஸ்டிரிக்ட்' என்று ஏன் போட்டீர்கள்? போக்குவரத்துச் செலவு யார் கொடுப்பார்கள்? இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. மூன்று ரூபாய்

சம்பளம், கொஞ்சம் அரிசி கொடுக்கப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். அரிசி எவ்வளவு என்று சொல்லவில்லை. தமிழ் நாட்டிலே குறைந்தபட்ச விவசாயச் சம்பளம் 5 ரூபாயாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். வேலை இல்லாததால் நிவாரணம் கொடுக்கிறோம். அங்கேகூட Turn-over -ஐப் பொறுத்து சம்பளம் என்று சொல்லுகிறார்கள். காண்ட்ராக்டர்கள் 3 ரூபாய்க்கு இவ்வளவு Turn over என்று தீர்மானம் பண்ணி, அதையும்கூட கொடுக்க மாட்டார்கள். Minimum wages Act படி 5 ரூபாய் கொடுக்க வேண்டும். இப்போது 3 ரூபாய் என்று சொல்லுகிறார்கள். எவ்வளவு அரிசி, எவ்வளவு கோதுமை கொடுக்கப்படுமென்பதைப்பற்றிச் சொல்லவில்லை. இதை டர்ன்-ஓவருடன் இணைத்திருக்கிறார்கள். டர்ன்-ஓவர் என்று போட்டுவிட்டதால், காண்ட்ராக்டர்கள் மூன்று ரூபாய்க்கும் குறைவாகத்தான் கொடுப்பார்கள். மூன்று ரூபாய் அவர்களுக்குக் கிடைக்காது. எனவே காண்ட்ராக்டர்கள் நினைப்பதைப்போல் செய்வதாக இருக்கும். இது ஒரு பிரச்சினை. வேலையில்லாத நாட்களுக்கு ஒரு ரூபாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு ரூபாய் என்றால், அதை வைத்துக்கொண்டு இரண்டு வேளைகள் கஞ்சிகூடக் குடிக்க முடியாது. அரை கிலோ அரிசிதான் அதைக் கொண்டு வாங்க முடியும். அரசு தன்னுடைய ஸ்கீமில் தெளிவாக இல்லை.

(துணைத் தலைவர் அவர்கள் மணி அடித்தார்)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் அவையிலே இருக்கிறார்கள். உறுப்பினர் கூறிய கருத்திற்கு அவர்கள் விளக்கம் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். எனவே அடுத்த பிரச்சினையை உறுப்பினர் அவர்கள் சொல்லலாம்.

திரு. ஆ. நல்லசிவன்: Food for work programme என்று மத்திய அரசிலே வைத்திருக்கிறார்கள். இரண்டு கிலோ அரிசி அல்லது இரண்டு கிலோ கோதுமை, 1 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று அந்தத் திட்டத்திலே சொல்லப்பட்டு, அதை மேற்கு வங்கத்தில் செயல்படுத்துகிறார்கள். வருஷம் பூராவும் வேலை இல்லாதவனுக்கும், தினசரி இரண்டு கிலோ கோதுமை அல்லது இரண்டு கிலோ அரிசி, ஒரு ரூபாய் கிடைக்கிறது. அக்ரிகல்சர் லேபருக்கு ரூபாய் 8.10 மினிமம் வேஜஸ் தர வேண்டுமென்று தீர்மானம் பண்ணியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, அந்த வேலைக்கு ரூபாய் 8.10 கொடுத்தால் தான் அவர்கள் வருவார்கள், இல்லையென்றால் அரசாங்கம் கொடுக்கும் வேலை இருக்கிறதென்று சொல்லிக்கொள்ள, இந்தத் திட்டத்தின் மூலம் அவர்களுக்கு, bargaining power கிடைக்கிறது. அந்த ஸ்கீமை ஏன் நமது மாநிலத்தில் கொண்டு வரக்கூடாது?



Urban unemployed பற்றி நிதிநிலை அறிக்கையிலே ஒன்றுமே சொல்லவில்லை. ஏன் அவர்கள்மேல் அவ்வளவு கோபம்? மேற்கு வங்கத்தில் 1,50,000 பேர்களுக்கு எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்து 5 வருடங்களானவர்களுக்கு 3 வருஷங்களுக்குக் கொடுக்கிறார்கள். 9 கோடி ரூபாய் செலவு செய்கிறார்கள், ஆண்டொன்றுக்கு. நீங்கள் சர்ப்ளஸ் பட்ஜெட் போடுகிறீர்கள். அதிலே என்ன sanctity இருக்கிறது? ரிசர்வ் பாங்கில் கடன் வாங்குங்கள். என்ன கெட்டுவிட்டது? விவசாயிகள் கடன் வாங்குகிறார்கள். பிறகு 'write-off' செய்யுங்கள் என்று கிளர்ச்சி பண்ணுகிறார்கள். நீங்களும் கடன் வாங்குங்கள். மஹாராஷ்டிர மாநிலத்தில் deficit பட்ஜெட் போட்டிருக்கிறார்கள். நமது மாநிலத்திலே surplus பட்ஜெட் போட்டிருப்பதால் என்ன Sanctity இருக்கிறது? நான் என்ன சொல்கிறேன் என்றால், மேற்கு வங்கத்திலும், மஹாராஷ்டிர மாநிலத்திலும் கொடுப்பதுபோல், urban unemployed-க்கும் நிவாரணம் கொடுக்க வேண்டுமென்பதுதான். எல்லோருக்கும் கொடுக்க முடியாது. அன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்போது, மேற்கு வங்கத்தில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற பயப்படுகிறார்கள் என்று சொன்னார். அவர்கள் பயப்படவில்லை. மேற்கு வங்கத்தின் நிதியமைச்சர், திரு. அசோக் மித்ரா அவர்கள் மத்திய அரசின் நிதித்துறை ஆலோசகராக இருந்தவர் என்பதை ஞாபக மூட்டுகிறேன். திரு. அசோக் மித்ரா அவர்கள் சொன்னதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். "பலர் படித்திருந்தும், 1½ லட்சம் பேருக்குத்தான் நிவாரணம் கொடுத்திருக்கிறோம். பாக்கி பேர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்றால், மத்திய அரசிடமிருந்து நிதி வர வேண்டும். அதற்கு ஆரம்ப கட்டமாகத்தான் 1½ லட்சம் பேருக்குத் தருகிறோம்" என்று சொன்னார்கள். அங்கே மந்திரிகள் பிரச்சாரம் செய்கிறார்கள். மாநில அரசுக்கு அதிகாரமில்லை, மத்திய அரசு தான் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசின் கொள்கைக்கு எதிராக பிரச்சாரம் செய்கிறார்கள். "எங்களால் அதிகம் செய்ய முடியவில்லை, இதற்கு மேல் செய்ய முடியவில்லை, மாநிலத்திற்கு அதிக அதிகாரம் தர வேண்டும், அதிக நிதியை ஒதுக்க வேண்டும்" என்று அவர்கள் மக்களிடத்திலே பிரச்சாரம் செய்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் அரசு ஏன் அப்படிச் செய்யக்கூடாது? மத்திய அரசிடம் குழைந்து பேசி வாங்க முடியாது. மத்திய அரசு, கேட்டவுடன் கொடுக்காது. Concrete economic hard facts இருக்கின்றன. மானாபலிஸ்ட்ஸ் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அவர்கள் மாநிலங்களுக்குக் கொடுக்க மாட்டார்கள். மாநில மக்களின் உதவியோடு, நிர்பந்தப்படுத்தினாலொழிய, முடியாது. நான் என்ன கேட்கிறேன் என்றால்,

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 மார்ச் 20

மேற்கு வங்க அரசு செய்வது போல் நீங்களும் ஏன் செய்யக்கூடாது என்பது தான். அவர்கள் மட்டும் பேசும்போது, நீங்கள் ஏன் பேசக்கூடாது? இப்படிப் பட்ட விஷயங்களில் மக்களை 'எஜுகேட்' பண்ணாமல் எப்படி மத்திய அரசைக் கேட்க முடியும்? மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் வேறுபாடு இருக்கிறது, இதிலே எது நியாயம் என்று சொல்லுங்கள் என்று மக்களிடம் கேட்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: பல உறுப்பினர்கள் பேச வேண்டும். எனவே சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. ஆ. நல்லசிவன்: மாநில மக்களிடம் சொன்னால்தான், இது குறித்துப் பிரச்சாரம் செய்தால்தான், அரசு அடுத்த 'ஸ்டெப்' எடுக்க முடியும். இல்லா விட்டால், மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது. பொருளாதாரத் தேக்கத்தின் காரணமாக வாழ்க்கை பாதிக்கப்படும். மக்கள் மீண்டும் போராடுவார்கள். அது உங்களுக்கு எதிராக என்று நினைத்தால், தப்பு. அவர்கள், தங்கள் வாழ்க்கைக்காகப் போராடுகிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் பேசும்போது, ஒன்றைச் சொன்னார்கள். மது அருந்துபவர்கள் பிரச்சாரம் பண்ணுவதால் மட்டும் மது குடிக்காமல் இருக்க மாட்டார்கள், ஆகவே போலீசுக்கு அதிக அதிகாரம் கொடுத்து, பயமுறுத்தல் மூலமாகத்தான் அவர்களைக் கட்டுப் படுத்த முடியுமென்று சொன்னார்கள். குடிக்கிறவர்களுக்கு எதிராக மட்டும் தான் பயமுறுத்தலைப் பயன்படுத்தப் போகிறீர்களா? அல்லது உங்கள் கொள்கைகளை எதிர்க்கிறவர்கள் அனைவரையும் அச்சுறுத்தப் போகிறீர்களா? மாநில அரசுக்கு அதிக அதிகாரம் கிடையாது. தெரியும். மத்திய அரசின் நிதியை வாங்கித்தான் செய்ய வேண்டும். அதற்காக மாநில மக்களை 'எஜுகேட்' பண்ண மாட்டீர்களா? மத்திய அரசு தர மாட்டேன் என்கிறது என்று சொல்லி, நிதி தர யார் மறுக்கிறார்களோ அவர்களுக்கு எதிராக மக்களைத் திருப்ப மாட்டேன் என்று சொல்கிறீர்களே? ஜனங்கள் கோபம் உங்கள்மேல்தான் வரும். அதைத் தடுக்க என்ன வழி? போலீசுக்கு அதிகாரம் கொடுப்பதுதான் வழியா? புலவர் புலமைப்பித்தன் அவர்கள் பேசும்போது ஒன்று சொன்னார்கள். எமர்ஜன்சி காலத்தில் நாடு அமைதி யாக இருந்தது, அந்த முறையில் நாடு அமைதியாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். போராட்டங்கள் இருக்கக்கூடாது; அமைதியாக இருக்க வேண்டுமென்றால், எமர்ஜன்சி மீண்டும் வரவேண்டுமா? நீங்கள் அமைதி என்று சொல்கிறீர்கள். உங்கள் சட்டியிலே ஒன்றுமே யில்லை. மத்திய அரசும் தர மாட்டேன் என்று சொல்கிறது.



1979 மார்ச் 20] [திரு. ஆ. நல்லசிவன்]

(பிற்பகல் 5-50)

பிறகு மக்கள் என்ன செய்வார்கள்? போராடத்தான் செய்வார்கள். போராடும் மக்களை, போலீசை வைத்து அடக்க முயற்சிக்கிறீர்கள். ஆகவே உங்களுடைய எகனாமிக் பாலிசிக்கும் போலீஸ் பாலிசிக்கும் சம்பந்தம் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுவிலக்கில் கூட போலீஸ் பாலி சியை அப்படித்தான் கையாண்டிருக்கிறீர்கள். உங்களுடைய நிதி பற்றாக் குறை காரணமாக ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் போன்றவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற முடியவில்லை. நாட்டிலுள்ள பல்வேறு போராட்டங்களை நல்ல அணுகு முறையைப் பயன்படுத்தித் தீர்க்கத் தவறி விட்டீர்கள். மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற உங்களால் முடியவில்லை. உங்களுடைய பட்ஜெட் ஒரு ஏமாற்றமளிக்கும் பட்ஜெட், என்று கூறிக்கொண்டு மேற்கொண்டு என்னைப் பேச மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் அனுமதிக்காததால், இத்துடன் என் பேச்சை முடித்து அமைகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி: துணைத் தலைவரவர்களே, 1979-80 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கை பற்றிய என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முன்னதாக இந்தத் திட்டத்தைத் தயாரித்தளித்த மாண்புக் குரிய நிதியமைச்சர் அவர்களைப் பாராட்டுகின்றேன். தமது மாநிலத்தின் நிதித் தேவைகளை ஈடு செய்வதற்கு, நிதி ஆதாரங்களைக் கொண்டு வரு வதற்கு அவர் எடுத்த முயற்சிகளை என்னால் பாராட்டாமல் இருக்க முடிய வில்லை. அவர்கள் எடுத்த முயற்சியில் பாராட்டத்தக்க அம்சங்கள் பல உண்டு. மத்திய அரசோடு பொருதி நின்று, மற்ற மாநில அமைச்சர்களையும் அல்லது நிதியமைச்சர்களையும் துணைக்கு அழைத்து அதன் மூலமாக நிதிக் குழு மற்றும் தேசிய வளர்ச்சி மன்றம் போன்றவற்றின் மூலம் கணிசமாகப் பெற்றிருக்கின்ற நிதி வரவேற்கத் தக்க அளவில் அமைந்திருக்கிறது. வருகின்ற 4 ஆண்டுகளில் ஏறத்தாழ 150 கோடி ரூபாய்க்கும் அதிகமாக மத்திய நிதிக் குழு மூலம் நம்முடைய பங்கைப் பெறுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருக் கிறார்கள். அதோடு மட்டுமல்ல. இதைப் பெறுவதிலே ஏற்கெனவே இருந்த வழிமுறைகள், காட்கில் ஃபார்முலா, தொடர்பாக ஏற்பட்டிருந்த நிதி ஒதுக்கீடு முறைகளை எல்லாம் தாண்டி, நிதி உதவியைப் பெற்றுத் தந்திருக் கிறார்கள். மாநில சுயாட்சி என்பதல்ல, அதையும் தாண்டி மாநிலங்களுடைய உரிமைகளுக்காகப் போராடியிருக்கிறார்கள். மத்திய அரசோடு மிகக் கடுமையான முறையில் மோதலைத் துவக்கத் தொடங்கி அதன் அடிப்படையில் இதைத் தேடித் தந்திருக்கிறார்கள். எதற்கும் வழிகாட்டியாக தமிழகம் இருக்க முடியும் என்பதற்கு இந்த முயற்சி, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்

[திரு. க. இராமமூர்த்தி] [1979 மார்ச் 20

களுடைய அரிய முயற்சி, எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. அவர்களுடைய அரிய முயற்சிகளை, அரசின் கொள்கைகளை நிறைவேற்ற அவரைச் சார்ந்திருந்து ஆளை செய்கின்ற கட்சி எங்களுடைய கட்சி. நிதியமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் பணியாற்றிய அனுபவமும் இதற்கு துணை புரிந்திருக்கிறது. அத்தோடு மத்திய அரசு மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீட்டைச் செய்கின்றபோது ஒதுக்கீட்டையும் செய்து விட்டு அதில் பெரும் பகுதியை மத்திய அரசுத் திட்டங்கள் என்ற வகையில் மத்திய அரசினுடைய திட்டங்களை மாநிலங்களில் நிறைவேற்றுகின்ற நிலையையும் மாற்றியமைத்து, மாநில அரசுத் திட்டங்களுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்கின்ற முறையில் வழிவகை செய்திருக்கிறார்கள். இந்த முறையை அமுலுக்குக் கொண்டு வர காரணமாக இருந்த மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை உள்ளபடியே பாராட்டுகிறேன். இதிலே அவர்கள் எடுத்த முயற்சியைப் பொறுத்தவரை, தமிழகத்தைப் போலவே வேறு சில மாநிலங்களும் பயனடைந்திருக்கின்றன. வடக்கே பல மாநிலங்கள் இந்தத் திட்டங்களை வாதாடிப் பெறவில்லை. வாதாடி உரிமையோடு இதைக் கேட்டுப் பெறாததன் காரணமாக, சில மாநிலங்களைப் பொறுத்தவரை, அளவுக்கு மேல் பெற்று வந்த நிதி ஒதுக்கீடு நிலையை மாற்றி உண்மையிலே தேவையான மாநிலங்களுக்குக் கொடுப்பதற்கான வழிவகைகளைக் கொண்டு வந்திருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். இதை அவர்கள் பாரத பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களிடம் வாதாடிக் கேட்டுப் பெற்றிருக்கிறார்கள். தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டதோடு மட்டுமல்லாமல், வலிமையான மத்திய ஆட்சி வலிவோடு இருந்தால்தான் மாநிலங்களும் வலிமையாக, வளமையாக, பொலிவாகச் செயல்பட முடியும் என்பதை எடுத்துக்காட்டி, இன்றையதினம் பைனான்ஸ் கமிஷனிலிருந்து கணிசமான பங்கை வாங்கித் தந்திருக்கிறார்கள். தேசிய அபிவிருத்தி மன்றம் இந்த விஷயத்தில் ஆற்றிய பணிக்காக நம்முடைய மாநிலத்தின் சார்பாக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்வதுடன், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் இந்த ஆட்சிக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவர் கொண்டுவந்திருக்கின்ற இந்த நிதியும் சேர்ந்து, நிதி நிலை அறிக்கையை பெரிய அளவிலான ஒரு வரி இல்லாத ஒரு நிதி நிலை அறிக்கையைத் தமிழ் நாட்டிற்குத் தருவதற்குத் துணை நின்றிருக்கின்றன. இதையெல்லாம் அவரால் நல்லபடியாகக் கொண்டுவர முடிந்தது. உண்மை தான். ஆனால் நிதி ஒதுக்கீடு செய்கின்றபோது, நிதி நிலை அறிக்கை தயாரிக்கின்றபோது, ஒரு வட்டத்திற்குள்ளே நின்று அதைத் தயாரிக்க வேண்டிய கட்டாயம் மாண்புமிகு நிதியமைச்சரவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று தான் கருதுகிறேன். அதன் காரணமாக அவர் சில



1979 மார்ச் 20] [திரு. க. இராமமூர்த்தி]

சங்கடங்களுக்கு ஆளாகியிருக்கிறார் என்று கருதுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கும்போதே, அது பளிச்சிட்டுத் தெரிகிறது. அதைத் தயாரிக்கின்ற விதத்திலே கூட அவருக்கே உரிய வல்லமையோடு, சாதுர்யத்தோடு அதில் விதித்திருக்கின்ற வரிகள் வெளியே தெரியாத அளவுக்குப் பூசி, மெருகேற்றி, மறைத்து, திரை மறைவு என்று சொல்லுவார்களே அதே போல் திரை மறைவாகக் காட்டியிருக்கிறார்கள். அதைப் படித்துப் பார்த்தபோது, ஒன்று என் நினைவுக்கு வந்தது. பாண்டியனுடைய அமைச்சரவையிலே நாவுக்கரசர் அமைச்சராக இருந்தார். நம்முடைய அமைச்சரவையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இருப்பது மாதிரி, பாண்டிய மன்னனுடைய அமைச்சரவையிலே நாவுக்கரசர் என்பவர் இருந்தார். அந்த அமைச்சர் எப்படி அந்த சுந்தர பாண்டிய மன்னனுக்காக நரிகளையெல்லாம் பரிகள் ஆக்கினாரோ, அதைப் போல நம்முடைய நிதியமைச்சர் அவர்களும் இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் சில வரிகளை வெளியே தெரியாத அளவுக்கு விதித்திருக்கிறார்கள். அதை வரியாக்கி அதற்கான வழிமுறைகளைச் செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு வார்த்தையையும் அழகாகக் கையாண்டிருக்கிறார்கள். அவர் தயாரித்த வரவு செலவுத் திட்ட விளக்க நூலில் உள்ள ஒன்றிரண்டு வார்த்தைகளை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்பதால் குறிப்பிடுகின்றேன். "நுண் கலைக்கு ஊக்கம் அளிப்பதை விட உணவு உற்பத்திக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்கள். பணம் எப்படி எப்படி எல்லாம் பாழடிக்கப்படுகிறது என்பதை எல்லாம் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். வரவு செலவுத் திட்ட விளக்க நூலில் 5 ஆவது பக்கத்தில் இருக்கிறது. 1979-80 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விளக்க நூலில் இதைக் காணலாம். உணவு உற்பத்திக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியுள்ள வார்த்தை எவ்வளவு அருமையான திட்டம், கொள்கை என்பதோடு மாத்திரமல்ல; இது முன்னேறுகின்ற ஒரு மாநிலத்திற்கு மிக மிகத் தேவை என்பதை நாம் அனைவரும் நன்கு உணர்கின்றோம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய நோக்கத்தை நாமெல்லாம் பாராட்டுகின்றோம். ஆனால் அதே சமயத்தில் நடைமுறையில் எத்தனை இலட்சத்தை உதவாக்கரைத் திட்டங்களுக்காக வாரி இறைத்துக்கொண்டிருக்கிறோம் என்பதையும் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம். கலை அம்சங்களில் நமது பாரம்பரியம் காப்பாற்றப்பட வேண்டுமென்பதற்காக இவ்வளவு செலவிடலாமா என்பதல்ல பிரச்சினை. இன்றைக்கு நாட்டிலே என்ன நிலை இருந்துகொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நாளைக்கு சோறுக்கு என்ன வழி செய்து கொடுக்கப்போகிறோம் என்பது தான் முக்கிய

கொள்கையாக இருக்க வேண்டும். சோத்துப் பிரச்சினையை அரசாங்கம் தீர்க்காதவரை, பாரம்பரியத்தின் புகழைக் காப்பாற்றுவதால் மட்டும் எந்த விதமான நன்மையும் ஏற்படப் போவதில்லை. அது அரசாங்கத்துக்குத் துணை செய்யப்போவதுமில்லை. மாறாக, அந்தக் கலைகளிலுள்ள பாரம்பரியத்தைக் காப்பாற்றாத வகையில் பாரம்பரியமே அழிந்து விடுகின்ற அளவுக்கு சமுதாயம் சீர்கேடுறும். அந்த வகையில் இன்றையதினம் மக்களுடைய வரிப் பணம் இறைத்துச் செலவழிக்கப்படுகின்றது என்பதோடு மாத்திரமல்லாமல், ஒரு அலட்சியப் போக்கு ஆளும் கட்சியிடம் இருப்பதையும் காண்கின்றோம். ஒரு அரசாங்கத்துக்கு அதனுடைய பணத்தைச் செலவழிக்கின்ற உரிமை உண்டா இல்லையா, முடியும் அல்லது முடியாது என்பதல்ல பிரச்சினை. செலவிடுகின்ற பணத்தை எவ்வளவு அலட்சியமாகச் செலவிடுகிறோம் என்பதை தயவுசெய்து எண்ணிப் பாருங்கள். "இராஜ நர்த்தகிகள், ஆடல் பாடல் வல்லுநர்கள், கலை வல்லுநர்கள்" போன்றவர்களுக்கெல்லாம் மாதம் ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபாய், 1000 ரூபாய், 500 ரூபாய், 200 ரூபாய் என்று கொடுத்தால், ஆட்சியிலுள்ளவர்கள் வெளியே போகும்போது, இராஜ மரியாதை தருவார்கள், பராக் பராக் வருகின்றார் இராஜாதி இராஜன் என்று எல்லாம் மரியாதை செய்கின்ற நிலை உண்டாகும் என்ற எண்ணத்தில் கொடுத்திருக்கின்றார்கள். நாம் நம்முடைய பழம் பெருமையை, பாரம்பரியத்தை, கலைகளைக் காப்பாற்ற எவ்வளவு தாராளமாக இருக்கின்றோம் என்பதை எண்ணிப்பார்க்கின்ற அதே நேரத்தில் ஊர் பணத்தை எடுத்து ஊதாரித்தனமாக இறைத்துச் செலவிடுகின்றோம் என்கின்ற நிலை வந்து விடக் கூடாது. ஆனால் அப்படிப்பட்டதொரு நிலையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் அவர்களுக்கு நல்ல எண்ணம் இருந்தும் கூட—கட்டுப்படுத்த முடியவில்லை. அதைத்தான் அவர்கள் வரவு செலவுத் திட்ட விளக்க நூலில் "நுண் கலைக்கு ஊக்கம் அளிப்பதை விட உணவு உற்பத்திக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்" என்று மிகவும் வேதனையோடு கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 6-00)

நிதியமைச்சர் அவர்கள் இரண்டு கோடி ரூபாய் அளவுக்குப் புதிய வரி போட்டிருக்கிறார்கள். தமிழகத்தைப் போன்ற மாநிலத்திற்கு இது ஒன்றும் பெரிய வரிவிதிப்பல்ல. வரிவிதிப்பே இல்லாமல் நிதிநிலை அறிக்கையைத் தருவதையேகூட, நான் வரவேற்பதில்லை. காரணம், பேரறிஞர் அண்ணா அவர்கள் தம்முடைய முதல் நிதிநிலை அறிக்கையை அளித்தபோது கூறிய வாசகங்கள் இன்னும் என் நினைவிலிருக்கின்றன. மிக அழகாக ஆங்கிலத்திலே அவர்கள் அதைக் குறிப்பிட்டார்கள். "We will tap the rich and





par the poor" என்றார்கள். இதுதான் தமது அரசாங்கத்தின் வரிவிதிப்புக் கொள்கை என்று குறிப்பிட்டார்கள். ஏழைகளைத் தட்டிக் கொடுத்து, அவர்களுக்குச் சலுகை அளித்து, பணக்காரர்களிடத்திலிருந்து வரியை வாங்கத் தயங்கமாட்டேன் என்று வெகு தெளிவாக அன்றைக்குக் குறிப்பிட்டார்கள். அவர் தம் முதல் நிதிநிலை அறிக்கையைப் பேரவையில் அளித்தபோது, நானும் அங்கே உறுப்பினராக இருந்தேன். இன்றைய தினமும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வரி போட்டிருக்கிறார்கள். இந்த வரிவிதிப்பின் காரணமாக தப்பித்துக் கொண்டிருக்கிற பெரும் பணக்காரர்களையும், பெரும் ஆலையரசர்களையும் நம்மாலே பார்க்க முடிகிறது. "எங்களையெல்லாம் என்ன செய்திட முடியும்" என்று இந்தச் சமுதாயத்தைப் பார்த்து அவர்கள் எள்ளி நகையாடுவதை நம்மாலே உணர முடிகிறது. இந்த ஆண்டு வரிவிதிப்பைப் பார்த்தால், அப்படிப்பட்டவர்கள் இந்தச் சமுதாயத்தைப் பார்த்து எள்ளி நகையாடுவதை மறுக்க முடியாது. இரண்டு கோடி ரூபாய்க்குப் புதிய வரி போடுகிறோம் என்றால், எதைமீது வரிபோட்டிருக்கிறோம்? தேங்காய்மீதும், கையால் செய்யும் தீப்பெட்டி மீதும் வரியைப் போட்டிருக்கிறோம். மத்திய அரசைப் பொறுத்தவரையில், தீப்பெட்டிமீது போட்ட வரியைக் குறைத்திருக்கிறார்கள். நான் இதைக் குறிப்பிடும்போது, தீப்பெட்டிக்கும் தேங்காய்க்கும் போடுகிற வரி எத்தனை லட்ச ரூபாய்க்கு என்பதல்ல முக்கியம். யாருக்கு வரி விதிக்கப்பட வேண்டுமோ அவர்களுக்கு வரிவிதிப்புச் செய்யத் தவறியிருக்கிறோம் என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே தீப்பெட்டி மீதும், தேங்காய் மீதும் வரி விதித்திருப்பது அவசியம்தானா என்பதை நிதியமைச்சர் அவர்கள் மீண்டுமொரு முறை பரிசீலித்துப் பார்ப்பார்கள் என்று நம்புகிறேன். நான் வரியே போடக்கூடாது என்று சொல்லவில்லை. இன்னும் அதிகமாகக்கூட வரி போடுங்கள். ஆனால் இந்த வரிகளைத் தாங்கக்கூடியவர்கள்மீது போடுங்கள் என்றுதான் சொல்கிறேன். இந்த வரிகள் மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்காக அமையட்டும் என்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாநிலத்தில் வேலை வாய்ப்புத் தரும் வகையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதை நான் உண்மையிலேயே வரவேற்கிறேன். அதைப்பற்றி பலரும் இங்கே பலவிதமான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். வேலைவாய்ப்பில்லாதவர்களுக்கு உதவித் தொகை அளிப்பது பற்றி ஏற்கெனவே பல்முறை இந்த அவையிலே நாம் வற்புறுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். சில மாநிலங்களில் இந்தத் திட்டத்தை ஏற்றுச் செயல்படுத்திக் கொண்டு வருவதையும் பார்க்கிறேன். அந்த வகையில் இந்த வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தையும் நான் வரவேற்கிறேன். ஆனால் இந்தத் திட்டத்

தைச் செயல்படுத்துவதிலே இருக்கிற சங்கடம்—அதைச் சங்கடம் என்றுகூட சொல்ல விரும்பவில்லை—இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் கொஞ்சம் கவனக் குறைவு ஏற்பட்டாலும், அது எப்படிப் போய் முடியும் என்பதையும் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்: அதாவது வேலைவாய்ப்பற்றவர்களுக்குச் சலுகை அளிப்பது அல்லது உதவி அளிப்பது என்பதன் பேரால் மற்றொரு தவறுக்கு வழி வகுத்துவிடக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம், ஒரு மாவட்டத்திற்குள் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் வேலை செய்வதற்கு ஆட்கள் தயாராக இருக்க வேண்டும். எங்கே வேலை செய்தாலும், அவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் அளிக்கப்பட இருக்கிறது. இதன் விளைவாக வேலையற்றவர்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அழைத்துச் செல்வதற்கு எந்த அளவுக்கு பஸ்களையும், லாரிகளையும் இந்த அரசு பயன்படுத்தப் போகிறது என்று தெரியவில்லை. அவர்கள் எந்த அளவுக்கு வேலையை முடிக்கிறார்களோ அந்த அளவுக்குத்தான் ஊதியம் தரப்படப் போகிறது என்ற கருத்தையும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தோன்றுகிறது என்றால், நாளைக்கு இந்தப் பணிகளை அளவிடப்போகிற எஞ்சினியர்கள் என்ன சொல்கிறார்களோ அந்த அளவுக்குத்தான், அவர்களின் கணிப்பின் அடிப்படையில்தான், பணம் தரப்படப் போகிறது. எங்கள் பகுதியில் முன்பெல்லாம் ஒன்றைச் சொல்லுவார்கள். வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்திலே நமது மாநிலத்தில் ஜில்லா போர்டுகளும், தாலுக்கா போர்டுகளும் செயல்பட்டுக் கொண்டிருந்தன. அவர்கள் ரோடுகளைப் போட்டதாகச் சொல்லுவார்கள். அந்த ரோடுகள், பாதைகள் எல்லாம் காகிதத்தில் மட்டும்தான் இருக்குமே தவிர, உண்மையிலேயே இருக்காது. இன்ன ஊரிலிருந்து இன்ன ஊருக்குப் பாதை போட்டோம் என்று சொல்லுவார்கள். அதற்காக மண் அடித்ததாக, கல் அடித்ததாகக் கணக்கிருக்கும். அவைகளை அளந்ததாகக் கணக்கிருக்கும். இப்படி எல்லாம் முடிந்திருக்கும். ஆனால் காகிதத்தில்தான் இவை அவ்வளவும் இருக்குமே தவிர, உண்மையிலேயே அங்கே போய்ப் பார்த்தால், ரோடும் இருக்காது, பாதையும் இருக்காது. அதைப்போல இந்தத் திட்டத்தையும் சில சமூக விரோத சக்திகள் பயன்படுத்திக்கொள்ள, தவறாக உபயோகிக்க வாய்ப்புகள் இருக்கின்றன என்பதால், அரசு இதில் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பணிகளுக்கான கணக்குகளை ஆடிட் செய்வதற்கு அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று அரசாங்கத்தின் சார்பில் சொல்லக்கூடும். ஆனால், பல ஆண்டுகளுக்குப் பிறகுதான் இவற்றின் மீது ஆடிட் நடத்தப்படுகிறது. அதன் காரணமாகப் பல குறைபாடுகளைக் கண்டுபிடிக்க முடியாமல் போய்விடுகிறது. அவ்வாறு குறைகள் கண்டுபிடிக்கப்படும்போது, அதற்குக் காரணமாக இருந்த ஆட்கள்



இல்லாமல் போய்விடுகிறார்கள். இதனால் அவற்றின் முக்கியத்துவம் பாழாகிப் போய்விடுகிறது. இந்த நேரத்தில் ஒரு தகவலையும் இங்கே கூற விரும்புகிறேன். ஒரு குறிப்பிட்ட நபர்—அவர் அரசாங்க அதிகாரிகூட அல்ல—பல லட்சக்கணக்கான ரூபாயை ஒரு திட்டத்தின் பேரால் மோசடி செய்திருக்கிறார். தன்னை **Horticultural College-Honorary Principal** என்று சொல்லிக்கொண்டு, அரசாங்கத்திலேயிருந்து 'செக்' பெறுகிறார். அதற்குப் பிறகு, அந்தச் செக்குகளைத் தமது சொந்தப் பெயரிலேயே வங்கியிலே மாற்றிக்கொள்கிறார். இப்படி பல லட்சக்கணக்கான ரூபாயைத் தவறாக சொந்தத்திற்குப் பயன்படுத்திய பிறகும், பல ஆண்டுகளாகியும் இன்றையதினம் வரை அவர்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, அவருக்கு இருக்கிற செல்வாக்கினால் வந்து போன அரசாங்கத்தையும், வந்திருக்கிற ஆட்சியையும் தம்மீது நடவடிக்கை எடுக்காமல் தடை செய்து வைத்திருக்க முடிகிறது என்பதைப் பார்க்கிறபோது, இதைப் போன்ற 'இந்திரஜித்தர்கள்' இனி எத்தனை பேர் வருவார்களோ என்று அச்சப்பட வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் இடம் கொடுக்காத வகையில் இந்தத் திட்டம் செயலாக்கப்பட வேண்டுமென்பது மட்டுமல்ல, இனி எந்தக் காலத்திலும் இதுபோன்ற தவறுகள் நடைபெறாமல் அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்தவரை, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சியைப்பற்றி மிகப் பெருமையோடு இங்கே குறிப்பிட்டார்கள். எந்த அளவுக்கு அதிகமான தொகையை நாம் கல்வித் துறைக்காகச் செலவழிக்கிறோம் என்பதை மட்டுமல்லாமல், எந்த அளவுக்குக் கல்வியின் வளர்ச்சியிலே நாம் அக்கறை காட்டுகிறோம் என்பதையும் அவர்கள் இங்கே விளக்கமாகச் சொன்னார்கள். ஒரு பக்கம் கல்வியின் வளர்ச்சிக்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற அதே நேரத்தில், தமிழ் நாட்டின் கிராமப் பகுதிகளில் வசிக்கிற ஏழை எளிய மக்கள் மத்தியிலே கல்வி வளர்ச்சி குன்றி வருகிறது, குறைந்து வருகிறது என்பதையும் நான் மெத்தப் பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப் புறங்களில் வாழுகிற ஹரிஜனங்களின் மத்தியில், பிற்படுத்தப்பட்டோர் மத்தியில் கல்வி வளர்ச்சி என்பது குறைந்துகொண்டு வருகிறது. அவர்கள் வீட்டுக் குழந்தைகள் சரியாகப் பள்ளிக்கூடத்திற்குப் போவதில்லை. 'Drop outs' அவர்கள் மத்தியிலே மிக அதிகமாக இருக்கிறது. முதல் வகுப்பில் சேர்த்த பிறகு, 2, 3 வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்கள் 4, 5 வகுப்புகளுக்கு வரும்போது, படிப்பைத் தொடருவது இல்லை. 2, 3

[திரு. க. இராமமூர்த்தி] [1979 மார்ச் 20

வகுப்புகளில் படித்துக் கொண்டிருந்த பிள்ளைகள் மேலே தங்கள் கல்வியைத் தொடராமல் இடையில் விட்டுப்போகிற நிலைமை இன்றைக்கு அதிகமாக இருக்கிறது. அவர்களுடைய சதவிகிதம் அதிகமாக உயர்ந்துகொண்டே இருக்கிறது. இதன் காரணமாக ஒரு தற்குறிச் சமுதாயத்தை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். கட்டாயக் கல்வி, இலவச மதிய உணவு என்று பல திட்டங்களைக் கொண்டு வந்த பிறகும், இன்றையதினம் நாட்டில் இருக்கிற நிலை சாதாரண ஏழை எளிய மக்களிடத்திலே, பின்தங்கிய மக்களிடத்திலே, கிராமப்புறத்திலே இருக்கிற மக்களிடத்திலே கல்வி வளர்ச்சி குறைந்து கொண்டிருக்கிறது என்பதுதான். மிக மிக நல்ல திட்டங்களை நாம் அமுல்படுத்துகிறோம். ஆனால் அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலே ஏற்பட்ட கோளாறு காரணமாக படிக்காதவர்களின் எண்ணிக்கை நாட்டில் உயர்ந்து வருகிறது. வெறும் கையெழுத்துப் போடத் தெரிந்தவர்களையும், அ, ஆ என்று கூட்டிப் படிக்கத் தெரிந்தவர்களையும் நாம் படித்தவர்கள் என்ற கணக்கில் சேர்க்க முடியாது. இப்படி Drop outs அதிகமாவதைத் தடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கல்விக்காக நாம் எத்தனை கோடி அதிகமாகச் செலவழிக்கிறோம் என்பது அல்ல பிரச்சினை. அரசாங்கத்தின் புள்ளிவிவரப்படியே பார்த்தாலும், நாட்டில் 'Drop outs' அதிகமாகிக் கொண்டிருக்கிறது. சாதாரணமாகவே புள்ளிவிவரம் என்பது எந்த அளவுக்குத் தவறாக வரும் என்பதை நாம் அறிவோம். "Made up figures" என்ற அளவில் வருவதுதான் புள்ளிவிவரம். எனவே இந்தத் துறையில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், பல நல்ல நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அமைச்சர்கள் விரும்புகிறார்கள். நல்ல திட்டங்களைச் செயலாக்க விரும்புகிறார்கள். ஆனால் முறையாக அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துகிறார்களா என்றால், அது வெறும் ஏமாற்றமாகத்தான் இருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டியவனாக இருக்கிறேன். இந்த அமைச்சரவையில் இருக்கிற அமைச்சர்கள் ஒவ்வொருவரிடமும் தனிப்பட்ட முறையில் மிகுந்த மரியாதை எனக்குண்டு. அவர்களுடைய தனிப்பட்ட திறமையில் எனக்கு நம்பிக்கையுண்டு. அவர்களுடைய திறமையை நானே நேரடியாகக் கண்டிருக்கிறேன், அறிந்திருக்கிறேன். தனித் தனியாகச் செய்ய வேண்டுமென்றால், திறமையாகச் செய்யக்கூடிய வல்லமை பெற்றவர்கள், திறமையாகச் செயல்படக்கூடியவர்கள். ஆனால் அமைச்சரவை என்று வருகிறபோது, என்னைப் பொறுத்தவரையில், திறமைசாலிகள் நிறைந்த திறமையற்ற அமைச்சரவையாகத்தான் இருக்கிறது என்பதை வேதனையோடு குறிப்பிட



1979 மார்ச் 20] [திரு. க. இராமமூர்த்தி]

விரும்புகிறேன். இந்த அரசாங்கத்திலிருந்து பல உத்தரவுகளைப் போடுகிறார்கள். பல திட்டங்களைப் போடுகிறார்கள். ஆனாலும் அவைகளை நிறைவேற்ற வேண்டியவர்கள் அவைகளை நிறைவேற்றுவதில்லை. அப்படி நிறைவேற்றாதவர்களைத் தட்டிக் கேட்க முடிகிறதா இந்த அமைச்சர்களால் என்றால், முடியவில்லை. 2, 3 மாதங்களாக நடைபெற்றிருக்கிற சம்பவங்களைப் பார்க்கும்போது, அவைகள் எவ்வளவு வேதனைக்குரியவைகளாக இருக்கின்றன என்பதை உணர முடியும். கடந்த ஆண்டு அக்டோபர் மாதம்

(பிற்பகல் 6-10)

2 ஆம் தேதியிலிருந்து மிக வல்லமை பெற்ற மதுவிலக்குச் சட்டம் இந்த அரசாங்கத்தின் கரங்களிலே விளையாடிக் கொண்டிருக்கிறது. நாடு கடத்தலாம், கடும் தண்டனை விதிக்கலாம், எப்போது வேண்டுமானாலும் உள்ளே வைக்கலாம்; ஆனால் எத்தனை பேர் நாடு கடத்தப்பட்டார்கள்? எத்தனை பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது? நான்கு ஐந்து மாதங்களாக அவசரச் சட்டம் இருக்கிறதே, எவ்வளவு பேர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்? நான் திட்டவட்டமாகச் சொல்ல முடியும், சென்னையிலே சாராயம் இல்லாத எந்த ஹோட்டல் இருக்கிறது? சென்னையிலே பல அதிகாரிகள் குடிக்கத் தேர்ந்தெடுக்கின்ற இடம் '5 ஸ்டார்' ஹோட்டல்கள்தான். நான் பார்த்திருக்கிறேன். யார் யார் போகிறார்கள், வருகிறார்கள், குடிக்கிறார்கள் என்பதையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். பல இடங்களில் இப்படி நடைபெறுகின்றது என்பதை எண்ணும்போது, இப்போது போடப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டம் யாரைத் தொட்டது என்பதை நம்மால் பார்க்க முடிகிறது. எந்த வீடுகளுக்கு, எந்த ஹோட்டல்களுக்கு இந்தச் சட்டம் வருகிறது, யாரிடம் இந்தச் சட்டம் வருகிறது என்பதைப் பார்க்க வேண்டும். 100 ரூபாய், 200 ரூபாய் என்று கஷ்டப்பட்டு சம்பாதிக்கிறானே, அவனிடத்தில்தான் இந்தச் சட்டம் வருகிறது. அவனிடத்தில் இந்தச் சட்டம் வந்து அவனுக்கு ஓராண்டுக் காலம் சிறைத் தண்டனையும், 3 ஆயிரம் ரூபாய், 5 ஆயிரம் ரூபாய் என்று அபராதமும் கொடுத்து, அதற்குப் பிறகு அவனைச் சிறைக்கு அனுப்பி, அவன் சிறைக்குச் சென்ற பிறகு, அவனுடைய மனைவி மக்களை யார் காப்பது? இவற்றையெல்லாம் பார்க்கும்போது, இந்தச் சட்டம் எந்த அளவுக்கு ஏழைகளுடைய குடும்பங்கள் அழிந்து போவதற்கு, சிதறிப் போவதற்கு, ஒழுக்கக் கேடுகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும்.

அதோடு மட்டுமல்ல, சில உத்தரவுகளை சில அதிகாரிகள் தருகிறார்கள். இங்கே உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இல்லை. அவர்கள் இந்த அவையிலே வாக்குறுதிகள் தந்தார்கள். அந்தந்த சட்டமன்ற உறுப்பி

னர்கள், மேலவை உறுப்பினர்கள் அவர்கள் வாழ்கின்ற பகுதியிலே இருக்கின்ற பஞ்சாயத்து மன்றங்களிலே, நகராட்சி மன்றங்களிலே தானாகவே அங்கத்தினர்களாகின்றார்கள், அங்கு அவர்கள் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் என்று அறிவித்தார்கள். அப்படி உத்தரவுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்றும் சொன்னார்கள். அவ்வாறு அங்குள்ள அதிகாரிகள் செயல்படவில்லை என்றால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சொன்னார்கள். திண்டிவனம் நகராட்சியிலே நான் நகராட்சி எல்லைக்கு உள்ளே இருப்பவன். எனக்கு நகராட்சியினுடைய முனிசிபல் கமிஷனர் ஒரு கடிதம் எழுதுகிறார்.

In paying my hearty congratulations to you for your having become a Member of the Tamil Nadu Legislative Council, I would like to inform you that I consider it necessary to include you as a Member of the Non-Official Committee of the Tindivanam Municipal Council for which I have addressed the Government—I have addressed the Government—for the issue of necessary orders to authorise me to incraese the existing strength of the Advisory Committee. I hope that you may be willing to accept the membership on receipt of orders of the Government for the inclusion.

இதற்கு என்ன பொருள்? அவர் பெரிய மனது வைத்து, இந்த ஆட்சிக்குக் கடிதம் எழுதி, இவரைச் சேர்த்துக்கொள்ளலாமா, ஒரு உறுப்பினரை அதிகமாக வைத்துக்கொள்ளும் அளவுக்கு அனுமதி உண்டா என்று எழுதிக் கேட்டு, பல மாதங்களுக்குப் பிறகு ஒருவேளை பதில் வந்தால், அதற்குப் பிறகு எனக்குக் கடிதம் எழுதி, நான் அங்கத்தினராகச் சேருகிறேன் என்று சொல்வார். இதைக் கொள்கை அளவிலே நீங்கள் ஏன் அறிவிக்க வேண்டும்? நீங்கள் இங்கே அறிவித்த பிறகு நான் ஊருக்குச் செல்லும் போது, எனக்கு இப்படி ஒரு கடிதம் வருகிறது என்றால், என்ன பொருள்? இதிலே எங்கே கோளாறு இருக்கிறது? ஏன் அதிகாரிகளுக்கும் உங்களுக்கும் ஒரு தொடர்பில்லாமல் இருக்கிறது? தொடர்பில்லாமலேயே அந்தத் துறைகள் இயங்கக்கூடிய அளவுக்கு, மனத்திண்மை அவர்களுக்கு எப்படி வருகிறது?

சென்ற முறை பேசுகின்றபோது, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு குறையைச் சொன்னேன். வெள்ள நிவாரண வேலையிலே ஏற்பட்ட ஒரு தவறைச் சுட்டிக்காட்டிச் சொன்னேன். அதிலே ஏற்பட்ட ஒரு ஊழல், அல்லது ஒரு தவறு எந்த அளவுக்குப் பாதித்திருக்கிறது என்பதைப்பற்றிச் சுட்டிக்காட்டிச் சொன்னேன். ஒரு குறிப்பிட்ட கான்ட்ராக்டருக்குக் கொடுக்கக்கூடாது என்று எப்படி பல மாதங்களாகத் தடைப்



படுத்தப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது என்பதை அறிவித்தேன். அமைச்சர் அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியைச் சொல்வேன். உடனடியாக நடவடிக்கை எடுத்தார்கள் என்பதோடு மட்டுமல்ல, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மிகக் கடுமையான முறையிலே இடித்துச் சொல்லியிருக்கின்றார்கள். அதோடு மட்டுமல்ல, அதிலே இடையூறாக இருந்தவர்களை மிகக் கடுமையாக விமர்சித்து சில வார்த்தைகளைக்கூட சொல்லி அனுப்பியிருக்கிறார்கள் என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது. ஆக, அதற்கான எதிரொலியைக் காண முடிகிறது. இத்தனைக்கும் பிறகு இங்கே, இந்த அவையில் இதுபற்றிப் பேசப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதற்குப் பிறகு அந்த வேலையைத் தொடங்க வேண்டும் என்ற கட்டாயம் வருகிறபோது அந்த அதிகாரி அந்தக் கான்ட்ராக்டருக்கு கடிதம் எழுதுகிறார்.

என்னவென்றால், "பார்வை 1-ல் வேலைக்கு உத்தரவு கொடுக்கப்பட்டு, பார்வை 2-ல் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்படி அந்த வேலையைச் செய்து முடிக்க இதுவரை எவ்வித நடவடிக்கையும் முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் மேற்காணும் வேலை வெள்ள நிவாரண பணி சீரமைப்பு வேலையின் கீழ் உடனடியாக செய்து முடிக்கப்பட வேண்டும் என்பதால் இந்த வேலையை ஒரு வாரத்திற்குள் ஆரம்பித்து தகுந்த முன்னேற்றம் காண்பிக்கத் தவறினால், சென்னை கட்டளைக் கொத்து 199/.07, சென்னை கட்டளைக் கொத்து 109.05-ன்படி மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியவும், இப்படிக்கு, எஸ். ரகுபதி, கோட்டப் பொறியாளர்" என்று கடிதம் வருகிறது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இங்கே இதுபற்றிப் பேசப்பட்டு, "அந்த வேலையை அவருக்குக் கொடுக்கவில்லை, அதிகாரிகள் ஓராண்டு காலமாக நடவடிக்கை எடுக்கவில்லை" என்று சொல்லி, மற்றவர்கள் தலையிட்டு இருக்கிறது என்று குற்றம் சாட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் இதில் தலையிட்டு, கடிதம் மூலமாகத் தெரிவித்து, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாக இதிலே தலையிட்டு, உண்மைதான் என்று சொல்லி, முறையான நடவடிக்கைகள் எடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தவறு செய்தார்கள் என்று சொல்லிய பிறகு ஒரு அதிகாரி இப்படி ஒரு கடிதம் எழுதுகிறார் என்று சொன்னால், இந்த ஆட்சியை அவர் மதிக்கிறாரா? அல்லது இந்த ஆட்சிக்கும் அந்த அதிகாரிக்கும் தொடர்பு இருக்கிறதா? இல்லையா? அல்லது எப்படி வேண்டுமானாலும் இந்த ஆட்சியிலே நடக்கலாம் என்ற நிலையிலே அவர் செயல்பட்டுக்கொண்டிருக்கிறாரா என்பது எனக்குத் தெரியவில்லை. இந்த நிலை இருந்தால், எங்கே போய் முடியும்? உங்களுடைய திட்டங்கள் நல்லபடியாக இருக்கலாம், முயற்சிகள் நல்லவைகளாக இருக்கலாம், நீங்கள் எத்தனை கோடி ரூபாய் திரட்டி திட்டங்களைத் தீட்டினாலும், அதில்

உங்களுடைய, அரசினுடைய ஆதிக்கம் இல்லையென்றால், என்ன நடக்கும்? ஒன்று நினைவுக்கு வருகிறது, ஒரு ஆட்சியைப் பொறுத்தவரையில், மூன்று விஷயங்கள் மிக மிகத் தேவையானவை. ஒன்று Grip over the people, மக்கள் மீது ஆட்சிக்கு ஒரு பிடிப்பு இருக்க வேண்டும், ஒரு சக்தி இருக்க வேண்டும். இந்த ஆட்சி அப்படிச் செய்துகொண்டிருக்கிறதா? பெரும்பாலான மக்கள் இந்த ஆட்சியால் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அரை மணி நேரம் பேசியிருக்கிறார்கள். 5-30-க்கு ஆரம்பித்தார்கள். விரைவிலே முடிக்க வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** மக்கள் நம்புகின்ற அளவுக்கு ஆட்சியை நல்லபடி அவர்கள் நடத்திச் செல்ல வேண்டும் "Grip" இருக்க வேண்டும். அதைப் போலவே அரசாங்க அதிகாரிகள் மீதும், அரசு மெஷினரி மீதும் ஒரு பிடிப்பு இருக்க வேண்டும். இந்த அதிகாரிகள் அரசின் திட்டங்களின் அடிப்படையில், கொள்கைகளின் அடிப்படையில் செயல்படுகின்றார்கள் என்கின்ற அளவுக்கு நிலைமைகள் உருவாக வேண்டும்.

அடுத்தபடியாக, எந்த ஒரு கட்சியானாலும், ஆட்சிப் பொறுப்பினை ஏற்று ஆட்சியிலே இருக்கின்ற வரையில், கட்சியின் மீதான பிடிப்பும், அந்தக் கட்சியின் கொள்கைகளை ஏற்று செயல்படுத்தும் நிலையும் இருக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில், மிகவும் வேதனையோடு சொல்கிறேன், இங்கே ஆளுகின்ற பொறுப்பினை ஏற்றிருக்கின்ற அ.இ.அ.தி.மு.க. ஆட்சியைப் பொறுத்தவரையில், எத்தனையோ நிகழ்ச்சிகள் இந்த நாட்டிலே நடந்திருக்கின்றன, அரசாங்க அலுவலர்கள் இந்த ஆட்சிக்குச் சம்பந்தமில்லாமல் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள், அரசாங்க ஊழியர்களுக்கு உள்ளே மோதல் வருகிறது, ஒரு பக்கம் டாக்டர்களுக்கும் போலீசாருக்கும், மற்றொரு பக்கம் வழக்கறிஞர்களுக்கும் போலீசாருக்கும், இப்படியாக நிகழ்ச்சிகள் நடந்து கொண்டே இருக்கின்றன. எந்தத் தவறான நிலை ஏற்பட்டாலும், அதை ஆரம்பத்திலேயே கிள்ளியெறிகின்றோம் என்ற நிலை வர வேண்டும். விழுப்புரம் நிகழ்ச்சியைப் பார்க்கின்றோம். நீங்களும் அறிவீர்கள். அந்த நிகழ்ச்சியை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்திருந்திருக்கலாம். அந்தச் சம்பவம் நிகழ்வதற்கு முன் அந்தப் பிரச்சினை பல காலமாக வளர்ந்து, அதற்குப் பிறகு திடீரென்று பெரும் கலவரம் ஏற்பட்டு, பல பேர் சாவு, வீடுகள் தீக்கிரை, மக்கள் பாதிப்பு என்ற வகையிலே விழுப்புரத்திலே மட்டுமல்ல, பல இடங்களிலேயும் சம்பவங்கள் நடைபெறுகின்றனவென்றால், இதற்கெல்லாம் என்ன காரணம்? இந்த நிகழ்ச்சிகளில் உடனடியாக அரசு அதிகாரிகளை ஈடுபடுத்திச் செயல்படுத்த முடியாத அளவுக்கு அவர்கள் ஒரு lethargic machinery -யாக் இருக்கிறார்கள். Inefficient -பாக



இருக்கிறார்கள். இப்படி இருப்பதனால் ஏற்பட்ட விளைவுகள் என்ன? மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹண்டே அவர்கள் செஞ்சியிலே நடைபெற்ற நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். என்ன நடந்தது என்பதைப்பற்றிச்

(பிற்பகல் 6-20)

சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடத் திறப்பு விழாவில் இந்த வன்முறை நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியாதா? அங்கே மாவட்டக் கலெக்டர் ஒரு உத்தரவைப் போட்டு, இருசாராரும் அந்தப் பள்ளிக்கூடத்தில் நுழைய அதிகாரம் கிடையாது, பஞ்சாயத்து யூனியனுக்குத்தான், அரசுக்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது என்று சொல்லி அந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஏன் முயலவில்லை? அதை விட்டுவிட்டு போலீஸ்காரர்களும், ரெவின்யூ துறையைச் சேர்ந்தவர்களும், கலெக்டரும் அங்கே வேடிக்கை பார்த்துக் கொண்டு, "திறவுங்கள்" என்று சொல்லுகிற நிலை ஏற்பட்டு, அதை ஒருவர் திறக்க, மற்றொருவர் அதைத் தடுக்க, பிறகு நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டமன்ற உறுப்பினரும் ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்ளும் நிலை ஏற்பட்டது எவ்வளவு கேவலமானது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். செஞ்சியிலே இது புதிய நிகழ்ச்சியல்ல. கடந்த இரண்டு ஆண்டுகளாக நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மின்சாரத் துறைத் தொழிலாளி ஒருவரைச் செருப்பால் ஒருவர் அடித்தார். அடித்தவர் சில நாட்கள் வரை கைது செய்யப்படவில்லை. இதில் அரசாங்கம் சரியாகக் கவனம் செலுத்தவில்லை. ஏன் கைது செய்யப்படவில்லை? யாருடைய தலையீட்டினால் என்பதை ஆட்சியிலே இருக்கிறவர்கள்தான் கண்டுபிடிக்க வேண்டும். ஆகவே, மின்சாரத் துறையைச் சேர்ந்தவர்கள் எல்லாம் இரண்டு நாளைக்கு யாருக்குமே மின்சாரம் கொடுக்காமல் வேலைக்குப் போகாமல், நடவடிக்கை எடுக்கப் போகிறீர்களா, இல்லையா என்று சொல்லி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். அதனால் செஞ்சி நகரம் இருள் மூழ்கியிருக்கக் கூடிய நிலை ஏற்பட்டது. அதற்குப் பிறகு தவறிழைத்தவர்கள் மெத்த பாதுகாப்போடு நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். பிறகு ஜாமீனில் வருகிறார்கள். நாட்டிலே நடமாடுகிறார்கள். இப்படி இருந்தால், அரசாங்கத்தின்மீது எப்படி நம்பிக்கை வரும்? அரசாங்கம் இருக்கிறது என்பதையே மறந்து போகிற நிலைதான் இருக்கிறது. அதனாலேதான் சட்ட மீறல்கள் அந்தப் பகுதியில் தொடர்கதையாகிவிட்டன.

இன்னுமொரு நிலை, கட்சியின் மீது பிடிப்பு இருக்க வேண்டும். கவர்ன்மென்ட் மெஷினரி மீது 'கிரிப்' இல்லையென்றாலும், கட்சியின் மீதாவது 'கிரிப்' இருந்தாக வேண்டும். ஆனால், இன்று அதுவுமில்லை. ஒரே

[திரு. க. இராமமூர்த்தி] [1979 மார்ச் 20

ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கோபித்துக் கொள்ளமாட்டார்கள் என்று கருதுகிறேன். எவ்வளவு பெருமனத்தோடு சில காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நினைத்தாலும் கூட, எங்கே அவை அடிபடுகின்றன என்பதைப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை, என்னுடைய பகுதியில் உள்ள வட ஆலப்பாக்கம் கூட்டுறவுச் சங்க திறப்பு விழாவிற்கு வர வேண்டுமென்று அழைத்திருந்தேன். அவர்களும் கண்டிப்பாக வருவதாக இசைவு தெரிவித்தார்கள். நானே நேரிடையாக அவருடைய வீட்டிற்குச் சென்று அழைத்தபோதே, மிகுந்த உரிமையோடு சொன்னேன், "நீங்கள் வருகிறபோது, உங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும், கட்சிப் பொறுப்பிலே இருக்கிறவர்களும்கூட கலந்து கொள்ள வேண்டும்" என்று. நம்முடைய அமைச்சர் வருகிறார் என்றால், அவருடைய கட்சிக்காரர்கள் அதில் இல்லை என்ற நிலை வரக்கூடாது, அந்த உணர்வுகள் வருவது தவறு என்ற முறையில்தான் அப்படி அழைத்தேன். ஜனநாயகத்தில் கட்சிக்காரர்கள் கலந்துகொள்ளுவது என்பது தவிர்க்க முடியாதது என்ற அடிப்படையிலே அவர்களும் வர வேண்டும் என்று அன்றைக்கே நான் சொன்னேன். அமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, குறிப்பிட்டவர்களை அழைக்கிறேன், பேசுகிறேன் என்ற கருத்தையும் தெரிவித்தார்கள். அவர் இசைவு தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், கட்சிக்காரர்கள் வரட்டும், அவர்களையும் கேட்டுவிட்டுச் சொல்லுகிறேன் என்று சொன்னார்கள். கடைசியாக என்ன ஆயிற்று? அதற்கு ஒரு மாதத்திற்குப் பிறகு ஊரிலே தகவல் கிடைக்கிறது. சட்ட மன்ற மேலவையிலே என்னைப்பற்றிப் பேசிவிட்டு, அதற்குப் பிறகு அமைச்சர் நேரிடையாக வந்துவிடுவார் என்று கூறும்போது, இங்கே எப்போது எப்படி அமைச்சர் வருவார் என்ற சவால் விடுகிறார்கள் என்கிற நிலை, கட்சி இயந்திரம் முதலமைச்சர் அவர்கள் எதிர்பார்ப்பதற்கு நேர்மாறாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனக்கே இந்த நிலை, முன்பு தோழமையாக இருந்த எனக்கே இந்த நிலை, மேலும் தோழமையாக வரவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்—அப்படிப்பட்ட எனக்கே இந்த நிலை என்றால், இது எங்கே போய் முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தோழமைக்கு வர வேண்டுமென்று இருக்கிற நிலையிலே மாண்புமிகு உறுப்பினருக்கே இந்த கதி என்றால், உண்மையிலே தோழமை இல்லாவிட்டால், அவர்களுடைய கதி எப்படி இருக்கும் என்பதை இதன் மூலம் தெரிந்துகொள்ளட்டும்.



1979 மார்ச் 20]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரைவாக முடிக்க வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** அடுத்து, எதற்கெடுத்தாலும் புதிய போஸ்டுகளை 'Create' செய்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இருக்கிற பதவிகளை நிரப்புவதில்லை, புதியதாகப் பதவிகளைத் தோற்றுவிக்கவும் தயங்குவதில்லை. இதிலே உள்ள முரண்பாடுகளை எண்ணிப் பார்க்க வேண்டும். மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். மதுவிலக்குச் சட்டத்திற்காக ஒரு I.G. -யைப் போடுகிறோம். அவருக்கு எத்தனை ஆர்டர்லிகள்? அவர் வீட்டுக்குப் பத்துக் காவலர்கள், ஒரு டிரைவர், டைப் செய்ய ஒருவர், பேர்சனல் கிளார்க் ஒருவர், அவர் போகும் போது அவருக்கு முன்னே போக ஒரு மோட்டார் டிரைவர், இப்படி அதிகார வர்க்கத்தை உருவாக்கிக்கொண்டு எப்படி வேலையைப் பரவலாக்குகிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் போனால், டி.எம்.எஸ். பதவி ஏறத்தாழ ஓராண்டுக் காலமாகக் காலியாக இருந்து கொண்டிருக்கிறது. இது எவ்வளவு முக்கியமான பதவி, பொறுப்பு என்பது மட்டுமல்லாமல் எப்படியும் செயல்பட வேண்டிய பொறுப்புள்ள பதவி. இதை Incharge ஆகக் கொடுத்துவிட்டு ஓராண்டுக் காலமாக உறங்கிக் கொண்டிருந்தால், பைல்கள் எப்படி நகரும்? இதனால் பல பைல்கள் முடிவெடுக்கப்படாமல் சுற்றிக் கொண்டிருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படி இருந்தால், இந்த ஆட்சியின் மீது, இந்த நிர்வாகத்தின் மீது யாருக்கு நம்பிக்கை வரும்? ஒரு பக்கம் ஊதாரித்தனமாகச் செலவிட்டுவிட்டு, மறு பக்கம் செய்ய வேண்டிய காரியத்தைக் கூடச் செய்யத் தயங்குகிறோம். இதன் விளைவாக மக்களுக்குச் சந்தேகம் எப்படி வளர்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மருத்துவத் துறையில் உள்ள எம்.டி., எம்.எஸ். படிப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கிற நிலை வருகிறது. அதற்கான குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இதுவரையில் குழுவே தேர்ந்தெடுக்கலாம் என்று இருந்தது. இப்போது அந்தக் குழுவிற்கும் மேலே சுப்பர்வைசராக டி.எம்.ஈ.-யைப் போட்டிருக்கிறார்கள். அவர் அரசாங்கத்திற்கு நேரடியாகத் தொடர்பு கொண்டவர் என்பதால், அவர் மூலமாக சில வேலைகளை காதும் காதும் வைத்ததைப் போல செய்துவிடுகிறார்களோ என்ற சந்தேகம் வெளியே உலாவிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட செய்தி எங்களுடைய காதுக்கு வரக்கூடிய அளவிற்குப் பரவிக் கொண்டிருக்கிறது என்றால், வெளியே உள்ள மக்கள் எவ்வளவு கண்காணிப்பாக இருக்கிறார்கள், சந்தேகத்தோடு உங்களைப்

பார்க்கின்றார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இது நல்லதா, இது முறையா? இந்த ஆட்சிக்கு இன்றைக்கு இருப்பதெல்லாம், மக்கள் மத்தியிலே முதலமைச்சருக்குத் தனியாக இருக்கிற 'Mass Grip' ஒன்றுதான். முதலமைச்சர் அவர்கள் செல்லுகிற இடங்களில் எல்லாம் பெருவாரியாகக் கூட்டம் கூடுகிறார்கள், அதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். பெரிய அளவிலே சில காரியங்களை இந்த முதலமைச்சரால் அல்லது அனைத்திந்திய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியால் செய்ய முடியும் என்று இன்றைக்கு நம்பு கிறார்கள். இதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் கவர்ன்மெண்ட் மெஷினெரியின் மீது உள்ள கிரிப்பை நீங்கள் இழந்துவிட்டீர்கள், கட்சி அமைப்பின் மீது உங்கள் பிடிப்பை இழந்துவிட்டீர்கள், மக்களுடைய பிடிப்பையும் வெகுவாக இழந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதற்கு அடையாளம் தான் கடந்த சில நாட்களாக நடந்துள்ள சில நிகழ்ச்சிகள் என்று இந்த அரசாங்கத்திற்குச் சொல்ல விரும்புகிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நல்லவேளையாக கேள்வி நேரத்தின்போது அந்த பதில்கள் வந்திருக்கின்றன. எத்தனை பேர் விவசாயப் போராட்டத்தின் போது சுடப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. எட்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதிலே ஏழு பேர் நிலம் படைத்தவர்கள், ஒருவர் நிலம் இல்லாதவர். ஏழு பேரும் பத்து ஏக்கர், 11 ஏக்கருக்கு மேல் நிலம் இல்லாதவர்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஊர் ஊராகச் சொன்னார்கள், "விவசாயப் போராட்டத்தை நடத்துகிறார்களே அவர்கள் யார் தெரியுமா? கலவரங்களை நடத்து கிறார்களே அவர்கள் யார் தெரியுமா? யாரைச் சுடுகிறோம் தெரியுமா?" என்று கேட்டு, "சமூக விரோதிகள், நிலமற்றவர்கள்தான் இதை நிலப் பிரபுக்கள் மீது தூண்டிவிட்டிருக்கிறார்கள். சமூக விரோதிகள்தான் செத்திருக்கிறார்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இப்போது செத்திருக்கிறவர்கள் யார்? அத்தனை பேரும் சிறிய விவசாயிகள். அத்தனை பேரும் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனைக் கட்ட வேண்டியவர்கள், அரசாங்கத்திற்குக் கடனைக் கட்ட வேண்டிய விவசாயிகள் என்று எண்ணும் போது, அவர்கள் எப்படி துடிதுடித்துச் செத்திருப்பார்கள், எவ்வளவு கல் நெஞ்சத்தோடு இவர்களைச் சுட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? அதிகாரிகள் தருகிற தகவலை வைத்துக்கொண்டு, யாரோ தூண்டுகிற சம்பவம் என்றும், செத்தவர்கள் சமூக விரோதிகள் என்றும், கடன் இல்லாதவர்கள் என்றும், நிலமற்றவர்கள் என்றும் சொன்னார்களே, இது எவ்வளவு பெரிய பொய் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? இந்த ஆட்சி எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க



(பிற்பகல் 6-30)

வேண்டாமா? எத்தனை வலிமை பொருந்திய, செல்வாக்கு மிக்க திறமையான நிதியமைச்சரை நாம் பெற்றிருந்தாலும் கூட, அவருடைய உழைப்பை, அவருடைய திறமையை நம்மால் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது என்பதை இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் சொல்லிக்கொள்ளுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றிச் சொல்லும்போது, இது நம்முடைய நிதியமைச்சர் அவர்களின் தனியான திறமையைக் காட்டுகிறது. இந்த நிதி நிலை அறிக்கை, நம்முடைய மாநிலம் எந்த அளவுக்கு செயல் முயற்சிகளை எடுக்கிறது என்று பார்த்தால் மத்திய ஆட்சியுடன் மோதி, போராடி சில நன்மைகளைக் குவிக்கமுடியும் என்று காட்டியிருக்கிறது. நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே, நம்முடைய செலவை எந்த அளவுக்கு அர்த்தமற்ற காரியங்களிலே செலவு செய்கிறோம், நம் பின் சந்ததியினர் நல்வாழ்வைப் பற்றிக் கருதாமல் செலவழிக்கிறோம் என்பதைத்தான் காட்டுகிறது. கேட்டவர்களுக்கெல்லாம் ஒதுக்கீடு செய்வது என்பது முடியாது. அதற்காக நீங்கள் கொடுக்க முடியாது என்றும் சொல்ல முடியாது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது, நிதியமைச்சர் அவர்களுடைய முயற்சியைத் தோற்கடிக்கக்கூடியதாகத்தான் இருக்கிறது. இந்த ஆட்சியின் செயல் முறையிலே, நடைமுறையிலே குறை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இனியாவது இந்த வல்லமை படைத்த அமைச்சர்களை வைத்துக்கொண்டிருக்கின்ற அரசு முறையாக திட்டங்களை வகுத்துச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது இருக்கின்ற ஐ.ஜி.-க்கு ஒரு வருடம், ஆறு மாதம், மீண்டும் ஆறு மாதம் என்று பதவிக் காலத்தை நீடித்துக்கொண்டிருக் கிறார்கள். ரிட்டையர் ஆகிவிட்ட சிலருக்கு இன்னொரு ஆறு மாதம் பதவிக் கால நீடிப்பு கொடுக்கப் போவதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ரிட்டையர் ஆன பிறகு அத்தோடு போகச் சொல்ல வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய கொள்கையாக இருக்க வேண்டுமென்று அறிஞர் அண்ணா அவர்கள்கூட அறிவித்திருக்கிறார்கள். பல பேர்கள் பின்னாலே காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பதவிக் காலம் முடிந்தவுடன் அவர்களை ரிடையர் ஆக்க வேண்டும். ஆனால் முடிவெடுக்க முடியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கிறது அரசு என்பதை நம்முடைய மக்களுக்கு இவற்றின் மூலமாக வெளிப்படையாகக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். இது அவ்வளவு நல்லதல்ல. எல்லாத் துறைகளிலும் இந்த மாதிரி நிலைமைகள் ஏற்படாமல் தடுக்க வேண்டும், தவிர்க்கவேண்டுமென்று சொல்லி அமைகிறேன்.

### 8. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி மேலவையின் நிகழ்ச்சி விபரத்தில் கீழ்க்கண்ட மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| 21—3—1979 | 1978-79 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை விவர அறிக்கை, 1971-72 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவு குறித்த விவர அறிக்கை மீது விவாதம். |
| 22—3—1979 | 1. 1979-80 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம். |
| | 2. அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல், |
| 23—3—1979 | 1. 1979-80 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலுரை. |
| | 2. அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல். எவையேனும் இருப்பின். |
| 24—3—1972 | நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல். |

மற்ற நிகழ்ச்சிகள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி நடைபெறும்.

### 7. 1979-80 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் கூட்டம் 7 மணி வரையில் நடக்க வேண்டும். அடுத்துப் பேச இருக்கின்ற மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் அதற்கு முன்னதாகவே முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்கள் 7 மணி வரையில்தான் பேச வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்போதைக்கு இன்னும் அரை மணி நேரம்தான் இருக்கின்றது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் வேண்டுமானால் மேற்கொண்டு 5 அல்லது 10 நிமிடங்கள் எடுத்துக்கொள்ளலாம்.



**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** எத்தனையோ உறுப்பினர்கள் முக்கால் மணி நேரம்கூடப் பேசியிருக்கிறார்கள். குறைந்தது நான் பேசி முடிக்கின்ற வரைக்குமாவது நேரம் கொடுக்க வேண்டும் ஏழரை மணிக்குள்ளாகவாவது முடிக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** 40 நிமிடங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். சிக்கிரம் முடிப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பட்ஜெட்டிலே கொஞ்சம் அதிக நேரம் கொடுக்க வேண்டும். முயற்சி பண்ணுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** பட்ஜெட்பற்றிப் பேசப் போகிறோம். இது மேலவைக் கூட்டம், பொதுக்கூட்டம் அல்ல என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** துணைத் தலைவர் அவர்களே, உங்களை நாங்கள் வேண்டிக்கொள்கிறோம். அமைச்சர்கள் காலையில் பேரவையில் கிட்டத்தட்ட 4½ மணி நேரம் உட்காருகிறோம். மேலவையில் கிட்டத்தட்ட 3 மணி நேரம் உட்காருகிறோம். ஆகவே மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் 7 மணிக்குள் முடித்துவிட்டு, தொடர்ந்து நாளைக்குப் பேசுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** நாளைக்கு வேண்டிய அலுவல்கள் அறிவிக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மற்ற உறுப்பினர்கள் ஆகியவர்கள் சங்கடத்தை உணர்ந்து, மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் மிக விரைவாக முடித்துவிடுவார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் உரையாற்றிய 1979-80 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அதனுடைய கொள்கைகளை, நிலைமைகளை விளக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் உரையாற்றிய நேரத்தில், நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அவரது தனித் திறமையால், இந்த ஆண்டின் வரவு-செலவுத் திட்டம் பாராட்டக்கூடியதாக இருக்கிறது என்று சொன்னார்கள். என்னுடைய கருத்தைப் பொறுத்த வரையில், நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய தனித் திறமையை இந்த நிதிநிலை அறிக்கையிலே காட்டவில்லை என்பதாகத்தான் சொல்ல வேண்டும். நிதி

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 மார்ச் 20

அமைச்சர் அவர்களைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். நாடாளுமன்றத்திலே உறுப்பினராக இருந்தார் என்பது மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்திலே உறுப்பினராக இருந்தபோது முற்போக்கான கொள்கைகளைக் கொண்டிருந்தார்கள் என்பதும், இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே நிதி அமைச்சராக இருந்து 1,120 கோடி ரூபாய்க்கு ஒரு வரவு-செலவுத் திட்டத்தைப் போடுகின்ற அளவுக்கு, புள்ளிவிவரங்களை அளிக்கின்ற ஒரு நிர்வாகத்திலே இருக்கிறார் என்பதும் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையிலேயே, மக்கள் எல்லாம் ஆவலோடு எதிர்பார்த்த, மக்களை வாழவைக்கின்ற புரட்சிகரமான திட்டங்கள் இந்த நாட்டிற்கு வர இருக்கின்றன என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில், உள்ளபடியே ஒரு சூனியமான பட்ஜெட்டை இங்கே வழங்கியிருக்கிறார்களே என்று நினைக்கின்ற நேரத்தில், நான் வருத்தப்படுகிறேன். நாங்கள் இப்படிச் சொன்னால், ஆளுங் கட்சிக்காரர்களுக்குக் கோபம் வரும். அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள், தோழமையாக இருக்க காத்துக்கொண்டிருக்கிறோம் என்றும் அவர்களுக்குள்ளே தோழமை உருவாகப் போகிறது என்றும் சொன்னார்கள்.

அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர், இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரான, கர்நாடக மாநில அமைச்சர் அவர்கள் கடந்த வாரம் மன்றத்திலே பேசியிருக்கிறார்கள். இந்த பட்ஜெட்டைப் பற்றி அவர் சொல்கிறார். ‘அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகள் கட்டுப்பாடானது அல்ல. 1½ வருட காலமாகச் சொல்லியவைகளை எல்லாம் நிறைவேற்ற முடியாமல் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தாக்கல் செய்த பட்ஜெட்டில் எந்த ஒரு விமோசனமும் இல்லை. பின்தங்கியவர்கள் முன்னேற்றத்திற்கு எந்த ஒரு நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அவர்களை முன்னேற்ற வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கிறதா என்பதும் சிந்திக்க வேண்டியதாக இருக்கிறது. சந்தேகமாக இருக்கிறது. கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற அளவில் பட்ஜெட்டில் நிதி ஆதாரம் ஒதுக்கவில்லை. இன்னும் தமிழ்நாட்டில் மக்களை ஏமாற்றும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள்’ என்று சொல்லியிருக்கின்றார்கள். இந்த அருமையான சர்டிபிகேட்டை அங்கே கொடுத்திருக்கிறார்கள். ஒரு பக்கத்திலே மாநில அமைச்சர்கள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக புரட்சிகரமான திட்டங்களை அறிவித்துக்கொண்டிருக்கிறார்கள். கருநாடக மாநிலத்திலும் அப்படியெல்லாம் அறிவித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தினுடைய நிதிநிலை அறிக்கையைப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள் என்று சொன்னால், இதைவிடக் கேவலமாக ஒன்றும் இருக்க முடியாது என்று



1979 மார்ச் 20] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

நம்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பார்க்கிறபோது, எந்த அளவுக்கு நம் நாட்டினுடைய வருமானம் உயர்ந்திருக்கிறது என்பது தெரிகிறது. 1975-76 ஆம் ஆண்டு நாங்கள் இருந்தபோது, ரூ. 520 கோடிதான் வருவாயாக இருந்தது. ஆனால் இன்று 7-வது நிதி ஆணைக் குழுவுக்குப் பிறகு அவர்கள் ரூ. 2,000 கோடிக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். 150 கோடி ரூபாய்தான் இந்த நாட்டினுடைய திட்டத்திற்காக தாராளமாக இந்த அரசு ஒதுக்கியுள்ளது. வருவாய் ரூ. 1,120 கோடியாக இருக்கிறது. உண்மையிலேயே இந்த நாட்டிலே உருவாகக்கூடிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். நிதி அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள புள்ளிவிவரத்திலே சொல்லியிருக்கிறார்கள். 1975-76-ல் ரூ. 501 கோடி இருந்தது. அப்போது இந்த நாட்டிலே வீடு கட்டிக் கொடுக்க ரூ. 6 கோடியே 2 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. ரூ. 1,120 கோடி வருமானம் வருகின்றபோது, அதற்கு உள்ள ஒதுக்கீடு 3 கோடியே 86 லட்சம் ரூபாய்தான். நாட்டிலே விவசாயம் செய்வதற்கு, கிராமப்புறத்திலே கிணறு வெட்டுவதற்கு என்று நிதி ஒதுக்க வேண்டும். எங்கு பார்த்தாலும், விவசாயத் திட்டம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். இந்த விவசாயிகளுக்குத் தேவையான சிறுபாசன வசதி திட்டத்திற்காக ரூ. 4 கோடி 19 லட்சம் திராவிட முன்னேற்றக் கழகம் ஒதுக்கியிருக்கிறது. நான் விவசாய அமைச்சர் அவர்களுக்குக்கூடச் சொல்லிக் கொள்கிறேன். நான் நிதி அமைச்சர் அவர்களிடம் வாதாடி பணம் வாங்கிக் கொடுத்ததாகக்கூட இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். ரூ. 3 கோடியே 46 லட்சம்தான் சிறுபாசனத்திற்காகச் செலவழிக்க இருக்கிறார்கள்.

(பிற்பகல் 6-40)

அதைப்போல பாசனம், வடிகால், வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்கு முன்னேற்றக் கழக ஆட்சியிலே 19 கோடியே 9 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு, வருவாய் இரண்டு மடங்காகியிருந்தும், 18 கோடியே 70 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இன்று நாட்டிலே சாலைகள் எப்படி இருக்கின்றன என்பது நமக்குத் தெரியும். கார்களிலே போக முடியவில்லை, பஸ்களிலே போக முடியவில்லை. கர்ப்பிணிகள் பஸ்களிலே போகும்போது, எங்கே திடீரென்று பிள்ளைகளைப் பெற்று விடுவார்களோ என்று நினைக்குமளவிற்கு சாலைகளிலே மேடு பள்ளங்கள் உள்ளன. முன்னேற்றக் கழக ஆட்சியிலே சாலை, நீர்வழிப் போக்குவரத்திற்காக 6 கோடியே 89 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இந்த அரசாங்கம் 2 கோடியே 83 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறது. இப்படி நிதியை ஒதுக்கிவிட்டு, மார் தட்டிப் பேசுகிறார்கள். இதைவிட புரட்சி உண்டா என்று பேசுகிறார்கள். என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. தேர்தல் நேரத்திலே பேசினார்கள்—அதை விட்டுவிடுகிறேன்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 மார்ச் 20

தேர்தலுக்குப் பின்னாலே, முதலமைச்சராக வந்த பிறகு, தம்முடைய முதலமைச்சரவர்கள் எப்படிப்பட்ட தத்துவங்களைச் சொன்னார்? 'சுதந்திரம் பெற்று 30 ஆண்டுக்காலம் ஆகிறது, ஆனால் கிராமங்களில் பார்க்கிறேன், இன்னும் குடிநீர் வசதிகூட இல்லாத கிராமங்களைப் பார்க்கும்போது, என்ன சுதந்திரம் பெற்றோம், இந்த நாட்டிற்கு இப்படிப்பட்ட சுதந்திரம் தேவை தானா என்று எண்ணிப் பார்க்கிறேன்' என்று பேசினார்கள். இந்த ஆட்சி வந்தவுடன், ஒரு ஆண்டுக் காலத்தில் நிச்சயமாக எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் வசதி கிடைத்துவிடுமென்று மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 4 நகராட்சி, 41 நகரப் பஞ்சாயத்து குடிநீர்த் திட்டங்களை மேற்கொள்ளத்தான் திட்டம் தீட்டியிருக்கிறார்களே தவிர, அதற்கு மேல் ஒன்றும் இல்லை. தமிழ்நாடு முழுவதும் குடிநீர் வசதி செய்து தர முடிந்ததா? இந்தத் திட்டங்கள் இன்று நேற்றா இருக்கின்றன? முன்னேற்றக் கழக ஆட்சியிலே செய்ததைவிட குடிநீர் வசதிக்காக பணத்தை அதிகமாக ஒதுக்கியிருக்கிறோமென்று சொல்ல முடியுமா? மக்களிடம் ஒன்று சொல்கிறார்கள், இங்கே ஒன்று பேசுகிறார்கள். கல்வி, மருத்துவ வசதி பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றிக் கடைசியாகப் பேசுகிறேன். துணைத் தலைவரவர்களே, இருக்கிற புள்ளிவிவரங்களைச் சொல்வதற்கே நேரம் இராது. எனவே கொள்கை விளக்கக் குறிப்புகள் வரும்போது, அவைகளைக் குறிப்பிடத் தயாராக இருக்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் சமூக நலத் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். முன்னேற்றக் கழக ஆட்சியிலே, கலைஞர் பிறந்த நாள் விழாவையொட்டி, ஒவ்வொரு ஆண்டும் ஒரு சமூக நலத் திட்டம் அறிவிக்கப்பட்டது. கை ரிக்ஷாவை ஒழித்து, சைக்கிள் ரிக்ஷா கொடுக்கப்பட்டது; தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வு அளிக்கும் திட்டம் தொடங்கப்பட்டது. இப்படியெல்லாம் செய்யப்பட்டது. கண்ணொளி வழங்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது.

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவரவர்களே, ஒரு பிரச்சினையைத் தெளிவாக்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். கிராமங்களிலே தண்ணீர் கொடுப்பதற்காக, அவைகளை 6 வகையாகப் பிரித்து . . .

Thiru ARCOT N. VEERASAMI: I am not yielding, Sir.

THE HON. THIRU S. RAGHAVANANDAM : I am not yielding. I should yield. I am already on my feet. I am not yielding, kindly hear me. . . .. கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள்.



1979 மார்ச் 20]

MR. DEPUTY CHAIRMAN : The hon. Member had already yielded.. The Hon. Minister is on his feet. If the hon. Member did not want to yield, he should have said " I do not wast to yield ". When the Hon. Minister is on his feet, how can I ask him to sit lown ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : உண்மையே பேசுவதில்லை. என்ன செய்வது? தவறான தகவல்களைக் கொடுக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: என்னுடைய வயதின் காரணமாக இவைகளையெல்லாம் ஆத்திரத்தோடு ஏற்றுக் கொள்வதில்லை. பதவியும் பொறுப்புள்ள பதவி. . முதலில் கிராமங்களுக்குத் தண்ணீரை, டைப் 1, டைப் 2 என்ற கிராமங்களுக்குக் கொடுக்க முடிவு செய்திருக்கிறோம். டைப் மூன்றை இந்த ஆண்டு எடுத்து, தண்ணீர் கொடுக்க திட்டமிட்டிருக்கிறோம். மேஜர் பஞ்சாயத்து, முனிசிபாலிட்டி போன்றவைகள், தங்கள் நிதி நிலைமையை ஆதாரமாகக் கொண்டு, தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினால், இரண்டு பகுதி செலவை L. I. C. மூலம் பெற்று, ஒரு பகுதியை அரசு கொடுத்து, தண்ணீர் கிடைக்க ஏற்பாடுகளைச் செய்ய முடிவு செய்திருக்கிறோம். முதல் 5 ஆண்டுகள் மாரடோரியம், பிறகு 25 ஆண்டுகளில் திருப்பிக் கொடுப்பதற்கு அவர்களுக்குத் தகுதியிருந்தால், கொடுக்கிறோம். ஏறத்தாழ 6,000 கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்க முயற்சி எடுத்து, அந்தத் திட்டங்கள் முடிவடைய இருக்கின்றன. இப்போது அடுத்த ஸ்டேஜுக்குப் போய்விடுவோம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் கூறியது பற்றி, கொள்கை விளக்கக் குறிப்பு வரும்போது விரிவாகப் பேசிக் கொள்ளலாம். நான் சொல்ல விரும்புவது, வெளியிலே ஒன்று சொல்கிறார்கள், ஆனால் அதற்கான திட்டங்கள் இல்லை. அதைத்தான் சொன்னேன். அதுமட்டுமல்ல.

மத்திய அரசு இப்போது ஒரு முடிவு செய்திருக்கிறது. ஊழியர்களுக்குப் பென்ஷனாக சம்பளத்தில் பாதித் தொகையையும், விலைவாசிப் புள்ளி எட்டு பாயின்ட் உயர்ந்திருப்பதால், அதற்கேற்றபடி அகவிலைப்படி உயர்வு அளிக்கவும் முடிவு செய்திருக்கிறது. இவர்கள் நிதிநிலை அறிக்கையில் என்ன அறிவித்திருக்கிறார்கள்? சைக்கிள் அட்வான்ஸ், ஸ்கூட்டர் அட்வான்ஸ் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் ஏற்கெனவே இருக்கும் 300 ரூபாயை 400 ரூபாயாக்கி, கடன் கொடுக்கிறார்கள். கடன் கொடுப்பதற்காக, 300 ரூபாயை 400 ரூபாயாக உயர்த்துவதற்காக ஒரு நிதி நிலை அறிக்கை

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 மார்ச் 20

வேண்டுமா? இது அரசாங்க ஊழியர்களைக் கேலி செய்வதாக இருக்கிறது. அவர்கள் எவ்வளவோ கோரிக்கைகள் வைக்கிறார்கள். மூன்றாவது சம்பளக் கமிஷன் அறிவித்த ஊதிய விகிதங்களில் உள்ள முரண்பாடுகள் தீர்க்கப்படவில்லை. அதிலுள்ள முரண்பாடுகளைத் தீர்த்து, அதை நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருக்கலாம். ஒரு குழு போட்டு, அந்தக் குழு முரண்பாடுகளைப் பரிசீலித்து, அதன் சிபாரிசுகளை ஏற்றுக்கொண்டிருக்கலாம் அல்லவா? நீங்கள் புரட்சி, புரட்சி என்று சொல்கிறீர்கள். கடன் 300 ரூபாயை 400 ரூபாயாக உயர்த்துவதுதான் புரட்சியா? அதற்கு நிதிநிலை அறிக்கை தேவையா? இதை யோசித்துப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல. இன்றையதினம் தொழில் வளர்ச்சியைப் பொறுத்து, இந்த அரசாங்கம் என்ன அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பது புரியவில்லை. உள்ளபடியே 150 கோடி ரூபாய் அளவிற்கு 7-வது நிதியாணைக் குழு ஒதுக்கியதற்குப் பின்னாலே, இந்த நாட்டிலே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி இந்த அரசு சிந்தித்திருக்குமானால், எப்படிப்பட்ட . ஆலைகளைக் கொண்டு வந்திருக்க வேண்டும்? போன ஆண்டு சொன்னார்கள். 10 கோடி ரூபாய் செலவில் காகித ஆலை தொடங்கப்படுமென்று சொன்னார்கள். அது காகிதத்தில்தான் இருக்கிறது. ஆலை வந்ததா? இல்லை. திட்டம் இருக்கிறதா? மத்திய அரசின் லைசன்சுக்கு விண்ணப்பம் போட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். உங்கள் ஆட்சிக் காலத்திலே திட்டம் நிறைவேறுமென்று உங்களாலே வாக்குறுதி அளிக்க முடியுமா? ஆனால் நிதிநிலை அறிக்கையிலே சொல்கிறார்கள். பெரிய தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். பட்டுப்பூச்சி வளர்ப்பதற்குத் தேவையான முசுக்கொட்டை புதிதாக சுமார் 4,000 ஏக்கர்களில் பயிரிடப்பட்டுள்ளது என்று அறிவிக்கிறார்கள். இது ஒரு பெரிய தொழில் வளர்ச்சியா? இதன்மூலம் எத்தனை . பேர்களுக்கு வேலை கிடைக்கும்? எனக்குச் சிரிப்பு வருகிறது. 40,000 பேர்களுக்கு வேலை கிடைக்குமென்று அறிக்கை விடுத்திருக்கிறார்கள். நான் வேடிக்கையாகச் சொல்லவில்லை. சில பேர்களுக்கு நான் இங்கே இருப்பதுகூட கோபமாக இருக்கும். அதனால் சொல்கிறேன், 40 ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறோம் என்று அடுத்த ஆண்டு சொல்லி, அந்தப் பட்டியலை வைத்து, 40 ஆயிரம் பேர்களின் விலாசத்தையும் வைத்து, இவர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறோமென்று 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சொன்னால், நான் என் பதவியை ராஜிநாமா செய்கிறேன். அது உங்களால் முடியாது. ஏதோ கிராமங்களில் இருக்கிறவர்களை 'அட்ரேக்ட்' செய்ய வேண்டும். அவர்களை உங்கள் பக்கம் கவர்ச்சிபாக்



1979 மார்ச் 20] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இழுக்க வேண்டும். இப்போது கவர்ச்சி குறைந்திருக்கிறது. எனவே இதனால் அவர்களை இழுக்கலாமென்று நினைத்து, இப்படிப்பட்ட திட்டங்களைப் போட்டிருக்கிறீர்களே தவிர, உருப்படியான திட்டங்கள் இல்லை.

வரும் ஆண்டில் மூன்று புதிய தீப்பெட்டி பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுமென்று நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இதன் மூலம் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமென்ற விவரங்கள் இருக்கிறதா என்றால், இல்லை. எனவே தொழில் துறையைப் பொறுத்த வரையில், இப்படிப்பட்ட நிலைதான் இருக்கிறதே தவிர, உருப்படியான திட்டங்கள் இல்லை

அதுமட்டுமல்ல, நம்முடைய அரசாங்கத்தில் Information and Publicity என்ற இலாக்கா இருக்கிறது. அந்த இலாக்கா எதற்காக இருக்கிறதென்று புரியவில்லை. உள்ளபடியே அங்கே இருக்கக்கூடிய டைரக்டர், இன்னமும் அவசர காலச் சட்டம் அமுலில் இருப்பதாக நினைக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சொல்லப்பட்ட புகார் காரணமாக, வழக்குத் தொடர்ந்து, உச்ச நீதி மன்றத்திற்குப் போய், Chief Minister is also a public servant என்று தீர்ப்பு வருகிறது. அந்தத் தீர்ப்பைப்பற்றி வெளியிடக்கூடிய செய்தி நிறுவனங்கள் இருக்கின்றன. ஆனால் நம்முடைய அரசாங்கத்திலே இருக்கக்கூடிய டைரக்டர், ஆளும் கட்சிக்கு ஆதரவான பத்திரிகை நிருபர்களை அழைத்து, ரகசியமாக அந்தச் செய்திகளை வெளியிடுகிறார் என்றால், பிரசுரிக்கச் சொல்கிறார் என்றால், அப்படி தனிப்பட்ட முறையிலே வேலைகளைச் செய்வதற்குத்தான் அரசாங்கத்திலே சம்பளம் வாங்கிக்கொண்டு, டைரக்டர் வேலை செய்கிறாரா? எனக்குப் புரியவில்லை. அது மட்டுமல்ல, என்னென்னவோ அட்டகாசங்கள் இன்னமும் செய்கிறார். அவை உங்களுக்குச் சாதகமாக அமைந்திருக்கின்றன, அதனால் விடுகிறீர்கள். இப்படிப்பட்ட அதிகாரிகளை அடையாளம் கண்டுகொள்ளாமல் இருந்தால்—பின்னால் நீங்கள் எதிர்க் கட்சியாக ஆகமாட்டீர்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது? அப்படிப்பட்டவர்களை அடையாளம் கண்டுகொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் தொழிலை வளர்க்கிறோமென்று சொல்லி, தமிழ் நாட்டிலே உள்ள கருங்கல்-க்ரேனைட்-தொழில் எப்படி நடைபெறுகிறது என்று தென் ஆற்காடு மாவட்டத்திற்குச் சென்று பார்வையிட்டதாகச் செய்திகளைப் பார்த்தேன். குன்னம் என்ற பகுதியில் அந்தத் தொழில் நடைபெறுகிறது. அதை தேசியமயமாக்குகிறார்கள். வரவேற்கிறேன். மினரல் கார்ப்பரேஷன் என்று நடை

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 மார்ச் 20

பெறுகிறது. அதைப் பாராட்டுகிறேன். நல்ல எண்ணத்தோடு செய்வதை நான் ஆட்சேபிக்கவில்லை. அதிலே திரு. கோபால் என்ற ஒருவர் மானேஜிங் டைரக்டராக இருந்தார். இன்றையதினம் திடீரென என்ன செய்கிறீர்கள்? அனுபவம் வாய்ந்த ஒருவர் மானேஜிங் டைரக்டராக இருக்கிறார். மானேஜிங்

(பிற்பகல் 6-50)

டைரக்டரிடம் ஒரு காலத்தில் மாணவராக இருந்த ஒருவரைத் தலைவராகப் போட்டிருக்கிறீர்கள். இவருக்கு அவர் ஆசிரியராக இருந்திருக்கிறார். இப்படிப்பட்ட நிலையில் இருவருக்கும் முரண்பாடு, கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது. 15 ஆண்டுகளுக்கு முன்பு M. P. S. C. -ல் வேலை வேண்டுமென்று இவரிடம் கேட்ட ஒருவரை, இவருக்குத் தலைவராகப் போட்டிருக்கிறீர்கள். அப்படித் தலைவராகப் போட்ட காரணத்தால்தான் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. திறமை எங்கிருந்தாலும் அது பாராட்டப்பட வேண்டிய ஒன்றுதான். திறமையுள்ளவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டியதுதான். திறமையுள்ளவர்களை உற்சாகப்படுத்த வேண்டியதுதான். ஆனால் நான் என்ன சொல்கிறேன் என்றால், உங்களுக்கு வேண்டிய ஒருவரை, நீங்கள் நினைத்த ஒருவரைத் தலைவராக ஆக்கியிருக்கிறீர்கள். அதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. திறமை வாய்ந்த ஒருவரை அனுப்புவதில் எந்தவித ஆட்சேபணையும் இருக்க முடியாது. ஆனால் அவரை உங்களுடைய சொந்த நலனுக்காக அனுப்பியிருக்கிறீர்கள். இதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், மிக முக்கியமான ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். உண்மையிலேயே என்னிடம் இருக்கின்ற விவரங்களை வைத்து ஆதாரத்தோடு பேச முடியும். ஊழலை, லஞ்சத்தை ஒழிக்கப் போகிறோமென்று நீங்கள் சொல்லுகிறீர்கள். பேசிப் பேசி, பேச்சைத்தான் ஒழிக்கிறீர்களே தவிர, லஞ்ச ஊழலைக் கொஞ்சம் கூட ஒழிக்க உங்களால் முடியவில்லை. காஞ்சிபுரத்தில் பட்டு நூல் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அவை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் இருந்தன. அவர்களுக்குத் தேவையான பட்டு நூலை குஜராத் மாநிலத்திலுள்ள சூரத்திலிருந்து கொள்முதல் செய்வது வழக்கம். அப்படி கூட்டுறவு சங்கங்கள் தங்களுக்குப் பிடித்தமான பட்டு நூலைக் கொள்முதல் செய்வதைத் தடுத்து இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு, 6 மாதங்களுக்கு முன்னால் "பெடரேஷன்" என்ற ஒன்றை அமைத்து, பெடரேஷன் மூலம்தான் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்குத் தேவையான பட்டு நூலை வாங்க வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். அப்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் காரணமாக, இன்றையதினம் காஞ்சிபுரத்தில் பயங்கரமான விளைவு



1979 மார்ச் 20] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

ஏற்பட்டிருக்கிறது. இன்றையதினம் காஞ்சிபுரம் பட்டு கூட்டுறவுச் சங்கங்களிலே உள்ளவர்கள் எந்த அளவிற்கு உள்ளபடியே வேதனைப்படுகிறார்கள், தொல்லைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் வேதனையுடன் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு மாதமும் 2 ஆயிரம் மார்க்கிலிருந்து 3 ஆயிரம் மார்க் வரை சரிகை தேவைப்படும். ஒரு மார்க் என்பது 21 தோலா. இந்த பெடரேஷனில் உள்ளவர்கள் ஆளும் கட்சிக்காரர்கள், அவர்கள் ஒவ்வொரு மாதமும் 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் மார்க் சரிகை குஜராத்திலுள்ள சூரத்திலிருந்து வாங்கி வருகிறார்கள். சூரத்தில் அதன் விலை மார்க் ஒன்றுக்கு 625 ரூபாய். இங்கே கொண்டு வந்து அதை 691 ரூபாய்க்கு விற்கிறார்கள். இடையில் இருக்கிற இந்த பெடரேஷனில் உள்ளவர்கள் மாதந்தோறும் 1½ இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாய் வரை ஊழல் செய்கிறார்கள். மார்க் ஒன்றுக்கு 625 ரூபாய் என்று வாங்கி, பில் வாங்கும்போது 691 ரூபாய் என்று பில் கொடுக்கும்படி வற்புறுத்தி வாங்கி வருகிறார்கள். 691 ரூபாய்க்கு அங்கிருந்து வாங்கி வருவதாகச் சொல்லி, பொய் சொல்லி அதை வினியோகித்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக இன்றையதினம் காஞ்சிபுரத்திலேயிருக்கிற எத்தனை கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி அவர்கள் 691 ரூபாய் என்று பில் கொடுக்காவிட்டால், அதற்கான பணத்தைக் கொடுத்து இடையிலே கமிஷனாக வாங்கி விடுகிறார்கள். காஞ்சிபுரத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களை, பலவிதமான தொல்லைகட்கு ஆளாக்குகிறார்கள். ஆதாரம் வேண்டுமென்று கேட்பீர்களேயானால், காட்டத் தயாராக இருக்கிறேன். இதில் நடைபெறுகின்ற ஊழலைக் கண்ட காமாட்சியம்மன் பட்டு உற்பத்தி நெசவாளர் சங்கத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு. பார்த்தசாரதி என்பவர், பெடரேஷனிலிருந்து பட்டு நூல் வாங்க மாட்டேன் என்று சொல்லியிருக்கிறார். அப்படி அவர் பெடரேஷனிலிருந்து பட்டு நூல் வாங்காவிட்டால், அவருடைய கூட்டுறவுச் சங்கத்தைக் கலைத்து விடுவோம் என்று பெடரேஷனில் இருப்பவர்கள் வேலை செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சங்கடத்திலிருந்து எப்படியாவது தப்ப வேண்டுமே என்பதற்காக அவர் "நெப்போலியன் பிராண்ட்" என்ற சரிகை வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அந்த சரிகை கிடைப்பது கஷ்டம். அப்படியாவது அவர் இந்த பெடரேஷனிலிருந்து சரிகை வாங்குவதைத் தவிர்க்கலாம் என்ற எண்ணத்தில்தான் அப்படிக் கேட்டிருக்கிறார். அதன் பிறகு பெடரேஷன், போனால் போகிறதென்று அவரை விட்டு விட்டார்கள். கடைசியில் மார்க் ஒன்றுக்கு 625 ரூபாய்க்கு அவரே நேரிடையாகக் கொள்முதல் செய்தார். பெடரேஷனில் நடப்பதெல்லாம் லஞ்ச ஊழல். இந்த ஆட்சியிலிருப்பவர்கள் நாள் தவறாமல் லஞ்ச ஊழலை

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 மார்ச் 20

ஒழிக்கப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 625 ரூபாய்க்கு வாங்கி அதை 691 ரூபாய்க்கு விற்பது ஊழல் இல்லையா? அவர்கள் எவ்வளவு வேதனைப்படுகிறார்கள் தெரியுமா? அந்தக் கைத்தறி நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். முன்பெல்லாம் அவர்கள் கடனில் வாங்கிக்கொண்டு வருவார்கள். இன்றைக்கு பெடரேஷனுக்குப் பணம் கட்டித்தான் நூல் வாங்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட ஊழல்களை இன்றையதினம் ஆளும் கட்சியினர் செய்து வருகிறார்கள். காஞ்சிபுரத்தில் ஊர் ஊராக, தெருத் தெருவாக இதைப் பற்றிப் பேசுகிறார்கள். காங்கிரஸ் கூட்டங்களில்கூட இதைப்பற்றிப் பேசுகிறார்கள். இதைச் சொன்னால்தான், மக்கள் ஓட்டும் போடுவார்கள். பக்கடா கடையில் பொட்டலம் கட்டுகிறவர்களை சரிகை வாங்கச் சொன்னால் அவர்களுக்கு சரிகையைப் பற்றி என்ன தெரியும்? பட்டு நூலில் எத்தனையோ பிரிவுகள் இருக்கின்றன. அவர்கள் எந்த ரகம் நல்ல நூல் என்பதைப்பற்றித் தெரியாமல் வாங்கிக்கொண்டு வருகிறார்கள். காஞ்சிபுரத்திலுள்ள கைத்தறி நெசவாளர்கள் எவ்வளவு வேதனைப்படுகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர்களுடைய வேதனையை, எங்களைப் போன்றவர்களுக்குக் கடிதத்தின் மூலம் தெரிவிக்கிறார்கள். லஞ்ச ஊழலை ஒழிக்க கொஞ்சமாவது முயற்சி செய்தீர்களா?

அடுத்தபடியாக, இன்னொரு விஷயத்தைப்பற்றி நான் ஏற்கெனவே மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய தனிப்பட்ட நபர்களுக்கு லாரி நேஷனல் பெர்மிட் வழங்க விண்ணப்பம் வரவழைத்தீர்கள். 6 மாதம் ஆகிறது. இதுவரை 25 பெர்மிட்டுகள் மட்டும் வழங்கியிருக்கிறீர்கள். ஒவ்வொரு பெர்மிட்டும் 40 ஆயிரம் ரூபாய் வாங்கிய பின்னர்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. யார், எப்படி, எங்கே என்ற விபரங்களைக் கேட்டால், சொல்லத் தயாராக இருக்கிறேன். பெயர்களும் கூட என்னிடம் இருக்கின்றன. நான் அதைப்பற்றிக் கேட்டால், "எஸ்.டி.ஏ. நீதிமன்றம் போல் வேலை செய்கிறது" என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் பதில் சொல்கிறார்கள். நாங்களும் 9 ஆண்டுக்காலம் ஆட்சி செய்திருக்கிறோம். எஸ்.டி.ஏ.-யில் இருப்பவர்கள் எல்லாம் ஏதோ ஆண்டவனின் அவதாரங்கள் போல் பேசுகிறார்கள். ஆளும் கட்சியில் இருப்பவர்கள் சொன்னால், அவர்கள் அதை உடனே செய்யாவிட்டால், திண்டுக்கல்லில் உள்ள டாக்டருக்கு ஏற்பட்ட நிலை ஏற்படும். சாராயச் சட்டம் அவர்கள் மீது பாயும் என்பதை அவர்கள் அறியமாட்டார்களா என்ன?



1979 மார்ச் 20] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அதிகாரிகளை அடக்குவதற்கும், நீங்கள் சொல்வதை அவர்கள் கேட்க வேண்டுமென்பதற்காகவும்தான் 'மினி மிசா' என்கின்ற சாராயச் சட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதைக் காட்டி அவர்களைப் பயப்படுத்துகிறீர்கள். இன்றையதினம் அதிகாரிகளில் நூற்றுக்கு 90 பேர் ஊழல் செய்கிறார்கள். நீங்களும் செய்கிறீர்கள். அதனால்தான் அவர்கள் "நீங்கள் அதையாவது செய்யுங்கள், நாங்கள் இதையாவது செய்கிறோம்" என்கிற அளவில் ஊழல்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். உங்களுடைய ஆட்சியை நீங்கள் லஞ்ச ஊழலற்ற ஆட்சி என்று சொல்லுவதற்கு என்ன அருகதை இருக்கிறது?

அடுத்தபடியாக ஸ்கூட்டரில் போகின்றவர்கள் ஹெல்மெட் அணிந்து செல்ல வேண்டுமென்று இருக்கிறது. அதற்கான உரிமையை இன்றையதினம் யாருக்கு வழங்கியிருக்கிறீர்கள்? ஆற்காட்டில் இருக்கிற சரோஜினி அம்மையாருக்கும் இந்த ஹெல்மெட் சம்பந்தமாகச் சொல்லுகின்ற விதிமுறைகளுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா என்றால் நிச்சயமாக இல்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** எப்போது முடிக்கப் போகிறீர்கள்?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** 7½ மணிக்குள் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** ஆறரை மணிக்கு பேச ஆரம்பித்தீர்கள். மணி 7 ஆகப் போகிறது. 7¼ மணிக்குள் பேசி முடியுங்கள். 7¼ மணிவரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் நேரத்தைக் குறிப்பிட்டு 7¼ மணிக்குள் பேசி முடிக்க வேண்டுமென்று சொல்ல வேண்டாம். 7½ மணிக்குள் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 7¼ மணிக்குள் பேசி முடிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்காக பல திட்டங்கள் தீட்டி செயல்படுத்தப்பட்டன. ஏழையெளிய மக்களுக்கெல்லாம் கண்ணாடி வழங்க வேண்டுமென்று திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. இப்போது ஆளும் கட்சியில் இருக்கின்ற நீங்கள் அன்றையதினம் என்ன சொன்னீர்கள்? முதலமைச்சர் கருணாநிதி கண்ணாடியில் பேரம் பேசியிருக்கிறார் என்று சொன்னீர்கள். அன்றையதினம் நாங்கள் என்ன திட்டங்கள் கொண்டு வந்தாலும்,

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 மார்ச் 20

உடனே பேரம் பேசப்பட்டது என்கிற குற்றச்சாட்டைச் சொன்னீர்கள். இன்றையதினம் ஸ்கூட்டரில் போகிறவர்கள் எல்லாம் தலைக்கு ஹெல்மெட் அணிய வேண்டுமென்று சொல்லுகிறீர்கள். நல்ல திட்டம்தான். ஸ்கூட்டரில் போகும்போது, ஏதாவது விபத்து ஏற்பட்டால், பெரும்பாலும் மண்டையில் தான் அடி ஏற்படுகிறது. மண்டையில் அடி பட்டால், ஆள் பிழைப்பது கஷ்டம். மண்டை உடைகிறது. நாங்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருந்தால், என்ன பேசியிருப்பீர்கள்? இந்த ஹெல்மெட் விஷயத்திலும் கூட லஞ்சம் வாங்கியிருக்கிறார்கள் என்று உள்நோக்கம் கற்பித்துப் பேசியிருப்பீர்கள். அன்றைக்கு நாங்கள் எந்த ஒரு திட்டம் கொண்டுவந்த நேரத்திலும் பேரம் பேசப்பட்டது என்று பழித்துப் பேசினீர்களே, எந்த அளவுக்கு எங்களுடைய மனம் வேதனைப்பட்டிருக்கும் என்பதை நினைத்துப் பார்த்தீர்களா? எந்தத் திட்டமாக இருந்தாலும், அது சமுதாயத்திற்குப் பயன்படுகிற திட்டமாக இருந்தால், அதை யார் கொண்டு வந்தாலும் எங்களைப் பொறுத்தவரை நல்லவற்றை என்றைக்கும் வரவேற்க, பாராட்டத் தயாராக இருக்கிறோம்.

அடுத்தபடியாக, விவசாயிகளைப் பொறுத்தவரை, இன்றைக்கு அவர்களுக்கு நியாயமான கொள்முதல் விலை கொடுக்கிறோம் என்று சொல்லுகிறீர்கள். 115 ரூபாய் உற்பத்திச் செலவாகிறது என்று நீங்களே ஒப்புக்கொள்ளுகிறீர்கள். ஆனால் அவர்களுக்கு 89 ரூபாய்தான் கொடுக்கிறோம். இன்றைய தினம் 9.46 கோடி ரூபாய் மால்கோ நிறுவனம் அரசாங்கத்திற்குக் கட்டவில்லை. அதற்காக அவர்களுடைய மின் இணைப்பு துண்டிக்கப்படவில்லை. 1.75 இலட்சம் விவசாயிகள்தான் மின்சார பம்ப்செட்கள் வைத்திருக்கிறார்கள். இவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து மின்சார வாரியத்திற்கு 8 கோடி ரூபாய் தான் கட்ட வேண்டியிருக்கிறது. ஒரு இராணுவ ஆட்சியைப்போல், எஸ்.பி. தலைமையில் பெரிய போலீஸ் படை கிராமங்களுக்குள்ளே நுழைந்து பாக்கியைச் செலுத்தாத விவசாயிகளுடைய மின்சார இணைப்பைத் துண்டித்தார்கள். உண்மையிலேயே விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன் போன்ற பல்வேறு கடன்கள் ரத்து செய்யப்படுமென்று நீங்கள் இன்றைக்கு அறிவிக்காவிட்டாலும் கூட, இந்த நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, விவசாயிகளுடைய நியாயமான கோரிக்கைகளை எல்லாம் பரிசீலனை செய்து நல்ல முடிவை அறிவிக்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் புலவர் புலமைப்பித்தன் அதற்காக ஒரு பாட்டுப் பாடினார். "நல்லார் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு



1979 மார்ச் 20] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

எல்லோர்க்கும் பெய்யும் மழை" என்று. எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்திருப்பதால், மழை பெய்கிறது என்று புலவர் பாராட்டினார். உங்கள் ஆட்சியில் எங்கே மழை பெய்கிறது? ஆட்சிக்கு வந்ததிலிருந்து புயலும் வெள்ளமும் தான் நாம் காண்கின்ற காட்சி. அதற்குப் பெயர் மழையா? மழை ஒரு அளவில் இருந்தால், அதற்குப் பெயர் மழை. எத்தனை பேர் செத்தார்கள்? எத்தனை இலட்சக்கணக்கான உயிரினங்கள் செத்து மடிந்தன? எத்தனை கோடி ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டது? 1977 ஆம் ஆண்டில் 198 பேர் காணாமலே போய் விட்டார்கள். எங்களால் அவர்களைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்று சொன்னீர்கள். இன்னமும், கொஞ்சமும் வெட்கமில்

(பிற்பகல் 7-00)

லாமல் மிக அழகாகப் பேசுகிறீர்கள். அந்த அளவுக்கு அல்லவா புயலும் வெள்ளமும் நாட்டு ஏழை எளிய மக்களின் உயிரைக் குடித்திருக்கின்றன. நல்லவர்களென்றால் உண்மையிலேயே நாட்டில் நல்ல மழை பொழிந்திருக்கும். ஆனால் உங்களுடைய அநியாயங்களைத் தாங்கிக்கொள்ள முடியாத காரணத்தால், இயற்கை உங்களுக்கு வேறு விதத்தில் பாடம் புகட்ட முடியாத காரணத்தால், இப்படிப்பட்ட புயல் வெள்ளம் மூலம் பாடம் புகட்டுகிறது. அரசாங்கத்தில் பொறுப்பை ஏற்றிருப்பவர்கள் இதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று எச்சரிக்கிறது. ஆனால் நீங்களோ இதைத் தெரிந்து கொள்ளப் போவதில்லை, எனவே இனி எதிர்காலத்தில் இயற்கையின் சீற்றம் எந்த அளவுக்கு இருக்குமென்பதைப் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும். இந்த ஆட்சியில் இயற்கையின் சீற்றங்கள் இனி இல்லாமல் இருக்க வேண்டுமென்றால், முன்கூட்டியே நாட்டினை நல்ல முறையில் ஆட்சி செய்திட முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புயல் வந்தது. வெள்ளம் வந்தது. இவைகளாலே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கினோம் என்று சொல்லப்பட்டது. இந்த நிவாரணம் வழங்குவதிலே ஊழல் நடைபெற்றிருக்கிறது என்று நான் அப்போதே குறிப்பிட்டேன். அதைப் போலவே ஆளுநர் உரையின்மீது பேசும்போது குறிப்பிட்டேன். அதைத் தொடர்ந்து இப்போதும் சில விவரங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எப்படிப்பட்ட ஊழல்கள் நடந்திருக்கின்றன என்பதை ஆட்சியில் உள்ளவர்கள் உணர வேண்டும். மைலாப்பூர்—திருவல்லிக்கேணி தாலுக்கா அலுவலகத்தில் * * *

---

* * * தலைவரின் ஆணைப்படி அகற்றப்பட்டது.

பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருவருமாகச் சேர்ந்து ஒரு நாள் ரூ. 25,000-க்குச் 'செக்' வாங்குகிறார்கள். அந்தச் செக்கிற்கான தொகையைப் பெற்று யாருக்கு வழங்கினார்கள்? இதை அரசாங்கம் விசாரணை செய்து அதைப்பற்றிய அறிக்கையை இந்த மன்றத்திலே வைக்க வேண்டும். நான் சொல்வது தவறு என்றால் எப்படிப்பட்ட தண்டனைக்கும் நான் தயாராக இருக்கிறேன். அந்தப் பகுதியிலிருப்பவர்கள் எல்லாம் அவர்கள் மீது கலெக்டருக்கு மனு போட்டார்கள். உடனே தந்தி கொடுத்து, அந்த அதிகாரிகளை மாற்றிவிட்டார்கள். கலெக்டருக்குத் தெரிகிறது இந்த அதிகாரிகள் தவறு செய்துவிட்டார்கள் என்று . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அதிகாரிகளைப்பற்றி உறுப்பினர்கள் அவையில் குறிப்பிடும்போது, அவர்கள் இந்தப் பதவியில் இருக்கிறார்கள் என்றுதான் சொல்வது சரியே தவிர, அவர்களுடைய பெயர்களைச் சொல்வது சரியல்ல. எனவே உறுப்பினர் குறிப்பிட்ட அதிகாரிகளுடைய பெயர்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அதில் எப்படி ஊழல் நடைபெற்றது என்பதையும் சொல்ல விரும்புகிறேன். தயாளு நகர் என்று ஒரு பகுதி. அங்கே இருப்பவர்கள் மொத்தம் 32 பேர். ஆனால் அங்கே அரசாங்கத்தின் சார்பில் விநியோகிக்கப்பட்ட புடவை வேட்டிகளின் எண்ணிக்கை 62. அடுத்து வீரபாண்டிய நகரில் 196 பேர் குடியிருக்கிறார்கள். அங்கே 594 பேருக்கு வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. எப்படி இத்தனை பேருக்கு அங்கே வழங்க முடிந்தது? அதிகப்படியானவர்கள் எல்லாம் ஆகாயத்திலிருந்து அங்கே திடீரென்று குதித்துவிட்டார்களா? இல்லை, புதிதாக அங்கே நகர் உருவாகிவிட்டதா? எதுவுமில்லை. அதைப் போலவே அவ்வைநகர் என்று ஒன்றிருக்கிறது. அங்கே இந்திரா காந்தி தெருவில் குடியிருப்பவர்கள் 111 பேர். ஆனால் 634 பேருக்கு அங்கே வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட முறைகேடுகள் எல்லாம் ஏன் நடந்தன என்றால், ஆளுங்கட்சிக்காரர்களின் கையெழுத்தைப் பார்த்து அதிகாரிகள் இந்த விநியோகங்களைச் செய்தார்கள். உண்மையிலேயே புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த அரசாங்கம் உதவி செய்திருக்கிறதா என்றால், இல்லை. அதிலே கட்சி அரசியல்தான் விளையாடியது. எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்கள் குடிசைகளை இழந்து வீடுகளை இழந்து வேதனைப்பட்டவர்களில் பலருக்கு இன்னமும் நிவாரணம் போய்ச் சேரவில்லை. முதலமைச்சர் அவர்கள்கூட இங்கே தத்துவங்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். குறைகளை எடுத்துச்



சொன்னால், கவனிக்கப்படும் என்றார்கள்; தவறுகள் செய்யப்பட்டிருந்தால், நியாயம் வழங்கப்படும் என்றார்கள். இவ்வளவும் சொல்லியதற்குப் பிறகு என்ன நிலைமை? இன்றுவரையில் பாதிக்கப்பட்ட சேத்துப்பட்டு பகுதி குடிசைவாழ் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. ஆக, இப்படி அரசாங்கம் மேற்கொள்ளுகிற நிவாரணப் பணிகள், திட்டங்கள் எல்லாம் ஆளும் கட்சிக்காரர்களுக்கு மட்டும் தான் என்றால், அது நியாயமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுமென்று சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஒரு குற்றச்சாட்டை சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பேசும்போதே குறிப்பிட்டேன். எங்கேயோ திருடு போனால் பரவாயில்லை. அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் திருத்தணி சுப்பிரமணியசுவாமி கோயிலிலிருக்கிற வேல் அழிக்கப்பட்டிருக்கிறது, சுப்பிரமணியசுவாமியின் கழுத்திலிருந்த நகைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன என்று ஒரு குற்றச் சாட்டை அன்றையதினம் நான் சொன்னபோது மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் உடனே எழுந்து, "சம்பந்தப்பட்ட அதிகாரிமீது நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்கள். அதைக் குறித்து விசாரிக்கப்படும் என்றார்கள். இதைச் சொல்லி ஓராண்டாகிறது. நடவடிக்கை எடுத்தார்கள். என்ன நடவடிக்கை தெரியுமா? இந்த மாதம் ஏப்ரல் 3, 4 தேதிகளில் அது பற்றி விசாரணை நடக்கும் என்று அறிவித்திருக்கிறார்கள். நான் அப்போது சொன்ன குற்றச்சாட்டு, நகைகளை அழித்துவிட்டிருக்கிறார்கள், வேல் அழிக்கப்பட்டிருக்கிறது என்பது. ஆனால் கலெக்டருடைய பெர்சனல் அசிஸ்டெண்டு ஒரு உத்தரவு போட்டிருக்கிறார். அதனுடைய போட்டோஸ்டெட் காப்பி என்னிடம் இருக்கிறது. "திருத்தணி சுப்பிரமணிய சுவாமிக்குச் சொந்தமான ரத்தின வைரம் பதித்த பொன் நகைகளை மோசடியாக மாறுதல் செய்த" என்று குறிப்பிட்டு, அதுபற்றி விசாரணை நடக்கும் என்று உத்தரவிட்டிருக்கிறார். நான் சாட்டிய குற்றச்சாட்டு அதுவல்ல. நான் சொன்னது திருத்தணி சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் இருக்கும் வேல் ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சாரியார் கொடுத்தது. அந்த வேல் அழிக்கப்பட்டிருக்கிறது. சில நகைகள் திருடுபோயிருக்கின்றன. பலநகைகள் பட்டறைக்குக் கொண்டுபோய் உருத்தெரியாமல் அழிக்கப்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணமான அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்தக் குற்றச்சாட்டு குறித்து விசாரிக்க வேண்டுமென்றுதான் நான் கேட்டேன். ஆனால் இன்றையதினம் அரசாங்கம் வேறு எதைப்பற்றியோ விசாரித்துக் கொண்டிருக்கிறது என்றால், இனி எதிர்க் கட்சியினர் என்ற முறையில் நாங்கள் இந்த மன்றத்திலே குற்றச் சாட்டுகளைச் சொல்வதுகூடத் தேவையில்லையோ என்று கருத வேண்டியிருக்கிறது.

அடுத்து, ஒரு விஷயத்தையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (ஒரு புகைப்படத்தை தம் கையிலே உறுப்பினர் வைத்துக் கொண்டிருக்கிறார்) இந்தப் புகைப்படத்தை தலைவர் அவர்களிடம் காட்டி இங்கே அதைப்பற்றிக் குறிப்பிட அனுமதி பெற்றுள்ளேன் என்பதை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பல்வேறு நாடுகளுக்குச் சென்று வந்தவர்கள். சிங்கப்பூருக்கும் சென்று வந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அங்கே தெருக்களில் நடக்கிறபோது, சிறுதூசியைக்கூட பார்க்க முடியாது. அந்த அளவுக்குத் தெருக்களைச் சுத்தமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நம் நாட்டிலும் தெரு ஓரங்களில் பிளாட்பாரங்கள் இருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, நடைபாதைகளில் இருந்த 'பிளாட்பாரத்துக் கோயில்களை' அகற்ற வேண்டுமென்று உத்தரவிட்டோம். பிளாட்பாரம் நடப்பதற்குத்தான் இருக்க வேண்டுமே தவிர, கோயில்கட்டுவ தற்கு அல்ல என்று சொன்னோம். அப்படி நடைபாதைகளில் கோயிலே இருக்கக்கூடாது என்று சொன்ன நிலை மாறி, இன்றைக்கு என்ன நடை பெற்றுக் கொண்டிருக்கிறது என்றால், பிளாட்பாரத்தில் கடைகளைக் கட்டி ஏலத்துக்கு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது மாநிலத்தில் வேறு எங்காவது நடைபெற்றாலும் பரவாயில்லை. சென்னை நகரத்திலே உயர்நீதி மன்றத்தைச் சுற்றியுள்ள பிளாட்பாரத்தில் கடைகளைக் கட்டி, ஆளுங்கட்சிக் காரர்கள் ஒரு கடைக்கு ரூ. 5,000 பகடி வாங்கிக்கொண்டு நாளொன்றுக்கு வாடகையாக ரூ. 2 வசூல் செய்கிறார்கள். அதற்கான போட்டோக்களை நான் வைத்துக்கொண்டிருக்கிறேன். (போட்டோக்களை மாண்புமிகு மேல்வைத் துணைத் தலைவருக்கு உறுப்பினர் அளித்தார்.) தலைவர் அவர்கள் இதை அரசாங்கத்திற்கு அனுப்பி இனியாவது இப்படிப்பட்ட குறை பாடு வராமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிளாட்பாரங்கள் இருப்பது கடை வைத்துக்கொள்வதற்காக அல்ல. மக்கள் நடமாடத்தான் பிளாட்பாரம் இருக்கிறது. ஆனால் ஆளுங்கட்சியில் செல்வாக்குப் பெற்றவர்கள், முதலமைச்சர் அவர்களுக்குப் பக்கத்திலே இருப் பவர்கள் அல்லது அவரைத் துதிபாடுகிறவர்கள் ஆகியவர்கள்தான் இந்தக் காரியங்களைச் செய்கிறார்கள். ஆக இவர்களையெல்லாம் இந்த ஆட்சியாளர் கள் அனுமதித்துவிட்டு, இனி திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிக் குறை சொல்ல லாயக்கற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதைத்தான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இவைகளையெல்லாம் அனு மதிக்கிற ஆட்சியாளர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றிப் பேசுவ தற்கு, விளக்கம் அளிப்பதற்கு எந்தத் தகுதியுமில்லாதவர்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.





இந்த அரசாங்கத்திலே தலையீடே இல்லை என்று இங்கே பல உறுப் பினர்கள் குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே நிர்வாகத்தில் எந்தவிதமான தலையீடும் இல்லையா? எத்தனையோ சொல்ல முடியும் என்றாலும் உதாரணத்திற்கு ஒன்றைமட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Office of the Works Manager, Government Central Press, Madras-1. Proceedings No. CP|3428|TE|12|79, dated 9th January.

இது ஒரு அரசாங்க உத்தரவு. என்ன உத்தரவு என்றால் ஒரு அம்மையாரை அரசாங்கம் 8 ஆம் தேதியன்று சஸ்பெண்ட் செய்கிறது. ஒரு அரசாங்கத் திற்கு ஊழியரை சஸ்பெண்ட் செய்யக்கூடிய அதிகாரம் இருக்கிறது. நானும் அரசாங்கத்தில் வேலை செய்தவன்தான். சஸ்பெண்ட் செய்வார்கள், பின்னாலே எக்ஸ்பிளநேஷன் கேட்பார்கள். அதற்கு ஒரு 3 நாள் அவகாசம் கொடுப்பார்கள். அந்த ஊழியர் கொடுக்கும் எக்ஸ்பிளநேஷனை அரசாங்கம் பரிசீலிக்கும். பிறகு சமாதானம் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இல்லை என்று கூறி தண்டனை கொடுக்கும். இதுதான் நடைமுறை. அந்தப்படி 8 ஆம் தேதி அந்த அம்மையார் சஸ்பெண்ட் செய்யப்படுகிறார். 9 ஆம் தேதியே மீண்டும் அவர் ரி-இன்ஸ்டேட் செய்யப்படுகிறார். எப்படி?

"Pending charges to be levelled against Thirumathi Jayalakshmi, Junior Time-Keeper, Government Central Press, Madras-1, orders passed in the Proceedings cited suspending her from service is revoked with immediate effect."

8 ஆம் தேதி சஸ்பென்ஷன், 9 ஆம் தேதி வேலை திரும்பக் கிடைக்கிறது. இடையிலே அந்த அம்மையாருக்கு என்ன அவ்வளவு பெரிய சாமர்த்தியம் இருந்ததோ எனக்குப் புரியவில்லை. திரும்ப அந்த அம்மையாருக்கு வேலை கிடைக்கிறது. நான் கேட்கிறேன், இது நிர்வாகத்தில் தலையீடு அல்லவா? தலையீடு இல்லாமலே இந்த அரசாங்கத்தில் 24 மணி நேரத்தில் அந்த அம்மையார் திரும்ப வேலையைப் பெறுகிறார். அந்த அளவுக்குக் கருணை காட்டக்கூடிய அரசாங்கமா இது?

* மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் அரசாங்கம் ஆணையிட்டதாகச் சொல்லுகிறார்கள். அரசாங்கம் ஆணையிட்டதா அல்லது கவர்ன்மெண்ட் பிரஸ் அலுவலரால் அந்த உத்தரவு போடப்பட்டதா?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : குறுக்கீடுகளைத் தலைவர் அவர்கள் மனதில் கொண்டு நேரம் அளிக்க வேண்டும்.

நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்றால், கவர்ன்மென்ட் பிரஸ் என்பது அரசாங்கம் இல்லையா? இதெல்லாம் என்ன பேச்சு? கவர்ன்மென்ட் பிரஸ் அரசாங்கமில்லை என்றால் என்ன பொருள்?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** அமைச்சர் அல்லது செயலாளர் கையெழுத்திட்டுச் சென்றால்தான், அது அரசாங்க ஆணையாகும். கவர்ன்மென்ட் பிரஸ்ஸில் இருக்கிற ஒரு கீழ் மட்டத்தில் இருந்தும் அதிகாரி கையெழுத்துப் போட்டு அனுப்புகிற உத்தரவு அரசாங்க ஆணை என்று சொல்வது சரியில்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அமைச்சர் அவர்கள் இந்த மாதிரியெல்லாம் விளக்கம் தரக்கூடாது.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தவறான ஒரு தகவலை உறுப்பினர் தருகிறபோது, அரசாங்கத்தின் சார்பில் உரிய பதிலை அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவேதான் சொல்லுகிறேன் * * சரியல்ல. கீழ்மட்டத்தில் இருக்கிற அதிகாரி போட்ட உத்தரவை அரசு போட்ட உத்தரவாகச் சொல்வது முறையற்ற செயல் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** * * என்று அமைச்சர் அவர்கள் சொல்வது சரியான வார்த்தையல்ல.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அமைச்சர் அவர்கள் * * என்று நான் சொன்னால், அதை அமைச்சர் அவர்களால் சகித்துக் கொள்ள முடியாது. அதை அவர் வாபஸ் வாங்க வேண்டும்.

I strongly object to the statement of the Minister. Either he must withdraw his remarks...........

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதால்தான் நான் சொன்னேன். அவர் பேசும்போது என்ன சொன்னார் என்பதை தயவுசெய்து குறிப்பேட்டில் பாருங்கள். பார்த்த பிறகு சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு அமைச்சர் அவர்களும், உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களும் தங்கள் பேச்சில் * * என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களும் * * என்று குறிப்பிட்ட வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. கூடுமான வரையில் மாண்புமிகு அமைச்சர்கள் பேச்சினிடையே குறுக்கிடாமல் இருக்க வேண்டும். இதனால் உறுப்பினர் இன்னும் அதிகமான நேரத்தைக் கேட்பார்.

(பிற்பகல் 7-10)

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** துணைத் தலைவர் அவர்களே, சாட்டுகின்ற குற்றச்சாட்டு சரியாக இருக்குமானால், அமைச்சர்கள் தலையிடமாட்டோம். ஒரு தவறான குற்றச்சாட்டைச் சுட்டிக்காட்டி அரசு ஆணையிட்டது என்று சொல்வது பொருத்தமாக இல்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வேண்டாம், விட்டுவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** அரசாங்கம் ஆணையிட்டது என்று சொல்வது பொருத்தமில்லை. யாரோ கீழ்மட்டத்திலே பணியாற்றுகின்ற ஒரு அதிகாரி இட்ட ஆணையை அரசு பிறப்பித்தது என்று சொல்வது தவறு என்பதுதான் என்னுடைய வாதம். அந்த ஆணையை முன்னதாகவே தங்களிடம் காட்டி சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் காட்டி இந்த அவையிலே பேசப்பட்டிருக்குமானால், சரியாக இருந்திருக்கும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அமைச்சர் அவர்கள் உண்மைகளைத் தெரிந்துகொள்ளாமல் பேசுவது முறையில்லை. நான் பேசுவதற்கு முன் கூட்டியே அனுமதி பெற்றுத்தான் பேசுகிறேன். இவ்வளவு பொறுப்பாக ஆதாரத்தோடு நான் பேசுகிறேன், அமைச்சர் அவர்கள் யாரோ ஒருவர் போட்ட கையெழுத்து, ஆணை என்று சொல்கிறார். நான் கேட்கிறேன், அது அரசு அலுவலகம் இல்லை என்றால் அது என்ன கார்ப்பரேஷனா? பிரைவேட் லிமிடெட் கம்பெனியா அல்லது பார்ட்னர்ஷிப் கம்பெனியா?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், அந்த நெறியாளர் கூட அந்த ஆணையில் கையெழுத்திடவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1979 மார்ச் 20

திரு. ஆற்காடு நா. வீராசாமி : யார் கையெழுத்திட்டிருக்கிறார்கள் ? இதை எதிர்பார்த்துத்தான் 'ஒரிஜினல் ஆர்டரை'-க் கொண்டு வந்திருக்கிறேன். நான் கேட்க விரும்புகிறேன், அரசாங்கத்திலே இருந்து போடப்படும் எல்லா உத்தரவுகளிலும் அமைச்சர்களா கையெழுத்துப் போடுகிறார்கள்? அரசாணை போடுகிறார்கள் என்றால், அதிலே Chief Secretary கையெழுத்துப் போடுகிறார் என்றால், அவர் அரசாங்கத்தைச் சார்ந்தவரல்ல என்று சொன்னாலும் சொல்வார்கள். விசித்திரமான அரசாங்கம் இது. அந்த விவகாரத்திற்குள்ளே நான் போக விரும்பவில்லை. நீங்கள் தவறு செய்கிறீர்கள், அதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இரண்டாயிரத்து ஐந்நூறு கோடி ரூபாய் மூலதனம் போட்டு ஆறாவது அய்ந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றப்போவதாக திட்டக் கமிஷன் அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக உங்களிடத்திலே எங்கே பணம் இருக்கிறது ? நீங்கள் போட்டிருக்கின்ற பட்ஜெட்டிலே இருக்கிற பற்றாக்குறை ஒன்பது கோடியைச் சரிக்கட்டக்கூடிய வகையிலே, தேங்காய்க்கு வரி போட்டிருக்கிறீர்கள், தீப்பெட்டிக்கு வரி போட்டிருக்கிறீர்கள். தேங்காய்க்கும், தீப்பெட்டிக்கும் 1 கோடி, 1 கோடி வரி போட்டு, இவ்வளவுக்குத்தான் வரி போட்டிருக்கிறோம் என்று சொல்லி, இந்த அரசாங்கம் நாட்டு மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கிறது. இரண்டாயிரத்து ஐந்நூறு கோடி ரூபாயில் இந்த நாட்டில் ஆறாவது அய்ந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றப் போவதாக அறிவித்து, அய்ந்து வருஷத்திலே 27 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதாகக் கூறுகிறார்கள். இருபத்தேழு லட்சம் பேர்கள் வேண்டாம், 27 ஆயிரம் பேருக்கு உங்களால் வேலை வாங்கித் தர முடியுமா? இந்த அய்ந்தாண்டுத் திட்டத்திலே நிச்சயமாக அது முடியாது. இதை நான் சொல்லவில்லை. மத்திய அரசாங்கத்திலே 'நேஷனல் சாம்பிள் சர்வே' ஆய்ந்து பார்த்து, 1978-ல் தமிழ்நாடு, கேரளா, மஹாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் கிராமங்களில் விவசாயத் துறையில் வேலை வாய்ப்பு உண்டாக்கித்தர முழுக்க முழுக்க எந்தவிதமான வாய்ப்பும் இல்லை என்று சொல்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இப்போது 7-15 மணி ஆகிறது. 45 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இவ்வளவு குறுக்கீடுகள் ஏற்பட்டதால் தான் 7-30-க்கு மேல் ஒரு நிமிடம் கூடப் பேசுவதில்லை. போகிற வேகத்திலே இப்படிக் குறுக்கிடுகிறார்கள்.



1979 மார்ச் 20]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : குறுக்கிட்டாலும், சீக்கிரம் முடிக்க வேண்டும்.

(திரு. க. இராமமூர்த்தி எழுந்தார்)

MR. DEPUTY CHAIRMAN : The Hon. Minister is on his legs. Please do not interrupt.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இருபத்தேழு லட்சம் பேருக்கு வேலை கொடுப்போம் என்கிறீர்கள். இருபத்தேழு ஆயிரம் பேருக்குக் கூட வேலை கொடுக்க வாய்ப்பில்லை. நேஷனல் சேம்பிள் சர்வேயில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய நிதியமைச்சர் அவர்களுடைய சாமர்த்தியத்தை உண்மையிலேயே பாராட்ட வேண்டும். கிராமத்திலே இருக்கின்றவர்களுக்கு எல்லாம் வேலைவாய்ப்பு தரப்போகிறோம், மூன்று ரூபாய் சம்பளம், கொஞ்சம் கோதுமை, கொஞ்சம் அரிசி என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கு Employment Guarantee Scheme என்று பெயர் சொல்லியிருக்கிறார்கள். உள்ளபடியே வேடிக்கை என்னவென்றால், இப்படி ஒரு திட்டத்தை அன்றையதினம் ஆட்சிப்பொறுப்பிலே இருந்த நாங்கள் கொண்டு வந்தோம். வெளியே சொல்ல நீங்கள் பயப்படுகிறீர்கள். மூன்று ரூபாய் கொடுத்து, வேலை கொடுக்கின்ற திட்டம் நீங்கள் புதிதாகக் கொண்டு வந்த திட்டமா?

" 1971—G.O. Ms. No. 1132. dated 10th May 1971—R.D. & L.A. Department—Crash Scheme for rural employment—Implementation of the programme in Tamil Nadu—Orders issued ".

யாருக்குத் தெரியாது இது? இதிலே தெளிவாகச் சொல்லியிருந்தார்கள்,

' The scheme itself aims at employment o fpersonnel with a wage not exceeding Rs. 100 a month with a continuous employment to the extent possible for at least one year ".

குறைந்த அளவு ஓராண்டுக் காலத்திற்கு வேலை என்றும், மாதம் 100 ரூபாய் சம்பளம் என்றும் இந்தத் திட்டம் கலைஞர் ஆட்சிக் காலத்திலே 1971 ஆம் ஆண்டிலே பிறப்பிக்கப்பட்ட சட்டம். நீங்கள் 90 ரூபாய்தான் என்கிறீர்கள். அதுவும் guarantee இல்லை. இடையிலே ஒருநாள் அல்லது இரண்டு நாட்கள் வேலை இல்லாமல் போனாலும் போகும். அப்படிப் போய் விட்டால் 1 ரூபாய் என்கிறீர்கள். இப்படி ஒரு உத்தரவைப் போட்டுவிட்டு, தமிழ் நாட்டில் உள்ள அனைவருக்கும் வேலை கொடுக்கிறோம் என்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நீங்கள் போட்ட திட்டம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ளவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு, இது எல்லோருக்கும் வேலை கொடுப்பதற்காகப் போடப்பட்டுள்ள திட்டம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** 1971--லே இந்தத் திட்டத்தின் கீழ் வேலைக்குச் சேர்ந்தவர்கள் அனைவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று நிரூபித்துவிட்டால், என்ன தண்டனை கொடுத்தாலும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். வேலை வாய்ப்பே இல்லாமல் இருந்த லட்சக்கணக்கான மக்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த அருமை சகோதரர்கள் வேலைக்குப் போய், தினந்தோறும் மூன்று ரூபாய், நான்கு ரூபாய் என்று பணத்தைச் சம்பாதித்தார்கள் என்று சொன்னால், அவர்கள் எல்லாம் தி.மு.க. என்று சொன்னால் நான் ஏற்றுக்கொள்கிறேன். தி.மு.க.-விலே அவர்கள்தான் இருப்பார்கள் என்று சொன்னால், இந்தப் பாமர மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள் தான் தி.மு.க.-விலே இருப்பார்கள் என்று சொன்னால், நான் மறுக்கவில்லை. ஆனால், இது மத்திய அரசுத் திட்டம், அவர்கள் இதற்காக உதவி செய்கிறார்கள் என்று சொன்னபோது, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் "இல்லையில்லை, இதற்கும், அதற்கும் வித்தியாசம் இருக்கிறது, வேறுபாடு இருக்கிறது" என்றெல்லாம் சொன்னார்கள். நான் கேட்கிறேன், உண்மையிலே மத்திய அரசு கொண்டு வந்திருக்கின்ற அந்தத் திட்டத்திற்கும், இந்தத் திட்டத்திற்கும் சம்பந்தம் இல்லையென்று சொன்னால், நீங்கள் உள்ளபடியே, இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசிடமிருந்து சப்சிடி கேட்டிருக்கிறீர்களே, இல்லை என்று மறுக்க முடியாது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சம்பந்தம் இல்லை என்று சொல்லவில்லை, வித்தியாசம் இருக்கிறது என்று சொன்னேன். இதிலே guarantee இருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மத்திய அரசு கொண்டு வந்த ஒரு திட்டத்துடன் நீங்கள் 'guarantee' என்ற ஒரு வார்த்தையை மட்டும் போட்டுவிட்டால், அந்தத் திட்டம் இல்லை என்று ஆகிவிடுமா? நீங்கள் மத்திய அரசிடமிருந்து இதற்காக உதவி பெறப்போகிறீர்கள், அதற்கு கோதுமை வேண்டுமென்று கோட்டையிலேயிருந்து மத்திய அரசுக்குக் கடிதம் போயிருக்கிறது. ஆகவே, இந்த மன்றத்திற்கு முழுத் தகவலைக் கொடுங்கள் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டம்தான் பெரிய திட்டம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன், கடந்த இரண்டாண்டுக்



காலத்திலே, Chemical Industries, Textile Industries, Electronic Industries, Pharmaceutical Industries போன்ற திட்டங்கள் கேரளா, கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் எவ்வளவு வளர்ச்சியடைந்திருக்கின்றன என்பதை நாம் பார்க்க வேண்டும். அப்பேர்ப்பட்ட தொழில்கள் வந்தால் தானே, இந்த நாட்டிலே உள்ள மக்களுக்கு வேலை கிடைக்கும்? நாட்டிலே உள்ள மக்கள்கூட வேண்டாம், உங்கள் கட்சிக்காரர்களுக்காவது வேலை கொடுங்கள், நீங்கள் அதற்காக முயற்சி செய்யுங்கள், அவர்களும் இந்த நாட்டிலே பிறந்தவர்கள்தானே, அவர்களும் இந்த நாட்டிலே வாழ வேண்டியவர்கள் தானே, ஆனால், 'நாங்கள் முயற்சியும் எடுக்க மாட்டோம், யாருக்கும் வேலையும் கொடுக்க மாட்டோம்' என்கிறீர்கள். இது தவறு என்பதைத் தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றையதினம் தமிழ் நாட்டிலே 'TIIC' என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. Tamil Nadu Industrial Investment Corporation. அதிலே இன்றையதினம் எந்த அளவுக்கு அநீதிகள் நடக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். அங்கே ஒரு அதிகாரி இருக்கிறார். அவர் மேனேஜிங் டைரக்டராக இருக்கிறார். அவர் உள்ளபடியே அங்கே ஒரு சர்வாதிகாரி போல இருந்து கொண்டிருக்கிறார். இந்த அரசாங்கம் சொல்வதைக்கூட கேட்கவில்லை. அங்கிருந்துதான் தொழில் வளர்ச்சிக்குப் பணம் கடன் கொடுக்க வேண்டும். இன்றையதினம் யாருக்குப் பணம் கொடுக்கிறார்கள்? எவன் திருப்பிக் கட்டமாட்டானோ அவனுக்குக் கொடுக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன், ஒரு நிறுவனம், Micro Tools Limited என்பது, மதிப்பிற்குரிய திரு. ஏ. வி. அனந்தகிருஷ்ணன் என்பவருக்குச் சொந்தமானது. அந்த நிறுவனம் 50 லட்சம் ரூபாய் பணம் வாங்கியது. பணம் வாங்கியது 1964-லே. இன்றுவரை, தலைவர் அவர்களே, அந்தப் பணத்துக்கு வட்டிகூடக் கட்டவில்லை. நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், கடன் வாங்கியது அவருடைய உரிமை. இவர்கள் கொடுக்கிறார்கள், தொழில் வளர வேண்டுமென்பதற்காகக் கொடுக்கிறார்கள், அந்தப் பணத்துக்கு உரிய வட்டிகூட கட்டவில்லை என்று சொன்னால், ஒரு நடவடிக்கைகூட இல்லை. ஆனால் அந்த நிறுவனத்திடமிருந்து அலை ஓசை 1½ லட்சம் ரூபாய் கடன் வாங்கியிருந்ததை, உடனடியாகக் கட்டவில்லை என்பதற்காக உடனே சீல் வைத்தார்கள். ஆனால் 50 லட்சம் ரூபாய் வாங்கிய ஒருவரிடம், ஒரு பைசா வட்டியாகக்கூடக் கட்டாத ஒருவரிடம் பணம் கட்ட வேண்டுமென்று கூட நோட்டீஸ் கொடுக்க வேண்டாமா? அங்கு என்ன தொழில் நடக்கிறது என்றாவது கேட்க வேண்டாமா? ஆனால் அந்தத் தொழிலுக்கு மத்திய அரசு 50 லட்சம் ரூபாய் கடன் கொடுத்தது. மத்திய அரசுக்குரிய

பணத்தைக் கொடுக்கவில்லை என்பதால், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஒரு ரிசீவரை அப்பாய்ட் செய்து அந்தத் தொழிற்சாலையை எடுத்திருக்கிறார்கள். அப்படி, அந்தத் தொழிற்சாலையை மத்திய அரசாங்கம் எடுக்கிறது என்று சொல்லும்போது, நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்களென்றால், அவர்தான் இந்த நாட்டிலே தொழிலை வளர்க்க வந்த உத்தமன், மகான் என்று சொல்லி இந்த நிறுவனத்திலே தலைவராக ஆக்கியிருக்கிறீர்கள்.

(பிற்பகல் 7-20)

TIIC நிறுவனத்தின் தலைவராக அவரை ஆக்கியிருக்கிறார்கள். உருப்படுமா இந்த நாடு? இந்த நாட்டிலே தொழில்கள் வளருமா? "வாங்கிய கடனை 15 ஆண்டுகளுக்குப் பின்னும் காலணாக்கூட கட்டமாட்டேன். வட்டியை ரத்து செய்ய வேண்டும், முதலைத் திருப்பித் தர அவகாசம் வேண்டும்" என்று கேட்கிற ஒருவரைத் தலைவராக ஆக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், இந்த நாட்டிலே தொழில்கள் வளரப் போவதில்லை என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் தேவையில்லை. அந்த M.D-க்கு இந்த நாட்டிலே தொழில்களை வளர்ப்பதிலே அக்கறை இல்லை. எல்லாத் துறைகளிலும் இப்படிப்பட்ட அதிகாரிகள் இருக்கிறார்கள். அரசாங்கமே பார்த்து வேறு யாரையாவது ஒருவரைப் போட வேண்டும். உங்களுக்குப் பின்னாலேயே இருக்கிற 'Non-official' ஒருவரைப் போடுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதிகாரிகளையே நம்ப வேண்டுமென்று நினைக்கிறார்கள். அவர்கள்தான் இவர்களின் காலை வாரிவிடப் போகிறார்கள். இவர்களுடைய ஆட்சிக்கு அவர்கள்தான் உலை வைக்கப் போகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஓசூர் பகுதி தொழிலில் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது என்று அங்கே தொழில்களை வளர்க்க வேண்டுமென்று சொல்லி, உற்சாகப்படுத்தும் வகையில் அங்கே நூற்பாலைகளுக்கும் மற்ற ஆலைகளுக்கும் சேர்த்து 16 லைசென்சுகள் கேட்டு விண்ணப்பத்தை அனுப்பியிருக்கிறார்கள். அந்தக் கோப்பு முதலமைச்சரிடத்திலே கடந்த 5 மாதங்களாகத் தேங்கிக் கிடக்கிறது. இன்னும் அந்தக் கோப்பு நகரவில்லை. முதலமைச்சருக்கு எவ்வளவோ வேலைகள் இருக்கலாம். இந்த நாட்டிலே தொழில்களை ஆரம்பிக்க அனுப்பப்படுகிற கோப்புகள் கூட நகரவில்லையென்றால், வேறு எதைத்தான் செய்யப் போகிறார்கள்? "நாங்கள் ஆஸ்தான கவிஞரைப் போடப் போகிறோம், சினிமாப் படங்களுக்குப் பரிசு கொடுக்கப் போகிறோம், வேறு எதையும் செய்யப் போவதில்லை" என்றாவது அறிவிக்கட்டும்.





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : இன்னும் 3 நிமிடங்கள் தான் இருக்கின்றன.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி** : முடித்துவிடுகிறேன். அவசரச் சட்டக் காலத்தில் ஆளுநர் ஆட்சி இருந்ததைப்பற்றி இப்போது விமர்சித்துக் கொண்டிருக்கிறோம். தமிழ் நாட்டிலேயே ஒரு மோசமான காலம் இருந்தது என்றால், அவசரச் சட்டம் இருந்த அந்த ஓராண்டுக் காலம்தான். அந்தக் காலத்திலேகூட இந்த நாட்டிலே இருக்கிற மீனவர்களுக்கு 200 விசைப் படகுகளைக் கொடுத்தார்கள். ஆனால் மீனவ நண்பன் ஆட்சியிலே இதுவரை ஒரு விசைப் படகுகூடக் கொடுக்கவில்லை. ஆளுநர் ஆட்சியிலே கூட மீனவர்களுக்கு 200 விசைப்படகுகள் வாங்கிக் கொடுக்கப்பட்டன. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி வந்த பிறகும், மீனவர்களுக்காக அவதாரம் எடுத்தவர் இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிறபோது, ஒன்று கூட வாங்கவில்லை என்று நினைக்கும்போது, இந்த வெறுஞ்செலவுத் திட்டத்தை என்னால் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை. மீனவர்களை எப்படியாவது மேம்படுத்த வேண்டுமென்று ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அது என்ன திட்டம் என்று பார்த்தேன். அதற்காக ஒரு கார்ப்பரேஷனைப் போடப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு உடனடியாகத் தேவை ஒரு இடம். அந்த இடத்தை வாங்க அதிகாரிகளை அனுப்பியிருக்கிறார்கள். அவர் போய் ஒரு நடிகையின் வீட்டைப் பார்த்திருக்கிறார். சென்னையில் வேறு வீடுகளே இல்லையா? சினிமாத் துறையையே சுற்றிச் சுற்றி எப்படி வருகிறார்கள் என்பதற்கு உதாரணமாகச் சொல்லுகிறேன். நடிகையின் வீட்டை அரசாங்கம் எடுக்க ஒரு. ஐ.ஏ.எஸ். அதிகாரியை அனுப்பி ஆறரை இலட்சம் ரூபாய்க்கு பேரம் பேசுகிறார்கள். இதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வேலை செய்கிறது. ஒரு நடிகையின் வீட்டை எடுப்பதற்கும் அவருக்கு உதவி செய்வதற்குமா இந்த ஆட்சி அமைக்கப்பட்டது? இதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மீனவர்களுக்கு உதவுங்கள். ஏனென்றால் அவர்கள் உங்களை நம்பியவர்கள். ஆனால் நடிகை, நடிகர்கள் உங்களை நம்பியவர்கள் அல்ல. ஏதோ நீங்கள் ஆட்சியிலே இருப்பதால், நம்புவதாக நடித்துக் கொண்டிருப்பவர்கள். நடிப்பவர்களை நம்பாதீர்கள், நலிந்து போனவர்களை நம்புங்கள் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டாகப் பிரிந்ததற்கே காரணம் என்னவென்று ஒரு பொதுக் கூட்டத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த நாட்டிலே இருக்கக் கூடிய இலட்சக் கணக்கான முன்னேற்றக் கழகத் தொண்டர்களைக் கணக்குக் கேட்டேன்

என்று சொன்னார். அவர் அப்படிக் கேட்டது சரியா, தப்பா என்ற விவாதத்திற்கு நான் வரவில்லை. ஆனால் இவர்கள் இந்த ஆட்சிக்கு வந்து இரண்டாண்டுகள்கூட ஆகவில்லை, இந்த நிலையில் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக எம்.எல்.ஏ., எம்.எல்.சி; அமைச்சர்கள், எம்.பி.-க்கள், ஆளும் கட்சியின் அமைப்பாளர்கள் ஆகியவர்களுடைய கணக்கைக் காட்டத் தயாராக இருக்கிறார்களா? மாண்புமிகு திரு. இராமமூர்த்தி அவர்கள் கூடச் சொன்னார்கள், கள்ளச் சாராயம் ஆறாக ஓடுவதைப்பற்றி. அதிலே மூழ்கியவர்கள் எத்தனை பேர்? மூழ்கி மாடிகளை வளர்த்துக் கொண்டவர்கள் எத்தனை பேர்? இதற்குக் கணக்கு உண்டா? அதை இந்த மன்றத்திலே வைக்கத் தயாரா? எத்தனை எம்.எல்.ஏ.-க்கள் 1977-க்கு முன்னால் கார் வைத்துக் கொண்டிருந்தார்கள்? இதைத்தானே இவர்களும் முன்பு கேட்டார்கள்? இப்போது இவர்களுடைய எம்.எல்.ஏ.-க்கள் என்ன மாட்டு வண்டியிலா போகிறார்கள்?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்களை சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மணி ஏழரை ஆகப் போகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இன்னும் 5 நிமிடங்கள் இருக்கின்றன, இந்தப் பக்கத்திலிருந்து பார்த்தால். அது மட்டுமல்ல, பல பிரச்சினைகள் இன்று நாட்டிலே இருக்கின்றன. இந்த நாட்டிலே இன்றையதினம் சட்டம், ஒழுங்கு இல்லை என்று எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள் விவசாயிகள் போராடினால், சுடுகிறார்கள்,

பிணங்கள் விழுகின்றன. சுடலாமா, சுடக்கூடாதா என்ற வாதத்திற்குள் நான் போகவில்லை. நீங்கள் வந்தால் சுடமாட்டீர்கள் என்று விவசாயிகள் நம்பினார்கள். ஏனென்றால் 'விவசாயி' சினிமாப் படத்தைப் பார்த்தவர்கள். ஆனால் இன்றைய தினம் இந்த ஆட்சியிலே விவசாயிகள் சுடப்படுகிறார்கள். மிரட்டப்படுகிறார்கள். இன்றைக்கு விவசாயிகள் சங்கத் தலைவரின் உயிருக்கே ஆபத்து வருமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, இன்றைய தினம் மாணவர்களும் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்படுகிறார்கள். இன்றையதினம் எனக்குக் கிடைத்த தகவலின்படி, மதுரை சட்டக் கல்லூரி மாணவர்களின் மண்டை பிளக்கப்பட்டு, 3 பேர்கள் அபாயகரமான நிலையில் இருக்கிறார்கள். இன்றைக்கு இந்த ஆட்சியில் யாருக்குமே பாதுகாப்பு இல்லை. தொழிலாளர்கள் பிரச்சினையிலும், தொழில் முதலாளிகள் பாராட்டக் கூடிய அளவுக்கு, நன்றி செலுத்தக்



கூடிய அளவுக்கு முதலாளிகளுக்குச் சாதகமான நிலையில் இந்த ஆட்சி நடக்கிறது. உள்ளபடியே தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை இருக்கிறது.

இந்த ஆட்சியினுடைய நிர்வாகத்திலே எந்த அளவுக்கு வேதனைப்பட வேண்டியிருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். 'Civil List of Tamil Nadu Civil Servants'. என்று அரசாங்கம் ஒரு புத்தகத்தை அச்சடித்துக் கொடுத்திருக்கிறது. தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு ஒருவரை நியமித்திருக்கிறார்கள். அவருடைய பெயரைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். ஏனென்றால் சொல்லியே ஆக வேண்டுமென்ற நிலை இருக்கிறது. *** என்ற ஒருவரை நியமித்திருக்கிறார்கள். நியமிக்க வேண்டாமென்று நான் சொல்லவில்லை. அவருடைய தகுதி S.S.L.C. S.S.L.C. படித்த ஒருவரை I.A.S. ஆக ஆக்கியிருக்கிறார்கள். அவர் நீண்ட காலம் சர்விசிலே இருந்திருக்கலாம், ஆகவே அரசாங்கம் அவருக்கு உதவ நினைத்திருக்கலாம், ஆகவே சிபார்சு செய்திருக்கலாம். அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. S.S.L.C. படித்த ஒருவரை I.A.S. ஆக்கி அவரை எங்கேயாவது மாவட்டக் கலெக்டராகப் போட்டிருக்கலாம். அல்லது செக்ரடேரியட்டிலே ஒரு அதிகாரியாகப் போட்டிருக்கலாம். ஆனால், எம்.ஏ., எம்.எஸ்ஸி., படித்தவர்கள் எல்லாம் இண்டர்வியூவுக்கு வரக்கூடிய தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மெம்பராகப் போட்டிருக்கிறார்களே, இது சரியா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** பெயர் சொல்லுவது சரியல்ல. அந்தப் பெயர் அவையின் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

Thiru K. RAMAMOORTHI: There is nothing wrong in mentioning the name of the particular person.

MR. DEPUTY CHAIRMAN: Since he is not here to defend himself, it is not proper to mention the name.

Thiru K. RAMAMOORTHI: What has he got to defend? He is an S.S.L.C. holder.

MR. DEPUTY CHAIRMAN: The hon. Member has mentioned that he is an officer. The name need not be mentioned. The Parliamentary procedure is that the House is never informed of the name of the person.

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நான் சொல்லுகிறேன். நீங்கள் கொடுத்த தீர்ப்பு . .

MR. DEPUTY CHAIRMAN : The Rules of Procedure provide that the hon. Member should never mention the name of the person.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய தீர்ப்பை ஏற்றுக்கொள்ளுகிறேன். எப்போது பெயர் சொல்லக் கூடாது என்றால், ஒருவர் மீது குற்றம் சொல்லும்போது, அவருடைய பெயரைச் சொல்லக்கூடாது. இன்ன தவறு செய்தார் என்று சொல்லும்போது, அவருடைய பெயரைச் சொல்லக் கூடாது. இன்னாரை இந்த அரசாங்கம் நியமித்திருக்கிறது, அய்.ஏ.எஸ். கொடுத்திருக்கிறது என்று பெயர் சொல்லாமல் எப்படிச் சொல்லுவது? அங்கே 8 பேர் இருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அதிலே ஒருவர் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர். அவருக்கு அய்.ஏ.எஸ். அந்தஸ்து கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

Thiru K. RAMAMOORTHY: I am afraid that it is too much on the other side.

Mr. DEPUTY CHAIRMAN: I am only telling you the procedure of which I have been informed. I will give you the relevant authority. You may please wait and I will get your the relevant authority for the position.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இதிலே நேரம் போய்விட்டது.

MR. DEPUTY CHAIRMAN : I will have to request the honourable Member to conclude his speech exactly at 7.30 Because of the interventions, I will give him one or two minutes more.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : ஆக மொத்தத்திலே பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலே இப்படி ஒருவரை நியமித்திருக்கிறார்கள். Deputy Collector உத்தியோகத்திற்காக மாணவர்கள் போகிறார்கள்,



Deputy Registrar of Co-operative Societies உத்தியோகத்திற்காக இண்டர்வியூவிற்குப் போகிறார்கள். அப்படிப்பட்டவர்களைத் தேர்வு செய்கிறவர்களுக்கு General Knowledge இருக்க வேண்டும் அல்லவா? பட்டப் படிப்பிற்கும், எஸ்.எஸ்.எல்.சி.-க்கும் உள்ள இடைவெளியை உணர வேண்டாமா? M.B.B.S., B.E. படித்தவர்கள் நேர்முகத் தேர்வுக்குப் போகும்போது, அவரே ஒரு கேள்வியைக் கேட்டால், மாணவர்கள் சொல்லுவது சரியா, தப்பா என்று தெரிந்துகொள்ளுகிற ஒருவரை நியமித்தால் பாராட்டுவேன். எஸ்.எஸ்.எல்.சி. படித்த ஒருவரை அய்.ஏ.எஸ். ஆக்குங்கள், அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அவரைப் போடுவதற்கு தமிழ்நாடு பப்ளிக் சர்விஸ் கமிஷன்தானா கிடைத்தது என்பதை இந்த அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு இப்படியே நிலைமைகள் போனால் நலமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன்றைக்கு வழக்கறிஞர்கள் போராடுகிறார்கள், ஊர்வலம் வருகிறார்கள். மாணவர்கள் எல்லாம் அடிபட்டிருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கு யாருக்குமே பாதுகாப்பு இல்லை. அவர்கள் "எம். ஜி. ஆர். அரசாங்கத்தை டிஸ்மிஸ் செய்யுங்கள்" என்று தந்தியைக் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட அவல நிலை இந்த இரண்டாண்டுக் காலத்திற்குள்ளாகவே வரக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

(பிற்பகல் 7-30)

எனவே ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் சொல்கிறேன். இனிமேலாவது நீங்கள் போடுகின்ற திட்டங்கள், கொண்டு வருகின்ற சட்டங்கள், நீங்கள் அளிக்கின்ற வரவு செலவுத் திட்டங்கள் அத்தனையும் இந்த நாட்டு மக்களுக்குப் பயன்படுகின்ற அளவுக்கு அமைய வேண்டுமென்ற என்னுடைய கருத்தினைக் கூறி இந்த அளவில் அமைகின்றேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை நான்கு மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-32)

## இணைப்பு I

[291 ஆம் பக்கத்தில் வினா 220 'அ'-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

(அ) 1978-ஆம் ஆண்டில், நக்சலைட்டுகள் திண்டிவனம், கிழக்குப் பதனவாடி (வட ஆர்க்காடு மாவட்டம்), திருச்சிராப்பள்ளி கண்டோன்மெண்டு, கடப்பட்டு கிராமம் (வட ஆர்க்காடு மாவட்டம்), செஞ்சி (தென்னார்க்காடு மாவட்டம்) ஆகிய ஐந்து இடங்களில் தாக்குதல்கள் நடத்தியுள்ளனர்.

(இ) அத்தாக்குதல்கள் ஒன்றில், இருவர் உயிரிழந்தனர்.

## இணைப்பு II.

[292 ஆம் பக்கத்தில் வினா 220 'ஆ'-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

(அ) கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தின் போது, சட்டம்-ஒழுங்கு சீர்குலைவைத் தடுப்பதற்காக, தமிழ்நாட்டின் நான்கு இடங்களில் போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இத் துப்பாக்கிப் பிரயோகத்தில், பின்வரும் எட்டுப்பேர் மரணமடைந்தனர்.

**மதுரை மாவட்டம்:—**

**வேடசந்தூர்**

(1) நாச்சிமுத்து.
(2) சுப்பிரமணியன்.
(3) சின்னச்சாமி கவுண்டர்.
(4) துரைராஜ் என்ற கிருஷ்ணமூர்த்தி.
(5) கருப்புசாமி.
(6) மாணிக்கம்.

**நொச்சியோடைப்பட்டி**

(7) ஆரோக்கியம் பிள்ளை.

**வட ஆற்காடு மாவட்டம் :—**

**ஒடுகத்தூர்**

(8) முருகேசன் என்ற குருநாதன்.

(ஆ) இறந்தவர்கள் அனைவரின் குடும்பத்திற்கும், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 5,000 வழங்கப்பட்டுள்ளது.



(இ), (ஈ), (உ) :—இறந்தவர்களுக்குச் சொந்தமாயிருந்த விவசாய நிலம் மற்றும் அரசுக்கு, கூட்டுறவு நிறுவனங்களுக்கு, மின் துறைக்கு அவர்கள் செலுத்த வேண்டிய கடன் பாக்கிகள் பற்றிய விபரம் :—

(1) நாச்சிமுத்து :—புளியமரத்துக்கோட்டை கிராமம்—பட்டா எண் 271-ல் மொத்தம் 8 ஏக்கர் 63 சென்டு புஞ்சை நிலம் இவருக்கு பாத்தியம். இவைகளில் 3 கிணறுகளும், 2 மின் பம்பு செட்டும், ஆயில் மோட்டார் ஒன்றும் உள்ளன. அவை அனைத்தும் இவருக்கு உரிமையானவை.

புளியமரத்துக்கோட்டை விவசாய கூட்டுறவு சங்கத்திற்கு ரூ. 4,000-ம், ஒட்டன்சத்திரம் நிலவள வங்கிக்கு ரூ. 7,000-ம், வருவாய்த் துறைக்கு ரூ. 11.71-ம் இவர் செலுத்த வேண்டியுள்ளது.

ஒட்டன்சத்திரம் மின் இலாகாவிற்கு இவர் ரூ. 700 செலுத்த வேண்டியுள்ளது.

(2) சுப்பிரமணியன் :—கல்வார்பட்டி கிராமத்தில், பட்டா எண் 296-ல் 8 ஏக்கர் 56 சென்ட் புஞ்சை நிலத்தில், 2 ஏக்கர் 14 சென்ட் புஞ்சைத் தோட்டமும், பட்டா எண் 535-ல் 6 ஏக்கர் 52 சென்ட் புஞ்சை நிலமும் இவருக்குச் சொந்தமானவை. ஆக மொத்தம் இவருக்கு 8 ஏக்கர் 66 சென்ட் புஞ்சை நிலம் சொந்தமானது. கல்வார்பட்டி கிராமம் பேட்டுப் பட்டியில் உள்ள சர்வீஸ் கனெக்ஷன் எண் 13-ல் ஒரு மின் இணைப்பு பம்பு செட்டு உள்ளது. அரசுக்கோ, கூட்டுறவு கடன் சங்கங்களுக்கோ இவர் செலுத்த வேண்டிய நிலுவை எதுவும் இல்லை. மின்சார இலாகாவிற்குக் கூட்டுக் குடும்பமாகச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 800.75-ல் இவருக்கு இரண்டில் ஒரு பாகமாகிய ரூ. 400.38 நிலுவைத் தொகை செலுத்த வேண்டியுள்ளது.

(3) சின்னச்சாமி கவுண்டர்.—கல்வார்பட்டி கிராமத்தில், பட்டா எண் 559 மற்றும் 854 ஆகியவைகளில், மொத்தம் 22 ஏக்கர் 10 சென்ட் புஞ்சை நிலத்தில், இவருக்கு 5 ஏக்கர் 52½ சென்ட் சொந்தமானது. கைத்தியங்கோட்டை கிராமத்தில், பட்டா எண் 755-ல் மொத்த விஸ்தீரணம் 17 ஏக்கர் 33 சென்ட் புஞ்சை நிலத்தில், இவருக்கு 4 ஏக்கர் 33 சென்ட் புஞ்சை நிலம் சொந்தமானது. ஆக மொத்தம், இவருக்கு 9 ஏக்கர் 85½ சென்ட் புஞ்சை நிலம் பாத்தியம். மொத்த விஸ்தீரணத்தில் 6 சர்வீஸ் கனெக்ஷன்கள் உள்ளன. (எண்கள் 16, 34, 42, 12, 11 மற்றும் 13). அதில் ஆறு மின் இணைப்பு பம்பு செட்டுகள் உள்ளன.

நிலவள வங்கியில், கூட்டுக் குடும்பமாகச் செலுத்த வேண்டிய வாங்கிய கடனில், செலுத்தியது போக மீதி ரூ. 63,000, செலுத்த வேண்டியதில், நான்கில் ஒருபாகமாகிய ரூ. 15,750 இவர் செலுத்த வேண்டியுள்ளது.

மின்சார இலாகாவிற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 4,052.40-ல், நான்கில் ஒரு பாகமாகிய ரூ. 1,013.10 இவர் செலுத்த வேண்டியுள்ளது.

(4) **துரைராஜ் என்ற கிருஷ்ணமூர்த்தி.**—ஸ்ரீராமபுரம் கிராமத்தில், பட்டா எண் 396, 619 ஆகியவைகளில், 10 ஏக்கர் 44 செண்ட் புஞ்சை நிலத்தில் 2 ஏக்கர் 59 செண்ட் புஞ்சை நிலம் இவருக்குச் சொந்தமானது. கிணறு ஒன்றும், பம்பு செட் ஒன்றும் உள்ளதில், இவருக்கு நான்கில் ஒரு பாகம் உரிமையுள்ளது.

வேடசந்தூர் கூட்டுறவு நிலவள வங்கியில் வாங்கப்பட்ட கடன் ரூ. 8,500-ல், இவர் செலுத்த வேண்டியது நான்கில் ஒரு பாகமாகிய ரூ. 2,125. பூத்தாம்பட்டி விவசாய கூட்டுறவு நாணயக் கடன் சங்கத்தில், ரூ. 1,400 இவர் செலுத்த வேண்டியுள்ளது.

ஸ்ரீராமபுரத்தில் உள்ள சர்வீஸ் கனெக்ஷன் எண் 44-ல் உள்ள மின் இணைப்புக்கு, இவரது தகப்பனார் செலுத்த வேண்டிய நிலுவை ரூ. 1,170.20-ல் இவர் செலுத்த வேண்டியது நான்கில் ஒரு பாகமாகிய ரூ. 292.55.

(5) **கருப்புசாமி.**—இவருக்கு நிலபுலன்கள் ஏதுமில்லை.

நிலுவை ஏதுமில்லை.

(6) **மாணிக்கம்.**—கல்வார்பட்டி கிராமத்தில், பட்டா எண் 460-ல் 4 ஏக்கர் 69 செண்ட் புஞ்சை நிலத்தில், 3 ஏக்கர் 13 செண்ட் நிலம் இவருக்குச் சொந்தமானது. இவரின் மனைவி திருமதி ராஜம்மாளுக்கு, மேற்படி கிராமத்தில், பட்டா எண்கள் 11 மற்றும் 762 ஆகியவற்றில், மொத்தம் 11 ஏக்கர் 53 செண்ட் புஞ்சை நிலத்தில், 3 ஏக்கர் 13 செண்ட் புஞ்சை நிலம் உள்ளது. இவருக்கு ராஜா கவுண்டன் வலசில் சர்வீஸ் கனெக்ஷன் (எண் 24) மற்றும் அவைகளில் 2 மின் பம்பு செட்டுகள் உள்ளன.

இவர் விவசாயக் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு, ரூபாய் 1,742 செலுத்த வேண்டியுள்ளது.

இவர் மின் இலாகாவிற்கு செலுத்த வேண்டிய நிலுவை ரூ. 834.80 ஆகும்.

(7) **ஆரோக்கியம் பிள்ளை.**—இவருக்கும், இவரது மனைவிக்கும் தோட்டனூர்த்து கிராம ச. எண் 260/11-ல் 2.48 ஏக்கர் புஞ்சைத் தோட்டம் கூட்டாக பாத்தியப்பட்டுள்ளது.

திண்டுக்கல் கூட்டுறவு நிலவள வங்கி மூலம் பெற்று, செலுத்த வேண்டிய கடன் ரூ. 9,022.55. நல்லநாயக்கன்பட்டி கிராம கூட்டுறவு விவசாய கடன் சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய கடன் ரூ. 3,078.80. மேற்படி சங்கத்திற்கு இவரது மனைவி செலுத்த வேண்டிய பாக்கி ரூ. 4,571.80—இறந்தவர் அரசுக்குச் செலுத்த வேண்டிய பாக்கி எதுமில்லை.

மின்சார இலாகாவிற்குச் செலுத்த வேண்டிய பாக்கி ரூ. 110.80.

(8) **முருகேசன் என்ற குருநாதன்.**—வேலூர் சேர்மாடி கிராமம், பட்டா எண் 331 புஞ்சை நிலத்திலுள்ள ஏக்கர் 2, செண்ட் 99-ல் ஒரு ஏக்கர் நிலம் இவருக்குச் சொந்தமானது.

இவர் அரசுக்கோ, கூட்டுறவு நிறுவனங்களுக்கோ அல்லது மின் துறைக்கோ செலுத்த வேண்டிய பாக்கி எதுவும் இல்லை.

## இணைப்பு III.

[322 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

1978-79-ம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் 10 2 3 கல்விமுறை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. 2 கல்விமுறை உயர்நிலைப்பள்ளிகளில் இணைக்கப்பட்டு, அப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளுள் நான்கு பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாக உயர்த்தப்பட்டன.

15-6-1978 ஆம் தேதியிட்ட கல்வித்துறை நிலை ஆணை எண் 1091-ல் மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியத் தகுதியுடைய ஆசிரியர்கள் தேவைப்படும் அளவிற்குக் கிடைக்காவிட்டால், உயர்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களை கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரிய அனுமதிக்கலாம் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது :—

1. ஆசிரியர் பயிற்சிப் பட்டத்தோடு பட்ட மேற் படிப்புத் தகுதியும் பெற்ற பின்னர்தான் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு நிர்ணயிக்கும் சம்பளம் பெற உரிமை உள்ளவர்களாவார்கள் ; மற்றும்

2. தேவைப்படும் பாடத்தில் ஆசிரியர் பயிற்சி பட்டத்தோடு பட்ட மேற்படிப்புத் தகுதியும் உடையவர்கள் கிடைத்ததும் மேல்நிலைப்பள்ளி வகுப்புகளை நடத்த தகுதியற்றவர்களாகிவிடுவார்கள்.

மேலும், 22—11—1978 ஆம் தேதியிட்ட கல்வித்துறை குறிப்பாணை எண் 127437/எச்.எஸ்./78-1-ல் மேல்நிலைப்பள்ளி வகுப்புகளை நடத்த அனுமதிக்கப்பட்டுள்ள மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் பதவிக்கான தகுதி பெறாத ஆசிரியர்களை ஆண்டு இடையில் மாற்றம் செய்ய வேண்டாம் என எல்லா தலைமைக் கல்வி அலுவலர்களுக்கும் மற்றும் மேற்பார்வை அலுவலர்களுக்கும் கட்டளையிடும்படி மாநில கல்வி இயக்குநர் பணிக்கப் பட்டுள்ளார்.

அரிசன நலத்துறையில் உள்ள நான்கு மேல்நிலைப்பள்ளிகளுக்கு 40 மேல்நிலை ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு ஏற்கனவே இந்த பள்ளிகளில் பணியாற்றிவரும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியருக்கான தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுகொடுத்து சில பணியிடங்களையும், மீதமுள்ள பணியிடங்களுக்கு வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நேர் காணல் தேர்வு வைத்தும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நியமனம் செய்யும்போது ஏற்கனவே இந்தப் பதவிகளில் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்ட மேல்நிலை ஆசிரியர் பணிக்கு தகுதி பெறாத ஆசிரியர்கள் மாறுதல் செய்யப்படவேண்டியதாயிற்று. இங்கு அரிசன நலத்துறையில் நான்கு மேல்நிலைப்பள்ளிகளே உள்ளன என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். இவ்வாறு மாறுதல் செய்யப்பட்ட ஆசிரியர் களுக்கு தற்காலிகமாக நியமனம் செய்யும்போதே மேல்நிலை ஆசிரியர் பணிக்கு தகுதிவாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பப்படும் போது அவர்கள் மாற்றப்படுவார்கள் என்ற நிலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரிசன நல மேல்நிலைப்பள்ளிகளில் இதன் காரணமாகப் பதட்டநிலை ஏதும் இல்லை.

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

---

### புதன்கிழமை, 1979 மார்ச் 21

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் **அவை கூடியது.**

### 1. திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் உடல் குணமடைய பிராத்தனை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். பெருந்தலைவர் திரு. ஜெயப் பிரகாஷ் நாராயணன் அவர்கள் உடல்நலம் குன்றியிருப்பதால், பம்பாய் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். பெருந்தலைவராகிய அவர், நம்முடைய மூத்த தலைவர்களிலே ஒருவராகிய அவர், விரைவில் குணமடைய வேண்டுமென்ற பிரார்த்தனையை, இந்த அவையின் சார்பில் அவருக்கு அனுப்புகிறேன்.

### 2. வினாக்கள்—விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### *Madurai Medical College*

* 230-A Q.—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether the students of Madurai Medical College have given any complaint to the Police Officers alleging that they were assaulted in the hostel mess during August 1977; and

(*b*) if so, the action taken thereon?

## மதுரை மருத்துவக் கல்லூரி

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மதுரை மருத்துவக் கல்லூரி மாணவர்கள், உணவு விடுதியில் தாங்கள் தாக்கப்பட்டதாக, காவல் துறை அதிகாரிகளிடம் புகார் கொடுத்துள்ளார்களா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்): (அ) &(இ) 30—8—1977-ந் தேதி இரவு, மதுரை மருத்துவக் கல்லூரி விடுதி மாணவர்கள் சிலரிடையே முன்பகை காரணமாக மோதல் ஏற்பட்டது. இச்சம்பவம் 31—8—1977-ந் தேதி கல்லூரி முதல்வரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அவர், அன்றே விடுதி மாணவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணித்து, மீண்டும் மோதல் ஏற்படாவண்ணம் தடுக்க நல்லாருளம் துணை காவல்துறை கண்காணிப்பாளரைக் கேட்டுக் கொண்டதின் பேரில், விடுதிக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு, மீண்டும் மோதல் ஏற்படாமல் தடுக்கப்பட்டது. மோதலில் பங்கு கொண்ட மாணவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர். அந்தச் சம்பவத்திற்குப் பிறகு கல்லூரி விடுதியில் எவ்வித வன்முறைச் சம்பவமும் நடக்கவில்லை.

## *Procession of Sadhus*

*230-B. Q.—Thiru Arcot N. Veerasami (on behalf of Thiru V. Thangapandian): Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether it is a fact that some Sadhus went in a procession in Tiruchirappalli during the first week of January, 1978;

(*b*) if so, whether any one has been arrested in this connection; and

(*c*) whether the Government had given permission for this procession?



## சாமியார்கள் ஊர்வலம்

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் வாரத்தில், திருச்சியில் சாமியார்கள் சிலர் ஊர்வலமாக வந்தார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அது தொடர்பாக யாராவது கைது செய்யப்பட்டார்களா?

(உ) இந்த ஊர்வலத்திற்கு அரசு அனுமதி வழங்கியிருந்ததா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்): (அ) ஆச்சார்யா ஸ்ரீநிர்மலா ஷாராமுனி மகராஜ், ஸ்ரீசம்பத்த பக்ரா சாகர் மற்றும் ஸ்ரீவர்த்தமான சாகர் ஆகிய மூன்று நிர்வாண திகம்பர ஜைன சாமியார்கள், 3—1—1978 அன்று புதுக்கோட்டை மாவட்டம் மண்டையூர் கிராமத்திலிருந்து திருச்சிக்கு நடந்தே வந்தடைந்தனர். சாமியார்களின் வருகைக்கு ஏற்பாடு செய்தவர்களால், சாமியார்கள் திருச்சி நகரின் மையத்தில் உள்ள குஜராத்தி சமாஜத்தில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பகல் முழுவதும் சாமியார்கள் அங்கு தியானத்தில் இருந்ததாகக் கூறப்படுகின்றது. மாலையில் சாமியார்கள் பெரிய கம்மாளத் தெருவில் உள்ள ஒரு ஜைனரின் இல்லத்திற்குச் சென்றனர்.

(இ) யாரும் கைது செய்யப்படவில்லை.

(உ) இந்த ஊர்வலத்துக்கு அனுமதி கேட்கப்படவுமில்லை, வழங்கப்படவுமில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவரவர்களே, நம்முடைய அரசாங்கம் ஆபாசத்தை ஒழிக்க வேண்டுமென்று தீவிரமாகப் பேசிக்கொண்டிருக்கும் நேரத்தில், சாமியார்கள் நிர்வாணமாக, அதுவும் திருச்சி போன்ற பெரிய நகரங்களில் உள்ள தெருக்களிலே நடந்து போகிறார்கள். அரசின் அனுமதி இல்லாமல் ஊர்வலமாகப் போகிறார்கள். அதை எப்படி அரசு அனுமதித்தது. ஏன் அவர்களைக் கைது செய்யவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: தலைவரவர்களே, ஆபாசம் என்பதற்குப் பல அர்த்தங்கள் இருப்பதாக இந்த அரசு கருதுகிறது. புனிதமாகப் பலர் கருதுகின்ற கோவில்களிலே இருக்கக்கூடிய சில சிற்பங்களைக் கூட சிலர் ஆபாசம் என்று சொல்லலாம். சிலர் அதிலே புனிதத் தன்மை இருக்கிறதென்று சொல்லலாம். எனவே, இது மத நம்பிக்கையின், உணர்வின் அடிப்படையிலே இருக்கிற காரணமாக இருப்பதால், அரசு இதிலே தலையிடுவதற்கில்லை.

*Dealers in Loud Speakers*

*231 *Q.*—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of THIRU A. NALLASIVAN): Will the Hon. the Minister for Electricity be pleased to state:

(*a*) whether the Government are aware of the fact that the dealers in loud speakers of Tenkasi and Chengkottai Taluks are on strike to oppose the electricity charges;

(*b*) whether it is a fact that such electricity charges are collected only in some areas; and

(*c*) if so, the action taken thereon?

ஒலிபெருக்கி உரிமையாளர்கள்

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. ஆ. நல்லசிவன் சார்பில்): மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென்காசி, செங்கோட்டை வட்டங்களிலுள்ள ஒலிபெருக்கி உரிமையாளர்கள், மின் கட்டணத்தை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(இ) அந்தக் கட்டணம் சில பகுதிகளில் மட்டும் வசூல் செய்யப்படுவது உண்மையா?

(உ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) தகவல் இல்லை.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.



*Hydro Power Station at Mettur*

*232 *Q.*—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Electricity be pleased to state:

(*a*) whether there is any proposal with the Government to set up one more Hydro Power Station at Mettur;

(*b*) if so, the quantum of energy to be generated; and

(*c*) of this, the quantum of energy that will be available to Tamil Nadu?

மேட்டூரில் நீர் மின்சார உற்பத்தி நிலையம்

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேட்டூரில் மேலும் ஒரு நீர் மின்சார உற்பத்தி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், இதில் உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தின் அளவு யாது?

(உ) இதில், தமிழ்நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய மின்சாரத்தின் அளவு யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) ஆண்டொன்றுக்கு 537 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்.

(உ) உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் முழுமையும் தமிழ்நாடு மின் வாரியத்தின் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, National Grid ஒன்றைக் கொண்டு வந்து, அதிலே இதை இணைப்பதாகக் கருத்து இருக்கிறது. எனவே அந்த இணைப்பு வரும்போது, இதுவும் சேர்ந்துவிடுகிறதா அல்லது தமிழ் நாட்டிற்கு என்று தனி Grid இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: National Grid பல்வேறு மாநிலங்களுக்கிடையே இருக்கின்ற ஒன்று. மின்சார Transmission line என்று சொல்லுவார்கள், அதைச் சேர்ந்தது. இது Lower Mettur என்பது மின் உற்பத்தித் திட்டம்.

[1979 மார்ச் 21

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த உற்பத்திற்கு மத்திய அரசினுடைய உதவி ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இவைகளெல்லாம் ஆண்டுத் திட்டத்தில், அரசு மேற்கொள்ளுகிறது. திட்டத்திற்கு ஒட்டு மொத்தமாக மத்திய அரசிடத்தில் நாம் நிதி பெறுகிறோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள் 233, 234 ஒத்தி வைக்கப் படுகின்றன.

### *Valluvar Kottam.*

* 235 Q.—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state—

(a) whether there is any proposal (i) to put up fountains with colour lights in front of, and in the lawns of Valluvar Kottam, Madras and also (ii) to illuminate Valluvar Kottam with decorative and colour lights, so as to attract large number of visitors; and

(b) whether arrangements will be made to keep the Kottam open till 100.00 P.M. everyday?

### வள்ளுவர் கோட்டம்.

**திரு. ஈ. எஸ் வெங்கடேசன் :** மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) பெருவாரியான பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில், சென்னை வள்ளுவர் கோட்டத்தின் (i) முகப்பிலும், புல்வெளியிலும் வண்ண விளக்கு களுடன் நீர் ஊற்றுக்களை அமைக்கவும் (ii) அலங்கார வண்ண விளக்கு களைக் கொண்டு வள்ளுவர் கோட்டத்தை அலங்கரிக்கவும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) இக்கோட்டத்தை ஒவ்வொரு நாளும் இரவு 10 மணி வரையில் திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) (1) சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், நீரூற்றுக்கள், வண்ண விளக்குகள் முதலியவற்றை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(2) வள்ளுவர் கோட்டத்தில் அலங்கார வண்ண விளக்குகள் பொருத் தும் திட்டம் எதுவும் இல்லை.



1979 மார்ச் 21]

(ஆ) வள்ளுவர் கோட்டத்தை தினந்தோறும் இரவு 10-00 மணி வரையில் திறந்து வைத்திருப்பது சாத்தியமில்லை.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** அது குறித்து செயற்குறிப்பு ஏதாவது அரசிடம் இருக்கிறதா? இப்போது இல்லையென்றாலும், அப்படிச் செய்ய, அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இதிலே சில அடிப்படையான வசதி களைச் செய்ய அரசு சுமார் 4½ லட்சம் ரூபாயை அனுமதிக்கிறது. அந்த வேலைகள் செய்து முடிக்கப்பட்டவுடன், அதற்குப் பிறகு அலங்கார விளக்கு களைப் பற்றி கவனத்திலே எடுத்துக்கொள்ளலாம்.

**திரு ஈ. எஸ். வெங்கடேசன் :** தமிழகத்திற்குப் பெருமை அளிக்கின்ற வகையிலும், இந்த அரசாங்கத்தை எப்போதும் நினைக்கும் வகையிலும், வள்ளுவர் கோட்டத்திற்குப் பக்கத்திலேயே கம்பருக்குக் கோட்டம் எடுத்து, அதற்கு கம்பர் கோட்டம் என்று பெயரிடப்படுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** கம்பர், வள்ளலார் நினைவாலயம் ஒன்று அமைக்க வேண்டுமென்று, அரசு சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கை யிலேயே அறிவித்திருக்கிறது. அதை ஒட்டி சென்னையின் முக்கியமான இடத்தில், அப்படி ஒரு சிறந்த நினைவாலயம், நூலகம் மற்றும் பல அரிய கருத்துக்கள் அடங்கிய நிலையத்தை அமைக்க அரசு திட்டமிட்டு, பணி புரிந்து வருகிறது.

**திரு. க. அறிவழகன் :** வள்ளுவர் கோட்டத்தின் முகப்பிலும், உள்ளே செல்கிற வராந்தாவிலும் சுற்றுச் சுவர்கள் இல்லாததால், குழந்தைகள் கீழே விழக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே பாதுகாப்பான சுவர்களை அல்லது தடுப்புகளை ஏற்படுத்த அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** வள்ளுவர் கோட்டத்தினுடைய வராந்தாவிலே சுவர் வைத்துவிட்டால், அதனுடைய அமைப்பின் முறையும், அழகும் குறைந்து விடுமென்று அரசு கருதுகிறது. என்றாலும், குழந்தைகளை எடுத்துச் செல்கிறவர்கள், பாதுகாப்பாக அந்தக் குழந்தைகளைப் பார்த்துக்கொள்வது அவர்கள் கடமை.

**திரு. க. இராமமூர்த்தி :** நாம் விரும்புகிறோமோ, இல்லையோ, வள்ளுவர் கோட்டம் மிகச் சிறப்பாக, கலைக்கூடமாக இருப்பதால், சென்னைக்கு வருகிற அத்தனை பேர்களும் பார்த்து மகிழக்கூடிய ஆலயமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே பல்லாயிரக்கணக்கானவர்கள் வந்து போகிற, பார்த்து மகிழ்கிற அந்த இடத்தை அழகுப்படுத்துவதிலே காலதாமதம் இல்லாமல் அரசு செயல்படுமா?

[1979 மார்ச் 21

(பிற்பகல் 4-10)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "விரும்புகிறோமோ இல்லையோ" என்று சொன்னார்கள். இல்லையென்ற எண்ணம் யாருக்கும் இல்லை. எல்லோரும் விரும்புகிறோம். ஆனால் வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பட்ட இடம், அமைக்கப்பட்ட விதம், அவசர முயற்சி, சூழ்நிலை இப்படிப்பட்ட பல்வேறு சிக்கல்கள் அதிலே உருவாகி யிருக்கின்றன. 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவு செய்தும் கூட, இன்னும் சிக்கல்கள் தீரவில்லை. இன்னமும் அக்கவுன்டென்ட்-ஜெனரல் அவர்களிடமிருந்து வருகின்ற கடிதங்களுக்கு எல்லாவற்றுக்கும் பதில் சொல்லிக்கொண்டிருப்பது, செய்த வேலைகளுக்கு இன்னமும் சிலருக்குப் பணம் கொடுக்கப்படாமல் இருக்கின்றது, இன்னும் பல்வேறு சிக்கல்கள் அதில் இருக்கின்றன. இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்து விட்ட பிறகு கூட, அதனுடைய ஒலி அமைப்பு முறைகள் நமக்குத் தொல்லை தந்துகொண் டிருக்கும். அதற்காகத்தான் இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து அந்தக் குறையையும் தீர்க்க முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். அந்த இடத்திலே இவ்வளவு பெரிய திட்டத்தை செயல்படுத்தியதால், வசதிகள் ஒன்றுமில்லாத நிலை இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே ஏரிகளாக இருந்த பகுதிகளை எல்லாம் குப்பைகளைப் போட்டு மணலைப் போட்டு மூடி, வேறு எந்தவித மான கட்டிடமும் அங்கு வராமல் பார்த்துக் கொள்ளும்படி மாநகராட்சிக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அவை எல்லாம் முடிந்த பிறகு, அந்த இடத்தை மிக அற்புதமாக—அழகாக, அமைக்கும் விதத்தில் இந்த அரசு செயலாற்றி வருகிறது.

**திரு. பி. ஆர். தாமஸ் :** நம்முடைய அரசு பெரியார் கோட்டம் ஒன்றை அமைப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படி பெரியார் கோட்டம் அமைக்கப்படுவது உண்மையா? எவ்வளவு விரைவில் அமைக்கப்படும்? சென்னையில் வள்ளுவர் கோட்டத்துக்கு அருகில் அமைக்கப்படுமா? அல்லது தமிழ் நாட்டின் மையப் பகுதியில் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் கேட்டுள்ள கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பற்ற கேள்வி. இருந்தாலும் அதைப் பற்றிய விவரம் தெரியும் என்பதால், சொல்கிறேன். இதுசம்பந்தமாக நேற்றோ நேற்றைய முன் தினமோ நான் பதில் கூட அளித்திருக்கிறேன். இதுபோன்ற கருத்து அரசுக்கு வந்துள்ளது. ஒரு கோடி ரூபாய் செலவில் பெரியார் நினைவாலயம் அமைக்கப்பட வேண்டுமென்ற செயற்குறிப்பை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அந்த நினைவாலயத்தில் ஆய்வகங்கள்,



1979 மார்ச் 21]

ஆராய்ச்சி நிலையங்கள், நூல் நிலையங்கள் ஆகியவை பெரியார் பெயரால் அமைக்கப்படும். எந்த இடத்தில், எப்படி, எப்போது பெரியார் நினை வாலயம் அமைப்பது என்பது பற்றிய இறுதி முடிவு எதுவும் இன்னும் எடுக்கப்படவில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** வள்ளுவர் கோட்டத்தில் பொறிக்கப் பட்டுள்ள குறள்களில் சில முக்கியமான திருக்குறள்களைத் தனியாக பிற மொழிகளில் எடுத்தெழுதி, அவைகளுக்கு விளக்கமும் எழுதி வைத்தால், அங்கு வருகின்ற அனைவரும் நல்ல முறையில் புரிந்துகொள்ள முடியும். அதோடு மாத்திரமல்ல தமிழ் நாட்டுக்கு வெறுமாநிலங்களிலிருந்து வரக் கூடியவர்களுக்கும், வெளி நாடுகளிலிருந்து வரக்கூடியவர்களுக்கும் அதைப்பற்றி நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். சில முக்கியமான திருக்குறள்களைத் தனியாக பிற மொழிகளில் எடுத்தெழுதி விளக்கம் சொல்லுகின்ற வகையில் இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இதைப்பற்றிப் பல்வேறு கருத் துக்கள் அரசுக்குத் தரப்பட்டிருக்கின்றன. இப்போது அங்கு வருகிறவர்கள் ஏதோ காட்சிப் பொருளாகப் பார்த்துவிட்டுச் செல்கிற நிலையை மாற்றி, திருக்குறளைப்பற்றியும் அதை யாத்துத் தந்த திருவள்ளுவரது பெருமையைப் பற்றியும் திருவள்ளுவரைத் தந்த தமிழ் நாட்டின் பெருமையைப் பற்றியும், தமிழ்நாட்டில் வாழ்கிற தமிழர்களைப் பற்றியும், தமிழர்களின் தாய்மொழி யான தமிழைப் பற்றியும், சிறப்புகளைப் பற்றியும் அங்கு வருகின்றவர்கள் தெரிந்துகொள்வதற்காக, அவர்களுக்கு விளக்கமளிப்பதற்காக அறிவாற்றல் மிக்கவர்களை, திருக்குறளைப்பற்றி நன்கு ஆய்ந்தறிந்த அறிஞர்களை நியமித்து விளக்கமளிக்கலாமா என்பதைப் பற்றியும் அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

**புலவர் புலமைப்பித்தன் :** வள்ளுவர் கோட்டத்துக்கு வெறும் பார்வை யாளர்களாகத்தான் மக்கள் வருகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர வர்கள் சொன்னார்கள். அங்கு வருகின்றவர்களுக்குத் திருக்குறளைப் பற்றியும், திருவள்ளுவரைப் பற்றியும் நன்றாக விளக்கங்கள், அறிவுரை அளிக்கும் வகையில் திருக்குறளைப்பற்றி நன்கு ஆய்ந்தறிந்த தமிழ்ப் புலவர்களை நியமிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** நான் முன்னாலே சொன்ன விடை யிலேயே இந்தக் கருத்தும் இணைந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள் கின்றேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தமிழ் எழுத்து வரி வடிவ ஆராய்ச்சியாளர்கள் முன்பு தமிழ் எழுத்துக்கள் எப்படி இருந்தன, இப்பொழுது எப்படி உரு மாறி வந்திருக்கின்றன என்கின்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதேபோல திருக்குறள் எழுதப்பட்ட காலத்தில் தமிழ் எழுத்துக்களின் வரி வடிவம் எப்படி இருந்தது, எப்படி இருந்திருக்க முடியும் என்கின்ற முறையில் ஆராய்ச்சி நடத்தி முடிவுகள் கூட வந்து கொண்டிருக்கின்றன. வள்ளுவர் கோட்டத்துக்கு வருகின்றவர்கள் அனைவரும் தெரிந்துகொள்ளுகின்ற வகையில் திருக்குறள் எழுதப்பட்ட காலத்தில் அதனுடைய வரிவடிவம் எப்படி இருந்தது என்கின்ற அடிப்படையில் திருக்குறளை முழுமையாக அங்கு எழுதிவைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையின்படி காரியம் ஆற்ற முனைந்தால், அது பல பேருக்குக் கஷ்டமாக இருக்கும். நம்முடைய மூதாதையர்கள் எப்படி இருந்தார்கள், முன்னாள் நாகரிகம் எப்படி இருந்தது, நம்முடைய முன்னாள் எழுத்துக்கள் எப்படி இருந்தன என்பவற்றையெல்லாம் தெரிந்து கொள்ள அந்தச் சான்றுகள் இருக்கலாமே தவிர, விளக்கத்திற்காகவோ அல்லது பாடங்கள் நடத்துவதற்காகவோ அவை அவசியமில்லை. ஆனால் அங்கு நூல் நிலையம் ஒன்று அமைக்க வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. அந்த நூல் நிலையம் அமைக்கப்படுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி ஆராய்ச்சி நிலையமும் அங்கே அமையும்.

**திரு. சி. இராமலிங்கம் :** வள்ளுவர் கோட்டத்தைச் சுற்றி மரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் தூங்குமூஞ்சி மரங்கள் என்று நான் நினைக்கிறேன். அவை பெரிதாக வளர்ந்து விட்டால் கட்டிடங்கள், மதில்கள் போன்றவை இடிந்து விடும் அபாயம் ஏற்படும். அவைகளை அப்புறப்படுத்தி சிறிய மரங்களை வைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தது போல், அங்கே வைக்கப்பட்டிருக்கிற மரங்கள் தூங்குமூஞ்சி மரங்கள் அல்ல என்று நான் கருதுகிறேன். தாவர ஆராய்ச்சியாளர்கள் அறிவுரையின் பேரில் ஏதோ நல்ல மரம் என்று நினைத்துத்தான் அங்கே வைத்திருக்கிறார்கள். அப்படி ஒருவேளை கட்டிடத்திற்கு, மதில்களுக்கு இடையூறுகளைச் செய்கிற மரங்களாக இருந்தால், அவற்றை அகற்றுகின்ற முயற்சியில் அரசு ஈடுபடும்.



## *Pichavaram Forest as Tourist Centre.*

*236 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state:

(*a*) whether there is any proposal with the Government to convert the Pichavaram Forest near Chidambaram, as a Tourist Centre ; and

(*b*) if so, the details thereof?

### சுற்றுலா தளமாக பிச்சாவரம் காடு.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) சிதம்பரத்திற்கு அருகே உள்ள பிச்சாவரம் காட்டினை, சுற்றுலா தளமாக ஆக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) ஆம். பிச்சாவரத்தை சுற்றுலா மையமாக மேம்படுத்த கீழ்க் குறிப்பிட்டுள்ள பணிகளுக்காக 1978-79-ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 4.50 இலட்சம்.

(1) உணவு அறை அடங்கிய ஓய்வுக்கூடம் அமைத்தல்.

(2) பங்களா திட்டில் சிறிய தங்கும் இடங்கள் அமைத்தல்.

(3) படகுத்துறை கட்டுதல்.

(4) நிலம் கையகப்படுத்துதல், மற்றும் சாலை அமைத்தல்.

(5) அடிப்படை வசதிகள் உருவாக்குதல்.

(இ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் இவற்றிற்கான பணிகள் விரைவில் தொடங்க இருக்கின்றன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சரவர்களின் அறிவிப்பு குறித்து உள்ளபடியே மகிழ்ச்சியடைகின்றேன். இந்தத் திட்டத்தைப்பற்றி ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். முன்னாள் குடியரசுத் தலைவர் அவர்களே பிச்சாவரத்துக்கு நேரிலே வந்து பார்த்து இது சுற்றுலா மையத்துக்கு மிகச் சரியான இடம், சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கம்

என்று சொல்லி அது பத்திரிகைகளிலே கூட வந்தது. அப்படிச் செய்தி வந்து பல ஆண்டுகள் ஆகியும், இன்னும் அங்கு சரியான வேலைகள் துவங்கவில்லை. அந்த இடத்திலே விடுதிகள் அமைக்கும்போது, எளிய வருமானம் உள்ளவர்களும், ஏழையெளிய மக்களும் வந்து தங்குகின்ற வகையில் குறைந்த வாடகைக்கு அறைகளைக் கட்ட ஏற்பாடு செய்ய மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனம் செலுத்துவார்களா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** பிச்சாவரத்தைப்பற்றி மிக அதிக அளவிலே தமிழகத்திற்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அறிமுகப்படுத்தினார்கள். அந்தச் சமயத்தில் இருந்த குடியரசுத் தலைவரை அண்ணா அவர்கள் பிச்சாவரத்துக்கு அழைத்து வந்து காட்டி அதனைச் சிறந்த சுற்றுலா ஸ்தலமாக ஆக்க வேண்டுமென்கிற விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் இடைக்காலத்தில் நிறைவேற்றப்படாமல் நின்று விட்டது. இந்த அரசு வந்த பிறகு மீண்டும் அந்தப் பணியைத் தொடர்ந்திருக்கிறது. இப்பொழுது ஆரம்பப் பணியில் ஈடு பட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுதிகள் அமைக்கும் போது, குறைந்த வாடகைக்கு ஏழை எளிய மக்கள் பயன்படுத்தும் வகையில் அவைகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இப்பொழுது சுற்றுலா வளர்ச்சிக் கழகமோ, சுற்றுலாத் துறையோ விடுதிகள் எங்கே அமைத்தாலும், அவைகள் எல்லாம் நாட்டில் குறைந்த வருமானம் பெறக் கூடிய /ஏழை எளிய மக்கள் தங்குவதற்கு ஏற்ற வகையில், பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில்தான் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில்தான் பிச்சாவரம் பகுதியிலும் விடுதிகள் அமைக்கப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** கடந்த காலத்தில் சில திரைப்படக்காட்சிகள் அங்கே படம் எடுக்கப்பட்டன. அதற்குக் கட்டணமாக, வாடகையாக ஏதாவது அரசுக்குத் தரப்பட்டதா? அப்படிக் கட்டணம் தரவில்லையென்றால், வருங்காலத்திலாவது திரைப்படக் காட்சிகளைப் படம் எடுக்கும் போது, குறிப்பிட்ட தொகையை நிர்ணயித்து அதைக் கட்டணமாக வசூலிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அரசுக்குச் சொந்தமான அல்லது, காட்டு இலாகாவுக்குச் சொந்தமான இது போன்ற பொது இடங்களில் படம் எடுப்பதற்கு அந்தந்த இடங்களுக்கு ஏற்றபடி வாடகைகள், கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் வசூலிக்கப்படுகின்றன. வன





இலாகாவுக்குச் சொந்தமான இடங்களில் படம் எடுப்பதற்கு இவ்வளவு என்று கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் பிச்சாவரம் பகுதியும் வனம் என்கின்ற காரணத்தால், அதற்கேற்றவாறு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

THIRU G. VASANTHA PAI: Sir, is this Pichavaram Forest going to be used as a Game Sanctuary? What is the purpose of calling it an area of tourist attraction?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** பிச்சாவரம் பகுதி ஒரு Game Sanctuary யாக உபயோகப்படுத்தப்படவில்லை. அந்த இடத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுவரை பார்க்கவில்லை என்று நான் கருதுகிறேன். அது மாத்திரமல்ல. தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ளவர்கள் கூட அங்கு வந்து பார்த்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அந்த இடத்தைப் பார்த்தால்தான், அதனுடைய அற்புதம் தெரியும். 3 ஆயிரம், 4 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கடல் நீர் உள்ளே வருவதும் வந்த நீர் திரும்பவும் கடலுக்குள் போவதும் கண்கொள்ளாக் காட்சியாகும். சுமார் 10 அடி உயரத்திற்குள் ஒரே சீரான மரங்களும், வளைந்து செல்கின்ற நீர்ப் பாதைகளும், 50 அடி, 100 அடி அகலத்திலிருந்து 10 அடி வரை குறுகலான நீர்ப் பாதைகளும் மனத்தைக் கவரும். அடர்ந்து இருக்கின்ற மரங்களின் தோற்றத்தால் தண்ணீர் வெளியில் தெரியாது. உள்ளே நுழைந்தால் நீர்ப்பாதைகள் இருக்கின்ற அழகான இடம் தெரியும். வெளிநாட்டுப் பயணிகள் மிகவும் விரும்பி மீன் பிடிக்கின்ற இடம்; அத்தோடு படகுகள் விடுகிற இடமும் கூட. விடுமுறையின்போது ஓய்வு நேரத்தைக் கழிக்கிற மிகச் சிறந்த சுற்றுலா இடம். பிச்சாவரம் பகுதி வருடத்துக்கு 8 மாதம் முதல் 10 மாதம் வரை சுற்றுப்பயணிகள் போய் தங்கி மகிழ்கின்ற அளவுக்கு மிக அற்புதமான இடம்.

(பிற்பகல் 4-20)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் மிக அருமையான பிரச்சாரத்தைச் சுற்றுலா வளர்ச்சித் துறைக்காக ஆற்றியிருக்கிறார்கள்.

THIRU G. VASANTHA PAI: Sir, I am grateful for the explanation given by the Hon. Minister. In the light of what the Hon. Minister has explained, will the Government be pleased to provide roads and facilities and tourist bungalows so that the tourists could inspect and visit the whole area :

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** பிச்சாவரத்தில் இதுவரை டூரிஸ்ட் பங்களா என்று சொல்லப்படும் பிரயாணிகள் விடுதி கட்டப்படவில்லை. அப்படியொரு பிரயாணிகள் விடுதியை அங்கே அமைப்பதற்காகத்தான் தற்போது சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இப்போதே அந்த இடத்தை அடைவதற்கான பாதை வசதி இருக்கிறது. நல்ல பேருந்துகளும் அந்தப் பாதையில் செல்ல முடியும். மேலும் அருகில் இருக்கிற கிள்ளை என்ற இடத்திலிருந்து இந்தப் பகுதிக்குச் செல்ல ஒரு வழியோடு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தையொட்டியிருக்கிற தாண்டவராய சோழன்புதூர் வழியாகவும் இந்த சுற்றுலாத் தளத்திற்குச் செல்ல நல்ல பாதையிருக்கிறது. மிக அற்புதமான இடம். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, பொதுவாக யாருக்கும் இதுவரை சரியாக அறிவிக்கப்படாத இடமாக இருக்கிறது. இருந்தாலும் மிக அருமையான இடம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** சேலம் மாவட்டத்திலுள்ள கொல்லிமலை இலக்கியப் புகழ்வாய்ந்த இடம். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மூலக் கேள்விக்கும் கொல்லி மலைக்கும் சம்பந்தமில்லை. இலக்கியப் புகழ்வாய்ந்த இடங்கள் என்று சொன்னால், மிக ஏராளமான இடங்கள் இருக்கின்றன.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** அவ்வாறு இலக்கியப் புகழ் பெற்ற இடமாக கொல்லிமலை இருப்பதன் காரணமாக, அதை ஒரு சுற்றுலா மையமாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசாங்கத்திற்கு பல ஆண்டுகளாகத் தெரிவித்து வருகிறோம். அதைப் பற்றி அரசு பரிசீலிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், மூலக் கேள்வியுடன் இது தொடர்புடைய வினா அல்ல என்றாலும் கடந்த ஆண்டிலிருந்தே மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் இதைக் கேட்டு வருவதால் ஒரு தகவலை மட்டும் அவருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்று காலையில் சட்டமன்றப் பேரவையிலும் கொல்லிமலையைப் பற்றிப் பதிலளித்திருக்கிறேன். இதைச் சுற்றுலா மையமாக்க ரூ. 15,000 அளவில் ஒரு திட்டம் தரப்பட்டிருக்கிறது. நிதிவசதியில்லை என்ற காரணத்தால், இதை முன்னுரிமை முயற்சியாக எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று



தெரிவித்திருக்கிறேன் என்றாலும், மிக விரைவில் கொல்லி மலையின் முக்கியத்துவத்தையும், அதன் இயற்கைச் சூழலையும், அங்குள்ள அருவியையும், அதோடு அங்கே அமைந்திருக்கும் பழம் பெருமை வாய்ந்த கோயிலையும் கணக்கில் கொண்டு, சேலம் மாவட்டத்தைப் பொறுத்த அளவிலாவது, அதை ஒரு முக்கியமான சுற்றுலாத்தலமாக ஆக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இவ்வளவு அற்புதமான, அருமையான பிச்சாவரம் காட்டினைப் பார்ப்பதற்கு அவையின் உறுப்பினர்கள் எல்லாம் மிகவும் ஆவலாக இருக்கிறார்கள் . . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எனக்கும் ஆவலாகத்தான் இருக்கிறது. (சிரிப்பு)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** சட்டப் பேரவை உறுப்பினர்களும் ஆவல் கொண்டிருப்பார்கள். மேலும் மாண்புமிகு தலைவர் அவர்களே ஆவல் கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். எனவே அனைத்து உறுப்பினர்களையும் அந்த இடத்திற்கு சுற்றுலா வளர்ச்சிக் கழகப் பேருந்துகள் மூலம் அழைத்துக் கொண்டு சென்று காட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதோடு அங்கே விருந்தும் வைக்கப் படுமா ? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இது ஒரு நல்ல யோசனை. செய்தியாளர்களையும் சட்டமன்றப் பிரதிநிதிகளையும் அவ்வாறு அழைத்துச் சென்று அந்தப் பகுதியைக் காட்ட வேண்டுமென்ற கருத்து சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்றத் தொடர் கூட்டம் முடிவடைந்த பிறகு, ஓய்வு நேரத்தில் அந்த முயற்சி கைகூடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. அறிவழகன் :** தலைவர் அவர்களே அந்த இடத்தைப் பார்ப்பதற்கு ஆர்வத்தைத் தெரிவித்திருப்பதால், அந்த இடத்திலே மேலவையை ஒருவேளை கூட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படுமா ? (சிரிப்பு)

## 'Maramath' Works

* 237 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state:

(*a*) whether the Government are aware of the fact that the Maramath Works like desilting and sluice-repairing works which are to be carried out annually have not been carried out for the last few years in Thovalai Channel, N. P. Channel, P. P. Channel and Pattanam Channel, through which water is supplied from the dams of Kanniyakumari District;

(*b*) whether the Government are aware of the fact that no fruitful result has come out in spite of representation regarding this matter made by representatives of the Public in District Development Council; and

(*c*) if so, the action taken thereon?

### மராமத்து வேலைகள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அணைகளிலிருந்து தண்ணீர் கொண்டு செல்லும் தோவாளை வாய்க்கால், என். பி. வாய்க்கால் பி. பி. வாய்க்கால், பட்டணம் கால்வாய் ஆகியவைகளில் கடந்த சில வருடங்களாக ஆண்டுதோறும் நடைபெற வேண்டிய தூர் மண் எடுத்தல், மடைகளில் பழுது பார்த்தல் போன்ற மாமத்து வேலைகள் நடைபெறவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) இதுபற்றி மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில் மக்கள் பிரதிநிதிகள் தொடர்ந்து முறையீடு செய்தும், எவ்விதப் பலனும் ஏற்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(உ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) கோதையார் திட்ட வாய்க்காலில் 1971, 1975 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 4,104, ரூ. 2,500 தூர் எடுக்கும் பணிகளுக்காக செலவிடப்பட்டது. நொய்யார் திட்ட வாய்க்காலில் 1970, 1971 மற்றும் 1972 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 69,145, ரூ. 49,384, ரூ. 26,002 செலவிடப்பட்டது. கன்னியாகுமரி



மாவட்டத்தில் உள்ள அணைகளிலிருந்து தண்ணீர் கொண்டு செல்லும் வாய்க்கால்களில் 1977 அக்டோபர், நவம்பரில் ஏற்பட்ட பலத்த மழையின் காரணமாக உண்டான தூர் எடுத்தல் மற்றும் சில சேதாரங்களைப் பழுது பார்த்தல் ஆகியவை ரூ. 5.30 லட்சம் செலவில் செய்யப்பட்டது. 1—6—1978 முதல் வாய்க்கால்களில் எவ்விதத் தடையுமின்றி தண்ணீர் விடப்பட்டு வருகின்றது.

(இ) & (உ) : இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 3, 4 ஆண்டுகளாக தோவாளைக் கால்வாய், என்.பி. வாய்க்கால் இவைகளில் முறையான மணல்—தூர் எடுக்கும் பணி மேற்கொள்ளப்படவில்லை. அதன் காரணமாக, கடை வரம்பு நிலங்களில் பயிர் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. சென்ற முறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, அங்கே 2,000 முதல் 3,000 ஏக்கர் வரையில் தண்ணீரின்றிப் பாதிக்கப்பட்டதாக இந்த அவையிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் குறிப்பும் என்னிடம் இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் இரண்டாவது போகத்தின்போது கடை வரம்பு நிலங்களுக்குத் தண்ணீர் செல்லாமல், அந்தப் பகுதி நிலங்கள் பாதிக்கப்படுகிற காரணத்தால், விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். மணல்—தூர் வராத காரணத்தால்தான், இந்த நிலை உருவாகிறது. இதற்கு முன்பெல்லாம் ஆண்டு தோறும் இந்தப் பணிக்காக நிறைய ரூபாயைச் செலவிடுவார்கள். இப்போது ஆண்டுக்கு ரூபாய் ,2000 அல்லது 4,000 என்ற அளவில் செலவிடப்படுவது ஏதோ பெயரளவுக்கு நடைபெறுகிற வேலையே தவிர, வேறொன்றுமில்லை. எனவே இந்தப் பணிகளுக்கு என்று தேவைப்படும் நிதியை ஒதுக்கீடு செய்து மணல்—தூர் வார அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** கடைமடைப் பகுதிகளைப் பொறுத்தவரையில், எப்போதும் இதுபோன்ற சிக்கல்கள் ஏற்படுகின்றன. அவைகளைச் சீர்படுத்தி வருகிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல் மழை காரணமாக அணையிலிருந்து தண்ணீர் கொண்டு செல்லும் வாய்க்கால்களில் மேடிட்ட மண்ணை எடுக்க. ரூ. 5,30,000 செலவு செய்யப்பட்டிருக்கிறது. கடந்த 1—6—1978 முதல் எவ்விதமான தடையுமில்லாமல் வாய்க்கால்களில் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கின்றது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 'சில்ட் ரிமூவல்' என்று சொல்லப்படும் தூர் வாரும் பணி ஆண்டுதோறும் செய்யப்பட வேண்டிய பணியாகும். அதாவது வாய்க்கால்களில் தண்ணீர் விடுவது நிறுத்தப்பட்டவுடனே, இந்த சில்ட்டை ரிமூவ் செய்வதற்காக ஆண்டுதோறும் சுமார் 50,000 ரூபாய்வரை ஒதுக்கி அரசாங்கம் செலவு செய்யும். தற்போது ஏற்பட்டிருக்கிற சில்ட்டை ரிமூவ் செய்ய ரூ. 2,000 அல்லது ரூ. 4,000 என்று ஒதுக்கிச் செய்யப்படுகிற பணி ஏதோ பெயரளவில் செய்யப்படுகிற பணியே தவிர வேறொன்றுமில்லை. அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் சுமார் ரூ. 5 லட்சம் அளவுக்கு நிதி ஒதுக்கி செலவு செய்ததாகக் குறிப்பிட்டார்கள். அது பெருமழை காரணயாக, புயல் காரணமாக ஏற்பட்ட சேதத்தை சரி செய்ய செலவிட்ட தொகையாகும். ஆண்டொன்றுக்கு ஒரு வாய்க்காலுக்கு ரூ. 12,000-க்குக் குறையாமல் சில்ட் ரிமூவலுக்காக ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா? முந்தைய ஆண்டுகளில் இந்த அளவுக்கு ஆண்டுதோறும் பணம் ஒதுக்கி பணி செய்திருப்பதைப் பார்த்தாலே தெரியும். எனவே அந்த வகையில் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** நோய்யாறு திட்ட வாய்க்காலுக்கு கடந்த 3 ஆண்டுகளில் முறையே ரூ. 69,145, ரூ. 49,384, ரூ. 26,002 ஆகிய தொகைகள் ஒதுக்கப்பட்டு செலவிடப்பட்டிருக்கின்றது. சில்ட் கிளியரன்ஸ் என்ற அளவில் அங்கே மேடிட்டு விட்ட மண்ணை எடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆண்டுதோறும் ரூபாய் 50,000 செலவிடப்பட வேண்டுமென்று சொன்னால், நிதியாதாரங்களைப் பொறுத்துத்தான் இந்தத் துறை அத்தகைய பணிகளை மேற்கொண்டு செய்ய வேண்டியிருக்கிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** என்னுடைய வினா தோவாளை வாய்க்கால், என். பி. வாய்க்கால் ஆகிய இரண்டைப் பற்றியதேயாகும். நோய்யாறு வாய்க்கால் பற்றிக் கேட்கவில்லை. ஏனெனில் அது புதிய வாய்க்கால். அதற்காக இப்போதுதான் பணத்தை அதிகமாகச் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள். பழைய 4 வாய்க்கால்களைப் பொறுத்தவரையில், அவைகளுக்காக ஆண்டுதோறும் ரூ. 50,000 செலவிடப்பட்டது. 7, 8 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்த அளவுக்குத்தான் தொகை அனுமதிக்கப்பட்டு செலவிடப்பட்டிருக்கிறது. தற்போது இன்னும் அதிகமான அளவுக்குக் கூடுதல் தொகை ஒதுக்கப்பட வேண்டியிருக்கிற நிலையில் ஆண்டுக்கு ரூபாய் 2,000 அல்லது ரூ. 4,000 செலவழிப்பது என்பது மிகக் குறைவான தொகை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.



## *Pillavukkal Dam.*

*238 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state:

(*a*) the total acreage of land benefited by Pillavukkal Dam project in Srivilliputhur taluk of Ramanathapuram district; and

(*b*) whether there is any proposal to construct concrete canals for the better utilisation of its waters ?

## பிளவுக்கல் அணை.

**திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) :** மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தில் உள்ள பிளவுக்கல் அணைத்திட்டத்தினால் பயன்பெறும் நிலத்தின் மொத்தப் பரப்பளவு எவ்வளவு?

(இ) அதன் நீரை வீணாகாமல் நல்ல முறையில் பயன்படுத்தும் பொருட்டு, கான்கிரீட்டினால் கால்வாய்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) 10,538 ஏக்கர்கள்.

(இ) இத்திட்டத்தின்கீழ் உள்ள பெரியாறு பிரதான கால்வாய் கிளைக் கால்வாய் மற்றும் கோவிலாறு பிரதான கல்வாய் ஆகியவைகளில் 'லைனிங்' செய்யப்பட்டுள்ளது. மற்ற பகுதிகளில் 'லைனிங்' செய்வதற்கான திட்டம் ஏதுவும் இல்லை.

**திரு. பி. ஆர். தாமஸ் :** ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதி வறட்சிப் பகுதியைச் சேர்ந்ததாகும். ஆகவே அங்கே கான்கிரீட் கால்வாய் கட்டப்பட்டால், ஏராளமான நீர் பாதுகாக்கப்பட்டு வேளாண்மைக்குப் பயன்படும் நிலை இருக்கிறது. எனவே இதே முறையில் ஏனைய கால்வாய்களுக்கும் கான்கிரீட் அமைக்க அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா?

[1979 மார்ச் 21

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மூலக் கேள்வி பிளவுக்கல் அணைத் திட்டத்தைப் பொறுத்ததாகும். அதனுடைய முக்கியமான, பிரதான கால்வாய் மூலமாக கசிவு ஏற்படுவதைத் தடுக்கத்தான் இந்த 'லைனிங்' செய்யப்பட்டிருக்கிறது. கால்வாயின் கீழ்ப்பகுதி முழுவதிலும் 'லைனிங்' செய்யப்பட வேண்டுமென்றால், ஏராளமான தொகை அதற்காகத் தேவைப்படும். அவைகளைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு பரிசீலனை மேற்கொள்ளப்படும்.

### *Ceramic Brick (Tiles) Industries.*

* 239 *Q.*—THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state:

(*a*) the Ceramic Brick (Tiles) Industries, which have borrowed loans from the Tamil Nadu Industrial Investment Corporation Limited;

(*b*) the total amount of loan assistance ; and

(*c*) the amount of loans which have been written off?

### மண்பாண்ட செங்கல் (ஓடுகள்) தொழில் நிறுவனங்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக நிறுவனத்திடமிருந்து கடன் பெற்றுள்ள, மண்பாண்ட செங்கல் (ஓடுகள்) தொழில் நிறுவனங்கள் யாவை ?

(இ) மொத்த கடன் உதவித்தொகை எவ்வளவு ?

(உ) தள்ளுபடி செய்யப்பட்ட கடன் தொகைகள் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : (அ) & (இ) தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திடமிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள மண்பாண்ட (ஓடுகள்) தொழிற் பிரிவுகள் கடன் பெற்றுள்ளன,**



1979 மார்ச் 21]

| தொழிற்சாலையின் பெயர். | ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட கடன் தொகை. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. சதன் பிரிக் ஓர்க்ஸ், ஓரக்காடு, செங்கல்பட்டு மாவட்டம். | 30.45 |
| 2. அண்ணா சாந்தி ஒயர்கட் பிரிக்ஸ், கொடுகன்பட்டி, மதுரை. | 2.95 |
| 3. கே.ஏ.எஸ்.ஏ. டைல்ஸ் ஓர்க்ஸ், திருநெல்வேலி. | 12.66 |
| 4. காசி மாரி சிராமிக்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரவாயல், சென்னை. | 29.00 |
| 5. சி. முனுசாமி கவுண்டர், திருப்பத்தூர், வட ஆற்காடு மாவட்டம். | 1.50 |
| மொத்த ரூபாய் | 76.56 |

(உ) இல்லை.

(பிற்பகல் 4.30.)

**திரு. க. இராமமூர்த்தி : தள்ளுபடி செய்யப்பட்ட கடன் தொகை எவ்வளவு ?**

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தள்ளுபடி செய்யப்பட்ட தொகை எதுவும் இல்லை என்று சொல்கிறேன்.**

**திரு. க. இராமமூர்த்தி : 30 லட்சத்திலேயிருந்து பல லட்சங்கள் கடன் வாங்கிய நிறுவனங்களைப் பற்றிச் சொன்னார்கள்.** சில நிறுவனங்கள் கடன் தொகை மட்டுமல்ல, வட்டியைக் கூட திருப்பிச் செலுத்தவில்லை. சில நிறுவனங்களை அரசு ஏற்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தகவல் இருக்கிறது, அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** கடன்தொகைகளை முறையாக உரிய காலத்திலே செலுத்தாத நிறுவனங்களின் மீது சட்டப்படியான உரிமையியல் வழக்குகள் போடப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட இந்த ஓடு-செங்கல் உற்பத்தி செய்கின்ற நிறுவனங்களை அரசு ஏற்று நடத்துவதற்கு முன்னால் ஏற்கெனவே அரசின் பொறுப்பில்

இருக்கக்கூடிய இரண்டு தொழிற்சாலைகளும் பலவித சிரமங்களிடையே இயங்கிவருகின்ற காரணத்தினாலே, அந்த இரண்டையும் முறைப்படுத்தி விட்டு, அதற்குப் பிறகுதான் அவைகளை எடுத்து நடத்துவதுபற்றி யோசிக்க முடியும்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஏற்கெனவே எடுத்திருக்கின்ற நிறுவனங்களில் காசி மாரி நிறுவனம் பற்றிச் சொன்னார்கள். அந்த நிறுவனம் தரவேண்டிய கடன்தொகையைத் திரும்பப்பெறுவதற்கு எந்த அளவிலே அரசு முயற்சி எடுக்கின்றது என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** காசி மாரி என்பது ஒரு தனியார் நிறுவனம். அரசு எடுத்துக்கொண்ட பட்டியலிலே அது இல்லை. அவர்கள் உற்பத்தியை முறையாகச் செய்ய முடியாமல் இருப்பதற்குரிய பல காரணங்களிலே ஒன்று, அவர்கள் வெளிநாடுகளிலிருந்து இயந்திரங்களைத் தருவித்து அவைகளைப் பொருத்துவதிலிருந்து இயக்குகின்றவரையில் பல் வேறு குறைபாடுகள், பிரச்சினைகள் இருப்பதால், உற்பத்தியிலே அவர்கள் முழுமையாக வெற்றி பெற முடியவில்லை. நஷ்டம் வராமலிருக்கும் அளவுக்குக் கூட உற்பத்தி செய்ய முடியவில்லை. அவைகளைத் திறம்பட செயல்படுத்தி நடத்த முடியுமா ? அல்லது இருக்கின்ற இயந்திரங்களைப் பகுதி பகுதியாக விற்று, இருக்கின்ற கடன்களை அடைக்க முடியுமா என்பது பற்றி அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்தத் தொழிற்சாலைகள் தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து எந்த ஆண்டிலே கடன் வாங்கிற்று ? அதிலே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த காசி மாரி செங்கல் தொழிற்சாலை 30 லட்சம் ரூபாய் அளவுக்கு இன்னமும் கடனைத் திருப்பித் தர முடியாத சூழ்நிலையில் இருப்பதால், அதை 'டிக்' நிறுவனமே ஏற்றுக்கொண்டு அந்தத் தொழிலை நடத்த வேண்டும் என்று முதலாளிகளிடமிருந்து விண்ணப்பம் வந்ததா ? ஆமெனில், அதன் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இப்போது தான் குறிப்பிட்ட தொழிற்சாலைகளை அரசு ஏற்று நடத்த வேண்டும் என்று தான் அவர்களும் விரும்புகிறார்கள். ஏற்கெனவே நம்மிடத்திலே திருமழிசையிலே ஒரு பிரிக் ஒர்க்ஸ் தொழிற்சாலை இருக்கிறது. சதர்ன் பிரிக் ஒர்க்ஸ் என்ற மற்றொன்றும் இருக்கிறது. இதில் சதர்ன் பிரிக் ஒர்க்ஸ் தான் ஓரளவு நஷ்டம் இல்லாமல் முழு அளவில் நடந்துகொண்டிருக்கிறது. இந்த இரண்டையும் சரி செய்துவிட்டுத்தான் மற்றவைகளை எடுப்பது பற்றி யோசிக்கப்படும்.





**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அரசாங்கமே ஏற்றிருக்கின்ற இந்தத் தொழிற்சாலைகள் இன்னமும் லாபத்திலே இயங்கவில்லை என்று சொன்னார்கள். அதற்கு அடிப்படைக் காரணம் அரசாங்கத்திடம் கட்டிடங்கள் அதிகமாகக் கட்டக்கூடிய திட்டங்கள் இல்லை. இரண்டாவது, அரசாங்கம் கட்டக்கூடிய கட்டிடங்களுக்காவது குறைந்தபட்சம் இந்தத் தொழிற் சாலைகளிலே உற்பத்தியாகின்ற செங்கல்களைத் தான் வாங்க வேண்டும் என்று ஒரு உத்தரவு பிறப்பிக்கப்படுமா ? அப்படிச் செய்தால், இந்தத் தொழில்களில் நஷ்டம் வராது. ஆகவே, எதிர்காலத்திலே அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்குவாரா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு நகர்ப்புறங்களாக இருந்தாலும், ஊரகப் பகுதியாக இருந்தாலும், கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏற்கெனவே நிலவிவந்த தடைகளை அகற்றி, இன்றைக்கு பரவலாக கட்டிடங்கள் கட்டுகின்ற பணி வேகமாக நடந்து கொண்டிருக்கின்றது. எனவே செங்கல்கள், ஓடுகள் மிகவும் அதிகமாகத் தேவைப்படுகின்றன. இன்னும் சொல்லப் போனால், இந்த ஆண்டிலே, ஏற்கெனவே தேவைப்பட்டதை விட இரண்டு-மூன்று மடங்கு தேவைப் படுகிறது. எனவே, கிட்டத்தட்ட வேலைகள் துரிதமாக நடக்கவில்லை என்பது ஒரு காரணம் இல்லை. நிரம்ப நடக்கிறது. ஆனால் இவர்கள் Mechanised Brick Works என்று சொல்லக்கூடிய மிகவும் விலையுயர்ந்த வெளிநாட்டு இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்கிறார்கள். நாள் ஒன்றுக்கு 80 ஆயிரம், 1 லட்சம் செங்கற்கள் அளவுக்கு உற்பத்தி செய்தால்தான், அந்த Break—even point என்று சொல்லக்கூடிய அளவுக்கு, நஷ்டத்தைத் தவிர்க்கக்கூடிய ஒரு நிலைக்குக் கொண்டு வர முடியும். அவர்கள் நல்ல முறையில் நடத்தி நஷ்டம் இல்லாமல் செயல்படுத்த முடியும் என்ற நம்பிக்கையில், இயந்திரங்களை வரவழைத்து விட்டார்கள். செங்கல் சூளையில் உற்பத்தி செய்யக்கூடிய செங்கல்கள் ஆயிரத்துக்கு வெளி மார்கெட்டிலே 190 ரூபாய், 100 ரூபாய் என்று கிடைக்கிறது. ஆனால், இதில் ஏற்படும் cost of production அப்ப் பார்த்தால் ரூபாய் 390, ரூபாய் 400-க்கு ஆயிரம் செங்கல்கள் என்று விற்றால்தான், உற்பத்திச் செலவானது கட்டுபடியாகும் என்ற நிலை இருக்கிறது. இந்த விலைக்கு யாரும் வாங்கத் தயாராக இல்லை. சாதாரண அளவிலே ஆயிரம் செங்கல்கள் 190 ரூபாய், 200 ரூபாய் என்றுதான் வாங்குகிறார்கள். இதை மீண்டும் சிறப் பாக நடத்துவது சாத்தியமா ? அல்லது இந்த இயந்திரங்களைப் பகுதி பகுதி

பாக விற்றுவிட்டு, அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு அவர்கள் சிறந்த முறையிலே உற்பத்தியிலே ஈடுபடக்கூடிய அளவுக்கு மாற்று வாய்ப்புக்கள் கொடுக்க முடியுமா என்று அரசு தீவிரமாக யோசித்து வருகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** காசி மாரி நிறுவனம் வாங்கிய பணத்தையே திருப்பித் தராத நிலையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த நிறுவனம் இப்படி சிரமமான நிலையிலே இருந்து கொண்டிருக்கும்போது, அதற்கு மேலும் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சி வருவதற்கு முன்னதாகக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி நஷ்டத்திலே நடந்து கொண்டிருக்கிற, வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காத ஒரு தொழிற்சாலைக்கு மேலும் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது? எந்தச் சூழ்நிலையிலே அவ்வாறு கொடுக்கப்பட்டது, அந்தத் தொகையைத் திருப்பிப்பெற என்ன வழி என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** விளக்கமாகப் பதில் சொல்ல வேண்டுமென்றால், தனிக் கேள்வி போட வேண்டும். ஆனால், 1972-73-ம் ஆண்டில் இந்த நிறுவனத்திற்குப் பணம் வழங்கப்பட்டு, உற்பத்தியிலே அவர்கள் இறங்கியிருக்கிறார்கள். அந்த ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை பிரச்சினைக்குரிய நிறுவனமாகவே இது இருந்து வருகிறது. அதற்குப் பிறகு தொடர்ந்து மூடப்பட்டு, 1976-க்குப் பிறகு திரும்பவும் கொஞ்சம் முயற்சி செய்திருக்கிறார்கள். ஒரு திட்டத்துக்குக் கடன் உதவி வழங்கும் போது, அந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படும் என்று கருதித்தான் நிதியுதவி அளிக்கப்படுகிறது. ஆனால் எதிர்பாராத விதமாக அந்த நிறுவனம் போட்ட திட்டங்களிலே ஏதாவது குறைபாடுகள் இருந்து, பிறகு வெளிப்படுமானால், மேலும் கொஞ்சம் நிதியுதவி செய்தால் தான், ஏற்கெனவே கொடுத்த கடன தொகையைத் திரும்பப் பெற முடியும் என்ற நிர்ப்பந்தமும் சில இடங்களிலே வருகிறது. பொதுவாக எல்லாத் தொழில்களிலும் நாம் பார்க்கிறோம். உதாரணமாக, 15 லட்சம் ரூபாய், 20 லட்சம் ரூபாய் என்று முதலிலே term loan என்று கொடுக்கிறோம். எதிர்பாராதவிதமாக இயந்திர சாதனங்களின் விலை உயர்வு, கட்டிடச் செலவு, கட்டுமானச் செலவு இவைகளில் அதிகச் செலவுகள் ஏற்பட்டுவிடுவதால் திரும்பவும் கொடுக்கும் நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஏற்கெனவே 30 லட்சம் ரூபாய் வரை கடன் கொடுத்துவிட்ட பிறகு, அதைத் திரும்பப்பெற வேண்டும் என்றால், மேலும் 2 லட்சம் ரூபாய் கொடுக்காமல் முடியாது என்ற நிலை வரும்போது, கொடுப்பது தவிர்க்க முடியாததாகிறது. இதுதான் பொதுவான நிலைமை. சரியான புள்ளிவிவரம் வேண்டும் என்றால், தனிக் கேள்வி போட வேண்டும்.



**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** காசி மாரி என்று ஒரு தொழில் நிறுவனம் இருப்பதாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். காசி மாரி என்பது என்ன என்று புரியவில்லை. காசி மாரி என்றால் செங்கல்லா, இல்லை மனிதர்களா? இல்லை, இந்தக் காசு மாற்றுகிறார்களே அவர்களா?

(பலத்த சிரிப்பு)

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** காசி மாரி என்பது நிறுவனத்தினுடைய பெயர்.

(பிற்பகல் 4-40)

**திரு. க. இராமமூர்த்தி :** காசி மாரி நிறுவனத்திற்கு ஏறத்தாழ 30 இலட்சம் ரூபாய் கடனாகத் தரப்பட்டிருக்கிறது. அந்த நிறுவனம் வாங்கியிருக்கிற கடன் அளவுக்கு, அந்நிறுவனத்தின் மொத்த மதிப்பு இருக்காது என்ற நிலை இருக்கிறது. இதற்குக் காரணமாக எது அமைந்தது என்பதை விசாரணை நடத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** வரித் தண்டல் சட்டத்தின் கீழ் பாக்கியுள்ள தொகையை வசூலிக்க 'டிக்' நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த நடவடிக்கையையொட்டித்தான், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற அந்தப் பிரச்சினையையும் அரசு கவனிக்க இருக்கிறது. ஏற்கெனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கலந்து பேசி என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை அரசு தெளிவாக்கியிருக்கிறது. அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் விளக்குவேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** கடனைப் பெற்றவர்கள் கடனை ஈடு செய்கிற வகையிலே அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்களைக் கொடுத்து ஈடு செய்து கொள்ளலாம் என்ற அடிப்படையிலே ஏற்படுத்தப்பட்ட காசி மாரி என்ற ஸ்தாபனத்தைப் பற்றிப் பலருக்குப் பல சந்தேகங்கள் ஏற்படுவதால், உற்பத்திப் பொருள்களைக் கொடுத்து ஈடு செய்யும் ஸ்தாபனம் என்று பெயரை மாற்ற அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** பெயரை வைத்தவர்களைக் கேட்டுத்தான் மாற்ற வேண்டும். பெயரை மாற்றுவதிலே அரசுக்கு ஆட்சேபணையில்லை.

## Tamil Nadu Industrial Investment Corporation Limited.

* 240 Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state the number of Criminal and Civil cases that the Tamil Nadu Industrial Investment Corporation Limited has filed against the Directors and Managing Directors of various Industries?

### தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

பல்வேறு தொழில் நிறுவனங்களின் இயக்குநர்களுக்கும் நிர்வாக இயக்குநர்களுக்கும் எதிராக, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தாக்கல் செய்துள்ள குற்றவியல் மற்றும் உரிமையியல் வழக்குகள் எத்தனை?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** குற்ற வழக்குகள்—இல்லை.

உரிமை இயல் வழக்குகள்—7.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** உரிமை இயல் வழக்குகள் 7 போடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த 7 வழக்குகளையும் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** நிறுவனங்களின் பெயர்களை வேண்டுமானால் சொல்லலாம். வழக்குகளின் விவரங்களைச் சொல்லுவது என்பது இயலாது. ஆகவே நிறுவனங்களைப்பற்றிச் சொல்லுகிறேன். உரிமை இயல் வழக்குகள் போடப்பட்ட நிறுவனங்களின் பெயரை இப்போது வாசிக்கிறேன்.

1. இராதா கெமிக்கல்ஸ் புட் புராடெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், கூடுவாஞ்சேரி.
2. கோகினூர் புரொடெக்ட் பிரைவேட் லிமிடெட்.
3. ரெடாப் கார்ப்பரேஷன், கோயம்புத்தூர்.
4. சேலம் கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ்.
5. எம். பி. பாஸ்கர்.
6. மெசர்ஸ் என். ஸ்ரீனிவாசன் மற்றும் அதன் பங்குதாரர்கள் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது.
7. சதர்ன் பப்ளிகேஷன்ஸ்.



**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஏறக்குறைய 158 நிறுவனங்கள் கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுக் காலமாக வாங்கிய பணத்தையும், வட்டியையும் செலுத்தாத சூழ்நிலையில் இருக்கும்போது, ஓராண்டுக் காலத்திற்குள்ளாக வட்டியைச் செலுத்தவில்லை என்பதற்காக, அரசியல் நோக்கத்தில் போடப்பட்டிருக்கிற வழக்குகளை இந்த அரசாங்கம் பரிசீலிக்குமா? தலைவர் அவர்களே, குற்றச்சாட்டு என்று நினைக்கக் கூடாது. இவையெல்லாம் விளக்கமாகச் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** குற்றச்சாட்டு என்றால், மாண்புமிகு உறுப்பினர் நினைவூட்டாமலே எனக்கு நினைப்பு வரும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இப்படி ஆளும் கட்சியை ஆதரிக்கிற தொழிற்சாலைகள் என்றும், ஆளும் கட்சியை எதிர்க்கிற தொழிற்சாலைகள் என்றும் இல்லாமல், தொழில்களை வளர்க்க வேண்டும், கொடுக்கிற மூலதனம் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே பாரபட்சம் இல்லாமல் இருக்க அரசு இனிமேலாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** ஏதோ பாரபட்சமாக நடவடிக்கை எடுத்துவிட்டது போலவும், இனிமேலாவது பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறார்கள். இந்த அரசு நிச்சயமாக தொழில் வளர்ச்சியில் பாரபட்சம் காட்டாது. பாதிக்கப்பட்டவர்கள் எந்த அடிப்படையில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சொன்னால், அதைக் கவனித்து அரசு நடவடிக்கை எடுக்கும். மேலும் யார் யார் மீது அப்படி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு இந்த மன்றத்திலே பதில் சொல்ல முடியும். காரணம், இது அரசின் கடமையாகும்.

உரிமையியல் வழக்குகள் கிரிமினல் வழக்குகளாகப் போகவில்லை என்பதற்குத்தான் நான் பதில் சொன்னேன். மேலும் கிட்டத்தட்ட 15 நிறுவனங்கள் மீது காவல் துறையில் புகார்கள் கொடுத்திருக்கிறார்கள். விசாரிக்கப்பட்டு, பிறகு அந்தப் புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கும் வாய்ப்பு இருக்கிறது. தொடர்ந்து ஒவ்வொன்றாகப் பரிசிலனை செய்து அரசு நடவடிக்கை எடுக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து பல இலட்சக்கணக்கான ரூபாய் என்ற அளவிலே பல நிறுவனங்கள் கடன் வாங்கியிருக்கின்றன. என்ன காரணங்களுக்காக கடன்களை

வாங்கினார்களோ என்ன தொழிலுக்காக வாங்கினார்களோ, அதை அந்தத் தொழிலுக்காகப் பயன்படுத்தாத நிறுவனங்கள் எத்தனை? எத்தனை நிறுவனங்கள் அரசாங்கத்தை ஏமாற்றிப் பணத்தை வாங்கி வேறுவிதமாகச் செலவழித்திருக்கின்றன? இந்தத் தகவலின் அடிப்படையிலே எத்தனை பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** இதற்கு விளக்கமான பதிலைச் சொல்ல வேண்டும் என்றாலும், சற்று சுருக்கமாவே சொல்லிவிடுகிறேன்.

சில நிறுவனங்கள் டாக்குமென்டுகளைத் தயாரிக்கும்போது, சில தவறான புள்ளிவிவரங்களைக் கொடுத்து பணத்தை வாங்குகிறார்கள். இந்த அடிப் படையில் குப்தா இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனம் தப்பான ஆவணங்களைத் தாக்கல் செய்த குற்றத்திற்காக வழக்கு மன்றத்திற்குப் போக வேண்டும் என்று ஒரு புகார் காவல் துறையிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ரமேஷ் வெல்டிங் ஒர்க்ஸ் என்ற நிறுவனம் இயந்திரங்களை அப்புறப் படுத்தியிருக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் மீது புகார் செய்யப்பட்டிருக் கிறது.

எல். எஃப் இன்ஜினியரிங் என்ற நிறுவனம் இயந்திரங்களை அப்புறப் படுத்தியதற்காக அவர்கள் மீது ஒரு புகார் செய்யப்பட்டிருக்கிறது

காந்திமதி அண்டு கம்பெனி, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிதியை மற்ற காரியங்களுக்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று புகார் செய்யப் பட்டிருக்கிறது.

ஆம்கோ இன்ஜினியரிங் ஒர்க் நிறுவனம் இயந்திரங்களை அப்புறப் படுத்தியிருக்கிறது என்பதற்காகப் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது.

டேவிட் மேட்ச் இன்டஸ்ட்ரீஸ், காசோலையில் கள்ளக் கையெழுத்திட்டுக் கையாடல் செய்ததாக புகார் செய்யப்பட்டிருக்கிறது.

முருகன் ஆயில் மில்லும், திரு. வி. குமார் ஹோசியரி நிறுவனமும் இயந்திரங்களை அப்புறப்படுத்தியிருக்கிறார்கள் என்பதற்காகப் புகார் செய்யப்பட்டிருக்கின்றது. சக்தி சாகோ நிறுவனம் தப்பான விலைப் பட்டியலைத் தாக்கல் செய்ததற்காகவும், ஆர். கே., வி. பாலகிருஷ்ணன் நிட்டிங் கம்பெனியில் இயந்திரங்கள் அப்புறப்படுத்தப்பட்டதற்காகவும், பென்சன் இயந்திரக் கம்பெனியில், இயந்திரங்கள் அப்புறப்படுத்தப்பட்டிருக் கின்றன என்பதற்காகவும் புகார்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஜெயசித் திர மினரல்ஸ் நிறுவனத்தார் சில குற்றங்களைச் செய்திருந்தாலும் அவர்கள்



குற்றங்களை ஒப்புக்கொண்டார்கள் என்பதால் நன்னடத்தைச் சட்டத்தின் பேரில் விட்டுவிடலாம் என்று கேட்டிருக்கிறார்கள். இதை அரசு பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது. இப்படி பல்வேறான குற்றங்களின் மீது நட வடிக்கையை எடுத்து வருகிறோம். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாடு முதலீட்டுக் கழகம் மூலமாக எவ்வளவு கடன்களை எந்தெந்தப் பகுதியில் கொடுத்திருக்கிறோம் என்றும், தவறான ஆவணங்களைத் தயாரித்து எத்தனை பேர் மோசடி செய்தார்கள் என்றும், யார் யார் உரிய காலத்திலே கடனைக் கட்டவில்லை என்றும், என்னென்ன வழக்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும், உறுப்பினர்கள் விரும்பினால் விவர மாக ஒரு அறிக்கையை இந்த மன்றத்தின் முன்னால் விரைவிலே வைக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** எந்தெந்தத் தொழிற்சாலைகள் பணத் தைத் திருப்பிச் செலுத்தாமல் இருக்கின்றன என்ற பட்டியலைச் சொன் னால், நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 158 தொழிற்சாலைகள், பல ஆண்டுகளுக்கு முன்னால் வாங்கிய கடன்களைத் திருப்பித் தரவில்லை. மைக்ரோ டூல்ஸ் நிறுவனம் 1964 ஆம் ஆண்டில் 50 இலட்சம் ரூபாயைக் கடனாக வாங்கி 15 ஆண்டுகளாக ஒரு ரூபாயைக் கூட திருப்பிச் செலுத்தவில்லை. ஆனால் 1975 ஆம் ஆண்டு கடன் வாங்கிய சதர்ன் பப்ளிகேஷன்ஸ் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாரபட்சம் இல்லையென்று சொன்னார்கள். 1964 ஆம் ஆண்டில் வாங்கிய 50 இலட்சம் ரூபாய்க்கு வழக்கு இல்லை, ஆனால் 1974 ஆம் ஆண்டில் வாங்கிய 9 இலட்சம் ரூபாயில் ஒரு இலட்சம் ரூபாயைக் கட்ட வில்லை என்பதற்காக வழக்கைப் போடுகிறார்கள். இது நியாயம்தானா? பணம் கொடுக்காத தொழிற்சாலையினுடைய மேனேஜிங் டைரக்டரை 'டிக்' நிறுவனத்தின் தலைவராக ஆக்கியிருக்கிறார்களே, இது முறைதானா? என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லாமல் இருந்தாலும், பதிலைச் சொல்லிவிடுகிறேன். சதர்ன் பப்ளிகேஷன் மீது வழக்கைத் தொடர்ந்திருக்கிறார்களே, இது நியாயம்தானா, என்றால் நியாயம்தான். அதைப்போல உள்ள பலர் மீது வழக்குப் போடாமல் இருக்கிறதே, ஏன் என்று கேட்டார்கள். இது நியாயமான கேள்வி. 158 தொழிற்சாலைகள் என்று சொல்லும்போது, அதைப்பற்றி விவரிக்க 3 மணி நேரம், 4 மணி நேரம் ஆகும். ஆனால் கேள்வி

நேரம் ஒரு மணி நேரம்தான். ஆகவே தனியாகக் கேள்வி கேட்டால், புள்ளிவிவரம் சேகரித்து விரிவான அறிக்கையை விளக்கமாக அளிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### (1) மதுரை சட்டக் கல்லூரி மாணவர்கள் காவல் துறையினரால் தாக்கப்பட்டது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. ஆற்காடு நா. வீராசாமி, திரு. ஆ. பாலசுப்ரமணியம், திரு. க. இராமமூர்த்தி ஆகியோர், மதுரை சட்டக் கல்லூரி மாணவர்கள் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு ஒரு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 4-50)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாக தமிழ்நாட்டினுடைய வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு வழக்கறிஞர்கள் எல்லாம் நீதி மன்றங்களைப் புறக்கணித்துவிட்டு, அவர்கள் இணைப்பைச் சேர்ந்த ஒருவருக்கு அநீதி இழைத்துவிட்டதன் காரணமாக, மதுரை திருப்பரங்குன்றத்திலே அவருக்கு ஏற்பட்ட நிகழ்ச்சியை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குப் பலமுறை கொண்டு வந்தும், அரசாங்கம் அந்தக் கோரிக்கையைக் கவனிக்கவில்லை என்று ஆத்திரப்பட்ட மாணவர்களும் வழக்கறிஞர்களும் சேர்ந்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதுபற்றி இந்த மன்றத்திலேகூட ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். இதைத் தொடர்ந்து மதுரையில் சட்டக் கல்லூரி மாணவர்கள் நேற்று காலை கல்லூரியிலே இருந்தவர்கள், சென்னையிலே நடைபெற்ற மாணவர்கள் வழக்கறிஞர்கள் சம்பவத்தை ஒட்டி, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒரு மனு கொடுக்க வேண்டும் என்று, அங்கேயிருந்து பல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அலுவலகத்திற்கு எடுத்துக்கொண்டு போக வேண்டும் என்று முயற்சித்த நேரத்திலே, அந்த முயற்சி காரணத்தினால் ஏற்பட்ட தகராறு காரணமாக, காவல் துறையைச்





சேர்ந்த டி.எஸ்.பி. அவர்கள் கல்லூரிக்குள்ளே நுழைந்து, அந்தக் கல்லூரி முதல்வர் அவர்களுடைய அனுமதி இல்லாமலேயே மாணவர்களைப் பயங்கரமாகத் தாக்கியிருக்கிறார்கள். அதன் விளைவாக 16 மாணவர்கள் இன்றையதினம் மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் இரண்டு மாணவர்கள் திரு. மகாராஜன், திரு. சங்கரன் என்ற மாணவர்களின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது என்றும், நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். தொடர்ந்து வழக்கறிஞர்களும் அதைத் தொடர்ந்து சட்டக் கல்லூரி மாணவர்களும் தாக்கப்படுவதாகவும், இதனால் இன்னும் மாநிலத்திலே உள்ள பல்வேறு கல்லூரிகளிலே இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தரக்கூடிய வகையிலே ஒரு பரபரப்பான சூழ்நிலை உருவாகி வருவதாகவும் தெரிகிறது.

இதற்கிடையிலேகூட நமது முதலமைச்சர் அவர்கள் சென்னை நகரத்திலே நடைபெற்ற வக்கீல்கள் விழாவில் பேசுகின்ற நேரத்திலே, திரு. ராம்ஜேத்மலானி அவர்கள் கருத்து சொன்னதாகவும் அதிலே முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னதை ஒட்டி வழக்கறிஞர்கள் இடையே ஒரு தவறான எண்ணம் ஏற்பட்டுவிட்டது என்ற காரணத்தினாலேயும், வழக்கறிஞர்கள் அவமதிக்கப்பட்டதாக எண்ணி இருப்பதாலும், மாணவர்கள், மக்கள் மத்தியிலே பதட்ட நிலை உருவாகியிருப்பதால், இந்தப் பிரச்சினை குறித்து அவையின் மற்ற அலுவல்களைத் தள்ளி வைத்து விவாதிக்க வேண்டும் என்று தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வாதிட்டு வாதிட்டு நீதியை வாங்கித்தரக்கூடிய வழக்கறிஞர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்ற காரணத்தால், வழக்கறிஞர்கள் ஒரு வார காலமாக, இன்றைக்கு நீதி மன்றங்களுக்குச் செல்லாமல் புறக்கணிப்பு செய்து வருகிறார்கள். இதைத் தொடர்ந்து நேற்றையதினம் சட்டக் கல்லூரி மாணவர்கள் 100 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மதுரையிலே சட்டக் கல்லூரி மாணவர்கள் இந்தக் கோரிக்கைக்காக மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுக்க வேண்டும் என்று சென்றபோது, அங்கே அவர்களுக்கும் போலீசாருக்கும் கை கலப்பு ஏற்பட்டிருக்கிறது. இதிலே நான் சொல்ல விரும்புகின்ற விஷயம் என்னவென்றால், அங்கே கல்லூரி சுற்றுச் சுவருக்குள் போலீசார் நுழைந்தபோது மாணவர்கள் பாதுகாப்புக்காக கல்லூரி அறையிலே தாளிட்டுக் கொண்டும்கூட, அங்கே நுழைந்து கடுமையாக அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படித் தாக்கப்பட்டவர்

களில் பல பேர் மருத்துவ மனையில் இருப்பதாகவும், இருவரின் உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும் தெரிகிறது. இந்த அரசைப்பற்றி நான் நினைப்பது நீங்கள் வருமுன் காப்பவராக இல்லை என்றாலும், வந்த பின்னும் காப்பவர்களாக இல்லை என்று வருந்துகிறேன். இந்தப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினையாக இருப்பதால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, மதுரை சட்டக் கல்லூரி மாணவர்கள் சுமார் 300 பேர், 20—3—1979 அன்று காலை 10 மணிக்கு ஊர்வலமாக கலெக்டர் அலுவலகம் முன் மறியல் செய்ய செல்ல முற்பட்டனர். கல்லூரியை விட்டு வெளியேறியதும், அவ்வழி வந்த பாண்டியன் போக்குவரத்துக் கழக பேருந்துகள் டி.எம்.என். 5187, டி.என்.யு 2010, டி.எம்.டபிள்யூ 5177, டி.எம்.என். 5488 நான்கையும் நிறுத்தி, பயணிகளை இறங்கச் செய்தனர். பேருந்து ஊழியர்களை பஸ்ஸை ஓட்டும்படி சொன்னார்கள். பஸ் குழு மறுக்கவே, தாங்களே வண்டியை - எடுத்துச் செல்ல முற்பட்டனர். பஸ் குழுவினரையும் கீழே இறக்கிவிட்டு விட்டனர். துணைக் காவல் மேற்பார்வையாளர், தல்லாகுளம், தலைமையில் சென்ற காவல் துறையினர், இதைத் தடுத்தனர். மாணவர்கள் கற்கள், செருப்புகள், நாற்காலிகளை வீசினர், காவல் துறையினர் மீது. 6 காவலர்கள் காயமடைந்தனர். பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இரண்டு டி.என்.யு. 2010, டி.எம்.டபிள்யூ. 5177, வண்டிகளின் கண்ணாடி ஜன்னல்கள் உடைக்கப்பட்டன. எச்சரிக்கை செய்தபிறகும் கூட, கல்வீச்சு தொடர்ந்து மாணவர்கள் நடத்தினர். அதன் பின்னர், அவர்களை கல்லூரிக்குள் செல்லும் வகையில் பிரம்பு கொண்டு துரத்தப்பட்டனர். இதில் 16 மாணவர்கள் இலேசான காயமடைந்தனர். கனரா வங்கியில் பணிபுரியும், பழைய சட்டக்கல்லூரி மாணவர் ராஜனும் காயமுற்றார். காவல் துறை வேண்டுகோளுக்கு ஏற்ப தாசில்தார் வந்த ஜீப் எம்.டி.யு. 9065-ம் கல்லடிக்கு ஆளாகியது. கண்ணாடிகள் உடைந்தன. காயமுற்றோர் எர்ஸ்கின் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இரண்டு மாணவர்கள், ராஜன் என்ற எழுத்தர் தவிர, மற்றவர்கள் வெளி நோயாளிகளாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர்.

நடத்துனர்கள் பிச்சை பாண்டியன் டி.எம்.என். 5187, எஸ். கணபதி டி.என்.யு. 2010, ரவீந்திரன், டி.எம்.என். 5488 மீனாட்சிசுந்தரம் டி.எம்.டபிள்யு 5177; கொடுத்த புகாரின் பேரில் தல்லாகுளம் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. 16 மாணவர்கள் கைது



செய்யப்பட்டு ஜாமீனில் விடப்பட்டுள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர் கல்லூரியையும், உணவு விடுதியையும் மூட உத்தரவிட்டு இருக்கிறார். இப்போது நிலைமை அமைதியாக இருக்கிறது.

இந்த இரண்டு மாணவர்கள் ஆபத்தான நிலைமையில் இருப்பதாகச் சொன்ன செய்தி சரியான செய்தி அல்ல என்று தகவல் வந்திருக்கிறது. உயிருக்கே ஆபத்தான நிலை, பெரிய ஆபத்தான நிலை என்று இல்லை. அவர்கள் புறநோயாளிகளாகத்தான் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தகவல் கிடைத்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் தான் இருக்கின்றன என்ற காரணத்தினாலே, மேற்கொண்டு இந்தப் பிரச்சினையைப்பற்றி மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து அவையை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

**(2) விவசாயிகள் கைது செய்யப்பட்டதை ஒட்டி விவசாயச் சங்கப் பொதுச் செயலாளர் திரு. பி. பாலசுப்பிரமணியம் உண்ணாவிரதம் இருப்பது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆ. பாலசுப்ரமணியம் அவர்கள் சேலம், கோயம்புத்தூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் விவசாயிகள் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்படுவதைக் கண்டித்து செயலாளர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதைக் குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது இந்த விதியின் கீழ் எப்படி வருகிறது என்பதைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்திலே விவசாயிகள் பிரச்சினை ஒரு தீராத பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கக் கோரியும், விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு உரிய விலை கொடுக்கவில்லை என்றும், விவசாய உற்பத்திச் செலவு அதிகமாக ஆகிறது என்றும் கூட்டுறவு வங்கி கடந்த கால கடனுக்குக் காலம் தள்ளிக் கொடுப்பதை விட கடனையே தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கேட்டு, இன்றைக்கு நாடு தழுவிய அளவில் சேலம், கோயம்புத்தூர், புதுக்

கோட்டை ஆகிய மாவட்டங்களில் போராட்டம் நடந்திருக்கிறது. அதில் விவசாயிகள் கைது செய்யப்பட்டு சிறைக்குள்ளே வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கண்டித்து இந்த விவசாயிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், உயர் மட்டக் குழு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும், அந்த அறிக்கை சமர்ப்பிக்கும் வரையிலே விவசாயிகளை வெளியே விடவேண்டும், மின் இணைப்பு துண்டிக்கப்பட்டவர்களுக்கு மின் இணைப்புக் கொடுத்து விவசாயிகளிடம் அமைச்சர் அவர்கள் பேசி முடிவெடுக்க வேண்டும் என்று, இன்றைக்கு காலவரையறையின்றி, சேலம் விவசாய சங்கப் பொதுச் செயலாளர் திரு. பி. பாலசுப்பிரமணியம் இந்தப் பிரச்சினை குறித்து உண்ணாவிரதம் இருக்கிறார். இந்தப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை. நிதியைப் பொறுத்த பிரச்சினை. இன்று நிதியமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். அதைப்பற்றி இன்றைக்குச் சுமுகமாகப் பேச வேண்டும். மற்றப் பிரச்சினைகளைப் போல இந்தப் பிரச்சினையையும் தள்ளிவிடாமல் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சேலம், கோயம்புத்தூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் மின்கட்டண பாக்கிகளை நீண்ட நாட்களாகச் செலுத்தாதவர்களுக்கு மின்சார வாரியத்தினர் சட்ட ரீதியான நோட்டீஸ் அனுப்பி அந்த நோட்டீஸ்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பிறகும், மின் கட்டணம் செலுத்தாதவர்களுடைய மின் இணைப்புக்கள் மார்ச் மாதத் தொடக்கத்தில் துண்டிக்கப்பட்டுள்ளன. நீண்ட கால பாக்கிகள் செலுத்தாமல் இருப்பவர்களின் மீதுதான் மேற்கண்ட நடவடிக்கை மின்வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டது என்று தெரிகிறது. இந்த மின் துண்டிப்பு செய்யப்பட்டதை சிலசில இடங்களில் மின் துண்டிப்பை சிலர் தடை செய்ததாகத் தெரிகிறது. இப்படித் தடை செய்தவர்களையும் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு மறியல் செய்ய முயன்றவர்களையும் காவல் துறையினர் கைது செய்தனர். அவர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் திரு. பி. பாலசுப்பிரமணியம் இந்த விவசாயிகள் கைது செய்யப்பட்டதை எதிர்த்து சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்தின் முன்பு 19—3—1979 அன்று காலை 11 மணி முதல் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டுள்ளார். அவருடன் மற்றும் சிலரும் தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.





எந்தவித அசம்பாவிதமும் நடைபெறவில்லை. நிலைமை அமைதியாகவே உள்ளது. எனவே மேலும் இதைப் பற்றி அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து அவையை ஒத்தி வைத்து விரதத்தைக் கைவிடவும் வாய்ப்பாக இருக்கும்.

(பிற்பகல் 5-00)

(3) தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்பு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள் உண்ணாவிரதம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. மீனாட்சிசுந்தரம், ஆ. பாலசுப்ரமணியம் ஆகியோர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் உண்ணாவிரதம் இருந்து போராடுவது குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின்கீழ் வருகிறதென்பதை சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்பற்றி இங்கே விவாதிக்க வேண்டுமென்று சொல்வதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தின் மூலமாக அமைச்சரவர்களுக்குப் பணிவோடு சில வேண்டுகோள்களை விடுக்க ஆசைப்படுகிறேன். 9 ஆண்டுக் காலமாக ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், அதற்கு முன்னதாக இடைநிலை ஆசிரியராக இருந்து வாங்கிய ஊதியத்தையே பெற்று வருகிறார்கள். தலைமை ஆசிரியருக்குரிய ஊதிய நிர்ணயம் செய்ய ஆணை பிறப்பிக்கப்படவில்லை. மிக நீண்ட போராட்டத்திற்குப் பின்னாலே, 11—1—1979 அன்று அரசாணை 65-லே அவர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்யலாமென்று கல்வித் துறை ஆணை பிறப்பித்து, அது உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினை மாவட்டங்களிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரை செய்த ஊதியத்தை 2—10—1970 முதல் பெற ஆவன செய்து, அதை வழங்கியிருக்கிறார்கள். இந்த நிலையிலே தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும், செங்கற்பட்டு

(திரு. க. மீனாட்சிசுந்தரம்) [1979 மார்ச் 21

மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும் அந்த ஆணையை நிறுத்தி வைத்து, இப்போது ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அரசு ஓர் உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. அதை ஆட்சித் தலைவர்கள் நிறுத்தியிருக்கிறார்கள். அவர்கள் அரசுச் செயலாளர்களா அல்லது ஆட்சித் தலைவர்களா என்று தெரியவில்லை. அந்த அளவிற்கு ஆணையை நிறுத்தி வைத்தால், பல்லாயிரக்கணக்கான ரூபாயைப் பெற்றவர்கள் திருப்பிக் கட்டும் நிலை உருவாகியிருக்கிறது. இதற்குக் காரணம் மாவட்ட ஆட்சித் தலைவரவர்களின் ஆணைதான். வேறு பல மாவட்டங்களில் இந்த நிலை இல்லை. இதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

மற்றொரு பிரச்சினையையும் ஆசிரியர்கள் வைத்திருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத்தில் வேலை செய்கிற ஆசிரியர்களை மாற்றுவது என்பதற்கு ஒரு முறை இருக்கிறது. கல்வி ஆண்டின் இடையிலே அவர்களை மாற்றக்கூடாதென்று 'ஜெனரல்' உத்தரவு இருக்கிறது. இந்த உத்தரவு உள்ளாட்சித் துறைக்கு இல்லையென்று சொல்லி, நாகையிலே ஆசிரியர்களை மாற்றியிருக்கிறார்கள். நான் இதற்கு முன்னாலே பேசும்போது, உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினை பற்றி கொண்டு வந்திருக்கிறேன். நாகையிலே இரண்டு ஆசிரியர்கள் விதி முறைகளுக்கு முரணாகப் பணியிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். அவர்களை மீண்டும் பணியில் சேர்க்க ஆசிரியர்கள் போராட்டம் செய்தார்கள். 10 பேர் உண்ணாவிரதமிருப்பதாகச் சொன்னார்கள். போராட்டத்தில் பங்கேற்ற அவர்களை இப்போது மாற்றியிருக்கிறார்கள், இது குறித்தும் உண்ணாவிரதத்தை ஆசிரியர்கள் 19 ஆம் தேதி தொடங்கிய பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர் ஸ்டேட்மெண்ட் கொடுக்கிறார். நிர்வாக சௌகரியம் குறித்து அதைச் செய்திருக்கிறார்கள், அந்த ஆணை உள்ளாட்சித் துறைக்குப் பொருந்தாது என்று சொல்கிறார். மேலும் அவர் உள்ளாட்சித் துறையிலிருந்து ஜி.ஓ. 65 வரவில்லை என்று சொல்கிறார். எனவே அதே பதிலையே அமைச்சரவர்கள் சொல்லாமல், இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அமைச்சரவர்கள் உத்தரவாதம் தந்தால், தொடர்ந்து உண்ணாவிரதம் நடத்திக்கொண்டிருக்கும் ஆசிரியர்கள் மனம் நிம்மதியடைந்து, உண்ணாவிரதத்தைக் கைவிடவும் வாய்ப்பாக இருக்கும்.

அடுத்து, இராமநாதபுரம் மாவட்டத்திலே 'அடா' தொகை தரவில்லை என்று கேட்டபோது, அமைச்சரவர்கள் அதை உடனடியாக வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்குக் கூட இதுவரை ஆணைகள் பிறப்



1979 மார்ச் 21] (திரு. க. மீனாட்சிசுந்தரம்)

பிக்கப்படவில்லை. அதைப் போல இந்தப் பிரச்சினையில் காலம் தாழ்த்தக்கூடாதென்று சொல்லி, ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதிக்க மாட்டீர்கள் என்று தெரியும், இருந்தாலும் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று மரபு முறையிலே, தங்கள் அனுமதியை வேண்டுகிறேன்.

தலைவரவர்களே, மற்றொரு பிரச்சினையையும் சொல்லி விடுகிறேன். திருவாரூர்-விஜயபுரம் தியாகராயா நடுநிலைப் பள்ளி என்ற பள்ளியின் நிர்வாகம், ஒவ்வொரு ஆண்டும் பரீட்சை முடிகிற நேரத்திலே, அந்தப் பள்ளியை மூடப்போவதாகச் சொல்வதும், அந்தப் பள்ளியை நகராட்சி எடுத்துக்கொள்ள வேண்டும் அல்லது அரசே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நாம் சொல்வதும், பிறகு சமாதானம் செய்து, தனியாரிடமே அந்தப் பள்ளியை விடும் நிலையும் இருக்கிறது. இந்த ஆண்டும் அவர்கள் அப்படிச் சொல்லுகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்று சொல்கிறார். கல்வி அமைச்சரவர்களும் உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினை குறித்து நாங்கள் திருப்தி கொள்கிறோம். எனவே முதலில் கூறிய இரண்டு பிரச்சினைகளைப்பற்றி விவாதிக்க, அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் ஊதிய நிர்ணயம் பற்றி அரசு உத்தரவு பிறப்பித்திருந்தாலும்கூட, அந்த உத்தரவை நிறுத்தி வைக்கக் கோரி தஞ்சை மாவட்டக் கலெக்டர் அவர்கள் ஒரு குறிப்பாணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், அரசு ஆணைப்படி, கல்வி ஆண்டின் இடையிலே ஆசிரியர்களை மாறுதல் செய்யக் கூடாதென்று விதி இருந்தாலும் நாகை நகராட்சித் தனி அலுவலர் அங்கே பணி புரியும் ஆசிரியர்களைக் கல்வி ஆண்டின் இடையிலே மாறுதல் செய்திருக்கிறார்கள். இந்த இரண்டு செயல்களும் அரசு ஆணைக்கு முரண்பட்டனவாக இருப்பதால், மாவட்ட ஆட்சித் தலைவரின் குறிப்பாணையையும், நகராட்சித் தனி அலுவலரின் ஆணையையும் ரத்து செய்யக் கோரி, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இது குறித்து விவாதித்து, ஒரு சுமுகமான நிலையை ஏற்படுத்த, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதைப்பற்றி விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்பு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து

[1979 மார்ச் 21

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** மேலவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும், தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்பாக உண்ணாவிரதம் இருக்கும் ஆசிரியர்களின் கோரிக்கைகள் இங்கே எடுத்துக் கூறி, அதுபற்றி விவாதிக்க அவையின் அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்ததுபோல, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்ய, கல்வித் துறையிலிருந்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருப்பது உண்மை. அந்தக் கல்வித் துறை அரசாணையில், உள்ளாட்சித் துறை இது குறித்து வேறு ஒரு ஆணை வெளியிடுமென்று தெரிவித்திருப்பதால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இதனை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். ஆகவே உள்ளாட்சித் துறையிலே தனியாக ஆணை போடுவதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை, சிக்கலும் இல்லை. வெகு விரைவிலே அந்த ஆணைகளைப் பிறப்பித்து, நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களின் ஊதியத்தை நிர்ணயம் செய்ய உள்ளாட்சித் துறை தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே நாகை நகராட்சியிலே ஆசிரியர்கள் கல்வி ஆண்டின் இடையிலே மாறுதல் செய்யப்பட்டிருக்கிறார்கள். அது ஆணைக்குப் புறம்பானது என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஓர் ஊரிலே இருந்து மற்றொரு ஊருக்கு ஆசிரியர்களை மாறுதல் செய்யக்கூடாது என்பதுதான் அந்த ஆணையின் பொருள் என்று கருதுகிறேன். நாகை நகராட்சியில் மாறுதல் செய்யப்பட்ட ஆசிரியர்கள் நகராட்சிக்குள்ளேயே மாறுதல் செய்யப்பட்டிருக்கிறார்கள். இரண்டு ஆசிரியர்களுக்கிடையில் ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தின் அடிப்படையிலே அந்த மாறுதல்களைச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டதென்று ஆணையாளர் தெரிவித்திருக்கிறார், எனவே அது நகராட்சி ஆணையாளரின் அதிகாரத்திற்கு உட்பட்டதுதான் என்றும், அதிகாரத்திற்கு மீறியதல்ல என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே மிக அடிப்படையான ஒன்று, உள்ளாட்சித் துறையிலே இருந்து அரசாணை பிறப்பித்து, நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு ஊதியம் நிர்ணயிப்பதுதான். அந்த உத்தரவுகள் வெகு விரைவிலே பிறப்பிக்கப்படுமென்று சொல்லி, இது குறித்து விவாதிக்க, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1979 மார்ச் 21]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பொருள் குறித்து அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று சொல்லி, அனுமதி மறுக்கிறேன்.

திரு. ப. மாணிக்கம் அவர்கள் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவர் அவையில் இல்லாததால் அது கைவிடப்படுகிறது.

### 4. கவன ஈர்ப்பு.

(1) அகரம் குமாரமங்கலம் காலனியில் உள்ள சென்னை மாநகராட்சிப் பள்ளிக் கட்டிடம் இடிந்து விழுந்து, இரு மாணவிகள் பலத்த காயங்கள் அடைந்தது குறித்து.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"சென்னையை அடுத்த அகரம் குமாரமங்கலம் காலனியில் 7-3-1979 அன்று சென்னை மாநகராட்சிப் பள்ளிக்கூடக் கட்டிடம் இடிந்து விழுந்து 2 மாணவிகள் பலத்த காயங்கள் அடைந்தது குறித்து".

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, அந்தக் கட்டிடம் முன்னாள் இராணுவ வீரர்கள் சங்கத்திற்குச் சொந்தமானது. அக் கட்டிடம் மாநகராட்சிக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. 6-3-1979 அன்று காலை சுமார் 9-15 மணிக்கு இப் பள்ளிக் கட்டிடத்தின் களிமண் கலந்த மதில் சுவரின் ஒரு பகுதி திடீரென்று விழுந்தது. இதன் அதிர்ச்சியின் காரணமாக எதிர்ப்புறம் இருந்த கதவின் மேல் இருந்த செங்கல்கள் கீழே விழுந்தன. இதனால் இரண்டு மாணவிகளுக்குக் காயம் ஏற்பட்டது. அதில் தலையில் லேசான காயம்பட்ட ஒரு மாணவி அரசினர் பொது மருத்துவ மனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு, மறுநாள் காலை வீட்டிற்கு அனுப்பப்பட்டாள். இன்னொரு மாணவிக்கு லேசான காயம்

ஏற்பட்டதால், அம் மாணவியின் தாயாரே அவளை வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டார். தற்சமயம் இந்த இரண்டு மாணவிகளும் நல்ல நிலைமையில் உள்ளனர். அவர்கள் இருவரும் வழக்கம்போல் பள்ளிக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 5-10)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, பல பள்ளிக் கூடக் கட்டிடங்கள் இன்றையதினம் ஆங்காங்கே பழுதுபட்ட நிலையில் இருக்கின்றன. ஆண்டுக்கு ஒரு முறையேனும் பள்ளிக் கூடங்களை சோதனை செய்து பழுதாக இருக்கின்ற கட்டிடங்களைக் கண்டு பிடித்து, சரி செய்து, அதன் பிறகு, அங்கே வகுப்புகளை நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : செய்ய வேண்டியது அவசியம் என்பதை உணர்கிறேன். அதே நேரத்தில் இந்தப் பள்ளிக்கூடக் கட்டிடம் முன்னாள் இராணுவ வீரர்கள் சங்கத்திடமிருந்து சென்னை மாநகராட்சியால் வாடகைக்கு வாங்கப்பட்டு பள்ளிக்கூடம் நடத்தப்படுகிறது. இப்பொழுது குடிசை மாற்று வாரியத்தால் புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இன்னும் வேலை முடிவடையவில்லை. முக்கால் பகுதி முடிந்துவிட்டது. இப்போது அங்கே தான் பள்ளிக்கூடம் நடைபெற்றுவருகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்தமாதிரி பள்ளிக்கூடக் கட்டிடம் இடிந்து விழுந்து காயமடைந்த அல்லது இறந்துபோன குழந்தைகளுக்கு மருத்துவ வசதி அல்லது குடும்பத்திற்கு நஷ்ட ஈடு தரப்படுவதற்கு நிரந்தர ஏற்பாடு இல்லை. இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து மாநிலத்தில் ஆங்காங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்படும் போது, பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவ உதவி அல்லது குழந்தைகளின்மீதுதான் பதில் தர முடியும். பொதுவான பிரச்சினைபற்றி வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இங்கு கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களின்மீது தான் பதில் தர முடியும். பொதுவான பிரச்சினைபற்றி அதற்குரிய நேரத்தில் பேசி முடிவு செய்யலாம்.



(2) இராமேஸ்வரம் தீவில் புதுவிதமான ஒரு காய்ச்சல் ஏற்பட்டு 20 பேர்கள் இறந்ததும் பிற பகுதிகளுக்கும் இந்நோய் பரவும் அபாயம் குறித்தும்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள்-நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

“ இராமேஸ்வரம் தீவில் புதியவிதமான ஒரு காய்ச்சல் ஏற்பட்டு 20 பேர்கள் இறந்ததும் பல இடங்களிலிருந்து தினந்தோறும் இராமேஸ்வரத்துக்கு ஆயிரக்கணக்கானவர்கள் வந்துபோவதால் பிற பகுதிகளுக்கும் இந்நோய் பரவும் அபாயம் குறித்தும் ”.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : தலைவரவர்களே, அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : அறிக்கையிலிருந்து 22—2—1979 வரை 16 பேர்கள் இறந்ததாகவும், 1978ஆம் ஆண்டிலும் 1979ஆம் ஆண்டிலும் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் இந்நோயினால் பலர் பாதிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது. இதுபற்றி அங்குள்ள டாக்டர் துளசி பீடா என்பவர் இந்து பத்திரிகையில் ஒரு அறிக்கை கூட கொடுத்திருந்தார். அதில் குறிப்பாக இந்த நோய் குழந்தைகளுக்கும் பரவுகிறது என்று சொல்லியிருக்கிறார். அது மட்டுமல்ல. உணவு உண்ட பிறகு சாப்பிட வேண்டுமென்று சொன்ன மாத்திரையை உணவு அருந்துவதற்கு முன்னால் வேகமாக மாத்திரைகளைக் கொடுத்ததினால், குழந்தைகள் இந்நோயினால் பாதிக்கப்பட்டதாகப் பத்திரிகையில் செய்தி வந்தது. மேலும் இராமேஸ்வரத்திலிருந்த லேபாரட்டரியை தங்கச்சிமடத்திற்கு மாற்றியதனால், மருத்துவப் பரிசோதனை உடனடியாக நடத்த முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். அவற்றைப் பரிசீலனை செய்து, அரசு உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : இதுபற்றிய விவரம் தெரிந்ததற்குப் பின்னால் அரசு தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

---

@ 73-74 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

5. மேலவை விதி 82-ன் கீழ் அமைச்சரின் விளக்க அறிக்கை—காஞ்சீபுரத்தில் பட்டு நூல் கொள்முதல் பற்றிய குற்றச்சாட்டு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவைக்கு ஓர் அறிவிப்பு. சட்ட மன்ற மேலவை விதி 82-ன் கீழ் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரவர்கள் ஓர் அறிக்கையை அவைக்கு அளிப்பார்கள்.

***மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆற்காடு வீராசாமி நேற்றையதினம் 20—3—1979 அன்று நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு காஞ்சிபுரத்தில் பட்டு நூல் கொள்முதல் ஊழல் நடக்கிறது என்று குறிப்பிட்டுப் பேசியதற்கு சட்டமன்ற மேலவை விதி 82-ன் கீழ் என்னுடைய விளக்க அறிக்கையை சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

காஞ்சீபுரத்தில் 16 பட்டு கூட்டுறவு நெசவாளர் சங்கங்களும் ஆரணியில் 8 பட்டு கூட்டுறவு நெசவாளர் சங்கங்களும் திருப்திகரமாகச் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் மட்டும் சுமார் 5,500 பட்டுத் தறிகள் நெய்கின்றன. இச்சங்கங்களுக்குக் கீழ்க்கண்ட பட்டு மூலப்பொருள்கள் மாதாந்திரம் தேவைப்படுகின்றன.

| மூலப்பொருள். | மாதாந்திர தேவை. |
|---|---|
| கோரா பட்டு | 8,000 கிலோ. |
| சரிகை | 2,600 மார்க்குகள். |

இம் மூலப்பொருள்களின் மொத்த மதிப்பு மாதத்திற்கு சுமார் 30 இலட்சம். 30 இலட்சம் ரூபாய்க்கு மூலப்பொருள்களை பட்டு நெசவாளர் சங்கங்கள் மாதந்தோறும் வாங்கி வந்தாலும், இப்பொருள்களை நியாயமான விலைக்கு வாங்குவதற்கான திருப்திகரமான ஏற்பாடுகள் எதுவும் இல்லை. தங்களுடைய தேவைக்கு அதிகமாக இப்பொருள்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன எனவும் சங்கங்கள் இவற்றைக் கொள்முதல் செய்யும் விலையில் ஒரே காலத்தில் ஏற்றத்தாழ்வு இருக்கிறது எனவும் புகார்கள் வந்தன. இப்பொருள்களை நியாயமான விலைக்கு வாங்க வேண்டுமென்ற நோக்கோடு 11—7—1978 அன்று காஞ்சிபுரத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர் அலுவலகத்தின் அலுவலர்களும், பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்ட கூட்டத்தில் இம்மூலப்பொருள்களை வாங்குவதற்கு மத்திய பட்டு மற்றும் சரிகை கொள்முதல் கமிட்டி



அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கேற்ப 15—8—1978 ஆம் நாளன்று மத்திய கமிட்டி கீழ்க்கண்ட உறுப்பினர்களோடு அமைக்கப்பட்டது :

1. திரு.கே. பலாஜி, எம்.எல்.ஏ., தலைவர், வள்ளலார் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம், காஞ்சிபுரம்.

2. திரு. கே. எஸ். பார்த்தசாரதி, தலைவர், காமாட்சியம்மன் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம், காஞ்சிபுரம்.

3. திரு. சி. ஆர். உமாபதி, தலைவர், முருகன் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம், காஞ்சிபுரம்.

4. திரு. சந்திர ராவ் முதலியார், தலைவர், காஞ்சி பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம், காஞ்சிபுரம்.

5. திரு. சி. பார்த்தசாரதி, தலைவர், ஆரணி பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம், ஆரணி.

6. திரு. எஸ். ஜோதிலிங்கம், தலைவர், ஆரணி திருவள்ளுவர் நெசவாளர் கூட்டுறவு சங்கம், ஆரணி.

7. திரு. எம். அண்ணாமலை, தனி அலுவலர், திருவள்ளுவர் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம், காஞ்சிபுரம்.

8. உதவி இயக்குநர், நெசவாளர் பயிற்சி நிலையம், காஞ்சிபுரம்.

9. நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சரிகை லிமிடெட், உறுப்பினர்.

10. கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், காஞ்சிபுரம்.

11. திரு. ஆர். சண்முகம், உதவி இயக்குநர், செயலாளர், முருகன் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம், காஞ்சிபுரம்.

12. தனி அலுவலர், கோ-ஆப்டெக்ஸ், தலைவர்.

இவர்களில் காமாட்சியம்மன் பட்டு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் கே. எஸ். பார்த்தசாரதி ராஜிநாமா செய்துவிட்டார். ஆரணி கூட்டுறவு சங்கத்தின் தலைவர் திரு. சி. பார்த்தசாரதி சங்கத்தின் கமிட்டி கலைக்கப்பட்டதால், பதவி இழந்தார். ஆக இவர்கள் இருவரும் தற்போது இக்குழுவில் உறுப்பினராக இல்லை. இக்குழு கீழ்க்கண்ட நாட்களில் கூட்டங்களை நடத்தியிருக்கிறது.

2—9—1978,

18—10—1978,

9—11—1978,

27—11—1978,

12—12—1978,

22—1—1979,

15—2—1979.

இக்குழு பட்டு மற்றும் சரிகை வாங்குதலைப்பற்றி கீழ்க்கண்ட கொள் முதல் கொள்கைகளைக் கடைப்பிடிக்கலாமெனத் தீர்மானித்தது :

1. கோராபட்டு.—கோரா பட்டைப் பொறுத்தவரையில் சங்கங் களினுடைய மாதாந்திர தேவையை அறிந்து அவற்றில் எந்த அளவிற்கு கோரா பட்டு கிடைக்கின்றதோ அதை முதலில் தமிழ்நாடு பட்டு உற்பத்தி யாளர் தொழிலியல் கூட்டுறவு விற்பனை இணையத்திடமிருந்து வாங்கிக் கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக தேவைக்கேற்ற பட்டு இந்த இணையத்திடமில்லா மலிருந்தால், மீதம் தேவைப்படுகின்ற பட்டினை பெங்களூர் டைரக்டர் ஆஃப் செரிகல்சரிடமிருந்து கொள்முதல் செய்து கொள்ள வேண்டும். பின்பு மூன்றாவதாக தேவைப்படுகின்ற பட்டினை கர்நாடக மாநிலத்தில் பட்டு கூட்டுறவு இணையத்திடமிருந்து கொள்முதல் செய்துகொள்ள வேண்டும். மேற்கூறப்பட்ட இணையங்கள் அரசாங்கத்தினுடைய சார்பில் செயல்படு பவையாகும். மேற்கண்ட இந்த மூன்று நிறுவனங்களின் மூலம் வேண்டிய பட்டு கிடைக்காவிட்டால் இக்குழு தனிப்பட்ட உற்பத்தியாளர்களை அணுகி பட்டை கொள்முதல் செய்யலாம். ஆனால் இதுவரை கோரா பட்டு தனிப் பட்டவர்களிடமிருந்து வாங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2. சரிகை.—இம்மத்திய குழு சரிகை வாங்குவதற்காக தன்னுடைய உறுப்பினர்கள் ஒரு சிலரைக் கொண்ட ஒரு உப கமிட்டியை நிறுவியது. இந்த உப கமிட்டி அவ்வப்போது சூரத்திற்கு நேரிடையாகச் சென்று அகில இந்திய இணையத்தின் மூலமாக சரிகை உற்பத்தியாளர்களைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தி இச்சரிகை கொள்முதலை செய்து வருகிறது. மாதந் தோறும் காஞ்சிபுரம், ஆரணிக்குத் தேவைப்படுகின்ற மொத்த சரிகையினு டைய அளவு 1,600 மார்க்குகள் ஆகும். தமிழ்நாடு அரசு நிறுவனமாகிய தமிழ்நாடு சரிகை கம்பெனியில் மாதம் ஒன்றுக்கு 200 மார்க்குகள் சரிகை மட்டும் உற்பத்தி செய்யப்படுகிறது. இது ஆரணி பட்டு கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு மட்டுமே போதுமானது. எனவே தனக்கு வேண்டிய மீதம்



உள்ள சரிகையை அம்மத்திய குழு சூரத்திலிருந்துதான் வாங்க வேண்டிய நிலை உள்ளது. மேற்கண்ட உப கமிட்டி சூரத்திற்குச் சென்று சரிகை கொள்முதல் ஏற்பாடுகளை செய்து இருக்கிறது.

முதல் இரண்டு பயணத்தின்போது மொத்தம் இக்குழு 3,195 மார்க்குகள் சரிகைகளுக்கு உற்பத்தியாளர்களிடம் ஆர்டர்கள் கொடுத்து வந்தது. அதில் மொத்தம் 1,504 மார்க்குகள் சரிகை மட்டுமே வந்து சேர்ந்தது. அதன் மொத்த மதிப்பு ரூ. 8.4 இலட்சம் ஆகும். இந்த இரண்டு முறைகளிலும் கோ-ஆப்டெக்ஸ் மூலமாக சரிகையை கொள்முதல் செய்து பின் பட்டு நெசவாளர் சங்கங்களுக்கு விநியோகம் செய்ததால் விற்பனை வரி 4 சதவீதம் இரண்டு முறை செலுத்த நேரிட்டது. இதன் விளைவாகப் பட்டு கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற சரிகைகளின் விலை சற்று அதிகமாகிவிட்டது. இந்த ஏற்பாடு செய்ததற்கு காரணம் கோ-ஆப் டெக்ஸ் நிறுவனம் உடனடியாக சரிகையை டெலிவரி எடுத்து தவறாமல் பட்டு கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கும் என்பதால்தான். இவ்வாறு ஏற்பட்ட சரிகை விலையினுடைய உயர்வைப் போக்குவதற்காக இரண்டாவது முறை, மூன்றாவது முறை இக்கமிட்டி சூரத்திற்குச் சென்றபோது சரிகை குறிப்பிட்ட விலையில் சங்கங்களுக்கு நேரிடையாக வங்கிகளின் மூலமாக சரிகை உற்பத்தியாளர்களே அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டது. சரிகை உற்பத்தியாளர்களால் இந்த முறைப்படி நேரிடையாகப் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு, இக்கமிட்டி பேசி முடித்த விலைப் படி அனுப்பப்படுகிறது. இக்கமிட்டி மார்க்கெட் விலையைக் காட்டிலும் குறைவான விலைக்கு சரிகை கொள்முதல் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு களைச் செய்து வருகின்றது.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி இருக்கையிலிருந்து எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலவை விதி 82-ன் கீழ் அறிக்கை படித்துவிட்டார்கள். அமைச்சர் அறிக்கை அளித்ததற்குப் பிறகு என்ன பிரச்சினை இருக்கிறது ?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** என் பெயரைச் சொல்லி அறிக்கையைப் படித்திருக்கிறார்கள். அதனால் . . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்படி அறிக்கையைப் படிப்பது மரபு தான். நீங்கள் அவர்களுடைய துறையைப்பற்றி பெயர் சொன்னதற்காக அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். உங்களை அவர்கள் கண்டிக்க வில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தவறு நடந்திருக்கிறது என்று சொன்னேன். அவர்கள் அதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 'ஒத்துக் கொண்டோம்' என்று அவர்கள் சொன்னால், மிகவும் நல்லதாயிற்றே. அதனால் என்ன? மேலவை விதி 82-ன் கீழ் மாண்புமிகு அமைச்சரவர்களுடைய விளக்கத்திற்குப் பின் உறுப்பினர் பேச அனுமதியில்லை. அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். அவர்கள் உறுப்பினரைக் கண்டிக்கவில்லை. சப்ளிமெண்டரி பட்ஜெட் மீது உறுப்பினர் பேசும்போது, அதைப்பற்றிக் குறிப்பிடலாம். தயவுசெய்து உட்கார வேண்டும்.

**6. 1978-79 ஆம் ஆண்டு இறுதி துணை விவர அறிக்கையின் மீதும், 1971-72 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையின் மீதும் விவாதம்.**

*திரு. சி. இராமலிங்கம்: தலைவரவர்களே, 1978-79 ஆம் ஆண்டுக்கான இறுதி துணை விவர அறிக்கையினை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நேற்று இங்கே அளித்தார்கள். அதிலே சிறந்த அம்சமாக இருப்பது, என்னைப் பொறுத்தவரை, நான் சார்ந்துள்ள கைத்தறி நெசவாளர்களுக் காக இந்த அரசு 3 கோடி ரூபாயை வரவு செலவுத் திட்டத்திற்காக வழங்கி இருப்பது. அதற்காக நான் நெசவாளர்கள் சார்பாகப் பாராட்டுகிறேன், வர வேற்கிறேன், என்னுடைய மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல தமிழ் நாட்டில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 10 கோடி ரூபாயை மூலதனமாக ஒதுக்கியிருக்கிறார்கள். இதுவரை எந்த அரசும் செய்யாத அளவுக்கு 5½ இலட்சம் நெசவாள மக்களுக்கு ஒரு நல்ல வருவாயும், நல்வாழ்வும் அளிக்கக்கூடிய வகையில் இதைக் கொண்டு வந்திருப் பதற்காக எங்களுடைய புரட்சித் தலைவரான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய நெசவாளர் சமுதாயத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

(பிற்பகல் 5-20)

நேற்றைய தினம் அவையிலே பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது தாட்து குறைகளைச் சொல்லிவிட்டு, "அனைத்திந்திய அண்ணா தி.மு.க.-வும், தி.மு.க.-வும் ஒன்றுதான். அவர்களுக்குள் பங்காளிச் சண்டை போட்டுக் கொண்டு நடைமுறையில் இருவருமே ஒரு திட்டத்தைத் தான் வைத்துக்கொண்டு அவையிலே தகராறு செய்து கொண்டிருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டார்கள். திரு. நல்லசிவன் அவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், அவர்களுடைய கட்சியிலும்



இதைப்போல பிளவு ஏற்பட்டது என்பதை அவர் மறந்திருக்கமாட்டார். தன் முதுகில் இருக்கிற புண்ணைப் பிறர்தான் பார்க்க முடியும், தானே பார்க்க முடியாது என்பார்கள். அந்த நிலையில் அவர் இருந்துகொண்டு எதிரிகளான எங்களைப்பற்றி இங்கே தவறாகப் பேசினார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

துணை மான்யக் கோரிக்கையில் அடங்கியுள்ள திட்டங்கள் ஏழைகளின் நலனுக்கான திட்டங்கள் என்பதால், இதை நான் ஆதரிக்கிறேன். கட்சி மாச்சரியங்களைப்பற்றிப் பேசத் தயாராக இல்லை. கடந்த 30 ஆண்டுகளாக, சுதந்திரத்திற்குப் பின்னால் நெசவாளர் சமுதாயத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் காலத்திலே நன்மை செய்யப்பட்டது. அதற்குப் பிறகு புரட்சித் தலைவர் அவர்களுடைய காலத்திலேதான் நன்மை செய்யப்படுகிறது. பெருந்தலைவர் காமராஜர் காலத்தில் நெசவாளர்களுக்குக் கூட்டுறவு முறையிலே வீடுகள் கட்டித்தரப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்கூட நெசவாளர்களுக்கு அவர்களுடைய குடியிருப்புகள் சொந்தமாக்கப்படாமல், அவர்கள் செலுத்திய தவணைத் தொகைகளையெல்லாம் வட்டிக்குத்தான் சேர்க்கப்படுகிற நிலையில் வைத்திருந்தார்கள். நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது கூட்டுறவு முறையில் எங்கெங்கே நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ, அவைகளையெல்லாம் நெசவாளர்களின் சொந்த உடைமையாக்கி, அவர்கள் இனியும் அவைகளுக்காகப் பணம் தருவதை ரத்து செய்ய வேண்டும். இந்தத் துணை விவர அறிக்கையில் நெசவாளர்களுக்கு மட்டுமல்லாமல் மற்ற துறையிலிருப்பவர்களுக்கும், அன்றாடம் வேலை செய்து வாழ்க்கை நடத்தும் உழைப்பாளிகளுக்கும், வேலையில்லாமல் அலைந்து கொண்டிருக்கிற ஏழை எளிய மக்களுக்கும் வரப்பிரசாதம்போன்ற திட்டங்கள் இருப்பதால், இதைப் பாராட்டி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு தென்னை உற்பத்திக்காக, குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில், விசேஷமாகப் பெரிய ஏற்பாடுகளைச் செய்தது இந்த அரசு. அதன் காரணமாக தமிழகமெங்கும் நல்ல தென்னை வளர்ச்சி ஆரம்பமாகியிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு தேங்காய்மீது போடப்படும் வரி தென்னைப் பயிர் வளர்ப்பதைப் பாதிக்கிற வகையில் இருப்பதால், இங்கே நிதியமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் இருக்கும்போதே, அதைப்பற்றி ஒருசில வார்த்தைகளைச் சொல்ல விழைகிறேன்.

மாநிலத்தில் தென்னை பயிராகும் மொத்தப் பரப்பளவு 2,71,000 எக்கராகும். உற்பத்தியாகும் தென்னை மரங்கள் மொத்தம் 2,40,00,000 இருக்கும். இவைகளில் கிடைக்கிற உற்பத்தி சுமார் 110 கோடி தேங்காயாகும். தமிழ் நாட்டில் உற்பத்தியாகிற தேங்காயில் நாம் உபயோகிக்கும் தேங்காயின் எண்ணிக்கை 25 கோடிதான் இருக்கும். மீதியுள்ள சுமார் 85 கோடி தேங்காய்களும் வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

அதைப் போலவே வெளி மாநிலங்களான கருநாடகம், கேரளம் ஆகிய பகுதிகளிலிருந்து 15 கோடி தேங்காய்களுக்கு மேல் நமது மாநிலத்திற்கு வருகின்றன. இப்படிப்பட்ட நிலையில் தேங்காயின்மீது போடப்படும் வரி என்பது நமது மாநிலத்தில் உபயோகிக்கப்படும் சுமார் 15 அல்லது 20 கோடி தேங்காய்க்குத்தான் பொருந்தும். அதாவது, நமது மாநிலத்தில் எண்ணெய் பிழிய உபயோகப்படுகிற கொப்பரைத் தேங்காய்க்குத்தான் வரி போடப்பட்டிருக்கிறது. எண்ணெய் உற்பத்தியைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் தேங்காயில் அதிகமான எண்ணெய் சத்து இல்லை என்பதால், இங்கே உற்பத்தியாகிற தேங்காய் பொதுவாக எண்ணெய் உற்பத்திக்குப் பயன்படுவதில்லை. நமக்கு எண்ணெய் உற்பத்திக்குத் தேவைப்படும் தேங்காய் பெரும்பாலும் கேரளத்திலிருந்துதான் வருகிறது. பொதுவாக நமது மாநிலத்தில் உற்பத்தியாகும் தேங்காய் முழுவதும் நமது உணவுக்கு மட்டும் பயன்படுகிறதே தவிர, வேறல்ல.

தேங்காய் மீது முன்பு விற்பனை வரி போடப்பட்டபோது, விற்பனையாளர்களும் தேங்காய் உற்பத்தியாளர்களும் முறையிட்டுக் கொண்டபோது, அன்றைய முதலமைச்சரிடம் அதற்கு சரியான தீர்வு கிடைக்காத காரணத்தால், இன்றைய முதலமைச்சர்—புரட்சித் தலைவர் அவர்கள்—அப்போது பெருமுயற்சி எடுத்து, அவர்களுக்காகத் தலைமை தாங்கி, தேங்காய்மீது போடப்பட்ட வரியை ரத்து செய்தார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அவருடைய முயற்சியால் நீக்கப்பட்ட தேங்காய் மீதான வரி, இன்றையதினம் மீண்டும் அவருடைய ஆட்சிக்காலத்திலே வருவதென்பது மிகவும் வருந்தத் தக்க விஷயம். ஆகவே, தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது தயவுசெய்து தேங்காய் மீதான வரியை அகற்றுங்கள் என்பதுதான். அநேகமாகத் தேங்காய் மூலமாகக் கிடைக்க இருக்கும் வருவாய் சுமார் 50 அல்லது 60 லட்சம் ரூபாய்க்கு மேல் இராது. இது ஒன்றும் ஒரு பெரிய வருவாயல்ல. இந்த அரசாங்கத்திற்கு இன்னும் எவ்வளவோ அதிக அளவிற்கு



வருவாய் வரும் வசதிகளும் இனங்களும் இருக்கின்றன. எங்கே பார்த்தாலும், நமது முதலமைச்சர் அவர்களின் முயற்சியால் அன்று நீக்கப்பட்ட தேங்காய் மீதான வரி மீண்டும் வருகிறதே என்று வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நான் தஞ்சை மாவட்டத்திலிருந்து வருகிறேன். தமிழ் நாட்டில் உற்பத்தியாகிற தேங்காயில் சுமார் 60 கோடி தேங்காய்களுக்கு மேல் தஞ்சை மாவட்டத்தில் மட்டுமே உற்பத்தியாகின்றன. இன்றையதினம் தேங்காய் மீதான வரியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் ரத்து செய்வார்களானால், அதனால் அரசாங்கத்திற்கு ஒரு சிறு இழப்புதான் ஏற்படுமென்றாலும், தேங்காய் உற்பத்தியாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் பெரிய உதவி செய்தவர்களாவார்கள்.

அப்படியே தேங்காய்மீது வரி போட்டுத்தான் ஆக வேண்டும் என்ற கொள்கையில் இந்த அரசு இருக்குமானால், அதற்காக நான் ஒரு ஆலோசனையைக்கூட வழங்கத் தயாராக இருக்கிறேன். கேரளத்திலும் கருநாடகத்திலும் தேங்காயைப் பொறுத்தவரையில், வெளிமாநிலங்களுக்குப் போகும் தேங்காய்மீது மட்டும் வரி போடுகிறார்கள். அங்கேயே பயன்படுத்தப்படுகிற தேங்காய்மீது வரி போடப்படுவதில்லை. நம்முடைய மாநிலத்திலிருந்து சுமார் 85 கோடி தேங்காய் குஜராத் மாநிலத்திற்கும், மராட்டிய மாநிலத்திற்கும் போகிறது. அப்படி வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேங்காய்மீது வரி போடலாம். அல்லது வெளி மாநிலங்களான கருநாடகத்திலிருந்து, கேரளத்திலிருந்து நமது மாநிலத்திற்கு வருகிற தேங்காய்மீது வரி போட்டாலும், சரியாக இருக்கும். மேலும் ஒருமுனை வரி என்று சொல்லுகிற நேரத்தில், இந்த வரி தேங்காய் உற்பத்தியாளர்களிடமிருந்துதான் வசூலிக்கப்படுகிற நிலை இருக்கிறது. வியாபாரிகளிடமிருந்து இது வசூலிக்கப்படப் போவதில்லை. இதனால் உற்பத்தியாளர்கள்தான் பாதிக்கப்படுவார்கள் என்று கூறி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நிதியமைச்சர் அவர்களும் இதைக் கருத்தில் கொண்டு தேங்காய்மீதான வரியை ரத்து செய்ய வேண்டுமென்று கோரி என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு தலைவர் அவர்களே, துணை மான்யக் கோரிக்கைமீது சில கருத்துக்களைச் சொல்வதற்கான வாய்ப்பளித்தமைக்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய பேச்சைத் துவக்குவதற்கு முன்னாலே தமிழக அரசுக்கு என்னுடைய கோரிக்கையை ஏற்றதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1979 மார்ச் 21

இஸ்லாமிய மதத்தைப்பற்றியும் நபிகள் நாயகம் அவர்களைப் பற்றியும் வரலாற்றுப் பாடப் புத்தகத்தில் சில தவறான கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்தன. எனவே அந்தப் பகுதிகளை விலக்கி, சரியான வகையில் நியாயமான கருத்துக்களோடு அந்தப் பகுதி மாற்றியமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை எங்கள் சமுதாயத்திலிருந்து பல கோணங்களில் அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. நானும் இந்த அவையில் பேசும்போது மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடம் ஒரு பிராது கொடுத்தேன். அவர் அதை ஏற்றுக்கொள்கிற வகையில் அந்தப் பகுதிகளைப் பாடப் புத்தகத்திலிருந்து நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக சரியான கருத்துக்களைக் கொண்ட பகுதியை வைக்க உறுதியளித்திருக்கிறார்கள். இதற்காக இஸ்லாமிய சமுதாயத்தின் சார்பாக நான் இந்த அரசுக்கு எங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

துணை விவர அறிக்கையினைப் பார்த்தபோது, நாகூரில் ஒரு மருத்துவ மனை கட்டுவதாகச் சொல்லப்பட்டிருப்பதைக் கண்டேன். நாகூர் இஸ்லாமியர்களுடைய புனித ஸ்தலமாகும். அங்கே ஒரு புதிய மருத்துவ மனை கட்டுவதென்பது இஸ்லாமிய சமுதாயத்திற்கு உதவுவதாக அமைகிறது. ஆகவே அந்த நல்ல முயற்சிக்காகவும் இந்த அரசுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மதுரைப் பல்கலைக் கழகத்தில் உமறுப் புலவர் ஆராய்ச்சிக்காக ரூ. 2 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறேன். இது சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை. இஸ்லாமியர்களுக்காக சென்ற பட்ஜெட்டில் இது ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு பட்ஜெட்டில் இதற்காக ஒரு தொகையும் ஒதுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. சென்னை சர்வகலாசாலையிலும் இதைப் போலவே ஒரு பிரிவை உருவாக்கி, அதற்கும் ஒரு தொகை ஒதுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இந்த நேரத்தில் அரசாங்கத்திடம் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள வக்ப் வாரியம்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த வாரியத்திற்கு தமிழக அரசு மானியமாகக் கொடுப்பது ரூ. 3 லட்சம். இது நீண்ட காலமாக ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிற மானியத் தொகையாகும். கேரளத்திலும், கருநாடகத்திலும், ஆந்திரத்திலும் இந்த வக்ப் வாரியத்திற்கு ரூ. 16 லட்சம், ரூ. 20 லட்சம் என்று அரசாங்கத்திலிருந்து உதவி செய்கிறார்கள். எனவே தமிழக அரசும்



1979 மார்ச் 21] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

வக்ப் வாரியத்திற்குக் குறைந்தபட்சம் 10 லட்சம் ரூபாயாவது மான்யமாகத் தருவதற்கு முன்வர வேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்தில் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-30)

சட்ட மன்றம் என்ற தலைப்பிலே சில கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே நான் சொல்ல விரும்புவது எல்லாம், நம்முடைய 'கவுன்சிலைப்' பொறுத்தமட்டில், புதிய கட்டிடம் 10 அடுக்கு 12 அடுக்கு எல்லாம் கட்டியிருக்கிறோம். இருந்தாலும் இந்த கவுன்சில் ஆபீஸ் நடைபாதையிலே தான் இருக்கிறது. கிளார்க்குகள் எல்லாம் நடைபாதையிலேதான் உட்கார்ந்திருக்கிறார்கள். இதை விரிவுபடுத்தி கொஞ்சம் வசதியான இடம் அதற்கு என்று ஒதுக்கி, சில இலாக்காக்களை புதிய கட்டிடத்திற்கு மாற்றி, கவுன்சில் ஆபீசை நடைபாதையிலே இருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, கோட்டையிலே தனி ஆட்கள் இருக்கிறார்கள். பல பேர்கள் இங்கே வந்துபோகக்கூடியவர்கள் இருக்கிறார்கள். இஸ்லாமிய தொழுகை நேரம் வந்தால், அதற்கு இடம் வேண்டும் என்ற நிலையில் கோட்டைக்கு உள்ளேயே ஒரு பள்ளிவாசல் ஒதுக்கியிருக்கிறார்கள். அது காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்தே இருக்கிறது. இப்போது அந்த இடம் போதவில்லை. உதாரணமாக வெள்ளிக்கிழமையன்று தொழுகைக்குப் போனால் நடைபாதையிலே நின்று தொழவேண்டியிருக்கிறது. அவ்வளவு இடம் தான் அங்கு இருக்கிறது. காற்றே இல்லை. வேறு எந்த வசதியும் அங்கு இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு போய்ப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, கொஞ்சம் வசதியான இடமாக, காற்றோட்டம் உள்ள இடமாக, பெரிய இடமாக ஒதுக்கித் தர அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி மானியத்தைப் பொறுத்தமட்டில், திருச்சியிலே மூர்த்தூஷா என்ற ஸ்கூல் இருக்கிறது. அந்த ஸ்கூல் ஆங்கிலேயர் காலத்திலேயே முஸ்லீம்களுக்கு என்று விடப்பட்டது. அரசாங்க சார்பிலே தான் அது இப்போது நடக்கிறது. அதிலே Advanced English Study என்று ஒரு புதிய பகுதி வைத்திருக்கிறார்கள். அந்தப் பகுதி அங்கு இருப்பதன் காரணமாக, அந்தப் பள்ளிக்கூடத்தில் பாதி இடத்தை அது ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறது. அங்குள்ள ஆசிரியர்கள் அங்கே குடியிருக்கிறார்கள். அங்கேயே சாப்பிடுகிறார்கள், அங்கேயே தூங்குகிறார்கள். பரீட்சை நடத்துவது எல்லாம் அங்கே

தான். இவ்வாறு எல்லாம் நடப்பதால், மூர்த்துஷா பள்ளிக்கூடம், ஒரு வருடத்தில் எவ்வளவு நாட்கள் நடத்த வேண்டுமோ அவ்வளவு நாட்கள் நடத்த முடியாமல், அங்குள்ள மாணவர்களுடைய படிப்பு பாதிக்கப்படுகிறது. இந்த Advanced English Study -யை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று கேட்டோம். சமீபத்திலே, அதை மாற்ற முடியாது, அவர்களுக்கு நீங்கள் இடம் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று ஆணை வந்திருக்கிறது. இதை அரசு பரிசீலிக்க வேண்டும். மைனாரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒன்று இரண்டு பள்ளிக்கூடங்கள்தான் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பள்ளிக்கு கொஞ்சம் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் என்ற மானியத்திலே தீப்பெட்டித் தொழிலுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் 88 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதைக் காண்கிறேன். தீப்பெட்டித் தொழில் மிகவும் ஆபத்தான ஒரு சூழ்நிலையில் இருக்கிறது. கையால் செய்யப்படக்கூடிய தீப்பெட்டிக்கு வருமானம் கட்டுப்படியாகவில்லை என்ற சூழ்நிலை இருப்பதால், மத்திய அரசாங்கம் அதற்குச் சலுகை கொடுத்து, அதற்கு இருந்த வரியைக் குறைத்துக் கொடுத்தார்கள். மெஷின்களில் செய்யக்கூடிய தீப்பெட்டிகளுக்குக் கூடுதல் வரி போட்டார்கள். அதன் காரணமாக 'விம்கோ' தொழிற்சாலை பாதிக்கப்பட்டு, அங்கு 1,500 தொழிலாளர்களுக்கு மேல் வேலை நீக்கம் செய்யக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையை அரசு அக்கறை செலுத்தி சரிப்படுத்த வேண்டும். கையால் செய்யக்கூடிய தீப்பெட்டிக்குப் போடப்பட்டிருக்கும் 2 சதவீதம் வரியையும் வாபஸ் வாங்கி, இந்தத் தொழிலுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறியைப் பொறுத்தமட்டில், முன்பு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. இராசா முகமது அவர்கள் அத்துறையின் அமைச்சராக இருந்தார்கள். அந்த சமயத்திலே நான் இந்த சபையிலே ஒரு கோரிக்கை சமர்ப்பித்தேன். கடையநல்லூரிலே கைத்தறி நெசவாளர்கள் மீது போடப்பட்டிருக்கும் கேஸ்கள் 5, 10 வருஷங்களாகத் தொடர்ந்து இழுத்தடித்துக் கொண்டு போகும் நிலை இருக்கிறது. பல இன்னல்களுக்கும், தொல்லைகளுக்கும் ஏழை மக்கள் உள்ளாகி, அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும் என்று நான் சொன்னேன். பரிசீலனை செய்தோம், அநியாயமான முறையிலே கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன, விரைவிலே வாபஸ் வாங்கப்படும், உண்மையான



குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். ஆனால் என்ன காரணமோ? என்னவோ ஒன்றும் செய்ய முடியாது என்று பதில் சொல்லியிருப்பதாக அறிகிறேன். ஆகவே, இந்த விஷயத்தில் மறுபரிசீலனை செய்து, அந்தத் தொழிலாளர்கள் மீது கருணை உள்ளத்தோடு அவர்களது கோரிக்கையை அணுக வேண்டும் என்று நான் சமர்ப்பிக்கிறேன்.

மற்றொன்று, இந்த மசோதாவிலே பூம்புகார் கார்ப்பரேஷன் பற்றி ஒரு வாசகம் பார்த்தேன். புதிதாக சில கப்பல்கள் வாங்கப்போவதாக ஒரு வாசகம் இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நமது டிரான்ஸ்போர்ட் மினிஸ்டர் அவர்களிடத்திலே ஒரு சமயத்திலே கேள்வி கேட்டபோது, பூம்புகார் கப்பல் நிறுவனம் ஆண்டுக்கு 1 கோடி ரூபாய் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது என்றும், இதனால் மக்களுக்கு என்ன லாபம் என்று கேட்டால் கல்கத்தாவிலிருந்து மக்களுக்குத் தேவைப்படும் கரி கொண்டு வருகிறார்கள் என்றும் சொன்னார்கள். 1 கோடி ரூபாய்க்கு நஷ்டம் ஏற்படுவதாக இருந்தால், அந்த நிறுவனத்தை மூடிவிடலாம். எல்லா மாநிலங்களும் இந்த மாதிரி போக்குவரத்து நடத்துவதாக எனக்குத் தெரியவில்லை. பெருவாரியான மாநிலங்களிலே கடற்கரையே இல்லை. சில மாநிலங்களில் கடற்கரை இருந்தும், அங்கு கப்பல் போக்குவரத்து இல்லை. அவர்கள் கப்பல் போக்குவரத்து நடத்தவில்லை. நாம் கப்பல் போக்குவரத்து நடத்த வேண்டுமென்று தொடங்கியதற்கான அடிப்படைக் காரணம் கூட எனக்குப் புரியவில்லை. இவ்வளவு நஷ்டம் இருந்தும் தொடர்ந்து நடத்துவது என்பது விரும்பத்தகாதது. மேற்கொண்டு இரண்டு மூன்று கப்பல்கள் வாங்கப் போகிறோம் என்பது பயங்கரமான யோசனை. இந்த யோசனையைக் கைவிட வேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சார வாரியத்தைப் பொறுத்து, அதற்கு 25 கோடி ரூபாய் இந்த மானியக் கோரிக்கையில் ஒதுக்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு நல்ல மழை பெய்து டாம்கள் எல்லாம் நிறைந்து மின்சார வெட்டே வராது என்று சொல்லிக்கொண்டிருந்த நிலை இருந்தது. பிறகு எதிர்பாராதவிதமாக திடீரென்று தமிழகம் முழுவதும் சென்னையைத் தவிர மின்சார வெட்டு. இது மிகவும் விரும்பத்தகாத ஒரு போக்கு. அரசுக்கு ஏற்பட்ட ஏதாவது நிர்ப்பந்தத்தின் காரணமாகக்கூட அது இருக்கலாம். எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக மின்சார வெட்டை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கையையும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான்

கடைசியாக, தீயணைப்பு சம்பந்தமாக சில ஒதுக்கீடுகள் பார்க்கிறேன். திருச்சியிலே தீயணைப்பு நிலையங்கள் இருக்கின்றன. அங்கு உள்ள உந்துகள், மற்ற சாமான்கள் எல்லாம் 30—35 வருடங்களுக்கு முன்னால் வாங்கியவை. அவைகள் அடிக்கடி ரிப்பேர் ஆகின்றன. அங்குள்ள பம்புசெட்களைக் கொண்டு ஒரு மெத்தையில் தீயணைத்த பின்பு இரண்டாவது மெத்தைக்கு தண்ணீர் கொண்டு செல்லும் அளவுக்கு இல்லை. திருச்சி நகரத்திலே தீ விபத்து என்றால், பக்கத்திலே இருக்கின்ற 'பெல்' நிறுவனத்திலேயிருந்து அவர்கள் வைத்திருக்கின்ற தீயணைப்பு வண்டிகள் வந்து தீயை அணைக்கும் நிலை இருக்கிறது. அவர்கள் 10, 15 மைல்களுக்கு அந்தப் பக்கத்திலேயிருந்து வருகிறார்கள் என்றால், அவர்கள் வந்து சேருவதற்குள்ளேயே, 3/4 பங்கு பொருள்கள் தீயில் எரிந்து போகின்றன. பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே, எந்தெந்த நகரங்களில் தீயணைப்பு நிலையங்கள் இருக்கின்றனவோ, அங்கிருக்கும் மோட்டார் வண்டிகள், மற்றும் பழைய சாமான்களை மாற்றி புதிய பொருள்கள் வழங்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-40)

**திரு. பி. ஆர். தாமஸ்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1978-79ஆம் ஆண்டுக்கான இறுதி துணை விவர அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை சில வினாடிகளில் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

பொதுவாக நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், மருத்துவத் துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையை மேலும் அதிகமாக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. தனியார் துறை மருத்துவத் துறையில், வேலூரில் உள்ள கிறிஸ்துவ மிஷன் ஆஸ்பத்திரியில் சிறுநீரகத்தை மாற்றக் கூடிய சிகிச்சையைச் செய்கிறார்கள். ஆசிரியப் பெருமக்கள் கூட இந்த நோய்க்கு ஆளாகி, சிறுநீரகத்தை மாற்ற வேண்டும் என்றால், குறைந்த பட்சம் 45 ஆயிரம் ரூபாய் கொடுத்தால்தான் இந்த சிகிச்சையைச் செய்ய முடியும். அரசு மருத்துவ மனைகளில் இத்தகைய வாய்ப்பு இல்லை. எனவே மாநிலத்திலுள்ள அரசு மருத்துவ மனைகளில் ஒரு மருத்துவ மனையிலாவது இத்தகைய சிகிச்சை முறையை அமுலாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளி நாட்டிற்குச் சென்றிருந்த காலத்திலே, தமிழகத்திலேயிருந்து சென்று சிறந்த வைத்தியங்களைச் செய்கிற மருத்துவர்கள் தம்முடைய நாட்டிற்கு வரக்கூடிய



வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று கூறினார்கள். கிறிஸ்துவ மிஷன் ஆஸ்பத்திரியிலே கூட வெளிநாட்டிலிருந்து வந்த மருத்துவர்கள்தான் முன்னேறிய சிகிச்சைகளைச் செய்கிற காரணத்தால், இத்தகைய திட்டங்களை அமுலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இரண்டாவது தம்முடைய ஊதியக் குழுவின் பரிந்துரைகளைப் பொறுத்த வரையிலே, சில முரண்பாடுகள் இருக்கின்றன, முரண்பாடுகள் எல்லாவற்றையும் விளக்கமாகக் கூறத் தேவையில்லையென்று கருதுகிறேன். ஏனென்றால் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதைப்பற்றி நன்கு அறிந்திருக்கிறார்கள். அந்த முரண்பாடுகளைக் களையக் கூடிய வகையில் சிறந்த முறையிலே நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பு அளித்ததற்காக நன்றியையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், 1978-79ஆம் ஆண்டுக்கான இறுதி துணை மதிப்பீடுகள்பற்றி இந்த அவையில் ஆற்றிய உரையின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தம்முடைய நிதியமைச்சர் அவர்கள் தந்த அறிக்கையில், துணை மதிப்பீடுகளில், வருவாய்க் கணக்கில் 60.20 கோடி ரூபாய்க்கும், மூலதன, கடன் கணக்குகளில் 131.88 கோடி ரூபாய்க்கும் ஆக மொத்தமாக 192.08 கோடி ரூபாய்க்கும் அவையின் அனுமதி கோரப்படுகிறது என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லிவிட்டு, இந்தப் பணத்திற்கான செலவுக்கான விவரங்களையும் இங்கே கொடுத்திருக்கிறார்கள். அதிலே ஒன்று, கடந்த ஆண்டு பெய்த பெரு மழையின் காரணமாக, நீலகிரி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் ஏற்பட்ட சேதங்களைச் சீர் செய்யும் பணிகளுக்காகச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கமும் இதில் அடங்கும் என்று தெரிவித்திருக்கிறார்கள். தம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட வெளிநாட்டிலே சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பியவுடனே, பாதிக்கப்பட்ட இந்தப் பகுதிகளையெல்லாம் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் சொல்லச் சென்றார்கள். அவர்கள் சென்ற நேரத்தில் மக்கள் எந்த அளவுக்கு ஆர்வத்தோடு தங்களுடைய வேதனையை வெளிப்படுத்தினார்கள் என்பதை பத்திரிகையின் வாயிலாக நாங்கள் பார்த்தோம். தம்முடைய முதலமைச்சர் அவர்கள் எந்த அளவுக்கு, இப்படிப்பட்ட இயற்கையின் சீற்றத்தால்

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டும் என்ற தாராள மனத்தை வெளியிட்டார்கள் என்பதையும், அதன் தொடர்பாக சென்னை நகரத்திலே; மழை, வெள்ளம், புயல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட ஏழை எளியவர்களுக்கெல்லாம் 50 கிலோ அரிசியும், வேட்டியும், சேலையும் கொடுக்க முன் வந்தார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். ஆனால் நம்முடைய முதலமைச்சர் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அறிவித்த நேரத்திலே, இந்தத் திட்டம் சென்னை நகரத்திற்கு மட்டும்தானா அல்லது புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழகத்தில் உள்ள அனைத்து மக்களுக்குமா என்று நிருபர்கள் கேட்டபோது, அவருக்கே உரிய தாராள மனப்பான்மையோடு, கன்னியாகுமரி முதல் சென்னை வரையில் தமிழகம் முழுவதும் எந்தப் பகுதி மக்களாக இருந்தாலும், அவர்களுக்கெல்லாம் இத்திட்டம் விஸ்தரிக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தினுடைய ஒப்புதலுக்காக ஆற்றிய உரையை நான் படித்துப் பார்க்கிற நேரத்தில், எனக்குக் கிடைத்த தகவலையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நீலகிரி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் போன்ற மாவட்டங்களில் மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிதி ஒதுக்கம் தாருங்கள் என்று கேட்டிருக்கிறார்களே தவிர, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை உண்மையிலேயே நிறைவேற்றியிருக்கிறார்களா என்று பார்த்தால், இல்லை. பாதிக்கப்பட்ட எந்தப் பகுதி மக்களுக்கும், நீலகிரி, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளவர்களுக்கும் இந்த 50 கிலோ அரிசி, வேட்டி, சேலை கொடுத்திருப்பதாகத் தகவல் இல்லை. சென்னை நகரத்திலே கொடுத்தார்கள், அதை வரவேற்கிறோம். அமைச்சர்கள் எல்லாம் அதை தங்களுடைய அன்றாடக் கடமையாக எண்ணி, எந்தெந்தப் பகுதியிலே எந்தெந்த அமைச்சர் விநியோகிப்பார் என்று பட்டியல் போட்டு, முறைப்படி காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் ஏன் இந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு அப்படிப்பட்ட பணிகளை மேற்கொள்ள வில்லை? ஏன் இந்த அரசாங்கம் அந்தப் பகுதிகளைப் புறக்கணித்தது என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். உரிய நடவடிக்கையை இனியாவது எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாலைகளைச் சீரமைக்க 3.86 கோடி ரூபாய்க்கும், பாசன வசதியைச் சீரமைக்க 2.75 கோடி ரூபாய்க்கும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. புயலால் பாதிக்கப்பட்டு தமிழ்நாட்டில் பல கிராமங்கள், இணைப்புச்





சாலைகள் இல்லாத வகையில் பெரும்பாலான சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பல கிராமங்களுடைய சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கிற நேரத்தில், 3.86 கோடி ரூபாயைக் கேட்கிறார்கள் என்றால், இந்த மன்றம் அதை மிக்க மகிழ்ச்சியோடு அளிக்க ஒப்புக்கொள்ளுகிறது. என்றாலும் ஏற்கெனவே வழங்கப்பட்ட தொகையின் மூலம் சாலைகள் சீரமைக்கப்பட்டதா என்றால் இல்லை. இந்த அரசாங்கத்தினுடைய புரட்சிகரமான திட்டங்களுள் ஒன்று, கிராமப் பகுதிகளில் இருக்கிற மக்களுக்கு வசதியைச் செய்து தர வேண்டும் என்பது. அதற்காக மினி பஸ்களை ஏற்பாடு செய்து, கிராமங்களை இணைக்கக் கூடிய அளவில் பஸ் வசதியைச் செய்து தந்தார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலே அந்தத் திட்டம் துவக்கப்பட்டது. அப்போதிருந்த சாலைகள் நன்றாக இருந்த காரணத்தால், ஏறக்குறைய 12 வழித் தடங்களில் பஸ்கள் விடப்பட்டன. 3.86 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் கேட்கிற நேரத்தில், சாலைகளைப் பராமரித்து இன்று எத்தனை வழித்தடங்களில் பஸ்கள் போகின்றன என்பதை எண்ணிப் பார்த்தால், அவற்றில் பாதிக்கு மேல் பஸ்கள் ஓடவில்லை என்று தெரிகிறது. இதற்குக் காரணம், சாலைகள் சீராக இல்லை என்பதுதான். வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில்தான், இந்த நிலை என்பதல்ல. தமிழகத்திலே இப்போது எந்தச் சாலையை எடுத்துக் கொண்டாலும், இதைப் போலவே கவனிப்பாரற்று, உண்மையிலேயே போதுமான பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றன. பல மாநிலங்களை இணைக்கக்கூடிய நேஷனல் ஹைவேஸ் ரோடுகள் கூட இப்படிப்பட்ட நிலைமையில் இருப்பதைப் பார்க்கிறோம். எனவே நிதி ஒதுக்கம் கேட்கிற நேரத்தில், இன்னும் ஒரு கோடி, இரண்டு கோடி ரூபாய் வேண்டுமென்று ஒதுக்குங்கள், பரவாயில்லை. நாட்டிலே உள்ள சாலைகளையெல்லாம் நல்ல முறையிலே பராமரிக்க வேண்டும் என்பதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன். ஏனென்றால் இன்றைய தினம் முதலமைச்சராக இருந்தாலும், மற்ற அமைச்சர்களாக இருந்தாலும், பொது வாழ்க்கையிலே ஈடுபட்டிருக்கிறவர்கள் என்ற காரணத்தால், குறைந்த பட்சம் காரில் போகக் கூடிய அளவுக்காவது சாலைகளைச் சீரமைக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்திருப்பதால், கிராமப் பகுதிகளில் போகிற நேரத்தில் போக்குவரத்து தடைபடக் கூடிய வகையில் நிலைமைகள் இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்து, சாலைகளைச் சீர் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே பாசன வசதிகளைச் சீரமைக்க 2.75 கோடி ரூபாய் செலவிட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். பாசன வசதிக்காக ஒதுக்கப்பட்ட இந்தப் பணம், முறைப்படி செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எனக்குக் கிடைத்த தகவலின்படி, செங்கற்பட்டு மாவட்டத்திலே, திருத்தணி தாலுக்காவில், கிராமப் பகுதிகளில் பாசன வசதிகளைச் சீரமைக்கிறோம் என்று சொல்லி, எஸ்டிமேட் போட்டு, பல இடங்களில் பில் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் பாசன வசதிகள் சீரமைக்கப்படவில்லை. இதை நான் சொன்னால், ஆளும் கட்சியிலே இருக்கிறவர்களுக்குக் கோபம் வரும். கடலூர் தொகுதியைச் சேர்ந்த சட்ட மன்றப் பேரவை உறுப்பினர், இப்படி புயலால் பாதிக்கப்பட்ட பகுதியில் அதிகாரிகள் தவறு செய்துவிட்டார்கள் என்று பேசியிருக்கிறார்கள். இது எப்படி இருந்தாலும், அதிகாரிகள் தவறு செய்திருந்தாலும், தவறு இருக்கிறது என்று சொல்லக் கூடிய அளவுக்கு துணிச்சலோடு பேசியிருக்கிறார்கள் என்பது பத்திரிகையில் செய்தியாக வந்திருக்கிறது. இப்படிப்பட்ட நிதியை ஒதுக்குகிற நேரத்தில், அந்தப் பணம் முறைப்படி செலவழிக்கப்படுகிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மூன்றாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளை இந்த அரசாங்கம் நிறைவேற்றுகிற வகையில் 30 கோடி ரூபாய் அதற்கும் ஒதுக்கம் செய்கிற நேரத்தில் அரசு ஊழியர்களுடைய பெருவாரியான பிரச்சினைகளை இந்த அரசாங்கம் இன்னும் கவனிக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மூன்றாவது சம்பளக் குழுவினுடைய பரிந்துரைகளில் இன்னும் சிலவற்றைப பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்ற சூழ்நிலையில், சில பிரிவினர் இன்னும் பழைய அடிப்படைச் சம்பளத்திலே இருக்கக் கூடிய அளவுக்கு வித்தியாசங்கள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் முறைப்பட்டும் கூட, இன்னும் அரசாங்கம் கவனிக்காமல் இருப்பது நியாயம்தானா என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, மூன்றாவது சம்பளக் குழு தந்திருக்கக் கூடிய அறிக்கையை நாம் இன்னும் முழுமையாக அமுல்படுத்தாத சூழ்நிலையில், இன்றைக்கு ஏறியிருக்கிற விலைவாசியை நாம் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். மத்திய அரசாங்கம், ஏறியிருக்கிற விலைவாசியைக் கணக்கிட்டு, கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து 8 புள்ளிகள் விலைவாசி உயர்ந்திருப்பதால், மத்திய அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும்



பஞ்சப்படியை உயர்த்துவதற்கு பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அவர்கள் எடுத்த முடிவை ஒரு வாரத்திற்கு முன்னாலேயே பத்திரிகையிலே வெளியிட்டிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் இதுவரையிலே அப்படி ஒன்றும் சொல்லவில்லை. மத்திய அரசாங்க ஊழியர்களும் சென்னையிலே இருக்கிறார்கள், மாநில அரசு ஊழியர்களும் சென்னையிலே, தமிழகத்திலே இருக்கிறார்கள். இரு ஊழியர்களுக்கும் ஒரே விலைவாசிதான். மத்திய

(பிற்பகல் 5-50)

அரசாங்க ஊழியர்களுக்கு 8 புள்ளி கூடியிருப்பதால், அவர்களுக்கு டியர்னஸ் அலவன்ஸ் உயர்த்திக் கொடுக்கிறார்கள். மாநில அரசு ஊழியர்களுக்கும் அந்த ஊதிய உயர்வு, டியர்னஸ் அலவன்ஸ் இல்லையா என்பதைப்பற்றி நம் அரசும் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் உரையில் மூன்றாவது பக்கத்தில் சொல்லியிருக்கிறார்கள். தொழில் முதலீட்டுக் கழகத்திற்காக ஒரு கோடி ரூபாய்க்கு இந்த அரசாங்கம் நிதி ஒதுக்கியிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். உள்ளபடியே தமிழ்நாடு முதலீட்டுக் கழகம் பற்றி, அதன் நடவடிக்கைகளைப்பற்றி, அது ஆற்றுகின்ற பணியைப்பற்றி நான் இந்த நேரத்தில் குறிப்பிடுவது மிகப் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்த முதலீட்டுக் கழகம் காங்கிரஸ் ஆட்சியிலே உருவாக்கப்பட்டு, முன்னேற்றக் கட்சி ஆட்சியிலே வளர்க்கப்பட்டது. இந்த முதலீட்டுக் கழகத்தை தொழில்கள் வளர வேண்டும், வேலையற்றோர்களுக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும், படித்துவிட்டு இருக்கின்ற லட்சக்கணக்கான மாணவர்களுக்கு வேலைவாய்ப்புக்களை உண்டாக்கித் தரவேண்டும் என்ற அளவிலேதான் உருவாக்கியிருக்கிறோம். பல ஆண்டுகளுக்கு முன் இந்த நிறுவனத்திலிருந்து பெற்ற பணத்தை, 158 தொழில் நிறுவனங்கள் வாங்கிய கடனை, கடந்த 10, 15 ஆண்டுகளாகக் கட்டவில்லை. 1962 லே இருந்துகூட வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தவில்லை. 158 நிறுவனங்கள் செலுத்தவில்லை. அதனாலேதான் நம்முடைய முன்னவர் அவர்கள் பதில் அளிக்கின்ற நேரத்தில் சொன்னார்கள். 7 நிறுவனங்கள் மீது இந்த அரசாங்கம் அவசர அவசரமாக நடவடிக்கை எடுக்கிறது என்று சொன்னார்கள். அவர்கள் மீது நீதி மன்றத்திலே வழக்குகள் தொடர்ந்திருக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஏழு நிறுவனங்கள் மீது நீங்கள் நடவடிக்கை எடுத்தீர்களே என்றும், அது அநியாயம் அல்லவா என்றும் சொல்லவில்லை. இந்த ஏழு நிறுவனங்கள் அரசாங்கத்துக்கு வேண்டாத

நிறுவனங்கள், அரசாங்கத்தை எதிர்க்கின்ற நிறுவனங்கள், அரசாங்கத்தினுடைய ஆசைகளைப் போக்க முடியாதவை என்ற காரணத்தினாலேயே நடவடிக்கை எடுக்கச் செய்கிறார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் அரசாங்கத்தை ஆதரிக்கின்றவர்களாக இருந்தால், அவர்களுக்குச் சலுகை அளிக்கும் வகையிலே இருக்கின்றார்கள். 158 நிறுவனங்கள் இன்றைக்கு வாங்கிய பணத்திற்கு வட்டிகூட கட்டவில்லை. இந்தச் சூழ்நிலையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. 1964-லிலே வாங்கிய கடனுக்கு அவர்கள் இன்னும் வட்டிகூட கொடுக்கவில்லை. அசலிலே ஒரு ரூபாய் கூட கட்டவில்லை. ஆனால் அப்படி கட்டாமல் இருப்பவர் இன்றைய டிக் நிறுவனத்திற்குத் தலைவராக இருக்கிறார்கள் என்று சொல்கிறேன். உண்மையிலேயே நீங்கள் ஒரு கோடி ரூபாய் ஒரு நல்ல நோக்கத்திற்கு என்று கொடுத்தாலும், அந்த நல்ல நோக்கத்தை அது நிறைவேற்றுமா என்பதைப்பற்றி இந்த அரசு எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தத் தொழில் நிறுவனத்திலே இருக்கக்கூடிய மேனேஜிங் டைரக்டர், அவர் அமைச்சராகக்கூட இருக்கலாம், எம்.எல்.ஏ. ஆகக் கூட இருக்கலாம், எம்.எல்.சி. ஆக இருக்கலாம். அது யாராக இருந்தாலும், தொழில் வளர வேண்டுமென்பதில் அக்கறை உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆனால் இந்த மேனேஜிங் டைரக்டர் மூலதனம் போட்டு ஆரம்பிக்க வருகின்ற முதலாளிகளை உற்சாகப்படுத்துகிறாரா என்றால், இல்லை. அதற்கு மாறாக எந்த அளவுக்குத் தொழில் ஆரம்பிக்க வேண்டும் என்று ஆர்வத்தோடு வருகிறார்களோ, அதை விட வேகமாக அவர்களைத் திருப்பி அனுப்பக்கூடிய வேலையிலேதான் இருக்கிறார். கல்கத்தாவிலே இருக்கின்ற நிறுவனத்தார் தமிழ்நாட்டில் பல நூற்றுக்கணக்கான நூற்பாலைகள் இருக்கின்றனவே, அவைகளுக்குத் தேவையான உபகரணங்களைச் செய்யக்கூடிய தொழிற்சாலையை தமிழகத்திலே நிர்மாணிக்க வேண்டும் என்று வந்தார்கள். அவர்கள் ஆர்வத்தோடு ஏறக்குறைய ரூ. 12 கோடி மூலதனம் போட்டு ஆரம்பிக்க வேண்டும் என்று வந்திருக்கிறார்கள். ஐந்தாயிரத்திற்கு மேற்பட்டவர்களுக்கு அந்தத் தொழிற்சாலையில் வேலை வாய்ப்புகளை உண்டாக்கித் தரவேண்டும் என்று ஆர்வத்தோடு வந்து, இந்த அரசினுடைய உதவியை நாடியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களிடம் அந்த முதலாளிக்கு இண்டர்வியூ கிடைக்கவில்லை என்ற அளவில், அவர் மேனேஜிங் டைரக்டரிடம் சென்று பேசியிருக்கிறார். இது குறித்து அவர்களிடம் சொல்லியிருக்கிறார். "நாங்கள் இப்படி மூலதனம் போடத் தயாராக இருக்கிறோம். அதே நேரத்தில் நீங்கள் என்னென்ன சலுகைகள் கொடுப்பீர்கள்?" என்று கேட்டிருக்கிறார். அந்த நேரத்தில் இந்த மேனேஜிங் டைரக்டர் அவர்கள், "தமிழ்நாட்டில் வந்து



என்ன செய்யப்போகிறீர்கள்? கருநாடகத்துக்குப் போங்கள்" என்று அறிவுரை சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை அவர்கள் எப்படித் தடுக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே கூட நமது மாண்புமிகு அங்கத்தினர் திரு. கே. எஸ். அப்துல் வகாப் அவர்கள் கப்பல்கள் வாங்குவது பற்றிப் பேசினார்கள். அதுபற்றிப் போக்குவரத்து மசோதா வரும்போது பேசிக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இது துணை மசோதா. இதற்கு முன் பேசியது பெரிய மசோதா.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணை மானியத்திலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். தலைவர் அவர்கள் மன்னிக்க வேண்டும். இன்றையதினம் தம்முடைய கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே 82 வது விதியின் கீழ் ஒரு அறிக்கையை வாசித்தார்கள். மேலவைத் தலைவர் அவர்களே, அவையிலே உங்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தைப் பற்றியோ அல்லது உங்கள் தீர்ப்புப் பற்றியோ நான் கேள்வி கேட்க விரும்பவில்லை. விதி 82ல் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப் பற்றிச் சொல்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அந்தத் தீர்ப்பைப்பற்றி இப்போது உறுப்பினர் அவர்கள் எதுவும் சொல்லக்கூடாது. அந்தத் தீர்ப்பைப்பற்றியோ அல்லது அவைத் தலைவர் முடிவைப் பற்றியோ பேசக்கூடாது. அது தவறு. அதை அனுமதிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, நான் தங்கள் தீர்ப்பைப்பற்றிப் பேசுவதை விட்டுவிடுகிறேன். ஆனால் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் 82-வது விதி முறையின் கீழ் அறிக்கை அளிக்கிறார்கள். பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருள் பற்றி அல்லது நாட்டிலே தவிர்க்க முடியாத நிலை ஏற்படுமானால், அதைப்பற்றி ஒரு அறிக்கை கொடுப்பது வழக்கம். ஆனால் இதுவே பொதுமாதிரியான அறிக்கையாக அமைந்துவிடுமானால், அது எதிர்காலத்தில். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு நினைப்பூட்டுகிறேன். நானே பல முறை இந்த அவையில் சொல்லப்பட்டபோது, தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டபோது, விதி 82-ன் கீழ் பல முறை அனுமதித்தும் இருக்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** தவறான தகவல் கொடுக்கிறார்கள் இந்த அவைக்கு என்பதாலேதான் சொல்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு அமைச்சர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அந்த அறிக்கையைக் கொடுப்பதைப்பற்றி நான் கவலைப்படப் போவதில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். அவர்கள் தவறான தகவல் தருகிறார்கள். நான் சொல்கிறேன். பல முறை இதற்கு முன்னாலேகூட அனுமதித்திருக்கிறேன். தன்னிலை விளக்கம் கோரும்போது, தனி நபர் விளக்கம் சொல்லலாம. அதுபோல் அமைச்சர்கள் 82-வது விதியின் கீழ் விளக்க அறிக்கை தரலாம். அப்படித் தான் இருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** விளக்க அறிக்கை கொடுக்கிறபோது வருகின்ற ஆபத்து என்ன? இங்கே அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மறுக்க உரிமை உண்டு. நீங்கள் கூட சொல்லியிருக்கிறீர்கள். இந்த அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது என்று, ஒரு அமைச்சர் கூடவா இல்லாமல் போய்விடுகிறார்கள். அவர்கள் விளக்கம் சொல்லலாம், ஆனால் அப்படி இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்படிச் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கில்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அந்த நேரத்திலே அமைச்சர்கள் பதில் சொல்வதில்லை. மறுநாள் சொல்கிறார்கள். ஏதோ அரசாங்கத்தின் மீது ஒரு குற்றச்சாட்டைச் சொல்வதாகக் கருதுகிறார்கள்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரும்பவும் சொல்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் விதி 82-ன் கீழ் அளித்த அறிக்கையிலே என்ன குறை என்பதைப்பற்றி மட்டும் சொல்ல வேண்டுமே தவிர, அறிக்கை படித்ததைப் பற்றியே விவாதித்திருக்கிறார்கள். இந்தப் பேச்சு பூராவையுமே நீக்க வேண்டியதாக ஆகிவிடும். அறிக்கையில் சொன்னது ஏதாவது தவறாக இருந்தால், அது குறித்து விளக்கம் கேட்கலாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அதற்கு விளக்கம் கேட்கத்தான் நான் வருகிறேன். அதற்கு நீங்கள் மிரட்டுகிறீர்களே, நான் என்ன பண்ணுவது?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 'மிரட்டுகிறது' என்ற வார்த்தை எல்லாம் பேச வேண்டாம். அப்படிச் சொல்லக்கூடாது. அது அவசியமில்லை. என் தீர்ப்பைப் பற்றியே சுற்றிச்சுற்றி வளைத்துப் பேசக்கூடாது. தீர்ப்பைப்பற்றிப் பேசுவதை விட்டு விடுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தீர்ப்பைப்பற்றிப் பேசுவதை விட்டு விடுங்கள் என்று சொன்னீர்கள். அப்போதே நான் விட்டுவிட்டேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சரி, விஷயத்திற்கு வாருங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, நான் நேற்றைய தினம் பேசியபோது தெளிவாக, கைத்தறித் துறையில், காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட்ட பட்டு கூட்டுறவு பெடரேஷனைப்பற்றி நான் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். என்னுடைய பேச்சில் இருப்பதை நீங்கள் படித்துப் பார்ப்பீர்களானால், தெரியும். நான் என்னென்ன சொன்னேனோ அதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒத்துக்கொள்ள மறுக்கின்ற விவரம் இதுதான். இன்றையதினம் பெடரேஷனில் ஆளுங்கட்சியிலே இருக்கக்கூடியவர்கள் சூரத்திற்குப் போகிறார்கள். அமைச்சர் அவர்கள் அறிக்கையிலேகூட அது வந்தது. சூரத்தில் சரிகைகள் கொள்முதல் செய்கிறார்கள். ஏறத்தாழ 2 ஆயிரம் மார்க்குகள், 2,500 மார்க்குகள் வரையில் மாதந்தோறும் சரிகை கொள்முதல் செய்யப்படுகிறது. என்னுடைய குற்றச்சாட்டு அப்படி கொள்முதல் செய்கின்ற நேரத்தில், ஒரு மார்க்கினுடைய விலை ரூ. 625 ரூபாய் என்று இருந்தும் கூட, ரூ. 691-க்கு பில் போட்டு கொடுக்கும்படி வற்புறுத்திப் பெறுகிறார்கள். ஏனென்றால் அங்கே தனி நபர்தான் அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களிடத்திலே ரூ. 691-க்கு பில்பெற்று வாங்கிக்கொண்டு வந்து, இங்கேயிருந்து வங்கிகள் மூலமாக செக்கை அனுப்பிவிடுகிறார்கள்.

ஆனால் இந்த ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் ரூ. 691-க்கும் ரூ. 625-க்கும் இடையிலே உள்ள தொகையைக் கமிஷனாகப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சொன்னேன். அந்தக் குற்றச்சாட்டுக்கு அவர் விளக்கம் அளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முறைகேடு நிச்சயமாக நடைபெறவில்லை என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நிச்சயமாகக் கூற விரும்புகிறேன். சூரத்தில் தனி நபரிடமிருந்து சரிகைகள் கொள்முதல் செய்யப்படவில்லை. சுமார் 13 நிறுவனங்களை ஒன்றாகக் கூட்டி வைத்து ஒரு கூட்டத்தையே கூட்டி, அதன் பிறகுதான் ஒவ்வொருவரிடமும் கொட்டேஷன் கால் பார் (call for) பண்ணி, அதற்குப் பிறகு அந்த சரிகையானது அங்கே கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. தனியாக ஒருவரிடம் வாங்கியிருந்தால், இப்படிப்பட்ட முறைகேடுகள் ஏற்பட்டிருக்கலாம் என்ற அய்யப்பாடு ஏற்படுவது இயற்கைதான். ஆனால் 13 நிறுவனங்கள் மூலம் வாங்கியிருப்பதால், இப்படிப்பட்ட முறைகேடுகள் அங்கே நடக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-00)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவரவர்களே, 13 நிறுவனங்களையும் ஒன்றாகக் கூட்டித்தான் செய்யப்படுகிறது. அந்த 13 பேர்களும் தமிழகத்திற்கு சரிகையை விநியோகித்துக்கொண்டிருப்பவர்கள். எனவே அவர்களுக்கு விற்பனையாகிற ஒரே இடம் தமிழகத்திலே உள்ள காஞ்சீபுரம்தான். காஞ்சீபுரத்தில் இருக்கக்கூடிய தேவையை, அந்தப் பதின்மூன்று வியாபாரிகளுள், தனிப்பட்ட ஒருவர் நிறைவேற்ற முடியாது. 13 பேர்களும் சேர்ந்துதான் 2500 மார்க்குகள் சரிகையைக் கொடுக்க முடியும். அவர்கள் முன்னிலையிலேதான் இப்படிப்பட்ட ஒப்பந்தம் நடந்திருக்கிறது. அரசாங்கத்திற்கு உண்மையிலே நம்பிக்கை இருக்குமானால், ஊழலை ஒழிக்க அக்கறை இருந்தால், விசாரணை வையுங்கள். எதிர்க் கட்சிக்காரர்களை வைக்க வேண்டாம். நம்முடைய முதலமைச்சரவர்களும், கைத்தறித் துறை அமைச்சரவர்களும் பம்பாய் சென்றார்கள். பக்கத்திலேதான் சூரத் இருக்கிறது. இப்போது இல்லாவிட்டாலும், இன்னொரு முறை போகும்போது, அங்கே போய் 13 வியாபாரிகளையும் தனியாக அழைத்து, "நீங்கள் கமிஷன் கொடுக்கிறீர்களா, இல்லையா" என்பதை விசாரியுங்கள். இதை நான் கூடச் சொல்லவில்லை. அரசாங்கத்தை ஆதரிக்கிற துக்ளக் பத்திரிகையில் கட்டுரை வந்திருக்கிறது. இந்த அரசாங்கம் அதை மறுக்க முடியவில்லை. தெருத் தெருவாக அனைத்துக் கட்சிக்காரர்களும் பேசுகிறார்கள். அதற்கு பதில் சொல்ல முடியவில்லை. நான் பொறுப்பு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இன்றைக்கு கூட்டுறவுச் சங்க பெடரேஷனிலிருந்து விலகிவிட்டதாகச் சொல்கிறாரே, திரு. பார்த்தசாரதி, அவர் சொல்கிறார். கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த திரு. பார்த்தசாரதி அவர்கள், பெடரேஷனில் அநியாயக் கொள்ளை அடிக்கிறார்கள் என்று சொல்லி, "நாங்கள் தனியாகவே வாங்கிக்கொள்கிறோம்" என்றும் கூறி, தனியாக சரிகையை வாங்குகிறார்கள். இன்னும் தனிப்பட்ட வியாபாரிகள் இருக்கிறார்கள். பெயரைச் சொல்லத் தயாராக இருக்கிறேன். இருக்கக்கூடிய சரிகைகளிலேயே, நெப்போலியன் பிராண்ட் சரிகைதான் தரமான சரிகை என்று சொல்லப்படுகிறது. அதை, இன்றையதினம் பட்டு உற்பத்தியாளர்கள் ஒத்துக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட நெப்போலியன் பிராண்ட் சரிகையையே ஒரு மார்க் 625 ரூபாய் என்று ஒரு வார காலத்திற்கு முன்பு வாங்கி வந்திருக்கிறார்கள். அதே நேரத்தில் 691 ரூபாய் என்று பெடரேஷன் வாங்கியிருக்கிறது. என்ன நடைபெற்றிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் விசாரித்து, நடவடிக்கை எடுக்க வேண்டும்.



**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** நான் ஏற்கெனவே கூறியதுபோல, அங்கே இருக்கக்கூடிய 13 நிறுவனங்களையும் கூப்பிட்டுப் பேசுகிற நேரத்தில், நெப்போலியன் பிராண்ட் சரிகையை உற்பத்தி செய்கிற உற்பத்தியாளர்கள் வரவில்லை. எனவே அந்த நிறுவனத்திடமிருந்து எந்தவிதமான சரிகையும் கொள்முதல் செய்யப்படவில்லை. நெப்போலியன் பிராண்ட் சரிகை இப்போது 665 ரூபாய் என்று விற்கப்படுகிறது. ஆனால் மத்தியக் குழு சூரத்திற்குச் சென்று, நிறுவனங்களுடன் பேசி, வாங்கிவந்த சரிகைக்கு 670 ரூபாய் என்று கொடுத்திருக்கிறோம். ஏனென்றால், அந்த நிறுவனங்களிடமிருந்து கோ-ஆப்டெக்ஸ் சரிகையைப் பெற்று, கூட்டுறவு நெசவாளர் சங்கத்திற்குக் கொடுப்பதால், 4 சதவிகிதம் விற்பனை வரி கொடுக்க வேண்டியிருப்பதால், விலையில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. இதைத் தவிர்ப்பதற்காக அடுத்த முறை சரிகை வாங்கும்போது, வங்கிகளுக்கு சரிகைகளை அனுப்பி, அவர்களிடமிருந்து அதைப் பெறும் சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். எனவே இதில் எந்தவிதமான முறைகேடுகளும் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** முறைகேடுகள் இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆதாரத்தை அவர்களே சொன்னார்கள். 670 ரூபாய்க்கு நாங்கள் பெற்றுக்கொண்டிருக்கிறோமென்று கூறினார்கள்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் தக்க ஆதாரங்களைக் கொடுத்தால், நிச்சயமாக அரசு அவைகளைப் பரிசீலிக்கும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** எப்படிப்பட்ட ஆதாரங்கள் தேவை என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்களோ, அவற்றைத் தர நான் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** இருக்கின்ற ஆதாரங்கள் அனைத்தையும் தாருங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** திரு. பார்த்தசாரதி என்பவர் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினராக இருந்தார். . . பெயரைச் சொல்கிறேன், விலாசம் சொல்கிறேன். அதற்குமேல். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தனிப்பட்டவர்களைப் பற்றிச் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகின்ற காமாட்சியம்மன் பட்டு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் திரு. பார்த்தசாரதி அவர்கள் முதன்முதலாகக் குழுவில் நியமிக்கிறபோதே, அந்தக் குழுவில் இருக்க முடியாதென்று ராஜிநாமா செய்துவிட்டார். அவர் கமிட்டியில் இருந்து, அதன் நடப்பை அறிந்து ராஜினாமா செய்துவிட்டார் என்று குறிப்பிடுவது தவறு. அவருக்குத் தனிப்பட்ட முறையில் கொள்முதல் செய்ய அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னார்கள். அப்படிப்பட்ட அனுமதி எதுவும் கொடுக்கப்படவில்லை. மத்தியக் கமிட்டியிடமிருந்துதான் வாங்க வேண்டுமென்று எல்லாச் சங்கங்களையும் வற்புறுத்தியிருந்தும், அவர் தனிப்பட்ட முறையில் கொள்முதல் செய்ததற்கு, நடவடிக்கை எடுக்க அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இந்தப்பிரச்சினையிலே அதிகம் போக வேண்டாமென்று விரும்பினாலும், அமைச்சரவர்கள் தொடர்ந்து விவரங்கள் கூறுவதால், அதைப்பற்றி விளக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அமைச்சரவர்கள் விளக்கம் தருவது நல்லதுதானே.



**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தவறான தகவல்களைத் தந்தால், . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இது துணை மானியம். இதிலே இவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டால் எப்படி? உறுப்பினர் அவர்களுக்குச் செல்வாக்கு இருக்கிறது. அதைத் துஷ்பிரயோகம் செய்தால் எப்படி ?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துஷ்பிரயோகம் என்று சொன்னால், எந்த முறையில். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 'மிரட்டல்' என்று உறுப்பினரவர்கள் கூறியதைவிட பெரிதல்ல.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அமைச்சர்கள் துஷ்பிரயோகம் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு இருக்கும் செல்வாக்கைத் துஷ்பிரயோகம் செய்வதால் தான் நான் இப்படிச் சொல்ல வேண்டியிருக்கிறது.

தலைவரவர்களே, சரிகை வாங்குவதைப் பொறுத்தவரையில், இன்றைய தினம் ஊழல்கள் நடக்கின்றன என்பதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். எப்படிப்பட்ட ஆதாரம் தேவை என்று சொன்னாலும், அதைத்தரத் தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நிதியமைச்சரவர்கள் இன்றையதினம் அனுமதி கேட்டிருக்கிறார்கள். இன்னும்கூட பணத்தைத் தாராளமாக அவர் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் தமிழகத்தை வாழ வைக்கும் திட்டங்களாக, நாட்டு மக்களுக்குப் பயன்படும் திட்டங்களாக அவர்கள் உருவாக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு, இந்த மானியத்தை ஆதரிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பேச வாய்ப்பினைத் தந்ததற்கு நன்றி தெரிவிக்கவில்லையா ? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மேலவைத் தலைவரவர்களே, 1978-79 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகள் குறித்து சமர்ப்பித்திருக்கிற அறிக்கையைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். தலைவரவர்கள் அடிக்கடி குறிப்பிட்டுச் சொன்னதைப்போல், இது ஒரு சிறிய துணை மானியம் என்ற அளவிற்கு இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களைப் போல் நீண்டதொரு பெரும் சொற்பொழிவை நான் நிகழ்த்தாமல், எழுப்பிய சில பிரச்சினைகளுக்குப் பதில் சொல்லி, திரு. வீராசாமி அவர்களுக்கு ஓய்வு தர விரும்புகிறேன்.

நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் பேசிவிட்டு, இன்னும் வேண்டுமானாலும் கேளுங்கள், தருகிறோம் என்று சொல்லி, இதைப் பரிபூரணமாக ஆதரிக்கிறேன் என்றும் குறிப்பிட்டார்கள். அவருடைய விசாலமான இதயம், உயர்ந்த நோக்கம், தொலை தூரப் பார்வை ஆகியவற்றுக்கு இது ஒரு நல்ல அடையாளம். அவரது பேச்சில் ஒன்றைச் சொன்னார்கள். அதற்கான விளக்கத்தோடு அவரது பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறேன். அதை ஒரு குற்றச்சாட்டு என்ற அளவிற்கு எடுத்துச் சொன்னதாக நான் கருதுகிறேன். புயலால் பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ள மக்களுக்கு 50 கிலோ அரிசி என்பது சென்னைக்கு மட்டும் தரப்பட்டதென்றும், ஆனால் முதலமைச்சரவர்கள் வெளி நாடுகளிலிருந்து திரும்பி வந்த பிறகு, இல்லை, அது தலைநகரத்திலிருந்து நீலத் திரைக் கடலோரம் நித்தம் தவம் செய்து கொண்டிருக்கிற குமரிவரை போகுமென்று சொன்னார்கள்; சொன்னபடி அவர் செய்யவில்லை, அதற்கேற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்படவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். முதலில் அவர் தனது கருத்தை மாற்றிக் கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன். அதற்குக் காரணம், பிறப்பிக்கப்பட்ட உத்தரவை அவரது கவனத்திற்கு வைக்கிறேன். மேலும் இப்படிப்பட்ட தவறுகளை அவர் தொடர்ந்து செய்யாமலிருக்க இது உதவுமென்று கருதுகிற காரணத்தாலே, அந்த உத்தரவு என்ன என்பதைக் கூற விரும்புகிறேன் :

The Government also direct that the free supply of 50 kgs. of rice be extended to other areas in the State and the families falling under the categories A and B mentioned in paragraph 2 above.

The District Collectors will follow the instructions applicable to Madras City and arrange to distribute rice. They will draw supply of rice from the nearest storage points of the Civil Supplies Corporation. This supply will include the five kgs. of rice already ordered in G.O. No. 2515, Revenue Department, dated 3rd November 1978".

(பிற்பகல் 6-10)

முதல் முதலில் அவர்களுக்கு 5 கிலோ அரிசி கொடுக்கப்படும் என்று அறிவித்ததற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்ததற்குப் பிறகு, மேற்கொண்டு 45 கிலோ அரிசி வழங்கலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படியானால் எந்தெந்தப் பகுதிகளுக்கு நீங்கள் கொடுத்தீர்கள் என்று ஒருவேளை அவர்கள் கேட்கக்கூடும். சென்னைக்கு மட்டும் ஏதோ அரசியல் காரணத்திற்காகக் கொடுத்தீர்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டப்பட்டது எனக்குத் தெரியும். ஒன்றை நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அண்மையில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களிலுள்ள குடும்பம் ஒன்றுக்கு 50 கிலோ அரிசி இலவசமாக வழங்க வேண்டுமென்று 4—1—1979 அன்று அரசு ஆணையிட்டது. சென்னை நகர், அதன் புறநகர் இவை தவிர மற்ற மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரிசி வழங்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. அதன் அடிப்படையில் வழங்கப்பட்ட மாவட்டங்களின் விவரத்தைத் தெரிவிக்கிறேன். சென்னை, நெல்லை, தஞ்சை, திருச்சி, செங்கற்பட்டு, இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களில் ஒரு இலட்சத்து 98 ஆயிரத்து 282 குடும்பங்களுக்கு, 10 இலட்சத்து 2 ஆயிரத்து 70 டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. இதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு இதற்கு மேலும் விவரங்கள், விளக்கங்கள் தேவையானால், தருகிறேன்.



**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** ஒரே ஒரு விளக்கம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நான் அவைக்கு ஒரு தவறான தகவலைச் சொன்னதாகச் சொல்லக் கூடாது. நான் தெளிவாகச் சொன்னேன். 50 கிலோ அரிசி, வேட்டி—சேலை இவைகளைத் தரப்போவதாகச் சொன்னீர்களே, அவற்றைச் சொன்னது போல் கொடுத்தீர்களா என்று தான் கேட்டேன். சென்னையைத் தவிர மற்ற இடங்களிலும் வேட்டி—சேலை ஆகியவைகள் வழங்கப்பட்டனவா என்றுதான் கேட்டேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் நான் பட்டியலைக் கேட்கவில்லை.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** ஆரம்பத்தில் 50 கிலோ அரிசி கொடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிவிட்டு, இவ்வளவு விளக்கம் சொன்னதற்குப் பிறகு, கொடுத்ததற்காக நன்றி தெரிவிக்காமல், புதிதாக புதுக்கரடி விடுவது போல் எங்கே வேட்டி, எங்கே சேலை என்று கேட்கிறார்கள். அதற்கும் தனி ஆணை இருக்கிறது. அதையும் வேண்டுமானால் படித்துக்காட்டுகின்றேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் நிறைய பத்திரிகைகள் படிக்கின்றவர்கள். அவர் படித்த ஏதாவது பத்திரிகையில் நான் மதுரைக்குப் பக்கத்திலே அரிசி மூட்டைகளைத் தூக்கிக் கொடுத்தபோது எடுத்த படத்தைப் பார்த்திருப்பார் என்று கருதுகின்றேன். அதைப் பார்த்தால், அங்கேயெல்லாம் வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டதா இல்லையா என்பது தெரியும். ஆகவே கொடுக்கவில்லை என்று நிச்சயமாகச் சந்தேகப்படமாட்டார் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மன்னிக்க வேண்டும். அப்படி அவர்கள் சந்தேகப்பட்டுப் பேசுவது தான் எதிர்க் கட்சியில் இருப்பவர்களுக்கு ஒரு இலக்கணம் என்று கருதி பேசியிருப்பார்களோ என்னவோ. விளக்கம் தந்ததற்குப் பிறகு, அதை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை எதிர்க்கட்சியினருக்கு உண்டு என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரிசியைப் பற்றிப் பேசிய அவர் இப்பொழுது வேட்டிக்கும் சேலைக்கும் வந்திருக்கிறார். அதற்கும் அரசாணை இருக்கிறது. வேண்டுமானால் நான் படித்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் பேசும்போது, தேங்காய்க்கு நீங்கள் வரி போட்டிருக்கிறீர்களே என்று சொன்னார்கள். இதுபற்றி அரசாங்கத்தின் நோக்கம், முதல் அமைச்சரின் எண்ணம் ஆகியவை நாளை நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு பதில் அளிக்கும்போது வெளிப்படுத்தப்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் ஒருசில கருத்துக்களைக் கூறினார்கள். அவர்கள் பேசும்போது, குறிப்பாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். வக்ப் போர்டுக்கு 10 இலட்சம் ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதாக எனக்கு நினைவு. வக்ப் போர்டு ஏற்கெனவே தொடர்ந்து பல தவறுகளைச் செய்திருக்கிறது என்றும், அதனுடைய நிர்வாகம் ஒழுங்காக இல்லை என்றும், பணம் விரயம் ஆக்கப் பட்டுள்ளது என்றும் தெரிந்துகொண்ட பிறகு, அரசு அந்த போர்டை மாற்றியமைத்திருக்கிறது. அப்படிப்பட்ட தவறுகள் அதில் நடைபெறாதிருந்திருந்தால், 10 இலட்சம் ரூபாய் எங்களுக்குத் தாருங்கள் என்று அரசாங்கத்தைப் பார்த்து மன்றாட வேண்டிய பரிதாபம் மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்களுக்கு வந்திருக்காது. கேட்டார்களே என்பதற்காக நான் விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். 1978-79ஆம் ஆண்டு மானியம் என்ற வகையில் அரசிடமிருந்து வக்ப் போர்டுக்கு 3 இலட்சம் ரூபாயும், கடன் என்ற வகையில் 3 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டது. ஆக மொத்தம் 6 இலட்சம் ரூபாய் வக்ப் போர்டுக்கு அரசு ஒதுக்கியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேபோல 1979-80 ஆம் ஆண்டு வக்ப் போர்டுக்கு அரசு மானியமாக 4 இலட்சம் ரூபாயும், கடனாக 5 இலட்சம் ரூபாயும் ஒதுக்கியுள்ளது. ஆக மொத்தம் 9 இலட்சம் ரூபாய் நிதி



ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். உண்மையைப் பெரியவர் உணர வேண்டும் என்பதற்காகத்தான் கூறுகிறேன், அதற்குப் பிறகு இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். செயற்கை நீரகம் பொருத்துகின்ற வசதி வேலூரில் மட்டும்தான் இருக்கிறது என்றும் அரசாங்க மருத்துவ மனைகளில் அந்த வசதி இல்லையென்றும் சொன்னார்கள். அது இல்லாததால் ஏற்படுகின்ற வேதனைகளுக்கு மக்கள் பலியாகிறார்கள் என்றும், அரசு தீவிரமாகப் பரிசீலித்து அதற்கேற்ற வசதிகளை உடனடியாக உருவாக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். அந்தத் துறை சம்பந்தமான மானியத்தின் மீது விவாதம் நடைபெறுகிற போதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அருமையான யோசனையைத் தெரிவிக்க வேண்டும். இந்த அரசு அதை நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்ற உறுதியை மட்டும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் ஒரு முறை இந்தப் பிரச்சினையைப் பற்றி மானிய விவாதத்தின்போது எழுப்பி, அந்த விவாதத்திற்கு விடை அளிக்கும்போது மாண்புமிகு அமைச்சரைக் கொண்டு தகுந்த பாதுகாப்பான பதிலினை அவர்கள் பெற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் உறுப்பினரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார்கள் என்றால், அதை நான் ஏற்றுக்கொண்டு அடுத்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அதற்கான நிதியை ஒதுக்கத் தயாராக இருக்கிறேன் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். பூம்புகார் கார்ப்பரேஷனை ஒழித்து விட்டால் என்ன என்று கேட்டார்கள். இந்த வயதில் ஒழிப்பது என்கின்ற கருத்து அவர்களுக்கு வரக்கூடாது. அவர்களுக்கு நல்லெண்ணம் வர வேண்டும் என்பது தான் என்னுடைய ஆசையும். அது ஒழுங்காக இயங்கிற்றா இல்லையா என்பதைப்பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். பல மாநிலங்களில் கடலே இல்லை. அங்கே எல்லாம் அவர்கள் கப்பல் இல்லாமல் வாழவில்லையா என்று கேட்டார்கள். மற்ற மாநிலங்களில் கப்பல் இல்லை என்பதற்காக அவர்களுக்குக் கப்பலை நன்கொடையாக அளிக்க இந்த அரசால் முடியாது. நமக்கு கப்பல் விட உரிமை இருக்கிறது. நமக்குக் கப்பல்கள் தேவைப்படுகின்றன. முன்னால் வாங்கிய கப்பல்கள் ஒழுங்காக இல்லை என்பதற்கு இந்த அரசு பொறுப்பில்லை. நாம் வாங்குகின்ற கப்பல்கள் நிச்சயமாக நல்ல கப்பல்களாக இருக்கும். இன்னொன்றையும் மாண்புமிகு உறுப்

பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பல மாநிலங்களில் இன்றைய தினம் விமானங்களை வைத்திருக்கிறார்கள். பல மாநிலங்களில் இன்றைய தினம் ஹெலிகாப்டர்களையும் வைத்திருக்கிறார்கள். நான் மராட்டிய மாநிலத்திற்குச் சென்றபோது அந்த அரசாங்கத்தினுடைய விமானத்தில் அவுரங்கபாத் வரை போனேன். உத்தரப் பிரதேசத்திற்கு நான் போன போது அங்கே திரு. பகுகுணா அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அங்கேயுள்ள ஒரு பகுதிக்கு நான் செல்ல அவர் அரசாங்கத்துக்குச் சொந்தமான ஹெலிகாப்டரக் கொடுத்தார். எனவே, 'ஹெலிகாப்டர்' விமானம் ஆகியவற்றை நாமும் வாங்கலாமா என்பதை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் இந்தச் செய்தியைக் கேட்டு மெத்த பூரிப்பார்கள் என்று கருதுகின்றேன்.

நமது மாநிலத்திற்கு இந்த இறுதி துணை விவர அறிக்கை நல்ல ஆதாரம் என்பதை எண்ணிப் பார்த்து, இந்தத் துணை விவர அறிக்கையை ஆதரித்துப் பேசிய அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் வரவேற்று நன்றி கூறியதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-20)

7. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

Nil

B. Reports, Notifications and Other Papers.

* 68. Vote on Account for Expenditure in 1979-80 of the Government of Tamil Nadu.

---

* Laid on the table of the House on 20th March 1979.



இணைப்பு.

[435ஆம் பக்கத்தில் இனம் 4 (2)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமேசுவரம் பகுதி மலேரியா நோய் பரவும் வாய்ப்புள்ள பகுதியாகும். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் மலேரியா நோயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை இப்பகுதியில் சற்று கூடியுள்ளது. பூச்சி மருந்து தெளிக்கும் பணிக்கு இப்பகுதியில் போதுமான வரவேற்பு இல்லாததாலும், இங்குள்ள தென்னந்தோப்புகளில் உள்ள நீர் தேங்கும் குழிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதும் இதற்கு காரணமாகும். இதனால் இப்பகுதியிலுள்ள அரசு மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் சிகிச்சை பெற்ற உள், புறநோயாளிகளின் எண்ணிக்கை சனவரி, பிப்ரவரித் திங்களில் சற்று கீழ் வருமாறு கூடியுள்ளது :—

| | புறநோயாளிகள். | | உள்நோயாளிகள். | |
|---|---|---|---|---|
| | சனவரி | பிப்ரவரி | சனவரி | பிப்ரவரி |
| 1978 | 384 | 247 | 45 | 22 |
| 1979 | 441 | 304 | 89 | 62 |

இராமேசுவரத்திலுள்ள மருத்துவ மனையில் 1979ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22—2—79 வரை இறந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆகும். இவர்களில் மூவர் (குழந்தைகள்) மட்டுமே ஐயப்பாட்டிற்குரிய மூளைக் காய்ச்சல் அல்லது டி. பி. மெனின்ஜிடிஸ் அல்லது மலேரியா காய்ச்சலால் இறந்தனர். வேறு எவரும் ஐயப்பாட்டிற்குரிய நோயினால் இறக்கவில்லை. பிறப்பு இறப்பு பதிவேட்டின்படி இப்பகுதியில் மேற்கூறிய காலகட்டத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 26. அதில் 9 பேர் மட்டுமே காய்ச்சலால் இறந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, மேலும் 3 பேர் மூளைக்காய்ச்சல், மலேரியா நீங்கலாக மற்றவகைக் காய்ச்சலால் இறந்தனர். மொத்தம் காய்ச்சலால் இறந்த 12 பேர்களில் ஒருவர் (அரசு மருத்துவ மனையில் இறந்தோர் 3, வெளியில் இறந்தோர் 9) நீங்கலாக ஏனையோர் 8 மாதத்திலிருந்து 18 வயதிற்குட்பட்டோர். இவர்களது நோயின் அறிகுறிகள் தலைவலி, காய்ச்சல், வாந்தியாகும். அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் இறந்தோர் அனைவரும் வெளியில் சிகிச்சை பெற்று, நிலைமை மோசமடைந்த பின்னரே மருத்துவ மனைகளை அணுகினர். தக்க சிகிச்சை அளித்தும், தக்க நேரத்தில் அவர்கள் மருத்துவ மனையை நாடாததால் அவ்வுயிர்களைக் காப்பாற்ற முடியவில்லை.

அங்கு மர்மமான வியாதி பரவியுள்ளது என்கிற செய்தி வெளி வந்ததும் மாவட்ட மருத்துவ அதிகாரியும், மாவட்ட பொது சுகாதார அதிகாரியும் அங்கு விரைந்தனர். சென்னையிலிருந்து சீப் எண்டோமாலிஜிஸ்ட் அவர்கள் பரிசோதனை உதவியாளர் குழு ஒன்றுடனும் தேவையான மருந்துகள், ஊசி மருந்துகளுடனும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டார். மாவட்ட மலேரியா அலுவலரும் அங்கு முகாமிட்டு மருந்து தெளிக்கும் பணியில் ஈடுபட்டார். இராமநாதபுரம் அரசு மருத்துவ மனையிலிருந்தும் ஒரு குழந்தை சிகிச்சை மருத்துவ அதிகாரி இராமேசுவரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார். இது தவிர, மதுரை மருத்துவக் கல்லூரியில் பூச்சியியல் பேராசிரியர் ஒருவரும், குழந்தைகளின் சிகிச்சை உதவிப் பேராசிரியர் ஒருவரும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மருத்துவர்களுக்கு தக்க ஆலோசனை கூறியுள்ளார். பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரும் அங்கு முகாமிட்டு தக்க அறிவுரைகள் வழங்கியுள்ளார். மருத்துவமனையில் போதுமான அளவு மருந்துகள் கைவசம் உள்ளது.

மத்திய அரசால் வழங்கப்பட்ட விரைவாகவும், அதிக அளவிலும் பூச்சி மருந்து தெளிக்கும் இயந்திரம் ஒன்று சென்னை வந்து சேர்ந்த வுடனேயே இராமேசுவரத்திற்கு அனுப்பப்பட்டு அது பூச்சி மருந்து தெளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் நோய் பரப்பும் (மலேரியா, மூளைக்காய்ச்சல்) கிருமிகள் விரைவில் ஒழிக்கப்படும். இது தவிர, ஐயப்பாட்டிற்குரிய சில நோய்கள் பெரும்பாலும் சில நுண்கிருமிகளால் ஏற்படுகிறது. இது பற்றிய ஆராய்ச்சி செய்வது மிக அவசியமாகும். எந்த வகை நுண்கிருமி என்றறிந்து அதை ஒழிக்க ஒரு மருந்தை உபயோகித்தால் சில காலம் கழித்து அந்நுண்கிருமிகள் அம்மருந்திற்கு எதிர்ப்புச் சக்தியை தன்னுள் உருவாக்கும். எனவே இது பற்றிய ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற வேண்டியதாகும். தமிழ்நாட்டில் அதற்கு தற்போது வசதியில்லை. எனவே மதுரையில் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவின் (I.C.M.R.) நிதி உதவியுடன் நுண்கிருமிகள் ஆராய்ச்சிக்காக ஒரு நிலையம் அமைப்பதைப்பற்றி அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. மேலும் அரசு நிலைமையை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறது. மக்கள் நலம் காக்க வேண்டி எந்தவிதமான தடையில்லாமல் அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

**வியாழக்கிழமை, 1979 மார்ச் 22.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Bifurcation of Judicial Department*

* 241 Q.—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Law be pleased to state whether there is any proposal to bifurcate the Criminal unit and the Civil unit in the Judicial Department ?

*நீதித்துறையை இரண்டாகப் பிரித்தல்.*

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

நீதித் துறையில் உள்ள குற்றவியல் பிரிவையும், உரிமையியல் பிரிவையும் இரண்டாகப் பிரிப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

THE HON. THIRU K. NARAYANASWAMY: No, Sir.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: தலைவர் அவர்களே, அண்டை மாநிலமான கேரளத்தில் குற்றவியல் பிரிவும், உரிமையியல் பிரிவும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டதன் காரணமாக, அங்குள்ள நீதிபதிகள் சிறப்பாகவும் சிறந்த தரத்தோடும் செயல்படுவது அரசுக்குத் தெரியுமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY: This Government do not know what has happened in respect of this separation of the civil and criminal wings obtaining in the State of Kerala.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : வழக்கறிஞர்களைப் பொறுத்தவரையில், குற்றவியல் பிரிவில் சிலர் மிகச் சிறந்து விளங்கி வருகிறார்கள். அதைப் போலவே, உரிமையியல் பிரிவிலும் சில வழக்கறிஞர்கள் மிகச் சிறந்தவர்களாக விளங்கி வருகிறார்கள். இவ்வாறு தனித்தனியாக ஒரு பிரிவில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதால், அவர்கள் அந்தப் பிரிவில் தலைசிறந்து விளங்க முடிகிறது. இதைப்போன்ற நிலையை உருவாக்கும் வகையில் அரசு நீதித் துறையையும் இரண்டு தனித்தனிப் பிரிவுகளாகப் பிரிப்பதற்கு முன் வருமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY: Sir, the High Court recommended a proposal to the Second Pay Commission for creating two wings of the Judiciary, the Civil wing and the Criminal wing. The Civil wing would consist of District Munsifs, Subordinate Judges and District and Sessions Judges. The Criminal wing would consist of Judicial Second-Class Magistrates, Judicial First-Class Magistrates, Subdivisional Judicial Magistrates and Chief Judicial Magistrates. There would be no inter-transfer of officers from the Civil wing to Criminal wing or vice versa. But the Second Pay Commission observed that while such a separation might not have any implications on the Judicial administration at lower levels, it might, however, affect the administration when members were drawn into the cadre of District Judges from either wing in their being called upon to exercise both Criminal and Civil jurisdiction after they had exclusively confined their attention to only one of the branches for 20 years nearly or in their earlier career. The Pay Commission felt that it might not be a good step in the right direction. The Registrar, High Court of Madras, was requested to convey the views of the Commission to the Hon. Chief Justice of the High Court and to confirm whether the proposal was to be furthered processed. But the Commission was informed by the Registrar that the High Court would not pursue the proposal for the separation of Criminal wing and Civil wing. Now, there is no proposal pending either in the High Court for bifurcation of the Criminal unit and Civil unit at the ltvel of the Assistant Sessions Judge or the Sessions Judge in the Judicial Department.

திரு. க. இராமமூர்த்தி : இது குறித்து சட்டக் குழுவின் சிபாரிசுகள் ஒரு பக்கமிருந்தாலும்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, நடைமுறையில், மாவட்ட நீதிபதிகள் அளவில்தான் குற்றவியலும், உரிமையியலும் இணைந்திருக்கிற நிலை இருக்கிறது. வழக்கறிஞர்களைப் பொறுத்தவரையில், கிரிமினல் வழக்கு மன்றங்களில் ( practice ) தொழில்





செய்யும் வழக்கறிஞர்கள் குற்றவியலிலும், சிவில் கோர்ட்டுகளில் பிராக்டிஸ் செய்யும் வழக்கறிஞர்கள் உரிமையியலிலும் சிறந்து விளங்குகிறார்கள். அது தான் வழக்காடுகிறவர்களுக்கும் உதவுவதாக இருக்கிறது. நீதிபதிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் எந்தப் பிரிவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டாலும் கூட, உயர்நீதி மன்ற அளவுக்கு உயரும்போது, அவர்கள் ஏற்கெனவே எந்தெந்தத் துறையில் சிறந்து விளங்கினார்களோ அந்தத் துறையில் உள்ள வழக்குகளையே அதிகமாக விசாரிக்கும் நிலை உருவாக்கப்படுகிறது. சிவில் துறையில் சிறந்து விளங்குகிறவர்களைப் பொதுவாக கிரிமினல் வழக்குகளை விசாரிக்கும் நிலையில் வைப்பதில்லை. உயர்நீதிமன்றத்திலேயே இந்த நிலைதான் கையாளப்படுகிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும். எனவே இந்தக் கருத்தின் அடிப்படையிலாவது நீதித் துறையில் இருப்பவர்களை இரண்டு தனித் தனிப் பிரிவாகப் பிரிப்பதற்கு அரசு முன் வருமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY: Sir, so far as my experience is concerned, I beg leave to tell the House respectfully that even now there are what are called District Munsif-*cum*-Magistrates. Barring that, generally, right up to the Sub-divisional Judicial First-Class Magistrates' Courts' jurisdiction, there is this division between Civil wing and Criminal wing. But, when once an officer reaches the rung of a District Magistrate (Judicial) or Chief Judicial Magistrate, he is likely to be posted as Subordinate Judge to try civil cases. Thereafter, both the wings enter into one mainstream and go up. Therefore, it is highly desirable and necessary that both the wings must coalesce at one place, at the sector of the Chief Judicial Magistrate or a Subordinate Judge who is slightly lesser in rank than the District Judge. It is desirable in the interests of justice and in the interests of proper working of the Courts that there should not be this cut-and-dry division between the Civil and Criminal wings after a certain stage. The Government will not countenance any proposal of that type.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : குற்றவியல் பிரிவில் பணியாற்றும் நீதிபதிகள் பல நேரங்களில் உரிமையியல் பற்றிய சட்டங்களையே மறந்து விடுகிறார்கள். அதைப் போலவே உரிமையியல் பிரிவில் பணியாற்றும் நீதிபதிகள் குற்றவியல் சட்டங்களையே மறந்துவிடுகிறார்கள். ஒரு பிரிவிலிருந்து மற்றொரு பிரிவிற்கு நீதிபதிகள் மாற்றப்படும்போது, இதன் காரணமாக சிரமப்படுகிறார்கள். எனவே நீதிபதிகள் திறமையுள்ளவர்களாகப் பணியாற்றக்

கூடிய வகையில் நீதித் துறையில் உள்ளவர்களை குற்றவியல் பிரிவைச் சார்ந்தவர்கள் என்றும் உரிமையியல் பிரிவைச் சார்ந்தவர்கள் என்றும் இரண்டு தனித் தனிப் பிரிவாக அமைக்க அரசு முன்வருமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY: Government cannot prescribe medicines for shortness of memories, when the Civil Judge forgets his Criminal law or when the Criminal Judge forgets his Civil law.

திரு. க. இராமமூர்த்தி: வழக்கறிஞர்களைப் பொறுத்தவரையில், கிரிமினல் கோர்ட்டுகளில் பிராக்டிஸ் செய்பவர்கள் கிரிமினல் சட்டத்தில் சிறந்த வழக்கறிஞர்களாக விளங்குகிறார்கள். அதைப் போலவே சிவில் கோர்ட்டுகளில் பிராக்டிஸ் செய்பவர்கள் சிவில் சட்டத்தில் சிறந்து விளங்குகிறார்கள். இப்படி ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்குகிறவர்கள் நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற நிலை வருகிறபோது, அவர்கள் அதுவரை சார்ந்திருந்த சட்டங்களைப் பற்றிய முழுத் தேர்ச்சியோடு இருந்தாலும், அடுத்த பிரிவைச் சார்ந்த சட்டங்களே தெரியாத நிலையிலும் இருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உயர்நீதி மன்ற நீதிபதியாக வருவதற்கு முன்னாலே, மிகச் சிறந்த கிரிமினல் வழக்கறிஞராக விளங்கிக் கொண்டிருந்தார்கள். நானே பலமுறை அப்படிப்பட்ட கிரிமினல் வழக்குகளுக்காக அவர்களிடம் சென்றிருக்கிறேன். இப்படி ஒரு பிரிவில் சிறந்து விளங்கியவர்களை உயர்நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கும்போது, மற்ற பிரிவைப்பற்றி பொதுவாக ஒன்றும் தெரியாமல் இருக்கிறார்கள். அதாவது கிரிமினல் கோர்ட்டுகளில் சிறந்து விளங்கியவர்கள் சிவில் வழக்குகளைப் பற்றி அதிகமாகத் தெரிந்திருப்பதில்லை. அதைப் போலவே சிவில் துறையில் சிறந்து விளங்கியவர்கள் கிரிமினல் சட்டங்களைப் பற்றி அதிகமாகத் தெரியாத நிலையில் இருக்கிறார்கள். எனவே இந்தக் குறையைத் தீர்க்கும் வகையில் குற்றவியல் பிரிவையும், உரிமையியல் பிரிவையும் தனித் தனியாகப் பிரிப்பதற்கு அரசு முன்வருமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY: I have already explained that the Government have no such proposal in their mind.

(பிற்பகல் 4-10)

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, குற்றவியல் துறையிலே இருப்பவர்கள், உரிமையியல் துறையை அறிந்திருக்கிறார்களா என்று கேட்டார்கள். அமைச்சர் அவர்கள் அறிந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.



நம்முடைய அமைச்சர் அவர்கள் நீதிபதியாக உயர் நீதிமன்றத்திலே இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: I would very respectfully submit this to the House, recalling my personal experience. I needed a certain amount of better help from the Counsel whenever there was a Civil litigation before me. So far as Writs and Writ Appeals and Criminal work were concerned, I did not need so much of help from the members of the Bar as I needed when I dealt with First Appeals and Second Appeals.

### *Central Prison, Madras.*

* 242 Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) the number of convicts who died in the Central Prison, Madras, during the months of October and November, 1978; and

(*b*) whether intimation of death was given to the family of the deceased in each case?

### சென்னை மத்திய சிறை.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, மத்திய சிறைச்சாலையில் 1978 ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர் திங்களில் இறந்துவிட்ட குற்றவாளிகள் எத்தனை பேர்?

(இ) அவ்வாறு இறந்துவிட்ட குற்றவாளிகள் ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும், இறந்துபோன தகவல் தெரிவிக்கப்பட்டதா?

THE HON. THIRU K. NARAYANASWAMY: (*a*) There was no case of death in the Central Prison, Madras, during October 1978. Three prisoners died in the Central Prison, Madras during the month of November 1978.

(*b*) In two cases, intimation was sent to the relatives in time. However, in the case of the remand prisoner Mahaboob Sheriff who died on 1st November 1978, as he had lost his "**Breast Ticket**" and gave his name as Mohamed Sheriff to the Medical Officer and as

that name was found in the Remand Register, the Nominal Roll was prepared in the name of Mohamed Sheriff. Therefore, the death was intimated to the relatives of Mohamed Sheriff. As soon as it was known that the person died was Mahaboob Sheriff, his relatives were also informed.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, மகபூப் ஷரீப் என்பவர் (Remand Prisoner) தற்காலிகக் கைதியாகவும், முகமது ஷரீப் என்பவர் (Convicted Prisoner) தண்டனைக் கைதியாகவும் இருந்திருக்கிறார்கள். ஆனால் மகபூப் ஷரீப் இறந்த பிறகு, கன்விக்டட் பிரிசனராக இருந்த முகமது ஷரீப் இறந்துவிட்டார் என்று சொல்லி, அவருடைய குடும்பத்திற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இப்போது கன்விக்டட் கைதிகளையும், ரிமாண்ட் ப்ரிசனர்களை வைத்திருக்கும் முறையில் இந்தமாதிரி இறந்துவிட்ட பிறகு, சரியாக யார் இறந்தது என்றுகூடக் கண்டு பிடிக்க முடியவில்லை. ஒரு மாதத்திற்குப் பிறகு இறந்துவிட்டதாகக் கருதப்பட்ட முகமது ஷரீப் என்பவர் தனனுடைய குடும்பத்திற்கு, என்னை யாரும் பார்க்கவில்லையே, மறந்து விட்டீர்களா என்று கடிதம் எழுதிய பிறகுதான் இந்த விஷயம் வெளியாகியிருக்கிறது என்பதும், சிறை நிர்வாகமோ அதிகாரிகளோ இதைக் கண்டு பிடிக்கவில்லை என்பதும் உண்மையா?

THE HON. THIRU K. NARAYANASWAMY: Yes, in this limited sense. The prisoner by name Mohamed Sheriff was alive. He had written to his relatives from inside the prison and they, having been informed of the prisoner's death, went to the Central Prison authorities for clarification. On a detailed enquiry, it was found that Remand Prisoner No. 3614, Mahaboob Sheriff, son of Khader Sheriff was the prisoner who died. The family of that prisoner was subsequently informed. The Government have taken suitable disciplinary action against all the persons responsible for this lapse. The report on the action taken is awaited after the disciplinary proceedings are pursued to their logical end and this House will be duly intimated of the result of the action taken. The Government have issued further instructions that such lapse should not recur in the administration of the Central Prison.



திரு. க. இராமமூர்த்தி: அமைச்சர் அவர்கள் இவ்வளவு அக்கறை கொண்டிருப்பதற்கு மிக்க நன்றி. அதே நேரத்தில், அதிகாரபூர்வமாக அந்தக் குடும்பங்களுக்கு அந்தத் தகவல் தெரிவிக்கப்படவில்லை. ஆள் மாறாட்டம் நடைபெற்றிருக்கின்ற இந்த இரண்டு பேரும் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு மதச்சார்பான பல சடங்குகளும், மற்றும் பலவிதமான சடங்குகளும் செய்ய வேண்டியிருக்கின்றன. ஆகவே, இதையெல்லாம் மனதில் வைத்து, அதிகாரபூர்வமான முறையில் உங்களது மகன் இறந்து போய்விடவில்லை, உயிரோடுதான் இருக்கிறார் என்று உயிரோடு இருப்பவர் குடும்பத்திற்கும், உங்களது மகன் இறந்து விட்டார் என்று இறந்தவருடைய குடும்பத்திற்கும் இந்த அரசு தெரிவிக்க நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: The family of the prisoner who died as a Remand Prisoner, namely, Mahaboob Sheriff—so that I may not make a mistake once again—was subsequently informed. Necessary proof of the intimation to the bereaved family will be furnished to my hon. Friend in due course of time or within a week. I will send for the necessary records and show them to the satisfaction of the hon. Member Thiru Ramamoorthi.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: சென்னை மத்திய சிறைச்சாலையில் இருப்பவர்களான மகபூப் ஷரிப் மற்றும் முகமது ஷரிப் என்ற இருவருக்கும் உள்ள வித்தியாசம் தெரியாமல் இறந்து போகாதவருடைய வீட்டிற்கு இறந்து போனதாகத் தகவல் தெரிவித்ததைப்பற்றிச் சொன்னார்கள். பொதுவாக சிறைச்சாலையில் இருக்கும்போது, யாராவது ஒரு கைதி இறந்துவிட்டால்—சிறைச்சாலையிலே இருக்கக்கூடிய அந்தக் கைதியினுடைய Identification marks- ஐ எல்லாம் பரிசோதித்து, அதற்குப் பின்னாலேதான் அந்தச் சவம் வெளியே அனுப்பப்படும். விதிமுறைகள் அப்படி இருக்கும்போது, இந்தப் பிரச்சினையில் சிறையதிகாரிகள் அப்படிப்பட்ட முன் நடவடிக்கைகள் எல்லாம் எடுத்தார்களா இல்லையா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: I am not white-washing the mistake committed by the jail officials. But, evidently, the jail officials are certainly not interested in informing the relations of a prisoner who is alive that he is dead. I do not think I can attribute such a motive even to the prison officials. It is obviously a mistake. That mistake must have arisen because this

particular prisoner had lost the Breast-ticket gives to him and they had to go by the father's name. It seems that the father's name was Sheriff. Sometimes the initials are omitted and because the father's name was Cheriff, they proceeded on that footing. As I have already submitted to the Hon. House, necessary disciplinary action is taken already in the matter.

திரு. க. இராமமூர்த்தி : முகமது ஷரிப் என்பவர் உயிரோடு இருப்பவர். வசதி படைத்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். மகபூப் ஷரிப் ரிமாண்ட் கைதியாக இருந்தவர், வசதியற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. இந்த ஆள் மாறாட்டத்தின் விளைவாக முகமது ஷரிப் இறந்துவிட்டார் என்று அறிவிக்கப்பட்டதன் காரணமாக, அவர் இறந்துவிட்டார் என்ற நிலையிலே, அவருடைய சொத்து, மற்ற பொருட்களை யெல்லாம் பிரிப்பதில் சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. உண்மையில் உயிரோடு இருப்பவர் நல்ல வசதி படைத்தவர். இவர் இறந்துவிட்டார் என்று சொல்லி, அவரது குடும்பத்தில் இருப்பவர்களிடையே, சொத்து மற்றும் மற்ற பொருட்களை எப்படிப் பிரிப்பது, பங்கிடுவது என்பதுபற்றியெல்லாம் தகராறு இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இனிமேலாவது கைதியாக ஒருவர் இறந்த பிறகு, அவரது பிணத்தை எரிப்பதற்கோ புதைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கும் முன்னதாக சிறை அதிகாரிகள் மிகுந்த ஜாக்கிரதையாக அணுக வேண்டும் என்று உத்தரவிடப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Government will consider the suggestion very seriously and very earnestly.

THIRU D. V. D'MONTE : Sir, the Hon. Minister has stated that there were two deaths during the month of November 1978. Will the Hon. Minister kindly elucidate whether these deaths were due to natural causes or to any other conditions connected with prison life?

THE HON. THIRU K. NARAYANASWAMY: The note given to me by the Department is that they died in the Prison Hospital of Madras on 15th November 1978 one Doraisami and one Isakki, a Remand Prisoner on 19th November 1978. Doraisami is Convict



No. 7632. But I have no further information. If the hon. Member is pleased to put a separate question, I will gather information and furnish it to the House.

### *Gratuity to Aided College Teachers.*

* 243 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that gratuity is being paid to teachers in Aided Schools now, but not to teacters in Aided Colleges;

(*b*) if so, the reasons for this discrimination; and

(*c*) whether the Government will take steps to extend the same to them?

### மானிய உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பணிக்கொடை

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தற்போது, மானிய உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பணிக்கொடை கொடுக்கப்பட்டு வருகிறது என்பதும், ஆனால் மானிய உதவி பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதும் உண்மையா?

(இ) ஆம் எனில், இவ்வேறுபாட்டிற்குரிய காரணங்கள் யாவை?

(உ) இதனை அவர்களுக்கும் அளிக்க அரசு நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) தளர்த்தப்பட்ட ஓய்வு ஊதியத் திட்டம் தனியார் கல்லூரி ஊழியர்களுக்கு முழுமையாக இன்னும் விஸ்தரிக்கப்படவில்லை. பணிக்கொடைக்கு பதிலாக அவர்களுக்கு சேமநல நிதியில் சமபங்குத் தொகை அரசு மற்றும் நிர்வாகத்தினரால் வழங்கப்படுகிறது.

(உ) தனியார் கல்லூரி ஊழியர்களுக்கு பணிக்கொடை வழங்குவது குறித்து மூன்றாவது ஊதியக்குழுவின் பரிசீலனைக்கு விடப்பட்டது. ஆனால் குழு ஏதும் பரிந்துரை செய்யவில்லை. எனவே இது நிதித்துறையுடன் கலந்து பரிசீலனை செய்யப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பணிக்கொடை, குடும்பநலத் திட்டம், நல்லாசிரியர் விருது, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப் படி இது போன்ற சலுகைகள் எல்லாம் அளிப்பதற்கு பரிசீலித்துக்கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதை விரைவிலே செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: விரைவிலே செய்வதற்காகத்தான் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 4-20)

*Direct Admission of Students.*

* 244 Q.—THIRU K. MEENAKSHISUNDARAM : Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether there is any proposal with the Government to amend the Educational Rule to the effect that no student should be admitted directly for the Classes above 3rd Standard in recognised Schools, as was in practice before; and

(*b*) if so, the date on which it would be brought into force?

**மாணவர்களை நேரடியாகச் சேர்த்தல்.**

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முன்பு இருந்ததைப்போலவே, அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் 3-ம் வகுப்புக்கு மேல் மாணவர்களை நேரடியாகச் சேர்க்க முடியாது என்ற வகையில், கல்வித்துறை விதியில் திருத்தம் கொணரும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது கொண்டுவரப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



திரு. க. மீனாட்சிசுந்தரம் : அங்கீகாரம் பெறாத பள்ளிகள், நர்சரிப் பள்ளிகள் என்ற பெயரால், மூன்றாவது வகுப்புக்கு மேலே மாணவர்களை நேரிடையாகச் சேர்க்க முடியாது என்ற வகையிலே உத்தரவு இல்லாத காரணத்தால், வியாபார நோக்கத்தோடு எத்தனை வகுப்புகளை வேண்டுமானாலும் நடத்தலாம் என்ற வகையிலே தனியார் துறையினர் நடத்திக் கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? இதைத் தடை செய்யும் ஏற்பாட்டை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நர்சரிப் பள்ளிகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பது நமக்குத் தெரியும். ஆகவேதான் அது குறித்து என்ன செய்வது என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல், மூன்றாவது வகுப்புக்கு மேல் சேர்த்துக்கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது என்றாலும், இன்றைக்கு வேறு வகையில் அதைப் பார்க்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு இருக்கிறது. மாணவர்கள் எல்லோரும் படிக்க வேண்டுமென்று அரசு விரும்புகிறது. கட்டாய இலவசக் கல்வி என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். அந்த நிலையிலே, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது என்று மேலே போகப் போக பெரும்பான்மையான மாணவர்கள் பள்ளிக்கு வராமலே இருந்து வருகிற நிலைமை இருக்கிறது. அவர்களைப் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டுவர பல்வேறு முயற்சியை நாம் எடுத்துக்கொண்டாலும், வெற்றி பெற முடியவில்லை. அத்தகைய மாணவர்கள், ஏதாவது ஒரு கட்டத்திலே படிக்க வேண்டுமென்று நினைத்தால், அதற்கேற்ப நிலைமைகள் இருக்க வேண்டுமென்று விரும்பி, எட்டாவது வகுப்பு வரை சேர்க்கலாம் என்று வைத்திருக்கிறோம். இந்தக் கருத்தை, மத்திய சர்க்காரால் கூட்டப்பட்ட மாநிலக் கல்வி அமைச்சர்களுடைய கூட்டத்தில் ஆதரித்திருக்கிறார்கள். Muti-poirt entry என்ற அளவுக்கு அதை வரவேற்றிருக்கிறார்கள். இதை நீடிப்பதா, அல்லது எடுத்துவிடுவதா என்று பார்க்கும்போது, நீடிப்பதுதான் நல்லது என்று கருதுகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நம்முடைய நாட்டிலே 41 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருப்பதாகப் புள்ளிவிவரம் கூறுகிறது. இப்படி தனியார் அங்கீகாரம் இல்லாமல் நடத்துகிற பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு வேலை அளிப்பதில்லை. அப்படி வேலை அளித்தாலும் கூட, அரசு வகுத்திருக்கிற அளவிலே ஊதியம் அளிப்பதில்லை. ஆகவே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காகவும், ஆசிரியர்களுக்கு ஊதியம் குறைவாக அளிப்பதைப் போக்குவதற்காகவும் வேறு வகையிலே ஏதாவது செய்யலாமா என்று அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நிதி வசதி இல்லாத காரணத்தால், போதுமான வாய்ப்பைத் தர முடியாத நிலைமை இருக்கிறது. இப்போது நடைபெறுகிற நர்சரிப் பள்ளிகளில்கூட, பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமித்து, உரிய ஊதியத்தைத் தருவார்களானால், அது இந்தக் குறைபாட்டைப் போக்க உதவும். அந்த முறையிலே நடக்க வேண்டுமென்பதுதான் அரசின் கருத்து. பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும்போது, இவைகள் எல்லாம் கவனத்திலே எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. செ. முத்துசாமி: இன்று தமிழ் நாட்டில் உள்ள நர்சரிப் பள்ளிகளில் ஒரு குறிப்பிட்ட வகுப்பிற்கு மேலும் சேர்க்கக்கூடிய வகை இருப்பதால், பிள்ளைகள் ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் சேராமல் இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? புதியதாக மாணவர்களைச் சேர்த்தால்தான், ஆசிரியர்களுக்குச் சம்பளம் தருகிறார்கள், மேலும் போஸ்டுகளை அதிகரிக்கிறார்கள். நர்சரிகளில் பிள்ளைகள் சேர வேண்டும் என்று மாண்புமிகு கல்வியமைச்சருக்கு இருக்கக்கூடிய நல்லெண்ணத்தைப் பாராட்டுகிறேன். ஆனால் இடையிலே புகுந்துகொண்டு, நர்சரிப் பள்ளிகள் கல்வி நிர்வாகத்தில் இப்படிச் செய்யக்கூடிய நிலைமைகளைத் தடை செய்ய அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அத்தகைய எண்ணம் இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தமிழ் நாட்டிலுள்ள நர்சரிப் பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளுடைய எண்ணிக்கையின் விவரம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இருக்கிறதா? அந்த எண்ணிக்கை, ஒவ்வொரு ஆண்டும் நாம் கொடுக்கிற எழுத்தறிவு பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையோடு சேர்க்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், சொல்லப்படும்.

### *Pioneer Kumaraswamy College, Nagercoil.*

*245 *Q.*—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of THIRU M. SANKARALINGAM) and THIRU A. NALLASIVAN : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether any representation has been received by the Government that several teachers of Pioneer Kumaraswamy College at Nagercoil, Kanyakumari District, are in a state of losing their jobs during this academic year; and

(*b*) if so, the action taken thereon ?



### நாகர்கோவில் பயோனியர் குமாரசாமி கல்லூரி.

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. ம. சங்காலிங்கம் சார்பில் & திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) இந்தக் கல்வியாண்டில் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் உள்ள பயோனியர் குமாரசாமி கல்லூரியில், பல ஆசிரியர்கள் வேலை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) திருவாளர்கள் சுரேஷ் குமார் மற்றும் என். வாசுதேவன் ஆகிய இருவரையும், கல்லூரிக் கல்வி இயக்குநரால் ஒப்புதல் அளிக்கப்படாத ஆசிரியர்கள் எனக் காரணம் காட்டி முன்னாள் நிர்வாகத்தினரால் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக முறையீடு வந்தது. மேலும் 16 ஆசிரியர்களும், 5 ஆசிரியரல்லாத ஊழியர்களும் கல்லூரிப் பணிக்கு நடப்புக் கல்வி ஆண்டில் தேவைக்கு அதிகமாக உள்ளனர் என்றும், அவர்களுக்கு உண்டான சம்பளத்தினை கல்லூரிக் கல்வி இயக்குநர் நேரடியாகத் தரவேண்டும் என்றும் முறையீடு வந்தது.

கல்லூரி நிர்வாகத்தை தற்காலிகமாக 2 ஆண்டு காலத்திற்கு அரசு ஏற்றுக் கொண்டபின், திரு. சுரேஷ் குமார், திரு. வாசுதேவன் ஆகிய இருவரும் மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும் தேவைக்கு அதிகமாகக் கருதப்பட்ட 16 ஆசிரியர்களும் தொடர்ந்து பணியிலிருப்பதற்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. பணியிலிருந்த ஆசிரியரல்லா பணியாளர்கள் குறைப்பு இருக்கக்கூடாது என்று உடனடி நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, நாகர்கோவில் முதன்மைக் கல்வி அலுவலர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. ஆ. நல்லசிவன் : அந்தக் கல்லூரியில் பதினெட்டு, இருபது ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், தினசரி வருகைப் பதிவேட்டில் கையெழுத்துப் போட அனுமதித்தார்கள், ஆனால் வேலை செய்ய அனுமதிக்கவில்லை. அப்படிப்பட்ட காலத்திற்கு சம்பளம் பட்டுவாடா செய்யப்பட்டதா? அவர்கள் மீண்டும் பணிக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, முறையாகச் சம்பளம் தரப்பட்டு வருகிறது. வேலை செய்யாத நாட்களுக்குச் சம்பளம் தரப்பட்டதா என்ற விவரம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால், பதில் சொல்லப்படும்.

திரு. ஆ. நல்லசிவன் : இந்தக் கல்லூரி நிர்வாகத்தினர் கல்லூரியைத் தொடர்ந்து நடத்த விரும்பவில்லை என்று ஆசிரியர்களிடம் கூறியிருக்கிறார்கள். அதனால் பல வகுப்புகளை வருட ஆரம்பத்திலேயே மூடிவிட்டார்கள். நிர்வாகம் முழுவதையும் அரசே ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சட்ட விதிகளுக்குட்பட்டு இரண்டாண்டுக் காலத்திற்கு நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

## *Training Programme to Teach English.*

* 246 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of Thiru P. R. THOMAS) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that teachers are deputed to undergo training programme to teach English in the Regional Institute of English, Bangalore, for five months ; and

(*b*) if so, whether there is any proposal with the Government to utilise their services in teaching English in Higher Secondary Schools ?

### ஆங்கிலம் கற்பிக்க வேண்டிப் பயிற்சி.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. பி. ஆர். தாமஸ் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர்கள் ஆங்கிலம் கற்பிக்க வேண்டிப் பயிற்சி பெறுவதற்காக, பெங்களூரிலுள்ள வட்டார ஆங்கில மொழிப் பயிற்சி நிறுவனத்தில் ஐந்து மாத காலப் பயிற்சி பெறுவதற்கு முகமையில் அனுப்பி வைக்கப்படுகின்றனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், உயர் இடைநிலைப் பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்க அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம். உயர்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் வட்டார ஆங்கில மொழிப் பயிலகத்திற்கு 4 மாதப் பயிற்சிக்காக அனுப்பப்படுகின்றனர்.

(இ) இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இவ்வாறு பயிற்சிக்காகச் செல்லுகிற ஆசிரியர்களுக்கு மிகச் சிறந்த முறையிலே ஆங்கிலத்திலே பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களுக்காக தேர்வு நடத்தி, டிப்ளமா கொடுக்கப்படுகிறது. ஆக அவ்வாறு டிப்ளமா பெற்ற ஆசிரியர்களை மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம் போதிக்க அனுமதிப்பதில் என்ன தடைகள் இருக்கின்றன என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்க, முழுக் கல்வித் தகுதி பெற்றவர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். இந்த ஆசிரியர்கள் பெறுகிற பயிற்சி முழுக் கல்வித் தகுதிக்குச் சமமானதாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மேல்நிலை வகுப்புகளில் ஆசிரியர்களை நியமிப்பதற்காக அரசு வெளியிட்டிருக்கிற ஆணையில், சில ஆண்டுகளுக்கு முன்பு, சென்னைப் பல்கலைக் கழகம் 8 மாதங்கள் வகுப்பு நடத்தி, கொடுத்த சான்றிதழைப் பெற்றவர்கள், மேல்நிலைப் பள்ளிகளில் பாடங்களை போதிக்கிற தகுதியைப் பெற்றவர்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகம் அளித்த சான்றிதழ், மேல்நிலை வகுப்பு நடத்துகிற தகுதியுடையது என்றால், பெங்களூரில் மிகச் சிறந்த நிபுணர்களால் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டு கொடுக்கப்பட்ட சான்றிதழ் எந்த விதத்தில் தகுதியுடையதாகாது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கல்வித் தகுதி என்பது வேறு, பயிற்சித் தகுதி என்பது வேறு.

## *Tractor Kept Unused.*

* 247. *Q.*—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of Thiru M. Sankaralingam) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether it is a fact that the Tractor belonging to the Thovalai Panchayat Union, Kanyakumari district, has not been made available for the use of farmers, since no driver was appointed for the tractor for the past one and a half year; and

(*b*) if so, the reasons for not appointed the driver for the same ?

பயன்படுத்தப்படாமலிருக்கும் உழுவை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான உழுவை (Tractor) ஓட்டுநர் நியமிக்கப்படாததால் கழிந்த ஒன்றரை ஆண்டுகளாக, விவசாயிகளுக்குப் பயன்படாமலிருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், ஓட்டுநர் நியமிக்கப்படாமைக்குக் காரணம் யாது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(இ) உழுவை நான்கு வருடங்களாக இழப்பில் ஓடிக் கொண்டிருந்ததால், உழுவை ஓட்டுநரும், துப்புரவு செய்பவரும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் 14—9—1976 முதல் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். பின்னர் ஊரக வளர்ச்சி இயக்குநரின் அறிவுரைப்படி, உழுவை ஓட்டுநரும் துப்புரவு செய்பவரும் மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

*Villupuram Bus Stand.*

* 248 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN and THIRU A. BALASUBRAMANIAM (on behalf of THIRU K. RAMAMOORTHI): Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) whether the Government are aware of the fact that the bus stand at Villupuram, South Arcot district, lacks adequate convenience in spite of the fact that it serves as an important junction and all the Government buses, passing through that way have to halt there for about half an hour ; and

(*b*) if so, whether the Government would take steps to improve it ?



விழுப்புரம் பேருந்து நிலையம்

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் & திரு. ஆ. பாலசுப்ரமணியம் (திரு. க. இராமமூர்த்தி சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள விழுப்புரம் பேருந்து நிலையம், ஒரு முக்கிய சந்திப்பாகவும், அவ்வழியாக ஓடும் ஒவ்வொரு அரசுப் பேருந்தும் சுமார் அரை மணி நேரம் நின்றுபோக வேண்டியதாகவும் இருந்தும்கூட, அந்தப் பேருந்து நிலையம் வசதிக் குறைவாக இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அதை ஒரு வசதியான பேருந்து நிலையமாக மாற்றியமைக்க, அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, நகராட்சி தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நகராட்சி நடவடிக்கையை எடுத்து வருகிறது என்ற சாமர்த்தியமான விடையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். என்னுடைய மூலக் கேள்வியையே மாற்றி விட்டார்கள். மிக மோசமான நிலையிலே அந்தப் பேருந்து நிலையம் இருக்கிறது. விழுப்புரம் பேருந்து நிலையத்தில் அரசுப் பேருந்துகளுக்காக ஒரு பகுதி ஒதுக்கப்பட்டு, அங்கே ஒரு நாளைக்கு நூற்றுக்கு மேற்பட்ட அரசுப் பேருந்துகள் செல்கின்றன. ஆனால் அங்கு பயணிகள் தங்குவதற்கும், உட்காருவதற்கும், கழிவிடத்திற்கும் எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லை. ஆகவே மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பேருந்து நிலையத்தைச் சீர்திருத்த விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இந்தப் பேருந்து நிலையம் வசதிக் குறைவாக இருப்பதால்தான், புதியதாக ஒரு பேருந்து நிலையத்தை அமைப்பதற்கும், விரிவுபடுத்துவதற்கும் 1979-80 ஆம் ஆண்டு நகர் மன்ற வரவு செலவுத் திட்டத்திலே நிதி ஒதுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(பிற்பகல் 4.30)

திரு. ஆ. திராவிடமணி: பிரயாணிகளுக்கு மிக முக்கியமான பஸ் ஸ்டாண்டாக விழுப்புரம் பேருந்து நிலையம் இருப்பதால், உடனடியாக அதை விரிவு படுத்துகின்ற திட்டம் இருந்தால், அதை அரசு நிறைவேற்றுமா? மழைக்

காலத்திலும், வெய்யில் காலத்திலும் பிரயாணிகளுக்குக் கஷ்டமாக இருப்பதால், ஒரு ஆஸ்பெஸ்டாஸ் ஷெட்டாவது போட்டுத் தரப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** அந்த நடவடிக்கைகளை அந்தப் பகுதி நகராட்சி மேற்கொள்ள வேண்டும். அவர்களுக்கு அறிவுரை வழங்கி, இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** விழுப்புரம் பஸ் ஸ்டாண்டில் சென்னையிலிருந்து சேலத்திற்கு வருகின்ற பஸ் அரை மணி நேரம் நிற்கிறது. சேலத்திலிருந்து சென்னைக்கு வருகின்ற பஸ் அரை மணி நேரம் நிற்கிறது. மற்ற பஸ்களும் அங்கு வந்து நிற்கின்றன. சென்னையிலிருந்து சேலம் போகின்ற பிரயாணிகள் சென்னை செல்லும் பஸ்ஸிலும், சென்னை போகிறவர்கள் சேலம் பஸ்ஸிலும் ஏறிவிடுகிறார்கள். அப்படி மாறிவிடுகின்ற வாய்ப்புகள் இருக்கின்றன. இந்த நிலைமையை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த விவரம் தெரிவிக்கப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** பேருந்து நிலையத்தில் உடனடியாக இருக்கைகளையாவது போடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா? அங்கே சாதாரண பெஞ்சு போன்றவைகளைப் போடுவதற்கு உடனடியாக அரசு ஏற்பாடு செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** நகராட்சி அந்தப் பேருந்து நிலையத்தைச் சீர்திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அந்த நிலையத்திற்கான வரை படங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. அவை கிடைத்தவுடன், மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தது போல, தற்காலிகமாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க, அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** சேலத்தில் பெயர்ப் பலகையாவது வைக்கப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** இந்தக் கருத்தும் நகராட்சிக்குத் தெரிவிக்கப்படும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினா எண்கள் 249, 250 ஒத்தி வைக்கப்படுகின்றன.

19—3—1979 அன்று ஒத்திவைக்கப்பட்ட வினாக்கள் 217, 218 இப்போது எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்கள்.

### *Drinking-water facility for Kannankurichi village.*

@* 217 Q.—THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether any proposal of the Tamil Nadu Water Board to use the Cauveri Waters as drinking-water for Kannankurichi village, situated at the foot hills of the Servarayan Hills adjacent to Salem, is under the consideration of the Government; and

(b) if so, the stage at which the matter now stands?

### கண்ணங்குறிச்சிக்கு குடிநீர் வசதி.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலத்தை அடுத்த சேர்வராயன் மலை அடிப்பாகத்திலுள்ள கண்ணங்குறிச்சி கிராமத்திற்கு, காவேரி நதி நீரை, குடிநீராக உபயோகிக்க குடிநீர் வாரியத்தின் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்த நிலையிலுள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவாவர்களே, (அ) இல்லை.

(இ) இவ்வினா எழ இடமில்லை.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** சேலத்தை அடுத்த சேர்வராயன் மலை அடிவாரத்திலுள்ள கண்ணங்குறிச்சி எனக் கேட்டிருந்தேன். ஆனால் அடிப்பாகத்திலுள்ள கிராமம் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் நான் சொன்ன கிராமத்தைப்பற்றி தவறு ஏற்படவில்லை என்று கருதுகிறேன். இந்தத் திட்டம் இல்லாவிட்டாலும், வேறு ஏதாவது வழியில், கண்ணங்குறிச்சி கிராமத்திற்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்க திட்டம் இருக்கிறதா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

---

@ 19—3—1979 அன்று வினாப் பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மேச்சேரி பேரூராட்சி, ஓமலூர், கலமங்கலம் நகராட்சி, சேலம் நகராட்சி, ஜாரிகொண்டலம்பட்டி, அயோத்தியாபட்டணம், வாழப்பாடி, செத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சிகள், ஆத்தூர் நகராட்சி மற்றும் வழியோரக் கிராமங்களுக்கான குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று தோராயமாக ரூ. 30 கோடிக்குத் தயார் செய்யப்பட்டு, தற்பொழுது ரூ. 23.50 கோடியாகக் குறைக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சேலம், தர்மபுரி வட்ட அலுவலகத்தின் பரிசீலனையில் உள்ளது. இதில் பேரூராட்சி மற்றும் நகராட்சிகளுக்குரிய மதிப்பீட்டுச் செலவை ஆயுள் காப்பீட்டுக் கழகம் மற்றும் அரசிடமிருந்து கடனாகப் பெற்றும், கிராமங்களுக்குரிய பங்குத் தொகைமட்டும் அரசிடமிருந்து மானியமாகப் பெறப்பட்டும், கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் செயல்படுத்தக் கூடியதா என ஆராயப்பட்டு வருகிறது. இதிலிருந்து கண்ணங்குறிச்சி கிராமத்திற்கு தேவையான நீரை அளிக்கலாம் எனவும் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்கள். நமது மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அந்த ஊரைச் சேர்ந்தவர்கள். எனவே தண்ணீர் கிடைக்க வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ச. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்தது நல்ல செய்தி. அவர்களுக்கு மிக்க நன்றி. குடிநீர் சுவை உள்ளதாக இருக்குமா ? நாங்கள் விருந்தோடு சுவைக்க அந்தக் குடிநீர் வசதி வெகு சீக்கிரத்தில் ஏற்படுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தண்ணீர் சுவையாக இருக்கக் கூடாது. 'போட்டபின் வாட்டர்' என்று சொல்வார்கள். அது சுத்தமான நீராகத்தான் இருக்க வேண்டும். சுவையான தண்ணீர் எல்லாம் நல்ல தண்ணீர் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Housing Board.*

@ * 218. *Q.*—THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any scheme under the consideration of the Government, to make the tenants of the houses owned by the Housing Board in Madras, as owners, subject to certain conditions ; and

(*b*) if so, the details thereof ?

---

@ 19—3—1979 அன்று வினா பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.



## வீட்டு வசதி வாரியம்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையில், வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான வீடுகளில் வாடகைக்கு குடியிருப்பவர்களை, சில நிபந்தனைகளின் அடிப்படையில் வீட்டுச் சொந்தக்காரர்களாக்குகின்ற திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை. சென்னையில் வாடகை திட்டத்தின் கீழ்க் கட்டப்பட்ட குடியிருப்புகள் நகரத்தின் முக்கியமான பகுதிகளில் இருப்பதுடன், அவற்றால் வாரியத்திற்கு வாடகை மூலம் வருமானம் கிடைப்பதால் அவற்றைக் குடியிருப்பவர்களுக்குத் தவணை முறையில் சொந்தமாக்கும் திட்டம் எதுவும் தற்சமயம் அரசின் ஆய்வில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. இராமமூர்த்தி : இந்த அரசு வீட்டு வசதி வாரியத்தைச் சேர்ந்த பல பகுதிகளிலும் உள்ள வீடுகளை வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். வீட்டு வசதி வாரியம் லாப நோக்கோடு செயல்படுவது இல்லை. அந்த அடிப்படையிலே ஏற்படுத்தப்பட்டது அல்ல அது. மக்களுக்கு உதவுகின்ற வகையிலே ஏற்படுத்தப்பட்டதாகும். ஏற்கெனவே கட்டியிருக்கின்ற குடியிருப்புகளை சில திட்டங்களின் அடிப்படையிலே குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக்கினால், வேறு இடங்களில் மேலும் விரிவாக்க வசதி ஏற்படும். வேறு இடங்களிலே மற்றவர்களுக்கு வசதி செய்து கொடுக்கின்ற வாய்ப்பும் ஏற்படும். ஏற்கெனவே இருப்பவர்களுக்கு அந்த வீடுகளை சொந்தமாக்கினால், வாரியம் பெருமளவுக்கு வியாபார நோக்கோடுதான் நடத்துகின்றது என்று மற்றவர்கள் சொல்வதைத் தடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமைகள் ஏற்படும். அதை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வாடகை வீடுகள் கட்டுவதன் மூலமாக நகரத்தில் வாடகையைக் குறைக்கிறோம். இங்கே வாடகை வீடு கட்டிக்கொடுத்து அதற்கு வாடகை என்று இருப்பதால், தனியார் துறையிலே உள்ளவர்கள் வீடுகளுக்கும் வாடகை குறைவாக இருக்கும். எனவே வாடகை வீடு என்று இருக்க வேண்டும். மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குச்

சொல்லிக்கொள்கிறேன், வீடு கட்டிக்கொள்வதற்குப் பல திட்டங்கள் இருக்கின்றன. 'E.W.S.' ஸ்கீம் என்று இருக்கிறது. 'Economically Weaker செக்ஷனுக்கு என்று ஒரு திட்டம். அதுபோல L.I.G. ஸ்கீம் 'Low Income Group' இருப்பவர்களுக்கு ஒரு ஸ்கீம். அதுபோல M.I.G. ஸ்கீம். அதாவது Middle Income Group ல் இருப்பவர்களுக்கு ஒரு ஸ்கீம். H.I.G. ஸ்கீம், Higher Income Group' ல் இருப்பவர்களுக்கு ஒரு ஸ்கீம். இப்படி அவரவர்களுக்குப் பொருத்தமானபடி வீடுகள் கட்டிக்கொள்ள திட்டங்கள் இருக்கின்றன. இத்துடன் Hire Purchase System என்றும் இருக்கிறது. அது மட்டுமல்லாமல், Open Developed Plot System என்றும், இருக்கிறது. தரிசு நிலங்களை வாங்கி அதில் வீடு கட்டக்கூடிய அளவில் விற்கிறோம். அந்த நிலத்தை வாங்கிக்கொண்டு, வாங்குகின்றவர்களே அங்கு வீடு கட்டிக்கொள்ளலாம். வேண்டுமென்றால், ஹவுசிங் போர்டு மூலமாகவும் கட்டிக் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட வசதிகள் எல்லாம் இருப்பதால், வாடகை வீடுகளை அவர்களுக்கே சொந்தமாக்க வேண்டிய தேவை இல்லை என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : Is the Hon. Minister aware that in the last 2 or 3 years there have been a number of attempts by the Housing Board to increase the rent for these houses which have been given on rental basis? In some cases the increase has come even to three-fourths of the existing rent. Will the Government kindly look into this and alleviate the sufferings of these tenants who, because of the Government, do not have the protection of the Rent Control Act?

THE HON. THIRU S. RAGHAVANANDAM : Mr. Chairman, Sir, I suggest to the hon. Member to put a separate question which will facilitate me to give a detailed reply.

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]





## 2. அறிவிப்புகள்.

### 1. ஆளுநரிடமிருந்து செய்தி.

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு 1979-ம் ஆண்டு முன் நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக் கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### (2) பேரவையிலிருந்து செய்தி.

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்பு சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம்மேலவையின் பரிந்துரைக்காகப் பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு தமிழ்நாடு 1979-ம் ஆண்டு முன் நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவினை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1979) மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1979) பிரதியினை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

## 3. உரிமைப் பிரச்சினை.

### திண்டிவனத்தில், பல்லவன் போக்குவரத்து விரைவுப் பேருந்தில் மேலவை உறுப்பினர்களுக்கு இருக்கைகள் அளிக்காதது குறித்து.

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* 14—3—1979 அன்று மேலவை உறுப்பினர்கள் திரு. க. இராமமூர்த்தி அவர்களும், திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களும் எழுப்பிய உரிமைப் பிரச்சினையானது அவர்கள் சம்பந்தப்பட்டது மட்டுமல்லாமல், இந்த அவையின் உரிமை சம்பந்தப்பட்டதாகவும் இருந்தலால் இந்த விஷயத்தில் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு ஆய்வு நடத்தினேன். இந்த அவையினுடைய உரிமை எந்தக் காலத்திலும் பாதிக்கப்படாத வகையில் அதனைப் பாதுகாத்து வரும் கடமை எனக்கும், இந்த அவைக்கும் உண்டு

[மேலவைத் தலைவர்] [1979 மார்ச் 22

என்பதை நான் உணருகிறேன். பேருந்து ஊழியர்கள் தங்களுக்கு இடங்களைத் தரத் தவறியதானது, உறுப்பினர்களுடைய மனதிற்கு வருத்தத்தைத் தந்திருக்கும் என்பதில் அய்யமில்லை. இது உறுப்பினர்களை இக்கட்டான சூழ்நிலையில் வைத்திருக்கிறது. பின் பேருந்தில் கோடியில் இரண்டிடங்களைத் தர முன்வந்திருக்கிறார் என்பதில் அய்யமில்லை. ஆனால் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதுபற்றி அரசின் கருத்தைக் கூறுகையில் . . . . .

*திரு. க. இராமமூர்த்தி : 'That version is wrong' 'வேறு இடம் கொடுக்க முன்வந்தார்கள்' என்பது தவறு.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உங்களுக்குக் கொடுக்க வேண்டிய பிரதான இடத்தைக் கொடுக்கவில்லை என்றுதான் சொல்லியிருக்கிறீர்கள். நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். 'கொடுக்க வேண்டிய பிரதான இடத்தை' என்று.

திரு. க. இராமமூர்த்தி : முதலிலே கொடுக்கவில்லை. இடமில்லையென்று இறங்கிவிட்ட பிறகு அப்புறம் அங்கே வேறு இடம் கொடுத்தார்கள்.. எம்.எல்.ஏ.க்கள் சீட்டு, ரிசர்வ்ட் சீட்டிலே இடம் கேட்கவில்லை தங்கள் தீர்ப்பின்படி, நாங்கள் வி.அய்.பி. சீட்டாக கிளெய்ம் செய்ததாக ஏற்படுகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உங்களுக்கு ஆதாரம் காட்டுகிறேன்.

(பிற்பகல் 4-40)

THIRU K. RAMAMOORTHI : Because I was entering in an intermediate station, I cannot claim the reserved seats for legislators. The version in the ruling becomes an allegation against me as if I demanded the reserved seats.

MR. CHAIRMAN : "The conductor asked us to occupy at the two ends of the bus". "பஸ்ஸின் கடைசிப் பகுதியில் இரண்டு சீட்டுகள் கொடுக்கிறேன்" என்று சொன்னார் என்று சொல்லியிருக்கிறீர்கள். வேறு எப்படி அதை எடுத்துக் கொள்ள முடியும்?

THIRU K. RAMAMOORTHI : I am sorry you have taken the particular line out of context. Let me read out the relevant portion in my privilege Motion.



1979 மார்ச் 22] (Thiru K. Ramamoorthy)

The bus had 23 vacant seats. In spite of that, the crew did not care to provide us accommodation and when we protested, the crew, with great hesitation, asked us to occupy, the seats at the two ends of the bus . . . . This is what I have stated. He made some arrangements with the passengers to provide us seats. எல்லாம் முடிந்து விட்டது. பஸ் (full) நிறைந்த பிறகு, அதற்கு protest செய்து நாங்கள் கீழே இறங்கியபின், அவர்கள் அட்ஜஸ்ட் பண்ணி, 5 பேர்கள் உட்காரும் இடத்தில் 6 பேர்களை உட்காரச் சொல்லியும், 2 பேர்கள் உட்காரும் இடத்தில் 3 பேர்களை உட்காரச் சொல்லியும் அட்ஜஸ்ட் பண்ணி இடம் கொடுத்தார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவைக் கூட்டத்திற்கு வருவதை அவர்கள் தடுக்கவில்லை என்றுதான் நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். கொடுக்காதது தவறில்லை என்று சொல்லவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : குறிப்பிட்ட இடம் கிடைக்கவில்லை என்பது என்னுடைய ப்ரொடெஸ்ட் என்ற முறையில் தீர்ப்பு ஏற்படுகிறது. That is wrong.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவ்வளவுதான் என்னால் புரிந்து கொள்ள முடியும். வாசகம் சரியாக இருக்கிறது. அதை ஆட்சேபித்துப் பிரயோசனமில்லை.

திரு. க. இராமமூர்த்தி : 23 பேருக்கு பேருந்தில் இடம் இருந்தது. அப்போது எங்களுக்கு provide பண்ணவில்லை. புரியாத அளவிற்கு இங்கிலிஷ் எழுதியிருப்பதாக நான் எண்ணவில்லை. நாங்கள் ப்ரொடெஸ்ட் பண்ணி இறங்கியவுடன், கண்டக்டர் மற்றவர்களை அட்ஜஸ்ட் செய்து, இடம் ஒதுக்கியிருக்கிறார். அதையொட்டி தீர்ப்புச் சொல்லுங்கள் .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒன்று ஒப்புக்கொள்கிறீர்கள் வேறு இடம் தர அவர்கள் முன் வந்திருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : I cannot violate the law. I am here to legislate law. 65 பேருக்கு இடம் என்றால், 67வது பேசஞ்சராக வர முடியாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நடத்துனர் தர முன் வந்த இடங்கள் உறுப்பினர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. இது நினைவில் எடுத்துக் கொள்ள வேண்டிய விஷயம். மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சா

வர்கள் இதுபற்றி அரசுக் கருத்தைக் கூறுகையில், "மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இத்தகைய சம்பவம் அந்த இடத்தில் நிகழ்ந்தது குறித்து நான் உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். வி.அய்.பிக்களுக்கென ஏற்கெனவே சில இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கென அவ்வாறு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு வி.அய்.பி.க்கள் வருகின்றபோது முன்னுரிமையாக, அந்த இடங்களில் மற்றவர்கள் வந்து அமர்ந்திருந்தாலும் அவர்களை உடனடியாக மாற்றிவிட்டு, வி.அய்.பி.க்களுக்கு என இருக்கும் இடங்களை அவர்களுக்குத் தர வேண்டுமென்று உத்தரவு போட வேண்டுமென்று முடிவு எடுத்திருக்கிறோம். இது குறித்து அந்த நடத்துநர் மீது நடவடிக்கை எடுக்க அரசு உத்திரவிட்டிருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார். இதனால் இது போன்று மேலும் நடக்காமலிருப்பதற்கு உத்தரவாதம் கிடைத்திருப்பதாக இந்த அவை ஏற்றுக்கொள்ளலாம். ஆகவே, அவை உரிமைக் குழுவிற்கு இதனை அனுப்ப வேண்டிய அவசியம் இல்லையென்று தீர்ப்பளிக்கிறேன். மேலும் இது போன்று நிகழாதிருப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் கவுரவமாக நடத்தப்பட வேண்டுமென்ற ஆணையைப் போக்குவரத்துத் துறைக்கு அனுப்பி, அதனைத் துறை ஊழியர்கள் ஒவ்வொருவரும் அறியும்படி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, On a point of clarification. அரசு எடுத்திருக்கிற . . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று சொல்கிறேன். தீர்ப்பு குறித்து விவாதமாக்கத் தயாராக இல்லை. தீர்ப்பு கொடுத்த பிறகு ஆட்சேபித்தால், எப்படி.

**திரு. க. இராமமூர்த்தி :** தங்களுடைய தீர்ப்பை நான் ஆட்சேபிக்கவில்லை. குறிப்பிட்ட இடம் கேட்டேன், குறிப்பிட்ட இடத்திற்காகத் தகராறு பண்ணினேன் என்று வருவது சரியல்ல.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** புரிந்துகொள்வதில் தகராறு. இதில் ஒன்றும் பண்ண முடியாது. கடைசி இடம் தந்தார்கள் என்று சொன்னீர்கள். அதை ஏற்றுக்கொள்வதில் தப்பில்லையே.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவரவர்களே, நான் விவாதமாக்குவதற்காக ஒன்றும் சொல்லவில்லை . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்ப்பு முடிந்தாகிவிட்டது.





* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தங்களுடைய தீர்ப்பு முடிவானது. அதைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. மாண்புமிகு தலைவரவர்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். பேருந்து புறப்படும் இடமானால் குறிப்பிட்ட இடங்களை பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கு ஒதுக்க வேண்டும். ஆனால் இடைப்பட்ட இடமாக இருந்தால், எத்தனை இடங்கள் காலியாக இருக்கிறதோ, அதில் Order of priority படி 1, 2, 3 வரிசைப்படி இருக்கிற உறுப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று போக்குவரத்துத் துறையிலேயே விதி இருக்கிறது . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நீங்கள் தீர்ப்பை கவனிக்கவில்லை. என்னுடைய தீர்ப்பிலேயே அதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். வி.அய்.பிகளுக்கு இடம் தராமல் இருப்பது வருந்தத்தக்கது என்று குறிப்பிட்டிருக்கிறேன். இவ்வளவு அங்கத்தினர்களும் கேட்டிருக்கிறார்கள். இன்னொரு தடவை சொல்கிறேன், அதைப்பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். "பேருந்து ஊழியர்கள் இடங்களைத் தரத் தவறியதானது" என்று தீர்ப்பில் இருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களுடைய தீர்ப்பில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திருப்பித் திருப்பி விவாதத்திற்கு வந்தால் எப்படி ?

**திரு. க. இராமமூர்த்தி :** தீர்ப்பில், தவறான பொருள் படும்படியாக வாசகம் இருக்கிறது. அதற்குத்தான் விளக்கம் கேட்கிறேன். அப்படித்தான் இருக்குமென்று நீங்கள் தெரிவித்தால், எனக்கு ஆட்சேபணை இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எது தவறு ?

THIRU K. RAMAMOORTHI : It is mentioned as if I had demanded the reserved seats; it is not correct.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நீங்கள் சொன்ன வார்த்தையை மாற்றியாகிவிட்டது. திருப்பித் திருப்பி அதையே சொன்னால் எப்படி ?

**திரு. க. இராமமூர்த்தி :** மாற்றியாகிவிட்டது என்றால் சரி.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** தலைவரவர்களுடைய கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். என்னுடைய மரியாதைக்கு பங்கம் ஏற்பட்டிருக்கிறது என்ற காரணத்தாலே தலைவரவர்களுக்கு சில விவரங்களைத் தெரியப்படுத்துகிறேன். நேற்று முதலமைச்சரவர்கள் அவைக்கு வந்திருந்தபோது, முன் வரிசையில் உட்கார்ந்து அவர்களுடன் பேசி கொண்டிருந்தேன். பிறகு என்னுடைய இடத்திற்கு வந்துவிட்டேன். நான் என்னுடைய இடத்தில் வந்து உட்கார்ந்தவுடன் தலைவரவர்கள் கூப்பிட்டார்கள். என்ன என்று கேட்டேன். இந்த வழியாக வந்து பேசியிருக்கக் கூடாது, பின்னாலே போய் பேசியிருக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பக்கத்திலே உறுப்பினர் •பேசிக்கொண்டிருந்தார். அவர் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தார். அதனாலே அப்படிச் சொன்னேன். இதிலே ஒன்றும் அவமதிப்பில்லை.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** என்னைப் பார்க்கிலும் கூடுதலாக பருமனுள்ள திரு. வசந்த பை அவர்கள் எனக்குப் பிறகு, அங்கு சென்று உட்கார்ந்து 20 நிமிடங்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அவரையும் தலைவரவர்கள் கூப்பிட்டுச் சொல்லியிருக்கலாம் . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவருக்கும் சொல்லி, அவரும் வெளியே போய் பேசினார். பேசிக்கொண்டிருந்தவர், உடனே வெளியே போய் விட்டார்.

**திரு. ஜி. வசந்த பை :** தலைவரவர்களே, 20 நிமிடங்கள் பேசினேன் என்று சொல்வது தப்பு. 10 நிமிடங்கள்தான் பேசினேன்.

### 4. கவன ஈர்ப்பு.

**(1) பாலசேவிகாக்களுக்கு நிரந்தர ஊதியம், 2 மாத ஊதியத்துடன் பிரசவ விடுப்பு அளித்தல் ஆகியவை பற்றி அரசு உத்தரவு பிறப்பிக்காதது குறித்து.**

**திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) :** மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



"சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கடந்த அக்டோபர் திங்கள் பாலசேவிகாக்களின் மாநாட்டில், பாலசேவிகாக்களுக்கு நிரந்தர ஊதியமாக மாதம் ரூபாய் 100-ம், இரண்டு மாதங்கள் ஊதியத்துடன் பிரசவ விடுப்பும், குழந்தைகள் சத்துணவு சில்லரைச் செலவு 05 காசாக உயர்த்துவதாக அறிவித்திருந்து, இன்றுவரை அதற்கான அரசு உத்திரவு பிறப்பிக்காததால், மாநில அளவில் பாலசேவிகாக்கள் படும் இன்னல்கள் குறித்து ".

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** தலைவரவர்களே, விவர அறிக்கை @அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

**(2) நூல்களின் விலை உயர்வால் கைத்தறித் துணிகளின் உற்பத்தி அடக்கம் அதிகப்பட்டு, துணிகள் விற்பனையாகாமல் இருப்பது குறித்து.**

**திரு. ஆ. திராவிடமணி :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கைத்தறி நெசவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"40, 60, 80 ஆகிய நம்பர் நூல்கள் திடீரென்று விலை உயர்ந்துவிட்டதால் கைத்தறித் துணிகளின் உற்பத்தி அடக்கம் அதிகப்பட்டு, மார்க்கெட்டில் துணிகள் விற்பனையாகாமல் தேங்கியிருப்பது குறித்து ".

(பிற்பகல் 4-50)

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** தலைவரவர்களே, தமிழ் நாட்டிலுள்ள 75 சதத்திற்கு மேலான கைத்தறி நெசவாளர்களுக்குப் பருத்தி நூல், கச்சாப்பொருள் ஆகும். கூட்டுறவிலுள்ள நெசவாளர்களுக்குத் தேவையான நூலை கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்து அதன் 19 விற்பனை நிலையங்களின் மூலம் விற்பனை செய்து வருகிறது. கூட்டுறவுத் துறையில் இல்லாத தனிப்பட்ட கைத்தறி நெசவாளர்களுக்கு தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷன் (தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி) ஏற்கெனவே சேலம், கோயமுத்தூர், ஈரோடு, மதுரை, கடையநல்லூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் விற்பனை நிலையங்களைத் திறந்து அவர்களுக்குத் தேவையான பருத்தி நூலை விநியோகம் செய்து வருகின்றது.

---

@ 569-570 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.

[1979 மார்ச் 22

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் "விவர அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது" என்று அறிவித்தால் போதும். படித்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவரவர்களே, இது சம்பந்தப்பட்ட விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. திராவிடமணி : தலைவரவர்களே, கைத்தறித் தொழிலிலேயே நடுத்தர மக்கள் மிக விரும்பி வாங்குகின்ற நூல்கள் 40ஆம் நம்பர் நூலும் 60 ஆம் நம்பர் நூலும், விலை மலிவாகக் கொடுக்கப்பட வேண்டியதும் இந்த நூல்தான். மிகவும் நைஸ் ஆக இருப்பதும் இந்த நூல்தான். 1974 ஆம் ஆண்டு 40-ம் நம்பர் நூலின் விலை 70 ரூபாய். 60-ம் நம்பர் நூலின் விலை 105 ரூபாய். 1977-ம் ஆண்டு ஒரு குவிண்டால் பருத்தியின் விலை 600 ரூபாயிலிருந்து 700 ரூபாய் வரை இருந்தது. ஆனால் 40-ம் நம்பர் நூலின் விலை 80 ரூபாயாகவும், 60-ம் நம்பர் நூலின் விலை 120 ரூபாயாகவும் இருந்தது. 1978 ஆம் ஆண்டு பருத்தியின் விலை குறைந்து, குவிண்டால் ஒன்றுக்கு 500 ரூபாயிலிருந்து 600 ரூபாய் வரை விற்கிறது. ஆனால் அதே சமயத்தில் 40 ஆம் நம்பர் நூலின் விலை 99 ரூபாயாகவும், 60 ஆம் நம்பர் நூலின் விலை 146 ரூபாயாகவும் விலை ஏறுகிறது. மீண்டும் 1979 ஆம் ஆண்டு பருத்தியின் விலை குறைகிறது. குவிண்டால் ஒன்றுக்கு 400 ரூபாயிலிருந்து 500 ரூபாய்வரை இருந்தது. ஆனால் 40 ஆம் நம்பர் நூலின் விலை 110 ரூபாயாகவும் 60 ஆம் நம்பர் நூலின் விலை 170 ரூபாயாகவும் இப்படி பருத்தியின் விலை குறைந்துகொண்டே வருகிறது ; ஆனால் நூலின் விலை மட்டும் உயர்ந்துகொண்டே போகிறது. ஆகவே அரசு பஞ்சாலை கார்ப்பரேஷனிடமும், அரசின் மேற்பார்வையில் இருக்கிற 26 கூட்டுறவு நூற்பாலைகளிடமும் எடுத்துச் சொல்லி இந்த 40 ஆம் நம்பர் மற்றும் 60 ஆம் நம்பர் நூலைக் குறைந்த விலைக்குக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுப்பதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு ஒரு பரிகாரம் காண முடியும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நீண்ட உரை வேண்டாம். அமைச்சரிடமிருந்து சுருக்கமாக விளக்கம் மட்டும் கேளுங்கள்.

திரு. ஆ. திராவிடமணி : இப்படியாக அரசு விலைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம், இதற்கு ஒரு வழிகாட்டியாக அரசு இருப்பதன் மூலம், தனியார் ஆலைகளிலுள்ள நூல்களின் விலைகளும் குறைக்கப்படக் கூடும். அந்த வகையில் விலைகள் குறைக்கப்படுமா ? குறைக்கப்படும் என்பதற்கு அரசு முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்குமா ?

---

@ 571-573 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1979 மார்ச் 22]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : நூல் விலையை கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் பம்பாய் டெக்ஸ்டைல்ஸ் கமிஷனரிடம் இருக்கிறது. கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்கின்ற நூலைக் குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் கோருகிறார்கள். கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி ஆகக்கூடிய நூலை அதிகமாக விலை குறைத்துக் கொடுத்தால், பல முறைகேடுகள் நடக்கும். தனிப்பட்டவர்கள் அதை வாங்கி அதிக விலைக்கு விற்கக்கூடிய சூழ்நிலையும் உண்டாகும். மிக அதிகம் இல்லாவிட்டாலும் 3 ரூபாய், 4 ரூபாய், 5 ரூபாய் குறைவாகத்தான் கூட்டுறவு நூற்பாலைகளிலுள்ள நூல்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. 14ஆம் தேதி அன்று பம்பாயில் நடைபெற்ற ஆலை அதிபர்கள் மாநாட்டில்கூட மத்திய தொழில் துறை அமைச்சரவர்கள் கலந்துகொண்டு பேசும்போது, நூல் விலையைக் குறைக்க வேண்டுமென்றும், மற்ற நூல்களை அதிகமாக உற்பத்தி செய்வதைத் தவிர்த்து கைத்தறி நூல்களை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதோடு மார்ச் மாதம் எந்த விலைக்கு விற்கப்படுகிறதோ அதே விலைக்கு 3 மாதம் விற்க வேண்டுமென்று உறுதி கூறியிருக்கிறார்கள். அதுகூட இந்த அரசைப் பொறுத்தவரை, ஏற்புடையதாக இல்லை. இன்னும் கைத்தறி நூலின் விலையைக் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் கடிதங்கள் மூலம் தகவல் கொடுத்திருக்கின்றோம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. திராவிடமணி : தமிழகத்திலுள்ள தனியார் நூற்பாலை அதிபர்களை அழைத்து, உரிமையாளர்களை அழைத்து, அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி, நூல் விலையைக் குறைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கேட்டுக்கொள்வார்களா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : ஏற்கெனவே ஆலை அதிபர்களை அழைத்து, மத்திய தொழில் துறை அமைச்சரவர்கள் பேசியிருக்கிறார்கள். அவர்களை நாம் கேட்டுக்கொண்டாலும், அவர்கள் செய்யாவிட்டால் அவர்களைக் கட்டாயப்படுத்தக்கூடிய அதிகாரம் நமக்கு இல்லை,

### 5. அரசின் தீர்மானம்.

### பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நிறுவனக் காலனியாக இருக்கிற பகுதியை நகரியமாக அமைத்தல்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

“தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 4-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவினையொட்டி, செங்கற்பட்டு மாவட்டம், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திருவேற்காடு, வீராராகவபுரம், சுந்தர சோழவரம் ஊராட்சிகள், மற்றும் வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கோலடி, அயனம்பாக்கம், நூம்பல் ஊராட்சிகள், அடையாளம்பட்டு ஊராட்சியிலுள்ள பெருமாளகரம் வருவாய் கிராமம் ஆகியவை அடங்கிய நிறுவனக் காலனியாக இருக்கிற பகுதியை ஒரு நகரியமாக அறிவிப்பதென அவை தீர்மானிக்கிறது”
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

“தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 4-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவினையொட்டி, செங்கற்பட்டு மாவட்டம், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திருவேற்காடு, வீராராகவபுரம், சுந்தர சோழவரம் ஊராட்சிகள், மற்றும் வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கோலடி, அயனம்பாக்கம், நும்பல் ஊராட்சிகள், அடையாளம்பட்டு ஊராட்சியிலுள்ள பெருமாளகரம் வருவாய் கிராமம் ஆகியவை அடங்கிய நிறுவனக் காலனியாக இருக்கிற பகுதியை ஒரு நகரியமாக அறிவிப்பதென அவை தீர்மானிக்கிறது”.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### 2. அறிவிப்புகள்.

### (3) 1979-80 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ம. சங்காலிங்கம் அவர்கள் இன்று 1979-80 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தில் பேசுவதாக இருந்தார். அவருக்கு உடல்நலக் குறைவாக இருப்பதால், அவர் அவைக்கு வரவில்லை. அடுத்த தினத்தில் அது எடுத்துக்கொள்ளப்படும்.



THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, I thought that for the Budget discussion, the Hon. the Finance Minister was going to reply today. Does it mean that it has been postponed ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதுவும் அடுத்த தினத்தில்தான் எடுத்துக்கொள்ளப்படும்.

### 6. அரசின் சட்டமுன் வடிவுகள்.

### (1) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1978)

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : தலைவரவர்களே,

“சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு, தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1978) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்”
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

“சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு, தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1978) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்”.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே, தனியார் காடுகள் பாதுகாப்புத் திருத்தச் சட்ட முன்வடிவின்மீது விவாதம் கிடையாதா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : யாரும் பேசுவதற்குப் பெயர் கொடுக்கவில்லை. மற்ற பொது விவாதத்தின்போது எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பெயர் கொடுக்கிறார்கள். சட்டமுன் வடிவுகள் வரும்போது, பெயர் கொடுப்பதில்லை. ஒருவரும் பெயர் கொடுக்காவிட்டால், நான் வரிசைக்கிரமப்படி ஒவ்வொரு சட்ட முன்வடிவாக எடுத்து நிறைவேற்றிக் கொண்டு அடுத்த சட்ட முன்வடிவிற்குப் போகிறேன்.

---

@ 573-576 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : அடுத்த சட்ட முன்வடிவும் இதே பொருளைப் பற்றி இருப்பதால் விருப்பமுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அதன் மீதும் சேர்த்துப் பேசலாம். முதல் சட்ட முன்வடிவை தனியே முன் மொழிந்துள்ளேன். அடுத்த சட்ட முன்வடிவையும் முன்மொழிகிறேன். சட்டத்தை நிறைவேற்றும்போது தனித்தனியாக நிறைவேற்றலாம். முதல் சட்ட முன்வடிவையும் இரண்டாவது சட்டமுன்வடிவையும் சேர்த்து இரண்டின் மீதும் உறுப்பினர்கள் பேசலாம்.

(2) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1979).

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவரவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு, தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு, தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

* திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, தனியார் வனங்களைப் பாதுகாக்கின்ற சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையிலும் ஒரே ஒரு கருத்தை நான் என்னுடைய கருத்தாக, என்னுடைய காங்கிரஸ் கட்சியினுடைய கருத்தாகத் தெரிவிக்கின்றேன். காடுகள் எவ்வளவு இன்றியமையாதது என்பதை அனைவரும் உணர்ந்திருக்கிறோம். இன்றைக்கு காடுகளை வளப்

@ 576-576 A&B ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



படுத்துவதற்கும் மேற்கொண்டு புதிய காடுகளை உருவாக்குவதற்கும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கடந்த காலத்திலே மத்திய அரசு இதற்காகத் தீவிரமான நடவடிக்கை எடுத்திருக்கிறது. நெருக்கடி காலத்தில் முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுடைய 20 அம்சத் திட்டத்திலே இதை ஒரு தீவிரத் திட்டமாகக் கொண்டு வந்து, பல இடங்களிலே மரங்களை வளர்த்து காட்டு வளத்தை மேம்படுத்திய

(பிற்பகல் 5.00)

நிலையை நாம் பார்த்தோம். நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், இனிமேல் தனியாரிடம் காடுகள் இருக்க வேண்டிய அவசியமில்லை என்ற சூழ்நிலை உருவாகிவிட்டது. ஏற்கெனவே பயிரிடுகிற நிலத்திற்கு உச்ச வரம்பு கொண்டுவந்துவிட்டோம். காடுகளைப் பொறுத்தவரையில், அங்கே இருக்கிற மரங்களை வீணாக அழிக்கக்கூடாது, அவைகளை வெட்டக்கூடாது என்றும், அவ்வாறு மீறி வெட்டினால், அதற்கு தண்டனையும் அபராதமும் அளிக்கின்ற வகையில் சட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்முறையில் இருந்து வருகின்றன. இப்போதைக்கு இந்தச் சட்டத் திருத்தம் தேவை என்றாலும், இனி காடுகள் அனைத்தையும் அரசு கையகப்படுத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நில உச்சவரம்புச் சட்டத்தில் (exemption) விதிவிலக்கு என்ற முறையில்தான் தனியார்கள் காடுகளை வைத்துக்கொள்ள உரிமை அளிக்கப்பட்டது. அப்போது தனியார் காடுகள் தேவை என்ற அடிப்படையில் 'எக்செம்ப்ஷன்' வாங்கிவிட்ட தனியார்கள், தற்போது அவைகளிலுள்ள மரங்களை அவ்வப்போது வெட்டிப் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எல்லோருமே அறிவோம். இனிமேல் காடுகளைத் தனியார் காப்பாற்ற வேண்டிய அவசியமே இல்லை. தனியார் மரங்களை வளர்க்கவோ, காடுகளைப் பராமரிக்கவோ வேண்டிய அவசியம் இப்போதைய சூழ்நிலையில்லை என்பதை நாம் எல்லோரும் நன்கு அறிந்திருக்கிற நிலையில், இந்தச் சட்டத் திருத்தம் தற்போது நிறைவேற்றப்பட்டாலும்கூட, மிக விரைவிலேயே தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை தனியார் காடுகளையும் அரசே ஏற்கிற வகையில், கையகப்படுத்துகிற வகையில், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறி, அப்படிப்பட்ட ஒரு சட்டத்திற்கு இந்தத் திருத்தம் முன்னோடியாக அமையும் என்று நம்பி, இந்த மசோதாவை ஆதரித்து அமைகிறேன்.

***திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, அவைமுன் கொண்டு வரப் பட்டிருக்கிற இரண்டு மசோதாக்களையும் நான் வரவேற்கிறேன். குறிப்பாக, தனியார் காடுகளில் உள்ள மரங்களை, அவைகளின் சொந்தக்காரர்கள தஙகள இஷ்டம்போல் வெட்டக்கூடாது என்ற வகையில் கொண்டுவரப்படும் மசோதாவை முதலில் ஆதரிக்கிறேன் என்று சொல்லும்போதே, இன்னும் எதற்காகத் தனியாரிடம் காடுகளை விட்டு வைக்க வேண்டுமென்பதைப்பற்றி அரசாங்கம் யோசிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தனியாரிடம் காடுகளை விட்டுவைத்திருப்பதன் காரணமாகப் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. தனியார் காடுகள் என்பவைகள், பொதுவாக அரசுக்குச் சொந்தமான காடுகளுக்கு மத்தியில் ஒரு தீவைப்போல் தற்போது இருக்கின்றன. அவைகளின் அமைப்பைப் பயன்படுத்திக்கொண்டு, தற்போது தனியார் காடுகளின் சொந்தக்காரர்கள் அரசுக் காடுகளில் வளர்ந்துள்ள மிக நல்ல மரங்களையும், சில நேரங்களில் சந்தன மரங்களையும் வெட்டிக்கொண்டு போக முடிகிறது. பல நேரங்களில் வனத் துறை அதிகாரிகளேகூட இத்தகைய செயல்களுக்கு ஆதரவாக இருந்து ஒத்துழைப்பைக் கொடுத்துக்கொண்டிருக் கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். எனவே அரசுக் காடுகளுக்கு மத்தியில் இனியும் தனியார் காடுகளை விட்டு வைக்கக் கூடாது என்பதை, வேறு காரணம் சொல்லி, விளக்க வேண்டியதில்லை என்றே கருதுகிறேன்.

மாஞ்சோலை தேயிலைத் தோட்ட எஸ்டேட்டுக்கு நிலம் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டபோதே, ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டது. அதாவது தேயிலையைப் பயிரிட உபயோகப்படுத்தும் வகையில் அனுமதிக்கப்பட்ட நிலத்தைத் தவிர வேறு இடங்களில் தேயிலை பயிரிடக்கூடாது என்பதுதான் அந்த நிபந்தனை. புதிதாகத் தேயிலை பயிரிட வேண்டுமென்றாலும், அங்குள்ள காடுகளை அழிக்க மரங்களை வெட்ட, அரசாங்கத்திடம் அனுமதி கோர வேண்டும் என்ற நிபந்தனை போடப்பட்டிருந்தும்கூட, அனுமதிக்கப் பட்ட நிலத்திற்கு மேலாகவே மிக அதிகமான பரப்பளவு உள்ள இடத்தில் இருந்த மரங்களை வெட்டிக்கொண்டு போகிறார்கள் என்ற செய்தி இங்கே தெரிவிக்கப்பட்டு, அரசாங்கமும் அதில் தலையிட்டது. அதன் காரணமாக அப்போது அங்கே மரங்கள் வெட்டுவது தடுக்கப்பட்டது. வெட்டப்பட்ட மரங்கள் 'பாத்திமா கம்பெனி' மூலமாக மலையிலிருந்து கீழே கொண்டுவரப்



படுகிறது என்பது அப்போது அரசுக்குத் தெரிவிக்கப்பட்டதன் காரணமாக, அன்றையதினம் அது தடுத்து நிறுத்தப்பட்டது. இப்போது என்ன தகவல் கிடைத்திருக்கிறது என்றால், மீண்டும் அப்படி வெட்டிய மரங்களைக் கீழே கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், எந்த வகையில் தனியாருக்குக் கொடுத்த Lease அனுமதியைக்கூட துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம் என்ற வகையில் சொல்லிக்கொள்கிறேன். இந்தத் தகவல் உண்மையாக இருந்தால், அரசு இதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் தனியார் காடுகளைப் பாது காக்கும் சட்டத்தை விஸ்தரிக்கும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தனியாரிடம் காடுகள் இருப்பதே இதுவரை அரசாங்கத்திற்குத் தெரியாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குப் பின்னாலே ஒரு சரித்திரமே இருக்கிறது. 90 ஏக்கருக்குச் சொந்தக்காரராக இருந்த ஒருவர் 900 ஏக்கர் தனக்குச் சொந்தம் என்கிற வகையில் ரிக்கார்டுகளைத் திருத்தி, சர்க்காருக்குச் சொந்தமான காட்டையும் சேர்த்து ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டார். அவரிட மிருந்து சர்க்காருக்குச் சொந்தமான இடத்தைத் திரும்பப் பெறுவதற்காக, சர்க்கார் சுப்ரீம் கோர்ட் வரை சென்று வாதாடி, அதன் காரணமாகத்தான் திரும்பவும் அந்தக் காட்டை அரசு பெற முடிந்தது. பல வருஷங்கள் இதற்காக அரசு சுப்ரீம் கோர்ட்டில் வழக்காட வேண்டிய நிலை ஏற்பட்டது. இயற்கை தந்த செல்வமான காடுகளை இனியும் தனியாரிடம் விட வேண்டிய அவசிய மில்லை. அப்படி விட்டால், 90 ஏக்கர் உள்ளவர்கள் அதை 900 ஏக்கர் என்று எழுதி வைத்துக்கொண்டு, சர்க்காருக்குச் சொந்தமான காட்டையும் அவர்கள் அனுபவிக்கிற நிலைதான் உருவாகும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். எனவே தனியார் காடுகளை உடனடியாக அரசு தன் பொறுப்பில் எடுத்துக்கொள்வதற்கான சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்காகத்தான் மேலே கண்ட இரண்டு உதாரணங்களையும் சொல்ல விரும்பினேன்.

அம்பாசமுத்திரத்திலுள்ள ஆஸ்பத்திரிக் காம்பவுண்டிற்கு அடுத்தாற்போல் வன இலாக்காவுக்கு என்று ஒரு சிறு கட்டிடம் இருக்கிறது. அந்தக் கட்டிடம் 50, 60 வருஷங்களுக்கு முன்னாலே கட்டப்பட்ட கட்டிடம். அப்போது தேவைப்பட்டது என்ற காரணத்திற்காகக் கட்டியிருப்பார்கள். ஆனால் அதற்குப் பிறகு லோயர் பாபநாசம் திட்டம் வந்த பிறகு, அம்பாசமுத்திரத்தில் உள்ள அந்தக் கட்டிடம் உண்மையிலேயே வன இலாக்காவிற்குத் தேவையில்லாமல் போய்விட்டது. அம்பாசமுத்திரம் ஆஸ்பத்திரியை விரிவுபடுத்த அந்தக் கட்டிடத்தைக் கேட்டால், வன இலாக்கா அதிகாரிகள் அதைக் கொடுக்க மறுக்கிறார்கள். ஆஸ்பத்திரியில் இன்னும் அதிகமான படுக்கை வசதிகளை உண்டாக்க வேறு எங்கேயும் இடம் வாங்க முடியவில்லை. இதன் காரணமாக, உபயோகம் எதுமில்லாமல் இருக்கிற அந்த வன இலாக்காவிற்குச் சொந்தமான கட்டிடத்தைக் கேட்டால், அவர்கள் கொடுக்க மறுக்கிறார்கள். இதைப்பற்றி நான் டிஸ்ட்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்திலேயே சொல்லியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் இந்தப் பிரச்சினையைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். இருந்தும் இதுவரையில் அந்தக் கட்டிடம் ஆஸ்பத்திரியின் உபயோகத்திற்குக் கிடைக்கவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அம்பாசமுத்திரத்தில் இருக்கும் ஆஸ்பத்திரி அந்தத் தாலுக்காவிலேயே பெரிய ஆஸ்பத்திரி. கல்லிடைக்குறிச்சி, விக்கிரமசிங்கபுரம் போன்ற ஒவ்வொன்றும் 40,000 மக்கள் கொண்ட நகரப் பஞ்சாயத்துக்களிலும் மற்றும் கிராமப் பகுதிகளிலும் வாழும் மொத்தம் 40,000 பேருக்குப் பயன்படுகிற ஆஸ்பத்திரியாக அம்பாசமுத்திரம் ஆஸ்பத்திரி இருக்கிறது. அதை விரிவுபடுத்த பக்கத்தில் இதைத் தவிர வேறு இடமில்லை. மற்றவர்களிடம் இடம் வாங்குவதும் இந்த இடம் கிடைக்காததால் தடைப்படுகிறது. உபயோகமில்லாமல் இந்தக் கட்டிடத்தை வைத்துக் கொண்டிருக்கிற வன இலாக்கா, மற்ற இலாக்காக்களைப்போலவே, தன்னிடம் இருக்கிற கட்டிடத்தைக் கொடுக்க மறுக்கிறது. எனவே அமைச்சர் அவர்கள், ஆஸ்பத்திரிக்கு அந்தக் கட்டிடம் தேவைப்படுவதன் காரணத்தை அறிந்து, உடனடியாக அந்தக் கட்டிடத்தை ஆஸ்பத்திரிக்கு வழங்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாபநாசம் 'அப்பர்' அணைப் பகுதியில் காணிக்காரர்கள் என்ற ஒருவகை ஆதிவாசிகள் குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் அங்கே உள்ள ஒரு பாலத்தை உபயோகித்துத்தான் தாமிரவருணிக்கு மேலே உள்ள 'சொரி



முத்தையன் கோயில்' என்ற இடத்திற்குப் போக வேண்டும். ஆனால் அந்தப் பாலத்தை வன இலாக்கா தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு ஆதிவாசிகளான காணிக்காரர்களை அந்தப் பக்கம் போகவே அனுமதிக்க மறுக்கிறார்கள். அந்தப் பாலத்தைப் பயன்படுத்தி, அந்த ஆதிவாசிகள் போனால், காடுகளிலிருந்து வன இலாக்காவிற்குச் சொந்தமான சொத்துக்களை எடுத்துப் போக முயற்சிக்கிறார்கள் என்று தொல்லைப்படுத்துகிறார்கள். எனவே பாபநாசம் அப்பர் டேம் என்னும் இடத்திலிருந்து பிரிந்து போகும் பாலத்தையும், பாதையையும் வன இலாக்காவிடமிருந்து மாற்றி ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் கையில் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் அந்தப் பாலத்தைப் பொது மக்களும் அங்கே இருக்கிற ஆதிவாசிகளும் உபயோகிக்க முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொண்டு, இரண்டு மசோதாக்களிலும் சொல்லப்பட்டிருக்கிற நோக்கத்தை வரவேற்று, ஆதரித்து அமைகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவின்மீதும், 1979 ஆம் ஆண்டு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவின் மீதும் என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பொதுவாக இப்படிப்பட்ட சட்டத் திருத்தங்களை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், நான் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தனியார் காடுகள் எந்த அளவுக்குப் பாதுகாக்கப்பட வேண்டுமென்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். தனியார் காடுகளுக்குச் சொந்தக்காரர்கள் தாங்கள் நினைத்ததைச் சாதித்துக்கொள்ள வேண்டும் என்று, அரசாங்கம் போடுகிற சட்டதிட்டங்களைப் பற்றிக் கவலைப்படாமல் அல்லது தங்களுக்கு இருக்கிற செல்வாக்கைப் பயன்படுத்தி, சட்டத்திற்குள்ளே இருக்கிற ஓட்டைகளைப் பயன்படுத்திக்கொண்டு செயல்படுவதும், அவ்வாறு முடியாத சில நேரங்களில் நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து எப்படியாவது தங்களுக்குச் சாதகமான தீர்ப்பைப் பெறவேண்டும் என்று நீதிமன்றங்களை அணுகுவதும், நீதிமன்றங்களும் அவர்களுக்குச் சாதகமான தீர்ப்புகளை வழங்குவதும் இன்றையதினம் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சாதாரண நிகழ்ச்சிகளாகிவிட்டன.

(பிற்பகல் 5.10)

அதையே தான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத் திருத்தத்திற்கான காரண-நோக்க விளக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே எதிர் காலத்தில் அப்படிப்பட்ட தனியார் காடுகள் உள்ளபடியே அழிக்கப்படுவதை அல்லது இந்த அரசாங்கத்தினுடைய சட்டத்திலே இருக் கின்ற ஓட்டைகளை பயன்படுத்துவதைத் தடுக்கும் வகையில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருப்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். அதைப் போலவே, இந்தச் சட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் நீட்டிக்கப் படுவதை நான் மனப்பூர்வமாக ஆதரித்துப் பாராட்டுகிறேன். நீதிமன்றத்திலே வழக்கு வந்து ஏ.ஐ.ஆர். 69 சுப்ரீம் கோர்ட் 691 தீர்ப்பிலும், அதைப்போலவே ஏ.அய்.ஆர். 1972 சென்னை 123 வழக்கில். சென்னை உயர்நீதி மன்றமும், சட்டத்தின் விதித் துறைகளை மாற்றுவதன் மூலம் சிக்கல்களை அகற்று வதற்கான அதிகாரம் சட்டமன்ற அதிகாரத்தைச் செயற்படுத்துவதற்கு நிகரானதாகும் என்று தெரிவித்திருப்பதையொட்டி இந்தச் சட்ட முன்வடிவை இங்கே கொண்டு வந்திருந்தாலும், இந்தத் தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான திருத்தங்களைக் கொண்டு வந்தாலும் அவைகளை நான் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இரண்டாண்டு காலம் தண்டனை, 5 ஆயிரம் ரூபாய் அபராதம் என்று வைத்தால் சில நேரங்களில் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானம் உள்ள காடுகளை ஆக்கிரமித்து, அதிலுள்ள ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமானம் உள்ள பொருள்களையெல்லாம் எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். இரண்டாண்டு கால தண்டனையும், 5 ஆயிரம் ரூபாய் அபராதமும் தானே, இதை நாம் இப்போது செய்தால் பின்னால் நம்முடைய சந்ததியினராவது நிம்மதியாக இருக்கட்டும் என்று இந்த மாதிரி வேலைகளில் ஈடுபடுகிறார்கள். நாம் இப்படி சில சட்டங்களைக் கொண்டு வருகிறோம். இந்தக் காடுகளை அழித்து, விலை மதிப்புள்ள மரங்களை வெட்டக்கூடியவர் களுக்கு கடுமையான தண்டனைகளைக் கொடுத்தாலன்றி, இந்தக் காடுகள் அழிக்கப்படுவதை நாம் தடுக்க முடியுமா என்பது அய்யத்திற்குரியதாகவே இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் சரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் சரி, இன்றைய இந்த ஆட்சியிலும் சரி, காடுகளிலே இருக்கும் சந்தன மரங்களை வெட்டி, திருட்டுத்தனமாகக் கொண்டு போகி றார்கள். அவற்றுக்கு நல்ல மார்க்கெட் இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெறுமானம் உள்ள சந்தனக் கட்டைகள் வெளிநாடுகளுக்குப்



போகின்ற காரணத்தினாலே, அவைகளுக்கு நல்ல விலை கிடைக்கின்ற காரணத்தினாலே, அந்த சந்தன மரங்களை வெட்டி—பெர்மிட் இல்லாமல், லைசென்ஸ் இல்லாமல்—திருட்டுத்தனமாக விற்கக்கூடிய நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்கள்கூட நான்கு ஐந்து நாட்களுக்கு முன்னாலே பார்த்திருப் பார்கள்; இதற்கென்று பல லட்சக்கணக்கிலே ரூபாய் முதலீடு செய்பவர்கள் இருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலேயிருந்து சந்தன மரங்களை வெட்டி கர்நாடக மாநிலத்திற்குக் கொண்டுபோனபோது, அங்குள்ள போலீசாரிடம் சிக்கி, அவர்கள் பிடித்து நம்முடைய போலீசிடம் ஒப்படைத்துவிட்டதாகத் தகவல்கள் வந்திருக்கின்றன. எவ்வளவுதான் சட்டங்கள் கடுமையாக இருந்தும் கூட, இப்படிப்பட்ட தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இவற்றையெல்லாம் தடுப்பதற்கு இன்றையதினம் கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டங்கள் போதாதென்றால், இன்னும் இந்தச் சட்டத்திலே தேவையான மாற்றங்கள் செய்து காடுகளைப் பாதுகாப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உண்மையிலேயே காடுகளால்தான் மழை பெய்கின்றது என்ற எண்ணம் இருப்பதால், மழை எந்த அளவிற்கு நமக்கு இன்றியமையாதது என்பதை நாம் புரிந்துகொண்டிருப்பதால் அந்தக் காடுகளைப் பாதுகாப்பதற்கு, அதிலும் குறிப்பாக தனியார் காடுகளைப் பாதுகாப்பதற்கு இப்படிப்பட்ட சட்டங்கள் மட்டுமல்ல, இன்னும் புரட்சி கரமான சட்டங்கள் கொண்டுவர வேண்டும்.

அடுத்தபடியாக, நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வருகிறோம். யார் யார் எந்த அளவுக்கு நிலங்கள் வைத்திருக்கலாம் என்று சட்டம் கொண்டு வருகிறோம். நகரப்புறங்களாக இருந்தால், எந்த அளவுக்கு வீட்டு மனைகள் வைத்திருக்கலாம் என்று சட்டம் கொண்டு வருகிறோம். அதைப் போலவே காடுகளைப் பொறுத்தவரையில், அவைகளுக்கும் இப்படிப்பட்ட ஒரு சட்டம் கொண்டு வந்து, தனியார் எத்தனை ஏக்கர்களுக்கு உள்ளே தான் காடுகளை வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு சட்டம் கொண்டு வந்தால் கூட, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் ஆதரிப்பேன். ஊட்டி, கொடைக்கானல், ஏலகிரி போன்ற மலைப் பகுதிகளில் இன்னும் சிலர் ஆயிரக் கணக்கான, நூற்றுக்கணக்கான ஏக்கர்களுக்கு சொந்தக்காரர்களாக காடுகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி தனிப்பட்ட சிலர் ஆயிரக்கணக்கான, நூற்றுக்கணக்கான ஏக்கர் காடுகளுக்குச் சொந்தக்காரர்களாக இருந்து கொண்டு, லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள மரங்களை வெட்டி

அழிக்கும் இந்த நிலையிலிருந்து காடுகளைக் காப்பாற்ற, தக்க சட்டங்களை வருகின்ற கூட்டத் தொடரிலாவது அமைச்சர் அவர்கள் கொண்டுவர வேண்டு மென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, இந்தச் சட்டத் திருத்தத்தை ஆதரித்து, அமைகின்றேன்.

**திரு. சி. ஞா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்ட முன்வடிவுபற்றிச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு கின்றேன். காடுகள் என்பது இயற்கை ஒரு நாட்டுக்கு அளித்த மிகச் சிறந்த செல்வம் என்று பொருளாதார நிபுணர்கள் வர்ணிக்கிறார்கள். ஆனால் இந்தியாவிலேயே நாளுக்குநாள் காடுகள் அழிக்கப்பட்டு காடுகளுடைய பரப்பு குறைந்துகொண்டே வருவதாகவும், காடுகளிலே வளர்கின்ற மரங்களுடைய எண்ணிக்கை குறைந்துகொண்டே வருவதாகவும் புள்ளிவிவரங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. ஆகவே, இதில் அதிக கவனம் செலுத்த வேண்டிய கட்டா யத்தில் நாம் இருக்கிறோம். தனியார் காடுகள் ஆனாலும் சரி, அரசுக்குச் சொந்தமான காடுகள் ஆனாலும் சரி, அவற்றைப் பாதுகாக்க வேண்டிய நிலையிலே நாம் இருக்கிறோம். சில ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிடுவது பொருத்தமாகும் என்று கருதுகிறேன். இந்தியாவிலே கிரிக்கெட் மட்டை தயாரிப்பதற்குத் தேவைப்படுகின்ற மரத்தை வெட்டு வதற்காக பெரிய பட்டாளமாக வாகனங்களிலே சென்றபோது, அந்த கிராமங்களிலே இருந்த மக்கள் எல்லாம் அந்த மரங்களைக் கட்டியணைத்துக் கொண்டு, முதலிலே எங்களை வெட்டிவிட்டு அதற்குப் பிறகு இந்த மரங்களை வெட்டுங்கள் என்று சொல்லி அந்த மக்கள் எல்லாம் சத்தியாகிரகம் செய்தார்கள். கடைசியிலே மரத்தை வெட்டச் சென்றவர்கள் தங்களுடைய முயற்சியிலே தோல்வியடைந்து திரும்பிவிட்டார்கள் என்று செய்தி வந்தது. இப்படிப்பட்ட ஒரு 'கோக்டர்', மக்களுடைய மனத்திலே ஏற்பட்டிருக்கின்ற ஒரு உணர்ச்சி, மரங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்ச்சி இருக்க வேண்டும், அதற்கான முயற்சிகளை நாம் செய்ய வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, கிட்டத்தட்ட ஒரு நாட்டினுடைய எல்லையைப் பாதுகாக் கின்ற ராணுவத்தினுடைய அதிகாரிக்கு என்ன பொறுப்பு இருக்கிறதோ, அந்த அதிகாரிக்கு என்னென்ன பயிற்சி அளிக்கப்படுகிறதோ அந்த அளவுக்குப் பயிற்சி இந்த வனத் துறையிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கும் அளிக்க வேண்டும் என்பதுதான் உள்ளபடியே என்னுடைய கருத்து. இதற்கென



தனியாக ஒரு காவற்படையை நியமித்தால் கூட, அது நியாயமான செயலாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திண்டிவனத்திற்கு அருகே ஒரு காடு இருக்கிறது. அதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். திண்டிவனம், பாண்டிச்சேரி, விழுப்புரம் இந்த மூன்று நகரங்களுக்கு இடையிலே திருவக்கரை என்று ஓர் ஊர் இருக்கிறது. அந்த ஊரில் இருக்கின்ற காடுகளில் உள்ள மரங்கள் எல்லாம் பாறைகளாக மாறு கின்றன. எனக்குத் தெரிந்த மரங்கள் கூட அப்படிப் பாறைகளாக மாறி, பார்ப்பதற்கு ஒரு அதிசயப் பொருளாக, காட்சிப் பொருளாக இருக்கின்றன. அந்த இடத்தை அரசினுடைய கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்து அதை ஒரு சிறந்த சுற்றுலா மையமாகக்கூட ஆக்கலாம். பலர் அழைத்துச்சென்று பார்க்க விரும்புகிறார்கள். அங்கு தக்க போக்குவரத்து வசதி கிடையாது. தங்குவதற்குரிய வசதி கிடையாது. தக்க பாதுகாப்பு கிடையாது. இந்த இடத்திற்கு அமைச்சர் அவர்கள் நேரிலே சென்று, பார்வையிட்டு, அரசினுடைய கட்டுப்பாட்டின்கீழ் அதைக் கொண்டு வந்து, தேவையான ஏற்பாடுகளைச் செய்து அந்த இடத்தை ஒரு சிறந்த சுற்றுலா மையமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சுற்றுலா மையமாக ஆக்கப்படுவதற்கான அனைத்து சூழ்நிலைகளும் அங்கு இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இந்த சந்தர்ப்பத்திலே கொண்டு வருகிறேன்.

கடைசியாக, மற்ற உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தபடி, காடுகளை அரசினுடைய கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர வேண்டும். அந்த வகையிலே விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவர் அவர்களே, காடுகள் சட்டத் திருத்தத்தின் பேரில் சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புக் கொடுத்த மைக்காக நன்றி. எனக்கு முன்னே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் கிரிக்கெட் மட்டை செய்யக்கூடிய மரங்களைக் குறித்துப் பேசினார்கள். கிரிக்கெட் மட்டைக்கு வேண்டிய மரங்களைக் கொண்ட காடுகள் காஷ்மீரத்தில் அதிகமாக இருக்கின்றன. ஸ்ரீநகருக்குப் போகும் வழியிலே பார்த்தால், ஏகப்பட்ட கிரிக்கெட் மட்டைகள் செய்யக் கூடிய பாக்டெரிகள் இருக்கின்றன. அந்த மரங்களைப் பார்த்தால், அவைகள் ஏதோ ஒரு விசேஷ மரங்கள் போல இருக்கும். அங்கெல்லாம் அவைகள்

அதிகமாக இருக்கின்றன. ஆனால், கிரிக்கெட் மட்டை தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மரங்கள் தமிழ் நாட்டிலே இல்லை என்று நினைக்கிறேன். அந்த மரங்களை நாம் வளர்த்தால், அவைகள் மிக்க ஆதாயம் கிடைக்கக் கூடியதாக இருக்கும் என்ற கருத்தில் தான் நான் இதைக் குறிப்பிடுகின்றேன். ஆகவே, அந்த மரங்களை வளர்க்க வேண்டிய முயற்சிகளை நாம் எடுக்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சவுக்கு மரங்கள் வளர்ப்பதுபற்றி ஒரு கருத்துச் சொல்ல விரும்புகிறேன். கன்னியாகுமரி தாலுக்கா என்று சொல்லக்கூடிய அந்த இடத்தில், கன்னியாகுமரியில் மூன்று கடல்கள் ஒன்றாகச் சேரக்கூடிய இடத்தில் புயல் காற்று அடிப்பதோடு, அந்தப் புயல் காற்று திசை மாறி மாறி முற்றுகையிடுகிறது என்றும் சொல்கிறார்கள்.

(பிற்பகல் 5.20)

அந்தப் புயல் காற்றைத் தேக்குவதற்கு காலியிடங்களில் நிறைய சவுக்கு மரங்களை வைத்தால்தான், அவை காற்றின் வேகத்தைத் தடுத்து, ஊருக்குள் அதிக சேதாரம் விளைவிக்காமல் காப்பாற்ற முடியும். அப்படி, 'டிஃபென்சிவ் மெத்தட்' என்ற முறையிலே சவுக்கு மரங்களை கன்னியாகுமரி மாவட்டத்தின் கரைகளிலே வைத்திருக்கிறார்கள். அதையெல்லாம் அதிகாரிகள் காட்டினார்கள், நானும் பார்த்தேன். அவர்கள், அந்த மரங்களைப் பாதுகாப்பு என்று இல்லாமல், கமர்ஷியல் பேசிஸ் என்ற முறையிலே வருமானம் எவ்வளவு என்று அரசாங்கம் கணக்குப் பார்க்கிறது என்று சொன்னார்கள். இலாபம் எவ்வளவு, நஷ்டம் எவ்வளவு என்று கணக்குப் பார்த்தால், அவற்றையெல்லாம் வெட்டி விற்க வேண்டும். அப்படி வெட்டி விற்றால் தாக்கக்கூடிய புயல் காற்றைத் தேக்க முடியாது. ஆகவே இதையெல்லாம் அரசாங்கத்திடம் சொல்ல வேண்டும் என்று அங்குள்ள அதிகாரிகள் சொன்னார்கள். ஆகவே இலாப நஷ்டக் கணக்குப் பார்க்காமல், 'டிஃபென்சிவ் மெத்தட்' என்ற அளவிலே அந்த சவுக்கு மரங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இரண்டாவது, சவுக்கு மரங்கள் நிறைய திருடு போகின்றன என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அங்குள்ள மக்கள் அவைகளை வெட்டி எடுத்துக் கொள்ளுகிறார்கள். இதைக் கண்காணிக்க அவர்களுக்குப் போதுமான



ஜீப்புகள் இல்லை, மோட்டார் வண்டிகள் சரியாக இல்லை, ஸ்டாஃப் ரொம்பக் குறைவு என்றெல்லாம் சொன்னார்கள். ஆகவே இவற்றையெல்லாம் கூடுதலாக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதைத்தான் நானும் சொல்லுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே இரப்பர் தோட்டங்கள் 15 ஆண்டுகளுக்கு முன் வைக்கப்பட்டன. முதல் எட்டு, பத்து ஆண்டுகள் வரையில் அவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டு வந்தது. இப்போதுதான் இலாபம் வரக்கூடிய கட்டம் உருவாகி, கோடிக் கணக்கான ரூபாய் இலாபத்தைக் கொடுக்கக்கூடிய வகையில் அங்கே இரப்பர் தோட்டங்கள் இருந்து வருகின்றன. ஆகவே ஒரு இரப்பர் வாரியத்தை உருவாக்கி, அதைத் தனி இலாக்காவாக ஆக்க வேண்டும் என்று அந்த அதிகாரிகள் சொன்னார்கள். நம்முடைய அரசு இரப்பர் தோட்டம் இருக்கிற இடத்திற்கு எதிரே காலியாக ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது. இந்த இடத்தை தனியார் ஒருவர் தன்னுடையது என்று சொல்லுகிறார்; அரசாங்கம் தன்னுடையது என்று சொல்லுகிறது. இது குறித்து தாவா கோர்ட்டில் இருக்கிறது என்று சொன்னார்கள். இரப்பரை உற்பத்தி செய்வதற்கு கன்னியாகுமரியின் சீதோஷ்ணம் பொருத்தமாக இருக்கிறது. மற்ற இடங்களில் இரப்பர் மரம் வைக்கக்கூடிய அளவுக்குச் சீதோஷ்ண நிலை சரியாக இல்லை. மழைத் தண்ணீரும் வேண்டிய அளவுக்கு இல்லை. கன்னியாகுமரியில்தான் இரப்பரைப் பயிர் செய்ய முடியும் என்ற நிலையில் ஆயிரம் ஏக்கர் அளவுக்குக் காலியாகவுள்ள அந்த இடத்தை அரசாங்கம் சட்டம் போட்டாவது எடுத்துக்கொள்ள வேண்டும். இதனால் அரசாங்கத்திற்கு நிறைய இலாபம் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்ற கருத்தை அங்கேயுள்ளவர்கள் சொன்னார்கள். ஆகவே இதன் மீதும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த ஆண்டு இரண்டு இரப்பர் தொழிற்சாலைகளைத் துவக்கப் போவதாக அரசாங்கம் ஒரு அறிக்கையைக் கொடுத்ததாக எனக்கு நினைவு இருக்கிறது. இதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே ஏலக்காய் உற்பத்தி செய்கிறார்கள். ஏலக்காய் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய சீதோஷ்ணம், மழைத் தண்ணீர் எல்லாம் அங்கே காண முடிகிறது. முன்பெல்லாம் ஏலக்காய் பயிரிலே அதிக இலாபம் இல்லை. இப்போது எக்கச்சக்கமான இலாபம் வருகிறது என்பதால்; கம்பம், கூடலூர்,

போடி போன்ற இடங்களில் எல்லாம் ஏலக்காயைப் பயிரிடுகிறார்கள். கன்னியாகுமரியிலும் ஏலக்காய் பரவலாகப் பயிரிடப்படுகிறது. இப்போது அரேபிய தேசங்களில் ஏலக்காய்க்கு நல்ல கிராக்கி இருக்கிறது. முன்பு ஒரு ரூபாய்க்கு விற்ற ஏலக்காய் இன்றைக்கு பத்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆகவே ஏலக்காய் விற்பனையின் மூலம் அதிகமான ஃபாரின் எக்ஸ்சேஞ் வருகிறது. அன்றைக்கு ஒரு நாள் மாண்புமிகு அமைச்சர் திரு. இராசா முகமது அவர்கள் கூட, ஏலக்காய் தோட்ட முதலாளிகள் தங்களுக்கு வரக் கூடிய பணத்தை என்ன செய்வது என்று தெரியாத அளவுக்கு அவர்களுக்கு திடீரென்று அதிகமான இலாபம் வருகிறது என்று சொன்னார்கள். ஏலக் காயை அரசாங்கத்தின் சார்பிலும் பயிரிடுகிறார்கள். அதை இன்னும் விரிவாக்க அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்ற கருத்தைச் சொல்லுகிறேன்.

முன்பு தேக்கு மரங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகமாக இருந்து வந்தன. இப்போது தேக்கு தேவையென்று கொஞ்சம் கொஞ்சமாக அறுத்து எடுக்கிறார்கள். விதை விதைத்து தேக்கு மரத்தை உருவாக்கினால், 80 வருடங்களுக்குப் பிறகுதான் அதை அறுப்பார்களாம். 80 வருடங்கள், 100 வருடங்களுக்குப் பிறகு அறுத்தால்தான் திடமான தேக்கு கிடைக்கும். 80 வருடத்திற்கு முன்பு போட்டதைத்தான் இப்போது அறுத்துக் கொண்டிருக் கிறோம். இப்போது புதியதாக தேக்கு மரங்களை நடுவதில்லை. ஆகவே இப்போது வெட்டக் கூடிய அளவைப் பார்த்தால், தேக்கு என்றால் என்ன வென்றே கேட்கக் கூடிய நிலை வரும் என்று அங்குள்ள அதிகாரிகள் சொன்னார்கள். காலியாக இருக்கக் கூடிய இடங்களில் தேக்கு மரத்தை பயிர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக, காட்டிலாக்கா அதிகாரிகளை உருவாக்கக் கூடிய பள்ளிக் கூடமோ, காலேஜோ ஏதோ ஒரு நிறுவனம் வைகை டாம் அருகில் இருக்கிறது. அரசாங்கக் கமிட்டியுடன் நான் சென்றபோது, அங்கே பார்த்தேன். அங்குள்ள அதிகாரிகள் தங்களுக்கு வசதிகள் குறைவாக இருக்கின்றன என்றும், தங்களுக்குச் செயல்படுவதற்கு வாகனங்கள், சைக்கிள்-மோட்டார்கள் குறைவாக இருக்கின்றன என்றும், இதையெல்லாம், கவனிக்க அரசுக்குச் சிபார்சு செய்ய வேண்டும் என்றும் சொன்னார்கள். இதன் மீது அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.





**திரு. ஆ. பாலசுப்ரமணியம்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ் நாடு அரசால் கொண்டுவரப்பட்டுள்ள தனியார் காடுகளைப் பாதுகாக்கிற சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். அரசால் நிர்வகிக்கப்படுகிற வனங்களைப் பொறுத்த மட்டில், நிறைய செல்வங்களைக் கொடுக்கக் கூடிய மரங்கள் இருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். இதற்குச் சான்றாக, சேலம் மாவட்டத்திலே இருக்கிற கொல்லி மலையில் பல கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள சந்தன மரங்கள் இருப்பதைச் சொல்லலாம். அன்றாடம் செய்தித் தாள்களைப் பார்க்கிறபோது, தனியார்கள், சில மக்களை வைத்து சந்தன மரங்களை வெட்டிக் கொண்டு வரச்சொல்லி, அவற்றைக் கடத்திக் கொண்டு போய் விற்று, வருவாயைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிகிறோம். வன இலாக்காவால் ஏலம் போடுகிறபோது கூட, சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதை அறிந்து, இப்போது பொறுப்பேற்றி ருக்கிற வனத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு முறை சேலத்திற்கு வந்து அவர் முன்னிலையிலேயே ஏலம் விடப்பட்டு, பல இலட்சக்கணக்கான ரூபாய் வருமானம் பெறப்பட்டதை நாம் அறிவோம். ஆனால் இன்றைக்கும் திருட்டுத் தனமாக, சட்டத்திற்குப் புறம்பாக, சந்தன மரங்களை வெட்டிக்கொண்டு போய் வெளி மாநிலங்களுக்கு அனுப்புகிற தொழில் நடந்து கொண்டிருப்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

வன இலாக்கா அதிகாரிகளுடன் பேசுகிறபோது, இப்போதுள்ள சட்டம் கடுமையான சட்டமாக இல்லை என்று அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். தங்கத்தினுடைய விலையைப் போல் சந்தனக் கட்டையின் விலையும் உயர்ந்தி ருப்பதால், திருட்டுத்தனமாக சந்தன மரங்களை வெட்டி, வெளி மாநிலங்களுக்குக் கொண்டுபோய் விற்று, அதன் மூலம் வருவாயைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். கையும், களவுமாகப் பிடித்து கோர்ட்டில் கொண்டு போய் நிறுத்தினால் கூட, அவர்கள் மிக எளிதாக ஜாமீனில் வெளியே வந்துவிடுகிறார்கள். ஒவ்வொரு முறையும் எப்படியாவது தப்பித்துக் கொள்ளு கிறார்கள். ஆகவே சட்டத்தைக் கடுமையாக்க வேண்டும் என்று அங்குள்ள அதிகாரிகள் சொல்லுகிறார்கள். சந்தன மரம் உயர்ந்த விலையில் விற்கக் கூடிய நிலைமை இருப்பதால், இதைத் திருடுவதால், நாட்டின் செல்வத்திற்குப் பாதகம் ஏற்படுகிறது என்ற வகையில், சந்தன மரங்களைத் திருட்டுத்தனமாக வெட்டுவதைப் பெரிய குற்றமாகக் கருதி அதைத் தடுக்க அரசு இப்போதுள்ள சட்டத்தை மேலும் கடுமையாக்க முன்வர வேண்டும் என்று கூறி, பேச வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி கூறி, முடித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவையும், தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்டமுன்வடிவையும் இங்கே பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்று, மேலும் இந்தச் சட்டங்களை எப்படி அமுல்படுத்த வேண்டும் என்றும், குறைகள் இல்லாமல் நம்முடைய நாட்டில் வனங்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்கான பல்வேறு யோசனைகளையும் எடுத்து வழங்கியதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

எல்லோருமே இதை ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தால், நான் அதிகமான நேரத்தை எடுத்துக்கொண்டு இதிலே விளக்கம் கொடுக்க வேண்டியதில்லை என்பதை உணர்கிறேன் என்றாலும், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைத்திருக்கிற ஒன்றிரண்டு கருத்துக்களையொட்டி அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்தின் மூலமாக நாட்டுக்கு அறிவிப்பது பயன் தரும் என்று கருதுகிறேன்

(பிற்பகல் 5-30)

தனியார்க்கு என்று காடுகளை வைத்துக்கொள்ள அனுமதித்துவிட்டு, அதற்குப் பிறகு அதைப் பாதுகாப்பதற்கு என்று ஒரு சட்டம் வைத்துக் கொண்டு, அதிலே வழுக்கிக்கொண்டிருக்கின்றவர்கள் காரணமாக, இந்தச் சட்டத்தின் விதிகளுக்குள்ளே நுழைந்துகொண்டு தவறுகளைச் செய்து கொண்டிருப்பவர்களைக் கண்காணிப்பதற்காக இந்தச் சட்டத்தை மாற்றும் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். தனியார்கள் காடுகளை வைத்துக் கொண்டிருக்க அனுமதித்து வந்திருக்கிறோம். அது நாட்டினுடைய பொதுச் சொத்துத்தானே, ஏன் அனுமதிக்க வேண்டும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கருத்தை இந்த அரசு முழு அளவிலே ஏற்று, தமிழகத்திலே தனியாருக்குச் சொந்தமான காடுகள் இருக்கக்கூடாது என்ற முடிவு எடுத்ததன் காரணமாக, அவைகளை அரசு நாட்டுடைமையாக்குவதற்கு எப்படி நாம் சட்டங்களை மாற்ற வேண்டும் என்று சட்டத் துறையினிடத்திலே கேட்டுக்கொண்டிருக்கிறோம். 1976-ல் இந்தியக் குடியரசுத் தலைவரின் ஆளுகைக்குட்பட்டபோது, இப்படிப்பட்ட முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு,



இடைக்காலத்தில் என்ன காரணத்தாலோ, அது கைவிடப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் பரிசீலித்து, தகுந்த சட்டத்தை தனியார்க்கு என்று காடுகள் இருக்கக்கூடாது என்கின்ற அளவுக்கு இந்த அரசு சட்டம் கொண்டு வரவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைத் தவிர மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் இந்தச் சட்டத்திலே இரண்டு ஆண்டுகள்தான் சிறை தண்டனை என்று இருக்கிறது. அதையும் அவர்கள் ஏற்றுக்கொண்டு, இரண்டு ஆண்டுகள் தானே தண்டனை, பரவாயில்லை என்று எண்ணி லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள மரங்களை வெட்டிவிட்டு, இந்த இரண்டு ஆண்டுகள் தண்டனைகளை ஏற்றுக்கொண்டு விட்டு அந்தப் பலனை பிறகு அனுபவித்துக்கொள்ளலாம் என்று அவர்கள் முயலக்கூடும் என்று கூடத் தெரிவித்தார்கள். அதற்குக் கூட சட்டத் திருத்தம் வரவிருக்கிறது. ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்திலே உள்ள குறைகளை உயர்நீதி மன்றம், உச்ச நீதிமன்றம் எடுத்துக்காட்டியதற்கு ஏற்ப இந்தத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அங்கத்தினர் அவர்கள் விரும்புவது போல, இந்த வனத் துறையைச் சார்ந்த காடுகளிலிருந்து விலையுயர்ந்த, விலை மதிப்பற்ற மரங்களை வெட்டிக் கொண்டு செல்வதைக் கடுமையான குற்றமாகக் கருதி, அதற்கு 3 ஆண்டுகள் தண்டனை என்றும், அதே குற்றத்தை இரண்டாவது தடவை செய்தால் 5 ஆண்டுகள் தண்டனை என்றும் சட்டம் செய்யப் போகிறோம். இந்தச் சட்டமன்றத் தொடரிலேயே அந்தச் சட்டம் வர இருக்கிறது என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கும், அவர்கள் மூலம் இந்த நாட்டிற்கும் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், சந்தன மரங்கள் எப்படியோ களவு போகின்றன. தங்கம் போன்று விலையுள்ள, விலை மதிப்பற்ற சந்தன மரங்கள் இந்தியாவிலேயே தமிழகத்திற்கு இயற்கை தந்த மிகப் பெரிய செல்வமாகும். அந்தச் சந்தன மரங்கள்பற்றி ஒரு காலத்திலே திப்பு சுல்தான் ஒரு ஆணை பிறப்பித்திருந்தார். அதன்படி சந்தன மரத்தை ஒருவன் வெட்டினால், அவன் கையையே வெட்ட வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருந்தான். அப்படி ஆணைகள் போட்டு அன்று சந்தன மரத்தைத் திருடி, கொள்ளையடித்துக்கொண்டு போவதை எல்லாம் தடுத்தார்கள்.

வனத்துறை அதிகாரிகள் இதற்கு முன்னால் எத்தனை பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள், பிடித்திருக்கிறார்கள், இந்த ஓராண்டு காலமாக அவர்கள் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்து எத்தனை பேர்களை பிடித்திருக்

கின்றார்கள் என்பதெல்லாம் வேறு விஷயம். அப்படித் திருடியவர்களில், சிலரை பிடித்து வழக்கு மன்றத்திலே நிறுத்தியபோது, இப்படிப்பட்ட குற்றவாளிகளுக்கு கோர்ட்டு கலையும் வரை தண்டனை என்று சொல்லி விடுகிறார்கள். அவர்களை அப்படி தண்டித்துவிட்டு, வெளியே அனுப்பி விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால், வனச் செல்வத்தை எப்படிப் பாதுகாப்பது? இந்த மன்றம்தான் சட்டங்களை உருவாக்கு கின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலைகள்தான் கடந்த காலத்திலே உருவாக்கப் பட்டிருந்தன. நான் வனத்துறை அதிகாரிகளிடம் கேட்டேன், சில வழக்கு களில் தீர்ப்பை எதிர்த்து நீங்கள் என் அப்பீல் செய்யவில்லை?" என்று கேட்டேன்.

**திரு. ப. மாணிக்கம் :** இந்த மாதிரி திருடுகின்றவர்களை நீதி மன்றத்திலே எளிய தண்டனை மூலமாக தப்பிக்க விட்டுவிடுகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த வழக்கை எடுத்து நடத்துபவர்கள் சக்தி வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள், அது உண்மையா? அந்தச் சட்டத்தை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** தலைவர் அவர்களே, அதிகாரிகள் எந்த அளவிற்கு இதிலே உடந்தையாக இருக்கிறார்கள் அல்லது இல்லை என்று அமைச்சர் என்ற முறையில் நான் சொல்ல முடியும். ஆனால், நீதி மன்றத்தில், மன்றத்திலே சொல்கின்ற தீர்ப்பைப்பற்றி நான் விமர்சிக்க முடியாது. இப்போது என்ன நடக்கிறது என்பதைத்தான் இந்த மன்றத்தின் மூலம் நாட்டிற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் சம்பந்தப்பட்டவர்கள் யார், அந்த சக்தி வாய்ந்தவர்கள் யார் என்பதைப்பற்றி இந்த நாட்டு மக்களும் இந்த மன்றமும்தான் தீர்வு காண வேண்டுமென்று சொல்கிறேன். இது சம்பந்தப்பட்ட சில வழக்குகள் நம் பரிசீலனைக்கு வருகின்றன. மேற்கொண்டு என் அப்பீல் செய்யவில்லை என்று கேட்டால், வனத் துறையில் இருக்கின்ற அஸிஸ்டண்ட் பப்ளிக் பிராசிக்யூட்டர் அவர்கள் இதிலே அப்பீலுக்கு லாயக் கான சட்டப் பிரிவுகள் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். அதன் பேரில் அதை அப்படியே கட்டி வைத்துவிடுகிறார்கள். அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. எத்தனை ஆண்டுகளாக இப்படி இருந்துகொண்டிருக்கிறது? தனிப்பட்டவர்களைப்பற்றி நாம் குறை சொல்ல



முடியாது. பொதுவாகவே இந்த நாட்டில் காடுகளை, வனங்களை வளர்க்க வேண்டுமென்று சொல்கிறோம். காடுகள் ஒரு நாட்டினுடைய மிகப் பெரிய சொத்து, மிகப் பெரிய செல்வம் என்கிறோம். அந்த உணர்வு எல்லாத் தரப்பிலும் இருக்கிறது. இருந்தாலும், அந்தச் செல்வத்தைப் பாதுகாக்க முடியாமல் இருக்கிறோம் என்பதைத் தான் சொல்கிறேன்.

வனச் செல்வம் நாட்டின் நிலப் பரப்பிலே மூன்றில் ஒரு பங்காவது இருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர்கள், வல்லுநர்கள், நிபுணர்கள் எல்லாம் சொல்கின்றார்கள். அது நம் மாநிலத்தில் 16 சதவிகிதம் தான் இருக்கின்றது. இந்த நிலைமை வருந்தத்தக்கதாகும். சுதந்திரம் பெற்று இன்றைக்கு 30 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆயினும் காடுகளை அழிப்பதிலேதான் நாம் போட்டி போட்டுக்கொண்டிருக்கிறோம். காடுகளை அழித்துக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். வெள்ளைக்காரர்கள் காலத்திலே காடுகளைப் பாதுகாப்பதில் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டிருந்தார்கள். நம் நாட்டிலே இருப்பவர்கள் காடுகள், மனிதர்கள் போகின்ற இடமல்ல என்று சொல்வார்கள். வெள்ளைக் காரர்கள் காலத்திலே காட்டுக்குள்ளேயே போய் வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்திருக்கின்றார்கள். இந்தத் துறை அதிகாரிக்கு வைத்திருக்கின்ற பெயரை நாம் பார்க்க வேண்டும். 'சீஃப் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட்ஸ்' என்று இருக்கிறது. அதாவது வனங்களைப் பாதுகாக்கின்ற அதிகாரி என்றுதான் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வனங்களைப் பாதுகாக் கின்ற, அவற்றின் வளர்ப்பைப் பாதுகாக்கின்ற அளவில்தான் நாம் இருக்க வேண்டும். ஆனால் நாம் தெரிந்தோ, தெரியாமலோ நம்மை நாமே அழித்துக் கொண்டிருப்பது போல, இந்த வனங்களையே அழித்துக்கொண் டிருக்கிறோம்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள்கூட, வனங்கள் நமது மாநிலத்தில் பரவலாக இருக்கின்ற காரணத்தால், தனிப்பட்டவர்கள் தங்கள் காடுகளிலிருந்து மரம் வெட்டிக்கொண்டு வருவதாகச் சொன்னார்கள். தனியார் காடுகள் அங்கங்கே தீவைப் போல, திட்டுக்களைப் போல இருப்பதால், அதிகாரிகள் 'இந்தக் கட்டைகள் எங்கேயிருந்து வருகின்றன' என்று கேட்டால், 'இது எங்கள் சொந்தக் காட்டிலிருந்துதான் வருகிறது' என்று சொல்லிவிடுகிறார்கள். இதற்கு 'அதிகாரிகளுட் ஆமாம் சாமி' போட்டு விடுகிறார்கள். இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டு இந்தச் சட்டத்திலிருந்து

தப்பித்துக்கொள்ளக்கூடிய அளவில் அவர்கள் இருக்கின்றார்கள். அதற்கு அவர்களுக்கு வசதிகள் இருக்கின்றன. ஆகவேதான் தனியார் காடுகள் என்று இருக்கக்கூடாது என்பது நம் கருத்து. காடுகள் தனிப்பட்டவர்கள் யாருடைய முயற்சியாலும் வளரவில்லை. நாங்கள்தான் இந்தக் காடுகளை வளர்த்தோம் என்று சொல்லிக்கொண்டு உரிமை கொண்டாட முடியாது. ஒரு நாட்டினுடைய பொதுச் சொத்தாக அது இருக்கின்றது. அதை யாரும் நட்டு, பயிராக்கி, வளர்த்ததாகச் சொல்ல முடியாது. அதில் யாருக்கும் உரிமையில்லை. இதை இந்த நாட்டினுடைய பொதுச் சொத்தாக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய திட்டம். அதற்காக சட்டம் கொண்டுவர அரசு தீவிரமாக ஆய்ந்து வருகிறது. அதற்கு முன்னோடியாகத் தான் இந்தச் சட்டத் திருத்தம் இந்த மன்றத்திலே வந்திருக்கிறது. முன்பிருந்த சட்டத்தில் என்ன ஓட்டை, இருந்தது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு சொல்கிறேன். 'ரெட் சான்டர்ஸ்' என்று ஒரு வகை மரம் இருக்கிறது. அது மிக விலையுயர்ந்த மரம். நம்முடைய மாநிலத்திலேயுள்ள காடுகளில் அது அதிகமாக இல்லை. ஆந்திராவிற்குப் பக்கத்திலே சித்தூர், திருத்தணி பகுதிகளிலே உள்ள காடுகளில் இருக்கின்றன. இந்த மரம் ஆந்திராவில்தான் அதிகமாக இருக்கின்றது. இந்த மரம் ஜப்பான் நாட்டிற்குத்தான் அதிகமாக ஏற்றுமதியாகின்றது. அந்த மரங்களை அங்கிருந்து சென்னைக்குக் கொண்டு வந்து விடுவார்கள். பிறகு சென்னையிலிருந்து கப்பலில் அனுப்புகிறார்கள். இது தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. இதில் சில தவறுகள் நடந்துகொண்டிருந்தன. அவைகள் கடந்த ஆண்டுதான் கண்டுபிடிக்கப்பட்டன. பல விண்ணப்பங்கள் வந்துகொண்டிருக்கின்றன. 'ரெட் சான்டர்ஸ்' மரத்தை அனுப்புவதற்கு ஆரிஜின் 'Origin' சர்ட்டிபிகேட்டுக்காக 'டிஸ்ட்ரிக்ட் பாரஸ்ட்' அலுவலகத்திற்கு அவாகள் வருகிறார்கள். அவர்களிடம் விசாரிக்கும்போது, அவர்கள் 'ஒரு இடத்திலே இடிந்துபோன பழைய கட்டிடத்திலேயிருந்து பிரித்து எடுத்ததை வாங்கினேன்' என்று கூறுகிறார்கள். அப்படிச் சொல்லி விண்ணப்பம் தருகிறார்கள். உடனே அதிகாரியும் அதைப் பார்த்து 'ஆமாம், ஆமாம்' என்று சொல்லிவிடுகிறார். 'பழைய மரம் தான். தனித் தனிக் கட்டையாக வெட்டினேன். இத்தனை கட்டைகளை வெட்டினேன். அவைகளைத் தான் ஜப்பானுக்கு அனுப்புகிறேன்' என்று சொல்லி, அனுமதி பெற்று அனுப்பி விடுகிறார்கள். எனக்குக் கிடைத்த தகவல் மீது நானே மாவட்ட வனத்துறை அதிகாரிகள் அலுவலகத்திற்குச் சென்று பரிசோதனை



செய்தேன். ஒரு ஆறு மாத காலத்தில் திட்டத்தட்ட 40 அனுமதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த 40 அனுமதிக்கான விண்ணப்பங்களும் ஒரே மாதிரியாக, ஒரே மாதிரி பாரத்தில், பழைய கட்டடத்திலிருந்து வெட்டப்பட்ட கட்டைகள் என்று சொல்லப்பட்டு, அனுமதி கேட்கப்பட்டதாக இருந்தன. அப்படிச் சொல்லி 'எக்ஸ்போர்ட்' செய்து விடுகிறார்கள். ஆகவே உடனடியாக அனுமதி கொடுக்காமல், ஆராய்ந்து கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆந்திர அரசு நம்முடைய அரசைப் பார்த்து வருத்தப்பட்டுக்

(பிற்பகல் 5.40)

கொண்டிருக்கிறார்கள். 'உங்களுடைய அதிகாரிகளின் துணையோடு எங்கள் காடுகளிலிருந்து, எங்கள் மரங்களை ஏற்றிக்கொண்டு செல்கிறார்கள்' என்று சொல்கிறார்கள். அதையும் மீறி, இப்படி நடைபெற்றது. இன்றைக்கு அது குறித்து விசாரித்ததற்குப் பிறகு, அது எப்படியெல்லாம் நடந்து வந்திருக்கிறது என்பது தெரிகிறது. ஒரு லாரியோடு பிடித்திருக்கிறார்கள். அவனும் ஒத்துக்கொண்டிருக்கிறான். ஆனால் கோர்ட்டுக்குப் போனதற்குப் பிறகு, லாரியையும் விட்டு, சாதாரண அபராதத் தொகை விதித்து, அனுப்பியிருக்கிறார்கள் அவனைத் திருப்பி அனுப்பியவுடன், லாரியில் இருந்த மரங்கள் ஜப்பானுக்குப் போய்விட்டன. இப்படிப்பட்ட கொடுமையை சட்டத்தின் மூலம் நிறுத்துவதற்காக, இந்த மன்றத்திலே, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே மசோதா வரும். சந்தன மரம், சில்வர் ஓக், ரெட் சான்டர்ஸ், தேக்கு மரம் போன்ற விலை உயர்ந்த மரங்களை வெட்டுவது அல்லது கடத்துவது என்று எந்த முறையில் இருந்தாலும், அவைகளையெல்லாம் கடுமையான குற்றங்களாகக் கருத வேண்டும். சந்தன மரத்தை எந்த அளவு வைத்துக்கொள்ளலாம் என்பதற்கு, 'பொசஷன் ஆக்ட்' இருக்கிறது. மற்ற மரங்களுக்கு இல்லை. ஆனால் திடீரென்று மத்திய அரசு ரெட் சான்டர்ஸ் மரங்களுக்கு 'ஓபன் ஜெனரல் லைசன்ஸ்' என்று மாற்றி, ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி வாங்க வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். எனவே அவர்கள் இஷ்டப்படி ஏற்றுமதி செய்ய முடிகிறது. கட்டுப்பாடு இருந்தவரை, வனத் துறை அதிகாரிகளிடம் வந்து கொண்டிருந்தார்கள். 'ஆரிஜன் சர்ட்டிபிகேட்' வேண்டாமென்று சொன்னவுடன், அவர்கள் வனத் துறைக்கு வர வேண்டிய தேவையில்லை. வன இலாக்கா அதிகாரிகளும், அவர்கள் வருவதில்லை, அவர்கள் இஷ்டத்திற்கு அனுப்புவார்கள் என்று சொன்னார்கள்.

'திருட்டுத்தனமாக வெட்டி வரும் நடமாட்டத்தைத் தடுக்க சட்டம் வைத்திருக்கிறீர்கள், எனவே அப்படிக் கொண்டு வந்தால் தப்பு, அப்போது பிடியுங்கள்' என்று சொன்ன பிறகுதான் லட்சக் கணக்கான ரூபாய் அளவிற்கு ரெட் சான்டர்சைப் பிடித்திருக்கிறார்கள். மேலும் சந்தன மரங்களையெல்லாம் பிடித்துக்கொண்டிருக்கும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. பத்திரிகைகளிலே வருவது குறைவு. வராத அளவிற்கு மிக அதிகமாகப் பிடிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் இதற்காகத் தனியாகக் காவல் துறை வைக்க முடியுமா என்று கேட்டார்கள். வனத் துறைக்கென தனி விஜிலன்ஸ் பிரிவு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கே செய்திகள் கிடைக்கின்றனவோ அந்த இடங்களிலெல்லாம், தலைமையிடத்திலிருந்து காவல் துறையினர் நேரடியாகப் போய், அவைகளைக் கண்டு பிடிக்க காவல் துறையில் ஒரு பகுதி வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் எந்த அளவிற்கு இந்தத் திருட்டுக்களைத் தடுத்து, காடுகளைப் பாதுகாக்க முடியுமோ, அந்த அளவிற்கு, தீவிர முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏலக்காய் பற்றிச் சொன்னார்கள். அதிலும் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. இதைச் சொல்வதற்குக் காரணம், இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களிடத்திலே `அவர்கள் வருவார்கள். தயவு செய்து யாரும் அவர்களை அழைத்துக்கொண்டு வரக்கூடாது. ஏலக்காய் தோட்டத்தை தனியார்களுக்குக் குத்தகைக்கு விடுவதில்லை என்று அரசு முடிவெடுத்திருக்கிறது. நடுக் காட்டிலே ஏலக்காய் பயிரிட குத்தகை விட்டு, 20 ஆண்டுகள், 50 ஆண்டுகள் என்று பரம்பரை பரம்பரையான சொத்துக்களை மாற்றுவது போல், இதை மாற்றிக் கொள்கிறார்கள். 20 வருடங்களுக்கு 500 ரூபாய், ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் என்று குத்தகைப் பணம் செலுத்தி விட்டு, அதை அவர்கள் பிள்ளை, பெண்டாட்டி பெயரில், சொந்தச் சொத்து போல, மாற்றுகிறார்கள். ஒரு ஏக்கருக்கு எவ்வளவு கிடைக்கிறது என்று விசாரித்தால் தெரியும். இனிமேல் குத்தகை முடிந்தால், புதுப்பிப்பதில்லை என்று அரசு முடிவெடுத்திருக்கிறது. இருக்கிற குத்தகைகளை நீண்ட காலம் அனுபவித்து சம்பாதித்துவிட்டால், அதையும் திரும்பப்பெற சட்டத் துறையிடத்திலே ஆலோசனை கேட்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட முயற்சிகளிலே தீவிரமாக ஈடுபட்டிருக்கிறோம்.





மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, காணிக்காரர்கள் என்ற ஆதிவாசிகள் நடந்து போவதைத் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதை ஹைவேஸ் துறைக்கு மாற்ற வேண்டுமென்றும் சொன்னார்கள். அதிலேதான் பல சிக்கல்கள் உருவாகின்றன. அந்தப் பகுதியை Wild Life சரணாலயமாகப் பாதுகாத்து வருவதால், கண்டிப்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த இடங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கும் ஏழை மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு பாதகம் இல்லாமல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று தெளிவாக ஆணைகளைப் பிறப்பித்திருக்கிறோம். மேலும் குறைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளுவோம்.

அடுத்து, அம்பாசமுத்திரம் மருத்துவ மனைக்கருகில், வனத் துறைக்கு ஒரு கட்டிடம் இருக்கிறதென்று சொன்னார்கள். ஒரு காலத்திலே எல்லாப் பகுதிக்கும் சேர்த்து, அம்பாசமுத்திரத்தில் அப்படி இருந்திருக்கலாம். அது தேவையில்லை என்ற நிலைமை இருந்தால், அதைப்பற்றி உடனடியாகப் பரிசீலித்து, ஆஸ்பத்திரிக்கு அதைத் தருவதிலே எந்தவிதக் கருத்து வேறுபாடும் இராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் புயல் பாதுகாப்பிற்காக சவுக்கு மரங்களை வளர்க்க வேண்டுமென்றும், பாதுகாக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். அந்தத் திட்டம் சென்ற ஆண்டிலிருந்து, மத்திய அரசு நிதி உதவியோடு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. சென்னையிலே தொடங்கி ஏறத்தாழ கிழக்கு இராமநாதபுரம் கடற்கரைப் பகுதிகள் வரை இப்படி சவுக்கு மரங்களை, புயல் பாதுகாப்பிற்காக என்று வளர்ப்பதற்காக தனி அதிகாரியை நியமித்து, அவர்களின்கீழ் இந்தத் திட்டங்கள் துவக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் இதைப் போன்ற உங்களுடைய மேலான யோசனைகள் இந்தத் துறைக்குக் கிடைத்தால், அவைகளை நிச்சயமாக அமுல்படுத்துவோம். ஆனால் அதே நேரத்தில் உறுப்பினர்களைத் தேடிக்கொண்டு இந்தச் சட்டங்களால் பாதிக்கப்பட்டவர்கள் வந்தால், தயவு செய்து என்னிடத்தில் வந்து, மறுமுறையும் இதிலே இருக்கிற கடுமையைத் தளர்த்த வேண்டுமென்று யாரும் முயலக்கூடாதென்ற வேண்டுகோளை வைத்து, இந்த இரண்டு சட்ட முன்வடிவுகளையும் . . . .

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். இரண்டு முறை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் யாரும் உங்களை வந்து, இப்படிப்பட்ட சலுகைகளைக் கேட்க மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** காங்கிரஸ் கட்சி சார்பிலேயும் நிச்சயமாக யாரும் வர மாட்டார்கள்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** இதை நிறைவேற்றித்தருமாறு வேண்டி, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு, தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1978) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு, தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1978) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவைமுன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு, தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1978) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு, தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு, தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவைமுன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு, தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(3) தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) 'சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1978).**

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் (திருத்த சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

(பிற்பகல் 5.50)

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, மிகவும் அவசியமான அதே நேரத்தில் மிகவும் சர்ச்சைக்குரிய ஒரு மசோதாவாக இந்த நாடக நிகழ்ச்சிகள் திருத்த சட்ட முன்வடிவு வந்திருக்கிறது.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு தமிழகத்தினுடைய தலைநகரில் காணுகின்ற காட்சிகள் ஒரு வேளை இந்தச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டியதன் அவசியத்தை வேகப்படுத்தியிருக்கின்றதோ என்று கூட நான் நினைக்கின்றேன். பல இடங்களில் விளம்பரங்களைக் காண்கின்றோம். பொருள்களின் வியாபார விளம்பரங்களானாலும் சரி அல்லது சினிமாத் துறையினுடைய விளம்பரங்களானாலும் சரி ஒரு எல்லையைத் தாண்டி சென்று கொண்டிருக்கின்றன. அது நல்லதல்ல. கீழ்த்தரமான உணர்வுகளுக்கு விளம்பரங்கள் இடம் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, சமுதாயத்தைக் கேலியாக, கிண்டலாகக் கருதுகின்ற ஒரு அவல நிலைக்கு விளம்பரங்கள் ஆளாகிக் கொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நாகரிகம் முற்றியிருக்கின்றது, நாகரிகத்திலிருந்து நாம் தனித்து விட முடியாது என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால், சமுதாயத்தில் காணுகின்ற சீர்கேடுகளைக் காணாமல் கண்ணை மூடிக்கொண்டிருக்க முடியாது. சிலவற்றை நாம் ஏதேதோ நினைத்

@ 576C ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.





துக்கொண்டு, 'இப்படி இருந்தால் தான் அது அழகு, இப்படி இருந்தால் தான் அது ஆபாசமற்ற அழகு, இந்த எல்லையைத் தாண்டியவை எல்லாம் ஆபாசம்' என்று கூட நாம் வரையறுத்துக் கூற முடியாது. ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னதாக எதை ஆபாசம் என்று கருதினோமோ எதைக் கூடாது என்று எண்ணினோமோ அதையெல்லாம் இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கின்ற நிலையை நாம் காண்கின்றோம். அதையெல்லாம் தாண்டி இன்றைக்கு விளம்பரங்களுடைய வாயிலாக, குறிப்பாக அனுமதிக்கப்பட்ட விளம்பரங்களின் வாயிலாக, செய்துகொண்டிருக்கக் கூடிய அவலங்களுக்கு அளவேயில்லை. விளம்பரங்களின் அவல நிலை மிக அதிகமான அளவுக்கு முற்றிப் போய்க்கொண்டிருக்கிறது. அதிலே சினிமாத் துறை சம்பந்தப்பட்ட திரைப்பட விளம்பரங்கள் போட்டி போட்டுக்கொண்டிருக்கின்றன. அவர்களுடைய திரைப்படங்களில் வருகின்ற காட்சிகளை விளம்பரங்களாக ஆக்குகிறார்கள். பல நேரங்களில் படங்களில் வராத காட்சிகளை விளம்பரங்கள் ஆக்குகிறார்கள். அதையும் எப்படிப்பட்ட இடத்தில் விளம்பரபடுத்துகிறார்கள் என்பதை நாம் பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம். எங்கே ஜனங்களுடைய நடமாட்டம் அதிகமாக இருக்கின்றதோ, போக்குவரத்து நெருக்கடி அதிகமாக எங்கு இருக்கின்றதோ, அங்கெல்லாம் திரைப்படத்திலுள்ள காட்சிகளை விளம்பரப்படுத்துகிறார்கள். சில மாதங்களுக்கு முன்னதாக ஒரு விளம்பரத்தை ஒரு சினிமா கொட்டகையினுடைய வாசலில் நான் பார்த்தேன். இருபது வயதுக்கு உள்ளதாக இருக்கிற ஒரு பெண்ணினுடைய படத்தை பெரிய அளவில் கட் அவுட் கொண்டு வந்து, அந்தப் பெண்ணுக்கு உடையாக்கி ஸ்கர்டைப் போட்டு, அரைப் பாவாடை கட்டி அது காற்றிலே பறக்கின்றபோது, தூரத்திலே வருகின்றவர்கள் கூட தூரத்திலேயிருந்து கொண்டு வேடிக்கை பார்க்க, இன்னும் சிலர் அருகிலே நின்று நிமிர்ந்து பார்க்க, அங்கே ஜனத்திரள் கூட இப்படிப்பட்ட சமூகத்தைக் கேவலப்படுத்துகின்ற, அவமானப்படுத்துகின்ற அளவிலே விளம்பரதாரர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆபாசம் என்பது வேறு. அதைத் தாண்டி இப்படிப்பட்ட கேவலமான வேலையைச் செய்ய முடிந்திருக்கிறது. இன்றைக்கு இருக்கின்ற சட்டத்தின் அடிப்படையிலேயே பல நடவடிக்கைகளை அவர்கள் மீது எடுத்திருக்க முடியும். ஆனால் ஏறத்தாழ 2 மாத கால அளவிற்கு அந்த விளம்பரம் அப்படியே அந்த இடத்தில் இருந்துகொண்டிருந்த நிலையையும், அதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த நிலையையும் அங்கு வந்து போய்க்கொண்டிருந்த அத்தனை பேருடைய கண்களிலும் அந்த விளம்பரம் பட்டிருக்கிறது என்கிறதுமான நிலைகளையும் நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நாம் எத்தனை சட்டங்களைக் கொண்டு

வந்தாலும் கூட, அவற்றை நிறைவேற்றுகின்ற பொறுப்பு யாருடைய கையில் இருக்கின்றதோ அவர்கள் தங்களுடைய கடமைகளை உணர்ந்து செயல்பட வேண்டும். அப்படிச் செய்யவில்லையென்பதால், சட்டம் எந்த அளவிற்குக் கொண்டுவரப்பட்டாலும், அதைத் தாண்டி கடமைகளைச் செயல்படுத்தாத நிலைமைகளைக் காண்கின்றோம். அல்லது செயல்படுவது அவசியம் என்று வருகின்றபோது, வேண்டாதவர்களை அல்லது ஊரிலே எல்லாம் போலீசார் மாதக் கடைசியிலே மதுவிலக்கு வழக்குகளைப் போடுவார்களே,—ஏனென்று கேட்டால் புள்ளிவிவரம் அனுப்ப வேண்டும், குறைந்த அளவு இவ்வளவு வழக்குகள் வேண்டும், அதனால் போடுகிறோம் என்று சொல்லுவார்களே,—அதுபோல மாதம் ஒன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு என்று வழக்குகள் போட்டு நடவடிக்கை எடுக்கின்ற நிலையைத் தான் நாம் பார்க்கிறோம். அது அல்லாத இன்னொரு நிலையும் இருக்கிறது. ஆபாசம், அதைத் தொடர்ந்து 'பிளாக் மெயில் செய்வதை இன்றைக்குத் தொழிலாகக் கொண்டிருக்கின்ற பல பேரைப் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். பிளாக் மெயிலைப் பொறுத்தவரை, எந்த அளவுக்கு சராசரி மனிதனுடைய வாழ்வு பாதிக்கப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். எதைச் செய்தாலும் பரவாயில்லை என்று துணிந்து செய்வது என்பது வேறு. அதைத் தாண்டி நின்று ஒரு தொழிலாக, வியாபாரமாக பத்திரிகைகள் மூலம் அல்லது வேறு துறைகள் மூலம் 'பிளாக் மெயில்' செய்வது இன்றைக்கு தமிழகத்தில் பெருமளவுக்கு வளர்ந்துகொண்டிருக்கிறது. "இரண்டு பேர் நண்பர்கள். அதற்காக அவர்கள் இன்ன ஓட்டலில் சந்தித்தார்கள். அவர்கள் இப்படி இப்படி இருந்துகொண்டிருந்தார்கள்" என்று பத்திரிகையில் போட்டு 'பிளாக் மெயில்' செய்கின்ற நிலை இருக்கிறது. இதுபற்றி மேலும் விவரங்கள் நாளை வெளி வரும் என்கின்ற எச்சரிக்கை வேறு. இது ஒரு பக்கம் இருக்க, பொது வாழ்வில் இருக்கின்றவர்களைப்பற்றி எழுதுகின்ற நிலையும் இன்றையதினம் இருக்கிறது. அதற்கு இன்றைக்கு யாரை வேண்டுமானாலும் பயன்படுத்துகிறார்கள். சந்திப்பவர்கள் இரண்டு பேரும் பெண்களாக இருந்து விட்டால், பரவாயில்லை. அல்லது இரண்டு பேரும் ஆண்களாக இருந்துவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் ஒருவர் பெண்ணாகவும் இன்னொருவர் ஆணாகவும் இருந்துவிட்டால், அவர்களுடைய பத்திரிகையின் வியாபாரத்தை அற்புதமாக அதிகரிக்க 'பிளாக் மெயில்' மூலம் காரியங்களைச் சாதிப்பதைப் பார்க்கிறோம். அதைப்பற்றிக் கேட்டால், அதிலே நான் எங்கே ஆபாசமாக எழுதினேன் என்கின்ற வாதம் எழுப்பப்படுகிறது. இப்படிப்பட்ட நிலை இன்றையதினம் தமிழ் நாட்டிலே வளர்ந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக சினிமாத் துறையில் இது மிக மிக அதிகம். நான் இப்படிச் சொல்வதால் எனக்கு அதில் அனுபவம் உண்டோ என்று உறுப்பினர்கள் கேட்கக்கூடும். எனக்கு இதில் எந்தவித அனுபவமும்



இல்லை. வெளியிலேயிருந்து இவற்றையெல்லாம் பார்த்திருக்கிறேன். ஆனால் இந்த விஷயத்திலே உள்ளே ஆழமாகப் புகுந்து சென்ற அனுபவம் எனக்கு இல்லை. 'பிளாக் மெயில்' பத்திரிகைகளின் மூலமும், திரைப்படங்கள் மூலமும் மிக மிக அதிகமாக வளர்ந்துகொண்டிருக்கின்றது. அவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால், இப்பொழுது இருக்கின்ற சட்டங்கள் மட்டுமே போதுமா என்றால் போதவில்லை. ஆனால் தடுத்து நிறுத்துவது என்கின்ற நல்ல உணர்வு இருந்தால், நிச்சயமாக இன்றைக்கு இருக்கின்ற சட்டங்கள் போதும். அதையெல்லாம் தாண்டி, அதை நிறைவேற்றுவதிலே ஏதேதோ சங்கடங்கள் இருக்கின்றன. இந்தச் சட்டம் ஒருவேளை இப்படி நடக்கின்ற நிலைகளையெல்லாம், செயல்களையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு உதவுமேயானால், உள்ளபடியே இது வரவேற்கத் தக்க ஒன்று என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல இன்றையதினம் நாடகங்களிலே இருபொருள்பட வார்த்தைகள், satire , பயன்படுத்தப்படுகின்றன. அப்படிப்பட்ட வார்த்தைகளை வேடிக்கையாகக் கையாள்வதும் அதில் ஒன்றாகும். அதுபோன்ற நாடகங்கள் சில நேரங்களிலே தடைசெய்யப்பட்டதும் உண்டு. அதிலே மிகக் கடுமையாக உள்ளே நுழைந்து கொண்டிருப்பதிலே பலனில்லை. இயற்கையாக மனிதனுக்குச் சில உணர்வுகள் உண்டு. அதற்கு நாம் மதிப்பளித்துத்தான் ஆக வேண்டும். வாழ்க்கையிலே சிரிப்பு இல்லாமல், கேலி இல்லாமல், வேடிக்கை இல்லாமல் வெறும் மெஷின்களைப்போல், மிருகங்களைப் போல் வாழ்ந்து கொண்டிருப்பது என்கின்ற நிலை வேறு. satire என்பது மனிதனைக் கலகலப்பாக இருக்க வைப்பது என்கின்ற அளவிலே அது அனுமதிக்கப்படும், போக்கப்பட மாட்டாது என்கின்ற ஒரு உறுதிமொழியினை மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது தருவார்கள் என்பதில் எனக்கு எந்தவித சந்தேகமுமில்லை.

ஆபாச நடனங்களைப் பொறுத்தவரை, எங்கேன்று ஆடினால் அது ஆபாசமாகக் கொள்ளப்படுகிறது என்கின்ற நிலை இருக்கிறது. சிலர் தெருக்களிலே ஆடுகின்றார்கள், சிலர் சந்தையிலே ஆடுகின்றார்கள், இன்னும் சிலர் பணக்காரச் சந்தையிலே ஆடுகின்றார்கள். பணக்காரச் சந்தையிலே ஆடுகின்றவர்கள் தெருக்களிலே ஆடுகின்றவர்களை விட மிக மிகக் கேவலமாக, ஆபாசமாக ஆடுவதாகச் சொல்லுகிறார்கள். பணக்காரச் சந்தையிலே ஆடுவது என்பது அனுமதிக்கப்பட்ட ஒன்றாக இருக்கிறது. சட்டங்களை, அதனுடைய சட்டப் பிரிவுகளை, அதிகாரங்களைக் கையில் வைத்து அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கின்ற பொறுப்பினை ஏற்றிருப்பவர்கள்

எல்லோம் கூட, இந்தப் பணக்காரச் சந்தையிலே போய் அமர்ந்துகொண்டு ஆடுகின்றவர்களைப் பார்க்கின்ற நிலை இருக்கிறது. இது வேண்டுமா, இல்லை வேண்டாமா என்பது வேறு. இப்படிப்பட்ட நிலைமைகள் இன்றையதினம் நாட்டிலே இருந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒருவர் கிராமத்திலே நடக்கின்ற டான்சைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். கிராமத்திலே ஆடுகின்றவள் ஆபாசமாக ஆடினாள் என்பதற்காகப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். அந்த நபர் சென்னைக்கு வருகிறார். சென்னையிலே சாப்பிடலாம் என்று ஒரு ஹோட்டலுக்குச் செல்கிறார். சாப்பிடச் சென்றவர் அப்படியே ஓட்டலில் ஒரு நடனத்தைப் பார்க்கிறார். "கிராமப்புறத்திலே நல்ல மாதிரியாக ஆபாசமில்லாமல் ஆடியவர்களையெல்லாம் பிடித்துச் சென்றுவிட்டார்கள். ஆனால் இங்கே மிகவும் படு மோசமாக ஆடுகிறார்களே, இவர்களை எப்படி அனுமதிக்கிறார்கள்?" என்று அவர் கேட்கிறார். சென்னையிலே மட்டும் எந்தச் சட்டத்தின்கீழ் இதை அனுமதிக்கிறார்கள் என்கின்ற கேள்வியை அவர் எழுப்புகிறார். காரணம் இது மேடையிலே ஆடுகிற ஆட்டம். இதுபோன்ற

(பிற்பகல் 6.00)

டபுள் ஸ்டாண்டர்டு கூடாதென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆளுக்குத் தகுந்தாற்போலவும், நிலைமைக்குத் தகுந்தாற் போலவும், வாய்ப்புகளுக்குத் தகுந்தாற்போலவும் செயல்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். அதைப் போலவே ஆபாசம் என்பதேகூட ஒருவருக்கு ஒருவிதமாகவும், மற்றொருவருக்கு மற்றொரு விதமாகவும் இருக்கக் கூடாது.

நமது நாட்டு நடனங்களைப் பொறுத்தவரையில், நாட்டியத்திற்கு என்று விதிக்கப்பட்டுள்ள இலக்கணப்படி நான் ஆட வேண்டும் என்றும், அந்த இலக்கண வரம்புகளை மீறிச் செல்லும்போதுதான், அது ஆபாசமாகிறது என்றும் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். சிவபெருமானோடு போட்டியிட்டு அன்னை ஆடிய ஆட்டமும், அந்த ஆட்டத்தில் ஒரு நிலைக்கு மேல் போக முடியாமல் சிவனுக்குத் தான் தாழ்ந்துவிட்டதாக அன்னை ஒப்புக்கொண்டாள் என்ற நிலையையும் நாம் படித்திருக்கிறோம். அப்படி சிவபெருமானுடைய முத்திரைகளையும் தாண்டி என்னாலே ஆட முடியும் என்று இன்றையதினம் ஆடிக்கொண்டிருக்கிற ராஜநர்த்தகிகளை நாம் பார்க்க முடிகிறது. அது வெறும் ஜிம்னாஸியம். அங்கே நடனமே கிடையாது என்று பலரும் சொல்கிறார்கள். அந்த அளவுக்கு ஆபாசம் என்பது ஆளுக்குத் தகுந்தாற்போல், இடத்திற்குத் தகுந்தாற்போல் அனுமதிக்கப்படுவதால், அரசாங்கம் இதற்கு





'கைடு லைன்ஸ்' (நெறிமுறைகளை) வகுத்துக் கொடுத்து இந்த நடனங்கள் இப்படிப்பட்ட முறையிலேதான் இருக்க வேண்டுமென்று சொன்னால்கூட, நல்லதென்று நான் கருதுகிறேன்.

தெருக்கூத்து, நாடகங்களைப் பொறுத்தவரையில், அவைகள் இரண்டுமே தமிழகத்தின் பண்டைய கலைகளாகும். இன்றையதினம் அவைகள் மிக வேகமாக நசித்துக்கொண்டு வருகின்றன அல்லது அழிந்துகொண்டு வருகின்றன என்பதைப் பார்க்கிறோம். தெருக்கூத்து என்பது சில இடங்களில்தான் நடத்தப்பட்டு வருகிறது. தெருக்கூத்து நடத்த உரிய வாய்ப்புகளும் வசதிகளுமில்லை என்பதோடு, அந்தக் கலையில் ஈடுபட்டுள்ளவர்களை ஊக்குவிப்போர் யாருமில்லை என்ற நிலைதான் இருக்கிறது. இரவு 9 மணிக்குத் தொடங்கி மறுநாள் காலை சூரியோதயம் ஆகும்வரை நடைபெறும் தெருக்கூத்து அநேகமாக இன்றையதினம் நசிந்துவிட்டது என்றுதான் நான் நினைக்கிறேன். கிராமியக் கூத்தான தெருக்கூத்தில் சில வசனங்கள், சில வாசகங்கள் அல்லது சில பாடல்கள் கொஞ்சம் பச்சையாகவும், சிலருடைய நாத்திலிருந்து பார்க்கிறபோது ஆபாசமாகவும் இருப்பதாக எண்ணப்படலாம். ஆனால் இத்தகைய தெருக்கூத்துக்கள் கிராமப் பகுதிகளில் தேவைப்படுகின்றன என்பது மட்டுமல்ல, அந்தப் பகுதிகளைத் தவிர்த்துவிட்டு நடத்த வேண்டுமென்றால், அது தெருக்கூத்தாகவே இருக்காது. அதைப் பார்க்க யாரும் போக மாட்டார்கள். எனவே இந்தச் சட்டம் காரணமாக அத்தகைய கலைகள் அழிந்துவிடவோ நசித்துவிடவோ நிலைமைகள் உருவாகாமல் இருக்க வேண்டும். அதற்குரிய உத்தரவாதத்தை அரசு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, அந்தக் கலைகளில் ஈடுபட்டவர்களுக்குத் தேவையான வாய்ப்புகள் இல்லாமலிருப்பதால், பெரும்பாலோர் வறுமையில் உழன்றுகொண்டிருக்கிறார்கள். பெரிய வசதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களுக்கு ஆயிரமாயிரமாக நிதி உதவி வழங்கிக் கொண்டிருக்கிறோம். இந்தக் கலையில் ஈடுபட்டு இன்றையதினம் வறுமையில் வாடிக் கொண்டிருக்கிற சிலருக்காவது அரசாங்கம் முடிந்த அளவுக்கு நிதி உதவி செய்ய முன்வர வேண்டும். அதன் மூலம் இந்த அரசாங்கத்தின் மதிப்பு உயரும் என்பதையும் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நாடகங்களைப் பொறுத்தவரையில், வசனங்களை 'சென்சார்' செய்வது போல் அதிகாரிகளிடம் முன்கூட்டியே காட்டி அவர்கள் அதைப் பார்த்துப் பார்த்த பிறகுதான், அந்த நாடகத்தை நடத்த அனுமதிக்கப்படுவார்கள் என்ற நிலை இருக்கிறது. சில அதிகாரிகளிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைப்பதன் காரணமாக ஒரு சில சங்கடங்களும் ஏற்படுகின்றன. அவர்களுக்கு இருக்கிற

[திரு. க. இராமமூர்த்தி] [1979 மார்ச் 22]

வேறுபல பணிகள் காரணமாக, அவர்களால் இந்தப் பணியை ஒரு கலை உணர்வோடு பார்த்து அங்கீகரிப்பது என்பது சுலபமல்ல. இரண்டு நாட்களுக்கு முன்னாலே நாடகம் நடத்த அட்வான்ஸ் கொடுக்கிறார்கள். நாடகம் அல்லது தெருக்கூத்து நடத்துகிறவர்கள் 2, 3 நாட்களில் உரிய அதிகாரிகளிடம் வசனத்தைக் காட்டி, அவர்களுடைய அனுமதியைப் பெறுவது என்பது அவ்வளவு சுலபமல்ல. பல நேரங்களில் டிராமாக்களுக்குரிய அனுமதி பெற வேண்டுமென்பதற்காகவே வசனங்களைப் புதிதாக எழுத வேண்டிய நிலை ஏற்படுகிறது. காரணம் இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிற பெரும்பாலான கலைஞர்கள் நாடகத்திலே வரும் வசனங்களையெல்லாம் மனப்பாடமாகவே கற்றவர்கள். எனவே அவர்கள் அனுமதி பெறுவதற்காக நாடக வசனத்தைத் தனி நோட்டுப் புத்தகத்தில் எழுத வேண்டிய அவசியத்திற்குள்ளாகிறார்கள். அவர்கள் இயற்கையாகவே பெற்றிருக்கிற வறுமை காரணமாகவும், அவர்களுக்குப் பெரிய இடத்துச் சிபாரிசு பெறுகிற வாய்ப்பில்லாத காரணத்தாலும்,' அதிகாரிகளுக்கு ஏற்படுகிற திடீர்ப் பணிகள் காரணமாகவும் குறிப்பிட்ட நாட்களுக்குள்ளாக நாடகம் நடத்த அனுமதி பெற முடியாது பல ஊர்களில் உரிய நேரத்தில் நாடகம் நடத்த முடியாத நிலை ஏற்படுகிறது என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்கள் பகுதியில் துரோபதையம்மன் கோயில் உற்சவத்தையொட்டி அவர்கள் நாடகம் நடத்த அனுமதி பெறுவதில் ஏற்படுகிற சங்கடங்களை நான் அறிந்த காரணத்தால், இதைச் சொல்ல விரும்புகிறேன். எனவே அதிகாரிகளிடம் அனுமதி பெறுவது என்பதை ஒரு கடுமையான காரியமாக செய்துவிடக் கூடாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். நாடகங்களில் நாம் கேட்கிற வசனங்களை நாம் வெகு சீக்கிரத்தில் மறந்துவிடுகிறோம். அந்த வசனங்களில் அசிங்கமாக இருந்தாலும் அல்லது வேறு மாதிரியாக இருந்தாலும், அவைகளை நினைவில் நிறுத்திக்கொள்பவர்கள் மிகக் குறைவு. உண்மையாகவே ஆபாசமான வசனங்களை நிரந்தரமாகச் சினிமாக் காட்சிகளில் நாம் தாங்கிக் கொண்டிருக்கும்போது, நாடகத்தில் வந்துபோகிற வசனங்களை ஏதோ ஆபாசமான வசனங்கள் என்ற முறையில் கட்டுப்படுத்திக்கொண்டிருப்பது அவசியமான ஒன்றாக எனக்குத் தெரியவில்லை. இதைப்பற்றி விரிவான சட்டமொன்றும் கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதில் இதைப் போன்ற குறைகளுக்குப் பரிகாரம் தேட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இன்னும் 5 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். பிறகு ஒரு சட்ட முன்வடிவும் இருக்கிறது. உறுப்பினர் விரைவில் முடித்துக்கொள்ள வேண்டும்.



1979 மார்ச் 22]

**திரு. க. இராமமூர்த்தி:** வேறு எந்த உறுப்பினரும் இல்லை என்று நினைத்துப் பேசிக் கொண்டிருந்துவிட்டேன்.

ஆபாச விளம்பரங்களைப் பொறுத்த வரையிலும், அவைகளுக்கான 'டெபினிஷன்' (விளக்கம்) குறித்து மிகத் தாராளமான முறையில் அணுக வேண்டும் என்று சொல்லுகிற நேரத்தில் சாதாரண கிராமப்புறத்தில் நடைபெறுகிற நாடகங்களின் வசனத்தை 'சென்சார்' செய்வது என்று பாரபட்சமான நிலையில் அணுகுவது என்ற நிலையைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேண்டுமானால் நாடகத்திலே வரும் வசனங்களை 'சென்சார்' செய்வதற்கு என்று ஒரு தனி சென்சார் போர்டேகூட வைக்கலாம். அந்தத் துறையில் ஈடுபட்டவர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைக்கலாம். தற்போது அதிகாரிகள் தங்களுக்கிருக்கிற பல்வேறு பணிகளின் காரணமாக அவைகளுக்கிடையில் இந்தப் பணியையும் ஒரு வேலையாகக் கருதிச் செய்ய வேண்டுமென்று திணிக்கிறபோது, அதன் காரணமாகத் தாமதங்கள் ஏற்படுகின்றன அல்லது 'கில்லெட்டின்' செய்வதுபோல், அவர்கள் இஷ்டப்படி அங்கொரு 4 வரியும் இங்கொரு 4 வரியும் எடுப்பது என்ற நிலைமைகள் உருவாகின்றன. 'சட்டயர்' என்று சொல்லப்படுபவைகளையெல்லாம்கூட இந்த அடிப்படையில் கொண்டுவந்துவிடக்கூடாது என்பதை மீண்டும் ஒரு முறை சொல்லி, ஆபாசத்தையும் தாண்டி மிக மோசமாக எழுதுவது, 'பிளாக் மெயில்' பண்ணுவது போன்ற நிலைமைகள் தலை விரித்தாடிக் கொண்டிருக்கின்றன என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இவைகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய நிலையில் உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அடுத்துப் பேச இருக்கிற உறுப்பினர்கள் 10 நிமிஷங்களில் முடித்துக்கொள்ள வேண்டும்.

(பிற்பகல் 6-10)

*** திரு. ஆ. நல்லசிவன்:** தலைவர் அவர்களே, நான் இந்த மசோதாவை ஆதரிக்கிறேன். அதே நேரத்தில் அதையொட்டி சில விஷயங்களை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். நான் குறிப்பாகச் சொல்ல விரும்புவது நாடகங்களை நடத்த, அதற்கான வசனத்திற்கு முன்கூட்டியே அனுமதி பெறவேண்டும் என்ற விஷயம் ஒரு பெரிய சிக்கலான விஷயம். புதிதாகத் தோன்றக் கூடிய பல இளம் கலைஞர்கள் அமைக்கக்கூடிய கலை இலக்கிய மன்றங்களிலே அவர்கள் ஆர்வத்தோடு நாடகம் நடத்த முன்வரும்போது, அவர்கள் நாடகத்திற்கென்று தயாரிக்கப்படும் 'ஸ்கிரிப்ட்'க்கு முன்

கூட்டியே அனுமதி பெற வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். அவ்வாறு அவர்கள் தயாரிக்கும் அந்த 'ஸ்கிரிப்ட்'-ஐக்கூட கொடுத்து முன் அனுமதி வேண்டும் என்று கேட்கும்போது, அதைப் பரிசீலித்து உடனடியாக அனுமதி கொடுக்கத் தக்க அளவுக்கு திறமையடைத்தவர்கள் இருக்கிறார்களா என்பது சந்தேகத்திற்கு உரிய ஒன்று. இந்தப் பணிக்கு இப்போது யாரை நியமிக்கிறார்கள் என்று பார்த்தால், இப்போது நியமிக்கப்படுபவர்களுக்கு ஒரு கலை ஞானம் அவசியம் இல்லை. கலையில் ஒரு பிடிப்பு அவசியம் இல்லை, அவர்களை நியமிக்கும்போது, அவர்களுக்கு என்று எந்தவிதமான டெஸ்டும் நடத்தப் படுவதில்லை. நாடகத்தில் பங்கேற்கும் கலைஞர்கள், அந்த நாடகத்திற்குரிய வசனத்திற்கு அனுமதி வேண்டுமென்று கேட்கிறபோது, அந்த அனுமதி வழங்குவதற்கென்று அதிகாரிகளைப் போடும்போது, தகுதியுள்ளவர்களுக்குத் தான் அந்தப் பதவியைக் கொடுக்க வேண்டும். அதற்குத் தேவைப்படுகின்ற 'குவாலிஃபிக்கேஷன்' அவருக்கு இல்லை என்றால், அது ஒரு பெரிய சிக்கலை ஏற்படுத்தும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கூட சொன்னார்கள். சென்சார் போர்டு போட வேண்டுமென்றால், ஜில்லா மட்டத்திலே அது நடைபெற முடியாத ஒன்று. இப்போது நடக்கும் ஆபாச நாடகங்களைப் பார்த்தால் கலை நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கும் நிலைமைகளைப் பார்த்தால், இதைவிட ஆபாசம் என்று சொல்லத்தக்க அளவுக்கு வேறு ஒன்றும் இருக்க முடியாது. புதிதாக வருபவர்கள் இந்த அளவுக்கு ஆபாசமாக இருக்க மாட்டார்கள். புதிதாக நாடகம் நடிப்பவர்கள், அனுமதி பெறாமல் நடிக்கும்போது, அவர்களது நாடகத்திலோ, வசனத்திலோ ஆபாசம் என்று உங்களுக்கு ரிப்போர்ட் வந்தால், இனிமேல் அனுமதியில்லாமல் நடிக்கக்கூடாது என்று சொல்லுங்கள். அப்படியில்லாமல், அவர்கள் நடிக்கும் முன்பே அந்த வசனங்களை 'சென்சார்' செய்தால், அல்லது அனுமதி மறுத்தால் அந்த இளைஞர்களின் ஆர்வத்தைத் தடுக்கிறார்கள் என்று தான் நான் சொல்வேன். எங்களுடைய அனுபவத்தைச் சொல்ல வேண்டும். சில நேரங்களில் இந்த வசனத்தைத் தயாரிக்க ஒரு ஜில்லாவிலே இருக்கக்கூடிய கலெக்டருக்கு அனுமதிக்காக அனுப்புகிறோம். அவர் அனுப்பிவிடுகின்ற வசனத்திற்கு அனுமதி அளிக்கிறார். ஆனால், வேறொரு ஜில்லாவிற்குப் போகும்போது, அங்குள்ள கலெக்டர் அந்த வசனத்திற்கு அனுமதி மறுக்கிறார். அங்கே நாடகத்தை நடிக்க முடியவில்லை. ஒரு மாவட்டத்திலே இருக்கக்கூடிய கலெக்டரின் கலாரசனை ஒருவிதமாக இருக்கிறது. அதே நேரத்தில், இன்னொரு மாவட்டத்திலே இருக்கக்கூடிய கலெக்டரின் கலாரசனை வேறுவிதமாக இருக்கிறது. ஆகவே, இந்தக் குழப்பங்களை அகற்ற வேண்டுமென்றால், முதலிலே நாடகத்திற்கு அனுமதி தேவையில்லை என்று



விட்டுவிடுங்கள். அரசில் எவ்வளவோ அமைப்புகள் இருக்கின்றன. 'இன்பர் மேஷன் அண்டு பப்ளிசிட்டி' என்று மாவட்டம் பூராவும் வைத்திருக்கிறீர்கள். அவர்களிடம் சொல்லி கண்காணிக்கச் செய்து நாடகம் ஆபாசம் என்று தகவல் வந்தால், அனுமதியைப் பெறும்வரை நிறுத்தி வைக்கச் செய்யுங்கள். இதுதான் என்னுடைய அபிப்பிராயம். ஆகவே, முன்கூட்டியே 'சென்சார்' செய்ய வேண்டுமென்ற விதியைத் தளர்த்த வேண்டும்.

அடுத்தபடியாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னது போல, போஸ்டர்களில் இருக்கும் ஆபாசத்தோடு யாரும் போட்டி போட முடியாது. அவ்வளவு தூரத்துக்கு அது வந்துவிட்டது. சினிமாப் படம் போட்டால், பலவிதமான கவர்ச்சியாக 'போஸ்' என்று சொல்லி, கவர்ச்சிகரமாக ஆபாசமாகப் போட்டால்தான் படம் ஓடும் என்ற நிலை இன்றைக்கு இருக்கிறது. அதுமட்டுமல்ல, கவர்ச்சியாகப் போடுவதிலே யார் திறமையானவர்கள் என்று போட்டி போட்டுக்கொண்டு போடுகிறார்கள். புதிதாக வரும் கலைஞர்கள் இந்த வழியிலே தான் அறிமுகமாகி வருகிறார்கள். நாம் இதைத் தடுப்பதற்கு என்ன செய்யப் போகிறோம் என்பது தெரிய வில்லை. இதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கம் இந்த ஆபாசங்களை ஒழிக்க நடவடிக்கை எடுத்தால், எங்களைப் போன்றவர்கள் உறுதுணையாக இருப்போம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எழுத்திலே இப்போது அசிங்கம் இருக்கிறது. இப்போது மஞ்சள் பத்திரிகை என்று கூறப்படும் பத்திரிகைகள் எல்லாம் இருக்கின்றன. அந்தப் பத்திரிகைகளையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டும். அதே சமயத்தில் நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சர்க்காருக்கு சம்பந்தப் பட்டவர்கள், சர்க்காராலே கௌரவிக்கப்படுபவர்கள், அதிகாரத்திலே இருப்பவர்களே துதிபாடிக்கொண்டிருக்கிறார்களே, அவர்கள் இந்த ஆபாசங்களுக்குத் துணையாக இருக்கக்கூடாது, ஆபாசமான முறையிலே எழுதக்கூடாது என்று அரசு தடை விதிக்க வேண்டும். அவர்கள் மிகுந்த சந்தர்ப்பவாதிகள். முதலமைச்சராக இருக்கும்போது போற்றுகிறார்கள். எதிர்க் கட்சித் தலைவராக வரும்போது தூற்றுகிறார்கள். இப்படி அரசால் மதிக்கப்படுபவர்கள், கௌரவிக்கப்படுபவர்கள் எழுதும்போது, third rate, fourth rate-க்குக் கீழே போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு தக்க முயற்சி எடுத்து இந்த மஞ்சள் எழுத்தைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ் நாட்டிலே இந்த எழுத்து உலகத்திலே இருப்பவர்கள் நல்ல முறையில் எழுத வேண்டும். கீழ்த்தரத்துக்குப் போகக் கூடாது. அதற்கு இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு,

இந்தச் சட்ட முன்வடிவிலே இருக்கும் நோக்கத்தை, வரிகளை ஆதரித்து, தமிழ் நாட்டிலே இந்தமாதிரியான ஆபாசத்தை ஒழிக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

* THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI. Hon: Deputy Chairman, I am very happy to support this very valuable amendment that has been brought forward. While sub-clause (vi) mentions " is grossly indecent, or is scurrilous or obscene or intended for blackmail ", I would like to suggest that the following words should also be added, viz., " of obscene posters, songs, dialogues, titles, etc. ". These are definitely lowering the morals. All these points should also be included in this clause so that it may be wide-based and it may be properly enforced. Just before I make my speech, the hon. Members who spoke before me had made different suggestions about a Board of Censors. I would like to reiterate it because as I was gathering ideas, I was thinking of suggesting a committee to censor attached to the Commissioner of Police. When the first performance is given, the Commissioner of Police has to give the permission for exhibition. For recurring performances, the Dramatists merely refer to the number of the order and they go on performing it at different places. To perform this function of the Commissioner, I feel that a Committee could be appointed and the Committee should be composed of a social worker, preferably a woman social worker, a dramatist of high order, a writer who believes in writing good dramas—because there are many writers who are of repute but who, when they write stories in very popular magazines, lower the standard of morality and make a lot of obscene suggestions. Such people should not be there and a representative from the Corporation and in the district towns, a representative who is to give permission for posters should be brought into this committee and the first performance of every drama should be exhibited before this Committee. They must give a guarantee that when there are repeat performances, such objectionable or obscene portions or songs would be eliminated. If anybody breaks the law, they will have to face the consequences. I feel that such restrictions will be a curb on

(பிற்பகல் 6-20)

obscenity in many ways. We, especially the women, are very unhappy when we read in the papers, day after day, about incidents of rape and attacks on women. Very recently, there were





disquieting reports about such incidents in U.P. Therefore, I would again appeal to the Education Department that the arts of self-defence like Judo and Karate should be made compulsory in the women's physical education programme. It is very disquieting to note that some cinemas and dramas are the cause of such evil acts and obscenity. When you show a hero, you want to show him as the best man and the Villain is shown as the embodiment of all evil. When such things are shown and glorified, naturally it has its effects on the young minds and their attention is diverted to do wrong things. In advertisements, I do not know why the moral of women should be lowered. In advertisements, this should be banned. I know no woman would like to have such display of vulgarity.

Sir, mention was made here about the exhibition of posters. In this connection, I would like to pin-point one thing and I hope the Hon. Minister would agree with me. At the Censor Board, when the rush-scenes are shown, the vulgar figures depicted in the posters are not exhibited. Naturally, the Censor Board, therefore, say that they have not passed such obscenic pictures. It is for advertisement that stills are taken and exhibited in posters. The Corporation is in the hands of the Government. Therefore, if the Corporation does not give permission for exhibition of such obscene posters, obscenity could be avoided. Our Hon. Minister has very often brought forward many progressive amendments and as he is very respinsive to very good suggestions. I am sure he will definitely see that the Corporation does not give permission to exhibit vulgar posters. With these words, I would like to state on my own behalf and on behalf of women that this Amending Bill is most welcome. It is going to be a very refreshing and forward-looking Act because we are now having the Children's International Year and we hope such progressive amendments brought during the year will not have an adverse effect on young minds.

Thank you very much.

* திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பற்றிச் சில கருத்துக் களை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய மாண்பு மிகு உறுப்பினர்கள் எல்லாம் எவ்வாறு தங்களுடைய உணர்ச்சிகளை வெளிப் படுத்தினார்களோ அதே உணர்ச்சிகளை நானும் வெளியிடக்கூடிய நிலையில்

இருக்கிறேன். ஆனால் ஒன்றை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆபாச உணர்வுகளைத் தூண்டக் கூடிய வகையில், கீழ்த்தரமான உணர்வுகளை தூண்டக்கூடிய வகையில், மிகவும் தரக்குறைவான உணர்வுகளைத் தூண்டக் கூடிய வகையில், ரிக்கார்ட் டான்ஸ் என்று சொல்லுவார்களே அதில் மட்டும் அல்லாமல், திரைப் படங்களிலே, இலக்கியங்களிலே, புத்தகங்களிலே, பெரிய எழுத்தாளர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே அவர்கள் எழுதக் கூடிய புத்தகங்களிலே கூட நாம் வேதனைப்படத்தக்க அளவுக்கு ஆபாசம் வளர்ந்திருப்பதை நாம் காண்கிறோம். நகரங்களில் திரைப்பட போஸ்டர்கள் மூலமாகவும், வாழ்க்கையிலே கலை, கலை என்று வர்ணித்துக் கொண்டிருக்கிறோமே அந்தக் கலையிலேயும் இந்த ஆபாசம் ஊடுருவிப் போய் இந்த சமுதாயத்தையே நாசமாக்கக் கூடிய வகையில் எந்த அளவுக்கு வளர்ந்து போயிருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். குறிப்பாக, அண்ணா சாலையில் இருக்கிற திரைப்பட பானர்கள், பொது மக்களுடைய, மாணவர்களுடைய, இளைஞர்களுடைய உணர்வுகளைத் தூண்டக் கூடிய வகையிலே இருக்கின்றன. இது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கக் கூடிய வகையிலே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். என்ன காரணத்தாலோ அது நிராகரிக்கப்பட்டு விட்டது. ஒரு வேளை இந்தச் சட்ட முன்வடிவின் மீது பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும் என்பதாலோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. அண்ணா சாலையில் இருக்கிற போஸ்டர்கள், பானர்கள், கட்-அவுட்டுகள் எல்லாம் மிகவும் கீழ்த்தரமான அளவில் எப்படி பாதையில் சென்று கொண்டிருக்கிறவர்களுடைய கவனத்தையும், வாகனங்களை ஓட்டுகிறவர்களுடைய கவனத்தையும் திசை திருப்பக் கூடிய அளவுக்கு இருக்கின்றன என்பதை, சந்தேகம் இருர்தால், வேண்டுமென்றால் ஒரு சர்வே எடுத்துப் பார்க்கலாம். என்னுடைய கவலையெல்லாம் இந்தப் போஸ்டர்கள், பேனர்கள் எல்லாம் எந்த அளவுக்கு இளைஞர்களை, மாணவ, மாணவியர்களை, குழந்தைச் செல்வங்களை அவர்களுடைய உள்ளங்களைப் பாழ்படுத்துகின்றன என்பதுதான். அவைகள் எல்லாம் இன்னும் அப்படியேதான் இருக்கின்றன. இந்த நேரத்திலே சென்றால் கூட, அந்தக் காட்சியைப் பார்க்க முடியும். இதையெல்லாம் எப்படி நாம் அனுமதித்துக் கொண்டிருக்கிறோம் என்பது புரியவில்லை. முன்பு ஒரு முறை நான் சொன்னது போல, அதிகாரிகள் திறமை மிக்கவர்களாக இருந்தால், சட்டத்தில் ஓட்டைகள் இருந்தால்கூட அதை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். மிகச் சிறந்த சட்டமாக இருந்தாலும், திறமை குறைந்த நாணயம் குறைந்த அதிகாரிகளால் அவற்றைச் சரியாக நிறைவேற்ற முடியாது. ஆகவே



இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தியே இந்த ஆபாசங்களைக் காவல் துறையினர் தடுத்திருக்க முடியும். இதிலே மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழ் நாட்டில் உள்ள எழுத்தாளர்கள் எழுதிய இரண்டு புத்தகங்கள் தகுதியுடையது அல்ல என்று மத்திய அரசு கல்வி இலாக்காவினால் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை நினைக்கும்போது, வேதனைப்படத்தக்க சூழ்நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட ஆபாசமான புத்தகங்களை, மாணவர்கள் இரகசியமாகப் படிக்கிற காலம் போய், இப்போது பகிரங்கமாகவே படிக்கிற நிலைக்கு வந்துவிட்டார்கள். பெரியவர்களிடையிலேயே, எது ஆபாசம், எது ஆபாசமில்லை என்ற விவாதம் முற்றுப் பெறாத காரணத்தால், இளைஞர்கள் பகிரங்கமாகவே படிக்க ஆரம்பிக்கிறார்கள். 'Adults only' படங்களை, அடல்ட்ஸ் வயதிற்கும் குறைவாக உள்ளவர்கள் எல்லாம் பார்க்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை அனுமதிக்கக் கூடாது என்று சட்டம் இருந்தும், எப்படி அனுமதிக்கிறார்கள் என்பது புரியவில்லை. இதில் எல்லாம் அரசு தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டும். எதிர்கால சமுதாயத்தினுடைய எண்ணங்களை, வளர்ச்சிகளை பாதிக்கக்கூடிய அளவில் நிகழ்ச்சிகளை தமிழகத்திலே அனுமதிக்கக் கூடாது என்று சொல்லிக்கொள்ளுகிறேன். அந்த வகையில் சட்டங்களை உருவாக்க வேண்டும். அப்படிப்பட்ட சட்டங்களை உருவாக்குவது என்பது இப்போது மாநிலத்தின் அதிகாரத்திற்கு உட்படாமல் இருந்தால், அத்தகைய சட்டங்களை உருவாக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

'ரியலிசம்' என்ற பெயராலே பல திரைப்படங்களில் குறிப்பாக மலையாள மொழித் திரைப்படங்களில் ஆபாசங்களை வளர்த்திருக்கிறார்கள். மலையாள மொழியின் மீது எனக்குக் காழ்ப்புணர்ச்சி கிடையாது. மிகச் சிறந்த ஒரு மொழி மலையாள மொழி. மலையாள மொழித் திரைப்படங்களில் 'ரியலிசம்' என்ற பெயராலே எந்த அளவுக்கு ஆபாசத்தை வெளியிட்டிருக்கிறார்கள் என்பது பார்த்தவர்களுக்குத் தெரியும். விமர்சனத்தைப் படித்தவர்களுக்கும் தெரியும். இதையெல்லாம் இப்படியே அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். இது சரியானதல்ல. ஆகவே இதைச் சிராக்குகிற அளவுக்கு அரசாங்கம் அதைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எதிர்கால சமுதாயத்தைப் பாழ்படுத்துகிற, மக்களுடைய உணர்வுகளை பாதிக்கிற, மாணவர்களைச் சீரழிக்கிற, பள்ளி வகுப்புகளையும், கல்லூரி வகுப்புகளையும் cut செய்துவிட்டு, படிப்பைப் புறக்கணித்துவிட்டு இந்தக் காட்சிகளைப் பார்க்கத் தூண்டுகிற நிகழ்ச்சிகளையெல்லாம் இந்த அரசு மிகக் கடுமையாகத்

தடுத்து நிறுத்த வேண்டும். இதைத் தடுப்பதற்கு எந்த முறையில் கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்தாலும், சட்டப் பேரவை உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும், பொது மக்களும் நிச்சயமாக அதை ஆதரிப்பார்கள் என்று தெரிவித்துக்கொண்டு தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவின் மீது ஒரு சில கருத்துக்களை இங்கே சொல்லுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்ளுகிறேன்.

நாடகம் தாய், சினிமா அதனுடைய சேய். நாடகமாகிய தாய் இன்றைக்கு தட்டுப் பிச்சை எந்திக் கொண்டிருக்கிறாள். சினிமா என்ற சேய் இன்றைக்கு சிம்மாசனத்திலே வீற்றிருக்கிறார். இந்த நிலையிலே நம்முடைய நாட்டிலே பண்டைய நிலை மாறி நாகரிகம் என்ற பெயரால் நம்முடைய கலைத் துறை எப்படியோ போய்க் கொண்டிருக்கிறது. எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல, வாழ்க்கையிலே மனிதனுக்கு ஏதோ ஒரு வகையில் சுவை தேவை. எல்லோருமே சாமியார்களாக ஆகி விட முடியாது. சாமியாராக ஆகிவிட்டால் உலகத்திலே வாழ வேண்டிய அவசியமே இல்லை, காட்டிற்குள்ளேயே இருக்கலாம். மது விலக்கையும் கொண்டு வந்துவிட்டோம். ஆபாசம் என்று சொல்லி எல்லாவற்றையும் தடை செய்ய முயற்சிக்கிறோம். எல்லோரும் சொன்ன முறையிலேயே நானும் சொல்ல வேண்டாம் என்றுதான் இப்படிச் சொல்லுகிறேன். அதற்காக ஆபாசத்தை ஆதரிக்கிறேன் என்று பொருள் அல்ல.

ஒரு காலத்திலே இலக்கியத்திலே பார்த்தால்,

“அத்திக்காய் காய்காய் ஆலங்காய் வெண்மதியே
இத்திக்காய் காய்ந்து உனக்கு என்ன பயன்—சற்றும்
மனசரமில்லா அவரைக்காய், பாவைக்காய் அங்கும் இங்கும்
தூது விளங்காய்”

என்று மிக அழகாக, காதல் சுவையைப் பற்றி பாடினான் அந்தக் காலத்துக் கவிஞன். இன்றையதினம் பழம் என்ற சொல்லை வைத்து

“எலந்த பழம், எலந்த பழம்
எம்மா சைஸ் பார்த்தியா?”

என்று எழுதினான் இந்தக் காலத்துக் கவிஞன். இப்போது பாடல்களிலும், உரையாடல்களிலும் கூட ஆபாசம் புகுந்து கொண்டிருக்கிறது என்பதைக் கவனிக்கத் தவறுகிறோம்; ஆபாசத்தைப் புகுத்திக் கொண்டிருக்கிறோம்



என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் அதைத் தடுக்க முடியாது. காரணம், நம்முடைய நாட்டிலே கலாச்சாரம் என்ற பெயரால், ஆபாசமாக உள்ள வெளி நாட்டுப் படங்களைப் போடலாம் என்று அனுமதித்துவிட்டு, நம்முடைய துறையை மட்டும் ஆபாசம் என்று கட்டுப்பாடு செய்தால், இதனால் நம்முடைய கலை வளர்ச்சி, அதன்மூலம் தொழில் வளர்ச்சி, இந்த தொழிலால் பயனடைகிற தொழிலாளர்களின் நிலை என்ன ஆவது? அதற்கு ஏதேனும்

(பிற்பகல் 6-30)

வழி உண்டா? அதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆக ஒன்றைச் செய்யலாம். மதுவிலக்குச் சட்டத்திலே அரசு ஊழியர்கள் குடித்தால், அவர்களுக்கு இரண்டு முறை விலக்கு என்றுகூட கொடுக்கிறோம். நிகழ்ச்சிகளிலே ரிக்கார்ட் டான்ஸ் என்று போடுகிறார்கள். அது கூடாது என்று சொல்கிறோம். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறியதைப் போல, காபரே நடனம் ஆடுகின்ற இடத்திலே மட்டும் நாம் ஆபாசத்தை அனுமதிக்கிறோமே. நாம் இதிலே மட்டும் ஏழை பணக்காரன் என்று பார்க்கலாமா? மது விலக்குச் சட்டத்திலே கூட இரண்டு விதி விலக்கு அளித்திருக்கிறோம். சட்டத்திற்கு முன் எல்லோரும் சமமாக இருக்கிறோம் என்றால், பணக்காரன் மட்டும் அனுபவிக்கலாம், ஏழை எதையும் அனுபவிக்கக் கூடாதா? அப்படிப்பட்ட நிலைமைகள் இன்றைக்கு நாட்டிலே இருக்கின்றன. கலைத் துறையிலே ஆழ்ந்த அனுபவம் மிக்க அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். ஆக உரைகளிலே, பாடல்களிலே, பேச்சுகளில் எல்லாவற்றிலும் கவனிக்க வேண்டும். எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துவிடக் கூடாது. காட்சிகளிலே இருக்கின்ற நிகழ்ச்சிகளை போஸ்டராக வராமல் தடுக்கலாம். காரணம், காட்சிகள் சில நிமிடங்களிலே ஓடிவிடுகின்றன. சுவையை அனுபவிப்பதற்குத்தான் ‘ரெக்கிரியேஷன்’ என்று இருக்கிறது. மனிதனுக்குத் தேவைதான். அதைப் பார்ப்பதிலேகூட தவறு இல்லை. ஆனால் அதைப் படம் போட்டு, ரோட்டிலே கூட்டம் கூட்டி, காட்ட வேண்டாம். அதை அங்கேயே நின்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நம் அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ரொம்ப அழகாக ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். வாலாடை கட்டி விட்ட கதையைப்பற்றிச் சொன்னார்கள். உண்மையிலேயே இப்படிப்பட்ட காட்சிகளை ரோட்டிலே படமாகப் போடுவதற்கு அனுமதிக்காத அளவுக்கு ஏற்பாடு செய்வது சாலச் சிறந்தது என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். கலைகளிலே இந்த மாதிரி எதையும் புகுத்தக் கூடாது என்று சொன்னால், கலைகளிலே 64 கலைகளை சித்திரமாக வைத்திருக்கிறோமே. கோயில்களிலே இருக்கின்றனவே, அவைகளை இடிக்கப் போகி

ளார்களா? அப்படிச் செய்யக் கூடாது. கலை அம்சத்தோடு பார்க்கும்போது, அது ஆபாசமாகத் தோன்ற முடியாது. கலை அம்சங்களைப் பார்ப்பதற்கு என்று ஒரு இடம் இருக்கிறது. அங்கே போய்ப் பார்க்க வேண்டும், வெளியிலே பார்க்கக் கூடாது. அந்த அளவுக்கு இந்தச் சட்டத்தில் ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும்.

வேறு ஒன்று. சினிமாவிலே இருக்கின்றவர்களுக்கு, வசதி படைத்தவர்களுக்கு, வாய்ப்புப் படைத்தவர்களுக்கு இந்த அரசு நிறைய சலுகைகள் அளித்திருக்கிறது. நான் எதிர்க்கவில்லை, நானும் ஒரு காலத்திலே கலைஞனாக இருந்தவன். நானே நாடகத்திலே நடித்தவன். அது எவ்வளவு சாதாரணமான கலை அல்ல. அதற்கு சாமர்த்தியம் இருக்க வேண்டும். சமயோசிதம் இருக்க வேண்டும். சாதுரியம், நடிப்புத் திறன், அனைவரையும் சேர்க்கூடிய ஆற்றல் இருக்க வேண்டும். சினிமாவிலே வசனம் பேசும்போது, போன் வைத்து வசனத்தைப் பேசுவதும் நடிக்கும்போது சில காட்சிகள் ஒன்றாக வரும்போது கட், கட் என்று சொல்லி படம் எடுப்பதும்தான் சினிமா என்பது. சினிமாவில் நடிப்பவர்கள் பெரிய சாமர்த்தியசாலிகள் என்பதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஆனால் நாடகத்திலே நடிப்பவர்களுக்கு அப்படி இல்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்களுக்கு சான்ஸ் கிடைக்கவில்லை என்பதற்காக அப்படிச் சொல்கிறார்களா ?

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அப்படி எல்லாம் ஒன்றுமில்லை. அந்த வழியிலே முன்னேற முடியாமல், நான் வேறு வழியிலே வந்துவிட்டேன். இதை நான் எதற்குச் சொல்கிறேன் என்றால், நாடகத் துறையிலே தங்கள் ஆயுளையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பலர் நலிந்துப் போய்விட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அந்தத் துறையில் அனுபவம் மிக்கவர் அவர். நாடக ஆசிரியர்கள், பாடல் ஆசிரியர்கள், நாடக இயக்குநர்கள், வசன கர்த்தாக்கள் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் பண்டைக் காலத்திலே வளர்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லாம் இப்போது நலிந்துப் போயிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைத் தெரிந்தெடுத்து, அந்தக் கலையை அழியாமல் காப்பாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கெல்லாம் உதவித் தொகைகள் அளிக்க வேண்டும். அவர்களுக்கு ஒரு வழி காட்டக் கூடாதா? வாழ்நாளையே அர்ப்பணித்துக் கொண்டிருப்பவர்களுக்கு உதவி செய்யக் கூடாதா? அந்த ஏழைக் கலைஞர்களை வாழ வைக்க அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.



இலக்கிய நாடகம், கவிதை நாடகம், வரலாற்று நாடகம், சமூக நாடகம் இப்படி தரவாரியாகப் பிரித்திருக்கிறார்கள். இப்போது ஒரு படத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுப்பதுபோல, சிறந்த நாடகங்களைத் தேர்ந்தெடுத்து, அந்த நாடகங்களுக்கு எல்லாம் ஒரு லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும். பணக்காரர்கள், சினிமா முதலாளிகள் செலவழிக்க வேண்டுமென்பதற்காக லட்சக்கணக்காக முதலீடு செய்கின்றவர்கள் எல்லாம் இருக்கின்றார்கள். வேறு ஏதேதோ ஆசைகளின் காரணமாக அந்தத் துறையில் செலவழிப்பவர்களும் உண்டு. அந்த ஆசைகளின் காரணமாக அதிலேயே போண்டியாகிப் போனவர்களும் உண்டு. நாடகத் துறையிலேயும் வாழ்நாளை அர்ப்பணித்து நலிந்துப் போனவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் இப்படிப்பட்ட பரிசுகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இந்த நாடக இயக்கம் இன்னும் சில குக்கிராமங்களில் எல்லாம் இருக்கின்றது. மீட்டிங் போட்டாலே ராத்திரி 12 மணிக்கு மேலேயும் பாயோடு வந்து கேட்கின்றவர்கள் இருக்கிறார்கள். கிராமங்களிலே அதுதான் அவர்களுக்கு ரெக்கிரியேஷனாக இருக்கிறது. அவர்களுக்கு வேறு எதுவும் கிடையாது. வேட்டைக்காரன் இருப்பு போன்ற கிராமங்கள், எல்லையிலே, கடற்கரையோரப் பகுதியிலே இருக்கின்றன. அங்கெல்லாம் நாடகம் நடத்துவதற்கு ஒரு கிராமத்திற்கு ஒரு நாடக அரங்கு என்று அமைக்க வேண்டும். சீரணி அரங்கு என்று இருக்கின்றதே, அது போல அமைக்கலாம். இந்தக் கலையை வளர்ப்பதற்கு நாம் இப்படிச் செய்ய வேண்டும். அங்கெல்லாம் ஆண்டுதோறும் விழாக்கள் நடத்துகின்றார்கள். கோயில்களிலே விழாக்கள் நடக்கும்போது, நாடகம் நடத்தலாம். அந்த நேரத்திலே பயன்படுத்திக் கொள்ள ஒரு அரங்கு இருந்தால் நல்லது. பஞ்சாயத்தில் ஒரு அரங்கு ஏற்படச் செய்யக் கூடாதா? அதைச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் முயன்று பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாடகக் கலையை வளர்ப்பவர்களை, நாடகக் கலைஞர்களை, நாடகத்திலேயே வாழ்வை அர்ப்பணித்துக்கொண்டவர்களை, நாடகங்கள் இயற்றுபவர்களை, பாடலாசிரியர்களை, இருபொருள் பட பாட்டுக்கள், கவிதைகள் இயற்றுபவர்களையெல்லாம் பண்டைக் காலத்திலே ஊக்குவித்தார்கள். ஆபாசமாக எழுதுபவர்களுக்கு உதவுவதைவிட, உண்மையான கலைஞர்களுக்கு, கவிதை ஆசிரியர்களுக்குப் பரிசு அளிக்கும் வகையில் ஒரு சட்டத்தினைச் செய்யக்கூடிய அளவிலே முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1979 மார்ச் 22

நாடகத்திற்கு 'ஏ' சர்டிபிகேட் வேண்டும் என்கிறார்கள். 'ஏ' சர்டிபிகேட் பட்டி மன்றம் என்றுகூட வரும் போலிருக்கிறது. இதற்குமுன் 'ஏ' சர்டிபிகேட் நாடகம் என்று வந்ததில்லை. அந்த நாடகம் நடத்துவதற்கு முன்னாலே சர்டிபிகேட் வாங்க வேண்டும். நாம் மேடையிலே பேசியது தவறு என்று குறிப்பு எழுதி, அதற்குப் பின்னாலே வழக்குப் போடலாம் என்ற நிலைமைகள் இருக்கின்றன. அதே மாதிரி நாடகத்திற்கு அனுமதி என்று சொன்னால், அனுமதி வாங்கிக்கொண்டு, அங்கே போய் வேறு வசனம் பேசி விடுகிறார்கள். அப்போது என்ன செய்வது? என் பக்கத்திலே இருந்தவர் பெண் வேடம் போட்டிருந்தார். அவர் நடித்துக்கொண்டிருந்தார். புடவை ஜாக்கெட் கட்டியிருந்தார். ஜட்டிகூட அணிந்திருந்தார்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: பக்கத்திலே இருந்தவர் என்று அங்கத்தினர் அவர்கள் கூறினார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. வசந்தபை அவர்கள்தான் அவர் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: நாடகத்திலே பக்கத்திலே இருந்தவர் என்று சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய பேச்சிலேயே கவனத்தைச் செலுத்திவிட்டார்கள் என்று கருதுகிறேன்.

அந்தப் பெண் வேடம் தரித்தவர், கணவனிடத்திலே ஒப்புவிக்க வேண்டிய வசனத்தை விட்டு, வேறுவிதமாகப் பேசிவிட்டார்கள். கணவனாக நடிக்கின்ற என்னிடத்தில் பேசவேண்டிய வசனத்தை, 'பூச்சி மகாராஜா, பூச்சி உள்ளே போய்விட்டது' என்று பேசிவிட்டார்கள். உடனே அந்த நேரத்திலே நான் என்ன சொன்னேன் தெரியுமா? பொதுவாகச் சொல்கிறேன். நாடகத்திலே நடிக்கும்போது உள்ள சங்கடத்தைச் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அந்த நேரத்தில் நான் என்ன சொன்னேன்.

"போர்க்குரல் கேட்டதும், பால்மனம் மாறா இளம்பச்சிளம் குழந்தைக்கு வேலை எடுத்துக் கொடுத்து, போர் முகாம் அனுப்பிய வீராங்கனைகள் பிறந்த நாட்டிலே பிறந்த நீயா அந்தப் பூச்சியைக் கண்டு அஞ்சுவது, போ, ச்சீ, ச்சீ" என்று வசனத்தை மாற்றிச் சொன்னேன். அவரை உள்ளே போய் கேட்டபோது, "என்னய்யா பண்ணுவது, பூச்சி ஜட்டிக்குள்ளே புகுந்துவிட்டதே' என்றார்கள்.

அந்த அளவுக்கு நாடகத்திலே சிரமங்கள் இருக்கின்றன என்பதைச் சொல்கிறேன். உங்களிடம் எழுதி வாங்கிக்கொண்டால், அதை மட்டும்தான் ஒப்புவிப்பார்கள் என்று நினைக்கின்றீர்களா? நாடகத்திலே தங்களுடைய



1979 மார்ச் 22] [திரு. ஆ. திராவிடமணி]

கற்பனை வளத்திற்கு ஏற்றவாறு நடத்துகொள்வார்கள். அதிலே ஏதாவது தவறு இருந்தால், பேச்சிலே தவறு இருந்தால், அதிகாரிகளை வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கிறார்களே அதுபோல் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆகவே அனுமதி பெறுவது என்று இல்லாமல், நாடகம் நடத்த வாய்ப்பினைக் கொடுத்தால்தான் நாடகக் கலையை வளர்க்க முடியும். இந்த வேண்டுகோளை விட்டு, மேலும் நான் சொன்ன கருத்துக்களையெல்லாம் பரிசீலித்து, அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாடகம் சம்பந்தமான இந்தச் சட்ட முன்வடிவை ஒட்டி ஒருசில கருத்துக்களை முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நாடகத் துறைக்கு ஒரு தனி வாரியம் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தத் துறையில் இருப்பவர்களுக்குத் தனி வாரியம் இருந்தால், ஓரளவுக்கு ஊதியம் நிரந்தரமாகக் கிடைக்க வழி செய்ய முடியும். ஆகவே ஒரு தனி வாரியம் ஒன்றினை அமைத்திட வேண்டும் என்பது என்னுடைய அவா.

(பிற்பகல் 6-40)

மாநிலத்திலே இருக்கும் நாடகக் குழுக்களை அழைத்து ஒரு கருத்தரங்கு நடத்த வேண்டும். அந்த நாடகக் குழுக்களிலே திறமையான நடிகர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் குடத்திற்குள் தீபமாக இருக்கிறார்கள். அவர்களுடைய திறமையை வெளிக்கொணர முடியவில்லை. அவர்கள் ஸ்டுடியோவிற்குப் போய், நான் சிறந்த நடிகன், என் நடிப்பைப் பாருங்கள் என்று சொன்னாலும், அவர்களுடைய எளிமையான தோற்றத்தை, எளிமையான ஆடையைப் பார்த்து சினிமா உலகம் அவர்களை விரட்டிவிடுகிறது. எனவே நாடகக் கலைத் துறையில் வல்லவர்களை அழைத்து, கருத்தரங்கு நடத்த வேண்டும். அந்தக் கருத்தரங்கில் யார் எல்லாம் இருக்க வேண்டுமென்றால், திரைப்பட இயக்குநர்கள் இருக்க வேண்டும்; திரைப்படத்தை எடுக்கின்ற பட அதிபர்கள் இருக்க வேண்டும்; நாம் நிறைய செல்வம் பெற்றிருக்கிறோம், இனிமேல் நடித்துத்தான் ஆக வேண்டுமென்பதில்லை என்று நினைக்கிற புகழ் பெற்ற பெரிய நடிகர்கள் இருக்க வேண்டும். இவர்கள் கொண்ட குழுவை அமைத்து, கருத்தரங்கு நடத்த வேண்டும். அப்போது ஒவ்வொரு நடிகரும் ஒவ்வொரு வேடத்தில் நடித்துக் காண்பிக்கலாம். கட்டபொம்மனாக நடிக்கலாம், வ.உ. சிதம்பரம் பிள்ளையாக நடிக்கலாம், உயிர் போனாலும் கொடியை

விடமாட்டோம் என்று சொல்லி, மண்டையிலே அடிபட்டு ரத்தம் பெருகி, கீழே விழுந்தாலும் கொடியை விடமாட்டேன் என்ற திருப்பூர் குமரனாக நடிக்கலாம். அதையெல்லாம் திரைப்பட அதிபர்கள் பார்க்க வேண்டும், டைரக்டர்கள் பார்க்க வேண்டும். கருத்தரங்கு முடிந்த உடனே, 'உனக்கு ஒரு சான்ஸ் இருக்கிறது, ஸ்டுடியோவிற்கு வந்து பார்' என்று அவர்கள் சொல்வார்கள். எனவே அப்படிப்பட்ட கருத்தரங்குகளை நடத்தினால் தான் நாடக நடிகர்களுக்கு சான்ஸ் வரும். அப்படியில்லாமல் ஸ்டுடியோ வாசலுக்குப் போனால், வாச்மேன் 'போ, போ' என்றுதான் சொல்லுவான். ஆகையால் கருத்தரங்கை உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்மையிலே சென்னையிலே உலகத் திரைப்பட விழா நடந்தது. பல் வேறு படங்கள் வந்தன. அந்தப் படங்களைப் பார்ப்பதற்கு சீசன் டிக்கட்டு கள்போல வைத்தார்கள். 20 நாட்கள், 30 நாட்கள் அந்த விழா நடந்தது. 20 ரூபாய் டிக்கட்டைக்கூட 50 ரூபாய்க்கு போட்டி போட்டுக்கொண்டு வாங்கி னார்கள். அதுமாதிரி மாநிலத்தில் இருக்கிற பிரபல நடிகர்கள், சிறந்த நடிகர்கள் அத்தனை பேர்களையும் ஒன்றாகச் சேர்த்து, விழா நடத்த வேண்டும். மாவட்ட வாரியாக அந்த விழாக்களை நடத்த வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் தை மாதம் ஒன்றாம் தேதி துவங்கி, முப்பதாம் தேதி வரை 30 நாடகங்களை நடத்த வேண்டும். அப்படி நடத்தினால், ஒவ்வொரு நடிகரும், ஒரு நாள் நடித்தேன், 100 ரூபாய் கிடைத்தது என்று சொல்லி, சந்தோஷ ப்படுவார்கள். சீசன் டிக்கெட்டை எல்லா வியாபாரிகளும் வாங்கு வார்கள். முத்தமிழ் விழா என்று சொல்லி, அதற்கு ஏற்பாடு செய்யலாம். அப்படிச் செய்வதன் மூலமாக, வாய்ப்பு இல்லாதவர்களுக்கும் வாய்ப்பு ஏற் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு மாத ஊதியமும் கிடைக்கும்.

நாடக நடிகர்கள், 100 மைல்களுக்கு மேல் தொலைவுள்ள இடங்களுக்குப் பிரயாணம் செய்யும்போது, அவர்களுக்கு அரைக் கட்டணம் என்றிருக்கிறது. 50 மைல்களுக்கு மேல் தொலைவுள்ள இடங்களுக்கும் உண்டு என்று அந்த நிபந்தனையைத் தளர்த்தினால், பக்கத்து ஊர்களுக்குப் போய் அவர்கள் நாடகங்களை நடத்த, இந்தச் சலுகையைப் பயன்படுத்திக் கொள்ளலாம், எனவே இதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,



கிராமங்களில் திருவிழா சமயங்களில் 'கிளப் டான்ஸ்' என்று நடைபெறும். அது ஆபாசம், அதைப் பார்க்கக்கூடாதென்று சொல்லி, அவற்றை நிறுத்தி விட்டோம். ஆனால் பட்டுப் பாவாடை கால்வரை உடுத்தி, தாவணி அணிந்து, சட்டை போட்டு, பூ வைத்து, பொட்டு வைத்து, சிரித்த முகத் தோடு ஆடுகின்ற நடனத்தையும் ஆடக்கூடாதென்று ஏன் தடுத்தார்களென்று தெரியவில்லை. ஆயிரக்கணக்கான மக்கள் கூடுகின்ற பெரிய திருவிழா, அங்கே அனுமதிக்கப்பட்ட இசைத்தட்டுகள் போடப்படுகின்றன. அதற்கு அபிநயம் பிடித்து ஆடுகிறார்கள். அதை மக்கள் பார்த்து ரசிக்கிறார்கள். கொஞ்ச நேரம் மேள தாளம்; கொஞ்ச நேரம் வில்லுப் பாட்டுக் கச்சேரி; கொஞ்ச நேரம் கம்பாட்டம்; கொஞ்ச நேரம் நடனக் கலை என்று கிராம மக்கள் பார்த்து ரசிக்கிறார்கள். நடனம் ஆடாதே என்று சொல்கிறார்கள். அவர்களை ஆட வைக்க வேண்டும். (சிரிப்பு) அது ஆபாசமில்லை.

மாநிலம் பூராவும் மட்டுமல்ல, பம்பாய் ஷண்முகாநந்தா சபை யிலே நாடகங்களை நடத்திப் புகழ் பெற்ற டி.கே.எஸ். குழுவில் பலர் வறுமையோடு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட டி.கே.எஸ். குழுவில், கே.ஆர்.ஆர். குழுவில் உள்ளவர்களை, கலைவாணரை நம்பி வாழும் நாடக நடிகர்களை எல்லாம் அழைத்து, என்ன வேண்டும், எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்டு, அவர்களுக்கு வாழ்வு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்** : மாண்புமிகு துணைத் தலைவரவர் களே, 1979 ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் திருத்த சட்ட முன்வடிவை வரவேற்கின்ற முறையில் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத் துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். 25 ஆண்டுக் காலமாக இருந்து வருகிற ஒரு சட்டத்தில், நடைமுறைப்படுத்துகிறபோது, சில சட்டச் சிக்கல் கள் தோன்றிய காரணத்தையொட்டி, 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு முன்னாலே இந்தச் சட்ட முன்வடிவு உருவாக்கப்பட்டு, அன்றைக்கு இருந்த முதலமைச்ச ரவர்களாலும், சட்ட அமைச்சரவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்ட மன்றத்திற்கு வர இருந்த நேரத்தில், சட்ட மன்றம் கலைக்கப்பட்ட காரணத் தாலே, கடந்த ஆண்டு சட்டமன்றததில் அறிமுகப்படுத்தப்பட்டு, இந்த ஆண்டு நாம் விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு இப்போது நிறைவேற்றிக்கொண்டிருக் கிறோம்.

அதிலே 5, 6 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த, கிராமப்புறங்களில் இருந்த 'ரிக்கார்ட் டான்ஸ்' என்பது தடுக்கப்பட்டிருக்கிறது. ஏதோ நகரங்களில் பிறந்துவிட்டவர்கள், வாய்ப்பு வசதிகளைப் பெற்று விட்டார்கள், உலகச் சூழ்நிலையை ஒட்டி, அதன்மூலமாக சில வாய்ப்புகளைப் பெற்று விட்ட காரணத்தாலேயே, தனி இடங்களில் 10, 20 அல்லது 50 பேர்கள் பார்க்கிறார்கள் என்று இருப்பதை அனுமதிக்கலாமா, கூடாதா என்று விவாதிக்கும் ஒரு நாட்டில் ஒரு மாநிலத்தில், தெருக்களிலே, முச்சந்திகளிலே, பொது இடங்களிலே இப்படி நடனங்கள் ஆடப்படுவதை எப்படி அனுமதிக்க முடியும்? மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. திராவிட மணி அவர்கள் வர்ணித்தார்கள். பூ வைத்து, பொட்டு வைத்து, அலங்காரத்தோடு, பட்டுப்பாவாடை அணிந்து கொண்டு என்றெல்லாம் சொன்னார்கள். ஆட்டம் ஆரம்பிக்கும்போது முழுப் பாவாடையோடுதான் ஆரம்பிப்பார்கள். பின்னால் அரைப் பாவாடையாகி, கால் பாவாடையாகி, பாவாடையே விழுந்துவிடும் நிலைமைக்குப் போகிறது என்ற சூழ்நிலையிலேதான், அது தடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. திராவிடமணி: அது பகிரங்கமான ஆட்டம். அதிலே குறைக்க முடியாது. (சிரிப்பு).

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்களின் விருப்பம் அதுவானால், அவர்கள் வீட்டிலேயே அப்படிப்பட்ட நடனத்தை வைத்துக்கொண்டு, ரசித்துக்கொண்டிருக்கலாம். ஆனால் கிராமப்புறங்களில் ஒன்றும் தெரியாத மக்களுடைய உள்ளங்களிலே விஷத்தை விதைப்பதுபோல, அது நாட்டிலே பரப்பப்பட்ட அந்தச் சூழ்நிலையிலேதான் இப்படிப்பட்ட திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு 5, 6 ஆண்டுக்காலமாக முயற்சி எடுத்து, இன்றைக்கு நிறைவேற்றப்படுகிறது. இதன் மூலச் சட்டம் 1954 ஆம் ஆண்டிலே வந்தது. அதையொட்டி, நாடகங்களின் கதைகளை முன்னாலேயே பெற்று, அதிகாரிகளுக்குக் காட்டி, அனுமதி பெற வேண்டுமென்ற கருத்துக்களைச் சொன்னார்கள். அதிலேயும் இரண்டுவிதமான கருத்துக்கள் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள், அவற்றைப் பரிசீலிக்கவேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பரிசீலிக்கக்கூடாது என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவின் முன்னாலே அதை நடத்திக் காட்டி, அனுமதி பெற்றுக் கொள்ளலாமென்று சொன்னார்கள். உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள்—நாடகத்



துறையிலே அனுபவப்பட்டவர்கள் இந்த மன்றத்தில் இல்லையோ என்று எண்ணினேன்—நல்ல வேளையாக நான் இருக்கிறேன் என்று கூறுவதுபோல, நாடகத் துறையும், நாடகத் துறைக் கலைஞர்கள் படும் கஷ்டத்தையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்களுக்கு உறுதுணையாக எடுத்துக் காட்டி, முன்னாலேயே அனுமதித்துவிட்டாலும், அது எப்படியெல்லாம் நடக்கும், நடத்தும்போது மாற்றப்படும், மாற்ற முடியும் என்பதை எடுத்துச் சொன்னார்கள். ஆகவே இந்தச் சட்டம் அதற்குள்ளே நுழையவில்லை. 25 ஆண்டுக் காலமாக அந்த முறை இருந்து கொண்டு வருகிறது. தென் இந்திய நடிகர் சங்கத்தின் சார்பிலே அரசிடத்தில் சில வேண்டுகோள்கள் சென்ற ஆண்டில் தரப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நாடகக் குழுக்கள் போகின்றபோது, அனுமதி வாங்கும் முறையைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சென்னையிலே தலைமை அதிகாரியிடம் அனுமதி பெற்றுவிட்ட பிறகு, அந்த அனுமதியைக் காட்டினால் போதுமென்று சொல்ல வேண்டுமென்ற கருத்தையும் தெரிவித்தார்கள். இந்தச் சட்டத் திருத்தம்

(பிற்பகல் 6-50)

என்பது அவைகளுக்கு உள்ளே நாம் நுழைந்து ஆராய்கின்ற அளவிலே இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். ஆனால் நடனங்களை நடத்துவதில் என்னென்ன முறைகேடுகள் நடைபெறுகின்றன என்பதையும் நாம் அறிவோம். நடனக் கலையை கலைஞர்களைப் பாதுகாக்க வேண்டிய பல்வேறு உணர்வுகளை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை இந்த அரசு மிகுந்த அக்கறையோடும், தீவிர உணர்வோடும் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இயல் இசை நாடக மன்றம் என்கிற அரசின் முழு உதவியையும் பெற்று நடைபெறுகின்ற ஒரு அமைப்பின் மூலம் இப்போதே கஷ்டப்படுகிற நடனக் கலைஞர்களுக்கு நாம் ஓய்வூதியம் வழங்கி வருகிறோம். ஆண்டுதோறும் அவர்களுக்குப் பாராட்டுக்கள் வழங்கி வருகிறோம். அவைகளை இன்னும் அதிகப்படுத்தி, எந்த அளவுக்கு நாடகக் கலைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் அக்கறையை இந்த அரசு செலுத்தும். மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு விஷயத்தை மிக நன்றாகத் தெரிந்துகொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் அவருடைய 5-வது வயதிலிருந்தே நாடகக் கம்பெனியில் சேர்ந்து படிப்படியாக வளர்ந்து

கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை உறுப்பினர்கள் உணர்வார்கள். அப்படிப்பட்ட உணர்வின் அடிப்படையில் நாடகக் கலைகளைப் பாதுகாக்க வேண்டுமென்கின்ற முயற்சியை இந்த அரசு நிச்சயம் மேற்கொள்ளும்.

ஆபாசம் என்பதைப்பற்றி இங்கே கருத்துரைகள், கருத்தாங்குகள் நடைபெற்றன. சட்டமன்றப் பேரவையிலே கூட இந்தத் திருத்த மசோதா விவாதம் நடைபெற்றபோது, மாண்புமிகு உறுப்பினர்களால் பல்வேறு கருத்துக்கள் மிகுந்த மன நெகிழ்வோடு பேசப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் டாக்டரேட் பட்டம் பெறுவதற்கான ஆராய்ச்சி உரை (தீசிஸ்) நிகழ்த்தப்படுவது போல் உரை நிகழ்த்தினார். அது உரை என்பதோடு மட்டுமல்ல, நடிப்போடு, இசையோடு, கலை உணர்வோடு அவரால் நடித்துக் காட்டப்பட்டது. அப்படிப்பட்ட உணர்வுகள் எல்லாம் இந்த மசோதாவில் வருகின்றன. எது ஆபாசம் என்கிற பிரச்சினையை எடுத்துக் கொண்டால், அது ஒரு தீர்க்கப்பட முடியாத பிரச்சினை. எது ஆபாசம், எது ஆபாசம் இல்லாதது என்ற முடிவைக் காண்பது ஒரு சிக்கல் நிறைந்த காரியம். அது ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிற சர்ச்சைக்குரிய பிரச்சினை. எது ஆபாசம் என்பதைத் தீர்மானிக்க வேண்டியது அவரவர்களுடைய உள்ளத்தை, மன நிலையை, பழக்கவழக்கத்தைப் பொறுத்தது. ஆனால் பொது நோக்கத்திலே ஆபாசத்தை எங்கே, எந்த அளவிலே தடைப்படுத்துவது, தடைப்படுத்த வேண்டும் என்பதிலே அரசு கவனம் செலுத்துகிறது. அந்த வகையிலேதான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட உணர்வுகள் இன்றையதினம் திரைப்படங்களிலே கூட வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். திரைப்படங்களைத் தணிக்கை செய்வது என்பது மத்திய அரசுக்கு உட்பட்ட ஒரு பொறுப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் ஒரு மிகச் சிறந்த வாதத்தை அவையில் எடுத்து வைத்தார்கள். இந்த நாட்டிலே உணர்வுகள், நாகரிகங்கள், பழக்கவழக்கங்கள் இவைகளையெல்லாம் மனதில் வைத்துப் படம் எடுக்க வேண்டியதும், அதற்கேற்ப அவைகளுக்கு அனுமதி வழங்கப்படுவதும், படத் தயாரிப்பாளர்களுடைய பொறுப்பும் மத்திய அரசாங்கத்தில் இருப்பவர்களுடைய பொறுப்புமாகும். ஆனால் பிற மொழிப் படங்கள் வரும்போது, அதையொட்டி போட்டி போடக்கூடிய நிலையில் படத் தயாரிப்பாளர்கள் படங்களைத் தயாரிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அப்படித் தயாரிக்காவிட்டால், அவர்கள் நெருக்கடிக்கு ஆளாக வேண்டியிருக்கும் என்பது உண்மை நிலை. ஆனால் தணிக்கையின்போது, எந்த அளவுக்குப் படத்தை வெட்டுகிறார்கள் என்பதெல்லாம் விவாதத்திற்கு உட்பட்ட ஒன்று. திரைப்படங்களில் அனுமதிக்கப்பட்ட காட்சிகள் எத்தகைய காட்சிகளாக இருந்தாலும், அவை திரைப்



படமாக வரும்போது சூழ்நிலையோடு, காட்சியின் சூழ்நிலைக்கு ஏற்றபடி, காட்சிகள் அமைக்கப்படுகின்றன. ஆகையினால்தான் அவை நம்முடைய மனத்திலே நின்று விடாது, நிலைத்து விடாது. மொத்தத் தோற்றத்தையும் நாம் சினிமாவில் பார்த்துக் கொண்டிருப்போம். படத்தின் காட்சியைப் பார்ப்போம். படத்தின் சூழ்நிலையைப் பார்ப்போம்: 10 அல்லது 20 அடிகளுக்கு அத்தகைய காட்சிகள் சில இடங்களில் 10 பிரேம் என்கிற அளவிலேதான் இருக்கும். ஆனால் அது இருக்கிறதோ இல்லையோ அதைப் பெரிய அளவில் படமாக எழுதி பேனர்களாக, போஸ்டர்களாக, விளம்பரங்களாக வைக்கக் கூடிய நிலை வளர்ந்துகொண்டே வருகிறது. இது நிச்சயமாகத் தடுக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். முன்பே சட்ட விதிகள் இருந்துகொண்டிருக்கின்றன. அந்தச் சட்டத்தை வைத்தே இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்தியிருக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். எந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும், சம்பந்தப்பட்டவர்கள் உடனே நீதிமன்றங்களுக்குச் சென்று அதை நிறைவேற்ற விடாமல் தடுக்கக்கூடிய, 'ஸ்டே' வாங்கக்கூடிய நிலை இருக்கிறது. இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை, இதை நிறைவேற்றிய பின்னரும் நீதிமன்றங்களுக்குச் சென்று 'ஸ்டே' பெற முடியாத அளவிற்கு ஒரு தீவிரமான சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்பதைப்பற்றி அரசு அக்கறையோடு, தீவிர உணர்வோடு சட்டத் துறைக்குத் தெரிவித்திருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதைப் பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெட்சமிநாதன் அவர்கள் குறிப்பிட்டதுபோல், பொது இடங்களில் இருக்கிற விளம்பரங்களை, பேனர்களை அகற்றுகின்ற முறையைக்கூட அரசு கொண்டு வருவதைப்பற்றி தீவிரமாகப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதைத் தடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அது நாளாவட்டத்தில் வளர்ந்துகொண்டே இருக்கிறது. இது பற்றிக் கேட்டால் தாங்கள் கார்ப்பரேஷனிடம் அனுமதி வாங்கி வைத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இல்லாவிட்டால் ஹைவேஸிடமிருந்து அனுமதி வாங்கி வைத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அப்படி இல்லாவிட்டால், ரெவின்யூ துறைக்குச் சொந்தமான இடம், ஆதலால் கலெக்டரிடமிருந்து அனுமதி வாங்கி வைத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். எங்கெங்கு வைத்துக்கொள்ள இடம் கொடுக்கிறார்களோ அதைப் பயன்படுத்தி மிகச் சிலர் பெரும் பணம் வாங்கிக்கொண்டு வைக்க அனுமதிக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள்

குறிப்பிட்டது போல் அப்படிப்பட்ட பேனர்களில் கேவலமாக எழுதி வைப்பதும் வளர்ந்துகொண்டே இருக்கின்ற நிலை இருக்கிறது. சினிமாக்காரர்கள் தெருவிலே பேனர்களை வைக்கிறார்கள். அது வருகின்ற போகின்றவர்களின் கண்களில் படுகிறது என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு பேனர்களில் இருந்ததைவிட பத்திரிகைகளில் எப்படிப்பட்ட படங்கள் வந்துகொண்டிருக்கின்றன என்பதையும், பத்திரிகைகளில் வருகிற கதைகளில் எப்படிப்பட்ட வார்த்தைகள் எழுதப்படுகின்றன என்பதையும் நாம் நன்றாகப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். இன்றைக்கு எழுத்துச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் இருக்கிறது. அதுதான் காரணம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே வெளியே அவர்கள் எந்த அளவுக்கு நாட்டைக் கெடுக்க முன் வருகிறார்கள் என்பதோடு மாத்திரமல்லாமல், வீட்டுக்குள்ளே இருக்கக்கூடியவர்களைக் கூட எந்த அளவுக்குக் கெடுக்க முடியுமோ அந்த அளவுக்கு இவர்கள் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதில் எது கெடுதல் உண்டு பண்ணுகிறது என்கிற வாதம் வேறு. ஆனால் இது தீர்க்கப்பட முடியாமல் வளர்ந்து கொண்டே வருகிற பிரச்சினையாக இருக்கிறது என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்தெந்த சந்தர்ப்பங்களில், எப்படி எப்படி இதை அமுல்படுத்துவது என்பது பற்றியும், பொது மக்களுடைய நியாய உணர்வின் அடிப்படையில், நன்மைகளை மனதிற் கொண்டு எப்படி எப்படி நடைமுறைப்படுத்துவது என்பது பற்றியும் நன்றாக ஆராய்ந்து, அதற்குப் பிறகு, இந்த அரசைப் பொறுத்தவரை, இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நிறைந்த அளவு ஆபாச போஸ்டர்கள் இருப்பதைப் பொறுத்தவரை, அரசு முடிவெடுக்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களின், உணர்வுகளின் அடிப்படையில் முடிவெடுக்கப்பட்டு அது நிறைவேற்றப்படும். பேனர்களை வைக்க அனுமதி அளிக்காத வகையில் சட்டங்கள் கொண்டு வரலாமா என்பது பற்றியும் அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் அவர்களுக்கு உள்ள உரிமையில் இப்போது நாம் தலையிட விரும்பவில்லை. இப்பொழுது இஷ்டப்படி எழுதுவதையும் பேசுவதையும் நாம் அனுமதித்துக்கொண்டிருக்கிறோம். அது எத்தவிதமான விளைவுகளை உண்டு பண்ணும் என்பதை அரசு தெரிந்து வைத்திருக்கிறது என்றாலும்கூட, அரசு நினைத்தால், இப்பொழுதேகூட தடுக்க முடியும் என்கிற நிலை இருந்தும்கூட, அதிலே இப்பொழுது நாம் நுழைய விரும்பவில்லை. நாடகக் குழுவினர்களைப் பொறுத்தவரை, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் குறிப்பிட்டதுபோல், அவர்களுக்கு ஏதாவது கஷ்டங்கள் இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டு



அரசுக்குத் தெரிவிப்பார்களேயானால், அரசு உடனடியாக அவர்களது குறைகளைக் களைய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்து இந்த நாடக நிகழ்ச்சிகள் திருத்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து, வரவேற்றுப் பேசிய அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்து இதை நிறைவேற்றித் தருமாறு கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இந்தச் சட்ட முன்வடிவும் அடுத்த சட்ட முன்வடிவும் நிறைவேறும் வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத் தலைவரவர்களே, மணி எழு ஆகிறது. அடுத்த சட்ட முன்வடிவின் மீது பேசி நிறைவேற்ற வேண்டுமென்றால் நேரம் போதாது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இந்த சட்டமுன்வடிவே இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இது முடிந்த பிறகு அடுத்த சட்ட முன்வடிவை எடுத்தவுடன் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதற்கு அனுமதியளிக்கிறேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர் பேச விரும்பினால் பேசலாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவரவர்களே, நான் பேசலாம் என்று இருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நீங்கள் பேசிவிட்டுப் போகலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

[1979 மார்ச் 22 [மேலவைத் துணைத் தலைவர்]

பிரிவு 2, பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1978) நிறைவேற்றப்பட வேண்டும்."
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1978) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 7-00)

## (4) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1978)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1978) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

@ 576Cஆம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1979 மார்ச் 22] [திரு. ஆ. நல்லசிவன்]

* திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, உணவகங்களில் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டால், அதைக் குறித்து அப்பீல் செய்து கொள்வதற்கான வசதி ஏற்கெனவே உள்ள சட்டத்தில் இருக்கிறது. தற்போது கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதாவின் மூலமாக, அப்படி தொடுக்கப்படும் வழக்குகளில், அப்பலேட் அத்தாரிட்டி வழக்கில் நியாயத்தைச் சொல்வதற்குத் துணையாக, ரெக்கார்டுகளையோ, சாட்சியங்களையோ வரவழைத்து விசாரிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். மசோதாவை வரவேற்கிற இந்த நேரத்திலேயே அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதாவின் மூலம் எந்த உரிமைகள் வழங்கப்படுகின்றனவோ அந்த உரிமைகளைப் பயன்படுத்திக் கொள்ளுகிற நிலையில் உணவகங்களில் வேலை செய்யும் தொழிலாளி இல்லை என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மசோதாவின் மூலம் சில புதிய உரிமைகளை உணவகங்களில் வேலை செய்யும் ஊழியர்களுக்குக் கொடுப்பதனால், ஹோட்டல் முதலாளியிடமிருந்து ரெக்கார்டுகளை வரவழைக்கவோ, தன் பக்கத்திலே சாட்சியம் சொல்ல யாரையாவது வரவழைக்கவோ உரிமை தரப்படுகிறது என்பது உண்மையாக இருந்தாலும், நடைமுறையில் இது சாத்தியமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த மசோதா எந்த ஊழியர்களுக்கு இந்த உரிமைகளைக் கொடுக்கிறதோ அந்த ஊழியர்களுக்கு இன்றையதினம் பணிப் பாதுகாப்பு—செக்யூரிட்டி ஆப் ஜாப்—இருக்கிறதா என்றால் இல்லை. இரண்டு, மூன்று மாதத்திற்கொருமுறை உணவகங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் வேலையிலிருந்து முதலாளிகளாலே நீக்கப்படுகிறார்கள். இதுதான் எங்கேயும் இருக்கிற நிலைமை. அவர்களுடைய வேலையைப் பொறுத்தவரையில், ஒரு நிரந்தரத் தன்மை—பர்மனென்சி—உணவகங்களில் கிடைப்பதில்லை. அந்தத் தொழிலாளிகளுக்கு ஒரு ஹோட்டலில் நீடித்த சர்வீஸ் இருந்தால், 'கேட்டரிங் எஸ்டாபிளிஷ்மெண்ட்' சட்டத்தின் மூலமாக என்னென்ன சலுகைகள் உத்தரவாதமளிக்கப்பட்டிருக்கின்றனவோ அவைகளைக் கோருவார்கள் என்று புரிந்துகொண்டிருக்கிற ஹோட்டல் முதலாளிகள் அந்தத் தொழிலாளிகளை நீடித்து இருக்கச் செய்வதில்லை. அவர்களுடைய வேலையைத் துண்டித்துக் கொண்டேயிருக்கிறார்கள். 'செக்யூரிட்டி ஆப் ஜாப்' அந்தத் தொழிலாளர்களுக்கு இல்லாமல் இருக்கிறது.

அந்தப் பாதுகாப்பை அளிக்க அரசாங்கம் முன்வராமல் ஒரு வழக்குத் தொடரும்போது, அப்பலேட் அத்தாரிட்டி ரிக்கார்டுகளைக் கோரிப் பெறவோ, தொழிலாளியின் சார்பில் சாட்சியங்களை அழைத்து விசாரிக்கவோ உரிமை அளிப்பது என்பது மட்டும் எந்த வகையிலும் பிரயோஜனமில்லை. எந்த வகையிலே ஹோட்டல் சிப்பந்தி இந்த உரிமைகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதை முதலில் அரசு எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து, செக்ஷன் 23 (6)-ன் கீழ் ஹோட்டல் முதலாளி அப்பலேட் அத்தாரிட்டி முன்பாக, தானே நேரில் சென்று ஆஜராக முடியாவிட்டால், தன் சார்பில் ஒரு வழக்கறிஞரை வைத்து, தன்க்காக அவரை ஆஜராகச் சொல்லலாம். ஆனால் ஹோட்டலில் வேலை செய்து வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளி அப்பலேட் அத்தாரிட்டி முன்பாக, தானேதான் நேரில் ஆஜராக வேண்டும். அவனுக்காக வேறு யாரும் ஆஜராக முடியாது என்று சொல்லப் பட்டிருக்கிறது.

சட்டத்தைப் புரிந்து வைத்திருக்கிற ஹோட்டல் முதலாளி ஒரு வக்கீலை வைத்து வழக்கை நடத்த வசதி உள்ளது. அவர் ஒரு வழக்கறிஞரை வைத்து வாதிடலாம். ஆனால் ஒரு வருஷம், 6 மாதம் ஒரு ஹோட்டலில் வேலை செய்துவிட்டு தன்னுடைய வேலைக்கு நிரந்தரமில்லாமல் இருக்கிற தொழிலாளி, தன்னை வேலையிலிருந்து ஹோட்டல் முதலாளி எடுத்து விட்டார் என்று அப்பீல் செய்து கொள்ளுகிறபோது, தன் சார்பாக ஒரு தொழிற்சங்கப் பிரதிநிதியோ அல்லது நிர்வாகியோ அல்லது இலவசமாக வாதாட வழக்கறிஞர் ஒருவர் முன்வந்தாலும் அவரையோ கொண்டு தனக்காக ஆஜராகி வாதிட வசதியில்லை. இதுதான் நாம் செய்திருக்கிற சட்டம். இதனால் தொழிலாளிக்கு நன்மை உண்டா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஹோட்டல் முதலாளியாவது ஆஜராகலாம் அல்லது அவருடைய சார்பில் ஒரு வக்கீல் ஆஜராகலாம். தொழிலாளி நேராக ஆஜராக வேண்டும். அவன் சார்பில் வேறு யாரும் ஆஜராகக் கூடாது என்று அடிப் படையிலேயே ஒரு ஓட்டையை வைத்திருப்பது நியாயமா? தொழிலாளி ஒரு ஹோட்டலில் 3, 4 மாதங்களுக்கு மேல் நிரந்தரமாகப் பணியாற்றுவதற்கு உத்தரவாதமில்லாத நிலையில், வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளி தன் வழக்குக்கு உதவியாக ரெக்கார்டுகளையும் சாட்சிகளையும் சம்மன் பண்ண அதிகாரம் கொடுத்து மசோதா கொண்டுவருவதால், பெரிய பலன் ஏற்பட்டுவிடப் போவதில்லை. ஒரு தொழிற் சங்கப் பிரதிநிதியாவது அவனுடைய சார்பில் ஆஜராக வழி செய்யாமல் இந்த மசோதாவைக் கொண்டு



வருவதால், பலன் ஏற்பட்டுவிடப் போவதில்லை. தொழிற் தகராறுச் சட்டத்தில் அதற்கு இடம் இருக்கிறது. தொழிலாளியின் சார்பாக தொழிற் சங்கப் பிரதிநிதி வாதிடலாம் என்று அங்கே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி இந்தச் சட்டத்தில் தொழிலாளிக்குச் சாதகமாக ஒரு வழிமுறையை ஏற்படுத்தாமல், சாதாரண ஹோட்டல் தொழிலாளிக்கு இந்த மசோதா மூலம் புதிய உரிமைகளைக் கொடுத்து என்ன லாபம் என்றுதான் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மசோதா மூலம் அளிக்கப்படுகிற உரிமையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய சிப்பந்தி எந்த நிலையில் இருக்கிறான் என்பதை அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டாமா? அவன் 3 மாதத்திற்கு ஒருமுறை டிஸ்மிஸ் செய்யப் படுகிறான் என்பது மட்டுமல்ல ஒரு குறிப்பிட்ட ஹோட்டலில் அதிகமான தொழிலாளிகள் இருந்து, அவர்கள் முதலாளியை எதிர்த்துத் தங்கள் உரிமைகளைக் கேட்க ஆரம்பித்தால், உடனே அந்த ஹோட்டலை அந்த முதலாளி மூடிவிடுகிறார். ஹோட்டலை மூடாமல் தடுப்பதற்கு கேட்டரிங் எஸ்டாபிளிஷ்மெண்ட் ஆக்ட்டிலே இடமில்லை. கொஞ்ச நாள் கழித்து அதே முதலாளி வேறு பெயரில் அங்கேயே ஒரு ஹோட்டலைத் திறக்க முடியும். ஆனால் தொழிலாளியின் கதி என்ன? அவனுடைய வேலைக்கு உத்திரவாதம் இருக்கிறதா? இல்லை. வேலை இழந்த தொழிலாளிகள் மீண்டும் அந்த ஹோட்டல் முதலாளியிடம் போய் வேலை வாங்க முடியுமா என்றால், முடியாது. ஒரு இடத்தில் ஹோட்டலை மூடிவிட்டு வேறு இடத்தில் அந்த முதலாளி ஹோட்டலைத் திறந்தால், அதைத் தடுக்க முடியாது. இப்படிப் பட்ட நிலைதான் நாட்டில் இன்றுவரை இருக்கிறது. இவ்வளவு விவரம் தெரிந்த முதலாளிகள் நாட்டில் இருக்கிறார்கள். அவர்களைப் போய், சிப்பந்திகள் பற்றிய ரெக்கார்டு வைக்க வேண்டுமென்றால், செய்வார்களா? அந்த ரெக்கார்டுகளைக் கோர்ட்டிற்குக் கொண்டு வா என்றால், கொண்டு வருவார்களா? எதையும் செய்ய மாட்டார்கள். வேலை நீக்கம் செய்யப் பட்ட தொழிலாளி, தனக்குச் சாதகமாக சாட்சி சொல்ல வேண்டுமென்று, தன்னோடு வேலை செய்து கொண்டிருந்த ஒருவனை, அந்த ஹோட்டலில் இன்னும் வேலை செய்து கொண்டிருக்கிற ஒருவனைச் சாட்சியாக அழைத்து வர முடியுமா? அப்படி அழைத்து வந்தால், அந்தத் தொழிலாளிக்கு நாளையதினம் வேலை நிலைக்குமா? எந்தத் தொழிலாளி கோர்ட்டுக்கு வந்து, வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளி என்னோடு வேலை செய்தவன், 100 ரூபாய் சம்பளம் என்று சொல்லி 50 ரூபாய்தான் முதலாளி கொடுத்து வந்தார் என்று சொல்ல முன்வருவான்? அவனும் ஒரு வேளை டிஸ்மிஸ் ஆன தொழிலாளியாக இருந்தால், ஹோட்டல் முதலாளிக்கு எதிராக

வந்து சாட்சி சொல்வான். அந்த ஹோட்டலில் வேலை பார்க்கிற ஒரு தொழிலாளி எந்தத் தைரியத்தில் தன்னுடைய முதலாளிக்கு எதிராகக் கோர்ட்டுக்கு வந்து சாட்சி சொல்வான்? மறுநாளே அவனுடைய சீட்டு கிழிக்கப்பட்டு விடாதா? அந்த அளவில் இந்த உரிமைகளை ஏழைத் தொழிலாளி பயன்படுத்த முடியுமா? இருந்தாலும் இந்த உரிமைகளைக் கொடுப்பதற்காக நான் இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

அடுத்து, ஹோட்டல்களில் ரிக்கார்டுகள் எந்த அளவுக்கு மெயின்டெயின் செய்யப்படுகின்றன என்பது நமக்குத் தெரியும். சட்டத்தைப் பொறுத்த வரையில், தொழிலாளிகளுடைய சர்வீஸ் ரெக்கார்டு, லீவு ரெக்கார்டு எல்லாம் மெயின்டெயின் செய்யப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ரெக்கார்டுகளைக் கண்டிப்பாக வைத்துத்தான் ஆக வேண்டும் என்று உத்தரவாதப்படுத்தக்கூடிய fool-proof guarantee இந்தச் சட்டத்தில் இல்லை. ரெக்கார்டுகளை மெயின்டெயின் செய்யவில்லை என்றால், 50 ரூபாய் அல்லது 500 ரூபாய் அபராதம் என்று போடப்பட்டால், வருஷக்கணக்கில் லட்சக்கணக்கான ரூபாய் லாபம் சம்பாதிக்கிற ஹோட்டல் முதலாளிக்கு இது ஒரு கொசுக்கடி மாதிரி. கோர்ட்டில் கேட்டாலும் இந்தத் தொழிலாளி தன்னிடத்தில் சர்வீசிலிருந்ததே இல்லை என்று சொல்லி விடுவார் ஹோட்டல் முதலாளி. ரெக்கார்டு வைத்துக்கொள்ளவில்லை என்றால், ரூ. 50 முதல் ரூ. 500 வரை அதிகபட்ச அபராதம் என்றால், அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. ரெக்கார்டு வைத்திராத முதலாளி களுக்குச் சிறைத் தண்டனை என்று போடவில்லை. ஆகையினால் சட்டத்தி லேயே பல ஓட்டைகளை உருவாக்கிவிட்டு சிப்பந்திகளுக்கு உரிமை கொடுக்க முன்வருகிறோம் என்றால், பிரயோசனமில்லை. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

ராமச்சந்திர பவன் என்ற ஒரு ஹோட்டல் முதலாளி அப்பலேட் அத்தாரிட்டி சிப்பந்தியின் சார்பில் தொழிற்சங்கத் தலைவர் ஒருவரை ஆஜராக அனுமதித்ததை எதிர்த்து ஹைக்கோர்ட்டில் ரிட் போட்டு தடை உத்தரவு வாங்கியிருக்கிறார். இப்படிப்பட்ட நிலையில் 50 ரூபாய், 60 ரூபாய் சம்பளம் வாங்குகிற தொழிலாளிக்கு என்ன பாதுகாப்பு இருக்க முடியும்? இதை அரசாங்கம் எண்ணிப் பார்த்து, கேட்டரிங் எஸ்டாபிளிஷ்மெண்ட் சட்டத்தின்கீழ் தொழிலாளர்களின் பணிக்குப் பாதுகாப்பு அளிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், கல்வி நிலையங்களில் இருக்கும் கேன்டீன்களுக்கு இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. கல்வி நிலையங்களைச் சார்ந்த கேன்டீன்களில் வேலை செய்கிற தொழிலாளிக்குக் குடும்பம் இல்லையா? அவனுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டாமா? அவனுக்கு உரிமைகள் இருக்க வேண்டாமா? அதைப் போலவே இண்டஸ்டிரியல் கேன்டீன்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது மிகப் பெரிய தொழிற்சாலை களில் இருக்கின்ற கேன்டீன்களுக்கும் இது பொருந்தாது. ஏற்கெனவே, அத்தகைய கேன்டீன்களில் பணியாற்றுகிற சிப்பந்திகளுக்கு பேக்டரி தொழி லாளிக்குக் கிடைக்கும் ஊதியம் தரப்படுவதில்லை. அமைச்சர் அவர்கள் இந்தப் பொறுப்புக்கு வந்தவுடனே, ஒரு சமயம் இதைப்பற்றிக் குறிப்பிட்டு, இன்டஸ்டிரியல் கேன்டீன்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அவ்வளவு பேருக்கும் பேக்டரியில் வேலை செய்யக்கூடிய ஒரு சாதாரண அன்ஸ்கில்டு ஊழியருக்குக் கிடைக்கிற சம்பளம் கிடைக்கும்படி செய்கிறேன் என்றார்கள். இரண்டு வருஷங்களாகிவிட்டன. அதைச் செய்யாமல் இருக்கிறார்கள். அந்த வகையில் கல்வி நிலையங்களைச் சேர்ந்த அல்லது பெரிய தொழிற் சாலைகளைச் சேர்ந்த கேண்டீன்களில் பணியாற்றுகிற சிப்பந்திகளுக்கு இந்த மசோதா பொருந்தாது என்று சொல்லப்பட்டிருப்பது நியாயமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்து வதாக இருக்க வேண்டும். ஏற்கெனவே ஹோட்டல் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், 'பார்கெயினிங்' சக்தி மிகவும் குறைவாக இருக்கிறது. சென்னை நகரில் மிக அதிகமான அளவுக்கு ஹோட்டல்கள் நிறைந்திருப்ப தால், சென்னையில் மட்டும்தான் ஒரு பலம் பொருந்திய ஹோட்டல் தொழி லாளர் சங்கம் பல ஆண்டுகளாக சுமார் 20, 30 வருஷங்களாகச் செயல்பட்டு வருகிறது. ஷெட்டி என்ற கருநாடகத்தைச் சேர்ந்த தொழிற் சங்கத் தலைவர் ஆரம்பித்து வைத்த சங்கம்தான் தற்போது சென்னையில் இருக்கிற ஹோட்டல் தொழிலாளர்கள் சங்கம். அது இப்போது ஒரு C.I.T.U.

(பிற்பகல் 7-10)

சங்கம். சென்னையை எடுத்துக்கொண்டால், அது ஒரே சங்கம் இருக்கிறது. தமிழ் நாட்டில் Catering Establishment Act வருவதற்கு ஆரம்ப காலத்திலே போராட்டம் நடத்தியது அந்தச் சங்கம்தான். ஆனால் இந்தச் சங்கத்தை எதிர்த்து, ஆளுங்கட்சி ஒரு போட்டிச் சங்கத்தைத் துவக்கி மூங்கில்துறைப்பட்டு என்ற இடத்திலே நடத்தி வருகிறது. சர்க்கரை ஆலை யிலே ஒரு போட்டிச் சங்கம் ஆரம்பித்திருக்கிறார்கள். நீங்கள் நினைத்தால்

24 மணி நேரத்திலே ஒரு சங்கம் உருவாக்கலாம். சிம்கோ தொழிற்சாலையிலே ஒரு போட்டிச் சங்கம் ஆரம்பித்தீர்கள். அங்கே 'Organised labour' இருக்கிறார்கள். உங்கள் போட்டியை அவர்களால் சமாளிக்க முடியும். ஆனால், இந்த ஹோட்டல் தொழிலிலே, 'ஆர்கனைஸ்ட்' லேபர் இல்லாத இடத்தில் நீங்கள் போட்டிச் சங்கம் ஆரம்பிக்கிறீர்களே, நியாயமா? அந்த சென்னை ஹோட்டல் தொழிலாளர் சங்கம் 25 ஆண்டுக் கால பாரம்பரியம் உடைய சங்கம். அந்தச் சங்கத்தைச் சீர்குலைக்கக்கூடிய ஒரு வேலையை இந்த ஆளும் கட்சி செய்ய வேண்டுமா? Down-trodden வறுமைக்கோட்டுக்குக் கீழே இருக்கக்கூடிய தொழிலாளர்கள் ஒரு சங்கம் வைக்க அவர்களுக்கு உரிமையில்லையா? அவர்களுக்கு என்று இருப்பதோ ஒரு சங்கம். அதையும் நீங்கள் பிளவுபடுத்துகிறீர்கள். 'கேட்டரிங் எஸ்டாபிளிஷ்மெண்ட் ஆக்ட்' ஒரு பலவீனமான சட்டம். அது தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் அளிக்கவில்லை. இந்த சர்க்கார் முதலாளிகளுக்கு பக்கபலமாக இருக்கிறது. அதற்கு மாறாகத் தொழிலாளர்களுக்கு அரசு உதவியாக இருக்க வேண்டும். அரசு யாரை நம்புகிறது? இந்தச் சமுதாயத்திலே வறுமைக்கோட்டுக்குக் கீழே இருப்பவர்களுக்கு அரசு நம்பிக்கையூட்ட வேண்டும். ஆக, இந்த Catering Establishment Act -லே திருத்தங்கள் கொண்டுவந்து, தேவையான சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை வரவேற்றுப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய confirmed opponent அவர். இருந்தாலும் இந்தச் சட்டத்தை அவர் வரவேற்றுப் பாராட்டியதற்கு நன்றி. ஆனால், அவர் சட்டத்திற்கு வெளியே மிக தூரம் சென்று சில சங்கப் பிரச்சினைகளையெல்லாம் பேசியது தான் எனக்கு வேதனையாக இருக்கிறது. நானும் அவரும் சேர்ந்து 55 நாட்கள் போராட்டத்தை நடத்தி மிக வேதனைப்பட்டவர்கள். Comrade என்று சொல்லக்கூடிய அளவுக்கு அந்த உணர்வுகளை மறுபடியும் வைக்கிறேன். ஒரு தொழிலாளியை டிஸ்மிஸ் செய்தால் அதில் Appellate Authority, Labour Officer தான். அந்த Labour Officer க்கு சில அதிகமான அதிகாரங்களை வழங்கக்கூடிய 19 (ஏ) பிரிவு இருப்பதோடு 19 (ஏஏ) என்று அடிஷனலாக ஒரு பிரிவை இணைத்திருக்கிறோம். அதன் காரணமாக 1908 ஆம் ஆண்டு சிவில் நடைமுறைச் சட்டக் கோவையின் கீழ் (மத்தியச் சட்டம் 5/1908) வழக்கு ஒன்றை விசாரணை செய்யும்போது,



சிவில் நீதிமன்றம் ஒன்றிடம் நிலை பெற்றுள்ள அதே அதிகாரங்களை அது கொண்டிருக்கும். அதாவது (1) ஒரு நபருக்கு அழைப்பாணை விடுத்து வரவழைத்து, உறுதி மொழியின் பேரில் அவரை விசாரித்தல்; (2) ஆவணங்களைக் கொண்டு வந்து காட்டுமாறு கட்டாயப்படுத்துதல்; (3) சாட்சிகளை விசாரிப்பதற்காக அழைப்பாணைகளை அனுப்புதல். இதற்கு மேலும் சில பாதுகாப்புகள் தேவை என்பதை நான் நூற்றுக்கு நூறு ஒத்துக்கொள்கிறேன். அவர்கள் சொன்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதை 100 பெர்சென்ட்—நூற்றுக்கு நூறு—ஒத்துக் கொள்கிறேன். எனக்குத் தெரியும். இந்த ஆட்சியினுடைய கொள்கை ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். "நாளை உலகை ஆள வேண்டும் உழைக்கும் கரங்களே" என்ற தத்துவத்திற்குச் சொந்தக்காரர் இந்த நாட்டை இப்போது ஆண்டுகொண்டிருக்கிற முதல்வர் அவர்கள். ஆகையால்தான் சொன்னேன். தொழிலாளர் தங்களுடைய உரிமைக்காக எப்போதும் போராட்டம் நடத்திக்கொண்டே இருக்கக் கூடாது.

They should concentrate in production, productivity and other welfare measures as are obtaining in Socialist countries.

ஒரு சோஷலிச நாட்டில் இருப்பதைப்போல, உற்பத்தி, உற்பத்தித் திறன், நல்வாழ்வு, ஓய்வு—ஜாலியாக ஹில் ஸ்டேஷன்களுக்கு போவது—வாலி பால் விளையாடுவது, ஹாக்கி விளையாடுவது, விரும்பினால் டென்னிஸ் விளையாடுவது . . . .

* திரு. ப. மாணிக்கம்: துணைத் தலைவர் அவர்களே, சோஷலிச நாட்டைப்பற்றிச் சொல்கிறார்கள். சோஷலிச நாட்டில் முதல் தேவை சோஷலிச அரசு. அதிகாரம் எந்த வர்க்கத்தின் கையில் இருக்கிறது? உற்பத்திச் சாதனங்கள் யார் கையில் இருக்கின்றன? இந்த நிலைகளில், அடிப்படையான மாற்றம் ஏற்படாது. சோஷலிச நாட்டில் இருப்பதைப் போல மாற்றம் ஏற்படாத நிலையில் தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் அத்தகைய வாழ்வு வாழ முடியாது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கொஞ்சம் நேரம் கொடுத்தால்

If I have time, we will have a dialogue and it will be very interesting.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போல மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சட்டத்திற்குப் புறம்பாகப் போக மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** சோஷலிச நாடு என்று சொன்னவுடனேயே வந்துவிட்டது.

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு உறுப்பினரைப்போல சட்டத்திற்குப் புறம்பாகப் போகக்கூடாதென்றால், நான் போனதாக அர்த்தமா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது உறுப்பினர் அவர்கள் சட்டத்திற்குப் புறம்பாகப் போனார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டதைத்தான் நான் அவர்களுக்குத் திருப்பிக் குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** 1917-ல் மாவீரன் லெனின் வந்தவுடனேயே சோஷலிசம் வந்துவிடவில்லை. அந்தக் காலத்திலே சோஷலிசம் வர வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை வகுத்து, அந்தத் திட்டங்களைப் பிறகு மாற்றியமைத்து N.E.P.—New Economic Policy என்று கொண்டு வந்து, அன்று முதல் இன்று வரை போராடி சோஷலிசம் வந்துகொண்டிருக்கிறது. அதைப் போல, நான் முன்பு ஒரு முறை சொன்னதுபோல, இன்றையதினம் புரட்சித் தலைவர் தமிழகத்தின் முதலமைச்சராக வந்துவிட்டார். அவர் வந்தவுடனே சோஷலிசம் வந்துவிட்டது. வருவதற்கு வேண்டிய infrastructure அதற்கு வேண்டிய தளங்கள் அமைக்கப்பட்டு, காரியங்கள் ஆற்றப்படுகின்றன. அவைகளிலே ஒன்றுதான் இந்த Built-in provision. தொழிலாளி வர்க்கத்திற்குத் தேவையான நன்மைகள் எல்லாம் சட்டபூர்வமாகவே வழங்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் கொள்கை.

(மாற்றுத் தலைவர் திரு. க. இராமமூர்த்தி தலைமை)

இதற்கு ஏதுவாக இருக்கத்தான் தமிழகத்திலே இருக்கக்கூடிய எல்லாத் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளையும், அரசியல் கட்சி இருந்தும் தொழிற் சங்கப் பிரிவு இல்லாத சட்டமன்ற உறுப்பினர்களையும்—உதாரணமாக திரு. கந்தசாமி, திரு. மார்க்கபந்து, திரு. லத்தீப் ஆகியோர்—கொண்ட ஒரு குழுவை அமைத்திருக்கிறோம். அந்தக் குழுவின் பணி என்னவென்று சொன்னால், தொழிலாளிகள் நல சட்டங்கள் என்னென்ன இருக்கின்றனவோ அத்தனை சட்டங்களுக்கும் என்னென்ன திருத்தங்கள் தேவை என்று அவர்



கள் பரிந்துரை வழங்குகிறார்களோ அந்தப் பரிந்துரைகளை இந்த அமைச்சரவை பரிசீலனை செய்து சட்டமாகக் கொண்டு வருவதற்கு முதல் முதலாக நடவடிக்கை எடுத்தது இந்த அரசுதான்.

I am to say that this is the only State out of the 22 States that has made such an arrangement. I can say this without fear if contradiction.

இந்தியாவில் இருக்கும் 22 மாநிலங்களிலும் தமிழ்நாட்டில்தான்—சட்டத்தைத் திருத்தியமைத்து, சீர் செய்து, தொழிலாளர் வர்க்கம் நன்றாக வளம்பெற—தொழிற் சங்கம் இல்லை என்று சொன்னாலும் சட்டங்கள் இருக்கின்றன என்று சொல்லக்கூடிய அளவுக்கு சட்டத்தைத் திருத்தியமைக்கப் பரிந்துரை செய்ய ஒரு குழுவை அமைத்து திருவாளர்கள் கந்தசாமி, மார்க்கபந்து, லத்திப் போன்றவர்களை அந்தக் குழுவில் புரட்சித் தலைவர் அவர்கள் நியமித்து, அந்தப் பணி இப்போது செம்மையாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தக் குழுவினுடைய பரிந்துரைகள் வர வர you are going to see them with pleasant surprise. நாங்கள் அப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வருவோம். புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி நடத்துகின்ற இந்தக் காலத்திலேயே தொழிலாளர் வர்க்கத்திற்கு வேண்டிய தேவைகளையெல்லாம் நிறைவேற்றத்தக்க வகையில் சட்டங்கள் மூலமாக பரிகாரம் காணப்படும் என்பதற்கு கால்கோள்விழாவாகத்தான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். This Act does not apply to Restaurants and Canteens attached to or run by managements of any educational association.

அடுத்தபடியாக, 'கான்டீனை'ப்பற்றிச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன உண்மைகளை நான் மறுக்கவில்லை. Factory Act 1946-ல் 250 பேரும் அதற்கு மேலும் தொழிலாளர்கள் உள்ள தொழிற்சாலைகளில் கான்டீன் அமைக்க வேண்டும் என்று statutory provision இருக்கிறது.

(பிற்பகல் 7-20)

ஏற்கெனவே இருக்கக்கூடிய சட்டத்தைச் செயல்படுத்தும்போது, அவர்கள் தானாகவே தொழிற்சாலையில் அங்கமாக ஆகிவிடுகிறார்கள் என்பது என்னுடைய கருத்து. இது என்னுடைய கருத்து மட்டுமல்ல, இது குறித்து வழக்கு மன்றத் தீர்ப்பும் இருக்கிறது. எங்கெங்கே கான்டீன் இருந்து, அங்கேயுள்ளவர்களுக்கு தொழிற்சாலையில் இருக்கக்கூடிய அன்-ஸ்கில்ட்

தொழிலாளர்களுக்கு இருக்கக்கூடிய ஊதியம் கொடுக்கப்படவில்லையென்றாலோ, செமி-ஸ்கில்டுக்கு உரிய ஊதியம் கொடுக்கப்படவில்லை என்றாலோ, ஸ்கில்டுக்கு உரிய ஊதியம் கொடுக்கப்படவில்லை என்றாலோ, ஹைஸ்கில்டுக்கு உரிய ஊதியம் கொடுக்கப்படவில்லை என்றாலோ, அது குறித்துத் தொழில் தகராறை எழுப்பாமல் அரசுக்கு வரும்போது, அதைத் தொழில் நீதி மன்றத்திற்கு அனுப்புவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. அப்படிப் போகும்போது, தொழிலாளர்களுக்குச் சாதகமாக ஆகக்கூடிய அளவுக்கு வழக்குகள் நிரம்ப இருப்பதால், அவர்களுக்குத் தொழிற்சாலைகளில் கொடுக்கக்கூடிய ஊதியம் கிடைக்கும் வகையில் தீர்ப்பு வரும் என்று நான் மனமாச எதிர்பார்க்கிறேன். இந்த சர்க்காரும் அப்படிக் கிடைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

போட்டி சங்கங்கள்பற்றிச் சொன்னார்கள். இதைப்பற்றி நான் என்ன சொல்லுவது என்று தெரியவில்லை. காண்ட்ரவர்சியில் புகுவது என்னுடைய வழக்கம் இல்லை. சிம்கோவில் 17—4—1978 அன்று ஒரு ஒப்பந்தம் ஆகியது. அப்போது அய்.என்.டி.யூ.சி. என்ற ஒரே ஒரு சங்கம்தான் இருந்தது. வேறு சங்கங்கள் ஒன்றுமில்லை. அதன் பிறகு தொழிலாளர்கள், ஐந்தாவது மாதம், ஆறாவது மாதம், ஏழாவது மாதம், எட்டாவது மாதம், ஒன்பதாவது மாதம், பத்தாவது மாதம் ஆகிய மாதங்களுக்கு அந்த ஒப்பந்தத்தின் பலன்களை அனுபவித்துக் கொண்டார்கள். பதினோராவது மாதம் 6—11—1978-ல் சி.அய்.டி.யூ. இரண்டாவது போட்டிச் சங்கத்தை ஆரம்பித்து, வேலை நிறுத்தம் ஆரம்பித்து, இன்றைக்கு உள்ளே போயிருக்கிறார்கள் என்ற நிலைமையெல்லாம் பார்த்தார்கள். அவர்கள் வாணவேடிக்கையெல்லாம் வெடித்து நல்ல ஒப்பந்தத்தைச் செய்தோம், வெற்றி, வெற்றி, என்று உள்ளே போயிருக்கிறார்கள். இதில் புரட்சித் தலைவர் அவர்கள் செய்த சாதனை எவ்வளவு என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசும்போது, இரஷ்யாவில் லெனின் வந்ததால் சோசலிஷம் வந்தது என்று சொன்னார்கள். லெனின் வந்ததால் மட்டும்தான் சோஷலிசம் வந்தது என்று நாங்கள் சொல்லவில்லை. அதைப்போலவே தமிழ் நாட்டில் எம்.ஜி.ஆர். வந்ததால் சோஷலிசம் வந்தது என்பதையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இரஷ்யாவில் உற்பத்தி—விநியோக சாதனங்கள் அனைத்தும் சமுதாயத்திற்குச் சொந்தம் என்று ஆனதால்தான் சோஷலிசம் வந்தது. தமிழ் நாட்டிலே எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வரும்போது, அதுமாதிரி



செய்திருந்தால் அவர் வந்ததால் சோஷலிசம் வந்தது என்று ஒத்துக்கொள்ளலாம். நபரைப் பொறுத்து சோஷலிசம் வந்தது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவது புதிய கருத்தாகும். திரும்பத் திரும்ப அசெம்பிளியிலும் மற்ற இடங்களிலும் இந்த ஒரே சமாசாரத்தைச் சொன்னால், எப்படி உலகம் நம்பிவிடும் என்று தெரியவில்லை.

இன்னொன்று, போட்டிச் சங்கங்கள்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சிம்கோ மீட்டரில் வேறு ஒரு (C.I.T.U. )சங்கம் அமைக்கப்பட்டது என்று சொன்னார்கள். அது போட்டிச் சங்கம் அல்ல. அந்தச் சங்கம் ஐந்து மாத காலத்திற்கு நியாயமற்ற ஒப்பந்தத்தை எதிர்த்து, பல அடக்கு முறைகளைத் தாக்குப் பிடித்து, இறுதியில் சில ஷரத்துக்களை மாற்றும்படி அரசாங்கத்தையும், முதலாளியையும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கியிருக்கிறது. போட்டிச் சங்கம் என்றால் என்ன, போலி சங்கம் என்றால் என்ன என்று லேபர் மினிஸ்டர் அவர்களுக்கே தெரியவில்லை. கள்ளக்குறிச்சியில் 15 பேரை மட்டும் வைத்துக்கொண்டு 24 மணி நேரத்திற்குள் ரிஜிஸ்டர் பண்ணிய சங்கத்தை அமைச்சர் அவர்கள் போட்டிச் சங்கம் என்று சொல்லுகிறார்களா அல்லது சிம்கோ மீட்டரில் உள்ள (C.I.T.U.) சங்கத்தை போட்டிச் சங்கம் என்று சொல்லுகிறார்களா என்று தெரியவில்லை

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி):** விவாதம் திருத்த மசோதாவைத் தாண்டி தத்துவங்களுக்குள் சென்றுகொண்டிருக்கிறது. மணி இப்போதே 7-25 ஆகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, தத்துவங்களை, தத்துவங்களின் மூலமாகச் சந்திக்கவில்லையென்றால், நான் என்னுடைய கடமையிலிருந்து தவறியவனாவேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) :** இந்த அவையின் கடமை, திருத்த மசோதாவை நிறைவேற்றுவதுதான்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மார்க்சுக்கு ஏஞ்சல் உதவியாக இருந்தார். லெனின் அதைச் செயல்படுத்தியிருந்தார். அதைத் தொடர்ந்து சோஷலிசம் வந்திருப்பதைப் போலவே, அண்ணாயிசத்தின் அடிப்படைக் கொள்கையைச் செயல்படுத்த புரட்சித் தலைவர் அவர்கள் பிறந்திருக்கிறார்கள். இது செயல்படுத்தப்படும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை

இருப்பதால்தான், நாட்டு மக்கள் அவரை ஆட்சிப் பீடத்திலே அமர்த்தியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே பெருமகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளுகிறேன். போட்டிச் சங்கம் என்று வரும்போது . . . .

**திரு. ப. மாணிக்கம் :** தலைவர் அவர்களே, தத்துவ வாதத்திற்கு நான் தயார். மசோதா மீது அமைச்சர் அவர்கள் பேசுவதாக இருந்தால் சரி. தத்துவங்கள் திரித்துக் கூறப்படுகின்றன. அந்தத் தத்துவங்களுக்குப் பொறுப்பேற்றுக்கொண்டு பல்வேறு தியாகங்களைச் செய்து கொண்டிருக்கிற நம்மிடையே அந்தத் தத்துவங்களைத் தவறாகச் சொன்னால், அதைப்பற்றிப் பேச எங்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். மார்க்ஸ், எஞ்சல் ஆகியவர்கள் எல்லாம் இழுக்கப்படுகிறார்கள். ஆகவே எங்களுடைய உரிமையும் காப்பாற்றப்பட வேண்டும்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) :** ஏற்கெனவே அவையின் காலம் அரை மணி நேரத்திற்கு நீட்டிக்கப்பட்டிருக்கிறது. தயவுசெய்து திருத்த மசோதாவை நிறைவேற்றும் அளவிலே பேசி முடிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இப்போது அகில இந்திய அண்ணா திராவிடக் கழகத் தொழிற் சங்கத்தின் பொறுப்பிலே இல்லை. நான் அதில் செயலாளராக இருந்தபோது, ஒரு சங்கம் இருக்கிற இடத்திலே இரண்டாவது சங்கம் ஆரம்பிக்கக் கூடாது என்று ஒரு தீர்மானம் இருந்தது. அதை இன்று வரையில் கடைப் பிடித்திருக்கிறோம். இப்போது நான் அந்தப் பதவியில் இல்லை. புதியதாக உள்ள செயற் குழு, ஒரு சங்கம் இருக்கும்போது இரண்டாவது சங்கத்தை ஆரம்பித்தால், பிறகு மூன்றாவது சங்கம் ஆரம்பிக்க விரும்பினால், அதையும் ஏற்படுத்தலாம் என்று சொல்லியிருக்கிறது. உடனடியாக ரிஜிஸ்டர் ஆகிறதென்றால், ஒழுங்காக எழுதிக் கொடுத்தால், 4 மணி நேரத்திலேயே நடக்கிறது. அதுவும் குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்திலேயே டிரான்ஸ் போர்ட் யூனியனை இதே சென்னையிலேயே 4 மணி நேரத்திற்குள் ரிஜிஸ்டர் செய்திருக்கிறேன் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

இப்போது கொண்டு வரப்பட்டிருக்கும் இந்தச் சட்டம் ஆரம்ப முயற்சி தான்,

it is only a beginning towards a very good goal

என்று சொல்லி, இதற்காக மேலும் பல்வேறு சட்டங்களை, தொழிலாளர் வர்க்கமும், சட்டமன்ற உறுப்பினர்களும், எதிர்த்துப் பேசிய உறுப்பினர்



களும் கூட எதிர்காலத்திலே, ஒன்றிரண்டு ஆண்டுகள் கழித்து அன்றைய தினம் நாங்கள் பேசியது சரியில்லை, புரட்சித் தலைவர் அவர்கள் நினைத்ததை முடிப்பவர் என்று உணர்ந்து பாராட்டி பேசக்கூடிய வகையிலே, கொண்டு வருவோம் என்ற நம்பிக்கையோடு இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி):** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/1978) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி):** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/1978) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி): இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 7.30 மணி)

## 7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

118. Notification issued in G.O. Ms. No. 1447, Labour and Employment, dated the 21st November 1978, in regard to an amendment to the Tamil Nadu Contract Labour (Regulation and Abolition) Rules, 1975. [Laid on the table of the House under section 35 (3) of the Contract Labour (Regulation and Abolition) Act, 1970 (Central Act 37 of 1970).]

### B. Reports, Notifications and Other Papers.

* 69. The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1979 (L.A. Bill No. 16 of 1979), as passed by the Assembly.

---

* Circulated to all M.L.Cs. on 21st March 1979.



## இணைப்பு I

[497 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

சமூக நலத்துறையின் கீழ் ஐந்து வகைப்பட்ட பிரிவின் பாலசேவிகைகள் பணிபுரிந்து வருகின்றனர்.

1. பூந்தமல்லியிலுள்ள குழந்தைகள் நல்வாழ்வு ஒருங்கிணைந்த நலத் திட்டம் மற்றும் குடும்பமும் சிறார் நலத்திட்டத்தின் கீழ் பணிபுரிந்து வரும் பாலசேவிகைகளுக்கு அடிப்படை சம்பள விகிதப்படி ரூ. 200—5—250—10—500 ஒவ்வொரு மாதமும் ஊதியமாக வழங்கப்படுதல்.

2. குழந்தை நல நிலையங்களில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி அடைந்தவர்கள் சிறார் நல அமைப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் ரூ. 100 மதிப்பூதியமாக வழங்கப்படுதல். இவர்கள் 2 மாத பாலசேவிகா பயிற்சி பெற்றவர்கள் ஆவர்.

3. 1973-74 ஆம் ஆண்டிற்கு முன் துவக்கப்பட்டு செயல்படுத்தப்படும் குழந்தைகள் காப்பகங்களில் எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் 8-ம் வகுப்பு கல்வி பயின்றவர்களை பாலசேவிகாவாக நியமனம் செய்து ஒவ்வொரு மாதமும் ரூ. 75 மதிப்பூதியமாக வழங்கப்பட்டு வருகின்றது. இவர்கள் 2 மாத காலம் பாலசேவிகா பயிற்சி பெற்றவர்களாவர்.

4. பழங்குடி மக்களுக்காகத் துவக்கப்பட்ட குழந்தைகள் காப்பகங்களில் பணி புரியும் பாலசேவிகைகளுக்கு மதிப்பூதியமாக ஒவ்வொரு மாதமும் ரூபாய் 150 வழங்கப்படுகிறது. இவர்களும் 2 மாத காலம் பயிற்சி பெற்றவர்கள் ஆவர்.

5. மத்திய அரசின் நிதி உதவியுடன் தமிழகத்தில் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டத்தின்கீழ் பணிபுரிந்து வரும் அங்கன்வாடிகளுக்கு ரூ. 100 மதிப்பூதியமாகவும், ரூ. 50 முதியோர் கல்வி திட்டத்திற்காகவும் சேர்த்து ரூ. 150 ஒவ்வொரு மாதமும் மதிப்பூதியம் வழங்கப் படுகிறது. இவர்கள் 4 மாத காலம் பயிற்சி பெற்றவர்கள் ஆவர்.

மூன்றாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி மேற்குறிப்பிட்ட பால சேவிகை மற்றும் குழந்தை நல அமைப்பாளர்க்கு பின்வரும் விகிதப்படி தற்போது மதிப்பூதியம் வழங்கப்படுகிறது:—

(1) பூந்தமல்லியிலுள்ள குழந்தைகள் நல்வாழ்வு ஒருங்கிணைந்த நலத் திட்டம் மற்றும் குடும்பமும் சிறார் நலத்திட்டத்தின் கீழ் பணிபுரியும் பால சேவிகைகளுக்கு ரூ. 325—10—445—15—550.

(2) குழந்தை நல அமைப்பாளர்களுக்கு ரூ. 115.

(3) பாலசேவிகைகளுக்கு ரூ. 90.

(4) பழங்குடி குழந்தைகள் காப்பகம் பாலசேவிகைகளுக்கு ரூ. 165.

(ஆ) பூந்தமல்லி ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டத்தின்கீழ் பணி புரிந்து வரும் பாலசேவிகைகள் நிரந்தர பாலசேவிகைகளாகக் கருதப் படுவதால் அன்னாருக்கு ஊதியத்துடன் கூடிய 2 மாத பேறுகால விடுப்பும் அளிக்கப்பட்டு வருகிறது. மற்ற பாலசேவிகா மற்றும் குழந்தை நல அமைப்பாளர்கள் மதிப்பூதியம் மட்டுமே பெற்று பணிபுரிந்து வருபவர்கள். ஆதலால் மதிப்பு ஊதியம் வழங்காமல் 2 மாத பேறுகால விடுப்பு அளிக்கப்படுகிறது. மேலும் மதிப்பு ஊதியத்துடன் கூடிய 2 மாத பேறுகால விடுப்பு வழங்குவது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

(இ) ஏற்கனவே சமூக நலத்துறையின் கீழ் இயங்கி வரும் குழந்தைகள் காப்பகங்களில் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு நாளும் சில்லரைச் செலவினத்திற்கு 4.5 பைசா வழங்கப்பட்டு வருகிறது. மேலும் ஊரக வளர்ச்சித்துறையின் கீழ் செயல்பட்டுவரும் 1002 குழந்தைகள் காப்பகங்களில் குழந்தை ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 3 பைசாவாக உள்ளது. இவ்விரண்டையும் 5 பைசாவாக உயர்த்த வகை செய்ய சமூக நல இயக்குநரிடமிருந்து செயற்குறிப்பு பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.



## இணைப்பு II

[498 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ்நாட்டிலுள்ள 75 சதத்திற்கு மேலான கைத்தறி நெசவாளர்களுக்குப் பருத்தி நூல், கச்சாப் பொருள் ஆகும். கூட்டுறவிலுள்ள நெசவாளர்களுக்குத் தேவையான நூலை கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்து அதன் 19 விற்பனை நிலையங்களின் மூலம் விற்பனை செய்து வருகிறது. கூட்டுறவுத் துறையில் இல்லாத தனிப்பட்ட கைத்தறி நெசவாளர்களுக்கு தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷன் (தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி) ஏற்கனவே சேலம், கோயமுத்தூர், ஈரோடு, மதுரை, கடையநல்லூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் விற்பனை நிலையங்களைத் திறந்து அவர்களுக்குத் தேவையான பருத்தி நூலை விநியோகம் செய்து வருகின்றது. மேற்படி நூல் விற்பனை நிலையங்கள் தவிர தனியார் துறை நெசவாளர்களுக்குப் பருத்தி நூல் விநியோகம் செய்ய கூட்டுறவு நூற்பாலைகள் மதுரையில் ஒரு பொது நூல் விற்பனை நிலையத்தை திறந்திருக்கிறது. மேலும் ஒரு நூல் விற்பனை நிலையத்தை சேலத்தில் திறக்க இருக்கிறது. கடந்த 1977, 1978 மற்றும் 1979-ம் ஆண்டுகளில் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் 40, 60 மற்றும் 80-ம் நெம்பர் நூல்களின் விலை நிலைமை பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தனியார் ஆலைகள்

| கவுண்ட். | 1977 ஜனவரி. | 1977 பிப்ரவரி. | 1978 ஜனவரி. | 1978 பிப்ரவரி. | 1979 ஜனவரி. | 1979 பிப்ரவரி. | 1979 மார்ச். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | | | (ரூபாயில்) | | | |
| 40 | 95 50 முதல் | 97 50 | 102 00 | 95 00 | 101 00 | 101 00 | 99 00 |
| | 105 00 | 105 00 | 110 00 | 108 00 | 115 00 | 118 00 | 118 00 |
| 60 | 114 00 | 117 00 | 128 00 | 121 00 | 138 00 | 141 00 | 139 00 |
| | 134 00 | 137 00 | 158 00 | 153 00 | 155 00 | 160 00 | 160 00 |
| 80 | 133 00 | 133 00 | 157 00 | 150 00 | 173 00 | 171 00 | 177 00 |
| | 145 00 | 145 00 | 162 00 | 156 00 | 186 00 | 179 00 | 190 00 |
| | | | கூட்டுறவு நூற்பாலைகள் | | | | |
| 40 | 98 00 | 100 00 | 101 00 | 98 00 | 100 00 | 102 00 | 101 00 |
| 60 | 112 00 | 116 00 | 128 00 | 127 00 | 133 00 | 136 00 | 136 00 |
| 80 | 141 00 | 141 00 | 160 00 | 160 00 | 168 00 | 170 ·9 | 170 00 |



மேற்கண்ட பட்டியலின்படி நூல் விலை சிறிதளவு உயர்ந்திருப்பதை அறியலாம். இவ்வுயர்வுக்கு இந்திய அரசு நூல் ஏற்றுமதியை அனுமதித்ததும், தனிப்பட்ட ஆலைகளில் கோன் நூலின் விலையில் ஆதாயம் இருப்பதால் அதன் உற்பத்தியில் ஈடுபட்டதும் காரணமாகும்.

கைத்தறி நெசவாளர்களுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் சீரான விலையில் தேவையான நூல் கிடைக்க வழிவகை செய்யும் வகையில் துணி நூல் ஆணையரின் 14—1—1977-ம் தேதிய அறிக்கையில் 1972-ம் ஆண்டில் உள்நாட்டு உபயோகத்திற்காக மாதாந்திர சராசரி உற்பத்தியில் விநியோகிக்கப்பட்ட சிட்ட (ஹேங்க்) நூலின் அளவில் 110 சதவிகிதத்திற்குக் குறையாமல் தற்போது உள்நாட்டு விநியோகத்திற்காக உற்பத்தி செய்யுமாறு கோரப்பட்டுள்ளனர். மேற்படி ஆணையைச் சரியான முறையில் அமுல்படுத்துவதற்குத் தேவையான அறிவுரைகள் வழங்குமாறு பம்பாயில் உள்ள துணி நூல் ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். மேலும் தென் பிராந்திய ஆலைகள் சங்கமும் இது குறித்து அதனுடைய உறுப்பினர் ஆலைகளுக்கு தகுந்த அறிவுரைகள் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. கைத்தறி ஜவுளித் தேக்கத்தைப் பொறுத்தவரை, கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் 1—9—1978-ல் இருந்த மொத்த இருப்பின் மதிப்பு ரூ. 8.32 கோடியாகும். ஆனால் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் 31—1—1979 தேதியில் ரூபாய் 4.09 கோடி மதிப்புள்ள துணிகள்தான் இருப்பு உள்ளது. இந்த இருப்பு கூட்டுறவு நெசவாளர் சங்கங்களின் ஒரு மாத கால உற்பத்தியின் மதிப்பேயாகும். ஆகவே கனம் அங்கத்தினர் கூறியபடி துணித்தேக்கம் ஏதும் தற்போது இல்லை. தனியார் துறையிலும் கைத்தறி ஜவுளித் தேக்கம் இருப்பதாகத் தெரியவில்லை.

## இணைப்பு III.

[501 ஆம் பக்கத்தில் இனம் 6 (1)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L. A. BILL No. 25 OF 1978.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Preservation of Private Forests Act,* 1949.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Preservation of Private Forests (Amendment) Act, 1979.

C 5—15

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Amendment of section 1, Tamil Nadu Act XXVII of 1949*.—In section 1 of the Tamil Nadu Preservation of Private Forests Act, 1949 (Tamil Nadu Act XXVII of 1949) (hereinafter referred to as the principal Act), in sub-section (2), in clause (iii) and in the *Explanation*, for the figures and word "30 acres", the figures and word "12 hectares" shall be substituted.

3. *Amendment of section 2, Tamil Nadu Act XXVII of* 1949.—In section 2 of the prinicipal Act, in clause (*a*), the words and letters "in the *Fort St. George Gazette*" shall be omitted.

4. *Amendment of section 3, Tamil Nadu Act XXVII of* 1949.—In section 3 of the principal Act, for sub-section (2), the following sub-section shall be substituted, namely :—

"(2) No owner of any forest and no person claiming under him, whether by virtue of a contract, licence or any other tranaction entered into before or after the commencement of the Tamil Nadu Preservation of Private Forests Act, 1946 (Tamil Nadc Act XVIII of 1946), or any other person shall, without the previous permission of the District Collector,—

(*a*) cut trees or reeds; or

(*b*) do any act likely to denude the forest or diminish its utility as a forest:

Provided that nothing contained in this sub-section shall apply to the removal of dead or fallen trees or to any act done for the usual or customary domestic purposes or for making agricultural implements."

5. *Amendment of section 6, Tamil Nadu Act XXVII of* 1949.—In section 6 of the principal Act, in the opening paragraph, the words and letters "in the *Fort St. George Gazette*" shall be omitted.



6. *Substitution of new section for section 7, Tamil Nadu Act XXVII of* 1949.—For section 7 of the principal Act, the following section shall be substituted, namely :—

"7. *Penalties*.—Whoever contravenes—

(*a*) the provisions of sub-section (1) or sub-section (2) of section 3, or

(*b*) any of the terms or conditions subject to which permission is granted under sub-section (2) of section 3, or

(*c*) any of the terms of a notification under section 6,

shall be punishable with imprisonment which may extend to two years or with fine which may extend to five thousand rupees or with both.".

7. *Amendment of section 10, Tamil Nadu Act XXVII of* 1949.—In section 10 of the principal Act, in sub-section (2) after clause (*b*), the following clause shall be inserted, namely :—

"(*bb*) the deposit of such sum, if any, as may be specified in the rules as security for the due performance of the terms and conditions subject to which permission is granted under sub section (2) of section 3, tht forfeiture of the sum so deposited or any part thereof for contravention of any such term or condition and the adjudication of such forfeiture by such authority as may be specified in the rules;".

8. *Omission of section 12, Tamil Nadu Act XXVII of* 1949.—Section 12 of the principal Act shall be omitted.

9. *Amendment of section 12-A, Tamil Nadu Act XXVII of* 1949.—In section 12-A of the principal Act,—

(1) for the marginal heading, the following shall be substituted, namely :—

"*Publication of rules, commencement of rules and notifications and placing them before the Legislature*".

(2) in sub-section (1), in clause (*a*),—

(*a*) the words and figures "and all orders made under section 12" shall be omitted;

(*b*) for the words and letters "*Fort St. George Gazette*", the words "*Tamil Nadu Government Gazette*" shall be substituted ;

(3) in sub-section (2),—

(*a*) for the words and figures "Every rule under this Act, and every order made under section 12", the words "Every rule made or notification issued under this Act" shall be slbstituted ;

(*b*) after the words "as soon as possible after it is made", the words "or issued" shall be inserted ;

(*c*) for the word "order", wherever it occurs, the word "notification" shall be substituted ;

(*d*) after the words "should not be made", the words "cr issued" shall be inserted.

## இணைப்பு IV.

### L.A. Bill No. 15 of 1979.

[502 ஆம் பக்கத்தில் இனம் 6 (2)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

(As passed by the Assembly.)

*A Bill to extend the Tamil Nadu Preservation of Private Forests Act,* 1949 *to the Kanyakumari district.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Preservation of Pdivate Forests (Extension to Kanyakumari District) Act, 1979.

(2) It shall come into force on such date as the State Government may by notification, appoint.

2. *Definition.*—In this Act, unless the context otherwise requires, "existing law" means any law, Ordinance, Proclamation, Regulation or Order, By-law or Rule passed or made before the date of commencement of this Act by Parliament, or by any Legislature, authority or person having power to make such a Law, Ordinance, Proclamation, Regulation, Order, By-law or Rule.



3. *Extension of Tamil Nadu Act XXVII of* 1949.—The Tamil Nadu Preservation of Private Forests Act, 1949 (Tamil Nadu Act XXVII of 1949), as in force immediately before the date of commencement of this Act in the State of Tamil Nadu except the Kanyakumari District, is hereby extended to, and shall be in force in the Kanyakumari District.

4. *Repeal of corresponding laws.*—If, immediately before the date of commencement of this Act, there is in force in the Kanyakumari District any Act, Ordinance, Proclamaion, Regulation, Order, By-law, Rule or other law corresponding to the enactment now extended to the Kanyakumari District whether such Act, Ordinance, Proclamation, Regulation, Order, By-law, Rule or other law is in force by virtue of section 119 of the States Reorganisation Act, 1956 (Central Act 37 of 1956), or by virtue of any other legislative power, such corresponding law shall, on the date of commencement of this Act, stand repealed to the extent to which the corresponding law relates to matters with respect to which the State Legislature has power to make laws for the State.

5. *Savings.*—(1) The repeal by section 4 of any corresponding existing law shall not affect—

(*a*) the previous operation of any such law or any thing duly done or suffered thereunder, or

(*b*) any right, privilege, obligation or liability acquired, accured or incurred under any such law, or

(*c*) any fine, penalty, forfeiture or punishment incurred in respect of any offence committed against any such law, or

(*d*) any investigation, legal proceeding or remedy in respect of any such right, privilege, obligatton, liability, fine, penalty, forfeiture, or punishment as aforesaid ;

and any such investigation, legal proceeding or remedy may be instituted, continued or enforced and any such fine, penalty, forfeiture or punishment may be imposed as if this Act had not been passed.

(2) Subject to the provisions of sub-section (1), anything done or any action taken including any appointment or delegation made, notification, order, instruction or direction issued, rule, regulation, form, by-law or scheme framed, certificate, permit or licence granted or registration effected, under such corresponding

existing law shall be deemed to have been done or taken under the corresponding provision of the enactment as now extended to, and in force in the Kanyakumari District and shall continue in force accordingly, unless and until superseded by anything done or any action taken under the said enactment.

6. *Construction of references to laws not in force in the Kanyakumari District.*—(1) Any reference in the enactment now extended to the Kanyakumari District to a law which is not in force in the Kanyakumari District shall, in relation to that District, be construed as a reference to the corresponding law, if any, in force in that District.

(2) Any reference in any existing law which continues to be in force in the Kanyakumari District after the date of commencement of this Act to any law repealed by section 4 shall, in delation to that District, be construed as a reference to the enactment now extended to the Kanyakumari District corresponding to the law so repealed.

7. *Construction of references to authorities where new authorities have been constituted.*—Any reference, by whatever form of words, in any existing law to any authority competent at the date of the passing of that law to exercise any powers or discharge any functions in the Kanyakumari District shall, where a corresponding new authority has been constituted by or under the enactment now extended to the Kanyakumari District, have effect as if it were a reference to that new authority.

8. *Powers of courts and other authority for purposes of facilitating application of laws.*—For the purpose of facilitating the application in the Kanyakumari District of the enactment now extended to the Kanyakumari District, any court or other authority may construe such enactment with such alterations not affecting the substance as may be necessary or proper to adopt it to the matter before the court or other authority.



இணைப்பு V.

[526 ஆம் பக்கத்தில் இனம் 6 (3)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 26 OF 1978.

(As passed by the Assembly.)

*A Bill to amend the Tamil Nadu Dramatic Performances Act, 1954.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Dramatic Performances (Amendment) Act, 1979.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Amendment of section 2, Tamil Nadu Act XXXIII of 1954.*—In section 2 of the Tamil Nadu Dromatic Performances Act, 1954 (Tamil Nadu Act XXXIII of 1954), in clause (1),—

(1) for sub-clause (vi), the following sub-clause shall be substituted, namely :—

"(vi) is grossly indecent, or is scurrilous or obscene or intended for blackmail ;

and includes any indecent or obscene dance." ;

(2) after *Explanation 1*, the following *Explanation* shall be inserted, namely :—

"*Explanation 1-A*.—The expression 'play, pantomime or other drama' shall include dance whether or not such dance forms part of such play, pantomime or other drama."

இணைப்பு VI.

[554 ஆம் பக்கத்தில் இனம் 6 (4)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 40 OF 1978.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Catering Establishments Act, 1958.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Catering Establishments (Amendment) Act, 1979.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Amendment of section* 19, *Tamil Nadu Act XIII of* 1958.—In section 19 of the Tamil Nadu Catering Establishments Act, 1958 (Tamil Nadu Act XIII of 1958), in sub-section (2), after clause (*a*), the following clause shall be inserted, namely :—

"(*aa*) The appellate authority may, if it considers that any document or the testimony of any person is relevant or necessary for the discharge of its duties under this Act as appellate authority, call for and inspect such document or summon and examine such person. For the aforesaid purposes, it shall have the same powers as are vested in a Civil Court while trying a suit under the Code of Civil Procedure, 1908 (Central Act V of 1908), in respect of the following matters, namely :—

(i) Summoning and enforcing the attendance of any persons and examining him on oath ;

(ii) compelling the production of documents ;

(iii) issuing commissions for examination of witnesses."

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

---

வெள்ளிக்கிழமை, 1979 மார்ச் 23.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினா 251 பின்னர் எடுத்துக்கொள்ளப் படும்.

### *Co-operative Institutions.*

* 252 *Q.*—THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) the number of cases registered on corruption charges prior to 30th June 1977 in co-operative institutions ;

(*b*) the number of cases that have so far been referred to the Court ;

(*c*) the number of corruption charges which were enquired into and disposed of by the Co-operation Department itself ;

(*d*) the number of cases wherein misappropriation of money has been proved by investigation; and

(*e*) the number of cases still under investigation ?

### கூட்டுறவு நிறுவனங்கள்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கூட்டுறவு நிறுவனங்களில் 30—6—1977 க்கு முன்னர் நடைபெற்றுள்ள ஊழல்களுக்காக, எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன ?

(இ) அவற்றில் இதுவரை நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்டவை எத்தனை ?

(உ) கூட்டுறவுத் துறையினர் மூலமாகவே விசாரிக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டவை எத்தனை?

(எ) விசாரணையின்மூலம் கையாடல் நிரூபிக்கப்பட்ட வழக்குகள் எத்தனை?

(ஐ) இன்னமும் விசாரணையில் உள்ள வழக்குகள் எத்தனை?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** (அ) 1—7—1972 முதல் 30—6—1977 முடிய 5 ஆண்டுகளில் 998 வழக்குகள் பதிவ செய்யப்பட்டன.

(இ) 1—7—1972-க்கு முன்னால் விசாரணையிலிருந்த வழக்குகளையும் சேர்த்து 731 வழக்குகள் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டன.

(உ) ஐந்து வழக்குகள்.

(எ) நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 731 வழக்குகளில் 1—7—1972 முதல் 30—6—1977 முடிய 5 ஆண்டுகளில் 431 வழக்குகள் நிரூபிக்கப்பட்டன. 87 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன.

(ஐ) 30—6—1977 அன்று 467 வழக்குகள் காவல்துறையிலும், 213 வழக்குகள் நீதிமன்றத்திலும், விசாரணையில் இருந்தன.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, இந்த வழக்குகளில் சட்ட மன்ற உறுப்பினர்கள் அல்லது பல்வேறு குழுக்களிலே பொறுப்பான பதவியிலே இருந்தவர்கள் எத்தனை பேர்? கூட்டுறவுத் துறை வழக்குகளில் எத்தனை பேர்கள் சம்பந்தப்பட்டவர்களாக, குற்றவாளிகளாகக் கருதப்பட்டிருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த விவரங்கள் என்னுடைய கையிலே தற்போது இல்லை. அருள் கூர்ந்து தனிக் கேள்வி போட்டால், பதில் அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

**திரு. டி. சந்தோஷம்:** பெரிய அளவிற்கு கூட்டுறவுச் சங்கங்களிலே மோசடிகள் நடந்து வருகின்றன. கூட்டுறவுச் சங்கம் என்றாலே கூட்டு மோசடி என்ற எண்ணம் மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது. இதைத் தடுக்க கன்கரண்ட் ஆடிட் போன்ற முறைகளைக் கையாள வேண்டும். இதைச் செய்து, மோசடிகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** கூட்டுறவுத் துறையில் நிகழ்கின்ற முறைகேடுகள், தவறுகளை எல்லாம் கண்காணிக்கவும், தடுத்து நிறுத்தவும் ஏற்கெனவே சில முறைகளை அரசு இன்றைக்குக் கையாண்டு வருகிறது. அந்தவகையில் இன்றையதினம் 41 சரக துணைப் பதிவாளர்கள், ஆங்காங்கு ஏதாவது முறைகேடுகள், குறைபாடுகள் சங்கங்களிலே இருக்கின்றனவா என்று கண்டறிய நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இரண்டாவது வாய்ப்பாக தலைமை அலுவலகத்திலே தனி புலன் ஆய்வுக் குழு— ஸ்பெஷல் ஸ்குவாட்—நிறுவியிருக்கிறோம். எங்காவது குறைபாடுகள் என்று தகவல் கொடுத்தாலோ, நாங்களே அறிந்தாலோ, அந்த ஸ்பெஷல் ஸ்குவாடை அனுப்பி அங்கே இருக்கின்ற குறைபாடுகளை நிவர்த்திக்க ஆவன செய்து வருகிறோம். இதற்கும் அப்பால், ரூபாய் 5,000-க்கு மேற்பட்ட தவறுகள் நடைபெற்று விட்டன என்று கண்டுபிடிக்கப்பட்டு விட்டால், அவைகளைக் கையாளுவதற்கும், அவைகளைப்பற்றிப் புலன் ஆய்வதற்கும் இன்றையதினம் காவல் துறைத் தலைவர் அலுவலகத்தில் தனி வணிகவியல் குற்றப் புலன் ஆய்வுப் பிரிவு என்று 1—2—1971 முதல் செயல்பட்டு வருகிறது. ரூபாய் 5,000-த்திற்கு மேலும் தவறுகள் நடைபெற்றால், குற்றப் புலன் ஆய்வுக் குழு அதை மேற்கொண்டு கண்காணித்து வருகிறது.



**திரு. க. இராமமூர்த்தி:** நெருக்கடி நேரத்தின்போது கூட்டுறவு ஊழல்கள்பற்றி விசாரிக்க தனியாக ஒரு குழு அமைக்கப்பட்டு, ஊழல்கள் பற்றியெல்லாம் பட்டியல் எடுக்கப்பட்டது. அந்தப் பட்டியலிலே, யார் யார் மீது குற்றம்சாட்டப்பட்டிருக்கிறது? அவர்கள்மீது வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றதா? 1972-க்கு முன் நடந்த ஊழல்களுக்காக எந்த எந்த சொசைட்டிகள் அல்லது பொறுப்புள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதோ அவர்கள் மீது இருந்த நடவடிக்கைகளுக்கு, இன்றைக்கு ஒன்றுமே இல்லாமல் விட்டுவிட்ட நிலைமைகள் இருக்கின்றன. அவற்றை மீண்டும் அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** 1976 ஆம் ஆண்டு கூட்டுறவுத் துறையில் நிகழ்ந்த முறைகேடுகளை, குறைபாடுகளைக் கண்டறிய திரு. பாரதி என்ற அதிகாரியினுடைய தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு அதனுடைய பரிந்துரைகளை அரசுக்கு அளித்திருக்கிறது. அந்தப் பரிசீலனையின் அடிப்படையில், கடந்த 27 மாதங்களாக, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே இருக்கின்ற இந்த விழுமிய அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் கூறுகின்றபோது, ஏதோ சில குற்றச்சாட்டுக்கள் சாட்டப்பட்டவர்கள் மீது நடவடிக்கை தவிர்க்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதுபற்றிய விவரங்களைத் திட்டவட்டமாகச் சொன்னால், நிச்சயமாக இந்த அரசு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** இப்போது எத்தனையோ காரியங்களை நாம் இங்கே செய்துகொண்டிருக்கிறோம். அதைப்பற்றி நான் குறை சொல்லவில்லை, அங்கே எப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது? அங்கே

சூப்பர்வைசர்களும், பிரசிடென்ட்களும் ஒன்று சேர்ந்ததால், சொசைட்டியில் தவறுகள் நடக்கின்றன. ஜனங்களிடத்திலே பணம் போய்ச் சேருவதில்லை. பிரசிடெண்ட், சூப்பர்வைசர் சேர்ந்து பொய் கையெழுத்துப் போட்டு, 10 ஆயிரம் ரூபாய், 20 ஆயிரம் ரூபாய் என்று பணத்தை எடுத்துவிடுகிறார்கள். அப்படி பணம் எடுக்கப்பட்டதாக பல கேஸ்கள் வந்திருக்கின்றன, அப்படி பிரசிடெண்ட்கள் பேரிலே எத்தனை கேஸ்கள் வந்திருக்கின்றன, உங்கள் சிப்பந்திகள் பேரில் எத்தனை கேஸ்கள் ஏற்பட்டிருக்கின்றன, எத்தனை கேஸ்கள் வழக்குபோடப்பட்டு பெண்டிங்கில் இருக்கின்றன? வழக்கமாக என்ன படிக்கிறீர்களோ அதையேதான் படித்துக் கொண்டிருக்கிறீர்கள். புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. அதிகாரிகள் எழுதிக்கொடுத்ததைத்தான் படிக்கின்றீர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஏதாவது புதிதாகச் சொல்லுங்கள் என்று சொல்கிறீர்கள்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: தனிக் கேள்வி போடுங்கள் என்று சொல்வார்கள். பிறகு அதற்குப் பதில் வருவது சந்தேகம்தான். ஆக இந்த இரண்டு பேர்களையும், பிரசிடெண்ட், சூப்பர்வைசர் இரண்டு பேர்களையும், கண்காணிக்க வேண்டும். பிரசிடென்ட் 100 க்கு 50 பேர்கள், சூப்பர்வைசர்களில் நூற்றுக்கு 75 பேர்கள் இந்தத் தவறுகள் செய்கின்றார்கள். இந்த இரண்டு பேர்களையும் சரியான முறையில் கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: ஐயா அவர்கள் மிகுந்த அனுபவம் மிக்கவர்கள். சட்டமன்ற மேலவை கடந்த ஒரு மாதகாலமாகக் கூடியிருக்கிறது. அந்த விவரங்களையெல்லாம் சேர்த்து ஒரு கேள்வியாகக் கேட்டிருந்தால், நிச்சயமாகத் தகவல்களைச் சேகரித்து, இன்றைக்கு அவர்களுக்குக் கொடுத்திருக்கலாம். நாங்களும் தெளிவு பெற்று இருக்கலாம். இனியாவது விரைவிலே ஒரு தனிக் கேள்வி போட்டால், அவர்களுக்கு பதில் சொல்வது மட்டுமல்லாமல், அவர் மூலம் இந்த நாட்டிற்கும் தெளிவாகுமாறு விவரங்கள் கொடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-10)

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: இது நடைமுறையிலே இருக்கிற சங்கதி. புதிதாக நான் ஒரு தனிக் கேள்வி போட்டு, உங்களுக்கும் தொந்தரவு கொடுத்து, அதற்கு அவர்கள் * * * எழுதி அனுப்பி . . .

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: * * என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: * * என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

புலவர் புலமைப்பித்தன்: கடந்த ஆண்டு நான் இதே மன்றத்திலே பேசும்போது, கோவை மத்தியக் கூட்டுறவு வங்கியில் இருந்த ஒருவர்மீது குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறேன். அது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: அந்த விவரம் இப்போது என் கையிலே இல்லை. அருள்கூர்ந்து தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. பாலசுப்பிரமணியம்: கூட்டுறவுத் துறைக்கென தனி பப்ளிக் பிராசிகியூட்டர் இருக்கிறார். இருந்தாலும்கூட, பதிவு செய்யப்பட்ட வழக்குகள் விரைவாக முடிக்கப்படாமல் நீண்ட காலத்திற்கு விசாரணையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே விரைவாகத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய ஆலோசனைப்படி நிச்சயமாக விரைவில் நடவடிக்கை எடுக்க முயற்சி எடுப்போம்.

திரு. சி. இராமலிங்கம்: மத்திய வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றுகிற தனி அலுவலர், தற்போது இருப்பவர், ஏற்கெனவே பல தவறுகள் செய்தவர் என்றாலும், அவர் மீண்டும் அந்தப் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார். அவர்மீது விசாரணை நடைபெற்றதா? அதன் விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் என்னுடைய பொறுப்பிலே இல்லை. சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அருள்கூர்ந்து கேள்வி போடுமாறு மாண்புமிகு உறுப்பினரவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. டி. சந்தோஷம்: C.C.I. wing என்று Assistant Public Prosecutor போட்டிருந்தும், காலதாமதமாகிறதென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டார்கள். தனி Assistant Public Prosecutor போட்டால்தான் காலதாமதமாகிறது

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

என்பது அரசுக்குத் தெரியுமா ? பல மாவட்டங்களுக்குச் சேர்த்து ஒரு Assistant Public Prosecutor போடுகிறார்கள். வாய்தாவிற்கு ஒரு தேதி கேட்டால்கூட, 1 மாதம் 1½ மாதங்களுக்குப் பிறகு தேதி கொடுக்கிறார்கள். எனவே ஒரு மாவட்டத்திற்கு ஒருவரை அரசு நியமிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான யோசனைகளை நிச்சயமாக மனதில் வைத்து, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## *Small Farmers Using Electricity.*

* 251 Q.—THIRU A. NALLASIVAN: Will the Hon. the Minister for Electricity be pleased to state:

(*a*) the number of small farmers using electricity in Tirunelveli district; and

(*b*) the action taken by the Government to increase their number?

## மின்சாரம் பயன்படுத்தும் சிறுவிவசாயிகள்.

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் மின்சாரத்தைப் பயன்படுத்தும் சிறு விவசாயிகள் எத்தனை பேர்?

(இ) அவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) 1—10—1978 வரை 15,716 பேர்.

(இ) மனுச்செய்த தேதியின் அடிப்படையில் மட்டும் முன்னுரிமை அளித்து பம்பு செட்டுக்கு மின்சாரம் வழங்குவதில் துரிதப்படுத்துவதன் நோக்கத்தில் புதிய முறை 1—7—1978 முதல் அமுலாக்கப்பட்டுள்ளது. இந்த புதிய முறையின்கீழ் 10 சதவீத வருவாய் அளவும் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. இதனால் மின்சாரம் பயன்படுத்தும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புகள் ஏற்படும்.





**திரு. ஆ. நல்லசிவன்:** திருநெல்வேலி மாவட்டத்தில் மின் இணைப்பு கோரி சிறு விவசாயிகளிடமிருந்து வந்துள்ள மனுக்கள் எல்லாம் ஏற்கப்பட்டு, மின் இணைப்பு கொடுக்கப்பட்டுவிட்டதா? இன்னும் பாக்கி உள்ளதா? பாக்கியிருந்தால் எத்தனை ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்ற அடிப்படையிலே மின் இணைப்பு தரப்படுவதில்லை. யார் முன்னால் மனுக் கொடுக்கிறார்களோ, அந்த வரிசைப்படி மின் இணைப்புகள் தரப்படுகின்றன. படிப்படியாக அவைகள் தரப்பட்டு வருகின்றன.

**திரு. ஆ. நல்லசிவன்:** மின் இணைப்பு கொடுத்த பிறகு, மின் கட்டண பாக்கி இருக்கிறது என்பதற்காக சிறு விவசாயிகளின் மின் இணைப்புகள் திருநெல்வேலி மாவட்டத்தில் துண்டிக்கப்பட்டிருக்கின்றனவா? எத்தனை பேர்களுக்குத் துண்டிக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தனிக் கேள்வி போடவும்.

## *Government School Teachers.*

* 253. Q.—Thiru Ku. Ma. BALASUBRAMANIAM (on behalf of Thiru M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) the number of teachers whose services have been confirmed as per the Government Order, directing the confirmation of the services of teachers who have served in Government Schools for one year after 1st April 1974;

(b) the number of teachers whose services have not yet been confirmed; and

(c) whether there is any proposal with the Government to extend this concession to those who were in service prior to 1st April 1974 also?

## அரசுப் பள்ளி ஆசிரியர்கள்.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—4—1974-க்குப் பின்னர் ஓராண்டு அரசுப் பள்ளிகளில் பணி புரிந்த ஆசிரியர்களை, பணி நிரந்தாம் செய்ய வேண்டும் என்ற அரசின் உத்தரவுப்படி வேலையில் நிரந்தரம் ஆக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) இன்னும் நிரந்தரப்படுத்தப்படாமல் இருப்பவர்கள் எத்தனை பேர்?

(உ) இச்சலுகையை 1—4—1974-க்கு முன்னர் பணிபுரிந்தவர்களுக்கும் நீட்டிக்கின்ற செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, (அ) 1—4—1974க்குப் பின் ஓராண்டு அரசுப் பள்ளிகளில் பணிபுரிந்த ஆசிரியர்களின் பணியினை நிரந்தரம் செய்யவேண்டும் என்று எவ்வித அரசு ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை. ஆனால் அரசு தனது ஆணை (நிலை) எண். 2882, கல்வி, நாள் 30—12—1977 நாளிட்ட ஆணையின்படி 31—3—1977 அன்று (தொடர்ந்து அல்லது விட்டு விட்டு) ஓராண்டு தற்காலிகப் பணி முடித்திருந்தவர்களும் அந்தத் தேதியன்று பணியிலிருந்தவர்களும் அல்லது அந்தத் தேதியன்று பணியில் இல்லாமலிருந்து 1—4—1974 அன்று அல்லது அந்தத் தேதிக்கு பிறகு பணிநீக்கம் செய்யப்பட்டிருந்தவர்களுமான தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் முதல் நிலை மொழி ஆசிரியர்களது பணியினை வரன்முறைப்படுத்தத் தனியாக ஒரு சிறப்பு நியமனத் தேர்வு நடத்துமாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழுவினைக் கோரி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. தேர்வாணைக் குழு சிறப்புத் தேர்வினை விரைவில் நடத்த இருக்கிறது. இத்தேர்வில் தேர்ந்தெடுக்கப்படும் ஆசிரியர்கள் அனைவரது பணியும் வரன்முறைப்படுத்தப்படும். ஏனைய இடைநிலை மற்றும் சிறப்பாசிரியர்களின் பணி அவர்கள் பணியில் சேர்ந்த தினத்திலிருந்து ஏற்கனவே வரன்முறை செய்யப்பட்டு வருகிறது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) இச்சலுகை 1—4—1970 முதல் 3—3—1973 வரை அரசு 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக்குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படாமல் பணியாற்றி வரும் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் பொருந்தும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** அமைச்சரவர்கள் சொன்ன பதிலிலே ஒரு முக்கியமான கருத்து இருக்கிறது. 1—4—1970க்குப் பிறகு 3—3—1973 வரை 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் நியமிக்கப்படும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஆணையின் பலன் உண்டு என்று சொன்னார்கள். 1—4—1970 லிருந்து 3—3—1973 வரை நியமிக்கப்பட்ட அனைத்துப் பட்டதாரி ஆசிரியர்களின் பணியையும் வரன்முறை செய்ய வேண்டுமென்று 1973ல் ஆணையிடப்பட்டது. அந்த அரசாணையின் எண் 351. எனவே அவர்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் வேலையிலிருந்து நீக்க முடியாது. அப்படி இருக்கும்போது சர்வீஸ் கமிஷன் மூலமாக நிரந்தரப்படுத்தும் பணியைத் தாமதப்படுத்துவதால், அவர்கள் சொல்ல முடியாத இன்னல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, வேறு வழியிலே, அதாவது ஒரு சிறப்பாணையின் மூலமாக அவர்கள் பணியை நிரந்தரப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக தேர்வு நடைபெற இருக்கிறது. வெகு விரைவில் அந்தத் தேர்வு நடைபெறும்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** 1—4—1974 க்கு முன்பாக, ஆனால் 1—4—1970க்குப் பிறகு, இடைநிலை ஆசிரியர்கள், உடற் பயிற்சி ஆசிரியர்கள், கைத்தொழில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரே ஒரு ஊதிய உயர்வுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1975-லே அப்படி வழங்கப்பட்டிருக்கிறது. எனவே மற்றவர்களுக்கு வழங்கப்படுவதுபோல அவர்களுக்கும் நியமனத் தேதியிலிருந்து ஊதிய உயர்வு வழங்கி, நிலுவைத் தொகையையும் வழங்க கல்வி அமைச்சரவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அது பற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. செ. முத்துசாமி:** இங்கே சற்று முன்னர் கல்வி அமைச்சரவர்கள் சொல்லும்போது, 1—4—1974-க்குப் பின்னர் பணியில் சேர்க்கப்பட்ட இடைநிலை ஆசிரியர்களுக்குப் பணி வரன்முறைப்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் உண்மை நிலை, அப்படிச் செய்யவில்லை என்பதுதான். அப்படிச் செய்ய வேண்டுமென்று இடைநிலை ஆசிரியர்களும், ஏனைய ஆசிரியர்களும் கோரி வருகிறார்கள். அது பரிசீலிக்கப்பட்டு வருவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது குறித்த உத்தரவை உடனடியாகக் கல்வித் துறை வெளியிடுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஏனைய இடைநிலை மற்றும் சிறப்பாசிரியர்கள் பணி, அவர்கள் பணியில் சேர்ந்த தினத்திலிருந்து ஏற்கெனவே வரன்முறை செய்யப்பட்டு வருகிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** கல்வித் துறையால் பிறப்பிக்கப்படுகிற ஆணைகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளே அமுல்படுத்தப்படுவதில்லை. நிதி ஆண்டு என்று வைத்து, மார்ச் 31 ஆம் தேதிக்குள் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைச் செலவு செய்தாக வேண்டுமென்ற கட்டாயம் இருப்பது போல கல்வித் துறையிலிருந்து பிறப்பிக்கப்படுகிற ஆணைகளுக்கும் காலவரம்பு வைத்து, அதற்குள் அமுலாக்க வேண்டுமென்று சொல்லி, அதைத் துரிதப்படுத்த அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசு ஆணை பிறப்பித்து விட்டால், அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்பதுதான் அரசின் விருப்பம்.

(பிற்பகல் 4-20)

**திரு. செ. முத்துசாமி:** இங்கே ஒரு மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். 1—4—1979 க்குப் பின்னர் பணியில் சேர்ந்த இடைநிலை ஆசிரியர்கள், ஏனைய சிறப்பு ஆசிரியர்கள் இவர்களுக்கெல்லாம் பணியில் சேர்ந்த தேதியிலிருந்து பணிவரன்முறை செய்யப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். எங்களால் ஏற்கெனவே சட்டமன்றத்தில் கவனஈர்ப்புத் தீர்மானம், இன்னும் மற்ற தீர்மானங்கள் எல்லாம் கொடுக்கப்பட்ட பிறகுதான் இப்படிப்பட்ட அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றனவா? அப்படி இல்லாவிட்டால் இன்னும் பல அரசாணைகள் பிறப்பிக்கப்படாத நிலையில் இருப்பதை நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு அவைகளை உடனடியாகப் பிறப்பிக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** 700 ஆசிரியர்களைப் பொறுத்த வரை, அவர்கள் ஏற்கெனவே சர்வீஸ் கமிஷனுக்கு மனுச் செய்து, 16-பி விதியின்படி அவர்களுடைய பாடங்களில் தகுதியில்லையென்றோ அல்லது வயது வரம்பு விதிகளின் கீழ் தகுதியில்லையென்றோ தேர்ந்தெடுக்கப்படாத நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். மறுபடியும் அந்த ஆசிரியர்கள் சர்வீஸ் கமிஷனுக்கு மனுச் செய்தால், மறுபடியும் அந்தப் பிரச்சினையைத் தேர்வாணைக்குழு கிளப்பும் என்கிற சந்தேகம் இருக்கிறது. 16-பி விதியைத் தளர்த்தி அந்த ஆசிரியர்களுக்கு வாய்ப்பளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், அவர்களுக்குத் தேர்வு நடத்தப்படும் என்கிற விவரம் மட்டும் இருக்கிறது.

## *Unemployed Post-Graduates.*

*254. *Q.*—Thiru S. MUTHUSWAMI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal with the Government to appoint the unemployed M.Sc., B.Ed. and M.A., Graduates in the Higher Secondary Classes; and

(b) if so, when they will be appointed?



## வேலையில்லாமல் இருக்கும் முதுகலைப் பட்டதாரிகள்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர் செகண்டரி வகுப்புகளுக்கு எம். எஸ். சி., பி. எட்., எம்.ஏ., பட்டம் பெற்று வேலையில்லாமல் இருக்கும் ஆசிரியர்களை நியமனம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

(இ) ஆமெனில், எப்போது நியமனம் செய்யப்படுவார்கள்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) & (இ) மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர் பணியிடங்களுக்குக் கல்வித் தகுதிகளை நிர்ணயித்து அந்தப் பணியிடங்களை உயர்நிலைப் பள்ளிகளில் பணியிலுள்ள ஆசிரியர்களைக் கொண்டு நிரப்ப ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாறு பணியிலுள்ள ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பப்பட்ட பணியிடங்கள் போக மீதமுள்ள இடங்களை முதுகலைப் பட்டத்துடன் பி.எட். பட்டம் பெற்றவர்களையும், பி.எட். பட்டம் பெறாதவர்களையும் கொண்டு நிரப்ப வழி வகை செய்யப்பட்டுள்ளது. தற்போது தோற்றுவித்துள்ள சுமார் 1,300 பணியிடங்களில் முதுகலைப் பட்டம் பெற்று வேலை இல்லாதிருக்கும் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

**திரு. செ. முத்துசாமி:** கடந்த ஆண்டு முதல் பிளஸ் 1 வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு பிளஸ் 2 வருகிறது. அப்படி வரும்போது, புதிதாக எம்.எஸ்சி., எம்.ஏ. படித்திருப்பவர்கள் ஏற்கெனவே கொஞ்சம் பேர் தான் இருக்கிறார்கள். பி.எட். படித்துவிட்டு கொஞ்சம் பேர் இருக்கிறார்கள். அப்படி படித்துவிட்டு இருக்கக்கூடியவர்களுக்கு இப்பொழுது வரக்கூடிய புதிய வேலைவாய்ப்பில் முன்னுரிமை தரப்படுமா? அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா? ஏற்கனவே இருக்கக்கூடியவர்கள் Post-Graduates, வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதை கவனத்தில் கொண்டு அவர்களைப் புதிய பணியிடங்களில் அமர்த்திக்கொள்ள ஏற்பாடு செய்ய மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** புதிய பணியிடங்களில் வேலையில்லாதிருக்கும் தகுதியுள்ள பட்டதாரிகளை நியமிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** கல்லூரிகளிலே எம்.ஏ., எம்.எஸ்சி. படித்து வருகிற அனைவருக்கும் வேலைவாய்ப்பு கிடைப்பதில்லை. ஆனால், மேல்நிலைப் பள்ளிகளில் நியமிக்கப்படுகின்றவர்கள் எம்.ஏ., எம்.எஸ்சி., பட்டத்தோடு

பி.எட். பட்டமும் பெற்றிருக்கவேண்டும். எம்.ஏ., எம்.எஸ்ஸி. பட்டத்தோடு மேல்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு ஒரு சம்பள விகிதமும் வெறும் எம்.ஏ., எம்.எஸ்ஸி., போன்ற ஏதாவது பட்டத்தைப் பெற்று கல்லூரிகளிலே பணியாற்றுகின்றவர்களுக்கு இன்னொரு சம்பள விகிதமும் இருக்கிறது. எம்.ஏ., எம்.எஸ்ஸி. படித்து கல்லூரிகளில் பணியாற்றினால், அவர்களுக்கு 700 ரூபாய் அடிப்படைச் சம்பளம் வழங்கப்படுகிறது. ஆனால், எம்.ஏ., எம்.எஸ்ஸி., பட்டத்துடன் பி.எட். பட்டமும் பெற்று, மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 675 ரூபாய் தான் வழங்கப்படுகிறது. மேல்நிலைப் பள்ளிகளிலும் பி.எட். பட்டம் இல்லா விட்டாலும் எம்.ஏ., எம்எஸ்ஸி., பட்டம் பெற்றிருந்தால், அவர்களை நியமித்து மற்றவர்களுக்கு வழங்கப்படுவது போல் ஊதியம் வழங்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மேல் நிலைப் பள்ளிகளுக்கு பி. எட். என்ற பட்டம், தகுதி மிகவும் இன்றியமையாததென்று இந்த அரசு கருதுகிறது.

திரு. செ. முத்துசாமி : மேல்நிலைப் பள்ளிகளில் பி. எட்., தகுதி இன்றியமையாதது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். எம்.எஸ்ஸி. படித்துவிட்டு கல்லூரிகளிலே பணியாற்றுகின்றவர்களுக்கு 700 ரூபாய் அடிப்படைச் சம்பளமும், எம். எஸ்ஸி.க்குப் பிறகு பி.எட்., என்கிற இன்னொரு பயிற்சி முறையை, கல்வித் தகுதியைப் பெற்றிருப்பவர்களுக்கு 675 ரூபாய் அடிப்படைச் சம்பளமும் ஒரே கல்வித் துறையில் தருவதும் 25 ரூபாய் இவர்களுக்கு குறைத்துத் தருவதும் சரிதானா ? அப்படி சரியில்லாத ஊதிய விகித முறையை ஊதியக் குழு வெளியிட்டிருப்பதால் அதை உயர்த்தி யமைப்பதற்கு கல்வித்துறையும், நிதித்துறையும் முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்பொழுது கல்லூரிகளிலே முதுகலைப் பாடத்தில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு என்றும்; அதோடு "எம்.பில்" பட்டமும் பெற்றிருக்கவேண்டுமென்ற முறையில் வைத்திருக்கிறார்கள். இங்கே முதுகலைப் பட்டம் பெற்றிருந்தால் போதும் என்கிற அடிப்படையிலே, அந்த வித்தியாசத்தையும் நாம் பார்க்க வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : எம்.ஏ., எம்.எஸ்ஸி., படித்து விட்டு தொடக்க, நடுநிலைப் பள்ளிகளிலே பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும் வாய்ப்பளிக்கக்கூடிய வகையிலே ஒரு பெர்சன்டேஜாவது பணியிடம் ஒதுக்கி, மிகக் குறைந்த எண்ணிக்கையிலே இருக்கக்கூடிய அவர்களுக்கும் மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்ற வாய்ப்பு அளிக்கப்படுமா ?





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்தப் பணியிடங்களுக்கு நாம் ஆட்களை எடுக்கின்றபோது, அவர்களும் விண்ணப்பித்து அந்த வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்யலாம்.

## *Text Books.*

* 255. *Q.*—Thiru K. RAMAMOORTHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to constitute a Committee to review the standard of the lessons prescribed in the text books for High School students ; and

(*b*) if so, the stage at which the matter now stands ?

### பாடப் புத்தகங்கள்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களில் வரையறுக்கப்பட்ட பாடங்களின் தரத்தை ஆய்வு செய்வதற்காக குழு ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) & (இ) 10 ஆண்டுப் பள்ளிப் படிப்பின் அடிப்படையில் அமைந்த பாடத்திட்டங்களின் சுமை தொடக்கப் பள்ளிகளிலும் சரி, உயர்நிலைப் பள்ளிகளிலும் சரி, அதிகமாக இருப்பதாக முறையீடுகள் வந்தன. எனவே அச்சுமையைக் குறைப்பது பற்றி பாடத் திட்ட வல்லுநர் குழுக்களுடன் கலந்து ஆய்வு செய்யப்பட்டது. அக்குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1978-79 முதல் உயர்நிலைப் பள்ளி வகுப்புக்கள் உட்பட அனைத்து வகுப்புகளிலும் பல்வேறு பாடங்களின் சுமை தக்க அளவுக்கு குறைக்கப்பட்டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி : பாடத் திட்டங்கள், சில நேரங்களில் சில ஆண்டுகளுக்கு ஒரு முறையும், இன்னும் சில நேரங்களில் ஒவ்வொரு ஆண்டும் மாற்றியமைக்கப்பட வேண்டிய அவசியம் இருப்பதால், இந்தக் குழுவை நிரந்தரமாக அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தேவை இருக்கும்பொழுது, நாம் அதை அமைப்பதில் எந்தவித சிரமமும் இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** பாடத் திட்டக் குழுவை அமைக்கின்றபோது, தொடக்கக் கல்வி, நடுநிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி போன்ற ஒவ்வொரு நிலையிலும் அனுபவம் பெற்ற தொடக்கக் கல்வி ஆசிரியர்களைக்கூட அந்தக் குழுவிலே சேர்த்து அவர்களும் அதில் இடம் பெறச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** சிறந்த ஆசிரியர்களை இத்தகைய முயற்சிகளிலே சேர்த்துக்கொள்வதில் அரசுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை.

* 256. *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have received any complaint that the History and Economics text books for Higher Secondary Schools published by the Tamil Nadu Text Book Society, contain objectionable matters; and

(b) if so, the action taken to remove those portions?

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ள மேல் உயர் நிலைப் பள்ளிக் கல்விப் பாடப்புத்தகங்களில், வரலாறு, பொருளாதாரம் ஆகிய பாடநூல்களில் ஆட்சேபகரமான கருத்துக்கள் இருப்பதாக அரசுக்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அப்பகுதிகளை நீக்குவதற்கு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) மேல்நிலைப் பள்ளி முதலாம் ஆண்டுக்காக வெளியிடப்பட்டுள்ள பாடப் புத்தகங்களில் 'வரலாறு நூலில்' 'இந்திய சமுதாயம்' என்ற ஏழாவது அத்தியாயத்தில் மட்டும் ஆட்சேபகரமான கருத்துக்கள் இருப்பதாகத் தெரிய வந்தது. பொருளாதாரப் பாட நூல் பற்றி இதுவரை புகார் ஏதும் வரவில்லை.

(இ) ஆட்சேபகரமானதாகக் கருதப்பட்ட 7-வது அத்தியாயம் நீக்கப் பட்டு விட்டது.

அதோடுகூட இஸ்லாமிய சமுதாயத்தைப் பற்றி இருந்த அந்தப் பகுதியும் இப்பொழுது அண்மையில் ஒரு உத்தரவின் மூலம் நீக்கப்பட்டிருக்கிறது.



**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இது போல் இன்னும் பல ஆட்சேபகர மான கருத்துக்கள், இந்தப் புத்தகங்களில் மிக நுணுக்கமாக மறைபொருளாக எழுதப்பட்டிருப்பதாக அந்தப் புத்தகங்களைச் சொல்லிக் கொடுக்கின்ற ஆசிரியர்களே சொல்லியிருக்கிறார்கள். அவை அனைத்தையும் பரிசீலனை செய்து அப்படிப்பட்ட ஆட்சேபகரமான கருத்துக்களை எல்லாம் நீக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசு தகுதி படைத்த ஆசிரியர்களை, பேராசிரியர்களை நியமித்து இத்தகைய புத்தகங்களை எழுதச் சொல்கிறது. அந்த ஆசிரியர்கள் புத்தகங்களை எழுதிய பிறகு, அந்தப் புத்தகங்களை 'review' செய்வதற்கு ஒரு குழு போடப்பட்டு, அந்தக் குழுவால் அந்தப் புத்தகங்கள் 'review' செய்யப்பட்டதற்குப் பிறகுதான், அந்தப் புத்தகங்கள் வெளி வருகின்றன. அப்படி வெளியிடப்பட்ட பிறகு பொதுமக்களிடமிருந்து ஏதாவது ஆட்சேபணைகள் வருமேயானால், அந்த அடிப்படையிலே நாம் இந்தப் புத்தகங்களிலே சிலவற்றை நீக்குவதற்கான முயற்சியிலே ஈடுபடுகிறோம். அரசே அந்த முயற்சியில் தானாக முன் வந்து ஈடுபடுமேயானால், அரசே புத்தகங்களை வெளியிடுவது போன்ற ஒரு எண்ணம், நிலை வந்துவிடும். அது அறிவு வளர்ச்சிக்கோ, கல்வி வளர்ச்சிக்கோ ஏற்றதாகாது.

**திரு. க. இராமமூர்த்தி:** இது போன்ற பாடப் புத்தகங்களை எழுதுகிறவர்கள் ஆட்சேபகரமான கருத்துக்களைத் தெரியாமல் எழுதி வெளியிடுவது என்பது வேறு. ஆனால் இந்தக் கருத்துக்கள் பாடப் புத்தகங்களில் இடம் பெறுகின்ற அளவுக்கு அவர்கள் எழுதுவதன் மூலம் சமுதாயத்தைக் கெடுக்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, அரசு அப்படிப்பட்டவர்கள் மீது எத்தகைய நடவடிக்கை எடுத்துவருகிறது அல்லது எடுக்க முன் வரும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இதைப் பற்றி நான் ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். எழுதுகிறவர்கள் தெரியாமல் எழுதுகிறார்கள் அல்லது வேண்டுமென்றே எழுதுகிறார்கள் என்பதல்ல உண்மை நிலை. கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கு சிலவற்றை விரிவாக, 'Merits and demerits' என்று சொல்லுவார்களே அது போல் நல்லது கெட்டது இரண்டையும் விளக்கமாகச் சொல்லிக்கொடுக்க வேண்டியிருக்கிறது. அதற்குத் தகுதி படைத்தவர்களாகவும் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் நல்லவற்றை மட்டுமே சொல்லிக் கொடுத்து வளர்க்க வேண்டிய இந்தப் பருவ மாணவர்களுக்கு அப்படிச் சொல்லிக்கொடுத்த முறையில் ஏற்பட்ட சிறு தவறு தான் இங்கே நிகழ்ந்திருக்கிறது. அதைக் கல்லூரி ஆசிரியர்களைக் கொண்டு

எழுதச் சொன்ன காரணத்தினால் ஏற்பட்ட ஒரு தவறுதலாகக்கூட இருக்கலாம். ஆனால் நாம் விரும்புவது என்னவென்றால், புத்தகங்களை எழுதுகின்றவர்கள் நாம் எந்தப் பருவ மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களை எழுதுகிறோம் என்பதைக் கருத்திலே கொண்டு எழுதினால், இத்தகைய தவறுகள் நிச்சயமாக ஏற்படாது. இப்படித் தவறுகள் ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்பதையும் நாம் ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். அதைத் தடுப்பதற்கான நடவடிக்கையையும் இந்த அரசு எடுக்கும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இதேபோல மேல்நிலைப் பள்ளிகளுக்காக வெளியிடப்பட்டுள்ள பாடப் புத்தகங்களில் மிக அதிகமான பாடங்கள், சேர்க்கப்பட்டிருப்பதாக கல்லூரி ஆசிரியர்கள்கூட கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். தேவைக்கு அதிகமான பல அம்சங்கள் அதிலே இருக்கின்றன. இதெல்லாம் மிகவும் சுமையானவை, அந்த மாணவர்களால் அந்தப் பாடச் சுமைகளைத் தாங்க முடியாது என்று அவர்கள் கருதுகிறார்கள். அதனால் இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, அது மறு பரிசீலனை செய்யப்படுமா? மேலும் இனிமேல் புத்தகங்களை எழுதும்போது, அனுபவம் மிக்க பள்ளிக் கூட ஆசிரியர்களுடைய ஊழியத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இதுபற்றிக் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. புத்தகங்கள் பருமனாக இருக்கின்ற காரணத்தாலேயே, பாடச்சுமை அதிகம் என்கின்ற கருத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இன்றைக்கு கல்வி வளர்ந்துகொண்டு வருகின்ற நிலைமையிலே தேவையான அளவுக்கு 11-வது வகுப்பில் நாம் கல்வியைச் சொல்லித்தர வேண்டும். அப்புறம் 12-வது வகுப்பிலேயும் அதேபோல் கொஞ்சம் அதிகமாகச் சொல்லித் தரவேண்டும். இப்படி நாம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகப் பாடங்களை மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தால்தான், மற்ற நாடுகளில் இருக்கின்ற மாணவர்களுக்கு சமமான மாணவர்களை நாம் தயார் செய்ய முடியும். ஆனால் பாடச்சுமை அதிகம் என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டு நம் பாடப்புத்தகங்களில் இருக்கக்கூடிய பாடங்களைக் குறைத்துக் கொள்வது நியாயமாகாது. அதுமட்டுமல்ல, இப்பொழுது நாம் வேறொரு மொழியின் மூலம் படிக்கின்ற நிலை இருப்பதால் தான் பாடச் சுமை என்று சொல்லுகிறார்கள். ஆகவே அந்தத் தவறை உணர்ந்தால், இப்பொழுது இருக்கின்ற பாட முறையில் சுமை இருப்பதாகக் கருத முடியாது.

(பிற்பகல் 4-30)

**திரு. பி. ஆர். தாமஸ் :** வரலாற்றுப் பாடப் புத்தகத்தில் ஆரியர்களுடைய வரலாறு பத்தியும், அவர்களின் இந்திய வருகையைப்பற்றியும் குறிப்பிடும் பகுதிகளில் மனம் புண்படக்கூடிய வகையில் சில வார்த்தைகள் பயன்படுத்தப்



பட்டிருப்பதாகக் கூறப்படுவது கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா? கொண்டுவரப்பட்டிருந்தால், அதுகுறித்து அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படிப்பட்ட விவரம் என் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

**திரு. செ. முத்துசாமி :** வரலாற்றுப் பாடத்தைப் பொறுத்தவரையில், மதத்தைப்பற்றியும், வேண்டாத ஆத்திகத்தின் வரலாறு பற்றியும் விவரங்கள் சொல்லப்படுகின்றன. இது ஒரு மதச்சார்பற்ற நாடு. தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி வருகிற இந்த நேரத்தில் பகுத்தறிவு இயக்கத்தின் வரலாறும் சரித்திரப் பாடத்தில் இடம் பெறச் செய்ய அரசுக்கு எண்ணமுண்டா? அவ்வாறு இடம்பெறச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையையும் இந்த நேரத்தில் வைத்து, இதனை செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான யோசனையை, வரலாற்றுப் புத்தகங்கள் எழுதுகிற பேராசிரியப் பெருமக்களின் கவனத்திற்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நூல்களில் உள்ள பகுதிகளில் சில தவறுகள் ஏற்படுவதற்குக் காரணம், துவக்கப் பள்ளிக் குழந்தைகளுக்குரிய புத்தகங்களைக் கல்லூரி ஆசிரியர்களைக் கொண்டு எழுதுவதால் ஏற்படுவதாக இருக்கலாம் என்ற கருத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். நானேகூட முன்னாலே இத்தகைய கருத்தைத்தான் இந்த அவையிலே தெரிவித்திருக்கிறேன். துவக்கப் பள்ளிப் பிள்ளைகளுக்கான புத்தகங்களை எழுதும்போது, துவக்கப் பள்ளிகளில் பல ஆண்டுக்காலம் பணியாற்றிய அனுபவம் மிக்கவர்களையும், அதைப்போல அந்தந்த நிலையில் பணியாற்றி அனுபவம் பெற்ற ஆசிரியர்களையும் குழுவாக அமைத்து புத்தகங்கள் எழுதப்பட வைத்தால், இதுபோன்ற தவறுகள் நிகழாமல் இருக்குமென்பதால், அரசு இத்தகைய முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை நான் மறுக்கவில்லை; நல்ல யோசனை என்று ஏற்றுக் கொள்கிறேன்.

Thiru A. R. DAMODARAN : Sir, in certtin schools an hour is set apart for the teaching of something as 'moral ethics'. Similarly, instead of introducing controversial material

into text-books, may I know if a special hour may be dedicated to those students who are interested in the philosophy of Periyar Ramaswami, so that they may attend those classes, if they feel like it, because we do not want to wound the religious susceptibilities of many other people who may not agree with such a philosophy?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மேல்நிலைப் பள்ளிகளில், Moral and Social Education என்கிற பாடத்தை, வாரத்திற்கு ஒரு மணி நேரம் சொல்லித்தர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காகவே ஒரு புத்தகமே போடப்பட்டிருக்கிறது. அது வெறும் நீதிபோதனைப் பாடமாக அமையாமல், சமூகக் கடமையையும் உணர்த்த வேண்டுமென்ற அடிப்படையில் நாம் அந்தக் கல்வியைத் தந்து வருகிறோம்.

**புலவர் புலமைப்பித்தன்:** தேவையில்லாத மதக் கருத்துக்களை வகுப்புகளில் சொல்லித் தருவதால், என்னுடைய மனம் புண்படுகிறது என்ற காரணத்திற்காக, முழுமையாக அது பாடப் புத்தகங்களிலிருந்து நீக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** உலகத்தைப்பற்றி நாம் தெரிந்து கொள்ளுவதுதான் அறிவு பெறுவதற்குரிய அடையாளமாகும்.

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்:** இத்தகைய புத்தகங்களை எழுதும் பணி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும்போது, ஒரு பக்கத்திற்கு இவ்வளவு ரூபாய் என்று ஊதியம் தரப்படுகிற காரணத்தால், அதிகமான பக்கங்களை எழுதி புத்தகங்களில் அதிகமான பக்கத்தை இடம்பெறச் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு இருந்து வருகிறது. இது உண்மையா? உண்மையென்றால் இனியாவது பக்கத்திற்கு இவ்வளவு தொகை என்று தரப்படாமல், ஒரு புத்தகம் எழுதினால், அதற்கு இவ்வளவு தொகை என்று நிர்ணயிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அந்த முறையினைப் பின்பற்றினால், அது வேறு வகையிலே புத்தகத்தைப் பாதிக்கும். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் வாராத அளவுக்கு புத்தகங்களை எழுதுகிற ஆசிரியப் பெருமக்கள் நடந்துகொள்ள வேண்டுமென்பதுதான் நம்முடைய விருப்பமாகும்.



*Failure of Monsoon.*

*257. Q.—Thiru A. DRAVIDAMANI (on behalf of THIRU M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(a) the extent of lands wherein first crop was not rttsed in Kanyakumari district due to the failure of the monsoon; and

(b) the type of help extended to the affected agriculturists?

பருவமழை தவறுதல்.

**திரு. ஆ. திராவிடமணி (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்):** மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978 ஆம் ஆண்டு பருவமழை தவறியதால், கன்னியாகுமரி மாவட்டத்தில் முதல்போக பயிர் செய்யப்படாத நிலத்தின் பரப்பளவு எவ்வளவு?

(இ) இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, அரசு என்ன வகையில் உதவி செய்துள்ளது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) 1978 ஆம் ஆண்டு பருவ மழை தவறியதால் கன்னியாகுமரி மாவட்டத்தில் முதல்போகம் பயிர் செய்யப்படாத நிலத்தின் பரப்பளவு 4,121.78 ஹெக்டேர் ஆகும்.

(இ) முதல்போகம் பயிர் செய்யப்படாததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசினால் உதவி ஏதும் செய்யப்படவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** பயிர் செய்யாமல் விடப்பட்ட நிலப்பரப்பு தவிர, மழையின்மை காரணமாகவும், மழை தவறியதன் காரணமாகவும், பயிரிட்டும் நட்டம் அடைந்தவர்களின் மொத்த நிலப் பரப்பு என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** அதுபற்றி அரசுக்கு எவ்விதமான தகவலுமில்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** பயிரிட்டு நஷ்டமடைகிற விவசாயிகளுக்கும், மழையின்மை காரணமாக பயிரிடாமல் கஷ்டப்படுகிற விவசாயிகளுக்கும் பயிர் பாதுகாப்புத் திட்டம் (Crop Insurance) கொண்டு வருவதற்கு இதுவரை

அரசு என்ன முயற்சி செய்திருக்கிறது? மத்திய அரசுதான் பயிர் பாது திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்றாலும், இந்த அரசு மத்திய அரசிடம் வற்புறுத்தி, அதைக் கொண்டுவருவதற்கு எடுத்திருக்கிற முயற்சிகள் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பயிர் செய்பவர்கள்தாம் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தில் பங்கு பெற முடியும். பயிர் செய்யாமல் விட்டுவிடுகிறவர்கள் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தில் பங்கு பெற முடியாது. மூலக் கேள்வி பயிர் செய்யப்படாத நிலத்தின் சொந்தக்காரர்களான விவசாயிகளுக்கு அரசு என்ன வகையில் உதவி செய்துள்ளது என்பதுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கக்கூடிய கேள்வி பயிர் செய்தவர்கள் மழையின்மையால் பாதிக்கப்பட்டால், அவர்களுக்கு என்ன பாதுகாப்பு என்பதாகும். இந்த அரசு தேர்தல் காலத்திலே பொதுமக்களுக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறது. அதற்குப் பிறகு வாக்குறுதியைச் செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு இதுகுறித்து மத்திய அரசோடு தொடர்பு கொண்டிருக்கிறோம். மைய அரசின் உதவியோடு அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று அதற்குரிய நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறோம்.

## *Buckingham Canal.*

* 258. *Q.*—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state:

(a) whether the Tamil Nadu Government have made any recommendation for the improvement of Buckingham Canal, to the Central Government; and

(b) if so, the details thereof?

### பக்கிங்ஹாம் கால்வாய்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அரசு, "பக்கிங்ஹாம் கால்வாய்" மேம்பாட்டிற்காக மத்திய அரசுக்கு பரிந்துரை ஏதும் செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(இ) 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் ரூ. 560 இலட்சம் செலவில் திட்டம் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. அதை இரண்டு



ஆண்டுகள் கழித்து பரிசீலிக்கலாம் என மத்திய அரசு கூறிவிட்டது. இத்திட்டத்தை மீண்டும் மத்திய அரசிற்கு அனுப்ப தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: பக்கிங்ஹாம் கால்வாயை மேம்பாடு செய்யாத காரணத்தால், சென்னை நகரில் அக்கால்வாயின் ஓரங்களிலுள்ள பகுதிகளில் மிகுந்த துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கிறது. வீராணம் திட்டத்தை ஏறத்தாழக் கைவிட்டுவிட்ட நிலையில் அரசு இருப்பதால், அத்திட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்ட பெரிய பெரிய குழாய்களைப் பயன்படுத்தி இந்தக் கால்வாய் நீரைக் கொண்டு வருவதற்கு ஏற்ற வகையில் மாற்றுத் திட்டம் ஒன்றைப் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இந்தக் கேள்வி பக்கிங்ஹாம் கால்வாயைப் பொறுத்ததாகும். பக்கிங்ஹாம் கால்வாயைச் சீரமைக்க 1976 ஆம் ஆண்டில் 560 லட்சம் ரூபாய் அளவில் ஒரு மதிப்பீடு தயார் செய்து—மாஸ்டர் பிளான் தயார் செய்து—அந்தத் திட்டத்தை மைய அரசுக்குக் கொடுத்திருக்கிறோம். அந்தத் திட்டம் மைய அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அவர்கள் அத்திட்டத்தைப் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பரிசீலிக்கலாம் என்று அப்போது சொன்னார்கள். அதற்காக 3 மாதங்களுக்கு முன்பாக டெல்லியில் நடைபெற்ற 'Inland Water Transport' கூட்டத்தில் கலந்துகொண்டு, மைய அரசின் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் பேசி ரூ. 560 லட்சத்திற்கான மதிப்பீட்டை Sanction செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள்.

வீராணம் திட்டத்தைப் பொறுத்தவரையில், அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இருக்கிற குழாய்களை என்ன செய்யலாமென்றும், அந்தத் திட்டத்தைப்பற்றி என்ன செய்யலாமென்றும் அரசு முடிவெடுக்க வேண்டிய தருணத்திலிருக்கிறது. மேலும் கூவம் ஆற்றுத் திட்டமும் பக்கிங்ஹாம் கால்வாய்த் திட்டமும் both of them are inseparable and inter-connected அதனால் கூவத்தையும், அதே நேரத்தில் பக்கிங்ஹாம் கால்வாயையும் சீரமைக்கும் நோக்கத்தோடு இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தக் கால்வாயைச் சீரமைத்துவிட்டால் 'Inland Water Transport' மூலமாக நாளொன்றுக்கு 100 டன் எடையுள்ள படகுகளின் மூலம் பொருள்களின் போக்குவரத்தை உறுதி செய்ய முடியும். எனவே இந்த அளவுக்கு இந்தத் திட்டத்தை அமுல்படுத்த மைய அரசின் பச்சைக் கொடியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

THIRU G. VASANTHA PAI: Sir, will the Government at least consider in the interregnum the desirability of protecting either side of the Buckingham Canal from inroads and defecation by the public?

(பிற்பகல் 4-40)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இருபுறங்களிலுள்ள கரைகளிலும் ஆக்கிரமிப்பு இருந்துகொண்டிருக்கிறது. இந்த ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்தாலும், மீண்டும் மீண்டும் தொடர்ந்து ஆக்கிரமிப்பு நடந்துகொண்டுதான் இருக்கிறது. இருந்தாலும் அரசு ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென்று நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: பக்கிங்ஹாம் கால்வாய் திட்டத்தில் பணியாற்றக்கூடிய தினக்கூலிகள் தங்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று 5—3—1979 முதல் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை அரசு கவனித்து, நிறைவேற்ற முனைந்து, அவர்களது மனதைக் குளிரச் செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இது ஏற்கனவே அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லாம் N.M.R. ஆக, தினக்கூலிகளாக வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு வேலை காப்புறுதி வேண்டுமென்று கேட்கிறார்கள். நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அப்படி தமிழ்நாடு முழுவதும் எல்லோரையும் நிரந்தரமாக்க வேண்டுமென்று சொன்னால், நம்முடைய நிதி நிலையை எல்லாம் பார்த்துத் தான் செய்ய வேண்டும். நிதி நிலையைப் பொறுத்தவரையில், நமக்கு ஒரு பெரிய சங்கடம் இருக்கிறது. ஆகவே, இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. சி. இராமலிங்கம்: பக்கிங்ஹாம் கால்வாய் காக்கிநாடாவிலே இருந்து கடலூர் வரை இருக்கிறது. நாங்கள் எல்லாம் சின்னப் பிள்ளைகளாக இருந்தபோது, படகிலேதான் திருப்போரூருக்குச் செல்வோம். அந்தக் கால்வாயை தூரெடுக்கவேண்டும். இரு கரைகளிலிருந்தும் கடல் நீர், உப்பு நீர் ஒட்டியம்பாக்கம், நாவலூர் போன்ற ஊர்களுக்கு உள்ளே வருகிறது, அதனால் விளைச்சல் பாதிக்கப்படுகிறது என்று, அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, பரங்கிமலைத் தொகுதி உறுப்பினராக இருந்த புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு திட்டத்தை அண்ணாவிடம் கொடுத்தார்கள். அண்ணா அவர்கள் காலத்திலே அந்தத் திட்டத்திற்கென்று



ரூ. 35 லட்சம் ஒதுக்கினார்கள். அந்தப் பணம் செலவு செய்யப்பட்டதா, அந்த உப்பு நீர் கடலிலே இருந்து உள்ளே வந்து புகாமல் இருப்பதற்கு வழியிருக்கிறதா?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: பூரா திட்டத்தையுமே சொல்லி முடித்து விட்டீர்களே.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் இருந்த காலத்திலே 4—7—1967-லே 'கூவம் மணக்கும்' அதற்கு ஒரு திட்டம் என்ற அடிப்படையிலே ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதற்காக ஏறத்தாழ 118.50 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்தார்கள். மீண்டும் 1971-லே, அண்ணா அவர்கள் மறைந்த பின்னர், ரூ. 118.50 லட்சம் என்று இருந்த அந்தத் திட்டத்தை மாற்றி ரூ. 194.75 லட்சம் என்கின்ற அளவிலே திருத்திய மதிப்பீடு கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு 1974-லே அந்தத் திட்டம் முடிவடைந்தது. இங்கே இருக்கக்கூடிய சென்னைவாசிகள் மற்றும் வெளியிலே இருந்து வருகின்றவர்களும் 'கூவம் மணக்கும்' என்று எதிர் பார்த்தார்கள். ஆனால் மணப்பதற்குப் பதிலாக மனதைக் குமட்டுகின்ற ஒரு நிலைமைதான் இருக்கிறது. அந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்று அரசு பாடுபட்டுக்கொண்டிருக்கிறது.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: தலைவர் அவர்களே, 'கூவம் மணக்கும்' என்ற முறையிலேதான் பேசுகிறார்களே தவிர, நிலைமையைப் பார்த்தால், கடைசியிலே அவர்கள் சொன்ன 'மனதைக் குமட்டுகின்ற' நிலை தான் இருக்கிறது. இதை ரொம்ப காலமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். நியூ ஹாஸ்டலின் வடக்குப் பக்கத்திலே தாங்க முடியாத நாற்றம். நீங்கள் ஒரு நாள் வந்து பார்த்தால் தெரியும். நாங்கள் மக்கள் தானா? இல்லை அங்கே காலையிலே வைத்து பால் கறக்கிறானே அந்தக் கறுப்பு * *

மாண்புமிகு மேலவைத் தலைவர்: * * என்ற வார்த்தையை எடுத்துவிடலாம்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: அந்தக் கறுப்பு * * என்று சொன்னேன். எப்படியும் நல்லது செய்ய வேண்டும். இங்கே இருக்கிற தண்ணீரை சமுத்திரத்திலே கொண்டு போய் சேர்க்க வேண்டும். 150 லட்சம், 200 லட்சம் ரூபாய் என்றெல்லாம் மதிப்பீடு போடுகிறார்களே தவிர, இதைச் செய்ய முடியவில்லை. ஆகவே, இதற்கு ஒரு வழி செய்யப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

---

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, Madras Metropolitan Water Supply and Sewerage Board மூலமாக குழாய்கள் அமைத்து, கழிவுகளை எல்லாம் அகற்றி, ஒரு ஓரத்திற்குக் கொண்டு போய் அங்கிருந்து வெளியேற்றுகின்ற ஒரு திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அப்படிச் செய்துவிட்டால் மனதைக் குமட்டுகின்ற துர்நாற்றத்தை ஓரளவுக்கு போக்க முடியுமென்று நம்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த துர்நாற்றத்திற்கு மிக முக்கிய காரணம் இந்த நீரைக் கடல் வாங்காததுதான். பக்கிங்ஹாம்-கூவம் ஆற்று நீரை கடல் வாங்குகின்ற அளவிலே பம்புசெட்டுகள் வைத்து இறைப்பதற்கு—மற்ற திட்டங்கள் எல்லாம் பின்னால் வந்தாலும்கூட—உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** நான் சொன்ன 'மாஸ்டர் ப்ளான்' மத்திய அரசாலே அங்கீகரிக்கப்பட்டால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய யோசனைகள் எல்லாம் கவனிக்கப்படும்.

(உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இது கேள்வி கேட்கும் நேரம். அந்தக் கேள்வி முடிந்துவிட்டது. உட்காருங்கள்.

## *Namakkal Government Hospital.*

* 259. *Q.*—THIRU A. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) whether the Government have received any comp'aint about the irregularities in the Government Hospital, Namakkal, around 24th October 1977 ;

(b) if so, the action taken thereon; and

(c) if no action has been taken, the reason therefor ?

### நாமக்கல் அரசினர் மருத்துவ மனை.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாமக்கல் அரசினர் மருத்துவமனையில் நடக்கும் முறைகேடுகள் பற்றி 24—10—1977 ஆம் தேதியளவில், அரசுக்குப் புகார் ஏதும் வந்துள்ளதா ?





(இ) ஆம் எனில், என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது ?

(உ) நடவடிக்கை எடுக்கவில்லையெனில் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** (அ) ஆம்.

(இ) சட்டமன்ற மேலவை உறுப்பினர், திரு. ஆ. பாலசுப்ரமணியம் கொடுத்த புகார் கடிதத்தில் நாமக்கல் மருத்துவமனையின் தலைமை மருத்துவரும் தலைமைச் செவிலியரும் திறமையற்றவர்களாகவும், தகுதியில்லாமல் இருப்பதாகவும், நேர்முகமாகவும், மறைமுகமாகவும் அல்லது மருத்துவமனை ஊழியர்கள் மூலமாகவும் பொது மக்களிடமிருந்து கையூட்டு பெறுகிறார்கள் என்று குறிப்பிட்டிருந்தார். மேலும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்கள் யாவும் தலைமைச் செவிலியர் இல்லத்திற்கு கடத்திச் செல்லப் படுகின்றன என்ற குற்றச்சாட்டுக்கள் குறித்து சேலம் மாவட்ட மருத்துவ அதிகாரி இரகசிய விசாரணை செய்தார். தலைமைச் செவிலியரின் மேற் பார்வைக்கு உட்பட்ட உணவுப் பொருட்களை கடத்திச் செல்லப்பட்டு வருகிறது என்ற உண்மை தெரியவந்தது. இதனை புலனாய்வுத் துறைக்கு விட அரசு முடிவு செய்துள்ளது. புலனாய்வுத் துறையின் பரிந்துரை கிடைத்தவுடன் அரசு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கும். இருந்தபோதிலும் மாவட்ட அதிகாரியின் ரகசியக் குறிப்புரைக்கிணங்க அவ்விருவரையும் வரும் ஏப்ரல் திங்களில் வேறு இடங்களுக்கு மாற்றல் செய்வதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** அவர்கள் எந்த இடத்திற்கு மாறுதல் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** புலனாய்வுத் துறையிலிருந்து இன்னும் அது பற்றிய விவரம் வரவில்லை. வந்ததற்குப் பிறகுதான் மாற்ற இருக்கிறார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்தக் குற்றச்சாட்டிலே ஒரு *Prima facie* case இருந்திருக்கிறது. இந்தக் குற்றம் உண்மை என்று மேலெழுந்தவாரியாகத் தகவல் இருக்கிறது. ஆகவே, இந்தக் குற்றம் புரிந்த அதிகாரிகளை மாற்றுவதில் அரசுக்கு என்ன தயக்கம், ஏன் அவர்கள் மாற்றப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: தலைமை செவிலியர் சரோஜினி வர்மாமீது புகார் கடிதத்தில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சரியான, அத் தாட்சிகளுடன் நிரூபிக்க முடியாத நிலையில் உள்ளதால், அவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் ஆதாரங்களுடன் மெய்ப்பிக்கப்படவில்லை யெனக் கருதி, வரும் ஏப்ரல் மாதம் வேறு இடத்திற்கு மாற்றலாம் என்று முடிவெடுத்து, புலனாய்வுத் துறையின் மூலம் விசேஷ நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: தற்போது இருவருமே இந்த மருத்துவ மனையில் இல்லை.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: நான் அந்த மாவட்டத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர் கள் பேசினார்கள். நம்மையெல்லாம் நன்றாக வைத்திருக்கக்கூடிய ஒரு துறைக்குப் பொறுப்புள்ள மந்திரி. அவர் பேசும்போது 'கையூட்டு' என்று சொன்னார். 'கையூட்டு' என்றால் என்ன என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: 'கையூட்டு' என்பதற்கு லஞ்சம் வாங்குவது என்பது பொருள்.

(பிற்பகல் 4-50)

## *Thirukkannapuram Government Hospital.*

* 260 *Q.*—THIRU Ku. Ma. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Health be pleased to state:

(a) whether Medical Officers are permitted to stay in Government Hospitals; and

(*b*) if not, whether the Government are aware of the fact that the Doctor of Thirukkannapuram Government Hospital, Thanjavur district, is staying in that Hospital?

## திருக்கண்ணபுரம் அரசு மருத்துவ மனை.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) அரசு மருத்துவ மனைகளில் அதிகாரிகள் தங்கியிருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?



(இ) இல்லையெனில், தஞ்சாவூர் மாவட்டம், திருக்கண்ணபுரம், அரசு மருத்துவமனையில், அந்த மருத்துவ மனையின் டாக்டர் தங்கியிருப்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: (அ) இல்லை.

(இ) தஞ்சாவூர் மாவட்டம் திருக்கண்ணபுரம் அரசு மருந்தகத்தின் உதவி மருத்துவரை மருந்தகக் கட்டிடத்திலிருந்து காலி செய்து, 20—6—1978 முதல் 4—7—1978 முடிய 15 நாட்களுக்கு அம்மருந்தகத்தில் அவர் தங்கிய தற்கான வாடகைத் தொகையை மாவட்ட மருத்துவ அலுவலர் ஆணைப்படி நன்னிலம் அரசு வங்கியில் செலுத்திவிட்டார்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: இந்தக் கேள்வியைக் கேட்டு ஓராண்டுக்கு மேலாகிறது என்று எனக்கு ஞாபகம். அந்த டாக்டருடைய பெயர் அவரால் பாதிக்கப்பட்டவருடைய பெயர்கூட மறந்துவிட்டது. அந்த டாக்டர் அங்கே தங்கியிருக்கிற காலத்திலே, அங்கு மாற்றலாகிச் சென்ற ஸ்டாப் நர்ஸ்கள், வாரத்திற்கு ஒரு முறை அங்கே மாற்றலை வாங்கும் அளவுக்கு அவர் நடந்து கொண்டார் என்பது உண்மையா? அப்படி நடந்து கொண்டார் என்பதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். கேள்விக்கான பதிலை அளிப்பதில் காலத்தை நீட்டிப்பதால், துணைக் கேள்விகள் கேட்பது குறைகிறது என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா? அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் இருக்க உடனடியாக பதில் அளிக்கும் முறையை அமைச்சர்கள் அனைவரும் பின்பற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கேள்வியைக் கொடுத்தவருக்கு இந்த விஷயத்தில் அழுத்தமான அனுபவம் இருந்தால் மறக்காது.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: கேட்கப்பட்டிருக்கிற கேள்வி, "அரசு மருத்துவமனைகளில் அதிகாரிகள் தங்கியிருப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளதா? இல்லையெனில் தஞ்சாவூர் மாவட்டம், திருக்கண்ண புரம் அரசு மருத்துவ மனையில், அந்த மருத்துவ மனையின் டாக்டர் தங்கி யிருப்பதை அரசு அறியுமா?" என்பதுதான். இந்தக் கேள்விக்குரிய பதிலைத் தான் நான் சொன்னேன். தனியாகக் கேள்வி போட்டால், மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய புதிய பிரச்சினைகளுக்குப் பதில் சொல்லப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் 6—10—1978 அன்றுதான் இந்தக் கேள்வியை அனுப்பியிருக்கிறார்.

[1979 மார்ச் 23

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்னால் தமிழக விவசாய சங்கத்தின் பொதுச் செயலாளர் உண்ணாவிரதம் இருக்கிறார் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேள்வி நேரம் இன்னும் முடியவில்லை.

**புலவர் புலமைப்பித்தன் :** நகரத்தை விட்டு அப்பால் இருக்கிற ஒரு சில ஊர்களில் உள்ள மருத்துவ மனைகளில் இப்படி யாராவது பணியாற்ற வேண்டுமென்று சென்றால், அந்த மருத்துவர்களுக்குச் சரியான வீட்டு வசதி அமைப்பு இல்லாத காரணத்தால், கிராமங்களுக்குச் சென்று பணியாற்ற முடியாத நிலையில் வருந்திக் கொண்டிருக்கிறார்கள். கிராமங்களுக்குச் சென்று மருத்துவர்கள் மருத்துவம் செய்ய வேண்டுமென்று கருதுகிற இந்த அரசு, கிராமப்புறங்களில் சென்று மருத்துவத்தைச் செய்கிற மருத்துவர்களுக்குத் தனியாக வீட்டு வசதியைச் செய்து தர முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** கிராமப்புறங்களிலே உள்ள மக்கள் மருத்துவ வசதியை நல்ல அளவுக்குப் பெற வேண்டுமென்பது இன்றைய தமிழக அரசில் உள்ள முதலமைச்சருடைய நோக்கமாகும். மருத்துவ மனைகளிலேயே மருத்துவர்களுக்குக் குடியிருப்பதற்கு வீடுகளைக் கொடுக்க முடியாத அளவுக்குத் தேவையான இடங்கள் இல்லாத நிலையில் பல மருத்துவ மனைகள் இருக்கின்றன. அத்தகைய மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் தங்குவதற்கான வழிவகை செய்வதற்கு, வீடுகளைக் கட்டுவதற்கான ஒரு ஆய்வு இன்றைக்கு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

## *Breweries.*

* 221. *Q.*—Thiru K. RAMAMOORTHI : Will the Hon. the Minister for Revenue be pleased to state the quantum of arrack brewed by each brewery in Tamil Nadu?

### சாராயத் தொழிற்சாலைகள்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழகத்தில் சாராயம் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் ஒவ்வொன்றும் தனித்தனியே தயாரிக்கின்ற சாராயத்தின் அளவு யாது?

---

@ 20—3—1979 ஆம் தேதிய வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.



1979 மார்ச் 23]

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தமிழகத்தில் 1—9—1974 முதல் 'மதுவிலக்கு' அமுலில் இருப்பதால், இங்குள்ள எந்த வடிசாலையும் சாராயம் தயாரிக்கவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்தச் சாராயத் தொழிற்சாலைகளில் சாராயம் தயாரித்துக் கொண்டு வருவதாகவும், அதிலே இன்றைக்கு மற்ற மாநிலங்களோடு நம்முடைய மாநிலம் போட்டி போட்டு விற்பனை செய்ய முடியாத நிலையிலே சாராயத் தொழிற்சாலைகளை மூடவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்றும் தகவல் பத்திரிகையில் வந்திருக்கிறது. அது உண்மையா, உண்மைக்கு மாறானதா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** சாராயம் எங்கேயும் தயாரிக்கப்படவில்லை என்பதுதான் எனக்கு வந்திருக்கிற தகவல்.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** நான் சென்ற வருடம் பட்ஜெட்டிலே பேசும்போது, அரசே சாராயம் தயாரிக்கிறதே என்று கேட்டபோது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், "அதிலே வருவாய் இருக்கிறது, பிற மாநிலங்களுக்கு விற்பனை செய்வதற்காகத் தயாரிக்கிறோம்" என்ற பதிலைச் சொன்னார்கள். அவர் சொன்னது உண்மையா, அல்லது சாராயமே தயாரிக்கப்படவில்லை என்று வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொல்லுவது உண்மையா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** சாராயம் தயாரிக்கப்படவில்லை என்பதுதான் உண்மை.

**திரு. க. இராமமூர்த்தி :** நம்முடைய மாநிலத்தில் சாராயம் தயாரிக்கப்படவில்லையென்றால் மது வகைகள் எந்த அளவுக்குத் தயாரிக்கப்படுகின்றன? அதற்காக எத்தனை தொழிற்சாலைகள் இருக்கின்றன? மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருப்பதால், அதைத் தயாரிக்கக்கூடாது என்று அரசு தடை விதிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** சாராயத்தைப் பொறுத்த வரையிலே, தயாரிக்கவில்லை என்று முதலிலேயே சொல்லி விட்டேன். இப்போதும் சொல்லுகிறேன், சாராயம் தயாரிக்கப்படவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** மது வகைகளுக்குத் தேவையான base material ஆக உள்ள 'ஸ்பிரிட்' எனப்படும் சாராவி தயாரிக்கப்படுகிறதா? மது வகைகளைத் தயாரிக்கிற தொழிற்சாலைகளுக்கு சாராவி வழங்கப்படுகிறதா? மாதம் ஒன்றுக்கு எந்த அளவுக்கு சாராவி தயாரிக்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு உறுப்பினர் 'ஆல்கஹாலைப்' பற்றிச் சொல்லுகிறார்கள் என்று கருதுகிறேன். அதற்காக 8 தொழிற்சாலைகள் இங்கே இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் அரசு அனுமதி கொடுத்ததின் பேரில்தான் தயாரித்துக் கொண்டிருக்கின்றன.

**திரு. க. இராமமூர்த்தி:** மதுவிலக்கு கடுமையாக இருக்கிற மாநிலத்தில் ஆல்கஹாலைத் தயார் செய்கின்ற 8 தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கொள்கை வேறாக இருந்தாலும், இந்தத் தொழிற்சாலைகள் இன்றைக்கு தமிழகத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. நம்முடைய மாநிலத்தில் இதற்காக விதிக்கப் படுகின்ற எக்சைஸ் வரி, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மிக அதிகமாக இருக்கிற காரணத்தால், ஆல்கஹாலை விற்பனை செய்வதில் மற்ற மாநிலங்களோடு போட்டி போட்டு விற்பனை செய்ய முடியாத சங்கடத் திற்கு ஆளாகி, அந்தத் தொழிற்சாலைகளை இன்றைக்கு மூடிக் கொண்டிருக் கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இதைத் தவிர்க்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறவர்களுக்கு அரசு வரிச் சலுகையைத் தருகிறது. ஆனால் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதில் அரசு வரிச் சலுகையைத் தருவதில்லை. வரி அதிகமாக இருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது. அதைப்பற்றி அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** ஆல்கஹால் ஏற்றுமதியைப் பொறுத்த வரையில் மற்ற நாடுகளிலிருந்துதான் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. நம் முடைய தமிழகத்திலேயிருந்து இலங்கைக்கு ஆல்கஹால் ஏற்றுமதி செய்யப் படுவதில்லை. இதற்குக் காரணம், நம்முடைய ஆல்கஹாலின் விலை, மற்ற நாடுகளிலிருந்து அனுப்பப்படுகிற ஆல்கஹாலின் விலையை விட மிக அதிகமாக இருக்கிறது என்பதுதான். அதிகமான விலை விற்பதற்கு அடிப்படைக் காரணம் அதிகப்படியான வரி விதிக்கப்படுகிறது என்பதுதான். ஆகவே ஆல்கஹால் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை ஊக்கப்படுத்துகிற வகை யிலே இந்த வரியைக் குறைத்து, இந்தத் தொழிலுக்கு ஆக்கம் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவதை இந்த அரசு ஆலோசிக்கும்.





## *Classification of Wet Lands as Dry Lands.*

@222 Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) how many acres of wet lands have been surveyed, on request from the land-owners and have been classified as Dry Lands in each taluk in South Arcot district after 1st July 1977; and

(*b*) the extent of lands so classified prior to 1st July 1977 and after the implementation of the Land Ceiling Act by the Government?

## நன்செய் நிலங்களை புன்செய் நிலங்களாக வகைப்பாடு செய்தல்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நிலச் சொந்தக்காரர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில் எவ்வளவு ஏக்கர் நன்செய் நிலங்கள் அளக்கப்பட்டு, 1—7—1977-க்குப் பின்னர் தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒவ்வொரு வட்டத்திலும் புன்செய் நிலங்களாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளன?

(இ) 1—7—1977-க்கு முன்னரும், அரசு நில உச்சவரம்புச் சட்டத்தைச் செயல்படுத்திய பின்னரும், அவ்வாறு வகைப்படுத்தப்பட்ட நிலங்களின் பரப் பளவு என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** (அ) இல்லை.

(இ) நில உச்சவரம்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்திய தேதிக்குப் பின் அதாவது 6—4—1960 முதல் 1—7—1977 வரை 102.37 ஏக்கர்கள் நன்செய் நிலங்கள் புன்செய் நிலங்களாக வகைப்படுத்தப்பட்டன.

**திரு. க. இராமமூர்த்தி:** தென்னாற்காடு மாவட்டத்தில், கடலூரை ஒட்டி யிருக்கிற பகுதியில் 1—7—1977-க்கு முன்னரும், அதற்குப் பின்னரும்கூட நஞ்சை நிலத்தை, புஞ்சை நிலமாக வகைப்படுத்த வேண்டுமென்ற அளவிலே சர்வே செய்திருக்கிறார்கள் என்ற தகவல் உண்மையா?

---

@ 23—3—1979 ஆம் தேதிய வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப் பட்டது.

[1979 மார்ச் 23

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** நஞ்சை நிலமாக இருந்து, அதை நஞ்சை நிலமாகப் பயன்படுத்த முடியாமல் எங்கெங்கே இருக்கிறார்கள் என்பதை அங்குள்ள பொது மக்கள் தெரிவித்தால், அரசு ஆவன செய்யும்.

**திரு. க. இராமமூர்த்தி:** நில உச்சவரம்புச் சட்டத்தின் கடுமையிலிருந்து விடுபட, இது போல ராக்கெட் வைத்துக்கொண்டு பல வழிகளில் நஞ்சையைப் புஞ்சையாக மாற்றுகிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இதைத் தடுக்க அரசு முன்வருமா? இதில் அதிகாரிகளும் உடந்தையாக இல்லாமல் இருக்க அரசு ஒரு சுற்றறிக்கையை அனுப்புமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** இப்படிப்பட்ட தகவல் அரசுக்கு உதவிகரமாக இருக்கும். இவைகளைக் கொடுத்தால், அரசு ஆவன செய்யும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** தலைவர் அவர்களே, கேள்வி நேரம் முடிந்தவுடனே அனுமதிக்கிறேன் என்று சொன்னீர்களே.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அனுமதிக்கிறேன் என்று சொல்லவில்லை.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** சேலம் மாவட்டத்திலே, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்னால் தமிழக விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் கடந்த 5 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இதைப்பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்களா? இல்லை. அப்படிக் கொடுக்காமல் இப்பொழுது ஏன் பேசுகிறார்கள்? அல்லது என்னுடைய அறையில் வந்து இப்படிப்பட்ட பிரச்சினையை இடையிலே எழுப்ப முன்னாலேயே என்னுடைய அனுமதியைக் கேட்டிருக்க வேண்டும். அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானம் கூடக் கொடுத்திருக்கலாம். அப்படிச் செய்யாமல் இப்பொழுது எழுப்புவது சரியல்ல, தவறான மரபு. ஆகவே அனுமதியைக் கொடுக்க முடியாது.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** தலைவர் அவர்களே, சபைக்கு வந்ததற்குப் பிறகுதான் தகவல் வந்தது.



1979 மார்ச் 23] [மேலவைத் தலைவர்]

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** பரவாயில்லை, நாளை எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அவர் அவையில் இல்லாததால், அவருடைய தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(பிற்பகல் 5.00)

## 2. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

### அரசு ஊழியர்கள் அறப் போராட்டம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு அங்கத்தினர்கள் திருவாளர்கள் பி. ஆர். தாமஸ், சி. ரா. லெட்சுமிகாந்தன், ஆ. பாலசுப்ரமணியம், க. மீனாட்சிசுந்தரம், ஆ. நல்லசிவன் ஆகியோர் அரசு ஊழியர்கள் அறப் போராட்டம் குறித்து ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அது எப்படி அந்த விதியின் கீழ் வருகிறது என்பதை அவர்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கிக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** மாண்புமிகு தலைவரவர்களே, தமிழகத்திலே பணியாற்றுகின்ற அரசிதழ் பதிவிலா அரசு அலுவலர்கள் சில தினங்களாக சில கோரிக்கைகளை முன் வைத்துப் போராடி வருகிறார்கள். குறிப்பாக அவர்கள் உண்ணாவிரதத்தை 21 ஆம் தேதியிலிருந்து தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். காலவரையறையின்றி உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் பொதுவாகக் கேட்பது, அகவிலைப்படி அளித்தல், மூன்றாவது ஊதியக் குழுப் பரிந்துரைகளிலுள்ள குறைபாடுகளை அகற்றுதல், மருத்துவப்படி அளித்தல், போனஸ் வழங்க வேண்டுமென்பது, கட்டாய சேமிப்புகளை திருப்பித்தர வேண்டுமென்பது, ஓய்வு பெறும்போது ரூபாய் 10 ஆயிரம் வழங்க வேண்டுமென்பது, இப்படிப்பட்ட பல கோரிக்கைகளை வைத்துப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். இதனால் பொதுமக்களுக்கும் அரசுக்கும் பலவிதமான இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக இந்தப் பிரச்சினையைக் குறித்து நாம் ஆய்வு நடத்த வேண்டுமென்ற அளவில், இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் தங்களது நியாயமான பல கோரிக்கைகளை முன் வைத்து நேரடி நடவடிக்கைகளிலே இறங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளிலே மிக

முக்கியமான பிரச்சினை மூன்றாவது நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் உள்ள முரண்பாடுகளைக் களைய வேண்டுமென்பதுதான். இதைப்பற்றிப் பல நாட்களாகவே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ரகசியக் குறிப்பேட்டை ஒழிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாதந்தோறும் மருத்துவப் படி தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இவைகளில் சிலவற்றை அரசு ஏற்கெனவே கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கின்றது. அந்தக் கோரிக்கைகளைப் பற்றியும் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அத்துடன் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வாக்குறுதி தந்த கோரிக்கைகளும் இருக்கின்றன. இந்த நிலைமைகளில்தான் ஊழியர்கள் இந்தக் கோரிக்கைகளை வற்புறுத்த நேரடி நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றார்கள். இதனால் அரசுக்கும் பொதுமக்களுக்கும் தொல்லைகள் ஏற்பட்டுள்ளன. அரசு இயந்திரம் இயங்காத நிலைமைகள் இருப்பதால், பொதுமக்களும் பதட்ட நிலையில் இருக்கிறார்கள். இது மிகவும் முக்கியமான பிரச்சினையாக இருப்பதால், இது குறித்து விவாதம் நடத்தினால், ஒரு நல்ல முடிவு காண்பதற்கு வாய்ப்பு இருக்கும். எனவே, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** தமிழ்நாடு அரசிதழ் பதிவுறா அலுவலர் சங்கத்தினர் அகவிலைப்படி உயர்வு, ஊதியக் குழு முரண்பாடு நிவர்த்திக் குழு அமைத்தல், ஓய்வு பெறும் அனைவருக்கும் ரூபாய் 10 ஆயிரம் அளித்தல், இதுபோன்ற 14 அம்சக் கோரிக்கைகளை வற்புறுத்தி, சென்னை அண்ணா சதுக்கம், தேனாம்பேட்டை மருத்துவத் துறை இயக்குநர் அலுவலகம் ஆகியவை முன்பும், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களின் முன்பும் 21—3—1979 முதல் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். இதனால் அந்தந்தப் பகுதி பொதுமக்கள், அங்கேயுள்ள அரசு ஊழியர்கள் இடையே பதட்டமான நிலைமைகள் தோன்றியுள்ளன. இந்தப் பிரச்சினையில் ஒரு சுமுகமான உறவு ஏற்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே இந்தப் பிரச்சினை குறித்து இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, விவாதிக்க வேண்டுமென்று அவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளில் உள்ள முரண்பாடுகளைக் களைய வேண்டுமென்ற கோரிக்கை அரசு ஊழியர்களுக்கு மட்டுமல்ல, ஆசிரியர்களுக்கும் சேர்ந்த கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கையின் அடிப்படையில் நம் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே ஆசிரியர்கள் மன்றத்தின் சார்பில் கேட்டிருக்கிறோம். அதற்கு நாங்கள் போராட்டம் நடத்தி, ஊதியக் குழு ஆணையில் உள்ள முரண்பாடுகளை நிவர்த்திக்கவும், அதற்கென்று ஒரு குழு



அமைத்திடவும் பத்திரிகையிலும் வானொலியிலும்கூட அதைப்பற்றிப் பறை சாற்றப்பட்டது. அது இதுவரையில் அமுல்படுத்தப்படவில்லை. ஊதிய உயர்வுகள் இணையாகத் தரப்பட வேண்டும். ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட பிரச்சினை அது. ரூபாய் 10,000 கொடுக்கின்ற பிரச்சினைகூட பேச்சுவார்த்தையில் நிதியமைச்சர் அவர்களாலே ஒப்புக்கொள்ளப்பட்டது. இன்னும் பல கோரிக்கைகளை நிவர்த்தி செய்யவில்லை என்பதற்காகத்தான் இந்தப் போராட்டத்தை நடத்திக்கொண்டு வருகிறார்கள்.

இந்த நிலைமைகள் காரணமாக ஆசிரியர்களிடையேயும், மக்களிடையேயும் பதட்ட நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. ஊழியர்கள் கோஷங்களிட்டு போராட்டம் செய்கிறார்கள். இதனால் பொது மக்களுக்கு ஏற்படுகின்ற தொல்லைகள் கருதியும், இதனால் ஆசிரியர்களுக்கும் மன நிம்மதி இல்லாது இருப்பதாலும், இந்தப் பிரச்சினையை மிக முக்கியப் பிரச்சினையாகக் கருதி இதைப் பற்றி விரிவாக விவாதிக்க வேண்டுமென்று நம்முடைய அமைச்சர் அவர்களை தலைவர் அவர்கள் மூலமாக வேண்டுகோள் விடுத்து கேட்டுக்கொள்கிறேன். எனவே இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து, இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் கேட்டிருக்கின்ற கோரிக்கைகளை எல்லாம் மாண்புமிகு அங்கத்தினர்கள் எடுத்துக் கூறினார்கள். ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் எனக்காகச் சொல்லாமல் விட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதைப்பற்றி நான்தான் கேட்க வேண்டுமென்று விட்டிருக்கிறார்கள். அரசு ஏற்பட்ட காலத்திலிருந்து அரசு ஊழியர்களுக்கு என்று ஒரு அங்கீகரிக்கப்பட்ட சங்கம் 40 ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கிறது. ஒரே ஒரு சங்கத்தைத்தான் அரசு அங்கீகரித்திருக்கிறது. தொழிற் சங்கங்களில் இருப்பது போல அரசு ஊழியர்கள் சங்கத்திலும் போட்டி சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கத்திற்கு இந்த அரசு ஆதரவு கொடுக்கிறது. ஆங்காங்கே நடக்கின்ற சங்க நிகழ்ச்சிகளுக்கும் உபசாரங்களுக்கும் போகின்ற நிலைமைகளும் இருக்கின்றன. இதனால் மக்களிடையே பதட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு தலைவர் அவர்களே அகில இந்திய நுகர்வோர் குறியீட்டு எண் 320-ஐ (1960-100) ஒட்டி அமைந்துள்ள ஊதிய அமைப்பு ஒன்றை மூன்றாவது ஊதியக் குழு பரிந்துரை செய்துள்ளது. அரசு இதையொட்டி ஆணை பிறப்பித்துள்ளது. 1978 ஆம் ஆண்டு எப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து புதிய ஊதிய விகிதங்கள் செயலாக்கப்பட்டுள்ளன. நுகர்வோர் குறியீட்டெண் உயர்வுக்கு ஏற்ப அகவிலைப்படி

கொடுப்பது குறித்து ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி அரசு ஏற்று ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி மத்திய அரசு அதன் அலுவலர்களுக்கு அகவிலைப்படி அளிக்கும் முறையை ஒட்டி தமிழக அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படி அளிக்கும். மத்திய அரசின் ஊதிய அமைப்பு அகில இந்திய நுகர்வோர் குறியீட்டெண் 200-ஐ ஒட்டி அமைந்துள்ளதாலும் மாநில அரசின் புதிய ஊதிய விகிதங்கள், குறியீட்டெண் 320-ஐ ஒட்டி அமைந்துள்ளதாலும் இவ்வேறுபாடுகளைக் கருத்தில்கொண்டு அகவிலைப்படி அளிக்கப்படும்.

அரசு 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5 ஆம் தேதி வெளியிட்டுள்ள நிதித்துறை அரசு ஆணை எண் 1051-ல் இவ்விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளன. அவற்றின்படி அகில இந்திய நுகர்வோர் குறியீட்டெண்ணின் 12 மாத சராசரி 320-லிருந்து ஒவ்வொரு முறையும் 8 புள்ளிகள் உயரும்போது, மத்திய அரசு அகவிலைப்படி அளித்ததற்கு ஏற்றவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறையில் மாநில அரசு அகவிலைப்படி அளிக்கும்.

| மத்திய அரசின் முறை. | அதையொட்டிய மாநில அரசின் முறை. |
|---|---|
| (1) | (2) |
| 1. மாத ஊதியம் ரூ. 300 வரை பெறுவோர்க்கு ரூ. 10-க்கு மேற்படாமல் ஊதியத்தில் 3·5 சதவீதம். | மாத ஊதியம் ரூ. 500-க்கு மேற்படாமல் பெறுவோர்க்கு ரூ. 10-க்கு மேற்படாமல் ஊதியத்தில் 2·2 சதவீதம். |
| 2. மாத ஊதியம் ரூ. 300-க்கு மேல் பெறுவோருக்கு ரூ.10-க்குக் குறையாமலும் ரூ. 20 க்கு மேற்படாமலும் ஊதியத்தில் 2·5 சதவீதம். | மாத ஊதியம் ரூ. 500-க்கு மேல் பெறுவோருக்கு ரூ. 10-க்குக் குறையாமலும் ரூ. 20-க்கு அதிகப்படாமலும் ஊதியத்தில் 1·6 சதவீதம். |

அரசின் ஆண்டு நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்படும்போது மேற்சொன்ன முறையில் அலுவலர்களுக்கு அகவிலைப்படி அளிப்பது குறித்து, ஏற்கெனவே மத்திய அரசு அளித்துள்ள அகவிலைப்படி, அரசின் நிதி ஆதாரங்கள் மற்றும் பொருளாதார, நிதிநிலைகளை கருத்திற்கொண்டு முடிவு எடுக்கவேண்டுமென்று ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அகில இந்திய நுகர்வோர் குறியீட்டெண்ணின் 12 மாத சராசரி 320 இன் அடிப்படையில் புதிய ஊதிய விகிதங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குறியீட்டெண்ணின் 12 மாத சராசரி 320-லிருந்து 8 புள்ளிகளுக்கும் அதிகமாக உயர்ந்து 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் நாள் 328-ஐத் தாண்டியுள்ளது. அலுவலர்



களுக்கு அகவிலைப்படி அளிப்பதற்கான சூழ்நிலை எழுந்துள்ளது. மத்திய அரசிலும் இதே நிலை எழுந்துள்ளது. ஆனால், மத்திய அரசு இதுவரை அதன் அலுவலர்களுக்கு அடுத்த முறை கூடுதல் அகவிலைப்படி அளிக்கவில்லை. மத்திய அரசு அவ்வாறு அடுத்த முறை அகவிலைப்படி அளித்தவுடன், அதைக் கருத்தில்கொண்டு மாநில அரசும், மேற்கூறிய அரசு ஆணையில் குறிப்பிட்டிருப்பதைப்போல், அலுவலர்களுக்கு அகவிலைப்படி அளிப்பது பற்றி ஆராயும்.

மேற்சொன்ன காரணங்களால் அகவிலைப்படி குறித்து எவ்வித ஐயமும் எழக் காரணம் இல்லை.

மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த தீர்மானங்களை செயலாக்கும் பொருட்டு அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அரசு ஆணைகளைச் செயலாக்குவதில் நடைமுறைச் சிக்கல்களோ அல்லது ஊதியக் குழுவின் பரிந்துரைகளில் குறைபாடுகளோ காணப்பட்டால், அவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம் எனவும், அரசு அவற்றை ஆராயும் என்றும் இதற்காக அரசின் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கின்றன என்றும் ஏற்கெனவே கூறப்பட்டிருக்கிறது. அவ்வப்போது தனிப்பட்ட அலுவலர்களிடமிருந்தும் அலுவலர்கள் சங்கங்களிடமிருந்தும் இது குறித்து வரும் கோரிக்கைகளை அரசு அவ்வப்போது ஆராய்ந்து உரிய முடிவும் நடவடிக்கையும் எடுத்து வருகின்றது. தனிப்பட்ட அலுவலர்களிடமும் அவர்கள் சங்கங்களிடமும் மூன்றாவது ஊதியக்குழு மிகப் பரவலான முறையில் கலந்துரையாடினதாலும் ஊதியக்குழுவின் பரிந்துரைகளிலுள்ள குறைபாடுகள் ஏதும் இருந்தால் அவை குறித்தும், அரசின் ஆணைகள் செயலாக்கப்படுவதிலுள்ள நடைமுறைச் சிக்கல்கள் இருந்தால் அவை குறித்தும், எழுப்பப்படும் கோரிக்கைகள் அவ்வப்போது ஆராயப்பட்டு அவற்றின் மீது முடிவுகள் எடுக்கப்படுவதாலும், இப்பொருள்கள் குறித்து ஆராயத் தனிக்குழு ஒன்றும் தேவையில்லையென அரசு கருதுகிறது. கோரிக்கைகளைப் பரிசீலிப்பதில் தற்போதுள்ள வழிமுறைகள் போதுமானவை எனக் கருதப்படுகிறது. ஆகவே, இது குறித்து போராட்டத்திற்கோ அல்லது பதட்ட நிலை ஏற்படுவதற்கோ காரணம் இல்லை என்று அரசு கருதுகிறது.

மேற்கூறிய காரணங்களினால் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லையென நான் தலைவரவர்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதி அனுமதி மறுக்கிறேன்.

(பிற்பகல் 5-10)

**3. அரசின் தீர்மானம்.**

**கவன ஈர்ப்புத் தீர்மான விதியின் கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்கள் குறித்து எழுப்ப அனுமதித்தல்.**

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மேலவைத் தலைவரவர்களே,

"தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 42-வது விதி, அதன் (5) துணை விதியினால் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்தவரையில் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின்படி இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்க வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 42-வது விதி, அதன் (5) துணை விதியினால் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்தவரையில் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின்படி இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்க வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**4. கவன ஈர்ப்பு.**

**(1) சேலம் மாவட்டம் நடுப்பட்டி கிராமத்தில் அரிசனச் சிறுமி இறந்தது குறித்து.**

*** THIRU P. YELLAMANDA:** Hon. Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Chief Minister to a matter of urgent public importance. namely, the mysterious death of a Harijan girl in Naduppatti village in Salem district and the consequent tension prevailing in that area.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) :** தலைவரவர்களே, தீவட்டிப்பட்டி காவல் நிலைய எல்லைக்குள் இருக்கும் நடுப்பட்டி கிராமத்தில் அரிசனங்களுக்கும், இந்துக்களுக்கும் இடு காட்டுக்குச் செல்லும் வழி சம்பந்தமாக நீண்ட நாள் பிரச்சினை இருந்து வருகிறது. அதுபற்றிய சிவில் வழக்கு ஒன்று நீதிமன்றத்தில் தீர்க்கப்படாமல் இருக்கிறது. கிருஷ்ணவேணி என்ற பதினோறு வயது அரிசன சிறுமி ஒருத்தி 19—12—1978 அன்று சுமார் காலை 4.00 மணியளவில்



நடுப்பட்டி கிராமத்தில் இயற்கை மரணம் அடைந்தபோது, இடுகாட்டு வழி சம்பந்தமாக உள்ள பிரச்சினை நீதிமன்றத்தில் இருந்தும், வழக்கப்படி அரிசனங்கள், இறந்த சிறுமியின் பிணத்தை பட்டா நிலத்தினூடே எடுத்துச் செல்ல முயன்றதாகத் தெரிகிறது. இதற்கு இந்துக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்துக்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது அரிசனங்கள், பிணத்தை மாலை 5-25 மணிக்கு திரு. செங்கசாமி செட்டியார் என்பவருடைய பட்டா நிலத்தினூடே எடுத்துச் சென்று அங்கேயே விட்டுச் சென்றதாகத் தெரிகிறது. கோட்ட வருவாய்த்துறை அலுவலர், மாவட்ட காவல் துறை அதிகாரி ஆகியோர் மேற்படி கிராமத்திற்கு விரைந்து இரு தரப்பினரிடமும் சமாதானம் செய்தும் எந்தப் பலனும் ஏற்படவில்லை. இது விஷயமாக சுகாதார ஆய்வாளர், பிணம் பட்டா நிலத்தில் இருப்பதனால் மக்களுக்கு ஏற்படும் சுகாதாரக் கேட்டினை வருவாய்த்துறை அலுவலருக்கு எடுத்துக் கூறியுள்ளார். வருவாய்த்துறை அலுவலர், கிராம அலுவலர்களைக் கொண்டு பிணத்தைப் புதைத்து விடும்படி பணித்தார். அதன் பின்னர், சிறுமி இறந்த அதே நாளில் இரவு சுமார் 11.35-க்கு கிராம அலுவலர்கள், பிணத்தைப் புதைத்திருக்கின்றனர். பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்டக் காவல் துறை அதிகாரி ஆகியோர் மேற்படி கிராமத்திற்குச் சென்று இரு தரப்பினரிடமும் பேச்சுவார்த்தை நடத்தினர். செவிலியர் போர்டு உறுப்பினர் திரு. சிவசுப்ரமணியன் அவர்களும் 15—3—1979 அன்று அக்கிராமத்திற்கு சென்று பார்வையிட்டு, இருதரப்பினரிடையேயும் விசாரணை நடத்தி இருக்கிறார். மீண்டும் அவர் 29—3—1979 அன்று ஒரு விசாரணை நடத்தவிருக்கிறார். போலீஸ் பந்தோபஸ்தும் போடப்பட்டுள்ளன. நிலைமை அமைதியாக இருக்கிறது.

**(2) 'பி' பிரிவு பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களது பணி 1—4—1970 முதல் வரன்முறை செய்யப்பட்டு ஆண்டு ஊதிய உயர்வு கொடுக்கப்படுவது குறித்து.**

**திரு. பி. ஆர். தாமஸ் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

'பி' பிரிவு பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களது பணி 1—4—1970 ஆம் நாளிலிருந்து வரன்முறை செய்யப்பட்டு ஆண்டு ஊதிய உயர்வு கொடுக்கப்படுவதும், பணி வரன்முறை செய்வதில் தாமதம், பணியில் அமர்த்தப்பட்ட நாளிலிருந்து ஊதிய உயர்வு கொடுப்பது குறித்து 2635 ஆம் எண் அரசாணையில் விளக்கம் காரணமாக ஆசிரியர்கள் அனைவருக்கும் ஏற்பட்டுள்ள இன்னல் குறித்தும்."

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, பட்டதாரி ஆசிரியர் பதவி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக் குழுவின் வரம்பில் உள்ளவையாகும். எனவே, அக்குழு தேர்ந்தெடுக்கும் நபர்களையே அப்பதவிக்கு முறையாக நியமனம் செய்ய இயலும்.

(2) 1—4—1970 முதல் 3—3—1973 வரைப்பட்ட காலங்களில் 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிகமாகப் பணியில் அமர்த்தப்பட்டுப் பின்னர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவினரால் நேரடி நியமனத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் பணியினைத் தேர்வாணைக் குழுவினரால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட தினமான 3—8—1973 முதல், முதலில் வரன்முறைப்படுத்தப்பட்டது.

(3) இப்பட்டதாரி ஆசிரியர்களின் பணியினை அவர்கள் தற்காலிகமாக பணியில் அமர்த்தப்பட்ட நாளிலிருந்தே வரன்முறைப்படுத்த வேண்டும் என்று அரசுக்குப் பல கோரிக்கைகள் வந்தன. அரசு அக் கோரிக்கைகளை கவனமாகப் பரிசீலனை செய்த பின்னர் தனது ஆணை நிலை எண் 2635, கல்வித் துறை, நாள் 21—12—1977-ல் 1—4—1970 முதல் 3—3—1973 வரை அரசு 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளிலும், 1973-74 ஆம் ஆண்டில் அரசினர் 'ஏ' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளிலும் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு பின்னர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவினரால் நேரடி நியமனத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் பணியினை அவர்கள் தற்காலிகமாகப் பணியில் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து வரன்முறை செய்ய வேண்டும் எனவும் வரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து அவர்களது ஊதிய உயர்வு நிலுவைத் தொகை முழுவதையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

(4) மேற்கூறப்பட்டுள்ள அரசு ஆணையினைச் செயல்படுத்தி இதுவரையிலும் 600க்கும் மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் பணியினை அவர்களது தற்காலிக நியமன நாளிலிருந்து வரன்முறைப்படுத்தி பள்ளிக் கல்வி இயக்குநரால் ஏற்கெனவே ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இன்னும் சில பட்டதாரி ஆசிரியர்களின் பணியினை அவர்களது தற்காலிக நியமன நாளிலிருந்து வரன்முறைப்படுத்தி ஆணை வெளியிட வேண்டியுள்ளது. இப்பட்டதாரி ஆசிரியர்களில் சிலர் தங்களது தகுதி காண் பருவம் நிறைவு பெறுவதற்குரிய துறைத் தேர்வுகளில் இதுவரையிலும் தேர்ச்சி பெறவில்லை. ஆகையினால் அவர்களது ஆண்டு ஊதிய நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை. இது பற்றி சில விளக்கங்களை அரசிடம் பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுள்ளார். இது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.



(5) 1—4—1970 முதல் 3—3—1973 வரை அரசினர் 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்டு தமிழ்நாடு அரசினர் பணியாளர் தேர்வாணைக் குழுவினரால் இதுவரை தேர்ந்தெடுக்கப்படாத ஆசிரியர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தனியாக ஒரு சிறப்பு நியமனத் தேர்வு நடத்துமாறு தேர்வாணைக் குழுவினை அரசு கேட்டுக் கொண்டது.

(6) இச் சிறப்பு நியமனத் தேர்வுக்குத் தேவையான எல்லா விபரங்களையும் பள்ளிக் கல்வி இயக்குநர் தேர்வாணைக் குழுவிற்கு அனுப்பி வைத்துள்ளார். இத்தேர்வு நடத்துவதற்குத் தேவையான சில மேல் விளக்கங்களை அரசிடம் தேர்வாணைக் குழு கேட்டிருந்தது. அவ்விளக்கங்களுக்குரிய பதில்களும் தேர்வாணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டு விட்டது. தேர்வாணைக் குழு இச் சிறப்பு நியமனத் தேர்வினை விரைவில் நடத்த இருக்கிறது. இச்சிறப்பு நியமனத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அனைவரது பணியும் வரன்முறை செய்யப்படும்.

(பிற்பகல் 5-20)

**திரு. பி. ஆர். தாமஸ் :** 1—4—1970 முதல் 3—3—1973 வரை பணியில் அமர்த்தப்பட்டவர்களுக்கும் 3—8—1973 அன்று பணி வரன்முறை செய்யப்பட்டவர்களுக்கும் மட்டும்தான் இந்த அரசாணையின்படி சலுகைகள் வழங்கப்பட்டு அரசாணை செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதற்கு அடுத்து 31—1—1977 அன்று பணி வரன்முறை செய்யப்பட்டிருக்கின்றவர்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்படவில்லை. எனவே இந்தச் சலுகை அவர்களுக்கும், அதன் பிறகு வரன்முறைப்படுத்தப்படுகிறவர்களுக்கும் வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு பி. ஆர். தாமஸ் :** சென்ற கூட்டத் தொடரில்கூட அரசாணை 2635ன் படி பட்டதாரி ஆசிரியர்கள் அனுபவிக்கும் அத்தனை சலுகைகளையும் பிற ஆசிரியர்களுக்கும் வழங்குவதுபற்றி ஆராய்ச்சி செய்யப்படும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் 1—4—1970 முதல் 3—3—1973 வரை நியமனம் செய்யப்பட்ட பிற ஆசிரியர் பெருமக்கள் ஒரே ஒரு ஊதிய உயர்வைத்தான் (இன்கிரிமெண்ட்) 1—4—1975 அன்று பெற்றிருக்கிறார்கள். அவர்களும் நியமனம் செய்யப்பட்ட தினத்திலிருந்து இந்த ஊதிய உயர்வையும், நிலுவைத் தொகையையும் பெறத் தகுதியுடையவர்கள்தான் என்கிற வகையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆணையிட முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இந்த அரசாணையில் கல்வித் துறை அதிகாரிகளால் செய்யப்பட்டுள்ள ஒரு மிக முக்கிய முட்டுக்கட்டையைப் பற்றி நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதற்கான விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். 3—3—1973 வரை நியமிக்கப்பட்டவர்களுக்கான ஆணையில் 'Subsequently selected' ஒரு வார்த்தையைப் போட்டிருக்கிறார்கள். அப்படி subsequently selected என்ற வார்த்தையைப் போட்டதனால் 1973 ஆம் ஆண்டு தேந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மட்டும்தான் அது பொருந்தும் என்று கூறுகிறார்கள். 3—3—1973-ல் இருந்த அதே பட்டதாரி ஆசிரியர்கள் சுமார் 150 பேரை 1975 ஆம் ஆண்டிலே நடந்த தேர்வில் தேர்வாணைக் குழு தேர்ந்தெடுத் 'subsequently' என்ற வார்த்தைக்கு following afterwards என்ற ஒரு அர்த்தம் Oxford Dictionary -ல் இருக்கிறது. ஆனால் கல்வித்துறை 1973 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மட்டும்தான் அந்தச் சலுகை உண்டு என்று சொல்லுகிறது. 1975 ஆம் ஆண்டிலும் தேர்வு நடைபெற்றிருக்கிறது. அதிலே தேர்ந்தடுக்கப்பட்ட 150 ஆசிரியர்கள் 1—4—1973-க்கு முன்பே பணியில் இருக்கிறவர்கள்தான். அவர்களுக்கும் ஏன் இந்த ஆணையைச் செயல்படுத்தவில்லை என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்களுக்கும் இதைச் செயல்படுத்த மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இன்னொரு முக்கிய விளக்கத்தையும் மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு, தேர்ந்தெடுக்கப்பட்டு வரன்முறை செய்யப்பட்ட தேதியிலிருந்து முழு நிலுவைத் தொகையும் வழங்கப்படும் என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் அவ்வாறு கொடுக்கப்படவில்லை. அதற்குக் காரணமாக அவர்கள் டெஸ்டில் தேர்ச்சி பெறவில்லை என்ற ஒரு நிபந்தனையைக் காட்டுகிறார்கள். ஆனால் இன்றைய தினம் ஏ.ஜி. அவர்களிடமிருந்து ஹைவேஸ் தலைமைப் பொறியாளருக்கு ஒரு விளக்கம் வந்திருக்கிறது. இரண்டாவது ஊதிய உயர்வைப் பெறுவதற்கு டெஸ்ட் பாஸ் பண்ணுவது ஒரு நிபந்தனையாக இருக்க முடியாது என்று அதில் விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. இது அனைவருக்கும் பொதுவானது.



பொருந்தக்கூடியது. இதைக் கருத்தில் கொண்டு அந்தச் சட்டத் திருத்தங்களைச் செய்வதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும்.

## (3) தென் ஆர்க்காடு மாவட்ட நூலக ஆணைக் குழுப் பணியாளர்களுக்கு 1979 ஜனவரி மாதத்திற்கான ஊதியம் தரப்படாதது குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"தென் ஆர்க்காடு மாவட்ட நூலக ஆணைக் குழு பணியாளர்களுக்கு 1979 ஜனவரி மாதத்திற்காக ஊதியம் இதுவரை தரப்படாததால் (22—2—1979 வரை) சுமார் 250 நூலக ஊழியர்களின் குடும்ப வாழ்க்கை பாதிக்கப்பட்டிருப்பது குறித்தும், அவர்களுக்கு உடனடியாக ஊதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுப்பது குறித்தும்".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, விவர அறிக்கை@ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இந்த மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெற்றிருப்பது முதல் முறையல்ல. பல மாவட்டங்களிலே நூலகர்களுக்கு ஒழுங்காக அந்தந்த மாதத்தில் ஊதியம் தரப்படுவதில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்துள்ள விவரங்களிலிருந்து அதிலுள்ள நிபந்தனைகள்தான் அதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. இந்தக் குறைகளை எல்லாம் களைவதற்கு ஒரே ஒரு பரிகாரம் அவர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்குவதுதான். இதையெல்லாம் மனதில் கொண்டு நூலகங்களில் பணி புரியும் அனைத்து ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்கிற என்னுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நூலக ஆணைக்குழுக்கள் நகராட்சிகள் போன்றவை வசூலிக்கிற நூலக வரியைக் கொண்டும், மானியமாகத் தரப்படுகின்ற தொகையைக் கொண்டும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. அவர்களை

@ 625—626 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்களாக ஆக்குகின்ற நிலை ஏற்பட வழியில்லை. ஆனால் அரசு ஊழியர்களுக்குத் தரப்படுகின்ற பல்வேறு சலுகைகளை நாம் அவர்களுக்கும் தருவதற்கான முயற்சியை மேற்கொள்ள விரும்புகிறோம். இப்பொழுது இந்தப் பிரச்சினையைச் சீர்படுத்துவதற்கான வேறு பல நடவடிக்கைகளை நாம் எடுத்திருக்கின்றோம். நகராட்சியாக இருந்தாலும் சரி அல்லது ஊராட்சியாக இருந்தாலும் சரி, அவர்கள் வசூலிக்கின்ற அந்த நூலக வரியினை முறையாக, ஒழுங்காக, காலத்தில் செலுத்த வேண்டிய ஒரு நிலையை உருவாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நான் தென் ஆர்க்காடு மாவட்ட நூலக ஆணைக் குழு பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை என்று புகார் கொடுத்திருந்தேன். அவர்களுக்கு ஊதியம் தரப்பட்டுவிட்டதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தணிக்கை முற்றுப் பெறாத நிலையிலும் உடனடியாக எல்லா மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கும் ஊழியர்களின் ஊதியம் வழங்குவதற்காக அரசு மானியம் அரசு ஆணை நிலை எண் 316, கல்வி, நாள் 27—2—1979 ல் வெளியிட்டிருக்கிறது.

(4) மின்வாரியப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மலைவாழ்படி பாளி மின் சக்தி உற்பத்தி நிலையத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப் படாதது குறித்து.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"மின்வாரியப் பணியாளர்களுக்கு மலைவாழ்படி வழங்கப்படுகையில், கோயம்புத்தூர் மாவட்டம், பாளி மின் சக்தி உற்பத்தி நிலையத்தில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு மட்டும் மலைவாழ்படி வழங்கப்படாததும் அதன் காரணமாக அங்குள்ள ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகளும் இன்னல்களும் குறித்து ".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பாளி மின் நிலையத்தில் பணி புரியும் பணியாளர்களுக்கு மலைவாழ் இடப்படி (hill allowance) வழங்கப்படவில்லை. ஆனால் இவர்களுக்கு 16—8—1976 முதல் அதிக செலவு இடப்படி (expensive locality allowance) வழங்கப்பட்டு வருகிறது. இந்தப்படி இந்தப் பகுதியில் உள்ள ஒரு உதவி



பெறும் தனியார் உயர்நிலைப் பள்ளியிலும் மூன்று ஆரம்பப் பள்ளிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கும் இதுவரை அளிக்கப்படவில்லை. இந்தப் படியை இவர்களுக்கு அளிப்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. முத்துசாமி : 16—8—1976 முதல் மின்வாரிய ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மலைவாழ் படியை ஆசிரியர்களுக்கும் வழங்கலாமா என்று பரிசீலித்துக்கொண்டிருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தச் சலுகையை தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும், தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் முன் தேதியிட்டு வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்த முடிவை எடுக்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை கவனிக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி : இப்படி தளவாடி, டாப்சிலிப், ஆனமலை போன்ற பல்வேறு இடங்களிலும் மற்றத்துறை ஊழியர்களுக்குத் தரக்கூடிய சலுகைகள் ஆசிரியர்களுக்குப் பொதுவாக வழங்கப்படுவதில்லை என்கிற சங்கடமான நிலை இருப்பதை நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த இடத்தில் விலைவாசி மற்ற சங்கடங்கள் எல்லாம் மற்ற ஊழியர்களுக்கு எவ்வளவு இருக்கிறதோ அதே அளவுக்கு ஆசிரியர்களுக்கும் உண்டு. அப்படி இருக்கும்போது, மற்றவர்களுக்கு வழங்கி விட்டு ஆசிரியர்களுக்கு மட்டும் வழங்கப்படாமலிருப்பது நியாயமா ? எந்த ஒரு சலுகை சம்பந்தமான உத்தரவு வந்தாலும், அது ஆசிரியர்களுக்கும் பொருந்தக்கூடிய வகையில் ஒரு முழுமையான உத்தரவை வெளியிட்டு, இந்தப் பிரச்சினையைத் தீர்த்து முற்றுப்புள்ளி வைக்க மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மற்ற துறைகளில் வரக்கூடிய அத்தனை சலுகைகளும் ஆசிரியர்களுக்கும் வர வேண்டுமென்கிற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார். அதை இந்த அரசு பரிசீலிக்கும்.

[1979 மார்ச் 23

**(5) இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது குறித்து.**

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"சென்னையிலுள்ள அரசுக்குச் சொந்தமான இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் ஆலையில் பணியாற்றும் சுமார் 1,600 தொழிலாளர்கள் 13—3—1979 முதல் வேலை நிறுத்தம் செய்வதால் தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து".

*** மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, சென்னை இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனத்தில் சுமார் 1,500 பேர் வேலை செய்கின்றனர். இந்நிறுவனத்தின் தொழிலாளர்களின் பலதரப்பட்ட கோரிக்கைகள் பற்றி தொழில் தகராறு சட்டம் பிரிவு 12(3)ன் கீழ் இடைக்கால ஒப்பந்தம் ஒன்று இருதரப்பாரிடையே 19—8—1978-ல் ஏற்பட்டு இருந்தது. இந்த ஒப்பந்தத்தின் ஒரு ஷரத்துப்படி நிலுவையிலுள்ள கோரிக்கைகள் பற்றி பேச்சு வார்த்தைகள் நடத்தி பிரச்சினையைத் தீர்க்கலாமென முடிவு செய்யப் பட்டிருந்தது. நிலுவையிலுள்ள கோரிக்கைகள் பற்றி எந்த ஒரு ஒப்பந்தமும் ஏற்படாததால் இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் எம்ப்ளாயீஸ் யூனியன் (சி.ஐ.டி.யு.) 16—2—1979-ல் ஒரு வேலை நிறுத்த அறிவிப்பை நிர்வாகத்திற்கு அனுப்பியது. அதன் பேரில் சென்னை மூன்றாவது வட்ட தொழிலாளர் துறை அலுவலர் சமரச முயற்சியை மேற்கொண்டார். தொழிலாளர்களின் கோரிக்கை பற்றிய தங்கள் முடிவை நிர்வாகத்தார் மத்திய அரசைக் கலந்தாலோசித்து 12—3—1979-ல் அறிவிப்பதாகத் தெரிவித்து இருந்தனர். இதற்கிடையே இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் எம்ப்ளாயீஸ் யூனியன் (சி.ஐ.டி.யு.) 12—3—1979 பகல் 12 மணியிலிருந்து வேலை நிறுத்தம் மேற்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

சென்னை முதல் வட்டத் தொழிலாளர் துறை துணை ஆணையரும் சமரச முயற்சி மேற்கொண்டுள்ளார். நிலைமை அமைதியாக உள்ளது.

(பிற்பகல் 5-30)

**திரு. ஆ. நல்லசிவன் :** தொழிற் சங்கங்களோடு ஊதிய உயர்வு சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தும்போது, மத்திய அரசின் "Bureau of Public Enterprise" தலையிடுவதால், தாங்கள் சுதந்திரமாகச் செயல்பட்டுப் பேச முடியவில்லை என்று மத்திய அரசின் பொதுத் துறை நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்துஸ்தான்



டெலிபிரிண்டர்ஸ் நிறுவனத்தில் நடைபெறும் வேலை நிறுத்தத்திற்கு அது தான் காரணம். 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் தேதி மத்திய அரசு தொழிற்சங்கத் தலைவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி, 'Bureau of Public Enterprise" இதில் தலையிடக்கூடாது என்பதை மத்திய அரசுக்கு இந்த அரசு சிபாரிசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*** மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இதுபற்றி அரசின் கருத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தைப் போன்றதேயாகும். மத்திய அரசினுடைய பொதுத் துறை நிறுவனங்கள் மாநிலங்களில் செயல்பட்டு வரும்போது, அங்கே எழும் தொழிற் தகராறுகளில் சமரசப் பேச்சு வார்த்தை நடத்தவும், ஒப்பந்தம் செய்யவுமான முழு அதிகாரமும் மாநில அரசாங்கத்திற்கே இருக்க வேண்டும். உதாரணமாக நெய்வேலி திட்டத்தை எடுத்துக்கொண்டால், அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்றால், அவர்கள் " Bureau of Public Entedprise "- -ஐக் கேட்க வேண்டும் அல்லது டெல்லியைக் கேட்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

If there is law and order problem, it is the head-ache of this Government. ஏதாவது சட்டம், அமைதி குலையுமானால், மாநில அரசுதான் அதற்குப் பொறுப்பு என்கிற காரணத்தால். . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அமைச்சர் எதற்காக என்னைப் பார்க்கிறார் என்று தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** ஆங்கிலத்தில் பேசிவிட்டுத் தலைவர் அவர்களைப் பார்ப்பதற்குப் பயமாக இருக்கிறது. அது இயற்கையாகவே வந்திருக்கிறது. எனவே இந்தக் கருத்தில் எனக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுக்கும் உடன்பாடு உண்டு. அவர் எங்களோடு உடன்பாடு கொள்வதுமுண்டு. பிறகு வெளியே போவதுமுண்டு. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், 12 ஆம் தேதி தெரியும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 12 ஆம் தேதியே வேலை நிறுத்தம் நடந்திருக்கிறது. தற்போது சமரசப் பேச்சு நடக்கிறது. அதைவிட உயர்மட்டத்தில் ஸ்பெஷல் டி.சி.எல். அல்லது ஜாயின்ட் கமிஷனர் அல்லது கமிஷனர் லெவலில் சமரசப் பேச்சு நடத்தப்பட வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் விரும்புவாரானால், அந்த நிலையில் பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** தற்போது நடைபெறும் வேலை நிறுத்தமே "டூல்ஸ் டவுன் ஸ்டிரைக்"தான். அங்கே தொழிற்சாலைக்குள் தொழிலாளிகள் உள்ளே சென்று உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தால், நிர்வாகம் சில ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபடுகிறது. மின்சார விசிறிகளை நிறுத்தி விடுகிறார்கள். ஏற்கெனவே கேண்டீன் சாப்பாட்டை நிறுத்திவிட்டார்கள். இப்படி ஆத்திரமூட்டக்கூடிய நடவடிக்கையை நிர்வாகம் மேற்கொள்ளாமல் தடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இப்படிப்பட்ட உதவியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் கோரும்போது, அவருக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். If my memory serves me a right, it was in 1967 a decision was given 1967 ஆம் ஆண்டில் "Chelpark case decision" என்று ஒன்று வந்திருக்கிறது. (அமைச்சர் தலைவர் அவர்களைப் பார்த்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆங்கிலத்தில் பேசிவிட்டு என்னைப் பார்த்தால், என்ன பிரயோசனம்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** என்னை மீறி வந்துவிடுகிறது. சென்னை உயர்நீதி மன்றம் ஒரு தீர்ப்பளித்திருக்கிறது. உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிற தொழிலாளிகள் தொழிற்சாலைக்குள்ளே சென்றால், வேலை நேரம் முடிந்தவுடனே வெளியே வந்துவிட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுதான் Chelpark case decision இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய தோழர்களிடம் சொல்லி ஹைக்கோர்ட்டுத் தீர்ப்புப்படி நடக்க ஏற்பாடு செய்வார்கள் என்று எதிர் பார்க்கிறேன். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல், அரசுத் தரப்பில் மேல்மட்டப் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென்று விரும்பினால், ஸ்பெஷல் டி.சி.எல். அல்லது ஜாயின்ட் கமிஷனர் திரு. இராஜா சுப்பிரமணியம் மூலமாக நடத்த ஏற்பாடு செய்கிறேன். உறுப்பினர் எதை விரும்புகிறார் என்று இப்போதே சொல்லிவிட்டால், இன்றிரவே தொலைபேசியில் சொல்லி, அதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, இன்றைய நிகழ்ச்சிநிரல் பட்டியலில் குறிப்பிட்ட "மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விவாதத்திற்குப் பதிலளிப்பார்கள்" என்று இருப்பதை மாற்றி நாளையதினம் அதை எடுத்துக் கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

**அவை, பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது.**

(பிற்பகல் 5-35)



5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

119. Audit Report on the Annual Accounts of the Tamil Nadu Electricity Board for the year 1977-78 [Laid on the table of the House under section 69 (5) (*a*) of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948).]

120. Fourth Annual Report of the Tamil Nadu Salt Corporation Limited for the year 1977. [Laid on the table of the House under section 619 (*a*) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

### B. Reports, Notifications and Other Papers.

Nil.

### இணைப்பு

[43-ம் பக்கத்தில் இனம் 4 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

(43 ஆம் பக்கத்தில் இனம் 4 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

1948 ஆம் ஆண்டு பொது நூலகச் சட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நூலக ஆட்சிக் குழு கன்னியாகுமரி, புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்க இயங்கி வருகிறது. இந்நூலகங்களின் நிதி கீழ் சொல்லப்பட்ட இனங்களைக் கொண்டதாகும் :—

(1) சொத்து அல்லது வீட்டு வரியில் ரூபாய்க்கு 5 காசு வீதம் வசூலிக்கப்படும் நூலக வரி;

(2) இதற்கு இணையான அரசு மான்யம்;

(3) நூலகத்தில் புத்தகம் எடுப்பதற்காக வாங்கப்படும் காப்புப் பணம்;

(4) இதர வரவுகள், நூலக ஆணைக் குழுக்கள் தன்னிச்சையாக இயங்கும் நிறுவனங்கள், நூலக ஆணைக் குழு தங்கள் தேவைக்கு ஏற்ப பதவிகளை ஏற்படுத்தி அதில் தக்க நபர்களை நியமிக்க முழு அதிகாரம் பெற்றவை. மேலும் இக் குழுக்களில் வேலை பார்க்கும் சிப்பந்திகளுக்கு மேலே கூறிய நூலகக் குழு நிதியிலிருந்து சம்பளம் வழங்கும்.

2. நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள், சொத்து வரி அல்லது வீட்டு வரி வசூலிக்கும்பொழுது, நூலக வரி 5 காசு வீதம் வசூலித்து, அவற்றை சம்பந்தப்பட்ட நூலக ஆணைக் குழுவின் கணக்கில் செலுத்தப்படுகிறது. அங்ஙனம் வசூலிக்கப்பட்ட தொகைக்கு சமமாக 100 விழுக்காடு அரசு மானியம், அதாவது 75 விழுக்காடு ஊழியர்களின் ஊதியத்திற்காகவும், 25 விழுக்காடு புத்தக வடிவங்களிலும் ஒவ்வொரு ஆண்டிற்கும், பிரிவு 13 (3) தமிழ்நாடு

நூலகச் சட்டம் 1948-ன்படி, அரசு வழங்கி வருகிறது. மேற்கண்டவாறு 1977-78-க்கான 75 விழுக்காடு ஒரு பகுதி தொகையாக ரூபாய் 1,13,938.62 (ரூபாய் ஒரு லட்சத்து பதிமூன்றாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து எட்டு, அறுபத்து இரண்டு காசுகள் மட்டும்) 1978 நவம்பரில் அரசு நிலை எண் 2013, கல்வி, நாள் 9—11—1978-ல் தென் ஆர்க்காடு நூலக ஆணைக் குழுவிற்கு வழங்கப்பட்டது.

3. ரூபாய் 2,000 (ரூபாய் இரண்டாயிரம்) குறைவாக இருப்பதால் தென் ஆர்க்காடு மாவட்ட நூலக ஆணைக் குழு ஊழியர்களின் 1979 ஜனவரி ஊதியம் கொடுக்க இயலாத நிலை பற்றி 27—1—1979-ல் பொது நூலக இயக்குநர் அரசுக்குத் தெரிவித்தார். ஆகவே 1978-79-க்கு உரிய அரசு மானியத் தொகை வழங்குவது சம்பந்தமாக, பொது நூலக இயக்குநரின் பரிந்துரையின்மீது ஸ்தல தணிக்கை ஆய்வாளரின் அறிக்கையை விரைவுபடுத்தி, தணிக்கை முற்றுப் பெறாத நிலையிலும் உடனடியாக எல்லா மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கும் ஊழியர்களின் ஊதியம் வழங்குவதற்காக அரசு மானியம் (75 விழுக்காடு) ஆணை நிலை எண் 316, கல்வி, நாள் 27—2—1979-ல் வெளியிட்டிருக்கிறது.

4. மேலும் நூலக ஆணைக் குழுக்கள், தங்களுக்கு வர வேண்டிய நூலக வரிப் பணத்தை, அம் மாவட்டத்திலுள்ள நகராட்சி ஊராட்சி ஆகியோரிடம் இருந்து பெற்று செயல்பட வேண்டியிருக்கிறது. சில சமயம் இந்த நகராட்சிகள், ஊராட்சிகள் தாங்கள் வசூல் செய்த நூலக வரிப்பணத்தை உடனடியாக நூலக ஆணைக் குழுக்களுக்குச் செலுத்துவது இல்லை. இதனால் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டு, நூலக ஆணைக் குழுக்கள் அன்றாட செலவினங்களை சமாளிக்க இயலாத நிலை ஏற்படுகிறது. இதைக் கவனித்து ஏற்கனவே அரசு எல்லா ஊராட்சிகள், நகராட்சிகளும் நூலக வரிப் பணத்தை வசூலித்த உடன் நூலக ஆணைக் குழுக்களுக்கு அளிக்க வேண்டும் என்றும் அறிவுரை வழங்கியுள்ளது. இதையெல்லாம் மேலும் சீர்படுத்தி நல்ல முறையில் நூலக ஆணைக் குழுக்கள் செயல்படவும், நூலகப் பணி நடத்தப்படவும் நூலக ஊழியர்கள் நிலமை சீர்படவும் அரசு பல நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

5. அரசு ஏற்கனவே இந்தப் பிரச்சனையை தீவிரமாக ஆய்ந்து இன்னல்களைத் தவிர்க்க ஆவன செய்து வருவதால் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் அவசியமில்லை எனக் கருதுகிறேன்.

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

———

சனிக்கிழமை, 1979 மார்ச் 24.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவ ஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

### Collection of Donations

*261 Q.—THIRU V. THANGAPANDIAN: THIRU K. MEENAKSHISUNDARAM and THIRU E. S. VENKATESAN } Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the cases of the schools, which collected donations from students for admission during this academic year have been brought to the notice of the Director of School Education; and

(b) if so, the action taken thereon?

நன்கொடைகள் வசூல் செய்தல்

திரு. வே. தங்கப்பாண்டியன், திரு. க. மீனாட்சிசுந்தரம் & திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) இந்த வருடக் கல்வி ஆண்டில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள நன்கொடை வசூலித்த பள்ளிகள்பற்றி, பள்ளிக் கல்வி இயக்குநரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) அம்முறையீடுகள், தொடர்புள்ள முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர், மற்றும் மகளிர் பள்ளி ஆய்வாளருக்கு அனுப்பப் பட்டு, தேவையான மேல்நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது எனப் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

* 262 *Q.*—THIRU C. RAMALINGAM (on behalf of THIRU E. S. VENKATESAN): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether the Government are aware that large sums of money are being collected as donations for giving admission into the plus two stage; and

(*b*) if so, the action proposed to be taken thereon?

திரு. சி. இராமலிங்கம் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதி லளிக்க வேண்டுகிறேன் :—

(அ) உயர் இடைநிலை வகுப்புக்களில் (+ இரண்டு) சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு, நன்கொடையாகப் பெருந்தொகைகள் வசூலிக்கப்படு வதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) அரசுக்கு குறிப்பான புகார் ஏதும் வரவில்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, நன்கொடை வசூலிக்கக் கூடாது என்று எவ்வளவுதான் அரசு வற்புறுத்தினாலும், நன்கொடைகள் மறைமுகமாகத் தந்தால்தான், பள்ளியிலே பிள்ளைகளைச் சேர்த்துக்கொள் வது என்கின்ற வகையிலே தனியார் பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டிருக் கிறார்கள். அதிகாரபூர்வமாக இதை நிரூபிப்பது என்பது இயலாத ஒன்று. அது சங்கடமானதும்கூட. ஆகவே, ஏதேனும் மாற்று வழி கண்டுபிடிக்க முயன்று உரிய நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பள்ளிக் கூடம் ஆரம்பித்து இரண்டு மாதங்களுக்குள் நன்கொடை எதுவும் பெறக் கூடாது என்றுதான் உத்தரவு வழங்கியிருக்கிறோம். அதைப் போலவே, மாணவர்களிடத்திலும், பெற்றோர்களிடத்திலும் நன்கொடை வசூலிக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறோம். மற்றபடி பெற்றோர்-ஆசிரியர் சங்கங்கள் மூலமாக அந்தந்தப் பள்ளி வளர்ச்சிக்காக அரசினுடைய அனுமதி பெற்று நன்கொடைகள் வசூலிக்கலாம் என்ற ஒரு வாய்ப்பையும் நாம் அவர் களுக்குத் தந்திருக்கிறோம். சில பள்ளிகளில் இத்தகைய தவறுகள் நடந் திருக்கின்றன என்ற தகவல்கள் வந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக் கிறோம். மேலும் இதுபற்றி ஆதாரபூர்வமாகப் புகார் தந்தால், இந்த அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்காது.

*Government High School, Vaiyampatti.*

* 263 *Q.*—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Madras High Court has issued an injunction order restraining the admission of girls into the Government High School, Vaiyampatti, Tiruchirappalli district;

(*b*) if so, whether any steps were taken by the Government to remove the injunction; and

(*c*) the stage at which the matter now stands?

**வையம்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளி**

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், வையம்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் பெண்களைச் சேர்ப்பதற்கு சென்னை உயர்நீதி மன்றம் தடை விதித்து உள்ளதா ?

(இ) ஆம் எனில், இத்தடையை நீக்க அரசுத் தரப்பில் முயற்சி ஏதும் எடுக்கப்பட்டதா ?

(உ) அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) & (உ) வையம்பட்டி கலைமகள் உயர்நிலைப் பள்ளித் தாளாளர் பெற்றுள்ள தடையுத்திரவு உயர்நீதி மன்றத்தால் முழுமையாக்கப்பட்டுள்ளதால் (Absolute Stay) இத்தடையை நீக்குமாறு உயர்நீதி மன்றத்தைக் கோரவியலாது. இருப்பினும், இப்பள்ளித் தாளாளர் தொடுத்துள்ள ரிட் மனுவை எதிர்த்து அரசுத் தரப்பில் எதிர் ஆணை உறுதிப் பத்திரம் Counter Affidavit ஏற்கனவே தொடுக்கப்பட்டு விட்டது. இந்த ரிட் மனுவை உடனடியாகத் தீர்ப்பிற்கு எடுத்துக் கொள்ளும் வண்ணம் உயர்நீதி மன்றத்தைக் கோருமாறு அரசு வழக்கறிஞர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

திரு. செ. முத்துசாமி: தங்களுடைய பிள்ளைகளை Co-education பள்ளிகளிலே படிக்க வைப்பதும், அல்லது பெண்களுக்கென்று தனியாக உள்ள பள்ளிகளிலே படிக்க வைப்பதும் பெற்றோர்கள் முடிவெடுக்க வேண்டிய விஷயம். பெண்கள் உயர்நிலைப் பள்ளியை நடத்தக்கூடிய அந்தத் தாளாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி பெண்களிடம் ஒழுங்கீனமாக நடக்கக்கூடிய ஒரு தாளாளர் இருக்கும் அந்தப் பள்ளியிலே அவர்களுக்குப் பாதுகாப்பில்லை என்று ஊர்மக்களும், பெற்றோர்களும் பிள்ளைகளை அனுப்பவில்லை. மேலும், கோர்ட்டிலே தடுக்கப்பட்டாலும், பெற்றோர்கள் பிள்ளைகளை அங்கு அனுப்ப முடியவில்லை. ஆகவே அரசுப் பள்ளிகளிலேயே அந்தப் பிள்ளைகளைச் சேர்க்கச் சொல்லி அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. அவர்கள் தடையுத்தரவு வாங்கியிருக்கிறார்கள். வழக்கு முடியும் முன்னால் அரசு நடவடிக்கை எடுக்க இயலாது இருக்கிறது என்பதைத்தான் என் பதிலிலே சொல்லியிருக்கிறேன்.

### *Chief Educational Officer for each district.*

* 264 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the names of the districts in Tamil Nadu for which Chief Education Officer have not been appointed;

(*b*) the reason for such non-appointment; and

(*c*) Whether the Government will take steps to appoint Chief Educational Officer in each District?



### மாவட்டத்திற்கு ஒரு முதன்மைக் கல்வி அதிகாரி.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டங்களுக்கு முதன்மைக் கல்வி அதிகாரிகள் நியமனம் செய்யப்படவில்லை?

(இ) அவ்வாறு நியமனம் செய்யப்படாததற்குக் காரணம் என்ன?

(உ) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு முதன்மைக் கல்வி அதிகாரியை நியமிக்க, அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) தருமபுரி, புதுக்கோட்டை, நீலகிரி ஆகிய மாவட்டங்களுக்குத் தனியே முதன்மைக்கல்வி அலுவலர் பணியிடங்கள் இல்லை.

(இ) அவை முன்பு இணைந்த மாவட்டங்களாக (தர்மபுரி-சேலம்) (புதுக்கோட்டை-திருச்சி) இருந்தவை. நீலகிரி சிறிய மாவட்டம். எனவே ஒரு முதன்மைக் கல்வி அதிகாரியே கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய இரு மாவட்டங்களுக்கும் பொறுப்பில் இருந்தார். இம்மூன்று மாவட்டங்களுக்கும் தனித்தனியாக முதன்மைக் கல்வி அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்தக் கோரி வந்த பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்து அரசின் நிதி நிலைமை காரணமாக தள்ளி வைக்கப்பட்டது.

(உ) தற்போது தருமபுரி மாவட்டத்திற்கு மட்டும் ஒரு முதன்மைக் கல்வி அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

### *Madurai Corporation.*

* 265 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the total income of the Madurai Corporation during the years 1976-77 and 1977-78; and

(*b*) the total expenditure paid (i) as salaries to its staff; and (ii) on other administrative expenses, during the said years?

மதுரை மாநகராட்சி.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளில் மதுரை மாநகராட்சியின் மொத்த வருமானம் எவ்வளவு?

(இ) (i) அதன் பணியாளர்களது சம்பளமாகவும், (ii) ஏனைய நிர்வாகச் செலவுகளாகவும், மேற்சொன்ன ஆண்டுகளில் செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) மொத்த வருவாய்—

1976-77 ரூ. 6,97,55,586.20

1977-78 ரூ. 6,52,13,982.03.

(இ) மொத்தச் செலவு:

பணியாளர் சம்பளம் முதலிய செலவு:

1976-77 ரூ. 1,86,38,987.82.

1977-78 ரூ. 2,04,74,745.83.

(ii) இதர நிர்வாகச் செலவுகள்:

1976-77 ரூ. 1,39,54,392.83.

1977-78 ரூ. 77,56,538.45.

(ii) மூலதனச் செலவு:

1976-77 ரூ. 3,04,69,374.76.

1977-78 ரூ. 2,81,69,842.35.



### *Collection of Property Taxes.*

* 266 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have issued directions to the Corporations of Madras and Madurai, not to collect property taxes at the enhanced rates, as fixed at the time of quinquennial revisions, but only to collect them at the old rates;

(*b*) whether in spite of these directions, the two Corporation authorities continue to collect the taxes at the newly enhanced rates;

(*c*) if so, the reasons therefor; and

(*d*) the action taken thereon?

சொத்து வரிகள் வசூல் செய்தல்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சொத்து வரிகள் அய்ந்தாண்டுக்கு ஒருமுறை மாற்றி அமைக்கப்பட்டபோது, நிர்ணயிக்கப்பட்டவாறு உயர்த்தியுள்ள வீதங்களில் வசூலிக்காமல், பழைய வீதங்களில்தான் அவற்றை வசூலிக்க வேண்டும் என்று சென்னை, மதுரை மாநகராட்சிகளுக்கு, அரசு கட்டளைகள் பிறப்பித்துள்ளதா?

(இ) அவ்வாறு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தும், இந்த இரண்டு மாநகராட்சி அதிகாரிகளும், புதியதாக உயர்த்தப்பட்ட வீதங்களில் வரிகளைத் தொடர்ந்து வசூலிக்கின்றனரா?

(உ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

(எ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(இ) இல்லை. மதுரை மாநகராட்சியில் சீராய்வுக்குப் பின்னர் விதிக்கப்பட்ட வரியினை வசூலிப்பதற்கு விதிக்கப்பட்ட தடையினை நீக்கும் வரையில் பழைய விகிதத்திலேயே சொத்துவரி வசூலிக்கப்பட்டது. ஆனால் சென்னை மாநகராட்சியில் இப்போதும் பழைய விகிதத்திலேயே வரி வசூலிக் கப்பட்டு வருகின்றது.

(உ) இடமில்லை.

(எ) இடமில்லை.

*Free supply of books, etc., to students.*

* 267 *Q.*—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government have received any representation regarding the stoppage of the free supply of books, slates and dresses as also the payments of Rs. 4 per boy and Rs. 7 per girl, in the case of Mid-day meal students studying from First Standard to Third Standard; and

(*b*) if so, the reason for such stoppage?

மாணவர்களுக்கு இலவசப் புத்தகங்கள் முதலியன வழங்குதல்.

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு அரிசனநலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) முதல் வகுப்பிலிருந்து மூன்றாம் வகுப்புவரை மதிய உணவு அருந்தும் மாணவர்களுக்கு, இலவசமாக புத்தகங்கள், எழுதுபலகைகள், உடைகள் கொடுத்து வந்ததுடன், சிறுவர்களுக்கு ரூ. 4-ம், சிறுமியர்களுக்கு ரூ. 7-ம் கொடுத்து வந்தது; நிறுத்தப்பட்டிருப்பதுபற்றி முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அப்படி நிறுத்தப்பட்டதற்கான காரணம் யாது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) முறையீடு ஏதும் அரசுக்கு வரவில்லை. மதிய உணவு அருந்தும் முதல் வகுப்பிலிருந்து மூன்றாம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்கள், எழுது பலகைகள், உடைகள் கொடுத்து வந்தது நிறுத்தப்படவில்லை.



வழக்கம்போல் அளிக்கப்படுகின்றன. முதல் வகுப்பிலிருந்து மூன்றாம் வகுப்பு வரை பயிலும் பழங்குடியினர் தாழ்த்தப்பட்டோர் மற்றும் அதிலிருந்து மதம் மாறிய வகுப்பைச் சார்ந்த சிறுவர் சிறுமியர்க்கு ரொக்க மாக அளிக்கப்பட்டு வந்த படிப்புதவித் தொகை 1977-78 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படவில்லை.

(இ) இம்மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளும் கல்வித் துறையின் மதிய உணவுத்திட்டத்தின் கீழ்வரும் எனக்கொண்டு முதல் வகுப்பிலிருந்து மூன்றாம் வகுப்புவரை பயிலும் பழங்குடியினர் தாழ்த்தப்பட்டோர் மற்றும் அதிலிருந்து மதம் மாறிய வகுப்பைச் சார்ந்த சிறுவர் சிறுமியர்க்கு ரொக்க மாக அளிக்கப்பட்டு வந்த படிப்புதவித் தொகை 1977-78 ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டது. அனைத்துப் பள்ளிகளும் கல்வித் துறையின் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படவில்லை எனவும், அதன் காரண மாக முதல் வகுப்பிலிருந்து மூன்றாம் வகுப்புவரை பயிலும் பிற மாணவர் களுக்குப் பாடப் புத்தகங்களும் சிலேட்டும் அரிசனம் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் மூலமாக சமூக நலத்துறையால் வழங்கப்படலாம் எனவும் அண்மையில் கல்வித்துறை கருத்துத் தெரிவித்துள்ளது. இது சம்பந்தமாக செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அரிசன நலப் பள்ளிகளில் இலவசமாக வழங்கப்பட்ட புத்தகங்கள், எழுது பலகைகள், உடைகள் முதலியவற்றிற்கு வழங்கப்பட்ட தொகைகள் நிறுத்தப்பட்டுவிட்டதாகக் குறிப்பிட்டார்கள். மீண்டும் வேறு மாற்று முறையிலே அந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு செயற்குறிப்பு இருப்பதாகச் சொன்னார்கள். வருகின்ற கல்வியாண்டிற்கு முன்னால் அந்தச் செயற்குறிப்பை நடைமுறைக்குக் கொண்டுவர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: நெறியாளரிடம் அரசு தகுந்த விவரங்கள் கேட்டிருக்கிறது. அந்த விவரங்கள் வந்த பிறகு, வேக மாக நடவடிக்கை எடுக்கப்படும்.

(பிற்பகல் 4-10)

திரு. சி. இராமலிங்கம்: முதல் வகுப்பிலிருந்து மூன்றாவது வகுப்பு வரையில் படிக்கக்கூடிய அரிசன மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகங் களை வழங்குவது நிறுத்தப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது 1979ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டதா, அல்லது இதற்கு முன்னால் நிறுத்துவதற்கு ஆவன செய்யப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, புத்தகங்கள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன. உதவித் தொகைதான் நிறுத்தப்பட்டது என்று நான் குறிப்பிட்டேன். இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு ஆணையை இடவில்லை. 5—4—1977 அன்று கோயம்புத்தூரில் நடந்த அலுவலர்கள் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. அதைத்தான் இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்த முன் வந்தது. இதை இந்தத் துறையின் மூலமாகவே தரலாமா என்பதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** அரிசன மாணவர்களுக்கு பள்ளி ஆரம்பத்திலேயே இலவசப் புத்தகங்களைக் கொடுக்க ஆவன செய்யப்படுமா? ஏனென்றால் ஆண்டுதோறும் பள்ளி முடிகிற நேரத்தில்தான் அவை கிடைக்கிற சூழ்நிலை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இந்த அரசாங்கம் ஆண்டுத் துவக்கத்திலேயே இலவசப் புத்தகங்களை வழங்க நடவடிக்கை எடுக்கும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** இந்த அரசாங்கம்தான் சென்ற ஆண்டு டிசம்பர் மாதத்தில் இலவசப் புத்தகங்களை வழங்கியிருக்கிறது. ஆகவே இந்த அரசாங்கம் வருகிற ஆண்டிலாவது, பள்ளி ஆண்டுத் துவக்கத்திலேயே கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** பாடப் புத்தகங்களை அச்சடிப்பதில் ஏற்படுகிற காலதாமதம், இங்கிருந்து ஒவ்வொரு பள்ளிக்கும் எடுத்துச் செல்லுவதில் ஏற்படுகிற காலதாமதம் ஆக பல சங்கடங்கள் இருப்பதால், இந்த அரசாங்கம் மட்டுமல்லாமல், எந்த அரசாங்கம் வந்தாலும், இதே நிலைமை தொடர்கிறது. அதை மாற்ற இந்த அரசாங்கம் வேகமாக உரிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

**திரு. க. அறிவழகன் :** பாடப் புத்தகங்களை வெளியிடுவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்ளுகிறாரா என்ற அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இருக்கிற குறைபாடுகளை ஒத்துக்கொள்ளுவதில் தவறில்லை. நிலைமை அதுதான்.



**திரு. செ. முத்துசாமி :** மற்றப் பள்ளிகளில் இருக்கக் கூடிய மாணவர்களுக்கு விரைவாகக் கிடைக்கும்போது அரிசன நலத் துறையில் இருக்கக் கூடிய பள்ளிகளில் மிக நீண்ட காலம் கழித்துக் கிடைப்பதற்குக் காரணம் என்ன? பிற்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகிய மாணவர்களுக்கு வழங்கக் கூடிய இந்தச் சலுகையை காலம் தாழ்த்தி, நான்கைந்து மாதங்கள் கழித்துக் கொடுப்பதால், புத்தகங்கள் இல்லாமல் அந்த மாணவர்கள் படிக்கக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. பிற்பட்டவர்களுக்காக இருக்கக் கூடிய இந்தத் துறை முற்போக்காக இருக்க வேண்டும் என்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, ஏன் காலதாமதம் ஏற்படுகிறது என்பதற்கு பல்வேறு காரணங்களை ஏற்கெனவே குறிப்பிட்டேன். அவற்றைக் களைவதற்கான முயற்சிகளை எப்படி எடுப்பது என்பது பற்றித் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். மற்ற பள்ளிகளுக்கு வேகமாகக் கிடைக்கிறது என்று சொன்னார்கள். அவர்களுக்குத் தேவையான வாகன வசதிகள், பணியாளர் வசதிகள் இருக்கலாம். இந்தத் துறையில் அப்படிப்பட்ட வசதிகள் மிகக் குறைவு. ஆகவேதான் காலதாமதம் ஆகிறது. இருந்தாலும் விரைவாக வழங்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

## *Harijan Welfare Department Teachers.*

* 268 *Q.*—THIRU K. MEENAKSHISUNDARAM: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that the arrears of increments, selection grade increments and duty allowance for Head-masters have not been disbursed to the teachers working under the Harijan Welfare Department in Tiruchirappalli district, for years together;

(*b*) if so, the action taken thereon;

(*c*) whether it has been brought to the notice of the Government that those teachers had been transferred against the rules; and

(*d*) if so, the action taken thereon?

## அரிசன நலத்துறை ஆசிரியர்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், அரிசன நலத்துறையின் கீழ் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஆண்டுக்கணக்கான ஊதிய உயர்வு நிலுவைத் தொகை, தேர்வு நிலை ஊதிய உயர்வுத் தொகை, தலைமையாசிரியர் படித் தொகை, ஆகியவை பட்டுவாடா செய்யப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அதன்மீது மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

(உ) அந்த ஆசிரியர்களை விதிமுறைகளுக்கு மாறாக மாற்றங்கள் செய்திருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(எ) ஆம் எனில், அதன்மீது மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** (அ) திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசினர் நலப்பள்ளி ஆசிரியர் சங்கம் ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு, தேர்வு நிலை ஊதிய உயர்வுத்தொகை மற்றும் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கென சிறப்பு ஊதியம் (Special Pay) வழங்காமை குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தது.

(இ) ஆரம்பப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான படித்தொகையும், நடுநிலைப்பள்ளி (பட்டதாரி அல்லாத) தலைமை ஆசிரியர்களுக்கான சிறப்பு ஊதியமும் (Special Pay) வழங்கப்பட்டு வருகின்றன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு (தேர்வு நிலை ஊதிய உயர்வு உட்பட) அளிக்கப்பட்டுவிட்டது. நிலுவையிலுள்ள ஊதிய உயர்வுத்தொகையினை வழங்கிட அரிசன நலத்துறை தனி வட்டாட்சியர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

(உ) விதிமுறைகளுக்கு மாறாக மாற்றங்கள் செய்திருப்பதாக அரசின் கவனத்திற்கு எதுவும் வரவில்லை.

(எ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** நிர்வாக சௌகரியத்திற்காக ஆசிரியர்களை ஆண்டுக்காண்டு மாறுதல் செய்கிறார்கள். என்றாலும், திருச்சி மாவட்டத்திலே அரிசன நலத் துறையில் பணியாற்றுகிற சுமார் ஆயிரம் ஆசிரியர்களில்



800 ஆசிரியர்களுக்கு இந்த ஆண்டு மாறுதல் அளிக்கப்பட்டிருக்கிறது. தொடக்கக் காலத்திலேதான் மாற்றல் செய்ய வேண்டும் என்ற விதிமுறை இருந்தாலும்கூட, டிசம்பர் திங்களிலே கூட மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. 72 பேர்களை நியமனம் செய்திருக்கிறார்கள். நியமனம் செய்வதிலே கூட விதி முறைகள் பின்பற்றப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். விதிமுறைகளைப் பின்பற்றாத நிலையைக் குறிப்பிட்டுக் காட்டினால், அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே இந்தத் துறையில் பணியாற்றுகிற மொத்த ஆசிரியர்கள் 994 பேர். அவர்களில் கிட்டத்தட்ட இந்த ஆண்டு 370 பேர்களை மாற்றல் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன எண்ணிக்கை சரியல்ல. ஆசிரியர்கள் நியமனத்தில் கூட ஏதோ முறைகேடு நடந்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி ஏதாவது குறைபாடு நடந்திருக்குமென்றால், அதை என் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** 994 ஆசிரியர்களில் 370 பேரை மாற்றல் செய்திருக்கிறார்கள் என்ற புள்ளி விவரத்தைக் கொடுத்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன் என்றாலும், 994 பேர்களில் 370 என்பதே மிகப் பெரிய எண்ணிக்கை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே 18 பி.டி. ஆசிரியர்களை நியமிக்க அரசு அங்கீகாரம் கொடுத்திருந்தும், இன்று வரையில் அந்தப் பதவிகள் நிறைவு செய்யப்படாமலே இருக்கின்றன. அங்குள்ள அரிசன நலத் துறை அதிகாரி ஏதோ உள் நோக்கம் வைத்துக்கொண்டு இப்படியெல்லாம் செய்வதாகப் புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. இது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று நம்புகிறேன். ஆகவே உரிய நடவடிக்கை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று சொன்னார்கள். தெரிந்திருந்தால், நடவடிக்கை எடுத்திருப்பேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது இன்றைக்குத்தான் என்னுடைய கவனத்திற்கு வருகிறது. என்ன உள்

நோக்கம் என்று இன்றைக்கே அவர் எழுதித் தருவார்களேயானால், நாளைக்கே நடவடிக்கை எடுக்க என்னைப் பொறுத்த வரையிலே, தயாராக இருக்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : இரண்டாவது ஊதியக் கமிஷனால் பரிந்துரை செய்யப்பட்டபடி, ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு நிலுவைத் தொகை வழங்கப்படாமல் இருக்கின்றனவா என்று கேட்கப்பட்டிருக்கக் கூடிய கேள்விக்கு இந்த அவையில் இத்தனை மாதங்கள் கழித்துப் பதில் சொல்லுகிறபோதும் கூட, நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறார்கள். இத்தனை ஆண்டுக்காலம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இன்னும் விவரங்களைக் கேட்கிறார்கள். அதற்குப் பிறகு நடவடிக்கை எடுப்பார்கள் என்று சொன்னால், நிர்வாகத்தினுடைய நடைமுறை எப்படியிருக்கும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே இது குறித்து அமைச்சர் அவர்கள் விரைவாக நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி எப்போது போடப்பட்டது என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்குத் தெரியும். இதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள பதிலில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கேள்வியில், ஊதிய உயர்வைத் தவிர, தேர்வு நிலை, தலைமையாசிரியர் படி ஆகிய இதர கோரிக்கைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் துறையைப் பொறுத்த வரையில், வேகமாகப் பணியாற்ற வேண்டுமென்றால், அதிக அளவில் பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள் என்பது ஒரு கருத்து. இன்றைக்கு இந்தப் பணியைச் செய்ய ஒரே ஒரு இளநிலை எழுத்தர்தான் இருக்கிறார். அவர்தான் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டியிருக்கிறது. அதனால்தான் காலதாமதம். வேறு எந்தப் பிரச்சினையும் இல்லை.

## *Nationalisation of bus routes*

* 269. THIRU C. RAMALINGAM (on behalf of THIRU E. S. VENKATESAN): Will the Hon. the Minister for Transport be pleased to state whether there is any proposal to denationalise, or stop nationalising, bus routes in the State, in view of the agitational and violent behaviour of the employees, which results in huge loss and damage to persons and properties ?



## பேருந்து வழித்தடங்களை நாட்டுடைமை ஆக்குதல்.

திரு. சி. இராமலிங்கம் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன் சார்பில்) : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

பேருந்துப் பணியாளர்களின் கிளர்ச்சி மனப்பான்மை, வன்முறை நடவடிக்கை காரணமாக மக்களுக்கும் சொத்துக்களுக்கும் பெருஞ்சேதம் விளைவதைக் கருத்தில் கொண்டு, மாநிலத்தில் பேருந்து வழித்தடங்களை நாட்டுடைமை ஆக்காமல் விட்டுவிடவோ, அல்லது நாட்டுடைமை ஆக்குவதை நிறுத்திவிடவோ, செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

திரு. க. அறிவழகன் : பேருந்துப் பணியாளர்களின் கிளர்ச்சி மனப்பான்மை காரணமாக, நாட்டுடைமை ஆக்குவதை நிறுத்தப் போவதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது மகிழ்ச்சிகரமானது. ஆனால் பேருந்துப் பணியாளர்களிடம் உள்ள கிளர்ச்சி மனப்பான்மையை நீக்க அரசு எடுத்திருக்கிற முயற்சிகள் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கிளர்ச்சி மனப்பான்மை பலவித காரணங்களால் தொழிலாளர்களுக்கு உண்டாகிறது. அவற்றில் ஒன்று, ஊதிய உயர்வு வேண்டும், அவர்களுடைய சேம நலங்கள் பேணப்பட வேண்டும் என்பது. இந்த ஆட்சியைப் பொறுத்த வரைக்கும், பாரதத்திலே எங்கும் இல்லாத அளவுக்கு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு, ஆள் ஒன்றுக்கு 69 ரூபாய் அளவுக்கு ஊதியம் உயர்த்தியிருக்கிறோம். மற்றும் இதர சலுகைகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. சேம நலத் திட்டங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் மூலம் அவர்களுடைய கிளர்ச்சி மனப்பான்மை குறையும் என்று அரசு கருதுகிறது.

திரு. ஆ. நல்லசிவன் : எந்தவிதமான காரணமும் இன்றி தொழிலாளர்களுக்குக் கிளர்ச்சி மனப்பான்மை இருக்கிறது என்பது இந்தக் கேள்வியினுடைய சாராம்சம் என்று தெரிகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அப்படி நினைக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ஏற்கெனவே இல்லை என்று பதில் அளித்திருக்கிறேன்.

**திரு. க. அறிவழகன் :** மாணவர்களிடத்திலே தேசிய நல மன்றம் (என்.எஸ்.எஸ்) என்ற ஒரு சங்கம் இருக்கிறது. மாதத்திற்கு ஒருமுறை விரும்புகிற பேருந்துப் பணியாளர்கள் அவர்களுடன் சேர்ந்து சில நிகழ்ச்சிகள், விழாக்கள் போன்றவற்றில் பங்கு கொள்வதன் மூலம் இந்தக் குறையைப் போக்க முடியும் என்று அந்த மாணவர்கள் தேசிய நல மன்றத்தின் நெறியாளர்கள் கருதுகிறார்கள். அப்படி இரண்டு பேருக்கும் நல்ல தொடர்பை ஏற்படுத்தித் தருகிற முயற்சியை அரசு செய்யுமா ?

[பிற்பகல் 4-20]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய யோசனை மிக நல்ல யோசனைதான். அதன் அடிப்படையிலே ஏற்கெனவே அனைத்துக் கல்லூரி மாணவர்கள் சங்க பிரதிநிதிகளும், போக்குவரத்துத் துறையிலே குறிப்பாக பல்லவன் தொழிற் சங்கப் பிரதிநிதிகளும், காவல் துறையினரும் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டு, மூன்று முறை சந்தித்து, இதுபோன்ற பிரச்சினைகளைப் பற்றிக் கூடிப் பேசி விவாதித்திருக்கிறார்கள். இதை நல்ல முறையில் செயற்படுத்த அரசு தீவிர நடவடிக்கை மேற்கொள்ளும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** பயணிகள் கிளர்ச்சிக்குக் காரணம் மாவட்டத் தலைநகரங்களில் குறிப்பிட்ட நேரங்களில் தேவையான அளவுக்கு பேருந்துகள் கிடைப்பதில்லை. எல்லா இடங்களிலும் கூடுதல் பேருந்துகள் விடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பயணிகள் கிளர்ச்சிக்குக் காரணம் அதுதான் என்பதை ஒத்துக்கொள்கிறேன். 70 சதம் மக்கள் கிராமப் புறங்களில் வாழ்கின்றார்கள். கிராமப்புறப் பகுதிகளிலே பெரும்பான்மையான மக்களுக்குப் போக்குவரத்து வசதி செய்ய வேண்டும் என்பதற்காக ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு அதைப்பற்றி ஆய்வு செய்கிறது. எங்கெங்கு பேருந்துகள் குறைவாக இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதை ஆய்வு செய்திருக்கிறார்கள். வருகின்ற ஏப்ரல் மாதத்திலிருந்து கூடுதல் பேருந்துகள் விடுவதற்கு, கிராமப்புற மக்கள் நலன் கருதி, அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



### Dockyard in Tamil Nadu

*270 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU K. RAMAMOORTHI): Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the State Government have approached the Central Government to set up a Dockyard in Tamil Nadu; and

(*b*) If so, the details thereof ?

### தமிழ்நாட்டில் கப்பல் பழுது பார்க்கும் நிலையம்.

**திரு. சி. ரா. லெட்மிகாந்தன் (திரு. க. இராமமூர்த்தி சார்பில்):** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் கப்பல் பழுது பார்க்கும் நிலையம் அமைப்பது குறித்து மாநில அரசு, மத்திய அரசை அணுகியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) ஆம்.

(இ) சென்னைத் துறைமுகத்தில் 180 மீட்டர் கப்பல் பழுது பார்க்கும் (dry dock) கூடம் அமைக்கவேண்டியது கீழ்க்கண்ட காரணங்களுக்காக அவசியம் என்று இவ்வரசு கருதியது :

(1) சென்னையிலுள்ள கலங்கள் பழுது பார்ப்பதற்கென பம்பாய்க்கும், கல்கத்தாவிற்கும் அனுப்பப்படவேண்டியுள்ளது, இதனால், நிறைய காலம் வீணாவது மட்டுமில்லாமல், நிறைய செலவும் ஆகின்றது.

(2) சென்னையில் 'டிரை டாக்' அமைப்பதற்கான எல்லா அடிப்படை வசதிகளும் அமைந்திருக்கின்றன.

(3) பயிற்சி பெற்ற தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும், வேலையில்லாதிருக்கும் ஆயிரக்கணக்கானோர்க்கும் வேலை வாய்ப்பு அளிக்க முடியும்.

(4) 'டிரை டாக்' சென்னையில் அமைவதன் மூலம் அதற்குத் தேவையான உதிரிப் பொருள்களைத் தயாரிக்க பல சிறு தொழில்களும், உபதொழில்களும் தமிழ்நாட்டில் வளர வழி பிறக்கும்.

இத்திட்டத்திற்கு ரூ. 631 இலட்சம் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்" கின்றது. இது குறித்து இம்மாநில அரசு எடுத்துக்கொண்ட பெரு முயற்சியின் காரணமாக 180 மீட்டர் டிரை டாக் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை மைய அரசின் தீவிர பரிசீலனையிலுள்ளது.

THIRU A. R. DAMODARAN : May I know whether this project has been included in the Sixth Plan or whether it is a project that is apart from the Plan ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசை நாங்கள் வலியுறுத்தியதன் அடிப்படையில் 120 மீட்டர் டிரை டாக் அமைப்பதற்கு 6-வது திட்டத்திலே ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். 120 மீட்டர் டிரை டாக் அமைப்பதாக இருந்தால், பெரிய கப்பல்களெல்லாம் இங்கே வந்திருக்கும்போது, பழுது பார்க்கின்ற சூழ்நிலைகள் இல்லாமல் போய்விடும். இப்போது சென்னைக்கு வருகின்ற பெரிய கப்பல்கள் எல்லாம் இங்கு 180 மீட்டர் டிரை டாக் இருந்தால்தான், பழுதுபார்க்க முடியும். இன்று அவைகள் எல்லாம் பம்பாய், கல்கத்தா செல்லவேண்டிய நிலைமைகள் இருக்கின்ற காரணத்தினால், 120 மீட்டர் டிரை டாக் அமைப்பது போதாது. 180 மீட்டர் டிரை டாக் வேண்டுமென்று பலமுறை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் திரு. சாந்த் ராம் அவர்களிடம் எடுத்துக் கூறியிருக்கிறோம். அதன் அடிப்படையிலே தான் அவர்களும் பரிசீலித்து வருகிறார்கள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** 180 மீட்டர் டிரை டாக் அமைக்கப் படுகின்ற நேரத்தில், கப்பல்கள் பழுது பார்ப்பதற்குப் பயிற்சி பெற்றவர்கள் வேண்டும். அப்படிப்பட்ட வகுப்புகள் மாணவர்களுக்காக நடத்த அரசு ஏற்பாடு செய்ய உத்தேசம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தற்போது அந்த எண்ணம் இல்லை. டிரை டாக் அமைக்கப்பட்ட பிறகு அதைப்பற்றி அரசு பரிசீலனை மேற்கொள்ளலாம்.



**திரு. டி. சந்தோஷம் :** தென் மாவட்டங்களில் இப்போது வேலைவாய்ப்பு அதிகமாக இல்லை. அநேகமாக தென் மாவட்டங்கள் பின் தங்கியவை களாக இருக்கின்றன. ஆகவே இவ்வளவு பெரிய டிரை டாக் இல்லை என்றாலும்கூட, ஓரளவுக்காவது சிறிய டிரை டாக் ஒன்றை தூத்துக்குடி யிலோ, மண்டபத்திலோ அமைப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தூத்துக்குடியிலே இந்த டிரை டாக் அமைப்பது சாலச் சிறந்ததாக இராது. அதுபோலவே மண்டபமும் அதற்கு ஒத்ததாக இல்லை. பெரிய கப்பல்கள் எல்லாம், வெளிநாட்டுக் கப்பல்கள் எல்லாம் சென்னைத் துறைமுகத்திற்குத்தான் வருகின்றன. அப்படி இங்கே வரும்போது, இங்கே பழுது ஏற்பட்டால், சென்னையிலிருந்து பம்பாய்க்கு அல்லது கல்கத்தாவுக்குப் போக வேண்டியதாக இருக்கிறது. அதன் காரணமாக ஏகப்பட்ட செலவாகிறது. அத்துடன் அதற்காக Fuel செலவாகிறது. அதன் காரணமாகத்தான் அரசு சென்னையில் டிரை டாக் அமைக்க எண்ணியிருக்கிறது. சென்னையிலே இருந்தால் தான் அதற்குரிய பலன் கிடைக்கும் என்றும் அரசு கருதுகிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 22—3—1979ஆம் தேதிய வினாப்பட் டியலிலிருந்து 24—3—1979 தேதிக்கு ஒத்திப்போடப்பட்ட வினாக்கள். வினா எண். 249 எடுத்துக்கொள்ளப்படுகிறது. போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்கள்.

*Facilities in Government Buses.*

@249 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that, in order to attract passengers, in most of the private buses, Cassette Tape Recorder, etc., have been provided and songs etc., are played so that passengers can listen to them in the bus itself; and

(*b*) if so, whether the Government will consider the suggestion of providing such Tape Recorders in the State Transport Corporation Buses also for attracting the passengers ?

---

@ 22—3—1979 ஆம் நாள் வினாப் பட்டியலிலிருந்து ஒத்தி வைக்கப் பட்டது.

## அரசுப் பேருந்துகளில் வசதிகள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பெரும்பாலான தனியார் பேருந்துகளில், பயணிகளைக் கவருவதற்காக, கேஸ்ஸட் டேப் ரிக்கார்டர் (Cassette Tape Recorder) போன்ற கருவிகள் பொருத்தப்பட்டு, பேருந்துகளுக்குள்ளேயே பயணிகள் கேட்பதற்கு வசதியாக, பாடல்கள் முதலியன ஒலிபரப்பப்படுவது, அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும், இத்தகைய கருவிகளை அமைத்துப் பயணிகளைக் கவரும் யோசனையை அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) ஆம்.

(இ) சில அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும், இத்தகைய கருவிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** எத்தனை அரசுப் பேருந்துகளில் இவ்வாறு ரேடியோக்கள் பொருந்தப்பட்டிருக்கின்றன ? அதுபோல் அனைத்துப் பேருந்துகளிலும் பொருத்துவதற்கு ஏதாவது யோசனை பரிசீலனையில் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மெல்லிசைக் கருவிகளைப் பொருத்துவதால் ஓட்டுநர்களுக்கு ஒன்றும் இடையூறு ஏற்படுவதில்லை. அதற்கு மாறாக உற்சாகம் ஏற்படும் என்ற அளவுக்குத்தான் இருக்கின்றது. அதன் அடிப்படையில்தான் பல்லவன் விரைவுப் பேருந்துகளில், இரண்டு வழித்தடங்களிலும், பாண்டியன் போக்குவரத்தில், இரண்டு தொலை தூரப் பேருந்துகளிலும், அண்ணா போக்குவரத்தில் 3 வழித்தடங்களிலும், கட்டபொம்மன் போக்குவரத்தில் 6 தொலை தூர வழித்தடங்களிலும், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் 2 வழித்தடங்களிலும் இவைகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. மற்ற போக்குவரத்து வழித்தடங்களிலும் இவைகளைப் பொருத்துவது பற்றி அரசு படிப்படியாகப் பரிசீலிக்கும்.



**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இது போலவே, பேருந்துகளில் பயணம் செய்யும்போது, பயணிகளுக்குப் பயன் உள்ள வகையில் நல்ல நூல்கள், நல்ல புத்தகங்கள் வழங்க அரசு பரிசீலனை செய்யுமா ? அதாவது ஒரு மொபைல் லைப்ரரி போல வழங்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** நல்ல பத்திரிகைகள் வழங்குவதற்கு அரசு பரிசீலனை மேற்கொள்ளும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** பேருந்துகளிலே டேப் ரெக்கார்ட் போடுவதன் மூலம் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று சொல்கின்றார்கள். தனியார் பேருந்துகளில் இப்படி ரெக்கார்ட் பிளே பண்ணுவதால், அந்தப் பேருந்துகளில் பயணம் செய்ய வேண்டுமென்று பயணிகள் கருதுகிறார்கள். இப்படி பாடல்கள் போடுவதனால் விபத்துகள் அதிகப்படுகின்றன. அந்துடன் பல பயணிகள் இந்தப் பாடல்கள்தான் போடவேண்டும், அந்தப் பாடல்கள் தான் போடவேண்டும் என்று கேட்பதாகவும், சில நேரங்களில் ஆபாசப் பாடல்களைப் போடும்படி கேட்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதனால், ஒட்டு மொத்தமாகவே இதை நிறுத்துவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தனியார் பேருந்துகளிலே இந்த மெல்லிசைக் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கின்ற காரணத்தினாலேதான், அரசுப் பேருந்துகளிலும் பொருத்தப்பட்டிருக்கின்றன என்பது சொல்வது சரியல்ல. மாறாக, அரசுப் பேருந்துகளில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் ஓசை எழுப்பாமல், கட்டுப்படுத்தப்பட்ட ஓசையில் பாடுகின்ற அளவு கருவிகள்தான் பொருத்தப்பட்டிருக்கின்றன. குறைந்த ஓசையுடன் இருப்பதால், இடையூறுகள் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகளில்லை. ஓட்டுநர்களும் அதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் காரணத்தினாலேயே இவைகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. எந்தவிதமான விபத்தும் இதன் காரணமாக ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** அரசுப் போக்குவரத்திலே மெல்லிசைக் கருவி, அதிகமான சவுண்ட் இல்லாமல் இருக்கின்ற கருவிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். தனியார் பேருந்துகளிலே அந்தக் கருவிகளில் இருந்து அதிகமான சவுண்ட் வருகின்றதால், அதில் உட்கார்ந்து கொண்டு இருக்க முடியவில்லை, சவுண்டு தொல்லையாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதன் காரணமாக தனியார் பஸ்களிலே விபத்துக்கள்

ஏற்படுகின்றன என்பதைச் சொல்ல முடியும். அவர்களும் குறைந்த ஓசை இருக்கும் கருவிகளைப் பொருத்த ஆணை பிறப்பிக்குமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் ஆலோசனையின் அடிப்படையில் கண்டிப்பாக அந்தப் பேருந்துகளில் அப்படிப்பட்ட கருவிகள் வைக்க தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மெல்லிசைப் பாடல்கள் போடப்படுவதாகச் சொன்னார்கள். சோகப் பாடல் போடப்படுகிறதா? பெண் பயணிகள் பயணம் செய்கின்றார்கள். அப்படிப்பட்ட பாடல்கள் போடுவதைவிட நல்ல பாடல்களாகப் போடுவார்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** சோகப் பாடல்கள் போடாமல், நல்ல கருத்துள்ள பாடல்களைப் போடும்படி அரசுப் பேருந்துகளுக்கு ஏற்கெனவே உத்தரவிடப்பட்டுள்ளது.

(பிற்பகல் 4-30)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** சேலத்திலிருந்து பெங்களூருக்குச் செல்லும் சில பேருந்துகளில் செல்லும் பயணிகளுக்கு இடையிலே போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக தேனீர் இலவசமாக வழங்கப்படுகிறது என்பது உண்மையா? அது உண்மையென்றால், நெடுந்தொலைவிற்குச் செல்லும் அனைத்துப் பேருந்துப் பயணிகளுக்கும் அப்படி வழங்க அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தொலை தூரப் பேருந்துகளில் பயணம் செய்கின்ற பயணிகளுக்கு இது போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்றுதான், Motels என்ற பயண அமைப்புகள் வரும் ஆண்டில் அமைக்கப்பட இருக்கின்றன. அவை அமைக்கப்பட்ட பிறகு, இது போன்று பயணிகளுக்குக் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது.

**திரு. ஆ. திராவிடமணி :** பேருந்துகளுக்கு அத்தியாவசியமான சாதனங்கள்—ஸ்டெப்னி, ஜாக்கி, ஸ்பேனர், குடி தண்ணீர்—இருக்கின்றனவா என்று பேருந்து புறப்படுவதற்கு முன் செக் பண்ண முடியுமா? முதல் உதவிப் பெட்டி



பேருந்தில் இருக்கிறது. ஆனால் அதன் உள்ளே ஒன்றுமில்லை. அதிலே மருந்துகள் வைக்கப்படுமா? இது குறித்து அமைச்சரவர்கள் சுற்றறிக்கைவிட ஆவன செய்வார்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** குறிப்பாக அரசுப் பேருந்துகளில் கண்டிப்பாக ஸ்டெப்னி பொருத்தப்பட வேண்டும், உப கருவிகள் வைக்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டு, அடிக்கடி சோதனை செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொலைதூரப் பேருந்துகளில் குடி தண்ணீர் வசதிகள் இருக்கின்றன. எங்கெங்கு இல்லையோ, அதைப்பற்றி தகவல்களை அரசுக்குத் தந்தால், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காக நடைபெறுகின்ற ஆய்வினை இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படும்.

**திரு. செ. முத்துசாமி :** நம்முடைய மரியாதைக்குரிய போக்குவரத்து அமைச்சரவர்கள் நகரப் பேருந்தில் ஏறிப் பயணம் செய்ததாக பத்திரிகையில் செய்தி அறிந்தேன். அதைக் கண்டு மகிழ்ந்தேன். அதேபோன்று வெளியூர்களிலுள்ள பேருந்துகளிலும் ஏறி, பயணம் செய்வாரா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** வெளியூர் பேருந்துகளில்கூட அவ்வப்போது சோதனைகளை நடத்தி வருகிறோம். நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** அமைச்சரவர்கள் சோதனை நடத்தியது, குறிப்பிட்ட பத்திரிகையின் அதிகமான விற்பனைக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே அப்படிப்பட்ட ஏற்பாடு இல்லாமல், முன்னறிவிப்பு இல்லாமல் அமைச்சரவர்கள் பயணம் செய்வார்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொன்னேன். முன்னறிவிப்பு இல்லாமல்தான் சோதனைகள் நடந்து வருகின்றன. இந்த முறை எனக்கும் தெரியாமல், அந்தத் தகவல் வெளியே வரும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. முன்னறிவிப்பு இல்லாமல் பல வழித் தடங்களில் சோதனைகள் நடத்தப்படுகின்றன, நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

## WORKSHOP OF TAMIL NADU GOODS TRANSPORT CORPORATION

@ 250 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU K. RAMAMOORTHI) : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the residents of Anna Nagar area Madras, represented in July—August 1978, for shifting the workshop of the Tamil Nadu Goods Transport Corporation to some other place from its present location ; and

(*b*) if so, the action taken thereon ?

### தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழக தொழிற்கூடம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. க. இராமமூர்த்தி சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை அண்ணா நகர் குடியிருப்புப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகத்தின் தொழிற்கூடத்தை (workshop) வேறு இடத்திற்கு மாற்றும்படி, 1978-ஆம் ஆண்டு ஜுலை-ஆகஸ்டு மாதங்களில், அப்பகுதி வாழ் பொதுமக்கள் முறையிட்டிருந்தார்களா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை, ஆனால் 1977-ம் ஆண்டு ஜுலை-ஆகஸ்டு திங்கள்களில் முறையிட்டிருந்தார்கள்.

(இ) தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக்கழகத்தின் தொழிற்கூடத்தை ஆட்சேபணையில்லாத மற்றொரு இடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கே இருக்கிற தமிழ் நாடு பொருள் போக்குவரத்துக் கழகத்தின் தொழிற்கூடத்தை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன

---

@ 22—3—1979 ஆம் நாள் வினாப் பட்டியலிலிருந்து ஒத்தி வைக்கப்பட்டது.



என்று சொன்னார்கள். அது எப்போது மாற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். பல குடியிருப்புகளில் குடியிருக்கிற அதிகாரிகள், அதிகாரிகளிடத்திலே தொடர்பு கொண்டு அதை மாற்ற வேண்டுமென்று அடிக்கடி வற்புறுத்துகிறார்கள். இருந்தாலும், அங்கே வேறொரு போக்குவரத்துக் கழகத் துணை அலுவலகம் திறக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். எனவே அண்ணா நகர் போன்ற குடியிருப்புகளில், அரசாங்க அலுவலகங்களை ஏற்படுத்தி, அதிகமான வாகனங்கள் செல்வதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கூடியவிரைவில் பட்டினப்பாக்கம் பகுதிக்கு அருகிலே எடுக்கப்பட்டுள்ள இடத்திலோ அலலது நந்தனம் பகுதிக்கோ அந்தத் தொழிற்கூடத்தை மாற்ற தீவிர நடவடிக்கை எடுத்து, விரைவிலே அது அமுல்படுத்தப்படும். மேலும் ஆர்.டி.ஓ. அலுவலகம் அமைக்கப்பட்டிருப்பது குறித்து, உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அது அமைக்கப்பட்ட பிறகு, அங்குள்ள மக்களுக்கு அது குறித்து குறைபாடு இருப்பதாக அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. இன்னும விசாலமான இடத்தை, வாகனங்கள் தங்கக்கூடிய அளவிற்கு இடத்தைத் தேட முயற்சிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட இடம் கிடைத்தவுடன், அந்த அலுவலகம் மாறறப்படுமெனறு கூறி, அண்ணா நகரின் அமைதியை அரசு பங்கப்படுத்தாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : According to the Town Planning Rules, it is an offence to use a residential area for such non-residential purposes. May I know why the Government themselves are infringing the rules promulgated by the MMDA which prohibits such factories, workshops or Departments being opened in residential areas ?

THE HON. THIRU C. PONNAIYAN : Hon. Chairman, Sir, there is prohibition only for starting any industries in residential areas. But this is not an industry.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**2. அறிவிப்புகள்.**

**(1) ஆளுநரிடமிருந்து செய்தி.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுநர் அவர்கள் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை ஆய்விற்கு எடுத்துக் கொள்வதற்கு தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள் :—

1. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு.

2. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்டமுன்வடிவு.

**(2) பேரவையிலிருந்து செய்தி.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு, இம் மேலவையின் பரிந்துரைக்காகப் பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு கீழ்க்கண்ட சட்டமுன்வடிவுகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

1. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/1979).

2. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/1979).

**(3) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவை விதி 166ன்படி 1979–80 ஆம் ஆண்டுக்கான அலுவல் ஆய்வுக் குழுவிற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமித்துள்ளேன் :—

மாண்புமிகு மேலவைத் தலைவர் (தலைவர்).

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு மேலவை முன்னவர்.

திரு. எம். சங்கரலிங்கம் (எதிர்க் கட்சித் தலைவர்).

திரு. என். சுந்தரேசத் தேவர்.



திரு. ஏ. ஆர். தாமோதரன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்.

திரு. ப. மாணிக்கம்.

திரு. டி. வி. டி ' மாண்டி.

மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு நிதியமைச்சர், மேலவைக் கொறடா, திரு. சந்தோஷம், திரு. ஆ. நல்லசிவன், திரு. செ. முத்துசாமி ஆகியோர் நிரந்தர அழைப்பாளர்களாக இக் குழுவில் அங்கம் வகிப்பர்.

**(4) விதிகள் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவை விதி 192-ன்படி 1979–80 ஆம் ஆண்டுக்கான விதிகள் குழுவிற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமித்துள்ளேன் :—

மாண்புமிகு மேலவைத் தலைவர் (தலைவர்).

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு மேலவை முன்னவர்.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

எதிர்க் கட்சித் தலைவர்.

டாக்டர் எச். வி. ஹண்டே.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்.

திரு. என். சுந்தரேசத் தேவர்.

திரு. ஏ. ஆர். தாமோதரன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்.

திரு. டி. வி. டி. 'மாண்டி.

திரு. ப. மாணிக்கம்.

திரு. ஆ. நல்லசிவன்.

திரு. பி. ஆர். தாமஸ்.

(5) அரசு உறுதி மொழிக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவை விதி 175-ன்படி 1979-80 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதி மொழிக் குழுவிற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமித்துள்ளேன்:—

1. திரு. ம. சங்காலிங்கம்—எதிர்க் கட்சித் தலைவர் (தலைவர்).
2. டாக்டர் இரா. சனார்த்தனம்.
3. திரு. இரத்தின பாலகுருசாமி.
4. திரு. வே. தங்கப்பாண்டியன்.
5. திரு. ஆ. பாலசுப்ரமணியம்.
6. திரு. ப. மாணிக்கம்.
7. திரு. க. மீனாட்சிசுந்தரம்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

(1) திராவிடர் கழகப் பொதுச் செயலாளரும், தொண்டர்களும் கைது செய்யப்பட்டது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் திராவிடர் கழகத் தலைவர் கைது செய்யப் பட்டுள்ளது பற்றி ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதியின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, திராவிடர் கழகப் பொதுச் செயலாளரும், அவரோடு 57 திராவிடர் கழகத் தொண்டர் களும், தமிழ் நாடு அரசாங்கம் நியமித்த ஆஸ்தான கவிஞருடைய நிய மனத்தை ரத்து செய்ய வேண்டுமென்று ஓர் அறிக்கை விட்டு, அரசாங்கத் தரப்பிலேயிருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லை என்ற அடிப்படையில், இந்த மாதம் 22ஆம் தேதி கோட்டையை நோக்கி ஊர்வலம் வரும்போது, கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த மன்றத்திலே ஏற்கெனவே ஒரு முறை குறிப்பிட்டிருந்தேன். அரசாங்கப் பணியிலே ஒருவரை நியமிக்கின்ற நேரத்தில், அவர் அரசாங்கத்தினுடைய கொள்கைக்கு விரோதமாக அல்லது லட்சியங்களுக்கு விரோதமாக, அரசாங்கத்திலே சம்பளத்தை வாங்கிக்



கொண்டு—முறை தவறி எழுதுவதன் மூலம், நாட்டு மக்கள் மத்தியிலே அல்லது ஒரு குறிப்பிட்ட பிரிவினர் மத்தியிலே ஒரு கொந்தளிப்பான சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தேன். அதைப் போலவேதான், திராவிடர் கழகத்தினர் தங்கள் இதயத்திலே என்றும் நிலை நிறுத்திக்கொண்டிருக்கிற தந்தை பெரியார் அவர்களைப்பற்றியும், அவ ருடைய குடும்பத்தைப் பற்றியும் ஆளும் கட்சியினுடைய பத்திரிகை யிலே, ஆஸ்தான கவிஞர் ஒரு தவறான கருத்தை அல்லது தந்தை பெரியார் அவர்கள் குடும்பத்தை இழிவுபடுத்தும் ஒரு கருத்தை எழுதி வந்ததையொட்டி, அப்படிப்பட்டவரை அரசாங்கம் அந்தப் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் வைத்து, அதற்கு அரசுத் தரப்பிலேயிருந்து எந்தவிதமான பதிலும் வராததால், இன்று அவர்கள் போராடி, சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இதனாலே

(பிற்பகல் 4-40)

தந்தை பெரியார் அவர்களுடைய தொண்டர்களுக்கு, அவர்களுடைய இதயத் திலே ஏற்பட்டிருக்கிற அந்த வேதனையான நிகழ்ச்சியைத் தீர்க்கின்ற வகை யில், துடைக்கின்ற வகையில் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்காத நிலையில், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு. வீரமணி அவர் களைக் கைது செய்துள்ளதன் மூலம் மேலும் தமிழகம் எங்கும் தொடர்ந்து இப்படிப்பட்ட போராட்டங்கள் உருவாகக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்ப தால், அதைத் தவிர்க்கின்ற வகையில், இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து உடனடியாக இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவரவர்களே, 21—3—1979 அன்று திராவிடர் கழகம் தண்டையார் பேட்டையில் ஒரு பொதுக் கூட்டத்தை நடத்தியபோது, அங்கு பேசிய திருவாளர்கள் பாளையங் கோட்டை சண்முகம், கே. வீரமணி மற்றும் பலரும் மறைந்த தந்தை பெரியார் குடும்பத்தினரைக் குறித்து திரு. கண்ணதாசன் தவறான சொற் களைக் கூறியிருப்பதாக கண்டித்து, மாநில முதலமைச்சரின் ஆதரவு இருப் பதால், திரு. கண்ணதாசன் அப்படிக் கூறியிருப்பதாகப் பேசினார்கள். அவர் அரசு கவிஞர் பதவியிலிருந்து இறக்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் கோரினர். அது சம்பந்தமாக தாங்கள் 22—3—1979 அன்று சட்டமன்றத் தின் முன்பு மறியல் செய்யவிருப்பதால், அங்கே அனைவரும் திரளாகக்கூட வேண்டுமென்று அவர்கள் அறிவித்தனர். தந்தை பெரியார் அவர்களின்

[திரு. கா. இராசா முகமது] [1979 மார்ச் 24

குடும்ப உறுப்பினர்களைக் குறித்து தவறாக திரு. கண்ணதாசன் எழுதிய தாகக் கூறி அதனால், திரு. கண்ணதாசனை அரசு கவிஞர் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று கூறி, திராவிடக் கழகத்தைச் சேர்ந்த 25 பெண்கள் உட்பட சுமார் 250 பேர் 22—3—1979 அன்று காலை அண்ணாசாலை, பெரியார் சிலை அருகில் கூடினர். அவர்கள் மத்தியில் சிறிது நேரம் கழகத்தின் பொதுச் செயலாளர் திரு. கே. வீரமணி அவர்கள் பேசும்போது தமிழக அரசு திரு. கண்ணதாசனை அரசு கவிஞர் பொறுப்பிலிருந்து இறக்க வேண்டுமென்று கூறினார். பிரபுத்துவ முறை தற்போது நாட்டில் ஒழிக்கப் பட்ட பிறகும்கூட, ஆஸ்தான கவி போன்ற பதவிகள் தற்போது உண்டாக் கப்பட்டிருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். திரு. கே. வீரமணி தலைமை யில் அவர்கள் காலை சுமார் 9.30 மணிக்கு ஊர்வலமாகப் புறப்பட்டனர். ஊர்வலத்தில் 25 சைக்கிள் ஓட்டிகளும் கலந்து கொண்டனர். வழி நெடுக அவர்கள் கோஷங்களை எழுப்பினர். அவர்கள் நேப்பியர் பாலத்தை அடைந்தவுடன், தடை உத்தரவு அமுலில் இருக்கும் காரணத்தால், அங்கு அவர்களை காவல் துறையினர் தடுத்து நிறுத்தினர். இருப்பினும் தடையை மீறி, மேலே சென்ற திரு. கே. வீரமணி அவர்களும் 5 பெண்கள் உட்பட மற்றவர்கள் 59 பேரும் 'எக்ஸ்' ஸ்டேஷன் குற்ற எண். 137/79 இ.பி.கோ. 143, 188, நகர காவல் சட்டம் செக்ஷன் 41 ஆகிய சட்டங்களின் படி கைது செய்யப்பட்டனர். திரு. கே. வீரமணியும் மற்ற 54 பேரும் சென்னை எழும்பூர் 14வது பெருநகர் குற்றவியல் நீதிபதியால் 5—4—1979 வரை காவலில் வைக்கப்பட்டனர். ஐந்து பெண்கள் காவல்துறையினரால் விடுவிக்கப்பட்டனர். நிலைமை அமைதியாகவே இருக்கிறது. எனவே இது குறித்து சட்ட மன்ற மேலவையின் ஏனைய அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரின் விளக்கத் திற்குப் பிறகு, மேலவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதை விவாதிக்கத் தேவையில்லையென்று கருதி, ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.



(2) பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் சார்பில் சென்னையில் ஆசிரியர்கள் நடந்து உண்ணாவிரதம் குறித்தும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் மாவட்டத் தலைநகரங்களில் நடத்தும் உண்ணாவிரதம் குறித்தும்

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர் கள் சி. ரா. லெட்சுமிகாந்தன், பி. ஆர். தாமஸ், க. மீனாட்சிசுந்தரம், செ. முத்துசாமி ஆகியோர் பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் சார்பில் மேல் நிலை, உயர்நிலை, நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள் சென்னையில் நடத்துகிற உண்ணாவிரதம் குறித்தும், திருவாளர்கள் செ. முத்துசாமி, க. மீனாட்சி சுந்தரம், வி. ஆர். பெரியண்ணன் ஆகியோர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் மாவட்ட தலைநகரங்களில் நடத்துகின்ற உண்ணாவிரதம் குறித்தும் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். அது எந்த வகையில் ஒத்திவைப்புத் தீர்மான விதிகளுக்குட்பட்டு வருகிறது என்பதை மட்டும் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, இன்றோடு 4 நாட்க ளாக, தீர்க்கப்படாமல் இருக்கும் சில முக்கியமான கோரிக்கைகளை வற் புறுத்தி, தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் சார்பில் பல்வேறு ஆசிரியர்களுடைய இயக்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு சாத்வீக மான முறையில் உண்ணாவிரதமிருக்கின்ற நேரடி நடவடிக்கை ஒன்று நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகக் கட்டிடத்திற்கு அருகிலே அவர்கள் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். 1,800 க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இதிலே கலந்துகொண்டிருக்கிறார்கள். அது போல் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மாவட்டத் தலைநகரங்களில் 16 அம்சக் கோரிக்கைகளை வற்புறுத்தி இன்று தமிழகம் முழுவதும் உண்ணா விரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். தொடக்கப் பள்ளி ஆசிரியர்களானா லும் சரி அல்லது மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களானாலும் சரி, அவர்கள் வற்புறுத்துகின்ற கோரிக்கைகளிலே மிக அடிப்படையான நியாயங்கள் இருக்கின்றன. இதைப்பற்றி நாங்கள் முன்பே பல முறை அரசுக்கு, அதிகாரிகளிடத்தில், அமைச்சர்களிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இன்றைக்கு பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் சார்பில், 20 அம்சக் கோரிக்கை களை வலியுறுத்தி மேல் நிலை, உயர் நிலை, நடு நிலைப் பள்ளி ஆசிரியர்கள் சென்னையில் உண்ணாவிரதமிருந்து கொண்டு அரசின் கவனத்தை ஈர்க்க நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆசிரியர்களைப் பொறுத்த வரை, அவர்களுடைய கடமையில் மிகவும் பொறுப்புணர்ச்சியுள்ளவர்களாக, இருப்பதால், தங்களுடைய அலுவல்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படாம லிருப்பதற்கு, அவர்கள் விடுமுறை நாளைத் தேர்ந்தெடுத்து இன்றைக்கு

## பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் சார்பில் சென்னையில் ஆசிரியர்கள் நடத்தும் உண்ணாவிரதம் குறித்தும், தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மாவட்டத் தலை நகரங்களில் நடத்தும் உண்ணாவிரதம் குறித்தும்

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1979 மார்ச் 24

உண்ணாவிரதமிருந்து கொண்டிருக்கிறார்கள். இது அவர்களுடைய நல்லெண்ணத்தை, கடமை உணர்வை, பொறுப்புணர்வைக் காட்டுகிறது. இந்நிலையில் ஆசிரியர்களுடைய கடமை உணர்வு, நல்லெண்ணம், பொறுப்புணர்வு எத்தகையது என்பதை அரசும் உணர்ந்திருக்கும் என்று நினைக்கிறேன். குறிப்பாக சென்னையில் உண்ணாவிரதம் இருக்கின்ற பட்டதாரி ஆசிரியர்களையும் இதர ஆசிரியர்கள் சார்பில் இருக்கின்றவர்களையும் இதுவரை பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் நேரிலே சென்று பார்த்து அவர்களுடைய உணர்வுகளைத் தெரிந்துகொண்டு வந்திருக்கிறார்கள். ஆளும் கட்சி உறுப்பினர்களும் நேரில் சென்று ஆசிரியர்களின் உணர்ச்சிகளைப் புரிந்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய நியாயமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்பதற்காக அவர்கள் இப்போது நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். சட்டமன்ற மேலவையிலே ஆசிரியர்களின் பிரதிநிதிகளாக இருக்கும் நாங்கள் அவர்களுடைய பிரச்சினைகளைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அவர்களுடைய கோரிக்கைகளை நான்கு விதமாகப் பிரிக்கலாம். முக்கியமாக அவர்கள் கேட்பது இவற்றைத் தான். முதலாவது ஊதியக் குழு அறிக்கையிலுள்ள குறைபாடுகள் குறித்து ஏற்கெனவே சில கோரிக்கைகள் ஒப்புக்கொள்ளப்பட்டு அரசு ஆணைகள் வெளியிடப்பட்டும்கூட இதுவரை அவை நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. அந்த ஆணைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். மூன்றாவதாக சில கோரிக்கைகளைப் பொறுத்தவரை, ஏற்கெனவே கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஆனால் அரசு ஆணைகள் வெளியிடப்படாமல் இருக்கின்றன. அந்த ஆணைகள் உடனடியாக வெளியிடப்பட வேண்டுமென்று கேட்கிறார்கள். அடுத்த சில கோரிக்கைகள் கொள்கை சம்பந்தமாக, இனிமேல் பரிசீலனை செய்ய வேண்டிய கோரிக்கைகள். நான்காவது கோரிக்கை என்னவென்றால், கல்வித் துறையில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலிருந்து இருந்து கொண்டிருக்கின்ற சிகப்பு நாடா முறையினால் இலட்சக்கணக்கான ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசுக்கும் அதனால் கெட்ட பெயர் ஏற்படுகிறது. அந்தச் சிகப்பு நாடா முறை உடனடியாக ஒழிக்கப்பட வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்துகிறார்கள். இந்தக் கோரிக்கைகளை விரிவாக முன்வைத்து அவர்கள் நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டு உண்ணாவிரதம் இருப்பதால், இதை அரசு நன்றாகப் புரிந்துகொண்டு தீர்வு காண வேண்டுமென்பதற்காக இந்த அவையில் சில நடவடிக்கைகளை ஒத்தி வைத்து உடனடியாக இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1979 மார்ச் 24]

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இன்றைக்கு நிறைய அலுவல்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய உணர்வுகளைக் காட்டி ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொன்னால் போதும்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் கூறியது போல், தமிழ் நாடு பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் சார்பில் ஒரு பெரும் எளிதான, இணக்கமான, நேர்மையான, நியாயமான உணர்வுகளைக் குறித்து அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில், நல்ல உணர்வோடு ஏறத்தாழ தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டப் பிரதிநிதிகளும், பொறுப்பாளர்களும் சென்னை வந்து அண்ணா சதுக்கத்தின் அருகிலே உண்ணா நோன்பை இன்றையதினம் மேற்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் கல்வித் துறையிலே ஆசிரியப் பெருமக்களுடைய பல உண்மையான உணர்வுகள், நியாயமான கோரிக்கைகள் குறித்து பல ஆண்டுக் காலமாக கவனம் செலுத்தாமல் இருந்ததால், பல கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் தேங்கியிருப்பதால், அவற்றை நிவர்த்திக்க வேண்டுமென்று, பரிகாரம் காண வேண்டுமென்று இன்றையதினம் அவர்கள் உண்ணாவிரதம் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதேபோல ஆசிரியர் கூட்டணி அமைப்பின் சார்பில் மாநிலம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் உண்ணா நோன்பை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு பிரிவினரின் கோரிக்கைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கோரிக்கைகளுடைய உணர்வைப் பொறுத்தவரை, ஏறத்தாழ ஒன்றாகவே தான் இருக்கிறது. ஊதியக் குழுவினுடைய முரண்பாடுகள், ஏமாற்றங்கள், குறைகள் களையப்பட வேண்டுமென்பது அவர்களுடைய முதன்மையான கோரிக்கை. மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல், அகவிலைப் படி வழங்கப்பட வேண்டுமென்பது இன்னொரு கோரிக்கை. ஊதிய உயர்வைப் பொறுத்தவரை, அடிப்படை ஊதியத்திலேயே, ஊதிய விகிதங்களிலேயே முரண்பாடுகள் இருக்கின்றன. பட்டதாரி ஆசிரியர்கள் இப்பொழுது 450 ரூபாய் அடிப்படை ஊதியமாகப் பெற்று வருகிறார்கள். அதை 525 ரூபாயாக மாற்ற வேண்டுமென்று கேட்கிறார்கள். அதேபோல் இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு 350 ரூபாய் அடிப்படை ஊதியம் இருக்கிறது. அதை 400 ரூபாயாக மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கேற்ப தேர்வு நிலை பணியிடங்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று கேட்கிறார்கள். பொதுவாக 20 ஆண்டுகள் பணியாற்றியிருந்தால், சிறப்புத் தேர்வு நிலை வழங்க வேண்டுமென்று கேட்கிறார்கள். 10

ஆண்டுகள் பணி முடித்திருந்தால், தேர்வு நிலை வந்து விடும். அதற்குப் பிறகு 10 ஆண்டுகள் தேர்வு நிலையில் பணி முடித்திருந்தால்தான், சிறப்புத் தேர்வு நிலை என்பதை மாற்றி 20 ஆண்டுகள் பணியாற்றியிருந்தால், அப்படிப்பட்டவர்களுக்குச் சிறப்பு தேர்வு நிலை வழங்க வேண்டுமென்று கேட்கிறார்கள். குறுகிய காலப் பயிற்சியை பி.டி. ஆசிரியர்களுக்கு அளித்து அவர்கள் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்ற வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தலைமையாசிரியர்களுக்குப் பணிப்படி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஊதிய உயர்வு நாள் 1—4—1978 மட்டுமல்லாமல் 6 தினங்களில் ஊதிய உயர்வை விரும்பிப் பெற்றுக்கொள்ள வழிவகை அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்தினையும் அடிப்படையாக வைத்து, மேன்மையான, நேர்மையான கோரிக்கைகளின் அடிப்படையில் போராடும் ஆசிரியர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களுடைய கோரிக்கைகளைப்பற்றி விரிவாகப் பேசி, தீர்வு காணும் வகையில், தலைவரவர்களே, இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து உடனடியாக இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-50)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, "நான் கோட்டையிலே குடியிருந்தாலும் என்னுடைய உள்ளத்திலே குடியிருப்பவர்கள் ஆசிரியர்கள் தான்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தப் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரால் வழங்கப்படும் சதுக்கம் இன்றையதினம் உண்ணாவிரதச் சதுக்கமாக மாறியிருப்பதைப் பார்க்கிறோம். அண்ணா சதுக்கத்தின் முன்னாலே சிவில் சப்ளைஸ் ஊழியர்கள், பக்கிங்காம் கால்வாய்த்துறை, என்.எம்.ஆர். ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகிய அத்தனை பேரும் உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தையே கூட உண்ணாவிரதச் சதுக்கம் எனப் பெயர் மாற்றலாமா என்று யோசிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காரணம், இது பேரறிஞர் அண்ணா அவர்களுக்கே கூட பொறுக்காது. அண்ணா அவர்கள் மருத்துவத்திற்காக அமெரிக்கா சென்றுவிட்டு வந்தபோது, அனைத்து ஊழியர்களுடைய சிரமத்தையும் உணர்ந்து, ஊழியர்கள் அனைவருக்கும் மாதந்தோறும் மருத்துவப்படி அளிக்கப்போகிறேன் என்றார்கள். அண்ணா அவர்கள் வெளியிட்ட அந்தக் கருத்தைக்கூட இந்த அரசு இன்னும் நிறைவேற்றாத காரணத்தால், அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் அந்தக்



கோரிக்கையையும் முன்வைத்து இன்றைக்கு உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அண்ணாவின் ஆவியே இதைப் பார்த்து மகிழ்ச்சியடையாது என்று அரசுக்கு இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகளைப்பற்றி இங்கே எடுத்துரைத்தார்கள். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடம் நான் பன்முறை கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஒரு துறையைச் சார்ந்த ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகள் ஏனைய துறைகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். ஒரு துறையில் ஒரு நிலையிலிருக்கும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் வேறு நிலையிலிருக்கும் ஆசிரியர்களுக்கு வேறுபாடு காட்டாமல் வழங்கப்பட வேண்டும். 1—4—1970-க்குப் பிறகு நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட சலுகை இன்னும் சரிவர வழங்கப்படாமல் இருக்கிறது. அதையும் பப்ளிக் சர்வீஸ் கமிஷனைக் காட்டி மறுக்கிறார்கள். அந்த ஆசிரியர்களுடைய பணி வரன்முறை செய்யப்படாமல் இருக்கிறது. பணி வரன்முறை செய்யப்பட்டவர்களிலும்கூட இடைநிலை ஆசிரியர்களின் பணி வரன்முறை செய்யப்படாமலே இருக்கிறது. நடுநிலைப் பள்ளி பி.டி. தலைமை ஆசிரியர்களுக்கு இன்னும் டியூடி அலவன்ஸ் வழங்கப்படவில்லை. மற்றவர்களுக்குக் கொடுக்கப்படுவது இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. இப்படிப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை வைத்து ஆசிரியர்கள் இன்றையதினம் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு தலைவர் அவர்கள், கோரிக்கைகளைப்பற்றிச் சொல்லிக் கொண்டிராமல் உறுப்பினர்கள் தங்கள் உணர்வுகளை மட்டும் காட்டிக்கொண்டாலே போதும் என்று குறிப்பிட்டார்கள். எனவே, கோரிக்கைகளைப் பற்றி அதிகமாகக் குறிப்பிட விரும்பவில்லையென்றாலும், சாதாரணமாக இளநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்துவரும் கோரிக்கை. அதனை ஏற்பதனால் அரசுக்கு மிக அதிகமாகச் செலவாகிவிடாது என்ற விவரத்தைக்கூட சொல்லியிருக்கிறோம். கிராமப்புறத்தில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு வீடு இலவசமாகத் தருவதில்லை. எனவே, அவர்களுக்கும் வீட்டு வாடகைப்படி தரப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவைகளெல்லாம் இங்கே சொல்லப்பட்டால் தான் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமென்பதில்லை. என்றாலும், மரபு நிலை காரணமாக இவைகளை இங்கே குறிப்பிடுகிறேன். தொடக்கப் பள்ளி

ஆசிரியர்கள் போராட்டம், பட்டதாரி ஆசிரியர்களின் போராட்டம் ஆகிய வற்றைக் கணக்கில் கொண்டு, இப்போதில்லாவிட்டாலும், கல்வி மானியத்தின் போதாவது அவர்களுடைய கோரிக்கைகளில் சிலவற்றை நிறைவேற்றி வைப் போம் என்ற உறுதிமொழியை அமைச்சர் அவர்கள் வழங்க வேண்டும். எனவே, இவ்வளவு முக்கியமான பொருள்பற்றி விவாதிக்கவும், இப்போராட் டங்களைத் தீர்த்து வைப்பதில் அரசு மேற்கொள்ள வேண்டிய நிலைபற்றி விவாதிக்கவும், அந்த விவாதத்தின் அடிப்படையில் நல்ல தீர்வு காணவும் உதவும் வகையில் அவையின் அலுவல்களை ஒத்திவைத்து இந்தப் பொருள் பற்றி விவாதிக்கத் தலைவர் அவர்கள் அனுமதி அளிக்க முன்வரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : ஆசிரியர்கள் போராட்டம் குறித்த ஒரு அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை அவையில் எடுத்துச் சொல் வதில் பெருமைப்படுகிறேன்.

தமிழ்நாட்டின் மாவட்டத் தலைநகரங்களில் தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணியின் சார்பாகத் தொடக்கப் பள்ளி ஆசிரியப் பெருமக்கள் சுமார் 25,000 பேர் உண்ணாவிரதமிருந்து தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டின் தலைநகரில் பட்டதாரி ஆசிரியப் பெருமக்கள் பாசறை அமைத்துத் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். தொடக்கப் பள்ளி ஆசிரியர்களையும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களையும் பொறுத்தவரையில், ஒரு பொதுவான கோரிக்கை நீண்ட நெடுநாட்களாக வைக்கப்பட்டு வருகிறது. அதாவது இளநிலை ஆசிரியர்கள் அனைவரையும் இடைநிலை ஆசிரியர்களாக ஆக்க வேண்டுமென்று இரண்டாவது ஊதியக் குழு சிபாரிசு செய்தும், இன்றுவரையும் அது செயலாக்கப்படாமல் இருந்து வருகிறது.

அடுத்து, இரண்டாவது ஊதியக் குழு வழங்கிய சலுகையை 3-வது ஊதியக் குழு மறுத்திருக்கிறது. அதாவது, ஒருவர் விரும்புகிற தேதியில் புதிய ஊதிய விகிதத்திற்குப் போகலாம்; அந்த நாளிலிருந்து பயன் பெறலாம் என்று இருந்த நிலையை மாற்றி, 3-வது ஊதியக்குழு ஆசிரியர்களுக்கு பாதகம் செய்திருப்பதை நீக்க வேண்டும். பல்வேறு மாநாடுகளை நடத்தி அமைச்சர் பெருமக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். நிதியமைச்சர் அவர்களே ஒருமுறை எங்களுக்கு உறுதிகூட வழங்கினார்கள். அந்த வகை





யில் வீட்டு வாடகைப் படி கிராமப்புறங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் என்று எதிர்பார்த்தோம். நிதியமைச்சர் அவர்களின் கருணை உள்ளம் அதையாவது ஏற்கும் என்று எதிர்பார்த்தோம். இன்று வரை அதுவும் கிடைக்கவில்லை. அடுத்து, ஆசிரியர்கள் வைத்திருக்கிற கோரிக்கைகள் மருத்துவப் படி, ஈட்டிய விடுப்பை உயர்த்துதல், 20 ஆண்டு களுக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு சிறப்புநிலை வழங்குதல், 1—4—1970 க்குப் பிறகு தலைமையாசிரியர்களுக்குத் தனி ஊதியம் ஆகியவையும், தகுதி பெற்ற செகண்டரி கிரேடு மற்றும் தமிழ் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு, மகப்பேறு கால விடுப்பு 3 மாதம் ஆகிய கோரிக்கைகளும் மிக நியாயமான கோரிக்கைகள்தாம் என்பதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அதைப் போலவே மேற்கு வங்கத்திலே வழங்கப்படும் போனஸ் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் ஓய்வு பெறும்போது, 10,000 ரூபாய் வழங்கப்பட வேண்டும். ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு வருமான வரம்பை நீக்கி கல்விச் சலுகை அளித்தல் போன்ற கோரிக்கைகளையும் ஆசிரியர்கள் வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளில் பல்வேறு கோரிக்கைகள் இந்த அவையிலேயே வலியுறுத்தப்பட்டு அமைச்சர் அவர் களாலே ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகும், செயல்படுத்தப்படாமல் இருப்பதை, ஆசிரியர்கள் ஒரு ஏமாற்றமாகக் கருதி, இன்றைக்கு உண்ணாவிரதம் இருக்கும் நிலைக்கு வந்திருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் 25,000-க்கும் மேற் பட்ட தொடக்கப் பள்ளி ஆசிரியர்களும், சென்னை நகரில் 1,800-க்கும் மேற் பட்ட பட்டதாரி ஆசிரியர்களும் இன்று விடுப்புநாளாக இருந்தாலும் தங்களுடைய உணர்வைக் காட்ட வேண்டுமென்று உண்ணாவிரதம் மேற் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முடிவுக்கு வாருங்கள்.

திரு. செ. முத்துசாமி : இவ்வாறு முடிவுக்கு வராமல் நீண்ட காலத்திற்கு இனியும் காலம் தாழ்த்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். இன்று இந்த அவையிலே இந்தப் பொருள்பற்றி விவாதிப்பதன் மூலம் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடமிருந்து நல்ல அறிவிப்புகள் வருமென்று ஆசிரிய நண்பர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இதிலும் ஏதாவது ஏமாற்றம் ஏற்பட்டால், அவர்கள் வேறு நிலைக்குத் தள்ளப்பட்டு போராடக் கூடிய சூழ்நிலை உருவாகிவிடும். அந்த அளவுக்கு ஆசிரியர்கள் மத்தியிலே ஒரு கொந்தளிப்பு இருக்கிறது. எனவே, இந்த அவசரப் பொதுமுக்கியத் துவம் வாய்ந்த பிரச்சினையைப்பற்றி விவாதிப்பதற்கு அவையின் இன்றைய

அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று, தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் இந்தப் பிரச்சினை பற்றி இந்த அவையிலே விவாதிப்பதன் மூலம் ஆசிரியர்களின் கோரிக்கை களுக்கு நல்ல முடிவுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று எண்ணி அமைகிறேன்.

**திரு. வி.ஆர். பெரியண்ணன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் ஆசிரியச் சமுதாயத்தைச் சேர்ந்தவனில்லை என்றாலும், ஆசிரியர் சமுதாயத் திலிருந்து வந்த பிரதிநிதிகள் பலமுறை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நீண்டகாலமாகவே வேண்டுகோள்களை வலியுறுத்திய போதிலும், இந்த விஷயத்தில் அமைச்சரவை அக்கறை செலுத்தவில்லை என்று கருதி, அவர்கள் இன்றையதினம் என்னையும் அனுப்பியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி கூட்டணியின் சார்பில் 25,000-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் தமிழ் நாடெங்கும் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அதைப்போலவே 1,800-க்கும் மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் சென்னை யிலே கூட தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்துகின்ற வகையில் உண்ணா விரதம் இருக்கிறார்கள். நம்முடைய ஆசிரியப் பிரதிநிதிகள் இங்கே பேசு கிறபோது, இந்தக் கோரிக்கைகள் எல்லாம் மாநாடுகள் வாயிலாகவும், தூதுக் குழுக்கள் வாயிலாகவும் அமைச்சர்களுக்குப் பலமுறை எடுத்துச் சொல்லப் பட்டிருக்கின்றன என்பதைத் தெளிவுபடுத்தினார்கள். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் 16 அம்சக் கோரிக்கைகளையும், பட்டதாரி ஆசிரியர்கள் 20 அம்சக் கோரிக்கைகளையும் வலியுறுத்தி இன்றையதினம் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளையெல்லாம் ஏற்பதனால், அரசாங்கத்திற்கு அதிகமான நிதிச் சிரமம் ஏற்படும் என்று நான் நினைக்க வில்லை. இன்றையதினம் பிரச்சினைகளில் உடனடியாக முடிவெடுக்கப்படா ததன் காரணமாக பிரச்சினைகள் வளர்ந்து கொண்டும், நீண்டுகொண்டும் போவதைப் பார்க்கிறோம். இந்தக் குறைபாட்டை அரசாங்கம் தவிர்த்தாக வேண்டும். இப்படி ஆசிரியர்களின் கோரிக்கைகளும் நீண்ட கால மாகத் தீர்வுகாணப்படாமலேயே விடப்பட்டதன் காரணமாக இன்றையதினம் ஆசிரியர்கள் நாடெங்கும் அடையாள பூர்வமான உண்ணாவிரதத்தை மேற் கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, இன்னும் இந்தப் பிரச்சினைகளைத் தள்ளிப் போட்டுக் கொண்டிருக்காமல் வரும்



கல்வி மானியத்தின்போதாவது இவைகளுக்குத் தீர்வு காணும் வகையில் கல்வியமைச்சர் அவர்கள் நல்ல முடிவுகளை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களைப் போன்ற பொதுவானவர்களுக்கு இதில் யார்மீது குறை இருக்கிறதென்று தெரியவில்லை. ஆசிரியர்களின் பிரதி நிதிகளின்மீது குறையா அல்லது அமைச்சர் அவர்களின்மீது குறையா என்று புரியவில்லை. எனவே இரண்டு பேரும் அதாவது ஆசிரியப் பிரதிநிதிகளும், அமைச்சர் அவர்களும் ஒன்றாக உட்கார்ந்து பேசி எங்களைப் போன்றவர் களையும் உடன் வைத்துக் கொண்டு, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன் வர வேண்டும். அப்போதுதான் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் உண்மையிலேயே யார் தடையாக இருக்கிறார்கள் என்பது எங்களுக்கும் பொதுமக்களுக்கும் புரியும். எனவே இந்தப் பிரச்சினை குறித்து இங்கே விரிவாக விவாதிப்பதற்கு அவையின் இன்றைய அலுவல்களை ஒத்தி வைக்க அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-00)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி 16 அம்சக் கோரிக்கையை வைத்து இன்றைய தினம் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

**கோரிக்கை 1.**—இளநிலை (ஹையர் கிரேடு) ஆசிரியர்கள் அனைவருக்கும் இடைநிலை (செகண்டரி கிரேடு) பதவிகள் அளிக்க வேண்டும் என்பது கோரிக்கை. இவ்வாறு செய்ய வேண்டுமென இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரைத்துள்ளதாக தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி தனது மனுவில் சொல்லியிருப்பது சரியல்ல. அக்குழு அத்தகைய பரிந்துரை எதையும் தரவில்லை. சம்பள விகிதங்கள் பொதுவாக அந்தந்தப் பதவியை வகிப்பவர் களுக்கு விதிக்கப்பட்ட கல்வித் தகுதியின் அடிப்படையில்தான இருக்கும். தற்போது சுமார் 69,000 இளநிலை ஆசிரியர்கள் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் இடைநிலை சம்பள விகிதம் அளிக்க வேண்டுமென்ற கோரிக்கை ஏற்கத்தக்கது அல்ல. இளநிலை ஆசிரியர்களுள் யார் யார் இடைநிலை தகுதி பெறுகிறார்களோ அவர்களுக்கு அரசு இடைநிலை சம்பள விகிதத்தை அளித்துவருகிறது. இச்சலுகை இன்றும் தொடரும்.

**கோரிக்கை 2.**—விரும்பிய தேதியில் புதிய ஊதியத்திற்குச் செல்லும் போது 3-வது ஊதியக்குழுவின் பயனான 5 சத விகிதம் உயர்வையும் குறைந்த பட்ச பயன் ஆகிய ரூ. 20 என்பதையும் வழங்கத் தக்க உத்தரவினை

உடனே பிறப்பிக்க வேண்டுமென்பது கோரிக்கை. தற்போதுள்ள ஆணை அனைவருக்கும் பொருந்தும் பொதுவான கோட்பாடாகும். அதிலிருந்து ஆசிரியர்களுக்குமட்டும் விலக்களிப்பது என்பது இயலாத ஒன்றாகும்.

கோரிக்கை 3.—இளநிலை, இடைநிலை, உடற்கல்வி ஆகிய ஆசிரியர்களுக்கு அவர்கள் பெற்றுள்ள பயிற்சி காலத்தையும் கருத்தில்கொண்டு சம்பள விகிதங்களை மாற்றியமைக்க வேண்டுமென்பது கோரிக்கை. இந்தக் கோரிக்கை ஏற்கத்தக்கது அல்ல. கல்வித் தகுதியையும் பயிற்சி காலத்தையும் மட்டுமே கருத்தில் கொண்டு சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப் படுவதில்லை. அந்தந்த வேலையின் தன்மை, பொறுப்பு, வேலைப் பளு முதலியவற்றையும் பொதுவாக நிர்வாகத்திலுள்ள பல்வேறு பதவிகளுக்குரிய சம்பள விகிதங்களையும் கருத்தில் கொண்டுதான் சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் மேற்சொன்ன ஆசிரியர்களுக்கு தற்போது அமுலில் உள்ள சம்பள விகிதங்களில் மாற்றம் தேவையில்லை.

கோரிக்கை 4.—கிராமப் பகுதி ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்க வேண்டும் என்பது கோரிக்கை. அனைத்திந்திய விலைவாசி புள்ளி விவரங்கள் அடிப்படையில்தான் சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. அனைத்து இடங்களுக்கும் பொதுவான செலவினங்கள் எல்லாம் அப்புள்ளி விவரங்களில் அடங்கியவை. எங்கெங்கே குறிப்பாக வீட்டு வாடகை முதலிய வாழ்க்கைச் செலவு அதிகமாக இருக்கிறதோ அவ்விடங்களுக்குத்தான் வீட்டுவாடகைப்படி முதலிய ஈட்டுப்படிகள் தரப்படுகின்றன கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு வீட்டுவாடகைப்படி இல்லை என்பது அனைத்து ஊழியர்களுக்கும் பொதுவான நிலையாகும். ஆசிரியர்களுக்கு மட்டும் இச்சலுகை தர இயலாது.

கோரிக்கை 5.—மருத்துவப்படி: தற்பொழுது அரசு ஊழியர்களுக்கும் (ஆசிரியர்கள் உட்பட) உள்ளாட்சி மன்ற ஊழியர்களுக்கும் (ஆசிரியர்கள் உட்பட) மருத்துவச் செலவை திரும்பப்பெறும் (ரிஇம்பேர்ஸ்மென்ட்) சலுகை உண்டு. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு ரிஇம்பேர்ஸ்மென்ட் சலுகை இல்லை. ஆனால் அவர்கள் மருத்துவ மனைகளில் இலவசமாக மருத்துவம் செய்து கொள்ளலாம். எல்லோருக்கும் (அரசு ஊழியர்கள், உள்ளாட்சி மன்ற ஊழியர்கள் உட்பட) ரிஇம்பேர்ஸ்மென்ட்டுக்குப் பதிலாக மருத்துவப்படி



கொடுக்க வேண்டும் என்பது யோசனை. மூன்றாவது ஊதியக் குழு இதனை நன்கு ஆராய்ந்து அதன்பின் அதனை ஏற்கத் தேவையில்லை என முடிவு செய்துள்ளது. அத்தகைய மருத்துவப்படி ஊழியர்களுக்கு பயன் தருவதாக இருக்காது. மருத்துவப்படி உடனடியாக செலவாகிவிடும். அத்தியாவசியமாக தேவைப்படும் நேரங்களில் மருத்துவச் செலவுக்கு பணமிராது, என்ற காரணங்களினால் ஊதியக் குழு அம் முடிவுக்கு வந்தது. இந்நிலையில் மாற்றம் தேவையில்லை.

கோரிக்கை 6.—ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பை உயர்த்துதல்: பள்ளிகள், நீதிமன்றங்கள் முதலிய விடுமுறைப் பணி (வெக்கேஷன்) துறைகளில் பணிசெய்வோர் ஆண்டுதோறும் ஒரு மாத அளவில் நீண்ட விடுமுறை கிடைப்பதால் அவர்களுக்கு ஈட்டிய விடுப்பு சுமார் 3 நாள் என்பது 1933ஆம் ஆண்டின் விடுப்பு விதிகளின்படி பல ஆண்டுகளாக உள்ள நிலைமை. யார் யார் விடுமுறைக்காலத்தில் பணி செய்ய வேண்டியதாக உள்ளதோ அவர்களுக்கு அவர்கள் எந்த அளவுக்கு விடுமுறைக் காலத்தை அனுபவிக்க முடியாமல் போகிறதோ அந்த அளவுக்கு ஈட்டிய விடுப்பை அதிகரிக்கலாமா என்பது ஆய்வுசெய்யப்படும்.

கோரிக்கை 7.—ஆசிரியர்கள் அனைவருக்கும் 1—1—1971 முதல் 10 ஆண்டு கால பணி அடிப்படையில் தேர்வு நிலை நிர்ணயித்து அதன் அடிப்படையில் புதிய ஊதியம் வழங்க வேண்டும். ஒரு நிலையில் 20 ஆண்டு கால மொத்தப் பணியைக் கணக்கிட்டு சிறப்பு நிலை வழங்க வேண்டும் என்பது கோரிக்கை. அரசு அவ்வப்பொழுது தரும் சலுகைகளை சிலபல ஆண்டுகள் கழித்து முன் தேதியிலிருந்து திரும்ப அமுலாக்குவது என்றால் அதற்கு ஒரு முடிவு இராது. 3-வது ஊதியக் குழு ஏற்கெனவே அரசால் தேர்வுநிலைப் பற்றி வெளியிடப்பட்ட ஆணைகளையெல்லாம் பரிசீலனை செய்து கீழ்க்கண்ட புதிய திட்டத்தை 1—10—1978 முதல் அமுல்படுத்த பரிந்துரை செய்தது. அப்புதிய திட்டப்படி சாதாரண ஊதிய விகிதத்தில் 10 ஆண்டுகாலம் திருப்திகரமாக பணி புரிந்தவருக்கு தேர்வு நிலையும், தேர்வுநிலை ஊதிய விகிதத்தில் 10 ஆண்டு காலம் திருப்திகரமாக பணி புரிந்தவர்களுக்கு சிறப்புநிலை ஊதிய விகிதமும் அளிக்கப்பட வேண்டும். இப்புதிய திட்டத்தை அரசு ஏற்றுக்கொண்டு அவ்வாறே ஆணையிட்டுள்ளது. எனவே, 20 ஆண்டு கால மொத்தப்பணி அடிப்படையில் சிறப்பு நிலை ஊதிய விகிதம் தருவதற்கில்லை.

**கோரிக்கை 8.**—தொடக்கப் பணி தலைமையாசிரியர்களுக்கும் நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் தனி ஊதியவிகிதம் அளிக்கப் படவேண்டும் என்பது கோரிக்கை. நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு ரூ. 400—15—490—20—650—25—700 (சிறப்பு நிலை ரூ. 450—20—590—25—740—30—800) என்ற தனி சம்பள விகிதம் ஏற்படுத்தப் பட்டுவிட்டது. இச்சம்பள விகிதத்தோடு சிறப்பு ஊதியமாக மாதம் ரூ. 15-ம் கொடுக்கப்படுகிறது. தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு (பள்ளியில் 3 அல்லது மேற்பட்ட ஆசிரியர்கள் இருந்தால்) மாதம் ரூ. 5 அல்லது மாதம் ரூ. 10 பணிப் படியாக வழங்கப்படுகிறது.

**கோரிக்கை 9.**—இடைநிலை இடத்தில் பணிபுரியும் புலவர்கள், பட்டதாரிகள் முதுகலைப் பட்டதாரிகள் ஆகியோரின் இடங்களை பதவி உயர்த்தி உரிய ஊதியம் வழங்க வேண்டும் என்பது கோரிக்கை. நிதிநிலை இடந்தருவதற்கேற்ப அரசு ஓரளவு எண்ணிக்கையில் நடுநிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்கள் பதவிகள் பி.டி. தலைமையாசிரியர்கள் பதவிகள் ஆகியவற்றை ஏற்படுத்தி வருகிறது. உயர் கல்வித் தகுதி பெற்றுள்ள இடைநிலை ஆசிரியர்கள் அத்தகைய பதவிகளுக்கு நியமனம் பெற்றால் அவ்வுயர்பதவிகளுக்கு உரிய ஊதிய விகிதம் பெறலாம். அத்தகைய கல்வித் தகுதி பெற்ற அனைவருக்கும் அத்தகைய உயர் ஊதிய விகிதம் அளித்திட இயலாது. இருந்தாலும், பி.டி., முதலிய உயர் கல்வித் தகுதி பெறுபவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்பட்டு வருகிறது.

**கோரிக்கை 10.**—3 மாத மகப்பேறு விடுப்பு.

**கோரிக்கை 11.**—ஓய்வுபெறும்போது ரூ. 10,000 தருதல். இவை எல்லா ஊழியர்களுக்கும் பொதுவான கோரிக்கைகள் ஆசிரியர்களுக்கு, தனி முடிவு ஏதும் எடுப்பதற்கில்லை.

**கோரிக்கை 12.**—ஒரு மாத ஊதியத்தை போனஸாக ஆண்டுதோறும் பொங்கல் திருநாளன்று வழங்க வேண்டுமென்பது கோரிக்கை. மேற்கு வங்கம், கேரளம் போன்ற மாநிலங்களில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் போனஸ் வழங்குவதாக சொல்லப்பட்டுள்ளது. கேரளத்தைப் பொறுத்தவரையில் போனஸ் ஏதும் வழங்கியதாகத் தெரியவில்லை.



மேற்கு வங்கத்தில் பூஜா விடுமுறையின் போது ரூ. 100 வழங்கியதாகத் தெரிய வருகிறது. ஆனால் அங்கு தமிழகத்தில் உள்ள ஈட்டிய விடுப்பை காசாக்கும் சலுகைகள் எல்லாம் கிடையாது. எனவே, போனஸ் கொடுப்பது என்பது நடைமுறைக்குகந்தது அல்ல.

கோரிக்கை 13.—மேற்படிப்பு வரை எல்லா மட்டத்திலும் எல்லா நிலை ஆசிரியர்களின் குழந்தைகளுக்கும் கல்விச்சலுகை கிடைக்கத் தக்க ஆணை பிறப்பிக்க வேண்டுமென்பது கோரிக்கை. ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான தேசிய படிப்பு உதவித்தொகை திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் புதியதாக 70 படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. ஆசிரியர்களுள்ளும் தாழ்த்தப்பட்டோர் பிற்பட்டோர் ஆகியோர் குழந்தைகளுக்கு அவ்வகுப்பினருக்கு பொதுவாக உள்ள சலுகைகள் உண்டு. பொதுவாக ஆசிரியர் குழந்தைகள் அனைவருக்கும் மேற்படிப்பு நிலையில் (பட்ட வகுப்பும் மேலும்) இலவசக் கல்வி தர வேண்டுமென்ற கோரிக்கை ஏற்பதற்கில்லை.

கோரிக்கை 14.—பகுதிநேரக் கைத்தொழில் ஆசிரியர்களுக்கு முழு நேரப் பதவிகள் அளிக்க வேண்டுமென்பதும், உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றினால் இடைநிலை ஆசிரியர் ஊதியமும் நடுநிலைப் பள்ளிகளில் அதே கல்வித் தகுதி உள்ளவர் பணியாற்றினால் இளநிலை ஆசிரியர் ஊதியமும் வழங்கப்பட்டு வரும் தற்போதைய முரண்பாடான நிலையை மாற்றியமைத்து இடைநிலை ஆசிரியர் ஊதியம் வழங்கப்படவேண்டுமென்பதும் கோரிக்கைகளாகும். பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர்களுள் முழுநேரப் பதவிகளுக்குத் தகுதி உடையவர்களுக்கு படிப்படியாக அரசு முழுநேரப் பதவிகளை அளித்துவருகிறது. 2-வது கோரிக்கையை அரசு கவனிக்கும்.

கோரிக்கை 15.—ஊராட்சி ஒன்றியங்களில் நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் நியமனம் பற்றி அரசு ஆணை தகுந்த விளக்கங்களுடன் தெளிவுபட உடனடியாக வெளியிட வேண்டுமென்பது கோரிக்கை. அத்தகைய ஆணையை வெளியிட ஊர் வளர்ச்சித் துறை நடவடிக்கை எடுத்துவருகிறது.

கோரிக்கை 16.—ஆசிரியர் சங்கக் கூட்டங்கள் தேவையற்றதாக இருப்பதால் மாதந்தோறும் சடங்குகள் போல் நடக்கும் ஆசிரியர் சங்கக் கூட்டங்களை ரத்து செய்ய வேண்டுமென்பதும், ரத்து செய்யப்படும்வரை அக்

கூட்டத்தில் கலந்துகொள்ளும் பள்ளி நாட்களை பள்ளி வேலை நாட்களாக எல்லா நிலைகளிலும் ஒரே சீராகக் கணக்கிட வேண்டுமென்பதும் கோரிக்கை. ஆசிரியர் சங்கக் கூட்ட நாட்களை வேலை நாட்களாகக் கருதுவது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகம் விடுத்துள்ள கோரிக்கைகளுள பல தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி விடுத்துள்ளவையும் மேலே கருதப்பட்டவையுமான கோரிக்கைகளை ஒத்தவையாகும். பட்டதாரி ஆசிரியர்களின் பிற கோரிக்கைகளைப் பொறுத்தவரை நிலைமை பின்வருமாறு :

1. தமிழ்நாடு மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளில் காணப்படும் அனைத்து ஆசிரியர் அலுவலர் சம்பந்தமான குறைகளையும் முரண்பாடுகளையும் களைய விரைவில் ஒரு தனிக்குழு அமைக்குமாறு கோரப்பட்டுள்ளது. அத்தகைய தனிக்குழு தேவையில்லை. அப்பிரச்சினைகளை அரசே ஆய்வு செய்து தக்க முடிவு எடுக்கும்.

2. பட்டதாரி ஆசிரியர்கள் போன்றவரின் ஊதிய விகிதங்களை அதிகரிக்க வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது. ஊதிய விகிதங்கள் அண்மையில்தான் ஆழ்ந்த பரிசீலனைக்குப்பின்தான் நிர்ணயிக்கப்பட்டன. அவற்றை இடைவிடாது மாற்றுவது என்பது நடைமுறைக்கு உகந்ததல்ல.

3. மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் முதுகலைப் பட்டம் பெறாத பட்டதாரி ஆசிரியர்களுக்கு சிறப்பூதியம் மாதம் ரூ. 40 வழங்கக் கோரப்பட்டுள்ளது. இக் கோரிக்கையை ஏற்பதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் பத்து லட்சம் அளவில் கூடுதல் செலவு ஆகும். இக்கோரிக்கையை ஏற்பதில் வேறு பல சிக்கல்களும் உள்ளன. இதனை ஆழ்ந்து பரிசீலித்த பின்னர்தான் முடிவெடுக்கலாம்.

4. மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் முதுகலைப் பட்டம் பெறாத பட்டதாரி ஆசிரியர்கட்கு குறுகிய கால பயிற்சி அளித்து அவர்களைத் தகுதி பெற்றவர்களாக அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது. இக் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

5. நடுநிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்றும் பட்டதாரி தலைமை ஆசிரியர்கட்குப் பணிப்படி ரூ. 50 வழங்க கோரப்பட்டுள்ளது. அத்தகைய பி.டி. தலைமை ஆசிரியர்கட்கு பி.டி. சம்பள விகிதத்தில் சம்பளம் வழங்கப்படுவதால் பணிப்படி எதுவும் வழங்கத் தேவையில்லை.



6. 1—4—1970-க்குப்பின் பணிக்கு வந்து தேர்ந்தெடுக்கப்படாத பட்டதாரி ஆசிரியர்கள் அவர்கள் கணக்கு வந்த நாளிலிருந்து பணிவரன்முறை செய்ய கோரப்பட்டுள்ளது. இத்தகைய ஆசிரியர்களுக்கான சிறப்புத் தேர்வு ஒன்றை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் நடத்த இருக்கிறது.

7. 1—4—1970-க்குப்பின் பல்வேறு தேதிகளில் தேர்ந்தெடுக்கப்படும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு அவர்கள் பணிக்கு வந்த நாளில் இருந்து பணிவரன்முறை செய்து தொடர்ந்து பருவகால ஆண்டு ஊதிய உயர்வு தர வேண்டும் என்ற அரசாணையை முழு அளவில் அமுல்படுத்த வேண்டுமென கோரப்பட்டுள்ளது. இதனை அரசு பரிசீலிக்கும்.

8. 1—4—1970-க்குப் பின் பணிக்கு வந்த இடைநிலை ஆசிரியர் இதர சிறப்பாசிரியர்களை பணிக்கு வந்த நாளிலிருந்து பணிவரன்முறை செய்யக் கோரப்பட்டுள்ளது. இது பரிசீலனையில் உள்ளது. விரைவில் ஆணை வெளியிடப்படும்.

9. தனியார் பள்ளிகள் உள்ளாட்சி மன்றப் பள்ளிகள் ஆகிய அனைத்தையும் அரசுடமையாக்க வேண்டுமென்பது வேண்டுகோள். இதனை ஏற்பதற்கில்லை.

10. ஆசிரியர் குறைகளைத் தீர்ப்பதில் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டுமென கூறப்பட்டுள்ளது. கால தாமதத்தைத் தவிர்க்க அனைத்து மட்டங்களிலும் முழுக் கவனம் செலுத்தப்படும்.

மேலே விளக்கியவற்றிலிருந்து இந்த இரண்டு ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகளுள் பரிசீலிக்கக் கூடியவற்றையெல்லாம் அரசு பரிவுடன் பரிசீலித்து வருகின்றது என்பது தெளிவாகும். வேறுபல கோரிக்கைகளை ஏற்பதற்கில்லை என்பதும் விளக்கபபட்டுள்ளது. இவ்விஷயம் சட்டமன்ற மேலவை—நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அளவுக்கு அவசரத் தன்மை வாய்ந்தது அல்ல. கல்விக் கொள்கை விளக்கக் குறிப்பை அவையின் முன்னர் வைக்கின்ற நேரத்தில் விரிவாக—விளக்கமாகப் பேசி வேறு பல முடிவுகளை எடுக்க வாய்ப்பு இருப்பதால், இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து விவாதிக்க இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கருதுவதால், இதற்கு என் அனுமதியை மறுக்கிறேன்.

(பிற்பகல் 5-10)

(3) தமிழ்நாட்டில் நீதி மன்றங்கள் இயங்காமல் இருப்பது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம். திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள், "தமிழ்நாட்டில் நீதிமன்றங்கள் இயங்காமல் இருப்பது குறித்து" ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்காக முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் விதிகளின்கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாக, தமிழ் நாட்டு வரலாற்றில் எப்போதும் இல்லாத அளவுக்கு, தமிழ் நாட்டில் உள்ள நீதிமன்றங்கள் அனைத்தும் செயல்படாமல் இருக்கின்றன. இதனால் பல்வேறு வழக்குகளில் சம்பந்தப்பட்ட ஏழையெளியவர்கள், கைது செய்யப்பட்டவர்கள் ஆகியோர் பெய்லில் வர முடியாத அளவுக்குச் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். திருப்பரங்குன்றத்திலே நடந்த ஒரு சம்பவத்தைத் தொடர்ந்து, மிகச் சாதாரணமான ஒரு பிரச்சினையை இந்த அரசாங்கம் சரியாக அணுகாத காரணத்தால், அதனுடைய விளைவாக ஆயிரக்கணக்கான வழக்கறிஞர்கள் தமிழ்நாட்டில் இன்றைய தினம் நீதி மன்றங்களைப் புறக்கணித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி இந்த மன்றத்திலே பல முறை பேசப்பட்டிருந்தாலும் கூட, இந்த பிரச்சினையை அரசாங்கம் வெகு வேகமாக அணுகி ஒரு நல்ல முடிவை எடுக்கும். பிரச்சினைகள் தீரும் என்று நாம் எதிர்பார்த்திருந்தாலும் கூட, நாளுக்கு நாள் பிரச்சினைகளை வளர்க்கக் கூடிய வகையில்தான் இந்த அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. தலைவர் அவர்களே, உதாரணமாக உங்களுடைய கவனத்திற்கு ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நேற்றைய தினம் நானும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளரும், சட்டமன்றப் பேரவை எதிர்க் கட்சியின் துணைத் தலைவருமான பேராசிரியர் அன்பழகன் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திரு ரஹ்மான் கான் அவர்களும், மற்றும் கழகத் தோழர்களும் மதுரைக்குச் சென்று கைது செய்யப்பட்ட வழக்கறிஞர்களையும், கைது செய்யப்பட்ட



சட்டக் கல்லூரி மாணவர்களையும் சிறைச்சாலையிலேயே பார்க்க வேண்டும் என்று சிறை அதிகாரிகளை முதலில் தொலைபேசியில் அனுமதி கேட்ட நேரத்தில், "நீங்கள் வந்து பார்க்கலாம்" என்று தெரிவித்துவிட்டு, பிறகு நாங்கள் சிறைக் கூடத்தை அணுகி அதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்த பிறகு, "சிறைச்சாலையில் ரிமாண்டெட் பிரிசனர்களாக இருக்கக்கூடிய வழக்கறிஞர்களையும், சட்டக் கல்லூரி மாணவர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களாக, மேலவை உறுப்பினர்களாக இருக்கக்கூடிய காரணத்தால், நீங்கள் பார்க்க முடியாது; வேண்டுமானால் வழக்கறிஞர் யாராவது பார்ப்பதாக இருந்தால், ஆட்சேபணையில்லை" என்றும் தெரிவித்து விட்டார்கள். அதன் அடிப்படையிலே எங்களோடு வந்திருந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. ரஹ்மான் கான் வழக்கறிஞர் என்ற காரணத்தால், போய் சந்திக்க அவருக்காவது அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டபோது, "அவர் எம். எல். ஏ. வாக இருப்பதால், வழக்கறிஞராக இருந்தாலும் கூட, சிறைச்சாலையில் உள்ளவர்களை அவர் போய் சந்திக்கக்கூடாது" என்று கூறி, அதிகாரிகள் அனுமதி தர மறுத்துவிட்டார்கள். அதுபற்றி நாங்கள் அதிகாரிகளிடத்திலே கேட்ட நேரத்தில், அந்த அதிகாரிகள் எழுத்து மூலமாகவே,

"The permission sought by Thiruvalargal Anbazhagan, Arcot Veerasami and Rahman Khan to interview the agitating lawyers and Law College students is not granted due to administrative reasons."

என்று உத்தரவு போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இதுவரையில் ரிமாண்டெட் பிரிசனர்களை, சட்ட மன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் பார்க்கத் தடை செய்ததாக வரலாறே கிடையாது. நாட்டிலுள்ள பிரச்சினைகள் சுமுகமாகத் தீர வேண்டும் என்று எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் நடவடிக்கை எடுக்கும்போது, எதிர்க் கட்சிகளைத் தடை செய்து, அவர்கள் பார்க்க அனுமதியை மறுத்து, அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் சொல்லித்தான் இதைச் செய்கிறார்கள் என்று நான் சொல்ல மாட்டேன், ஆனால்—அந்த அதிகாரிகள் அவர்கள்தான் இந்த அரசாங்கத்தை நடத்துவதாக நினைத்துக்கொண்டு இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இது எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். எந்த சப்-இன்ஸ்பெக்டர் ஒரு வழக்கறிஞரைத் தாக்கினார் என்று புகார் செய்யப்பட்டதோ, அந்த சப்-இன்ஸ்பெக்டரை வேறு ஊருக்கு மாற்றிவிட்டோம் என்று அரசாங்கத்தில் சொன்னதற்கு மாறாக, மதுரையில் அந்த வழக்கறிஞர் பணியாற்றக் கூடிய நீதி மன்றம்

இருக்கக் கூடிய அதே ஏரியாவில் அவரை நேற்று முதல் நியமித்திருக்கிறார்கள். புகார் கொடுத்த அந்த வழக்கறிஞரின் மீது பொய் வழக்குப் போட்டு சட்டப்படி ஜோடிக்கத்தான் இப்படிச் செய்திருக்கிறார்களோ என்ற அச்சம் இன்றைக்கு அங்கேயிருக்கிற வழக்கறிஞர்கள் மத்தியிலே உருவாகியிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், நீதிமன்றங்கள் எல்லாம் மூடியிருக்கிற காலத்தில், உரிய காலத்தில் தக்க நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்காத காரணத்தாலேதான், எந்த நீதிக்காக வழக்கறிஞர்கள் நீதி மன்றங்களில் வாதாடுகிறார்களோ அந்த நீதி தங்களுக்கே கிடைக்கவில்லை என்ற காரணத்தால்தான், அவர்கள் தாங்கள் அணிந்திருக்கிற கவுனையே கொளுத்தக்கூடிய பரப்பரப்பான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நீதிமன்றங்கள் இயங்காமல் இருப்பதால், பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைக் குறித்து விவாதிக்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் இங்கே ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து, இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினை குறித்து கடந்த 9 நாட்களாக சட்டமன்றப் பேரவையும், மேலவையும் பல சந்தர்ப்பங்களில் விவாதித்திருக்கின்றன. இதில் அரசினுடைய நிலை மிகத் தெளிவாக அவ்வப்போது சொல்லப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கும், அவர் சார்ந்திருக்கிற கட்சிக்கும், மற்ற உறுப்பினர்களுக்கும் இந்தப் பிரச்சினையை வளர்க்க வேண்டும் என்பதில் விருப்பம் இல்லை என்பதை இந்த அரசு உணர்கிறது. இதைப் போலவே இந்தப் பிரச்சினை வளர்வதை அரசும் விரும்பவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன். நீதி மன்றங்கள் முழுவதுமாகச் செயல்படவில்லை என்றால், ஜனநாயகத்தில் உள்ள செழுமையான அமைப்புகள் எந்த அளவுக்கு பாதிக்கப்படும் என்பதை நாம் அனைவரும் பொறுப்புணர்ச்சியோடு உணர்ந்திருக்கிறோம். எனவே இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில், வாதி, பிரதிவாதி என்ற அளவிலே செல்லாமல், சுமுகமான நிலையை ஏற்படுத்துவதுதான் சிறப்பு என்பதை அரசு உணர்கிறது. அந்த அடிப்படையிலே காலையில் பேரவையிலே கூட ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர்



அவர்கள் கொண்டு வந்தபோது, பேரவையின் முன்னவர் மாண்புமிகு நீதியமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக அவர்களுடைய உணர்வுகளை அங்கே சொல்லியிருக்கிறார்கள். அரசின் கருத்தை அவர் சொன்னபடியே நானும் சொல்ல விரும்புகிறேன்.

"நீதிமன்றங்கள் முழுவதுமாகச் செயல்படாமல் இருக்கின்றன என்பது சரியான தகவல் இல்லை. சில வழக்கறிஞர்கள் செல்ல மறுக்கிறார்கள், அவர்கள் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள் என்பது உண்மை. அதை மறுக்க முடியாது. நான் அதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் நீதிமன்றங்கள் முழுவதுமாகச் செயல்படவில்லை என்று அர்த்தமாகாது. நீதிமன்றங்கள் அவர்களுக்குள்ள கடமையுணர்வுகளைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் இப்போதுள்ள நிலைமையை நீடிக்கக் கூடாது என்பதுதான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய விஷயம். அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வோடு நானும் ஒன்றிப் போகிறேன். இதில் கருத்து வேறுபாடு இல்லை. விரைவிலே முடிய வேண்டும் என்று அரசாங்கம் காரியங்களைச் செய்து கொண்டு வருகிறது. சுமுகமான சூழ்நிலை உருவாகிவிட்டது." என்று சொல்லி பேரவையிலே முன்னவர் அவர்கள் ஒரு உறுதிமொழியைக் கொடுத்திருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும், எத்தனை நாட்களுக்குள் முடிவெடுக்கப்படும் என்று வலியுறுத்திக் கேட்டபோது, "செவ்வாய்க் கிழமைக்குள்" என்று கூறி, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளியை வைத்திருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட நல்ல சூழ்நிலை வளர்ந்து வருகிறபோது, ஒருவருக்கொருவர் பதில் சொல்லுகிற வகையில் குற்றம் சாட்டுகிற மாதிரி இந்தச் சமயத்தில் கூறாமல் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். பேரவையிலே இது குறித்து நிதியமைச்சர் அவர்கள் கூறியதை அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மிக நல்ல முறையிலே சூழ்நிலை உருவாகிக்கொண்டு வருகிறது. எனவே இது குறித்து விவாதித்து, அதற்குப் பதில் சொல்லி, இந்தப் பிரச்சினையை வேறு விதமாகத் திசை திருப்பி விட்டுவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே நிதியமைச்சர் அவர்கள் அளித்த உறுதிமொழியின் அடிப்படையிலே இரண்டு, மூன்று நாட்களுக்குள் இந்தப் பிரச்சினை முடிந்துவிடும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, இது குறித்து அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்துப் பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவையின் முன்னவர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையின் நடவடிக்கைளை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதி இதற்கு என் அனுமதியை மறுக்கிறேன்.

(பிற்பகல் 5-20)

### 4. கவன ஈர்ப்பு.

### (1) மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்கள் உண்ணாவிரதம் குறித்து.

**திரு. ப. மாணிக்கம் (திரு. ஆ. நல்லசிவன் சார்பில்) :** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்—

"மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்கள் ஆட்குறைப்பை எதிர்த்தும், சம்பள உயர்வு மற்றும் சில கோரிக்கைகளுக்காகவும் நூற்றுக்கணக்கானோர் உண்ணாவிரதம் இருந்தது குறித்து."

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் எழுந்தாலே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் எழுந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்களே, மதுரை மத்திய கூட்டுறவு வங்கி செயலாற்றும் பகுதியில். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** விவர அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் போதும். படிக்க வேண்டியதில்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்கள், விவர அறிக்கை @ ஒன்று அவையில் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** தலைவர் அவர்களே, இதிலே, புதிய சந்தர்ப்பம் ஏற்படும்போது வாய்ப்பு அளிக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே பல ஆண்டுகளாக வேலையில் இருந்தவர்களை இந்த நிலைக்கு ஆளாக்கியிருப்பதால், இதைப்பற்றிப் பின்னர் பரிசீலனை செய்து, அவர்களுக்காக ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

---

@724-725 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.





**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் குறிப்பிட்டபடி, புதிதாகப் பணியாளர்களைச் சேர்க்கும் சமயத்தில் இந்தத் தற்காலிக எழுத்தாளர்களுக்கும் சந்தர்ப்பத்தை அளித்து நிரந்தரப் பணியில் சேர்த்துக்கொள்வதற்கு மத்திய வங்கி பரிசிலனை செய்யும் என்பதை உறுதி கூறுகிறேன்.

### (2) மதுரை மாவட்டம், பாப்பம்பட்டி நரேந்திர பால் பண்ணைக்குச் சொந்தமான 1,300 ஏக்கர் உபரி நிலத்தைச் சாகுபடி செய்துவரும் விவசாயிகளிடம் குத்தகை கட்டும்படி நெருக்கடி செய்யப்படுவது குறித்து.

**திரு. ப. மாணிக்கம் (திரு. ஆ. நல்லசிவன் சார்பில்) :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"மதுரை மாவட்டம், பாப்பம்பட்டி நரேந்திர பால் பண்ணைக்குச் சொந்தமான சுமார் 1,300 ஏக்கர் உபரி நிலத்தை அதை சாகுபடி செய்துவரும் விவசாயிகளுக்குப் பட்டா வழங்கி, அந்நிலத்திற்குரிய கிரயத்தை அவர்களிடம் வசூல் செய்வதற்குப் பதிலாக, குத்தகை என்ற பெயரால் அரசு ஒவ்வொருவரிடத்திலும் ரூ. 5,000-த்திலிருந்து ரூ. 18,000 வரை கட்டும்படி அதிகாரிகள் நெருக்கடி செய்துவருவதால் அப்பகுதி விவசாயிகள் படும் இன்னல் குறித்து"

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, அவையின் முன் அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ப. மாணிக்கம் :** தலைவர் அவர்களே, இவ்வளவு பெரிய தொகையை அதிகாரிகள் கேட்டு வற்புறுத்துவது விவசாயிகளுக்குச் சுமை என்பது மட்டுமல்ல. இன்றைய அரசு மேற்கொண்டிருக்கக்கூடிய கொள்கைக்கு விரோதமானதாகும். குத்தகை விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட துன்பம் ஏற்படுகின்ற காரணத்தாலே, பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தினாலே, இந்த நேரத்தில் இப்படிப்பட்ட நிர்ப்பந்தம் செய்வது குத்தகை விவசாயிகளை வெளியேற்றுவதற்கு ஒப்பனையாகும் என்று கருதுகிறேன். அதைப்பற்றி அரசு என்ன கருதுகிறது? அவர்களுக்கு அந்த நிலங்கள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

---

@726-727 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## மதுரை மாவட்டம், பாப்பம்பட்டி நரேந்திர பால் பண்ணைக்குச் சொந்தமான 1,300 ஏக்கர் நிலத்தைச் சாகுபடி செய்துவரும் விவசாயிகளிடம் குத்தகை கட்டும்படி நெருக்கடி செய்யப் படுவது குறித்து

[1979 மார்ச் 24

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, அரசின் கொள்கைகளை விரைவுபடுத்தவே இது வழிவகை செய்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலத்திலிருந்து இவர்களை வெளியேற்றா மலிருக்க, அவர்களே வேளாண்மையைச் செய்யவும் யார் யார் குத்தகை தாரர்கள் என்பதை உறுதிப்படுத்தவும் இதைச் செய்கிறோம். நாம் அவர் களிடமிருந்து பெருந்தொகையைக் கேட்கவில்லை. அவர்கள் வேளாண்மை செய்கின்ற நிலத்தின் அளவிற்கு ஏற்றவாறுதான் தொகை கேட்கிறோம். இவர்களிடத்தில் பணத்தை வாங்கிவிட்டாலும், பின்னர் அவர்கள் கொடுத்த தொகையைக்கூட குறைக்கும் நல்ல எண்ணத்தை அரசு வைத்திருக்கிறது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** நல்ல எண்ணம் என்று சொல்லும்போது, இவ்வளவு பெரிய தொகையை ஏன் கேட்க வேண்டும்? நல்ல எண்ணத்தின் காரணமாக தொகையைக் குறைக்கக்கூடாதா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அங்கத்தினர் அவர்கள் தொகையை இப்போதே குறைப்பதுபற்றிச் சொன்னார்கள். அந்தத் தொகை இப்போது வேளாண்மை செய்கின்ற நிலத்திற்கு ஏற்றவாறுதான் இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு 9 ஆயிரம் ரூபாய், 10 ஆயிரம் ரூபாய் என்றில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (3) சென்னை நகரிலும், கிராமப்புறங்களிலும் மண்ணெண்ணெய் கிடைக்கப் பெறாததும், சென்னை நகரில் கேஸ் ( gas ) சப்ளையும் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திருவாளர்கள் வே. தங்கப்பாண்டியன், க. மீனாட்சிசுந்தரம், ஆ. பாலசுப்பிரமணியம், கே. எஸ். அப்துல் வகாப், ஏ. ஆர். தாமோதரன் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து முன் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். அவர்களில் ஒருவர் பிரேரணை செய்தால் போதுமானது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1979 மார்ச் 24] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

"சென்னை நகரிலும், கிராமப்புறங்களிலும் கடந்த சில தினங்களாக மண்ணெண்ணெய் கிடைக்கப் பெறாததாலும், மேலும் சென்னை நகரில் கேஸ் சப்ளையில் 35 நாள் இடைவெளி இருந்தால் தான் கேஸ் கிடைக்கும் என்ற நிலை இருப்பதாலும் இல்லத்தரசிகள் படும் இன்னல் குறித்து"

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஈரான் நாட்டிலிருந்து மண்ணெண்ணெய் கிடைப்பதில் தகராறு இருக்கிறது. அதன் காரணமாக தமிழ்நாட்டில், சென்னை நகரத்தில் பெருவாரியான பகுதிகளில் பெண்கள் மண்ணெண்ணெய்க்காக கியூவில் நிற்கின்றனர். இந்த நிலை தமிழ்நாட்டில் மட்டுமா அல்லது இந்தியா முழுவதிலும் இருக்கிறதா? இந்தப் பிரச்சினையில் விநியோக முறையில் தவறு ஏற்பட்டிருக்கிறதா? இந்த மாநிலத்தில் பஞ்சாயத்துக்களிலும், கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங் களிலும் நிலைமை மோசமாக இருக்கிறது என்று தெரிகிறது. இதைத் தவிர்க்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, ஈரான் நாட்டில் நடந்த குழப்பங்கள் அல்லது நடந்துகொண்டிருக்கின்ற குழப் பங்கள் கூட ஒரு காரணம் என்று சொல்லலாம். இன்னொரு முக்கிய காரண மும் உண்டு. சமையல் வாயு 35 நாட்களுக்கு ஒரு முறைதான் கிடைக்கும் என்ற நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. 27, 28 நாட்களுக்கு ஒரு முறை இதற்கு முன்பு கிடைத்து வந்திருக்கிறது. இதுவரையில் மண்ணெண்ணெய் வாங்காத வர்கள் கூட மண்ணெண்ணெயை வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும் என்று கருதுகின்ற நிலைமைகள் வந்திருப்பதனால், இந்தத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக் கிறது. இந்திய அரசு நம் மாநிலத்திற்கு மாதந்தோறும் சராசரியாக மண்ணெண்ணெய் வழங்குகிறது. இந்த ஆண்டு சனவரி திங்களுக்கு 37,015 கிலோ லிட்டர், பிப்ரவரித் திங்களுக்கு 34,009 கிலோ லிட்டர், மார்ச்சு திங்களுக்கு 34,487 கிலோ லிட்டர் என்ற அளவில் தமிழகத்திற்குக் கொடுத் திருக்கிறார்கள். நமக்குக் கிட்டத்தட்ட இன்னும் ஒரு 3 ஆயிரம் கிலோ லிட்டர் அதிகமாகக் கிடைக்குமானால், இந்தத் தட்டுப்பாடு நிச்சயமாக இருக்க முடியாது. இது மத்திய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. நமது மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் நேரடி.

---

@ 728-729 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

யாகவே அதைப்பற்றிப் பேசி தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு முயல்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை இனிமேல் வராமலிருப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளலாம். அதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் விலை அரசு நிர்ணயித்திருப்பது ரூ. 1.36. வெளியிலே உள்ள விலை ரூ. 1.60 என்று இருக்கிறது. அந்த விலைக்குத்தான் விற்கிறார்கள் என்று சொல்கின்றார்கள். கார்டு இல்லாதவர்களுக்கு, ரேஷன் கார்டு இல்லாதவர்களுக்கு விநியோகிப்பதில்லை என்றும் சொல்கின்றார்கள். அவர்களுக்கு என்ன வழி? அனுமதிக்கப்பட்ட சில்லரை வியாபாரிகள் டெபாசிட் செய்தவர்களுக்கும் சப்ளை செய்வதில்லை. அவர்களுக்கும் நிறுத்திவிட்டதாகச் சொல்கிறார்கள். சில்லரை வியாபாரிகளுக்கு சப்ளை செய்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தமிழகத்தைப் பொறுத்தவரையில், இது ஒரு அத்தியாவசியமான பண்டம். அந்த அடிப்படையில் இதன் விநியோக முறைகள் சீராக இருக்க வேண்டுமென்பதிலே நாம் மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறோம். இந்திய அரசு இந்தியன் ஆயில் கார்ப்போரேஷன் மூலமாக, இந்த மண்ணெண்ணெய் சப்ளையை அனுமதி பெற்ற சிறு சிறு வியாபாரிகளுக்குப் பிரித்து வழங்குவதிலே சில குறைபாடுகள் இருப்பதாகத் தெரிகிறது. பெப்ரவரியில் 34 ஆயிரம் கிலோ லிட்டர்தான் கிடைத்தது, அடுத்த மாதத்தில் பிப்ரவரியில் கொடுத்ததைவிட கூடுதலாக ஒரு 400 கிலோ லிட்டர் கிடைத்தது. அத்துடன் 35 நாட்களுக்கு ஒரு முறைதான் கேஸ் கிடைக்கும் என்ற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதுவும் இந்த நெருக்கடிக்கு ஒரு முக்கிய காரணமாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தட்டுப்பாடுகளை, அனைத்துக் குறைபாடுகளை விரைவாகத் தீர்க்க வேண்டும் என்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துவருகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பிப்ரவரி 28 ஆம் தேதியன்று பட்ஜெட், மத்திய அரசின் பட்ஜெட் வெளிவந்த பிறகு, தொடர்ந்து இந்தக் குறைபாடு ஏற்பட்டிருக்கிறது. விலைவாசியும் அதிகமாகியிருக்கிறது. மண்ணெண்ணெய் நிர்ணயித்த விலைக்கு மேலும் விற்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். சிலர் அளவையும் குறைத்துக்கொடுக்கின்றார்கள் என்று சொல்கின்றார்கள். அப்படிக் கிடைக்கக்கூடிய ஒரு சில



இடங்களிலும், குழந்தைகளும், பெண்களும் நீண்ட கியூவில் நிற்கின்ற பரிதாபகரமான காட்சிகள் இருக்கின்றன. இந்தக் காட்சிகளை அகற்ற அரசுக் கடைகள் விரிவாக்கப்படுவதற்கு அரசு முன்வருமா? நியாய விலைக் கடைகள் மூலம் மண்ணெண்ணெய் அளிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, பட்ஜெட்டில் வரிகள் போடப்பட்டிருக்கின்றன என்ற அச்சத்தின் காரணமாக இப்படி ஏற்பட்டிருக்கிறது என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். அத்துடன் 35 நாட்களுக்கு ஒரு முறைதான் கேஸ் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். 28, 30 நாட்களில் கேஸ் தீர்ந்துவிட்டிருக்கும். இந்த இடைக்காலத்திற்கு, ஒரு வார காலத்திற்குத் தேவையானதற்கு, மண்ணெண்ணெய் வாங்கி உபயோகிக்கின்ற நிலைமை வந்து விட்டிருக்கின்றது. மண்ணெண்ணெய் கிடைக்காது என்ற எண்ணத்திலேயே சிலர் வாங்கி வைத்துக்கொள்வார்கள். நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யும்போது, சில பண்டங்கள் விலை ஏறுவதும் கிடைக்காத நிலைமையும் ஏற்படுகிறது. இவைகள் தான இந்தத் தட்டுப்பாட்டுக்குக் காரணம். இதைப் போக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, குரோம்பேட்டையில் 70 ஆயிரம் பேர்கள் ஜனத்தொகையுள்ள இடத்தில் ஒரே ஒரு கடையில்தான் மண்ணெண்ணெய் விநியோகிக்கிறார்கள். அங்கே கடைகளை விரிவாக்குவதற்கு, கூடுதலான கடைகள் வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, I would like to point out to the Hon. Minister who said that the Indian Oil Corporation has been entrusted with the distribution of kerosene that this is not factually correct. There are two other oil companies called Hindustan Petroleum and Bharath Petroleum which are also in the field. Much of the difficulty that has arisen today is because of the arbitrary procedure that has been adopted in asking hand-tank-cart vendors to retail kerosene where the wholesale dealer is also situated. Kerosene distribution was done through possibly 500 or 600 retail dealers in Madras. Due to shortage of kerosene, the Government intervened and on the advice of one oil company, decided to adopt this procedure. In fact, I have given notice of a motion because I wanted to acquaint the Government with many facts about the

kerosene trade about which no other person in this House can know better than I do because I have been for 30 years in the kerosene trade. I would request the Government to let us know whether family cards will be issued to everybody in the City of Madras and in the rural areas and whether retail dealers will be entrusted with the task of distributing kerosene according to the family cards that have been distributed, because today we have lost all our family cards and we are not buying rice and sugar through family cards. May I request the Government also to let us know whether wholesalers who are actually selling kerosene will also be invited to any meeting which the Government may convene instead of inviting only the oil companies who are giving, perhaps sometimes, not the true picture of what is happening in the market?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** அரசு விரைவாக நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-30)

**(4) சென்னை, டி.வி.எஸ். நிர்வாகத்திலுள்ள தொழிலாளர்கள், சென்னை தொழிலாளர் ஆணையர் அலுவலகம் முன்பு 'தர்ணா' போராட்டம் நடத்தியது குறித்து.**

*** திரு. ப. மாணிக்கம் (திரு. ஆ. நல்லசிவம் சார்பில்) :** மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"சென்னை, டி. வி. எஸ். நிர்வாகங்களிலுள்ள தொழிலாளர்கள், நிர்வாகத்தின் பழி வாங்குதலைக் கண்டித்தும், அரசின் வாக்குறுதிகளை நிறைவேற்றக் கோரியும் 7—3—79 முதல் 9—3—79 வரை சென்னை தொழிலாளர் ஆணையர் அலுவலகம் முன்பு 'தர்ணா' போராட்டம் நடத்தியது குறித்து".

*** மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மேலவைத் தலைவரவர்களே, டி.வி.எஸ். குரூப் நிறுவனங்களில் கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்களும் அவற்றின் எதிரில் குறிப்பிட்டுள்ள தேதியிலிருந்து இயங்கி வருகின்றன.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அறிக்கை அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் போதுமே.



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ப. மாணிக்கம் :** அரசுத் தரப்பு பதிலில் அமைதியாக வேலை நடப்பதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால், மனக் கொந்தளிப்பு ஏற்பட்டு, நிலைமைகள் எதிர்பாராத திருப்பத்தை ஏற்படுத்தலாமென்ற அச்சம் இருக்கிறது. காரணம், தொழிற் சங்கத்தின் நியாயமான நடவடிக்கைகளுக்காக இப்படிப்பட்ட பழி வாங்கல் நடப்பதால், அரசு தொழிற் சங்கச் சட்டதிட்டப்படி தரும் பாதுகாப்பைத் தரத் தவறியிருக்கிறது. அதுபற்றி அரசு கவனிக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** எந்த வகையில் பாதுகாப்புத் தர வேண்டுமோ அந்தப் பாதுகாப்பு இரு சாராருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** பாதிக்கப்பட்டது ஒரு பகுதி. இரு சாராருக்கும், அரசு நடுநிலைமையில் இருப்பது புரிகிறது. ஆனால் நடுநிலைமை என்பதால் பாதிக்கப்பட்டவர்களை கவனிக்க வேண்டியதில்லை அல்லது காப்பாற்ற வேண்டியதில்லை என்று இருக்கிற பாராமுகமான போக்கை அரசு கைவிடுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இந்த அரசு தொழிலாளர்களின் பால் வைத்துள்ள பற்றை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்கள். எனவே அவர்களுக்கு இருக்கக்கூடிய குறைகளை தொழிற் தகராறு என்று எழுப்பினால், முறையாக அவைகள் கவனிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(5) தென்னாற்காடு கடலூர் வீட்டு வசதி சங்கம் தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்திற்கு அனுப்பியுள்ள கடன் மனுக்களுக்கு ஒப்பளிப்பு வழங்குவதில் தாமதம் குறித்து.**

THIRU A. R. DAMODARAN : Sir, I wish to call the attention of the Hon. the Minister for Labour to a matter of urgent public importance, namely, the enormous delay in sanction of loan applications sent by the Cuddalore Co-operative Housing Society, South Arcot District to the Tamil Nadu Co-operative Housing Society, Madras and the consequent hardship caused to members of the Cuddalore Society.

@ 730 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மேலவைத் தலைவரவர்களே விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : May I know from the Hon. Minister whether the delay is not only due to lack of funds but because a directive has gone from the Government that preference should be shown to loan-withdrawals of Rural Housing Societies and, therefore, Urban Housing Societies are being discriminated in this regard ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, நிலைமை அப்படியல்ல. ஊரக மற்றும் நகர்ப்புற வசதி சங்கங்களின் கடன் விண்ணப்பங்களுக்கு ஒப்பளிப்பு வழங்குவதிலும், கடன் தொகை விநியோகிப்பதிலும் ஏற்படும் காலதாமதத்தைப் போக்குவதற்காக, இப்பணிகளில் ஈடுபட்டுள்ள தலைமைச் சங்கப் பணியாளர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட காரணங்களால், இந்த மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் தொகைகள் வழங்குவதும், விநியோகம் செய்வதும் இனி காலதாமதமின்றி நடைபெறும்.

THIRU A. R. DAMODARAN: Sir, the Hon. Minister has given in this statement that there are only 15 applications pending from the Cuddalore Housing Society as on the 28th February. May I respectfully point out that these facts are absolutely incorrect? I have a list of 23 applications and I am the President of the Society. All the facts contained in this statement are factually incorrect. With your permission I would like to give this list to the Hon. Minister and if the Hon. Minister finds that my list is correct, I reserve my right to move a Motion of Privilege at a later date.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** என்னிடம் கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையைப் படித்துவிட்டேன். அது தவறு என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். 1968 ஆம் ஆண்டிலிருந்தே அவர்கள் என்னுடைய மதிப்பிற்குரிய நண்பராக இருக்கிறார். 1950-ல், நான் கடலூர் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்த காலத்திலேயே, மாநாட்டுக்குச் சென்று, அவரிடம் நன்கொடை வாங்கியிருக்கிறேன். அவர்கள் கூறியது குறித்து நான் நடவடிக்கை எடுக்கிறேன். அதற்குப் பிறகு பிரிவிலெஜ் மோஷன்

---

@ 731-732ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.



தேவையில்லை என்பது என்னுடைய வேண்டுகோள். நடவடிக்கை கட்டாயம் எடுக்கப்படும். பணம் கொடுக்காததற்கும், தவறான அறிக்கையைக் கொடுத்ததற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதை அமைச்சரவர்களிடம் கொடுத்து விடலாமே.

THIRU A. R. DAMODARAN : There is nothing personal in moving a Motion of Privilege. The Motion of Privilege is only moved so that the Minister may take action against the erring officials concerned. Thiru Raghavanandam continues to be my good friend, Sir.

THE HON. THIRU S. RAGHAVANANDAM: Mr. Chairman, Sir, I assure that severe disciplinary action will be taken against such of those officers have given wrong and incorrect report.

5. 1979-80 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம்—
தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 1979-80 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைபற்றி இந்த மன்றத்திலே பல உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை எடுத்துச் சொல்லி, இறுதியாக இன்றைக்கு அந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்த நான் பதில் சொல்லுகின்ற வாய்ப்பைப் பெற்று, உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன். எனக்கு இருக்கிற மகிழ்ச்சி, இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றிக் கடுமையான விமர்சனங்கள் இந்த மன்றத்திலிருந்து வரவில்லை. கூடான விமர்சனங்களும் இந்த மன்றத்திலிருந்து கிளம்பவில்லை. சிலர் கவிதை பாடி பாராட்டியிருக்கிறார்கள், என்னை. கவிதை பாடியவர்களைக் கவிதையாலேயே சாடி, என்னைப் பாராட்டியவர்களும் உண்டு. அவர்களுக்கெல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. மா. பாலசுப்ரமணியம் அவர்கள் எழுதிய கவிதையைப் படித்துப் பார்த்தேன். அந்தக் கவிதையின் முதல் பகுதி அவரது தாயுள்ளத்திற்கு எடுத்துக் காட்டு. இரண்டாம் பகுதி, அவர்கள் கொண்டிருக்கிற அரசியல் கொள்கைச் செழுமையின் மறு வடிவம்.

நல்ல கருத்துக்களைத் தருகிறபோது, அந்தக் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதும், ஏற்புடைத்தான கருத்துக்கள் என்று கருதுகிறபோது அவைகளை ஏற்று, செயல்படுத்துவதற்கு முயல்வதும் ஒரு ஆட்சிக் கட்சியின்

தவிர்க்க முடியாத கடமையாக இருக்க வேண்டுமென்பதில் நான் அக்கறை உள்ளவனாக இருக்கிறேன். பல நல்ல கருத்துக்கள் இங்கே தெரிவிக்கப்பட்டன. சில பேர்கள் எடுத்த எடுப்பிலேயே இதிலே என்ன இருக்கிறது என்று கேட்டார்கள். குறிப்பாக அருமை மாண்புமிகு உறுப்பினர் தங்கை தமிழரசி அவர்கள் பேசுவதற்கு முன்னாலேயே என்னைக் கேட்டார், "நான் பேசும்போது நீங்கள் இருப்பீர்களா ?" என்று. நாளை நான் இருக்க மாட்டேன் என்று கவலையோடு சொன்னேன். "நீங்கள் இருந்தால் சில கருத்துக்களைப் பேசலாமென்று இருக்கிறேன்" என்று சொன்னபோது, பாராட்டி, நல்ல கருத்துக்களைச் சொல்வார் என்றுதான் எதிர்பார்த்தேன்.

(பிற்பகல் 5-40)

அவர்களும் அந்தக் கட்சிக் கண்ணோட்டத்தோடுதான் பேசினார்கள் என்றாலும், "In between lines" என்று சொல்லுவார்களே, அது போல் அவர்கள் பேசியதைப் படித்துப் பார்த்தால், பாசத்தோடுதான் பேசியிருக்கிறார்களே தவிர, கண்ணியமற்ற முறையில் விமர்சனம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் பேசியதாக நான் எண்ணவில்லை. அப்படி கடுமையாகத் தாக்கிப் பேசினார்கள் என்று யாராவது எடுத்துக்கொள்ளச் சொல்லி என்னை வற்புறுத்தினால், நான் அதை ஏற்றுக்கொள்ளவும் மாட்டேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் நிதி நிலை அறிக்கை மீது பேசுவதற்கு முன்னாலே என்னைக் கொஞ்சம் பக்கத்திலே அழைத்துச் சென்று "தேங்காய் தேங்காய்" என்றெல்லாம் சொன்னார்கள். நான், அவர்களுக்கு அரசின் நிதி நிலைமையைப்பற்றிச் சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொண்டு அதற்குப் பிறகு அவர்கள் தான் அதுபற்றி முடிவு சொல்ல முடியும் என்று நான் சொன்னேன். இன்றைக்கு நான் ஊருக்குப் போகிறேன், இந்த நம்பிக்கையோடுதான் நான் போக வேண்டுமென்று சொல்லிவிட்டுப் போனார்கள். நான் இதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சொன்னேன். இவ்வளவு நம்பிக்கையோடு போகிறேன் என்று சொல்லிவிட்டுப் போகிறார்களே, திரும்பி வரும்போது ஏமாற்றத்தோடு வரக்கூடாது என்பதில் எனக்கு அக்கறை இருந்ததாகையால், ஏதாவது செய்ய வேண்டுமே என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் சொன்ன கருத்தை மாண்புமிகு முதல்வரிடம் எடுத்துச் சொன்னேன். "நான்தான் முதன் முதலாக அவர்களிடம் சொல்லி, தேங்காய்க்கு வரி போடாமல் விட்டுவிடலாம் என்று கேட்டுக் கொண்டவன், ஆகவே நீங்கள் இந்த வரியை நீக்கிவிடுவது நல்லது" என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். எனக்கு முதல்வர் அவர்கள் கட்டளையிட்டார்கள். இப்போது வரி நீக்கப்பட்டு விட்டது. நான் வருகிற



வழியில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் கை குலுக்கினார்கள், கடமை உணர்வின் காரணமாக. அதே நேரத்தில் நான் இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். போதுமான நிதி ஆதாரங்கள் இருக்கிறபோது, தேங்காய்க்கு நீங்கள் ஏன் வரி போடுகிறீர்கள் என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் கேட்டார்கள். நான் அந்தக் காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களோடு எவ்வளவு தொடர்பு கொண்டிருந்தவன் என்று அவர்களுக்கு 'ஐஸ்' வைத்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சொன்னது போல், நான் சொல்ல விரும்பவில்லை. அவர்களிடத்திலே எனக்குத் தனி மரியாதை உண்டு. ஆனால் அவர் அவைக்குத் தவறான தகவலைத் தந்திருக்கிறார். தேங்காய்க்கான வரியை நிதியமைச்சர் போட்டிருக்க மாட்டார், வருவாய்த் துறை அமைச்சர்தான் போட வற்புறுத்தியிருப்பார் என்று கூறி, எங்களிடையே பிளவை ஏற்படுத்துகிற ஒரு நல்ல முயற்சியில் அவர் ஈடுபட்டார். ஆனால் அவருக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மொத்த 'கேபினெட்டும்' உட்கார்ந்து, பேசி, சிந்தித்துதான் ஒருமித்த முடிவெடுத்திருக்கிறோம். நானாக வரி போடவில்லை என்று கூறுவதன் மூலம் ஒரு வகையில் என்னைக் கொஞ்சம் குறைத்து எடை போடுகிறார்களோ என்று நான் சந்தேகப்படக் கூடிய வகையில் பேசியிருக்கிறார்கள். நிதியமைச்சரால் வரிபோட முடியவில்லை. வருவாய்த் துறை அமைச்சர் பலாத்காரப்படுத்தி வரி போட வைத்தார் என்ற எண்ணம் வெளிப்படும் வகையில் பேசியிருக்கிறார்கள். ஆனால் உண்மையிலே அனைவரும் சேர்ந்துதான் இந்த முடிவை எடுத்தோம் என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். அது இப்பொழுது ரத்து செய்யப்பட்டுவிட்டது.

தீப்பெட்டிக்கு 25,000 ரூபாய் என்று விதித்திருந்த வரம்பை 50,000 ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறோம். நான் இதைப்பற்றிச் சட்டமன்றப் பேரவையில் பேசும்போது கூட சொன்னேன். 1966ஆம் ஆண்டு 2.5 கோடி என்ற அளவுக்கு 'டர்ன் ஓவர்' இருந்த அந்தத் தீப்பெட்டித் தொழில் இன்றைக்கு 71 கோடி ரூபாய் 'டர்ன் ஓவர்' என்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறது. இந்த நிலையில் அந்தத் தொழிலை நடத்துகிற தொழில் அதிபர்கள் இந்த அரசுக்கு ஓரளவு வரி வழங்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இதை நான் சுட்டிக் காட்டினால், அவர்கள் அதற்காக வருத்தப்படக் கூடாது. சமூக மேம்பாட்டுத் திட்டங்களுக்காக அவர்களுடைய காணிக்கையாக

அவர்கள் அதைக் கருதிக் கொண்டு இந்த நல்ல காரியத்தில் அவர்கள் இறங்க வேண்டுமென்று நான் நேற்றைக்கும் கேட்டுக்கொண்டேன். இன்றைக்கும் கேட்கிறேன். நீங்கள் இப்படி சொல்லுகிறீர்களே, அவர்கள் விலையை ஏற்றி விடுவார்களே என்று கூட மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். அரசு அதிலே கவனமாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள் கிறேன். அப்படி அவர்கள் விலையை ஏற்றுவார்களேயானால், அரசு அதை நிச்சயம் அனுமதிக்காது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற அதிபர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குப் பிறகு இங்கே நான் ஒரு நீண்ட சொற்பொழிவை ஆற்ற வேண்டு மென்ற அவசியமில்லாத அளவுக்கு நான் பேசி விரைவில் முடித்து விடுகிறேன். நேற்றைக்கும் பேசி விட்டு திரும்பவும் அதையேதான் நான் பேச வேண்டியிருக் கிறது. நீங்களும் சலித்துப் போயிருக்கிறீர்கள். சிக்கிரம் வீட்டுக்குப் போகலாம் என்று காத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆகையினாலே குறிப்பிட்ட ஒருசிலவற்றிற்கு மட்டும் விளக்கம் தந்துவிட்டு விடைபெற விரும்புகிறேன். குறிப்பாக ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது, "டில்லியிலிருந்து உங்களுக்கெல்லாம் பணம் ஏராளமாகக் கிடைத்திருக்கிறது. அதை வைத்துக்கொண்டு செலவு செய்யாமல் ஏன் வரியைப் போடுகிறீர்கள் ?" என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமியைப் போன்றவர்கள் பேசும்போது, வேறொரு விதத்திலும் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசும்போது, அவருக்கே இருக்கிற ஆவேசத்தோடு "ஏன் டெல்லியை எதிர்த்துப் போராடக் கூடாது ? போர் தொடுக்க வருகின்றீர்களா ? தோள் கொடுக்கத் தயார், தோள் தட்டத் தயார்" என்றெல்லாம் பேசினார்கள். அந்த ஆற்றல் அவருக்கு இல்லை என்று சொல்லவில்லை. அவருக்கு அந்த ஆற்றல் உண்டு. ஆனால் அது தேவையில்லை, இப்போது அதைப் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். வாதாடிப் பெற முடியும் என்ற நிலை இருக்கும்போது, போராடத் தேவையில்லை. வாதாடிப் பெற முடியும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. மேலே இருப்பவர் களும் மனிதர்கள்தான். இங்கே இருக்கிறவர்களும் மனிதர்கள்தான். பரஸ் பரம் புரிந்துகொண்டு நல்லுறவு கொண்டு பணி புரிந்தால், தொடர்ந்து எவ் வளவோ காரியங்களைச் சாதிக்க முடியும். வரவு-செலவுத் திட்டத்தைப் படித்துப் பார்த்தால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அந்த உண்மை தெரியும். 7-வது நிதிக் கமிஷன் அறிக்கைப்படி எந்த அளவுக்கு இந்த முறை நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அந்த நிதிக் கமிஷன்



அறிக்கையை மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரனைப் போன்ற உறுப் பினர்கள் படித்திருக்கக்கூடும். உண்மையிலேயே இந்தியத் துணைக் கண்டத்தில் இதுவரை போடப்பட்ட எந்தத் திட்டங்களையும்விட அதிகப்படி யான பணத்தை உள்ளடக்கி பிளான் அவுட்லே இந்த முறைதான் போடப் பட்டது. ஏறத்தாழ 69,000 கோடி ரூபாய்க்கு இந்தத் திட்டம் தீட்டப்பட் டிருக்கிறது. இதுவரை இல்லாத அளவுக்கு இந்தத் தடவை திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்பு கிறேன். இந்தத் திட்டத்தில் அத்தனை மாநில அரசுகளையும் ஒன்று சேர்த்து, கணக்குப் போட்டுப் பார்க்கிறபோது இந்தத் தடவைதான் மத்திய அரசுத் திட்டங்களுக்கு என்று போடப்பட்ட திட்டத்திற்கு ஒதுக்கிய தொகையை விட மாநிலங்களுக்கு ஒதுக்கிய தொகை அதிகம் என்பதை எனது நிதிநிலை அறிக்கையிலேயே நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன். ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநிலங்களின் பங்கு 35,120 கோடி ரூபாய். மத்திய அரசின் பங்கு 34,220 கோடி ரூபாய். இந்த அளவுக்கு அது ஒதுக்கப்பட்டது. சரி, எப்படி மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டது அதிகமாகவும் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட தொகை குறைவாகவும் வந்தது என்பதைப் பற்றி நான் சில கருத்துக்களை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நிதிக் கமிஷன் இங்கே வந்தது உங்களுக்கெல்லாம் தெரியும். அந்த நிதிக் கமிஷனின் தலைவ ராக இருந்தவர் நீதிபதியாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. ஷலாத் அவர் களாவர். நிதிக் கமிஷனுக்கு இந்த அரசின் சார்பாக ஒரு மெமோராண்டம் தந்தோம். அந்த மெமோராண்டம் என்னிடத்தில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களும் கூட அதைப் படித்திருக்கக்கூடும் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன். நான் சட்டமன்றப் பேரவையில் தெரிவித்ததைப் போல் பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்த அளவுக்குச் சொன்னார்களோ அந்த அளவிற்கு, மாநில உரிமைகளுக்காக அவர்கள் எப்படி எப்படி வாதாடிப் பெற வேண்டுமென்று விரும்பினார்களோ அந்தக் கனவை நனவாக்க, நிறை வேற்றத்தக்க வகையில் இந்த மெமோராண்டம் அமைந்திருக்கிறது. அதைச் சுட்டிக்காட்டுவதற்காக ஒன்றிரண்டு பகுதிகளை மட்டும் நான் இங்கே படித்துக்காட்ட விரும்புகிறேன்.

"The very first Article of the Constitution of India defines India as a 'Union of States'. The overall philosophy that should govern Centre-State financial relations should, therefore, be such as to ensure financial autonomy both for the Centre and the States in a manner that is fully consistent with the responsibilities and functions assigned to each under the Constitution. The Centre and the States should

be considered as co-equal partners in the Indian federal set-up. The allocation of resources to States that arises from the award of the Finance Commission should not be viewed as a 'transfer' from the Central exchequer to the States but as a redistribution, consistent with emerging needs, of the overall resources of the nation which, in description as well as in fact, is a genuine 'Union of States'."

இதைத் தாங்கித்தான் இந்த மெமோராண்டம் அவர்களுக்குத் தரப்பட்டது. இதைத் தாங்கித்தான் இந்த மெமோராண்டம் அவர் பேசியபோது பேசிய பேச்சின் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்து அவர் பேசியபோது பேசிய பேச்சின் ஒரு பகுதியை இந்த சந்தர்ப்பத்தில் நான் படித்துக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

"The House is aware that these leaders have also like me referred to the need for rethinking on the relations between the Centre and the States. I have no doubt that every-one will agree on the need for placing these relations on a satisfactory basis. No one can deny that the experience so far in regard to distribution of revenue, delimitation of powers and allocation of assistance for Plan has been such as to cause bitterness. It has become an urgent necessity to eliminate this bitterness and evolve ways and means of promoting fruitful relations between Centre and States. The problem I have posed need cause no apprehension or misgiving but should only provoke thought. It is my earnest desire that through mutual goodwill and understanding we should forge a fraternal and beneficial nexus."

(பிற்பகல் 5-50)

இந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஒரு நிதிநிலையறிக்கையாக இது இருக்கிறதென்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் பெருமையோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'அதிகமான அதிகாரங்களை எங்களுக்கு வழங்க வேண்டும், குறிப்பாக financil autonomy ' என்ற அளவுக்கு அதிகமான 'fiscal areas' நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்றும் இன்றைய முதல்வர் அவர்களை தலைவராகக் கொண்டிருக்கிற இந்த அரசு எந்த அளவுக்கு மத்திய அரசோடு வாதாடியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் பொறுமை காட்டுவார்களானால், 5 நிமிஷ நேரத்தில் விளக்கிவிட விரும்புகிறேன்.



முதன் முதலில் இந்தப் பிரச்சினையைக் கிளப்புவதற்கு எங்களுக்குக் கிடைத்த ஒரு சாதகமான இடமே தேசிய அபிவிருத்திக் கவுன்சில்தான். அதனுடைய முதல் கூட்டத்திற்குச் செல்லுகிற வாய்ப்பை நானும் முதல்வர் அவர்களும் பெற்றோம். அங்கேதான் முதன் முதலாக இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது. அப்போது கொஞ்சம் சூடாகவேகூட இந்தப் பிரச்சினை எழுந்தது. நான் அவையில் இருக்கிற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன். "நிலைமைகள் மாற ஆரம்பித்திருக்கின்றன, கட்சி வேறுபாடுகளைத் தாண்டி தங்களது நலனில் அக்கறையுள்ளவர்களாகவும், ஆனால் அதே நேரத்தில் இந்தியத் துணைக் கண்டத்தின் நலனில் அதிக அக்கறையுள்ளவர்களாகவும் மாநில அரசுகளின் முதலமைச்சர்கள் இருக்கின்றார்கள்" என்பதை அருள்கூர்ந்து மறந்துவிடக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும், பீகாரில் ஆட்சி செய்து கொண்டிருப்பது ஜனதா கட்சி. அதைப் போலவே மத்தியப் பிரதேசத்தில் ஆட்சியில் இருப்பது ஜனதா கட்சி. உத்திரப் பிரதேசத்திலும், ராஜஸ்தானிலும் ஆட்சியிலிருப்பது ஜனதா கட்சிதான். ஆனாலும் அந்த மாநிலங்களின் முதலமைச்சர்கள் அத்தனை பேரும் மாநிலங்களுக்கு அதிக நிதியாதாரம் தேவை என்பதில் எங்களோடு சேர்ந்து தேசிய அபிவிருத்தி கவுன்சிலில் கோரிக்கை வைத்தார்கள். சில முதலமைச்சர்கள் தங்கள் எண்ணங்களைத் தெரிவித்தார்கள் என்ற போதிலும், சிலர் உண்மையிலேயே அனல் பொறிபறக்குமளவுக்குப் பேசினார்கள். அப்படிப் பேசியவர்களில் ஒருவர்தான் நமது முதல்வர் அவர்கள். அதைப் போலவே திரு. கர்ப்பூரி தாகூர் அவர்களும், திரு. ஜோதி பாசு அவர்களும் பேசினார்கள் என்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தென்னகத்திலிருந்து சென்ற அத்தனை முதலமைச்சர்களும் பொதுவாக தங்கள் எண்ணங்களை வலியுறுத்தும்போது, மாநிலங்களுக்கு அதிகமான நிதியாதாரத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது, அப்போதிருந்த நிதியமைச்சர் திரு. எச். எம். பட்டேல் அவர்களுக்கு அது கொஞ்சம் கஷ்டமாகவே இருந்தது. எனவேதான் அவர் பேசும்போது சொன்னார். அது எனக்கு இன்னும் நன்றாகப் பசுமையாக நினைவிலிருக்கிறது. "முடிந்தவரைதான் செய்ய முடியும். பணத்திற்கு எங்கே போவது"? என்று அவர்கள் கேட்டார்கள். அப்போது மேற் வங்க முதல்வராக இருக்கும் திரு. ஜோதி பாசு அவர்களும், கருநாடக மாநில முதல்வர் திரு. தேவராஜ் அர்ஸ் அவர்களும், ஆந்திர முதல்வர் டாக்டர் சென்னா ரெட்டி அவர்களும், அப்போது கேரளத்தின் முதல்வராக இருந்த திரு. ஏ. கே. அந்தோணி அவர்களும் பேசும்போது, இந்தியாவின் மொத்த வருவாயில்

60 சதவீதத்தை மாநிலங்களுக்கு ஒதுக்கிவிட்டு மீதியிருக்கும் 40 சதவீதத்தைத் தான் மத்திய அரசு தன்னிடம் வைத்துக் கொள்ள வேண்டுமென்றும், மாநிலங்களின் பணம் மத்திய அரசிடம் இருக்கக் கூடாது என்றும் வாதாடினார்கள். நீங்களெல்லாம் டெல்லி சென்று வாதாடினீர்களா என்றும், நான் மேலே குறிப்பிட்டதெல்லாம் உண்மையிலேயே நடந்ததா என்றும் சிலருக்குச் சந்தேகம் வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு .வீராசாமி அவர்களுக்கு அந்தச் சந்தேகம் ஏற்படாது. என்னைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட சந்தேகம் அவருக்கு ஏற்படவும் கூடாது. காரணம், நான் வாதாடிப் பழக்கப்பட்டவன் என்பது அவருக்குத் தெரியும். வாதாடும்போது துளி அளவுகூட விட்டுக் கொடுக்க மாட்டேன். அதற்காக 'காம்ப்ரமைசே' பிடிக்காதா என்றால், பிடிக்கும். என்னுடைய 'approach'-ல் தான் compromise -ல் இருக்குமே தவிர, Principle- -ல் வராது. அந்த அடிப்படையில்தான் நானும் முதலமைச்சர் அவர்களும் அங்கே வாதாடினோம். அதற்குப் பிறகு தேசிய அபிவிருத்திக் கவுன்சிலில் நிலைமை சிக்கலடைகிறது என்றவுடனே அதற்கென்று ஒரு சப்-கமிட்டியைப் போட்டார்கள். அந்த சப்-கமிட்டியிலும் நிலைமை சிக்கலடைகிறது என்று தெரிந்தவுடனே அதிலேயே ஒரு working group என்று ஒன்றைப் போட்டார்கள். அந்த ஒர்க்கிங் குரூப்பும் மத்திய அரசுக்குச் சாதகமாக இல்லை என்று தெரிந்த பிறகுதான், இறுதியில் வேறு வழியில்லாமல் மத்திய அரசு ஒரு முடிவுக்கு வந்தது. அந்த அளவுக்கு மத்திய அரசைக் கொஞ்சம் நெருக்கமாக இழுத்துவந்த பெருமை தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு உண்டென்பதை இங்கே பெருமையோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். Centrally sponsored schemes என்று சில இருக்கின்றன. Centrally sponsored projects என்று சில இருக்கின்றன. அவைகளை மாநில அரசுக்கு விட்டுவிடுங்கள் என்று கோரவில்லை. நெய்வேலி காம்ப்ளெக்ஸை எங்கள் மாநில அரசுக்கு விட்டு விடக் கோரவில்லை. அதைப் போலவே கல்பாக்கம் அணு மின்நிலையத்தை மாநில அரசுக்கு விட்டுவிடும்படி கோரவில்லை. அவைகளெல்லாம் ஒரு மாநில அரசாங்கத்தால் நடத்தப்படக்கூடிய காரியங்களல்ல. ஆனால் 'சென்ட்ரலி ஸ்பான்சர்டு ஸ்கீம்ஸ்' என்ற பெயரில் பட்டுப்பூச்சி வளர்ப்பதில் கூட மத்திய அரசுதான் ஈடுபட வேண்டும், பால் பண்ணை வைப்பதிலும் மத்திய அரசுதான் ஈடுபட வேண்டும், பள்ளிகளில் கல்வியை வளர்ப்பதிலும்



மத்திய அரசுதான் ஈடுபட வேண்டுமென்ற நிலையிருந்தால், மாநிலங்கள் நிலை என்ன ஆவது என்ற கேள்வியை 'ஒர்க்கிங் குரூப்பில்' நமது மாநில முதலமைச்சர் அவர்களின் சார்பில் நான் கேட்டேன். சண்டை வரவில்லை என்றாலும், எனக்கும் மத்திய கல்வியமைச்சர் டாக்டர் சந்தர் அவர்களுக்கும் கொஞ்சம் வேகமான மோதுதலேகூட ஏற்பட்டது. நான் அப்போது குறிப்பிட்டேன், "6,000 கோடி ரூபாயை சென்ட்ரலி ஸ்பான்சர்டு ஸ்கீம்களுக்காக ஒதுக்குகிறீர்கள். மாநிலங்களின் தேவைகளைப் பொறுத்த வரையில், அவைகளை மிக நன்றாக அறிந்தவர்கள் அல்லது புரிந்தவர்கள் நாங்களாகத்தான் இருக்க முடியுமே தவிர, தொலை தூரத்திலே டெல்லியில் அமர்ந்து கொண்டிருக்கிற மத்திய அரசாங்கமல்ல. ஆகவே தயவு செய்து இந்த விஷயத்தில் மத்திய அரசு அடம்பிடிக்கக்கூடாது, சென்ட்ரலி ஸ்பான்சர்டு ஸ்கீம்களைக் குறைத்து அந்த நிதியை மாநில அரசாங்கங்களுக்கு ஒதுக்குங்கள். நாங்கள் எங்களின் மாநிலத் தேவைகளை உணர்ந்து அவைகளுக்கு ஏற்ப திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றுவோம்" என்று சொன்னேன். அதற்குப் பிறகுதான் ஒர்க்கிங் குரூப்பில் அவர்கள் ஒரு முடிவெடுத்தார்கள். அதன் காரணமாக அவர்கள் எடுத்த முடிவு 3,500 கோடி ரூபாயை மாநிலங்களுக்கு ஒதுக்குவது என்பதும் மீதியுள்ள 2,500 கோடி ரூபாய் மத்திய அரசாங்கத்திற்கு இருக்கட்டும் என்பதாகும். இந்தக் கருத்தைத் திட்டக் குழு ஒப்புக் கொள்ளவில்லை. கடைசியில் அவர்கள், "மத்திய அரசாங்கத்திற்கு 4,000 கோடி ரூபாய் இருக்கட்டும். 2,000 கோடி ரூபாயை மட்டும் மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கலாம்" என்று சொன்னார்கள். அந்த வகையில் சென்ட்ரலி ஸ்பான்சர்டு ஸ்கீம்ஸ் அமைய வேண்டும் என்று மத்திய அரசு ஒப்புக்கொண்டு, நமக்கு ஒதுக்கியுள்ள தொகை ரூபாய் 150 கோடியாகும். இதையே, 'காட்கில் பார்முலா' அடிப்படையில் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்குமானால், இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் நமது மாநிலத்திற்குக் குறைவான நிதிதான் கிடைத்திருக்கும். இன்றைய பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள். "இதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இதனடிப்படையில்தான் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்போகிறேன்" என்று சொல்லி முடித்தார். நாங்களும் அதைத் தாராளமாக ஒப்புக்கொண்டோம். பிறகு அண்மையில் நடைபெற்ற தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்திற்குப் போயிருந்தபோது, 'மதுவிலக்குத் திட்டத்தால்' ஏற்படும் வருவாய் இழப்புக்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டபோது, அவர்கள் "எங்களால் ஒன்றும் செய்ய முடியாது" என்று கையை விரித்துவிட்டார்கள்.

இதனால் இரண்டு மாநிலங்கள்தான் பாதிக்கப்படுகின்றன என்றாலும், இந்த இரண்டு மாநிலங்களுக்கும் எங்களாலே ஒன்றும் செய்ய முடியாது என்று மத்திய அரசின் சார்பில் சொல்லப்பட்டது.

இதைக் குறித்து ஒரு வேடிக்கையான விளக்கம் சொல்லப்பட்டதாக அறிகிறேன். அந்த விளக்கம் இந்த அவையிலே இருப்பவர்களால் சொல்லப் பட்டதா அல்லது பேரவையிலிருப்பவர்களால் சொல்லப்பட்டதா என்பது எனக்குச் சரியாகத் தெரியாது. அந்த விளக்கத்திலே அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். "மத்திய அரசு அப்படி இழப்புத் தொகையைத் தராவிட்டால், அதற்கு ஒரு சின்ன குறுக்கு வழி இருக்கிறது. அதை இந்த அரசு கையாளக்கூடாதா ?" என்று கேட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 6-00)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இந்த அவையிலே இல்லை. பேரவையிலே திரு. கந்தசாமி கேட்டார்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** திரு. சுப்பு அவர்களும் சொன்னதாக எனக்கு நினைவு.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** அந்தக் குறுக்கு வழியை எல்லாம் இந்த அவையிலே சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** அப்படியானால் அதுபற்றி விளக்கம் தேவையில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** விளக்கம் தேவைப்படலாம்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** 1977-78-க்கு அந்த அடிப்படையை வைத்து அந்த வருமானத்தை வைத்துத்தான் கணக்கிட்டுத் தருகிறார்களே தவிர வேறுவகையில் அல்ல என்பதை நான் இந்த அவைக்குப் படித்துக் காட்ட விரும்புகிறேன். இது மேலேயிருந்து வந்திருக்கின்ற ஒரு செய்தி. அந்தச் செய்தியை நீங்கள் படித்துப் பார்த்தாலே உங்களுக்குத் தெரியும். மதுவிலக்கினால் ஏற்பட்ட இழப்பை உதவி மானியம் அளிப்பதன் வாயிலாக ஈடு செய்வது எனவும், இந்திய அரசு முடிவு செய்துள்ளது. 1978 ஆம் ஆண்டுக்கான ஆயத்துறை வருவாயை அடிப்படையாகக் கொண்டு இதைப் போல ஏற்படும் வருவாய் இழப்பில் ஒரு பாதியை உதவி மானியமாக அளிப்பதென மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அப்படியானால், ஒரு வாரத்திற்கு ரத்து செய்துவிட்டு மறு வாரத்திற்கு re-introduce செய்தால் எப்படி இந்தத் தொகை கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள் ? கருத்துக்



களைச் சொல்கிறபோது, அது முடியுமா ?, முடியாதா என்பதைக்கூட எதிர் பார்த்து கருத்துக்களைச் சொன்னால், நமக்குக்கூட கேட்பதற்குச் சுவையாக இருக்கும். அது மட்டுமல்ல. விவரங்களைப் புரிந்து கொண்டு கருத்துக்களைச் சொல்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள்கூட சொன்னார்கள். அவர் சொல்லும்போது, அப்படிப்பட்ட கருத்துக்களை இந்த மன்றம் சொல்லவில்லை என்று சொன்னார். ஏனென்றால், அவருக்கு விஷயம் தெரிந்திருக்கிறது என்று பொருள். ஆகையால் அவர்கள் அந்தக் கருத்துக்களைச் சொல்லவில்லை.

அதற்குப் பிறகு இங்கே பேசிய சிலபேர், குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் வேலை வாய்ப்புக்கான உத்தரவாதம் குறித்த திட்டத்தைப்பற்றிச் சொல்லும்போது, அதை எப்படியும் நிறைவேற்றியாக வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லி "மற்றவர்கள் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கக்கூடும், நீங்கள் கவலைப்படாதீர்கள். நீங்கள் செய்யுங்கள்" என்றெல்லாம் அவர் எங்களுக்கு ஆணையிட்டார். அந்த நல்ல உள்ளத்திற்கு நான் பாராட்டைத் தெரிவிக்கின்றேன். மூன்று ரூபாய், கோதுமை, அரிசி என்ற அளவுக்கு நிச்சயமாக 18 வயதுக்கு மேற்பட்ட வேலை செய்கின்ற அனைவருக்கும் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது, இன்னொரு நல்ல மகிழ்ச்சியான தித்திக்கக்கூடிய ஒரு செய்தி. அது இன்னும் நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறது. அதையும் சேர்த்துச் சொல்கிறேன். மத்திய அரசோடு நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். அவர்களுக்குச் சொன்னோம், எங்களது பகுதியிலே வாழ்பவர்கள் பெரும்பாலும் கோதுமையைச் சாப்பிடமாட்டார்கள். அவர்கள் அரிசி சாப்பிட்டுப் பழக்கப்பட்டவர்கள். ஆகவே, நீங்கள் இதற்காகத் தருகின்ற கோதுமையை நிறுத்திவிட்டு மொத்தமாக அரிசியை வழங்குங்கள் என்று கேட்டதற்கு, மத்திய அரசு பெருமளவிற்கு இசைவளித்திருக்கிறது. அப்படியானால், 3 ரூபாயும் அரிசியும் அவர்களுக்கு வழங்கப்படும். நான் சொல்கிறேன், இந்த மாநிலத்தில் இப்போது இருக்கும் வேலை நிலைமைகளைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, நிச்சயமாக எல்லோருக்கும் வேலை கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த அளவிற்கு நம்மிடம் ஏராளமான திட்டங்கள் இருக்கின்றன. அந்தத் திட்டங்களைச் செயற்படுத்தும் வாய்ப்புக்களும் இருக்கின்றன. அப்படி வேலையில்லாது இருப்பவர்களுக்கு அவர்கள் தினக்கூலிகளாகக் கூட இல்லை, அவர்களுக்கு வேலை உறுதிப்படுத்துகிறோம், உத்தரவாதம் அளிக்கிறோம் என்று சொன்னபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் வேலை இல்லாத நாளில் கொடுக்கப்படும் 1 ரூபாய், 4 போண்டாக்களுக்குக் கூட போதாது

என்று சுவையோடு சொன்னார். நான் இந்த சபைக்கும் தெரிவிக்க விரும்புகிறேன், ஒன்றும் இல்லாமல் வெறும் வாயை மென்றுகொண்டிருப்பனுக்கு, 4 போண்டா கொடுத்தால் அது தப்பா? ஒரு திட்டத்தை மறுதளிப்பதற்கு முன்பு அதை ஆய்வு செய்ய வேண்டும் என்று நான் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று இந்த அரசு முடிவெடுக்கும்போது, அந்தத் திட்டத்தின் நல்ல அம்சங்களை ஆய்வு செய்ய வேண்டும். மிகவும் அருமையான முறையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் சொன்னார்கள். "கடற்கரை ஓரத்திலே நின்றுகொண்டு நீச்சல் அடிக்க வேண்டும் என்று விரும்பினால், கடலிலே குதிக்காமல் இருந்தால், நீச்சல் கற்றுக்கொள்ள முடியாது, கடலிலே குதித்து நீச்சல் கற்றுக்கொள்வதைப்போலத்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் வெற்றியடையும் என்ற நம்பிக்கை இருக்கிறது" என்று சொன்னார்கள். நான் சொல்லிக்கொள்கிறேன், மத்திய அரசில் இப்போது நல்ல மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களும் இப்போது இதை உணர்கிறார்கள். உணர்ந்த நிலையில் செயல்படுகிறார்கள். அதை நான் என்னுடைய நிதிநிலை அறிக்கையிலேயேகூட குறிப்பிட்டேன். இந்த நிலை மேலும் வளர்ந்து, மத்திய அரசு தாங்கள் செலவழிக்கின்ற இனங்களை மேலும் சுருக்கிக்கொண்டு, அந்தப் பணத்தை மேலும் மாநில அரசுகளுக்குப் பகிர்ந்தளிக்க முன்வருகின்ற மனப்பக்குவத்தை அவர்கள் பெறுவார்கள் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் வேலை கொடுக்கும் திட்டத்தைப் பற்றி விரிவாகச் சொன்னார்கள். அந்தத் திட்டத்தை நாங்கள் மனதார வரவேற்கிறோம். இந்த நிதிநிலை அறிக்கையில் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதற்கு இந்த ஆண்டு எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். எத்தனை பேருக்கு வேலை கொடுக்க இருக்கிறார்கள்? எந்தெந்த மாவட்டங்களில் இந்த வேலையை முதல் கட்டமாகத் துவக்க இருக்கிறார்கள் என்று சொன்னால் அந்தந்த மாவட்டங்களில் இருப்பவர்கள் நிதியமைச்சர் அவர்களுடைய வாக்குறுதியை நம்பி மகிழ்ச்சியடைவார்கள், என்ற வகையிலே அந்தப் புள்ளிவிவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் கேட்பார்கள் என்று எனக்குத் தெரியும். ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறோம். 'டோக்கனாக', டிமாண்ட்-லே அது இடம் பெற்றிருக்கிறது. இப்போது கலெக்டர்களுக்கெல்லாம் அறிவிப்புகள் சென்றிருக்கின்றன. அவர்கள், இந்தத் திட்டங்களைப் பற்றிய processing லே இருக்கிறார்கள். அது தொடர்ந்து நடக்கும். உடனடியாக இந்தத் திட்டம் எத்தனை மாவட்டங்களிலே செயல்படுத்தப்படும், எத்தனை பேர்களுக்குக் கொடுப்பார்கள், அதனாலே எவ்வளவு செலவாகும் என்றெல்லாம் கேட்டார்கள். அந்தக் கணக்குகளெல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன. அவர் மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்பதாகச் சொன்னார்கள். பல நேரங்களில் அவர் தெரிந்தே நல்ல திட்டங்களை ஆதரிக்கிறார் என்றுதான் நான் எடுத்துக் கொள்கிறேன். இப்போதே கூட, தெரிந்து தான் அவர் இந்தத் திட்டத்தை ஆதரிக்கிறார். இன்னொரு காரணம், அவருக்குச் சில சந்தேகங்கள் உண்டு. நான் மறுக்கவில்லை. அந்தச் சந்தேகங்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள்கூட எழுப்பினார்கள். அந்தச் சந்தேகங்களை உறுதிப் படுத்துகின்ற அளவுக்கு தினமணி பத்திரிகைகூட தலையங்கம் தீட்டியது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது, துர்விநியோகம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று, இந்தத் திட்டத்தைப் பாராட்டிவிட்டு, பாசத்தோடு கேட்டுக் கொண்டார். திட்டம் கெட்டுப் போகக் கூடாது. அப்படிப்பட்ட பண்பு உள்ள ஒருவர்தான் திரு. வீராசாமி. அவர் இந்தத் திட்டத்தைப் பாராட்டிவிட்டுச் சொல்கிறார், "நீங்கள் இந்தத் திட்டம் கெட்டுப்போகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும், தவறு ஏற்படக்கூடாது" என்று. நான் சொல்லிக் கொள்கிறேன், இங்கே காண்ட்ராக்டர்களுக்கு வேலையில்லை. இந்தத் திட்டத்தை அரசே ஏற்றுச் செயல்படுத்தும். இதை மனதில் வைத்துக் கொண்டுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள், 'இடையிலே பலஹீனங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்' என்று. இந்த ஆலோசனைகளை எல்லாம் இந்த அரசு நிச்சயம் ஏற்றுக்கொண்டு பணியாற்றும். நான் இவற்றிலெல்லாம் நம்பிக்கை உள்ளவன். அதுமட்டுமல்ல, மகிழ்ச்சியாகச் சொல்கிறேன், நீங்கள் கோபித்துக்கொள்ள மாட்டீர்கள் என்ற நம்பிக்கையில் சொல்கிறேன், I am an optimist by birth ஒரு திட்டத்தைக் கொண்டு வரும்போது, அந்தத் திட்டத்தை நாலாவிதக் கோணங்களிலும் பார்த்துவிட்டுத்தான் கொண்டு வருகிறோமே தவிர, வெறும் வசனத்தாலே அந்தத் திட்டம் நிலைக்கும் என்ற அளவிலே கொண்டுவரவில்லை. சில திட்டங்களைக் கொண்டு வரும்போது ஆரம்பத்திலே சில தவறுகள் ஏற்படக்கூடும். அந்தக் காரணங்களினாலே அந்தத் திட்டமே சரியில்லை என்று வாதாடக் கூடாது.

நேற்றுக்கூட கலைஞர் அவர்கள் பேரவையிலே பேசும்போது, காட்பாடியிலே இருக்கிற நியாய விலைக் கடையின் பட்டியலையும், தனியார் கடையின் பட்டியலையும் வைத்து, உளுந்து, பருப்பு, மணிலாக்கொட்டை, மிளகு, புண்ணாக்கு போன்ற பொருள்கள் தனியார் கடையிலே கிடைப்பதைவிட அநியாயமான விலைக்கு நியாய விலைக் கடையிலே கிடைக்கின்றன என்று சொன்னதற்குப் பதில் சொன்னேன். காட்பாடியும், கண்ணமங்கலமும் அல்ல தமிழ்நாடு. தமிழ் நாட்டில் எத்தனை ரெவின்யூ வில்லேஜ்கள் இருக்கின்றன, எத்தனை ஒன்றியங்கள் இருக்கின்றன ? எனக்கும் பட்டியல் கிடைக்காதா ? நான் எவ்வளவு பட்டியல்களை இங்கே அளிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள் ? நியாய விலைக் கடைகளில் ஒழுங்காக சாமான்கள் கிடைக்கின்றன. ஒட்டுமொத்தமாகப் பார்க்க வேண்டுமே தவிர, ஒரு குறிப்பிட்ட கடையிலே இருக்கின்ற பட்டியலை வைத்துக்கொண்டு மற்றவர்களைப் பதம்பார்ப்பது ஜனநாயகம் ஆகாது. இந்தத் திட்டத்தை எல்லோரும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஏற்றுக் கொள்கிற நேரத்தில், இந்தத் திட்டத்தை நீங்கள் கொஞ்சம் பக்குவமாகச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்கள். நான் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன், நீங்கள் சொல்வதுபோல, நீங்கள் விரும்புவதுபோல, உன்னிப்பாக், கவனமாக, விழிப்புணர்ச்சியோடு இந்தக் காரியத்தில் அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பெரிய பிரச்சினையாகப் பேசியவர்களெல்லாம், "தந்த மாளிகையைப்" பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி தமிழரசி அவர்கள்கூட பேசியதாக ஞாபகம். தந்த மாளிகையிலே இருந்து கொண்டு இந்தப் பிரச்சினைகளையெல்லாம் பார்க்கக்கூடாது என்று கேட்டுக் கொண்ட பாவத்திற்காக நான் அவர்களாலே கண்டிக்கப்பட்டேன். அதற்கான விளக்கங்களைப் பலர் இங்கே சொன்னதாகக் கேள்விப்பட்டேன். நான் சொன்ன Ivory tower approach உங்களுக்குத் தெரியும் அதிகாரிகளானாலும் சரி வல்லுநர்களானாலும் சரி, அவர்கள் எங்கோ ஒரு உயர்ந்த இடத்தில் உட்கார்ந்துகொண்டு, வயல் வெளிகளுக்கு, வரப்பு, வாய்க்கால், குளம், குட்டை போன்ற இடங்களுக்குத் திட்டங்களைத் தீட்டுகின்றபோது அந்தத் திட்டங்கள் செயல் உருவம் பெற முடியாது.

(பிற்பகல் 6-10)

அகவே நான் சொன்னது Ivory tower approach ஐ விட்டுவிட்டு down-to-the earth approach க்கு வாருங்கள். குடிசைகளைப் பாருங்கள். அங்கே விளக்கு இருக்கிறதா என்று காணுங்கள். நீங்கள் பன்னீர் சிந்து நின்ற மாட மாளிகையில் உட்கார்ந்து திட்டங்களைத்



தீட்டுவதன் மூலம் இந்த நாட்டு மக்களின் வாட்டங்களைப் போக்க முடியாது. இதை பகிரங்கமாக ஏற்றுக்கொண்டு நான் பேசினேன். இதை யார் பேசுவார்கள் ? எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் பேசுகிற, பேசக்கூடிய, பேச வேண்டும் என்று எல்லோரும் எதிர் பார்க்கிற அந்தக் கருத்தை ஆட்சிக் கட்சியின் சார்பாக எழுதியிருக்கிறேன் என்றால், எந்த உணர்வோடு எழுதியிருப்பேன் என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன். "தந்த மாளிகையில் இவர் மட்டும் இருக்கலாமா ?" என்று திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கேட்டதாக அறிந்தேன். நான் ஏற்கெனவே பேரவையில் சொன்னது போல், தந்த மாளிகை என்றால், மக்கள் தந்த மாளிகையில் உட்கார்ந்து கொண்டுதான் நான் நிதிநிலை அறிக்கையைத் தயாரித்தேன், மற்றல்ல என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களைப் பற்றிச் சொல்லும் போது இன்னொன்றும் என் கவனத்திற்கு வருகிறது. அவரும் திசைத் திருப்பப் பார்க்கிறார். அவர் வாடிக்கையாக அப்படிச் செய்வதில்லை. ஏதோ நடந்திருக்கிறது. பே கமிஷன் பற்றிச் சொல்லும்போது அவர் பேசிய பேச்சின் குறிப்பு எனக்கு வந்திருக்கிறது. "நிதியமைச்சர் அவர்கள் கூட அனாமலி கமிஷனுக்கு ஒப்புக்கொண்டார். முதலமைச்சர்தான் அதன் குறுக்கே நிற்கிறார். முதலமைச்சர் மந்திரிகளைக் கேட்டு நடக்கக் கூடாதா ?" என்று எங்களுக்கும், முதலமைச்சருக்கும் ஏகப்பட்ட இடைவெளி இருப்பது போலவும் பேசியிருக்கிறார். அப்படிச் சொல்லுவதன் மூலம் உண்மையிலேயே எங்களிடையே பிளவை உருவாக்க அவர் ஆசைப்பட்டார் என்று நான் சொல்லவில்லை. ஏனென்றால் அவர் நல்லவர் ; அப்படிப்பட்ட எண்ணம் இருக்காது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** "நிதியமைச்சர் அவர்கள் ஏற்கெனவே நிவர்த்திக் குழு அமைப்பதாக ஒப்புக்கொண்டார்" என்று அறிவிப்பு வந்து அது வானொலியிலும் பறை சாற்றப்பட்டது ; பத்திரிகைகளிலும் செய்தி வந்திருக்கின்றது. இதை ஏற்றுக் கொண்டாவது செய்யக் கூடாதா என்று தான் கேட்டேன். அவர்களுக்கிடையே பிளவு இருப்பதாக நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** நானே, நீங்கள் அப்படிச் சொல்லவில்லை என்று சொன்ன பிறகு, விளக்கம் சொல்லத் தேவையில்லை. நான் சொன்னது, பே கமிஷன் வெளியான இரண்டாவது நாள் என்பதாக நினைவு. டி. வி. சென்டரிலிருந்து நண்பர்கள் வீட்டுக்கு வந்து,

" உங்களுடைய கருத்து என்ன ? " என்று கேட்டபோது, ' பலருக்குக் குறை இருக்கிறது என்று எனக்குத் தெரிகிறது. அந்தக் குறைகளை நேரிலே நான் தெரிந்துகொள்ளத் தயாராக இருக்கிறேன் " என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், " கூடிப் பேசுவோம், கதவுகள் திறந்திருக்கின்றன " என்று பேசியதாக எனக்கு நினைவு. " அனாமலி கமிஷன் அமைப்பேன் " என்று சொல்லவில்லை. மேலும் நிலைமையை விளக்கிவிடுகிறேன். அனாமலி

(திரு. மீனாட்சிசுந்தரம் எழுந்தார்)

கமிஷன் இல்லை, அப்படி அமைத்தால் அது இன்னுமொரு பே கமிஷனாக முடியும். அதற்கு முற்றிலும் மாறாக திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் என்னைப் பார்த்துப் பேசலாம். நிவர்த்திக் குழு அமைப்பேன் என்று சொல்லவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நிவர்த்திக் குழு என்ற சொல்லே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய திருவாயில் இருந்துதான் வந்தது என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** ' நிவர்த்தி ' என்ற வார்த்தை எனக்கு வராது. திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும், முரண்பாட்டுக் குழு என்று பேசியிருக்கக்கூடும். நிவர்த்திக் குழு என்று நான் பேசியிருக்கவே மாட்டேன். ஏனென்றால் அப்படிப்பட்ட சொல் எனக்கு வராது. திரு. மீனாட்சிசுந்தரத்திற்கு எப்படி வந்தது என்று தெரியவில்லை. அப்படிச் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன். எப்போதும் பாதிக்கப்பட்டவர்களோடு கலந்து பேச வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். தொழிலாளர் சமுதாயத்தைச் சார்ந்த யார் வேண்டுமானாலும் பேச வரலாம், எனது கதவுகள் திறந்தே இருக்கும், முதலமைச்சருடைய கதவுகள் திறந்தே இருக்கும், அமைச்சர் பெருமக்களு டைய கதவுகள் திறந்தே இருக்கும் என்பதைத் திரும்பத் திரும்ப உங்கள் அனைவருக்கும் வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நீங்கள் நம்பிக்கையோடு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்லு கிறேன். நான் சொல்லாததைச் சொன்னேன் என்று சொல்லி, ஆசிரியர்கள் மத்தியில் எனக்கு ஒரு கெட்ட பெயர் ஏற்படுத்தாதீர்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆசிரியர் பெருமக்களையெல்லாம் நடமாடும் தெய்வங் களாகக் கருதுபவன் நான். ஆசிரியர் பெருமக்களாகிய உங்களுக்கு தெய்வ அம்சம் இருப்பதைப் போல நாங்கள் உணர்கிறோம். ஆசிரியர்களையெல்லாப்



பகைத்துக்கொண்டு இந்த அரசு வாழும் என்று யாரும் கருதத் தேவை யில்லை. அந்த அளவுக்கு நாங்கள் இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்னொன்றையும் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். போராடிப் போராடிப் பெற வேண்டுமென்று சொன்னார்கள். அது தேவையில்லை என்பதற்கு ஒரு உதாரணத்தைச சொல்லுகிறேன். அண்மையிலே டில்லி செல்லுவதற்கு முன்னால் பிரதம அமைச்சருக்கு ஒரு கடிதம் தீட்டிவிட்டுப் போனேன். " சேலத்திலே இரும்பாலை உருவாகிக் கொண்டிருப்பது உங்களுக்கும் தெரியும். சேலம் ஒரு பெரிய காம்ப்ளக்ஸாக வளர்ந்து வருவது உங்களுக்குத் தெரியும். அப்படிப்பட்ட சேலத்திற்கு ஏர்போர்ட் தேவை. தூத்துக்குடிக்கு ஒரு ஏர்போர்ட் தேவை. " என்று எழுதினேன். அதற்குப் பாரதப் பிரதமர் பதில் தீட்டியபோது, அதிலே எழுதியிருந்தார், " உங்களுடைய கடிதத்தைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கௌசிக் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறேன், You will be getting Shortly a suitable reply. என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் முதலமைச்சரிடம் அந்தக் கடிதத்தைக் காட்டி, " சூட்டபிள் ரிப்ளை கிடைக்கும் " 'என்று எழுதியிருக்கிறார், ஆகவே, " ஏதாவது கிடைக்குமென்று நம்புகிறேன் " என்று சொன்னபோது, நம்பிக்கையூட்டும் கடிதமாகத்தான் இருக்கிறது என்று அவரும் சொன்னார். சொன்ன ஒரு வாரத்திற்குள்ளாக, திரு. கௌசிக் அவர்கள் தன்னுடைய கடிதத்தில், சேலத்தில் ஏர்போர்ட் அமைப்பது குறித்து அவர்கள் எடுத்துள்ள முடிவு நமக்குச் சாதகமான முடிவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, தூத்துக்குடியில் ஏர்போர்ட் அமைப்பதைப் பற்றித் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக் கிறோம் என்று நம்பிக்கையூட்டக்கூடிய கடிதத்தை எழுதியிருக்கிறார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்ளுகிறேன். டில்லிக்குச் செல்ல சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம், அங்கே பார்க்க வேண்டியவர் களைப் பார்த்து, அவர்களோடு பேச வேண்டியவைகளைப் பேசி, இந்த மாநிலத்திற்குப் பெற வேண்டியவைகளில் எவ்வளவு பெற முடியுமோ அவை களைப் பெறுகிற முயற்சியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு அறிகுறியாக ஒன்றைச் சொல்லுகிறேன். இரயில்வே அமைச்சர் மது தண்டவதே அவர்களைப் பார்த்து, " மாஸ் டிரான்ஸ்போர்ட் சிஸ்டம் நீண்ட காலமாக கிடப்பிலே இருக்கிறது. கல்கத்தாவில் உள்ள பாதாள இரயிலைப் போல் இல்லை இது. அதற்குக் கிட்டத்தட்ட ரூ. 600 கோடிக்கு மேல்

ஆகும். அதற்கு மேலும் 200 கோடி ரூபாய் ஆனால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் எங்களைப் பொறுத்த வரையில், இத்திட்டத்திற்கு ரூபாய் 120 கோடிக்குக் கீழேதான் நிற்கும். ஏறத்தாழ 35 இலட்சத்திற்கு மேல் ஜனத்தொகையை இந்த சிட்டி பெருக்கியாயிற்று. ஜனத்தொகையைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணம் பலருக்கு வந்ததாகத் தெரியவில்லை. அப்படிக் குறைத்தாலும் பிறகு கூடும். ஆகவே நகரத்தில் எந்த அளவுக்கு நெரிசல் வளரும் என்பதை நாங்கள் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே நெரிசலிலிருந்து மக்களைக் காப்பாற்ற ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று கேட்டபோது, திரு. மது தண்டவதே அவர்கள், மகிழ்ச்சியூட்டக் கூடிய வகையில், "நிச்சயமாகச் செய்வேன் ; படிப்படியாகச் செய்கிறேன். திருவனந்தபுரம்—கன்னியாகுமரி இரயில் பாதையில் முதற் கட்டம் முடியப் போகிறது. அடுத்த மாதம் 14 ஆம் தேதி திரு. மொரார்ஜி அவர்கள் இங்கே வருகிறார் அதைத் திறந்து வைப்பதற்காக. கன்னியாகுமரி மாவட்டத்தில் 15 ஆம் தேதி வருகிறார். அந்த இரயில் பாதையில் முதற் கட்டம் முடிந்ததற்குப் பிறகு, அங்கிருந்து திருநெல்வேலிக்கு அடுத்த கட்டமாக ஆரம்பிக்கப் போகிறோம். ஆகவே அடுத்த பட்ஜெட்டில் நிச்சயமாகச் சேர்ப்பேன்" என்ற அளவுக்கு நம்பிக்கையோடு "உங்களுக்கு மட்டும், இரகசியமாகச் சொல்லுகிறேன் ; யாரிடமும் சொல்லாதீர்கள்." என்று அவர் சொல்லி அனுப்பினார் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். (சிரிப்பு) இதைப் பத்திரிகைக்காரர்கள் பத்திரிகையில் போட்டால், எனக்கு ஆட்சேபணையில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். (சிரிப்பு) ஏனென்றால் அந்த அளவுக்கு இரகசியமாக அவர்கள் போடுவார்கள் என்பது எனக்குத் தெரியும். (சிரிப்பு). இப்படி ஒவ்வொரு காரியத்திலும் நாம் எதையெதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறோமோ அதையெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நான் கலைஞரோடு பேசிக் கொண்டிருந்தபோது, தூத்துக்குடி விமான நிலையத்திற்கான கடிதத்தைக் காட்டினேன். அப்போது அவர், "நான் கூட எழுதியிருந்தேன் ; வாகைக் குளம் பகுதியைத் தேர்ந்தெடுத்தேன்" என்று என்னிடம் சொன்னார். அப்போது நான் "நீங்கள் விட்டுவிட்டுப் போனீர்களே, அதைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறோம்" என்று சொன்னபோது அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள் என்பதை திரு. வீராசாமி அவர்களுக்கும், மற்ற உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர்கள் எல்லாம் செய்த திட்டங்கள் தீய்ந்து போன திட்டங்கள் என்றோ,



தீய திட்டங்கள் என்றோ, தீர்ந்து போன திட்டங்கள் என்றோ கருதுகிற மலிவான மனப்பான்மை எங்களைப் போன்றவர்களுக்கு இல்லை என்பதை நீங்கள் எடுத்துக்காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லையா என்று கேட்கக் கூடும். போட்டிருக்கிற திட்டங்களில் சில திட்டங்கள் நிறைவேற்றப்படாமலே தெருவிலே கிடக்கின்றன. சில திட்டங்களைத் தொட்டாலே ஷாக்கு அடிக்கும் போல இருக்கிறது. ஆகவே நெருங்கவே பயமாக இருக்கிறது.

(பிற்பகல் 6-20)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** எலக்ட்டிரிசிடியை விட அதிகமாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** அதைவிடக் கொஞ்சம் ஷாக் அதிகமாகவே இருக்கிறது. அதிலே எல்லாம் எங்களைச் சந்தேகிக்கக்கூடாது என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். பொதுவாகவே இந்தப் பிரச்சினையிலே பேசிய நம் மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் சில புள்ளிவிவரங்களையும் எடுத்துச் சொன்னார்கள். தி.மு.க வினர் ஆட்சியில் இருந்தபோது இருந்த புள்ளிவிவரங்களையும் எடுத்துச் சொன்னார்கள். கலைஞர் அவர்கள் எடுத்துச் சொல்லிக்கொடுத்து அவர்கள் நமக்கு இங்கே எடுத்துச் சொல்கின்றார்கள். அவர் அப்படிப் பேசுவது தப்பல்ல. இந்த அவைக்கு அவர்கள் எடுத்துத் தெரிவிக்கவேண்டிய கருத்து. அதற்கு நான் விளக்கம் சொல்லியாக வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். நீங்கள் நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறீர்கள். எத்தனையோ நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். உங்களிடம் எனக்கு எந்தவிதமான வருத்தமும் இல்லை. தமிழ்ச் சமுதாயம் வாழ்வதற்கு நல்ல திட்டங்களைத் தீட்டிச் செயல்பட வேண்டும் என்று விரும்புகின்றபோது, நான் அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்களை விட்டு விட்டா காரியங்களைச் செய்வது ?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நாங்கள் மனிதாபிமானம் உள்ளவர்கள்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** நீங்கள் மனிதாபிமானமற்றவர் என்று சொல்லவில்லை. தம்பி தங்கப்பாண்டியன் அவர்கள் கூட உபயோகமானவர்தான்.

வீட்டுவசதி பற்றி எனது அருமை நண்பர் திரு. வீராசாமி அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். 1975-76-ல் வீட்டுவசதிக்கு ஒதுக்கப்பட்ட தொகைக் கணக்கு என்னிடம் இருக்கிறது. 1975-76-ல் செலவான தொகை ரூ. 6.08 கோடி என்று இருக்கிறது. அப்படிக் கணக்கிடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். 1979-80-ல் அவர் எதைப் பார்த்துச் சொன்னார் என்பது தெரியவில்லை. ரூ. 3.86 கோடி என்று இருப்பதைப் பார்த்துவிட்டு, இது குறைவாகாதா என்று கேட்டிருக்கிறார். நான் அதற்கு விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1979-80 ஆம் ஆண்டு வீட்டு வசதிக்காகச் செலவிடும் தொகை ரூ. 8.73 கோடி. அந்த அளவுக்கு ஒதுக்கியிருக்கிறோம். அதிலேயும் மீனவர்களுடைய வீட்டுவசதிக்காக 1975-76-ல் ஒரு கோடி ரூபாய் இந்தத் தலைப்பின்கீழ் கொடுக்கப்பட்டது. அதையும் சேர்த்தால் வீட்டு வசதிக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 9.73 கோடி ஆகும். இதற்கு 4.80 கோடி ரூபாய் நகர்ப்புற வளர்ச்சி நிதியிலிருந்தும் வருகிறது. அதையும் சேர்த்தால், இன்னும் அதிகமாகும். மேற்போக்காகப் பார்ப்பதால், தொகை குறைவாகத் தெரிகிறதே தவிர, உண்மையில் அதிகமாகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்களுக்கு மெத்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, சாலை வசதி, பாசன வசதி பற்றிச் சொன்னார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** சிறு நீர்ப்பாசனம் பற்றிச் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** சிறிய நீர்ப்பாசனம் என்று சொல்கிறார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** சிறுநீர்ப் பாசனம் பற்றிச் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** அங்கத்தினர் அவர்கள் அவர்களுடைய தேவையைச் சொல்கின்றார்கள் என்று நினைக்கிறேன். அவர் தாராளமாக வெளியே சென்றுவிட்டு வரலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

சிறிய நீர்ப்பாசன வசதி பற்றிச் சொன்னார்கள். 1975-76-ல் ரூ. 19 கோடி ஒதுக்கப்பட்டது என்றும் இப்போது 1979-80-ல் ரூ 18 கோடி என்று இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நீர்ப்பாசனம், வடிகால் நீர் கட்டுப்பாடு என்ற தலைப்பின் கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பட்ட தொகை போதாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இத்தலைப்பின்கீழ்





மேற்கொள்ளப்படும் செலவு பாசனத் திட்டத்திற்கு, அதன் பராமரிப்புக்காகச் செலவிடப்படும் தொகைதான். இந்தத் தொகையும் ஆண்டுக்காண்டு மாறுபடுகிறது. மூலதனச் செலவாக 1975-76-ல் ரூ. 17.67 கோடி இருக்கிறது. 1979-80-ல் அந்தத் தொகை ரூ.29,42. கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது புதிய திட்டங்கள் மேற்கொள்வதில் வருகிறது. அரசு எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தொகைகள் எல்லாம் குறைவான தொகையாக, மேற்போக்காகப் பார்க்கின்றபோது அப்படித்தான் தெரியும். அதைக் கொஞ்சம் ஊடுருவிப் பார்க்க வேண்டும் என்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த பட்ஜெட்டைப் பொறுத்த வரையில், நல்ல எண்ணமிருப்பவர்கள் அத்தனை பேரும் இந்த அரசுக்கு நல்ல ஒத்துழைப்பைத் தருவார்கள் என்று மனதார நம்புகிறேன். மீண்டும் மீண்டும் நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. நான் விடை பெறுவதற்கு முன்பு அனைத்து உறுப்பினர்களிடமும் நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்வது எல்லாம், இந்த அரசு தவறு செய்யுமானால், கண்டியுங்கள். இந்த அரசுக்கு நீங்கள் ஒதுக்கித் தருகின்ற பணத்தில் ஒரு காலணா கூட அல்ல ஒரு நயா பைசாக்கூட விரயம் ஆகாமல் பாதுகாக்கின்றதற்கு, இந்த அரசுக்கு ஒரு உற்ற துணையாக உற்றுழி நண்பர்களாக நீங்களும் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் நல்ல திட்டங்களையெல்லாம் தீட்டுகின்றபோது, மாண்புமிகு அங்கத்தினர் திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் அவர்கள் அருமையான கவிதைகளை எழுத வேண்டும் என்று நான் அவரைக் கேட்டுக்கொள்கிறேன். தவறு செய்யும்போது, கடுமையாகத் தாக்கி எழுதுங்கள். சாடி எழுதினாலும், திட்டி எழுதினாலும் சரி, அதிலே அழகு தமிழ் இருக்கும் என்ற மகிழ்ச்சியை நான் அடைவேன். உங்கள் கவிதையாற்றலை நீங்கள் அதற்காகப் பயன்படுத்த வேண்டும்.

ஊர் ஊராகச் சுற்றி மேடைகளில் பேசுகின்ற அங்கத்தினர் தாய்த்தலத்தின் பிரதிநிதி திருமதி தமிழரசி, தங்கை தமிழரசிக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். பட்ஜெட் பற்றிய விவாதத்தை நினைத்துக்கொண்டே போவார். என் மனச்சாட்சிக்கு விரோதமாக திட்டுகிறோம் என்றெல்லாம்

கருதிக் கொண்டு கூட போவார். ஆனால் அவர் பொது மேடைகளிலே பேசும்போது, சிலவற்றை நிச்சயமாகப் பாராட்டுவார், சிலவற்றைப் பாராட்டாமல் விட்டுவிடுவார். அதைப்பற்றிக் கவலையில்லை.

இங்கே மாண்புமிகு அங்கத்தினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களும் சில கருத்துக்களைச் சொன்னார்கள். நமது மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் நல்ல பல அருமையான கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்கள் பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னார்கள். பெர் கேபிடா இன்கம் எந்த அளவுக்கு, நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில், கடைகோடிக்கு வந்திருக்கிறது என்பதைப்பற்றி விளக்கிக் கூறினார்கள். நான் அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் ஓவர்ஆல் இந்தியன் எகானமி ரெவ்யூவை மனதிலே வைத்துக்கொண்டு பேசியிருக்கிறீர்கள்.

இங்கு மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள் இல்லை என்று நினைக்கிறேன். அவர்கள் பேசுகின்றபோது, இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் கருத்தில் கொண்டு சில திட்டங்களை நாம் நிறைவேற்ற வேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'பைனான்சியல் ரெஸ்ட்ரெயிண்ட்' பற்றிக் கூறினார்கள். நாம் அந்த வட்டத்தினுள்ளே அல்லது வளையத்தினுள்ளே தான் இருக்கிறோம். அதற்கு எப்படிப் பரிகாரம் காண்பது என்று கேட்டார்கள். அங்கே சுவற்றுக்குள் அடைபட்ட பூனையாகத்தான் இருக்கிறோம் என்றார்கள். 'பைனான்சியல் ரெஸ்ட்ரெய்ண்ட்' இருந்துகொண்டிருக்கிறது. அதற்காக முட்டுங்கள், மோதுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். முட்டி மோதினால் பூனைதான் சாகுமே தவிர, அங்கே இருக்கின்ற சுவர் சுவராகத்தான் இருக்கும். ஆகவே முட்டி மோதினால் பலனில்லை. கதவு எப்போது திறக்கிறது என்று பார்த்துத் தான் நாம் வெளியே வர வேண்டும். நாம் வேண்டியவைகளைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அது நியாயமான காரியம் தான். நடக்கக்கூடிய ஒன்றுதான். ஆகவே அதை இந்த அரசு செய்யும் என்ற உறுதியை, உணர்வை, இந்த நேரத்திலே வழங்கி, நீங்கள் அனைவரும் அருள்கூர்ந்து இவ்வளவு அமைதியைக் காத்ததற்கும் என் நன்றியைக் கூறி, இந்த நிதிநிலை அறிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.



**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கோருகிறேன். நான் பேசும்போது, இந்த அரசுப் பள்ளிகளிலே ஆசிரியப் பெருமக்களுக்குச் சைக்கிள் வாங்குவதற்கு அடவான்ஸ் கொடுப்பது போல தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் அட்வான்ஸ் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடைய பிள்ளைகளைக் கலலூரியில் படிக்க வைக்க ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும். இன்னும் பல சலுகைகளை, அரசுத் துறை ஆசிரியர்களுக்குக் கொடுப்பதுபோல கொடுக்க வேண்டும். பல சலுகைகளை அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு அறிவித்திருக்கிறார்கள். அந்தச் சலுகைகளை எல்லாம் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டும். இந்த பட்ஜெட்டில் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும், பஞ்சாயத்துப் பள்ளி ஆசிரியர்களுக்கும் உண்டா என்று தெளிவுபடுத்துகின்ற வகையில், அந்த விஷயங்கள் பரிசீலிக்கப்படுகின்றனவா ? இதுபற்றி உறுதியளிக்கப்படுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** தலைவர் அவர்களே, தனியார் பள்ளியைப்பற்றி மாண்புமிகு அங்கத்தினர் திரு. முத்துசாமி அவர்கள் கேட்கிறார்கள். வேறு யாரும் இங்கே கேட்டதாக எனக்கு நினைவுக்கு வரவில்லை. தனியார் பள்ளியிலே இருப்பவர்களுக்குப் போதுமான வசதி செய்துகொடுக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். அரசாங்கப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் டிரான்ஸ்பர்களுக்கு ஆளாகின்றார்கள். தனியார் பள்ளியில் இருக்கும் ஆசிரியர்களுக்கு அந்த நிலைமை இல்லை. அவர்கள் நிரந்தரமாக ஒரு இடத்தில் பணியாற்றுகின்றார்கள். நிலையாக அங்கே இருந்துகொண்டிருப்பார்கள். அவர்களுக்குச் சிக்கல்கள் இராது. இந்தமாதிரி சலுகைகள் எல்லாம் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு உண்டா என்று தனியார் பள்ளி ஆசிரியர்களின் சங்கத்திற்குத் தலைவராக இருக்கும் திரு. முத்துசாமி அவர்கள் கேட்பார்களானால், நான் சொல்வது, நிதி ஆதாரம் நிறைய இருக்கும்போது, எனக்குக் கவலையற்ற தன்மை நிதிநிலையில வரும்போது, அங்கத்தினர் அவர்கள் கேட்கும் கோரிக்கைகளுக்குச் செலவழிக்க முடியுமளவுக்கு நிதி ஆதாரம் இருக்கிறது என்ற நிலை வரும்போது, நிதி நிலைமையில் நாம் நன்றாக, வளமாக இருக்கிறோம் என்ற நிலை வரும்போது, அவர்களுக்கு உறுதி சொல்லலாம். போதுமான நிதி ஆதாரம் இருக்கிறது, மத்திய சர்க்காரும் தந்துகொண்டே இருக்கிறது என்றால், அப்போது கேட்டால், நிச்சயம் தருவோம் என்ற உறுதியை அங்கத்தினர் திரு. முத்துசாமி அவர்களுக்கும், அந்த உறுதியை அவர்கள் ஆசிரியர்களுக்கும் வழங்கலாம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : பஞ்சாயத்து ஆசிரியர்களுக்கும் இந்தச் சலுகைகள் இல்லாமல் இருக்கின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-30)

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, நிதி அமைச்சரவர்கள் சேலத்திற்கு விமான நிலையம் வர இருக்கிறது என்ற நல்ல அறிவிப்பைத் தந்தார்கள். அதற்காக சேலம் மாவட்ட மக்களின் சார்பாக நிதியமைச்சரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில், இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். சேலத்தில் இரும்பாலை வர வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்களும், முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களும் டெல்லியில் நடந்த தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு, கேட்டுக்கொண்டதன் பேரில் அந்தத் திட்டத்தை அங்கே தொடங்கினார்கள். நிதியமைச்சரவர்கள் விமான நிலையத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இரும்பாலைக்கு அவர்கள் ஒதுக்கியுள்ள தொகை மிகக் குறைவாக இருக்கிறது. அது நிர்வாகச் செலவிற்கே போதுமானதாக இல்லை. எனவே அந்தத் திட்டம் வெகு விரைவில் நிறைவேற முடியாத நிலையில் இருக்கிறது. ஆகவே நிதியமைச்சரவர்கள் அதைக் கவனத்தில் கொண்டு, மத்திய அரசோடு வாதிட்டு, அதிகமான நிதியைப் பெற்று, திட்டமிட்டபடி அந்தத் திட்டம் நிறைவேற முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் நன்றி தெரிவித்ததற்கும், பாராட்டு தெரிவித்ததற்கும் நன்றி. அத்தோடு நிற்க மாட்டார் என்று அப்போதே தெரியும். அதற்குப் பிறகு, அறிஞர் அண்ணா அவர்களும் கலைஞர் அவர்களும் சேலத்திற்கு இரும்பாலை கொண்டு வந்தார்களென்று சொன்னார்கள். திரு. வீரபாண்டி ஆறுமுகத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சேலத்திற்கு இரும்பாலையைக் கொண்டுவருகிற போது, அதே இயக்கத்தில் இருந்த நான், பாராளுமன்றத்தில் அதற்காக வாதாடியவன் என்பதை மறந்துவிடக் கூடாது. மேற்கொண்டு அதிக நிதி ஒதுக்கீடுக்காக திரு. பிஜு பட்நாயக் அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



6. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு முன் நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/1979)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இன்றைக்கு கடைசி நாள். இன்னும் மூன்று அரசின் சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. இந்தச் சட்ட முன்வடிவுகளின்மீது சாதாரணமாக உறுப்பினர்கள் யாரும் பேசுவதில்லை. என்றாலும்கூட, சில உறுப்பினர்கள் பேசுவதற்கு விரும்புகிறார்கள். எனவே மிகக் குறைந்த காலத்தில், அதாவது 5 நிமிடங்களுக்குள் பேசி முடிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன். மேலவையில் சம்பிரதாயமாக, இப்படிப்பட்ட சட்டமுன்வடிவுகளின்மீது பேசுவதில்லை என்று அநேகமாக வைத்திருக்கிறோம். ஆகவே பேசுகிற மாண்புமிகு உறுப்பினர்கள் குறைந்த அளவில் பேசி, 7 மணிக்குள் அவை முடிய ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979ஆம் ஆண்டு முன் நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு முன் நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நிதியமைச்சரவர்களை நான் நெருக்கடிக்கு ஆளாக்கமாட்டேன் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும் இரண்டொரு கருத்துக்

---

@ 733-756 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

களைச் சொல்ல விரும்புகிறேன். நிதி ஒதுக்கம் பற்றிய எல்லாப் பிரச்சினைகளுக்கும் மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் பதிலளித்தார்கள். இன்றையதினம் தமிழக அரசைப் பொறுத்தமட்டில், மிகப் பெரிய பிரம்மாண்டமான பிரச்சினை விவசாயப் பிரச்சினை. இதற்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் காண வேண்டுமென்று எல்லா மட்டங்களிலும் சொல்லப்படுகிறது. விவசாயிகள் மத்தியிலே ஒரு கொந்தளிப்பு உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்த அரசாங்கம், அவர்களுடைய மொழியிலே சொல்லப்போனால், ஆட்சிக் கட்சியாக வந்ததற்கு முன்னாலேயே ஒரு திட்டத்தை அறிவித்தது. விவசாயிகளுக்குப் பயிர் இன்ஷ்யூரன்ஸ் கொண்டு வருவோமென்று தேர்தல் பிரகடனத்தில் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு மாநில அரசால் முடியாத காரியமாக அது இருக்கிறதென்று நமக்குத் தெரிந்தாலும், நிதியமைச்சரவர்கள தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் அதற்காக என்ன முயற்சி மேற்கொண்டார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். இதுவரை முயற்சிகளை மேற்கொள்ளாவிட்டாலும், வருகிற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலாவது இந்தப் பிரச்சினையை முன்வைத்து, அவர்கள் பேச வேண்டும். தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியப் பூபாகத்திற்கே இது ஒட்டுமொத்தமான பிரச்சினையாகும். பயிர் இன்ஷ்யூரன்ஸ் என்பது மக்களுக்கு ஒரு பாதுகாப்பான திட்டம். இன்றையதினம் விவசாயிகள் தங்கள் முதலீட்டைப் போட்டுவிட்டு, விளைவு இல்லாமல், வேதனையில் இருக்கிறார்கள். எனவே அவர்களுக்குத் தகுந்த பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 'பெர் கேபிடா இன்கம்' தமிழ் நாட்டிலே குறைந்திருக்கிறதென்று சொன்னார்கள். மிகப் பெரிய திட்டங்களை உருவாக்குவதற்கு, தமிழ் நாட்டிலே திட்டக் குழு என்று ஒன்று இருக்கிறது. அந்தத் திட்டக் குழு மூலமாக அறிவிக்கப்பட்ட திட்டங்களில் எதை மேற்கொண்டிருக்கிறார்கள்? மாநிலத் திட்டக் குழு பரிந்துரை செய்கிற திட்டங்களை நம்முடைய மாநில அரசு புறக்கணிக்கிறது. அது ஒரு அலங்கோல அமைப்பாகத்தான் இருக்கிறது. சில பேர்களுக்குப் பதவிகள் கொடுக்க வேண்டுமென்ற நிலையில்தான் அந்த அமைப்பு இருக்கிறது. ஆனால் அந்த அமைப்புதான் கீழே இருக்கிற ஊர் மன்றங்களிலிருந்து, ஊராட்சி ஒன்றியத்திலிருந்து மாநில அளவிற்கான பல்வேறு திட்டங்களை உருவாக்கிக் கொடுக்க முடியும் என்று சொல்லி, அதன் அடிப்படையிலே காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திட்டக் குழுவிற்கு முக்கியத்



துவம் கொடுத்து, அது உருவாக்கும் திட்டங்கள் தமிழ்நாடு அரசின் திட்டங்களாகப் பரிமளிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு முக்கியமான பிரச்சினையைக் கூற விரும்புகிறேன். வருகிற கல்வி ஆண்டில், தமிழ்நாட்டு மாணவர்களுக்காக நிதியமைச்சரவர்கள் செய்ய வேண்டும். மாணவர்களுக்கு அளிக்கப்படும் நோட்டுப் புத்தகங்களுக்குக் கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. அதற்காக ஒதுக்கப்படும் 'கோட்டா'-வை, அசோசியேஷன் சார்பிலே இருக்கும் அதிபர்கள் 400 டன். 500 டன் என்ற அளவிலும், மற்றவர்கள் 10 டன், 15 டன் என்ற அளவிலும் பெறுகிறார்கள். எனவே இந்தத் தொழிலில் யாரெல்லாம் ஈடுபட்டிருக்கிறார்களோ அவர்களுடைய புள்ளிவிவரம் எடுக்க வேண்டும். 500 டன், 400 டன் என்று வாங்குகிறவர்கள், உற்பத்தி செய்து, கேரளாவிற்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். எனவே எல்லோருக்கும் பரவலாகக் கிடைக்கும் வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரே ஒரு வார்த்தை, அரசில் உள்ளவர்கள், விளம்பரத்தில் எங்களுக்குப் பிரியமில்லை என்று சொல்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள், அவர்கள் திறமை, ஆற்றலைப் பயன்படுத்தி இங்கேயுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள். ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். தமிழரசுப் பத்திரிகை அரசாங்கத்தின் சார்பிலே வருகிறது. அதிலே வருகிற சம்பவங்கள் அரசாங்கத்திற்குத் தொடர்புடையன. மாண்புமிகு முதலமைச்சரவர்களின் படம் அதிலே 16 இடங்களிலே வருகிறது. நான் அப்படி வரக்கூடாதென்று சொல்லவில்லை இதெல்லாம் இருக்க வேண்டும். ஒரே ஒரு இடத்தில் நிதியமைச்சரவர்கள் படமும், 15 இடங்களில் முதலமைச்சரவர்களின் படமும் வந்திருக்கின்றன. இப்படி இடம் பெற வேண்டும், அதில் தவறில்லை. அதற்காக நான் அரசாங்கத்தைக் குறை கூறவில்லை. இப்படி ஒரு அரசாங்கம் செய்யும்போது, இன்னொரு அரசாங்கம் வரும்போதும் இப்படிப்பட்ட வாய்ப்புகளைக் கொடுக்க வேண்டுமென்று தெரிந்திருந்தும், முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது, கலைஞர் அவர்களுடைய படம் தமிழரசுப் பத்திரிகையிலே வருவது பாவமான காரியமென்று சொன்னார்கள். இன்றைக்குப் 16 இடங்களிலே முதலமைச்சர் படம் வந்திருக்கிறது. ஆட்சி நடத்துபவர்களுக்குப் பரந்த மனப்பான்மை வேண்டும்.

Appreciation is a kind of Civilisation.
(தமிழரசுப் பத்திரிகையைக் காட்டுகிறார்).

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** பத்திரிகையை உறுப்பினரவர்கள் தலைவரவர்களிடம் காட்டி, தலைவரின் மூலமாக அவைக்குக் காட்டுவதுதான் முறையானது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் இதற்கெல்லாம் பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நம்முடைய நிதியமைச்சரவர்கள் இங்கு ஒரு அரிய சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். அது பயனுள்ளதாக இருந்தது. அவர்கள் தேங்காய் மீதான வரியை ரத்து செய்ததற்காக நான் என்னுடைய நன்றியை மட்டுமல்ல, இந்த மாநிலத்திலுள்ள தேங்காய் உற்பத்தியாளர்களின் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சரவர்களிடம் நான் இதுபற்றிக் குறிப்பிட்டுச் சொன்னேன். முன்பு தேங்காய்க்கு போடப்பட்ட வரியானது, இப்போதைய முதலமைச்சரவர்களின் தீவிர முயற்சியால், போடப்படாமல் செய்யப்பட்டது, அவர்களே மீண்டும் அதற்கு வரி போடுவதாக இருந்தால், அது சரியாக இராதென்று சொன்னேன். அதை ஏற்று, அந்த வரியை ரத்து செய்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதே போன்று தீக்குச்சிமீது மனது வைத்தால் நன்றாக இருக்கும். 7½ கோடி தீக்குச்சிகளை ஆண்டு ஒன்றுக்கு தயாரிக்கும் யூனிட்டுகளை சிறு யூனிட்டுகள் என்று மத்திய அரசு கூறியிருக்கிறது. 40 குச்சிகள் 10 பைசா என்று சொல்லும்போது, 1 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் அளவிற்கு ஆண்டொன்றுக்கு டர்ன்-ஓவராகும் சிறு தொழிற்சாலைகள் காதி போர்ட் நிர்வாகத்தில் இருக்கிறது. எனவே 50,000 ரூபாய் என்று வரம்பு குறிப்பிட்டிருப்பதை, 1 லட்சம் ரூபாய் என்று உயர்த்தினால், மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அதாவது 1 லட்சம் ரூபாய்வரை உற்பத்தி செய்பவர்களுக்கு வரி விலக்கு, அதற்கு மேல் வரி உண்டு என்று சொன்னால், அவர்கள் சந்தோஷமாக இருப்பாகளென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-40)

அடுத்தபடியாக, நான் சுருங்கச் சொல்ல ஆசைப்படுகிறேன். இவ்வளவு பெரிய காரியங்களை இந்த அரசு நிறைவேற்றி வெற்றி நடை போடுகிறது. ஒவ்வொன்றிலும் வெற்றி நடை போடுகிறது. பல தகராறுகளில் தீர்வு



காணப்பட்டு விட்டது. ஒன்றிரண்டுதான் இப்பொழுது இருக்கின்றன. வக்கீல்களுடைய பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. விவசாயிகளுடைய பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. இந்த இரண்டு சாராருடைய போராட்டங்களுக்கு மட்டும் இன்னும் தீர்வு காணப்படவில்லை. இந்த இரண்டு பிரிவினருடைய போராட்டங்களுக்கும், கிளர்ச்சிகளுக்கும் விரைவிலே ஒரு தீர்வு காண வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஆசிரியர்களுடைய கிளர்ச்சியை உறுப்பினருக்கு நினைவு படுத்துகிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** ஆசிரியர்களுடைய பிரச்சினை தீராத ஒன்று. அவர்களுடைய கிளர்ச்சியும் தீராது. இவைகளையும்கூட இந்த அரசு தீர்த்தால், இந்த விஷயத்தில் மிக நல்ல பெயர் எடுக்க முடியும். இந்த மூன்று பிரச்சினைகளுக்கும் அரசு தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிலும் குறிப்பாக விவசாயிகள் பிரச்சினையைப் பொறுத்தவரை, அதில் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தினால், அவருக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் என்றென்றைக்கும் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இறுதியாக நான் கேட்டுக்கொள்வது, சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம் உயர்த்தப்படுமென்று அன்றைக்குச் சொன்னார்கள். உடனே அதை எதிர்க்க வேண்டுமென்று மாண்புமிகு திரு. வீராசாமி, கலைஞர் போன்றவர்கள் எதிர்த்தார்கள். அப்படி அவர்கள் எதிர்த்ததன் விளைவாக இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் குறைந்த சம்பளத்தை வாங்கிக் கொண்டு கஷ்டப்படுகின்ற நிலைமையைப் பார்க்கிறோம். அவர்களுக்கே கூட அது பற்றவில்லை என்பதை உணர்கிறார்கள். எங்கே போய் யாரிடம் அதைச் சொல்வது என்ற உணர்வு இருக்கிறது. எனக்கேகூட அந்த உணர்வு இருக்கிறது. யார் அதை எதிர்த்தாலும் தயவுசெய்து நீங்கள் அதைச் செய்யுங்கள். யாரோ சொன்னார்கள் என்பதற்காக உறுப்பினர்களைச் சங்கடத்துக்கு ஆளாக்க வேண்டாம். நீங்கள் கூறியபடி சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளத்தை உயர்த்தி வழங்கலாம் என்று நான் அரசுக்கு சிபாரிசு செய்கிறேன். அந்தக் கருத்தை நான் ஆதரிக்கிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்லி முடித்து விடுகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் டில்லியில் மிகுந்த செல்வாக்கோடு, பாராளுமன்றத்தில் இருக்கும்போது, விளங்கினார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இன்றைய தினமும் செல்வாக்கோடுதான் அவர்கள் இருக்கிறார்கள். அதனால் நிதிக் கமிஷனிலிருந்து அதிகமான தொகையைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். அவர்கள் இன்னும் அதிகமாக நிதி பெற வேண்டும். அதுதான் என்னுடைய ஆசையும் கூட. சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்தை மாற்றியமைக்கும்போது எழும்பூருக்கு வருகின்ற ரெயில்களும் அங்கு போகக் கூடிய நிலையை, வழிவகையை ஏற்படுத்தி "சென்னை ரெயில் நிலையம்" என்று பெயர் சூட்டி அதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த நிதி மசோதாவை வரவேற்று அமைகிறேன்.

திரு. ப. மாணிக்கம்: துணைத் தலைவரவர்களே, நிதி நிலை அறிக்கை மீது நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சில கருத்துக்களைக் கூறினார்கள். சுமார் 850 கோடி ரூபாய்க்குள்ள இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை பல அம்சங்களைக் கொண்டிருந்தாலும், அதில் உள் நோட்டமாக இருக்கக்கூடிய ஒரு அபாயத்தை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். கடந்த ஆண்டு அனுபவமும், இப்பொழுதே அவை நடந்துகொண்டிருக்கும்போது நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளின் அனுபவமும் எப்படி இருக்கின்றன என்பதைப் பார்த்தால் தமிழ் நாட்டில் ஜனநாயகத்தை பலவீனப்படுத்தக் கூடிய ஒரு அம்சமாக அது அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. காவல் துறைக்கு அதிக அதிகாரத்தைக் கொடுத்து சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும்போது, அது மதுவிலக்குச் சட்டமாக இருந்தாலும் சரி அல்லது வேறு சட்டமாக இருந்தாலும் சரி, குடி மக்களுக்கு ஒரு நல்ல பாதுகாப்பற்ற நிலை ஏற்படுவது சரியான கொள்கை ஆகாது. இது ஜனநாயக நடைமுறைக்கு ஒரு வேட்டு வைக்கிற நிலை. இது சமூகத்திலுள்ள ஏழையெளிய மக்களை, குறிப்பாக தொழிலாளர்களை, பல ரூபங்களில் தாக்க ஆரம்பித்திருக்கிறது. இந்தப் போக்கினை அரசு தீர்த்துக்கொள்ள முன்வர வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் தமிழகத்தில் வாய்ப்புள்ள தொழில்களையெல்லாம் ஆரம்பிப்பதற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மீது பேசும்போது, ஏற்கெனவே என்னுடைய கருத்துக்களைக் கூறினேன். நம்முடைய தமிழகத்தில் வாய்ப்புள்ள தொழிலான உப்பை ஆதாரமாகக் கொண்டு இருக்கக்கூடிய இரசாயன தொழிற்சாலை ஆரம்பிக்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று



கேட்டுக்கொள்கிறேன். அம்மாதிரிக் கண்ணோட்டத்தின் மூலம் நம்முடைய மாநிலத்தினுடைய தொழில் வளம், செல்வ வளர்ச்சிக்கு வழிவகை ஏற்படும். அதில் வரக்கூடிய காலத்தில் இந்த அரசு கவனம் செலுத்த வேண்டும். தமிழகத்தினுடைய செல்வத்தை உற்பத்தி செய்வதில் மிக முக்கிய பங்கு வகிக்கக்கூடியவர்கள் தொழிலாளர்கள். தொழிலாளர்கள் இன்றைய தினம் கொடிய துன்பங்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய உரிமைகளைக் கூட அவர்கள் இழந்துகொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட நிலை ஜனநாயகத்திற்கும் நல்லதல்ல, தொழில் வளர்ச்சிக்கும் நல்லதல்ல. இந்தத் துறையிலே கட்டாயம் இப்படிப்பட்ட நிலைமைகள் மாற வேண்டும்.

அடுத்தபடியாக, விவசாயிகளைப் பொறுத்தவரையிலும், அவர்களுக்குக் கடன் சுமை அதிகரித்திருக்கிறது. 1938 ஆம் ஆண்டிலே திரு. இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, தமிழகத்தில் விவசாயத்திலே ஏற்பட்டிருந்த ஒரு மிகப் பெரிய வறட்சிப் பிரச்சினையைத் தீர்க்க கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். நாம் இன்றைக்கு 1979 ஆம் ஆண்டில் இருக்கிறோம். 40 ஆண்டுகள் முடிந்து விட்டது. 40 ஆண்டுகள் ஆன பிறகும், அரசினுடைய புள்ளிவிவரம், மற்றும் ரிசர்வ் வங்கியினுடைய புள்ளி விவரம் என்ன கூறுகிறது என்பதைப் பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம். கிராமப்புறத்தில் கடனாளித் தன்மையில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்று அந்தப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இதில் அரசு தன்னுடைய முதல் கவனத்தைச் செலுத்த வேண்டும். விவசாய அபிவிருத்திக்கு, கிராமப்புற வளர்ச்சியில் மறு மலர்ச்சி காண்பதற்கு இது மிக அவசியம். கடன் நிவாரண அணுகுமுறையைப் பொறுத்தவரை, அரசு குறிப்பாக விளை பொருள்களுக்கு நல்ல விலை கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

திரு. செ. முத்துசாமி: துணைத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய மிக அழகான, அருமையான, தமிழ் ஆற்றல் மிக்க சொற்பொழிவை நாமெல்லாம் கேட்டோம். இந்த அவையிலே இரண்டு பேருக்கு இரண்டு மொழிகளில் நல்ல பேச்சாற்றல் உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய நாவிலே தமிழ் விளையாடுகிறது. அதைக் கேட்பதிலே ஒரு இன்பம், சொல்லுவதிலே இன்பம். பொருளைப்பற்றிப் பின்னால் சிந்தித்தாலும் கூட, அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருப்பதிலே எங்களுக்கெல்லாம் மிகுந்த

மகிழ்ச்சி. அவருடைய பேச்சின்போது சேலத்திற்கு விமான நிலையம் வாங்கிக் கொடுப்பதாக ஒரு அறிவிப்பை அறிவித்தார்களே, அதைக் கேட்ட போது, உள்ளபடியே நானும் சேலத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். அதற்காக அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அவரைப் போலவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் ஆங்கிலத்தில் மிக அழகாகப் பேசக்கூடியவர்கள். இன்றைக்கு மிக நல்லமுறையில் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய உரை அமைந்திருந்தது. நான் இந்த நேரத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் ஒரு விஷயத்தைப் பற்றிப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலுக்கு முன்னால் ஒரு வாக்குறுதியைத் தந்தது. பட்டதாரி ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள், தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் போன்றவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க தனிக் குழு அமைக்கப்படும் என்று அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தால் வாக்குறுதி தரப்பட்டது. அது இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதோடு அதைக் கட்டாயம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப் பொறுத்தவரை, அது "தீராத பிரச்சினை" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் சொன்னார்கள். விழுச்சியடைந்துள்ள எந்த சமுதாயத்திற்கும் நாளாக நாளாகத் தேவைகள் கூடுகின்றன. தங்களுடைய தேவைகளைப் பற்றிக் கேட்கத் தெரிந்த எந்த சமுதாயமும் கேட்டுக் கொண்டேதான் இருக்கும். இன்றைக்கு ஒரு பிரச்சினை தீர்ந்தால், நாளையதினம் வேறொரு தேவை வருகிறது. விவசாயிகளுக்குக் கூட தீர்ந்து வருகிற பிரச்சினைகளாக இருக்கின்றனவா என்றால், அது தான் இல்லை. ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை இந்த அரசு தீர்க்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு தான், சி.சி.ஏ. யைத் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் தந்திருக்கிறார்கள். முதலில் அரசுத் துறைகளுக்கு மட்டும்தான் அது தரப்படும் என்று அதிகாரிகள் அறிவித்தார்கள். பிறகு ஆசிரியர்கள் ஊர்வலமாக வந்த பிறகு தான், பேரறிஞர் அண்ணா அவர்கள் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அந்தச் சலுகையை ஆசிரியர்களுக்கும் வழங்கி ஒரு



முன்னுதாரணத்தை ஏற்படுத்தினார்கள். அதன் பிறகுதான் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சலுகையும் ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது மறுபடியும் அரசு ஊழியர்களுக்குச் சலுகைகள் வழங்கும்போது, ஆசிரியர்களுக்கு நிறுத்தப்படக்கூடிய நிலை இருக்கிறது. "நிதி வந்து கொண்டேயிருக்கும், வாதாடிக் கொண்டிருக்கிறேன், வர வர அதைச் செய்வேன்" என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவருடைய அந்த அறிவிப்பைச் செயலாக்கி, காரியங்களை நிறைவேற்ற வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சட்டமன்ற உறுப்பினர்களுடைய குடும்பத்திற்கு இப்பொழுது மருத்துவ வசதி இல்லை. நான் சட்டமன்ற மேலவை உறுப்பினர் ஆவதற்கு முன்னால் ஆசிரியர் என்ற முறையில் எனக்கு அந்தச் சலுகை இருந்தது. இப்பொழுது எம்.எல்.சி. ஆன பிறகு, மருத்துவச் சலுகை இல்லை. மற்ற மாநிலங்களில் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மருத்துவ வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுடைய குடும்பத்திற்கு மருத்துவ வசதிச் சலுகையை நிச்சயமாக தாராள மனப்பான்மையுடன் உங்கள் காலத்திலேயே வழங்க வேண்டும், நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சட்டமன்ற உறுப்பினர்களுடைய சம்பளத்தைப் பொறுத்தவரை, ஆசிரியர் பிரதிநிதிகளைப் பொறுத்தவரை, நாங்கள் உறுப்பினர்களாக வருவதற்கு முன்பு ஆசிரியராக முழு நேரம் பணியாற்றிக் கொண்டிருந்தவர்கள். இன்றைக்கும் அந்த ஆசிரியர்களுக்காக ஆசிரியர் பிரதிநிதிகளாக முழு நேரமும் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 750 ரூபாயாக சம்பளம் உயர்த்தப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால் இன்னும் அதை அமுல்படுத்தவில்லை. இந்தக் கூட்டத் தொடரிலேயே இதுசம்பந்தமான அறிவிப்பு அறிவிக்கப்பட்டு, அறிவித்த தேதியிலிருந்தே அமுல்படுத்தப்படும் என்கிற ஒரு அறிவிப்பை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

(பிற்பகல் 6-50)

அடுத்து, உறுப்பினர்களாக இருக்கும் நாங்கள், நிறைய தபால்கள் எழுத வேண்டியிருக்கிறது. மாதம் குறைந்த பட்சம் ரூபாய் 50 இதற்காகச் செலவாகிறது. எனவே இதைப் பணமாகவோ, சர்வீஸ் ஸ்டாம்பாகவோ கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரெயில்வே கூப்பன் சம்பந்தமாக, சில நேரங்களில் முதல் வகுப்புக்கு ரிசர்வேஷன் கிடைப்பதில்லை. இதன் காரணமாக உறுப்பினர்கள் இரண்டாவது வகுப்பில்தான் பயணம் செய்ய வேண்டி ஏற்படுகிறது. ஆனால் இரண்டாவது வகுப்பில் பயணம் செய்வதற்கும் முதல் வகுப்புக்குரிய ரெயில்வே கூப்பனையே நாங்கள் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. இதனால் எங்களுக்கு நஷ்டமேற்படுகிறதே தவிர, வேறொன்றுமில்லை. அடுத்து, உறுப்பினர்கள் தங்களுடன் தங்களுடைய 'ஸ்பவுஸ்' ஐக் கூட்டிச் செல்ல அரசாங்கம் அனுமதிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். உத்திரப் பிரதேசத்திலிருப்பதைப்போல 3,000 ரூபாய்க்கு என்று ரெயில்வே கூப்பனை வழங்கிவிட வேண்டும். அதையும் இந்தக் கூட்டத்தொடரிலேயே அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நாவிலிருந்து வெளிவரும் தமிழைக் கேட்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். எங்கள் மாநில மாநாட்டில் மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசிய பேச்சை டேப்பில் போட்டுக் கேட்டால் எப்போதும் கேட்டுக் கொண்டேயிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இதைச் சொல்வது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு 'அய்ஸ்' வைக்க வேண்டுமென்பதற்காக அல்ல. உண்மையிலேயே சொல்லுகிறேன். ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படி அளிக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அது இன்னும் நிறைவேறாமலே இருக்கிறது. கிராமத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படி வழங்க வேண்டுமென்று கோரி வருவதை ஏற்று, இந்தத் தொடரிலேயே அதற்கான அறிவிப்பைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** துணைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு அதிகமாக ஒன்றுமில்லையென்றாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் ஒருசில பிரச்சினைகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு தொழிலாளிகள் விஷயத்திலானாலும் சரி, விவசாயிகளின் பிரச்சினையிலானாலும் சரி, அரசின் அணுகுமுறை ஜனநாயகத்திற்குப் புறம்பானதாக இல்லை என்பதைமட்டும் இந்தச் சந்தர்ப்பத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

காவல் துறையினர்பற்றி அவர்கள் கொஞ்சம் கடுமையாக விமர்சித்தார்கள். அவர்கள் குறிப்பிட்ட கருத்துக்களையெல்லாம் நான் குறித்து வைத்துக் கொண்டிருக்கிறேன் என்பதையும் எந்த அளவுக்குக் குறைகளைக் களைய முடியுமோ அந்த அளவுக்குக் குறைகளைக் களையும் முயற்சியில் ஈடுபடுவோம் என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



திரு. முத்துசாமி அவர்களைப் பொறுத்தவரையில், அவருக்கு எப்போதும் பிரச்சினைகள் அதிகம். பல நேரங்களில் அவரே பிரச்சினையாக ஆவதுமுண்டு. எனினும் அந்தப் பிரச்சினைகளைப் பொறுத்தவரை, ஒவ்வொன்றாகப் போக்குவதில் நான் அவருக்கு உறுதுணையாக இருப்பேன் என்று மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

இறுதியாக விடைபெறுகிறபோது ஒரு சுவையான செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மாத ஊதியம் ரூ. 750 என்பதை முன்பே இந்த அரசு அறிவித்தது. இதுகுறித்து இந்தத் தொடரிலேயே ஒரு மசோதா வருகிறது என்பதையும், அதற்கு 'ரிட்ராஸ்பெக்ட்டிவ் எபெக்ட்' கொடுப்பதன் காரணமாக, கொஞ்சம் கணிசமான தொகையை உறுப்பினர்கள் பெறுவார்கள் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஆசிரியராக இருந்தபோது எனக்கு மருத்துவ வசதி குடும்பம் முழுவதற்கும் கிடைத்தது, இப்போது எம்.எல்.சி.யான பிறகு எனக்கு மட்டும்தான் கிடைக்கிறது, என்னுடைய குடும்பத்திற்கு மருத்துவ வசதி கிடைக்கவில்லை' என்று உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். இதன் காரணமாக அவர் தம்முடைய எம்.எல்.சி. பதவியை ராஜினாமா செய்துவிட வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு, நல்ல நிதியாதாரம் கிடைக்கும்போது, அதையும் இந்த அரசு கவனிக்கும் என்று சொல்லி, ஒத்துழைப்பு அளித்த உறுப்பினர்களுக்கும் நன்றிகூறி முடிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு முன் நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

பரிந்துரை எதுமில்லை.

**மாண்புமிகு திரு கி. மனோகரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு முன் நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/1979) திருப்பி யனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு முன் நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1979) திருப்பி யனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(2) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/1979).**

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 17/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 17/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

@737-740ஆம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.





தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை எதுமில்லை.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 17/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(3) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/1979).**

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன் மொழிகிறேன்.

@ 741-743ஆம் பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 9—4—1979 அன்று மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-55)



**7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

*A. Statutory Rules and Orders.*

121. Third Annual Report of the Tamil Nadu Poultry Development Corporation Limited for the year 1975-76. (English and Tamil). [(Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

*B. Reports, Notifications and Other Papers.*

70. Notification issued in Memorandum No. 65666|F2|78-3, Labour and Employment, dated the 26th December 1978 in regard to erratum issued to G.O. Ms. No. 992, Labour and Employment, dated the 30th August 1978, published in No. II(2)|LE|4408(a)|78 at Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, Extraordinary, dated the 30th August 1978.

71. Seventh Report of the Committee on Estimates on the Village and Small Industries including Industrial Estates.

72. The Tamil Nadu Appropriation Bill, 1979 (L.A. Bill No. 17 of 1979), as passed by the Assembly.

73. The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1979 (L.A. Bill No. 18 of 1979), as passed by the Assembly.

## இணைப்பு I

[676 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

மதுரை மத்திய கூட்டுறவு வங்கி செயலாற்றும் பகுதியில் உள்ள ஆதார கூட்டுறவு சங்கங்களில் சுமார் 465 எழுத்தர்கள் பணியாற்றி வருகிறார்கள். இவர்களில் 350 பேர் விவசாய கூட்டுறவு சங்கங்களிலும் மீதி 115 பேர் பல வகையான ஆதார கூட்டுறவு சங்கங்களிலும் பணியாற்றுகின்றனர். மத்திய வங்கி முன்பு அமைத்த தற்காலிக குழுவினரால், இவர்கள் தேர்வு செய்யப் பட்டு, ரூ. 150 மாத ஊதியத்தில் கிராம கூட்டுறவு சங்கங்களில் எழுத்தர் களாக பணியில் அமர்த்தப்பட்டனர். மத்திய வங்கியின் அப்போதைய தலைவர்தான் அக்குழுவின் தலைவராகவும் இருந்தார். தமிழ் நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம், அல்லது விதிகளின் கீழோ அல்லது துணை விதிகளின் கீழோ சட்ட ரீதியாக இக்குழு அமைக்கப்படவில்லை. இந்த எழுத்தர்கள் மத்திய வங்கியின் பணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. மத்திய வங்கியின் ஊதியப் பட்டியலில் இல்லாத இவர்களுக்கு சேமநிதி, பணிக்கொடை போன்ற சலுகைகள் கிடையாது.

22—2—77ல் மதுரை மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்கள் சங்கம் விடுத்த கோரிக்கையில் இந்த எழுத்தர்கள் பிரச்சினையும் ஒன்றாகும். தொழில் தகராறு சட்டம் 1947, விதி 12 (3)-ன் கீழ், சென்னை உதவி தொழிலாளர் நல ஆணையர் அவர்களால், வங்கி ஊழியர் சங்கத்தின் கோரிக்கைகள் முடிவு செய்யப்பட்டன. கூட்டுறவு பதிவாளர் விடுத்துள்ள சுற்றறிக்கைகளின் படியும் அவ்வப்போது விடுக்க இருக்கும் சுற்றறிக்கைகளின்படியும் இவர்களின் பணிநிலைகள் இருக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

இந்த எழுத்தர்கள் பணியாற்றும் கூட்டுறவு சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் சட்ட ரீதியான துணை விதிகள் இருக்கின்றன. அவற்றின்படி தேவையான பணியாளர்களை கூட்டுறவு சங்கங்கள் நியமித்துக் கொள்ளலாம். கூட்டுறவு சங்கங்களின் நிதிநிலைமைக் கேற்ப பணியாளர்களின் சம்பள விகிதம் மற்றும் படிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. கூட்டுறவு சங்கங்களின் துணை விதிகளின் படி நிரந்தரப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டால் இந்த தற்காலிக ஊழியர்கள் பணியிலிருந்து வெளியேற்றப்பட வேண்டிய நிலை ஏற்படும். இவற்றை யெல்லாம் கருத்தில் கொண்டு இந்த ஊழியர்களை ரூபாய் 50 நிலையான



படியுடன் ரூபாய் 150—3—180—5—230 என்ற ஊதிய விகிதத்தில் நிரந்தர பணியாளர்களாக ஏற்றுக் கொள்ளும்படி ஆதார சங்கங்கள் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கின்றன. இவர்களுக்குப் பணிப் பாதுகாப்பும் ஊதியத்தில் உயர்வும் அளிக்கும் நோக்கத்துடன் இவ்வாறு செய்யப்பட்டது.

இப்போது மத்திய வங்கிப் பணியில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை யின் பேரில் இவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதாகச் சொல்லப்படுகிறது. மத்திய வங்கிப்பணியில் சேர்க்கும்படி கோர இவர்களுக்கு உரிமை எதுவும் கிடையாது. 2—3—1979 அன்று மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு எதிரே சுமார் 100 எழுத்தர்கள் கூடி உண்ணாவிரதம் ஆரம்பித்தனர். 4—3—1979, 5—3—1979 தேதிகளில் 5 ஊழியர்கள் உண்ணாவிரதம் தொடர்ந்தார்கள் எனத் தெரிகிறது.

மதுரை மத்திய கூட்டுறவு வங்கிப்பணியில் உள்ள காலி இடங்களை நிரப்பு வதற்காக புதிதாக பணியாளர்களை சேர்க்கும் சமயத்தில் ஆதார கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் தற்காலிக எழுத்தர்களுக்கும் சந்தர்ப்பம் அளித்து நிரந்தரப் பணியில் சேர்த்துக் கொள்வது பற்றி மத்திய வங்கி பரிசீலனை செய்து வருகிறது.

## இணைப்பு II

[677 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

ஆண்டிப்பட்டி, பாலசமுத்திரம், புதாச்சு ஆகிய கிராமங்களில் நெய்க்காரபட்டி, நரேந்திரா பால் பண்ணை நிறுவனத்திற்குச் சொந்தமான மொத்தம் 1,719.42 ஏக்கர் நிலத்தில் 1961 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்த (உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் கீழ் 1,649.72 ஏக்கர் உபரி நிலமாக அறிவிக்கப்பட்டது. இந்த உபரி நிலத்தில் 411.04 ஏக்கர் நிலம் பொதுப்பணித் துறையினரால் பாலாறு பொருந்தலார் திட்டத்திற்காக நில எடுப்புச் சட்டத்தின் (Land Acquisition Act) கீழும் எடுக்க நடவடிக்கை தொடங்கப்பட்டது. இதற்கான 4(1) பிரிவு அறிக்கைகள் 4—4—72, 3—10—73 ஆகிய தேதிகளுக்கிடைப்பட்ட பல தேதிகளில் பிரசுரிக்கப்பட்டன. ஆனால் நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் அறிக்கையிடப்பட்ட தேதியாகிய 2—10—1970 அன்று இந்நிலங்கள் நிறுவனத்திடம் இருந்ததால் நில எடுப்பில் அடங்கியுள்ள 411.04 ஏக்கர் உட்பட 1,649.72 ஏக்கர் நிலங்களும் நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் எனக் கருதப்பட்டது. மொத்த நிலங்களையும் நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் எடுப்பதை ஆட்சேபித்து நிறுவனம் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தது. உயர்நீதி மன்றம் 411.04 ஏக்கருக்கு நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் மேல் நடவடிக்கை எடுப்பதற்குத் தடை (Stay) விதித்து, ரிட் மனுவை விசாரணையில் வைத்துள்ளது.

2. நில எடுப்பில் அடங்கியுள்ள 411.04 ஏக்கர் நிலமும் உட்பட மொத்தம் 1,649.72 ஏக்கருக்கு அளிக்க வேண்டிய தொகை ஒரே உதாவின்கீழ் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். ஆனால் திண்டுக்கல் அதிகாரம் பெற்ற அதிகாரி விதிகளுக்குப் புறம்பாகத் தொகையை நிர்ணயித்தார். வருவாய் வாரியம் அதை நிறுத்தி வைத்தது நிறுவனம் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தது. உயர்நீதி மன்றம் ஒரே தொகை நிர்ணய உத்தரவு தயார் செய்து வெளியிடுமாறும் திரு. ஆரூரான் சர்க்கரை ஆலைக்கான சில ரிட் மனுக்களின் தீர்ப்பில் அளிக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் இந்நிறுவனத்திற்கும் அதே முறையில் ஈட்டுத் தொகை நிர்ணயிக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டது. இதை எதிர்த்து அரசு சுப்ரீம் கோர்ட்டில் மேல் முறையீடு



செய்ய அனுமதி கோரும் மனு உயர்நீதி மன்றத்தில் கொடுத்துள்ளது. இது உயர்நீதி மன்றத்தின் நடவடிக்கையில் உள்ளது. 411.04 ஏக்கர் நிலத்திற்கு நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் எல்லா நடவடிக்கைகளுக்கும் உயர்நீதி மன்றத்தின் தடை உத்தரவு உள்ளதால் இந்த ரிட் மனு முடியும் வரையிலோ அல்லது தடை உத்தரவு நீக்கப்படும் வரையிலோ மேல் நடவடிக்கை எடுக்க இயலாது. நில ஈட்டுத் தொகை, நிர்ணயம் செய்வது குறித்து நடவடிக்கை உயர்நீதி மன்றத்தின் நடப்பில் இருப்பதால் நிலக் கிரயத்தை நிர்ணயிக்க முடியவில்லை.

3. உபரி நிலங்களின் சில பகுதிகளுக்கு மட்டும் நில ஒப்படை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. ஆனால் இதில் பல குறைபாடுகள் இருந்தன. ஆகையால் நிலங்களை முழுவதும் சர்வே செய்து, நிலம் யார் யாருடைய சுவாதீனத்தில் உள்ளது என்பதை முடிவு செய்து ஒப்படை செய்யவும், ஒப்படை பெறுபவர்களிடம் வசூல் செய்ய வேண்டிய நிலக்கிரயம் நிர்ணயிக்கவும் நடவடிக்கை தேவை. இப்பொழுது சர்வே வேலை கிட்டத்தட்ட முடியும் தருவாயில் உள்ளது. அதன் பிறகுதான் ஒப்படை பற்றிய ஆணைகள் பிறப்பிக்க முடியும்.

4. நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் 18-எப் பிரிவுப்படி, நிலம் ஒப்படை செய்யப்படும்வரை நிலம் யாருடைய அனுபவத்தில் உள்ளதோ அவரிடமிருந்து குத்தகைத் தொகை வசூலிக்கப்பட வேண்டும். நிலக்கிரயம் நிலச் சொந்தக்காரருக்கு அளிக்க வேண்டிய தொகையின் அளவாக நிர்ணயிக்கப்படவேண்டும். இது உயர்நீதி மன்றத்தில் உள்ள ரிட் மனுவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள தடையுத்தரவின் காரணமாக நிர்ணயிக்கப்பட முடியவில்லை. ஆகவே, தற்காலிகமாக குத்தகைத் தொகை ரூ. 17,27,525.20 என நிர்ணயித்து அந்த அடிப்படையில் அதனை வசூலிக்க 2 ஆண்டுகள் 9 மாத காலத்திற்கான டிமாண்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இது முடிவான தொகையல்ல. பின்னால் இந்த உபரி நிலங்களுக்கு நிர்ணயிக்கப்படும் தொகைக்கேற்ப மாறுபடும்.

5. இதுபோன்று ஒப்படைக்குத் தவிர்க்கமுடியாத வகையில் தாமதமேற்படுவதால், நிலத்தை அனுபவித்து குத்தகைத் தொகை செலுத்துபவரே பின்பு அந்த நிலத்தை ஒப்படை பெறும்பொழுது, அவர் கட்டியுள்ள குத்தகைத் தொகையை அவர் செலுத்த வேண்டிய நிலக்கிரயத் தவணைகளுக்கு ஈடு செய்துகொள்ளலாமா எனும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## இணைப்பு III

[679 ஆம் பக்கத்தில் இனம் 4 (3)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

இந்திய அரசு நம்மாநிலத்திற்கு மாதந்தோறும் சராசரி 33,000 கிலோ லிட்டரிலிருந்து 35,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயை 1978-ம் ஆண்டில் ஒதுக்கீடு செய்து வந்தது. 1979 சனவரி திங்களுக்கு 37,015 கிலோ லிட்டர் பிப்ரவரித் திங்களுக்கு 34,009 கிலோ லிட்டர், மார்ச் திங்களுக்கு 34,487 கிலோ லிட்டர் என்ற அளவில் தமிழகத்திற்கு இந்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. பிப்ரவரி, மார்ச் ஆகிய இரு மாதங்களிலும் சனவரி மாதத்தோடு ஒப்பிடும்போது 3,000 கிலோ லிட்டர், அதாவது 30 இலட்சம் லிட்டர் அளவில் குறைத்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஈரானில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமை காரணமாக சர்வதேசச் சந்தையில் மண்ணெணெய்க்கு மிகக் கிராக்கி ஏற்பட்டுள்ளதெனவும் மண்ணெண்ணெய் உபயோகப்படுத்தப்படுவதை உன்னிப்பாக கவனிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதென்றும், மாநிலங்களுக்கு மாதந்தோறும் ஒதுக்கீடு செய்யப்படும் மண்ணெண்ணெயின் அளவு கடந்த ஆண்டு இதே மாதத்தில் எவ்வளவு மண்ணெண்ணெய் உபயோகப்படுத்தப்பட்டதோ அந்த அளவைக்காட்டிலும் 8 விழுக்காடு அளவுக்கு மேற்படாத வகையில்தான் மாத ஒதுக்கீடு அமையுமென மத்திய அரசு தெரிவித்துள்ளது. மேலும் மண்ணெண்ணெய் விநியோகத்தில் உன்னிப்பான கவனம் செலுத்தும் படியும் மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

மத்திய அரசு தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யும் அளவைக் குறைத்துள்ள காரணத்தினால் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு ஏற்படுமென அஞ்சி இந்த அரசு தமிழகத்திற்கு கடந்த சனவரி மாதத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீட்டின் அளவை எடுத்துக்காட்டி அந்த அளவில் குறைப்பு எதுவும் செய்யாமல் ஒதுக்கீடு செய்யும்படி கேட்டுக்கொண்டு உள்ளது. இக்கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டால் மேலும் 3000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் கூடுதலாக கிடைக்கும். தமிழகத்தில் ஏறக்குறைய இரண்டு இலட்சம் குடும்பங்கள் சமையல் வாயுவை பயன்படுத்தி வருகின்றன. அண்மையில் சமையல் வாயு இனி 35 நாட்களுக்கு ஒரு முறைதான் கொடுக்கப்படும் என்று



இந்திய ஆயில் நிறுவனத்தினர் அறிவிப்பை ஒட்டி சமையல் வாயுவை உபயோகிப்பவர்கள் தங்களின் தேவைக்கு முன் எச்சரிக்கையாக மண்ணெண்ணெயை கூடுதலாக வாங்க முற்பட்டுள்ளதும் மண்ணெண்ணெய் தேவை அதிகரித்துள்ளதற்கு ஒரு காரணம்.

தமிழகத்திற்கு ஒதுக்கீட்டை அதிகரிக்க மத்திய அரசை வற்புறுத்தியுள்ளோம். தட்டுப்பாடு ஏற்படாமல் கண்காணிக்க விழிப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நெருக்கடி எதுவும் ஏற்பட்டு விடுமென்ற அச்சத்துக்கு இடமில்லை.

## இணைப்பு IV

683 ஆம் பக்கத்தில் இனம் 4 (4)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

டி.வி.எஸ். குரூப் நிறுவனங்களில் கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்களும் அவற்றின் எதிரில் குறிப்பிட்டுள்ள தேதியிலிருந்து இயங்கி வருகின்றன—

| | | வேலை செய்யும் தொழிலாளர்கள் | தேதி |
|---|---|---|---|
| 1. | சுந்தரம் கிளேட்டன் | 1,320 | 29—9—1979 |
| 2. | லூகாஸ் டி.வி.எஸ். | 2,473 | 29—9—1979 |
| 3. | பிரேக்ஸ் இந்தியா லிமிடெட். | 1,154 | 13—12—1977 |

ஆகவே இந்நிறுவனங்களில் தொழில் அமைதி நிலவுகிறது. (1) "டி.வி.எஸ். குரூப் எம்ப்ளாயீஸ் யூனியன்", (2) "லூகாஸ் டி.வி.எஸ். எம்ப்ளாயீஸ் யூனியன்", "பிரேக்ஸ் இந்தியா எம்ப்ளாயீஸ் யூனியன்" "சுந்தரம் கிளேட்டன் எம்ப்ளாயீஸ் யூனியன்" (3) "தர்ணா போராட்டம்" ஆகிய வாசகங்கள் கொண்ட கொடிகள் கட்டிக்கொண்டு 7—3—1979 தேதியில் சுமார் 30 தொழிலாளர்கள் கோஷங்கள் கிளப்பிக்கொண்டு தொழிலாளர் துறை ஆணையர் அலுவலகம் முன்பு அமர்ந்து இருந்தார்கள். தர்ணா 9—3ஆ1979 வரை நடந்தது . இந்த தர்ணா போராட்டத்தினால் அந்த நிறுவனங்களைச் சார்ந்த தொழிலாளர்களிடமோ அல்லது தொழிலாளர்கள் சமுதாயத்தினரிடமோ எந்தவிதமான ஒரு பதட்ட நிலையும் ஏற்படவில்லை. தற்போது நிலைமை அமைதியாக உள்ளது. தர்ணாவும் 9—3—1979 தேதி யோடு முடிந்துவிட்டது.



## இணைப்பு V

684 ஆம் பக்கத்தில் இனம் 4 (5)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் மாநிலத்திலுள்ள முதல் நிலை வீட்டு வசதி சங்கங்களுக்கு, தலைமைச் சங்கமாக உள்ளது. இத் தலைமைச் சங்கம், ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து, நிதியுதவி பெற்று, தன்னுடன் இணைக்கப்பட்டுள்ள முதல் நிலைச் சங்கங்களுக்கு கடன் உதவி அளித்து வருகிறது. தென்னாற்காடு கடலூர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் மேற்படி தலைமைச் சங்கத்திடமிருந்து கடன் உதவி பெறும் முதல் நிலைச் சங்கங்களில் ஒன்றாகும்.

2. 1978 செப்டம்பர் திங்கள் முதல் ரூ. 5.94 லட்சங்கள் மொத்த மதிப்புள்ள 33 கடன் விண்ணப்பங்கள், தென்னாற்காடு மாவட்டம் கடலூர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திடமிருந்து தலைமைச் சங்கத்தால் பெறப்பட்டன. அவற்றுள் ரூபாய் 3.67 லட்சங்கள் மதிப்புள்ள 18 விண்ணப்பங்களுக்கு 28—2—1979 வரை கடன்கள் ஒப்பளிக்கப்பட்டன. 3 கடன் விண்ணப்பங்கள் மறுக்கப்பட்டன. ஏனெனில் அவற்றுடன் இணைக்கப்பட்டிருந்த பத்திரங்கள் குறைபாடுகள் உள்ளவையாக இருந்தன. எஞ்சிய 12 கடன் விண்ணப்பங்கள் மட்டுமே தலைமைச் சங்கத்தில் ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளன. இந்த 12 விண்ணப்பங்களில் அய்ந்து, 1978 டிசம்பர் திங்களுக்கு முன்னர் பெறப்பட்டவையாகும். மீதமுள்ள 7 விண்ணப்பங்கள் 1979 பிப்ரவரி திங்களில் பெறப்பட்டவையாகும்.

3. தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் ஆயுள் காப்புறுதி கழகத்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகைக்காக, ரூ. 4 கோடி கையிருப்பில் வைத்துக்கொள்ள வேண்டியிருந்ததால், கடலூர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் உட்பட, பல நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களுக்கு கடன் ஒப்பளிப்பு வழங்குவதிலும், கடன் தொகைகளை விநியோகிப்பதிலும் காலதாமதம் ஏற்பட்டது. இந்த நிலை மாறி, தற்போது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி

சங்கம் தன்னிடம் நிலுவையிலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் கடன் விண்ணப்பங்களுக்கு, விரைவில் ஒப்பளிப்பு வழங்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

4. ஊரக மற்றும் நகர்ப்புற வீட்டு வசதி சங்கங்களின் கடன் விண்ணப்பங்களுக்கு ஒப்பளிப்பு வழங்குவதிலும், கடன் தொகை விநியோகிப்பதிலும் ஏற்படும் காலதாமதத்தை போக்குவதற்காக, இப்பணிகளில் ஈடுபட்டுள்ள தலைமைச் சங்க பணியாளர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட காரணங்களால், இந்த மாநிலத்திலுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு கடன் தொகைகள் வழங்குவதும், விநியோகம் செய்வதும், இனி காலதாமதமின்றி நடைபெறும்.



## இணைப்பு VI.

[709 ஆம் பக்கத்தில் இனம் 6 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க]

(L. A. BILL No. 16 OF 1979.)

(As passed by the Assembly.)

Under rule 93 of the Tamil Nadu Legislative Assembly Rules the following Bill, which was introduced in the Legislative Assembly of the State on the 20th March 1979, is published together with Statement of Objects and Reasons for general information :—

A Bill to provide for the withdrawal of certain sums from and out of the Consolidated Fund of the State for the service of a part of the financial year commencing on the 1st April 1979.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows:—

1. Short title.—This Act may be called the Tamil Nadu Appropriation (Vote on Account) Act, 1979.

2. Withdrawal of certain sums from and out of the Consolidated Fund of the State for a part of the financial year commencing on the 1st April 1979.—The State Government may withdraw from and out of the Consolidated Fund of the State sums not exceeding two hundred and six crores, ten lakhs and seventy-six thousand rupees, being moneys required to meet—

(a) the grants made in advance by the Tamil Nadu Legislative Assembly for a part of the financial year commencing on the 1st April 1979 as set forth in column (3) of the Schedule; and

(b) the expenditure charged on the Consolidated Fund of the State for the same part of the same financial year, as set forth in column (4) of the Schedule.

3. Appropriation.—The sums authorized to be withdrawn from and out of the Consolidated Fund by this Act shall be appropriated for the services and purposes expressed in the Schedule in relation to the said year.

The Schedule.

| Demand number. | Services and purposes. | Sums not exceeding: Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | Rs. | Rs. | Rs. |
| 1 | Land Revenue Department .. .. | 81,21,000 | .. | 81,21,000 |
| 2 | State Excise Department .. .. | 12,55,000 | .. | 12,55,000 |
| 3 | Motor Vehicles Acts—Administration .. | 25,87,000 | 1,000 | 25,88,000 |
| 4 | General Sales Tax and other Taxes and Duties—Administration .. .. | 1,10,36,000 | 3,000 | 1,10,39,000 |
| 5 | Stamps—Administration .. .. | 11,63,000 | .. | 11,63,000 |
| 6 | Registration .. .. .. .. | 44,89,000 | 1,000 | 44,90,000 |
| | Debt Charges .. .. .. .. | .. | 15,16,53,000 | 15,16,53,000 |
| 7 | State Legislature .. .. .. | 12,94,000 | 11,000 | 13,05,000 |
| 8 | Elections .. .. .. .. | 3,63,000 | .. | 3,63,000 |
| 9 | Head of State, Ministers and Headquarters Staff .. .. .. .. .. | 2,41,66,000 | 13,99,000 | 2,55,65,000 |
| 10 | Milk Supply Schemes .. .. .. | 15,89,000 | .. | 15,89,000 |
| 11 | District Administration .. .. .. | 3,18,89,000 | 11,000 | 3,19,00,000 |
| 12 | Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. .. .. .. | 26,90,000 | 3,000 | 26,93,000 |
| 13 | Administration of Justice .. .. | 96,77,000 | 14,23,000 | 1,11,00,000 |
| 14 | Jails .. .. .. .. .. | 94,44,000 | 1,000 | 94,45,000 |
| 15 | Police .. .. .. .. .. | 6,43,31,000 | 4,000 | 6,43,35,000 |
| 16 | Fire Services .. .. .. .. | 48,06,000 | 1,000 | 48,07,000 |
| 17 | Education .. .. .. .. | 34,75,52,000 | 1,000 | 34,75,53,000 |
| 18 | Medical .. .. .. .. | 9,10,00,000 | .. | 9,10,00,000 |
| 19 | Public Health .. .. .. .. | 7,01,71,000 | 1,000 | 7,01,72,000 |
| 20 | Agriculture .. .. .. .. | 7,34,11,000 | 1,000 | 7,34,12,000 |
| 21 | Fisheries .. .. .. .. | 40,67,000 | 2,000 | 40,69,000 |
| 22 | Animal Husbandry .. .. .. | 1,94,29,000 | 1,000 | 1,94,30,000 |
| 23 | Co-operation .. .. .. .. | 1,21,04,000 | .. | 1,21,04,000 |
| 24 | Industries .. .. .. .. | 1,78,75,000 | 1,000 | 1,78,76,000 |
| 25 | Cinchona .. .. .. .. | 31,08,000 | .. | 31,08,000 |
| 26 | Handlooms and Textiles .. .. | 85,59,000 | .. | 85,59,000 |
| 27 | Khadi .. .. .. .. | 25,42,000 | .. | 25,42,000 |
| 28 | Community Development Projects, etc. .. | 6,81,61,000 | .. | 6,81,61,000 |
| 29 | Labour including Factories .. .. | 82,42,000 | 1,000 | 82,43,000 |
| 30 | Social Welfare .. .. .. .. | 1,15,76,000 | .. | 1,15,76,000 |
| 31 | Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. .. .. .. .. | 3,07,76,000 | 10,000 | 3,07,86,000 |
| 32 | Welfare of the Backward Classes, etc. .. | 1,17,40,000 | 1,000 | 1,17,41,000 |
| 33 | Housing .. .. .. .. | 1,60,99,000 | .. | 1,60,99,000 |
| 34 | Urban Development .. .. .. | 1,63,40,000 | .. | 1,63,40,000 |
| 35 | Civil Supplies .. .. .. .. | 81,40,000 | 6,000 | 81,46,000 |
| 36 | Irrigation .. .. .. .. | 3,76,14,000 | 2,000 | 3,76,16,000 |
| 37 | Public Works—Buildings .. .. | 46,45,000 | 22,000 | 46,67,000 |
| 38 | Public Works—Establishment and Tools and Plant .. .. .. .. | 1,20,14,000 | .. | 1,20,14,000 |
| 39 | Roads and Bridges .. .. .. | 5,89,52,000 | 1,000 | 5,89,53,000 |
| 40 | Road Transport Services and Shipping .. | 6,59,000 | 1,000 | 6,60,000 |
| 41 | Relief on account of Natural Calamities .. | 1,14,000 | 1,43,16,000 | 1,44,30,000 |
| 42 | Pensions and other Retirement Benefits .. | 4,98,42,000 | 4,52,000 | 5,02,94,000 |
| 43 | Miscellanious .. .. .. .. | 7,55,52,000 | 2,45,000 | 7,57,97,000 |
| 44 | Stationery and Printing .. .. .. | 1,37,32,000 | 84,000 | 1,38,16,000 |
| 45 | Forest Department .. .. .. | 90,32,000 | 1,000 | 90,33,000 |

The Schedule— cont.

| Demand Number. | Services and purposes. | Sums not exceeding — Voted by the Legislative Assembly. | Charged on the Cousolidated Fund of the State. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | Rs. | Rs. | Rs. |
| 46 | Compensations and Assignments .. | 2,59,97,000 | 3,75,000 | 2,63,72,000 |
| 47 | Information Tourism and Film Technology. | 23,86,000 | .. | 23,86,000 |
| 48 | Compensation to Zamindars .. .. | 1,33,000 | 1,000 | 1,34,000 |
| 49 | Capital Outlay on Public Health, Sanitation and Water-Supply .. .. .. | 80,000 | .. | 80,000 |
| 50 | Capital Outlay on Agriculture .. .. | 1,85,35,000 | 1,000 | 1,85.36,000 |
| 51 | Capital Outlay on Industrial Development. | 89,90,000 | 25,000 | 90,15,000 |
| 52 | Capital Outlay on Irrigation .. .. | 5,24,37,000 | .. | 5,24,37,000 |
| 53 | Capital Outlay on Public Works—Buildings. | 2,11,28,000 | 3,97,000 | 2,15,25,000 |
| 54 | Capital Outlay on Road and Bridges .. | 1,75,84,000 | 1,000 | 1,75,85,000 |
| 55 | Capital Outlay on Road Transport Services and Shipping .. .. .. | 9,59,000 | .. | 9,59,000 |
| 56 | Capital Outlay on Forests .. .. | 89,12,000 | .. | 89,12,000 |
| 57 | Miscellaneous Capital Outlay .. .. | 93,17,000 | 1,000 | 93,18,000 |
| 58 | Loans and Advances by the State Government .. .. .. .. | 19,07,25,000 | .. | 19,07,25,000 |
| | Public Dept—Repayment .. .. | .. | 27,14,84,000 | 27,14,84,000 |
| | GRAND TOTAL .. | 1,61,91,31,000 | 44,19,45,000 | 2,06,10,76,000 |

I certify that this is a Money Bill

MUNI.ADHI

*Speaker, Tamil Nadu Legislative Assembly*



## இணைப்பு VII.

*[720 ஆம் பக்கத்தில் இனம் 6 (2).க்கான அடிக்குறிப்பைக் காண்க]*

L. A. Bill No. 17 of 1979.

(AS PASSED BY THE ASSEMBLY.)

A Bill to provide for the appropriation of certain further moneys out of the Consolidated Fund of the State for the service of the financial year which commenced on the 1st April 1978.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows:—

1. Short title.—This Act may be called the Tamil Nadu Appropriation Act, 1979.

2. Supplementary appropriation out of the Consolidated Fund for the financial year which commenced on the 1st April 1978.—The State Government may appropriate out of the Consolidated Fund of the State for the financial year which commenced on the 1st April 1978, a further sum not exceeding one hundred and ninety-two crores eight lakhs and thirty-three thousand rupees being moneys required to meet—

(a) the supplementary grants made by the Tamil Nadu Legislative Assembly for that period, as set forth in column (3) of the Schedule; and

(b) the supplementary expenditure charged on the Consolidated Fund of the State for that period, as set forth in column (4) of the Schedule.

The Schedule.

(See section 2)

| Demand number. | Services and purposes. | Sums not exceeding — Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | Rs. | Rs. | Rs. |
| 1 | Land Revenue Department .. .. | 41,47,000 | .. | 41,47,000 |
| 2 | State Excise Department .. .. | 18,07,000 | .. | 18,07,000 |
| 3 | Motor Vehicles Acts—Administration .. | 10,22,000 | 1,000 | 10,23,000 |
| 4 | General Sales Tax and Other Taxes and Duties—Administration .. .. | 49,64,000 | .. | 49,64,000 |
| 5 | Stamps—Administration .. .. | 3,55,000 | .. | 3,55,000 |
| 6 | Registration .. .. .. .. | 9,88,000 | .. | 9,88,000 |
| 7 | State Legislature .. .. .. | 11,01,000 | 73,000 | 11,74,000 |
| 8 | Elections .. .. .. .. | 11,69,000 | .. | 11,69,000 |
| 9 | Head of State, Ministers and Headquarters Staff .. .. .. .. | 2,23,60,000 | .. | 2,23,60,000 |
| 10 | Milk Supply Schemes .. .. .. | .. | 14,000 | 14,000 |
| 11 | Dissrict Administration .. .. | 1,02,74,000 | 53,000 | 1,03,27,000 |
| 12 | Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. .. .. .. | 12,55,000 | 12,000 | 12,67,000 |
| 13 | Administration of Justice .. .. | 85,37,000 | 16,32,000 | 1,01,69,000 |
| 15 | Police .. .. .. .. | 1,75,16,000 | .. | 1,75,16,000 |
| 17 | Education .. .. .. .. | 11,43,24,000 | . | 11,43,24,000 |
| 18 | Medical .. .. .. .. | 5,000 | .. | 5,000 |
| 19 | Public Health .. .. .. .. | 3,84,71,000 | .. | 3,84,71,000 |
| 20 | Agriculture .. .. .. .. | 4,14,000 | .. | 4,14,000 |
| 21 | Fisheries .. .. .. .. | 1,65,47,000 | 73,000 | 1,66,20,000 |
| 22 | Animal Husbandry .. .. .. | 12,18,000 | 12,000 | 12,30,000 |
| 23 | Co-operation .. .. .. .. | 1,85,25,000 | .. | 1,85,25,000 |
| 24 | Industries .. .. .. .. | 3,81,82,000 | .. | 3,81,82,000 |
| 25 | Cinchona .. .. .. .. | 23,80,000 | .. | 23,80,000 |
| 26 | Handlooms and Textiles .. .. | 2,06,53,000 | .. | 2,06,53,000 |
| 27 | Khadi .. .. .. .. .. | 85,52,000 | .. | 85,52,000 |
| 28 | Community Development Projects, etc. .. | 1,50,45,000 | 40,000 | 1,50,85,000 |
| 29 | Labour including Factories .. .. | 32,66,000 | .. | 32,66,000 |
| 30 | Social Welfare .. .. .. .. | 4,000 | .. | 4,000 |
| 31 | Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. .. .. .. | 64,38,000 | .. | 64,38,000 |
| 32 | Welfare of Backward Classes, etc. .. | 1,000 | .. | 1,000 |
| 35 | Civil Supplies .. .. .. .. | 20,25,000 | 30,000 | 20,55,000 |
| 36 | Irrigation .. .. .. .. | 3,66,35,000 | 17,000 | 3,66,52,000 |
| 37 | Public Works—Buildings .. .. | 2,17,37,000 | 7,54,000 | 2,24,91,000 |
| 38 | Public Works—Establishment and Tools and Plant .. .. .. .. | 2,81,00,000 | .. | 2,81,00,000 |
| 39 | Roads and Bridges .. .. .. | 8,49,50,000 | .. | 8,49,50,000 |
| 40 | Road Transport Services and Shipping .. | 1,000 | 5,06,000 | 5,07,000 |
| 41 | Relief on account of Natural Calamities .. | 1,36,88,000 | .. | 1,36,88,000 |
| 42 | Pension and other Retirement Benefits .. | 2,50,18,000 | .. | 2,50,18,000 |
| 43 | Miscellaneous .. .. .. .. | 1,000 | 66,000 | 67,000 |
| 44 | Stationery and Printing .. .. .. | .. | 3,13,000 | 3,13,000 |
| 45 | Forest Department .. .. .. | 38,34,000 | 1,000 | 38,35,000 |
| 46 | Compensation and Assignments .. .. | 2,14,14,000 | 2,000 | 2,14,16,000 |

The Schedule—cont.

(See section 2)—cont.

| Demand number. | Services and purposes. | Sums not exceeding. Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | Rs. | Rs. | Rs. |
| 47 | Information, Tourism and Film Technology. | 14,74,000 | .. | 14,74,000 |
| 48 | Compensation to Zamindars .. .. | 9,93,000 | .. | 9,93,000 |
| 50 | Capital Outlay on Agriculture .. .. | 1,000 | .. | 1,000 |
| 51 | Capital Outlay on Industrial Development. | 1,30,23,000 | .. | 1,30,23,000 |
| 53 | Capital Outlay on Public Works—Buildings. | 6,000 | .. | 6,000 |
| 54 | Capital Outlay on Roads and Bridges .. | .. | 1,00,000 | 1,00,000 |
| 55 | Capital Outlay on Road Transport Services and Shipping .. .. .. | 3,45,46,000 | .. | 3,45,46,000 |
| 56 | Capital Outlay on Forests .. .. | 1,71,22,000 | .. | 1,71,22,000 |
| 57 | Miscellaneous Capital Outlay .. .. | 13,86,72,000 | 87,000 | 13,87,59,000 |
| 58 | Loans and Advances by the State Government .. .. .. .. | 1,11,42,87,000 | .. | 1,11,42,87,000 |
| | GRAND TOTAL .. | 1,91,70,47,000 | 37,86,000 | 1,92,08,33,000 |

I certify that this is a Money Bill

MUNU ADHI
*Speaker*
*Tamil Nadu Legislative Assembly.*



## இணைப்பு VIII

[72 ஆம் பக்கத்தில் இனம் 6 (3) க்கான அடிக்குறிப்பைக் காண்க]

L. A. Bill No. 18 of 1979.

AS PASSED BY THE ASSEMBLY.

A Bill to provide for the authorisation of appropriation of moneys out of the Consolidated Fund of the State to meet the amounts spent on certain services during the financial year ended on the 31st day of March 1972, in excess of the amounts authorised or granted for the said services.

Be it enacted by the Legislature of the Statf of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows —

1. Short title.—This Act may be called the Tamil Nadu Appropriation (No. 2) Act, 1979.

2. Issue of Rs, 7,62,54,042 out of the Consolidated Fund of the State for the financial year ended on the 31st March 1972.—The sums specified in column (5) of the Schedule amounting in the aggregate to the sum of seven crores, sixty-two lakhs, fifty-four thousand and forty-two rupees shall be deemed to have been authorised to be paid and applied from and out of the Consolidated Fund of the State to meet the amounts spent for defraying the charges in respect of the services and purposes specified in column (2) of the Schedule during the financial year ended on the 31st day of March 1972, in excess of the amounts authotised or granted for those services and purposes for that year.

3. Appropriation.—The sums deemed to have been authorised to be paid and applied from and out of the Consolidated Fund of the State under this Act shall be appropriated and shall be deemed to have been appropriated for the services and purposes specified in the Schedulə in relation to the financial year ended on the 31st day of March 1972.

The Schedule.
(See section 2 and 3)

| Demand number. | Services and purposes. | Sums: Voted by the Legislative Assembly. | Sums: Charged on the Consolidated Fund of the State. | Sums: Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | Rs. | Rs. | Rs. |
| 3 | General Sales Tax and Other Taxes and Duties Administration .. .. | 6,10,040 | .. | 6,10,040 |
| 6 | State Legislature .. .. .. | 25,608 | 8,122 | 33,730 |
| 7 | Elections .. .. .. .. | 3,49,208 | .. | 3,49,208 |
| 8 | Head of State, Ministers and Headquarters Staff .. .. .. .. | .. | 53,356 | 53,356 |
| 10 | Administration of Justice .. .. | .. | 5,06,289 | 5,06,289 |
| 11 | Jails .. .. .. .. .. | 10,40,589 | .. | 10,40,589 |
| 13 | Education .. .. .. .. | .. | 6,802 | 6,802 |
| 14 | Medical .. .. .. .. | 91,19,326 | .. | 91,19,326 |
| 16 | Agriculture .. .. .. .. | 88,57,504 | .. | 88,57,504 |
| 20 | Industries .. .. .. .. | .. | 24,761 | 24,761 |
| 22 | Community Development Projects, etc. .. | 5,96,447 | .. | 5,96,447 |
| 23 | Irrigation .. .. .. .. | 11,11,793 | .. | 11,11,793 |
| 27 | Public Works—Works .. .. .. | 1,05,13,810 | .. | 1,05,13,810 |
| 29 | Public Works Grants-in-aid .. .. | 7,79,892 | ... | 7,79,892 |
| 31 | Famine Relief .. .. .. | 1,16,14,748 | .. | 1,16,14,748 |
| 32 | Pensions .. .. .. .. | 15,82,316 | 5,95,185 | 21,77,501 |
| 34 | Stationery and Printing .. .. | .. | 1,863 | 1,863 |
| 35 | Forest Department .. .. .. | .. | 46 | 46 |
| 36 | Other Miscellaneous Compensations and Assignments .. .. .. | 71,87,204 | .. | 71,87,204 |
| 43 | Capital Outlay on Road Transport Schemes | 2,11,97,735 | .. | 2,11,97,735 |
| 44 | Capital Outlay on Forests .. .. | 3,70,573 | .. | 3,70,573 |
| 45 | Commuted Value of Pensions .. .. | 1,00,825 | .. | 1,00,825 |
| | Grand Total .. | 7,50,57,618 | 11,96,424 | 7,62,54,042 |

certify that this is a Money Bill.

MUNU ADHIk,
Speaer
Tamil Nadu Legislative Assembly

# INDEX TO TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

## FIFTY-FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

*17th and 19th to 24th March* 1979.

VOLUME CLIX (Nos 1 TO 7.)

## A


PAGES.

ABDUL WAHAB, THIRU K. S.—

Bills—

Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1979 ... ... 157—158

Preservation of Private Forests (Amendment) Bill, 1979 and Preservation of Private Forests (Extension to Kanyakumari District) Bill, 1979. 511—514

Prohibition (Amendment) Bill, 1979 ... ... 62—65, 76

Kerosene and cooking gas, calling Minister's attention to non-availability of ... ... ... 680—681

Supplementary Statement of Expenditure for 1978-79 (Final) and Statement of Demands for Grants for Excess Expenditure for 1971-72, discussion on ... ... ... ... ... ... 443—448

ADJOURNMENT MOTION *re*—

Agitation by Non-Gazetted Government Officers ... 609—613

Arrest of agriculturists in Salem, Coimbatore and Pudukkottai districts and fasting by Balasubramaniam, General Secretary of Agriculturists' Association ... ... ... ... ... 427—429

PAGES.

A—*cont.*

ADJOURNMENT MOTION *re*—*cont.*

Arrest of General Secretary and volunteers of Dravidar Kazhagam ... ... ... ... 654—656

Courts in Tamil Nadu, non-functioning of ... 672—675

Fast by teachers in Madras on behalf of Graduate Teachers' Association and by elementary school teachers in District Headquarters ... ... 657—671

Fasting by teachers of Panchayat Union Middle Schools in front of Thanjavur Collectorate ... 429—433

Lawyers, agitation by ... ... ... ... ... 216—241

Students of Law College, Madurai, assault on ... 424—427

Tamil Nadu Civil Supplies Corporation, strike by employees ... ... ... ... ... 311—318

Wimco Match Factory, retrenchment of workers in. 318—320

AGITATION—

Adjournment motion *re*—by Non-Gazetted Government Officers ... ... ... ... ... 609—613

AGRICULTURISTS—

Adjournment motion *re* arrest of—in Salem, Coimbatore and Pudukkottai districts and fasting by Balasubramanian, General Secretary of—Association ... ... ... ... ... ... 427—429

APPROPRIATION BILL, 1979—

*See* Bills.

APPROPRIATION (No. 2) BILL, 1979—

*See* Bills.

APPROPRIATION (VOTE ON ACCOUNT) BILL, 1979—

*See* Bills.

ARANGANAYAGAM, THE HON. THIRU C.—

Adjournment motion *re* fast by teachers in Madras on behalf of Graduate Teachers' Association and by elementary school teachers in District Headquarters ... ... ... ... ... 665—671



PAGES.

A—*cont.*

ARANGANAYAGAM, THE HON. THIRU C.—*cont.*

'B' Wing Schools, statement *re* delay in regularisation of services and sanctioning of annual increments to teachers appointed from 1st April 1970 in 616, 617, 618, 619

Budget for 1979-80, general discussion on ... 382

Local Library Authority in South Arcot district, statement *re* non-payment of salary to staff of ... 619, 620

Oriental Colleges, statement *re* non-recognition of—, non-receipt of Government grant and non-payment of U.G.C. scales ... ... ... ... 321—322

Teachers in Parali Power Station, Coimbatore, statement *re* non-payment of Hill allowance to ... 620—621

ARIVAZHAGAN, THIRU K.—

Bill—Prohibition (Amendment) Bill, 1979 ... 18, 43, 48, 50, 82

ARREST—

Adjournment motion *re*—of General Secretary and volunteers of Dravidar Kazhagam ... ... ... 654—656

ARUMUGAM, THIRU S.—

Bill—Co-operative Societies (Amendment) Bill, 1979 ... ... ... ... ... ... ... 274, 281

Budget for 1979-80, general discussion on ... ... 708

ASSURANCES COMMITTEE—

*See* Committees.

B

BALASEVIKAS—

Minister's attention called to payment of fixed pay and grant of maternity leave to ... ... 496—497

BALASUBRAMANIAM, THIRU A.—

Adjournment motion *re*—

Agitation by Non-Gazetted Government Officers. 610

Arrest of agriculturists in Salem, Coimbatore and Pudukkottai districts and fasting by Balasubramaniam, General Secretary of Agriculturists' Association ... ... ... ... ... ... 427—428

PAGES.

B—*cont.*

BALASUBRAMANIAM, THIRU A.—*cont.*

Adjournment motion *re*—cont.

Fasting by teachers of Panchayat Union Middle Schools in front of Thanjavur Collectorate ... 431

Students of Law College, Madurai, assault on ... 425—426

Bills—

Preservation of Private Forests (Amendment) Bill, 1979 and Preservation of Private Forests (Extension to Kanyakumari District) Bill, 1979. 515

Prohibition (Amendment) Bill, 1979 ... ... 39—42, 64

Government Hospital at Sendamangalam, Namakkal Taluk, calling Minister's attention to non-posting of Lady Doctor to ... ... ... ... ... 242

Information *re* adjournment motion *re* fast by Secretary, Tamil Nadu Agriculturists' Association before Salem Collectorate ... ... ... 608—609

Kerosene and cooking gas, calling Minister's attention to non-availability of ... ... ... 680—681

BILLS—

Appropriation Bill, 1979—

Considered and returned to Assembly ... ... 720—721

Message from the Assembly *re* ... ... ... 652

Message from the Governor *re* ... ... ... 652

Appropriation (No. 2) Bill, 1979—

Considered and returned to Assembly ... ... 721—722

Message from the Assembly *re* ... ... ... 652

Message from the Governor *re* ... ... ... 652

Appropriation (Vote on Account) Bill, 1979—

Considered and returned to Assembly ... ... 709—720

Catering Establishments (Amendment) Bill, 1979—

Considered and passed ... ... ... ... 553—554

Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Amendment Bill, 1979—

Considered and passed ... ... ... ... 171—172



PAGES.

B—*cont.*

BILLS—*cont.*

Co-operative Societies (Amendment) Bill, 1979—

Considered and passed ... ... ... ... 244—283

Dramatic Performances (Amendment) Bill, 1979—

Considered and passed ... ... ... ... 526—554

Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1979—

Considered and passed ... ... ... ... 98—113

Madras City Municipal Corporation (Amendment) Bill, 1979—

Considered and passed ... ... ... ... 172—173

Motor Vehicles Taxation (Amendment) Bill, 1979—

Considered and passed ... ... ... ... 113—130

Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1979—

Considered and passed ... ... ... ... 130—170

Preservation of Private Forests (Amendment) Bill, 1979—

Considered and passed ... ... ... ... 501—525

Preservation of Private Forests (Extension to Kanyakumari District) Bill, 1979—

Message from the Assembly *re* ... ... ... 216

Prohibition (Amendment) Bill, 1979—

Considered and passed ... ... ... ... 2—96

BILLS, AS PASSED BY THE ASSEMBLY, LAID ON THE TABLE—

Appropriation Bill, 1979 ... ... ... ... 723

Appropriation (No. 2) Bill, 1979 ... ... 723

Appropriation (Vote on Account) Bill, 1979 ... 568

Catering Establishments (Amendment) Bill, 1979. 173

PAGES.

B—*cont.*

BILLS AS PASSED BY THE ASSEMBLY, LAID ON THE TABLE—*cont.*

Dramatic Performances (Amendment) Bill, 1979. 173

Preservation of Private Forests (Extension to Kanyakumari District) Bill, 1979 ... ... 283

BOOKS AND PUBLICATIONS—

Question *re*—

History and Economics Text-books for Higher Secondary Schools published by Tamil Nadu Text Book Society, complaint *re* certain objectionable matters in ... ... ... ... 590—594

Text-books for High School students, constitution of Committee to review standard of lessons prescribed in ... ... ... ... 589—590

BOOKS, SLATES AND DRESSES TO STUDENTS—

Question *re* stoppage of the supply of—and in case of Midday meal students studying in Standards I to III ... ... ... ... ... ... 634—637

BREWERIES—

Question *re* quantum of arrack brewed in Tamil Nadu by ... ... ... ... ... 604—606

BUCKINGHAM CANAL—

Question *re* recommendations of Tamil Nadu Government to Central Government for improvement of ... ... ... ... ... ... 596—600

BUDGET FOR 1979-80—

Announcement *re* speech of Leader of the Opposition on ... ... ... ... ... ... 500

General discussion on ... ... ... ... 328—359, 685—708



PAGES.

B—*cont.*

BUS-STAND—

Question *re* lack of adequate convenience at—at Villupuram, South Arcot district ... ... 484—487

BUSINESS ADVISORY COMMITTEE—

*See* Committees.

BUSINESS OF THE HOUSE—

Transaction of Government Business on a Private Members' day ... ... ... ... ... 1—2

C.

CEMETERIES—

Question *re* Christian—, desecration and vandalism committed in ... ... ... ... ... 181—182

CERAMIC BRICK (TILES) INDUSTRIES—

Question *re* borrowal from Tamil Nadu Industrial Investment Corporation Limited ... ... 414—419

CHAIRMAN, MR.—

Adjournment motion *re*—

Agitation by Non-Gazetted Government Officers. 609, 613

Arrest of agriculturists in Salem, Coimbatore and Pudukkottai districts and fasting by Balasubramaniam, General Secretary of Agriculturists' Association ... ... ... ... ... 427, 429

Arrest of General Secretary and volunteers of Dravidar Kazhagam ... ... ... ... 654, 656

Courts in Tamil Nadu, non-functioning of ... 672, 675

Fast by teachers in Madras on behalf of Graduate Teachers' Association and by elementary school teachers in District Headquarters ... ... 657, 659, 663, 671

Fasting by teachers of Panchayat Union Middle Schools in front of Thanjavur Collectorate ... 429, 433

Lawyers, agitation by ... ... ... ... 216, 223, 226, 227, 239, 241

C—*cont.*


**CHAIRMAN**, MR.—*cont.*

Adjournment motion *re*—*cont.*

PAGES.

Students of Law College, Madurai, assault on ... 424, 427

Tamil Nadu Civil Supplies Corporation, strike by employees ... ... ... ... ... 311, 318

Wimco Match Factory, retrenchment of workers in 318, 319, 320

Announcement *re*—

Budget for 1979-80, speech of Leader of the Opposition on ... ... ... ... 500

Business Advisory Committee's decisions ... 96—98

Message from the Assembly *re*—

Appropriation Bill, 1979 ... ... ... 652

Appropriation (No. 2) Bill, 1979 ... ... 652

Preservation of Private Forests (Extension to Kanyakumari District) Bill, 1979 ... ... 216

Message from the Governor *re*—

Appropriation Bill, 1979 ... ... ... 652

Appropriation (No. 2) Bill, 1979 ... ... 652

Assurances Committee, nomination of Members to. 654

Bills—

Appropriation (Vote on Account) Bill, 1979.

Dramatic Performances (Amendment) Bill, 1979. 526

Essential Articles, Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1979. 99, 110, 112, 113

Prohibition (Amendment) Bill, 1979 ... ... 5, 7, 20, 21, 24, 44, 45, 46, 47, 48, 50, 62, 70, 76, 80, 82, 90, 92—93, 95




PAGES.

C—*cont.*


CHAIRMAN, MR.—*cont.*

Bills—*cont.*

Budget for 1979-80, general discussion on ... ... 694

Business Advisory Committee, nomination of Members to ... ... ... ... ... 652—653

Call attention Notices, postponement of ... ... 1

Information *re* adjournment motion, taking up of 608—609

Prayer for good health of Thiru Jayaprakash Narayan ... ... ... ... ... 395

Privilege issue *re* Pallavan Transport Express Bus, denial of seats to certain M.L.C's at Tindivanam. 491—492, 493, 494, 495, 496.

Rules Committee, nomination of Members to ... 653

Supplementary Statement of Expenditure for 1978-79 (Final) and Statements of Demands for Grants of Excess Expenditure for 1971-72, discussion on 455, 456, 457, 460, 461.

CHIEF EDUCATIONAL OFFICER—

Question *re* districts for which—not appointed ... 630—631

COIMBATORE MUNICIPAL COUNCIL (APPOINTMENT OF SPECIAL OFFICER) AMENDMENT BILL, 1979—

*See* Bills

COLLEGES—

Oriental Colleges, Minister's attention called to non-recognition of—, non-receipt of Government grant, and non-receipt of U.G.C. scale ... ... 321—322

Question *re*—

Aided College teachers, non-sanction of gratuity to ... ... ... ... ... ... 477—478

PAGES.

C—*cont.*


COLLEGES—*cont.*

Question *re*—*cont.*

College for Unani Medicine in Tamil Nadu, opening of ... ... ... ... ... 208—213

Engineering—,number of applicants belonging to forward communities, backward classes and Scheduled Castes and Tribes for admission during 1978-79 and number selected ... ... 203—208

Government—in Madras City, closure of admission prior to last date notified for receipt of applications ... ... ... ... ... ... 201—202

Government Arts College, Salem, students' strike because of non-appointment of teachers till end of July 1978 .... ... ... ... 293

Madurai Medical College students, complaint about assault in hostel mess during August 1977 395—396

Ragging in Thanjavur Medical College, number of students affected in the riot following ... 310—311

COMMITTEES—

Assurances Committee—

Nomination of Members to ... ... 654

Presentation of XXXII Report ... ... 2

Business Advisory Committee—
Decision of ... ... ... ... 96—98, 360

Nomination of Members to ... ... ... 652—653

Estimates Committee, Seventh Report on Village and Small Industries including Industrial Estates, laid on the table ... ... ... ... ... 723

Privileges Committee approval of report of ... 328

Rules Committee, nomination of Members to ... 653




PAGES.

C—*cont.*


COMPULSORY RETIREMENT—

Question *re* guidelines from Central Government *re* reinstatement of Government Officers compulsorily retired during Emergency ... ... 182—190

CONTRACT LABOUR (REGULATION AND ABOLITION) RULES, 1975—

Amendment to—, notification laid on the table ... 468

COOKING GAS—

Kerosene and—, Minister's attention called to non-availability of ... ... ... ... 678—682

CO-OPERATIVE BANK—

Madurai District Central—, Minister's attention called to hunger strike protesting against retrenchment of employees in ... ... ... 676—677

CO-OPERATIVE INSTITUTIONS—

Question *re* cases registered on corruption charges, prior to 30th June 1977 ... ... ... ... 577—582

CO-OPERATIVE SOCIETIES—

Cuddalore Co-operative Housing Society, South Arcot district, Minister's attention called to delay in sanction of loan applications sent by— to Tamil Nadu Co-operative Housing Society, Madras ... ... ... ... ... ... 683—685

CO-OPERATIVE SOCIETIES (AMENDMENT) BILL, 1979—

*See* Bills 71

COUNCIL RULES—

Suspension of rule 42 (5) *re* call-attention notices. 614

PAGES.

C—*cont.*

COURTS—

Adjournment motion *re* non-functioning of—in Tamil Nadu ... ... ... ... 672—675

CUDDALORE CO-OPERATIVE HOUSING SOCIETY—

*See* Co-operative Societies

D

DAMODARAN, THIRU A. R.—

Bills—

Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1979. 194

Motor Vehicles Taxation (Amendment) Bill, 1979. 114—118

Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1979 ... ... 151—155

Prohibition (Amendment) Bill, 1979 ... 44, 45, 86, 87.

Budget for 1979-80, general discussion on ... 694

Cuddalore Co-operative Housing Society, South Arcot district, calling Minister's attention to delay in sanctioning of loan applications sent by—to Tamil Nadu Co-operative Housing Society, Madras ... ... ... ... ... 683—685

Kerosene and cooking gas, calling Minister's attention to non-availability of ... ... ... 681—682

Oriental Colleges, calling Minister's attention to non-recognition of—. non-receipt of Government grant and non-payment of U.G.C. scales ... 321—322

DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE FOR 1974-72—

Presentation of Statement ... ... ... ... 327—328

DOCKYARD—

Question *re* setting up of— in Tamil Nadu ... 643—645



PAGES.

D—*cont.*

DEPUTY CHAIRMAN, MR.—

Announcement *re* Business Advisory Committee, decision of ... ... ... ... 360

Bills—

Catering Establishments (Amendment) Bill, 1979 ... ... ... ... ... 554

Co-operative Societies (Amendment) Bill, 1979. 256, 268, 270, 279, 281, 282, 283.

Budget for 1979-80, general discussion on ... 339, 340, 342, 354, 357, 360, 361, 365, 371, 374, 378, 379, 380, 381, 385, 386, 387, 388, 389.

DOCKYARD—

Question *re* setting up of— in Tamil Nadu ... 543—645

DOCTOR(S)—

Non-posting of Lady— to Government Hospital at Sendamangalam, Minister's attention called to 242

Question *re* private practice by— in Government service ... ... ... ... ... 306—310

PAGES.

D—*cont.*

DRAVIDAMANI, THIRU A.—

Bills—

Dramatic Performances (Amendment) Bill, 1979. ... 545—547

Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1979 ... ... 141—144

Yarn, calling Minister's attention to accumulation of handloom stocks due to sudden rise in price of— of 40, 60 and 80 counts ... ... 497, 498, 499

E

ELECTRICITY—

Question *re*—

Hydro Power Station at Mettur, setting up of one more ... ... ... ... 399—400

Small farmers using— in Tirunelveli district, number of ... ... ... ... 582—583

ELECTRICITY BOARD, TAMIL NADU—

Audit Report on Annual Accounts for 1977-78, laid on the table ... ... ... ... 625

ESSENTIAL ARTICLES CONTROL AND REQUISITIONING (TEMPORARY POWERS) AMENDMENT BILL, 1979—

*See* Bills

F

FARMERS—

Question *re* small— using electricity in Tirunelveli district, number of ... ... ... 582—583



PAGES.

G

G.O. Ms. No. 992, LABOUR AND EMPLOYMENT, DATED 30TH AUGUST 1978, PUBLISHED IN NO. II(2) LC| 4408(a)|78 AT PART II—SECTION 2 OF TAMIL NADU GOVERNMENT GAZETTE.

Errata to—, notification laid on the table ... 723

GANDHI MEMORIAL MUSEUM, MADURAI—

Question *re* complaints of misuse of funds, ill-treatment of Harijans and harassment of staff by administration of—, Madurai ... ... 297—299

GOVERNMENT SERVANTS—

Question *re* reinstatement of—compulsorily retired during Emergency, guidelines from Central Government *re*— and enquiry ... ... 182—190

H

HARIJANS—

Death of Harijan girl in Naduppati village in Salem district, Minister's attention called to mysterious ... 614—615

HEALTH OFFICERS—

Question *re* giving Selection Grade and promotion to—, transferred from Travancore Cochin State. ... 213—215

HINDUSTAN TELEPRINTERS, MADRAS—

Minister's attention called to strike from 13th March 1979 by workers of ... ... ... 622—624

PAGES.

H—*cont.*

HOSPITAL(S) AND DISPENSARIES—

Question *re*—

Government—at Thirukkannapuram, Thanjavur district, stay of Doctor (Medical Officer) in ... 602—604

Government Hospital at Namakkal, complaint about irregularities in—around 25th October 1977 ... ... ... ... ... 600—602

HOUSING—

Question *re* houses owned by Housing Board in Madras, making tenants owners of ... 488—490

I

INFORMATION *re*—

Adjournment motion, taking up of ... 608—609

IRRIGATION—

Question *re* maramath works in Thovalai channel, N.P. channel, P.P. channel, and Pattanam channel not carried out for last few years ... ... 410—412

J

JAYAPRAKASH NARAYAN, THIRU—

Prayer for good health of ... ... ... 397

K

KALIMUTHU, THE HON. THIRU K.—

Adjournment motion *re* fasting by teachers of Panchayat Union Middle Schools in front of Thanjavur Collectorate ... ... ... 432



PAGES.

K—*cont.*

KALIMUTHU, THE HON. THIRU K.—*cont.*

Bills—

Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Amendment Bill, 1979 ... 171

Madras City Municipal Corporation (Amendment) Bill, 1979 ... ... 173

Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1979 ... 130, 164—169, 170, 171.

Madras City Corporation School at Kumaramangalam Colony, statement *re* collapse of building and injury to two girl students ... ... 433—434

Resolution *re* areas covered by Tiruverkadu, Veeraraghavapuram, etc., Panchayats, declaration as a Township ... ... ... ... 500

KEROSENE—

Minister's attention called to non-availability of—and cooking gas ... ... ... 678—682

KRISHNASAMY, The Hon. Thiru K. A.—

Bill— Co-operative Societies (Amendment) Bill, 1979 ... ... ... ... ... 244, 272—282.

Madurai District Central Co-operative Bank, statement *re* hunger strike protesting against retrenchment of employees in ... ... ... ... 676, 677

PAGES.

L

LAKSHMIKANDHAN, THIRU C. R.—

Adjournment motion *re*— 609, 610

Agitation by Non-Gazetted Government Officers

Fast by teachers in Madras on behalf of Graduate Teachers Association and by elementary school teachers in District Headquarters ... 657—658

Lawyers, agitation by ... ... ... ... 220

'B'—Wing Schools, calling Minister's attention to delay in regularisation of services and sanctioning of annual increments for teachers appointed from 1st April 1970 in former ... ... ... ... 618—619

Bills—

Co-operative Societies (Amendment) Bill, 1979. 263—265

Dramatic Performances (Amendment) Bill, 1979. 537—540

Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1979 ... ... 136—141

Preservation of Private Forests (Amendment) Bill, 1979, and Preservation of Private Forests (Extension to Kanyakumari District) Bill, 1979 ... ... ... ... ... ... 510—511

Prohibition (Amendment) Bill, 1979 ... 8—12, 13

Higher Secondary Schools under Harijan Welfare Department, calling Minister's attention to non-supply of text-books and note-books to students of XI Standard ... ... ... ... 242—244

Local Library Authority in South Arcot district, calling Minister's attention to non-payment of salary to staff of ... ... ... 619, 620

Privilege issue *re* Pallavan Transport Express Bus, denial of seats to certain M.L.C.'s at Tindivanam. 494, 495

Teachers of Higher Secondary Schools under Harijan Welfare Department, calling Minister's attention to reversion of—and appointment afresh from outside ... ... ... ... 322, 323



PAGES.

L—*cont.*

LAND(S)—

Question *re* wet lands, survey and classification of—as dry lands in each taluk in South Arcot district after and before 1st July 1977 ... ... ... 607—608

LAWYERS—

Adjournment motion re agitation by ... 216—241

LOCAL LIBRARY AUTHORITY IN SOUTH ARCOT DISTRICT—

Minister's attention called to non-payment of salary to staff of ... ... ... ... 619—620

M

MADRAS AND MADURAI CORPORATIONS—

Question *re* collection of property tax at enhanced rate fixed during quinquennial revision by— in spite of directions issued by Government to the contrary ... ... ... ... 633—634

MADRAS CITY MUNICIPAL CORPORATION (AMENDMENT) BILL, 1979—

*See* Bills

MADURAI CORPORATION—

Question *re* total income and expenditure of—during 1976-77 and 1977-78 ... ... ... 631—632

MADURAI DISTRICT CENTRAL CO-OPERATIVE BANK—

*See* Co-operative Bank(s)

MANDAKINI KRISHNAMURTHI, THIRUMATHI—

Bill—Dramatic Performances (Amendment) Bill, 1979 ... ... ... ... ... 536—537

PAGES

M—*cont.*


MANICKAM, Thiru P.—

Adjournment motion *re* lawyers, agitation by ... 229—230

Bills—

Appropriation (Vote on Account) Bill, 1979 ... 714—725
Catering Establishments (Amendment) Bill, 1979. 561, 566
Co-operative Societies (Amendment) Bill, 1979. 256—257
Prohibition (Amendment) Bill, 1979 ... ... 53—58

MANOHARAN, The Hon. Thiru K.—

Bills—

Appropriation Bill, 1979 ... ... ... 720, 721
Appropriation (No. 2) Bill, 1979 ... 721, 722
Appropriation (Vote on Account) Bill, 1979 709, 718—720.

Budget for 1979-80, general discussion on ... 685—708
Statement of Demands for Grants for Excess Expenditure for 1971-72, presentation of ... 327—328

Statement of Supplementary Expenditure (Final), presentation of ... ... ... ... ... 325—327

Statement of Supplementary Expenditure for 1978-79 (Final) and Statement of Demands for Grants for Excess Expenditure for 1971-72, discussion on ... ... ... ... 461—466

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—

'B'—Wing Schools, calling attention to delay in regularisation of services and sanctioning of annual increments to teachers appointed from 1st April 1970 in ... ... ... ... 615—619

Balasevikas, calling attention to payment of fixed pay and grant of maternity leave to ... 496—497




PAGES

M—*cont.*


MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—*cont.*

Cuddalore Co-operative Housing Society, South Arcot district, calling attention to delay in sanction of loan applications sent by—to Tamil Nadu Co-operative Housing Society, Madras ... 683—685
Death of Harijan girl in Naduppatti village in Salem district, calling attention to mysterious ... ... 614—615
Government Hospital at Sendamangalam, Namakkal Taluk, calling attention to non-posting of Lady Doctor to ... ... ... ... 242
Higher Secondary Schools under Harijan Welfare Department, calling attention to non-supply of text-books and note-books to students of XI Standard ... ... ... ... ... 242—244
Hindustan Teleprinters, Madras, calling attention to strike from 13th March 1979 by workers ... 622—624
Kerosene and cooking gas, calling attention to non-availability of ... ... ... ... 678—682
Local Library Authority in South Arcot district, calling attention to non-payment of salary to staff of ... ... ... ... ... 619—620
Madras City Corporation School at Kumaramangalam Colony, calling attention to collapse of building and injury to two girl students ... 433—434
Madurai District Central Co-operative Bank, calling attention to hunger strike protesting against retrenchment of employees in ... 676—677
Narendra Dairy Farm, Pappanpatti, Madurai district, calling attention to harassment of farmers cultivating surplus lands belonging to—by officials demanding rent ... ... ... ... ... 677—678
Oriental Colleges, calling attention to non-recognition of—, non-payment of Government grant and non-payment of University Grants Commission Scale ... ... ... ... 321—322
Rameswaran Island, calling attention to death of 20 persons due to outbreak of new kind of fever in ... ... ... ... ... 435

PAGES.

M—*cont.*


MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—*cont.*

T.V.S. Units, Madras, calling attention to Dharna staged by workers of— in front of office of Commissioner of Labour, Madras from 7th to 9th March 1979 ... ... ... ... ... 682—683

Teachers in Parali Power Station, Coimbatore, calling attention to non-payment of Hill allowance to ... ... ... ... ... 620—621

Teachers of Higher Secondary Schools under Harijan Welfare Department, calling attention to reversion of— and appointment afresh from outside ... ... ... ... ... 322—324

Yarn, calling attention to accumulation of handloom stocks due to sudden rise in price of—of 40, 60 and 80 counts ... ... ... ... 497—477

MEENAKSHISUNDARAM, Thiru K.—

Adjournment motion *re*—

Agitation by Non-Gazetted Government Officers. 610—611

Fast by teachers in Madras on behalf of Graduate Teachers' Association and by elementary school teachers in District Headquarters ... 660—662

Fast by teachers of Panchayat Union Middle Schools in front of Thanjavur Collectorate ... 429—451

Lawyers, agitation by ... ... ... 227, 228, 241.

Tamil Nadu Civil Supplies Corporation, strike by employees ... ... ... ... 312—313

Wimco Match Factory, retrenchment of workers in 319

Bills—

Co-operative Societies (Amendment) Bill, 1979. 248—249

Dramatic Performances (Amendment) Bill, 1979. 540—542, 543—544, 545

Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1979 ... ... 144—147




PAGES

M—*cont.*


MEENAKSHISUNDARAM, THIRU K.—cont

Budget for 1979-80, general discussion on ... ... 699, 700

Kerosene and cooking gas, calling Minister's attention to non-availability of ... ... ... 680

Madras City Corporation School at Kumaramangalam Colony, calling Minister's attention to collapse of building and injury to two girl students. 433, 434

MESSAGE FROM THE ASSEMBLY—

See Bills

MESSAGE FROM THE GOVERNOR—

See Bills

MONSOON—

Question *re* extent of land in Kanyakumari district where first crop was not raised due to failure of—and help to affected agriculturists ... 595—596

MOTOR VEHICLES TAX—

Concessional rate of tax levied on jeep stage carriages on village roads in rural areas, notification laid on the table ... ... ... ... 283

MOTOR VEHICLES TAXATION (AMENDMENT) BILL, 1979—

*See Bills*

MUNICIPAL COUNCILS (APPOINTMENT OF SPECIAL OFFICERS) AMENDMENT BILL, 1979—

*See Bills*

MUNICIPAL COUNCILS (CONDUCT OF ELECTION OF CHAIRMAN AND COUNCILLORS) RULES, 1978—

Amendments to—, notification laid on the table. 283

PAGES.

M—*cont.*

MUTHUSWAMY, THIRU S.—

Adjournment motion *re*—

Fast by teachers in Madras on behalf of Graduate Teachers' Association and by elementary school teachers in District Headquarters ... 662—664

Lawyers, agitation by ... ... ... ... 231—233

Bills—

Appropriation (Vote on Account) Bill, 1979 ... 715—718

Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1979 ... 148—151

Prohibition (Amendment) Bill, 1979 ... 42—43, 44—45, 46—47, 48

Budget for 1979-80, general discussion on ... 707—708

Teachers in Parali Power Station, Coimbatore, calling Minister's attention to non-payment of hill allowance to— ... ... ... 620, 621

N

NALLASIVAN, THIRU A.—

Adjournment motion *re*—

Agitation by Non-Gazetted Government Officers 611

Lawyers, agitation by ... ... ... 221—222

Tamil Nadu Civil Supplies Corporation, strike by employees ... ... ... ... 311—312

Wimco Match Factory, retrenchment of workers in ... ... ... ... .. 318—319

Bills—

Catering Establishments (Amendment) Bill, 1979 ... ... ... ... ... ... 555—560, 562, 564

Co-operative Societies (Amendment) Bill, 1979. 257—263

Dramatic Performances (Amendment) Bill, 1979. 533—536



PAGES.

N—*cont.*

NALLASIVAN, THIRU A.—*cont.*

BILLS—*cont.*

Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1979. 99—104

Motor Vehicles Taxation (Amendment) Bill, 1979 ... ... ... ... ... 119—120

Preservation of Private Forests (Amendment) Bill, 1979, and Preservation of Private Forests (Extension to Kanyakumari District) Bill, 1979 504—507

Prohibition (Amendment) Bill 1979 ...

Budget for 1979-80, general discussion on ... ... 328—343

Hindustan Teleprinters, Madras, calling Minister's attention to strike from 13th March 1979 by workers ... ... ... ... 622—624

Madurai District Central Co-operative Bank, calling Minister's attention to hunger strike protesting against retrenchment of employees in ... 676

Narendra Dairy Farm, Pappampatti, Madurai district, calling Minister's attention to harassment of farmers cultivating surplus lands belonging to— by officials demanding rent ... ... 677

T.V.S. Madras, calling Minister's attention to Dharna staged by workers of—in front of Office of Commissioner of Labour, Madras from 7th to 9th March 1979 ... ... ... ... 682

NARAYANASWAMY, THE HON. THIRU K.—

Bill—Prohibition (Amendment) Bill, 1979 ... 14, 30, 43, 70, 82, 83—92, 93, 96.

NARENDRA DAIRY FARM, PAPPAMPATTI, MADURAI DISTRICT—

Minister's attention called to harassment of farmers cultivating surplus lands belonging to—by officials demanding rent ... ... ... ... 677—678

PAGES.

N—*cont.*

NAXALITE(S)—

Question *re* places of attack in Tamil Nadu during 1978 and number of victims ... ... ... 291

O

ORIENTAL COLLEGES—

*See* Colleges.

OSANKULAM SCHEME—

Question *re* tenements under—at Chetput, Madras, allotment to slum dwellers of Pullareddypuram. 305—306

P

PALLAVAN TRANSPORT EXPRESS BUS—

*See* Transport.

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—

Bills, as passed by the Assembly—

Appropriation Bill, 1979 ... ... ... 723

Appropriation (No. 2) Bill, 1979 ... ... 723

Appropriation (Vote on Account) Bill, 1979 568

Catering Establishments (Amendment) Bill, 1979 173

Dramatic Performances (Amendment) Bill, 1979 173

Preservation of Private Forests (Extension to Kanyakumari District) Bill, 1979 ... ... 283

Committees—Estimates Committee, Seventh Report on Village and Small Industries including Industrial Estates ... ... ... ... ... 723

Contract Labour (Regulation and Abolition) Rules, 1975, amendment to—(G.O. Ms. No. 1447, Labour and Employment, dated 21st November 1978) ... ... ... ... 468

Electricity Board, Audit Report on Annual Accounts for 1977-78 ... ... ... 625

G.O. Ms. No. 992, Labour and Employment, dated 30th August 1978 published in No. II(2)|L.C.|4408|(a)|78, at Part II—Section 2 of Tamil Nadu Government Gazette, Errata to—(Memorandum No. 65666|F2|78-3, Labour and Employment, dated 26th December 1978) ... ... ... 723



PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Motor Vehicles Tax—Concessional rate of tax levied on jeep stage carriages on villaye roads in rural areas (G.O. Ms. No. 3112, Home (Transport I), dated 19th December 1978) ... ... 283

Municipal Councils (Conduct of Election of Chairman and Councillors) Ruales, 1978—

Amendments to—(G.O. Ms. No. 1957, Rural dated 20th December 1978) ... ... ... 283

Tamil Nadu Poultry Development Corporation Limited, Annual Report for 1975-76 ... ... 723

Tamil Nadu Salt Corporation Limited, Fourth Annual Report for 1977 ... ... ... 625

Vote on Account for Expenditure in 1979-80 ... 466

PERIYANNAN, THIRU V. R.—

Adjournment motion *re* fast by teachers in Madras on behalf of Graduate Teachers' Association and by elementary school teachers in District Headquarters ... ... ... ... ... 664—665

PILAVUKKAL DAM—

Question *re* acreage of land benefited by—and construction of concrete dams for ... ... 413—414

POLICE—

Question *re* shooting by Police during farmers agitation in April 1978, compensation to families of victims ... ... ... ... ... 292—293

PONNAIYAN, THE HON. THIRU C.—

Bill—Motor Vehicles Taxation (Amendment) Bill, 1979 ... ... ... ... ... ... 113, 125, 129

PAGES

P—*cont.*

PRESERVATION OF PRIVATE FORESTS (EXTENSION TO KANYAKUMARI DISTRICT) BILL, 1979—

*See* Bills.

PRISONS—

Question *re* Central Prison, Madras, number of convicts who died during October and November 1978 ... ... ... ... ... 473—477

PRIVILEGE ISSUE RE—

Pallavan Transport Express Bus, denial of seats to certain M.L.C's at Tindivanam ... ... 491—496

PRIVILEGES COMMITTEE—

*See* Committees.

PULAMAIPITHAN, PULAVAR—

Bill—Prohibition (Amendment) Bill, 1979 ... 14—18, 19, 21—23, 24.

Q

QUESTION-HOUR—

Dispensation with ... ... ... ... ... 1

QUESTIONS AND ANSWERS—

Arivazhagan, Thiru K.—

Question *re* Teachers and Instructors in Polytechnics, implementation of time-scale of pay for ... ... ... ... ... ... 299



PAGES

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

Balasubramaniam, Thiru A.—

Question *re*—

Bus-stand at Villupuram, lack of adequate convenience at ... ... ... ... 484—487

Government Hospital at Namakkal, complaint about irregularities in—around 25th October 1977 ... ... ... ... 600—602

Balasubramaniam, Thiru Ku. Ma.—

Question *re* Government Hospital at Tirukkannapuram, Thanjavur district, stay of Doctor (Medical Officer) in ... ... ... ... 602—604

D'Monte, Thiru D. V.—

Question *re* Christian Cemeteries in Madras City, desecration and vandalism committed in ... 181—182

Lakshmikandhan, Thiru C. R.—

Question *re*—

Bus-stand at Villupuram, lack of adequate convenience at ... ... ... ... 484—487

Chief Educational Officer, districts for which not appointed ... ... ... ... 630—631

History and Economics Text Books for Higher Secondary Schools published by Tamil Nadu Text Book Society, complaint *re* certain objectionable matters in ... ... ... 590—594

Pichavaram Forest near Chidambaram, conversion as Tourist Centre ... ... ... 405—409

Tape Recorders in State Transport Corporation buses as in private buses ... ... ... 645—649

Trained teachers remaining unemployed for more than ten years, number of—categorywise .. 294—297

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

Lakshmikandhan, Thiru C. R.—*cont.*

Question *re*—*cont.*

Veeranam Scheme, execution of ... ... 299—305

Victims of Police shooting during Farmers Agitation in April 1978, compensation to families of ... ... ... ... ... 292—293

Meenakshisundaram, Thiru K.—

Question *re*—

Admission of students directly to classes above 3rd Standard in recognised schools, prohibition of ... ... ... ... 478—480

Schools, collection of donations for admission 627—628

Teachers in Harijan Welfare Department in Tiruchirappalli district, non-disbursement of arrears of increments, Selection Grade increments and duty allowance to ... 637—640

Muthuswamy, Thiru S.—

Question *re*—

Government High School, Vaiyampatti, High Court's injunction order restraining admission of girls in ... ... ... ... 629—630

Unemployed Post-Graduates, employment in Higher Secondary Classes of ... ... 586—589

Nallasivan, Thiru A.—

Question *re*—

Small farmers using electricity in Tirunelveli district, number of ... ... ... 582—583

Strike by dealers in loud-speakers in Tenkasi and Shencottah taluks opposing electricity charges ... ... ... ... 398

Teachers of Pioneer Kumaraswamy College, Nagercoil, representation *re* possibility of loss of job ... ... ... ... 480—482





Q—*cont.*

Ramamoorthy, Thiru K.—

Question *re*—

Breweries, quantum of arrack brewed in Tamil Nadu by ... ... ... 604—606

Buckingham Canal, recommendations of Tamil Nadu Government to Central Government for improvement of ... ... ... 596—600

Bus-stand at Villupuram, lack of adequate convenience at ... ... ... ... 484—487

Central Prison, Madras, number of convicts who died during October and November 1978 ... ... ... ... 473—477

Ceramic Brick (Tiles) Industries, borrowal from Tamil Nadu Industrial Investment Corporation Limited ... ... ... 414—419

Co-operative Institutions, cases registered on corruption charges prior to 30th June 1977. 577—582

Dockyard in Tamil Nadu, setting up of ... 643—645

Engineering Colleges, number of applicants belonging to Forward Communities, Backward Classes and Scheduled Castes and Scheduled Tribes, for admission during 1978-79 and number selected ... 203—208

Houses owned by Housing Board in Madras, making tenants owners of ... ... 488—490

Hydro Power-Station at Mettur, setting up of one more ... ... ... ... 399—400

Tamil Nadu Industrial Investment Corporation Limited, cases filed by—against Directors and Managing Directors of Industries. 420—424

Text Books for High School students, constitution of Committee to review standard of lessons prescribed in ... ... ... 589—590

Wet Lands, survey and classification of—as dry lands in each taluk in South Arcot district after and before 1st July 1977 ... 607—608

Ramamoorthy, Thiru K.—*cont.*

Question *re*—cont.

Workshop of Tamil Nadu Goods Transport Corporation, representation from residents of Anna Nagar area of Madras to shift—to some other place ... ... ... 650—651

Sankaralingam, Thiru M.—

Question *re*—

Compulsory retirement of Government Officers during Emergency, guidelines from Central Government for reinstatement and enquiry. 182—190

Executive Officers for 32 Mutt Temples, appointment of ... ... ... 190—192

Free supply of books, slates and dresses and payment in case of mid-day meal students studying in Standards I to III, stoppage of. 634—637

Government Arts College, Salem, students' strike because of non-appointment of teachers till end of July 1978 ... ... 293

Health Officers transferred from Travancore-Cochin State, giving of Selection Grade and promotion to ... ... ... ... 213—215

Higher Secondary School (Ten plus Two) scheme, decision at Education Ministers' Conference in New Delhi in July 1978 *re* 198—201

Maramath Works in Thovalai Channel, N.P. Channel, P.P. Channel and Pattanam Channel not carried out for last few years ... 410—412

Monsoon, extent of land in Kanyakumari district where first crop was not raised due to failure of—and help to affected agriculturists ... ... ... ... ... 595—596

Naxalite attack in Tamil Nadu during 1978, places of—and number of victims ... **291**



QUESTIONS AND ANSWERS—*cont.*

Sankaralingam, Thiru M.—*cont.*

Question *re*—cont.

Ragging in Thanjavur Medical College, number of students affected in the riot following. 310—311

Teachers in Government Schools who have served in Government Schools for one year after 1st April 1974, confirmation of services of ... ... ... ... 583—586

Teachers of Pioneer Kumaraswamy College, Nagercoil, representation *re* possibility of loss of job ... ... ... ... 480—482

Tractor belonging to Thovalai Panchayat Union, Kanyakumari District, non-availability of—for use of farmers due to non-appointment of driver ... ... ... 483—484

Santosham, Thiru D.—

Question *re*—

Corporations of Madras and Madurai, collection of property tax and enhanced rate fixed during quinquennial revision by—in spite of directions issued by Government to the contrary ... ... ... ... 633—634

Doctors in Government service, private practice by ... ... ... ... ... 306—310

Gandhi Memorial Museum, Madurai, complaints of misuse of funds, ill-treatment of Harijans and harassment of staff by administration of ... ... ... ... 297—299

Madurai Corporation, income and expenditure during 1976-77 and 1977-78 ... 631—632

Pilavukkal Dam, acreage of land benefited by —and construction of concrete canals for. 413—414

Teachers in aided Colleges, non-sanction of gratuity to ... ... ... ... 477—479

QUESTIONS AND ANSWERS—*cont.*

Thangapandian, Thiru V.—

Question *re*—

Centenary Celebration of Thanthai Periyar, amount spent on ... ... ... 193—198

College for Unani Medicine in Tamil Nadu, opening of ... ... ... ... 208—213

Madurai Medical College Students, complaint about assault in hostel mess during August 1977 ... ... ... ... 395—396

Procession of Sadhus in Tiruchirappalli in January 1978 ... ... ... 396—398

Schools, collection of donations for admission. 627—628

Thomas, Thiru P. R.—

Question *re*—

Assistant Professors recruited direct by Tamil Nadu Public Service Commission, counting service in Government High Schools for increment ... ... ... ... ... 202—203

Teachers, deputation to undergo training in Regional Institute of English, Bangalore to teach English and utilisation of services to teach English in Higher Secondary Schools. 482—483

Trained teachers remaining unemployed for more than ten years, number of—category-wise ... ... ... ... ... 294—297

Veerasami, Thiru Arcot N.—

Question *re*—Teachers of Pioneer Kumaraswamy College, Nagercoil, representation *re* possibility of loss of job ... ... ... ... ... 480—482







QUESTIONS AND ANSWERS—*cont.*

Venkatesan, Thiru E. S.—

Question *re*—

Bus routes, denationalisation or stoppage of nationalisation of—in view of agitational behaviour of employees ... ... ... 640—642

Government Colleges in Madras City, closure of admission prior to last date notified for receipt of applications ... ... ... 201—202

Judicial Department, bifurcation into criminal unit and civil unit ... ... ... 469—473

Kannankurichi village at foot hills of Servarayan Hills, use of Cauveri waters as drinking water ... ... ... ... 487—488

Schools, collection of donations for admission 627—628

Schools, collection of donations for admission in plus two stage ... ... ... 628—629

Valluvar Kottam, putting up of fountains in—and illumination of ... ... ... 400—404

Yellamanda, Thiru P.—

Question *re* Osankulam Scheme at Chetpet, Madras, allotment of tenements to slum dwellers of Pullareddypuram under ... ... 305—306

R

RAGGING—

Question *re* riot following—in Thanjavur Medical College, number of students affected ... 310—311

PAGES

R—*cont.*


RAGHAVANANDAM, THE HON. THIRU S.—

Adjournment motion *re* Wimco Match Factory, retrenchment of workers in ... ... 319—320

Bills—

Catering Establishments (Amendment) Bill, 1979 ... ... ... ... ... ... 554, 560—561, 562—564, 565, 566—567

Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1979 ... ... ... 160

Budget for 1979-80, general discussion on ... ... 364, 365

Cuddalore Co-operative Housing Society, South Arcot district, statement *re* delay in sanction of loan applications sent by—to Tamil Nadu Co-operative Housing Society, Madras ... ... 684—685

Hindustan Teleprinters, Madras, statement *re* strike from 13th March 1979 by workers ... 622, 623, 624

T.V.S. Madras, statement *re* Dharna staged by workers of units of—in front of office of Commissioner of Labour, Madras from 7th to 9th March 1979 ... ... ... ... 682—683

RAJA MOHAMED, THE HON. THIRU K.—

Adjournment motion *re*—

Agitation by Non-Gazetted Government Officers. 611

Arrest of agriculturists in Salem, Coimbatore and Pudukottai districts and fasting by Thiru Balasubramanian, General Secretary of Agriculturists' Association ... ... ... 428—429

Arrest of General Secretary and volunteers of Dravidar Kazhagam ... ... ... 655—656

Courts in Tamil Nadu, non-functioning of ... 674—675

Lawyers, agitation by ... ... ... 223, 227, 233—237, 238, 240




PAGES

R—*cont.*


RAJA MOHAMED, THE HON. THIRU K.—*cont.*

Adjournment motion re—*cont.*

Students of Law College, Madurai, assault on. 426—427.

Tamil Nadu Civil Supplies Corporation, strike by employees ... ... ... ... 313—318

Bills—

Dramatic Performances (Amendment) Bill, 1979. 544

Prohibition (Amendment) Bill, 1979 ... 7

Budget for 1979-80, general discussion on ... 378

Business of the House—

Transaction of Government Business on a Private Member's day ... ... ... ... ... 1—2

Council Rules, suspension of rule 42 (5) *re* Call Attention Notices ... ... ... ... ... 614

Death of Harijan girl in Nadupatti village in Salem district, statement *re* mysterious ... ... ... 614—615

Kerosene and cooking gas, statement *re* non-availability of ... ... ... ... 679—682

Question-hour, dispensation with ... ... ... 1

RAMACHANDRAN, THE HON. THIRU M. G.—

Supplementary Statement of Expenditure for 1978-79 (Final) and Statement of Demands for Grants for Excess Expenditure for 1971-72, discussion on ... ... ... ... ... 463

RAMACHANDRAN, THE HON. THIRU S.—

Bill—Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1979. 98, 108—112, 113,

RAMAKRISHNA THEVAR, THIRU S.—

Privilege issue *re* Pallavan Transport Express Bus, denial of seats to certain M.L.Cs. at Tindivanam. 496

PAGES

R—*cont.*


RAMALINGAM, THIRU C.—

Bills—

Co-operatife Societies (Amendment) Bill, 1979. 249—256

Prohibition (Amendment) Bill, 1979. ... 2—8

Supplementary Statement of Expenditure for 1978-79 (Final) and Statement of Demands for Grants for Excess Expenditure for 1971-72, discussion on ... ... ... ... 440—441

RAMAMOORTHY, THIRU K.—

Adjournment motion *re* lawyers, agitation by ... 222, 223, 227

Bills—

Co-operative Societies (Amendment) Bill, 1979. 245—248, 281—282

Dramatic Performances (Amendment) Bill, 1979. 526—532, 533

Preservation of Private Forests (Amendment) Bill, 1979, and Preservation of Private Forests (Extension to Kanyakumari District) Bill, 1979. 502—503, 524

Budget for 1979-80, general discussion on ... 343—359, 387, 388.

Privilege issue *re* Pallavan Transport Express Bus, denial of seats to certain M.L.C's at Tindivanam ... ... ... ... 492, 493, 494, 495

RAMESWARAM ISLAND—

Minister's attention called to death of 20 persons due to outbreak of new kind of fever in. 435


435



PAGES.

R—*cont.*


RATHINA BALAGURUSWAMY, THIRU—

Bill—Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1979 ... ... ... 155—157

RESOLUTION *re*—

Areas covered by Tiruverkadu, Veeraraghavapuram, etc., declaration as a Township ... ... 500

RULES COMMITTEE—

*See* Committees.

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—

Adjournment motion *re*—

Agitation by Civil Supplies Corporation employees—Consent to raising of the matter withheld after the statement of the Leader of the House ... ... ... ... 311, 318

Agitation by lawyers—Consent to raising of the matter withheld after the statement of the Leader of the House ... ... ... 216, 241

Agitation by Non-Gazetted Government officers—Consent to raising of the matter withheld after the statement of the Leader of the House ... 609, 613

Arrest of agriculturists in Salem, Coimbatore and Pudukkottai districts and fasting by Thiru Balasubramaniam, General Secretary of Agriculturists' Association—Consent to raising of the matter withheld after the statement of the Leader of the House ... ... ... 427, 429

Arrest of Secretary and volunteers of Dravidar Kazhagam—Consent to raising of the matter withheld after the statement of the Leader of the House ... ... ... ... 654, 656

Assault on students of Law College, Madurai—Consent to raising of the matter withheld after the statement of the Leader of the House ... 424, 427

PAGES.

R—*cont.*

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR —*cont.*

Adjournment Motion *re*—*cont.*

Fast by teachers in Madras on behalf of Graduate Teachers' Association and by Elementary School teachers in District Headquarters —Consent to raising of the matter withheld after the statement of the Minister for Education ... ... ... ... ... ... 657, 671

Fast by teachers of Panchayat Union Middle Schools in front of Thanjavur Collectorate—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Local Administration ... ... ... ... ... 429, 433

Non-functioning of Courts in Tamil Nadu—Consent to raising of the matter withheld after the statement of the Leader of the House ... 672, 675

Retrenchment of workers in Wimco Match Factory —Consent to raising of the matter withheld after the statement of the Minister for Labour. 318, 320

Debate—

Reference to officers should be made only by designation and not by name ... ... ... 374, 387, 388.

Decision of the Chair—

No discussion permitted on a ruling or decision of the Chair ... ... ... ... 455

Decorum—

Exhibits : Exhibition of newspaper should be only through the Chair ... ... ... 712

Privilege Issue *re*—

Non-allotment of seats in Pallavan Transport Express Bus at Tindivanam to M.L.C.'s—Ruled that there was no need to refer the matter to the Privileges Committee since a guarantee had been obtained against the recurrence of such incidents in view of the decision of the Government to issue orders to the concerned to allot seats reserved for V.I.P's to M.L.C.'s at any time ... ... ... ... 491—494



PAGES

S

SADHUS—

Question *re* procession of—in Tiruchirappalli in January 1978 ... ... ... ... 396—398

SANKARALINGAM, THIRU M.—

Adjournment motion *re* lawyers, agitation by ... 216—219, 222, 237—238, 241

Announcement *re* speech of—Leader of the Opposition on Budget for 1979-80 ... ... ... 500

Bills—

Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1979. 105—108

Motor Vehicles Taxation (Amendment) Bill, 1979 ... ... ... ... ... 120—125

Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1979 ... ... 158—163

Prohibition (Amendment) Bill, 1979 ... ... 62, 65—83

Rameswaram Island, calling Minister's attention to death of 20 persons due to outbreak of new kind of fever in ... ... ... ... ... 435

SARASWATHI, THE HON. SELVI P. T.—

Balasevikas, statement *re* payment of fixed pay and grant of maternity leave to ... ... ... 497

SCHOOLS—

'B' Wing Schools Minister's attention called to delay in regularisation of services and sanctioning of annual increments to teachers appointed from 1st April 1970 in ... ... ... ... 615—619

Higher Secondary—under Harijan Welfare Department, Minister's attention called to non-supply of text-books and note-books to students of XI Standard ... ... ... ... 242—244

Madras City Corporation—at Kumaramangalam Colony, Minister's attention called to collapse of building and injury to two girl students ... 433—434

S—*cont.*


SCHOOLS—*cont.*

Question *re*—

Admission of students directly to Classes above third standard in recognised schools, prohibition of ... ... ... ... ... 478—480

Collection of donations for admission ... ... 627—628

Collection of donations for admission in plus two stage ... ... ... ... ... 628—629

Government High School, Vaiyampatti, High Court's injunction order restraining admission of girls in ... ... ... ... 629—630

Higher Secondary School (ten plus two) Scheme, decision at Education Ministers' Conference in New Delhi in July 1973 *re* ... ... ... 193—201

Unemployed Post-Graduates, employment in Higher Secondary Classes of ... ... ... 586—589

SILK—

Statement under rule 82 of the Council Rules *re* procedure followed for procurement of raw— and zari ... ... ... ... ... ... 436—44

SLUM DWELLERS—

Question *re* allotment of tenements to—, of Pullareddypuram under Osankulam Scheme at Chetpet, Madras ... ... ... ... 305—306

SOMASUNDARAM, THE HON. THIRU S. D.—

Narendra Dairy Farm, Pappampatti, Madurai district, statement *re* harassment of farmers cultivating surplus lands belonging to—by officials demanding rent ... ... ... ... 677, 678

SOUNDARAPANDIAN, THE HON. THIRU P.—

Budget for 1979-80, general discussion on ... 361, 377 378—379






S—*cont.*


SOUNDARAPANDIAN, THE HON. THIRU P.—*cont.*

Higher Secondary Schools under Harijan Welfare Department, statement *re* non-supply of text-books and note-books to students of XI Standard ... 243, 244

Teachers of Higher Secondary Schools under Harijan Welfare Department, statement *re* reversion of—and appointment afresh from outside. 322, 323, 324

SOUNDARARAJAN, THE HON. THIRU R.—

Government Hospital at Sendamangalam, Namakkal Taluk, statement *re* non-posting of Lady Doctor to ... ... ... ... ... ... 242

Rameswaram Island, statement *re* death of 20 persons due to outbreak of new kind of fever in. 435

STATEMENT OF SUPPLEMENTARY EXPENDITURE FOR 1978-79—

Presentation of ... ... ... ... ... 325—327

STATEMENT UNDER RULE 82 OF THE COUNCIL RULES *re*—

Procedure followed for procurement of raw silk and zari ... ... ... ... ... ... 436—440

STRIKE(S)—

Adjournment motion *re* Tamil Nadu Civil Supplies Corporation, strike by employees .. ... 311—318

Question *re* staging of—by dealers in loud-speakers in Tenkasi and Shencottah taluks opposing electricity charges ... ... ... ... ... 398

STUDENT(S)—

Adjournment motion *re* assault on—of Law College, Madurai ... ... ... ... ... 424—427

PAGES

S—*cont.*


SUBBULAKSHMI JAGADEESAN, THE HON. THIRUMATHI—

Statement of Supplementary Expenditure for 1978-79 (Final) and Statement of Demands for Grants for Excess Expenditure for 1971-72, discussion on ... ... ... ... ... 458, 459, 460

Statement under rule 82 of the Council Rules *re* procedure followed for procurement of raw silk and zari ... ... ... ... ... ... 436—439

Yarn, statement *re* accumulation of handloom stocks due to sudden rise in price of—of 40, 60 and 80 counts ... ... ... ... ... ... 497, 498, 499

SUNDARESA THEVAR, THIRU N.—

Bills—

Appropriation (Vote on Account) Bill, 1979 712—714

Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1979 ... ... 133—136

Prohibition (Amendment) Bill, 1979 ... ... 58—62

Budget for 1979-80, general discussion on ... 336

Supplimentary Statement of Expenditure for 1978-79 (Final) and Statement of Demands for Grants for Excess Expenditure for 1971-72, discussion on ... ... ... ... ... 441—443

SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1978-79 (FINAL) AND STATEMENT OF DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE FOR 1971-72—

Discussion on .. ... ... ... ... 440—466

SWAMINATHAN, THIRU G.—

Privileges Committee, Report of—approval of ... 328




PAGES.

T—*cont.*


T.V.S., MADRAS—

Minister's attention called to Dhama staged by workers of units of—in front of Office of Commissioner of Labour, Madras from 7th to 9th March 1979 ... ... ... ... 682—683

TAMIL NADU CIVIL SUPPLIES CORPORATION—

Adjournment motion *re* strike by employees of ... 311—318

TAMIL NADU GOODS TRANSPORT CORPORATION—

Question *re* Workshop of—, representation from residents of Anna Nagar area of Madras to shift to some other place ... ... ... ... 650—651

TAMIL NADU INDUSTRIAL INVESTMENT CORPORATION LIMITED—

Question *re*—

Borrowal by Ceramic Brick (Tiles) Industries from ... ... ... ... ... 414—419

Cases filed by—against Directors and Managing Directors of Industries ... ... ... 420—424

TAMIL NADU POULTRY DEVELOPMENT CORPORATION LIMITED—

Annual Report of—for 1975-76, laid on the table. 723

TAMIL NADU SALT CORPORATION LIMITED—

Fourth Annual Report for 1977, laid on the table. 625

TEACHERS—

Adjournment motion *re*—

Fast by—in Madras on behalf of Graduate Teachers Association and by elementary school —in District Headquarters ... ... ... 657—671

Fasting by teachers of Panchayat Union Middle Schools in front of Thanjavur Collectorate. 429—433

PAGES.

T—*cont.*

TEACHERS—*cont.*

Question *re*—

Aided College—, non-sanction of gratuity to. 477—478

Assistant Professors recruited direct by Tamil Nadu Public Service Commission, counting service in Government High Schools for increment ... ... ... ... ... 202—203

Deputation of—to undergo training in Regional Institute of English, Bangalore, to teach English and utilisation of services to teach English in Higher Secondary Schools ... ... ... 482—483

Non-disbursement of arrears of increments, Selection Grade increments and duty allowance to—in Harijan Welfare Department in Tiruchirappalli district ... ... ... ... 637—640

Representation from—of Pioneer Kumaraswamy College, Nagercoil *re* possibility of loss of job. 480—482

Teachers in Government Schools who have served in Government Schools for one year after 1st April 1974, confirmation of services of ... 583—586

Time-scale of pay for—and Instructors in Polytechnics, implementation of ... ... ... 299

Trained—remaining unemployed for more than ten years, number of—categorywise ... 294—297

Teachers in Parali Power Station, Coimbatore, Minister's attention called to non-payment of Hill allowance to ... ... ... ... 620—621

Teachers of Higher Secondary Schools under Harijan Welfare Department, Minister's attention called to reversion of—and appointment afresh from outside ... ... ... ... 322—324

TEMPLES—

Question re Executive Officers for 32 Mutt—appointment of ... ... ... ... 190—192



PAGES.

T—*cont.*

THANGAPANDIAN, THIRU V.—

Assurances Committee, presentation of XXXII Report ... ... ... ... ... 2

Balasevikas, calling Minister's attention to payment of fixed pay and grant of maternity leave to ... 496—497

Bills—

Appropriation (Vote on Account) Bill, 1979 ... 709—712

Prohibition (Amendment) Bill, 1979 ... ... 19—20, 21

Kerosene and cooking gas, calling Minister's attention to non-availability of ... ... ... 678—679

THANTHAI PERIYAR—

Question *re* Centenary Celebration of—, amount spent on ... ... ... ... ... 193—198

THOMAS, THIRU P. R.—

Adjournment motion *re*—

Agitation by Non-Gazetted Government Officers. 609

Fast by teachers in Madras on behalf of Graduate Teachers Association and by elementary school teachers in District Headquarters ... ... 659—660

'B' Wing Schools, calling Minister's attention to delay in regularisation of services and sanctioning of annual increments to teachers appointed from 1st April 1970 in former ... 615, 617

Bill—Prohibition (Amendment) Bill, 1979 ... 49—53

Statement of Supplementary Expenditure for 1978-79 (Final) and Statement of Demands for Grants for Excess Expenditure for 1971-72, discussion on ... ... ... ... ... ... 448—449

Teachers of Higher Secondary Schools under Harijan Welfare Department, calling Minister's attention to reversion of—and appointment afresh from outside ... ... ... ... ... ... 324

PAGES.

T—*cont.*

TOURIST CENTRE—

Question *re* conversion of Pichavaram Forest near Chidambaram as ... ... ... ... ... 405—409

TRACTOR—

Question *re* non-availability of—of Thovalai Panchayat Union, Kanyakumari district for use of farmers due to non-appointment of driver ... 483—484

TRANSPORT—

Privilege issue *re* Pallavan Transport Express Bus, denial of seats to certain M.L.Cs. at Tindivanam. 491—496

Question *re*—

Bus routes, denationalisation or stoppage of nationalisation of—in view of agitational behaviour of employees ... ... ... 640—642

Tape Recorders in State Transport Corporation buses as in private buses provision of ... 645—649

U

UNEMPLOYED POST-GRADUATES—

Question *re* employment in Higher Secondary classes of ... ... ... ... ... 586—589

V

VALLUVAR KOTTAM—

Question *re* illumination of—and putting up of fountains in ... ... ... ... ... 400—404

VASANTHA PAI, THIRU G.—

Adjournment motion *re* lawyers, agitation by ... 230—231, 239, 240

VEERANAM SCHEME—

Question *re* execution of ... ... ... ... 299—305



PAGES.

V—*cont.*

VEERAPPAN, THE HON. THIRU R. M.—

Bills—

Dramatic Performances (Amendment) Bill, 1979 ... .. ... ... ... 526, 548—553, 554

Preservation of Private Forests (Amendment) Bill, 1979 ... ... ... ... .. 501, 502, 516—518, 519—523, 524, 525

Prohibition (Amendment) Bill, 1979 ... ... 20

VEERASAMI, THIRU ARCOT N.—

Adjournment motion *re*—

Arrest of General Secretary and volunteers of Dravidar Kazhagam ... ... ... ... 654—655

Courts in Tamil Nadu, non-functioning of ... 672—674

Students of Law College, Madurai, assult on ... 424—425

Tamil Nadu Civil Supplies Corporation, strike by employees ... ... ... ... ... 313

Bills—

Co-operative Societies (Amendment) Bill, 1979. 265—272, 279, 280

Preservation of Private Forests (Amendment) Bill, 1979 and Preservation of Private Forests (Extension to Kanyakumari District) Bill, 1979. **501,** 507—510, 524

Prohibition (Amendment) Bill, 1979 ... ... 23—24, 25, 26—39

Budget for 1979-80, general discussion on ... ... 356, 360, 361—379, 694, 696, 703, 704

VEERASAMI, THIRU ARCOT N.—*Cont.*


| | PAGES |
|---|---|
| V—*cont.* | |
| Statement of Supplementary Expenditure for 1978-79 (Final) and Statement of Demands for Grants for Excess Expenditure for 1971-72, discussion on ... ... ... ... ... | 449—461, 463 |
| VICE-CHAIRMAN (RAMAMOORTHY, THIRU K.)— | |
| Bill—Catering Establishments (Amendment) Bill, 1979 ... ... ... ... ... | 565, 566, 567. |
| VOTE ON ACCOUNT FOR EXPENDITURE IN 1979-80— | |
| Laid on the table ... | 466 |
| WATER-SUPPLY— | |
| Question *re* Kannankurichi village at foot hills of Servaroyan Mills, use of Cauveri waters as drinking water for ... ... ... | 487—488 |
| WIMCO MATCH FACTORY— | |
| Adjournment motion *re* retrenchment of workers in | 318—320 |
| Y | |
| YARN— | |
| Sudden rise in price of—of 40, 60 and 80 counts, Minister's attention called to accumulation of handloom stocks of ... ... ... ... | 497—499 |
| YELLAMANDA, THIRU P.— | |
| Bill—Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1979 ... ... | 130—133 |
| Death of Harijan girl in Neduppatti village in Salem district, Minister's attention called in mysterious ... ... ... ... ... | 614—615 |
| ZARI— | |
| Statement under rule 32 of the Council Rules *re* procedure followed for procurement of raw silk and ... ... ... ... ... ... | 436—440 |


Y211,32 N79
N80.159
12.1981 z

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

*In Madras City.*

1. Account Test Institute, Egmore, Madras-8.
2. The City Book Co., Madras-4.
3. Higginbothams (Private) Ltd., Madras-2.
4. P. Varadachary & Co., Madras-1.
5. C. Subbiah Chetty & Co., Madras-5.
6. The Universal Book House, Moore Market, Madras-3.
7. C. Sitaraman & Co., Madras-14.
8. Mohan Pathippagam & Book Depot., Madras-5.
9. C. Venkatesam Chetty & Co., No. 8-C, Pycrofts Road, Madras-5.
10. TheSouth India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelvelly) Ltd., Madras-1.
11. The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12. New Century Book House (Private) Ltd., Madras-2.
13. Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

*In Moffussil of Tamil Nadu.*

2933

1. A. Venkatasubban & Co., Vellore (North Arcot District).
2. Bharathamatha Book Depot., Thanjavur (Thanjavur District).
3. P. V. Nathan & Co., Kumbakonam (Thanjavur District).
4. Appar Book Stall, Thanjavur.
5. Palaniappa Bros., Tiruchirappalli-2.
7. S. R. Subramania Pillai, Tirunelveli Junction
8. B. Aruldass, Villupuram (South Arcot District).
9. Vasantham Stores, Book Sellers, No. 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10. V. B. Ganesan, Villupuram (South Arcot District).
11. Mercury Book Co., No. 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
12. S. M. Jeganathan, Book House, P. S. No. 327, No. 35, Nandhi Koil Street, Tiruchirappalli-2.
13. Ganesh Stores, South Car Street, Sivakasi.
14. Mary Martin Book Sellers, Kotagiri (The Nilgiris).
15. A. K. Chandriah Chettiar and Sons, Salem.
16. Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem.
17. Meenakshi Pathippagam, Pudukkottai.
18. K. V. Narayana Iyer Sons, Dindigul (Madurai District).
19. Jayakumari Stores, Nagarcoil (Kanyakumari District).
20. Babu Stores, Book Sellers, Villupuram (South Arcot District).
21. Dinamani Stores, No. 8/1, Old Post Office Road, Coimbatore-18.
22. Bharathi Puthaganilayam, Publishers and Book Sellers, No. 1-B, Town Hall Road, Madurai-1.
23. Kumaran Book Depot., Book Sellers, Erode-1.
24. Vela Book Company, No. 4, Annaji Rao Street, Erode-1.
25. Radhamani Stores, No. 6-A, Raja Street, Coimbatore-1.
26. Ajantha Book Centre, Salem.
27. Sri Vidya, No. 63, Tennore High Road, Tiruchirappalli-17.

*In other States.*

1. Jain Book Agency, New Delhi-1.
2. International Book House, Trivandrum.
3. Firma. K. L. Mukhopadhyay, Calcutta-12.
4. The Book Syndicate, Hyderabad-1.
5. Labour Law Publications, Hyderabad.
6. Puthagahalayam, Pondicherry.
7. Prabhu Book Service, Gurgaon, Haryana.
8. K. P. Bagchi & Company, No. 286, B. B. Ganguli Street, Calcutta-12

A/4 6/12 1.2/82

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE CHAIRMAN OF THE LEGISLATIVE COUNCIL.